D
W1.31'N74
74.51
61650

வெளியீடு—12—9—1974]
Issued—12—9—1974]

# தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

புதன்கிழமை 1974 மார்ச் 20
**Wednesday 20th March 1974**

தொகுதி LI—எண் 1
**Volume LI—No. 1**

©
தமிழ் நாடு அரசு
1974
GOVERNMENT OF TAMIL NADU
1974

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9.

*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

விலை 50 காசுகள்]
PRICE 50 PAISE]

V R11, 31 N74
N74.51
61650

# Tamil Nadu Legislative Assembly Debates

---

TENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

---

*20th, 21st, 22nd and 23rd March* 1974

---

VOLUME LI (Nos. 1 to 4).

TABLE OF CONTENTS.

*Wednesday, 20th March* 1974.


| | Pages. |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... | 1-36 |
| 2. Adjournment Motion— | |
| Irregular distribution of electricity to agricultural pumpsets in Koilpatti taluk and its consequences ... ... ... ... ... | 36–40 |
| 3. Calling attention— | |
| Restrictions imposed on serving items in meals in catering establishments ... ... | 41–42 |
| 4. Government Motions— | |
| (*a*) **Election to Committee on Estimates** ... | 42 |
| (*b*) Election to Committee on Public Accounts | 43 |
| (*c*) Election to Committee on Public Undertakings ... ... ... ... | 44 |

A—*Cont.*

PAGES

5. Announcements—
   (a) Election to Committee on Estimates ... 43
   (b) Election to Committee on Public Accounts 44
   (c) Election to Committee on Public Undertakings ... ... ... ... 45
   (d) Business of the House ... ... ... 86
6. Point of order—
   Furnishing of reasons for disallowance of Adjournment Motion given notice of by a Member ... ... ... ... ... 45–48
7. Voting on Demands for Grants for the year 1974–75—cont.
   Demand No. 17—Education ... ... 48–86
   87-229
8. Papers laid on the Table ... ... ... 229–230

*Thursday*, 21st *March* 1974.

1. Questions and Answers ... ... ... 277-313
2. Calling Attention—
   Shortage of cooking gas in Madras City and the hardship to the people ... ... 313–315
3. Announcement—
   Indian Stamp (Tamil Nadu Amendment) Bill, 1974 ... ... ... ... ... 316
4. Government Bill—
   Indian Stamp (Tamil Nadu Amendment) Bill, 1974 ... ... ... ... ... 316
5. Point of order—
   Election to the Office of Deputy Speaker ... 316–320



A—*cont.*

PAGE

6. Voting on Demands for Grants for the year 1974–75—cont.
   (a) Demand No. 30—Welfare of the Scheduled Tribes, Castes, etc. ... ... ... 320–48
   (b) Demand No. 21—Fisheries ... ...
7. Papers laid on the Table. ... ... 485-48

*Friday*, 22*nd March* 1974.

1. Questions and Answers ... ... ... 557-59
2. Point of order—
   Non-participation of the Leader of the Anna Dravida Munnetra Kazhagam, Thiru M. G. Ramachandran in the proceedings of the House ... ... ... ... 593–598
3. Voting on Demands for Grants for the year 1974–75—cont.
   (a) Demand No. 34—Civil Supplies.
   (b) Demand No. 55—Miscellaneous Capital Outlay ... ... ... ... ... 598–690
4. Announcement—
   Change in the order of business of the House. 690
5. Government Bill—
   Tamil Nadu Motor Vehicles Taxation Bill, 1974 (L.A. Bill No. 10 of 1974) ... ... ... ... 726–758
6. Papers laid on the Table. ... ... ... 759-760

*Saturday*, 23*rd March* 1974.

1. Questions and Answers. ... ... ... 811-845
2. Adjournment Motion—
   Restriction on the supply of electricity and hardship to the people ... ... ... ... 846–861

PAGES

A—*Cont.*

Voting on Demands for Grants for the year 1974-75—cont.

(b) Demand No. 16—Fire Service ... 861-936

(b) Demand No. 16—Fire Service ... ...

Papers laid on the Table. ... ... ... 936

## தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

---

### தமிழ் நாடு ஆளுநர்.

### மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா

---

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், படச்சுருள் தொழில் நுட்பவியல்.

2. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்டமன்றம், சுற்றுலா, சுற்றுலா அபிவிருத்திக் கழகம்.

3. **மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுச் சுகாதாரம், மருத்துவம், தமிழ்நாடு கழிவு நீர்—குடிநீர் வாரியம், நகர அமைப்பு.

4. **மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பின்தங்கிய வகுப்பினர் நலன், செய்தி-விளம்பரம், பத்திரப் பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், சீரணி, இளைஞர் அணி, பூதான—கிராமதான இயக்கங்கள்.

5. **மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பயண அனுமதிச் சீட்டுகள்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (பொதுப்பணித் துறை
அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:
பொதுப் பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட
சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன்: (தொழில் துறை
அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்
தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, கனிப்
பொருள்கள், சுரங்கங்கள், இரும்பு—உருக்குக் கட்டுப்பாடு, வேலை
வாய்ப்பும் பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி
மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (வருவாய்த்
துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்
வகிப்பார்: வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட
வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள்
வணிக வரிகள், மதுவிலக்கு, ஆயத் துறை வருவாய், முகம்மதிய
அறக் கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (வேளாண்மை
துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்
வகிப்பார்: வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மை
பொறியியற் பிரிவு, கால்நடை வளர்ப்பு.

10. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (உள்ளாட்சி
துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்
வகிப்பார்: நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்
ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

11. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (உணவு
கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்கு
பொறுப்பு வகிப்பார்: உணவு, கூட்டுறவு, வேளாண்மை மறு நி
உதவி.

12. மாண்புமிகு திரு. க. இராசாராம்: (தொழிலாளர் நல
துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்
வகிப்பார்: தொழிலாளர், வீட்டு வசதி-இட வசதிக் கட்டுப்பா
எடைகள் அளவைகள் குறித்த சட்டம், புள்ளி
மாற்று வாரியம்.

13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (மின்சாரத் துறை
மைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:
ன்சாரம், கடன் கொடுத்தல் குறித்த சட்டம், இராமவாசிகள்
ன்பட்டிருத்தல், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள்,
ன்கோரு, திரைப்படச் சட்டம்.

14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (போக்குவரத்துத்
துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு
கிப்பார்: போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட
பாக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுதுபொருள்--
ச்சுத்துறை, அரசு அச்சகம்.

15. மாண்புமிகு திரு. கு. கண்ணப்பன்: (அறநிலையத் துறை
மைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:
றக் கட்டளைகள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத்
தொழில்கள் திட்டம், பால் வழங்கு துறை, பால்வள முனைப்புத்
திட்டம், தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

---

### GOVERNOR OF TAMIL NADU.

### THIRU KODARDAS KALIDAS SHAH.

---

*Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. KARUNANIDHI (Chief Minister) in-charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections and Film Technology.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Education and Tourism), in-charge of Education including Technical Education, Official Language, Legislature and Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN (Minister for Health), in-charge of Public Health, Medicine, Tamil Nadu Drainage and Water Board and Town-Planning.

4. THE HON. THIRU N. V. NATARAJAN (Minister for Backward Classes) in-charge of Backward Classes, Information and Publicity, Registration, Ex-Servicemen, Prosperity Brigade, Youth Service Corps, Bhoodan and Gramdan.

5. THE HON. THIRUMATHI SATHYAVANIMUTHU (Minister for Harijan Welfare), in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indian Overseas and Refugees and Evacuees, Newsprint Control and Passports.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM (Minister for Public Works), in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports.

7. THE HON. THIRU S. MADHAVAN (Minister for Industries), in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA (Minister for Revenue), in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Commercial Taxes, Prohibition and Excise Revenue and Waqfs.

9. THE HON. THIRU Si. Pa. ADITANAR (Minister for Agriculture), in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing and Animal Husbandry.

10. THE HON. THIRU A. P. DHARMALINGAM (Minister for Local Administration), in-charge of Municipal Administration, Community Development and Panchayats and Panchayat Unions.

11. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMY (Minister for Food and Co-operation), in-charge of Food, Co-operation and Agricultural Refinance.

12. THE HON. THIRU K. RAJARAM (Minister for Labour) in-charge of Labour, Housing and Accommodation Control Legislation on Weights and Measures, Statistics and Slum Clearance Board.

13. THE HON. THIRU O. P. RAMAN (Minister for Electricity), in-charge of Electricity, Legislation on Money Lending Rural Indebtedness, Legislation on Chits, Forests, Cinchona and Cinematograph Act.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN (Minister fo Transport), in-charge of Transport, Nationalised Transport Motor Vehicles Tax, Stationery and Printing and Governmen Press.

15. THE HON. THIRU M. KANNAPPAN (Minister fo Religious Endowments), in-charge of Religious Endowment Khadi and Village Industries and Rural Industries Project, Mil Operation Flood Project and Tamil Nadu Dairy Developmer Corporation.

## தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

---

### பேரவைத் தலைவர்.

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன், பி.ஓ.எல்., எம்.ஏ.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. துரைமுருகன்.
2. திரு. வை. பாலசுந்தரம்.
3. திருமதி ஜோதி வெங்கடாசலம்.
4. திரு. குழ. செல்லையா.
5. திரு. கே. எ. வகாப்.
6. திரு. கோ. இளங்கோவன்.

### சட்டப் பேரவைச் செயலாளர்.

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

### உதவிச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி)
திரு. பெஞ்சமின் நெல்சன், பி.ஏ. ,
திரு. கே. பாலகுரு, பி.ஏ.

### விவாதப் பதிப்பாளர்.

திரு. கே. சுந்தரராசன்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்

| தொடர் எண் | உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|---|
| 1 | அண்ணாமலை, திரு. சி.வி. எம். | காஞ்சிபுரம் |
| 2 | அபுசாலி, திரு. எம். ஏ. | புவனகிரி |
| 3 | அப்துல் ஜப்பார், திரு. வா. மை | அரவக்குறிச்சி. |
| 4 | அரங்கண்ணல், திரு. இராம. | எழும்பூர். |
| 5 | அரங்கநாயகம், திரு. செ. | கோயம்பத்தூர்–மேற்கு |
| 6 | அழகமுத்து, திரு. து. ப. (அரசாங்க தலைமைக் கொறடா). | உப்பிலியப்புரம். |
| 7 | அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி. |
| 8 | அழகுத் தேவர், திரு. எஸ். | சாத்தூர். |
| 9 | அனந்தநாயகி, திருமதி த. ந. | மயிலாப்பூர். |
| 10 | அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 11 | அன்புச்செழியன், திரு. நீ. | பெரியகுளம். |
| 12 | ஆண்டி அம்பலம், திரு. எ . | மேலூர் வடக்கு. |
| 13 | ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ. வ.) |
| 14 | ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 15 | ஆலடி அருணா, திரு. வி. | ஆலங்குளம். |
| 16 | ஆல்டா எம். பௌலர், திருமதி | நியமன உறுப்பினர் |
| 17 | ஆறுமுகம், திரு. அ. | எடப்பாடி. |
| 18 | ஆறுமுகம், திரு. என். | வீரபாண்டி. |
| 19 | ஆறுமுகம், திரு. சி. | மதுராந்தகம். |
| 20 | இரத்தினசபாபதி, திரு. மு. | விளாத்திக்குளம். |
| 21 | இராசகோபால், திரு. க. மு. | உத்திரமேரூர். |
| 22 | இராசகோபால், திரு. வீ. | வந்தவாசி. |
| 23 | இராசமாணிக்கம், திரு. அ. | நாகப்பட்டினம். |
| 24 | இராசமாணிக்கம், திரு. கு. | ஆடுதுறை. |
| 25 | இராசரத்தினம், திரு. டி. | ஸ்ரீபெரும்புதூர். |
| 26 | இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | சேலம்-2. |
| 27 | இராசு, திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் (செ. வ |
| 28 | இராதாகிருட்டிணன், திரு. எம். | தண்டராம்பட்டு |
| 29 | இராமச்சந்திரன், திரு. எம். ஜி. | பரங்கிமலை. |
| 30 | இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி (2) |
| --- | --- |
| 31 இராமநாதன், திரு. சி. | அறந்தாங்கி. |
| 32 இராமலிங்கம், திரு. இரா. | தூத்துக்குடி. |
| 33 இராமலிங்கம், திரு. செ. | கடலாடி (செ.வ.). |
| 34 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.) |
| 35 இராமன், திரு. மூ. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 36 இராஜாங்கம், திரு. என். | குறிஞ்சிப்பாடி (செ.வ.). |
| 37 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. | கன்னியாகுமரி. |
| 38 இளங்கோவன், திரு. கோ. | திருவையாறு. |
| 39 இளஞ்செழியன், திரு. வீ. சா. | விராலிமலை. |
| 40 எட்டியப்பன், திரு. பூ. | பெரணமல்லூர். |
| 41 எட்மண்ட், திரு. க. உரொ. | திருச்செந்தூர். |
| 42 கணபதி, திரு. என். | பாபநாசம். |
| 43 கணபதி, திரு. டி. | நாங்குனேரி. |
| 44 கணேசன், திரு. எல். | ஒரத்தநாடு |
| 45 கணேசன், திரு. சி. | குற்றாலம். |
| 46 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | இணைத்துக்கடவு. |
| 47 கண்ணன், திரு. எம். ஆர். | பேஸின் பிரிட்ஜ். |
| 48 கதிரவன், திரு. கா. மு. | தென்காசி. |
| 49 கந்தசாமி, திரு. கே. | உசிலம்பட்டி. |
| 50 கந்தசாமி, திரு. கே. பி. | சாத்தான்குளம் |
| 51 கந்தசாமி, திரு. எம். | குளித்தலை. |
| 52 கந்தப்பன், திரு. செ. | திருச்செங்கோடு. |
| 53 கரிவேங்கடம், திரு. மா. வெ. | பாலக்கோடு. |
| 5 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 55 கருணாநிதி, திரு. தாழை மு. | திருவாரூர் (செ.வ.) |
| 56 கருணாநாதன், திரு. சோ. | கூனூர். |
| 57 கருப்பையா, திரு. ஆ. | கங்கைகொண்டான் (செ.வ.) |
| 58 காசிராமன், திரு. நா. | கும்பகோணம். |
| 59 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி | முதுகளத்தூர். |
| 60 காமாட்சி, திரு. கு. | திருவரம்பூர். |
| 61 கார்த்திசன், திரு. வீ. | இராதாபுரம். |
| 62 காவேரிமணியம், திரு. சொ. | திருப்பரங்குன்றம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
| --- | --- |
| 63 காளிமுத்து, திரு. கா. | சிவகாசி. |
| 64 கிட்டப்பா, திரு. என். | மாயூரம். |
| 65 கிருட்டிணன், திரு. நா. | பேரணம்பட்டு (செ. வ.) |
| 66 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம். |
| 67 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. | திருச்சிராப்பள்ளி-1. |
| 68 கிருஷ்ணன், திரு. கே. ஆர். | ஊத்தங்கரை. |
| 69 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 70 குமாரசாமி, திரு. அ. சே. | திருக்கோயிலூர். |
| 71 குமாரசாமி, திரு. கே. என். | பல்லடம். |
| 72 குருசாமி, திரு. நா. வெ. | ஆண்டிப்பட்டி. |
| 73 கேசவலு, திரு. தே. | கள்ளக்குறிச்சி. |
| 74 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். | உதனப்பள்ளி. |
| 75 கோபால், திரு. எம். | குன்னத்தூர் (செ. வ.). |
| 76 கோபால், திரு. கே. பி. | கம்பம். |
| 77 கோவிந்தசாமி, திரு. வி. செ. | காவேரிப்பட்டினம். |
| 78 கோவிந்தராசன், திரு. ஆர். | கடலூர். |
| 79 கோவிந்தராசன் துரை, திரு. | கந்தர்வகோட்டை. |
| 80 கோவிந்தன், புலவர் கா. (மாண்புமிகு பேரவைத் தலைவர்). | செய்யாறு |
| 81 கோவை செழியன், திரு. | காங்கேயம். |
| 82 சகாதேவன், திரு. எஸ். | செஞ்சி. |
| 83 சங்குமுத்து தேவர், திரு. ச. | அம்பாசமுத்திரம். |
| 84 சதாசிவம், திரு. செ. | ஆண்டிமடம். |
| 85 சண்முகசுந்தரம், திரு. அ. ப. | பொள்ளாச்சி. |
| 86 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 87 சண்முகம், திரு. பெரி. | திருவாடானை. |
| 88 சண்முகம், திரு. மு. | விழுப்புரம். |
| 89 சத்தியமூர்த்தி, திரு. மு. | புதுக்கோட்டை. |
| 90 சத்தியவாணிமுத்து, மாண்புமிகு திருமதி (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.). |
| 91 சத்தியேந்திரன், திரு. எம்.எஸ். கே. | இராமநாதபுரம். |
| 92 சம்பத், திரு. டி. வி. | செம்பனார் கோவில். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 93 சாதிக் பாட்சா, மாண்புமிகு திரு. எஸ்.ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை |
| 94 சரதி, திரு. மா. பா. .. | வேலூர். |
| 95 சிதம்பரம், திரு. சித. .. | காரைக்குடி. |
| 96 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. .. | சேரன்மகாதேவி. |
| 97 சிவபெருமாள், திரு. கோ. .. | அரியலூர். |
| 98 சிறைமீட்டான், திரு. தொ. க. .. | பரமக்குடி (செ.வ.) |
| 99 சீனிவாசன், திரு. பெ. .. | விருதுநகர். |
| 100 சீனிவாசன், திரு. தொ. ப. .. | போளூர். |
| 101 சின்னசாமி, திரு. அ. .. | செயங்கொண்டம் (செ |
| 102 சின்னசாமி, திரு. ஆர். .. | தர்மபுரி. |
| 103 சின்னசாமி திரு. மு. .. | மொடக்குறிச்சி. |
| 104 சின்னசாமி, திரு. வ. .. | ஏற்காடு (ஆ. வா.) |
| 105 சின்னராசு, டாக்டர் ச. அ. .. | ஊரூர் (செ. வ.) |
| 106 சின்னவெள்ளையன், திரு. சி. .. | சேந்தமங்கலம் (ஆ. வ |
| 107 சுந்தரம், திரு. ஓ. என். .. | திண்டுக்கல். |
| 108 சுப்பிரமணியம், திரு. எ. .. | சிங்கநல்லூர். |
| 109 சுப்பிரமணியம், திரு. எஸ். கே. .. | சத்தியமங்கலம். |
| 110 சுப்பிரமணியம், திரு. கே. எம். .. | தியாகராயநகர். |
| 111 சுப்பிரமணியன், திரு. மா. .. | ஈரோடு. |
| 112 சுப்பிரமணியன், திரு. வீ. .. | உளுந்தூர்பேட்டை. |
| 113 சுப்பு, திரு. க. .. | ராஜபாளையம். |
| 114 சுப்பையா, திரு. ஆ. கு. .. | கோட்டூர் (செ. வ.) |
| 115 சுப்பையா, திரு. கே. வி. .. | ஆலங்குடி. |
| 116 சுப்பையா, திரு. ச. .. | சங்கரன்கோயில் (செ |
| 117 சுப்பையா, திரு. எ. ஆர். .. | கடயநல்லூர். |
| 118 சுருளிவேல், திரு. மு. .. | போதிநாயக்கனூர். |
| 119 சுரேந்திரன், திரு. எம். .. | மேட்டூர். |
| 120 சுவாமிதாஸ், திரு. எ. .. | பத்மநாபபுரம். |
| 121 செபமாலை, திரு. கோ. .. | மங்களூர் (செ. வ.) |
| 122 ஜெயாராமன், திரு. இ. .. | சேலம்–1. |
| 123 செல்லத்துரை, திரு. வீ. .. | ஓமலூர் (செ. வ.) |
| 124 செல்லையா, திரு ... .. | பேராவூரணி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 125 செல்வராஜ், திரு. எம். .. | விருத்தாசலம். |
| 126 சேதுராமன், திரு. சி. .. | சிவகங்கை. |
| 127 சோனையா, திரு. த. .. | மானாமதுரை. |
| 128 சோமசுந்தரம், திரு. ந. .. | வலங்கைமான் (செ. வ.) |
| 129 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். .. | அருப்புக்கோட்டை. |
| 130 சௌந்தரபாண்டியன், திரு. பெ. .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 131 டென்னிஸ், திரு. என். .. | கிள்ளியூர். |
| 132 தங்கமணி, திரு. கே. டி. கே. .. | மதுரை–மேற்கு. |
| 133 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 134 தருமலிங்கம், திரு. ந. .. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 135 தவமணித்தேவர், திரு. வி. .. | சேடப்பட்டி. |
| 136 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. .. | நாட்ராம்பள்ளி |
| 137 தியாகராசன், திரு. அ. .. | திருமயம். |
| 138 தியாகராசன், திரு. இ. எஸ். .. | திருத்தணி. |
| 139 திருப்பதி, திரு. கு. .. | மதுரை (சென்ட்ரல்). |
| 140 துரைசாமி திரு. எ. க. .. | குடியாத்தம். |
| 141 துரைசாமி, திரு. சு. .. | திருப்பூர். |
| 142 துரைமுருகன், திரு. .. | காட்பாடி. |
| 143 துரைராஜ், திரு. சு. ம. .. | திருவள்ளூர் (செ.வ.) |
| 144 தூயமணி, திரு. மே. சி. .. | மேட்டுப்பாளையம். |
| 145 தேவராசன், திரு. எம். .. | உதகமண்டலம். |
| 146 தேவேந்திரன், திரு. அ. .. | நன்னிலம் (செ. வ.) |
| 147 தோப்பூர் திருவேங்கடம், திரு. .. | கணியம்பாடி. |
| 148 நடராசன், திரு. ஈ. எம். .. | அந்தியூர். |
| 149 நடராசன், திரு. எஸ். .. | தஞ்சாவூர். |
| 150 நரசிம்மன், திரு. எ. சி. .. | ஆரணி. |
| 151 நல்லசாமி, திரு. எஸ். .. | கரூர். |
| 152 நாகராஜன், திரு. க. .. | வடமதுரை. |
| 153 நாகலிங்கம், திரு. பா. .. | பொன்னேரி (செ.வ. |
| 154 நாச்சிமுத்து, திரு. நா. .. | ஒட்டன்சத்திரம். |
| 155 நாச்சியப்பன், திரு. எ. எம். டி. .. | ஆத்தூர். |
| 156 நாச்சியப்பன், திரு. ந. .. | சங்கராபுரம். |
| 157 நாராயணசாமி, திரு. மா. வே. .. | திருவொற்றியூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 158 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்). | திருவல்லிக்கேணி. |
| 159 நைனுமலை, திரு. இரா. | ராசிபுரம். |
| 160 பத்மநாபன், திரு. பொ. | திருநெல்வேலி. |
| 161 பத்மாவதி, திருமதி. எ. கோ. | முகையூர். |
| 162 பரந்தாமன், திரு. ஆ. | கடம்பத்தூர். |
| 163 பரமசிவம், திரு. எம். | தாரமங்கலம். |
| 164 பலராமன், திரு. என். எஸ். | அரக்கோணம். |
| 165 பழனிசாமி, திரு. நா. | பொங்கலூர். |
| 166 பழனிசாமி, திரு. என். கே. | பெருந்துறை. |
| 167 பழனிசாமி, திரு. மு. | வெள்ளகோயில். |
| 168 பழனிச்சாமி, புலவர் சி. | பழனி (செ.வ.) |
| 169 பழனியப்பன், டாக்டர் ச. மு. | கோபிசெட்டிபாளையம். |
| 170 பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம். |
| 171 பழனிவேலன், திரு. க. | வரகூர். |
| 172 பழனிவேலன், திரு. மு. | நாமக்கல். |
| 173 பழனிவேலு, திரு. பி. | ஆத்தூர் |
| 174 பழனிவேல் ராஜன், திரு. | தேனி. |
| 175 பன்னீர் செல்வம், திரு. எம். | ஆம்பூர் (செ. வ.) |
| 176 பாண்டுரங்கம், திரு. சி. | செங்கம் (செ. வ.) |
| 177 பாலகிருட்டிணன், திரு. கு. | மன்னார்குடி. |
| 178 பாலசுந்தரம், திரு. வை. | அச்சரபாக்கம் (செ.வ. |
| 179 பாலையா, திரு. எ. | கொளச்சல். |
| 180 பெரியசாமி, திரு. கு. | கொடவாசல். |
| 181 பெரியசாமி, திரு. தி. ஒ. | அவிநாசி. |
| 182 பெருமாள், திரு. செ. | காட்டுமன்னார்கோயில் |
| 183 பெருமாள், திரு. எ. ஆர். | காரியப்பட்டி. |
| 184 பொம்மன், திரு. கு. அ. | கூடலூர் (செ. வ.) |
| 185 பொன் சொக்கலிங்கம், திரு. பி. | சிதம்பரம். |
| 186 பொன்னப்ப நாடார், திரு. ஆர். | விளவங்கோடு. |
| 187 பொன்னுமலை, திரு. தி. | பனைமரத்துப்பட்டி. |
| 188 பொன்னுரங்கம், திரு. எ. எம். | சோளிங்கபுரம். |
| 189 மணலி கந்தசாமி, திரு. சி. | திருத்துறைப்பூண்டி. |
| 190 மணியன், திரு. பி. எஸ். | சோழவந்தான். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 191 மதியழகன், திரு. கே.எ. | ஆயிரம் விளக்கு. |
| 192 மருதாசலம், திரு. என். | பேரூர் (செ. வ.). |
| 193 மலைக்கண்ணன், திரு. வீ. | இளையாங்குடி. |
| 194 மன்னியப்பன், திரு. சி. | கிருஷ்ணகிரி. |
| 195 மாணிக்கம், திரு. என். | பென்னகரம். |
| 196 மாணிக்கவாசகம், திரு. இரா. | தொண்டாமுத்தூர். |
| 197 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். (இராமநாதபுரம் மாவட்டம்) |
| 198 மாரிமுத்து, திரு. எ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 199 மாரிமுத்து, திரு. மூ. | தலைவாசல் (செ.வ.) |
| 200 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம். |
| 201 முகமது கோதர் முகைதீன், திரு. எஸ். | மேலப்பாளையம். |
| 202 முத்தமிழ்ச் செல்வன், திரு வெ. ந. | லால்குடி. |
| 203 முத்து, திரு. வ. | சங்கரி (செ. வ.) |
| 204 முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 205 முத்துச்செல்வன், திரு. பு. செ. | முசிறி. |
| 206 முத்துவேல், திரு. ந. | வானூர் (செ. வ.) |
| 207 முத்தையா, திரு. கே. கே. | கடலூர். |
| 208 முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ. வ.) |
| 209 முருகையன், திரு. எஸ். | கலசப்பாக்கம். |
| 210 முனியாண்டி, திரு. ஆ. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 211 முனு ஆதி, திரு. மு. | திருப்போரூர். |
| 212 முனுசாமி, திரு. ரா. ரா. | மேல்மலையனூர். |
| 213 மொய்தீன், திரு. திருப்பூர் எ. எம். | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 214 மோசஸ், திரு. ம. | நாகர்கோயில். |
| 215 ரங்கநாதன், திரு. கே. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 216 ராமசாமி, திரு. இ. | வால்பாறை. |
| 217 ராமசாமி, திரு. ஜி. | திருப்பத்தூர் (வட ஆர்க்காடு மாவட்டம்). |
| 218 ராமராசன், திரு. வ. க. | பவானிசாகர் (செ. வ.) |
| 219 ராஜா, திரு. எ. எம். | பவானி. |
| 220 ராஜாராம், திரு. ஜி. | தி[illegible]வனம். |
| 221 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | தி[illegible]கலம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 222 லத்தீப், திரு. எம். ஏ. .. .. | .. வாணியம்பாடி. |
| 223 வகாப், திரு. கே. ஏ. .. .. | .. ராணிப்பேட்டை. |
| 224 வடிவேலு, திரு. சி. க. .. | .. தொட்டியம். |
| 225 வடிவேல், திரு. எஸ். .. .. | .. சீர்காழி (செ. வ.) |
| 226 விசுவநாதன், திரு. செ. கோ. | .. செங்கல்பட்டு. |
| 227 வீராசாமி, திரு. நா. .. .. | .. ஆற்காடு. |
| 228 வெங்கடசாமி, திரு. பி. .. | .. ஹோசூர். |
| 229 வெள்ளத்துரை, திரு. அ. .. | .. வாசுதேவநல்லூர். |
| 230 வேதாசலம், திரு. மு. .. .. | .. வண்ணாரப்பேட்டை (சென்னை நகரம்). |
| 231 வேலப்பன், திரு. சி. வே. .. | .. கபிலமலை. |
| 232 வேழவேந்தன், திரு. கா. .. | .. கும்மிடிபூண்டி. |
| 233 ஜேம்ஸ், திரு. ஜே. .. .. | .. திருவட்டார். |
| 234 ஜோதி வெங்கடாசலம், திருமதி. | .. ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 235 ஹாண்டே, டாக்டர், எச். வி. .. | .. பார்க் டவுன் (சென்னை நகரம்). |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்

1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன்—அமைச்சர்.
2 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி—அமைச்சர்.
3 திரு. கோவிந்த் சாமிநாதன்—தலைமை வழக்கறிஞர்

## தமிழ் நாடு சட்டப் பேரவை.

---

### புதன்கிழமை, 1974 மார்ச் 20.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### *Women Police*

*511 Q.—THIRU R. R. MUNUSAMI :
THIRU N. KITTAPPA :
**THIRU KOVAI CHEZHIYAN.**
THIRU M. MUTHIAH :
**THIRU K. VEZHAVENDAN : Will the Hon. the** Chief Minister with reference to Question No. 432 answered on the floor of the Assembly on 20th March 1973, be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to set up a Unit of Women Police in Madras City; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) ஆம்.

(இ) 1973-ம் ஆண்டிலேயே சென்னை மாநகர் காவற் பிரிவில் மகளிர் காவற் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மகளிர் காவற் பிரிவில் வேலைக்கமர்த்தப்படுவதற்காகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் சென்னை கீழ்பாக்கத்திலுள்ள காவற் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெறுகின்றார்கள்.

**திரு. கோவை செழியன்:** தலைவர் அவர்களே, மகளிர் காவல் பிரிவை ஆரம்பித்திருக்கிறார்கள். மற்ற காவலர்கள் செய்கின்ற பணியைத்தான் இந்தப் பிரிவினரும் செய்கின்றார்களா? அதாவது

[1974 மார்ச் 20

திருட்டுக்களைக் கண்டுபிடிப்பது, ரௌடிகளை அடக்குவது போன்ற பணிகளுக்கும் அவர்கள் பயன்படுத்தப்படுகிறார்களா ; அப்படி யென்றால், இவர்களைப் பாதுகாக்கவென்று தனி போலீஸ் படை தேவைப்படுமே, அதற்கு அரசு என்ன செய்ய உத்தேசித்திருக்கிறது என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நம்முடைய நாட்டில் வீராங்கனைகள் இருக்கிறார்கள் என்பதை முதலில் ஒப்புக்கொண்டு பிறகு இந்தக் கேள்வியைப்பற்றி ஆராய வேண்டும். தவறான நடவடிக்கையுள்ள பெண்கள் நடமாடும் பகுதியில் ரோந்து சுற்றுதல், வீடில்லாத இளம் பெண்களுக்குப் பாதுகாப்புப் பணி செய்தல், தவறான வழியில் ஈடுபட முயற்சிக்கிற பெண்களுக்கு தடுப்புக் காவல் பணி செய்தல், பெண்கள் தவறாமல் இருப்பதற்கு போலீசார் எடுக்கின்ற நடவடிக்கைகளில் இவர்களும் உடன் சென்று உதவி புரிதல், பெண் கைதிகளை நீதி மன்றத்திற்கு அழைத்துச் செல்லுதல், மற்றும் நீதி மன்றங்களில் அவர்களுக்குக் காவல் புரிதல், 'ரிமாண்டு'-க்குச் செல்லும் பெண் குற்றவாளிகளையும், விசாரணைக்குச் செல்லும் பெண் குற்றவாளிகளையும் அழைத்துச் செல்வது, பெண்கள் சிறுவர்கள் தாக்கப்பட்ட இடங்களில் விசாரணையின்போது மற்ற போலீசாருக்கு உதவியாக இருத்தல், பெண்களுக்கு தனியிடம் ஒதுக்கப்பட்டுள்ள பெரிய பொதுக் கூட்டங்கள், திருவிழாக் கூட்டங்கள் ஆகியவற்றில் பெண்கள் பகுதியில் அமைதி காத்துக் காவல் புரிதல் ஆகிய பணிகளில் இவர்கள் ஈடுபடுகின்றனர்.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் இப்பொழுது பயனுடைய பணிகளைப்பற்றிச் சொன்னார்கள். சென்னை மாநகரத்தில் மட்டுமில்லாமல், மற்ற முக்கியமான தலைநகரங்களுக்கும் இந்த மகளிர் காவற் பிரிவை நீட்டிப்பதுபற்றி அரசு ஆலோசிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்பொழுதுதான் முதற் கட்டமாக இது தொடங்கப் பெற்றிருக்கிறது. இதனுடைய பணிகள் முறையாக நிறைவேறிய பிறகு மற்ற இடங்களுக்கும் இதை விரிவுபடுத்துவதுபற்றி யோசிக்கப்படும்.



1974 மார்ச் 20]

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, இதில் முதல் கட்டமாக எத்தனை பேர் பயிற்சி பெறுகிறார்கள்? வருகிற ஆண்டு எத்தனை பேருக்கு பயிற்சி கொடுப்பதற்கு 'செலக்ஷன்' நடைபெறும் என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்பொழுது 21 பேர் பயிற்சி பெறுகிறார்கள். சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் பயிற்சி பெறுகிறார். வருகிற ஆண்டுக்கு எத்தனை பேர் என்று இன்னும் தீர்மானிக்கவில்லை.

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** தலைவர் அவர்களே, மகளிர் காவல் பிரிவுக்கு சம்பள விகிதங்கள் எப்படி இருக்கும்? ஆண்கள் பிரிவுக்கு அளிக்கப்படும் அதே விகிதம் இவர்களுக்கும் அளிக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மகளிர் சப்-இன்ஸ்பெக்டருக்கு 300-லிருந்து 500 ரூபாய்வரை ; மகளிர் தலைமைக் காவலருக்கு 210-லிருந்து 325 ரூபாய் வரை ; மகளிர் காவலருக்கு 150-லிருந்து 225 ரூபாய்வரை சம்பள விகிதங்கள் இருக்கின்றன. ஆண்களுக்கு வழங்கப்படுவதைப் போலவே தான் இவர்களுக்கும் வழங்கப்படுகிறது.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, முதலில் தந்த விளக்கத்தில் பெண்கள் மட்டும் சம்பந்தப்பட்ட காவல் பணிகள் இவர்களுக்குத் தரப்படுவதாகச் சொன்னார்கள். இருந்த போதிலும், சில நேரங்களில் இவர்களுடைய உடல் வலிமையை—திறத்தை—சோதிக்கின்ற நிலைமை ஏற்படக் கூடும். அப்படிப்பட்ட நிலைமைகளைச் சமாளிப்பதற்காக பெண்களுக்கு 'கராத்தே' போன்ற பயிற்சிகள் பயன் தரும். உடல் வலிமை குறைவாக இருந்தாலும், நிலைமையைச் சமாளிப்பதற்கு இத்தகைய பயிற்சி அவர்களுக்குப் பயன் தருமாதலால், அத்தகைய பயிற்சியை அவர்களுக்குத் தரும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** 'கராத்தே' பயிற்சியினுடைய நிகழ்ச்சியொன்றைக் கண்டவுடனேயே நான் அந்த முடிவை எடுத்து, பெண்களுக்கு அந்தப் பயிற்சி இப்பொழுது அளிக்கப்பட்டு வருகிறது.

[1974 மார்ச் 20

**திரு. ந. சோமசுந்தரம்:** தலைவர் அவர்களே, இந்த மகளிர் காவல் பிரிவிற்கு திருமணமான திருமணம் ஆகாத இருபாலாரும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனரா? அரசாங்க உத்தியோகத்தில் கடைப் பிடிக்கிற வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இவர்களுக்கும் அமல் செய்யப்படுகிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தேர்வு சமயத்தில் அவர்கள் திருமணம் ஆனவர்களாக இருக்கக் கூடாது. 'ப்ரொபேஷன்' இரண்டு ஆண்டுகள் உண்டு. அதற்குள் அவர்கள் திருமணம் செய்துகொள்ளக் கூடாது என்கிற நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறது. முதல் கட்டமாக இப்பொழுதுதான் 21 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். இதில் அந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை புகுத்தப்படுவதற்கு இடமில்லை. அடுத்த ஆண்டு அதிகமாக இவர்கள் சேர்த்துக்கொள்ளப்படும் நேரத்தில் அத்தகைய பிரதிநிதித்துவ முறைகளுக்கு இடம் அளிக்கப்படும்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** தலைவர் அவர்களே, இந்தப் பெண் காவலர்களுக்கும் உதவி ஆய்வாளர்களுக்கும் ஏதாவது கல்வித் தகுதி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா? எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** காவலர்கள் எஸ்.எஸ்.எல்.சி. படித்திருக்க வேண்டும். சப்-இன்ஸ்பெக்டர்கள் பட்டதாரிகளாக இருக்க வேண்டும்.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, இப்பொழுது இந்த மகளிர் காவல் பிரிவு ஆரம்பித்ததன் விளைவாக தமிழ் நாட்டில் வருங்காலத்தில் பெண்களுக்கு ஏராளமான வேலை கிடைக்கும் என்ற புதிய நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. இதை மனத்திற் கொண்டு, இப்பொழுது சர்விஸ் கமிஷன் மூலமாக க்ருப்-1 சர்விசில் டி.எஸ்.பி., டெபுடி கலெக்டர் போன்ற பதவிகளுக்கு தேர்வு நடத்தி நல்ல திறமையான இளைஞர்களை எடுத்துக் கொள்வதுபோல், மகளிர் பிரிவை விரிவுபடுத்தும்போது, டி.எஸ்.பி. 'ரேங்க்'-இலும் பெண்களுக்கு இடம் கொடுக்க நம்முடைய அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா? டி.எஸ்.பி., இன்ஸ்பெக்டர் போன்ற பதவிகளில் இப்படி படித்த பட்டதாரிப் பெண்களுக்கு வாய்ப்பு கொடுக்க அரசு முன்வருமா?



1974 மார்ச் 20]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இந்த மகளிர் காவற் பிரிவை விரிவுபடுத்தும்போது நண்பர் வீராசாமி அவர்களின் கோரிக்கை கவனிக்கப்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, இந்தக் காவற் பிரிவில் சேருவதற்கு அதிகமாக மனுதாரர்கள் இருந்தார்களா? அப்படியிருந்தால் சப்-இன்ஸ்பெக்டர் பதவிக்கு எத்தனை பேர் மனுப்போட்டார்கள்? சபார்டினேட் ரேங்குக்கு எத்தனை பேர் மனுப்போட்டார்கள்?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** காவலர் பதவிக்கு மனுப் போட்டவர்கள் 233 பேர். இண்டர்வ்யூவுக்கு அழைக்கப் பட்டவர்கள் 215 பேர். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 21 பேர். சப்-இன்ஸ்பெக்டர் பதவிக்கு மனுப் போட்டவர்கள் 13 பேர். இண்டர்வ்யூவிற்கு அழைக்கப்பட்டவர்கள் 10 பேர். தேர்ந்தெடுக்கப் பட்டவர் ஒருவர்.

**திரு. எம். முத்தையா:** தலைவர் அவர்களே, இந்த பெண் காவலர்களில் கடமையையும் கற்பையும் இரு கண்களாகக் கருதி கடமையாற்றுகிறவர்களுக்கு 'கண்ணகி' என்ற விருது வழங்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எந்த ஊரையும் எரித்து விடாமலிருந்தால் அதுபற்றி யோசிக்கலாம். (சிரிப்பு)

**திரு. கு. காமாட்சி:** தலைவர் அவர்களே, இந்த போலீஸ் வேலைக்கு பயிற்சி பெறும் பெண்களுக்கு, ஆண்களுக்குக் கொடுக்கப்படுவது போல் கடுமையான பயிற்சி கொடுப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, தயவுசெய்து அவர்களுக்குக் கொஞ்சம் அதிலே இரக்கம் காட்டி, இலேசான பயிற்சி தந்து உதவ அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** 'காமாட்சி' என்று பெயர் இருப்பதால் இரக்கம் காட்ட வேண்டும் என்று கருதுகிறார் என்று எண்ணுகிறேன். பெண்களுக்கு அவர்களால் செய்யக்கூடிய பயிற்சிகள்தான் அளிக்கப்படுகின்றன.

**திரு. எம். சுரேந்திரன்:** தலைவர் அவர்களே, பெண் போலீஸாருக்கு யூனிஃபாரம் எப்படி அளிக்கப்படுகிறது? மற்ற போலீஸைப் போலவே இவர்களுக்கும் தொப்பிகள் அளிக்கப்

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** காக்கி புஷ் ஷர்ட், காக்கி
பாண்ட், நீல நிறக் குல்லாய், வெள்ளைப் பைஜாமா, கறுப்பு கான்
வாஸ் ஷூஸ், வெள்ளை சாக்ஸ், கறுப்பு கம்பளி ஆடைகள்
அவர்களுக்கு அளிக்கப்படுகின்றன.

**திரு. வை. பால்சுந்தரம் :** தலைவர் அவர்களே, பெண்கள்
எப்போதுமே இளகிய மனதுடையவர்கள். அப்படியிருக்கின்ற
போது, மகளிர் பெண் போலீசாக வந்துவிட்ட பின்னர் குற்றங்
களைக் கண்டுபிடிக்கும் நேரத்தில் பாரபட்சம் ஏற்படுவதைத்
தவிர்க்க, அவர்களுக்கு இப்படிப்பட்ட நிலைமைகளில் நெஞ்சு உரம்
ஏற்படத்தக்க விதத்தில் அவர்களுக்குத் தனிப் பயிற்சி அளிக்க
அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பெண்கள் இளகிய மனம்
படைத்தவர்கள் என்று கூறி, அவர்கள் தவறுகளையெல்லாம்
அனுபவித்துக்கொள்வார்கள் என்று நாமே கற்பனை செய்து
கொள்வது முறையல்ல.

DR. H. V. HANDE : Sir, in view of the fact that many
women are afraid to go to the police station to file complaints
because of the sense of insecurity prevailing among the women-
folk, will it be possible for the Hon. Chief Minister to suggest
ways and means for having a women police officer along with the
Sub-Inspector in almost every police station to look into the
complaints of women with kindness?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஏற்கெனவே நான்
சொன்ன பதிலிலேகூட அதைப்பற்றிக் குறிப்பிட்டேன். சில இடங்
களில் பெண்கள் கைது செய்யப்பட்டு நீதி மன்றங்களுக்கு
அழைத்துச் செல்லப்படும்போது, பெண் போலீசார் உடன்
செல்லுகிறார்கள். பெண் போலீஸார் இப்பொழுது 21 பேராக
இருக்கும்போது, மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற அந்தப் பணி
சாத்தியமாக இருக்க முடியாது. இந்தத் துறை விரிவுபடுத்தப்
பட்ட பிறகு அதைப்பற்றி கவனிக்கலாம்.



## இசைத்தட்டு நடனம்.

* 512 வினா—திரு. கோவை செழியன் : மாண்புமிகு முதல்
அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை
யளிப்பாரா—

ரெக்கார்டு டான்ஸ் என்ற பெயரில் நடைபெறும் ஆபாச
நடனங்களை தடை செய்யும் செயற்குறிப்பு இந்த அரசின் ஆய்வில்
உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஆம்.

**திரு. கோவை செழியன் :** தலைவர் அவர்களே, இன்றுங்கூட பல
இடங்களிலே திருவிழாக்காலங்களிலே பொருட்காட்சிகளை வைத்து
அதிலே ரிக்கார்டு டான்ஸ் என்ற அரை நிர்வாண நடனங்கள்
நடத்தப்படுகின்றன. இதனால் இளைஞர்கள் கெட்டுவிடுவார்கள்.
இப்படி நடத்துவதில் பெரிய இடத்து சம்பந்தம் இருக்கிறது.
இதனால் போலீஸ்காரர்களும் பயந்துவிடுகிறார்கள். நடவடிக்கை
எடுக்கப்படுவதில்லை. சென்னையிலே பல பெரிய ஹோட்டல்
களிலே காபரே டான்ஸ் என்ற ஆபாச நடனங்கள் நடத்தப்
படுகின்றன. இதனால் மற்றவர்கள் குழந்தைகளோடு அங்கு
சென்று சாப்பிடுவதற்குக் கஷ்டமாக இருக்கிறது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியைப் போடுங்கள்.

**திரு. கோவை செழியன் :** டான்சிலே எத்தனை இருக்கிறது
என்று கூறுகிறேன் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது வேண்டாம், கேள்வியைப்
போடுங்கள்.

**திரு. கோவை செழியன் :** "டிஸ்கொத்தே" என்ற பெயரிலே
விளக்குகளை அணைத்துவிட்டு ஆபாச நடனங்களும் நடத்தப்படு
கின்றன ; இவற்றையெல்லாம் தடை செய்ய அரசாங்கம்
நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இதுபோன்ற பேச்சுக்
கள், கேள்விகள் நம்முடைய மாமன்றத்திலே பல நேரங்களிலே
எழுந்ததன் காரணமாக அரசு நம்முடைய காவல் துறையினர்
மிகுந்த கடுமையாக இதிலே இருக்கவேண்டும் என்று எடுத்துச்
சொல்லியிருப்பதாலே ஆபாச நடனங்கள் குறைந்து வருகின்றன.

[1974 மார்ச் 20

பொருட்காட்சியைப் பொறுத்தவரையிலும் ஆபாச நடனங்களைத்
தடுப்பதற்குரிய சட்டங்களை நாம் நிறைவேற்ற முடியவில்லை.
அதனால் அவர்கள் சட்டங்களின் இடுக்குகளுக்குள் நுழைந்து
தப்பிவிடுகிறார்கள். பொருட்காட்சியை நடத்துகிறவர்கள்
முதலிலே வைப்புத் தொகை என்று 10 ஆயிரம் ரூபாய் கட்ட
வேண்டும் என்றும் அவர்களுக்கு உரிமம் அளிக்கப்படுகின்ற
நேரத்திலே போடப்படுகின்ற நிபந்தனைகளை அவர்கள் மீறினால்
இந்த 10 ஆயிரம் ரூபாயைப் பறிமுதல் செய்யவும் அதைத் தடுத்து
நிறுத்தவும் வழிவகை செய்திருப்பதால் பொருட்காட்சிகளிலே
இப்பொழுது ஆபாச நடனங்கள் நடத்தப்படுவது ஓரளவிற்குக்
குறைந்துகொண்டு வருகின்றது.

சில இடங்களிலே காவல் துறையினர் கடுமையாக நடவடிக்கை
எடுத்ததன் காரணமாக குறைந்து வருகின்றது. மேலும்
நகராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் இவைகள் எல்லாம்
தனியார்களுக்கு பொருட்காட்சிகளை எலத்திலே விடுவது போன்ற
காரியங்களைச் செய்யக்கூடாது என்று எடுத்துச் சொல்லப்
பட்டிருக்கிறது. அப்படி விடுவதாக இருந்தால் இந்த நிபந்தனை
களை எல்லாம் அவர்கள் ஏற்று நிறைவேற்றவேண்டுமென்றும்
அரசின் சார்பிலே எடுத்துக்கூறப்பட்டது.

அதற்கும் ஒரு சட்டம் கொண்டுவரலாமா என்று யோசித்துக்
கொண்டிருக்கிறோம். நகராட்சி மன்றங்கள் தாங்களே உரிமை
பெற்று நடத்த வேண்டுமென்றால் அதற்காக ஒரு சட்டம் கொண்டு
வரலாமா என்று ஆலோசிக்கப்படுகிறது.

ஹோட்டல்களிலே அப்படிப்பட்ட நடனங்கள் பெருமளவிற்குக்
குறைந்து இருக்கின்றன. எந்த ஹோட்டலிலே அப்படியிருக்
கிறது என்று கோவை செழியன் அவர்கள் அனுபவப்பூர்வமாகக்
கூறினால் உடனடியாக நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும்.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவர் அவர்களே, இந்த ஆபாச
நடனங்கள் தனிப்பட்டவர்களால் பொருட்காட்சிகள் என்ற
பெயராலே நடத்தப்பட்டு வருகின்றன. அங்கே பொருட்காட்சி
என்றால் நான்கு கடைகளைத்தான் வைத்திருக்கிறார்கள், வேறு
ஒன்றும் கிடையாது, ஆபாச நடனங்களைத்தான் நடத்துகிறார்கள்.
அதிகாரிகளிடம் சொன்னால் அவர்கள் நடவடிக்கை எடுப்பதில்லை.
அப்படிப்பட்டவர்களுக்கு லைசென்சே கொடுக்கக் கூடாது



1974 மார்ச் 20]

என்றும் இந்த நடனக் காட்சிகளை அறவே ஒழிப்பதற்கும்
அரசாங்கம் நடவடிக்கை எடுக்கக்கூடிய முறையிலே அதைத்
தடை செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நடனக் காட்சியை
அறவே தடுப்பது என்று எந்தச் சட்டமும் போடமுடியாது.
நடனக் காட்சி என்று நடத்திக்கொண்டிருக்கும்பொழுது
திடீரென்று ஒரு காட்சியிலே ஆபாச நடனம் வந்துவிட்டால்
அவர்கள் பெற்ற அனுமதியை அதற்குப் பயன்படுத்திக்கொள்
கிறார்கள். நான் ஏற்கனவே சொன்னபடி அவர்கள் நிபந்தனை
களை மீறினால் உரிமத்தை ரத்து செய்யவும் அவர்கள் கொடுத்த
வைப்புத் தொகையைப் பறிமுதல் செய்யவும் நடவடிக்கைகள்
எடுக்கப்படுகின்றன. எல்லா இடங்களிலும் நடவடிக்கை
எடுக்கவில்லை என்று சொல்லிவிடமுடியாது. விழுப்புரம், கள்ளக்
குறிச்சி ஆகிய இடங்களிலே நடைபெறுவதாகப் புகார் தெரிவிக்கப்
பட்டு உடனடியாக நிறுத்தப்பட்டிருக்கின்றன என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

## இளைஞர் அணி.

*513 வினா—**திரு. ஜி. ராமசாமி:**
**திரு. என். டென்னிஸ்:** மாண்புமிகு பின்
தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இளைஞர் அணியில் பணிபுரிபவர்களுக்கு வேலைவாய்ப்பு
களில் முன்னுரிமை வழங்கப்படுகிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** (அ) ஆம்.

(இ) இளைஞர் அணியில் ஓராண்டு அல்லது அதற்கு மேல்
பணிபுரிந்தவர்களுக்கு அரசுப் பணிகளுக்கு நியமனம் செய்வதில்
முன்னுரிமை அளிக்கப்படும்.

2. அரசுப் பணிகளுக்கு நியமனம் செய்வதற்கான உச்ச வயது
வரம்பைக் கணிக்கும்போது இளைஞர் அணியில் ஆற்றிய பணிக்
காலத்தை (அதிகபட்சம் இரண்டு ஆண்டுகள்) கழித்து விடுமாறு
அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

[1974 மார்ச் 20

*514 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இளைஞர் அணித் தொண்டர்களின் பதவிக்காலம் நீட்டிக்கப் பட்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** இளைஞர் அணிக்கு 1971-72-ம் ஆண்டில் நியமிக்கப்பட்ட தொண்டர்களின் பதவிக் காலம் மேலும் ஓர் ஆண்டு நீடிக்கப்பட்டுள்ளது.

**திரு. ஜி. ராமசாமி :** தலைவர் அவர்களே, இளைஞர் அணியில் பணி புரிகின்றவர்கள் சர்வீஸ் கமிஷன் தேர்விலே கலந்து கொள்ளும்பொழுது அவர்களுக்கு என்று ஏதாவது தனிச் சலுகைகள் அளிக்கப்படுகின்றனவா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, அவர்களுக்கு அரசுப் பணிகளில் தெரிந்தெடுப்பதில் முன்னுரிமை வழங்கப்படும். உச்ச வயது வரம்பைக் கணிக்கும்போது இளைஞர் அணியில் பணி புரிந்த காலத்தை (இரண்டு ஆண்டுகள் வரை) கழித்துவிடுமாறு வயது சலுகையும் அளிக்கப்படும்.

**திரு. என். டென்னிஸ் :** தலைவர் அவர்களே, இளைஞர் அணி யிலே இருக்கக் கூடியவர்களுக்கு வேலை நிரந்தரமாகக் கொடுக்கப் படவில்லை. அவர்களுக்கு நிரந்தரமாக வேலை கிடைக்கக்கூடிய முறையிலே ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தற்போது அரசைச் சேர்ந்த இடங்களிலே அவர்களுக்கு முதலிடம் அளிக்கப்படுகிறது உச்ச வயது வரம்பைக் கணிக்கும்போது இளைஞர் அணியில் பண புரிந்த காலத்தை (இரண்டு ஆண்டுகள் வரை) கழித்து விடுமா வயது சலுகையும் அளிக்கப்படும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, இளைஞ அணிக்கு ஆள் எடுக்கின்ற நேரத்தில் மாவட்டத்திலே உள் மக்கள் தொடர்பு அதிகாரிகளும் மற்றவர்களும் சேர்ந்து எடு கிறார்கள். தற்போது வேலையில்லாமல் பல பேர்கள் வேலை தேடி தரும் அலுவலகங்களில் பதிவுசெய்து வைத்து இருக்கிறார்கள் படி அங்கே பதிவுசெய்து வைத்திருக்கக்



1974 மார்ச் 20]

தகுதியுள்ளவர்களாக இருந்தால் அவர்களை எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யாமல் இருக்கிறதே, அதற்கு ஏதாவது காரணம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** காரணம் எதுவும் இல்லை. உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை நினைவில் வைத்து ஆவன செய்யப்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இளைஞர் அணியிலே வயதின் அடிப்படையில் அவர்களுக்கு மாற்றுவேலை கொடுக்கிற திட்டம் இருக்கிறதா ? வயது வரம்பை தாண்டக்கூடியவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அவர்களுக்கு முன்னுரிமை மட்டுமல்ல, உச்ச வயதுவரம்பைக் கணிக்கும்போது இளைஞர் அணியில் பணி புரிந்த காலத்தை (இரண்டு ஆண்டுகள் வரை) கழித்து விடுமாறு வயது சலுகையும் அளிக்கப்படும்.

**திரு. த. சோலையா :** தலைவர் அவர்களே, இளைஞர் அணியிலே இருப்பவர்களுக்கு மாற்றுவேலை எத்தனை பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்ல இயலுமா ? ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு மாறுதல் கோரினால் மாற்றிக் கொடுக்க விதி இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** மாண்புமிகு உறுப் பினர் அவர்களுடைய கேள்விகளுக்கு, தற்போது விவரங்கள் இல்லை. சலுகைகள் அவர்களுக்கு அளிக்கப்படுகின்றன. மாற்று வேலை எதுவாக இருந்தாலும் முன்னுரிமை தரப்படுகிறது.

**திரு. என். கே. பழனிசாமி :** சார், யூத் சர்வீஸில் ஒரு மாதம் வேலை செய்துவிட்டு, பிறகு சர்வீஸ் கமிஷன் வேலை கொடுத்தால் அங்கே அவர்கள் போகும்பொழுது இங்கே வாங்கிய ரூபாய் 175-ஐயும் கண்டிப்பாக கட்டியாகவேண்டும் என்று சொல்லுகிறார் களே, அதைக் கட்டாமல் இருக்கும்படி அரசு ஆணையிடுமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பரிந்துரையை நினைவில் வைத்து சந்தர்ப்பம் வரும்போது பரிசீலனை செய்யப்படும்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** இளைஞர் அணியிலே
இளைஞர்கள் எந்த அடிப்படையிலே சேர்க்கப்படுகிறார்கள். இந்த
ஆண்டு இளைஞர்கள் சேர்க்கப்படுவது நிறுத்தப்படுமென்று
கேள்விப்படுகிறோமே, இளைஞர் அணி எந்த நோக்கத்திற்காக
ஆரம்பிக்கப்பட்டதோ அந்தப் பணிகள் முடிந்துவிட்டனவா
என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** இளைஞர் அணியில்
பட்டம் பெற்ற ஆண், பெண் இருபாலாரும் சேரலாம், வயது
29-க்குள் இருக்கவேண்டும். அதற்காக மாதம் 173 ரூபாய்
கொடுக்கப்படுகிறது, ஒவ்வொரு தொண்டரும் 2 ஆண்டுகள் பணி
புரிவார்கள். இதைத்தவிர வேறு விவரங்கள் வேண்டுமென்றால்
தனிக் கேள்வி போடவேண்டும்.

**திரு. ப. முத்துசாமி :** தலைவர் அவர்களே, இளைஞர் அணியிலே
பலவேலைத் திட்டங்கள் இப்பொழுதிருந்தாலும்கூட பெரும் பகுதி
நேரத்தில் அவர்கள் சும்மாதான் இருக்கிறார்கள். அதன் காரண
மாக அவர்கள் சொந்த ஊர்களுக்குப் போய் விடுகிறார்கள்.
ஊராட்சி ஒன்றியங்களிலே எழுத்தர்களாகப் பயிற்சி பெறக்கூடிய
வகையில் அவர்களை அமர்த்துவதற்கு ஆவன செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அதுவும் சொல்லப்
படுகிறது. அவர்கள் அந்தப் பணிகளையும் நிறைவேற்றுவதற்குத்
துணையாக இருக்கிறார்கள்.

**திரு. சோ. அழகர்சாமி :** இளைஞர் அணியிலே மாவட்ட வாரி
யாக எத்தனை பேர்கள் பணியாற்றுகிறார்கள் ? அவர்களுக்கு எந்த
விதமான வேலை கொடுக்கப்படுகின்றது ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே
சில தொண்டர்கள் மாற்றுவேலை கிடைத்ததாலும் மற்ற வேலைகள்
காரணமாகவும் பணியிலிருந்து விலகிக்கொண்டார்கள். இதனால்
1971-72 ஆம் ஆண்டிலே பணிக்கு அமர்த்தியதிலே 1,116 ஆண்களும்
118 பெண்களும் தற்போது பணிபுரிந்து கொண்டு வருகின்றனர்.
மற்ற விவரங்கள் வேண்டுமென்றால் தனிக் கேள்வி போட
வேண்டும்.



## Fisheries Research Centre, Mandapam

* 515 Q.—THIRUMATHI T. N. ANANDANAYAKI :
THIRU N. DENNIS : Will the Hon. the Minister
for Harijan Welfare be pleased to state—

(a) whether the Government have examined the necessity
to develop Mandapam as a Major Research Centre in fishing; and

(b) if so, with what result?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இந்திய விடுதலைக்கு
முன்பேகூட மண்டபத்தை பெரிய மீனள ஆராய்ச்சி நிலையமாக
மேம்படுத்த வேண்டிய தேவை உணரப்பட்டது. அதன் பயனாக
1947-ல் மத்திய மீனள ஆராய்ச்சி நிலையம் மண்டபத்தில் தோற்று
விக்கப்பட்டது. இது அண்மையில் கொச்சிக்கு மாற்றப்பட்டது.
தற்போது மண்டபத்தில் மத்திய மீனள ஆராய்ச்சித் துணை
நிலையம் ஒன்றுள்ளது.

**திரு. என். டென்னிஸ் :** தலைவரவர்களே, மீன் அதிகமாகக்
கிடைக்கும் பகுதியாதலால் அங்கே ஒரு ஆராய்ச்சி நிலையத்தைப்
பெரிய அளவில் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று
அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அதிக அளவிற்கு
மீன் கிடைப்பதால்தான் 1933-ம் ஆண்டிலிருந்து முடிவெடுக்கப்
பட்ட இடமாக மண்டபம் இருக்கிறது. அதற்குரிய வகையில்
'ஐஸ் பிளாண்ட்' 'ஃப்ரீசிங் பிளாண்ட்', 'போட் பில்டிங் யார்ட்'
போன்ற அத்தனையும் வைக்கப்பட்டிருக்கிறது. 'போட் பில்டிங்
யார்ட்' இருப்பதனால் நிறைய மீனவர்கட்கு படகு கொடுக்க
முடிகிறது. நிறைய மீன் பிடிக்கிறார்கள், ஏற்றுமதியும் செய்யப்
படுகிறது. மத்திய ஆராய்ச்சி நிலையம் இருந்தது. அதைத் துணை
நிலையமாக மாற்றியமைத்து, மேல்மட்ட அதிகாரிகள் கொச்சிக்கு
மாற்றப்பட்டிருக்கிறார்களே தவிர, நிலையம் விரிவடைந்துதான்
வருகிறது.

**திரு. சி. ஆறுமுகம் :** தலைவரவர்களே, இந்த மீன் வளர்க்கும்
திட்டம் மண்டபத்தில் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். அது
போலவே தமிழ்நாட்டில் நாட்டு மீன்களைப் பிடிக்கின்ற வகையில்,
செங்கற்பட்டு மாவட்டத்தில் செம்பரம்பாக்கம் ஏரி, மதுராந்தகம்
ஏரி போன்ற இடங்களில் தொடங்குவதற்கு ஏதேனும் உத்தேசம்
உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** தலைவாவர்களே
மண்டபத்தை அப்படிப்பட்ட நிலையமாக ஆக்கலாமா என்பட
தான் கேள்வி. செம்பரம்பாக்கத்தைப் பற்றிய கேள்வி அல்
இது. எனவே, தனிக் கேள்வி போடவும்.

## சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகம்

* 516 வினா—திரு. என். கிட்டப்பா

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமி
அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்
விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி கடற்கரைப் பகுதி சின்னமுட்டத்தில்
மீன்பிடிக்கும் துறைமுகம் அமைத்திட மத்திய அரசிடம் நமது
மாநில அரசு வலியுறுத்தியுள்ளதா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அ) & (இ)
ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டத்தின் கீழ், பெங்களூரிலுள்ள
முன்னோடி முதலீட்டு நில ஆய்வு நிறுவனம் கன்னியாகுமர்
மாவட்டத்திலுள்ள சின்னமுட்டம் என்ற இடத்தில் நில ஆய்வ
நடத்தி அங்கு ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் செலவில் ஒ
மீன்பிடி துறைமுகம் கட்டுவதற்கான அறிக்கையை சென்னை
மீனளத்துறை இயக்குநருக்கு அனுப்பியிருக்கிறது. பொது
பணித்துறையிடமிருந்து வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகளை
மீனளத்துறை இயக்குநர் எதிர் நோக்கியுள்ளார். பொதுப்பணி
துறையிடமிருந்து விரிவான மதிப்பீடுகளையும் வரைபடங்களையு
பெற்றவுடன் பணியினை மேற்கொள்வதற்காக இந்திய அரசின்
நிர்வாக ஏற்பளிப்பைப் பெறுவதற்காக அவை இந்த அரசுக்கு
பணிந்தனுப்பப்படும் என மீனளத்துறை இயக்குநர் கூறுகிறார்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, இந்
ஆராய்ச்சி செய்யப்பட்டு அனுப்பப்பட்ட அறிக்கை எப்பொழு
அரசுக்குக் கிடைத்தது? இவ்வளவுநாள் காலதாமதம் ஆனதற்
என்ன காரணம்? விரைவில் முடிக்க அரசாங்கத்தால் என்
முயற்சி எடுக்கப்பட்டது?



**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** தலைவாவர்களே,
72-லே Pre-Investigation Organisation,
முதலீட்டு நில ஆய்வு நிறுவனம் முடிவு எடுத்தார்கள். நான்
முதலில் சொன்னதைப்போல் பொதுப்பணித்துறை மூலம் வரை
படங்கள் இன்னும் தயார் செய்யப்படவில்லை. அவைகள்
வந்ததற்குப் பிறகு இதை விரைவில் எடுத்து நடத்த முடியும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, சின்ன
முட்டத்தை அடுத்த கன்னியாகுமரி பகுதியிலே அதிகமாக மீன்
கிடைக்கின்ற மீன் மடை என்று சொல்லப்படும் அளவில்
எப்பொழுதும் மீன் கிடைக்கும் நிலப்பாடுகள் இருக்கின்றன.
எனவே, உடனடியாக மத்திய அரசாங்கத்தோடு தொடர்பு
கொண்டு இதை அமலாக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை
எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** தலைவரவர்களே,
மதிப்பீடுகளும், வரை படங்களும் பொதுப்பணித் துறை
யிலிருந்து இந்தத் துறைக்கு வந்தவுடன் இந்தத் துறை மத்திய
அரசோடு தொடர்பு கொண்டு இதற்கான நடவடிக்கைகளை மேற்
கொள்ளும்.

## இரும்பு-சிமிட்டிப் படகு கட்டும் தளம்

* 517 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு
அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) இரும்பு-சிமிட்டிப் படகு கட்டும் தளம் அமைப்பதில்
சிக்கல் ஏதேனும் இருந்ததா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(உ) தற்போது மேற்படி படகு கட்டும் தளம் எங்கே நிறுவப்
பட்டுள்ளது?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அ), (இ) & (உ)
வடக்கே போர் நினைவுச் சின்னத்திற்கருகில் கூவம் ஆற்றிற்கு
இரும்பு, சிமிட்டிப் படகு கட்டும் தளத்தை அமைப்பது பொருத்த
மற்றதெனக் கருதப்பட்டு அச் செயற்குறிப்பு கைவிடப்பட்டதால்,

இரும்பு சிமிட்டிப்படகு கட்டும் தளம் தாற்காலிகமாக மெரின கடற்கரையில் கூரைக் கொட்டகைகளில் செயற்பட்டு வருகின்றது. அண்மையில் துறைமுகப் பொறுப்புக்கழக வளவுகளுக்குள் இப்படகு கட்டும் தளத்தை அமைப்பதற்காக நிலமொன்று மீனளத் துறை இயக்குநரால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலத்தை மீனளத்துறைக்கு ஒதுக்கிக்கொடுப்பதற்குச் சென்னைத் துறைமுக பொறுப்புக் கழகத்தின் இசைவு எதிர்பார்க்கப் படுகிறது. இந்த நிலத்தைக் குத்தகைக்கு விடுவதற்கு சென்னைத் துறைமுகப் பொறுப்புக்கழகம் உடன்பட்டதும் இரும்பு-சிமிட்டிப் படகுகள் கட்டுவதற்காக, ஓரளவு நிலையான தன்மை வாய்ந்த படகு தளமொன்றை நிறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் படும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, கடற்கரைப் பகுதியில் தற்பொழுது இந்தப் பணி நடைபெறுவதால் சில சமயங்களில் தொல்லைகள் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, விரைவில் வேறு இடத்திற்கு இதை மாற்றுவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவரவர்களே 'மெட்ரூஸ் போர்ட் டிரஸ்ட்'க்கு எழுதியிருப்பதாகச் சொன்னேன் வேறு இடம் கேட்டிருக்கிறோம். போர்ட் டிரஸ்ட் காம்பவுண்டுக்குள் இடம் கேட்டிருக்கிறோம். அது கிடைத்ததற்குப் பிறகு மாற்றப் படும்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** தலைவரவர்களே, சென்னை மெரின கடற்கரையில் இந்த 'ஃபெர்ரோ-சிமெண்ட்' போட்டுகளை செய்யும் வேலையை இரண்டாண்டுகளுக்கு முன்னால் ஆரம்பி தார்கள். இப்படிப்பட்ட படகுகள் செய்யப்பட்டு கடலி தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்களா? எத்தனை போட்டுக கடலில் ஓட விடப்பட்டிருக்கின்றன ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவரவர்களே ரு படகு பணி செய்கிறது, 5 படகுகள் கட்டி முடிக்கப்பட்டு **நுவாயில் உள்ளன.**



## *Panchayat Finance Commission*

* 518 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister r Local Administration be pleased to state—

(a) whether the State Administrative Reforms Commission as recommended the Constitution of a Panchayat Finance ommission in the State: and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) & (இ) ஐந்தாண்டு ளுக்கு ஒருமுறை அமைக்கப்பட இருக்கும் மாநில ஊராட்சி க்குழுவின் பரிந்துரைகளுக்கு இணங்க, ஊராட்சி ஒன்றியங் ளுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதையும் ஒன்று திரட்டப்பட்ட ருவாயை அவைகளுக்குள் பகிர்ந்து கொடுப்பதையும் ஐந்தாண்டு ட்கு ஒருமுறை நிர்ணயம் செய்யலாம் என நிர்வாக சீர்திருத்தக் குழு பரிந்துரை செய்துள்ளது. இப்பரிந்துரையின்மீது இன்னும் அரசு ஆணை பிறப்பிக்கவில்லை.

**திரு. என். டென்னிஸ்:** தலைவரவர்களே, இந்த பரிந்துரை யின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதைப் பற்றியும், அது அமல் நடத்தப்படுமா என்பதைப் பற்றியும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, பரிசீலித்த நிர்வாக சீர்திருத்தக் குழுவின் பரிந்துரையைப் தனது அலுவலர் மட்டக்குழு, 22—9—1973-ல் நடத்திய ட்டத்தில், மாநில அரசின் நிதி உதவியைப் பகிர்ந்தளிக்கவும், ள்ளூர் மேல் வரித் தீர்வை மூலம் சேர்க்கப்பட்ட வருவாயைப் பகிர்ந்தளிக்கவும் சில வரைமுறைகளை ஐந்தாண்டுகட்கு ஒரு றை ஏற்படுத்தலாம் என்னும் நிர்வாக சீர்திருத்தக் குழுவின் பரிந்துரையை ஏற்றுக் கொள்ளலாம் என்றும், ஏற்கனவே, தமிழ்நாடு ஊராட்சி சட்டங்கள் 1958-ல்" வட்டாரங்களை, ருவாய் காரணங்களுக்காக மாற்றியமைக்க வழிவகைகள் ருக்கின்ற காரணத்தால், மாநில பஞ்சாயத்து நிதிக்குழு ஒன்றை ற்படுத்த வேண்டிய அவசியம் இல்லையென்றும் கருத்து தரிவித்துள்ளது.

'தமிழ்நாடு ஊராட்சி சட்டங்கள், 1958'ல் கண்டுள்ள விதி ளின்படி, தமிழ்நாட்டிலுள்ள வட்டாரங்களை, நிதி உதவியை ானியங்களாகக் கொடுப்பான் வேண்டி, நான்கிலிருந்து ஆறுக ாற்றியமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆணை 1—4—1972-லிருந்து அமுலில் இருந்து வருகிறது.

THIRU B. VENKATASWAMY : Sir, as it is, some Panchayat Unions are deficit even to meet some essential expenditure. May I know from the Hon. Minister for Local Administration whether the Resolution passed at the Kodaikanal Conference so as to have a Panchayat Finance Commission to help Panchayats to put up school buildings, roads, etc., by getting loans from the Reserve Bank has been considered by the Government and when it will be implemented?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** கொடைக்கானலில் நடைபெற்ற அந்த மாநாட்டில் அப்படிப்பட்ட கருத்துரைகளை ஒன்றியத் தலைவர்களும், அரசு அலுவலர்களும் பரிசிலனை செய்த அதற்காக ஊராட்சி மன்றங்களில் தனிவாரியம் அமைக்க முடியாது என்றும், ஊராட்சி ஒன்றியங்களுக்கு என்ன செய்யலாம் என்பதை யோசித்து இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, நலிந்த ப பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. பள்ளி ஆசிரியர்கள் அதுபோன்று மருத்துவமனைகள் நடத்துவதற்குக் கஷ்டமா இருக்கின்ற பல யூனியன்கள் இருக்கின்றன. அதற்காக விசே சலுகை இந்த ஆணைக்குழுவில் பரிந்துரை செய்யப்ப டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே கல்வித் துறையைப் பொறுத்தவரையில் அது ஆறு வட்டங்களாக பிரிக்கப்பட்டு, நலிந்துபோன ஒன்றியங்களுக்கு அரசு அதிக நி உதவியை இப்பொழுதே செய்து வருகிறது.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** தலைவரவர்களே, மத்தி அரசு தனது ஊழியர்களுக்கு ஊதியத்தை உயர்த்து போதெல்லாம் மாநில அரசும் தனது ஊழியர்களுக்கு ஊதியத்தை உயர்த்த வேண்டியிருக்கிறது என்று மாநில அரசு அதற்கா மத்திய அரசிடம் மானியம் கோருகிறது. அதைப்போலவே மாநில அரசு சம்பளத்தை உயர்த்தும்போதெல்லாம் உள்ளாட்சி றை ஊழியர்களுக்கும், பேரூராட்சி, ஒன்றிய ஊழியர்களுக்கு சம்பளத்தை உயர்த்த வேண்டியிருக்கிறது. எனவே, அவைகளு மாநில அரசிடமிருந்து மானியம் கோருவது நியாயம் அல்லவா எனவே. ...தப் பற்றுக்குறை பொருளாதாரத்தைச் சரிக்கட்



வதற்கு இந்த மாநில நிதிக்குழு ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, நிதிக்குழுவின் பரிந்துரை பரிசீலிக்கப்பட்டு வருகிறது. பரிந்துரையின் மீது முடிவு வந்ததற்குப் பிறகு அதைப்பற்றிப் பார்க்கலாம்.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றிய எல்லையிலிருக்கும் புறம்போக்கு நிலங்களில் வசூலிக்கப்படும் பி. மெமோ சார்ஜ்களை அந்தந்த ஊராட்சிகளுக்கே ஒப்படைப்பதற்கான பரிந்துரை ஏதேனும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, அப்படிப்பட்ட பரிந்துரை எதுவும் வரவில்லை.

**திரு. எம். முத்தையா :** தலைவரவர்களே, இந்த நிதி ஒதுக்கீடு ஊராட்சி ஒன்றியங்களின் ஜனத்தொகை அடிப்படையில் ஒதுக்கப்படுகிறதா? அல்லது பஞ்சாயத்துக்களின் அடிப்படையில் ஒதுக்கப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** பலவற்றை மக்கள் தொகையின் அடிப்படையிலே ஒதுக்கப்படுகிறது. அதைத் தேவைக்கேற்ற வகையில் மாற்றியமைக்கலாமா என்பதையும் பரிசீலிக்கிறோம்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, பல ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் நிதி வசதி குறைவாக இருப்பதால் அத்தியாவசியமான சாலைகள் போடக்கூட வழியில்லாமல் இருக்கிறது. அப்படிப்பட்ட ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சாலை போடுவதற்கு அரசு பண உதவி செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, ஏற்கனவே மக்கள் தொகையின் அடிப்படையில், அந்தச் சாலைகளுக்கு வேறு பல திட்டங்களைக் கணக்கிட்டு ஒதுக்கப்பட்டு வந்தது. அடுத்த ஆண்டிலிருந்து தேவைக்கேற்ப நிதி ஒதுக்கம் செய்வதற்கான ஏற்பாடுகளை இப்பொழுது செய்து கொண்டிருக்கிறோம். அது முடிவுற்ற பின் அதைப்பற்றிக் கவனிக்கலாம்.

[1974 மார்ச் 2

(முற்பகல் 9.30)

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** இந்த ஊராட்சி ஒன்றி நிதிக் குழுவை அமைக்க வேண்டிய அவசியம் பற்றியும், ஆற் வேண்டிய பணி பற்றியும் சீர்திருத்தக்குழு விவரம் தெரிவித்திரு கிறதா? அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** வருவாய்த் துறைகளைப் பெருக்க நிதிக்குழுவால் சிபாரிசு செய்யப்பட டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களுக்காகச் செய்யப்பட்டிருக்கு சிபாரிசுகள் வேறு. பேரூராட்சிகளுக்காகச் செய்யப்பட்டிருக்கு சிபாரிசுகள் வேறு. ஊராட்சி மன்றங்களுக்காகச் செய்ய பட்டிருக்கும் பரிந்துரைகள் வேறு. ஊராட்சி மன்றங்கள் கட எழுப்பு வசதியைச் செய்யலாமா, அதைத் திருப்பிக் கொடுக்க நி நிலை ஆதாரம் இருக்கிறதா என்பதைப் பற்றி யோசித்து கொண்டிருப்பதால் ஊராட்சி மன்றங்களைப் பற்றி நிதிக் கு தன்னுடைய பரிந்துரையை இன்னும் முடிவு செய்யவில்லை என் நான் குறிப்பிட்டேன்.

**திரு. சி. ஆறுமுகம் :** ஊராட்சி மன்றத்தில் பணி புரியு ஊழியர்களை அரசு ஊழியர்களாக மாற்றும் பரிந்துரை இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** பலவற்றைத் பரி துரை செய்திருக்கிறார்கள். அவற்றைப் பரிசீலனை செய்த பிற தெரிவிக்கப்படும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** அட்மினிஸ்டிரேட்டிவ் ரிஃபார்ம் கமிஷனைப் பொறுத்தவரை பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதி மான அதிகாரம் வேண்டுமென்று பொதுவாகக் கோரிக்கை இருப்பதை வைத்து அதிகாரத்தைப் பயன்படுத்தும் வகையி நிதி இல்லை என்ற முறையில் வைக்கப்பட்டிருக்கிறது. நேரடியா நிதி கொடுக்க முடியாவிட்டாலும் மாநில அரசு சில பகுதிக ஏற்றுக் கொள்ளும் வகையில் அந்தச் சிப்பந்திகளைச் சர்க்கா ஊழியர்களாக மாற்றுவது போன்ற வகையில் உதவி செய் முன்வருவார்களா?



1974 மார்ச் 20]

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** நிர்வாகச் சீர்திருத்தக் குழு சில அதிகாரங்களைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக் கிறது. கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் சிலவற்றை எடுக்க வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. நிர்வாக சம்பந்தமாக அதிலே ஏற்படுகிற பல கஷ்டங்களை உணர்ந்து அதைப் பற்றிப் பரிசீலனை செய்து வருகிறோம். இப்போது நிதிப் பற்றாக்குறையாக இருக்கும் ஒன்றியங்களுக்கு மேலும் நிதி பெருக அரசு உதவி செய்ய வழிவகை இருக்கிறதா என்பதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம். மானிய விவாதத்தின் போது விளக்கமாகத் தெரிவிக்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** கன்னியாகுமரி ஜில்லாவில் ஏற்கனவே உள்ள டவுன் பஞ்சாயத்துக்களை, கிராமப் பஞ்சாயத்துக்களாக மாற்றுகிற போது பொருளாதார நிலையைக் கணக்கில் எடுக்காத காரணத்தால் பல கிராமப் பஞ்சாயத்துக்களில் நிர்வாகச் செலவுக்குக் கூட வருவாய் போதாத நிலை இருக்கிறது. ஆகவே, அங்கு எந்தவிதமான டெவலப்மென்ட் ஒர்க்சும் நடைபெற முடிவ தில்லை. மின்சாரக் கட்டணம் கூடக் கட்ட முடியாத நிலை இருக் கிறது. அப்படிப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கு விசேஷமாக அரசு மானியம் வழங்கும் திட்டம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ஏற்கனவே பல காரணத்தால் ஊராட்சிகள், பேரூராட்சிகளாக மாற்றப்பட்ட பேரூராட்சிகளுக்குச் அரசாங்கம் செய்கிற உதவிகளைக் கூட வசதிகளைப் பெருக்க குழு செய்ய முடியவில்லை. அதனுடைய பரிசீலனை அமைக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. முடிந்த பிறகு விவரங்களைத் தெரிவிக்கிறேன்.

**திரு. சி. கணேசன்:** இந்த ஆணைக் குழு ஊராட்சித் துறையை வருவாய்த் துறையிலிருந்து தனியாகப் பிரிந்து செயல் பட வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கிறதா? அதன் பேரில் அரசு எப்போது நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** பரிந்துரை அப்படி ஒன்றும் இல்லை. ஏற்கனவே, குறிப்பிட்டது போல் விரைவில் மானியம் வர இருக்கிற காரணத்தால் அப்போது விவரமாகத் தெரிவிக்கிறேன்.

### கீழ்ராங்கியம் கிராமம்

*519 வினா—திரு. க. சோனையா: மாண்புமிகு உள்ளாட்சித்
துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புலனம் ஊராட்சி
ஒன்றியம், கீழ்ராங்கியம் கிராமத்தை வெள்ளி விழா கிராமமாக
எடுக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அங்கு பள்ளிக்கூடம் கட்டும் திட்டம்
ஏதேனும் எடுத்துக் கொள்ளப்படவுள்ளதா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (அ) ஆம்.

(இ) பள்ளிக்கட்டிடம் கட்டும் பணி, 1973-74-ல் கிராமப்
பணிகள் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும்.

### Tanks near Nidamangalam

*520 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether it is a fact that a large number of fish were killed due to poisoning of the tank waters at Edakizhayur and Kallumangalam near Nidamangalam in Thanjavur district about the 25th March 1973; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (அ) ஆம்.

(இ) 24—3—1973 அன்று ஏரியில் 'ஃபோலிடால்' என்ற நச்சு
மருந்து கலந்துவிட்டதாகச் சொல்லப்பட்டது. இதன் விளைவாக
மீன்கள் இறந்து காணப்பட்டன. வடுவூர் காவல் துறை சப்
இன்ஸ்பெக்டரால் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. குற்றம்
சாட்டப்பட்டவர்கள் மீது விசாரணை செய்யப்பட்டு, சப்
மாஜிஸ்டிரேட் இது சம்பந்தமாக மூவருக்கு மூன்று மாத
கடுங்காவல் தண்டனை விதித்துள்ளார்.

**திரு. என். டென்னிஸ்:** இவ்வித சம்பவங்கள் ஏற்படாதவாறு
அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?



**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** இப்படி ஏரிகளிலும்
குளங்களிலும் ஏதோ விரோதத்தின் காரணமாக இப்படிப்பட்ட
செயல்கள் நடந்து விடுகின்றன. அப்படி ஏற்படாமல் பாதுகாக்க
வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**திரு. எம். சுரேந்திரன்:** மேட்டூர் அருகில் உள்ள ரசாயன
தொழிற்சாலைக் கழிவு நீர் வருவதன் மூலம் இம்மாதிரி மீன்கள்
செத்துவிடுகின்றன என்பது அரசுக்குத் தெரியுமா? அவ்வாறு
மீன்கள் சாகாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** எனக்கு அது பற்றிய
தகவல் வரவில்லை. அதுபற்றிய தகவல்கள் வருமானால் மீன்
இலாகாவைப் பரிபாலிக்கும் அமைச்சர் அவர்கள் அதைப் பற்றிக்
கவனம் செலுத்துவார்கள்.

### தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி

*521 வினா—திரு. மே. சி. தூயமணி: மாண்புமிகு தொழிலாளர்
நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை
யளிப்பாரா—

மேட்டுப்பாளையம் தொகுதியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம்
தொழிலாளர்கட்கு வீடு கட்டித்தர அரசு மேற்கொண்டுள்ள
நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மேட்டுப்பாளையம்
தொகுதியில் மேட்டுப்பாளையம் அருகில் உள்ள காரமடை என்ற
ஊரில் இராமகிருஷ்ணா தொழிலகத்திலும், இராஜலெட்சுமி
ஆலையிலும் வேலை செய்யும் தொழிலாளர்களுக்காக 60
குடியிருப்புக்கள் கட்டுவதற்கான ஒரு திட்டம் ரூ. 5.51 லட்சம்
மதிப்பில் 27—10—1972 அன்று நடைபெற்ற தமிழ்நாடு வீட்டு வசதி
வாரியக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. வீட்டு வசதி
வாரியம் இத்திட்டத்திற்கு அரசின் ஒப்புதல் கோரும்போது அரசு
இத்திட்டத்தினைப் பரிசீலிக்கும்.

**திரு. எம். சுரேந்திரன்:** இம்மாதிரி வீடு கட்டுவதற்கான
நடவடிக்கையில் தொழிற்சாலை நிர்வாகத்திற்குப் பங்கு
இருக்கிறதா? இதுபோன்ற தொழிற்சாலைகளில் வேலை செய்கிற
தொ[illegible] வீடு கட்ட அரசாங்கம் மானியம் கொடுக்கும்

திட்டம் இருக்கிறதா? அவர்களாகவே முன்வந்து சொசைடியா அமைத்து வீடு கட்ட விரும்பினால் துரிதமாக உதவிகளைச் செய் அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** ராமகிருஷ்ணா தொழி லகத்தில் இருக்கும் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டப்படும என்று கேட்டிருக்கிறார்கள். தொழிலாளர் பங்கும் இருக்கிறது தொழிற்சாலை பங்கு 20 சதவிகிதம் இருக்கிறது. மீதி 50 சதவிகித மானியமாகவும், மீதி கடனாகவும் தரப்படுகிறது. எந்த தொழிலாளர்களும் சங்கங்களை அமைத்துக் கொண்டு வீடுகள் கட்டிக்கொள்ள முன்வந்தால் அரசு உதவி செய்யும்.

**திரு. கு. இராசமாணிக்கம்:** வீட்டு வசதி வாரியம் தஞ்சை மாவட்டத்தில் எந்தெந்தப் பகுதிகளில் வீடு கட்ட திட்டங்களை போட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** அதுபற்றிய குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

E.S.I. Hospital, Coimbatore

* 522 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon the Minister for Labour be pleased to state—

(a) whether there is any proposal under the consideratio of the Government to increase the bed strength in the E.S.I Hospital at Coimbatore; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம்.

(இ) ஈட்டுறுதி செய்து கொண்ட 1,000 தொழிலாளர் குடு பங்களுக்கு 11 படுக்கைகள் என்ற பழைய அளவுப்படி, 50 படுக்கைகள் கொண்ட அரசு தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவ மனை கோயம்புத்தூரில் கட்டப்பட்டது. ஆனால் ஈட்டுறுதி செய்து கொண்ட 1,000 தொழிலாளர் குடும்பங்களுக்கு 4 படுக்கைகள் என்று மாற்றியமைக்கப்பட்ட அளவு முறையைத்தான் பின்பற் வேண்டும் என்று தொழிலாளர் ஈட்டுறுதிக் கழகம் வற்புறு தியதன் பேரில், 300 படுக்கைகளுடன் கோவை அரசு தொழிலாள





ஈட்டுறுதி மருத்துவமனை துவக்கப்பட்டது. அம்மருத்துவமனை யில் எஞ்சிய 200 படுக்கை வசதிகளைத் தொடங்கிவைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. கே. என். குமாரசாமி:** இந்த மருத்துவ மனையில் இடப் பற்றாக்குறை காரணமாக சிகிச்சை பெற்றுக் கொண்டிருக் கிறவர்கள் இட நெருக்கடி காரணத்தாலே பாதி சிகிச்சையோடு வெளியே அனுப்பப்படுகிறார்கள். எனவே, 500 படுக்கைகள் கொண்டதாக இதை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தமிழக அரசைப் பொறுத்த வரை 1,000 தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு 4 படுக்கைகள் போதாது; குறைந்தது 7 படுக்கைகளாவது வேண்டுமென்று மத்திய அரசுக்குத் தாக்கீது அனுப்பியிருக்கிறோம். பதில் கிடைத்தவுடன் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

குடிசை மாற்று வாரியம் கட்டியுள்ள வீடுகள்.

* 523 வினா—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) 1973 ஏப்ரல் முதல் அக்டோபர் முடிய குடிசை மாற்று வாரியம் கட்டி முடித்துள்ள வீடுகள் எத்தனை?

(இ) எவ்வளவு முதலீடு செய்யப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) 2,566 வீடுகள்.

(இ) ரூ. 186.12 லட்சம்.

**திரு. சோ. அழகர்சாமி:** குடிசை மாற்று வாரியத் திட்டத்தின் கீழ் கட்டப்படக்கூடிய வீடுகள் அங்கு எவ்வளவு குடிசைகள் இருந்தனவோ அந்த அளவுக்குத்தான் கட்டப்படுகிறதா அல்லது அதிகமாகக் கட்டப்படுகிறதா? அதிகமாகக் கட்டப்படுவதாக இருந்தால் அவை எந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** குடிசை மாற்று வாரியப் பகுதியில் மிகுதி இடம் இருந்தாலும் சில இடங்களில் அதிக வீடுகள் கட்டப்பட்டால் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் 350 ரூபாய் சம்பளம் பெறுகிறவர்களுக்கு அந்த வீடுகள் ஒதுக்கப் படவேண்டுமென்று அரசு தீர்மானித்திருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : குடிசைமாற்று வாரியத்தின் மூல கட்டப்படுகிற இந்தக் குடிசை வாசிகளுக்கான வீடுகள் சென்னை நகரத்தில் எவ்வளவு காலத்திற்குள்ளாக பூர்த்தியாகும் ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தமிழக அரசுத் திட்டப்ப ஏழு ஆண்டுகளுக்குள்ளாக இது பூர்த்தியாக்கப்பட வேண்டி ஒன்று.

திரு. வை. பாலசுந்தரம் : குடிசைமாற்று வாரியம் மூல கட்டித்தரப்படுகிற வீடுகளுக்கு வாடகை வசூலிக்கிற நேரத்தி சில நேரங்களில் தாமதப்படுத்துகிறார்கள். அப்படித் தாமத படுத்தி பத்து பனிரெண்டு மாதங்களுக்கு வசூலிக்கும்போ ஹரிஜன மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை தெரிவிக்கிறேன். அதே நேரத்தில் மொத்தமாக அவர்களிடத்தி வாடகையை வசூலிப்பதை விட—மொத்தத்தில் பத்து அல்ல பன்னிரண்டு மாத வாடகையைக் கட்டுவது என்பது கஷ்டமா தோன்றும்—சிறுகச் சிறுக நாலைந்து தவணைகளாக வசூலிக் அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : குடிசைமாற் வாரியத்தில் வாடகை இரண்டு மாதக் காலத்திற்குத்தான் நிலுவை இருக்க ஏற்பாடு இருக்கிறதே தவிர பத்து அல்லது பன்னிரண் மாதங்கள் வாடகை வாங்காமல் விட்டு விட்டு அதற்குப் பி தவணை முறையில் வசூலிப்பது என்று வைத்தால் எங்கு போ முடியும் என்று சொல்ல முடியாது. அந்த வகையில் வாடகை பாக்கி இல்லாமல் வாங்க இந்த அரசு தக்க நடவடிக்கை எடுத்து கொண்டிருக்கிறது.

திரு. நா. வீராசாமி : கட்டப்பட்டிருக்கிற வீடுகள் எந்த அடி படையில் ஒதுக்கப்படுகின்றன ? மஹாராஷ்ட்ரம், வங்காள அஸ்ஸாம், பீஹார் போன்ற மாநிலங்களில் ஸன்ஸ் ஆப் தி ஸாயி அந்த நாட்டு மக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கிற அந்த கொள்கைப்படி 80 சதவீதம் வரை கொடுக்கிறார்கள். ஆனால் ந நாட்டில் கட்டப்படுகிற வீடுகள் கோயம்புத்தூர் போன் பகுதியில் 80 சதவீதம் மற்றவர்களுக்கு, இந்த நாட்டை சாராதவர்களுக்கு கேரளத்தில் இருந்து வந்தவர்களுக்கு முஸ்லி சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு இப்படிப்பட்டவர்களுக்



டுகள் ஒதுக்கப்படுகின்றன. இதற்குக் காரணம் என்ன ? ணியாவது இந்த நாட்டு மக்களுக்கு இப்படிப்பட்ட சலுகைகளைக் காடுப்பதற்கு நம அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : குடிசை மாற்று ாரியத்தைப் பொறுத்தவரையில் யார் யார் குடிசைகளில் ந்தந்தப் பகுதிகளில் இருந்து வந்தார்களோ அவர்களுக்குத் ான் வீடே தவிர 'ஸன்ஸ் ஆப் தி ஸாயில்' தியரியை நாங்கள் த்துக்கொள்ளவில்லை.

*Electricity Schemes in North Arcot District*

* 524 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the linister for Electricity be pleased to state—

(a) whether it is a fact that the Rural Electrification Corporaon Limited has undertaken to finance the power supply at North rcot district; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) இதுவரையில் வட ஆற்காடு மாவட்டத்திற்கு 176.722 லட்சம் மதிப்புள்ள நான்கு கிராம மின்மய திட்டங்களும் (Rural Electrification Schemes), மேலும் பல்வேறு திட்டங்களும் வழங்கப்பட்டுள்ளன.

வேடந்தாங்கல் பறவைகள் உய்விடம்.

* 525 வினு—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை பளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள வண்ணப்பறவைகள் கூடும் வேடந்தாங்கலைச் சுற்றுலாத்துறையின் கீழ் மேம்படுத்த என்னென்ன திட்டங்கள் உள்ளன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : வேடந்தாங்கலைச் சுற்றுலாத் துறையின் கீழ் மேம்படுத்துவதற்குத் திட்டம் எதுவும் இல்லை.

திரு. கா. வேழவேந்தன்: சுற்றுலாத்துறையிலிருந்து மே படுத்துவதற்கான திட்டம் இல்லை என்றால் இதை வனத்து மூலமாகவாவது மேற்கொண்டு—தமிழகத்தில் மிகச் சிற சிறப்புப் பெற்றிருக்கிற இந்த ஏரிக்கு வண்ணப் பறவை ஏராளமாக வந்து கூடுகின்றன—ஆகவே அந்த ஏரியில் தண் வற்றிவிடாமல் பாதுகாக்க பொதுப்பணித் துறையினரை அணு ஆவன செய்வதற்கும் அந்த ஏரியில் வந்து கூடுகிற பறவைகளை பார்ப்பதற்கு தொலைதூரக் கண்ணாடிகளை அமைப்பதற்கும் உரி மேம்படுத்தும் திட்டம் ஒன்றை அரசு வகுக்குமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: வந்து கூடுகிற பல்வே இனப் பறவைகள் தங்கி இனப்பெருக்கம் செய்கிற அளவில் நல் கடம்ப மரங்களை வளர்க்கும் திட்டமும், வேடந்தாங்கலைச் சுற் அகழிகள் ஏற்படுத்தவும் அந்த ஏரியினை ஆழப்படுத்து திட்டமும் வனத்துறை மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: வெளி நாடுகளிலிருந்தும் வ நாட்டிலிருந்தும் வரக்கூடியவர்கள் எல்லாம் சாதாரணமா வேடந்தாங்கலுக்கு போகிறார்கள். மழைக் காலங்களில் அங் ரோடு சரியாக இல்லாத நிலையில், போக முடியாத நி இருக்கிறது. எனவே அந்த ரோடை சரி செய்து போக்குவரத் வசதியை நல்லமுறையில் செய்ய ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இந்தச் சீரமைப்பு வேலை களில் அதுவும் அடங்கும்.

திரு. வை. பாலசுந்தரம்: வேடந்தாங்கல் இருக்கிற பகுதி எ தொகுதியைச் சார்ந்ததாகும். அந்தப் பகுதியில், வேடந்தா களுக்கு வருகிற பறவைகள் ஆண்டுக்காண்டு குறைந்த வருகின்றன, அதேபோல் பார்வையாளர்களும் ஆண்டுக்காண் குறைந்துகொண்டு வருகிறார்கள். காரணம் அந்த ஏரியில் உள் மரங்கள் எல்லாம் விழுந்துவிட்டன என்று சொல்லப்படுகிறது ஆகவே பக்கத்தில் அகழி என்ற ஊரில் ஆயிரக்கணக்கா மரங்கள் உள்ள அந்த ஏரியில் வேடந்தாங்கலில் இருந்து அகழிக் அதைக் கொண்டு வந்தால் நலமாக இருக்கும் என்று அந்த பகுதி மக்கள் கருதுகிறார்கள். இதை அரசு செய்யுமா என் அறிய விரும்புகிறேன்.







மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: கணக்குகளைப் பார்க்கிற போது ஆண்டுக்காண்டு பறவைகள் அதிகமாகவும் ஆண்டுக் காண்டு பார்வையாளர்கள் அதிகமாகவும் வந்ததாகத்தான் கணக்கு என்னிடம் இருக்கிறது. வேடந்தாங்கல் என்பது உலகம் அறிந்த ஒரு இடமாக ஆகிவிட்ட காரணத்தால் புதிய இடத்திற்கு மாற்றுவது என்பது இயலாது. சீரமைப்பு வேலையைப் பற்றிச் சொன்னால் அதைப் பற்றி பரிசீலனை செய்யலாம்.

திரு. சி. ஆறுமுகம்: இந்தியாவிலேயே சுற்றுலாப் பயணிகளை அதிகமாக கவர்கிற ஒரு இடமாகும் வேடந்தாங்கல் கிராமம். அங்கிருந்த மரங்கள் எல்லாம் செத்துப் போய் விடுகின்றன. நட் காட்டு இலாகாவினர் அருகில் உள்ள அந்தவாக்கம் என்ற கிராமத் திலிருந்து மரங்களை வேரோடு பிடுங்கி அங்கு நடுகிறார்கள். அவை மீண்டும் செத்துப் போய் விடுகின்றன. ஆகவே இதற்கு நிரந்தர மான ஒரு திட்டத்தை அரசு வகுப்பதற்கு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இந்தக் கடம்ப மரத்தைப் பொறுத்தவரையில் கோடைக்காலத்தில் சென்று பார்த்தால் ஒரு இலை கூட இராது. உதிர்ந்துவிடும். ஆனால் பிறகு மீண்டும் துளிர்த்துவிடும். நான் கூட மூன்று மாதங்களுக்கு முன் ஒரு சமயம் சென்று பார்த்தபோது எல்லா மரங்களும் பட்டுப் போனதைப்போல் காட்சியளித்தன. நான்கு மாதங்களுக்கு இலை உதிர்ந்து விடுகிறது. பின்னர் துளிர்த்துவிடுகிறது. ஆகவே நிறையக் கடம்ப மரங்களை வளர்த்து வருகிறோம்.

திரு. சி. ஆறுமுகம்: அந்தக் கடம்ப மரங்களும் வெய்யில் காலத்தில் இலைகளை உதிர்த்துவிடுவது உண்மைதான். நான் சொன்னது மரங்கள் செத்துவிடுகின்றன. அருகில் உள்ள கிராமத்தில் இருந்து மரங்களை வேரோடு பிடுங்கி அங்கு நட்டு வைத்தால் அதுவும் பிழைப்பது இல்லை என்றுதான் நான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அந்த மரத்தை தண்ணீர் இருக்கிற காலங்களில் உள்ளே நட்டுவிட்டால் தண்ணீரில் அமுங்கி விட்டால் செத்துவிடும். தண்ணீருக்கு வெளியே இருக்க வேண்டும். அப்படி நடுகிற மரங்கள் பிழைத்துக்கொள்கின்றன. அதிக மரங்களை வளர்க்கவேண்டும் என்பதுதான் உண்மையாகும்.

**திரு. வை. பாலசுந்தரம் :** **[1974 மார்ச் 20**
களுக்குப் பாய்ச்சுவதற்கு பயன்படுத்துகிறார்கள். இதனால் கூட
அமர வாயில் உள்ள வண்டல் மண் கழனிகளுக்குப் பாய்ந்துவிடு
வதால் அந்த ஏரி சத்து இழந்து விடுவதற்கு ஒரு காரணமாகக்
கூறப்படுகிறது. ஆகவே அந்த ஏரியில் இருந்து தண்ணீரை வயல்
களுக்குப் பாய்ச்சாத அளவிற்கு ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்
வருமா ? [illegible]

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** ஏற்கனவே உத்தரவாதம்
அளிக்கப்பட்ட பாசனப் பகுதிகள் சில இருக்கின்றன. அவற்றிற்கு
சட்டப்படி நாம் தண்ணீர் அளித்துத்தான் ஆகவேண்டும்.

### காடுகளிலுள்ள சிங்கங்கள்

* 526 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மின்சாரத்
துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை
யளிப்பாரா—

தமிழ்நாடு அரசின் பாதுகாப்பில்
எங்கெங்குப் பாதுகாக்கப்படுகின்றன ? எத்தனைச் சிங்கங்கள்

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தமிழ்நாட்டிலுள்ள கா
களிலோ, அல்லது மாநில வனத்துறையின் பொறுப்பிலுள்ள மற்
இடங்களிலோ, சிங்கங்கள் இல்லை.

### *Pedestrian crossing in Madras*

* 527 Q.—THIRU N. DENNIS :
THIRU N. K. PALANISWAMY : Will the Hon. th
Minister for Transport be pleased to state the steps taken by th
authorities to prevent the indiscriminate crossing of roads b
pedestrians in Madras City?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** சென்னை மாநகரிலுள்
போக்குவரத்துக் காவல்படை கீழ்க்கண்ட நடவடிக்கைகளை
மேற்கொண்டுள்ளது—

(1) வகை தொகையற்ற முறையிலும், போக்குவரத்து வி
களைக் கவனிக்காமல் குறுக்கு நெடுக்காகவும் சாலையைக் கடந்
செல்லும் பாதசாரிகள் மீது வழக்குகள் தொடருவது மும்மு
மாக்கப்பட்டுள்ளது.



**1974 மார்ச் 20]**

(2) வகை தொகையற்ற முறையில் அவ்வாறு சாலையைக் கடந்து செல்வதால் நேரிடும் ஆபத்து குறித்து மக்களுக்கு விளக்கிக் கூறும்பொருட்டு, ஒலி பெருக்கி பொருத்தப்பட்ட காவல் துறை வண்டிகளும் ஒலிபெருக்கிகளும் பயன்படுத்தப்படுகின்றன.

(3) சாலைகளைக் கடந்து செல்கையில் பாதசாரி கடவுகளையும் (pedestrian crossings) சுரங்கப் பாதைகளையும் (sub-ways) பயன்படுத்துமாறு பள்ளிச் சிறார்களுக்குத் தகுந்த அறிவுரை வழங்கப்படுவதுடன் பொதுமக்களுக்கு இது குறித்து அறிவுரை அளிக்கும் திரைப்பட ஸ்லைடுகள் (slides) திரைப்படக் கொட்டகைகளில் காட்டப்படுகின்றன.

(4) பாதசாரி கடவுகளையே பயன்படுத்துமாறு பத்திரிகைகள் வாயிலாகவும் அனைத்திந்திய வானொலி மூலமாகவும் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

**திரு. என். டென்னிஸ் :** இவ்வித நடவடிக்கைகள் மேற்கொண்டும் அதிக வயலேஷன் இருக்கின்றனவே. ஆகவே இதைத் தீவிரப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தீவிரப்படுத்த வேண்டும் என்பதுதான் அரசின் நோக்கமாகும். தீவிரப்படுத்துவதின் காரணமாக வழக்குகள்கூட கூடுதலாக ஆண்டுக்காண்டு பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. 1971-ல் 2,736 பேர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. 1972-ல் 10,030 பேர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. 197…-ல் 10,295 பேர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.

**திரு. என். கே. பழனிசாமி :** இவ்வளவு தற்காப்பு நடவடிக்கைகள் எடுத்தும்கூட போன ஆண்டை விட இந்த ஆண்டு அதிகப்படியான ஆக்ஸிடென்ட்ஸ் நடந்திருக்கின்றனவே, இதற்குக் காரணம் சர்க்கார் அமல் செய்யக்கூடிய விஷயத்தில் ஏதாவது தவறு இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** எவ்வளவுக்கெவ்வளவு தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு வழக்குகள் அதிகமாகின்றன. ஆனால் விபத்துக்கள் அதிகமாகி

விட்டன என்று சொல்வதற்கில்லை. 1971-ல் 104 பேர்கள் இறந்திருக்கிறார்கள், 1972-ல் 115 பேர்கள் இறந்திருக்கிறார்கள். 1973-ல் 62 பேர்கள் என்ற தகவல்தான் இருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சார், இப்படி 'ஜே வாக்கிங்' என்று நடக்கக் கூடியவர்கள், வகைதொகை இல்லாமல் நடக்கக் கூடியவர்கள், ஆகியவர்களை 'மொபைல் கோர்ட்டு' அமைத்து மாலை யிலேயே ஏதாவது தண்டனை கொடுப்பதற்கு வழிவகை செய்து இருக்கிறீர்களா? பிலிப்பைன்ஸ் நாட்டில் இப்படி ரோடின் குறுக்கே போகிறவர்களுக்கு சின்ன ஜெயில் மாதிரி பக்கத்தில் வைத்து அங்கே ஒரு மணி நேரம் வரை வைக்கிறார்கள், அந்த மாதிரி வழிமுறைகளை இங்கே செய்வதற்கு அரசு ஏதேனும் திட்டம் வைத்து இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இப்படி வகைதொகையற்ற முறையில் போகின்றவர்கள் மீது உடனடியாக அபராதம் விதிக்கவேண்டுமென்ற அடிப்படையில், குறைந்தது ரூ. 10 அபராதம் விதிக்க வேண்டுமென்று விதியைத் திருத்தலாமா என்று அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது. முச்சந்தியில் இப்போது விநாயகர் கோவில்கள் தான் இருக்கின்றனவே தவிர, நாம் இதுபோன்று ஜெயில் வைப்பதற்கு இல்லை.

**திரு. ஏ. எம். இராஜா:** தலைவர் அவர்களே, இந்த பெடஸ்ட்ரியன் கிராஸ் டிவிஷனை அதிகமாக யூஸ் பண்ணாமல் மற்ற இடங்களில் ரோடை கடந்து செல்பவர்களுக்கு ரூ. 10 வரை அபராதம் விதிக்கலாம் என்று அரசு கருதுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மனிதர்களுக்கு தண்டனை விதித்து விடுகிறோம். ஆடுமாடுகள் மொத்தமாகவோ தனியாகவோ செல்கின்றனவே, அதற்கு என்ன நடவடிக்கையை இந்த அரசு எடுக்கிறது. என்ன தண்டனை விதிக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** அவைகளை பிடித்துக் கொண்டு போய் அடைப்பதுதான் தண்டனை.

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவர் அவர்களே, இந்த விபத்துகளின் காரணமாக மாநிலத்தில் ஏற்பட்ட இறப்புகளின் எண்ணிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி



றந்தவர்களின் எண்ணிக்கையை நாம் அறிந்து இருக்கும்போது ந்த இறப்புக்குக் காரணமாக உள்ளவர்கள் எத்தனை பேர், ண்டுபிடிக்கப்பட்டுத் தண்டனை பெற்றவர்கள் எத்தனை பேர், ண்டுபிடிக்கப்படாமல் 'ஹிட் அண்டு ரன்' என்ற வகையில் ள்ளவர்கள் எத்தனை பேர், இந்த விவரங்களை அமைச்சர் வர்கள் அளிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** 'ஹிட் அண்டு ரன்' ன்கிற வகையில் இருக்கிற எண்ணிக்கை வேண்டுமானால் தனிக் கேள்வி போடவேண்டும். இது பாதசாரிகள் பாதைகளைக் கடக் றபோது, அதற்கென்று வகுக்கப்படுகின்ற பாதையை விட்டு வறு இடங்களில் ரோடைக் கடப்பதன் காரணமாகத் திடீரென்று ற்படுகிற விபத்துக்களின் எண்ணிக்கையாகும்.

**திரு. கோவை செழியன்:** தலைவர் அவர்களே, இப்போது பாதை யைக் கடந்து செல்ல 'சப்வேக்கள்' வைத்து இருக்கிறார்கள். அது சுத்தமாக இல்லை. இரவிலே சரியான விளக்குகள் இல்லாத ன் காரணமாக இரவு நேரத்தில் அந்தப் பாதையைப் பயன் டுத்த அஞ்சுகிறார்கள். ஆகவே, அதற்கு காவலர்களைப் போடு தற்கு அரசு வழிவகை செய்யுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, சுத்த மாக வைத்துக்கொள்ளவில்லை என்று தகவல் இருக்குமானால் சுத்த மாக வைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் இரவு நேரங்களில் நிச்சயமாக இவ்வளவு பெரிய நெரிசல் இருக்காது என்றுதான் நான் கருதுகிறேன்.

### *Season tickets in buses*

* 528 Q.—THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for Transport be pleased to state whether season tickets are issued in the buses run by the State Transport Department and the Cheran, Cholan, Pandian and Anna Transport Corporations?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** சட்டமன்றப் பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

@ 231-234-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட் டுள்ளது.

திரு. ந. வீராசாமி : தலைவரவர்களே, இங்கே வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் நம்முடைய சட்டமன்றத்திற்கு வருகின்ற பத்திரிகை நிருபர்கள், வானொலி செய்தி நிருபர்கள், இப்படிப்பட்டவர்களுக்கு 31—3—1974 வரையில் பாஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேல் அவர்களுக்கு பாஸ் கிடையாது என்ற தகவல் இருக்கிறது. அவர்களுக்கு இலவச பாஸ் தொடர்ந்து கொடுக்கும் சலுகையை நமது அரசாங்கம் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கூட்டமன்ற வரையில் ஆங்காங்கு இருக்கும் போக்குவரத்துக் கழகங்கள் நிருபர்களுக்கு, அவர்கள் சுலபமாகச் சென்று செய்திகளைச் சேகரிக்கும் பொறுப்பில் இருப்பதால், இலவச பாஸ் வழங்கிக் கொண்டு வருகிறார்கள். வழங்கிக்கொண்டு வந்தது பாதியில் நின்று விடும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அச்சப்படத் தேவையில்லை. அது உரிய முறையில் பரிசீலிக்கப்படும்.

திரு. பூ. எட்டியப்பன் : தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், மேலவை உறுப்பினர்களுக்கும் கொடுத்து இருக்கும் அந்த அரசாங்க பாஸானது மற்றப் போக்குவரத்துகளிலே அனுமதிப்பதற்கு இல்லை என்று சொல்கிறார்கள். காரணம் என்னவென்றால் அரசுப் போக்குவரத்து என்றுதான் அதிலே இருக்கிறதே தவிர, சேரன், சோழன், பாண்டியன் என்று இல்லை. எங்களுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. அவர்களுக்கு வேறு தனி சம்பள உயர்வு உண்டு என்று குறை கூறுகிறார்கள். இதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டு இருக்கின்ற பாஸானது எல்லாப் போக்குவரத்துக் கழகங்களிலும் செல்லும்.

### மீனாட்சி அம்மன் கோவிலில் உள்ள கடைகள்

* 529 வினா.—திரு. த. சோணையா: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் உள்ள கடைகளை வெளிப் பிரகாரத்திற்கு கொண்டுவரும் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா?



மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அப்படிப்பட்ட திட்டம் ஏதும் தற்சமயம் ஆய்வில் இல்லை.

திரு. த. சோணையா : தலைவரவர்களே, மதுரை மீனாட்சி அம்மன் கோவிலைச் சுற்றி அடைப்பின்றித் திறந்த வெளியாக இருப்பதால், ஆடு, மாடுகளும், மற்றவர்களும் அந்த இடங்களை அசுத்தம் செய்கிறார்கள். எனவே, அந்தக் கோவிலைச் சுற்றிக் கடைகளைக் கட்டி விட்டால், வருமானமும் வரும், இடமும் சிறப்பாக இருக்கும். ஆகவே, அந்தச் சுற்று வட்டாரத்தில் கடைகள் கட்டுவதற்கு அரசு யோசிக்குமா? ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, கோவிலை நல்ல முறையில் பாதுகாக்க வேண்டுமென்ற வகையில், உள்ளே இருக்கிற கடைகளை வெளியே இருக்கின்ற சுற்றுப்பிரகாரத்தில் கடைகள் கட்டி விடவேண்டுமென்று சென்ற ஆண்டில் யோசனை செய்யப்பட்டது. ஆனால் அந்தப் பகுதியில் இருக்கின்ற மதுரை மாவட்டத்து மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் கடைகள் கட்டுகின்ற திட்டத்தைக் கைவிடவேண்டிவந்தது. இப்போது அந்த இடம் தூய்மையாக ஆக்கப்பட்டு, நல்ல பூங்கா ஏற்படுத்துவதற்காக அந்தக் கோவில் சார்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

### *New Jersey Farm*

*530 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether New Zealand has offered any assistance to the Tamil Nadu Dairy Development Corporation to set up a Jersey Farm at Kodaikanal; and

(b) if so, the details thereof?

THIRU B. VENKATASWAMY: Sir, I undestand that a Jersy Farm is to be opened with foreign aid from New Zealand or some other foreign country. May I know from the Hon. Minister whether such a Farm will be started and where it will be started and what is the amount that is given by the foreign nation?

மாண்புமிகு திரு. மூ. கண்ணப்பன்: தலைவரவர்களே, கொடைக்கானலிலே ஜெர்ஸி பண்ணை நிறுவுவதற்காக நியுஜிலாந்து அரசாங்கம் இன்னும் எந்தவிதமான உதவியையும் செய்யவில்லை. ஆனால் இந்திய-நியுஜிலாந்து ஒப்பந்தத்தின்படி அந்தப் பண்ணையை நிறுவுவதற்காக ஆய்வுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. நியுஜிலாந்து வல்லுநர்கள் குழு ஒன்று வந்து சமீபத்தில் கொடைக்கானலில் இடத்தைப் பார்வையிட்டுச் சென்று இருக்கிறார்கள். இன்னும் அந்தத் திட்டம் பூர்த்தி செய்யப்படவில்லை. அதுபோல் தருமபுரி மாவட்டத்திலும் ஓசூரில் இங்கிலாந்து நாட்டின் உதவியோடு ஒரு பண்ணையை நிறுவுவதற்கு இருக்கிறோம். அந்தத் திட்டம் அரசாங்கத்தின் ஆய்வில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அது உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### கோவில்பட்டி வட்டாரத்தில் வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின்சாரம் ஒழுங்காக விநியோகிக்காததும் அதன் விளைவுகளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சோ. அழகர்சாமி அவர்கள், "திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி வட்டாரத்தில் கடந்த ஒரு வார காலமாக பம்ப் செட்டுகளுக்கு பிற்பகல் மட்டும் விடப்படும் மின்சாரம்கூட இடையிடையே பல தடவைகள் நிறுத்தப்பட்டு மின் சப்ளை விடுவதால் கிணற்றுப் பாசனத்திற்குத் தண்ணீர் பாய்ச்ச முடியாமல் போய் ஆயிரக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள நெல், பருத்தி, சோளம், மிளகாய், வாழை போன்ற பயிர்கள் தீய்ந்து, கிணற்றுப் பாசன விவசாயிகள் மிகப் பெரும் பாதிப்புக்குள்ளாகி இருக்கும் நிலையைப் போக்கி, சீரான மின்சார விநியோகத்திற்கு அரசு எடுக்க வேண்டிய அவசர நடவடிக்கைபற்றி விவாதிக்க" என்று ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எந்த வகையில்



சபையின் பிற நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய ஒரு அவசரமான விஷயம் என்பதைச் சுருக்கமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, சமீபகாலத்தில் 4–5 திங்களுக்கு முன்னால், நமது அரசு தலைமை செயலாளர் 15 சதவிகித வெட்டுக்கு மேல் மின்சார வெட்டு வராது என்று கூறியிருக்கிறார்கள். சமீபத்தில் கோவில்பட்டி வட்டாரத்திற்குச் சென்று வந்தபோது அங்கே சொன்னார்கள். மாலை நேரத்தில் மட்டும்தான் மின்சாரம் வழங்கப்படுகிறது. அதுவும் கூட மாலை நேரங்களில் 12 மணிக்குக் கொடுக்கப்படும் என்று சொன்னால் 12½ மணிக்குத்தான் வருகிறது. பிறகு 1 மணிக்கு நின்று விடுகிறது. 1½ மணிக்குத்தான் வருகிறது.

இப்படி இடையிடையே நின்று விடுவதால் ஒரு நாளைக்கு 2 பாத்தி கூட பாய்ச்ச முடிவதில்லை. நான் அங்கு சமீபத்தில் சென்று இருந்தேன். 10 தினங்களாக இந்த மாதிரி இருக்கிறது என்று சொன்னார்கள். இதனால் அந்தப் பகுதியில் பயிராக்கப்பட்டிருக்கும் பருத்தி, நெல், சோளம் போன்ற பயிர்கள் தீய்ந்து ஏகபட்ட நஷ்டமாயிருக்கிறது. அது சம்பந்தமாக அதிகாரிகளைக் கேட்கிறபோது எங்களுக்கு முறையாக எப்படி மின்சாரம் வருகிறது என்று சொல்ல முடியாது. அது மேலிடத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டியது என்று சொல்லிவிடுகிறார்கள். மின்சாரம் வழங்கக்கூடிய முறையானது ஒரு ஏரியாவிற்கு இந்த நேரத்திலிருந்து இந்த நேரம் என்று பிரித்து விடலாம், அல்லது இவ்வளவுதான் இருக்கிறது என்று கணக்கிட்டு 3–4 மணி நேரம் தான் வரும் என்று சொல்லலாம். அப்படியில்லாமல் இப்படி இடையிடையே விட்டு விட்டு மின்சாரம் சப்ளை செய்வது அந்த விவசாயிகளை மிகவும் பாதிக்கிறது. 15 சதவிகிதம் மின்சார வெட்டிற்கு மேல் வராது என்று சொன்னதால் அவர்கள் வேறு ஆயில் இன்ஜின் போன்றவற்றை வாங்கி பாசன வசதியை செய்து கொள்ளாமல் இருக்கிறார்கள்.

ஆகவே, எந்த முறையில் இருக்கிற மின்சாரத்தை ஒழுங்கான முறையில் விவசாயிகளுக்கு வழங்கலாம் என்பதைப்பற்றி விவாதிக்கவும், தேவையான முறையில் ஏற்பாடு செய்தால்தான்

[திரு. சோ. அழகர்சாமி] [1974 மார்

அங்கே இருக்கக்கூடிய மானாவாரிப் பயிர்களை
பாசனத்தை நம்பி இருக்கும் பயிர்களைப் பிழைக்க வைக்க
முடியும் என்பதை எடுத்துச் சொல்லவும், இது ஒரு முக்கியமான
பிரச்னை என்பதாலும், இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி
வைத்து இதுகுறித்து விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

(முற்பகல் 10-00).

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே,
பொதுவாக மின்சார விநியோகத்தைப் பொறுத்த அளவிலே
வேளாண்மை விசையேற்றங்களுக்கு காலையில் 6 மணியிலிருந்து
12 மணி வரையிலும் ஒரு பகுதிக்கும், 12 மணியிலிருந்து மாலை
6 மணி வரையிலும் ஒரு பகுதிக்கும் பிரிக்கப்பட்டிருக்கிறது. அத
அல்லாமல் விசையேற்றங்களுக்கு இரவு 10 மணியிலிருந்து காலை
6 மணி வரையிலும் எல்லோராலும் விவசாயத்திற்கு மின்சாரத்தை
எடுத்துக்கொள்ளக்கூடிய அளவுக்கும் சரி செய்யப்பட்டிருக்கிறது.
ஒரு நாளைக்குக் குறைந்தது 6 மணி நேரம் விவசாயிகளுக்கு
மின்சாரம் கொடுக்கப்படவேண்டும் என்று பிரிக்கப்பட்டு
கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், விவசாயிகளைப் பொறுத்தவரையில் மின்சார வெட்டு
எதுவுமில்லாமல் கொடுக்கப்படுகின்ற நேரத்தில் சில கட்டுப்
பாடுகள் இருக்கின்றன. அதன் காரணமாக மின் சுமை அதிகமாக
இருக்கிற நேரத்தில் அந்தக் கட்டுப்பாடு வைத்து மின் விநியோகம்
செய்யாவிட்டால் பல இடங்களில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன.

உதாரணத்திற்குச் சொல்லப்போனால், கோடை காலமாக
இருக்கிற காரணத்தால் மின் சுமை அதிகமாக இருக்கிறது.
பாசனத்திற்கு உகந்த நீர் மின் நிலையங்களில் பாசனத்திற்கு
தண்ணீர் வராத காரணத்தினால் இப்பொழுது அவைகள் மூடப்
பட்டிருக்கின்றன. அதன் காரணமாக சுமை அதிகமாக
இருக்கிறபொழுது ஸ்டாகர் செய்யவேண்டியிருக்கிறது. சில
வேலைகளில் சில பகுதிகளில் மோட்டார் பம்புசெட் அதிகமாக
இருக்கிற காரணத்தினால், கோடைக்காலத்தில் அதிகமாக
மோட்டார் ஆரம்பிக்கப்படுகின்ற காரணத்தினால் சுமை அதிகமாக
இருக்கிறபொழுது ஃப்ரீகுவென்ஸி
...றந்துவிடுகிறது



மார்ச் 20] [திரு. ஓ. பி. இராமன்]

ஃப்ரீகுவென்ஸி குறைந்துவிடுமானால் நெய்வேலியிலும் கேரள
மாநிலத்திலுமுள்ள இணைப்புகளை உடனே துண்டித்துவிடுவார்கள்.
அப்படி துண்டிக்காவிட்டால், இயந்திரங்களில் பெரிய
கோளாறுகள் ஏற்பட்டுவிடும்.

ஆகவே, கோவில்பட்டியைப் பொறுத்த அளவில் 8-ம் தேதியி
லிருந்து 15-ம் தேதி வரையில் இடையே நாம் விசாரித்ததில் சில
நேரங்களில் இடையூறு ஏற்பட்டு இருந்தது. 15-ம் தேதிக்குப்
பின்னாலே அந்த நிலைமைகள் சரி செய்யப்பட்டிருக்கிறது.
இடையிலே ஏற்பட்ட இடர்ப்பாடு கூட அதிகாரிகளுடைய கவனக்
குறைவினால் ஏற்பட்டது அல்ல, தவிர்க்க முடியாத சூழ்நிலையில்
கேரள அதிகாரிகள் மின் இணைப்பைத் துண்டிக்க வேண்டிய
கட்டாயமான நிலை, ஸ்டாகர் செய்யவேண்டிய நிர்பந்தமான நிலை
ஏற்பட்டது. இருந்தாலும் இந்த அரசைப் பொறுத்தவரையில்,
வாரியத்தைப் பொறுத்தவரையில் இருக்கிற மின்சாரத்தைப்
பக்குவப்படுத்தி, விவசாயிகளுக்கு முக்கியமாகக் கொடுப்பது
அத்தியாவசியம் என்று கருதி, அவர்களுக்கு விநியோகிக்கப்
பட்டு வருகிறது. அந்த காலங்களில் கூட விவசாயம் பாதிக்கப்
படாத அளவுக்கு விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டும் என்று
இந்த அரசு மிகவும் அக்கறை செலுத்தி வருகிறது.

திரு. அழகர்சாமி அவர்கள் சொன்னார்கள், ஏதோ 15 சதவிகிதம்
வெட்டுக்கு மேல் வராது என்று சொன்னதாகச் சொன்னார்கள்.
அதன் காரணமாக விவசாயிகளெல்லாம் அதிகமாக நாற்றுகளை
நட்டுவிட்டார்கள். இறவை பாதிக்கப்பட்டிருக்கிறது என்று
சொன்னார்கள். இந்த வாரியத்தின் சார்பில், அல்லது எந்த
அதிகாரியின் சார்பிலும் எந்தக் காலத்திலும் இந்த கட் இருந்து
கொண்டிருக்கும், போகும் போகாது, குறையாது என்று யாரும்
எப்பொழுதும் சொல்லவில்லை.

இதற்கென்று ஒரு குழு போடப்பட்டிருக்கிறது. அந்தக் குழு
ஒவ்வொரு மாதமும் உற்பத்தி நிலைமைகளைப் பரிசீலித்து எவ்வளவு
உற்பத்தி இருக்கிறதோ, அதற்குத் தகுந்தவாறு சீரமைப்பு
செய்கின்ற அறிவிப்பை வெளியிட்டு வருகிறது. இப்பொழுது
இருக்கிற நிலைமைகளை மாதக் கடைசியில் ஆராய்ந்த பிறகுதான்
நிலை எப்படி இருக்கும் என்று சொல்ல முடியும்.

ஆகவே, இம்மாதிரியான ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வரவேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். இந்தக் கோவில்பட்டிப் பகுதியைப் பொறுத்த அளவில் ஒரு மாத காலத்தில் ஏற்பட்ட இடர்ப்பாடு இப்பொழுது தவிர்க்கப்பட்டு எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு, சூழ்நிலை சீராக அமைந்திருக்கிற காரணத்தினால், மேலும் இந்த அவையின் பிற நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து இந்தப் பிரச்சினையைப்பற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: ஏதாவது ஒரு 6 மணி நேரம் இடை வெளியில் நிற்காமல் முறையாகத் தொடர்ந்து மின்சாரம் கொடு பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: உத்திரவாதம் எதுவு இதிலே கிடையாது. ஃப்ரீகுவென்ஸி குறையும்பொழுது, அதி லோடு வருகிற பொழுது வேறு மாநிலங்களிலிருந்து மின்சா இணைப்பைத் துண்டித்து விடுவார்கள். நெய்வேலியில் துண்டிக்க விட்டால் பெரிய இயந்திரங்கள் கெட்டுப் போய்விடும். ஆகவே தவிர்க்க முடியாத காரணத்தினால், ஃப்ரீகுவென்ஸி குறைகின் காரணத்தினால் ஏற்படுகின்ற இடர்ப்பாடு இது. அதுவும் கோடை காலத்தில் சில சமயங்களில் இந்த மாதிரி இடையூறுகள் ஏற்ப கின்றன. அதைத் தடுக்கின்ற அளவுக்கு எந்த அளவுக் முயற்சிகளைச் செய்யவேண்டுமோ அந்த அளவுக்குச் செய் கொண்டு வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்ச அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இதை விவாதிக்க அவையி பிற நிகழ்ச்சிகளை ஒத்திவைக்கத் தேவையில்லை என்பதினு இதற்கு அனுமதி மறுக்கிறேன்.





## 3. கவன ஈர்ப்பு.

### உணவகங்களில் பரிமாறப்படும் உணவுப்பொருட்கள் மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் குறித்து.

THIRU G. R. EDMUND: Mr. Speaker, Sir, under Rule 41 of the Tamil Nadu Legislative Assembly Rules, I call the attention of the Hon. Minister for Food and Co-operation to a matter of urgent public importance, namely, the restrictions imposed on serving items in meals in catering establishments in this State as published in the *Tamil Nadu Government Gazette* in February 1974.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, 1973 ஆம் ஆண்டில், இந்திய அரசு சிக்கன நடவடிக்கைகள் குறித்து அப்போது செயலிலிருந்த ஆணைகளை ஆய்வு செய்த பின்னர், ஓட்டல்களிலும் பிற உணவகங்களிலும் பரிமாறப்படும் உணவு வகைகளின் மொத்த எண்ணிக்கை குறித்துக் கட்டுப்பாடுகள் விதிக்க முடிவு செய்தது. அதன்படி, மாதிரி உணவு (உணவகங்கள் பரிமாறும் உணவுமீதான கட்டுப் பாடுகள்) ஆணையின்படி ஒன்றை இந்திய அரசு, மாநில அரசுக்கு அனுப்பியதோடு அந்த மாதிரி ஆணையின் அடிப்படையில் ஆணை ஒன்று பிறப்பிக்குமாறு மாநில அரசைக் கேட்டுக்கொண்டது.

2. தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு உணவு (உணவகங்கள் பரிமாறும் உணவு மீதான கட்டுப்பாடுகள்) ஆணையை மாநில அரசு 1974, சனவரி திங்களில் பிறப்பித்தது. இந்த ஆணைக் கிணங்க, உணவகங்களில் இரண்டு வகை உணவு மட்டுமே வழங்கப் பட வேண்டும், அவையாவன:

(அ) முக்கியமான உணவு ஒன்று, துணை உணவு ஒன்று அல்லது

(இ) துணை உணவு இரண்டு. கோழிக்கறி
முக்கிய உணவில், மீன் அல்லது இறைச்சி அல்லது
அல்லது வேட்டை உணவு அல்லது இவற்றில் ஏதாவதொன்றினால்
செய்யப்பட்ட கறி அல்லது காய்கறிகளைக் கொண்டு தயாரிக்கப்
பட்ட கறியும், அரிசிச்சோறு அல்லது புலவு அல்லது சப்பாத்தி
அல்லது பரோட்டா அல்லது பக்காரிகள் அல்லது பப்படம்
அல்லது ரொட்டி அல்லது அரிசி அல்லது கோதுமை அல்லது
பிற உணவு தானியங்களில் தயாரிக்கப்பட்ட உணவு வகையும்
அடங்கும். இச்சாடி பருப்பு இரண்டு வகைக்கு மேற்படா

உணவகங்களில் பரிமாறப்படும் உணவுப் பொருட்கள் மீது
விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் குறித்து

[திரு. மன்ஹைய. நாராயணசாமி] [1974 மார்

காய்கறி ஆகியவை முக்கிய உணவின் ஒரு பகுதியாகப் பரிமா
படலாம். இனி உணவு என்பது, இனிப்பு வகையாக அல்
லாத வகையாக இருக்க வேண்டும். இதில் முக்கியமாக
கறிகள், பழங்கள் அல்லது முட்டைகள் அடங்கும்.
உணவு வகையில் தானியங்களைக் கொண்டு தயாரிக்கப்பட உ
ரதும் இருக்கக்கூடாது. ஆயினும், மேற் குறிப்பிட்ட இர
வகை உணவுடன், கீழ்க்காணும் உணவு வகைகளும் பரிமா
படலாம். அவையாவன:—சூப் அல்லது ரசம். பிஸ்கட்டு
முந்திரிப்பருப்பு, பழப்பாகு, குளிர்பதனப் பெட்டியில் வைக்
பட்ட பழங்கள் உட்பட ஏனைய பழங்கள் அல்லது பழச்சா
அல்லது காய்கறி சூப், பஜ்ஜி, பப்படம், சட்னி, ஊறுகாய்
செய்தா; பதனப்பழச்சாறு (preserve) தேங்காயம் இனி
நெய், வெண்ணெய், பாலேடு, தயிர், பாலாடைக்கட்டி, மோர்
குழம்பு, முட்டையும் பாலும் சேர்ந்த ஒருவகை தின்பண்
(custord)
பொருட்கள். சுவையூட்டும் கூட்டு, ஏனைய மசாலா

3. உணவகம் ஒன்றில் அயல்நாட்டுப் பிரதிநிதிகள் அல்லது
அயல்நாட்டுத் தூதுவர்கள் அல்லது அயல்நாட்டு அரசுத் தூது
குழுக்கள் அளிக்கும் விருந்துகளுக்கும் அனைத்துநாட்டு மாநா
கள் சம்பந்தமாக ஏற்பாடு செய்யப்படும் விருந்துகளுக்கும்
இவ்வாணையின் விதித்துறைகளிலிருந்து அரசு விலக்களிக்கலாம்.

நாடு முழுவதும் தற்போதுள்ள உணவுப் பற்றுக்குறை காரண
மாக, உணவகங்களில் உணவுகள் தயாரித்து வழங்கப்படுகையில்
ஊதாரித்தனத்தைத் தவிர்த்து சிக்கனத்தைக் கடைப் பிடிக்கும்
நோக்கத்துடன் இந்தக் கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டுள்ளது.

## 4. அரசினர் தீர்மானங்கள்.

### (அ) மதிப்பீட்டுக் குழுவிற்கு தேர்தல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவை
தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை (
மொழிகிறேன்—

"தமிழ்நாடு சட்டப் பேரவையின் 164-வது விதியின்
974-75-ம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்க
இருக்கும்படி பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேர
தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவே
பட்டது.





## 5. அறிவிப்புகள்.

### (அ) மதிப்பீட்டுக் குழுவிற்கு தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த அவைக்கு ஓர்
அறிவிப்பு.

ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு
பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், மதிப்
பீட்டுக் குழுவிற்கு 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, வேட்பா
ளர்கள் நியமனத் தாள்களை 27—3—1974 புதன்கிழமை பிற்பகல் 3
ணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள்
வண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 28—3—1974, வியாழக்கிழமை, **முற்பகல் 11**
மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக்கொள்ள
விரும்பும் வேட்பாளர்கள் 30—3—1974, சனிக்கிழமை முற்பகல் **11**
மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை
நிரப்பப்படவேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது
பதினாறுக்கு மேற்படுமாயின் 2—4—1974 செவ்வாய்கிழமை
முற்பகல் 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே பேரவை
குழுக்கள் கூடும் அறையில் (உறுப்பினர் முன்னாள் ஓய்வறையில்)
வாக்கெடுப்பு நடைபெறும்.

## 4. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

### (ஆ) பொதுக்கணக்காய்வுக் குழுவிற்குத் தேர்தல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத்
தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்
மொழிகிறேன்:

"தமிழ்நாடு சட்டப்பேரவையின் 173-வது விதியின்கீழ்,
1974-75-ம் ஆண்டிற்கான, பொதுக் கணக்காய்வுக் குழுவின் உறுப்
பினர்களாக இருக்கும்படி பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு
பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்
தெடுக்கும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்
பட்டது.

## (5) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) பொதுக்கணக்காய்வுக் குழுவிற்குத் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒற்றை மாற்று வாக்குமுறைப் படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், பொதுக்கணக்காய்வுக் குழுவிற்கு 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 27—3—1974, புதன்கிழமை, பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுகொள்ளலாம்.

நியமனத்தாள்கள், 28—3—1974, வியாழக்கிழமை, முற்பகல் 11 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 30—3—1974, சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்படவேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினாறுக்கு மேற்படுமாயின் 2—4—1974, செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே பேரவை குழுக்கள் கூடும் அறையில் (உறுப்பினர் முன்னாள் ஓய்வறையில்) வாக்கெடுப்பு நடைபெறும்.

## (4) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

### (இ) பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவிற்குத் தேர்தல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, "தமிழ்நாடு சட்டப் பேரவையின் 182-எ விதியின் கீழ் 1974-75-ம் ஆண்டிற்கான, பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்" என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டது.



## (5) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (இ) பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவிற்குத் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவிற்கு 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 27—3—1974, புதன்கிழமை, பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 28—3—1974, வியாழக்கிழமை, முற்பகல் 11 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 30—3—1974, சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினாறுக்கு மேற்படுமாயின் 2—4—1974 செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே பேரவை குழுக்கள் கூடும் அறையில் (உறுப்பினர் முன்னாள் ஓய்வறையில்) வாக்கெடுப்பு நடைபெறும்.

அடுத்து 1974-75-ம் ஆண்டுக்கான மானிய கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

## 6. நடைமுறைக் கேள்வி

### ஓர் உறுப்பினர் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டால் அதற்கான காரணங்களைத் தெரிவிப்பது குறித்து

**திரு. எம். ஏ. லத்தீப் :** சார், அன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், தலைவரவர்களே. இந்த மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் மாநிலத்திலே இருக்கின்ற மக்கள் பிரச்னைகளைச் செய்தித்தாள்கள் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ பார்க்கிறார்கள். அப்படிப் பார்க்கும்போது சில முக்கியமான பிரச்னைகள் அவர்களுக்குத் தோன்றுகின்றன. அதை இந்த மன்றத்தின் கவனத்திற்கு

[திரு. எம். ஏ. லத்தீப்] [1974 மார்ச்
அப்படிப்பட்ட உறுப்பினர்கள் கொண்டுவருகிறார்கள். மன்றத்தி
கவனத்திற்குக் கொண்டுவரும்போது, அதைப்பற்றி இந்த மன்ற
இல் விவாதிக்க வேண்டுமா, வேண்டாமா என்று முடிவு செ
கின்ற அதிகாரம் பேரவைத் தலைவர்களுக்கு இருக்கிற
கொண்டுவருகின்ற பிரச்னைகள் எல்லாம் மன்றத்திலே விவாத்
கப்பட வேண்டுமென்று யாரும் வற்புறுத்த முடியாது. அ
எண்ணத்தோடு யாரும் கொண்டுவருவதில்லை. அந்த அடி
படையிலே நான் ஒரு தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். அ
முக்கியமானத் தீர்மானமா இல்லையா என்று பேரவைத் தலை
வர்கள் முடிவுசெய்யும்போது, அதிலே சந்தேகம் ஏற்பட்ட
அவர்கள் தீர்மானம் கொடுத்த உறுப்பினரை அழைத்து, அத
முக்கியத்துவம் என்ன என்று கேட்டறிந்து முடிவு செய்யலா
அப்படிச் செய்யாமல் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிற
என்று சொல்லிவிட்டால் அதன் காரணம் என்ன என்பவ
உறுப்பினர்கள் அறிந்துகொள்ள ஆவலாக இருப்பார்கள். ஆகவே
அனுமதி மறுக்கப்பட்டதற்கான காரணம் என்ன என்பவ
யாவது தெரிவிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பல முறை இந்த மன்றத்தி
நான் சொல்லியிருக்கிறேன். ஒத்திவைப்புத் தீர்மானத்தைப்பற்
பேரவைத் தலைவர் தீர்ப்புக் கொடுத்துவிட்டால், அதைப்பற்
மீண்டும் இந்த மன்றத்திலே எழுப்பக்கூடாது. மீண்டும் அதைப்
நான் சொல்கிறேன்.

THIRU M. A. LATHEEF : I am perfectly right in raising t
matter. I know the extent and scope of my observation.
நான் சொல்வதெல்லாம், நீங்கள் கொடுத்தத் தீர்ப்பு சரியா தவ
என்பதல்ல. தீர்ப்பு வழங்கும் போது தீர்மானத்தி
முக்கியத்துவம் என்ன என்பதை அறிந்து தீர்ப்பு வழங்குவ
நல்லது என்பதைத்தான் நான் சொல்கிறேன். அதல்லாம
நீங்களே 'ஆர்பிட்ரரிலியாக' தீர்ப்பு வழங்குவது சரியல்
அனுமதி மறுக்கப்படுவதற்கான காரணத்தையாவது தெரிவிக்
வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர்கள் அனும
மறுக்கப்பட்டதற்கான காரணத்தைத் தெரிந்துகொள்வதி



1974 மார்ச் 20] [மாண்புமிகு பேரவைத் தலைவர்]
எனக்கு ஆட்சேபம் இல்லை. ஆனால் அதன் காரணத்தை இந்த
அவையிலே கேட்கக்கூடாது; என்னுடைய அறையிலே வந்து
கேட்டுக்கொள்ளலாம்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** நீங்கள் அளித்த தீர்ப்பைப்பற்றி
நான் ஒன்றும் சொல்லவில்லை. பொதுவான ஒரு கருத்தைத்
தெரிவிக்கிறேன். கொடுத்தத் தீர்மானம் மறுக்கப்படுகிறது
என்றால், அதற்கான காரணத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று
நான் ஒரு பொதுவான கருத்தைத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தீர்ப்பு கொடுக்கப்பட்ட ஒரு
தீர்மானத்தைப்பற்றி மீண்டும் இந்த அவையிலே எழுப்பக்
கூடாது, என்று நம்முடைய விதிமுறைகளிலே தெளிவாகச்
சொல்லப்பட்டிருக்கிறது. மரபுகளும் அப்படித்தான் இருக்
கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு வழக்கறிஞர்.
அவர்களுக்கு அது நன்றாகத் தெரியும்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** இந்தமாதிரியான 'இன்னன்டோஸ்'
எல்லாம் வேண்டாம். என்னை வழக்கறிஞர் என்று சொல்ல
வேண்டாம். என்னுடைய கருத்தைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னால்
அந்தப் பிரச்னையைப் பற்றி மீண்டும் இந்த அவையிலே
எழுப்பக்கூடாது என்று நம்முடைய விதி முறைகளிலே
தெளிவாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
அதை நன்கறிவார்கள். மறுக்கப்பட்டதற்கான காரணத்தைத்
தெரிந்துகொள்ள வேண்டுமானால் என்னுடைய அறையிலே வந்து
கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்; இங்கே கேட்கக்கூடாது. நீங்கள்
கேட்பதில் நியாயம் இருக்கிறதா இல்லையா என்பதற்குள் நான்
செல்ல விரும்பவில்லை. இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றும்
இல்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** Sir, on a point of
order.—

Rule 44 clearly says—

" The Speaker may withhold consent to the matter being
raised before the House and in that case it shall be communicated

to the member together with the reason therefor and the membe shall not raise the matter as such in the House."

அதனால் நீங்கள் தீர்ப்பு வழங்கும்போது, தீர்மானம் மறுக்க பட்டால் அதற்கான காரணத்தோடு மறுக்கப்பட வேண்டும். வி 44-ல் அப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன்படி தீர்ப் கொடுங்கள்.

'I just withhold consent என்று சொன்னால் விதி 44-க்கு புறம்பாக இருக்கிறது. அதை தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். விதிப்ப நடந்துகொள்ள வேண்டும்; மறுப்பதற்கான காரணத்தை சொல் வேண்டும். ஒருவருடைய தீர்மானத்தை ஏற்றுக்கொள்வது இன்னொருவருடைய தீர்மானத்தை மறுப்பதும் எதனால் என் அப்போதுதான் எங்களுக்குத் தெரிந்து கொள்ள வாய்ப் இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏற்கெனவே கொடுத்த தீர்ப்பைப்பற்றி இந்த மன்றத்திலே மீண்டும் கேட்கக்கூடா என்று விதி இருக்கிறது. அதன்படி மீண்டும் கேட்கக்கூடாது

**திருமதி த. ந. அனந்தநாயகி :** விதி 44-ஐ நீங்கள் மீறியிரு கிறீர்கள். அதனால் நாங்களும் விதியை மீறவேண்டியிருக்கிறது நீங்கள் விதிப்படி நடந்துகொண்டால், நாங்களும் விதிப்ப நடந்துகொள்வோம்.

## 7. 1974-75-ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### நிதிக் கோரிக்கை எண் 17—கல்வி

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே அளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின்கீ ரூ. 1,10,11,83,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங் பட வேண்டும்."



THIRU M. A. LATHEEF : Sir, to discuss about the rationalisation and modernisation of the entire system of education, I move—

"That the allotment of Rs. 1,10,11,83,200 under Demand No. 17—Education be reduced by Rs. 100.

THIRU K. T. K. THANGAMANI : Sir, to discuss the need to introduce reoriented educational system in High Schools, Colleges and Technical Institutes, I move—

"That the allotment of Rs. 1,10,11,83,200 under Demand No. 17—Education be reduced by Rs. 100.

THIRU B. VENKATASWAMY : Sir, to discuss the need to introduce job-oriented Educational System in the State from the Elementary Education itself, I move—

"That the allotment of Rs. 1,10,11,3,200 under Demand No. 17—Education be reduced by Rs. 100.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** தலைவரவர்களே, பல்கலைக் கழகத் தில் தபால் மூலம் கல்வி கற்போருக்கு வருடத் தேர்வு ஏப்ரல் முதல் வாரத்தில் நடத்தப்படுவதை ஏப்ரல் கடைசி வாரத்தில் நடத்த வேண்டுமென எடுத்துக்கூற—

"நிதிக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,10,11,83,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவரவர்களே, மேட்டூரில் கலைக் கல்லூரி அமைப்பதற்காக நிலம் ஒதுக்கப்பட்டிருந்தும், நிதி ஒதுக்கப்பட்டிருந்தும் கூட கடந்த மூன்று வருடங்களாக இந்த வேலையைப் பூர்த்தி செய்யாமலிருப் பதைப்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,10,11,83,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[1974 மார்ச் 20

THIRU SOWDI S. SUNDARA BHARATHY: Sir, to discuss about the necessity to appoint a Commission to study the benefits derived by students availing Government scholarships and other such assistance by Government, I move—

"That the allotment of Rs. 1,10,11,83,200 under Demand No. 17—Education be reduced by Rs. 100".

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, to discuss about the urgent need to implement all the safeguards granted to the linguistic minorities effectively, I move—

"That the allotment of Rs. 1,10,11,83,200 under Demand No. 17—Education be reduced by Rs. 100."

**திரு. ஏ. சுவாமிதாஸ்:** தலைவர் அவர்களே, எல்லா உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களையும் அரசிதழ் பதிவு பெற்ற தலைமை ஆசிரியர்களாக ஆக்குவது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,10,11,83,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இந்தக் கல்வி மானியக் கோரிக்கையையொட்டி தமிழ்நாடு கல்வி வளர்ச்சித் துறையின் கீழ் கொடுக்கப் பட்டிருக்கிற குறிப்புகள் இந்தத் துறையின் பல்வேறு செயல் முறைகள் பற்றி தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை மீண்டும் விரிவாக எடுத்துச் சொல்ல விரும்பவில்லை. இவற்றைப் படித்ததாகக் கருதி, இவை நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விவாதத்தில் கலந்துகொள்கிறவர்களுக்குப் பயன் படுகிற வகையில் சில கருத்துக்களைக் கூறுவது பொருத்தமாக இருக்கும். கல்வித்துறையை ஒட்டி அவர்கள் எழுப்புகிற பல பிரச்சினைகள் இதனை ஒட்டி எழுப்புவதற்கு வாய்ப்பாக இருக்கும்.



1974 மார்ச் 20] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

திரும்பத் திரும்ப அவர்கள் சொல்கிற கருத்துக்களைக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு, இறுதியில் சொல்வதைவிட, முன்பே சில வற்றைச் சொல்லிவிட்டால் அவற்றைப் பற்றி அவர்கள் பேசாமல் இருப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்ற அளவில் சில கருத்துக்களைக் கூறவிரும்புகிறேன்.

ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் ஆசிரியர்கள், பதவிக்கு வருவார்களேயானால்—மற்ற வேறுபல துறைகளில் உள்ளதைப்போல பதவி உயர்வு பெற வாய்ப்பின்றி—நெடுங்காலம் ஆசிரியர்களாகவே இருந்து ஓய்வு பெறவேண்டிய நிலைதான் இருக்கிறது, தலைமை ஆசிரியர் பதவியைப்போன்ற பதவி நீண்ட காலம் கழித்து ஒருவர், இருவருக்கேதான் கிடைக்கிறது என்பது எல்லாம் ஆசிரியர் பெருமக்களால் எடுத்துச் சொல்லப்பட்டு வந்தது. இதனை அரசாங்கம் பரிசீலித்து, கொள்கை அளவில் ஒப்புக்கொண்டு, அவர்களுக்குப் பதவி உயர்வுக்கே வாய்ப்பு இல்லாமல் இருக்கிற காரணத்தினால், பத்தாண்டு பணி புரிந்த அத்தனை ஆசிரியர்களும் தேர்வு நிலை பெறுவார்கள் என்ற குறிப்பினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்று ஒப்புதல் தந்தார்கள்.

அதனை அப்போதே எடுத்துச் சொல்கிறபோது மற்ற பல துறைகளைப்பற்றியும் கவனிக்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்களும், ஆசிரியர் பெருமக்களும் கேட்டுக் கொண்டார்கள்.

தமிழாசிரியர்களைப் பொறுத்தவரையில் முதல்நிலைத் தமிழாசிரியராவதற்குத் தகுதி பெறாமல் இருந்தாலும், 2 ஆம் நிலை தமிழாசிரியர் பதவியில்—பதவி உயர்வு இல்லாமல் பல்லாண்டுகளாகப் பணிபுரிகிறவர்கள் இருக்கிறார்கள் என்று எடுத்துச் சொன்ன காரணத்தினால்—1—1—1974 இல் இருந்து, பத்தாண்டுகாலம் பணி புரிந்தவர்களுக்கு முதல் நிலைத் தமிழாசிரியர் பதவி உயர்வு தரப்படும் என்று இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதையொட்டி செகண்டரி கிரேடு ஆசிரியர்கள், ஹையர் கிரேடு ஆசிரியர்கள் ஆகிய இவர்களுக்கும் இந்தச் சலுகை அளிக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்களும், பல்வேறு ஆசிரியர் பெருமக்களும் கேட்டுக்கொண்டார்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 மார்ச் 20
இந்தத் துறையில் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கிற
காரணத்தினால்—பெரும் செலவைத் தாங்க வேண்டிய நிலை
ஏற்படும் என்கிற முறையில் இதைக் கொஞ்சம் பரிசீலனை செய்ய
வேண்டும் என்பதாக நானும் அதுபற்றிய வினாக்களுக்கு விடை
யிறுக்கும்போது கூறி வந்திருக்கிறேன். அந்த நிலையில் இதனைப்
பரிசீலனை செய்து, அவர்களுக்கும் தேர்வு நிலை ஏற்படுத்த
வேண்டும் என்கிற அடிப்படையில் நாங்கள் ஒரு முடிவுக்கு
வந்தோம். மாண்புமிகு முதல்வர் அவர்களும் அந்த ஒரு
முடிவுக்கு தம் இசைவைத் தந்தார்கள். நெருக்கடியோடு
நெருக்கடியாக—இப்போதே நமது வரவு செலவுத் திட்டத்தில்
12½ கோடிக்குத் துண்டு விழுகிறது—பத்து கோடிக்கு வருமானம்
அதிகரித்தும் கூட, என்கிற நிலையில்—இந்தக் கொள்கை அவர்
களுக்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பது ஆசிரிய பெருமக்களால்
வரவேற்கத்தக்க ஒன்றாகும். செகண்டரி ஆசிரியர்க்கு
இப்போது வழங்கப்படும் சம்பள விகிதம் ரூ. 210-5-245-10-325
ஆகும். இதில் 10 சதவிகிதத்தினருக்கு இப்போது வழங்கப்
பட்டுள்ள தேர்வு நிலைப்பகுதிகளின் ஊதிய விகிதம் ரூ. 250-10-400
ஆகும். செகண்டரி கிரேடில் 10 ஆண்டு பணியாற்றியுள்ள
ஆசிரியர்கள் அனைவருக்கும் தேர்வு நிலைப் பதவிகள் வழங்குவது
என்றால் லட்சக் கணக்கில் செலவாகும். இப்பொழுதுள்ள நிதி
நிலையில் இது அரசுக்குப் பெரும் சுமையாகும். ஆயினும்,
செகண்டரி கிரேடு ஆசிரியர்க்குப் பதவி ஊதிய வாய்ப்பு அதிக
மில்லை என்ற அடிப்படையில், இவர்களுடைய கோரிக்கையையும்
அனுதாபத்துடன் பரிசீலித்து 10 ஆண்டுகள் பணியாற்றியுள்ள
செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் அனைவருக்கும் 1—4—1974 முதல்
தேர்வு நிலைப் பதவிகள் வழங்க அரசு முடிவு செய்துள்ளது.
இதனால் இப்பொழுது சுமார் 5,900 பேர் தேர்வு நிலைப் பதவிகள்
பெற்றிருப்பதற்கு மாறாக, இனி மொத்தமாக சுமார் 59,275 ஆசிரி
யர்கள் தேர்வு நிலைப் பதவிகள் பெறுவார்கள்.

ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கும் 10 ஆண்டுகள் பணியாற்றிய
பின் தேர்வு நிலைப் பதவிகள் வழங்கப்பட வேண்டும் என்ற
கோரிக்கை எழுப்பப்பட்டுள்ளது. ஹையர் கிரேடு ஆசிரியர்
களுக்குத் தேர்வு நிலைப் பதவிகள் ஏற்படுத்த இரண்டாவது
ஊதியக் குழு பரிந்துரை செய்யவில்லை. எனினும் தனிச் சலுகை
யாக அவர்களுக்கு 10 சதவிகிதம் தேர்வு நிலைப் பதவிகளை அரசு
ஏற்படுத்திக் கொண்டது. ஹையர் கிரேடு ஆசிரியரின் சம்பளம்



1974 மார்ச் 20] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]
ரூ. 150-4-170-5-225 ஆம். தேர்வு நிலைப் பதவிகள் சம்பள விகிதம்
ரூ. 180-5-260-10-270 ஆகும். இவர்களுடைய கோரிக்கையையும்
அரசு அனுதாபத்துடன் பரிசீலித்து 10 ஆண்டு பணியாற்றியுள்ள
ஹையர் கிரேடு ஆசிரியர்கள் அனைவருக்கும் தேர்வு நிலைப் பதவி
களை 1—4—1974 முதல் வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இப்
பொழுது சுமார் 7,800 பேர் தேர்வு நிலைப் பதவிகள் பெற்றிருப்
பதற்கு மாறாக 1—4—1974 முதல் மேலும் 64,726 பேர் தேர்வு நிலைப்
பதவிகள் பெறுவார்கள்.

ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் அதிக
மில்லை என்ற அடிப்படையில், பெருஞ்செலவையும் பொருட்
படுத்தாமல் அரசு தேர்வு நிலைப் பதவிகளை 10 ஆண்டுப் பணி
அடிப்படையில் வழங்க முன்வந்துள்ளது. இப்பெரும் சலுகையை
ஆசிரியர்கள் சமுதாயம் மனமுவந்து ஏற்றுக்கொண்டு இன்னும்
ஓரிரு ஆண்டுகளுக்காயினும், மேலும் செலவை ஏற்படுத்தக்
கூடிய வேறு கோரிக்கைகளைக் கொண்டு வராமல் அரசுடன் ஒத்து
ழைத்து, கல்வியின் தரத்தை உயர்த்த சிரிய பணியாற்றுவார்கள்
என்று அரசு நம்புகிறது.

அடுத்ததாக, 1—4—1970-க்குப்பின் தற்காலிகமாக நியமனம்
செய்யப்பட்ட இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் அதே தரத்
திலுள்ள இரண்டாம் நிலைத் தமிழ் ஆசிரியர்கள் சிறப்பாசிரியர்கள்
முதலானோரை அப்பதவிகளில் வரன்முறைப்படுத்த வேண்டும்
என்று அரசுக்கு முறையீடுகள் செய்யப்பட்டுள்ளன. இதை
அரசு அனுதாபத்துடன் பரிசீலித்து விதிகளின் படி தகுதி பெற்ற
வர்களில் ஓராண்டு பணி முடித்த ஆசிரியர்கள் எல்லோரையும்
அவரவர் பதவிகளில் வரன் முறைப்படுத்துமாறு பள்ளிக்கல்வி
இயக்குநருக்கு ஆணை அனுப்பப்பட்டுள்ளது. இதனால் பயன்
பெறும் ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் இந்த உத்தரவினால்
மனநிறைவும் மகிழ்ச்சியும் பெறுவார்களென்று நம்புகிறேன்.

அரசுப் பள்ளியல்லாத (தனியார், மற்றும் உள்ளாட்சி மன்றப்)
பள்ளிகளிலிருந்து 1—6—1970 அன்று அல்லது அதற்குப்பின்
ஓய்வு பெறும் ஆசிரியர்களையும் தனியார்ப் பள்ளிகளிலிருந்து
1—4—1972 அன்று அல்லது அதற்குப்பின் ஓய்வு பெறும் ஆசிரிய
ரல்லாத பணியாளர்களையும் அரசு ஏற்கெனவே (அரசு ஊழியர்
களுக்குப் பொருந்தும்) தாராள ஓய்வூதிய விதிகளின் கீழ்
கொண்டுவந்து அரசு ஊழியர்களுக்கு ஒப்ப ஓய்வூதியம், பணிக்
கொடை முதலியவற்றை வழங்கிட ஆணையிட்டுள்ளது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 மார்ச் 2

ஓய்வூதியம், பணிக்கொடை ஆகியவற்றை வழங்கும் இறுதி ஒப்பளிப்பு வெளியிடக் காலதாமதம் ஏற்பட்டால் ஓய்வுபெறும் அரசு ஊழியர்களுக்கு இடர்ப்பாடு இருக்கக்கூடாது என்பதற்காகத் தற்காலிகமான ஓய்வூதியமும் பணிக்கொடையும் வழங்கிட ஏற்பாடு ஏற்கெனவே அரசு ஊழியர்களைப் பொறுத்தவரை உள்ளது. இந்தச் சலுகையைக் கீழ்க்கண்டவாறு தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற பள்ளி ஆசிரியர்களுக்கும் தனியார் பள்ளிகளில் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கும் விரிவாக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இதை முதலமைச்சர் ஏற்கெனவே அறிவித்துள்ளார். அதை ஒட்டி நிலைமையை விவரமாகப் பரிசீலனை செய்து, ஓய்வூதியத்தில் 80 சதவிகிதத்திற்கு உடனடியாக ஒப்புதல் அளிக்கப்படும் என்பதை விரிவாக்கி ஓய்வூதியம் முழுவதற்கும் உடனடியாக ஒப்பளிப்பு வழங்கலாமென்று முதலமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து ஆணையிட்டுள்ளார்கள். புதிய ஆணையின் விவரங்கள் பின் வருமாறு அமையும்:—

(1) **ஓய்வூதியம்:** ஓய்வூதியம் எவ்வளவு கொடுக்க வேண்டும் எனக் கணக்கிடப்படுகிறதோ அந்தத் தொகை முழுவதையும் தற்காலிக ஓய்வூதியமாக 12 மாதங்கள் வரை வழங்கிடலாம்.

(2) **பணிக்கொடை:** பணிக்கொடை எவ்வளவு கொடுக்க வேண்டும் எனக் கணக்கிடப்படுகிறதோ அந்தத் தொகையில் 80 சதவிகிதம் வழங்கிடலாம்.

(3) இந்தத் தற்காலிக ஓய்வூதியத்தையும் பணிக்கொடையையும் (இறுதி ஓய்வூதியம் பணிக்கொடை ஆகியவற்றை வழங்கும் அதிகாரியான) மாவட்டக் கல்வி அதிகாரிகளே வழங்குவர்.

இந்த ஆணையின் காரணமாக, ஆசிரியர்கள் ஓய்வூதிய ஒப்பளிப்பில் காலதாமதமும் இடர்ப்பாடுகளும் தவிர்க்கலாம்.

(4) தொடக்க நிலை ஆசிரியர்கள் செகண்டரி கிரேடு ஆசிரியர்களாகத் தகுதி பெற்றும் செகண்டரி கிரேடு ஆசிரியர் பதவிகள் காலியாக இல்லாத காரணத்தால் தொடக்க நிலையிலேயே பணியாற்றிக்கொண்டிருப்பவர்களுக்கு பதவி உயர்வு அளிக்க, அரசு சென்ற சில ஆண்டுகளாக, தொடக்க நிலை ஆசிரியர்களாகத் தகுதி பெற்றும் செகண்டரி கிரேடு ஆசிரியர் ... தொடக்க நிலை ஆசிரியர் பதவிகளை செகண்டரி கிரேடு பதவிகளாக உயர்த்தி 35,500 பதவிகள் இவ்வாறு உயர்த்தப்பட்டுள்ளன.





1974 மார்ச் 20] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

(முற்பகல் 10-30)

2—10—1973 அன்று செகண்டரி கிரேடு தகுதி பெற்ற சுமார் 3,400 ஆசிரியர்கள் செகண்டரி கிரேடு பதவிகள் பெறாமல் இருந்தார்கள் என்று கணக்கிடப்பட்டது. இவர்கள் எல்லோருக்கும் பதவி உயர்வு அளிக்கவும், சென்ற ஆண்டு அக்டோபரில் செகண்டரி கிரேடு ஆசிரியர் பயிற்சித் தேர்வில் வெற்றி பெற்றிருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கும் பதவி உயர்வு அளிக்கவும் 1—6—1974 முதல் 5,200 தொடக்க நிலை ஆசிரியர் பதவிகளை செகண்டரி கிரேடு ஆசிரியர் பதவிகளாக உயர்த்துவதற்கு அரசு அனுமதித்துள்ளது என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் மூலம், அநேகமாக, செகண்டரி கிரேடு தகுதிபெற்ற தொடக்க நிலை ஆசிரியர்கள் அத்தனைபேருக்கும் பதவி உயர்வு கிடைத்து விடுமென்று நான் எதிர்பார்க்கிறேன்.

அரசு அலுவலகங்களில், தலை முறை வேலைகளுக்கு அமர்த்தப்படும் தினக்கூலி பணியாட்கள், தங்களை நிரந்தரமாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து வந்தார்கள். இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரைக்கேற்ப, அரசுத் தேர்வு ஆணையர் அலுவலகத்தில் முதற்கண் ரூ. 100-3-130-4-150-5-165 என்ற ஊதிய விகிதத்தில் 25 தற்காலிக மஸ்தூர் பணியிடங்களைப் புதிதாக உண்டாக்கி அவ்விடங்களில் 10 ஆண்டுகளுக்கு மேல் பணி புரிந்துள்ள தினக்கூலியாட்களை நிரந்தரமாக்கலாம் என்று அரசு முடிவெடுத்துள்ளது. இந்த முடிவின்படி, நாட்கூலி பெற்றுவந்த பணியாட்கள் 25 நபர்கள் ரூ. 100-3-130-4-150-5-165 என்ற விகிதத்தில் ஊதியம் பெறுவர். இவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட மற்ற படிகளும் கிடைக்கும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இவற்றைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் மீண்டும் வலியுறுத்துவார்கள் என்பதால்தான், அவர்களுடைய விவாதத்திற்குப் பயன்பட இவற்றை முன்னதாகவே தெரிவித்துள்ளேன்.

சாதாரணமாக, 59,275 செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கும் 64,726 ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கும் இந்தத் தேர்வு நிலை அளிப்பதன் மூலம் அரசாங்கத்திற்குப் பல கோடி ரூபாய்கள் செலவாகும் என்பது தெரியும். இருந்தாலும் மாண்புமிகு

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 மார்ச் 20

முதல்வர் அவர்கள், ஆசிரியர்களது வேண்டுகோளுக்கு இணங்கி, இதனை அனுமதித்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இது மற்றவர்களுக்கும் மகிழ்ச்சி தரும் என்று கூறி இந்த விவரங்களோடு முடித்துக்கொள்கிறேன்.

மற்ற விஷயங்கள் இங்கு வைக்கப்பட்டுள்ள 'தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சி' என்ற புத்தகத்தில் * விரிவாகக் கொடுக்கப் பட்டிருக்கிற காரணத்தால், அது மன்ற உறுப்பினர்களுக்கு விரிவாகப் பயன்படும் என்ற நம்பிக்கையோடு முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 21 உறுப்பினர்கள் பேசு வதற்குப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, விவாதத்தைத் தொடங்குபவர் 20 நிமிடங்களுக்குள் முடித்துக்கொள்ள வேண்டும். மற்றவர்கள் 10 நிமிடங்களுக்கு மேல் எடுத்துக் கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சபாநாயகர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்கள், இந்த 17-ம் எண் கோரிக்கையில் ரூ. 110 கோடி வரையிலும் அவர்களுக்கு அனுமதி அளிக்கவேண்டுமென்ற மானியக் கோரிக்கையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். கல்வி யிலே ரூ. 110 கோடிதான் செலவழிக்கப்படுகிறது என்று சொன்னால் அது உண்மையல்ல. காரணம், மெடிக்கல், வெட்ட ரினரி காலேஜ் போன்றவைகளுக்கு ரூ. 6 கோடியும், பின் தங்கிய ஷெடியூல் காஸ்ட்சுக்கு கல்விக்காக ரூ. 14 கோடி என்று இப்படி யெல்லாம் சேர்த்துவைத்துப் பார்த்தால் கிட்டத்தட்ட ரூ. 138 கோடி கல்விக்காகச் செலவழிக்கப்படுகிறது. இதைக் கணக் கிட்டுப் பார்க்கும்போது, மொத்தம் செலவழிக்கக்கூடிய தொகையிலே கிட்டத்தட்ட 30 சதவிகிதத்தை கல்விக்காகச் செலவழிக்கின்றோம்.

ஒரு பக்கத்திலே அதிகமாகச் செலவழிக்கின்றோம் என்று பெருமைப்பட்டாலும் கூட (குறுக்கீடு) இன்றைக்குத் திருப்தி ஏற்பட்டிருக்கிறதா என்றால் திருப்தியற்ற நிலைமை என்றுதான் நான் சொல்லவேண்டியிருக்கிறது. நான் அப்படிச் சொல்கின்ற பொழுது, இதற்கு மேற்கோளாக, கல்வியிலே திறமையாகப்

---

* 235-276-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட் டுள்ளது.



1974 மார்ச் 20] [திரு. கே. டி. கே. தங்கமணி]

படித்து உயர்ந்தவரும், மேல்நாடு சென்று டாக்டர் பட்டம்
பெற்றவரும், இப்பொழுது திட்டக் கமிஷன் உறுப்பினராகவும்
இருக்கக்கூடிய டாக்டர் மால்கம் ஆதிசேஷையா அவர்கள் இருக்
தெரிவித்த ஒரு கருத்தை—நான் ஏற்கனவே தெரிவித்து
கிறேன்—மீண்டும் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

**The educational system in Tamil Nadu is a wasteful educa-**
tional system. The curriculum is outdated and irrelevant. The
PUC was a complete waste. The present examination system is
**cholera of Education Department. Thirty per cent of the total**
expenditure is being spent on education. The State has crossed
**the Rs. 100 crore mark. Even advanced States are not spending**
**more than 20 per cent.** ஆகவே, அந்தக்
என்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். கவனிக்கவேண்டுமென்று
கருத்தை அரசு கொஞ்சம் ஆழமாகக் இருந்து
நான் கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஹைதராபாத்திலே நிலைமையைப்
வந்த ஒரு நிபுணர் குழு தமிழ் நாட்டினுடைய கல்வி நிலைமையாக
பொறுத்தவரையில் மிகவும் பரிதாபத்திற்குரிய அந்தச் சமயத்தில்
இருக்கிறது என்று கருத்து தெரிவித்தது. அவர்
நான் அதை எழுப்பியபொழுது, அதிகாரபூர்வமாக நாம் இந்தப்
களைக் கேட்கவில்லையென்று பதில் சொன்னார்கள். ஆகவே, ஏற்பட்டி
பணத்தைச் செலவழிக்கக்கூடிய முறையையும் இதனால் என்றுதான்
ருக்கக்கூடிய பலனையும் பார்த்தால் திருப்தி இல்லை ஆசிரியர்
சொல்லவேண்டும். மாணவர்களுக்கும் திருப்தி இல்லை, இல்லையென்ற
களுக்கும் திருப்தி இல்லை, மக்களுக்கும் திருப்தி என்பதை
அளவிலே இவ்வளவு பணம் செலவழிக்கப்படுகிறது
நான் முதலிலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

பல விவரங்களுக்கு நான் வரக்கூடிய நேரத்திலே, மாணவர்
களைப் பொறுத்தவரையிலே, சமீபத்திலே 1966-ம் வருஷம் என்று
நினைக்கிறேன், கல்கத்தாவிலே ஒரு செமினார் நடத்தினார்கள்.
அந்த செமினாரிலே 4 விஷயங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள்.
purpose and content of education, manpower planning and employ-
ment and education medium of instruction, university autonomy,
syllabus, teaching methods and examination system.
இது மாணவர் கொடுத்த கருத்தாக இருந்தாலும் புதிய
முறையிலே எப்படி கல்வியைப் புகட்ட வேண்டுமென்பதற்கு
அவர்கள் தெளிவான கருத்துக்களைச் சொன்னார்கள்.

அந்த செமினர் முடிவைச் சொல்வதால் நேரமாகும் என்ற காரணத்தால், அதை சம்பந்தப்பட்டவர்கள் உன்னிப்பாகக் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கல்வியைப் பொறுத்த வரையிலே 3 முக்கியமான விஷயங்களைக் கவனிக்க வேண்டுமென்று அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். There must be democratic outlook. There must be secular outlook and there must be scientific outlook.

இந்த மூன்று அம்சங்களும் நம்முடைய புத்தகங்களில் இருக்கின்றனவா அல்லது நாம் சொல்லக்கூடிய முறைகளில் இருக்கின்றனவா என்பதை அவர்கள் பரிசீலிக்கவேண்டும். பொதுவான விஷயத்தை இந்த அளவோடு நிறுத்திக் கொண்டு சில குறிப்பிட்ட விஷயங்களுக்குள் வரலாம் என்று நினைக்கிறேன்.

தமிழ் நாட்டினுடைய சரித்திரத்தை எழுத டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் தலைமையிலே ஒரு குழு அமைத்திருக்கிறார்கள். இது தென்னாட்டுக்கு, ஹிஸ்டரி ஆப் தமிழ் நாடு என்று சொன்னால், சரித்திரத்தைத் தெரிந்தவர்கள் இருக்கவேண்டும். அதிலே, சரித்திரம் தெரிந்த யாரும் இடம் பெற்றிருப்பதாகத் தெரியவில்லை. நான் ஏற்கனவே இதுபற்றிக் கேள்வி எழுப்பும் போது சொன்னேன், சரித்திரம் நன்கு தெரிந்த நீலகண்ட சாஸ்திரி போன்றவர்களையோ அல்லது எங்கள் கட்சியிலிருந்த நல்ல ஆராய்ச்சி செய்து, இன்றைக்கு சரித்திர ஆசிரியர்களாக இருக்கிற எஸ். வானமாமலை, என். இராமகிருஷ்ணன் போன்றவர்களையோ போட்டிருக்கலாம் என்று.

உண்மையாக, தமிழ் நாட்டைப் பொறுத்தவரையிலும் பேராசிரியர் ஹிரேன் முக்கர்ஜி அவர்கள் சொல்வார்கள் The history of India is history of North India. என்று. தமிழ் நாட்டினுடைய சரித்திரத்தைப் பார்த்தால், நாம் கற்பனையில் எழுதக்கூடிய விஷயங்களும், பல புராணங்களிலும் இதிகாசங்களிலும் வரக்கூடிய விஷயங்களும்தான் வருகின்றனவே தவிர அப்படி அதற்கென்று எழுதப்படுகின்ற நிலை வந்தபொழுது அதற்கான குழுவிலே சரியானவர்கள் சேர்க்கப்படவில்லை என்று நான் முதன்முதலாக சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



அடுத்தாற்போல், நமக்கு 3 பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன, ஏன், 4 பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. கோயம்பத்தூரிலே இருக்ககூடிய விவசாயப் பல்கலைக் கழகத்தையும் சேர்த்தால் 4 பல்கலைக் கழகங்கள் ஆகின்றன. அந்த விவசாயப் பல்கலைக் கழகத்தோடு உடனடியாக ஒரு வெட்டரினரி காலேஜைச் சேர்க்க வேண்டும். It must become an integrated part of Agricultural university என்று அந்தக் காலத்திலே, அக்ரிகல்சுரல் யூனிவர்சிட்டி கொண்டு வரக்கூடிய சமயத்திலே கூடக் கருத்து சொன்னேன். இரண்டு ஆண்டுகளாகியும் கூட ஏன் அதைச் சேர்க்கத் தயங்குகிறார்கள்? மாணவர்களைப் பொறுத்த வரையில் சேர்க்கவேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால், சேர்க்கத் தயங்குவதற்குக் காரணம் என்ன என்று எனக்குப் புரியவில்லை.

அதே மாதிரியாக நேரடியாக நம்முடைய அமைச்சருக்குச் சம்பந்தம் இல்லையென்றாலும் கூறுகிறேன். மெடிக்கல் காலேஜ் சீட்டை 1110-லிருந்து 814 ஆகக் குறைக்கப்போகிறோம் என்று இங்கே சொன்னார்கள். இம்மாதிரியாக சீட்டுகளைக் குறைப்பதாக இருக்கக் கூடாது. அதல்ல வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வழி என்ற அந்தக் கருத்தையும் நான் ஆரம்பத்திலேயே சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன்.

வேறுபல முக்கியமான விவரங்களை இன்றைக்குத் தந்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழாசிரியர்களைப் பொறுத்த வரையில், 1—4—1974-லே இரண்டாந்தர ஆசிரியர்களாக 10 ஆண்டுக்காலம் சர்வீஸ் செய்திருந்தால் அவர்கள் நிரந்தரமாக ஆக்கப்படுவார்கள் அல்லது பஸ்ட் கிரேட் ஆசிரியர்களாக இருப்பார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது செகண்ட் கிரேட் ஆசிரியர்களாக 1200 பேர்தான் இருக்கிறார்கள். அவர்கள் பஸ்ட் கிரேட் ஆசிரியர்களாக ஆக, 1—4—1974-க்குப் பிறகு இன்னும் 10 ஆண்டுக்காலம் காத்திருக்கவேண்டும். சேருகின்ற ஆசிரியர்களை பஸ்ட் கிரேட் ஆசிரியர்களாக நியமிக்கும்போது, இந்த 1,200 செக்கண்ட் கிரேட் ஆசிரியர்களையும் பஸ்ட் கிரேட் ஆசிரியர்களாக ஆக்கவேண்டும். அந்த வகையிலே அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, அதை ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

[1974 மார்ச் 20

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் சொல்லிவிட விரும்புகிறேன். 15 ஆண்டுக்காலம் படித்த பி. டி. ஆசிரியர்களோடு அவர்களுக்கு ஈடாக முதல்நிலைச் தமிழாசிரியர்களை நாம் இப்பொழுது கொண்டு வந்திருக்கிறோம். எஸ். எஸ். எல். சி. வரையில் படித்துவிட்டு அதற்குப்பிறகு புலவர் என்று படித்துவிட்டு 14, 15 ஆண்டுகள் வரையில் படித்திருக்கின்றவர்களையும் அந்த நிலைமைக்குக் கொண்டுவருகின்ற வகையிலேதான் பத்து ஆண்டுக்காலம் இருந் தால் அவர்களையும் முதல்நிலை ஆசிரியர்களாகக் கருதலாம் என்ற முறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆனால் ஐந்தாவது, ஆறாவது வகுப்பு வரையில் படித்துவிட்டு அல்லது ஏழாவது எட்டாவது வகுப்பு வரையில் படித்துவிட்டு பிறகு தமிழாசிரியர்க்குப் படித்துவிட்டு வந்தவர்களை முதல்நிலைத் தமிழாசிரியர்களாக ஆக்கினால் அவர்கள் 9 ஆண்டுகாலத்திலே அந்த நிலைக்கு வந்துவிடுகிறார்களே என்ற பெரும் பிரச்சினையை அவர்கள் எழுப்பினார்கள். அந்த முறையிலேதான் 10 ஆண்டு காலத்தின் அளவிலே என்று வைத்துக்கொள்ளலாம் என்றும், அவர்கள் படித்தது குறைவாக இருந்தாலும் எஸ். எஸ். எல். சி. தேர்வு பெற்று அவர்கள் தங்களைத் தகுதியுடையவர்களாக ஆக்கிக் கொண்டால், பத்து ஆண்டுகள் வரை என்றுகூட இல்லாமல் அவர்களை உடனடியாக அந்த நிலைக்குக் கொண்டு வரலாம் என்ற நிலைமையும் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: என்னுடைய பாயின்ட் எல்லாம் இன்றைக்கு 1,500 பேர்கள்தானே இரண்டாவது நிலையிலே இருக்கி கிறார்கள். இன்றைக்கு தமிழ்தான் மீடியம் ஆப் இன்ஸ்ட்ரக் க்ஷனாக இருக்கவேண்டுமென்ற நிலையில் அந்த 1,500 பேர்களையும் முதல் நிலையாக்குவதினாலே பெரும் செலவு ஒன்றும் வந்துவிடப் போவதில்லை, ஆகவே அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகும் என்னுடைய நிலை அப்படியேதான் இருக்கிறது என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்பொழுதே விளக்கம் சொல்லிவிடலாமென்று நினைக்கிறேன். பின்னாலே சொல்வது என்றால் எல்லாக் கருத்துக்களும் ஞாபகத்திலே இருக்காது, இப்பொழுதே சொல்லிவிடுகிறேன்.



ஆறாம் வகுப்பு முதல் எட்டாவது வகுப்பு வரையிலே படித்து விட்டு வருகிறவர்களுக்கு இரண்டாம் நிலை போதுமானதுதான், முதல்நிலை ஆசிரியர்களாக வரவேண்டுமென்றால் 10 வது வகுப்பு வரையில் அவர்கள் படிக்கவேண்டுமென்றும் அவர்கள் அதற்குப் பிறகு மற்றவைகளைப் படித்து 14 ஆண்டுக்காலம், 15 ஆண்டுக் காலமாகிவிடுகிறது என்றார், அந்த நிலையோடு அவர்களை கொண்டு வந்து வைப்பது சரியாக இருக்காது என்றும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. ஆறாவது வகுப்பிலேயிருந்து பத்தாவது வகுப்புவரையில் முதல்நிலை ஆசிரியர்கள்தான் கற்றுத்தருகிறார்கள். அவர்களோடு 6வது, 8வது வரை படித்துவிட்டு வந்தவர்களை ஈடாக வைத்தால் ஆண்டுக் கணக்கு சரியாக வராது. ஆண்டுக் கணக்கு சரியாக வந்தாலும் வராவிட்டாலும்கூட அவர்கள் தங்களைத் தாங்களே தகுதியுடையவர்களாக ஆக்கிக்கொண்டு வந்துவிட்டால் அவர்களை அதிலே சேர்த்துக்கொள்ளலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: அந்த விளக்கத்திற்குப் பிறகும் என்னுடைய நிலைமையில் மாறுதல் இல்லை என்பதைத்தான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். டைரக்டிவ் பிரின்ஸிபிள்ஸ் ஆப் தி கான்ஸ்டிட்யூஷன் பிரகாரம் 14 வயதுவரையில் கட்டாய மாக படிக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அரசாங்கத் தினுடைய ரிப்போர்ட்டுகளையெல்லாம்கூட துருவித் துருவிப் பார்த்தாலும் 90 சதவீதம் பிள்ளைகளைச் சேர்க்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது, அது கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்து 80 சதவீதம் ஆகி, பிறகு 50 சதவீதம் ஆகி, இன்றைக்கு 50 சதவீதம் பேர்கள் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாக இருக்கிறார்கள் என்ற நிலைமைதான் இருக்கிறது. ஆரம்பக் கல்விக்கு நம்முடைய அரசாங்கம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். There must be a Directorate for elementary Education என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இன்றைக்கு காலேஜியட் எஜுகேஷனுக்கு தனியாகவும், செகண்டரி எஜுகேஷனுக்குத் தனியாகவும் டைரக்டர் பதவி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதனால் நன்மைகள் ஏற்படுகின்றன. நான் மறுக்கவில்லை. அதே மாதிரி எலிமெண்டரி எஜுகேஷனுக்கு தனியாக டைரக்டர் போடலாம், அப்படிச் செய்தால் ஆரம்பக் கல்வியிலே எந்தவிதமான ஃபால் அவுட்டும் இல்லாமல் செய்து விடலாம்.

காலேஜியட் எஜுகேஷன் டைரக்டர் ரிடையர் ஆகிவிட்டார் என்றால் அந்த டிபார்மெண்டிலேயே இருக்கின்ற ஒருவருக்குத் தான் ப்ரமோஷன் கொடுக்கவேண்டும், இதிலிருக்கின்றவரை ஏன் அதில் போடவேண்டும்,

When you want to bifurcate the Directorate of Collegiate Education and Secondary Education, the promotion must be from that cadre. இரண்டையும் வைத்துக்கொண்டு குழப்புவது சரியல்ல. அந்த டிபார்ட்மெண்டிலே இருக்கின்ற சீனியர் ஆளை அல்லது ஜாயின்ட் டைரக்டரையோ போடுங்கள். இப்பொழுது வந்தவரைப்பற்றி நான் சொல்லவில்லை.

He is one of the best persons we have got in the department. ஆகவே அவரைப்பற்றி ஒன்றும் குறை சொல்லவில்லை. இப்படிப் பட்ட முறை சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டைரக்டர் ஆப் எஜுகேஷன் சம்பந்தமாக சொல்லவிரும்பு கிறேன். இப்பொழுது திறமையான ஒருவருக்கு, தமிழ் நாட்டிலேயே இருக்கிற திறமையான ஒருவருக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது, அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்ல வில்லை. முறையற்ற முறையிலே போட்டால் பின்னாலே சிக்கல் ஏற்படும். தனிபட்ட ஒருவர் கூடாது என்றோ அல்லது தனிப் பட்ட யாரோ ஒருவரைச் சேர்க்கவேண்டுமென்றோ நான் சொல்ல வில்லை. ஆரம்பப் பள்ளிகளை அரசே ஏற்று நடத்தவேண்டும். பீகார் மாநிலத்தில் இப்பொழுது குழப்பங்கள் இருக்கலாம், ஆனால் அங்கே ஆரம்பப் பள்ளிகளை எல்லாம் அரசே எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலே மூன்றில் ஒரு பங்கு தனியார் பள்ளிகள் இருக்கின்றன.

நான் உதாரணத்தைச் சொல்லவிரும்புகிறேன். மதுரையிலே சுந்தராம்பாள் பள்ளி என்று இருக்கிறது, அங்கே இருக்கின்ற 31 ஆசிரியர்களும் படுகிற பாடு அவர்கள் கோர்ட்டிற்கு எல்லாம் செல் கிறார்கள். ஆகவே தனியார்களை இதிலே எந்த அளவிற்கு டிஸ் சார்ஜ் பண்ணமுடியுமோ அதைப் பண்ணவேண்டும். ஆரம்பப் பள்ளிகளை அரசே ஏற்று நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளவேண்டும்.



சமீபத்திலே சென்னையிலே கோடம்பாக்கத்திலே ஒரு பள்ளி இருக்கிறது, பாத்திமா மெட்ரிகுலேஷன் ஸ்கூல் என்று இருக்கிறது, நல்ல பள்ளி என்று சொல்கிறார்கள், அங்கே ஆயிரத்திற்கும் அதிகமாகப் படிக்கிறார்கள். அங்கே 5 பேர்கள் கட்டாயப்படுத்தி ஒவ்வொரு ஆண்டும் ரிசைன் பண்ணச் சொல் கிறார்கள். மீண்டும் அவர்களிடம் பணத்தை வாங்கிக்கொண்டோ அல்லது தங்களுக்குவேண்டியவர்களுக்குக் கொடுத்தோ அவர்கள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இது கூடாது, இது பரிசீலிக்கப் பட்டு, தடுக்கப்படவேண்டும்.

லைப்ரரியன்களைப் பொறுத்தவரையில் டாக்டர் ஹாண்டே அவர்கள் 495வது வெட்டுப் பிரேரணையிலே கொடுத்திருக்கிறார்கள். சென்னையிலே 178 காலேஜ்கள் இருக்கின்றன, 178 லைப்ரரியன்கள் இருக்கிறார்கள். அவர்கள் பி.ஏ. படித்துவிட்டு வந்தவர்களாக இருப்பார்கள், குவாலிபைட் லைப்ரரியன்களாக இருப்பார்கள், அவர்களுக்கு எல்லாவிதமான வசதிகளையும் கொடுக்கவேண்டும்.

அஸிஸ்டெண்ட் லைப்ரரியன்களுடைய நிலைமையை மாற்றி யமைக்க வேண்டும்.

லைப்ரரி என்று சொன்னாலே சரியான கண்ணோட்டம் இருப்ப தாகத் தெரியவில்லை. பெரிய ஃப்ரபஸரைவிட லைப்ரரியனுக்குத் தான் முக்கியத்துவம் என்ற முறைதான் மற்ற நாடுகளிலே இருக்கிறது. லைப்ரரியன்தான் ஒரு ஸ்விட்ச் மாதிரி. யாருக்கு எந்த எந்த புத்தகத்தைக் கொடுக்கவேண்டுமென்று அவருக்குத் தான் தெரியும். ஆகவே லைப்ரரியன்களைப் புறக்கணிக்கக்கூடாது. அந்தப் போக்கு இருக்கிறது. அது மாற்றப்படவேண்டும்.

பரீட்சைகளைப் பொறுத்தவரையிலே மால்கம் ஆதிசேஷய்யா சொல்லியிருப்பது whether the examination is for testing the memory or testing the intelligence என்பது. இந்தக் கேள்வி மிக முக்கியமான கேள்வியாக வருகிறது. ஓரளவிற்கு internal assessment system என்ற முறை யிலே நேரடியாக டியூட்டர் மூலம் மாணவர்களைக் கண்காணிப்பது என்ற முறையை நுழைத்துவிடவேண்டும். அது எல்லோருக்கும் தெரிந்ததுதான், அதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

டீச்சர்-ஸ்டுடன்ட்ஸ் ரேஷியோ 1 : 25 ஆகக் கீழ் மட்டத்திலும் காலேஜ் லெவலிலே 1 : 35 என்றும் இருக்கவேண்டும். இன்றைக்கும் காலேஜிலே 1 : 100 என்றுதான் இருக்கிறது.

தனியார் கல்லூரிகளிலே அதிகமான பீஸ்—சர்க்கார் கல்லூரியிலே வாங்குவதைவிட—வாங்குகிறார்கள், அதையும் கவனிக்க வேண்டும்.

எஸ்.எஸ்.எல்.சி. வரையில், பி.யு.சி. வரையில் இலவசக் கல்வி கொடுக்கப்படுகிறது. இருந்தாலும் 15 ரூபாய் வாங்குகிறார்கள். 20—11—1973 ஆம் நாளன்று மாணவர்கள் அது இல்லாமல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள், நடப்பு ஆண்டிலே யாவது அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாடப் புத்தகங்களைப்பற்றிச் சொல்லவிரும்புகிறேன். நாம் சோஷலிஸத்தைப் பற்றிப் பேசுகிறோம். கணக்கிலே காம்பவுண்ட் இண்டரஸ்ட் எவ்வளவு வரும், சிம்பிள் இண்டரஸ்ட் எவ்வளவு வரும் என்பன போன்ற கணக்குகள் எல்லாம் கொடுக்கப் படுகின்றன. அல்லது லாபம் சம்பாதிக்க என்ன வரைமுறைகள் என்று இருக்கிறது. அந்த நிலைமைகளை மாற்ற வேண்டும்.

ஒருமுறை என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் சோவியத் யூனியனுக்குப் போய்விட்டு வந்தபொழுது பேசினார்கள். இங்கே யுள்ள ஒரு பையனை அழைத்து ஒரு கோழியை ஐந்து ரூபாய்க்கு வாங்கி 10 ரூபாய்க்கு விற்ருல் என்ன வரும் என்று கேட்டால் 5 ரூபாய் லாபம் வரும் என்று சொல்வான். ஆனால் அதையே சோவியத் யூனியனில் உள்ள ஒரு பையனிடம் கேட்டால் ஐந்து வருஷம் ஜெயில் என்று சொல்வான். அதைப்போல், இங்கே உள்ள பையனிடம் 1,000 ரூபாய் கொடுத்து திரும்ப 1,100 ரூபாய் கிடைத்தால் என்ன அர்த்தம் என்று கேட்டால் 100 ரூபாய் வட்டி என்று சொல்வான். ஆனால் அங்கே 10 வருஷம் ஜெயில் கிடைக்கும் என்று சொல்வான். Money is a dead capital; It has no value எனவே அந்தப் பணத்திற்கு இருக்கும் மதிப்பைவிட எப்படி 100 ரூபாய் அதிகம் கிடைக்கும் என்பன போன்ற கருத்துக்களைக் கொண்டு வர வேண்டும். தமிழ்நாட்டிலே நான் அடிக்கடி சொல்வதுண்டு இதைப்பற்றி.

அதற்கு அடுத்தாற்போல் திரு. என். வி. நடராசன் அவர்கள் சொல்வார்கள். மிகப் பெரிய தலைவர், அரசியல் தலைவர், தொழிற் சங்கத் தலைவர், மக்களுக்கெல்லாம் வழிகாட்டியவர், எங்கள் கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தலைவராக இருந்த டாக்டர் சிங்கார வேலுவைப் பற்றி எந்தப் புத்தகத்திலும் இல்லை. சிங்காரவேலு





ன்ற ஒரு மனிதன் இருந்ததாகவே தெரியவில்லை. எனவே, சென்ற காலத்தைச் சேர்ந்தவர்கள், பகத் சிங், சிங்காரவேலு போன்றவர்கள் இடம் பெறும் வகையில் பாடபுத்தகங்களில் ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து எஸ்.ஸி. அண்ட் பி.ஸி. ஹாஸ்டலுக்கு 21 ரூபாய் ன்று 1952 ஆம் ஆண்டிலே பிக்ஸ் செய்தார்கள். As it was n the beginning so it is now and for ever. அந்த மாதிரி அன்றும் 1, நேற்றும் 21, என்றும் 21 என்று இல்லாமல் விலைவாசிக்குத் கருந்த மாதிரி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மதுரைப் பல்கலைக் கழகத்தில் I have a soft corner for that university. ஓரளவு முற்போக்குக் கருத்துக்கள் அங்கே வருகிறது. They have a Diploma Course in Marxism. மார்க்சீய எகனுமிக்ஸ் இன்றைக்கு உலகம் பூராவும் கவ்வும் பொழுது சென்னைப் பல்கலைக் கழகத்தின் பக்கத்தில் அது எட்டிக் கூட பார்க்க மாட்டேன் என்கிறது. Marxian Economy and Courses in Marxism போன்றவைகளைக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து, ஹாஸ்டல் இல்லை என்பது பொதுவான குறை. They are far apart ஹாஸ்டலைப் பொறுத்தவரையில், என்பதற்கு ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். B.C. and S.C. Hostel is in Kellys, but the girls go to the High School in Egmore. அவர்கள் அங்கிருந்து நடந்துதான் வர வேண்டும். டிரான்ஸ்போர்ட்டுக்காவது ஏற்பாடு செய்யுங்கள். கல்விக்கு என்று உதவும்பொழுது இந்தக் காரியங்களையெல்லாம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, யூனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிஷன் நமக்குப் பணம் கொடுக்கிறது. அந்தப் பணத்தைக் கொடுத்தாலும், it is not fully utilised. அதை அப்படியே வேண்டுமானல் நான் வாசிக்கிறேன்.

Many of the grants by the University Grants Commission and huge sums have not been availed of by the Madras University and have lapsed according to figures available. During 1971–72, for instance, although the U.G.C. allotted Rs. 92,84,529

for various schemes, the University actually drew Rs. 44,81,678
of which only Rs. 38,56,647 was utilised. The grants were made
for construction of buildings, equipment and books for Post-
Graduates centres at Tiruchirappalli, Coimbatore and for various
other departments.

For 1972–73 and 1973–74, the grants are Rs. 88,18,800 and
Rs. 87,50,350 respectively. It is not yet known how much has
been utilised. A large number of posts in the various research
departments are since quite a long time vacant. This is stated
to be the main reason for non-utilisation of the U.G.C. grants.

Another thing is this. The report was published in July 1973.
Nearly one-third of the 60 posts of Professors in Madras Univer-
sity are vacant. If posts of Readers and Lecturers are included
it will come to 50 per cent. It is said that they are unable to
get suitable candidates. இந்த மாதிரிக் குறைகள் இருக்கின்றன.

அதுமட்டுமல்லாமல் இன்றைக்குக்கூட சில விஷயங்களைப்
பார்த்தால் சில டெம்பரரி இன்ஸ்டிட்யூட்களுக்கு பர்மிஷன்
கொடுக்கிறார்கள். அன்றை இண்டஸ்ட்ரியல் இன்ஸ்டிட்யூட்
மைலாப்பூர் என்று இருந்தது. ஆனால், திடீரென்று அதை மூடி
விட்டார்கள். அந்தப் பையன்கள் எங்கே போவார்கள்? எனவே,
பிரைவேட் இன்ஸ்டிட்யூட்களுக்குக் கொடுக்கக் கூடாது.

அடையாறில் ஃபிலிம் இன்ஸ்டிட்யூட்டில் நுழைந்து பார்த்தால்
கோளாறாக இருக்கிறது. அதை முதலமைச்சரவர்கள் நேரடியாகப்
பார்க்கிறார்கள் என்றாலும்கூட, அதில் மாணவர்கள் கல்வி பயிலு
கிறார்கள். தமிழகத்திற்கு வந்து நல்ல கல்வியைப் பயிலலாம் என்று
வந்தால் பற்களை இருந்த கல்வியைக் கூடப் பாதிக்கும் நிலைமை
இருக்கிறது. அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதேமாதிரி, சென்ற ஆண்டு மாணவர்கள் ஒரு பெரிய இயக்கம்
நடத்தினார்கள். மாணவர் இயக்கம் என்றாலே எனக்குப் பயமாக
இருக்கிறது. பேசுவதால் இங்கேயே இயக்கம் வந்து விடுமோ
என்று. ஆனால், உண்மையில் நியாயமான முறையில் இயக்கத்தை
நடத்தி, குறைகளை அமைக்கு அரசாங்கத்திடம் மனுச் செய்திருந்



ார்கள். கடைசியிலே அரசியல் தலைவர்கள் வேண்டிக் கொண்ட
ால் அவர்கள் இயக்கத்தை வாபஸ் வாங்கினார்கள்.
Government also must act with grace. அதற்குப் பதிலாக
இப்பொழுது இந்தக் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள்
பரீட்சைக்குப் போகும் நேரத்தில் அவர்களுக்கு வாய்தா. நான்
விவரங்கள் எல்லாம் வைத்திருக்கிறேன். சுருக்கமாகச் சொன்னால்,
Most of the case are pending in the Fifth Presidency
Magistrate's Court, Egmore.
பச்சையப்பா காலேஜ், லா காலேஜ் மாணவர்கள் பரீட்சைக்குப்
போகும் மாணவர்கள்பேரில் கேஸ் போடப்பட்ட நிலைமைகள்
இருக்கின்றன. அந்த கேஸ்கள் கண்டிப்பாக வாபஸ் பெறப்பட
வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயத்தைக் கூற விரும்புகிறேன். ஒரு பானை
சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப்போல் ஒரே ஒரு
உதாரணத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.
There has been misappropriation of amount in the Government
Arts College for Women in Namakkal. இது வெளியில் வந்திருக்கும்
செய்தி. இதைப்பற்றிக் கொஞ்சம் பரிசீலித்து இந்த முறைகளிலே
மற்றக் கல்லூரிகளில் கோளாறு இருக்கிறதா என்பதைப் பார்ப்பது
அவசியமாக இருக்கும். I can give some instances, but I do
not want to elaborate. ஒரு உதாரணம் கொடுத்தேன், அதை
வைத்துக்கொண்டு மற்ற விஷயங்களைக் கவனிக்க வேண்டும்.

அடுத்து, லா காலேஜைப் பொறுத்தவரையில் மாணவர்கள்
இப்போது அதிகமாகச் சேர்கிறார்கள். 1968-69 இல் 1,045 பேராக
இருந்தது, இன்றைக்கு 2,527 பேர்களாக ஆகியிருக்கிறார்கள்.
ஆகவே, பல ஆண்டுகளாக இரண்டாவது லா காலேஜ் இருக்க
வேண்டும், அது மதுரையில் இருந்தால் உதவியாக இருக்கும்
என்று கொடுத்திருக்கிறார்கள். மூன்றாண்டுக் காலமாக நாங்கள்
கேட்டுக்கொண்டு வருகிறோம். இதில் இருக்கும் இடைஞ்சல்
என்ன? அதை ஆரம்பிப்பதற்கு என் தயக்கம் காட்டப்படுகிறது
என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

அடுத்து, ஆசிரியர்களாக இருந்து, நான்-டீச்சிங் ஸ்டாஃபாக
இருந்து ஓய்வு பெற்றால் அவர்களது ஓய்வூதியத்தில் சரியாகக்
கவனம் செலுத்தப்பட வேண்டும். இன்றைக்கு அவர்களுக்குச்

சரியான வசதி செய்து தரப்படவில்லை. இதே சட்டமன்றத்தில் கூட முன்பு சொன்னேன். சோவியத் யூனியனிலே ஓய்வு பெற்ற வர்கள் நன்கு கவனிக்கப்படுகிறார்கள். ஹாஸ்டல்களிலே அவர் களது ஓய்வூதியத் தொகையை வைத்துக்கொண்டு நன்கு கவனிக் கிறார்கள். வாரம் ஒரு முறை குழந்தைகளை அழைத்து விளையாடச் செய்கிறார்கள். அதனால் அவர்கள் மனநிறைவு அடைகிறார்கள். ஜி.டி.ஆர். போன்ற நாடுகளில் அந்த டிபார்ட்மெண்டில் அவர்கள் பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்கள். டிபார்ட்மெண்டே சில உதவிகளைச் செய்யலாம் என்று அங்கே கொடுக்கிறார்கள். ஆனால், இங்கே ஓய்வு பெற்றால் அவ்வளவுதான், அந்த இலாக்காவிலேயே அவர் இல்லை என்பதுபோன்ற நிலைமை ஏற்படுகிறது. அதுமட்டு மல்லாமல், அவர்களுக்கு ஓய்வூதியத்தையும் முறையாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் ரிப்போர்ட் 1964-65-க்குப் பிறகு வெளிவரவே இல்லை. ஏன் வெளிவரவில்லை? அந்த விவரங்கள் தெரிந்தால் நன்றாக இருக்கும்.

கல்லூரிகளைப் பொறுத்தவரையில், தர்மபுரியில் பெண்களுக்குப் போதுமான கல்லூரி இல்லை என்று சொல்கிறார்கள். ஒன்று இன்றைக்கு இருக்கும் கல்லூரிகளில், எல்லாக் கல்லூரிகளிலும் பெண்களும் சேர்ந்து படிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் இல்லையென்றால், தனியாகக் கல்லூரிகளை ஏற்பாடு செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

140 கோடி ரூபாய் வரையில் செலவு செய்யப்படும் இந்த இலாக்காவில் சரியான 'ஓரியன்டேஷன்' இல்லாமல் இருக்கிறது என்னைப் பொறுத்தவரையில்,

'I do not want my house to be walled in all sides and my windows to be stuffed. I want the cultures of all lands to be blown about my house as freely as possible. But I refuse to be blown off my feet by any'. This is what Gandhiji said.

'We must be the inheritors of what is best in the past என்று லெனின் சொன்னார்.

ஆகவே, சென்ற கால விஷயங்களில் அருமையான விஷயங்களை எடுத்துக்கொள்வோம். அதுவல்லாமல் எல்லாமே அதிலிருந்து தான் வரவேண்டுமென்ற நிலைமையில் பழமையைப் புகழு



நம்மை நிலைமையில் இல்லாமல், இன்றைக்கு உள்ள நிலைமைகளில் வளர்த்துக் கொள்கின்ற முறையில் சிலபஸ் இருக்க வேண்டு மென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக, நான் ஆரம்பத்தில் சொன்னதுமாதிரி பொதுவாக இது இருக்கிறது. திருப்தி அளிக்காத ஒரு இலாக்காவாக திருப்தி மாணவர்களுக்குத் திருப்தி இல்லை, ஆசிரியர்களுக்குத் திருப்தி இல்லை, பெற்றோர்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை, மக்களுக்கும் திருப்தி இல்லை என்ற அளவில் சத்தியமான கரெக்ட் ஓரியன் டேஷனும் இல்லாமல் இந்தக் கல்வி இலாக்கா போய்க் கொண்டிருக் கிறது என்பதை வற்புறுத்தி அமர்கிறேன்.

(முற்பகல் 11-00)

* திரு. க. நாகராஜன்: தலைவர் அவர்களே, கல்வி பற்றிய மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

தமிழக அரசு மிகச் சிறந்த கல்விக் கொள்கையை, திட்டத்தை நிர்வகித்து வருகிறது. இந்தியாவில் வேறு எங்கும் அப்படிப் பார்க்க முடியவில்லை. இந்திய அரசியல் சட்ட கோட்பாடு என்ன சொல்கிறது? 14 வயதுடைய சிறுவர்கள் எல்லோருக்கும் கல்வி கொடுக்க வேண்டுமென்றிருக்கிறது. இதிலே தமிழக அரசு முன்னணியில் இருக்கிறது என்று பெருமைப்பட வேண்டிய நிலையில் இருக்கிறோம். ஓர் அரசு தன்னுடைய வருவாயில் பெரும் பகுதியைக் கல்விக்காகச் செலவழிக்கிறது என்றால் அது தமிழக அரசு தவிர வேறு எதுவும் இல்லையென்று கூறமுடியும்.

நான் ஆசிரியராக இருந்தவன். ஒரு காலத்தில் வெளிநாடு களுக்குச் சென்று ஆசிரியப் பணி செய்ய வாய்ப்பு இருந்தால் பரவாயில்லை என்று நினைத்துக் கொண்டிருந்தேன். இன்றைக்கு இங்கு ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகளையும் மற்ற வசதிகளையும் பார்க்கும்போது வெளிநாடுகளில் இருக்கும் ஆசிரியர்கள் இங்கு வந்து பணி புரிந்தால் பரவாயில்லை என்று நினைக்கும் அளவுக்கு நிலைமைகளை ஏற்படுத்தியிருக்கிறோம்.

இன்றைக்குக் கூட அருமையான திட்டங்களை மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இங்கே கூறியிருக்கிறார்கள். ஹையர் கிரேடு என்பதற்குப் கிரேடு ஆசிரியர்களில் 5,900 பேர் செலக்ஷன்

பதிலாக 59,000 பேர் பெற்றிருக்கிறார்கள். ... கிரேடு 7,800க்கு பதிலாக 64,000 பேர் செலக்ஷன் கிரேடு பெற்றிருக்கிறார்கள். தொடக்க நிலை ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது. இடைநிலை ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள், சிறப்பு ஆசிரியர்கள் இவர்களுக்கெல்லாம் தாற்காலிக நியமனம் இருந்தால் ஒரு வருடத்திற்குப் பிறகு பர்மனென்டாக வரைமுறைப்படுத்தப்பட்டு அறிவிப்புச் செய்யப்படுகிறது. இதையெல்லாம் பார்க்கும்போது நாம் பொன்னான நாட்டில் இருக்கிறோம் என்று தோன்றுகிறது.

இன்னொர் ஒரு அருமையான திட்டத்தையும் சொல்லியிருக்கிறார்கள். நான் சட்டசபைக் கூட்டத்திற்கு வருகிறபோது எனக்குச் சொல்லிக் கொடுத்த ஆசிரியர்கள் தங்களுடைய பென்ஷன், பிராவிடண்ட் விஷயமாகப் பார்த்து விட்டு வரும்படி சொன்னார்கள். இங்கு அதற்கு வேலையே இல்லை. முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலும் நாவலர் அவர்கள் அறிக்கையிலும் கூறியிருக்கிறார்கள். கொடைத் திட்டம் பற்றி அறிவித்திருக்கிறார்கள். தாற்காலிக ஓய்வூதியம், பணிக் ... எல்லாம். ஓய்வு ஊதியம் பெற எவ்வளவு துன்பப்பட்டுக் கொண்டிருந்தார்கள் என்பதை நாம் அறிவோம். இப்போது அதற்கெல்லாம் வழிவகை செய்து அருமையான வழிவகைகளைச் செய்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கே. அவர்கள் சொன்னது போல் தனியார் பள்ளிகளில் சில குறைபாடுகள் இருப்பது உண்மை. தனியார் பள்ளிச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்து பிறகு மானேஜ்மென்டுக்கு இருந்து வந்த அதிகாரத்தை நாம் எடுத்து விட்டோம் என்றுதான் சொல்ல வேண்டும். தனியார் பள்ளிச் சீர்திருத்தச் சட்டம் வந்த பிறகு சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பல சிறப்புகள் உள்ள இந்தக் கல்வி நிர்வாகத்திலே மேலும் சில சிறப்புகளைச் செய்ய சில ஆலோசனைகளை வைக்க முன்வருகிறேன்.

நமது கல்வி முறை—

**It is mainly quantitative but not so much qualitative.**

வாழ்க்கையோடு இயைந்த கல்வி முறை ...



கோத்தாரி கமிஷனில் அருமையான திட்டங்களைச் சொல்லியிருக்கிறார்கள். வாழ்க்கையோடு இயைந்த கல்வி முறையை செயற்படுத்த முடியும். தொழிற் கல்வி தவிர மற்ற எந்தக் கல்வி முறையிலும் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் நெருங்கிய உறவு முறை இருப்பதாகச் சொல்ல முடியாது. தொழிற் கல்வியில் செமிஸ்டர் திட்டங்கள், விவா வோசி திட்டங்கள் இருக்கின்றன. அங்கு ஆசிரியர்கள் உண்மையான ஆசிரியர்களாகத் திகழ்கிறார்கள்; மாணவர்களும் ஆசிரியர்களிடம் மதிப்பும், பயபக்தியும், கொண்டு அடங்கிப் போகும் நிலைமையைக் காண்கிறோம். ஆனால் வேறு கல்வி முறைகளில் இது இருப்பதில்லை. யாரோ ஆசிரியர் சொல்லித் தருகிறார். மாணவர்கள் தேர்வு எழுதுகிறார்கள். சொல்லித் தரும் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் உறவு இருப்பதில்லை. செமிஸ்டர் சிஸ்டம் வைத்தால், வாய்மொழித் தேர்வுகள் வைத்தால் சொல்லித் தரும் ஆசிரியர்கள் தேர்வுத் தாள்களைத் திருத்தும் அளவுக்கு இருந்தால் மாணவர்களுக்கு அந்த ஆசிரியர்கள் மீது மதிப்பு ஏற்பட வழி இருக்குமென்று கருதுகிறேன்.

இன்று கல்வி கற்க மிக அருமையான வசதிகள் எல்லாம் இருக்கின்றன. நாங்கள் படிக்கின்ற காலத்தில் ஆய்வுக் கூடங்கள் உயர்நிலைப் பள்ளிகளில் கூட இல்லை. இன்றைக்கு இடைநிலைப் பள்ளி அளவில்கூட விஞ்ஞானக் கருவிகள், வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த அளவுக்கு வசதிகள் பல்கலைக் கழகத்தில்கூட இல்லை என்று சொல்லலாம்.

நான் பிஎச்டி. பட்டம் பெறும்போது பிலானி, டில்லி பல்கலைக் கழகங்களுக்குச் சென்றிருக்கிறேன். அங்கெல்லாம் அருமையான ஆய்வுக் கூடங்கள் இருந்தன.

நம்முடைய மாநிலத்தில் விவசாயப் பல்கலைக் கழகத்தில்கூட நல்ல ஆய்வுக் கூடம் இருக்கிறது. ஆனால் சென்னைப் பல்கலைக் கழகத்தில் உள்ள ஆய்வுக் கூடத்தில் அவ்வளவு வசதிகள் இல்லை என்ற குறைபாட்டை அரசு சற்றுக் கவனிக்க வேண்டும்.

ஆசிரியர்களுக்கு எவ்வளவோ சலுகைகளை அளித்திருக்கிறது இந்த அரசு. இனிமேல் எந்த அரசு வந்தாலும் இவ்வளவு சலுகைகளை அளிக்க முடியாது என்ற அளவுக்கு அளித்திருக்கிறார்கள். ஆனால் அவர் அவர்களும் மற்ற அரசு அலுவலர்களைப் போல்தான்.

[திரு. க. நாகராஜன்] [1974 மார்ச் 20

களுக்கு மட்டும் காலாண்டு விடுமுறை, அரையாண்டு விடுமுறை, முழு ஆண்டு விடுமுறை என்று இருக்கிறது. அரசு அலுவலர் களுக்கு அந்த வாய்ப்பு இல்லை. ஏன் ஆசிரியர்களுக்கு மட்டும் இதை அளிக்க வேண்டும்? அதற்காக நான் அவர்களைக் கொடுமைப்படுத்த வேண்டுமென்று கூறவில்லை.

இருபது, இருபத்தைந்து ஆண்டு காலமாகப் பணியில் இருக்கக் கூடிய ஆசிரியர்கள் திரும்பத் திரும்ப ரெக்கார்டு போன்று ஒரே முறையில்தான் சொல்லிக் கொடுக்கிறார்கள். புதிய முறைகள், புதிய மாறுதல்களுக்கேற்ப அவர்கள் சொல்லிக் கொடுக்க அவர் களுக்கு விடுமுறைகளில் ரி-ஓரியன்டேஷன் கோர்ஸ் நடத்தலாம். அவர்கள் அப்-டு-டேட் ஆகச் சொல்லிக் கொடுக்க வசதி செய்து கொடுக்க வேண்டும்.

கல்லூரிகளுக்கு ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு சர்வீஸ் கமிஷன் மூலம் எம்.ஏ., எம்.எஸ்.சி. பட்டம் பெற்ற வர்கள் நேர்முகத் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டு மென்ற முறை இருக்கிறது. அசிஸ்டெண்ட் ப்ரொபசர், ப்ரொபசர் போன்ற வேலைகளுக்குப் பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கும்போது நேர்முகத் தேர்வோடு, எழுத்து மூலத் தேர்வும் வைத்துத் தேர்ந்தெடுத்தால் நல்ல தகுதி வாய்ந்தவர்களைத் தேர்ந்தெடுக்க முடியும்.

கல்லூரி ஆசிரியர்கள் நியமிக்கப்படும்போது சற்று பயிற்சி பெற்றவர்களாக இருந்தால் நலம். உயர்நிலைப் பள்ளியிலிருந்து ரிடையரான ஆசிரியர்கள் கல்லூரிக்கு வந்து மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள். அவர்களுக்குப் பயிற்சி இல்லை. கல்லூரிக் கல்வித் தரம் சற்று மோசமாக இருக்கிறது.

உறவுக்குக் கை கொடுப்போம்
உரிமைக்குக் குரல் கொடுப்போம்

என்ற வகையில் தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் அமைக்க மத்திய அரசு அனுமதி கொடுக்கவில்லை என்றாலும் அண்டை மாநிலத்தில் செய்தது போல் நாம் ஆரம்பித்து விட்டால் என்ன என்று கேட்கத் தோன்றுகிறது. அதற்கான முயற்சிகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.



1974 மார்ச் 20]

* திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் வைத்திருக்கிற கல்வி மானியக் கோரிக்கை மீது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைக் கூறிக்கொள்ள முன்வருகிறேன்.

காங்கிரஸ் கட்சி இந்த நாட்டை ஆண்டு கொண்டிருந்தபோது உயர்நிலைப் பள்ளி இறுதி வகுப்பு வரையில் இலவசக் கல்வி என்று செய்தது. இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழக அரசு கல்லூரி புகுமுக வகுப்பு வரையில் இலவசக் கல்வியைக் கொடுத் திருக்கிறார்கள். இப்படி புகுமுக வகுப்பு வரையில் இலவசக் கல்வி அளிக்கப்பட்டிருப்பதால் அநேகமாக அதனால் எல்லோரும் பயன் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். பெரிய பெரிய ஆலைச் சொந்தக் காரர்கள், பெரிய பெரிய பணக்காரர்கள், மிட்டாதாரர்கள், மிராசு தாரர்கள் இவர்கள் குழந்தைகள்கூட இன்றையதினம் புகுமுக வகுப்பு வரையில் இலவசமாகப் படிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது.

நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் உயிரோடு இருந்த காலத்தில், தம்முடைய அரசியல் கொள்கையை வகுத்துக் கொள்கிற நேரத்தில், இந்த மன்றத்தில் கூட ஒருமுறை பேசியிருக் கிறார்கள், டாப் திரிச் அண்ட் பாட் தி புவர் என்று. ஆகவே இது அண்ணாவின் கொள்கைக்கு முற்றிலும் முரண்பட்ட ஒரு கொள்கை யாக இருக்கிறது. ஆகவே, இந்த முறையை மாற்றி வருமானத் திற்கு ஒரு வரம்பு வைத்து மாதம் இரண்டாயிரம் அல்லது ஆயிரம் ரூபாய்க்கு மேல் வருமானம் பெறக்கூடிய உத்தியோகஸ்தர்கள், பெரிய பெரிய நிலச் சொந்தக்காரர்கள், மிட்டாதார்கள், மிராசு தார்கள், ஆயிரக்கணக்கில் வருமானம் பெறக்கூடிய பெரிய பணக் காரர்களின் குழந்தைகளுக்கு கொடுக்கக்கூடிய இந்த இலவசக் கல்வியை நிறுத்திவிட்டு அந்த இலவசக் கல்வியை நாட்டிலுள்ள போதிய வருமானம் இல்லாதவர்கள் போதிய வருமானம் இல்லாத காரணத்தால் திறமையுள்ள மாணவர்கள் இன்றையதினம் படிக்க வசதி வாய்ப்பில்லாமல் இருக்கிறார்களே அவர்களுக்கு மட்டும் அளிக்க வேண்டும்.

இன்று புகுமுக வகுப்பு வரை இலவசக் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. ஆனால் அதற்கு மேல் பட்டப் படிப்பு படிக்க வேண்டு மென்றால் அல்லது ஏதாவது ஒரு தொழில் கல்வி எம்.பி.பி.எஸ்.,

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1974 மார்ச் 2

அல்லது சட்டக் கல்லூரி, அல்லது என்ஜினியரிங் கல்லூரியில்
படிக்க முடியாமல் இருக்கிற ஏழை நடுத்தர வகுப்புகளைச் சார்ந்த
மாணவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு
அங்கும் இலவசக் கல்வி கொடுப்பதற்கு இந்த அரசு வழிவகை
காணவேண்டும்.

அதை எப்படிச் செய்யலாம் என்றால் எல்லோருக்கும் இலவசக்
கல்வி என்ற முறையை மாற்றியமைத்து ஒரு வருமான வரம்பை
இந்த அரசு நிர்ணயம் செய்து இதற்கு மேல் வருமானம் உள்ள
வர்களின் குழந்தைகள் கல்லூரிப் படிப்பாக இருந்தாலும் சரி
அல்லது உயர்நிலை பள்ளிப் படிப்பாக இருந்தாலும் சரி அல்லது
ஆரம்பப் பள்ளிப் படிப்பாக இருந்தாலும் சரி அவர்கள் கட்டாயம்
பள்ளிக்கூடத்திற்குப் பணம் கட்டித்தான் படிக்க வேண்டும் என்
நிலைமையை உருவாக்கினால் வசதி படைத்தவர்களிடமிருந்த
நன்கு கரக்கிற வகையில் பள்ளிக்கூடக் கட்டணங்களை அவர்கள்
கட்டும்படி வற்புறுத்திச் செய்யக்கூடிய விதத்தில் இந்த அரசு இ
மேலாவது திட்டங்களை வகுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்
நேரத்தில் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டவனு
இருக்கிறேன்.

அடுத்து, பள்ளிக்கூட நிர்வாகத்தைப் பொறுத்தவரையில்
ஆசிரியர்களை நியமிப்பதில் இன்னும் ஊழல்கள் நடந்து கொண்
ருக்கின்றன. ஊராட்சி ஒன்றியப் பள்ளிக்கூடங்களைப் பொறுத்
வரையில் சரி அல்லது தனியார் பள்ளிகளில் ஒருசில பள்ளிகளிலு
சரி ஆசிரியர்களை நியமிப்பதில் இன்றையதினம் ஏராளமாக
தவறுகள் நடந்து கொண்டிருக்கின்றன. கல்வி அமைச்சர் அவர்க
கூடச் சொல்லியிருக்கிறார்கள் முன்னால் சீனியாரிட்டி அடி
படையில் வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும். மாவட்ட ரீதியா
ஆசிரியர்களின் சீனியாரிட்டி லிஸ்ட் ஒன்று தயாரித்து வரிசை
கிரமமாக ஆசிரியர்களை நியமிப்பது என்று செய்து ஆங்காங்
மாவட்டங்களில் இருக்கிற ஒன்றியங்களில் அந்தப் பட்டிய
கண்டிப்பாக அமல்படுத்த வேண்டும் என்ற ஒரு நியதியை
ஏற்படுத்தினால் நேர்முகத் தேர்வுக்குத் தேவையில்லை. சிபார்சுக்கு
தேவையில்லை. அந்தப் பட்டியலில் உள்ளபடி வரிசைக் கிரமமா
அந்தந்த மாவட்டங்களில் எங்கெங்கு ஆசிரியர் வேலை கா
இருக்கிறதோ அந்த இடத்திற்கு அப் பட்டியல்படி ஆசிரியர்களை
நியமிக்க வேண்டும்.



1974 மார்ச் 20] [திரு. க. உரொ. எட்மண்ட்]

ப்ரைவேட் மானேஜ்மெண்ட் ஸ்கூல்களில் ஆசிரியர்களை நியமிப்பதில் ஏராளமான தவறுகள் கல்வித் துறையில் நடந்து கொண்டிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்லப் போனால், என் தொகுதி திருச்செந்தூர் தொகுதி. திருச்செந்தூர் தொகுதியில் நாலுமாவடி என்ற இடத்தில் காமராஜ் உயர்நிலைப் பள்ளி என்ற ஒரு பள்ளி இருக்கிறது. பல ஆண்டுகளாக அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியராக இருந்த ஒருவரைக் காரணம் எதுவும் இல்லாமல் நீக்கிவிட்டு அந்த இடத்தில் வேறு ஒரு தலைமை ஆசிரியரை நியமித்திருக்கிறார்கள். அந்தத் தலைமை ஆசிரியரை நீக்குவதற்கு எந்தவிதமான காரணங்களையும் அவர்கள் கூற வில்லை. நீக்குவதற்கு எந்தவிதமான போதுமான காரணங்களும் இல்லை. அந்தப் பள்ளி நிர்வாகிகள் தங்களுக்கு வேண்டிய ஒருவர் அந்தப் பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியராக இருக்க வேண்டும் என்பதற்காக இன்றையதினம் அப்படிச் செய்திருக்கிறார்கள்.

தனியார் பள்ளிகளில் நிர்வாகிகள் அவர்கள் நினைக்கிற அளவிற்கு யாரையும் நீக்கலாம், அதற்குப் பதிலாக யாரையும் நியமிக்கலாம் என்ற நிலை இருக்கிற காரணத்தினால்தான் பெருந்த சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆகவே தனியார் பள்ளிக்கூடங்களைப் பொறுத்த வரையில் பள்ளி ஆசிரியர்களை நியமனம் செய்வதில் அவர்களுக்கு எந்த அதிகாரத்தையும் கொடுக்காமல் கல்வித் துறையில் இருக்கிற ஒருசில அதிகாரிகளை வைத்துக் கொண்டு நேர்முகத் தேர்வு நடத்தி, அதன் மூலம் ஆசிரியர்களை நியமிக்கலாம் அல்லது பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து அந்தந்தப் பள்ளிக்கூடங்களுக்கு நியமிக்கலாம். எனவே அந்த முறையில் இந்த அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதில் இன்னும் சங்கடங்கள் இருந்து கொண்டுதான் இருக்கின்றன. நம் அரசில் என்ன சொல்கிறார்கள் என்றால் மாதம் 1-ம் தேதியே சம்பளம் கொடுப்பதற்கு நாங்கள் எல்லா ஏற்பாடுகளையும் செய்திருக்கிறோம் என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால் உண்மையில் அது நடக்கிறதா என்றால் இல்லை. ஏராளமான பள்ளிக்கூடங்களில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு இன்னும் மாதம் முதல் தேதி சம்பளம் போய்ச் சேருவதில்லை.

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1974 மார்ச் 20

என் தொகுதியில் திருச்செந்தூர் ஒன்றியத்தில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்குச் சம்பளம் எப்படிக் கொடுக்கிறார்கள் என்றால் மாதம் 10-ம் தேதிதான் சம்பளம் போய்ச் சேருகிறது. ஆகவே இந்த நிலையைத் தவிர்க்க வேண்டுமென்றால் அரசு நேரடியாகவே ஆசிரியர்களுக்கு ஊதியத்தைக் கொடுக்க வேண்டும். கல்வி இலாகாவில் உள்ள அதிகாரிகள் அந்தச் சம்பளத்தை ஆசிரியர் களுக்கு நேரடியாகக் கொடுப்பதற்கு வாய்ப்புகளை அரசு உருவாக்கிக் கொடுக்க வேண்டும். இந்த நிலைமை பல ஆண்டு களுக்கு முன்னால் இருந்தது. ஆசிரியர்களுக்குச் சம்பளத்தை கல்வி இலாகா அதிகாரிகளே கொடுக்கக் கூடிய நிலைமை நாட்டில் இருந்து வந்தது. அதை மீண்டும் அமல்படுத்த வேண்டும். அதை அமல்படுத்துவதினால் ஏற்படும் பலன்களை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்று தனியார் பள்ளிக்கூடங்களில் வேலை செய்கிற ஆசிரியர் களுக்குச் சம்பளம் கொடுக்கிற நேரத்தில், அந்தப் பள்ளிக்கூட நிர்வாகிகள் சம்பளம் கொடுக்கிற நேரத்தில் ரூ. 10, 15 அல்லது ரூ. 20 என்று அவர்கள் சம்பளத்திலிருந்து பிடித்துக் கொண்டு மீதியைக் கொடுக்கிறார்கள். ஆசிரியர்கள் பாவம் அவர்கள் என்ன குறை இருந்தாலும் அதை வெளியே சொல்ல முடிவதில்லை. அப்படிச் சொன்னால்—தாங்கள் வேலை செய்வதோ தனியார் பள்ளிக்கூடம்—பள்ளிக்கூட நிர்வாகம் தன் மீது நடவடிக்கை எடுத்து எந்த நேரத்தில் தம்மை வெளியே தள்ளிவிடுவார்களோ என்று பயந்து ரூ. 20-ஐ எடுத்துக் கொண்டாலும் வேலை இருக்கிறதே மாதந்தோறும் நிரந்தரமாகச் சம்பளம் வந்து கொண்டிருக்கிறதே என்று தங்கள் வாயைப் பொத்திக் கொண் டிருக்கும் நிலையில்தான் ஆசிரியர்கள் இருக்கிறார்கள்.

அடுத்து, ஆசிரியர்கள் க்ஷேம நிதிக்குப் பணம் போய்ச் சேர வேண்டும். இதைக் கட்டுவது யார் என்றால் பள்ளிக்கூட நிர்வாகிகள்தான். ஆசிரியர்களின் சம்பளத்தில் க்ஷேம நிதியைப் பிடித்துக் கொண்டு மீதிப் பணத்தைத் தான் கொடுக்கிறார்கள். அதில் கூட ஊழல் நடந்து கொண்டிருக்கிறது. என் தொகுதியில் ஆழ்வார்திருநகரி பஞ்சாயத்தில் பேயன்விளைக் கிராமத்தில் ஆரம்பப் பள்ளிக்கூடம் இருக்கிறது. அதன் நிர்வாகி பத்தாண்டுகளாக ஆசிரியர்கள் க்ஷேம நிதிக்குக் கொடுக்கும் பணத்தைக் கட்டாமல்,





1974 மார்ச் 20] [திரு. க. உரொ. எட்மண்ட்]

ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகளிடம் புகார் செய்து அதிகாரிகள் அதைப் பரிசீலனை செய்து அந்த நிர்வாகத்தை நடத்துகிறவர்கள் அந்தப் பணத்தைக் கட்டவில்லை என்றும் அதைக் கட்டும்படி உத்தரவிட்டும் இதுவரையில் அவர்கள் அந்தப் பணத்தைக் கட்டாமல் இருக்கிறார்கள். மீண்டும் ஒருமுறை வற்புறுத்திய பிறகுதான் ஒரு பகுதியை மட்டும் கட்டிவிட்டு மிச்சப் பகுதியை கட்டாமல் இருக்கிறார்கள் என்றும் ஆசிரியர்கள் புகார் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அந்த நிர்வாகத்தின்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இவற்றையெல்லாம் நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால் நிர்வாகிகள் ஆசிரியர்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளத்தை இந்தச் கொடுக்கக்கூடிய காரணத்தினால்தான் இன்றையதினம் சம்பளத்தை சிக்கல் ஏற்படுகிறது. ஆகவே ஆசிரியர்கள் தங்கள் சம்பளத்தை கல்வி இலாக்கா அதிகாரிகளிடம் இருந்து நேரடியாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் அல்லது வட்டார ட்ரஷரிகளில் இருந்து பெற்றுக் கொள்ளத்தக்க அளவிற்கு வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தினால் இப்படிப்பட்ட ஊழல்கள் ஏற்படும் நிலை வராது. ஆகவே அந்த முறையில் மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மதிய உணவு. மதிய உணவிற்கு இன்று ஒரு மாணவனுக்கு ஆறு காசு கொடுக்கிறார்கள். இன்றையதினம் உள்ள விலைவாசியேற்றத்தில் இந்த ஆறு காசு என்பது ஒரு மாணவனுக்குப் போதுமா என்றால் போதாது. என்ன சொல் கிறார்கள் என்றால் மீதித் தொகையைப் பணியாற்றுகிற ஆசிரியர்கள் பொதுமக்களிடமிருந்து நன்கொடை பிரித்துச் செய்ய வேண்டு மென்று சொல்கிறார்கள். ஆசிரியர்கள் காலை 8 மணிக்குப் பள்ளிக்குப் போய் மாலை ஐந்து மணிக்குத்தான் திரும்புகிறார்கள். இடைவேளை ஆகாரத்திற்கு ஒன்று அல்லது ஒன்றரை மணி நேரம். பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கவே ஆசிரியர்களுக்கு நேரம் போதவில்லை. ஆகவே ஆசிரியர்கள் வெளியே சென்று நன்கொடை வசூலித்து அதோடு கூட பிள்ளைகளுக்குப் பாடமும் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்றால் அது முடியாத காரியம். ஆகவே இந்த ஆறு பைசா என்றிருப்பதை, ஆசிரியர்களுக்கு இருக்கிற சிரமங்களைக் குறைக்கிற வகையில், அதிகப்படுத்திக் கொடுத்து மதிய உணவு அளிக்கப்பட வேண்டும்.

அதேபோல் மதிய உணவு கொடுப்பதில் புகார் சொல்லும்போது அந்தப் புகாரை யார் கொடுப்பது என்றால் யாராவது ஆசிரியர்கள் கொடுக்கலாம் அல்லது பொதுமக்கள் கொடுக்கலாம். அப்படிக் கொடுக்கப்படுகிற புகார்களைக் கல்வி இலாக்கா அதிகாரிகள் பரிசீலனை செய்து உண்மையில் ஒரு ஆசிரியர் மதிய உணவுத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தவறு செய்திருந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம்.

இந்தப் பேயன்விளைப் பள்ளிக்கூடத்தை எடுத்துக் கொள்வோம். அந்தப் பள்ளித் தலைமையாசிரியர் மீது மதிய உணவுப் பணத்தை கையாடல் செய்து விட்டார் என்று குற்றம் சாட்டினார்கள். ஆடிட்டர்கள் வந்து ஆடிட் செய்தபோது எந்த விதமான தவறும் ஏற்படவில்லை என்று கூறியிருக்கிறார்கள். அது இன்னும் கல்வி இலாகாவின் பரிசீலனையில் இருக்கிறது. அந்தப் பள்ளியின் மானேஜருக்கு இந்த மதிய உணவுக் குழுவில் எந்தவித சம்பந்தமும் இல்லை. இருப்பினும் அவர்கள் போலீஸ் இலாகாவில் புகார் கொடுத்து. போலீஸ் அவர் மீது வழக்குப் பதிவு செய்து, இன்றைக்கு அந்தப் பள்ளியின் தலைமையாசிரியர் நீதிமன்றத் திற்கும், பள்ளிக்கூடத்திற்கும் போய்க் கொண்டிருக்கிறார்கள். ஏதாவது ஒரு ஆசிரியரை அவர்களுக்குப் பிடிக்க வில்லை யென்றால், ஏகாவது ஒரு புகார் அவர் மீது கொடுத்து கல்வி இலாக்காவில் விசாரணை. போலீஸ் விசாரணை என்று இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. இவற்றை மாற்றுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டு மென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களை மிகவும் கேவலமான வேலையைச் செய்வதற்கு ஒன்றியங்களில் கட்டாயப்படுத்துகிறார்கள். குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சைக்காக ஆட்களைப் பிடித்துக் கொண்டு வர வேண்டுமென்று அவர்களை வற்புறுத்துகிறார்கள். அப்படியில்லை என்று ஆளும் கட்சித் தரப்பிலிருந்து சொல்லலாம். ஆனால் நடை முறையில் என்ன நடக்கிறது என்றால், ஒன்றியத்திலிருந்து சர்குலரே போடுகிறார்கள். நீங்கள் இதற்கு ஒத்துழைப்புத் தர வேண்டும். 'யுவர் கோஆபரேஷன் ஈஸ் ரிகொயர்டு' என்று சொல் கிறார்கள். ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று எழுத்தளவில் சொல்கிறார்கள். நேராகச் சொல்லும்போது இத்தனை நபர்களை ...ள் பிடித்துத் தர வேண்டுமென்று சொல்கிறார்கள் ...





கொண்டு வராவிட்டால் சம்பளத்தை ஒழுங்காகக் கொடுப்பது இல்லை, பிராவிடன்ட் பண்டு நிதியிலிருந்து கடன் கேட்டால் கொடுப்பது கிடையாது, இங்கிரிமென்ட் கொடுப்பது கிடையாது என்று இப்படி ஆசிரியர்களைக் கெடுபிடி செய்து கொண்டிருக் கிறார்கள். இதை மாற்ற வேண்டும்.

லோகல் லைப்ரரியைப் பொறுத்த வரையில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த நூலக ஆணைக் குழுத் தலைவராக வருபவர் களுக்கு ஒரு தகுதி நிர்ணயிக்க வேண்டும். படிக்கத் தெரியாதவர் களும், லைப்ரரியின் பயன் தெரியாதவர்களும், எந்த லைப்ரரியில் என்னென்ன புத்தகங்கள் இருக்கின்றன, எது எது படித்தால் யார் யாருக்கு அனுகூலம் என்று தெரியாதவர்கள், கையெழுத்துக் கூட போடத் தெரியாதவர்கள், தமிழ் வாசிக்கக் கூடத் தெரியாத வர்கள், ஆங்கிலம் அறவே தெரியாதவர்கள், அந்த நூலகத்தின் தலைவராக இருக்கிறார்கள்.

நூலக ஆணைக் குழுவில் கட்சியைப் புகுத்தக் கூடாது. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர் தான் நூலக ஆணைக் குழுவின் தலைவராக வர வேண்டும். காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர் தான் வரவேண்டும் என்கிற நிலைமையை மாற்ற வேண்டும். நூலக ஆணைக் குழுவின் தலைவராக இருப்பவர்கள் நூலகத்தின் பயனை அறிந்திருந்தால் தான் மற்றவர்களுக்கு அதைப்பற்றி அவர்கள் சொல்ல முடியும். தலைவராக இருப்பவர் களுக்கு ஓரளவிற்கு கல்வியறிவு இருக்க வேண்டும்.

அப்படிப்பட்ட தேர்வுகளை நடத்துகிறபோது, நூலக ஆணைக் குழுவில் உறுப்பினராக வருவதற்கு யாரும் இருக்கலாம், அதற்கு படிப்பு வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்படுபவர்கள் ஓரளவிற்குக் கல்வி பெற்று இருக்க வேண்டும். பட்டதாரியாக இருக்க வேண்டும், உயர்நிலைப் பள்ளியின் இறுதியாண்டு எஸ்.எஸ்.எல்.சி. ஆவது படித்து இருக்க வேண்டும். அரசியல் சட்டத்தில் கூடத் தேர்தலுக்கு நிற்க வேண்டுமானால் இன்னின்ன தகுதிகள் இருக்க வேண்டும், இன்ன வயதை எய்தியிருக்க வேண்டும், இந்த நாட்டின் குடிமகனாக இருக்க வேண்டும், என்று விதிமுறை இருக்கிறது. அதேபோன்று

நூலக ஆணைக் குழுவின் தலைவராகத் தேர்ந்து எடுக்கப்படுகிற நேரத்தில் இன்னின்ன தகுதிகள் பெற்று இருக்க வேண்டும் என்று வைக்க வேண்டும்.

நூலக ஆணைக் குழுவின் தலைவராக ஒருவர் தேர்ந்தெடுக்கப் பட்டுவிட்டால் அவர் பதவி வகிக்கும் 5 ஆண்டுக் காலத்தில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்து அவரை இறக்க முடியாது என்று விதிமுறைகள் இருக்கின்றன. இது ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைப்பதாக இருக்கிறது. ஒரு உறுப்பினரை அந்தக் குழுவில் இருப்பவர்கள் தலைவராகத் தேர்ந்து எடுக்க வேண்டும், அந்தக் குழுவிலே அவரைத் தேர்ந் தெடுத்த உறுப்பினர்களுக்கு அந்தக் குழுவின் தலைவர் தவறான காரியங்களில் ஈடுபடுகிற நேரத்தில் அவரைப் பதவியிலிருந்து நீக்க நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்து செய்யலாம் என்ற முறையில் விதிகளை மாற்ற வேண்டுமென்று கேட்டு, இந்த மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லி அமைகிறேன்.

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, கல்வி மானியத்தை ஆதரித்துப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி. என்னுடைய பேச்சினை நான் தொடங்குவதற்கு முன்னர், இளநிலை ஆசிரியர் களுக்கும், இடைநிலை ஆசிரியர்களுக்கும் தேர்வு நிலை தகுதி அளித்து இருக்கிற கழக அரசினை, ஏறத்தாழ 10-12 ஆண்டுக் காலம் ஆசிரியர் பணியில் இருந்தவன் என்ற முறையில், அந்த ஆசிரியர்கள் சமுதாயத்தின் சார்பாக பாராட்டிக் கொள்கிறேன். என்னரும் தமிழ் நாட்டின் கண், எல்லோரும் கல்வி பெற்று, பன்னரும் கலை ஞானத்தால், பராக் கிரமத்தால், அன்பால், உன்னத இமய மலைபோல் ஓங்கிடும் கீர்த்தி எய்தி வாழ வேண்டும், வளர வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு இந்த அரசு பாடு பட்டு வருகிறது, கல்வித்தொண்டு ஆற்றி வருகிறது என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

1956-57-ம் ஆண்டிலே கல்விக்காக ஒதுக்கப்பட்ட தொகை ஏறத்தாழ 11 கோடி ரூபாய். 1974-75-ம் ஆண்டிலே ஒதுக்கப் பட்டிருக்கின்ற தொகை ஏறத்தாழ 110 கோடி. 1973-74-லே 6 வயதிற்கு மேற்பட்டு 11 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள்



60.24 லட்சம். இதில் பள்ளியில் சேர்க்கப்பட்டோர் எண்ணிக்கை 54.38 லட்சம். ஏறத்தாழ 90.2 விழுக்காடு ஆகும். இந்த ஆண்டில் மேலும் 2 லட்சம் பிள்ளைகளுக்குக் கல்வி வசதி அளிக்கப்படும் என்று கருதப்படுகிறது. அதுபோல், 11 வயதிற்கு மேற்பட்டு 14 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை சென்ற ஆண்டு 27.11 லட்சம். இதில் கல்வி பயில வந்தவர்கள் 14.19 லட்சம். இது 52.3 விழுக்காடாகும். இந்த ஆண்டு 1 லட்சம் குழந்தைகளுக்கு மேலும் கல்வி வசதி அளிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அதே போன்று உயர்நிலைப் பள்ளிகளை எடுத்துக் கொண்டால் ஏறத்தாழ 100-க்கு 33 விழுக்காடு பயின்று வருகிறார்கள். இந்த ஆண்டு 60,000 மாணவர்களுக்குக் கல்வி வசதி அளிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 1961-62-ல் இருந்த கல்லூரிகள் 59 தான். 1973-74-ல் இருக்கின்ற கல்லூரிகள் 178 ஆகும். இந்த ஆண்டு மேலும் 1-2 கல்லூரிகள் அறிவிக்கப்படும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. 1961-62-ல் கல்லூரி மாணவர்கள் தொகை 45,000 தான். இப்போது இருக்கின்ற மாணவர்கள் தொகை 1.95 லட்சம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுபோன்று பட்டியல் போட்டு காட்டுகிற நேரத்தில் பள்ளிகளின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே இருக்கிறது, மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே இருக்கிறது, ஆனால் கல்வியின் தரம் உயர்ந்து இருக்கிறதா என்று கேட்கிறார்கள்.

இந்த நேரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன கருத்தினை இங்கே நினைவுக்குக் கொண்டு வர விரும்புகிறேன். இன்று பட்டதாரியாக இருக்கும் மாணவனைப் பார்த்து, அவனுடைய தந்தை என்ன சொல்வாராம், நீ பி.ஏ., பி.எஸ்ஸி என்கிறாய், என்ன பி.ஏ., பி.எஸ்ஸி., என் காலத்து எஸ்.எஸ்.எல்.சி. க்கு ஈடாகாது, இணையாகாது என்று சொல்வாராம். அவருடைய தந்தை என்ன சொல்லி இருப்பாராம், நீ என்ன எஸ்.எஸ்.எல்.சி. அந்தக் காலத்தில் நாங்கள் படிக்கிற நேரத்தில் இருந்த இ.எஸ்.எல்.சிக்கு ஈடாகுமா, இணையாகுமா என்று சொல்வாராம். அவருடைய தந்தை என்ன சொல்லி யிருப்பாராம், இந்தக் காலத்து இ.எஸ்.எல்.சி. என்ன, நாங்கள் அந்தக் காலத்தில் அ,ஆ, என்று விரல் தேய மண்ணில் எழுதிக்

கொண்டிருந்தோமே அதற்கு ஈடு, இணையாகுமா என்று சொல்லி யிருப்பாராம். அதுபோல் இந்தக் காலத்துப் பட்டதாரிகளை அந்த காலத்தில் அ, ஆ, மண்ணில் எழுதிக் கொண்டவர்களுக்கு ஈடு, இணையாகுமா என்று தோழர்கள் இப்போது கல்லூரியில் படித்து வருபவர்களுக்கு ஒப்பிட்டுப் பார்ப்பது முறையாகுமா என்பது சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

கல்விக்காக அதிகம் பணம் ஒதுக்கப்படுகிறது, ஆனால் அதற் குரிய பயன் இடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். அதற்குக் காரணம் என்ன என்று அழகாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக் கிறது. புகுமுக வகுப்பு வரை இலவசக் கல்வி தரப்படுகிறது. அடுத்து, பட்ட வகுப்பை எடுத்துக் கொண்டால், ஒரு மாணவனுக்கு ஆகும் செலவு, ஒரு மாணவன் பெறும் தொகையைப் பார்த்தால், அரசு மாணவர்களுக்கு எந்த அளவுக்குச் செலவழிக்கிறது என்பது தெளிவாகும்.

எனக்கு முன்னால் பேசிய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதற்குப் பிறகு அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தைச் சார்ந்த உறுப்பினர் நண்பர் எட்மண்ட் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இவர்கள் கருத்து முன்னுக்குப் பின் முரணாக இருப்பதை நாம் பார்க்க முடியும்.

(முற்பகல் 11.30)

அருமை நண்பர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் பள்ளி இறுதி வகுப்பில் மாணவர்களிடமிருந்து தேர்வுக் கட்டண வசூலிக்கப்படுகிறது, இது முறை தானா என்ற ஒரு கேள்வியைக் கேட்டார்கள். அதே நேரத்தில் நம்முடைய அருமை நண்ப எட்மண்ட் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அவர்கள் புகுமு வகுப்பில் எல்லா மாணவர்களுக்கும் இலவசக் கல்வி அளிக்க கூடாது என்று சொன்னார்கள். தோழமைக் கட்சியைச் சேர்ந் வர்கள் கருத்தில் வேறுபடுகிறார்கள் என்பதை அழுத்தம் திருத் மாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பள்ளி இறுதி வகுப்பு தேர்வுக் கட்டணம் ரூ. 15 யாரிடம் வசூல் செய்யப்படுகிறது தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்களிடம் வசூல் செய்யப்படுகிறதா இல்லை. அந்தப் பணத்தை அரசு கொடுக்கிறது. யாரிட



வசூலிக்கப்படுகிறது? வசதி வாய்ப்பு உள்ளவர்களிடம் வசூலிக்கப் படுகிறது. அவர்களிடமிருந்து வசூலிக்கக் கூடாது என்று வாதாடுகிறார் அருமை நண்பர் கே. டி. கே. தங்கமணி அவர்கள். அதே நேரத்தில் புகுமுக வகுப்பில் எல்லோருக்கும் இலவசக் கல்வி கூடாது, கட்டணம் வசூலிக்க வேண்டும் என்கிறார் அருமை நண்பர் எட்மண்ட் அவர்கள்.

அடுத்து தனியார் பள்ளிகளைப் பற்றி பேசினார்கள். தனியார் பள்ளி கூடவே கூடாது என்று அழுத்தந்திருத்தமாக அருமை நண்பர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். அதற்கு இரண்டொரு உதாரணங்கள் சொன்னார். மதுரையில் ஒரு பள்ளியைச் சுட்டிக்காட்டிச் சொன்னார்கள். ஒரு பார்டிகுலர் கேஸை வைத்து ஜெனரலைஸ் பண்ணக் கூடாது என்று நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். திடீரென்று ஒரே நாளில் அத்தனை தனியார் பள்ளிகளையும் தேசியமயமாக்க முடியுமா என்றால், அதற்கு அரசியல் நிர்ணயச் சட்டம் இடம் தராது என்று கருதுகிறேன். காரணம், நமது அரசு தனியார் பள்ளிகளில் பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்ற முறையில் இங்கே ஒரு மசோதாவைச் சட்டமாக நிறை வேற்றியிருக்கிறார்கள். அது இப்பொழுது குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலுக்குச் சென்றிருக்கிறது. இங்கே உள்ள தனியார் பள்ளிகளைச் சார்ந்தவர்கள் அதை ஒப்புக் கொள்வார்களோ, ஒப்புக் கொள்ளமாட்டார்களோ எனக்குத் தெரியாது.

அருமை நண்பர் கே. டி. கே. தங்கமணி பேசுகின்ற நேரத்தில் இவ்வளவு குறைபாடுகளைச் சொன்னவர், தனியார் பள்ளிகளை அரசுடைமையாக்க வேண்டும் என்று இங்கே பேசியிருப்பார்களே யானால் அவர்களை நான் பாராட்டியிருப்பேன். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களின் கருத்தினை அருமை நண்பர் எட்மண்ட் அவர்கள் வரவேற்கவில்லை என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, பொதுக்கல்வியைப் பற்றிப் பேசிக் கொண்டிருந் தார்கள். மருத்துவக் கல்வியைப் பற்றிப் பேசினார்கள். மருத்துவக் கல்லூரியில் இடம் குறைக்கப்பட்டிருக்கிறது. வேலைவாய்ப்பு இல்லாமல் டாக்டர்கள் கஷ்டப்படுகிறார்கள். எனவே, அதைப்

போக்குவதற்கு இடத்தைக் குறைக்க வேண்டியிருக்கிறது என்று அவர்கள் சொன்னார்கள். தயவு செய்து அவர்களைத் திசை திருப்ப வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு வேலைத் தேடித் தரவேண்டும் என்று அரசைக் கேட்பார்களேயானால், அந்தக் கேள்வியே கூட நியாயம் இல்லை. [illegible]த்தியம் செய்வதற்குத் தகுதியுள்ளவர்களாக அவர்களை இந்த அரசு ஆக்கி நாட்டிற்கு அளிக்கின்றது. எனவே நோயாளிகளுக்கு அவர்கள் வைத்தியம் செய்து, வேண்டுமானால் அதற்குரிய ஊதியத்தைப் பெறலாம். அதை விடுத்து அவர்களுக்கு வேலைத் தேடித் தரவேண்டும் என்ற அவசியம் இந்த அரசுக்கு இல்லை என்பதனைச் சொல்லிக் கொள்கிறேன்.

மருத்துவத் துறையில் தமிழகம்தான் இந்திய துணைக் கண்டத்தில் சிறந்து விளங்குகிறது என்பதை நாம் அறிவோம். இருந்தாலும் கூட தரம் குறையக் கூடாது, தரம் மேலும், மேலும் உயர வேண்டும் என்பதற்காகத் தான் இட நெருக்கடி இருக்கக் கூடாது என்பதற்காகத் தான் இடம் குறைக்கப்பட வேண்டியிருக் கிறதே ஒழிய, அவர்கள் சொல்வது போல ஏதோ வேலை தேடித் தர முடியாத காரணத்தினால் அதைச் செய்யவில்லை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இந்திய வரலாற்றை, தமிழக வரலாற்றை எழுதுவதற்கு டாக்டர் மு. வரதராசனார் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லும்பொழுது அவர் ஒ[illegible] ஒரு உண்மையை ஒத்துக் கொண்டார்கள். அதற்காக நன்[illegible] ஏனென்று கேட்டால் இந்தியா வரலாற்றில் கூட இந்தி[illegible] வரலாறு இடம் பெற்றிருக்கிறதே ஒழிய, தமிழக வரலாறு இட[illegible] பெறவில்லை என்று சொன்னார்கள்.

அடுத்து, பி.யு.சி. பற்றிச் சொல்லும்பொழுது பி.யு.சி. கூடாத[illegible] அதற்காகச் செலவழிக்கின்ற பணம் வீண், வெட்டி என்[illegible] சொன்னார்கள். பி.யு.சி. யார் காலத்தில் கொண்டு வரப்பட்ட[illegible] என்பதைத் தயவு செய்து தெரிந்து கொள்ள வேண்டும். இந்[illegible] அரசு பி.யு.சி.-யைப் போக்கி மீண்டும் இண்டர்மீடியட் அதே போ[illegible] பட்டப் படிப்பு 3 ஆண்டுகள் என்று கொண்டு வரலாமா என்[illegible] யோசித்துக் கொண்டிருக்கிறது [illegible] கொள் விரும்புகிறேன்.



அடுத்து, இண்டர்னல் அசெஸ்மெண்ட் இல்லை, தேர்வு முறையில் மாற்றம் வேண்டும் என்று சொல்கிறார்கள். மாற்றம் வேண்டும் என்பதை இந்த அரசு ஒத்துக் கொண்டு ஏறத்தாழ 810 பள்ளிகளில் அந்த முறையைக் கடைப்பிடித்துக் கொண்டு வருகிறது.

நூலக ஆணைக் குழுவின் தலைவரைப் பற்றி அருமை நண்பர் எட்மண்ட் அவர்கள் சொன்னார்கள். பட்டதாரியாக இருக்க வேண்டுமென்று சொன்னார். என் பட்டதாரியாக இருக்க வேண்டும் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. தஞ்சை நூலக ஆணைக் குழுவின் உறுப்பினராக இருக்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் பட்டதாரியில்லாத அனுபவத்தில் சிறந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. தர்மலிங்கம் அவர்கள் தலைவராக இருக்கிறார். அவர் ஒரு மாத ஏடு நடத்துபவர். அவர் தலைவராக இருக்கக்கூடிய தகுதி உடையவர். எனவே தகுதியை எந்த அடிப்படையில் நிர்ணயிக்க வேண்டும் . . .

**திரு. க. உரோ. எட்மண்ட்:** நூலக ஆணைக் குழுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்படவேண்டியவர் பட்டதாரியாக இருக்கவேண்டும் என்று நான் சொல்ல வில்லை. பட்டதாரியாக இருக்கவேண்டும் என்று நான் சொல்லவில்லை அல்லது பட்டாதாரியாக இருக்கவேண்டும் நிர்ணயிக்கவேண்டும் அதற்கு ஒரு கல்வி வரைமுறையை நிர்ணயிக்கவேண்டும் என்று தான் சொன்னேன். பி.ஏ. அல்லது எஸ்.எஸ்.எல்.சி. யாக ஏதாவது ஒரு இருக்கவேண்டும் என்று ஸஜெஷன் கொடுத்தேன். ஏதாவது ஒரு முடிவை அரசு எடுக்கவேண்டும் என்று தான் நான் சொன்னேன்.

**திரு. கோ. இளங்கோவன்:** தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்குப் புதிய விதிகளை இந்த அரசு புகுத்த வில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் சொல்லப் போனால் இந்தக் குழுவில் யார் யார் இடம் பெற்றிருக்கிறார்கள் என்றால், கல்வி நிலையங்களுடைய தலைவர்களாக இருப்பவர்கள் 5 பேர் இடம் பெற்றிருக்கிறார்கள். நூல் நிலையங்கள் நல்ல முறையில் நடைபெற வேண்டுமென்றால், அதற்குப் பொருள் தேவை. பல ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்களின் வாயிலாகப் பொருள் தரப்படுகிறது. எனவே, பல அவற்றின் பிரதிநிதிகள் இதில் இடம் பெற்றிருக்கிறார்கள். நூலகங்களைச் சார்ந்த ஆன்றோர்கள், சான்றோர்கள் அதில் இடம்

பெற்றிருக்கிறார்கள். ஆகவே, தவறு நடப்பதற்கு வாய்ப்பு, வழி இல்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

எல்லா வகையிலும் இந்த மான்யம் வரவேற்கத்தக்கது, குறிப் பாக ஆசிரியர்கள் அனைவரும் பாராட்டத்தக்க முறையில் அமைந் திருக்கிறது என்று சொல்லி முடிக்கிறேன், வணக்கம்.

* **திரு. கே. பி. கோபால்:** பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மான்யக் கோரிக்கையின்மீது என்னுடைய கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

முதலாவதாக நெடுங் காலமாக உள்ள ஆசிரியர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றியதற்காக, அதாவது ஹையர் கிரேடு, செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு செலக்ஷன் கிரேடு உயர்த்தி யதற்கும், அவர்களுக்கு ஊதிய உயர்வு அளிப்பதாக உறுதி அளித்ததற்கும் இந்த அரசை நான் பாராட்டாமல் இருந்தால், கடமையிலிருந்து தவறியவனாவேன். அதே சமயத்தில் சில குறை களைச் சுட்டிக் காட்டவும் நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அமைச்சர் அவர்கள் இந்த அவையில் வைத்திருக்கிற அறிக்கையை எடுத்துக் கொண்டாலும், எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நடப்பு ஆண்டில் ரூ. 110 கோடி. . .

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஈ) பேரவை அலுவல் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்ட முன்வடிவை இம்மாத இறுதிக்குள் சட்டமாக நிறைவேற்ற வேண்டும் என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள். எனவே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களையும், மாண்பமிகு அவை முன்னவர் அவர் களையும், மற்றும் கட்சித் தலைவர்களையும் கலந்து கொண்டு, இச் சட்ட முன்வடிவு 22—3—1974, வெள்ளிக்கிழமை யன்று பிற்பகலில் ஆய்வுக்கு எடுத்துக் கொ— ாப்படும் என்று அறிவிக்கிறேன்.



7. 1974-75-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக் கெடுப்பு—தொடர்ச்சி

நிதிக் கோரிக்கை எண் 17—கல்வி—தொடர்ச்சி

**திரு. கே. பி. கோபால்:** நடப்பு ஆண்டில் சுமார் 110 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், 1956-57-ல் சுமார் 11 கோடி ரூபாய் தான் ஒதுக்கப்பட்டிருந்தது என்றும் எடுத்துக் கூறப் பட்டது. அவர்கள் ஏன் 1956-57 ஆண்டோடு ஒப்பிடுகிறார்கள், 1966-67-ம் ஆண்டோடு ஒப்பிடவில்லை என்று நான் கேட்க விரும்பு கிறேன். 1966-67-ல் அன்றுள்ள வருமானத்தில் 22.54 சதவீதம் கல்விக்காக காங்கிரஸ் ஆட்சி ஒதுக்கியது. நடப்பு ஆண்டில் 23.27 சதவீதம் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே ஏதோ அதிக ஆர்வம் காட்டுவது தி.மு.க. அரசு தான் என்ற ஒரு தவறான கருத்தை இங்கே வெளியிடக் கூடாது என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். மேலும் 1968-ல் இருந்த உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 2,513 ஆகும். 1968-ல் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதிய மாணவர்களின் எண்ணிக்கை 1,96,272 என்ற குறிப்பு இருக்கிறது. நடப்பு ஆண்டில் உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. அதாவது 2,823. ஆனால் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதப் போகும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது 1,93,686. இப்படி மாணவர்களின் எண்ணிக்கை குறைவதற்குக் காரணம் என்ன என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிய வில்லை.

கல்வி வளர்ச்சிக்காக மொத்தம் ரூ. 138 கோடி ஒதுக்கியிருப்ப தாகக் கூறப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் கூறுவது போல 138 கோடி ரூபாய் கல்வி வளர்ச்சிக்காக ஒதுக்கியிருந்தாலும் கூட, இது மாணவர்களுக்கு எந்த அளவுக்குப் பலன் அளிக்கின்றது, ஆசிரியர்களுக்கு எந்த அளவுக்கு மகிழ்ச்சியைத் தந்திருக்கிறது, கல்வியின் தரம் எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பதையும் நாம் பார்க்க வேண்டும்.

நான் நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தின்போதுகூட என்னுடைய வெட்டுத் தீர்மானத்திலும் ஒன்றைச் சொன்னேன். கல்வி அதிகாரிகள், முதன்மை கல்வி அதிகாரிகள் பதவி மிகவும் முக்கியமானவையாகும். இந்தப் பதவிகள் காலியானால் உடனடியாக அவை நிரப்பப்பட வேண்டும். குறிப்பிட்டிருக்கிறேன்.

அதிலே காலதாமதம் ஏற்பட்டால் கல்வியின் தரம் குறையும். பெரியகுளம் மாவட்டக் கல்வி அதிகாரி பதவி 1—7—1973-லிருந்து 15—2—1974 வரை காலியாக இருந்தது.

(திரு. கோ. இளங்கோவன்—தலைமை.)

மதுரை முதன்மை கல்வி அதிகாரி பதவி 22—5—1972 முதல் 1—11—1973 வரை காலியாக இருந்தது. அதற்குப் பிறகு இரண்டு மாதங்களுக்கு ஒரு அம்மையார் முதன்மை கல்வி அதிகாரியாக நியமிக்கப்பட்டு, பின்பு அவரும் மாற்றப்பட்டு விட்டார். மீண்டும் இப்போதுதான் நியமிக்கப்பட்டிருக்கிறது. இப்படிக் காலியாகின்ற இடத்தை நிரப்புவதற்குத் தகுதி பெற்ற வர்கள் இல்லையா அல்லது யாருக்குப் பதவி உயர்வு கொடுப்பதற்காக வைக்கப்பட்டிருக்கிறது என்று தெரிந்துகொள்ள நான் விரும்புகிறேன். அல்லது இதிலே வேறு சிக்கல் இருக்கிறதா என்பதை அமைச்சரவர்கள் தெரிவிக்க வேண்டுகிறேன். ஒருவேளை இந்தக் கல்வித் துறையிலே அரசியல் குறுக்கீடு தோன்றிவிட்டதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

காலியாகின்ற முக்கியமான பணி இடங்கள் உடனடியாகப் பூர்த்தி செய்யப்படாததன் காரணமாக, உத்தமபாளையம் சரகத்தைச் சேர்ந்த கூடலூரிலுள்ள வ.உ.சி. நடுநிலைப் பள்ளியின் நிர்வாகம் மூன்று மாதமாகச் சீர்குலைந்து போய்விட்டது; மூன்று மாதமாக மூடப்பட்டிருந்தது. பதினேழு ஆசிரியர்களை பணி நீக்கம் செய்யக் கருதி, ஆறு ஆசிரியர்களை நீக்கம் செய்து விட்டார்கள். மீதியுள்ள ஐந்து ஆசிரியைகளையும் மிகவும் கேவலமாக அந்த நிர்வாகத்தினர் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். உரிய அதிகாரிகள் தக்க சமயத்தில் நடவடிக்கை எடுத்திருந்தால் இம்மாதிரியான ஒரு நிலைமை ஏற்பட்டிருக்காது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவர்களின் எண்ணிக்கைப்பற்றி மானியக் கோரிக்கைக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். அதாவது 11 வயதுக்கு உட் பட்டவர்கள் 90 சதவிகிதம் படிக்கிறார்கள்; 14 வயதுக்கு உட்பட்டவர்கள் சுமார் 52 சதவிகிதம் படிக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பல தனியார் பள்ளிகளானாலும் சரி, அல்லது ஊராட்சி ஒன்றியப் பள்ளி—ளானாலும் சரி, அரசாங்





கத்தின் மானியத்தை அதிகமாகப் பெறுவதற்காக அங்கெல்லாம் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகமாகக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையிலே படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை குறைவாகத்தான் இருக்கும். இதற்கு ஒரு உதாரணம் கூடலூர் வ.உ.சி. பள்ளி. பதிவேட்டில் காட்டப்படுவது சுமார் 750 மாணவர்கள். ஆனால் சாதாரணமாக அந்தப் பள்ளிக்கு வருகின்ற மாணவர்களின் எண்ணிக்கை 300 பேர்கள்தான். அதிலும் 6 ஆசிரியர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டதால், அவர் களுக்கு அனுதாபம் காட்டும் வகையில் பெரும்பான்மையோர் பள்ளிக்குச் செல்லவில்லை. அந்தக் காரணத்தினால் சுமார் 25 பேர்கள்தான் பள்ளிக்கு இப்பொழுது செல்கின்றார்கள். இருந்த போதிலும் பதவி நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் மாணவர்கள் நலன் கருதித் தனியாக ஒரு பள்ளி அமைத்து ஒழுங்காகப் பணி யாற்றி வருகிறார்கள். இப்போது அங்கு மொத்தமாகப் படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 250 ஆக இருக்கும். ஆனால் அவர்கள் காட்டுகின்ற கணக்கு 750 மாணவர்கள், பதிவேட்டில் அப்படிக் குறித்திருக்கிறார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் ஆரம்பப் பள்ளிகளுக்கும், நடுநிலைப் பள்ளிகளுக்கும், உயர்நிலைப் பள்ளிகளுக்கும் 'அலுவல் இன்ஸ் பெக்ஷன்' நடக்கிறது. அந்தச் சமயத்தில் இன்ஸ்பெக்ஷனுக்குப் போகிற அதிகாரிகள் இந்த மாதிரியான குறைபாடுகளைக் கண்டு பிடித்து நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் அப்படிச் செய்யவில்லை. அவர்களும் போதிய கவனம் செலுத்தாமல், நிர்வாகத்தினருக்கு உடந்தையாக இருக்கிறார்கள். அந்த முறையில்தான் கூடலூர் பள்ளியில் கடமையைச் செய்யத் தவறிவிட்டார்கள் அதிகாரிகள். நிர்வாகத்தினர் சேமநல நிதிக்கான பணத்தை மாதாமாதம் ஒழுங்காகக் கட்டுவதில்லை. இதுகுறித்து, 29-12-1973-ல் 13 ஆசிரி யர்கள் 16 அதிகாரிகளுக்கு எழுதி அனுப்பி யிருக்கிறார்கள். ஒவ்வோராண்டும் இன்ஸ்பெக்ஷன் செய்யும்போது இந்தக் குறையைக் கவனித்திருக்கலாம். அப்படிக் கவனிக்காதது இன்ஸ்பெக்ஷனுக்குப் போகிற அதிகாரிகள் பள்ளி நிர்வாகத் தினருக்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்பதைத்தான் காட்டுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் எட்மண்ட் அவர்கள் கூட ஒரு உதாரணத்தைச் சொன்னார்கள். மாதாமாதம் 'பே பில்' தயாரித்து அனுப்பும்போதும் சேமநல நிதி கட்டுவதற்கான டி.பி.எப்.

[திரு. கே. பி. கோபால்] [1974 மார்ச் 20

டிப்பாசிட் பற்றியும் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். மேலும் அலுவல் இன்ஸ்பெக்ஷன் ஸ்டேட்மென்டிலும் குறிப்பிட வேண்டும். அதை அவர்கள் சரியாகச் செய்வதில்லை. இன்ஸ்பெக்ஷனுக்குப் போகிறவர்கள் அதையும் சரியாகக் கவனிப்பதில்லை. கவனித்திருந் தால் இந்த அளவுக்கு முறைகேடுகள் இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாவட்ட கல்வி அதிகாரிகளுக்கு இப்போது இரண்டு பொறுப் புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த இரண்டு பொறுப்பு களுமே மிகவும் முக்கியமானவைகளாகும். ஒன்று, உயர்நிலைப் பள்ளிகளில் மாணவிகள் எங்கே படிப்பது என்று அறிவது. அதைப்பற்றி முடிவு செய்வதைத் தயவு செய்து பெற்றோர்களிடம் விட்டுவிடுங்கள்; அதிகாரிகளுக்கு அந்த வேலை வேண்டாம். இரண்டாவது அடிஷனல் டீச்சர்ஸ் அலாட்மென்ட் செய்வது. இதற்கு நான் ஒரு யோசனையைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நான் கூறினால் அதற்கு அரசியல் நோக்கம் கற்பிக்கப்படும். ஆகவே, 3-12-1973 நாளிட்ட தென்னரசு வார இதழில் வெளியான ஒரு செய்தியைக் குறிப்பிட விரும்புகிறேன். அந்த இதழில் 'கலைஞருக்கு ஓர் கடிதம்' என்ற பகுதியில் இதைக் குறிப்பிட்டு, "இதை நீங்கள் உடனடியாகக் கவனிக்காவிட்டால் கல்வி இலாகாவின் ஊழல்கள் கரை சேர்க்க முடியா புற்றுநோயாக ஆகிவிடும்" என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே, அந்தந்த மாவட்டத்திற்கு இத்தனை ஆசிரியர்கள் என்று நிர்ணயித்து விட்டால், மாணவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து ஆசிரி யர்களை நிர்ணயித்துக் கொள்வார்கள். அதிலே தவறு நடக்காத என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம்: மதிப்பிற்குரிய மாற்றுத் தலைவ வர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் அளித்திருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்க சிலவற்றை நான் கூற விரும்புகிறேன்.

பொதுவாக திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டி ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னால் கல்வியி ஏற்பட்டுள்ள மாற்றம், இந்த நாட்டிலே இருக்கின்ற நல்ல எண்ண படைத்தவர்கள், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மக்கள்மீது இந்



1974 மார்ச் 20] [திரு. செ. இராமலிங்கம்]

அரசு கொண்டிருக்கிற அக்கறைதான் என்று கூறி பாராட்டு வார்கள் என்றே நான் கருதுகிறேன். அந்த அளவுக்கு இந்த அரசு ஆண்டுதோறும் கல்விக்காகப் பல கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, பேரறிஞர் அண்ணா அவர்களின் எண்ணத்தை நிறை வேற்றிக்கொண்டிருக்கின்ற வகையில் தமிழ்நாட்டு மக்கள் கல்விப் பெறுவதற்கான நல்ல சாத்தியக் கூறுகளை மேற்கொண்டு, இந்த அரசு செயல்பட்டு வருகிறது என்பதை அறிந்து நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

பொதுவாக கல்வியிலே முக்கியமாக கற்றுக் கொள்ள வேண்டியது ஆரம்பக் கல்வி. அந்த ஆரம்பக் கல்விக்காக இந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிற பல நல்ல திட்டங்களை நான் முழுமனதோடு வரவேற்கிறேன். இந்த ஆண்டு ஆரம்பக் கல்வி யிலே புதிதாக 2 லட்சம் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கும், நடுத்தரப் பள்ளியிலே ஒரு லட்சம் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கும் ஏற்ற வழிவகைகளை இந்த நிதிக் கோரிக்கையிலே தெரிவித்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். அந்த அளவிலே ஆரம்பப் பள்ளியினுடைய கல்வித்தரம் உயர்ந்தால்தான் நாட்டின் கல்வித்தரம் உயரும் என்ற கருத்தைக் கொண்டு, ஆரம்பக் கல்விக்காக பல நல்ல திட்டங்களைச் சொல்லியிருப்பதை வரவேற்கிறேன்.

மேலும், ஆரம்பப்பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கு நிதி வசதி, விஞ்ஞான சாதனங்கள் வாங்குவதற்கு நிதி வசதி, ஆசிரியர்களுக்கு குடியிருப்புக்கு அதிலும் குறிப்பாக கிராமப் புறங்களில் பணியாற்றுகின்ற ஆசிரியைகளுக்குக் குடியிருப்புக்கு வீட்டுவசதி ஏற்படுத்துவதற்கு நிதி வசதி—இப்படி பல திட்டங்கள் இந்த அறிக்கையில் தரப்பட்டிருக்கின்றன. மற்றும் ஆசிரியர்களுக்குப் பல சலுகைகள் தரப்பட்டிருக்கின்றன. மேலும் ஆசிரியர்கள் நன்மையடைகின்ற வகையில் பல திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை நான் வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

பொதுவாக இந்த நிதிக் கோரிக்கையில் கல்விக்கான பல நல்ல திட்டங்களைச் சொல்லியிருந்தாலும், ஆசிரியர்கள் மாணவர்கள் விகிதத்தை 1 : 34 என்று வைத்திருக்கிறார்கள். வேகமாக வளர்ந்து வரும் கல்வியின் முன்னேற்றத்திற்கு இந்த விகிதாச்சாரம் போதாது என்றுதான் நான் கருதுகிறேன். இந்த விகிதாச்

சாரத்தை 1 : 20 என்று மாற்றி அமைத்தால் நல்ல வளர்ச்சி ஏற்படும் என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள் கிறேன். இன்றைக்கு நமக்கு இருக்கின்ற நிதிநிலை அதற்கு இடம் தராது என்று வேண்டுமானல் சொல்லலாம். அப்படி இருந் தாலும், மத்திய அரசை வற்புறுத்தி, அதிக நிதி பெற்று இந்த விகிதாச்சாரத்தை மாற்றி அமைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக கிராமங்களிலே ஆரம்பப் பள்ளிகளில் 1 முதல் 5 வகுப்புகள் இருக்கக்கூடிய பள்ளிகளில் 2 அல்லது 3 ஆசிரியர் கள் தான் பணியாற்றும் சூழ்நிலை இருக்கிறது. இவர்கள் 5 வகுப்பு களில் உள்ள மாணவர்களுக்கும் எப்படிச் சீராக போதிக்க இயலும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அது மிகவும் கஷ்டமாக இருக்கும். ஆகவே, கிராமப்புறங்களில் இருக்கின்ற ஆரம்பப் பள்ளிகளில் ஒரு வகுப்புக்கு ஒரு ஆசிரியர் என்ற அளவில் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். அப்படிச் செய் தால்தான் கல்வி வளர்ச்சியடைய ஏதுவாகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு ஆசிரியர் மாணவர் விகிதாச்சாரத்தையும் 1 : 20 என்ற அளவில் வைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, புதிய உணவுத் திட்டம். தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் நம்முடைய மதிய உணவுத் திட்டம், மற்ற இந்திய மாநிலங்களிலேயே பாராட்டப்படக் கூடியதாக இருக்கிறது. நமக்கு மிகுந்த புகழையும் தேடித் தரக் கூடியதாக இருக்கிறது. ஆயினும் மத்திய உணவுத் திட்டத்தில் உண தயாரிப்பதற்கு மாணவர்களைப் பயன்படுத்துகிற போக்கினை மாற்ற வேண்டும். காரணம் அங்கங்கே சமையல்காரரை நியமி காததுதான். நாம் இன்றைக்கு ஒரு மாணவனுக்கு 6 கா கொடுக்கிறோம். அப்படியின்றி 10 காசு வீதம் கொடுக்க ஆரம்பி தால் ஒவ்வொரு சென்டரிலும் சமையல்காரரை நியமனம் செய் விடலாம். இதனல் மாணவர்கள் உணவு தயாரிக்கிற போக் மாறும் என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, நிதிநிலை அறிக்கையில் ஒவ்வொரு பள்ளியிலு கைத்தொழில் ஆசிரியரை நியமிக்க இருப்பதை நான் வ வேற்கிறேன். இந்த அடிப்ப...யில் நெசவு ஆசிரியர்களை மட்டு





நியமித்துப் பயன் இல்லை. அங்கே படிக்கிற மாணவர்கள்—தாம் அங்கே கற்றுக் கொள்கிற தொழிலைக் கொண்டு வெளியே தொழில் நடத்தும் திறமையைக்கூட பெறுகிற நிலையில் தையல் ஆசிரியர் போன்றவர்களையும் நியமிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை எடுத்துக் கொண்ட பின்னல் ஆசிரியர்கள் சமுதாயத் திற்குப் பலவிதமான சலுகைகளை அளித்து வந்திருக்கிறார்கள். இன்றையதினம் கூட கல்வி அமைச்சர் அவர்கள் சில சலுகைகளை அறிவித்தார். நான் பத்தாண்டு சர்வீஸில் உள்ளவர்களுக்கு செலக்ஷன் கிரேடு அறிவிக்க வேண்டும் என்று இன்று கேட்டுக் கொள்வதாக இருந்தேன். அதைப் பற்றி எல்லாம் அறிவிப்பு செய்ததற்கு நான் என்னுடைய பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நாம் ஆசிரியர்களுக்காகப் பல வசதிகளைச் செய்தும், பஞ்சாயத்து யூனியன்களில் பணி புரிகிற ஆசிரியர் களுக்கு இவை செயல்படவில்லை என்கிறார்கள். உடனுக்குடன் இவை அவர்களுக்கும் செயல்படத்தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகர்ப்புறங்களில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு நகர ஈட்டுப் படி அளிப்பதை நான் வரவேற்கிறேன். அதுபோலவே கிராமப் புறங்களில் உள்ளவர்களுக்கும் அளிக்க வேண்டும். கிராமங்களிலும் ஆசிரியர்கள் வீடு கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இது அவர்களுக்கு ஒரு பெருங்குறையாக இருந்து வருகிறது. இதையும் நிவர்த்திக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம் இராமநாதபுரத்தில் ஏறக்குறைய 15 லட்சம் ரூபாய் செலவில் கல்லூரி கட்டப்பட்டு முடியும் தருவாயில் இருக்கிறது. அதை இந்தக் கல்வியாண்டிலேயே செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இராம நாதபுரத்தில் இருந்து கல்லூரி 3 மைல் தூரத்தில் இருக்கிறது. ஆகவே அங்கே பயிலும் மாணவர்கள் அங்கேயே தங்கிப் படிக்க ஹாஸ்டல் வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர் பயிற்சிப் பள்ளி சம்பந்தமாக இவ்வாண்டு பரிசீலனை செய்வதாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு பயிற்சிக்கு மாணவிகளைச் சேர்த்துக் கொள்ளக் கூடிய சூழ்நிலை ஏற்படுமானால் —300 மார்க்குகளுக்கு மேல் வாங்கியவர்களைத்தான் எடுத்துக் கொள்வது என்பது இல்லாமல் எஸ்.எஸ்.எல்.சி. தேறியவர்கள் எல்லோரையும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லிக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. துரை முருகன் :** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் கல்வி அமைச்சர் கோரியுள்ள மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாடு அரசாங்கத்தின் வருமானம் 400 கோடி என்றால் அதில் ஏறத்தாழ 110 கோடி ரூபாயை இந்த அரசு கல்விக்காகச் செலவிடுவது நாம் பாராட்ட வேண்டிய ஒன்றாகும். 1966 இல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் கல்விக் கண் கொடுத்தோம், பள்ளிகளைத் திறந்தோம் என்பதாகப் பேசுகின்ற காங்கிரஸ் கட்சிக்காரர்கள் ஆட்சிக் காலத்தில் கல்விக் காக 44 கோடி ரூபாய்தான் செலவு செய்திருக்கிறார்கள். ஆனால் இன்றையதினம் 110 கோடி ரூபாய் செலவு செய்து வருகிறோம். கிட்டத்தட்ட அவர்கள் செலவு செய்ததைப்போல 3 மடங்கு அதிகம்.

அதுமட்டுமல்ல. மருத்துவக் கல்வி, கால்நடைக் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி, பொறியியல் கல்லூரி ஆகியவற்றை எல்லாம் சேர்த்தால் 1974-75ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் நாம் கல்விக்காக 138 கோடி ரூபாயைச் செலவு செய்ய இருக் கிறோம். இன்றையதினம் நம்முடைய தமிழகத்திலே உயர்நிலைப் பள்ளிகள் 2,823 இருக்கின்றன, உயர் தொடக்கப் பள்ளிகள் 5,773 இருக்கின்றன, தொடக்கப் பள்ளிகள் 26,726 இருக்கின்றன. கிட்டத்தட்ட ஒரு லட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து நூற்று எழுபத்து மூன்று ஆசிரியர்கள் இருக்கிறார்கள். பள்ளியில் சேர்ந்து படிக்கிற மாணவர்களின் சதம் 90.2 சதவிகிதம் என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது.



நான் கல்வி அமைச்சர் அவர்களை இந்த மாமன்றத்தின் மூலம் கேட்டுக் கொள்கிறேன். இன்னும் கொஞ்சம் முயற்சி செய்தால் சென்ட் பர்சென்ட் மாணவர்கள் படிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க முடியும். இந்திய நாட்டில், தமிழகத்தில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் மாணவர்கள் நூற்றுக்கு நூறு பள்ளிக்குக் போகிற வாய்ப்பை ஏற்படுத்தினார்கள் என்று பெருமை அடைய முடியும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தவறான தகவலைக் கொடுக்கிறார்கள். கேரளாவில் படிக்கிறவர்கள் அதிகம்.

**திரு. துரை முருகன் :** அம்மையார் கேரளத்திற்கு வக்காலத்து வாங்கினதற்குப் பாராட்டுகிறேன்.

இப்படி நண்பகல் உணவுத் திட்டம், புதுமுக இலவசப் படிப்பு, பள்ளியில் படிக்கிற மாணவர்களுக்கு இலவசமாகப் புத்தகம், சிலேட்டு, தமிழ் வளர்ச்சிக்கான காரியங்கள், தொழில் படிப்பு வளர்ச்சிக்கான காரியங்கள் என்பதாகப் பல்வேறு திட்டங்களால் இந்தத் துறையினரால் செயல்படுத்தப்பட்டு வருவதற்கு இந்த இலாக்காவை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் நான் சில கருத்துக்களை எடுத்து வைக்க கடமைப்பட்டிருக்கிறேன். இன்றையதினம் உயர்நிலை பள்ளிகள் 2,823, தொடக்கப் பள்ளிகள் 26,726 என்பதாக எல்லாம் நாம் புள்ளி விவரங்களைக் கொடுக்கிறோம். ஆனால் இன்றையதினம் நாட்டில் இருக்கிற நிலைமை என்ன? பல பள்ளிக்கூடங்கள் கட்டிடமே இல்லாமல் இருக்கின்றன.

எனது தொகுதியை எடுத்துக் கொண்டால் மேய்மாயில், வத்தேரி, செஞ்சி, காட்பாடி ஆண்கள் பள்ளி, காட்பாடி பெண்கள் பள்ளி, காங்கேய நல்லூர், திருவலம் சேர்காடு, விண்ணம்பள்ளி, மணிமண்டலம், வள்ளிமலை, பொன்னை போன்ற இடங்களில் 12 உயர் நிலைப்பள்ளிகள் இருக்கின்றன. தலைவர் அவர்களே, இந்தப் பன்னிரண்டு உயர்நிலைப் பள்ளிகளில் ஒன்பது பள்ளிகளுக்கு கட்டிடமே இல்லை, கங்கையம்மன் கோவிலில் 2 பள்ளி, திரௌபதை அம்மன் கோவிலில் 2 பள்ளிகளே நடக்கின்றன. நான் படித்த காலத்தில் பள்ளிக்குப் பக்கத்தில் இருந்த டி.பி.யில் விளையாட்டுச்

[திரு. துரை முருகன்] [1974 மார்ச் 20

சாமான்களை வைப்போம். இன்றைக்கு அந்த இடத்தில் 600 பெண்கள் படிக்கக்கூடிய உயர்நிலைப் பள்ளியை—இரண்டு அறையில் வைத்து நடத்துகிறார்கள். மழை வந்தால் இடம் இல்லை, எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பை வேப்பமரத்தடியில் வைத்து நடத்து கிறார்கள். மகிமண்டலத்தில் ஓலைக்கட்டிடத்தில் பள்ளி நடக்கிறது. பரிசோதனைக்கூட சாமான்களைக்கூட வைக்க இடமின்றி ஆசிரியர்கள் வீட்டுக்கு எடுத்துப்போய் வரவேண்டிய நிலை இருக்கிறது.

இவற்றைப்பற்றி நானே பலமுறை எழுதிக் கொடுத்திருக் கிறேன். இதுவரை பதில் இல்லை. நாம் அதிகமான பள்ளிகளை வைக்கிறோம். ஒருவர் பத்தாயிரம் தருகிறேன் என்றார் என்பதா பள்ளியை ஏற்படுத்தி விடுகிறோம். ஊரில் எங்களால் அந்த தொகையைக் கொடுக்க முடியவில்லை என்கிறார்கள். சர்க்கா கட்டிடத்தைக் கட்டித்தா வேண்டுமென்று சொல்கிறார்கள்.

(நண்பகல் 12-00)

நாங்கள் மாச்சிங் கிராண்ட்தான் தருவோமே தவிர, மு மானியம் தரமாட்டோம் என்று சர்க்காரிலேயிருந்து பதி வருகிறது. அப்படிப்பட்ட நிலைமையிலேதான் அந்தப் பள்ளி கூடங்களைத் திறப்பதா, மூடுவதா, மாணவர்கள் படிப்பதா என் நிலைமை இருக்கிற காரணத்தால், நான் பெயர் படித்திருக்கி இவ்வளவு பள்ளிகளைக் குறித்தும் விரிவான அறிக்கை அதிகாரிகளுக்கு அனுப்பியிருக்கிறேன். அவற்றின்மே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்ச அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

காட்பாடி பெண்கள் உயர்நிலைப் பள்ளியைப் பொறுத் வரையிலே அது அங்கே இருக்கிற ஒரே ஒரு உயர்நிலைப்பள் 600 பெண்கள் அப்பள்ளியில் படிக்கிறார்கள். இரண்டே இரண் அறைகள்தான் இருக்கின்றன. அதற்காக மக்களிடம் வசூ செய்ய முற்பட்டேன். ஆனால், காலணா பெயரவில்லை. ஆகவே அரசு முழு மானியம் அளித்து, அந்தப் பள்ளியைக் கட் அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று இந் நேரத்திலே நான் பணிவ... கேட்டுக்கொள்கிறேன்.



74 மார்ச் 20] [திரு. துரை முருகன்]

முதலமைச்சர் அவர்கள்கூட தன்னுடைய வரவு-செலவுத் திட்ட ரையிலே சொல்லியிருக்கிறார்கள், கல்விக்காக இவ்வளவு செய் றுக்கிறோம், இத்தனை உயர்நிலைப் பள்ளிகளைத் திறந்திருக்கிறோம். நிலையில் கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டாமா வென்று ட்டார்கள்? கல்வியின் தரத்தை உயர்த்த, மாணவர்களும், சிரியர்களும், பெற்றோர்களும், கல்வித் துறை நிபுணர்களும் க்கேற்க வேண்டுமென்று. கல்வியினுடைய தரம் உயர, மாணவர் ளுக்கு மட்டுமல்ல பொறுப்பு. ஆசிரியர்களையும் சேர்ந்தது அது.

நான் ஆசிரியர்களைக் குறை சொல்வதாகக் கருதக் கூடாது. ர்க்காரிடம் இருப்பது இத்தனை பள்ளிகள், யூனியனிடம் ருப்பது இத்தனை பள்ளிகள் என்று புள்ளி விவரங்களைத் ருவார்கள். அந்தக் கணக்கெல்லாம் மக்களிடம் எடுபடாது. ப்படி முன்பு ஜில்லா போர்ட் பள்ளிகள் இருந்தபோது, சிரியர்களை ஜில்லா முழுவதும் மாற்றுகிற நிலைமை இருந்ததோ, ந்த நிலைமை மீண்டும் வரவேண்டும், ஆரம்பப் பள்ளிகளானாலும், யர்நிலைப் பள்ளிகளானாலும். அப்பொழுதுதான் ஆசிரியர் ளுக்குப் பயம் ஏற்படும். உள்ளூரிலே உபாத்தியார்; அங்கே ருக்கிற அரசியல் பிரச்னைகள்; அதற்குமேல் அங்கே வட்டிக் டை. இப்படி பல்வேறு ஆசிரியர்கள் உள்ளூரிலே ஆசிரியர்களாக ருக்கிற காரணத்தால் பள்ளிக்குப் போவதில்லை. முன்னாலே டமாஸ்டரிடம் லீவ் லெட்டர் கொடுத்து விடுகிறார்கள். ரண்டு மூன்று ஆசிரியர்கள் இருப்பார்கள். இன்ஸ்பெக்டர் ந்தால், லீவ் லெட்டரை தேதி போட்டுக் கொடுத்து விடுங்கள் ன்று சொல்லிக் கொடுத்து விடுகிறார்கள். இல்லாவிட்டால் டுத்த நாள் வந்து அதைக் கிழித்துவிட்டு, அட்டெண்டன்ஸ் ஜிஸ்தரிலே கையெழுத்துப் போடுகிறோம் என்று சொல்லக்கூடிய ல பள்ளிகளிலே இருக்கின்றன. அவற்றைக் கண்டு பிடித்திருக்கி ர்கள். இது கல்வியினுடைய தரத்தைத் தாழ்த்துவதற்கு உறு ணை புரிகிறது என்பது என்னுடைய தாழ்மையான எண்ணம் ன்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிகாரிகளைப் பொறுத்த வரையில், அந்த இலாக்கா அமைச்சர் வர்கள் கொஞ்சம் முடுக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். ஏதாவது ஒரு பிரச்னை குறித்து, நாங்கள் சொன்னால்,

பார்ப்பதற்கே நெடு நேரம் ஆகிறது; பார்த்தால், பதில் சொல் வதிலே மெத்தனம். அதற்குப் பிறகு கடிதம் எழுதினாலும் பதில் வரவில்லை. கல்வியைப் பொறுத்தவரையில், இவ்வளவு கோடி ரூபாயை நாம் செலவழிக்கிறோம். எனவே, அந்த இலாக்கா சற்று முடுக்கப்பட வேண்டும்.

உயர்நிலைப் பள்ளிகளையும், ஆரம்பப் பள்ளிகளையும் ஒரே ஒரு டைரக்டரால் நிர்வகிக்க முடியவில்லை. நான் கேட்கிறேன், கல்லூரிக் கல்விக்கென்று ஒரு தனி இயக்குநர் இருப்பதைப் போல், ஆரம்பப் பள்ளிகளுக்கென்று ஒரு தனி இயக்குநரும், உயர் நிலைப் பள்ளிகளுக்கென்று ஒரு தனி இயக்குநரும் போடப் பட்டால்தான் வேகமாகப் பணிகள் நடைபெற வசதி ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பர்ஸ்ட் இயர் பி.ஏ. விலிருந்து எம்.ஏ. வரையில் யார்யார் தமிழ் படிக்கிறாரோ, அவர்களுக்குத்தான் கல்லூரியிலே தமிழ் ஆசிரியர் களாகப் பதவி இருக்கவேண்டும். அல்லது 5 ஆண்டுக்காலம், பண்டிதர், புலவர் பட்டம் பெற்றதற்குப் பிறகு, ஆசிரியர் பயிற்சி பெற்றவராக இருக்க வேண்டும். பி.ஏ. வில் எக்சைபிக்ஸ் படித்து விட்டு, சிலப்பதிகாரத்தில் ஒரு காதையும், கம்ப இராமாயணத்தில் 2 காண்டங்களையும் எழுத்ததிகாரத்தையும் படித்தவுடனே எம்.ஏ. பர்ஸ்ட் கிளாஸில் பாஸ் செய்து விடுகிறார். உடனே, அவர் கல்லூரிக்கு வருகிறார். வந்தபிறகு, அவருக்கு ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சம் என்ன என்று கேட்டால் தெரியவில்லை. ஆகவே, பி.ஏ. வில் தமிழ் யார் படிக்கிறார்களோ அவர்கள்தான் கல்லூரிகளிலே, தமிழ்ப் பேராசிரியர்களாக ஆகவேண்டுமென்ற நிலைமையை உருவாக்கவேண்டும். பி.ஏ. வில் எக்கனாமிக்ஸ், எம்.ஏ. விலே இரண்டு வருஷம் தமிழ், அதற்குப் பிறகு கல்லூரி யிலே தமிழ்ப் பேராசிரியர் என்றால், மாணவனுடைய தரம் குறைந்துவிடும் என்று கூறிக்கொள்கிறேன்.

பிரசிடென்ஸி கல்லூரியில், இராணிமேரி கல்லூரியில் போஸ்ட் கிராஜுவேட் படிப்பதற்கு ஊக்கப்படுத்தப்போவதாகச் சொல்லி யிருக்கிறார்கள். மாநிலக் கல்லூரியில் கெமிஸ்ட்ரி பிரிவில் எம்.எஸ்ஸி., அதற்குப் பிறகு ரிசர்ச்சில் சேர்ந்தவர்களைப்பற்றி கணக்கு எடுத்துப் பார்க்கட்டும். யாராவது தாழ்த்தப்பட்ட



மாணவனோ அல்லது பிற்படுத்தப்பட்ட மாணவனோ சேர்ந்திருக் கிறானா—சேர்க்கப்பட்டிருக்கிறானா? மேல் ஜாதிக்காரர்கள்தான் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். காரணம் அங்கே இருக்கிற புரபசர் மேல் ஜாதிக்காரர். பலபேர் வந்து சேர்கிறார்கள், இடையிலே விட்டுவிட்டுப் போகிறார்கள். ஒரு மாணவன் சேர்ந்து, விட்டு விட்டுப்போனால், அவனுக்கு ஆகிற செலவு எவ்வளவு? அந்த இடம் காலியாக இருக்கிறது. அந்த நிலைமை பிரசிடென்ஸி காலேஜில் இருக்கிறது என்று சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

இப்பொழுது காதி போர்ட், மற்ற இலாகாக்கள் இருக்கின்றன. அங்கெல்லாம் தமிழ் படித்தவனுக்குத்தான் வேலை வாய்ப்பு என்ற நிலைமையைப் புகுத்தினால்தான் தமிழ் மீடியத்திலே படிப்பதற்கு மாணவர்கள் முன்வருவார்கள். தமிழ் படித்தால் வேலைவாய்ப்பு இல்லையென்ற நிலையில், தமிழ் படிக்க மாணவர்கள் முன்வருவார் களா? சிட்டியை விட்டுவிட்டு மற்றப் பகுதிகளிலே இருக்கிற கல்லூரிகளிலே, எவ்வளவு இடங்கள் காலியாக இருக்கின்றன? அங்கெல்லாம் தமிழ் மீடியம் இருக்கிறது. மாணவன் ஏன் அங்கு போக மறுக்கிறான்? படித்தால் வேலை வாய்ப்புக் கிடைக்குமோ, கிடைக்காதோ என்ற நிலை இருப்பதுதான். ஆகவே, தமிழ் படித்தவனுக்குத்தான் அரசாங்க வேலைகள் என்ற நிலைமையை உருவாக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நண்பகல் உணவுத் திட்டம். உணவை ஏற்றிச்செல்ல வண்டிகள் கொடுத்திருக்கிறார்கள். பல இடங்களிலே அவை பாதி வழியிலே நின்றுபோய் விடுகின்றன—அதை நான் சொல்லக்கூடாது. புதிய அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன், புதிய வண்டிகளை ஏற்படுத்தி, வேகமாக உணவு போய் சேருவதற்கு வழி வகை செய்ய வேண்டும். ஒரு மணிக்குச் செல்ல வேண்டிய உணவு 3 மணிக்குப் போனால், உணவு வரும்வரை பள்ளிக்குப் போகமாட்டேன் என்று பையன் கூறுகிறான். ஆகவே, இவை களுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கே. கந்தசாமி:** தலைவர் அவர்களே, இன்று தமிழக அரசின் சார்பாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற கல்வி மானியக் கோரிக்கையை, பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பாக வரவேற்று அவர்கள், கல்விக்கு அத்தியாவசிய

மாக அமைந்திருக்கின்ற ஆசிரியப் பெருமக்கள், குறிப்பாக,
இடைநிலை ஆசிரியர்களது கோரிக்கைகளில் பலவற்றை, அரசுக்கு
அதன் விளைவாக ஏற்படுகின்ற பல கோடி ரூபாய் நட்டத்தையும்
பொருட்படுத்தாமல், அவர்களின் நலனைக் கருதி நம்முடைய
கலைஞர் அவர்களுடைய அனுமதியின் பேரில், வசதிகள்
அறிவித்ததை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நமது தமிழகத்தின் மொத்த வருவாயில் ஏறக்குறைய 4-ல்
1 பங்கு கல்வி வளர்ச்சிக்காக, அறிவுக்கண்ணை இளைஞர்களுக்குத்
திறப்பதற்காக ஒதுக்கி இருப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சி
அடைந்தாலும்கூட, இந்த நாட்டில் ஏற்பட இருக்கிற எதிர்கால
நிலையை மையமாக வைத்து அதற்குரிய வகையில் கல்வி வளர்ச்
சிக்காகச் செய்யப்பட்டிருக்கிறதா என்றால், அது கேள்விக்குரிய
பிரச்னையாக இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்
படுகிறேன்.

பல கஷ்டங்கள் இருந்தாலும், குறிப்பாக மது விலக்கை
அமல்படுத்துவதால் பல கோடி ரூபாய் அரசுக்கு வருமான
இழப்பு ஏற்பட்டிருந்தும்கூட மக்களுடைய நலனைக் கருதி,
பலவிதமான காரியங்களை நல்ல நோக்கத்தோடு செய்து வருகிறது
இந்த அரசு. அதனுடைய நல்ல எண்ணத்தை நிச்சயமாக
மக்கள் அனைவரும் புரிந்துகொள்ளக்கூடிய அளவில் நடந்து
கொண்டிருக்கிறது.

கல்விக்காக ரூ. 110 கோடி ஒதுக்கியிருந்தும் எப்படிப்பட்ட
கல்வியை இன்று வைத்திருக்கிறோம் என்பதை இந்த மாமன்றத்
திலே உள்ள அத்தனை பேரும், பெரியவர்கள் அத்தனைபேரும்
பொறுப்புணர்ச்சியோடு சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.
British mode of education is taught till today
என்பதைத் தவிர இன்றைய நாட்டின் விவசாயத்திற்கு உகந்த
தாக,

Character-making, man-making education
என்று சுவாமி விவேகானந்த அடிகள் சொன்னார்களே. ஒவ்வொரு
மனிதனும் மனிதனாக வாழ்வதற்கு வளர்த்துக் கொள்வதற்கு
உபாதிக்கக் கூடிய முறையில் இன்று சப்ஜெக்ட்கள் அமைந்திருக்
கின்றனவா என்றால், கல்வி நிலையங்கள் இயங்குகின்றனவா



என்றால், இல்லை என்பதுதான் என்னுடைய மிக வருத்தமான,
தாழ்மையான கருத்து என்பதைத் தெரியப்படுத்தக் கடமைப்
பட்டிருக்கிறேன். இவ்வளவு பணம், 4-ல் 1 பங்கு, கல்வி
வளர்ச்சிக்காக, அறிவு வளர்ச்சிக்காக செலவு செய்தாலும்
"reaction of expenditure on education" என்ற கேள்வியை
எழுப்பிப் பார்க்கிறபொழுது "We have produced so many
graduates and technical persons. 3,000 engineers remain
unemployed" என்று அன்று மாண்புமிகு சட்ட அமைச்சர்
அவர்கள்கூட குறிப்பிட்டார்கள் [illegible] ஏறக்குறைய 5 லட்சம் பேர்
படித்தவர்கள், இளைஞர்கள் [illegible] வேலையில்லாமல் இருக்கிறார்கள்.
பொறி இயல் கல்வி பயின்ற [illegible],000 பேர் வேலை [illegible]லாமல் இருக்கிற
நிலைமையை நாம் காண்கிறோம். இதனுடைய விளைவு என்ன
ஆகும். அன்று எதிர்க்கட்சியிலே இருந்த [illegible] முன்னாள்
மாண்புமிகு சபாநாயகர் [illegible] தெளிவாகக்
குறிப்பிட்டார்கள். [illegible] அவர் [illegible]யிலிருக்கிறார்.
கல்விக்காக நாம் செலவழிக்கின்ற பணம் என்ன [illegible] விளைவை உண்டு
பண்ணுகிறது என்பதைப் பார்க்கும்பொழுது [illegible] வான்ட்டிடேடிவ்
ரிசல்ட்டை நாம் கொடுக்[illegible] எண்ணிக்கையை
அதிகரித்திருக்கிறோமேயொழிய, [illegible]டிவ் எஜுகேஷனை
இல்லை. தரமான கல்வியாக இல்லை, தன்னைத் தானே தாங்கிக்
கொள்கிற தன்னம்பிக்கையோடு இயங்குகிற, மனிதனை
இயக்கவில்லை, உற்பத்தி செய்யவில்லை என்று கூறினார்கள்.
அப்படியானால் எங்கே கொண்டுபோய்விடும்? உள்ள மாவை
வைத்து பலகாரம் செய்து கொடுப்பதைப்போல் நம்முடைய
அமைச்சரவை இருக்கிற நிதியை வைத்து மிகக் கணிசமான
தொகையைக் கல்விக்காக ஒதுக்கி இருக்கிறார்கள் என்று
பாராட்டுவதும் கல்வித் துறையிலே பல அறிவாளிகள்
இருக்கிறார்கள், பல பெரியவர்கள் இருக்கிறார்கள். அவர்கள்
அணிந்து அரசுக்கு ஆலோசனைகளைச் சொல்லவேண்டும், அவர்கள்
சொல்கிற ஆலோசனைகளையும் அரசு பெருந்தன்மையோடு ஏற்றுக்
கொள்ள வேண்டும். இந்த இரண்டும் இருந்தால் எதிர்காலத்திலே
தமிழகம் நன்றாக அமையும். மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர்
கலைஞர் அவர்கள் பலவிதமான புரட்சிகரமான திட்டங்களையெல்
லாம் கொண்டுவந்திருக்கிறார்கள், எத்தனையோ எதிர்ப்புகள்,
கெட்ட பெயர்கள் வந்தாலும் அக்களையெல்லாம் ஏற்றுக்கொண்டு
நல்ல நல்ல திட்டங்களைக் கொண்டுவந்திருக்கிறார்கள், அவர்கள்

தமிழகத்தின் நன்மையைக் கருதி கல்வியிலே ஒரு புரட்சிகரமான
திட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று தலைவர் அவர்களே,
தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

ஜாப் ஓரியண்டட் எஜுகேஷன் வேண்டுமென்று நான் எஜு
கேஷன் டிமாண்ட் வரும்பொழுதெல்லாம் பேசிக்கொண்டே
வருகிறேன். அதற்கு இந்த அரசு எந்த அளவிற்கு செவிசாய்த்
திருக்கிறது என்று புரியவில்லை. வேலை வாய்ப்புத் திட்டங்கள்
அதிகரிக்கக்கூடிய கல்வியை—உலகத்திலேயே அதிகமாக ஜனத்
தொகையைக் கொண்ட சீனாவே பாபுலேஷன் புராபளத்தை
ஓரளவுக்குச் சமாளிக்கக்கூடிய நிலைமையிலே கல்வித் துறையை
வைத்திருக்கிறார்கள் என்றால் 60 கோடி மக்கள் என்று சொல்லு
கின்ற, நாலில் ஒரு பங்கு உலகத்தின் ஜனத்தொகையை உள்ளடக்
கிய சீனாவே ஜனத்தொகையைப் பிரச்னையாக ஆக்காமல் கல்வித்
திட்டங்களை வைத்து இருக்கிறது என்றால்—நாம் ஏன் கூடாது
என்ற கேள்விக்குறியைக் கிளப்பி அதற்குரிய பதிலை நாம் கண்டு
பிடிக்கவேண்டும்.

டெக்னிக்கல் ஜாப் ஓரியண்டட் எஜுகேஷன் கொடுப்பதன்
மூலமாக மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியதைப்போல ஒழுங்
கின்மை, ரெஸ்ட்லஸ்னஸ் இவைகளையெல்லாம் தீர்க்கவேண்டும்,
அவற்றிற்கு ஆசிரியர்கள் மாத்திரம் பொறுப்பல்ல
parents, teachers and students என்ற ஒரு டிரையாங்குலர்
மூக்கூட்டு அமைப்பு என்ற முறையிலே மாணவர்களின் பிரதி
நிதிகள், ஆசிரியர்களின் பிரதிநிதிகள், பெற்றோர்களின் பிரதி
நிதிகள்—வேண்டுமானால் கல்வித் துறையிலிருந்து ஒருவரையும்
சேர்த்துக் கொள்ளலாம்—ஆகிய நான்கு தரப்பார்களைக்கொண்ட
ஒரு குழுவை வைத்து கல்வியின் தரத்தைப் பரிசீலிக்கச்செய்து
ஒழுங்கு, நடைமுறை, கட்டுப்பாடு, இவற்றினைச் சரிவர செய்வ
தற்கு என்ன என்ன செய்யலாம் என்று ஆலோசனை சொல்லக்
கூடிய முறையிலே ஒரு கமிட்டி வைத்தால் தாற்காலிகமாக
நிவாரணம் ஆக அது அமையாதா என்று கேட்க விரும்புகிறேன்.

இதை அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். இந்த அளவிற்கு ஜெனரல் எஜுகேஷன் இருந்
தாலும் மாணவர்களிடையே எதிர்கால சந்ததிகளிடையே நாம்





எதிர்பார்க்கின்ற தரம் இல்லையென்பதை ஒத்துக்கொண்டதாக
வேண்டும். தனிப்பட்ட முறையிலே ஒவ்வொருவரும் ஒத்துக்
கொண்டாலும் அதற்குப் பரிகாரம் என்ன என்ற விருவோடுதான்
வாழ்ந்து கொண்டு வருகிறோம். "when money is lost,
nothing is lost, when health is lost, something is lost, but when
character is lost everything is lost" என்று பேரறிஞர்கள்
கூறியிருக்கிறார்கள். பணத்தை இழந்தவன் ஒன்றும் இழந்தவனாக
மாட்டான், சுகத்தையிழந்தவன் சிறிது இழந்தவன் ஆவான்,
ஆனால் நல்ல குணத்தை இழந்தவன் அத்தனையையும் இழந்தவ
னாகிறான் என்று பேரறிஞர்கள் கூறிய கருத்துக்களைக் கொண்டு
நல்ல குணங்கள் உள்ள எதிர்கால சந்ததியை உற்பத்திசெய்ய
நாமெலலாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

எலிமெண்டரி ஸ்கூல் டீச்சர்ஸ், இடைநிலை ஆசிரியர்கள் இவர்
களுக்கு எல்லாம் அரசு பலவிதமான நிவாரணங்களை அளித்திருக்
கிறது. அமைச்சர் அவர்கள் அறிவித்ததை நான் பாராட்டி
இன்னும் அவர்கள் கிராம ஈட்டுப்படி போன்ற படிகளையெல்லாம்
கேட்கிறார்கள். சென்ற வாரம் என்னுடைய பகுதியிலே அவர்கள்
மாநாடு போட்டுக் கேட்டார்கள். கிராமத்திலே மருந்து வாங்க
முடியவில்லை. சில சாமான்கள் வாங்க வேண்டுமென்றால் நகரங்
களுக்குத்தான் செல்லவேண்டியிருக்கிறது, டாக்டர்களுக்கு எப்படி
இன்சன்டிவ் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறதோ அதைப்போன்று
எங்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவர்
களுக்காகத் தனி வாரியமொன்று அமைக்க வேண்டுமென்ற
கருத்தை உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்
டார்கள். அந்தக் கருத்தை நான் வரவேற்கிறேன். அதைச்
செயல்படுத்தவேண்டும். அவர்களுடைய நலனைக் கவனிப்பதற்
காக தனிப்பட்ட குழுவொன்று அமைக்கப்பட வேண்டுமென்று
தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்எம்ப்ளாய்மெண்ட் பிராப்ளத்தை எடுத்துக் கொண்டால்
கொடுக்கும் கல்வியின் விளைவு வேலையில்லாத் திண்டாட்டத்தில்
கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது, வேலையில்லாத் திண்டாட்டத்
தைத் தனிப்பட்ட பிரச்சனையாகக் கருதாமல் சமுதாயத்தினுடைய
ஒரு நோயாகக் கருத வேண்டும், வங்கத்திலே அந்த நிலைமை

[திரு. கே. கந்தசாமி] [1974 மார்ச் 20

ஏற்பட்டது, இப்பொழுது கோளத்திலே ஏற்பட்டிருக்கிறது,
தமிழகத்திலே பாவாமல் இருப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ள
வேண்டும்.

படித்தவர்கள் அல்லாதவர்கள் ஒரு ஜாதியாகவும் படித்தவர்கள்
ஒரு ஜாதியாகவும் இருக்கக்கூடிய ஆங்கிலேயன் கொண்டுவந்த
முறையை மாற்றிடவேண்டும். மில்டன், ஷேக்ஸ்பியா இவர்
களைப் படித்தவர்கள் வேலை செய்கிறார்களா என்று பார்த்தால்
அவர்களுக்கு கவலை பிடித்துத் தண்ணீர் இறைக்கத் தெரியவில்லை,
வரப்பிலே நடக்கத் தெரியவில்லை, வாட்சையும் செருப்பையும்
போட்டுக்கொண்டு வயலுக்குப் போவதால் என்ன பயன்?
வேலையும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

There is no guarantee for job after education; why that
education.

ஆகவே, எதிர்காலம் இருளாக, கேள்விக்குறியாக மாறியிருக்
கிறது. படியாத திருடர்களைவிட படித்தவர்கள் திருடர்களாக
மாறுகிற காரணத்தினாலே பல நிலைமைகள் ஏற்படுகின்றன.
அதைப் போக்கியாகவேண்டும். மதிய உணவிற்காக டிநோடிபைட்
டிரைப்ஸ்க்கும் பேக்வர்ட் கிளாஸஸ்-க்கும் தரப்படுகின்ற 15 பைசா
என்பது போதாது, விலை உயர்ந்திருக்கின்ற நிலைமையில் அதை 20
பைசாவாக உயர்த்தி அரிசன மாணவர்களுக்குக் கொடுப்பதைப்
போல் கொடுத்தால் நல்லது என்று தெரிவித்துக்கொண்டு
அமைகிறேன், வணக்கம்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** தலைவர் அவர்களே, இந்தக்
கல்வி மானியத்தின்மீது ஒரு சில கருத்துக்கள்.

1956-57-ஆம் ஆண்டிலே 11 கோடியாக இருந்தது 110 கோடி
யாக இன்றைக்கு உயர்த்தப்படுகிறது என்று சொல்லப்படுகிறது.
1967-ஆம் ஆண்டிலே 44 கோடியாக இருந்தது இன்றைக்கு 110
கோடியாகியிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதை உண்மை
யாகப் பாராட்டினாலும்கூட அன்றைக்கிருந்த விலை, ஆசிரியர்களின்
சம்பளம், கட்டடச் செலவுகள் இவையெல்லாவற்றையும்
கணக்கில் எடுத்துப் பார்த்தால் நம்முடைய முன்னேற்றம்
அளவிற்குத்தான் இருந்தாலும் அதையும் பாராட்டக் கடமைப்
பட்டிருக்கிறோம்.



1974 மார்ச் 20] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

தொடக்கப் பள்ளிகளுக்கு 90 சதவீதம் மாணவர்கள் கொண்டு
வந்து சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டு இருக்
கிறது. இன்னும் உள்ள 10 சதவீதம் மாணவர்களையும் பள்ளி
களுக்குக் கொண்டுவர என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்
கிறது என்பதையும் இதிலே சேர்த்துச் சொல்லியிருந்தால் நன்றாக
இருந்திருக்கும். எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் திரு. கந்த
சாமி அவர்கள் பேசியபோது தெரிவித்த அந்த கருத்தை நானும்
கொண்டிருக்கிறேன். கல்லூரிகளிலே சென்று படித்துவிட்டு
வெளியே வருகின்ற மாணவர்கள் எதிர்காலத்திலே என்ன நிகழப்
போகிறதோ என்ற கேள்விக்குறியோடுதான் வருகிறார்கள்.
அவர்கள் கல்லூரிகளிலே சேரும்போழுதே படித்துவிட்டு ஏதாவது
வேலையில் சேரவேண்டுமென்றுதான் நினைக்கிறார்கள், கல்வி தன்னை
மேம்பாடு செய்வது என்று கருதி கல்லூரியிலே சேருவதில்லை.

வாழ்க்கைக்கு கல்லூரிப்படிப்பு ஒரு சாதனம் என்றுதான்
கருதப்படுகிறது, அந்த நிலையில்தான் கல்லூரிப்படிப்பிலே சேருகி
றார்கள், போட்டிபோட்டுக்கொண்டு சேருகிறார்கள், 4, 6 ஆண்டுகள்
செலவழித்துப் படித்துவிட்டு வெளியே வந்தால் வேலையில்லாமல்
திண்டாடக் கூடிய நிலைமைதான் இருக்கிறது.

மூதறிஞர் ராஜாஜி அவர்கள் குலக்கல்வித் திட்டம் என்ற
ஒன்றைக் கொண்டு வந்தார்கள், அதிலே பல குறைபாடுகள்.
கீழ்ஜாதி மக்கள் கீழ்ஜாதி மக்களாகவேதான் இருக்க வேண்டும்.
தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேறுவதற்கு வழியில்லை என்ற
காரணங்களினால் நாம் அனைவரும் அதை எதிர்த்தோம், தோற்
கடிக்கச் செய்தோம்.

இன்றைக்கு என்ன பார்க்கிறோம் என்றால் கல்லூரியிலே
படித்துவிட்டு வந்தால் வேலையில்லை, அது மட்டுமல்ல, படித்தவன்
வயலுக்குச் சென்று வேலை செய்தால் அது தன்னுடைய கௌரவத்
திற்கு உகந்தது அல்ல என்று நினைக்கிறான். என்னுடைய மகனை
எடுத்துக்கொண்டால் படிப்பு முடிந்ததற்குப் பிறகு கடையிலே
உட்கார்ந்து வணிகன் என்ற முறையிலே கல்லாவிலே உட்காரு
வதற்கு விருப்பமில்லை. ஏனென்றால் அது தன்னுடைய கௌரவத்
திற்கு உகந்ததல்ல என்று நினைக்கிறான். இதனால்தான் வேலை
யில்லாத் திண்டாட்டம் பெருகிக்கொண்டே போகிறது. இதற்கு
ஒரு பரிகாரம் காணவே[illegible]

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1974 மார்ச் 2

தம்முடைய வருவாயில் 25 விழுக்காடு பணத்தைச் செலவழித்து
வேலையில்லாத் திண்டாட்டத்தை மறைமுகமாக உண்டாக்குகின்
றோம். அந்த அளவிற்குக் கல்வியில் ஏதோ கோளாறு இருக்கத்
தான் இருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் கல்விக்காகத்தான்
படிக்கிறோம் என்ற எண்ணம் உண்டாகாத வரையில் அப்படித்
தான் இருக்கும். கல்வி பெறுகின்றவர்கள் அரசாங்கத்தை மட்டும்
நம்பியிராமல், தங்கள் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்த
கொள்ளும் அளவில் இந்தக் கல்வியின் பலன் ஏற்பட்டால்தான்
இந்த நாடும் வளரும், திறமையும் வளர்ந்தது என்று ஒப்பு
கொள்ள முடியும்.

அடுத்து, கல்லூரிகளில் இடையிலே விழுக்காடு ஃபால் அவுட்
இடையிடையில் நின்று விடுகிறார்கள். கல்லூரி ஆசிரியர்களின்
தகுதியைப் பார்க்கும்பொழுது அது பெருமைப்படுவதாக இல்லை
ஏதேதோ சிபார்சுகள் போன்ற கோளாறுகளால் பல கல்லூரிகளில்
ஆசிரியர்களாக இடம் பெற்று விடுகிறார்கள். போதுமான தகுதி
உள்ளவர்கள் குறைவாக இருப்பதால்தான் மாணவர்களின்
உள்ளங்களிலே கிளர்ச்சியும் ஏற்படுகிறது.

அதோடு கல்லூரிப் படிப்பின் தன்மைகளிலே 'மாரல் எஜு
கேஷன்' என்று சொல்லப்படும் நீதிநெறி முறைகளைப் புகு
தாத தன்மை இருக்கிறது. மதச் சார்பற்ற அரசு என்பதா
மதப் பிரச்சாரங்கள், மதக் கோட்பாடுகளைப் பெறுததால்தான்
மாணவர்கள் தான்தோன்றித்தனமாக நடப்பதற்கு வாய்ப்பு
ஏற்படுகிறது. அதனால்தான் குஜராத் பற்றி எரிந்தது, பீகார்
பற்றி எரிகிறது. இப்படி ஒவ்வொரு மாநிலமும் பற்றி எரியக்
கூடிய காட்சியைக் காண நேரிடும்.

இப்படி நாட்டை அழிப்பதற்காக ஒரு படையை உருவாக்கு
வதற்காகவா இத்தனை பணத்தைச் செலவழிக்கிறோம்? அவர்
களுக்கு நாட்டுப்பற்றையும், கடமை உணர்வையும் உண்டாக்கு
கின்ற வகையில் கல்வி போதிப்பதைப்பற்றி அறிஞர்கள் கூடி
ஆலோசிக்கின்ற நேரம் இன்னும் வரவில்லையா?

ஒரு மாணவன் எம். எஸ்ஸி. படிக்க வேண்டுமென்றால் அரசாங்
கத்திற்கு ஆறு ஆண்டுகளில் ஏறத்தாழ 4,500 ரூபாய் செலவாகிறது.
மாணவன் தன்னுடைய வயதில் [illegible] ஈட்டு



1974 மார்ச் 20] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

ஆண்டுகள் வரையில் செலவழிக்கிறான். மாணவனுடைய தந்தைக்கும் 10,000 ரூபாய் வரையிலும் செலவாகிறது. இவ்வளவு பணம் செலவழித்து எம். எஸ்ஸி. பட்டதாரியாகிய ஒருவர் நாளைக்கு துணிக்கடைக்குச் சென்று வியாபாரம் செய்தால் அரசாங்கத்திற்கு என்ன பலன். அவனுக்குத்தான் என்ன பயன்? இந்த நாட்டிற்கு என்ன பயன்?

எனவே கல்வித் தகுதியை அளிக்கும்பொழுது யார் யார் எந்தெந்த துறைக்குப் போக வேண்டுமென்று விரும்புகிறார்களோ அதை வரையறுத்துக்கொள்ள வேண்டும். ஒருசிலரை விஞ்ஞானத்திற்குத் தேர்ந்தெடுக்க வேண்டும், வணிகத் துறையில் செல்ல விரும்புகின்றவர்களுக்கு வணிகப் படிப்பைக் கற்றுத்தர வேண்டும். தொழில் துறைக்குச் செல்ல விரும்புகிறவர்களுக்குத் தொழில் படிப்பைக் கற்றுத்தர வேண்டும். அவ்வாறு சிந்திக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

ஆனால் நாட்டு மக்கள் அனைவருக்கும் குறிப்பிட்ட அளவில்—எஸ். எஸ். எல். சி. என்ற அளவிற்கு வைத்துக் கொள்ளலாம்—போதுமான கல்வித் திட்டத்தைத் தந்துவிட்டு அதற்குமேல் மேல் படிப்புகளுக்கு ஒரு கட்டுத்திட்டத்தை வரையறுத்துக் கொள்ள வேண்டுமென்பதைத்தான் வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக ஒரு முக்கியமான பிரச்சனையைச் சொல்ல ஆசைப்படுகின்றேன். நிதிநிலை அறிக்கை விவாதத்தின்பொழுது கூடச் சொன்னேன். கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களின் நினைவாக ஒரு ஞாபகார்த்தக் கல்லூரியை ஏற்படுத்த வேண்டும். அந்தக் கல்லூரி மக்களுக்குப் பயன் உள்ளதாக, அதிலிருந்து படித்து வருபவர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தில் சிக்காமல் இருக்கும் அளவில், நுட்பம் நிறைந்த கல்லூரியாக இருக்க வேண்டும். இதற்காக முஸ்லீம் பெரியார்கள் ஒன்று சேர்ந்து கமிட்டி ஏற்படுத்தியுள்ளார்கள்.

இந்தக் கல்லூரியை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் ஆதரவு தர வேண்டும். அதற்குரிய நிலத்தைத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு, மூதறிஞர் இராஜாஜி அவர்களுக்கு நினைவுச் சின்னம் ஏற்படுத்தி பெருமைப்

பட்ட இந்த அரசு அதே அந்தஸ்தில் வைக்கக்கூடிய கண்ணியத்திற்குரிய காரியத்தை இல்லத் அவர்களுக்கும் ஏற்படுத்த வேண்டுமென்பதிலே அரசு ஆர்வம் கொள்ள வேண்டும், அதற்கான உதவிகள் அனைத்தையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்குரிய சாதகமான பதிலை இன்றைக்கு அமைச்சர்கள் நிச்சயமாகத் தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

டாக்டர் ஆஃப் காலேஜியேட் [illegible] பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. [illegible] அவர்கள் விரிவாகப் பேசினார்கள். உண்மையிலேயே பெரிய அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. அதில் இரண்டாந்தரமான கருத்துக்கு இடமேயில்லை. ஒரு மனிதருக்கு நிச்சயமாக அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்தச் சபையில் முழுப் பொறுப்பு உணர்ச்சியோடு நான் சுட்டிக் காட்டுகிறேன். அதுபற்றி இந்த அரசு என்ன செய்ய இருக்கிறது, அநீதிக்கு என்ன மாற்று செய்ய இருக்கிறது என்று தமிழ்நாட்டு முஸ்லிம் மக்கள் எதிர்பார்த்து நிற்கிறார்கள் என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன். அநீதி இழைக்கப்பட்டவர்கள் உயர்நீதிமன்றத்திற்குச் சென்றுதான் நீதி பெற வேண்டுமென்று இல்லாமல் அரசே ஆவன செய்யும் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். [illegible] ஜூனியராக இருந்தவருக்கு அந்தப் பதவி கொடுக்கப்பட்டிருக்கிறது. அமைச்சரவர்கள் நீதியை நிலைபெறச் செய்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

மதரஸா [illegible] முறையின் [illegible] அவர்கள் [illegible] சேர்த்துக் கொடுக்கிறார்கள். [illegible] போகின்ற வகையில் சொல்லிக் கணிதம் முதலிய பாடங்களுடன் எங்கள் மார்க்கப் பாடப்புத்தகங்களையும் படித்து அவர்கள் வெளியே வருகிறார்கள். [illegible] மதரஸாக்கள் அரசாங்கத்தார் அங்கீகாரம் பெற்றவைகளாக இல்லை. எனவே அதில் பாஸ் செய்தவர்கள் [illegible] தகுதி பெற்றவர்களாக இருந்தாலும் வெளியிலே [illegible] அவர்கள் அங்கீகரிப்பதில்லை. [illegible] இருக்கின்ற ஒரு அநியாயமான நிலை இருக்கிறது [illegible]



ஒரு தேர்வு வைக்கலாம், எல்லாவிதமான கடுமையான தேர்வுகளையும் வைக்கலாம். அதில் அவர்கள் தேர்வு பெற்றால் எந்த வகுப்பிற்குத் தகுதி உடையவர்களாக இருக்கிறார்களோ அந்த வகுப்பில் சேர்த்துக்கொள்ளுகின்ற ஒரு முறையைக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதராஸ பெண்கள் முஸ்லிம் பாடசாலைகள் ஆம்பூர், வாணியம்பாடி, வேலூர் போன்ற நகராட்சிகளில் நடத்தி வருகிறார்கள். அவர்களுக்கு வண்டி வசதிகள் நகராட்சிச் செலவில் அளிக்கப்பட்டு வந்தது. ஆனால் என்ன காரணத்தாலோ அந்த வசதி ஒரு மாதத்திற்கு முன்பு ரத்து செய்யப்பட்டுவிட்டது. இது ஒரு அநீதி. முஸ்லீம் பெண்களில் படித்தவர்களே மிகவும் குறைவு. பின் தங்கிய சமூகம் என்பது அரசாங்கத்தாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட முஸ்லீம் சமுதாயத்திலுள்ள பெண்கள் படிப்பதற்குப் புதிதாக வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்பதற்குப் பதிலாக, இருக்கின்ற இந்தச் சிறிய வசதிகளைக் கூட வாபஸ் பெறுவது என்பது நியாயமாகாது. ஆகவே, இதை மீண்டும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்தப் பாட நூல்களைப்பற்றி ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். ஆல் இந்திய ரேடியோவில்தான் ராமபஜனை என்றால் இங்குள்ள நூல் நிலையங்களில் ஒருதாப்பான நூல்களாகவே இருக்க வேண்டுமா? அருமை நண்பர் அழகமுத்து அவர்கள் இஸ்லாமிய சமயத்தின் கோட்பாடுகள் என்ன, சரித்திரம் என்ன என்று தெரிந்துகொள்ளக்கூடாதா? நான் தெரிந்திருக்கின்ற அளவிற்குப் பாரதக் கருத்துக்களை இங்கு சட்டமன்ற உறுப்பினர்கள் இஸ்லாமியக் கருத்துக்களைத் தெரிந்திருக்க வாய்ப்பு இல்லை என்று கருதுகிறேன். ஆகவே, ஒருவருக்கொருவர் தத்துவங்களைப் புரிந்து பரஸ்பரம் புரிந்து கொள்ளவும், மாச்சர்யங்கள் நீங்கி ஒற்றுமை கொள்ளவும் வகை செய்தால் ஒற்றுமை ஏற்பட வழி உண்டாகும். ஆகவே இந்த நூல் நிலையங்கள் அத்தனையிலும் இஸ்லாமியக் கருத்துக்கள் உள்ள புத்தகங்களைச் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1974 மார்ச் 20

அடுத்து, இண்டக்ரேட்டட் சர்வீஸ் என்ற ஒரு குறிப்பு
இருக்கிறது. அது நியாயமல்ல. சென்னை அளவிலே உள்ள சர்வீஸ்
தனியாகவும், மற்ற சர்வீஸ்கள் தனியாகவும், இதுவரையில் இருப்
பதைப்போலவே இருக்கவேண்டும். இண்டக்ரேட் செய்வதால்
ஒரு சாரார் பாதிக்கப்படுகிறார்கள் என்ற கருத்து பரவலாக இருக்
கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் புதிய முயற்சியில் இறங்க
வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழாசிரியர்களை முதுநிலை ஆசிரியர்களாக
மாற்றப்போவது வரவேற்கத் தக்கது, அதை நான் முழுதும் வர
வேற்கின்றேன். ஆனால் அதே நீதி உருது மொழி ஆசிரியர்களுக்
கும், அராபி மொழி ஆசிரியர்களுக்கும் இல்லை என்றால் நீங்கள்
அரசியல் சாஸனத்தைக் குப்பையில் தூக்கி எறியுங்கள். இதை
வைத்துக்கொண்டு சமநீதி என்று சொன்னால், மதத்தின் பெய
ராலே, ஜாதியின் பெயராலே, மொழியின் பெயராலே, ஆண், பெண்
என்ற இனத்தின் பெயராலே வேற்றுமைகள் பாராட்டப்பட
மாட்டாது என்று உலகத்திற்கு அறிவித்துவிட்டு, தமிழ் மொழி
பயின்று ஆசிரியர்களாக வந்தால் ஒரு நிலை, உருது மொழி பயின்று
ஆசிரியர்களாக வந்தால் ஒரு நிலை, சமஸ்கிருதம் பயின்று ஆசிரியர்
களாக வந்தால் ஒரு நிலை, அராபி மொழி பயின்று ஆசிரியர்களாக
வந்தால் ஒரு நிலை என்று சொன்னால் இந்த அரசியல் சாசனம்
எதற்கு? செங்கோட்டை போன்ற இடங்களில் இம்மாதிரி அநீதி
இழைக்கப்பட்டிருக்கிறது. (மணியடிக்கப்பட்டது)

Sir. I am the only member speaking from my party. I am
speaking on behalf of the minority community. Just one minute,
Sir ஒரேயொரு நிமிஷம்கொடுங்கள், முடித்து விடுகிறேன்.

திருச்சியிலே ஒரு பல்கலைக் கழகம் ஏற்படுத்த வேண்டுமென்ற
வேண்டுகோளை விடுக்கிறேன்.

ஆசிரியர்களுக்குச் சம்பள உயர்வு மட்டும் போதாது. அவர்
களுக்குச் சமுதாயத்தில் அந்தஸ்து ஏற்படுவதற்கு வழி செய்ய
வேண்டும். மாநகராட்சிகளிலே, நகராட்சிகளிலே உள்ள தலைமை
ஆசிரியர்களை எக்ஸ் அஃபிஷியோவாக ஆக்க வேண்டும். அப்
பொழுது அவர்களுக்குச் சமுதாயத்திலே அந்தஸ்து கிடைக்கும்.



1974 மார்ச் 20] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

கோ-எஜுகேஷன் நிச்சயமாகத் தேவையில்லை. அதை முஸ்லீம் சமுதாயம் ஏற்றுக்கொள்ளாது. இன்றைக்கு இருக்கின்ற நிலைமை இருந்தால் போதும். அதுதான் பெண்களுக்கு சௌகரியம். இன்றுள்ள மாணவர்களுக்கு இருக்கின்ற மனோநிலையில் கோ-எஜுகேஷன் வைப்பது இன்னும் குட்டிச்சுவராவதற்கா. . . . . (மணியடிக்கப்பட்டது)

(பிற்பகல் 12-30)

**திரு. கே. பி. கந்தசாமி:** தலைவர் அவர்களே, கல்வியமைச்சர் அவர்கள் கோரியிருக்கும் கல்வி மானியத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க முன்வருகிறேன்.

தமிழ் நாட்டில் கல்வித் துறை ஆற்றியிருக்கும் பணிகள், அடைந்திருக்கும் வளர்ச்சி இந்த மாநில மக்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை, இந்த மாநிலத்திலுள்ள மாணவர்கள் போற்ற வில்லை, இந்த நாட்டிலுள்ள ஆசிரியர்கள் பாராட்டவில்லை என்று இங்கே எதிர்க்கட்சியில் இருந்து எதிர்க்க வேண்டுமென்ற வாதத் திற்காகச் சொன்னாலும்கூட நம் கையில் கொடுத்திருக்கும் அறிக்கையைப் படித்துப் பார்க்கும்போது நூற்றுக் கணக்கான வகையில் இந்தத் துறை வளர்ச்சியடைந்திருக்கிறது என்பதை நாம் பார்க்காமல் இருக்க முடியாது. 110 கோடி ரூபாய் அளவுக்கு வருகிற ஆண்டில் செலவு செய்யக்கூடிய வகையில் இங்கு மானியக் கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

இந்தத் தொகையைக் கேட்டவுடன் இந்த அளவுக்குச் செலவு செய்ய வேண்டுமா என்ற வாதத்தைக் கிளப்பினார்கள். இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கடந்த வாரத்தில் ஸ்வீடன் நாட்டில் என்னைச் சந்தித்த சில பேர்கள் கேட்டார்கள். அவர்கள் கேட்டதற்கு இங்கு பட்ஜெட் செஷன் நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்ன நேரத்தில் உங்க ளுடைய பட்ஜெட்டில் கல்விக்காக எந்த அளவுக்குப் பணம் ஒதுக் கப்பட்டிருக்கிறது என்று கேட்டார்கள். 110 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதோடு மற்ற வகைகளில் செலவழிக்கப்படுகிற பணத்தையும் சேர்த்து அது 138 கோடி ரூபாய் அளவுக்கு வரும்; மொத்த வருவாய் 483 கோடியில் அது 30 சதவிகிதமாகும் என்று

சொன்னேன். அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். பாராட்டினூர்கள்.
மற்ற நாடுகளில் இருப்பவர்கள் இந்திய நாட்டைப் பற்றி எண்ணு
கிறபோது இங்குள்ளவர்கள் கல்வியறிவு இல்லாதவர்கள், கல்வியில்
மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கக்கூடியவர்கள் என்ற எண்ணம்
இருக்கிறது. நாம் மொத்த வருவாயில் 30 சதவிகிதம் கல்விக்
காகச் செலவழிக்கிறோம் என்று கேள்விப்பட்டதும் பாராட்டு
கிறுர்கள்.

இங்கு இந்த அளவுக்குச் செலவு செய்ய வேண்டுமா என்ற
கேள்வியை எழுப்பிவிட்டு அதற்குப் பிறகு எஸ். எஸ். எல். சி.
எக்ஸாமினேஷன் பீஸ் வசூலிக்க வேண்டுமா என்று கேட்டார்கள்.
அதை வசூலிக்காவிட்டால் தமிழகத்தின் கல்விச் செலவு இன்னும்
அதிகமாகும் என்பதை இந்த நேரத்தில் எடுத்து வைக்க விரும்பு
கிறேன்.

பி. யு. சி. வரை இலவசக் கல்வி என்ற முறையை மாற்றி வசதி
உள்ளவர்கள் கல்விக்காக இந்தக் கட்டணத்தைச் செலுத்தக்
கூடிய முறையில் மாற்றியமைக்க வேண்டுமென்று எடுத்துக் கூறி
ஞர்கள். அந்தக் கருத்தை முழு மனதாக ஏற்றுக் கொள்கிறேன்.
பள்ளியிலும் சரி, கல்லூரியிலும் சரி, பணம் செலுத்தக்கூடியவர்க
ளிடமிருந்து பணத்தை வசூலித்து அதன் மூலம் கிடைக்கக்கூடிய
பணத்தை வைத்து வசதி இல்லாத மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப்
கொடுக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டால் பாராட்டத்தக்க விதத்தில்
இருக்கும் என்ற கருத்தை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

எங்களுடைய நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில்
ஸ்காலர்ஷிப் என்ற அளவைப் பார்க்கும்போது நாடார் சாதியைச்
சேர்ந்தவர்கள் கிறித்தவர்களாக இருந்தால் ஸ்காலர்ஷிப் கிடை
யாது என்று கூறுகிறார்கள். நாம் செக்குலர் ஸ்டேட் என்று
பேசிக் கொண்டிருக்கும் நேரத்தில் ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு
மத அடிப்படையில் இப்படிப்பட்ட சலுகைகள் மறுக்கப்படுவது
நீதிக்கு உட்பட்டதுதானு என்று சிந்தித்து கல்வியமைச்சர்
அவர்கள் அருள்கூர்ந்து அவர்களுடைய கவனத்தைச் செலுத்தி
வருகிற ஆண்டிலாவது கிறிஸ்தவ நாடார் வகுப்பைச் சேர்ந்த
வர்களும் கல்விச் சலுகை செய்யக்கூடிய அளவுக்கு வழிவகை
செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



கன்னியாகுமரி மாவட்டத்தில் கிறித்தவ நாடார்கள்
பின்தங்கிய வகுப்பினர் என்று சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்
கின்றனர். பக்கத்தில் உள்ள நெல்லை மாவட்டத்தில் இருக்கக்
கூடிய கிறித்தவ நாடார்களையும் பின்தங்கிய வகுப்பில் சேர்த்து
கல்விச் சலுகைகள் மறுக்கப்படாத சூழ்நிலையை ஏற்படுத்த
வேண்டும். சமூகத்திலே அன்றைக்கு கிறித்தவர்களாக மாறப்
பட்டவர்கள் பின்தங்கிய நிலையில் இருந்தவர்கள்தான். ஆகவே,
அந்தப் பின் தங்கிய மக்களுக்குக் கல்விச் சலுகை கொடுக்க
ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை உங்கள் முன்
வைக்கிறேன்.

தொடக்க நிலையிலே 6 லட்சம் மாணவர்கள் பள்ளிக்குச் செல்
லாத நிலைமையில் இருக்கிறுர்கள் என்பதைப் பார்க்கிறோம். அந்த
விதத்தில் வருகிற ஆண்டில் 2 லட்சம் மாணவர்கள் வரை புதிதாகப்
பள்ளியில் சேரும் வாய்ப்பு இருக்கும் என்று சொல்லியிருக்கிறுர்
கள். எப்படி இந்த வாய்ப்பை வெகுசீக்கிரத்தில் ஏற்படுத்திக்
கொடுக்க முடியும் என்பதில் கவனத்தைச் செலுத்த வேண்டும்.

கிராமங்களில் புதிய பள்ளிகள் துவக்கப்பட வேண்டுமென்ற
கோரிக்கைகள் வருகின்றன. அவற்றை விரைவில் துவக்க ஆவன
செய்யவேண்டும். என்னுடைய தொகுதியில் சாத்தான்குளம்
தொகுதியில் கிழக்கு திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர்
தாலுகா, நாசரத் ரேஞ்சு, செட்டிக்குளம் கிராமம், பள்ளக்குளம்
என்ற ஊரில் துவக்கப்பள்ளி அமைக்க வேண்டுமென்ற கோரிக்
கைக்கு தமிழ்நாடு பள்ளி கல்வித் துறையிலிருந்து எண்
104896/பி 4/73 தேதி 21—6—1973 என்ற ஆணையின்படி புதிய
பள்ளிக்கு அனுமதி மறுக்கப்படுகிறது ஒரு மைல் தூரத்தில் பள்ளி
இருக்கிறது என்ற காரணம் காட்டினூர்கள். ஏழு வயது பிள்ளைகள்
ஒரு மைல் ஒகிறரை மைல் நடந்து சென்று படிக்கும் நிலைமை
தாம்பிரவருணி ஆறு எங்கே தொடங்கி எங்கே முடிகிறது என்று
இருக்க வேண்டுமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்தக்
கிராமத்தில் புதிய பள்ளியைத் துவக்க அனுமதி வழங்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்லூரிப் படிப்பை பற்றி ஒன்று கூறிக் கொள்ள விரும்புகி
றேன். தனியார் நடத்தும் பள்ளிகளுக்கு அரசு கல்வி மானியம்
கொடுத்து வருகிறது. இதுவரை இந்த மானியம் எந்த அடிப்

படையில் கணக்கிடப் பட்டது என்பது யாருக்கும் தெரியாது. தனியார் கல்லூரியைச் சேர்ந்தவர்கள் அவ்வளவு பேரும் எந்த முறையில் கணக்கிடப்படுகிறது என்று தெரிவிக்க வேண்டுமென்ற கோரிக்கையை எழுப்பினார்கள். அதை அரசு ஏற்று கடந்த ஆண்டில் இருந்து எந்த அடிப்படையில் மானியம் கணக்கிடப் படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காகத் தனியார் கல்லூரி ஒன்றில் தொடர்பு கொண்டவன் என்ற முறையில் அரசுக்குப் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக, எந்தக் கல்லூரியில் ஃபீஸ் குறைவாக இருக்கிறதோ அதன் காரணமாக ஏற்படக்கூடிய பற்றுக்குறையை ஈடு செய்யும் அளவுக்கு மானியம் கொடுக்கப்படுகிறது. இதற்காக மாநில அரசுக்குப் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய நண்பர் ஒரு பிரச்சினையைத் தனியாக எழுப்பினார். கல்வியின் தரம் உயர வேண்டுமென்று சொல்லுகிறார்களே, முறை மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று சொல்லப்படுகிறதே, அது எப்படி மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று சற்றுத் தெளிவாகத் தெரிந்து கொண்டால் நல்லது என்று கேட்டார்கள். நான் சொன்னேன்.

நம்முடைய பிள்ளைகளுக்கு நெல்லை மாவட்டத்திலுள்ள தாம்பிரவருணி ஆறு எங்கே தொடங்கி எங்கே முடிகிறது என்று கேட்டால் தெரியாது, நைல் நதி எங்கே தொடங்கி எங்கே முடிகிறது என்று கேட்டால் நன்றாகத் தெரியும்.

12-ம் நூற்றாண்டில் 13-ம் நூற்றாண்டில் இங்கிலாந்து நாட்டு அரசர்களைப் பற்றித் தெரியும். இந்த நாட்டில் பிறந்த, நாட்டுக்காக வாழ்ந்த காந்தியடிகள், நேரு, அறிஞர் அண்ணா, காமராஜ் போன்றவர்களைப் பற்றி அதிகமாகத் தெரியாது.

இப்படிப்பட்ட முறையை மாற்றியமைக்க வேண்டுமென்பதுதான் கல்வித் தரத்தை உயர்த்துவதாகும். ஆரம்பக் கல்வியிலிருந்து கல்லூரிக் கல்வி தொழில் நுட்பக் கல்வி வரை நம்முடைய பாடத் திட்டத்தை மாற்றியமைப்பதற்கான பல்வேறு வழிமுறைகளின் ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். மாநிலக் கல்வி ஆய்வு நிறுவனம் என்ற ஒன்றைத் துவக்கி பாடத் திட்டங்களை அந்த அளவுக்கு மாற்றியமைக்க முடியுமோ அந்த அளவில் மாற்றியமைக்கப் போகிறார்கள்.



கல்வி தொழில் சார்புடையதாக இருக்கவேண்டும். அந்த வகையில் கோத்தாரி கல்வி ஆணைக் குழு பரிந்துரை செய்திருக்கிறது. அதை பத்து உயர்நிலைப் பள்ளிகளில் அமல் செய்திருக்கிறார்கள். தமிழகம் முழுவதும் அப்படிப்பட்ட முறையைப் புகுத்த வேண்டுமென்ற கோரிக்கையை இந்த நேரத்தில் வைக்கிறேன்.

தாய்மொழியில் கல்விப் பயிற்சி இருக்க வேண்டுமென்பதில் யாருக்கும் ஐயப்பாடு இல்லை. சில தினங்களுக்கு முன்னர் அ.தி.மு.க. மெம்பர் எடுத்துச் சொன்னார். இந்தி எதிர்ப்பு இந்தி எதிர்ப்பு என்று சொல்லி இந்த நாட்டின் மாணவர் சமுதாயத்தைப் படுகுழியில் தூக்கியெறிந்து விடாதீர்கள் என்று சொன்னார்கள். யாருக்கும் ஐயப்பாடு தேவை இல்லை. கல்வி தாய்மொழியில் புகட்டப்பட்டால்தான் சிறந்தமுறையில் இருக்க முடியும். அதில் ஏதாவது குறைபாடு இருந்தால் அதை நீக்குவதற்கு என்ன வழி என்று அதற்கு வழி காண வேண்டுமே எதிர்ப்பு தெரிவித்தார்களோ அந்த இந்தி இந்த நாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்தார்களோ அந்த இந்தி இந்த நாட்டுக்கு வந்தால் நல்லது என்று பேசக்கூடிய அளவிற்கு அங்குள்ளவர்கள் இருக்கிறார்கள் என்று சுட்டிக்காட்டி, எனக்கு இந்த அளவிற்குப் பேச வாய்ப்பளித்தமைக்குத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, இந்தக் கல்வி மானியத்திற்காக ஏறத்தாழ 108½ கோடி ரூபாய் செலவிடப்பட இருப்பதாகவும் பிறகு மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி போன்றவற்றை எல்லாம் சேர்த்தால் கிட்டத்தட்ட 136 கோடி வரையில் செலவு செய்யப் போவதாகவும் அமைச்சர் அவர்கள் அறிக்கையில் பெருமையாகச் சொல்லப் பட்டிருக்கிறது. செலவு செய்கிற தொகை அதிகமாகிறது. அதனால் ஏற்படுகிற பலன் என்ன என்பதை இந்த அரசு எப்போதாவது ஆராய்ந்திருக்கிறதா என்பதை அறியவிரும்புகிறேன். என்னைப் பொறுத்தவரையில் Education has been the most ill-planned subject in the State. மற்ற எல்லாவற்றிற்கும் திட்டங்கள் போடப்படுகின்றன. அனால் கல்வித் துறையைப் பொறுத்தவரையில் எந்தத் திட்டமும் இல்லாமல் அது எப்படியோ நடந்துகொண்டிருக்கிறது.

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1974 மார்ச் 20

பள்ளிக்கூடங்களைத் துவங்குவதில் திட்டம் இல்லை, கல்லூரிகளைத் துவங்குவதில் திட்டமில்லை, ஆசிரியர்களை நிர்ணயிப்பதில் திட்டம் இல்லை, கல்வித் தரத்தை நிர்ணயிப்பதில் திட்டம் இல்லை, பாடத் திட்டங்கள் வகுப்பதில் திட்டம் இல்லை, இப்படி ஒரு திட்டமும் இல்லாமல் எப்படியோ ஒரு ட்ரிப்டிங்க், நடந்து கொண்டே இருக்கிறது.

கல்வி என்பதற்குச் சில நோக்கங்கள் உண்டு. ஒன்று, அறிவு வளர்ச்சி வேண்டும், இரண்டாவதாக, பண்பாடுள்ள சமுதாயத்திற்குப் 'பயன்தரத்தக்க குடிமக்களை உருவாக்கவேண்டும், மூன்றாவதாக, கிடைக்கிற கல்வி எதிர்கால வாழ்க்கைக்குப் பயன்படவேண்டும், இந்த மூன்று நோக்கங்கள்தான் கல்வியின் அடிப்படையான நோக்கங்கள் என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்கிறோம்.

ஆகவேதான், மேலை நாடுகளில் கல்வி முறையைப் பொறுத்தவரையில் அதுபற்றி ஆழ்ந்து சிந்தித்துத் திட்டமிடுகிறார்கள். ஆரம்பப் பள்ளியிலிருந்து இறுதி வரையில் திட்டமிட்டுதான் ஒவ்வொன்றையும் செயல்படுத்துகிறார்கள். ஆனால் இங்கு அப்படி எந்தத் திட்டமும் இருப்பதாக, என்னைப் பொறுத்தமட்டில் தெரியவில்லை.

எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள், எப்படியெல்லாம் கோளாறுகள் இருக்கின்றன என்று. நம் நாடு விடுதலை பெற்று 27 ஆண்டுகள் ஆகின்றன. அவர்கள் குறிப்பிட்டதைப்போல், இன்னும் சரித்திரம், பொருளாதாரம் புவியியலிற்கான பாடங்கள் எப்படியிருக்கின்றன என்றால் சரித்திரத்தை எடுத்துக்கொண்டால் 8-வது எட்வேர்ட் மன்னனுக்கு எத்தனை மனைவிகள் இருந்தார்கள் என்ற கதையைத்தான் இன்னும் படிக்கவேண்டிய நிலை இருக்கிறது. இப்படி நம் நாட்டு மக்களுக்குத் தேவை இல்லாத ஒவ்வாத பாடங்களைத் தான் படிக்க வேண்டிய நிலை இருக்கிறது.

பொருளாதாரப் பாடங்கள் என்ன? ஆடம் ஸ்மித், ஜே. எஸ். மில் எழுதியவற்றைத்தான் இன்னும் படிக்கவேண்டிய நிலை இருக்கிறது. நம் நாடு எந்த இலட்சியத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறது



1974 மார்ச் 20] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

என்று கவனியாமல் நம் இலட்சியத்திற்கு ஒவ்வாத பாடத் திட்டங்களைத்தான் இன்னும் நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம். நாம் சோஷலிஸத்தை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதாகச் சொல்கிறோம். ஆனால் நாம் எப்படிப்பட்ட கல்விமுறையை வைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். இன்று நாட்டில் உள்ள பிள்ளைகளுக்கு நாட்டுப்பற்று குறைவாக இருக்கிறது.

ஹைஜின் பற்றிச் சொன்னால் பர்ஸனல் ஹைஜீனும் கிடையாது என்வயர்ன்மென்ட்டல் ஹைஜீனும் கிடையாது. இப்படி எதுவுமே இல்லாத ஒரு நிலையை மாற்றுவதற்கு நாம் என்ன செய்கிறோம்? நல்ல குடிமக்களை உருவாக்கக்கூடிய விதத்தில் நம் கல்விமுறையை ஏற்படுத்தி வைத்திருக்கிறோமா என்றால் கிடையாது. அப்படி எதுவுமே கிடையாது.

ஆகவே, 108 கோடி ரூபாய் அளவிற்கு நாம் செலவு செய்கிறோம் என்று சொல்வதிலி—இப்போது மொத்தச் செலவு கூடுதலாக இல்லை என்று நண்பர் கந்தசாமி அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள். அது ஒருபுறமிருக்கட்டும்—எந்த அளவிற்கு நாம் இன்று பயனுள்ள குடிமக்களை உருவாக்கியிருக்கிறோம் என்பதைத்தான் பார்க்க வேண்டும். இந்த அடித்தளத்தை வைத்துத்தான் கட்டுக்கோப்பு உருவாகவேண்டும்.

ஆக, எந்த அளவிற்கு நாம் ஜனநாயக சமதர்ம சமுதாயத்தை உருவாக்கும் கருவிகளை உருவாக்கியிருக்கிறோம் என்பதைப் பொறுத்துத்தான் கல்வித் திட்டத்தின் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டும்.

அரசியலமைப்புச் சட்டத்தில் ஒரு குறிக்கோள் சொல்லப்பட்டிருக்கிறது. 14 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கெல்லாம் கட்டாய ஆரம்பப்பள்ளிப் படிப்பு கிடைக்கும்படிச் செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாம் விடுதலை பெற்று 27 ஆண்டுகள் முடிவடைய இருக்கிறது. ஆனால் இன்றுள்ள நிலை என்ன? 6-11 வயதுள்ள பிள்ளைகள் 90.2 சதவிகிதம் தான் பள்ளிக்குப் போகிறார்கள். 1972-73 ல் இருந்ததை விட 73-74 ல் குறைந்திருக்கிறது. 11-14 வயதுள்ள பிள்ளைகள் 52.3 சதவிகிதம் தான் பள்ளிகளுக்குச்

செல்கிறார்கள். உயர்நிலைப் பள்ளிகளை எடுத்துக்கொண்டால் 33
சதவிகிதம்தான். அதுவும் சென்ற ஆண்டைவிடக் குறைவாக
இருக்கிறது. கல்லூரிகளை எடுத்துக்கொண்டால் இன்னும்
குறைவுதான்.

இப்படி கல்வி பெறுகிறவர்களின் எண்ணிக்கை குறைகிறதே,
ஏன்? இதற்கு என்ன வழி செய்யப்பட்டிருக்கிறது? இடையில்
ட்ராப் அவுட்ஸ் நிறைய வருகிறது. காரணம் சமுதாய அமைப்பு
அப்படி இருக்கிறது. அதற்காகத்தான் மதிய உணவுத் திட்டத்தை
முன்பிருந்த அரசு கொண்டு வந்தது. மொத்தத்தில் பார்த்தால்
மூன்றில் ஒரு பங்கு மாணவர்களுக்கு மதிய உணவு கொடுக்கப்
படுகிறது. இதை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன். அப்போதுதான் ஏழை வீட்டுக் குழந்தைகளுக்கு மதிய
உணவு கிடைக்கும் என்ற நிலை ஏற்படும். மூன்றில் ஒரு பங்குக்கு
மேல் நிச்சயமாக ஏழைவீட்டுக் குழந்தைகள் இருப்பார்கள்.
பணக்கார வீட்டுப் பிள்ளைகள் குறைவு. ஆகவே, இருக்கிற எல்லா
ஏழைப் பிள்ளைகளுக்கும் மதிய உணவு கிடைக்கும்படிச் செய்ய
வேண்டும். அது பிள்ளைகள் பள்ளிகளுக்கு அதிகமாக வருவ
தற்குத் துணை புரியும்.

முதியோர் கல்வி இருக்கிறது. முதியோருக்குக் கல்வி புகட்டு
வது என்பது மட்டுமல்லாமல் கிராம மக்கள் கல்வியின் தேவையை
உணரச் செய்ய அது மிகவும் பயன்படும். சேலம் மாவட்டத்திற்கு
மட்டும் ஒரு முனைப்புத் திட்டம் போடுவதாகச் சொல்லியிருக்கி
றார்கள். எல்லா மாவட்டங்களுக்கும் அதை நீட்டிக்கவேண்டும்.

அடுத்தபடியாக, டீச்சர் பியூப்பிள் ரேஷியோ. இப்போது 34
மாணவர்களுக்கு ஒரு டீச்சர் இருப்பதாகச் சொல்கிறார்கள். இது
சராசரிக் கணக்கு சிங்காநல்லூரில் 60 மாணவர்களுக்கு ஒரு
ஆசிரியர் என்றிருக்கக் கூடிய நிலையும் இருக்கிறது. ஆகவே, 1:34
என்பது சராசரிக் கணக்கு. நான் சொல்வது ஒரு ஆசிரியருக்கு 30
மாணவர்களுக்கு மேல் போகாத அளவிற்குப் பார்த்துக்கொள்ள
வேண்டும். அது மிக மிக அவசியம். அப்போதுதான் கல்வியின்
தரம் உயரும். இப்போது தரம் மிக மிகக் குறைவாக இருக்கிறது.
பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கிற பாடமும் தெரியவில்லை.
உலகத்தைப் பற்றியும் தெரியவில்லை, நாட்டைப் பற்றியும் தெரிய
வில்லை, சர்வீஸ் கமிஷன் தேர்வில் எது எதையோ எழுதிவைத்து



விடுகிறார்கள். காந்தி யார் என்று கேட்டால் ஒரு ஊரின் பெயர்
என்று சொல்லக்கூடிய அளவிற்கு நிலைமை போய்க்கொண்
டிருக்கிறது.

ஆகவே, பொது அறிவு, பாடக் கல்வி இவற்றை அதிகப்படுத்தி
மாணவர்களின் தரத்தை உயர்த்தவேண்டும். அதற்கு இந்த
மாணவர்கள் ஆசிரியர்கள் விழுக்காட்டைக் குறைத்தாகவேண்டும்.
ஆசிரியர்களின் நிலை மேம்பாடு அடையச் செய்யவேண்டும்.

ஆசிரியர்களுக்கு அமைச்சர் அவர்கள் பல்வேறு சலுகைகளை
அளித்திருக்கிறார்கள். அதற்காக மெத்த பாராட்டுகிறேன்.

இன்னொரு வேண்டுகோள். உயர்நிலைப் பள்ளிகளில் தலைமை
ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு கெஸட்டட் பதவி
கொடுப்பது மிக மிக அவசியம். அவர்களை விட பொறுப்பு
குறைந்தவர்களுக்கெல்லாம் கொடுக்கும்போது பொறுப்பான
பதவி வகிக்கிற தலைமை ஆசிரியர்களுக்கு கெஸட்டட் பதவி
கொடுப்பதில் ஆட்சேபணை இருக்க முடியாது என்று சொல்லிக்
கொள்வேன்.

அடுத்தபடியாக, ஜப்பார் அவர்கள் கூடச் சொன்னார்கள்.
ஆசிரியர்கள் பதவிக்குச் சில தகுதிகள் நிர்ணயம் செய்கிறார்கள்.
ஆசிரிய பதவி என்பது வேறு வேலை எங்கும் கிடைக்கவில்லை என்று
சொன்னால் * * * என்பது போல் எந்த
ஒரு உத்தியோகமும் கிடைக்கவில்லை என்றால் ஆசிரியர் உத்தி
யோகம் என்ற அளவிற்கு வைத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நல்ல உவமை அல்ல. * * இந்த
உவமையைக் குறிப்பேட்டிலிருந்து நீக்குகிறேன். இது பத்திரிகை
களிலும் வரக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** அந்த நிலைமையைத் திடீரென்று
மாற்ற முடியாது. ஆசிரியர் பணிக்கு வருகிறவர்களுக்கு அடிக்கடி
ரிப்ரஷர் கோர்ஸ் ஏற்படுத்த வேண்டும். அவர்கள் எப்படி பணி

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்
பட்டது.

யாற்றுகிறார்கள், எப்படி பாடங்களைச் சொல்லிக் கொடுக்கிறார்கள், எப்படி பிள்ளைகளிடம் நடந்து கொள்கிறார்கள் என்பதைப் பார்த்து ரிப்ரஷர் கோர்ஸ் கொடுக்க வேண்டும்.

அத்துடன், ஆசிரியர்கள், சில பழக்க வழக்கங்களை, சிகரெட் குடிப்பது போன்ற பழக்க வழக்கங்களை பிள்ளைகளுக்கு முன்னால் செய்தால் தவறான பழக்க வழக்கங்கள் பிள்ளைகளுக்கு ஏற்படும், ஆகவே அப்படி ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதைக் கட்டாயமாகச் செய்தால் கூடத் தவறு இல்லை என்றே நான் கருதுகிறேன்.

இப்போது இருக்கும் இந்த 3,250 பள்ளிகளில் கிராப்ட் டீச்சர்ஸ் சுமார் 500 பள்ளிகளில் தான் இருக்கிறார்கள். அது நான் முன்னே சொன்ன மாதிரி 'ஜாப் ஓரியன்டட்' படிப்பாக, வாழ்க்கைக்கு பயன் உள்ள கல்வியாக அளிப்பதற்காக 'கிராப்ட் டிரைனிங்' ஆசிரியர்கள் அதிகப்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளிகளை எடுத்துக்கொண்டால், அவற்றிற்கு லேபரெட்டரி வசதிகள் இல்லை. இந்த வசதியை அதிகப்படுத்த வேண்டும்.

தேர்வு முறையை நிச்சயமாக மாற்றவேண்டும். பல கமிட்டிகள், கமிஷன்கள் போட்டாகிவிட்டது. இப்போது 'இன்டர்னல் அசெஸ்மென்ட் ஸ்கீம்' என்ற முறையில் செய்கி றார்கள். அதை ஊக்கமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல பள்ளிகளுக்கு ஒழுங்கான முறையில் கட்டடங்கள் இல்லை. துரை முருகன் அவர்கள் அழகாகச் சொன்னார்கள் ஆகவே, கட்ட டங்கள் கட்டிக் கொடுப்பதற்காகத் தனியாக ஒரு திட்டம் தீட்டிச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்லூரியைப் பொறுத்தவரையில், பள்ளிக்கூட ஆசிரியர் களுக்கு, தனியார் பள்ளிகளில் இருக்கும் ஆசிரியர்களுக்கு இருக்கும் ஜாப் செக்யூரிட்டி கல்லூரி ஆசிரியர்களுக்கு இல்லை. தனியார் பள்ளிகளில் இருக்கும் ஆசிரியர்களுக்கு ஜாப் செக் யூரிட்டி கொடுக்கும் வகையில் சட்டம் இயற்றி இருக்கிறோம்.





ஆனால் தனியார் கல்லூரிகளில் இருக்கும் ஆசிரியர்களுக்கு ஜாப் செக்யூரிட்டி கிடையாது. அரசு ஸ்கேலில் ஊதியம் வரும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. ஆனால் பல இடங்களில் கொடுக்க வில்லை. கொடுத்து இருக்கிறார்களா என்பதற்கு சர்வே செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்விக்காக ஒரு தனி வாரியம் அமைக்கவேண்டும். எல்லாப் பள்ளிகளையும் அந்த வாரியத்தின் கீழ் கொண்டு வரவேண்டும். அந்த வாரியத்திற்குத் தனியாக ஒரு நிபுணர் குழுவை அமைக்க வேண்டும். இப்போது நிர்வாகப் பணிதான் அதிகமாக இருக் கிறது. இன்னோவேஷன் செய்வதற்கு வாய்ப்பு இல்லை. ஆகவே, இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு 10,000 பி.யு.சி. சீட்டிற்கு ஆள் கிடைக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குக் காரணம் பி.யு.சி. யில் தமிழ் பயிற்சி எடுக்கவேண்டுமென்பது காரணமாக இருக்கலாம், அல்லது வேறு காரணமாக இருக்கலாம். ஆகவே, அது என்ன காரணமாக இருந்தாலும், நான் சொல்லிக் கொள்வேன், அந்த ஸ்தானங்களைக் குறைத்துவிட்டு, அதற்குப் பதிலாக பி.காம்., பி.எஸ்ஸி. போன்ற வகுப்புகளுக்கு—இடம் கிடைக்காமல் திண்டாடுகிறவர்களுக்கு—அந்த சீட்டுகளின் எண்ணிக்கையை உயர்த்தி அவர்களுக்குக் கொடுத்தால் நன்றாக இருக்கும். அதைச் செய்வதற்கு வழிவகை காணவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

பல்கலைக்கழகங்களில் மாணவர்களின் கிளர்ச்சி மிக அதிகமாக ஆகிறது என்று சொல்கிறார்கள். இதற்குப் பல காரணங்கள் உண்டு. அதிலே ஒரு காரணம் அவர்களுக்கு நிர்வாகத்திலே பங்கு கிடையாது. நல்ல முன்னேற்றம் அடைந்த மேலை நாடுகளில் மாணவர்களுக்கு அதிலே பங்கு கொடுத்து இருக்கிறார்கள். அதனால் நல்ல பயனையும் அடைந்து இருக்கிறார்கள். நம்முடைய நாட்டில் பல்கலைக்கழகங்கள் நான்கு இருக்கின்றன. இந்த பல்கலைக் கழகங்களில் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பங்கு கொடுக்கவேண்டும். அகாடமி கவுன்சில், செனட், சின்டிகேட் ஆகியவற்றில் மூன்றிலொரு பங்கு கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய சிங்காநல்லூர் நகராட்சி பள்ளி பற்றி சொல்ல விரும்புகிறேன். அது சரியாக இல்லை. போதிய ஆசிரியர்களைப் போட முடியவில்லை. அவர்களைக் கேட்டால் அரசு சரியாக மானியம் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். கட்டடமும் அதற்கு இல்லை. அந்தப் பள்ளிகளை அரசாங்கம் ஏற்று நடத்த வேண்டுமென்று நகராட்சியும் ஏகமனதாகத் தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறது. அந்த வேண்டுகோளை ஏற்று அந்த நகரசபைப் பள்ளிகளை அரசே ஏற்று நடத்தவேண்டும், கட்டடமும் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கல்வியமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள கல்வி மானியத்தின் மேல் ஒரு சில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.

இந்திய உப கண்டத்திலேயே மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்தில், தமிழகத்திலே கல்வியின் தரத்தை எடுத்துக்கொண்டாலும், சரி, பரவலாகக் கல்வி பெறுகின்ற மாணவர்களின் எண்ணிக்கையை எடுத்துக்கொண்டாலும் சரி, மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்தில் தமிழகம் ஒரு சில மாநிலங்களோடு சரி நிகர் சமானமாக இருக்கின்ற நிலையை நினைக்கின்ற நேரத்தில் நாம் மகிழ்ச்சி அடைய வேண்டியிருக்கிறது.

இந்த ஆண்டு மட்டும் கல்விக்காக, பொதுக்கல்விக்காக ரூ. 110 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றாலும், தொழிற்கல்வி, மருத்துவக் கல்வி இவற்றையும் சேர்த்தால் ஏறத்தாழ ரூ. 135 கோடி ரூபாய்க்கு மேலே இந்த மானியத்திலே வழிவகை செய்து இருக்கின்றோம். இந்த வரவு-செலவுத் திட்டத்திலே ஏறக்குறைய 30 சதவிகிதம் இப்படி கல்விக்காக ஒதுக்கப்பட்டு இருப்பது மற்ற மாநிலங்களைக் காட்டிலும் நமது மாநிலம் கல்வியிலே கொண்டிருக்கிற அக்கறையையும் ஆர்வத்தையும் காட்டுகிறது என்று கூறிக்கொள்கிறேன்.

இங்கே எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இப்படி கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்கிறோம். என்று





புள்ளி விவரம் காட்டிப் பயன் இல்லை. தரமான, சமுதாயத்திற்கு பயன் உள்ளவர்களை நாம் உற்பத்தி செய்யவேண்டும். அந்தக் கோணத்தில் நாம் பார்க்கவேண்டுமென்று சொன்னார்கள். கல்வித் துறையில செய்யும் முதலீடானது உடனடியாகப் பலனை அளிக்கும் என்று சொல்ல முடியாது. காலப்போக்கில் நிச்சயமாக அது நாட்டிற்கு நன்மையைக் கொடுக்கும். ரூ. 10 கோடி போட்டு ஒரு அணைக்கட்டைக் கட்டினால், அது உடனடியாக ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதியை அளிக்கும். ரூ. 2 லட்சம் போட்டு ஒரு கட்டடம் கட்டினால் உடனடியாக அங்கே ஒரு சில அலுவலங்கள் வைக்க முடியும். அந்தக் கோணத்தில் கல்விக்காகச் செலவிடுவதைப் பார்க்க முடியாது.

மாண்புமிகு சுப்பிரமணியம் அவர்கள் சொன்னது போல், நல்ல சமுதாயத்திற்குப் பயன் உள்ளவர்களை நாம் வளர்க்கவேண்டும், சமுதாயப் பொருளாதார வளர்ச்சிக்குப் பயன் உள்ளவர்களை உருவாக்கவேண்டும் என்ற அடிப்படையில் தான் செலவழிக்கவேண்டுமென்பதை ஒப்புக்கொண்டாலும் இவ்வளவு தொகை செலவழிக்க வேண்டுமா என்ற கருத்தை நிச்சயமாக நாம் ஏற்றுக்கொள்வதற்கு இல்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** சார், பர்சனல் எக்ஸ்பிளனேஷன் நான் இவ்வளவு பணம் செலவு செய்யவேண்டியது தேவை தானா என்று சொல்ல வில்லை. செலவு செய்வது முழுப் பயன் அடையச் செய்யவேண்டுமென்றுதான் சொன்னேன்.

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** கல்விக்காகச் செலவழிக்கிற பணம் உடனடியாகப் பயன் தந்து விடாது. நீண்ட கால அளவில் தான் பயன் தரும். நீண்ட காலப்போக்கில் பல்வேறு மாநிலங்களில் பல்வேறு நிலைகளில் பொறுப்பு வகிக்கவும், அரசியலில் பொறுப்பு ஏற்கவும் நாம் இன்றைக்குத் தயாரிக்கும் மாணவச் செல்வங்கள்தான் எதிர்காலத்தில் இந்த நாட்டுப் பொறுப்பை ஏற்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையில் தான் இந்தச் செலவை செய்கிறோம்.

இப்படிப் பார்க்கிற நேரத்தில் தொடக்கக் கல்விக்கு மட்டும் ஏறத்தாழ 90 கோடி செலவழிக்கிறோம். ஆனால் இவ்வளவு பணம் செலவழிக்கின்றோம் தொடக்கக் கல்வி கற்பதற்கு 90 சதவிகிதப்

வர்கள்தான் வருகிறார்கள். 6 முதல் 11 வயது வரையில்
ரிக்கு வருபவர்கள் 94 சதவிகிதம், மீதி 6 சதவிகிதப்
ரியில் சேர வரவில்லை என்று சென்ற ஆண்டு சொன்னோம்
5 ஆண்டு 90 சதவிகிதத்தினர்தான் வந்து பள்ளியில் சேர்ந்
க்கிறார்கள் என்று தகவல் தரப்பட்டிருக்கிறது. இவ்வள
ம் செலவழித்தும் 100-க்கு 100 பிள்ளைகள் வந்து பள்ளியில்
வில்லை.

நாம் எல்லாவற்றிற்கும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் செய்வ
று திட்டம் வகுத்து இருக்கிறோம். உதாரணமாக, 197
ம்பர் மாதத்திற்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதி
த்து விடுவது என்று வைத்து இருக்கிறோம். 7 ஆண்
த்தில் எல்லாக் கிராமத்திற்கும் குடி நீர் வசதி செய்
டுப்பது என்று வைத்து இருக்கிறோம். அதுபோல் ஒரு
ண்டு காலத்தில் எல்லா மாணவர்களையும் 100-க்கு 100 மாணவ
ப் பள்ளிக்கு வந்து சேரும்படி செய்யவேண்டும், எல்லா
ளிக்கூடங்களுக்கும் கட்டடங்கள் கட்டித்தர வேண்டும் என்
திட்டம் வகுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்ப
முனைப்பான திட்டம் வைத்து 4-5 ஆண்டு காலத்தில் இந்
ம்ப காலத்திலே 6-11 வயது மாணவர்கள் 100-க்கு 100 பே
ளியில் சேர்க்கவேண்டும் என்ற அடிப்படையில் அந்த
ற்றோர்கள் மத்தியிலும் எண்ணம் வளர்க்கவேண்டுமென்
டுக் கொள்கிறேன்.

இன்னும் தொடக்கப்பள்ளியை எடுத்துக்கொண்டால், ப
ளிகளுக்கு முறையான கட்டடங்கள் கிடையாது. தொடக்க
வியாக இருந்தாலும் சரி, உயர்நிலைக் கல்வியாக இருந்தாலு
, எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர். சொன்னது போ
மான கட்டடங்கள் கிடையாது. இன்னும் பல இடங்களி
லக் குடிசையில் பள்ளிகளை வைத்து இருக்கிறார்கள். பள்ளிக
ரம்பிக்கவேண்டுமென்ற ஆர்வத்தில் அதைத் துவக்குகி
லத்தில், அவர்கள் அப்ளிகேஷன் கொடுக்கிற காலத்தில் சந்தை
லைக் காட்டுகிறார்கள். இதுதான் மைதானம் என்று சொ
கள். இல்லையென்றால், சுடுகாட்டைக் காட்டுகிறார்கள். ஆ
ளி துவங்கிய பின்னாலே நிச்சயமாக அந்த இடம் விளையா







வதற்குப் பயன்படுத்துவது இல்லை. இப்படிப் பள்ளிகள் கிராமப்புறங்களில் பல அசௌகர்யங்களுக்கு இடையில் நடைபெற்று வருகின்றன என்று சொல்லிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

கிராமப்புறங்களில் உள்ள பள்ளிகளை எடுத்துக்கொண்டால், அந்தப் பள்ளிகளில் இறுதி வகுப்பில் 15 மாணவர்கள், 16 மாணவர்கள்தான் இருக்கிறார்கள். அவர்கள் இறுதி வகுப்பில் தேறுகின்ற சதவிகிதத்தைப் பார்த்தால் 25 அல்லது 30 சதம்தான் தேறியிருக்கிறார்கள். காரணம் நல்ல முறையான ஆய்வுக் கூடங்கள் கிடையாது. முறையான அறிவியல் போதிக்கின்ற அந்த முறைகளெல்லாம் அங்கு இல்லை. இதையெல்லாம் நாம் நிச்சயம் நிவர்த்திக்கவேண்டும்.

இந்த ஆண்டுகூட இதுவரையில் இருக்கிற 2,800-க்கும் மேற்பட்ட உயர்நிலைப் பள்ளிகளில் 810 பள்ளிகளில்தான் முறையான ஆய்வுக் கூடங்கள் இருக்கின்றன. மீதி இருக்கிற பள்ளிகளில் ஆண்டு ஒன்றுக்கு சில பள்ளிகளில் ஏற்படுத்துவோம் என்று சொல்கிறார்கள். அதற்காக ரூ. 35 லட்சம் இந்த நிதிநிலை அறிக்கையில், இந்தக் கல்வி மான்ய அறிக்கையில் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். நிச்சயம் இந்தத் தொகை போதாது. இன்னும் கூடுதலான தொகை ஒதுக்கவேண்டும்.

அறிவியல் துறையில் நாம் முன்னேற்றம் காணவேண்டுமென்றால், எல்லாப் பள்ளிகளிலும் சிறந்த அறிவியல் கூடங்கள் இருக்கவேண்டும். அப்படி ஏற்படுத்த முடியாவிட்டால் கூட, ஊர்திகள் மூலம் ஊர்ந்து செல்லும், வாகனங்கள் மூலம் செல்லக் கூடிய அறிவியல் கூடங்கள் வாரத்திற்கு 2, 3 தடவைகள் எல்லாப் பள்ளிகளுக்கும் செல்கின்ற அளவுக்கு, எல்லாப் பள்ளிகளையும் இணைக்கின்ற ஒரு திட்டத்தைத் தீட்ட வேண்டும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய பள்ளிகள் விடப்படாமல், அந்த அளவுக்கு எல்லாப் பள்ளிகளையும் இணைக்கின்ற அளவுக்கு அப்படிப்பட்ட ஆய்வுக் கூட ஊர்திகளை அதிகப்படுத்தி நல்ல முறையில் அறிவியல் பாடங்களைப் போதிக்கின்ற அளவுக்கு வசதியை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

[டாக்டர் ச. மு. பழனியப்பன்] [1974 மார்ச் 20]

அப்படிப்பட்ட வசதியை நிச்சயம் ஏற்படுத்தினால்தான் அதிலும் துறையில் கல்வியின் தரம் உயரும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய ஊரில் கோவை மாவட்டத்தில் கோபிசெட்டிப் பாளையத்தில் ஒரே ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. தனியார் நடத்துகின்ற உயர்நிலைப் பள்ளி அது. அங்கே பல துவக்கப் பள்ளிகள் இருக்கின்றன. 9-ம் வகுப்பில் சேரவேண்டிய மாணவிகள் அந்த ஒரு பள்ளியில் தான் சேரவேண்டும். அந்தப் பள்ளி நிர்வாகியினுடைய ஒரு போக்கின் காரணமாக சென்ற ஆண்டு 9-ம் வகுப்பில் அங்கே மாணவிகளைச் சேர்ப்பதற்கு மறுத்து விட்டார்கள். ஜூன், ஜூலை ஆகிய இரண்டு மாத காலத்தில் மாணவிகளும், அவர்களுடைய பெற்றோர்களும் அந்தப் பள்ளிக்கு நடந்தும்கூட, தலைமை ஆசிரியை மாணவிகளைச் சேர்ப்பதற்கு ஒத்துக்கொண்டாலும் கூட, அங்குள்ள இன்ஸ்பெக்டரஸ் டி. ஈ. ஓ. உத்தரவு பிறப்பித்திருந்தாலும் கூட, அங்கேயுள்ள கரெஸ்பாண்டெண்ட், அந்த மாணவிகளைச் சேர்க்க மறுத்துவிட்டார்கள். அந்த மாணவிகள் ஏழை எளிய மாணவிகள். சாதாரணமாக சிறு தொழில் செய்பவர்களுடைய, சிறு கடை, சைக்கிள் கடை வைத்திருப்பவர்களுடைய மாணவிகள். ஏழை மாணவிகள் கல்வியில் ஆர்வம் உள்ள மாணவிகள். ஏறக்குறைய ஒரு வேளை மாத்திரம் உணவு உட்கொண்டு வீட்டிலே சத்தியாகிரகம் செய்யக் கூடிய அளவுக்கு கல்வியில் ஆர்வம் உள்ள மாணவிகள். அவர்களைச் சேர்க்க பள்ளி நிர்வாகி கரெஸ்பாண்டெண்ட் மறுத்துவிட்டார். அந்தப் பள்ளியில் வசதிகள் பல இருந்தாலும், வகுப்பு அறைகள் இருந்தாலும், தலைமை ஆசிரியை, மற்றும் ஆசிரிய பெருமக்கள் இந்த மாணவிகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டும், நாங்கள் சொல்லிக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம், எங்களுக்கு கூடுதலான வேலை பளு இல்லை என்றெல்லாம் அவர்கள் ஒத்துக் கொண்டாலும், அங்கு இருக்கிற கரெஸ்பாண்டெண்ட் சேர்த்துக் கொள்ள மறுத்துவிட்டார். இந்த ஆண்டும் அதே நிலை நீடிக்கிறது.

அங்கே இருக்கிற நகர மன்றம் ஒரு பெண்கள் மிடில் ஸ்கூல் நடத்துகிறது. அதை பெண்கள் உயர்நிலைப் பள்ளியாக மாற்ற விண்ணப்ப மனுக் கொடுத்திருக்கிறார்கள். இந்த ஆண்டிலாவது



1974 மார்ச் 20] [டாக்டர் ச. மு. பழனியப்பன்]

பெண்கள் உயர்நிலைப் பள்ளி அங்கே ஏற்படுத்துவதற்கு, அந்த நகர மன்றத்திற்கு அனுமதி வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் அங்கே நகர மன்றம் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்றை நடத்திக்கொண்டிருக்கிறது. அதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு புதிய உயர்நிலைப் பள்ளிகளைத் துவக்குகின்ற காரணத்தினால், இந்த ஆண்டு 10 நகர மன்ற பள்ளிகளை எடுத்துக் கொள்வோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதில் ஒன்றாக கோவையிலுள்ள கோபிசெட்டிபாளையம் நகர மன்ற ஆண்கள் உயர்நிலைப் பள்ளியை அரசு எடுத்துக்கொள்ள வேண்டும். அங்கே ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியைத் துவக்குவதற்கான முடிவையும் எடுத்துத்தர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 30 தரமான கல்லூரிகள் இணைந்தால்தான் ஒரு பல்கலைக் கழகம் என்று கஜேந்திர கட்கர் முறையில் நிர்வாகத்தை நடத்த முடியும் என்று எதிர்காலத்தில் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பல்கலைக் கழகத்தைத் யுனிவர்ஸிடி கிராண்ட்ஸ் கமிஷன் துவக்குவதாக இருந்தால் கோவை மாவட்டத்தில் நீலகிரி, சேலம் மாவட்டங்களிலுள்ள கல்லூரிகளை இணைத்து ஒரு பல்கலைக் கழகத்தை அங்கே நிறுவ வழி வகுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் ஒரு விஷயத்தைப்பற்றி குறிப்பிட கடமைப் பட்டிருக்கிறேன். கோவை மாவட்டத்தில் பல்வேறு விவசாய சமுதாயத்தைச் பெருங்குடி மக்கள். குறிப்பாக கவுண்டர் பின்தங்கியவர்களாக சேர்ந்தவர்கள் கல்வித் துறையில் மிகவும் பின்தங்கியவர்கள் பட்டியலில் சேர்ப் இருக்கிறார்கள். அவர்களை பின்தங்கியவர்கள் எடுத்துக்கொள்ளா பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை அவர்களுக்கு முன் விட்டாலும், கல்வித் துறையில் மட்டிலாவது அவர்களுக்கு என்ற முறையில் உரிமை கொடுத்து, பாக்வேர்டு கிளாஸ் சேர்ப்பது, கல்லூரிகளில் அவர்களை அனுமதித்து, பள்ளிகளில் சேர்ப்பது ஆகிய சேர்ப்பது, மற்றும் பட்டமேல்படிப்புக்குச்

[டாக்டர் ச. மு. பழனியப்பன்] [1974 மார்ச் 20

வகைகளில் சலுகை அளித்து, அவர்கள் கல்வி பெற வசதியை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

*திரு. நா. வெ. குருசாமி: தலைவர் அவர்களே, 1974-75 ஆம் ஆண்டுக்கான கல்வி மான்யக் கோரிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.

தமிழகத்தில் கல்விக்காக இப்பொழுது ரூ. 110 கோடி ஒதுக்கப் பட்டிருக்கிறது, அதுவே சாதனை என்று கூறப்படுகிறது. ஆனால், கல்வியினுடைய தரத்தை எடுத்துக்கொண்டால், இதைச் சாதனை யாகச் சொல்வதைக் காட்டிலும், அதிகமாக வேதனையைத்தான் கூறவேண்டியிருக்கிறது. காரணம், எழுந்துநிவித்த ஆசிரியர் களை முதலில் இந்த அரசுதான் சிறைக்கு அனுப்பியது. மற்றும் மாணவர்கள் உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் சேரும் பொழுது வருடா வருடம் எந்த நிலை இருக்கிறது என்றால், எந்தக் கல்லூரிக்குச் சென்றாலும், உயர்நிலைப் பள்ளிக்குச் சென்றாலும் சிபார்சு இருந்தால்தான் சேரக்கூடிய அவல நிலை இருந்து வருகிறது. ஆகவேதான் இதைச் சாதனை என்பதைக் காட்டிலும் வேதனை என்றுதான் கூறவேண்டியிருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றும் முன்பு காங்கிரஸ் ஆண்டபொழுது கல்விக்காகச் செல விடப்பட்ட தொகை குறைவாகவும், இப்பொழுது அதிகமாகவும் இருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் ஆளும் பொழுது தமிழகத்தின் வருமானம் எவ்வளவு, இன்று அதனுடைய வருமானம் எவ்வளவு என்பதைக் கணக்கிட்டால், இப்பொழுது நாம் கல்விக்காகச் செலவிடும் தொகை காணாது என்றுதான் கூற வேண்டும். மேலும் இந்த ஆட்சியில் ஆசிரியர்கள் மிகவும் மோச மான நிலையில் இருந்து வருகிறார்கள். படித்துவிட்டு வேலை யில்லாமல் அவர்கள் இருக்கும்படியான நிலைமைகளைப் பார்த்தால் பரிதாபகரமாகத்தான் இருக்கிறது.

நான் கடந்த 2, 3 ஆண்டுகளாகப் பார்க்கிறேன். இந் ஆசிரியர்கள் நியமன முறையிலே மாற்றம் ஏற்படவேண்டும் இல்லையென்றால் ஏழை எளிய ஆசிரியர்களுக்கு நிச்சயம் வேலை பெறமுடியாத ஒரு அவலநிலைதான் இருந்து கொண்டிருக்கும்



974 மார்ச் 20] [திரு. நா. வெ. குருசாமி]

ஆசிரியர்களை நியமிக்கும் முறையை மாற்றி, சீனியாரிடி அடிப் டையில் படித்து முடித்த ஆசிரியர்களுக்கு வேலை கொடுப் தற்கு இந்த அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

உயர்நிலைப்பள்ளிகளில் விஞ்ஞானக் கல்வியின் தரம் மிகவும் குறைந்து வருகிறது. காரணம் உயர்நிலைப் பள்ளிகளில் விஞ் ஞான ஆய்வுக் கூடங்கள் இல்லாதது தான். ஆகவே, எல்லா யர்நிலைப் பள்ளிகளிலும் விஞ்ஞான ஆய்வுக் கூடங்களை ஏற் படுத்தி அல்லது நடமாடும் விஞ்ஞான ஆய்வுக் கூடங்களை ஏற்படுத்தி நல்ல முறையில் விஞ்ஞானப் பாடங்களை போதித்தால் தான் கல்வியின் தரம் மிக நல்ல முறையில் இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றும் தனியார் பள்ளிகளில் பெரும்பாலும் பள்ளி ஆசிரியர் களுக்கு உரிய நேரத்தில் சம்பளம் கொடுக்கப்படுவதில்லை. ஆகவே, அவர்கள் பள்ளி மாணவர்களுக்கு சொல்லிக்கொடுக்க மனம் இல்லாத நிலை அமைந்து விடுகிறது. தனியார் பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு மாதா மாதம் சம்பளம் ஒழுங்கான முறையில் கிடைப்பதற்கு வழிவகைகள் செய்யவேண்டும்.

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களைப் பற்றி எனக்கு முன்பு பேசிய திரு. எட்மண்ட் அவர்கள் கூட கூறினார்கள். குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தமாக அறுவை சிகிச்சைக்கு அவர்கள் ஆட்களைக் கொண்டு வரவேண்டும் என்று கூறிக்கொண்டே வருகிறார்கள். அரசாங்க முறையில் அவர்களுக்கு சரியான ஆணை இல்லை என்றாலும் கூட, ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் அவர்கள் எப்படியும் ஆட்களைக் கொண்டு வந்து தான் தீர வேண்டும் என்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த முறையை மாற்றவேண்டும்.

மேலும் என்னுடைய ஆண்டிப்பட்டி தொகுதியை எடுத்துக் கொண்டால் ஒன்றியத்தைச் சேர்ந்த பல பள்ளிகளுக்கு கட்டட வசதி கிடையாது. குறிப்பாக வரிசநாடு மலைப் பகுதி இருக் கிறது. அந்தப் பகுதியில் மரத்தடியில் தான் அதிகமான பள்ளிகள் நடந்துகொண்டுவருகின்றன. அந்த ஒன்றியத்தின்

[திரு. நா. வெ. குருசாமி]     [1974 மார்ச் 20

ரப்பளவு பெரியதாக இருக்கிறது. ஆகவே, அந்த ஒன்றியத்
திற்கு கல்விக்காக அதிகத் தொகை ஒதுக்கி, அந்த ஒன்றியத்தை
சேர்ந்த எல்லா பள்ளிகளுக்கும் கட்டட வசதி ஏற்படுத்தித்
தருவதற்கு அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த 3, 4 இடங்களில்,
ரெங்க சமுத்திரம், கண்டமங்கலம், ஜெயமங்கலம் போன்ற இடங்
களில் விஞ்ஞான ஆய்வுக் கூடங்கள் இது வரையில் கிடையாது.
ஆகவே, அவ்விடங்களில் ஆய்வுக் கூடங்களை ஏற்படுத்தித் தரு
வதற்கு அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
மற்றும் தமிழாசிரியர்களை முதல் நிலை பதவி தரத்தில் நியமிக்க
வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி
அவர்கள் அதைப்பற்றி எடுத்துக் கூறினார்கள். அவர்களுடைய
பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு உடனடியாக இந்த அரசு ஏற்பாடு
செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழக ஆசிரியர் கூட்டணி மூலமாக அமைச்சரவர்
களுக்கு பல கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றைக் கொடுத்
திருக்கிறார்கள். மருத்துவ வசதி, தலைமை ஆசிரியர்களுக்கு
பணிப்படி, அல்லது சிறப்புப்படி போன்ற பல கோரிக்கைகளை
கொடுத்திருக்கிறார்கள். அவைகளுக்கு ஆவன செய்ய வேண்டு
மென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்
கொள்கிறேன். வணக்கம்.

***புலவர் சி. பழனிச்சாமி :** பேரவைத் தலைவரவர்களே,
மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கின்ற
1974-75-ம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையில் என்னுடைய
கருத்துக்கள் சிலவற்றைக் கூறவிரும்புகிறேன்.

1974-75-ம் ஆண்டுக்கு கல்விக்கு மட்டும் 110 கோடி ரூபாய்
செலவிடப்படுகிறது. 1956-57-ம் ஆண்டில் 11 கோடி ரூபாய்
மட்டும்தான் செலவிடப்பட்டது. இன்றைக்கு 110 கோடி ரூபாய்
அளவுக்கு உயர்ந்துள்ளது. ஏறத்தாழ 16 ஆண்டுகளிலே
மடங்கு இன்றைக்கு கல்விக்காக உயர்த்தி செலவிடப்படுகிறது
நம்முடைய தமிழக அரசால். ஆகவே, இன்றைக்கு இருக்கின்ற
திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்த நாட்டிலே இருக்கின்ற
மக்களுக்கு கல்வி அறிவைப் புகட்டுவதில் எவ்வளவு ஆர்வம்
கொண்டுள்ளது என்பது இதிலிருந்து ...



1974 மார்ச் 20]     [புலவர் சி. பழனிச்சாமி]

பள்ளிகளிலே இன்றைக்கு பணியாற்றுகின்ற செகன்டரி கிரேடு
ஆசிரியர்களுக்கு 10 ஆண்டு காலத்தில் தேர்வு நிலை கொடுக்கப்படு
மென்று கல்வி அமைச்சரவர்கள் முதலிலேயே குறிப்பிட்டார்கள்.
அதற்காக ஆசிரியர்களின் சார்பாக என்னுடைய நன்றியையும்
வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு பள்ளிகளிலே சாதல்வார் செலவு என்று ஒன்று
இருக்கிறது. சென்ற ஆண்டு கல்வி மானியக் கோரிக்கையிலும்
இதைப்பற்றிப் பேசினேன். ஆசிரியர்கள் காகிதம், பென்சில்,
ரப்பர், பேனா இவைகள் வாங்குவதற்கு தலைமை ஆசிரியர்களுக்கு
2 ரூபாயும், துணை ஆசிரியர்களுக்கு ஒரு ரூபாயும் கொடுக்கப்படு
கிறது. இப்படி நிர்ணயம் செய்யப்பட்டது தபால் கார்டு விலை
கால் அணா என்று இருந்த அந்தக்காலத்திலே. அது இன்றும்
அப்படியேத் தான் இருந்துகொண்டிருக்கிறது. இது ஒரு சாதாரண
அற்ப விஷயமாகத் தோன்றலாம். அருள்கூர்ந்து அதை மாற்றி
அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தலைமை
ஆசிரியர்களுக்கு 2 ரூபாய் என்பதற்குப் பதிலாக 5 ரூபாய்
என்றும், துணை ஆசிரியர்களுக்கு ஒரு ரூபாய் என்பதற்குப் பதி
லாக 3 ரூபாய் என்றும் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள பள்ளிகளில், ஒரு ஒன்றியத்தி
லிருந்து இன்னொரு ஒன்றியத்திற்கு மாறி வருகின்ற ஆசிரியர்கள்
தங்களது ஊழியத்தை கணக்கிட வேண்டாமென்று எழுதி
கொடுத்துவிட்டுத்தான் வருகிறார்கள். அவர்கள் இடம் மாறி
வரும்போது, அவர்களுடைய முந்திய ஊழியத்தையும் கணக்கில்
எடுத்துக்கொண்டால் ஏற்கெனவே அந்த ஒன்றியத்தில் இருக்
கின்ற ஆசிரியர்களின் பதவி உயர்வு போன்றவை பாதிக்கப்படும்.
அதிலே பல சிக்கல்கள் வருகின்றன. ஆகையால், ஒரு ஒன்றியத்தி
லிருந்து இன்னொரு ஒன்றியத்திற்கு ஆசிரியர்கள் மாறி வரும்
போது அவர்களுடைய ஊழியத்தை கணக்கில் எடுத்துக்
கொள்ளக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமப்புரங்களிலே பணியாற்றுகின்ற
தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு வீட்டுவாடகைப்படி கொடுக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பேரூராட்சி மன்றங்களில்

பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்காவது முதற்கட்டமாக வீட்டு வாடகைப்படி கொடுக்கவேண்டுமென்று பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.

'ஒன்மேன் கமிஷன்' பரிந்துரை செய்தவாறு 1—10—1971 முதல் பழகு தொழில் ஆசிரியர்களுக்கு அப்ரன்டீஸ் டீச்சர்ஸ் 20 ரூபாய் ஊதியத்தில் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. ஆனால் இதுவரையிலும் அந்த ஆசிரியர் களுக்கு அந்த அளவுக்கு ஊதியம் உயர்த்திக் கொடுக்கப்பட வில்லை, என்று அறிகிறேன். ஆகவே, எல்லா யூனியன்களிலும் பணியாற்றுகின்ற அத்தகைய ஆசிரியர்களுக்கு ஊதியத்தில் 20 ரூபாய் உடனடியாக உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று உத்தர விட கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மதிய உணவுப் பிரச்சனை. அதைப்பற்றியும் நாங்கள் ஆண்டு தோறும் பேசுகிறோம். இந்த நாட்டிலே கல்விக்காக எத்தனை கோடி ரூபாய் செலவழித்தாலும் அதன் தரத்தை உயர்த்துவதே நம்முடைய நோக்கமாகும். கல்வியின் தரம் உயர வேண்டுமானால் இன்றைக்கு இருக்கிற நிலை மாறவேண்டும். அதாவது ஆசிரியர்களே, கணக்கு எழுதுவது, சமையல் செய்வது, இன்னும் பிற காரியங்களைப் பார்ப்பதை எல்லாம் மாற்ற வேண்டும். ஆசிரியர்களுக்கும் இந்தப் பணிகளுக்கும் சம்பந்தமே இல்லை என்ற நிலை வரவேண்டும். அப்படியானால்தான் கல்வி போதிப்பதில் அதிக அக்கறை செலுத்த முடியும். மதிய உணவுத் திட்டத்தை பூரணமாக நிறைவேற்ற ஆங்காங்கே மைய சமையல் கூடங்களை தொடங்கி, அவைகள் மூலம் உணவு வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஆகவே, அருள் கூர்ந்து ஆசிரியர்களுக்கும் இந்தப் பணிக்கும் சம்பந்தமே இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டு மென்று மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். அப்போது தான் நம்முடைய கல்வியின் தரம் உயரும் என்று கூற விரும்பு றேன்.

நூலகர்களின் முக்கியமான கோரிக்கை ஒன்று வெகுநாட்க ளாக நிறைவேற்றப்படாமல் இருந்தது. நூலகங்களுக்கென்று தனியாக இப்போது ஒரு ஆணையர் தமிழக அரசால் நியமிக்கப் பட்டிருக்கிறார். அதற்காக இந்த ... நன்றி



செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதேநேரத்தில் கல்லூரி களில் பணியாற்றுகின்ற நூலகர்களுக்கு இருக்கின்ற சில குறை களை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த நூலகர் களை ஆசிரியர்கள் பட்டியலில் இணைத்து, ஆசிரியர்களுக்குக் கொடுக்கின்ற சலுகைகளை எல்லாம் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பது முக்கியமானது. ஏனென்றால் பட்டப் படிப்புக்குப் பிறகு ஓராண்டு மட்டும் கல்வி கற்று, உடற்பயிற்சி வகுப்புகள் நடத்துகின்றவர்களை ஆசிரியர்களின் பட்டியலில் சேர்த்திருக்கிறார்கள். அவர்களுக்கு அரசிதழ் பதிவும் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதைப்போன்று பட்டப்படிப்பு முடிந்த பின்னால் ஓராண்டு நூலகப் பயிற்சி பெற்று, மீண்டும் நான்கு மாதங்கள், பயின்று கல்லூரிகளில் நூலகர்களாகப் பணியாற்று கிறவர்களுக்கு இவர்கள் கல்லூரி ஆசிரியர்கள் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. ஆகவே, அவர்களையும் ஆசிரியர் கள் பட்டியலில் இணைத்து, ஆசிரியர்களுக்குக் கொடுக்கின்ற எல்லாச் சலுகைகளையும் அவர்களுக்கும் கொடுத்து, அவர்களையும் அரசிதழ் பதிவு பெற்றவர்களாக ஆக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாணவர்களுக்கு நிறைய பாடங்கள் வருகின்றன. கடவுளைப் பற்றிய பாடங்களும் வருகின்றன; மதங்களைப் பற்றிய பாடங்களும் வருகின்றன. ஆனால் பகுத்தறிவைப் பெறுவதற்கான பாடங்கள் எதுவுமில்லை. மாணவர்கள் பகுத்தறிவைப் பெறுவ தற்கு அமெரிக்க மேதை இங்கர்சால் அவர்களின் கருத்தைப் பாட மாக வைக்கலாம். ஐயா பெரியார் அவர்களின் கருத்துக்களைப் பாட நூலாக வைக்கலாம். இரண்டு கருத்துக்களையும் மாணவர் கள் படித்துப் பார்த்து எந்தக் கருத்து அவர்களுக்கு ஏற்றதாக இருக்கிறதோ அதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும். அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 10 ஆண்டு காலம் தமிழ் ஆசிரியர்களாக ஊழியம் பார்த்த எல்லோருக்கும் தேர்வுநிலை கொடுத்திருப்பதற் காக தமிழ் ஆசிரியர்களின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள் கிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்த பிறகுதான் தமிழ் அன்னை தனக்கு உரிய இடத்தைப் பெற்றிருக்கிறாள்.

[புலவர் சி. பழனிச்சாமி] [1974 மார்ச் 20.

தமிழுக்குத் தொண்டு செய்வது இந்த திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்று கூறிக்கொள்வதிலே என்னைப்போன்றவர்கள் எல்லாம் பெருமையடைகிறோம்.

இதற்கு முன்னால் ஆண்டவர்கள் தமிழ் என்ற உணர்வே இல்லாமல் இருந்தார்கள் என்றுதான் சொல்லவேண்டும். ஆகவே, இந்த அரசு இருக்கின்ற இந்தக் காலத்திலே தமிழுக்கும் தமிழைப் போதிக்கின்ற ஆசிரியர்களுக்கும் என்னென்ன செய்யவேண்டுமோ அவ்வளவையும் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆங்கிலம் படித்தவர்கள்தான் பள்ளியை நிர்வகிக்க முடியும் என்ற கருத்து ஒரு தவறான கருத்தாகும். தமிழ் படித்தவர்களாலும் நிர்வகிக்க முடியும். ஆகவே, ஊழியம் அதிகம் பெற்ற தமிழாசிரியர்களை உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளிகளில் பி.டி. ஆசிரியர்களாக 10 ஆண்டு பணியாற்றியவர்களுக்குத் தேர்வு நிலை கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் ஹையர் எலிமெண்டரி பள்ளிகளிலும், நடுத்தர பள்ளிகளிலும் பி.டி. ஆசிரியர்களாகப் பணியாற்றுகிறவர்களைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. 10 ஆண்டு காலம் பணியாற்றியவுடன் அவர்களுக்கும் செலக்ஷன் கிரேடு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஏ. விங் ஆசிரியர்கள், பி. விங் ஆசிரியர்கள் என்று இரண்டு பிரிவாக இருக்கிறது. இந்த இரண்டையும் ஒன்றாக்கி, ஏ. விங் ஆசிரியர்களுக்கு என்ன என்ன சலுகைகள் கொடுக்கப்படுகின்றனவோ அவை யாவும் பி. விங் ஆசிரியர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் ஏ. விங் ஆசிரியர்களுக்கு டெபுடி இன்ஸ்பெக்டர், டி.இ.ஓ. பதவி உயர்வு கொடுக்கிறார்கள். மேலும் அதிக ஆண்டு ஊழியம் செய்துவிட்டால் கல்லூரிப் போராசியர் பதவிக்கு எடுத்துக்கொள்கிறார்கள். இந்த வசதி எல்லாம் பி. விங் ஆசிரியர்களுக்குக் கிடையாது. ஆகவே ஏ. விங், பி. விங் ஆசிரியர்கள் என்ற பிரிவு இல்லாமல் பி. விங் ஆசிரியர்களையும் அரசு ஆசிரியர்களைப்போலவே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி, கல்வி மானியக் கோரிக்கையை வரவேற்று, என்னுடைய பணிவான கருத்துக்களைச் சொல்ல அனுமதி கொடுத்த தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.



974 மார்ச் 20]

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, கல்வி மானியத் ...ன் மீது எங்கள் கட்சியினர் கொடுத்திருக்கக்கூடிய வெட்டுத் ...ர்மானத்தை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்லலாம் ...ன்று ஆசைப்படுகிறேன்.

நம் மாநிலத்தில் கல்வித் தரம் உயரவேண்டுமென்றால் ஆசிரி...ர்களின் பிரச்சனை முழுமையாகத் தீர்க்கப்படவேண்டும். அரசு ...ன்றையதினம் அவர்களது சில கோரிக்கைகளை அங்கீகரித்திருக்...றது. அங்கீகரிக்கப்படாத பல கோரிக்கைகளும் இருக்கின்றன.

முதலாவதாக எஜுகேஷன் டிபார்ட்மெண்டில் பி.டி. அசிஸ்...டெண்டு முதல் ஒரு சீனியாரிடி லிஸ்ட் தயாரிக்காத நிலைமை இருக்...கிறது. இதைப்போக்க வேண்டும். ஒரு சீனியாரிடி லிஸ்ட் தயா...ரிக்கவேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்ததாக, நாம் எல்லாம் ஹெட்மாஸ்டர்களுக்கும் கெஜடெட் அந்தஸ்து கொடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. நியூ பே ஸ்கேல்படி—அடிஷனல் க்வாலிபிகேஷன் உள்ளவர்களுக்கு இன்செண்டிவ் இன்க்ரிமெண்டு கொடுக்கப்படாத குறையையும் நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பண்டமண்டல் ரூல் 22(பி) படி, அது சரியாகப் பின்பற்றப் படாத காரணத்தினால் பலவிதமான சங்கடங்கள் இருக்கின்றன. உதாரணமாக கிரேட்-2 இல் இருந்து 1-வது கிரேடு கொடுக்கும் போது டபுள் ஊதிய உயர்வு கொடுக்க வேண்டும். அது கொடுக்கப்படாததனால் கஷ்டம் இருக்கிறது. மானிடரி லாஸ் வரவேண்டிய நிலை இருக்கிறது. அதைப்போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒரு முக்கியமான கோரிக்கையைச் சொல்ல லாம் என்று நினைக்கிறேன். புதியதாக வந்த ஸ்கேலுக்கு முன்னதாக சீனியர் அசிஸ்டெண்ட், டெபுடி இன்ஸ்பெக்டர், நான்-கெஜடெட் ஹெட்மாஸ்டர்களுக்கு 225—350 என்று ஒரே கிரேடு இருந்தது. சீனியாரிடி நியமிக்கப்படாத நிலைமையும் இருந்தது. புதிய பே ஸ்கேலில் சீனியர் அசிஸ்டெண்ட், டெபுடி இன்ஸ்பெக்டர்கள் கிரேடு 400—600 ஆகவும், ஹெட்மாஸ்டர் கிரேடு 450—750 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. 1972 சீனியாரிடி லிஸ்ட் வைத்து—ஹெட்மாஸ்டர்களாக முன்பு 400—600 கிரேடில் ஆக்ட்

[திரு. என். டென்னிஸ்] [1974 மார்ச் 20

ண்ணியவர்கள் இருக்கிருர்கள். ஹெட்மாஸ்டர் கிரேடு 450–750 ஆக ஆக்கப்பட்டபோதும் இந்த உயர்வைப் பெற்றிருக்கிருர்கள். இன்றைக்கு அவர்கள் ஹெட்மாஸ்டர் பதவியில் இருந்து ரிவர்ட் செய்யப்படுகிறபோது, முன்பு வாங்கிய அந்தத் தொகையைக் கொடுத்துவிட வேண்டுமென்று சொல்வது சரியல்ல. அதை வேண்டாம் என்பதால் பெரிய மானிடரி லாஸ் ஏற்படாது. இதுபோன்ற நிலையில் 100 பேர்களுக்குள்ளிட்டவர்கள்தான் இருப்பார்கள்.

அடுத்து டி.ஓ. போஸ்ட் 15 மாதங்களுக்கும் மேலாக வேகன் டாகவே இருந்துகொண்டிருக்கிறது. நிர்வாகத்தில் பல சங்கடங் டங்கள் அதனுல் உண்டாகின்றன. ஆகவே வேகன்ட் போஸ்டை நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது போல ஹெட் மாஸ்டர்களை கெஜெடெட் ஆக்காது இருக்கக்கூடிய இடங்களும் இருக்கின்றன. இவை எல்லாம் நிர்வாகத்தில் பல சிக்கல்களை ஏற்படுத்தக் கூடியது. ஆகவே இதை மாற்ற வேண்டும்.

அடுத்ததாக, ஆயிரம் மாணவர்களுக்கு மேலாக இருக்கிற உயர்நிலைப் பள்ளி ஹெட்மாஸ்டர் போஸ்ட் கெஜெடெட் ஆக்கப் படும் என்று சொல்லியிருக்கிறோம். அப்படி இன்னும் கொடுக்கப் படாத நிலைமை இருக்கிறது. அங்கெல்லாம் உடனே கெஜெடட் அந்தஸ்து கொடுக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிரைவேட் மிடில் ஸ்கூலில் பி.டி. ஆசிரியர்களாக இருக்கிறவர் களுக்கு செகண்டரி கிரேடு ஹெட்மாஸ்டர் சம்பளம் தான் கொடுக் கப்படுகிறது. இந்த நிலைமையை மாற்றவேண்டும்.

அடுத்தபடியாக, செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் 10 வருட பணி செய்தால் அவர்களுக்கு செலக்ஷன் கிரேடு கொடுக்கப்பட் டிருக்கிறது. அது வரவேற்கத்தக்கது. சர்வீஸ் அடிப்படையில் அவர்கள் ஹெட்மாஸ்டராக நியமிக்கப்பட நடவடிக்கை எடுத்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் ஆசிரியர்களை எடுத்துக்கொண்டால் 1—1—1974 முதல் 1 ஆண்டு சர்வீஸ் உள்ளவர்களுக்கு—மினிமம் க்வாலிபிகேஷ இல்லாமல் இருந்தாலும்—பர்ஸ்ட்கிரேட் தமிழ்ப் பண்டிதர்க சம்பளம் கொடுக்கப்பட உத்தரவிடப்பட்டுள்ளது. அதில் ஒ



974 மார்ச் 20] [திரு. என். டென்னிஸ்]

க்கல் இருக்கிறது. ட்ரெயினிங் இல்லாமல் இருந்தாலும் பர்ஸ்ட் ரேடில் நியமிக்கப்படுவார்களா என்கிற ஐயம் இருக்கிறது. னிமம் க்வாலிபிகேஷன் இல்லாத காரணத்தினுல் அவர்கள் ரெயினிங் போக முடியாத நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட ர்களுக்கு எக்சம்ஷன் கொடுத்து பர்ஸ்ட் கிரேடு ஆசிரியர் யமனம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பெண்களைப் பொறுத்தவரையில் வித்வான் ரெயினிங்குக் லேடி வெலிங்டன் பள்ளி ஒன்றுதான் இருக்கிறது. வறு ஒரு பள்ளியும் இதற்கு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கட்டுக்கொள்கிறேன்.

ஹையர் எலிமெண்டரி ஸ்கூல்களில் தமிழ் பண்டிதர்களை யமிக்க முடியாத நிலைமை இருக்கிறது. அங்கும் நியமிக்க வண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது வேலைவாய்ப்புக்கு ழிவகுக்கக்கூடியதாக இருக்கும். கல்வியின் தரத்தையும் ரளவு உயர்த்தக்கூடியதாக இருக்கும்.

ஹையர் கிரேடு ஆசிரியர்கள் வித்வான் படித்து பரிட்சை ாஸ் பண்ணிஞலும், அவர்களுக்கு தமிழாசிரியர்கள் நியமனம் பற வாய்ப்பு இல்லை என்பது குறை. அதையும் போக்க டவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிக்கட்டிடங்களுக்காக ஒதுக்கப்படுகிற தொகை குறை ானது. கன்னியாகுமரி மாவட்டத்தில் பல பள்ளிக்கூடங்கள் ட்டிடம் இல்லாமல், ஷெட்டில் இயங்கிக் கொண்டிருக்கின்ற லைமை இருக்கிறது. இன்னும் குறிப்பாகப் பார்த்தால் பரம்பில் ள்ளிக்கூடம் இருக்கிறது. இதற்கு பர்மனென்ட், செமி பர்ம னென்ட், அல்லது ஷெட் எதுவுமே இல்லாத நிலைமை இருக்கிறது. துதைப் போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் மதுரையில் சட்டக்கல்லூரியை ஏற்படுத்தவேண்டு மென்ற வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். அதற்கும் டவடிக்கை எடுக்கவேண்டும்.

முக்கியமாக இங்கிலீஷ் மீடியம் ஸ்க்கூல்களை ஏற்படுத்த அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. என். டென்னிஸ்] [1974 மார்ச் 20

அடுத்ததாக, ஆசிரியர்களுக்கு வேலையில்லாத நிலைமை எங்கும் இருந்துகொண்டிருக்கிறது. அதைப் போக்க தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் வேலையில்லாமல் இருக்கிற நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு ஏஜ் எக்சம்ஷன் கொடுக்கவேண்டும்.

கல்லூரியில் என். சி. சி. பயிற்சி பெற்றவருக்கு வாய்ப்பு இருப்பது போல, ஹைஸ்கூல்களில்—ஜூனியர் என். சி. சி. என்றுவ[illegible] அதில் பயிற்சி பெற மாணவர்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்தித்த[illegible] வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, கல்வியின் க்வாலிடி மிக மோசமான நிலைமையில் இருக்கிறது. ஆசிரியர்கள், ஆசிரியர்களது பிரதிநிதிகள் ஆகியவர்களோடு கலந்து பேசி கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கையை எடுத்துக்கொள்ளவேண்டும். வெறும் எண்ணிக்கை—க்வாலிடி இல்லாமல்—உயர்ந்து பயன் இல்லை. ஆசிரியர்களுடைய முழுமையான கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்[illegible] அவர்களது முழு ஒத்துழைப்புடன் கல்வியின் தரத்தை உயர்த்[illegible] அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினருக்[illegible] அளிக்கப்பட்ட 10 நிமிடம் இப்போதே முடிந்துவிட்டது[illegible] பேரவையின் காலை நிகழ்ச்சி இந்த அளவில் முடிவுற்று, மா[illegible] நான்கு மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணியளவில் ஒத்திவைக்க[illegible] பட்டது.

இடைவேளைக்குப் பின் பேரவை மீண்டும் மாலை 4-00 மண[illegible] அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தலைமையி[illegible] கூடியது.

* **திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்:** போவைத் தலைவர் அவ[illegible] களே, இன்றையதினம் இந்த மாமன்றத்தில் கல்வி அமைச்ச[illegible] அவர்கள் கொண்டுவந்துள்ள 1974-75-ம் ஆண்டுக்கான கல்[illegible] மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.



1974 மார்ச் 20] [திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்]

இன்றையதினம், நாட்டிலே கல்வி வளர்ச்சி அடைய வேண்டும் என்ற ஒரு நல்ல எண்ணத்தில் வருஷா வருஷம் ரூ. 10 கோடி, ரூ. 5 கோடி என்று அதிகமாக இந்தத் துறைக்குச் செலவு செய்வதிலேயிருந்து நன்றாகத் தெரிகிறது. 1956-ம் ஆண்டு ரூ. 11 கோடி தான் கல்விக்காகச் செலவு செய்யப்பட்டு வந்தது. இன்றைய தினம், ரூ. 110 கோடிக்கு மேலாக செலவு செய்வதைப் பார்க்கும் போது, நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும், இந்த நேரத்திலே நான் கல்வித் துறையிலே உள்ள ஒருசில குறைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

ஊராட்சி ஒன்றியச் சார்பில் நடைபெறக்கூடிய பள்ளிகள் சரியான முறையிலே இயங்குவதில்லை. அந்தப் பள்ளிக்குச் செல்லக்கூடிய ஆசிரியர்கள் சிலர் காலையிலே 10 மணி அல்லது, 11 மணிக்குத்தான் பள்ளிக்கு வருகிறார்கள். அந்த நிலைமையும் இருக்கிறது. அதுமட்டுமல்ல, கிராமத்திலே பள்ளி இருக்கிறது என்றால், அந்தப் பள்ளிக்கு வரக்கூடிய ஆசிரியர்கள் 5 மைல், 6 மைல் தொலைவிலிருந்து தினசரி வருகிறார்கள். இப்படி அவர்கள் வருவதற்கே 10 மணி ஆகிறது. இந்த நிலைமையில், ஊராட்சி ஒன்றியச் சார்பில் நடக்கக்கூடிய பள்ளிகளைச் சரியான முறையிலே நடத்தமுடியாத நிலைமை இருக்கிறது. அதன் காரணமாக கிராமத்திலே உள்ளவன் 5-வது படித்து, 6-வது படிக்க உயர்நிலைப் பள்ளிக்கு வரும்போது 6-வது வகுப்பிலே தேர்ச்சி அடைய முடியாத நிலைமை ஏற்படுகிறது, என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஊராட்சி ஒன்றியச் சார்பிலே நடைபெறக்கூடிய பள்ளிகளை அரசே ஏற்று நடத்தினால் நலமாக இருக்கும் என்பது தான் என்னுடைய கருத்து. இந்தக் கல்விக்காக ரூ. 110 கோடிக்கு மேலாக நாம் செலவு செய்கிறோம். செலவு செய்தும் ஆரம்பப் பள்ளி சரியாக நடைபெறவில்லை. கிராமப் பகுதியிலே. ஆக, இன்னும் பல இலட்சக்கணக்கான ரூபாய்கள் செலவானாலும் பரவாயில்லை, அந்தப் பள்ளிகளை எல்லாம் மேற்பார்வையிட திறமையான அதிகாரிகளை நியமித்து சரியான முறையிலே நடைபெறுகிறதா என்பதைக் கண்காணித்தால் கல்வி வளர ஏதுவாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்] [1974 மார்ச் 20

மேலும் கிராமத்திலே உள்ள ஏழைக் குடிமகன் பள்ளியிலே தனது பிள்ளைகளுக்குச் சரியான முறையான கல்வி கற்பிக்க முடியாத நிலைமை இருக்கிறது. அதே நேரத்திலே, பணம் படைத்தவர்கள் தனியான ஆசிரியரை வைத்து ரூ. 10-ஓ, ரூ. 20-ஓ கொடுத்து, தங்களுடைய குழந்தைகளுக்குக் கல்வி கற்றுத் தருகிறார்கள். ஆகவே, அரசு இதைப் பரிசீலனை செய்து அரசாங்கமே ஏற்று நடத்த ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால், நிர்வாகச் சீர்திருத்தக் குழுவினுடைய அறிக்கையையாவது அமுல்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு மையம் எல்லா பள்ளிகளுக்கும் இருக்கவேண்டும். இன்றைய தினம் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு மையம் ஓர் உயர்நிலைப்பள்ளிக்கு வேண்டுமென்றால், மாணவர்கள் எண்ணிக்கை சரியாக இருக்கிறார்களா என்று பார்க்கிறார்கள். இப்படிப் பார்ப்பதால், கிராமத்திற்கு கிராமம் தகராறுகள் எல்லாம் ஏற்படுகின்றன. எங்கள் ஊரிலேதான் தேர்வு மையம் ஏற்பட வேண்டுமென்று கோருகிறார்கள். அதையே அடுத்த ஊர்க்காரர்களும் கோருகிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்னைகளைத் தீர்க்க எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு மையம் ஏற்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கல்லூரி படிப்பு என்பதை நகரசபை போன்ற ஊர்களிலேதான் அதிகமாக ஏற்படுத்துகிறார்கள். இனிமேலாவது ஏற்படுத்தக்கூடிய புதிய கல்லூரிகளை, எந்தத் தொகுதியிலே கல்லூரி இல்லையோ அந்தத் தொகுதியிலே கட்டாயம் ஏற்படுத்த அரசு ஆலோசனை செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, என் தொகுதியாம் [illegible] 9 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அந்த 9 உயர்நிலைப் பள்ளிகளில் உயர்நிலைப் பள்ளிகள் தனியார் துறையிலே இயங்குகின்றன. அவற்றிற்குப் பல கட்டிட வசதிகள் எல்லாம் இருக்கின்றன. ஆனால், அரசாங்கச் சார்பில் நடக்கக்கூடிய 6 உயர் உயர்நிலைப் பள்ளிகளிலும் கட்டிட வசதி இல்லை. குறிப்பாகச் சொல்



1974 மார்ச் 20] [திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்]

வேண்டுமென்றால், அய்யம்பாளையத்திலே ஒரு அரசு உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளிக்கு மேலே கூரை வேய்ந்திருக்கிறார்கள். அந்தக் கூரை இருந்தும் மழைக் காலத்திலே அங்கே படிக்க முடியாத நிலைமை இருக்கிறது. தரையிலே கூட மண்தான் பரப்பப்பட்டு இருக்கிறது. இந்த நிலைமைகளையெல்லாம் போக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பள்ளியில் ரூ. 1 லட்சத்துக்கு மேலாக கட்டிடம் கட்ட மதிப்பு போடப்பட்டிருக்கிறது. அதையும் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், சித்தயங்கோட்டையிலே அரசு உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. அங்கும் கட்டிட வசதி இல்லை. அங்கே இருக்கக்கூடிய 6 வகுப்புகளுக்கு மேலே பார்த்தால் சூரியன், சந்திரன் அத்தனையும் தெரியும். இந்த நிலைமையிலே அந்தப் பள்ளிக் கட்டிடம் இருக்கிறது. அந்தப் பள்ளிக்கும் கட்டிடம் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கன்னிமாடியில் கட்டிட வசதி இல்லாமல் இருக்கிறது. கரிசல் பட்டியல் மறைந்த வி. எஸ். எஸ். மணி அவர்கள் இங்கு உயர்நிலைப் பள்ளிகள் வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதற்கிணங்க உயர்நிலைப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. சமீபத்திலே அந்த ஊரிலே அரிசனங்கள் சார்பாகக் கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது. அந்தக் கட்டிடத்தில் இரண்டே இரண்டு அறைகள்தான் இருக்கின்றன. மீதி அறைகள் எல்லாம் கட்டப்படவில்லை. இத்தனை காலமாக வாடகைக் கட்டிடத்திலேதான் அந்தப் பள்ளி நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அந்த கரிசல்பட்டி கிராமத்திலே எல்லா வகையான வசதிகளும் உடைய உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத்தைக் கட்டித் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சின்னுளப்பட்டியில் 1967-ம் ஆண்டுக்கு முன்பாக அன்றைய தினம் முதலமைச்சராக இருந்த கனம் பக்தவத்சலம் அவர்கள் திடீரென ஒருநாள் அங்கு வந்தார்கள். வந்தவர் ஒரு கல் நாட்டு விழாவை நடத்தினார். கிளை நூலகத்திற்காக கல் நாட்டு விழா நடத்தினார். அதற்குப் பின்பு அந்தக் கட்டிடமே கட்டவில்லை. கல்நாட்டு விழா நடத்தியதோடு சரியாகிவிட்டது. பஞ்சாயத்து போர்டிலே வேண்டிய நிலம்கூட விட்டிருக்கிறோம். இது

[திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்] [1974 மார்ச் 20

வரையிலும் அந்தக் கட்டிடத்தைக் கட்டாமலிருக்கிற காரணத்தால் இந்த ஆண்டு அந்தக் கட்டிடத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

முடிவாக, திண்டுக்கல் வட்டம் சிறுமலையிலே உள்ள ஆசிரியர்களுக்கு மலைவாசஸ்தல ஊதியம் 15 ஆசிரியர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று 1972-ம் ஆண்டு உத்தரவிட்டார்கள். அதன்படி அந்த ஆசிரியர்களுக்கெல்லாம் ஊதியம் கொடுக்கப்பட்டாகி விட்டது. கொடுத்துவிட்டு, திருப்பிக் கட்ட வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக, ஆசிரியர்கள் எல்லோரும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அதை மீண்டும் அரசு பரிசீலனை செய்து, அவர்களுக்கு மலைவாசஸ்தல ஊதியம் கிடைக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முடிவாக, இந்த மானியக் கோரிக்கையை நான் வரவேற்று, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின்மீது நடைபெறுகின்ற இந்த விவாதத்தில் எங்கள் கட்சியின் சார்பிலே வைக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கல்வித் துறையின் சார்பாக ஏறத்தாழ 110 கோடி ரூபாய் செலவு செய்யப்படுகின்றது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதிலே பெரும்பகுதி உயர்நிலைக் கல்வித் திட்டத்திற்காக செலவழிக்கப்படுகிறது. அது எந்த வகையிலே பயன்தரத் தக்கது என்பதை ஆராயத்தக்க முறையில் நான் சில புள்ளிவிவரங்களை இந்த மாமன்றத்திலே வைக்க விரும்புகிறேன். 1973-74 ஆம் ஆண்டிலே எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதியவர்களின் தொகை 2,24,047, அந்தத் தேர்வில் தேறியவர்களின் எண்ணிக்கை 1.02,220 பேர்கள், கல்லூரிகளில் சேர்ந்தவர்களின் தொகை 72,6[illegible] வெளியே இருப்பவர்களின் தொகை 1,51,400, இதிலே 14 முதல் 17 வயதுவரையில் உள்ள இளைஞர்களின் தொகை பள்ளிகளிலே படிக்கிறவர்கள் 7.3 லட்சம் பேர்கள் என்ற அடிப்படையிலே பார்த்தால் வெளியே படிக்காமல் இருக்கின்றவர்கள் 22.38 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள்.



1974 மார்ச் 20] [திரு. செ. அரங்கநாயகம்]

நம்நாட்டிலே இருக்கின்ற பெரும்பகுதி இளைஞர்கள் படிக்காமல் வெளியே இருக்கிறார்கள் என்பதுதான் தெரியவருகிறது. கல்வி முறை இந்த நாட்டிலே எப்படி இருக்கிறது என்பதை நான் இந்த மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆங்கிலேயன் காலத்திற்குப் பிறகு இந்த நாட்டை பல்வேறு அரசியல் கட்சிகள் ஆட்சிசெய்தாலும், நலம் பயக்கத் தக்க வகையிலே பெரிய மாறுதல்களை செய்யவில்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டு மட்டுமல்ல, மதிப்பிற்குரிய ஸ்ரீமன் நாராயண் அவர்களுடைய கருத்தும் ஆகும்.

" We must concede that it has been the recommendation of all Special Committees and Commissions that our Educational System from the primary to the University Stages has remained by and large listless and stagnant unresponsive to the vital needs of the nation ".

என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையிலே குறிப்பிடத் தக்க மாறுதல்கள் இல்லாமல் ஆங்கிலேயன் காலத்திலிருந்த கல்விமுறைதான் தொடர்ந்து இருந்து வருகிறது.

ஆங்கிலேயன் காலத்திலிருந்த கல்வித் திட்டத்தை ஒரு குமாஸ்தா கல்வித் திட்டம் என்று அன்றைய தினம் சொன்னார்கள். ஒரு ஐடியல் கிளார்க் என்று சொல்லப்படுகின்றவர் யார் என்றால் புக் கீப்பிங் தெரிந்திருக்கவேண்டும், டைப்ரைட்டிங் தெரிந்திருக்க வேண்டும், ஷார்ட்ஹேண்ட் தெரிந்தால் பரவாயில்லை என்ற நிலைமை இருக்கும்பொழுது ஒரு ஒழுங்கான குமாஸ்தாவைக்கூட உருவாக்க கூடிய நிலைமையில் இந்த நாட்டிலே கல்வித் திட்டம் இல்லை.

கல்வித் திட்டத்திலே இருக்கின்ற குறைபாடுகளைப்பற்றி கோத்தாரி கமிஷன் கொடுத்து இருக்கின்ற ரிப்போர்ட்டைப் பற்றி இங்கே பேசப்பட்டது. 1953 ஆம் ஆண்டிலே டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள் தலைமையிலே செகண்டரி எஜுகேஷனைப்பற்றி ஆய்வதற்காக அகில இந்திய அடிப்படையிலே அமைக்கப்பட்ட அந்தக் குழுவிலே அகில இந்தியக் கல்வி நிபுணர்களும் வெளிநாடுகளிலிருந்த கல்வி நிபுணர்களும் அங்கம்

பெற்றிருந்து அந்தக் குழுவின் ரிப்போர்ட்டைத் தந்திரு
கிருர்கள். அவர்கள் சொன்னதெல்லாம்

"When the students pass out of schools they feel ill-adjuste
and cannot take their place confidently and competently in th
community"

என்று கல்வித் திட்ட முறைகளைக் குறைகூறியிருக்கிருர்கள்.

இந்த நிலையிலே தொடர்ந்து இருக்கின்ற கல்வி முறை இருக்
வேண்டுமா அல்லது மாற்றம்வேண்டுமா என்பதைப்பற்றி
கருத்துக்களையும் காரணங்களையும் சுட்டிக்காட்டவேண்
மென்ருல் இந்த மாமன்றத்திலே நான் எடுத்துக்காட்டவிரும்
வது, கேரள மாநிலத்திலே ஹை ரேட் ஆப் லிட்டரஸி இருப்பதா
சொல்லப்படுகிறது, கடந்த இருபத்தைந்து ஆண்டுக்காலமா
அங்கே அரசியலிலே பல்வேறு மாற்றங்கள், பல்வேறு நிலைமைக
ஏற்பட்டதற்கு எல்லாம் காரணம் அந்த நாட்டிலே அதிகபட்ச
படித்தவர்கள் எந்த வேலையும் இல்லாமலிருக்கின்ற சூழ்நிலையி
ஒரு சமூக விரோத உணர்வோடு இருப்பதாலேதான் அங்
பல்வேறு கிளர்ச்சிகள், போராட்டங்கள், புரட்சிகள் நடை
பெற்றன. அந்த மாநிலத்தைச் சீரழித்துவிட்டன. அப்ப
யிருக்கிற கல்வித் திட்டத்தை தீவிரமாக இந்த அரசு நடத்
மானுல் அப்படிப்பட்ட நிலைமை இங்கேயும் வந்துவிடலா
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எஸ்.எஸ்.எல்.சி. படித்த மாணவன் தன்னுடைய குடும்
திற்கு உதவியாக இருக்கிருனு அல்லது சுமையாக இருக்கிரு
என்பதைப் பார்த்தால் வேலையில்லாமல் ஊரிலே சும்மா சுற்
கொண்டு குடும்பத்திற்குச் சுமையாகத்தான் இருக்கிருன். அ
படிக்காமல் காரோட்டக் கற்றுக்கொண்டு டிரைவர் லைசென்
பெற்றுவிடுவானுனல் எஸ்.எஸ்.எல்.சி. படித்துவிட்டு இருக்கி
மதிப்பு மரியாதையைவிட அவனுக்கு அதிகமான மதிப்
மரியாதையும் இருக்கிறது.

ஏறத்தாழ 22.38 லட்சம் பேர்கள் படிக்காமல் இந்த நாட்டி
இருக்கிருர்கள் என்ருல் பள்ளிக்கூடங்களில் படித்துப் ப
பெறவில்லையே என்று கவலைப்படுவதைவிட பள்ளிக்கூடம் செ
படிக்காத நிலைமையிலே கூலிவேலை செய்துகொண்டா
பிழைத்துக் கொண்டிருக்கிருனே என்று சந்தோஷப்படத்
வேண்டியிருக்கிறது.



உயர்நிலைக் கல்வித் திட்டத்திலே மாற்றத்தை ஏற்படுத்தாமல் இந்த மன்றத்திலே மானியத்தைக் கோருவது இந்த அளவிற்கு உரிமை படைத்ததாக ஆகிவிடாது. உயர்நிலைக் கல்வித் திட்டம் பற்றி பேரறிஞர் அண்ணு அவர்கள் கூறிய கருத்துக்களை நான் இந்த நேரத்திலே மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அவர்கள் ஜப்பானுக்குச் சென்றுவிட்டு சென்னைக்கு வந்த நேரத்திலே நான் ஜப்பான் நாட்டிற்குப் போனேன். அங்கே எரிமலைகளின் தீமைகள், இயற்கையின் நிலைமைகள் எல்லாம் சாதகமில்லாமல் இருந்தும், ஜப்பான் நாட்டு மக்கள் வளம் மிக்க வாழ்வு நடத்திக்கொண்டிருக்கிருர்கள். ஜப்பான் நாட்டு மக்கள் உலகத்திலேயே பொருளாதார வளர்ச்சியிலே முற்போக்காக இருக்கிருர்கள். அதற்குக் காரணம் அவர்களுக்குள்ள அறிவும் ஆற்றலும்தான் என்று சொன்னுர்கள்.

உலகத்திலேயே மிகச் சிறப்பாக உள்ள நாடு என்று சொல்லத் தக்க ஜப்பான் நாடு இரண்டாவது உலகப் போரிலே அடைந்த நட்டங்களையெல்லாம் சரிக்கட்டி அதற்குப் பிறகு அறிவாலும் ஆற்றலாலும் வளர்ந்து இன்றைக்கு அமெரிக்காவினைவிட, டாலருடைய மதிப்பைவிட, யென்னுடைய மதிப்புதான் அதிகமாக மதிப்புள்ள நாணயமாக இருக்கின்ற நிலைமையைப் பார்க்கிறேம் என்ருல், அதற்குக் காரணம் ஜப்பான் நாட்டு மக்களுடைய அறிவு, ஆற்றல் வளர்ச்சிதான்.

மக்களுடைய அறிவு, ஆற்றல் வளர்ச்சியை வளர்க்க நல்ல ஆயுதம், வல்லமைமிக்க ஆயுதம் கல்வித்துறைதான். கல்வித் திட்டம், கல்வி முறைகள், கல்வித் துறை இவைகளினுல்தான் அதை மாற்றியமைக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டை ஒரு ஜெர்மன் நாடாகவோ அல்லது ஜப்பான் நாடாகவோ நான் பார்க்கவேண்டுமென்று விரும்புகிறேன் என்று பேரறிஞர் அண்ணு அவர்கள் சொல்வார்கள். அதை நினைவில் கொண்டு உடனடியாக கல்வித் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டும்.

எப்படி மாற்றவேண்டுமென்று கேட்டால் எஸ்.எஸ்.எல்.சி. படிக்கின்ற மாணவர் வாழ்க்கையிலே தகுந்தவனுக, ஏதாவதொரு தொழிலைத் தெரிந்துகொண்டவனுக மாற்றப்பட்டாக வேண்டும்.

[திரு. செ. அரங்கநாயகம்] [1974 மார்ச் 20

அப்படிச் செய்யாவிட்டால் தமிழ்நாட்டிலே எந்தவிதமான உருப்படியான சீர்திருத்தமும் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1953 ஆம் ஆண்டிலே டாக்டர் முதலியார் கமிட்டியின் ரிப்போர்ட்டிலே சொல்லி இருக்கின்ற கருத்துக்களும் அவையேதான். அந்தக் கருத்துக்களுக்கு எதிராக எந்தக் கருத்தையும் யாரும் இதுவரையிலே சொல்லவில்லை. அதற்கு ஆதாரவாகத்தான் எல்லாக் கல்வி நிபுணர்களும் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

'There should be much greater emphasis on crafts production in all schools and in addition diversification of courses should be introduced at the secondary stage so that a large number of students might take up agriculture or technical or commercial or other practical courses which will train their varied aptitudes and enable them to take up vocational pursuits at the end of the secondary course or general technical institutes for further training'.

என்று ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்கு முன்னாலேயே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைத்தான் நான் இன்றைக்கு வலியுறுத்த விரும்புகிறேன்.

தொழிற்கல்வியை தயவுசெய்து கட்டாயமாக்க வேண்டுமென்ற முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். இப்பொழுது இண்டர்மீடியட்டைக் கொண்டுவரலாமா வேண்டாமா என்று சர்க்கார் மட்டத்திலே ஒரு யோசனை இருப்பதாக அறிகிறேன். நான் சொல்லிக்கொள்வேன் அது தேவையில்லை. இப்பொழுது இருக்கின்ற பி.யு.சி.-யையும் உடனடியாக ஹைஸ்கூல் லெவலுக்குக் கொண்டுபோய் அங்கே 9-வது, 10-வது, 11-வது, அல்லது 12-வது என்று படிக்கச்செய்து, 3 அல்லது 4 ஆண்டுக்காலத்திலே நிச்சயமாக ஏதாவது ஒரு தொழிலைப் படித்து வெளியே வரக்கூடிய நிலைமையைச் செய்யவேண்டும். பி.யு.சி.-யை அப்படிச் சேர்த்தால் உயர்நிலைப்பள்ளி மட்டத்திலேயே ஏதாவது ஒரு தொழிலைக் கற்றுக் கொள்வதற்கான போதிய அவகாசம் கிடைக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இண்டர்மீடியட் என்பது தேவை இல்லை. அது ஒரு வேஸ்ட் என்று அன்றைக்கே சொல்லியிருக்கிறார்கள். ஹைஸ்கூலில் படிக்கின்ற அதே சூழ்நிலையில் படிப்பதுதான் நல்லது என்



1974 மார்ச் 20] [திரு. செ. அரங்கநாயகம்

மனவியல் வல்லுநர்கள் கருத்துக்களைத் தெரிவிக்கிறார்கள். அது மட்டுமல்ல, நாம் உயர்நிலைப்பள்ளியிலே கற்றுத் தருகிறோம், அங்கே நடப்பது டீச்சிங். ஆனால், கல்லூரிகளில் நடப்பது லெக்சரிங், சொற்பொழிவு செய்கிறார்கள். சொற்பொழிவு செய்வதன் மூலம் கருத்துக்களை எடுத்துக் கொள்ளும் அளவிற்கு அந்த வயதிலே மாணவர்கள் இருக்க மாட்டார்கள் என்பதற்காகத்தான் ஓராண்டை உயர்நிலைப்பள்ளியில் சேர்த்தார்கள். ஆகவே, இண்டர் மீடியட்டை மறுபடியும் ஆரம்பிப்பதற்குப் போதுமான காரணங்கள் கிடையாது என்பது மட்டுமல்ல, ஓராண்டுக் காலத்தை உயர்நிலைப்பள்ளியில் சேர்ப்பதால் நல்ல கல்வியை, பயனுள்ள கல்வியை இந்த நாட்டிற்கு நம்மால் தர முடியும்.

ஆகவே, இந்த அடிப்படையில் பார்த்தால் இப்பொழுது இருக்கின்ற இந்தத் திட்டத்தின் மூலம் தீவிரமாகச் செயல்பட்டால் இந்த நாட்டிலே படித்த வேலையில்லாதவர்களின் தொகை அதிகமாகும். அது இந்த நாட்டின் நல்லதற்கு அறிகுறி அல்ல, அது இந்த நாட்டின் நன்மைக்கு வழிவகுத்ததாக ஆகாது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைப்போல் வலியுறுத்திச் சொல்ல வேண்டுமென்றால், இந்தத் தமிழ்நாட்டை ஜெர்மனியைப்போல் பார்க்க வேண்டுமென்றால், ஜப்பானைப்போல் பார்க்க வேண்டுமென்றால் உயர்நிலைப் பள்ளிகளில் தொழில் கல்வியைக் கட்டாயமாக ஆக்க வேண்டும். அப்படி ஆக்கினால்தான் தமிழ்நாடு ஒரு ஜப்பானாக ஆகும், ஒரு ஜெர்மனியாக ஆகும். இல்லையென்றால் 110 கோடி ரூபாய் அல்ல, இன்னும் 200 கோடி ரூபாய் இந்தத் திட்டத்திற்குச் செலவு செய்தாலும்கூட நிச்சயமாக தமிழ்நாடு ஒரு கேரளமாகவோ, ஒரு குஜராத்தாகவோ அல்லது ஒரு பீகாராகவோதான் மாறும். இது காலத்தின் எச்சரிக்கை என்பதை இந்த மாமன்றத்தில் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த அடிப்படையில் உயர்நிலைப் பள்ளியின் கல்வித் திட்டத்தை மாற்றியமைக்க இந்த அரசு இன்னும் காலதாமதம் செய்யாது என்று நம்புகிறேன்.

அடுத்து, சோஷலிச சமுதாயம் அமைக்கப்பட வேண்டுமென்று இங்கேயும் சொல்லப்படுகிறது, மத்திய அரசாங்கத்திலேயும் சொல்லப்படுகிறது. ஆனால், சோஷலிச சமுதாயம் அமைகின்ற

[திரு. செ. அரங்கநாயகம்] [1974 மார்ச்

வகையில் கல்வி முறைகளையும், நம்பிக்கையையும் இந்த நாட்
இளைஞர்களின் உள்ளத்திலே ஏற்படுத்தியிருக்கிறோமா என்
இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். உயர்நிலைப் பள்
யாலும், கல்லூரியாலும் சோஷலிச தத்துவம் போதிக்கப்
வேண்டும். அதற்கேற்ற வகையில் பயிற்சி தரப்பட வேண்
அதற்கேற்ற நம்பிக்கை ஊட்டப்பட வேண்டும். அப்ப
செய்தால் நாம் சொல்லும் இந்த சோஷலிச சமுதாயம்
வலிமை வாய்ந்த சமுதாயமாக அமையும் என்ற அடிப்படை
பாடத்திட்டத்தில் இந்தக் கருத்துக்கள் போதிக்கப்பட வே
மென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் சில தவறுகளைச் சுட்டிக்காட்டாமல் இரு
முடியாது. உணவுக் கலப்படச் சட்டம் என்று சொல்கிறோ
பாலில் தண்ணீர் கலந்தால், அல்லது நல்லெண்ணெ
கடலெண்ணெயைக் கலந்தால் குற்றம் என்று சொல்கிறோ
அதற்கு சிறைத் தண்டனை கட்டாயம் என்று சட்ட
சொல்கிறோம். ஆனால் கணக்குப் புத்தகத்தில், லாப நஷ்
கணக்கைக் கொடுக்கும்பொழுது, இவ்வளவு நல்லெண்ணெ
வாங்கி அதில் இவ்வளவு கடலை எண்ணெயைக் கலந்து
ளவுக்கு விற்றால் லாபமா, நஷ்டமா, சதவிகிதம் என்ன எ
கணக்கைப் போடுகிறோம்.

ஆகவே, வாழ்க்கைக்கும், தத்துவங்களின் நோக்கங்களுக்
இலட்சியங்களுக்கும் ஒத்து வராத கருத்துக்கள் பள்ளிக
நிறைய சொல்லிக் கொடுக்கப்படுகிறது. அதையெல்லாம் தவி
வேண்டும், அதையெல்லாம் ஒழிக்க வேண்டும். மீதமு
நேரத்தைப் பயனுள்ள காரியங்களில் செலவழிக்கின்ற வகை
பாடத்திட்டத்தை மாற்றியமைக்க வேண்டும்.

இன்னும் அசோகன், அக்பர் என்று இருக்கிற வரலா
பெரியவர்களைப்பற்றி எத்தனை வகுப்புகள், எத்தனை பாட
சொல்லித்தருகிறோம்? அவ்வளவு தேவைதானா? எனவே இ
சீர்திருத்தப்பட வேண்டிய காரியங்கள் நிறைய இருக்கி
என்பதைச் சுட்டிக்காட்டி உயர்நிலைப்பள்ளிப் பாடத்திட்ட
பெரும் மாறுதலை எதிர்பார்த்து சில கோரிக்கைகளை மன்
முன்வைக்க விரும்புகிறேன்.



1974 மார்ச் 20] [திரு. செ. அரங்கநாயகம்]

கோவை மேற்கு தொகுதியில் நான் பேசிய கருத்துகளுக்கு ஒப்ப பல்தொழில் பயிற்சிப் பள்ளி நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 'பேச்லர் ஆஃப் பிசினஸ் அட்மினிஸ்ட்ரேஷன்' வகுப்புகளை மதுரைப் பல்கலைக் கழகத்தில் வைத்திருக்கிறார்கள். அதில் மேல் பட்டப்படிப்பு படிப்பதற்காக வாய்ப்புகள் தமிழகத்தில் இல்லை. தமிழ்நாட்டில் அந்த வகுப்புகள் தோன்றுவதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, சமுதாயத்தில் ஒரு தொழிலாளி, ஒரு மில்லுக்குப் போகிறவர் எந்த வகுப்பிலேயும் படித்து முன்னுக்கு வரக்கூடிய, பட்டம் பெறக்கூடிய வாய்ப்பு இருக்க வேண்டும். அப்பொழுது தான் நமது அரசு முற்போக்கு அரசு என்று ஒப்புக்கொள்ள முடியும். இப்பொழுது அந்தச் சந்தர்ப்பம் இல்லை. அத்தகைய வாய்ப்புகளை அரசாங்கம் செய்ய வேண்டும், அந்த வாய்ப்புகளை உண்டாக்கித் தர வேண்டுமென்று பாடுபடும் அந்தப் பாட்டாளிகளின் சார்பில் அமைச்சரவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் இலவசக் கல்வி என்று சொல்கிறார்கள். ஆனால், கந்தசாமி நாயுடு கல்லூரி என்ற ஒரு கல்லூரியில் பி.யு.சி. படிக்கும் மாணவர் சென்ற வருஷம் 300 ரூபாய் செலுத்தியிருக்கிறார். கேட்டால் ஸ்பெஷல் பீஸ் என்று சொல்கிறார்கள். சர்க்கார் நல்லதைச் செய்கிறார்கள், ஆனால் கல்லூரி நிர்வாகம் அதற்கு அவப்பெயரைத் தரும் வகையில் நடந்து வருகிறது என்று சொல்லி, இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து முடித்துக்கொள்கிறேன்.

* THIRUMATHI ALDA M. FOWLER: Mr. Speaker, Sir, I wish to offer a few comments on the Demand before us, namely, Education and offer a few suggestions to the Members of this Honourable House for their kind consideration.

I have a concern, Sir, for the young children, that is the children of the Pre-School age. Today, when both parents go out to work, these children are left behind uncared for and not properly attended and it is these children who have to come to school later on and we have to make of them into good students.

[Thirumathi Alda M. Fowler] [1974 மார்ச் 20

I know that Government has plans for the pre-school child and pre-school education. If these children are brought into school early at the age of three, they could also have the benefit of a meal which would correct certain mal-formation and maladies which take place because of lack of proper nourishment and therefore I suggest, Sir, while this programme for pre-school children is being planned and implemented, that a certain number of Anglo-Indian Schools be allotted for the care of these small children, who are, as I know and perhaps as you know too, very gravely affected for want of proper care.

In our schools, Sir, we have special sections which are known as unrecognisel sections. They have come into being in the last so many years. But it is time now, Sir, that these unrecognised sections should be given full recognition and that they should have the full benefits of grants and other facilities which they do not enjoy at the moment.

Many hon. Members have been mentioning the need for special attention to school-leavers. We have said, Sir, that these children drop out of schools for various reasons—it may be poverty it may be lack of care by parents or it may be their own restlessness. I think, Sir, we have to find out from the students themselves why they want to do this, what forces them to do this. If we make an investigation of the people concerned we might get a more realistic picture of what really goes on in their minds.

I feel that a good reason can be that the subjects we offer to them are not interesting enough; all of them are not concerned or are not interested in History, Geography, Biology and things like that. Perhaps they would be interested if they were to take up a watch or a time-piece or a scooter or a car to pieces and put the parts together again. It means that their studies have to be job-oriented and we must think of educating them in a more practical manner. I think that that may be one solution at least and it may keep a certain type of student back in school, who otherwise might have left the school early only. to render himself completely unemployable.

I ask specially, Sir, that an ITI type of school or institution may be organised for the children of Anglo-Indian schools to which they can be directed when they start feeling that the school subjects are no longer relevant to their needs for employment.



1974 மார்ச் 20] [Thirumathi Alda M. Fowler]

(4-30 பிற்பகல்)

A word about the teacher tainees from the time of the inception of our institutions for training teachers, we have given these teachers—teacher trainees—Rs. 30 per month as stipend. The same amount continues to be given, although the prices have skyrocked and the cost of living has gone up. But we have still kept the amount at Rs. 30 per month per student as a stipend. May I suggest that we should raise this amount by a sum of Rs. 25 per month per student, so that he or she may receive Rs. 30 plus Rs. 25.

We want to attract good teachers, Sir. The quality of our schools depends on the quality of our teachers. Therefore, we must attract the very best sort of people, so that they could give their utmost attention to the institutions and children whom they serve.

Regarding our Inspectorate, I would like to say a word, Sir. I find that no improvements for Inspectorates have been thought about and provided for. May I say that no Inspectorate can do its best in inspecting the schools, if they are short-staffed. If the Inspectorate is short-staffed, naturally the work slows down. Therefore, I ask the Government and the Department to give their maximum thought to this matter.

New syllabuses have been drawn up and the schools are waiting to carry out these new syllabuses. I ask these may be speeded up. Also regarding the 10 plus 2 pattern for education, I trust the Government will take a decision soon so that there could be no doubt as to what we have to strive for high standards and everything else.

I want to express a word of thanks to the Government for its pension scheme; especially I do thank the Government for including private schools and Anglo-Indian Schools, that is, the Minority Schools within the scope of pensions. When I mentioned this a few days ago to certain persons in Delhi, they could not accept that we were also receiving pension. I do thank the Government most sincerely and congratulate this Government on its bold step for providing it for teachers.

[Thirumathi Alda M. Fowler] [1974 மார்ச் 20

I would like to say a word on behalf of the teachers who retired before the Liberalised Pensions were implemented. Some teachers are getting a very low amount, which is below the subsistence level on which they have to live. For those who live below the subsistence level, the Government can give a special thought.

I would like to say a word about the practice with regard to awarding marks, averages of marks as the criteria for selection to certain types of colleges. Two different types of examinations are held. Two different forms of marking are done. Different levels and standards are maintained. Yet all these marks are divided by certain number and if you get so much of marks, you will be selected and if you get lower marks than that, you will not be selected. It is unfair to children who study in the type of schools where the marking practice is strict. I ask the concerned people in this Department to lend their special thought to this problem.

Lastly, I wish to congratulate the Government for a very big noble piece of work that it does for the tremendous task that it has before it and the relentless way in which it tries to push back the walls of ignorance and illiteracy. I feel all of us must join in this work of helping the Government to bring about a complete and educated electorate very soon.

Thank you, Sir.

**திரு. என். கே. பழனிசாமி:** கனம் சபாநாயகர் அவர்களே, கல்விக்காக 138 கோடி 40 லட்சம் ரூபாய் செலவு செய்ய இருக்கிறார்கள். இந்தப் பணம் மாணவனுக்குப் பிரயோசனம் உள்ளதாக இருக்குமா, மாணவன் படித்து இந்தச் சமுதாயத்திற்கு எந்த அளவிற்குப் பிரயோசனம் உள்ளவனாக இருக்கப் போகிறான்? 1946-ம் ஆண்டு சார்ஜன்ட்ஸ் கமிஷன் போட்டு நாம் செலவழிக்கிற பணம் வேஸ்டேஜ் ஆகாமல் இருக்க என்ன செய்ய வேண்டுமென்று பரிசீலனை செய்தார்கள். 30 வருஷம் ஆகிவிட்டது. இது வரை வேஸ்டேஜைத் தடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இப்போது எஸ். எஸ். எல். சி. பரிட்சையில் 40 சதவிகிதத்தினர் தான் தேறியிருக்கிறார்கள். 60 சதவிகிதத்தினர் தேறவில்லை. அவர்களுடைய நிலைமை என்ன? பி. யு. சி. யில் 14,000 பேருடைய



1974 மார்ச் 20] [திரு. என். கே. பழனிசாமி]

இடம் காலியாக இருக்கிறது. மாணவர்கள் வரவில்லை. எலிமென்டரி எஜுகேஷனை எடுத்துக் கொண்டால் 50 பேர்கள் சேர்ந்தாலும் கடைசியில் 17 பேர்தான் இருக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம் சமுதாயத்தில் அவர்களுக்கு இருக்கிற கஷ்டம், வறுமைதான். வேஸ்டேஜைத் தடுக்க இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

பிரைவேட் காலேஜஸ்க்கு எய்டு 80 கோடி ரூபாயும், 'பிளான் எக்ஸ்பென்டிசர்', 'நான்-பிளான் எக்ஸ்பென்டிசர்' 3 கோடி 55 லட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. முக்கால் பங்குக்கு மேல் எய்டுக்குப் போகிறது. பிரைவேட் ஸ்கூல்களுக்கு பில்டிங் கிராண்ட் கொடுக்கிறோம்; ரெண்ட் கிராண்ட் கொடுக்கிறோம்; டீச்சிங் கிராண்ட் கொடுக்கிறோம்; சுண்ணும்பு அடிக்கக் கொடுக்கிறோம்; இதற்கு மேல் மெயின்டனன்ஸ் கிரான்ட் 12 பர்சன்ட் கொடுக்க வேண்டுமா? ஏன் கொடுக்க வேண்டும்? இதிலே இரண்டு கோடி ரூபாய் மிச்சமாகும்.

பிரைவேட் காலேஜில் 200 ரூபாய் வரை டியூஷன் ஃபீஸ் வாங்குகிறார்கள். சர்க்கார் காலேஜில் ஏன் இலவசமாகச் சொல்லிக் கொடுக்கவேண்டும்?

கல்விக்காக 110 கோடி ரூபாய் செலவு செய்வதில் ஸ்போர்ட்சுக்காக 10 லட்சம் ரூபாய்தான் செலவு செய்வது என்பதைப் பார்க்கும்போது ரொம்பக் கேவலமாக இருக்கிறது. மத்திய சர்க்கார் 65 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். ஒலிம்பிக்சில் என்ன நிலை? 50 கோடி ஜனத்தொகை உள்ள இந்த நாட்டில் இருந்து ஒலிம்பிக்குக்குப் போகக் கூடியவர்கள் இரண்டு பிரான்ஸ் மெடலை வாங்கி வருகிறார்கள். இரண்டு கோடி ரூபாயை ஒதுக்கி ஸ்போர்ட்சை அபிவிருத்தி செய்யக்கூடிய முறையில் செய்ய சர்க்கார் முன்வரக்கூடாதா?

கல்வி முறையில் மாற்றம் வேண்டுமென்று எல்லோரும் சொல்லுகிறார்கள். இன்றைக்கு இருக்கக்கூடிய கல்வி முறை பிரிட்டிஷ் காலத்து, மெக்காலே காலத்துக் கல்வி முறை. கிளார்க்குகளைப் ப்ரொட்யூஸ் பண்ணுவதற்காக வகுக்கப்பட்ட கல்வி முறை. இது மாற வேண்டும், மாறவேண்டும் என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். நடைமுறை என்ன? கல்வி 14 வருஷம் இருக்க வேண்டுமா,

15 வருஷம் இருக்க வேண்டுமா? ஹைஸ்கூல் 10 வருஷமா 11 வருஷமா? காலேஜ் படிப்பு 3 வருஷமா 4 வருஷமா? இதைத் தான் சொல்லுகிறார்களே தவிர கல்வி முறையில் மாற்றம் பற்றிச் சொல்லவில்லை. ஜாப் ஓரியன்டட் ஸ்கீம் ஏற்படுத்த ஏதாவது சொல்லுகிறார்களா? இன்றைக்கு பி.யு.சி.-க்குப் பதிலாக அதையும் சேர்த்துவிட்டு ஏற்கனவே ஹைஸ்கூல் படிப்பு 11 வருஷத்தை 10 வருஷமாகக் குறைக்கவேண்டும்.

காலேஜ் படிப்பு நான்கு வருடங்கள், ஆக 14 ஆண்டுகளுக்குள் கலாசாலை படிப்பை முடிக்கும் வகையில் திட்டத்தை மாற்ற வேண்டும்.

கல்வி முறையில் இப்போது மெமரைஸ் செய்வது என்றிருக்கிறது. பத்து கேள்விகள் படிக்கவேண்டும் அதில் ஐந்து கேள்விகள் வந்தால் அந்த ஐந்து கேள்விகளுக்கு பதில் எழுதினால் தேறிவிடலாம். ஆனால் அந்தப் பத்துக் கேள்விகளும் வரவில்லை என்றால் அந்த மாணவன் பெயில்தான். ஆகவே இப்படி மெமரைஸ் செய்து எழுதக்கூடிய பரிட்சை தேவையா? அதில் க்ரீயேட்டிவ் ப்ரெயின்-க்கு வழி என்ன இருக்கிறது?

விஞ்ஞானத்தை எடுத்துக்கொண்டால் கார்பண்டையாக்ஸைட் எப்படி தயாரிப்பது என்பது தியரியில்தான் இருக்கிறதே தவிர ப்ராக்டிக்கலாக சொல்லிக்கொடுப்பதில்லை.

சரித்திரத்தை எடுத்துக்கொண்டால் அசோகர் காலத்தில் அசோகர் சத்திரங்கள் கட்டினார், மரங்களை நட்டார், கிணறுகளை வெட்டினார் என்றுதான் உயர்நிலைப்பள்ளிப் புத்தகங்களிலும் வருகிறது, காலேஜ் பாடத்திலும் அதுதான் வருகிறது. ஆகவே இப்படி ரிப்பீட் செய்யும் முறையில் உள்ள பாடத்திட்டம் அவசியமா?

பின்னர், வாட் ஈஸ் எக்கனாமிக்ஸ்? அது பி. ஏ. யிலும் கிடையாது, எம். ஏ. யிலும் கிடையாது. எக்கனாமிக்ஸ் பற்றிய டெபனிஷன் பி.ஏ.யிலும் கிடையாது, எம்.ஏ.யிலும் கிடையாது.

மால்தூஷியன் தியரி என்றிருக்கிறது. கெனீஷியன் தியரி என்றிருக்கிறது. கெனீஷியன் தியரியை எடுத்துக்கொண்டால் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். அவர் ஒரு பொருளாதார நிபுணர். ஒரு இடத்தில்





பத்துபேர்கள் இருந்தால் அதில் மூன்று பேர்களுக்கு வேலையில்லாமல் இருந்தால் தான் மற்ற ஏழு பேர்களும் நன்கு வேலை செய்வார்கள் என்றும் மூன்றுபேர்களுக்கு மட்டுமே வேலை இருந்து ஏழு பேர்களுக்கு வேலையில்லாத நிலை இருந்தால் அவர்கள் மேலும் நன்கு வேலை செய்வார்கள் என்றும் சொல்கிறார்கள். இதை மாணவர்களிடையே போதித்தால் மாணவர்கள் இடையில் ஒரு விரக்தி ஏற்படுகிறது. ஆகவே மாணவர்களிடையே ஒருவித ரெஸ்ட்லெஸ்னஸ் ஏற்படுகிறது. ஆகவே இந்தமாதிரியான பாட முறைகளை மாற்றியமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பின்னர் தேர்வு முறையில் ஒவ்வொரு டெஸ்ட்டும் வைத்து அதன் பேரில் பாஸ் கொடுக்கிறார்கள். நமது பாடதிட்டங்கள், பாடமுறைகள் ஜாப் ஓரியன்டட்டாக இருக்கவேண்டும். இப்போதுள்ள ஸிலபஸ்ஸையும் மாற்றியாகவேண்டும்.

பின்னர் பரிட்சை எழுதும்போது ரெபரன்ஸ் புக்கை பார்த்து எழுதக்கூடிய ஒருமுறை இருந்தால்தான் அறிவு விருத்தியாகும், க்ரியேட்டிவ் ப்ரெயின் விருத்தியாகும்.

அடுத்தபடியாக, காரஸ்பான்டன்ஸ் கோர்ஸ் வைத்தால் சர்க்காருக்கு ஏற்படும் செலவும் குறையும்.

பின்னர், பாக்வேர்டு என்ற முறையில் கல்விச் சலுகை, ஸ்காலர்ஷிப்ஸ் கொடுப்பதற்குப் பதிலாக எக்கனாமிக் கன்ஸிடரேஷனில், பொருளாதார ரீதியில் மோசமாக இருப்பவர்களுக்குக் கொடுக்கும் முறையில் செய்யவேண்டும்.

மதுரையில் லெனின் பற்றி பாடம் போதிக்கிறார்கள். காப்பிடல், சர்ப்ளஸ் லேபர் பற்றியெல்லாம் சொல்லிக்கொடுப்பது அவசியம். கம்யூனிஸத்தை நோக்கித்தான் நம் சமுதாயம் போய்க்கொண்டிருக்கிறது. இம்மாதிரி பாடங்களைச் சொல்லிக் கொடுப்பதால் பொருளாதாரம் பற்றி மாணவர்கள் நன்கு புரிந்துகொள்ள முடியும்.

பத்தாண்டுகளுக்கு முன்னால் தமிழர்களுக்கு மற்ற மாநிலங்களில் அதிகமாக வேலைகள் கிடைத்து வந்தன. ஆனால் இப்போது அப்படியல்ல. மற்ற மாநிலங்களில் இன்றையதினம் ப்ரொபஷனல் கோர்ஸ்க்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இங்கு பல

டெக்னிக்கல் ஸ்கூல்ஸ் மூடப்பட்டிருக்கின்றன. மற்றயிடங்களில் ஜெனரல் எட்யூகேஷன் ப்ளஸ் ப்ரொபஷனல் க்வாலிபிக்கேஷன் இருக்கிறது.

கேரளாவை எடுத்துக்கொண்டால் எஸ். எஸ். எல். ஸி. யில் பாடதிட்டத்தோடுகூட டைப்ரைடிங் போன்ற வேறு ஏதாவது ஒரு ப்ரொபஷனல் சப்ஜக்ட்டும் இருக்கும். ஆகவே எளிதாக வேலை கிடைக்க வாய்ப்பிருக்கிறது.

பத்தாண்டுகளுக்கு முன்னால் செகண்ட் லாங்க்வேஜாக இந்தியை வைத்திருந்தோர். சர்க்காரே எதிர்ப்பதால் மாணவர்களும் அதைப் படிப்பதை நிறுத்திவிட்டார்கள். ஆக வேறு இடங்களுக்கு போக வேண்டுமென்றால் அந்த க்வாலிபிக்கேஷன் கிடையாது. ஸ்டாண்டேர்டும் குறைந்துவிட்டது.

இன்றையதினம் போஸ்டல், ரெயில்வே போன்ற இடங்களில் மலையாளிகள் அதிகமாக இருக்கிறார்கள் என்றால் காரணம் இதுதான். எந்த டெஸ்ட் வைத்தாலும் இந்தியில் படித்து அவர்கள் பாஸ் செய்து விடுகிறார்கள்.

ஆகவே, கேரளா இரண்டு இருக்கிறது என்று சொல்வது சர்க்கார் கொள்கையின் விளைவுதான். ஆகவே, இப்போதுள்ள கல்விமுறையை மாற்றிக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* THIRU K. S. KOTHANDARAMIAH : Hon. Speaker, Sir, I thank you very much for giving me an opportunity to speak on a most interesting inspiring and enabling Demand brought before this House by the Hon. Minister for Education and Tourism.

Now, under this Demand, about Rs. 110 crores have been allotted and from this we can understand that our State has allotted so much for education when compared to other States in the country.

I went through the whole brochure circulated to the hon. Members and I find that it is very comprehensive. The Education Department and the Hon. Minister for Education have covered all the sections of the Department that come under ' Education '. The general idea even among the educated people outside is that education means any elementary education, secondary education and collegiate education and it stops with that. They do not have a clear idea of what education is, how many branches there are,





what are the things required and what is the Government doing for it. They also think that all the 110 crores of rupees are spent on salaries or things like that.

Last time itself I suggested to the Hon. Minister that a small book like this, containing comprehensive details should be sup- plied to all schools and libraries so that they can go through it and understand how the Government are really working for the improvement of education of the people of this State. Because many people ask us, what is it that they are doing and how are they spending the amount. Perhaps it is a difficult thing for us to explain all these things because they are not patient enough to listen to us. I hope that my humble request for comprehensive details has been acceded to by the Government and this book will give a correct idea of the working of the educational system so that they can appreciate the attitude of the Government.

Coming to the quality of education it is a very comprehensive thing and so many factors join together as is the case in the preparation of food—sambhar, rasam, etc. All the ingredients. should be mixed in required proportion, as otherwise it is very difficult to get good food.

Similarly, to keep the quality of education, teachers, pupils, parents, class rooms, text-books, syllabus, furniture, maps, etc., make their contributions.

As I have gone through this book, I find that the Government have taken a lot of trouble and interest to see that the quality is improved. For that they have reduced the teacher-pupil ratio. Now it is 1 : 34 and formerly it used to be 1 : 50 or 1 :60. But to give attention to every student, the teacher-pupil ratio should be 1 : 25. I think slowly we are going towards it. After some time we can reach it.

With regard to buildings for teaching different subjects, in any school there should be separate rooms for geography teaching, mathematics teaching, etc. They require some apparatus for teaching the subjects. But everything is taught in one half, even in higher elementary classes because of want of buildings.

When the mathematics teacher comes to the class he finds the whole atmosphere different. He wants separate place to teach his subject with the instruments. Teaching becomes stale and the

[Thiru K. S. Kothandaramiah] [1974 மார்ச் 20

boys will only see blank walls. There is diguest; so, the question of building is more important. Considering the question of quality, I hope suitable buildings will be provided for teaching different subjects by the Government. By buildings, I mean different class rooms.

Coming to mid-day meals issue, Government is doing good work. In some places central kitchen has not been introduced. But in some schools, they require separate building for kitchen. Food also should be served for all in a common place and a separate building for serving food to all boys and girls may be provided, with proper sanitary system attached.

Coming to buildings, I know some elementary schools, under the control of Panchayat Unions are without buildings and the students are taught under trees. Mysore Government are constructing elementary schools in an excellent manner and I hope proper attention will be paid to this aspect by the authorities.

Selection grade has become something like a Mohini. It is given on merit and also on seniority. But it has led to so much confusion Promoting people to selection grade on seniority or merit is left to controlling authorities. In some places it has given place to corruption.

I would also suggested that teachers possessing M. A. qualifications working in all High Schools should be allowed to go to College teaching also. Otherwise it becomes compartmentalised and they become disgusted.

I will say a few words about linguistic minorities. I have been repeating this a number of times so that the Government may issue orders on the matter. But all the safeguards have not been implemented so far. If they are implemented there is no question of grievance at all. Only some of them have been implemented. Many others have not been implemented. One of them is that officers who are posted to linguistic minority areas must know the language of the locality, so that they might understand the views of the people of that locality. They must have working knowledge of the language of that area. Government of Tamil Nadu has agreed to print certain notices, orders and forms and important rules in the local languages. It is there in Government Order No. 455, Public (Partition), dated 14th March 1961.



1974 மார்ச் 20] [Thiru K. S. Kothandaramiah]

With the permission of the Chair, I shall read a letter I received from Thiru A. Ganesan, Asssitant Secretary to Government, Rural Development and Local Administration Department, It states :—

'SUBJECT.—Hosur taluk—Linguistic minorities—Printing of certain forms of the Panchayats in Telugu—Regarding.

*Reference.*—Your letter dated 10th December 1973.

I am directed to invite your attention to the letter cited and to state that the matter is receiving the attention of Government.'

I received a letter from the Linguistic Minorities Commissioner also in this respect. Government must see that he forms are printed in Telugu, so that the local people might understand and so that they can represent their grievances to the authorities in a better manner. I hope Government would pass necessary orders in the matter as early as possible. Thank you.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சபாநாயகர் அவர்களே, இது மிக முக்கியமான மானியக் கோரிக்கை. ஏறக்குறைய 138 கோடி ரூபாய் நாம் செலவழிக்கப்போகிறோம். இப்படி ரூ. 138 கோடி செலவழிக்கிறோம் என்று கணக்கு காட்டிக் கொண்டிருக்கிறபோது, அதற்குரிய பயன் கிடைத்திருக்கிறதா என்பது சந்தேகமே என்று ஆணித்தரமாகச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

என் இதைச் சொல்கிறேன் என்றால், படிப்பவர்கள் எல்லாம் வெறும் படிப்பிற்காக மட்டும் படிக்க வில்லை, பிழைப்பிற்காகவும் சிலர் படிக்கிறார்கள், படிப்பிற்காகவும் சிலர் படிக்கிறார்கள். இரண்டையும் பார்க்கிறபோது ஒழுங்கு முறையில் அந்தப் பணத்தை செலவழிக்கிறோமா, நல்ல கல்வித் தரத்தைக் கொடுக்கிறோமா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது.

மிகத் தீவிரமான மாறுதல் இந்த அரசு இந்தத் துறையில் மேற்கொள்ளவேண்டியிருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். என் இதைச் சொல்கிறேன் என்றால், இங்கே பல வகையான பள்ளிகளைக் காண்கிறோம். நான் ஒவ்வொரு முறையும் சொல்லி வருகிறேன். இங்கே நாம் ஹரிஜன் வெல்பேர் டிபார்ட்மெண்டில் ஒரு பள்ளி நடத்துகிறோம், பிற்பட்டோர் நலத்துறையில் ஒரு

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1974 மார்ச் 20

பள்ளி நடத்துகிறோம், ஊராட்சி ஒன்றியங்களில் ஒரு பள்ளி
நடத்துகிறோம், அரசே பள்ளிகளை நடத்துகிறது, இப்படி நான்கு
எஜமானர்கள் கையில் படாத பாடு பட்டுக்கொண்டிருக்
கிறது.

பஞ்சாயத்து யூனியன், கார்ப்பரேஷன் பள்ளிகளுக்கு
பிள்ளைகளை அனுப்பி வைத்தால் அவர்கள் கல்வியைத் தவிர மற்ற
எல்லாப் பழக்கங்களையும் கற்றுக்கொண்டு வந்துவிடுகிறார்கள்.
இப்படி இருப்பதால், நடுத்தர மக்கள் தங்கள் பிள்ளைகளை அந்த
மாதிரி பள்ளிகளுக்கு அனுப்புவதற்கு பயந்து கொண்டு, தனியார்
பள்ளிகளுக்கு அனுப்பி வைக்கிறார்கள்.

நாம் தனியார் பள்ளிகளைக் கட்டுப்படுத்துவதற்கும் சட்டம்
கொண்டு வந்திருக்கிறோம். என்னதான் நாம் சட்டம் கொண்டு
வந்தாலும் அவர்கள் 1-ம் கிளாஸ் என்றால் ரூ. 20 கொண்டு வா
என்று சொல்கிறார்கள். இப்படி 3-4 பிள்ளைகளைப் பெற்று
வைத்திருந்தால் ஒரு தகப்பன் ரூ. 80 பீஸ் கட்டவேண்டியிருக்
கிறது. சம்பளம் வாங்கிக்கொண்டு போய் குடும்பம் நடத்த
முடியுமா என்று அஞ்சிக்கொண்டிருக்கிற நேரத்தில் இப்படி பீஸ்
கட்டுவது என்றால் எப்படி முடியும்.

இப்படிப்பட்ட பள்ளிகளுக்கு பிள்ளைகளை அனுப்பாவிட்டால்,
பிள்ளைகள் பிள்ளைகளாக இருக்கமாட்டார்கள். நம்முடைய
பிரைவேட் ஸ்கூல் சட்டத்திலேயே செக்ஷன் 32-ன் கீழ் தனிப்பட்ட
நபர்கள் பள்ளிகளை நடத்தினால் மாணவர்களிடமிருந்து இவ்வளவு
தொகைக்குமேல் பணம் வசூலிக்கக்கூடாது என்று கொண்டு
வருவதற்கு அதிகாரம் பெற்று இருக்கிறோம். அதை யூஸ் செய்து
இந்தப் பள்ளிகள் இதற்கு மேல் பணம் வசூலிக்கக்கூடாது, அது
இங்கிலீஷ் மீடியம் ஸ்கூலாக இருந்தாலும் சரி, எக்ஸ்சலண்டு
ஸ்கூலாக இருந்தாலும் சரி. என்று வைத்தால்தான் நடுத்தர
மக்கள் பிழைக்க முடியும். அவர்கள் பிள்ளைகள் நல்ல தரமான
படிப்பையும் பெறமுடியும். இல்லையென்றால் அவர்கள் ரூ. 50, ரூ. 30
என்று விம்சிகலாக வைத்துக்கொள்வார்களானால் நாங்கள்
டொனேஷன் கொடுக்க மாட்டோம் என்று நீங்களும் சொல்லலாம்,
அவர்களும் வேண்டாம் என்று சொல்லலாம். அவ்வளவு பணத்தை
யார் கட்டுவது?



1974 மார்ச் 20] [திருமதி த. ந. அனந்தநாயகி]

ஆகவே, இவ்வளவு பணத்தைச் செலவு செய்யும் அரசாங்கம்
உடனடியாக பள்ளிகளில் தரமான கல்வி தருவதற்கு வழிவகை
களைக் காணவேண்டும்.

நானும் ஒவ்வொரு முறையும் சொல்லி வருகிறேன். எலிமெண்டரி
எடுகேஷனுக்கு என்று ஒரு தனி டைரக்டர் போடுங்கள். கல்லூரிக்
கல்விக்கென்று தனி டைரக்டர் போடுங்கள். செகண்டரி கல்விக்
கென்று ஒரு தனி டைரக்டர் போடுங்கள். எல்லாவற்றையும்
ஒன்றாக வைத்து, ஒரே டைரக்டர் கையில் அதிகாரம் இருந்தால்
அவர்கள் எல்லாப் பள்ளிகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டு,
அதன் தரத்தை உயர்த்துவது என்று சொன்னால் அதற்குள் பிள்ளை
கள் எலிமெண்டரி எடுகேஷனை விட்டு செகண்டரி எடுகேஷன்
லெவலுக்கு வந்து விடுவார்கள். பள்ளிகளின் தரம் உயராது. ஒரு
டைரக்டர் போட்டு இருக்கிறோம், 8 டெபுடி டைரக்டர் போட்டு
இருக்கிறோம், 10 டெபுடி டைரக்டர் போட்டு இருக்கிறோம் என்று
சொன்னாலும், கடைசியில் டைரக்டரிடத்தில் போய் தான்
உத்தரவு வாங்கவேண்டுமென்று சொல்வார்கள்.

There will be delay. There will be no proper decision. It is
only waste of time. ஆகவே, உடனடியாக
எலிமெண்டரி எடுகேஷனுக்கு ஒரு டைரக்டர், செகண்டரி
எடுகேஷனுக்கு ஒரு டைரக்டர் என்று போடுங்கள்.

திரும்பவும் குழப்பம் வந்து இருக்கிறது. 10–2–3; 11–1–3,
என்று கல்வி முறையில் குழப்பம் வந்திருக்கிறது. கொஞ்ச காலத்
திற்கு முன்னால்—நாங்கள் படிக்கும்போது—இன்டர்மீடியட் 2
வருடம் இருந்தது. பிறகு ஓராண்டு புகுமுக வகுப்பு என்று
வைத்து மூன்றாண்டு கல்லூரிக் கல்வி என்று வைத்தார்கள். இந்த
ஒரு வருஷத்தில் மாணவர்கள் உயர்நிலைப்பள்ளி கல்வி என்றும்
இல்லாமல், கல்லூரிக் கல்வி என்றும் இல்லாமல் திரிசங்கு சொர்க்க
நிலையில் இருந்தார்கள். இப்போது அகில இந்திய அடிப்படையில்
10-2-3 என்று வைக்கலாமா என்று யோசித்துக்கொண்டிருக்க
கிறார்கள். அப்படிப்பட்ட முடிவு எடுக்கப்படுமானால் நாமும் அந்த
முறையைப் பின்பற்றினால் சாலச்சிறந்ததாக இருக்கும் என்று
எண்ணுகிறேன்.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1974 மார்ச் 20

(மாலை 5.00)

நாம் எத்தனையோ ஆரம்பப்பள்ளிகள் வைத்திருக்கிறோம், ஹைஸ்கூல் வைத்திருக்கிறோம் என்று சொல்கிறோம். ஆனால், நாம் என்ன? பல மாவட்டங்களிலே உள்ளே புகுந்து பார்த்தால், ஹைஸ்கூலில் லாபரட்டரிகள் இல்லை, லைப்ராரிகள் கிடையாது. இரண்டும் இல்லாமல் இருப்பதால் மாவட்டத்திலுள்ளவர்கள் ஹிஸ்டரி, ஜாகரபி ஸப்ஜக்ட்களைத் தான் படிக்கவேண்டியிருக்கிறது. நல்ல வசதி இல்லாத மாணவர்கள், பிஸிக்ஸ் எடுக்க வேண்டும், கெமிஸ்ட்ரி எடுக்கவேண்டும் என்றால், ஸயன்ஸ் ஸப்ஜக்ட் எடுக்கவேண்டுமென்று சொன்னால் அவர்களுக்கு வாய்ப்பே இல்லாமல் போய்விடுகிறது.

யாராவது நன்கொடை கொடுத்தால், அவர்களிடமிருந்து நன்கொடையை தாராளமாக வாங்கியாவது லாபரட்டரி, லைப்ராரிகளை கட்டுவதற்கு முன்வரவேண்டும் மாவட்டங்களில். இன்னும் 1,000 பள்ளிகளில் லாபரட்டரி கிடையாது, லைப்ராரி கிடையாது. இப்பொழுது நீங்கள் போட்டிருக்கிற திட்டப்படி கொஞ்ச பள்ளிகளில் அவைகளை ஏற்படுத்த முன்வந்தாலும், அந்த நிலைமை நீடித்து இருக்கும். லைப்ராரி இருந்தால்தானே பையனுக்கு எக்ஸ்ட்ரா நாலெட்ஜ் பெற முடியும். இல்லாவிட்டால் எதை எங்கேயிருந்து அவன் கண்டுபிடிப்பது?

இருக்கிற லைப்ராரி அதாரிடிக்கு படிக்காத ஒருவரை தலைவராகப் போட்டிருக்கிறீர்கள். போடக்கூடாது என்று சொல்லவில்லை. ஆனால், படித்தவர்கள் இருக்கும்பொழுது, லைப்ராரி ஸயன்ஸ் தெரிந்தவர்களாய் பார்த்துப் போடவேண்டும். 'வாட் ஆர் தி லேடஸ்டு புக்ஸ்' என்று அவர்களுக்குத்தான் தெரியும். யார் யார் எந்த எந்த புத்தகத்தைப் படிக்கவேண்டும் என்று அவர்களுக்குத்தான் தெரியும். யாரோ தையல் கலையில் நிபுணராக உள்ளவரை லைப்ராரி அதாரிடிக்கு தலைவராகப் போட்டிருக்கிறீர்கள். 'இட் ஈஸ் எ சாலெஞ் டு தி பீபிள்' மாதிரி இருக்கிறது. ஏன் இப்படிச் செய்யவேண்டும்? என்ன வேண்டுமானாலும் செய்யலாம், யாரும் கேட்கக்கூடியவர்கள் இல்லை என்ற எண்ணமா? கோடிக்கணக்கான ரூபாயையும் கையில் கொடுத்து, ஒரு பெரிய கட்டடத்தையும் கொடுத்து, நல்ல புத்தகங்களையும் வைத்து,



974 மார்ச் 20] [திருமதி த. ந. அனந்தநாயகி]

அதற்கு ஏன் இப்படி ஒரு கட்சி அப்பாயின்ட்மென்ட் என்ற நிலையில் ஒரு தலைவரைப் போடவேண்டும்? அப்படிச் செய்வதால் லைப்ராரி ஸயன்ஸ் இம்ப்ரூவ் ஆகாது.

பழைய மெதேடை மாற்றவேண்டும். இனிமேல் வாத்தியார் சொல்லக்கூடிய பாடங்களை மாத்திரம் படித்து முன்னுக்கு வர முடியாது. கடையில் விற்கிற நோட்ஸை வாங்கி வைத்துக்கொண்டு படித்துவிட முடியாது. கருத்தரங்குகள், ஸெமினார்ஸ் இவைகள் போன்றவைகளை நடத்தவேண்டும். 'தே மஸ்டு எக்ஸேஞ்ச் தெயர் ஐடியாஸ்'. புதிய புதிய புத்தகங்களை படிக்கவேண்டும். அவருடைய புத்திசாலித்தனத்தை விசாலப்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்கேற்ப வழி முறைகளைக் காணவேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

...ப்ரி ஸ்கூல்களை எடுத்துக்கொண்டால், பிள்ளைகளை நர்ஸரீஸ்—பர்ஸ்டு கிளாஸ், யு. கே. ஜி., எல். கே. ஜி. ஆகிய கிளாஸ்களில் படிக்கவைக்க வேண்டுமென்றால் பிரைவேட் ஸ்கூல்களில் 20, 25 ரூபாய் சம்பளம் வாங்கிவிடுகிறார்கள். 1,000 நர்ஸரிஸ் நடத்த வேண்டும் என்று சொன்னார்கள். நர்ஸரீஸை மாதர்கள் சங்கங்கள் மூலமாக நடத்துவதற்கு அவர்களும் சற்று உதவி செய்து, நாமும் சற்று பணம் கொடுத்து ஏற்பாடு செய்தால் மிக சாலச் சிறந்ததாக இருக்கும். சிறிய பிள்ளைகள் படிப்பதற்கு நல்ல முறையில் ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

எலிமென்டரி எஜுகேஷனை எடுத்துக்கொண்டால் 90 சதவிகிதம் மாணவர்கள் பள்ளிக்குப் போகிறார்கள். அதே மாதிரி 14-17 ஏஜ் க்ரூப்பில் 33 சதவிகிதம் தான் மாணவர்கள் இருக்கிறார்கள். 'ஒய் ...ட் தேர் பி ஸச் எ ஸ்டீப் ஃபால்'? 90 சதவிதம் எங்கே, 33 சதவிகிதம் எங்கே? ஏன் அப்படி குறைந்துபோகிறார்கள்? 14 வயதுக்கு மேல் படிக்க வாய்ப்பு இல்லை. ஏனென்றால், அவர்கள் ஸ்பெஷல் பீஸ் கொடுப்பதற்கு, புக்ஸ் எல்லாம் வாங்குவதற்கு கஷ்டப்படுகிறார்கள். ஃப்ரீ எஜுகேஷன் என்று சொல்லிவிட்டாலும், ஸ்பெஷல் பீஸ், அது இது என்று ரூ. 15, 30 என்று வாங்கிக்கொண்டே போனால், ஏழைப் பிள்ளைகள் எப்படி கட்ட முடியும்? ஆகவே, ஐந்தாவது வரை படித்து விட்டு மாடு மேய்க்கப் போகக்கூடிய அவல நிலைதான் தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. தயவுசெய்து இதற்குக் காரணம் என்ன என்பதை

சிந்தித்துப்பார்க்க வேண்டும். 90 சதவிகிதம் ஆக இருப்பது 3: சதவிகிதம் ஆக ஏன் குறைந்துபோகிறது? இன்னும் சில கோடி ரூபாயை செலவழித்தாலும் இதற்கு ஒரு பரிகாரம் காண வேண்டும்.

வாத்தியார்களுடைய அப்பாயின்ட்மெண்ட் என்றாலே டின் அப்பாயின்ட்மெண்ட்தான். கார்ப்பரேஷன் அப்பாயின்ட் பண்ண லாம், கவர்ன்மெண்ட் அப்பாயின்ட் பண்ணலாம், பஞ்சாயத்து யூனியன் அப்பாயின்ட் பண்ணலாம் என்று சொல்லப்பட்டாலும் வாத்தியார்களுக்கு அப்பாயின்ட்மெண்ட் கிடைப்பதில்லை. ஆகைய ஞல் நான் ஒன்று சொல்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் எம்ப்ளாய்மெண்டு எக்சேஞ்சில் எந்த வருஷம் எத்தனை வாத்தியார்கள் பாஸ் செய்திருக்கிறார்கள் என்ற கணக்கு இருக் கட்டும். அவர்கள் சீனியாரிட்டி படி பார்த்து வேகன்ஸி வரும் பொழுது, அவரவர்களுக்கு அந்தந்த மாவட்டத்தில் வேலை வாய்ப்பு கிடைக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும். இல்லா விட்டால் என்ன ஆகிறது? அப்பாயின்ட்மென்ட் கமிட்டி என்ற ஒன்று போடுகிறார்கள். யாருக்கு சிபார்சும், செல்வாக்கும் அதிக மாக இருக்கிறதோ அவர்களுக்குத்தான் வாய்ப்பு கிடைக்கிறது. பல ஆண்டுக் கணக்காக படித்துவிட்டு சும்மா உட்கார்ந்து கொண்டிருக்கிற ஆசிரியர்களுக்கு வேலை கிடைப்பதில்லை. அவர்கள் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த அவல நிலைமை நிவர்த்திக்கப்பட வேண்டும்.

சர்வீஸ் கமிஷன் போல டிஸ்டிரிக்ட் எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸரிடம் இன்ன டீச்சர் இன்ன ஸீனியாரிடிபடி வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்று கணக்கு வைத்து வேலை வாய்ப்பு கொடுக்கவேண்டும். கூடியவரையில் ஸீனியாரிடியின் அடிப்படையில் அப்பாயின்ட்மெண்ட் செய்யப்படவேண்டும். ரொம்ப இன்எஃபிஷியன்டாக இருந்தால்தான் தள்ளவேண்டும். இன்எஃபிஷியன்டாக இருந்தால் அவர் பாஸ் பண்ணியே இருக்க மாட்டார்.

மெரிட் அண்டு ஸீனியாரிட்டி இரண்டையும் கம்பைன் பண்ணிவைல். மெரிட்டுக்குள்ளே புகுந்து ரொம்ப வேலையெல்லாம் செய்யப்படுகிறது. ஸீனியாரிடி இருந்தாலும், எனக்கு ஒரு ஜூனியர் ஆளை தூக்கிவிட வேண்டுமென்றால் ஸீனியராக



இருப்பவர் பேரில் ஏதாவது எழுதி வைத்துவிட்டு ஜூனியரை அப்பாயின்ட் செய்து விடுகிறார்கள். இம்மாதிரி அப்யூஸ் நடக்கிறது. அது மாதிரி சில ரிட்களைக் கூட நான் பைல் பண்ணியிருக்கிறேன். மெரிட் அண்டு ஸீனியாரிட்டி இரண் டையும் கிளப் பண்ணக்கூடாது. ஒன்று மெரிட் மட்டும் வைத்துக் கொள்ள வேண்டும். அல்லது ஸீனியாரிட்டி மட்டும் வைத்துக் கொள்ள வேண்டும். 'அதர்வைஸ் யு ஷுட் நாட் டேக் அட்வான் டேஜ் ஆஃப் தி ரீஸன் மெரிட் அண்டு அப்யூஸ் தி பவர்'. அதைச் செய்தால் வாத்தியார்களுக்கு வேலையில் கவனம் போகாது. மேலே இருப்பவர்களை எப்படி காக்காய் பிடிக்கலாம், யாரைப் பிடிக்க லாம் என்றுதான் ஆலோசனை போகும். பாடம் சொல்லிக் கொடுப் பதில் நாட்டம் போகாது. ஆகவே, இந்த கஷ்டத்திலிருந்து வாத்தியார்களை விடுதலை செய்வதற்கு நீங்கள் வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வாத்தியார்களை 10-ஏ-1 என்று ரொம்ப நாட்களாக நிரந்தரமாக்கப்படாமல் வைத்திருக்கிறார்கள். பத்து, பனிரண்டு வருடங்கள் ஆகியும் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். அது என்ன நியாயம்? 5 வருஷம் வேலை செய்துவிட்டால் ஆட்டமாடிக் காக நிரந்தரமாக்கப்படவேண்டும். 10-ஏ-1 என்று சொல்லி மேலே தொங்கிக்கொண்டிருக்கிற கத்தி மாதிரி இருக்கக்கூடாது. பத்து வருடம் வேலை பார்த்துவிட்டு வீட்டிற்குப் போ என்று சொல்லக் கூடிய நிலை இருந்துகொண்டிருக்கிறது. அதுவும் அப்ரண்டிஸ் டீச்சர்ஸ் என்று ரூ. 175 சம்பளம் கொடுத்து வைத்துவிட்டு, அந்த வாத்தியார்களைத்தான் பர்மெனன்ட் வேகன்ஸி வரும்பொழுது நியமிக்கவேண்டுமே தவிர, மற்றவர்களைக் கொண்டு வந்து போடக் கூடாது. அவர்கள் படித்து தேறியவர்கள் தான். ரூ. 425 சம்பளம் கொடுப்பதற்குப் பதிலாக அப்ரெண்டிஸ் என்று சொல்லி ரூ. 175 குறைவாகத்தான் கொடுக்கப்படுகிறது. அவர்களை வேலையை விட்டு நிறுத்துவது அநியாயம். தயவுசெய்து அந்த இலாகா போட்ட ஜி.ஓ.-வையே அந்த இலாகாவே மதிக்காமல் போகக் கூடிய நிலை ஏற்படக்கூடாது. ஆகவே, அப்படிப்பட்ட டீச்சர்களை நிரந்தரமாக வேலைக்கு எடுத்துக்கொள்ள வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1974 மார்ச் 20

அடுத்து, காலேஜ் கோர்ஸ்ஸை எடுத்துக்கொண்டால் எல்லா காலேஜிலும் பி.காம்., பி.பி.ஏ. கோர்ஸ் கேட்கிறார்கள். ஆனால் 176 அரசாங்கக் கல்லூரிகளில் 11 கல்லூரிகளில் தான் பி. காம் போன்ற கோர்ஸ்கள் இருக்கின்றன. தனியார் சில பேர்கள் பி. காம். கோர்ஸ் நடத்துகிறார்கள். பெரிய பணம் படைத்தவர்கள் தான் அந்தக் கோர்ஸுக்குப் போக முடியும். ஏராளமாகப் பணம் கட்டவேண்டும். தனி நபர்கள் அப்படிப்பட்ட கோர்ஸை கமர்ஷியலாக நடத்துகிறார்களே தவிர, எஜுகேஷனலாக இல்லை. அவர்களுக்கு எஜுகேஷனல் எண்ணம் இருக்கிறதா என்பது குவெஸ்சின் மார்க்காக இருக்கிறது. தயவுசெய்து யுனிவர்ஸிடி வைஸ்-சான்ஸலரிடம் சொல்லி 176 கல்லூரிகளில் அட்லீஸ்டு 100 கல்லூரிகளில் பி.காம்., பி.பி.ஏ. கோர்ஸை ஏற்படுத்த வழி வகைகள் செய்யவேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல எல்லா மாவட்டங்களிலும் உள்ள கல்லூரிகளில் ஆங்கில மீடியம் இருப்பதற்கு வசதி செய்து தர வேண்டும். தமிழிலே படிக்கவேண்டுமென்று ஆர்வம் இருந்தால் அந்த ஆர்வம் உள்ளவர்கள் தாராளமாக படிக்கட்டும். வேறு இடமில்லாமல் ஏழைப் பையன்கள் தான் தமிழ் மீடியத்தில் போய் சேர வேண்டியிருக்கிறது. வசதியுள்ளவர்கள் எங்கே ஆங்கில மீடியம் இருக்கிறதோ அங்கே போய் சேர்ந்து படித்துவிடுகிறார்கள்.

ஆங்கிலம் ஒரு உலக மொழியாக இருப்பதால் அதை எல்லோரும் கற்றுக்கொள்ளவேண்டியது அவசியமாக இருக்கிறது. அதோடு எங்கு போனாலும் வேலை வாய்ப்பு கிடைக்கும். தமிழ் படித்தவர்களுக்கெல்லாம் நீங்கள் வேலை கொடுத்துவிடுவதுமில்லை. எல்லோரும் தமிழ் படித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தால் உங்களால் எல்லோருக்கும் வேலை வாய்ப்பு தரமுடியாது. அவர்களுக்கும் வெளியே வேலைக்குப் போவதற்கு திறமை, ஆற்றல் கிடையாது. இந்த நிலை தெரியாமல் தமிழ் நாட்டில் நீங்கள் ஒரு பெரிய பாவத்தை செய்துகொண்டிருக்கிறீர்கள். எங்கெல்லாம் மாணவர்கள் விரும்புகிறார்களோ அங்கெல்லாம் ஆங்கில மீடியம் வகுப்பை ஏற்படுத்தித் தந்து, விரும்புகிற எல்லா மாணவர்களும் ஆங்கில மீடியத்தில் படிப்பதற்கு வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1974 மார்ச் 20] [திருமதி த. ந. அனந்தநாயகி]

தனியார் துறையில் இருக்கக்கூடிய வாத்தியார்களுக்கு பாதுகாப்பாக இருக்கும்பொருட்டு செக்யூரிட்டி ஆஃப் சர்வீஸ்-க்காக அவர்களுக்கு ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். அம்மாதிரி முறையில் கல்லூரியில் இருக்கக்கூடிய லெக்சரர்ஸுக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடிய முறையில் ஒரு சட்டத்தை கொண்டு வரவேண்டும். 8 வருஷம், 10 வருஷம் லெக்சரராக இருந்துவிட்டு திடீரென்று போய்விடுங்கள் என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியிலேயே ராஜராஜேஸ்வரி ஸ்கூலில் 3, 4 பேர்கள் அம்மாதிரி ரிட்ரெஞ்சு செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இம்மாதிரி செக்யூரிட்டி ஆப் சர்வீஸ் இல்லாமல் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை நடுவிலே வீட்டிற்குப் போ என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்படுவதால் அவர்கள் மிகவும் அவதிக்குள்ளாகிறார்கள்.

நாம் அப்படிப்பட்ட பள்ளிகளை எடுத்துக்கொள்ளலாம் என்று சட்டம் இடம் கொடுத்தாலும், எடுத்துக்கொள்கிற வரைக்கும் அவர்களுக்கு என்ன ரிலீஃப் என்பதைப்பற்றி யோசிக்கவேண்டும். அவர்களுடைய சர்வீஸ் கண்டிஷன்ஸை இழக்கவேண்டிய நிலைமை இருக்கக் கூடாது. அவர்களுக்கு செக்யூரிடி ஆஃப் சர்வீஸ் ஏற்படுத்துவது மிகவும் அவசியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக, போஸ்டு கிராஜுவேட் ஸ்டடீஸை எடுத்துக் கொண்டால் எம்.ஏ.-க்கு ஸீட் கேட்டால் ஃபர்ஸ்டு கிளாஸ் வேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படி இல்லாவிட்டால் காலியாகவே ஸீட்கள் இருக்கும். எம்.ஏ.-க்கு ஏன் ஃபர்ஸ்டு கிளாஸ் தேவை என்று சொல்லவேண்டும்? ஃபர்ஸ்டு கிளாஸ் இல்லாவிட்டால் செகண்ட் கிளாஸ் மாணவர்களை எடுத்துக் கொள்ளக்கூடாதா? ஒய் டு யு பிரிவெண்ட் தெம் ஃப்ரம் கெட்டிங் எஜுகேடட்? ஜாகரபி அல்லது ஹிஸ்டரி படிப்பதற்கு எதற்கு பர்ஸ்டு கிளாஸ் வேண்டும்? அவரவர்கள் சந்தர்ப்ப சூழ்நிலையில் பர்ஸ்டு கிளாஸ், செகண்டு கிளாஸ் என்று வாங்கிவிடுகிறார்கள். மார்க் ஒரு பெரிய ஸ்டாண்டர்டு இல்லை.

எம். எஸ். ஸி. கோர்ஸாக இருந்தால் சரி, லைப்ரரி, லாபரெட்டரி வேண்டும். ஹிஸ்டரி ஜாகரபி படிப்பதற்கு ஏன் செகண்ட் கிளாஸ், தேர்டு கிளாஸ் மாணவர்களை சேர்த்துக்கொள்ளக்கூடாது?

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1974 மார்ச் 20

பர்ஸ்டு கிளாஸ் இல்லாவிட்டால் ஏன் அவர்களை சேர்த்துக் கொள்ளக்கூடாது? எம்.ஏ. ஹிஸ்டரி, ஜாக்ரபி படித்தால், பர்ஸ்ட் கிளாஸ் வாங்கினால் பெரிய உத்தியோகத்திற்குப் போகிறான். இல்லா விட்டால் கிளார்க் வேலைக்குப் போகிறான். ஆகவே, பர்ஸ்ட் கிளாஸ் இருந்தால்தான் எம். ஏ. படிப்புக்கு இடம் கொடுப்பது என்பது கூடாது. இப்படிப்பட்ட பழைய காலத்திய சட்ட திட்டங்களையெல்லாம் திருத்தி அமைக்கவேண்டும். இதற்கு வேண்டிய ஏற்பாட்டை பலகலைக்கழகத்தோடு தொடர்பு கொண்டு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எதற்கெடுத்தாலும் இப்பொழுது ஒரு கமிட்டி போடுகிறார்கள். கமிட்டி தேவையில்லை. லா காலேஜுக்கு ஒரு கமிட்டி போடுகிறார்கள். பணம் இருப்பவர்கள் சேர்ந்து படிக்கட்டும், நல்ல பணம் வருகிறது. லா காலேஜில் எப்பொழுதும் 100-க்கு 100 வரமாட்டார்கள். நாங்கள் படிக்கிற நேரத்தில் பிராக்லி கொடுத்துவிட்டு 20, 30 பேர்கள் போய் விடுவார்கள். இட நெருக்கடி கூட ஏற்படாது. இப்படி கல்லூரியில் சேருவதற்கு ஒரு குழு போட்டு எதற்கு ஒரு ரெஸ்ட்ரிக்ஷன்? இது ஒரு பெருமையா? நான்கு பேர் சிபார்சு இல்லாமல் சேர முடியாது என்ற நிலை ஏற்படுகிறது. தாராளமாக எத்தனை பேர்கள் வந்தாலும் சேர்த்துக்கொள்ளுங்கள். எத்தனை பேர்கள் சேர்ந்தாலும் ஷிப்டில் கிளாஸ்கள் வைத்து இட நெருக்கடி இல்லாமல் அட்ஜெஸ்ட் செய்து கொள்ளலாம். அதற்கு லா காலேஜ் ஸ்டுடண்ட்ஸ் எப்பொழுதும் தயாராக இருப்பார்கள். அதற்கு என்று ஒரு குழு போட்டு செல்வாக்கு, சிபார்சு என்ற அடிப்படை இல்லாமல், தமிழ் நாட்டில் அறிவுக்கும் ஆற்றலுக்கும் வாய்ப்பு தரக்கூடிய நிலையில் கல்வி போதிக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

THIRU B. VENKATASWAMY : Sir, I want to say a few words regarding the Education Demand to which cut motions have already been moved.

At the outset I want to stress that we should have qualitative education and not quantitative education. For that I do not find any revolutionary schemes here. It has been mentioned that the teacher-pupil ratio has been reduced to 1 : 34.



974 மார்ச் 20] [Thiru B. Venkataswamy]

The other day, when the debate was going on medical grant, was stressed that if we wanted efficiency, if we wanted andard, atleast we must reduce the teacher-pupil ratio in the edical colleges. It should be 1 : 10 there. But there the teacher-upil ratio is 1 : 34. It is difficult for a single teacher to control mall boys 34 in number and that affects the quality of education.

At the same time, the teachers that we appoint also must be rst class teachers. That is most important. I understand that in ermany, Professors and Teachers are the most well-paid servants f the Nation. Here, the IAS and IPS people are being paid vell. We must have qualitative education. After all, a Nation lepends on its educated people. I stress that Government should take steps to see that qualitative education is imparted by appointng good teachers and reducing teacher-pupil ratio.

At the same time we must give more facilities to students to read in good atmosphere. For example, in this Budget, for the Panchayat Union Primary Schools a sum of Rs. 122 lakhs have been allotted. If you consider and take this to the 375 blocks, I think each block may get one or two schools every year. How is it possible to have building for all? It will take 10, 15 or 20 years to have pucca buildings for every school in the blocks.

I request the Government to evolve some scheme and have some Corporation—they have so many Corporations for this and that—and see facilities are provided to all Panchayat Unions so that they may construct buildings for schools.

Coming to High School education, the standard is very low and educationists are feeling that the student unrest is due to the kind of education that we are giving which is only quantitative education and not qualitative one.

(Thiru K. Elangovan in the Chair)

To get rid of this student unrest, we must see that the quality of education is improved at all levels, not only the primary schools but high schools and colleges also.

Coming to other important things, teachers are the most important in education. The Hon. Minister has offered many facilities to the teachers. Really they are very happy.

[Thiru B. Venkataswamy] [1974 மார்ச் 20

But at the same time regarding selection grade teachers in the Secondary Grade, it seems there is some difficulty. The scale of secondary grade teacher is Rs. 210 5 215 10—325. But after 10 years, the secondary grade teacher gets a pay of Rs. 275. But in the selection grade, the starting pay is Rs. 250. So, at the time of selection grade, he will get Rs. 25 less than his pay in the secondary grade. Just now the Secondary Grade Teachers Association President met me and told me that they will lose Rs. 25 at the starting of seltction grade. I request the Hon. Minister to see that the starting pay of the selection grade is fixed at Rs. 280 atleast. Otherwise, they will lose Rs. 25 according to the present scales.

Though Dharmapuri is separated, the CEO's office is in Salem. We are finding it difficult to go to the CEO's office. The CEO also finds it very difficult to inspect the schools. I have already requested the Government several times in the past three years that the CEO's office should be shifted. But no action has been taken and no CEO's office has been opened in Dharmapuri. I request the Hon. Minister to see that atleast this year the CEO'S office is shifted to Dharmapuri in the interests of good education and effective supervision and control.

Regarding Local Library Authority, it has not been separated from Salem. Dharmapuri was separated about 4 years ago, but a Library is not functioning in Dharmapuri. This defect should be remedied.

Coming to Training School, I regret that the Telugu training school, the only one school in the State has been shifted. Our Hon. Minister and the Government of India have given security for linguistic minority. I have also represented to the concerned Minister and the concerned Director not to shift it.

Now they have put up in Dharmapuri a Tamil Training School without teacher. What is this fun? For what purpose is this done? You can as well close the school. There is no teacher. Some 30 40 boys have been selected, but for teaching practice there is no school.

I request the Hon. Minister for Education to see that the training school is shifted to Hosur. There is a Government High School where they can get their teaching practice. If we do things this way, how can we have qualitative education? Simply boys are there. Six months have elapsed, almost one year is over without a teacher. How can we have standard of education improved if we did things this way? We have already represented to the Government. They have not taken any steps. I request that such things should not happen hereafter atleast.



1974 மார்ச் 20] [Thiru B. Venkataswamy]

Coming to the other points, I have given a cut motion to stress job-oriented education. I am very happy that atleast now the Government has realised. I saw in papers that job-oriented education was being considered. The boys themselves are stressing for job-oriented education.

What is the use of graduating and taking B.A., M.A., in History, etc. All these things are not going to feed them. Therefore they want job-oriented education. There should not be any delay in this.

Job-oriented education was planned by Rajaji about a few years ago when he was the Chief Minister of this State. But at that time, political colour was given to that and it was smashed by politician. I am happy that atleast the present Government and the Hon. Edufation Minister are thinking of introducing job-oriented edulation, so that we may provide job opportunities to those who are frustrated as this frustration is one of the reasons for this student unrest. I therefore request the Hon. Minister to see that this kind of job-oriented education is given even from the beginning, from the primary school itself, then in the High School and in the Colleges also.

I would like to come to the last point. I am stressing this point for the last many years and requesting the Hon. Minister for Education and Hon. the Chief Minister to start the Rajaji Memorial College in Hosur. So far no positive result has come. I am requesting the Hon. Minister for Education and the Hon. Chief Minister at least to have this College in Hosur from this year to cater to the needs of industrialists and the local people. The industrialists are also very eager to have the College in Hosur, because they want to have good and proper education for their children.

Regarding Collegiate education. I really feel sorry, Sir. There are linguistic minorities in Hosur and other places. They speak Telugu, Kannada and Tamil. If they go to the Mysore State, they

are thrown out and they are asked to seek admission in Colleges in Tamil Nadu. If they go to the college in Krishnagiri we have no teachers to teach Telugu. There is no Telugu Teacher. The Telugu teachers are not appointed properly and the people are finding it very difficult to educate their children. I request the Hon. Minister for Education to consider this and see that the College is opened this year by appointing the District Collector as the President of the College Committee to collect 5 lakhs of rupees. The required land is readily available, and the Panchayat Union has also passed a Resolution to hand over the land.

Our revered Rajaji was stressing the need for job-oriented education. Since we are naming the College as Rajaji Memorial Arts College this type of job-oriented education first of its kind may be introduced at Hosur in this College.

Thank you, Sir.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற மானியத்தை ஆதரித்து எனது கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான்—அதன் வருமானத்தில் ஏறத்தாழ 25 சதவிகிதம் கல்விக்காகச் செலவழிக்கிறோம் என்பது பெருமைப்படத்தக்கதாகும். கிட்டத்தட்ட 138 கோடி ரூபாய் செலவழிக்கிற இந்தத் துறையில் நாம் எந்த அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்று பார்த்தால்—1966 ஆம் ஆண்டிலே 1,46,592 மாணவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. பரிட்சை எழுதினார்கள் என்றால், 1973 மார்ச்சிலே 1,93,686 பேர்கள் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதியிருக்கிறார்கள்.

1966 ஆம் ஆண்டு கல்லூரியிலே 78,894 பேர்கள் படித்தார்கள் என்றால் 1973-லே கல்லூரியில் படித்தவர்கள் மட்டும் 1,95,253 பேர்கள்.

அதேபோல தொடக்கப்பள்ளிகளில் ஆசிரியர்கள் எண்ணிக்கை 1966 இல் 1,96,690 ஆக இருந்தது என்றால் 1973 இல் 2,39,134 பேர்கள் தொடக்கப்பள்ளிகளில் ஆசிரியர்களாகப் பணி புரிந்து வருகிறார்கள். அதைப் போலவே கல்லூரிகளில் பணியாற்றிய ஆசிரியர்களின் எண்ணிக்கை 1966 இல் 4,932 பேர்கள் என்றால், 1973 இல் 10,059 பேர்கள் பணியாற்றி வருகிறார்கள்.





1967-க்கு முன்னால் கல்லூரிகள் 92 தான் இருந்தன. இன்றைக்கு 178 ஆக கல்லூரிகள் உயர்ந்திருக்கின்றன. எந்த அளவுக்கு இந்த அரசாங்கம் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது என்பதை இந்தப் புள்ளிவிவரங்களைப் பார்த்தாலே தெரியும்.

அதுமட்டுமல்ல. தொடக்கக் கல்வியில் இருந்து உயர் கல்வி வரை ஆண்டு ஒன்றுக்கு ஒரு மாணவனுக்கு சராசரி எந்த அளவுக்கு இந்த அரசாங்கம் செலவு செய்து வருகிறது என்பதைப் பார்க்கவேண்டும். தொடக்கப் பள்ளி நிலையில் ஆண்டு சராசரி ஒரு மாணவன் செலவு ரூ. 81 இல் இருந்து, உயர் தொடக்கப் பள்ளி—111 ரூபாய், உயர்நிலைப் பள்ளி ரூ. 244, கல்லூரிகளில் 380 ரூபாயில் இருந்து பட்டமேற்படிப்பு அறிவியல் வரும்போது ஒரு மாணவனுக்கு 1,120 ரூபாய் வரை—இந்த அரசாங்கம் ஒரு மாணவனுக்கு ஆண்டுக்குச் சராசரியாகச் செலவு செய்து வருகிறது என்பதை எண்ணிப் பார்க்கிற நேரத்தில், இந்த அரசு கல்விக்கு அளிக்கிற முக்கியத்துவத்தை எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கூட உணர்வார்கள் என்று நம்புகிறேன்.

இவ்வளவு பெரிய நிர்வாகத்தில் அங்கத்தினர்கள் ஏதாவது குறைகளைச் சுட்டிக்காட்டிப் பேசினார்களா என்றால் இல்லை. லைப்ரரி கமிட்டிக்கு நான்-அபிஷியலை சேர்மெனாகப் போட்டது பற்றிச் சொன்னார்கள். இந்த ஜனநாயக யுகத்தில் யார் படித்தவர்கள், யார் படிக்காதவர்கள் என்கிற இலக்கணமே நமக்கு இல்லை. லைப்ரரி கமிட்டிக்குச் சேர்மெனாகப் போட்டவர் சரியாகப் பணியாற்றவில்லை, இன்ன தவறு செய்திருக்கிறார் என்று சுட்டிக்காட்டினால் பயன் உண்டு. படிக்காத ஒருவரை லைப்ரரி கமிட்டி சேர்மெனாகப்போட்டிருக்கிறீர்களே என்கிறார்கள். இந்தியத் துணைக்கண்டப் பிரதமர் கூட எந்தப் பட்டமும் வாங்காதவர்தான். சேர்மெனாகப் போடப்பட்டவர் தவறாக நடக்கிறாரா? இதை எண்ணிப் பார்க்கவேண்டும். அதைவிட்டு அரசாங்கத்தைக் குறைகூறவேண்டும் என்ற முறையில் அவர் படித்தவரா என்றெல்லாம் கேட்பது உள்ளபடியே முறையல்ல என்று சொல்லிக்கொள்கிறேன்.

அண்ணா தி.மு.க. உறுப்பினர் திரு. எட்மண்டு அவர்கள் பேசும்போது "எல்லோருக்கும் இலவசக் கல்வியா?" என்றார்கள்.

[1974 மார்ச் 20

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இப்போது லைப்ரரிக்கென்றே பி.ஏ. படித்தவர்களுக்கு தனி கோர்ஸ் நடத்தப்படுகிறது. டிப்ளமா வாங்குகிறார்கள். கல்லூரி லைப்ரரியில் இருப்பதைப் போன்ற மற்ற லைப்ரரியில் இருக்கவேண்டாம் என்பது அங்கத்தினர் விருப்பமா?

**திரு. நா. வீராசாமி:** லைப்ரரியன் போஸ்டுகளுக்கு படித்தவர்கள்தான் வேண்டும். அந்தத்துறையில் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். ஆனால் லைப்ரரி கமிட்டி சேர்மென் பதவிக்கு அந்தப் பயிற்சி பெற்றவர்தான் இருக்க வேண்டுமென்பது உண்டா?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சார் ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். லைப்ரரிகளுக்கு பி.ஏ. படித்து, டிப்ளமா வாங்கியவர்கள் தான் லைப்ரரியனாக வரவேண்டும் என்கிறபோது, அத்தனை படித்தவர்களையும் வைத்து பணிபெறக்கூடியவர் படித்திருக்க வேண்டாமா?

**திரு. நா. வீராசாமி:** திருமதி இந்திரா காந்தி படித்தவர் அல்ல. ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், ஐ.பி.எஸ். அதிகாரிகள் அனைவரும்தான் அவருக்குக் கீழ் பணிபுரிகிறார்கள். திறமையாக நிர்வாகம் செய்ய முடியவில்லையா? நிர்வாகத்தில் கோளாறு இருந்தால் சொல்லலாமே தவிர, குற்றஞ்சாட்ட வேண்டுமென்ற முறையில் சொல்வது சரியல்ல.

அண்ணா தி.மு.க. உறுப்பினர் எட்மண்ட அவர்கள் எல்லோருக்கும் இலவசக் கல்வியா என்று கேட்டார்கள். வேண்டாம் என்றால் அவரது கட்சியின் சார்பிலேயே ஒரு தீர்மானம் கொண்டு வந்து அரசாங்கத்திற்கு உதவி செய்யலாம். திரு. காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது எஸ்.எஸ்.எல்.சி. வரை எல்லோருக்கும் இலவசக் கல்வி என்கிற திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது பி.யு.சி.க்கும் இலவசக் கல்வி என்று செய்தார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் பெயராலேயே கட்சி வைத்துக் கொண்டிருக்கக்கூடிய திரு. எட்மண்ட் அவர்கள் அறிஞர் அண்ணா அவர்கள் கொண்டுவந்த இலவசக் கல்வியை மறுப்பதுதானா முறை என்பது புரியவில்லை.



1974 மார்ச் 20] [திரு. நா. வீராசாமி]

இன்னும் தனியார் பள்ளியில் படிக்கக்கூடிய குழந்தைகளுக்கு ஒரு குழந்தைக்கு மாதம் 20 ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கிறது, நான்கைந்து பிள்ளைகள் இருந்தால் என்ன செய்வது என்று அம்மையார் அவர்கள் சொன்னார்கள். அம்மையார் அவர்களது அரசாங்கம் தான் ஒரு உத்தரவு போட்டிருக்கிறது. ஒன்றுக்குமேல் இப்போது வேண்டாம், இரண்டுக்குமேல் எப்போதும் வேண்டாம் என்பதாக, இப்படி இரண்டுக்குமேல் பிள்ளைகளைப் பெறுவதே தவறாகக் கருதக் கூடிய காலத்தில் நாட்டின் பொருளாதார நிலையை எண்ணிப்பார்க்காமல், இருக்கக் கூடியதை அரசாங்கம் எந்தவழியில் செலவழிக்க வேண்டும் என்பதைப் பார்க்காமல் இப்படிப் பேசுவது உள்ளபடியே முறைதானா என்பது புரியவில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** உறுப்பினர் அவர்கள் இங்கே குடும்பக் கட்டுப்பாடு பிரசாரம் பண்ணுகிறாரா? ஜாயின்ட் பாமிலியாகக் கூட இருக்கலாம். நான்கைந்து குழந்தைகள் உள்ள குடும்பத்தில் ஒரு குழந்தைக்கு யு.கே.ஜி.க்கு ரூ. 20 மாதம் என்றால் அவர்களால் கொடுப்பது எவ்வளவு கஷ்டம். இருக்கக்கூடிய நடைமுறைகளைப் பார்த்துப்பேச வேண்டும்.

**திரு. நா. வீராசாமி:** திராவிட முன்னேற்றக் கழகம் இப்படி ஒன்றும் சொல்லவில்லை. இந்திய அரசாங்கம் தான் அந்தத் தத்துவத்தைச் சொல்கிறது. அதை இந்த அரசு அமல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதை ஏற்றுக்கொள்ளாமல் நான்கைந்து பெற்றுக்கொள்வது என்பது சரிதானா என்பதை சொன்னேன்.

அதைப்போலவே தமிழைமட்டும் படித்தவர்களுக்கு வேலை கிடைக்கிறதா என்றார்கள். இந்திய அரசாங்கம் இந்தியை கட்டாயமாகத் திணிக்கிறது.

**திரு. எ. சுப்பிரமணியம்:** நண்பர் வீராசாமி அவர்கள் 2 குழந்தைகளுக்கு மேல் இருந்தா, பள்ளிக்கு அனுப்பினால் பள்ளிக்கூடத்தைவிட்டே வெளியேற்றவேண்டுமென்று சொல்கிறாரா?

**திரு. நா. வீராசாமி:** நான் அப்படிச் சொல்லமாட்டேன். உங்கள் கட்சி இதை வலியுறுத்துகிறது. எதிர்காலத்தில் இதைப் பற்றி கவலைப்பட வேண்டாம் என்று சொன்னேன்.

தமிழ்படித்தவர்களுக்கு வேலை கிடைக்கிறதா என்று தமிழை இழிவுபடுத்துவது போலப் பேசினார்கள். அங்கே இந்தியை கட்டாயமாக வைத்திருக்கிறார்கள். இந்தி படிக்கிறவர்களுக்கு வேலை கிடைக்கிறதா? அல்லது ஆங்கிலம் படித்தவர்கள் எல்லோருக்கும்தான் வேலை கிடைக்கிறதா?

அதுமட்டுமல்ல. இங்கிலாந்து நாட்டிலேயே இன்றைக்கு வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருகிறது. அந்த முறையில் நாம் பார்க்க வேண்டியது நம்முடைய தாய்மொழி தமிழ். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் தமிழ்தான் ஆட்சிமொழியாக இருக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அரசாங்கம் கொண்டிருக்கிற கொள்கையை நிறைவேற்றுகிற நேரத்தில்—இந்தக் கொள்கை உங்களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம். நீங்கள் ஆட்சிக்கு வருகிற வாய்ப்பு கிடைத்தால் தமிழே வேண்டாம் என்று சொல்லுங்கள். அதை மக்கள் பார்த்துக்கொள்வார்கள்—இந்த அரசின் கொள்கை—தமிழ்தான் ஆட்சி மொழி. தமிழ் மொழிக்கு பலவகையிலும் வளம் தேடவேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தின் கொள்கை. இதை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நான் சொன்னது தமிழ் படிக்கிறவர்களுக்கு வாய்ப்புக் கொடுங்கள். ஆங்கிலம் படிக்கவேண்டுமென்று விரும்புகிறவர்களுக்கும் படிக்க வாய்ப்பு இருக்க வேண்டும். இன்றைக்கு அரசாங்கக் கல்லூரியில் ஆங்கிலமே இல்லை என்கிறபோது அவர்கள் எல்லாம் தனியார் கல்லூரிக்குத் தான் போக வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அரசாங்கக் கல்லூரியில் படிக்க வாய்ப்பு இல்லாமல் போகிறது என்றுதான் சொன்னேன்.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, நீங்கள் கொடுத்திருக்கிற நேரம் மிகவும் குறைவு. இப்போது என்னுடைய பாயிண்டுக்கு வருகிறேன். இதைத்தான் முக்கியமான கருத்தாக வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

இன்றையதினம் கல்வித்துறையில் 3 டைரெக்டர்கள்—டெக்னிகல் எஜுகேஷனையும் சேர்த்து இருக்கிறார்கள். பி. டபிள்யு. டி. ஐ எடுத்துக்கொண்டால் 9 சிப் எஞ்ஜினியர்கள் இருக்கிறார்கள்.



மின்சார இலாக்காவை எடுத்துக்கொண்டால் 9 சிப் என்ஜினியர்கள் இருக்கிறார்கள். ஆனால் கல்வித் துறையில் 3 டைரக்டர்கள்தான் இருக்கிறார்கள் என்றால் இது போதாது. இதை விரிவுபடுத்த வேண்டும். இந்த இலாக்கா நல்லமுறையில் செயல்படுவதற்கு எலிமெண்டரி எஜுகேஷனுக்கு ஒரு டைரெக்டரைப்போடலாம்.

ஹையர் எலிமெண்டரி எஜுகேஷனுக்கு ஒருவரைப் போடலாம். செகண்டரி எஜுகேஷனுக்கு ஒருவரைப்போடலாம். காமர்ஸ் சப்ஜெக்டுக்கு தனியாகவே ஒரு டைரக்டரைப் போடலாம். இப்படி கல்வித்துறையை விஸ்தரித்தாகவேண்டிய நிலை இருக்கிறது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சி பற்றிய 62 பக்கக் குறிப்பில் ஒரு வரி கூட கமர்ஷியல் எஜுகேஷனைப்பற்றி குறிப்பிடவில்லை. இன்றைக்கு 5 லட்சம் மாணவர்கள். 1,200 பயிற்சிக் கூடங்கள் 3 கோடி முதலீட்டில்—நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட அந்தத் துறையைப்பற்றி அமைச்சர் அவர்கள் ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை.

மாண்புமிகு கல்வி அமைச்சர் எனக்கு ரொம்ப வேண்டியவர் தான். அதிகாரிகளும் வேண்டியவர்கள்தான். நானும் கமர்ஷியல் எஜுகேஷன் துறைபற்றி ஆண்டுதோறும் சொல்லி வருகிறேன். நான் சொல்கிற சிக்கல்களை அவர்கள் தனிப்பட்ட முறையில் தீர்த்துவைக்கிறார்கள் என்றாலும், இந்தத் துறைக்கு என்ன முக்கியத்துவம் தரப்படவேண்டுமோ அது தரப்படவில்லை, தரப்படவேண்டும் என்பதை சட்டமன்றத்தில் வலியுறுத்த அமைச்சர் அவர்கள் மறுக்கிறார்கள்.

(மாலை 5-30)

இன்னும் சொல்லப்போனால், அந்த அசோசியேஷனில் கூடச் சொன்னார்கள். நீங்கள் ஆளும் கட்சியிலே இருக்கிறீர்கள், அமைச்சர்களோடு தொடர்பு கொண்டிருக்கிறீர்கள், இவ்வளவு சொல்கிறீர்கள். இக்குறிப்பில் ஒன்றும் இல்லை, ஆகவே உண்ணாவிரதம் இருங்கள் என்றார்கள். எங்களுடைய அமைச்சர் நான் உண்ணாவிரதம் இருந்தால் வருத்தப்படுவார்.

அடுத்த ஆண்டு வேண்டுமானால் பார்த்துக்கொள்ளலாம் என்றேன். ஆகவே, அடுத்த ஆண்டாவது இந்த வணிகவியல் துறையைப் பற்றி தனியாக விவரம் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இங்கு பேசியவர்கள் சொன்னார்கள், ஜாப் ஓரியன்டேஷன் வேண்டுமென்று. மதிப்பீட்டுக் குழு சென்ற மாதம் ஜெயப்பூரிலே இருக்கிற பள்ளிகளைப் பார்க்கின்ற நேரத்திலே, அங்கே இருக்கக்கூடிய பள்ளி மாணவர்கள் மத்தியில் ஜாப் ஓரியண்டேஷன் ஸ்கீம் எப்படியெல்லாம் அமுல் நடத்தப்படுகிறது என்று கண்டு வந்தவர்கள் கூறினார்கள். அழகான மண் பாண்டங்களைச் செய்வதற்கு பிள்ளைகளுக்குப் பயிற்சி அளிக்கிறார்கள். கைக்குட்டைகளை வைத்துக்கொண்டு அழகான பூக்களை பிரிண்ட் செய்து, விதவிதமாக, வண்ண வண்ணமாக தயாரித்து விற்பனை செய்வதாகச் சென்று விட்டு வந்தவர்கள் சொன்னார்கள்.

தமிழ் நாட்டில் அந்தத் திட்டம் இப்பொழுதுதான் துவக்கப்பட்டிருக்கிறது. அது பரவலாக ஆக்கப்பட வேண்டுமென்று நான். கேட்டுக்கொள்கிறேன்.

சட்டக் கல்லூரியிலே பணியாற்றுகின்றவர்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை.

டைரக்டர் ஆப் ஸ்கூல் எடுகேஷனில் ஹெட்குவார்ட்டர்ஸ் யூனிட் என்று ஒன்று இருக்கிறது. டிஸ்டிரிக்ட் யூனிட்ஸ்லயும் இருக்கின்றன. இங்கே ஹெட்குவார்ட்டர்ஸ் யூனிட்டில் 387 பேர் வேலை செய்கிறார்கள், எல்லா மாவட்டங்களிலும் சேர்ந்து 3,866 பேர் வேலை செய்கிறார்கள். இங்கே ஒரு எல்.டி.சி.-க்கு ஒரு யூ.டி.சி. இருக்கிறார். அங்கே 6 எல். டி. சி. இருக்கிற இடத்திலே ஒரு யூ. டி. சி. தான் இருக்கிறார். இவை இரண்டும் தனித்தனியாக இருக்கின்ற காரணத்தாலே, மாவட்டங்களிலே பணியாற்றுகின்றவர்களுக்குப் பதவி உயர்வு கிடைப்பதில்லை. இங்கே இருக்கக்கூடிய ஜாய்ன்ட் சிவில் சர்வீஸ் கவுன்சில் ஒரு யூனிட்டாக இருக்க வேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறது. என்.ஜி.ஓ. சங்கம் சிபாரிசு செய்திருக்கிறது. இன்றையதினம் வேளாண்மைத் துறையிலே, மருத்துவத் துறையிலே எல்லாம் ஒரே யூனிட்டாக வைத்திருக்கிறார்கள். அதேபோல் கல்வித்துறையிலும் ஒரே யூனிட்டாக ஆக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





மாநாடு போட்டு அமைச்சர் அவர்களிடம்கூட இதைப்பற்றி சொன்னார்கள். அதை நிச்சயம் பரிசீலிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், பட்ஜெட் உரையிலே குறிப்பிட்டார்கள். இன்ஜினீயரிங் காலேஜ் இவைகளுக்கெல்லாம் தனியாக பல்கலைக் கழகம் ஆரம்பிக்கவேண்டுமென்று. 25 கல்லூரிகளுக்கு ஒரு பல்கலைக் கழகமாவது இருந்தால்தான் கல்லூரிகளுடைய தரத்தை உயர்த்தவும், புதிய ஆராய்ச்சிகளைச் செய்யவும் உதவியாக இருக்கும், இந்துப் பத்திரிகையிலே என்ன காரணத்தினாலோ, அது தேவையற்றது என்பதுபோல் தலையங்கம் எழுதப்பட்டிருந்தது.

இன்றையதினம் கல்வியின் தரம் ஓரளவு குறைந்திருக்கிறது. பி.யூ.சி.-க்கு இடம் வேண்டுமென்று ஒரு மாணவன் வருகிறான். எந்த குரூப் உனக்கு வேண்டுமென்று கேட்டால், ஏதாவது ஒரு குரூப் கொடுத்தால் போதும் என்று பதில் சொல்கிறான். என்ன செய்யப்போகிறோம் என்று திட்டம் தீட்டாமலே பல பேர் குரூப்பைத் தேர்ந்தெடுத்து படிக்கிறார்கள்.

பெண்கள் பி.யூ.சி. முடித்தபிறகு, பி.எஸ்.சி. கெமிஸ்ட்ரி வேண்டுமென்று கேட்கிறார்கள். படித்த பிறகு என்ன செய்யப் போகிறாய் என்று கேட்டால், படித்துவிட்டுத் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன் என்று கூறுகிறார்கள். இதற்கு எதற்காக அவர்கள் பி.எஸ்.சி. கெமிஸ்ட்ரி குரூப்பைத் தேர்ந்தெடுக்க வேண்டும்? சமையல் கல்வியைத் தேர்ந்தெடுத்து, படித்திருந்தால் அதன்மூலம் அந்தக் குடும்பத்திற்கும் அவர்களுக்கும் மகிழ்ச்சி ஏற்படும். அப்படி இருந்தால் பரவாயில்லை.

அதை விட்டுவிட்டு இப்படி வாழ்க்கைக்குத் தேவையற்றக் கல்வியை பயில்வதால், இந்த நாட்டினுடைய பொருளாதாரத்தை, வருமானத்தை அது எவ்வளவு பாதிக்கும் என்பதை எல்லாம் நாம் பார்க்கவேண்டும்.

இந்த நாட்டிலே பச்சையப்பன் அறக்கட்டளை இருப்பது எல்லோருக்கும் தெரியும். ஏறத்தாழ ரூ. 2 கோடிக்குச் சொத்து இருக்கிறது. அந்த ரூ. 2 கோடி சொத்தைப் பயன்படுத்தியாவது ஒரு பல்கலைக் கழகம்—பச்சையப்பன் பல்கலைக் கழகம் என்ற பெயரில்—அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, மெட்ராஸ் யூனிவர்சிட்டி ரூல்சை மாற்றினால் கூடப் பரவாயில்லை. பஞ்சாயத்து யூனியன்களுக்கு எல்லாம் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் என்று இருந்ததை 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை என்று மாற்றிவிட்டோம். மாநகராட்சிகளுக்கு 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் என்று இருந்ததை 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை என்று மாற்றிவிட்டோம். யூனிவர்சிட்டி செனட்டுக்குக் கூட 5 ஆண்டுக்கு ஒருமுறை தேர்தல் என்று வைத்தால் மிக நன்றாக இருக்கும். படித்தவர்களைப் பார்த்து, பஞ்சாயத்து போர்டு தலைவர்களைப் பார்த்து, அலைந்து, தேர்தலில் நிற்பது மிகக் கடினமான வேலையாக இருக்கிறது. ஆகவே, மெட்ராஸ் யூனிவர்சிட்டி செனட் மெம்பர்களுடைய பதவிக்காலம் 5 ஆண்டுகள் என்று ஆக்கவேண்டும்.

யூனிவர்சிட்டியிலே சில புரொபசர்கள் ஆட்டமாட்டிக்காக செனட் உறுப்பினர்களாகி விடுகிறார்கள். ஆனால், இந்த நாட்டிலே பல கல்லூரிகளிலே புரொபசர் தகுதியிலே இருக்கக்கூடியவர்கள் உறுப்பினராக வரமுடியவில்லை. அவர்கள் வரவேண்டுமென்றால், அரசாங்க அனுமதி வாங்கவேண்டும். தேர்தலிலே நிற்கவேண்டும், இப்படி பல சிக்கல்கள் இருக்கின்றன. ஆகவே, கெமிஸ்ட்ரி புரொபசர் செனட் மெம்பராக இருக்க வேண்டுமென்றால், தமிழ் நாட்டிலே இருக்கிற கெமிஸ்ட்ரி புரொபசர் அத்தனை பேரும் சேர்ந்து ஒருவரைத் தேர்ந்தெடுக்கவேண்டும்; ஹிஸ்டரி புரொபசர் செனட் மெம்பராக இருக்க வேண்டுமென்றால், ஹிஸ்டரி புரொபசர்கள் அத்தனை பேரும் சேர்ந்து ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற முறையிலே விதிமுறைகளை மாற்றியமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, நான் என்னுடைய சப்ஜக்டுக்கு வருகிறேன். கமர்ஷியல் எடுகேஷனைப் பொறுத்தவரையில் இப்பொழுது தேர்வு முடிவுகள் மிகுந்தக் காலந்தாழ்த்தி வெளியிடப்படுகின்றன. 1973 நவம்பர் 25-ம் தேதி நடந்த தேர்வின் முடிவுகள் 1974-ம் ஆண்டு பிப்ரவரி 28-ம் தேதி வெளியிடப்படுகிறது. தேர்வு முடிவுகள் வெளியிட 3 மாதங்களுக்கு மேல் ஆகிறது. எம்.பி.பி.எஸ். தேர்வு எழுதினால் கூட 2 மாதங்களுக்குள் முடிவுகள் வெளிவந்து விடுகின்றன. இந்த டைப்ரைட்டிங், ஷார்ட்ஹாண்ட், அக்கவுன்டன்சி போன்றவற்றில் நடைபெறும் தேர்வுகளின் முடிவுகளை வெளியிட 3 மாதங்கள் தேவையா



என்பதைக் கொஞ்சம் யோசிக்கவேண்டும். முடிவுகளை விரைவில் வெளியிடாததால், வேலை தேடுவது கடினமாக இருக்கிறது அடுத்த தேர்வுக்கும் தயார் செய்து கொள்ளமுடியவில்லை.

அடுத்த மே மாதம் 25-ம் தேதி தொடங்கும் தேர்வுக்கான விண்ணப்பங்களைப் பெற கடைசித் தேதி இம் மாதம் 31 என்று வைத்திருக்கிறார்கள். அந்தத் தேதியில் மாணவர்களிடம் பணம் வாங்கிக்கொண்டு, பாடம் சொல்லிக் கொடுப்பது, மிகவும் கடினமாக இருக்கிறது. லெட்டரை எப்படி டைப் செய்வது, போன்ற 15 விதமான பிரிவுகளைத் தெளிவாக தெரிந்துகொள்ள குறைந்தது 3½ மாதகாலம் தேவை மாணவர்களுக்கு. ஆனால் பணம் கட்டுவதற்குக் கடைசி நாள் இம்மாதம் 30-ம் தேதி, மே மாதத்தில் தேர்வு. பயிற்சி கொடுப்பதற்கே கடினமாக இருக்கும். ஆகவே, அதையெல்லாம் எண்ணிப் பார்த்து, இடைவெளியை—தேர்வுக்கான விண்ணப்பங்களைக் கொடுக்க வேண்டிய தேதியும் தேர்வுக்கான தேதியும்—மூன்று மாதத்திற்கு மேலிருக்கும் வகையில் அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டே குறிப்பிட்டேன், தேர்ச்சி பெற்றவர்களுக்கு அளிக்கப்படும் சர்ட்டிபிகேட்டுகளை அவர்கள் வாழ்நாள் வரை வைத்திருக்க வேண்டியிருக்கிறது. அந்த சர்ட்டிபிகேட்டுகள் எம்.எல்.ஏ.க்களுக்குக் கொடுக்கக்கூடிய லெட்டர் பேட் மாதிரி இருக்கிறது. அந்த சர்ட்டிபிகேட்டுகளை நல்ல தாளில் வாழ்நாள் முழுவதும் வைத்திருக்கக்கூடிய தாளில், அழகாக அச்சிட்டுக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று மீண்டும் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போலீஸ்காரர்களுக்கு எல்லாம் அண்ணா பதக்கம் கொடுக்கிறார்கள். ஆனால், இன்றைய தினம் தட்டெழுத்து, சுருக்கெழுத்து இவைகளிலே சிறந்த முறையிலே தேர்ச்சி பெறுகிறவர்களுக்கு பரிசு ஒன்றும் அளிக்கப்படுவதில்லை. தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து இவற்றிலே சிறந்த முறையிலே தேர்ச்சிபெறுகின்ற மாணவர்களுக்கு முதலாவதாக வருகின்றவர்களுக்கு பதக்கம்—அண்ணா பதக்கம்—என்ற பெயரில்—வழங்கவேண்டும்.

[திரு. நா. வீராசாமி] [1974 மார்ச் 20

சிறந்த முறையில் பயிற்சி தருகின்ற இன்ஸ்ட்டியூட்டிற்கு அண்ணா சுழற் கோப்பை அளிக்கவேண்டும். அதன் மூலமாக, நம்முடைய நாட்டிலே தமிழ் வளர்வதற்கு, தமிழ் சுருக்கெழுத்து வளர்வதற்கு வாய்ப்பு இருக்கும்.

நான் விளம்பரத்திற்காகச் சொல்லவில்லை. சென்னை நகரிலேயே ஒரே ஒரு இன்ஸ்டிட்யூட்டில்தான் தமிழ் சுருக்கெழுத்து சொல்லிக் கொடுக்கப்படுகிறது. பத்திரிகை நிருபர்கள் கூடச் சொன்னார்கள். இதை யோசித்துப் பார்க்க வேண்டாமா?

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** நண்பர் வீராசாமி அவர்களுக்கு மாணவர்கள் கிடைக்கவில்லையென்றால், நான் நிறைய பேரை சிபார்சு செய்கிறேன். இப்படி விளம்பரம் செய்ய வேண்டாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சபையிலே பேசக்கூடிய நேரத்திலே, தன்னுடைய தொழிலுக்கு விளம்பரம் தேடலாமா என்பதை அறியவிரும்புகிறேன்.

**திரு. நா. வீராசாமி:** நான் முதலிலேயே சொன்னேன், விளம்பரத்திற்காகச் சொல்லவில்லையென்று. இப்பொழுதே அங்கே இடம் இல்லை. நான் விளம்பரம் பெற்று தொழில் செய்வதற்காகச் சொல்லவில்லை. இருக்கிற நிலைமை அது.

இங்கே இருக்கிற உறுப்பினர்கள் யோசித்துப் பார்க்கட்டும். இவ்வளவு பெரிய சென்னை நகரத்திலே தமிழ் சுருக்கெழுத்துக் கற்றுக்கொடுக்க இடம் இல்லை. இன்ஸ்டிட்யூட்டுகளை, மாணவர்களை உற்சாகப்படுத்துவதற்காக எவ்வளவோ திட்டங்களை நம்முடைய அரசாங்கத்திலே வைத்திருக்கிறோம். அம்முறையில் அண்ணா பதக்கம், ரோலிங் கப் போன்றவைகளையெல்லாம் சிறந்த மாணவர்கள், பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றிற்குக் கொடுத்து, இத்துறை வளர, தமிழ் சுருக்கெழுத்துக்கென்று ஆராய்ச்சி நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, இந்த முக்கியமான மானியக் கோரிக்கையிலே எங்கள் கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஓரிரு கருத்துக்களைக் கூறுவதற்கு விழைகின்றேன்.



1974 மார்ச் 20] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

முதலிலே, இந்தக் கல்வி மானியத்திற்காக ரூ. 110 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. முன்பு காங்கிரஸ் அரசாங்கக் காலத்திலே, அதிகமாகப் பணம் ஒதுக்கப்படவில்லை என்ற தொனியிலே பலரும் இந்த மன்றத்திலே எடுத்துக் கூறினார்கள். அன்றிருந்த வருவாயிலே ஏறத்தாழ நாலில் ஒரு பங்கை கல்விக்காகச் செலவழித்தார்கள். இன்று வளர்ச்சி பெற்றிருக்கிற இந்த நிலைமையிலே பார்த்தால், அதைவிடக் கூடுதலாகச் செலவழித்து விட்டார்கள் என்பதைச் சொல்வதற்கில்லை என்பதை திட்ட வட்டமாக நான் கூற விரும்புகிறேன்.

கல்விக்காக அதிகமாகப் பணம் செலவழிக்கத்தான் வேண்டும். கல்வி என்பது வளரக்கூடிய ஒரு சமுதாயத்திலே, அதுவும் ஜனநாயக நாட்டிலே ஒரு முக்கியமான காரியமாக இருக்கிற காரணத்தால், அதிகப் பணத்தைச் செலவழித்து விட்டோம் என்று நாம் பறைசாற்றுவது சரியல்ல என்று கூற விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

கல்விபற்றி ஒருசில கருத்துக்களை இந்த மன்றத்திலே வைக்கலாம் என்று விரும்புகிறேன்.

ஆரம்பக் கல்வியைப் பொறுத்தவரையிலே இங்கு பல மாண்புமிகு உறுப்பினர்களும் நல்ல கருத்துக்களை எல்லாம் கூறினார்கள். ஆரம்பக் கல்வியைப் பராமரிப்பதற்கு ஒரு தனி டைரக்டரை நியமனம் செய்யவேண்டும், அவருடைய நேரடிப் பார்வையிலே இருந்தால்தான் ஆரம்பக் கல்வியானது சிறந்ததாக இருக்கும் என்ற கருத்துக்களை எல்லாம் எடுத்துக் கூறினார்கள்.

என்னைக் கேட்டால், ஆரம்பக் கல்வியை தேசியமயமாக்குவது சாலச்சிறந்ததாக இருக்கும் என்று நான் கூற முற்படுகிறேன். இன்று பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக இந்தப் பள்ளிக் கூடங்களை நடத்துகிற காரணத்தால், அதிகக் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இதை நான் அரசியல் காழ்ப்புணர்ச்சியோடோ அல்லது வேறு விதமான காரணங்களாலோ கூறவில்லை. ஆரம்பக் கல்வி வளருகின்ற எல்லா சமுதாயத்திற்கும் தேவையானது என்ற காரணத்தால் ஆரம்பக் கல்வியை தேசியமயமாக்க வேண்டுமென்று நான் கூற விரும்புகிறேன். ஆரம்பக் கல்வியை தேசியமயமாக்க வேண்டுமென்று சொன்னால், அது என்ன

விதமாக இருக்கவேண்டுமென்று பலவிதமான கருத்துக்களை எல்லாம் கூறுவார்கள். கல்வியானது என்ன முறையிலே இருக்கவேண்டுமென்று பல கல்வி நிபுணர்கள் பல அரிய கருத்துக்களைத் தந்திருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களின் அடிப்படையிலே பாடத் திட்டங்களை மாற்றியமைப்பதுதான் பொருத்தமாக இருக்கும். வெள்ளைக்காரன் காலத்திலிருந்த கல்விதான், தொன்று தொட்டு இருந்து வருகிற கல்விதான் இன்றும் இருக்கிறது.

கல்வித் திட்டத்தை உடைத்து நல்லமுறையிலே மாற்ற வேண்டுமென்ற கருத்தை எல்லா உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்கள். பாடத் திட்டங்கள் விஞ்ஞான முறையிலே மாற்றியமைக்கப்பட வேண்டும், விஞ்ஞானத் துறைக்கு முதலிடம் கொடுக்கப்பட வேண்டும். 1964-65 ஆம் ஆண்டிலே எஸ்டிமேட்ஸ் கமிட்டியிலே ஒரு கருத்தைக் கூறியிருக்கிறார்கள். மாணபுமிகு கல்வியமைச்சராக இன்றைக்கு இருக்கின்றவர்கள்தான் அன்றைக்கு அதிலே உறுப்பினராக இருந்திருக்கிறார்கள், அப்பொழுது அவர்கள் ஒரு கருத்தை எடுத்துக் கூறி இருக்கிறார்கள். அதனை எடுத்துத் தங்களுடைய அனுமதியின் பேரிலே படிக்கலாம் என்று நினைக்கிறேன். அதிலே பக்கம் 13-இல் பாரா 49-இல்—

ELEMENTARY EDUCATION.

49. The Committee is of the view that there should be a separate Director for Elementary Education at the State level. At present the administration of Elementary Education rests with the Deputy Inspector of Schools. Apart from inspecting Secondary schools, the District Educational Officers are not able to devote much attention to Elementary Education. The Committee recommends that at the district level there must be a separate District Educational Officer in charge of Elementary education, particularly in view of the 'huge allotment of about Rs. 16 crores for Elementary Education.'

என்ற கருத்தினைத் தந்திருக்கிறார்கள். ஆனால் இதுகாறும் அதை நடைமுறையிலே ஆக்குவதற்கு பல கஷ்டங்களும் இன்னல்களும் இருந்திருந்தாலும் இப்பொழுது அவை நீங்கிவிட்டன என்பதால் அமைச்சர் அவர்கள் அந்தக் கருத்துக்கு நன்மதிப்பு கொடுத்து நல்ல முடிவை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, நடுத்தரப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன, கல்லூரிகள் இருக்கின்றன. தொழில் நுட்பப் பள்ளிகள் இருக்கின்றன. முதலிலே நான் சார்ந்திருக்கின்ற சட்டப் படிப்பு இருக்கிறது. பணியைச் சார்ந்த சட்டக் கல்லூரியைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே ஒரு சட்டக் கல்லூரிதான் இருக்கிறது. அதிகமாக மாணவர்கள் சட்டம் படிக்கவேண்டுமென்கிற விண்ணப்பம் போடுகிறார்கள். இப்பொழுது இடநெருக்கடியும் அங்கே ஏற்பட்டு இருக்கிறது. ஒரு சில புள்ளிவிவரங்களை நான் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன். ஆந்திரப் பிரதேசத்திலே ஆந்திரா யூனிவர்சிட்டியின் கீழே எத்தனை சட்டக் கல்லூரிகள் இருக்கின்றன என்று பார்த்தால்—

| | | Courses. | | |
|---|---|---|---|---|
| *Andhra University* | | | | |
| 1 | University College of Law, Andhra University, Waltair. | BGL. | BL. | ML. |
| *Osmania University* | | | | |
| 2 | University College of Law, Osmania Unilversity, Hyderabad. | LLM. | LLB. | |
| *Sri Venkateswara University.* | | | | |
| 3 | Sri Venkateswara University, Tirupathi. | BGL. | BL. | |

அடுத்தபடியாக நமக்குப் பக்கத்திலே இருக்கிற கர்நாடக மாநிலத்தைப் பார்ப்போம்.

| | | Courses. | |
|---|---|---|---|
| *Karnataka University* | | | |
| | Constituent Col'ege. | | |
| 1 | University College of Law, Dharwar. | LLB. | LLM. |
| *Mysore University* | | | |
| | Affiliated Colleges. | | |
| 2 | National College of Law, Shimoga. | LLB. | |

| | | | |
|---|---|---|---|
| 3 | Law College, Davanagri. | | |
| 4 | Saraswathy Law College, Chitradurga. | LLB. | |
| 5 | Sarada Vilas Law College, Mysore. | LLB. | |
| 6 | Upipi Law College, Udipi. | BL. | LLB. |
| 7 | Vidyodaya Law College, Tumkur. | BL. | |
| | | LLB. | |

*Bangalore University*

Constituent Colleges

| | | | |
|---|---|---|---|
| 8 | B.M.S. Law College, Bangalore. | | |
| 9 | Government Law College, Bangalore | LLB. | [illegible] |
| | | LLB. | ML. |
| 10 | Sri Renuka Sharya Law College, Bangalore. | LLB. | |

இப்படி கர்நாடக மாநிலத்திலே பத்து சட்டக் கல்லூரிகள் இருக்கின்றன.

அடுத்து, மகாராட்டிர மாநிலத்தை எடுத்துப் பார்த்தால் அங்கே இருக்கின்ற கல்லூரிகள்—

*Bombay University*

Constituent Colleges.

| | | Courses. | | |
|---|---|---|---|---|
| 1 | Government Law College, Church gate, Bombay. | BGL. | LLB. | LLM. |
| 2 | Kishin Chand Chellaram Law College, Bombay. | BGL. | LLB. | Old and New |
| 3 | New Law College Matunga, Bombay. | BGL. | LLB. | |
| 4 | Siddharth College, of Law, Bombay. | BGL. | LLB. | LLM. |



*Poona University.—*

| | | | |
|---|---|---|---|
| 5 | Law College, Poona. | LLB. | LLM. |
| 6 | Faculty of Law Poona University. | LLM. | |

*Nagpur University.—*

| | | |
|---|---|---|
| 7 | Faculty of Law, Nagpur University Constituent College. | LLM. |
| 8 | University College of Law, Nagpur. | LLB. |

*Affiliated Colleges.—*

| | | |
|---|---|---|
| 9 | Sitabai Arts College, Akola. | LLB. |
| 10 | Sri Sivaji College, Amaravathi. | LLB. |
| 11 | Amolakchand Mahavidyalaya, Yeotmal. | LLB. |

*Marathwada University.—*

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | Dr. Ambedkar College of Law Nagasen, Aurangabad District. | BGL. | LLB. | LLM. |

இப்படி அங்கே பல பல சட்டக் கல்லூரிகள் இருக்கின்றன. ஆனால் நம்முடைய மாநிலத்திலே ஒரே ஒரு சட்டக் கல்லூரிதான் இருக்கிறது.

மதுரையிலே மதுரை யூனிவர்சிடியின்கீழ் ஒரு சட்டக் கல்லூரியை ஏற்படுத்த வேண்டுமென்று இங்கே பேசிய பலரும் கேட்டார்கள். தேவையில்லை என்று சொல்லி அதற்குக் காரணம் என்ன சொன்னார்கள் என்றால் அவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கவில்லை என்று எதிர்க்கிறார்கள் என்று சொன்னார்கள். சட்டக் கல்லூரியிலே சட்டம் படித்த எல்லோருக்கும் வேலை கொடுக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. அந்த வாதம் செல்லத்தக்க வாதம் அல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 மார்ச் 20]

அடுத்தபடியாக வேறு சில கருத்துக்களையும் நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு பாடத் திட்டங்களை மாற்றியமைக்கவேண்டும் என்று பல குழுக்கள் அதற்கான வழிவகைகளைச் சொல்லியிருக்கிறார்கள். பாடத்திட்டங்களிலே மாறுதல்கள் விரைவாக ஏற்படுத்தப்படவில்லை. இன்று ஆங்கிலக் கல்விக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

கல்லூரிகளிலே ஆங்கிலக் கல்விக்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்று அவர்கள் கூறியிருந்தாலும் கூட நல்ல முறையிலே அது நடக்கவில்லை என்ற குற்றச்சாட்டை நான் சொல்லவிரும்புகிறேன். முன்பெல்லாம் ஆங்கிலக் கல்விக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருந்தது. டாக்டர் [illegible] முதலியார் அவர்கள் கொடுத்த அறிக்கையின் அடிப்படையிலே ஆங்கிலக் கல்விக்கு ஏற்பட்ட போராட்டம் தற்காலிகமாக நீக்கப்பட்டதாக இருந்தாலும் ஆங்கிலக் கல்விக்குப் போராட்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆங்கிலக் கல்விக்காக என்ன என்ன செய்யவேண்டுமென்பதைப் பற்றி ஒன்றிரண்டு யோசனைகளைக் கூற வேண்டுமென்று நான் விரும்புகிறேன். மாணவர்கள் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள வேண்டும். பண்டைக்கால முறையிலே படிப்பு இருக்கக்கூடாது. இன்றைக்கு இருக்கின்ற முறையிலே விஞ்ஞானத் துறையிலே நிச்சயமாக ஆங்கிலத்திலே நல்ல தேர்ச்சியுள்ளவர்களாக இருந்தால்தான் மேல்படிப்பு படிக்கவும், விஞ்ஞான [illegible] எஞ்சினியரிங் போன்ற தொழில் கல்வி படிப்பதற்கும் வாய்ப்பும் வசதியும் இருக்கும். இன்றைக்கு ஐ.பி.எஸ்., ஐ.ஏ.எஸ். போன்றவற்றில் [illegible] போட்டி குறைந்துகொண்டே வருகிறது. அதற்குக் காரணங்கள் இருக்கின்றன.

உதாரணமாக, டெல்லி யுனிவர்சிட்டி அல்லது வட நாட்டிலே உள்ள யுனிவர்சிட்டிகளை எடுத்துக்கொண்டால் அவர்கள் அதிகமான ஸ்தானங்களை அதிலே பெற்றுவிடுகிறார்கள் என்றால் அதற்குக் காரணம் பாடத் திட்டங்களை நவீன முறையிலே மாற்றியமைத்திருக்கிறார்கள். அதுமாதிரி நாமும் பாடத்திட்டங்களை மாற்றியமைத்தால்தான் வருங்காலத்திலே உள்ள வாலிபர்களுக்கு வாய்ப்பும் வசதியும் ஏற்படும். இது ஒருபுறம் …



1974 மார்ச் 20] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

அடுத்ததாக, ஒரு சில கல்லூரிகளைப்பற்றிக் கூற விரும்புகிறேன். கல்லூரிகளில் தனியார் கல்லூரிகள் பல இருக்கின்றன. உதாரணத்திற்கு இரண்டு கல்லூரிகளைப்பற்றி நான் என்னுடைய கருத்துக்களைக் கூறுவது கடமை என்று கருதுகிறேன்.

முதலாவதாக, லட்சுமிபுரம் ஆர்ட்ஸ் அண்ட் ஸயன்ஸ் காலேஜ் ஒன்று எங்கள் மாவட்டத்தில் இருக்கின்றது. அங்குள்ள நிர்வாகம் ஒழுங்காக இல்லை என்று பல போராட்டங்கள் நடந்து, அந்தக் கல்லூரி பல ஆண்டுக்காலமாக மூடப்பட்டது. அந்தக் கல்லூரியைப்பற்றி விசாரணை செய்வதற்கு மதுரைப் பல்கலைக் கழகத்திலிருந்து அதிகாரிகள் அங்கே வந்தார்கள். அங்குள்ள நிர்வாக அதிகாரிகளையும், ஒருசில குழு அங்கத்தினர்களையும் வைத்துக்கொண்டு அந்தக் கல்லூரியைத் தாறுமாறாக, சுக்கு நூறாக ஆக்குகின்ற செயல்களைச் செய்துகொண்டு வருகிறார்கள். அதைக் கண்டித்து டைரக்டர் போர்டிலே அங்கம் வகிக்கக்கூடிய பலரும் அரசாங்கத்திற்கு மனு கொடுத்திருக்கிறார்கள். மதுரைப் பல்கலைக்கழகத்திற்கும் கொடுத்து இருக்கிறார்கள். ஆனால் அது சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன். அதெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்குமாதிரிதான் இருக்கிறது என்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நிச்சயமாக, அங்குள்ள அதிகாரிகளும், நிர்வாகமும் ஒழுங்காக இல்லை. அந்தக் கல்லூரியை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டும் என்று டைரக்டர் போர்டில் அங்கம் வகிப்பவர்கள்கூட மனு கொடுத்திருக்கிறார்கள். அங்கு மாணவர்களைச் சேர்க்கின்ற நேரத்தில் டொனேஷன் என்று சொல்லி பணத்தைப் பெறுகிறார்கள். ஆனால் அதற்கு ரசீது கிடையாது. அதைப்போலவே ஆசிரியர்களை நியமனம் செய்யும்பொழுதும் பணம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கும் ரசீது கிடையாது. இப்படிச் சேருகின்ற பணத்தையெல்லாம் நிர்வாகத்தின் தலைமையிலே இருப்பவர்கள் வைத்துக்கொண்டு ஷேர் என்ற பெயரிலே அவர்களுக்கு வேண்டிய ஆட்களின் பெயரிலே பணத்தைப் போட்டு நிர்வாகக் குழுவிலே அதிகமான ஸ்தானங்களைப் பெறுவதற்கான வழிவகைகளைச் செய்கிறார்கள். அந்த நிர்வாகம் வியாபார மனப்பான்மையோடு நடக்கிறது. அந்தக் கல்லூரியை நிச்சயமாக

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 மார்ச் 20]

இந்த அரசாங்கம் ஏற்று நடத்த வேண்டும். பொதுமக்கள் தாராளமாகப் பணம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் கொடுக்கின்ற பணமெல்லாம் ஒருசில நிர்வாக அதிகாரிகளின் கைகளிலே சிக்கிக்கொண்டு அந்த நிர்வாகம் சீரழிந்து மிகவும் கீழ் மட்டத்தில்—அங்கு நடப்பது—மிகவும் கேவலமான முறையில் நடக்கிறது. ஆகவே, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்கே கல்லூரியிலே உள்ள முதல்வரை சஸ்பெண்ட் செய்தார்கள். இப்பொழுது திரும்பி எடுத்திருக்கிறார்கள்.

வேறொரு காரியமும் அங்கே நடக்கிறது. லைப்ரரிக்கு என்று பல்லாயிரக்கணக்கான ரூபாயில் புத்தகம் வாங்கியதாக வேடிக்கையான ஒரு சரித்திரமும் அங்கே இருக்கிறது. அந்தப் புத்தகங்கள் எல்லாம் ஓலைக்கூரை ஷெட்டில் வைக்கப்பட்டிருந்ததாகவும், பிறகு தீயினால் அந்தப் புத்தகங்கள் எரிந்து விட்டன என்றும், அந்தப் பணத்தையும் இரண்டாகக் கொடுக்க வேண்டுமென்ற வேடிக்கையான, விசித்திரமான ஒரு வாதத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

எனவே, இம்மாதிரி நிர்வாகத்திலே இருப்பவர்களை நிச்சயமாக அரசாங்கமும், பல்கலைக்கழகமும் கண்காணித்து அந்தக் கல்லூரியை அரசாங்கமே ஏற்று நடத்த முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த ஜில்லாவில் அரசாங்கக் கல்லூரியே இல்லை. எனவே, இது நல்ல வாய்ப்பு. ஒரேயடியாக சட்டம் இல்லை என்று தட்டிக் கழித்துவிடாமல்—நிர்வாகத்தில் இருப்பவர்களும் வேண்டிக்கொள் விரும்புகிறார்கள்—கட்டாயமாக அதை அரசாங்கம் எடுத்து நடத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

அடுத்தபடியாக, அங்கு பி.டி. கல்லூரி ஒன்று இருக்கிறது. அந்தக் கல்லூரியில் ஆசிரியர்கள் பணியாற்றுகிறார்கள். கேரளத்தைச் சேர்ந்தவர்கள் தனிப்பட்ட ஒரு நிறுவனத்தை நிறுவி இருக்கிறார்கள். அங்கே பி.டி.க்கு அட்மிஷன் கிடைக்க வேண்டுமென்றால், கொடுக்க வேண்டியதைக் கொடுத்துப் பெற வேண்டிய பெற வேண்டிய ஒரு அவல நிலைமை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் தொகுதியில் இருக்கிறது. அங்கு



1974 மார்ச் 20] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

நடக்கின்ற ஊழல்களைப் பற்றி நினைத்தால் வெட்கமாக இருக்கிறது. அங்கு சேர வேண்டுமானால் முன்பணம் கொடுத்துத்தான் ஆக வேண்டுமென்ற நிலை இருக்கிறது. அதைக் கண்காணிக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், அங்கே வேறொரு வேலையும் செய்கிறார்கள். கேரளாவிலே இருப்பவர்கள், கன்னியாகுமரி ஜில்லாவில் இருப்பதாக அட்ரஸைக் கொடுத்து, அவர்களுக்குத்தான், அந்த மாணவர்களுக்குத்தான் அட்மிஷன் கொடுக்கப்படுகிறது. கன்னியாகுமரி ஜில்லாவில் இருப்பவர்களுக்கு அட்மிஷன் கிடைப்பதில்லை, கேரளத்திலே உள்ளவர்களுக்கு அட்மிஷன் கொடுக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் மலையாள ஆதிக்கத்திலிருந்து விடுபடுவதற்காக நாங்கள் எவ்வளவோ பிரயத்தனங்கள் செய்து, கஷ்டப்பட்டு, பலரும் உயிரைத் துறந்து தமிழகத்தில் சேர்ந்திருக்கிறோம். இப்பொழுது அவர்கள் நடத்துகின்ற நாடகத்தை எங்களால் பொறுத்துப் பார்த்திருக்க முடியவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஒரு ஆசிரியராவது கன்னியாகுமரி ஜில்லாவிலிருந்தோ அல்லது தமிழகத்திலிருந்தோ இருக்கிறார்களா என்றால் இல்லை என்று திட்டவட்டமாகச் சொல்வேன். இம்மாதிரி நிலை ஏன் ஏற்பட வேண்டும். பெரும்பகுதி நாங்கள் அரசாங்கப் பணத்திலிருந்து கொடுக்கிறோம், ஆசிரியர்களுக்கெல்லாம் கிராண்ட் கொடுக்கிறோம், கட்டிடத்திற்கு கிராண்ட் கொடுக்கிறோம். ஆனால் தமிழனுக்கு வேலை இல்லை என்ற நிலைமை அங்கே உருவாகியிருக்கிறது. இதை அரசாங்கம் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பள்ளிக்கூடங்களில் உள்ள நிலைமைகளைப்பற்றி ஓரிரு கருத்துக்களைக் கூறவேண்டுமென்று நினைக்கிறேன். கடையான்மூடு என்ற இடத்தில் ஒரு அரசாங்க ஸ்கூல் இருக்கிறது. அங்கு ஹெட்மாஸ்டர் இல்லை. உடனடியாக அங்கே ஹெட்மாஸ்டரை நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்குள்ள ஆரம்பப்பள்ளிகளெல்லாம் பெரும்பாலும் ஓலைக்கூரை ஷெட்டுகளிலே நடக்கின்றன. அவைகளுக்கு பக்கா கட்டிடம் கட்டுவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதெல்லாம் அங்கே 1946-ஆம்

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 மார்ச் 20

வருஷத்திலே சர். சி. பி. இராமசாமி அய்யர் அவர்கள் திவானாக இருந்த காலத்தில் கூரைப்பள்ளிகளையெல்லாம்—ஊர்ப் பெருங்குடி மக்கள் அந்தக் கட்டிடங்களைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட கட்டிடங்கள் பலமுறை இடிந்து விழ்ந்து இப்பொழுது ஊர் மக்கள் திரும்பவும் கட்டிக்கொடுக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இதை 'ஃபேஸ்ட் ப்ரொக்ராம்'-ஆக வைத்து அங்கு பள்ளிக் கட்டிடங்களை நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, செலக்ஷன் கிரேடைப்பற்றி இங்கு பல அறிவிப்புகள் வந்தன. செலக்ஷன் கிரேட் தருவதில் மலையாள மொழி ஆசிரியர்களுக்கும் அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பைக் கொடுக்க வேண்டும். மலையாளம் படித்தவர்கள் பலரும் இருக்கிறார்கள். அவர்களுக்குப் போதிய பாதுகாப்பு கொடுக்க வேண்டும். அவர்களுக்கும் பர்ஸ்ட் கிரேட் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 'ஃபிஸிகல் எஜுகேஷன்' போதிப்பவர்களுக்கும் அந்தச் சிறப்புத் திட்டத்திலே இடம் தர வேண்டும். அதேபோல் நான்-டீச்சிங் ஸ்டாஃபிற்கு வேண்டிய காரியங்களைச் செய்து தர வேண்டும்.

இன்னொரு விஷயத்தையும் இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் பனந் நால்மூடு என்ற இடத்தில் ஒரு ஹைஸ்கூல் இருக்கிறது. அது தனியார் பள்ளிக்கூடம். அந்த மானேஜ்மெண்ட் எப்படி இருக்கிற தென்றால். அந்த மானேஜ்மெண்டிற்கு கொல்லங்கோடு என்ற இடத்தில் இன்னொரு பள்ளிக்கூடம் இருந்தது. அதை ஒழுங்காக நடத்தவில்லை என்று திருவிதாங்கூர்-கொச்சி அரசாங்கம் அரசாங்கப் பள்ளிக்கூடமாக ஏற்படுத்தியது. அதே மானேஜ் மெண்டுக்கு நமது அரசாங்கம் ஒரு பள்ளிக்கூடத்தைக் கொடுத் திருக்கிறது.

கடந்த காலத்தில், எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சையில் பல முறை கேடுகள் நடந்ததால் டி.ஈ.ஓ.-வின் நேரடிப் பார்வையிலே பரீட்சையை நடத்த வேண்டிய நிர்ப்பந்தமான சூழ்நிலை ஏற்பட்டது. அங்குள்ள ஒழுங்கீனம் என்னவென்றால், அங்குள்ள



974 மார்ச் 20] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

கிடைத்தாள்கள் எங்கோ போய்விட்டது போன்ற பல ஊழல்கள் நடந்திருக்கின்றன. அந்த ஊழல் இருந்தபொழுது என்ன நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது என்று கேட்க ஆசைப்படுகிறேன். எந்தவிதமான நடவடிக்கையையும் அவர்கள் மீது எடுக்கவில்லை. ஆனால் அதற்கு நேர்மாறாக அவர்களை அன்போடு அரவணைத்துக் கொள்ளும் தன்மையில், இந்தத் தடவையும் அங்கு செண்டர் கொடுத்திருக்கிறார்கள்.

அங்கே என்ன நடக்கிறது என்றால் மாணவர்கள் பார்த்து எழுதுவதற்கு சூப்பர்வைசிங் ஸ்டாஃப் சந்தர்ப்பம் கொடுக்கின்ற தன்மை பல நாட்களாக இருக்கிறது. அது நல்லது அல்ல. இதில் நிச்சயமாக அரசாங்கம் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டு மென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட் டிருக்கிறேன்

அடுத்து, இரண்டு காரியங்களைப்பற்றிக் குறிப்பிட நினைக் கிறேன். முதலாவது, வடார்க்காடு ஜில்லாவிலுள்ள வாலாஜா முனிசிபாலிடியில் அரசாங்க ஹைஸ்கூல் இருக்கிறது. முன்பு இதன் நிர்வாகம் முனிசிபாலிடியின் கீழ் இருந்தது. அங்கு 28 ஆசிரியர்களும், அதிகாரிகளும் செயலாற்றிக் கொண்டு இருந்தார்கள். அந்த முனிசிபாலிடியில் 1973-ஆம் ஆண்டு பிப்ரவரி, மார்ச் மாதங்களுக்கு ஆசிரியர்களுக்கும், மற்றவர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டிய சம்பளம் கொடுக்கப்படவில்லை என்ற புகாரை எனக்குத் தந்திருக்கிறார்கள். அது சம்பந்தமாகப் பத்திரிகைகளிலேயெல்லாம் அவர்கள் அறிக்கை கொடுத்திருக் கிறார்கள். இம்மாதிரியான சம்பளத்தை உடனடியாகக் கொடுப் பதற்கு அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டும்.

என்னைக் கேட்டால், ஆசிரியர்களுக்கான சம்பளத்தை நேரடி யாகக் கொடுப்பதுதான் பொருத்தமாக இருக்கும், செக் மூலமாகக் கொடுத்தால். இப்படிப்பட்ட தகராறுகள் தனியார் துறையிலே ஏற்படாது என்ற ஆலோசனையையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அடுத்தபடியாக, இந்த ஆசிரியர்களுக் குள்ள பிராவிடண்ட் பண்ட் நிதி சம்பந்தமாக ஒருசில சீர்கேடுகள் சென்னைப்பட்டணத்திலே நடந்திருக்கின்றன. வண்ணாரப்பேட்டை வட்சென்னை சமூக சேவா நடுநிலைப்பள்ளியில் சுமார் 1,200 மாணவர்

களும், 35-க்கு மேலான ஆசிரியப் பெருமக்களும் இருக்கிறார்கள்
அந்த நிர்வாகம் பள்ளியை மூடிவிட வேண்டுமென்ற முடிவுக்கு
வந்திருக்கிறார்கள். அதையும் கண்காணித்து வேண்டிய வழி
வகைகளைச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டு
கொள்ள விரும்புகிறேன்.

(மாலை 6.00)

இன்னொரு விஷயத்தையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்
சாதாரணமாக ஆண்கள் பள்ளிகளில் பெண்களை
சேர்க்கக்கூடாது என்ற ஆணையின் அடிப்படையில் ப
கஷ்டங்கள், துன்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பல ஆசிரியர்க
கஷ்டப்படுகிறார்கள். டாக்டர் சாம்புவல் ஹைஸ்கூல், சாந்தபு
பள்ளிக்கூடத்தில் இந்த விதியை அமல் நடத்த வேண்டி
காரணத்தால் பல ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்
அவர்களுக்கு அரசாங்கப் பள்ளிக்கூடத்தில் மாற்று வேலை
கொடுக்க வேண்டும், அதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டு
அங்கு நல்ல முறையில் இருபாலாரும் படித்து வந்தார்கள்
இப்போது சில அதிகாரிகள் கடினமாகத் தாக்கிது கொடுக்கி
காரணத்தால் மூச்சுத் திணறக்கூடிய நிலைமையில் இருந்
கொண்டிருக்கிறார்கள். அதற்கு அரசாங்கம் வேண்டிய பரிகாரத்
தைச் செய்யவேண்டும்.

எனக்கு முன் பேசிய திரு. டென்னிஸ் அவர்கள் ஒரு கருத்தைச்
சொன்னார்கள். பி.டி. ஆசிரியர்கள் பற்றிக் கூறினார்கள்
செகண்ட் கிரேடு பி.டி. ஆசிரியர்களுக்கு இப்போது கொடுக்கப்
படும் ஸ்கேல் 300-15-420-20-600 என்று இருக்கிறது. முதல் தரத்தில்
உள்ளவர்களுக்கு 400-15-430-20-580-25-750 என்று இருக்கிறது
இதிலே இரண்டாவது கிரேடில் இருந்து முதல் கிரேடுக்கு வரும்
போது பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. மானிடரி லாஸ்,
பினன்ஷியல் லாஸ் ஏற்படுகிறது. இந்தக் கருத்தை பி.டி
ஆசிரியர்கள் எடுத்துக் கூறி வருகிறார்கள்.

இதில் சில தகராறுகள் இருக்கின்றன. ஃபண்டமென்டல்
ரூல் 22-பி படி இந்த விதிமுறைகளைத் திருத்தினால் அவர்களுக்கு
எந்தவிதமான மானிடரி லாஸோ, பினன்ஷியல் லாஸோ
ஏற்படாது. அப்படி ஒரு விண்ணப்பத்தை அரசாங்கத்திற்குக்
கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டு
மென்று இதைச் சுட்டிக்காட்டுகிறேன்.



Incentive increment for higher qualifications for all those who draw as per Second Pay Commission.

என்ற தலைப்பில் அவர்கள் மேல் பட்டப்படிப்பு படித்து அதிகமாகப் பட்டங்களைப் பெற்றிருக்கிற காரணத்தால் அவர்களுக்கு இன்சென்டிவ் இன்கிரிமென்ட் கொடுக்க வேண்டுமென்ற கருத்தையும் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, இந்தக் கல்வி மானியத்திலே பல நல்ல காரியங்கள் எல்லாம் இருக்கின்றன. அதைப்பற்றியெல்லாம் நான் இங்கு எடுத்துக் கூற வேண்டிய தேவையில்லை.

நான் ஒரே ஒரு விஷயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எங்கள் மாவட்டத்திலே சி.இ.ஓ. ஆபீஸ் வேண்டுமென்று பல முறை எடுத்துக் கூறியிருக்கிறோம். மூன்று டி.இ.ஓ.-க்கள் இருக்கிறார்கள். நிரம்பப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அதிகமான ஹைஸ்கூல்கள் இருக்கின்றன. ஆகவே, உடனடியாக ஒரு சி.இ.ஓ. ஆபீஸ் தொடங்க உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அரசாங்கத்தைப் பலதடவை கேட்டிருக்கிறோம். இந்தக் கல்வி ஆண்டில் அதனை ஏற்படுத்த அரசாங்கம் வேண்டிய வழி வகைகளைச் செய்ய வேண்டுமென்று கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறை ஆற்றி வந்துள்ள பணிகளுக்காக பாராட்டுதல்களைத் தெரிவித்து, ஆற்ற வேண்டிய பணிகளுக்காக ஊக்கமூட்டுகின்ற முறையில் இங்கு கருத்துக்களை வழங்கிய பேரவை உறுப்பினர்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் கல்வித் துறையின் பணிகள் சீர்படுத்தப்பட்டு செம்மையான வகையில் நிறைவேறுவதற்கான முறையில் நல்லெண்ணத்தோடு குறைகளை எல்லாம் சுட்டிக்காட்டி அந்தக் குறைபாடுகள் நீக்கப் பெற்று நிறைவுகள் நிலவிட வேண்டுமென்ற எண்ணத்தோடு கருத்துக்கள் வழங்கிய உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 மார்ச் 20

கல்வித் துறையின் இன்றியமையாத தன்மையைப் பற்றி உறுப்பினர்கள் அத்தனை பேரும் சுட்டிக்காட்டினார்கள். இந்த விவாதத்தில் கலந்து கொண்ட 24 உறுப்பினர்களும் மிகச் சிறப்பான முறையில் எந்தெந்த வகையிலே கல்வித் தரத்தை மேலோங்கச் செய்ய வேண்டுமென்பதற்கான வகையிலே எடுத்துச் சொன்னார்கள். வேறு எந்தத் துறையையும்விட இந்தத் துறையிலேதான் ஒவ்வொருவருக்கும் பொறுப்பு உண்டு என்பதும், ஒவ்வொரு குடும்பத்திற்கும் தொடர்பு உண்டு என்பதும், ஒவ்வொருவருக்கும் கவலை உண்டு என்பதும் நமக்கு நன்றாகத் தெரியும்.

எல்லோருக்குமே சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீசோடு தொடர்பு வராது; எல்லோருக்குமே காவல் துறையோடு தொடர்பு வராது; எல்லோருக்குமே தாலுகா ஆபீசோடு தொடர்பு வராது; எல்லோருக்குமே நீதிமன்றங்களோடு தொடர்பு வராது; எல்லோருக்குமே மருத்துவத் துறையோடுகூடத் தொடர்பு வராது; ஆனால் கல்வித் துறையை எடுத்துக் கொண்டால் எல்லா வீட்டாரும் தொடர்புடைய, எல்லோருடைய தொடர்பும் உடையதாக இருக்கிற ஒரு பெரும் துறையாக இருக்கிறது.

இந்தத் துறையில் பல்வேறு குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுவார்களானால் அந்தக் குறைபாடுகள் ஒருவரால் ஏற்படுகின்ற குறைபாடுகளாக இருக்குமானால் அவரைத் திருத்துவதின் மூலம் குறைபாட்டைப் போக்கிவிடலாம்; ஒருசிலரால் ஏற்படுகின்ற குறைபாடுகளாக இருக்குமானால் அந்த ஒருசிலரைத் திருத்தி நிறைவு பெறலாம்.

ஆனால் இதனோடு தொடர்பு கொண்டவர்கள் 75 லட்சம் மாணவர்கள்; இதனோடு தொடர்பு கொண்டவர்கள் 2½ லட்சம் ஆசிரியர்கள், பேராசிரியர்கள். அதுமட்டுமல்லாமல் அத்தனை பேருடன் தொடர்பு கொண்டிருக்கும் 3 கோடி மக்கள். இவ்வளவு பேருடைய பிரச்சினை இதனோடு இணைந்திருக்கும் காரணத்தால் உறுப்பினர்கள் எவ்வளவு குறைபாடுகளைச் சுட்டிக் காட்ட வேண்டுமோ அவ்வளவையும் சுட்டிக்காட்டினார்கள். சுட்டிக் காட்டப்படாத குறைபாடுகள் எவ்வளவு இருக்கும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். மாண்புமிகு உறுப்பினர்கள் அவ்வளவு பேரையும் பேசவிட நேரம் இல்லாத காரணத்தால் அவர்கள்



1974 மார்ச் 20] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

சொல்லாமல் இருக்கலாம். ஒவ்வொருவரையும் பேச விட்டிருந்தால் என்னென்ன சொல்வார்களோ தெரியாது.

இந்தத் துறையைப் பற்றிய சூழ்நிலையைச் சுட்டிக்காட்டினேன். இந்தத் துறை வளரவேண்டும். வளர்ச்சியுறுகிற நாடு இந்தத் துறையை நம்பித்தான் வளரவேண்டுமென்பதற்கான காரணங்களைச் சுட்டிக்காட்டினேன்.

இந்தத் துறையை வளர்ப்பதன் மூலமாகத்தான், கல்வியின் நோக்கத்தை ஈடேற்றுவதன் மூலமாகத்தான் இந்த நாட்டின் எதிர்காலத்தை உருவாக்க முடியும் என்ற வகையில் திட்டமிட்டு திட்டமிட்டு பல்வேறு பணிகளை ஆற்றிக் கொண்டு வருகிறோம். அந்த வகையில் நம்முடைய மாநிலத்தில் ஒரு வகையில் கல்வித்தரம் ஓரளவு முன்னணியில் இருந்து வருகிறது என்பதையும் தொடர்ந்து முன்னணியில் இருக்கத்தக்க அளவுக்கு பணியாற்றிக் கொண்டு வருகிறோம் என்பதற்கான குறிப்புகள் தரப்பட்டிருக்கின்றன; புள்ளிவிவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. பல்வேறு கருத்துக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இங்கு எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை; எந்த வகையிலும் ஏற்படவில்லை என்று கூறுவதற்கில்லை, இந்தப் பிரச்சினை இந்தியா முழுவதும் இருக்கிறது.

கல்வியிலே மாற்றம் ஏற்பட வேண்டுமென்ற கூக்குரல் அமெரிக்காவிலே இருக்கிறது; ஜப்பானிலே இருக்கிறது; மேலை நாடுகளிலே இருக்கிறது. ஆனால் நம்முடைய நாட்டோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இங்கே உள்ள அளவுக்கு அங்கே இல்லை.

1947-ஆம் ஆண்டு நாடு விடுதலை பெற்றபோது நாட்டின் மக்கள் தொகை 33 கோடி. 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகையில் எழுதப் படிக்கத் தெரியாதவர்களின் எண்ணிக்கை மட்டும் 38½ கோடி. 56 கோடி மக்கள் தொகையில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் 29 சதவிகிதத்தினர்தான். தமிழகத்தைப் பொறுத்தவரை எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் 40 சதவிகிதமாக அமைந்து இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறோம். கேரளத்திற்கு அடுத்தபடியாக தமிழகம் வந்து சேருகிறது என்பதை உணரவேண்டும்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 மார்ச் 20

கல்வித் துறையைப் பொறுத்தும் மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பொறுத்தும் நாம் அதிகமான தொகையைச் செலவழித்து வருகிறோம். கல்வித் துறைக்கு 110 கோடி செலவிடுகிறோம் என்று சொல்லும்போது அது போதுமானது என்ற மன நிறைவோடு சொல்லவில்லை.

எந்தெந்த வகைக்குச் செலவழிக்கிறோம் என்ற புள்ளி விவரங்களைத் தருகிற வகையில் வேறு எந்தத் துறைக்கும் ஒதுக்காத அளவுக்கு பொதுக் கல்விக்கும் தொழில் நுட்பக் கல்விக்கும் ஒதுக்கியிருக்கிறோம். ஊராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள், மாநகராட்சி மன்றங்கள் மற்றும் எல்லா வகையிலும் கல்விக்காகச் செலவழிக்கப்படுகிற தொகை கிட்டத்தட்ட 140 கோடி ரூபாய் அளவுக்கு வரும். ஊராட்சி மன்றங்கள், நகர மன்றங்கள், மாநகராட்சி மன்றங்கள் செலவழிக்கிற தொகையை மட்டும் கணக்கெடுத்தால் அது 7 கோடி ரூபாய்க்கு வரும். தனியார் பள்ளிகள், தனியார் கல்லூரிகள், அறக் கட்டளைகள் செலவழிக்கிற பணமும் தனியாக வரும். அரசாங்கத்தைப் பொறுத்தவரை இந்தத் துறையிலே அதிகமாக அரசாங்கம் செலவழிக்கிறது. மற்றைய மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது அதிகமான சதவிகிதத்தைச் செலவழிக்கிறோம்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையினுடைய விவாதத்தில் கலந்து கொண்டு பதிலுரை ஆற்றுகின்றபோது தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். ஆறாவது நிதிக் குழுவிடம், நமக்கு நிதி உதவி தேவை, வளருகின்ற தன்மையில் விரைந்து செல்ல வேண்டுமே தவிர, மறுபடியும் கூம்பிச் செல்லக்கூடிய அளவுக்கு நிலைமைகளை விடக் கூடாது; மக்கள் கல்வியில் அந்த வேகத்திற்கு மேலே வளர வேண்டுமே தவிர, குறைந்துவிடக் கூடாது என்று வற்புறுத்தி எடுத்துச் சொல்லியும்கூட ஆறாவது நிதிக் குழு எந்த வகை நிதியும் தரவில்லை என்று எடுத்துச் சொன்னார்கள். கிட்டத்தட்ட ஆயிரத்துச் சில்லறை கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். யு.பி. க்குத் தந்திருக்கிறார்கள். மற்ற மாநிலங்களுக்கும் தந்திருக்கிறார்கள். அப்கிரடேஷன் கிரண்ட் என்று கொடுத்திருக்கிறார்கள். என் தமிழ்நாடு, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களுக்கு அந்த கிரண்ட் தரவில்லை என்று கேட்ட



1974 மார்ச் 20] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

போது கல்வி, மக்கள் நல்வாழ்விற்காக அதிகத் தொகை செலவழிக்காத மாநிலங்களுக்குத்தான் இந்த நிதி உதவி செய்ய வேண்டும் என்று சொல்லி ஆயிரத்துச் சில்லறை கோடி ரூபாய் மற்ற மாநிலங்களுக்குத் தரப்பட்டிருக்கிறது, நம் மாநிலத்திற்குத் தரப்படவில்லை என்பதில் இருந்து தமிழகம் இத்துறைகளில் எந்த அளவிற்கு செலவழித்து வருகிறது என்பதைக் காணலாம்.

இதைச் சொல்லும்போது நாம் நம் தேவைகளை எல்லாம் நிறைவேற்றிவிட்டோம் என்று பொருள் அல்ல. நமக்குக் கிடைக்கும் தொகையை பகிர்ந்தளிக்கும் முறையில், பகிர்ந்தளித்து பணியாற்றும் முறையில் நமது வரவு செலவுத் திட்டம் தீட்டப் பட்டிருக்கிறது. வேறு பல நாடுகளில் தேவைக்கு ஏற்ற அளவிற்கு வரவு செலவுத் திட்டத்தை தீட்டிவிட்டு மிச்சமுள்ள நிதியைக் கொண்டு வெளிநாடுகளுக்கு உதவ முன்வருகிறார்கள். ஆனால் நமக்கிருக்கிற வசதி வாய்ப்புகள் இருப்பதை பகிர்ந்து கொண்டு பணியாற்றும் நிலைதான் இருக்கிறது. 110 கோடி ரூபாய் அளவிற்கு கல்வித் துறைக்கும் தொழில் நுட்பத் துறைக்கும் செலவழிக்கும் நிலையில் நிதி அமைச்சரும் மாண்புமிகு முதல் அமைச்சராகவும் இருப்பவர்கள் ஒதுக்கித் தந்து, அந்த அளவில்தான் நாம் பல்வேறு பணிகளை ஆற்ற வேண்டிய நிலை இருக்கிறது.

கல்வியைப் பொறுத்தவரையில் ஓரளவு சிறப்பான தன்மையில் எல்லோருடைய ஒத்துழைப்போடும் ஆதரவோடும் பணியாற்றி வருகிறோம். ஆனால் திரு. தங்கமணி அவர்கள் குறிப்பிடும்போது டாக்டர் மால்கம் ஆதிசேஷையா அவர்கள் குறிப்பிட்டிருக்கிற கருத்தை எடுத்துக் கூறி, கல்விக்காகச் செலவழிக்கப்படுகிற பணம் வீணாகச் செலவு செய்யப்படுகிறது என்ற கருத்துப்பட குறிப்பிட்டார்கள். அவர்கள் அறிக்கையில் சொல்லியிருப்பது, சாதாரணமாக பள்ளிகளில் ஒன்றாவது வகுப்பில் இருந்து ஐந்தாவது வகுப்பு முடிந்து ஆறாவது வகுப்பிற்கு அடி எடுத்து வைக்கும்போது ஒன்றாவது வகுப்பில் நூறு மாணவர்கள் இருந்தால் ஆறாவது வகுப்பில் அடி எடுத்து வைக்கும்போது 49 மாணவர்கள்தான் அடி எடுத்து வைக்கிறார்கள். அந்த அளவிற்கு டிராப் [illegible] 51 பேர்கள் விலக வேண்டிய

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 மார்ச் 20

சூழ்நிலே தொடர்ந்து வருகிற நிலைமை ஏற்படுமானுல் அதற்காகச் செலவழிக்கப்பட்ட பணம் வீண் என்று கருதப்பட வேண்டிய நிலையில் இருக்கிறது. ஆகவே இந்த ட்ராப் அவுட்ஸ்-ஐ சீர்படுத்தும் முயற்சியை தொடர்ந்து எடுக்க வேண்டும். ஆருவது வகுப்பிற்கு வரும்போது ஏன் இந்த ட்ராப் அவுட்ஸ் ஏற்படுகிறது என்பதற்கான காரணங்களைக் கண்டுபிடித்து, அந்தக் காரணங்களை நீக்கி தொடர்ந்து பத்தாவது வகுப்பு வரையில் படிக்கத்தக்க அளவில் செல்லவேண்டுமென்று குறிப்பிட்டுக் காட்டியிருக்கிருர்கள்.

Towards a learning society—A plan for science and technology. என்று அவர்கள் கொடுத்திருக்கிற குறிப்பில் டாக்டர் மால்கம் ஆதிசேஷையா அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிருர்கள். The education administration in the State has to its credit a notable record of education and extra educational achievements. என்று குறிப்பிட்டு விட்டு 'வேஸ்டேஜ்' என்ற தலைப்பின்கீழ் குறிப்பிடும்போது,

The education of science and technology in the State is throughout characterised by students dropping out of the schools and colleges, a number of those remaining behind stagnating in and repeating their courses. Educational wastage is a compound of drop-cuts *plus* repetition. என்று குறிப்பிட்டிருக்கிருர்கள். அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். 110 கோடி ரூபாய் அளவிற்கு நாம் செலவு செய்கிறேம் என்றுல் அதனுல் ஏராளமான நன்மைகளை செய்துவிட முடிகிறது என்று நான் சொல்ல வரவில்லை. நாம் நமது வருவாயில் கிட்டத்தட்ட 25 சதவிகிதம் அளவிற்கு கல்விக்காகவும் தொழில் நுட்பக் கல்விக்காகவும் செலவு செய்து வருகிறேம். கல்வியின் தரம் உயர வேண்டும் என்று பல உறுப்பினர்கள் இங்கு எடுத்துக் கூறினர்கள். கல்வியின் தரத்தை உயர்த்துவதில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டு பல வகையான முயற்சிகளை எல்லோருடைய ஒத்துழைப்போடும் ஆதரவோடும்தான் செய்ய வேண்டும். தரத்தை உயர்த்துவது என்பது ஆணையிடுவதால் உயர்ந்து விடாது. ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றேர்கள் ஆகிய எல்லோருடைய ஒத்துழைப்பும் ஆதரவும் இருந்தால்தான் அதில் ஓரளவு வெற்றி பெற முடியும்.



மார்ச் 20] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு நாம் முயற்சிகளை மெல்ல மெல்ல மேற்கொண்டு வருகிறேம். வேலைவாய்ப்பின்மை நிவாரணத்திற்காக மைய அரசுத் திட்டத்தின் கீழ் கூடுதலாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களில் 1,200 பேர்கள் பி.டி. பட்டம் பெற்றவர்கள். சுமார் 7,428 தொடக்கநிலை, உயர்நிலை ஆசிரியர்கள் நிரந்தரப் பதவிகளில் அமர்த்தப்படுவர். அந்நிலையில் இப்போது இந்த ஆண்டு நிதி ஒதுக்கப்பட்டு 4,200 பேர்கள் அந்த நிலை பெற வசதி செய்திருக்கிறேம். இதுவரை 33,500 தொடக்க நிலை ஆசிரியர் பதவிகள் உயர்நிலை ஆசிரியர் பதவிகளாக மாற்றப் பட்டன. அறிவியல் பாடப் பயிற்சியை வலுப்படுத்த தொடக்கப் பள்ளி ஒவ்வொன்றுக்கும் ரூ. 300—உயர்தொடக்கப் பள்ளி ஒவ்வொன்றுக்கும் ரூ. 1,000 வீதம் இதுவரை 11,400 தொடக்கப் பள்ளிகளும், 3,000 உயர் தொடக்கப் பள்ளிகளும் பயன் அடைந்துள்ளன.

1974-75-ல் 1,220 தொடக்கப் பள்ளிகளும் 334 உயர் தொடக்கப் பள்ளிகளும் பயன்பெறும். புதிய அறிவியல் பாடத் திட்டம் 1971-72-ல் 1 முதல் 3 வகுப்புகள், 6 ஆவது வகுப்பு, 1972-73-ல் 4, 7 வகுப்புகள், 1973-74-ல் 5, 8 வகுப்புகள் இவற்றில் அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது. பாட திட்டங்கள் மாற்றியமைப்பது குறித்து குழுக்கள் அமைக்கப்பட்டன. 1 முதல் 5 வரை அறிவியல், கணக்கு தவிர பிற எல்லாப் பாடங்களும், 1972-73 முதல், அறிவியல் 1-5, 1973-74-ல் இருந்து, வகுப்பு 6-ல் மொழிகள், வரலாறு, புவியியல் 1974-75 முதல் வரும். வகுப்பு 7-ல் வரலாறு, புவியியல், மொழிகள், ஆங்கிலம், இவை 1974-75 முதல் நடைமுறைக்கு வரும்.

அறிவியல் ஆய்வுக் கூடங்களுக்கு உயர்நிலைப் பள்ளிகளுக்கு ரூ. 40,000 மானியம் தருகிறேம். 25,000 ரூபாய் கட்டடம் கட்ட முழு மானியம் தருகிறேம். ரூ. 15,000 கருவிகளுக்குத் தரப்படுகிறது. இதுவரை 810 உயர்நிலைப்பள்ளிகள் அதன் பயனைப் பெற்றிருக்கின்றன. 1974-75-ல் 90 அறிவியல் கூடங்களை துவக்க திட்டங்கள் தீட்டியிருக்கிறேம். அதற்காக 35 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 14 இயங்கும் அறிவியல் ஆய்வுக் கூடங்கள் தந்திருக்கிறேம். ஒரு ஸயன்ஸ் அஸிஸ்டன்டையும் போட்டிருக்கிறேம். அதை மாதத்திற்கு இரண்டு நாட்கள் செல்ல ஏற்பாடு

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 மார்ச்

செய்திருக்கிறோம். 1973-74-ல் கூடுதலாக 3 இயல் ஊர்திகளும்
1974-75-ல் மேலும் 10 இயல் ஊர்திகளும் வாங்கப்படும். 47 கல்வி
மாவட்டங்களுக்கும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டு
மென்ற எண்ணம் நமது அரசுக்கு இருந்து வருகிறது. இதைத்
தவிர கல்வியின் தரம் உயர்த்தப்படுவதற்காக யூனிசெ
நிறுவனத்தின் உதவியுடன் முன்னோடித் திட்டத்தை நடைமுறை
படுத்தவும் தீர்மானித்திருக்கிறோம். கோடை விடுமுறைக் காலத்தி
அறிவியல் பயிற்றுவிப்புப் பயிற்சி நிலையங்களை ஏற்படுத்
உயிரியல், இயல்பியல், வேதியல், கணிதம் ஆகியவற்றில் 1,000-க்
மேற்பட்ட ஆசிரியர்கள் பயிற்சி அளிக்கப்படுகின்றனர். 1974-75-
160 உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் இந்தத் திட்டத்தின்கீழ் பயிற்சி
பெறுவர். அவர்களுக்குத் தகுந்த முறையில் பயிற்சி அளிக்
போதிய முயற்சிகள் மேற்கொண்டு இருக்கிறோம் என்
தெரிவித்துக் கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளிகளில் நூலகங்கள் நிறுவுவதைப் பற்றி பல
உறுப்பினர்கள் பேசினார்கள். இதுவரை 1,788 உயர்நிலைப்பள்ளி
களில் இந்த நூலகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. 1974-75-ல்
ரூ. 1,000 மதிப்புள்ள நூல்களை 342 உயர்நிலைப் பள்ளிகள் பெறும்
அதற்கான நிதியை நாம் ஒதுக்கீடு செய்து இருக்கிறோம். காட்சி
கேள்விச் சாதனங்கள் ரூ. 1 இலட்சம் செலவில் செய்ய நிதி
ஒதுக்கீடு செய்து இருக்கிறோம். 60 பள்ளிகளுக்கு வானொலி
பெட்டிகளும், 50 பள்ளிகளில் 35 மி.மீட்டர் துண்டுப் படச்சுருள்
காட்டும் கருவிகளும், 10 பள்ளிகளில் 16 மி.மீட்டர் துண்டுப் பட
சுருள் காட்டும் கருவிகளும் வாங்குவதற்காக இந்த நிதி ஒதுக்கப்
பட்டிருக்கிறது. கோத்தாரி கல்வி ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு
ஏற்ப 10 பள்ளிகள் 1974-75-ல் ரூ. 8.50 இலட்சம் செலவில் பல்வகை
பயிற்சிப் பள்ளிகள் (காம்பிரஹென்சிவ் ஸ்கூல்ஸ்) என்ற வகையி
செய்வதற்கு நாம் திட்டம் தீட்டியிருக்கிறோம்.

இப்படி பள்ளிப் படிப்பைப் பொறுத்தவரையில் கல்வியின்
தரத்தை உயர்த்துவதற்காக இருக்கிற வசதி வாய்ப்புகளை வைத்து
நாம் செய்து தந்து இருக்கிறோம். மேலும் உயர்த்துவதற்கா
ஆசிரியர்-மாணவர் விகிதாசாரத்தை ஓரளவிற்கு சரிபடுத்த வேண்டு
மென்று மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். 1.25 என்ற
அளவில் ஆக்கவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இப்போது
துவக்கப் பள்ளிகளில் ஒரு ஆசிரியருக்கு 35 மாணவர்கள் சராசரி

1974 மார்ச் 20] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வருகிறது. சில பள்ளிகளில் 25-30 இருக்கலாம். சில பள்ளி
களில் 40 வரும். சராசரி என்று வருகிறபோது ஒரு ஆசிரியருக்கு
34 மாணவர்கள் என்று இருக்கிறது. சில பல பள்ளிகளில் கீழே
இருக்கலாம், மேலே இருக்கலாம். உயர்நிலைப் பள்ளிகளை எடுத்துக்
கொண்டால் சராசரி 30 மாணவர்கள் இருக்கிறார்கள்.

இவர்களுடைய எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமென்று
சொல்கிறார்கள். அந்த யோசனை நல்லது தான். ஆனால் நிதி
நிலை எந்த அளவுக்கு இடம் தருகிறதோ அந்த அளவுக்குச் செய்து
இருக்கிறோம். இருக்கிற நிதி நிலையை வைத்து பரவலாக கல்வி
யைத் தருவதற்கு பள்ளிகளை ஆங்காங்கே ஏற்படுத்துவதா, அல்லது
ஆசிரியர்களை அதிகமாக நியமித்து மாணவர்கள்-ஆசிரியர்
விகிதாசாரத்தைக் குறைப்பதா என்ற முறையில் சிந்திக்க வேண்டி
யிருக்கிறது. ஆசிரியர்-மாணவர் விகிதாசாரத்தைக் குறைப்பதன்
மூலம் புதிதாக பள்ளிகளை ஆரம்பிக்க முடியாத நிலை ஏற்பட்டு,
நிறைய மாணவர்களுக்கு கல்வி அறிவு புகட்டுகின்ற வாய்ப்பு வசதி
இல்லாமல் போய்விடுகிறது.

இன்றைக்கு துவக்கப் பள்ளி இல்லாது நிறைய இடங்கள் இருக்
கின்றன. 10-15 மைல் சுற்றுவட்டாரத்தில் உயர்நிலைப் பள்ளிகள்
இல்லாத நிலை கூட இருக்கிறது. இருக்கிற பள்ளிகளுக்கு கட்டடங்
கள் இல்லை. போதுமான ஆய்வுக் கூடங்கள் இல்லை. இப்போது
சில இடங்களில் உயர்நிலைப் பள்ளிகள் வைக்கவேண்டுமென்பதற்
காக துவக்கப் பள்ளிகளை ஆலமரத்தடிக்குப் போகச் செய்து விடு
கிறார்கள். அங்கே உயர்நிலைப் பள்ளி துவங்கப்பட்டவுடன், ஆல
மரத்தடிக்குச் சென்ற துவக்கப் பள்ளி மீண்டும் அந்த இடத்திற்கு
வர முடியாமல் போகிற சூழ்நிலை எழுந்து விடுகிறது. அப்படிப்
பட்ட நிலையில் அறிவியல் ஆய்வுக் கூடங்கள் ஏற்படுத்த முடிய
வில்லை.

இருக்கிற உயர்நிலைப் பள்ளிகளை சீர்படுத்தி, செம்மைப்படுத்தி
செய்வதா, பரவலாகச் செய்வதா என்றால் இரண்டையும் ஒருசேர
நாம் செய்ய வேண்டியிருக்கிறது. பரவலான கல்வி தரவேண்டி
யிருக்கிறது. கல்வி வசதி பெறாமல் இருக்க யாரையும் தடுக்க
முடியாது. ஒரு ஆசிரியருக்கு 25 மாணவர்கள்தான் இருக்க
வேண்டுமென்று உத்தரவு இட்டு விடலாம். இருக்கிற வசதியை
வைத்து ஆசிரியர்களை அதிகமாக்கி விடலாம் என்றால் பல மாணவர்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 மார்ச் 20

களை நாம் பள்ளிக்குச் சேர்க்காமல் இருக்கவேண்டிய நிலை வந்து விடுகிறது. 25 பேருக்கு ஒரு ஆசிரியர் என்று வைத்தால் ஆசிரியர் களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும். அவற்காக அதிக நிதி வேண்டும். அதற்காக நிதி வேண்டுமானால் 20 கோடி, 30 கோடி அதிகமாக ஒதுக்கித் தந்தால்தான் நாம் அதைச் செய்ய முடியும்.

ஆகவேதான் இருக்கிற நிதி நிலையை வைத்து சமாளிக்க வேண்டியிருக்கிறது. இப்போது 110 கோடி அளவுக்கு கல்விக்காக நாம் ஒதுக்கித் தந்து இருக்கிறோம். இதில் பள்ளிக் கல்வியை எடுத்துக் கொண்டால் கிட்டத்தட்ட 94 கோடி அளவுக்கு ஒதுக்கி யிருக்கிறோம். அதில் ஆசிரியர் சம்பளம், படி ஆகியவை 80 கோடி. பள்ளிக் கல்வித்துறை நிருவாகச் செலவு ரூ. 2.74 கோடி, கல்வித் தர உயர்வுக்கு 79 லட்சம், மாணவர்களை ஊக்குவிக்க (மதிய உணவு போன்றவை) 3.26 கோடி, ஆசிரியர்கள் ஆற்றலை வளர்க்க 23 லட்சம், தனியார், நகராட்சிப் பள்ளிக் கட்ட மானியம் 68 லட்சம், தேசிய மாணவர் படைச் செலவு, கிராக்கிப் படி உயர்வுக்கான செலவு போன்றவை 5.94 கோடி. ஆக மொத்தம் பள்ளிக் கல்விக்காக நாம் 93.68 கோடி செலவழிக் கிறோம்.

இதுபோக, கட்டடம் கட்ட, அறிவியல் ஆய்வுக் கூடம் கட்டித் தர, வேறு பல இடங்கள் வாங்கித் தர ஆகியவற்றிற்கும் நா செலவழிக்கிறபோது, நாம் எண்ணுகிற எண்ணப்படி வசதி வாய் புகளை செய்து தர முடியாத அளவுக்குப் போய் விடுகிறது. இங்ே ஆசிரியர்களை அதிகமாகப் போடுவதன் மூலம் அந்த வசதி செய் தரப்படுவது குறைந்து விடாத அளவிலும் நாம் பார்த்துக்கொள் வேண்டியிருக்கிறது. ஓரளவு ஆசியர்கள், மாணவர்கள் விகித சாரம் குறைந்தால் நல்லது என்றாலும்கூட எண்ணிக்கை அதிக படியாக இருந்தாலும், ஆர்வமும், அக்கரையோடும் ஆசிரியர்க பணியாற்றினால் மிகச் சிறந்த முறையில் கல்வி தரமுடியும்.

எண்ணிக்கையின் தன்மையைப் பொறுத்து மட்டும் கல்வியி தரம் அமையவில்லை; வேறு பல தன்மைகளும் இருக்கின்றன. மாணவர்களை வைத்துக்கொண்டு 100-க்கு 100 மாணவர்களை பா செய்ய வைக்கும் பள்ளிகளும் இருக்கின்றன. ஆர்வம் இல்லா



1974 மார்ச் 20] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வர்களாக இருந்தால் எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பில் 1 : 7 என்ற விகிதத் தில் இருந்தாலும் 2 பேர் தான் பரிட்சையில் தேறுகிற நிலையும் இருக்கிறது.

ஈரோட்டில் இருக்கும் கலைமகள் கல்லூரியில் 250 மாணவர்களில் 250 பேரும் பரிட்சை தேறியிருக்கிறார்கள். 11 ஆண்டு காலமாக தொடர்ந்து அந்தப் பள்ளியில் சென்டம் மாணவர்கள் தேறும் நிலை இருக்கிறது. ஆக, அக்கரையும், ஆர்வமும் சேர்ந்து இருந் தால், நல்ல முறையில் கல்வியின் தரம் இருக்கிறது என்பதற்காக இதைச் சுட்டிக் காட்டுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசுகிறபோது, தமிழக வரலாற்றை எழுதுவதற்காக வரலாற்றுக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருப்பது பற்றிக் குறிப்பிட்டார்கள். தமிழ் வளர்ச்சி மன்றத்தின் சார்பாக தமிழகத்தில் தொடர்ந்து நடைபெற்ற வரலாற்றை யாரும் தொடர்ந்து அறிந்து கொள்வது மாதிரி இதுவரையில் யாரும் எழுத வில்லை. சங்க காலம், வரலாற்று முற்காலம், பிற்காலம், வெள்ளையர் காலம், என்று துண்டு துண்டாக இருக்கிறதே தவிர இது தான் தமிழகத் தின் தொடர்ந்த வரலாறு என்று எடுத்துக் கொடுப்பதற்கான ஒரு வரலாற்றுப் புத்தகம் இல்லாததால் அதைத் தயாரிக்க வேண்டு மென்ற அடிப்படையில் தமிழ் வளர்ச்சி மன்றத்தினர் ஒரு தீர்மா னத்தைப் போட்டார்கள். டாக்டர் மு. வரதராசனார் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள வரலாற்றுக் குழுவில் மயிலை திரு. சீனி. வெங் கடசாமி. திரு. ஆர். இராகவன். திரு. அப்பாத்துரை போன்ற தமிழ் அறிஞர்களும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுப் பேராசிரியராக உள்ள திரு. சி. இ. இராமச்சந்திரன் அவர்களும், சென்னைப் பல்கலைக் கழகத்தில் திருக்குறள் ஆராய்ச்சிப் பேராசிரிய ராக உள்ள திரு. திருநாவுக்கரசு அவர்களும், தொல்பொருள் இயக்குநர் திரு. நாகசாமி அவர்களும் உறுப்பினர்களாக உள்ளனர். சென்னை மாநிலக் கல்லூரியில் வரலாற்றுத் தலைமைப் பேராசிரிய ராக உள்ள திரு. அனுமந்தனும் இதில் பணியாற்றுகிறார். தமிழ் வளர்ச்சி இயக்குநர் இக்குழுவின் உறுப்பினர் செயலராக இருக் கிறார். இந்த உறுப்பினர்களைத் தவிர வரலாற்று நிபுணரான திரு. கே. கே. பிள்ளை அவர்களை விசேஷ அழைப்பாளராகவும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. இது தவிர குழுவுக்கு உதவி புரிய

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 மார்ச் 20

வரலாற்றுப் பேராசிரியர் திரு. தங்கவேலு அவர்களும், வரலாற்று உதவிப் பேராசிரியர் திரு. மங்கள முருகேசன் அவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். திரு. மு. வரதராசனார் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் இந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** அந்தப் புத்தகம் எப்போது வெளிவரும்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அவர்கள் தங்களுடைய பணிகளைச் செய்து வருகிறார்கள். ஒவ்வொரு பகுதியாக அவர்கள் வரலாறு எழுதிக் கொண்டு வருகிறார்கள். சங்க காலம், இடைக்காலம் என்று தொகுத்துக் கொண்டு வருகிறார்கள். விரைவில் வரும் என்று எதிர்பார்க்கிறேன். அது பற்றிய குறிப்புகளை பின்னால் நான் தருகிறேன்.

(மாலை 6.30)

கல்லூரி இயக்குநர் நியமனம் பற்றியும் இங்கே உறுப்பினர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள். இப்பொழுது இருக்கிற விதிகள் அடிப்படையில் கல்லூரி இயக்குநரை வைத்திருக்கிற அளவிலே பார்க்கிறபொழுது, இணை இயக்குநருக்குத் தகுதியாக இருப்பவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற அளவுக்கு இருக்கிறது. இப்பொழுது இருக்கிற விதிமுறைகள் அடிப்படையில் கல்லூரிப் பிரிவும், பள்ளிப் பிரிவும் இரண்டும் சேர்ந்து ஒரே காடராக வைக்கப்பட்டிருக்கிற அளவுக்கு இருந்ததன் காரணமாக ஏற்கெனவே பள்ளித் துறையிலே பணியாற்றியிருக்கிற டைட்டஸ் அவர்கள் கல்லூரி இயக்குநராகவும், சிட்டிபாபு அவர்கள் பள்ளிக் கல்வி இயக்குநராகவும் போடப்பட்டார்கள். இப்பொழுது போட்டிருக்கிற சட்டப்படி, விதிமுறைகளின்படி எந்தத் தவறும் இல்லை என்பதைத்தான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

ஆக, அந்த வகையிலே பார்க்கிறபொழுது, இணை இயக்குநரிலே பணிமூப்பு கொண்டவர் பெருமாள் ஆவார். ஆகவே, பெருமாள் அவர்களை பள்ளிக் கல்வி இயக்குநராகவும், அவரை விட உயர்ந்த பணி மூப்புள்ள சிட்டிபாபு அவர்களை கல்லூரி கல்வி இயக்குநராகவும் அமர்த்தி இருக்கிறோம். ஒரு கருத்து சொல்லப்பட்டது. கல்லூரியிலிருந்து வருகிறவர்களை கல்லூரி இயக்குநராகவும்,



1974 மார்ச் 20] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பள்ளியில் இருந்தவர்களை—பள்ளி நிர்வாகத்தைக் கவனித்துக் கொண்டிருந்தவர்களை பள்ளி இயக்குநராகவும் அமர்த்த வேண்டுமென்று சொன்னார்கள். அதைக் கொள்கை அளவிலே ஏற்றுக் கொள்கிறேன். அதற்கான ஏற்பாடு செய்கிறபொழுது நாம் அதைக் கொண்டு வரவேண்டும். இப்பொழுது இருக்கிற சட்ட விதிமுறைகளில் அந்த மாற்றத்தைச் செய்தால், அதிலே இடர்ப்பாடு ஏற்படும். அதைத் தனியான முறையில் பரிசீலிக்க வேண்டும். இப்பொழுது செய்திருக்கிற முறையில் எந்தத் தவறும் இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** அமைச்சர் அவர்கள் கொள்கை அளவிலே ஒப்புக்கொள்வதாகச் சொன்னார்கள். அந்த வகையிலே இப்பொழுது ஏற்பட்டிருக்கிற அநீதியை நீக்குவதற்கு இனியாவது தக்கபடி ஆராய்ந்து விதிமுறைகளைச் செய்வார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அநீதி ஒன்றும் இல்லை. நீதி அடிப்படையில் தான் செய்யப்பட்டிருக்கிறது. நீதி எப்படி இருக்கவேண்டும் என்பதை இனிமேல் தான் வகுக்க வேண்டும். ஏற்கெனவே இருக்கின்ற நீதி அப்படி இருக்கிறது. அந்த நீதியின் அடிப்படையில்தான் செய்யப்பட்டிருக்கிறது. கல்லூரியிலிருந்து வருகிறவர்களை கல்லூரி இயக்குநராகப் போடவேண்டும், பள்ளிகளிலிருந்து வருகிறவர்களை பள்ளி இயக்குநராகப் போட வேண்டும் என்ற கருத்து இப்பொழுது சொல்லப்பட்டிருக்கிறது. பரிசிலனை செய்து அதைத் தனியாகக் கொண்டுவரவேண்டும்.

துவக்கக் கல்விக்கு ஒரு தனி இயக்குநர் போடவேண்டும் என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் குறிப்பிட்டார்கள். பொன்னப்ப நாடார் அவர்கள், திரு. கே டி. கே. தங்கமணி அவர்கள், திரு. சுப்ரமணியம் அவர்கள் இதைப்பற்றிப் பேசினார்கள். . .

**திரு. எம். ஏ. லத்தீப் :** குறிப்பிட்ட நியமனத்தில் ஒரு இணை இயக்குநராக இருந்தவர் இப்பொழுது பள்ளிக் கல்வி இயக்குநராக நியமனம் பெற்று இருக்கிறார். அவரைவிட ஒருவர் எல்லா வகையிலும் ஸீனியராக இருந்து இருக்கிறார் என்று சொல்லப்படுகிறார். அது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

அப்படியிருந்தும் அவரை என் இயக்குநர் பதவிக்கு அரசு நிய மிக்கவில்லை. எங்களைப் போன்ற சிறுபான்மை வகுப்பினருக்கு இத்தகைய பதவிக்கு வருகிற வாய்ப்பு மிகவும் குறைவாக இருக் கிறது. இப்பொழுது அவருக்கு இந்த வாய்ப்பு கொடுக்கப்பட வில்லை என்றால், இன்னும் 20, 25 ஆண்டுகளுக்கு இந்தப் பதவிக்கு சிறுபான்மை வகுப்பினர் யாரும் வரமுடியாத நிலைமை இருந்து வருகிறது. அதனால் அது எங்களுக்கு பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. குறைந்தபட்சம் இப்பொழுது ஏற்பட்டு இருக்கிற ஆரம்பப்பள்ளி இயக்குநர் பதவியையாவது சிறு பான்மை வகுப்பைச் சேர்ந்தவருக்கு கொடுத்து, எங்களுக்கு இழைக்கப்பட்ட இந்த அநீதியைப் போக்குவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : சிறுபான்மை வகுப்பினர், பெரும்பான்மை வகுப்பினர் என்ற அடிப்படையில் யாரும் புறக்கணிக்கப்பட்டு இந்த நியமனம் செய்யப்படவில்லை. நான் ஏற்கெனவே குறிப்பிட்டுச் சொன்னேன். இணை இயக்குநர்க ளாக இருப்பவர்கள் தான் இயக்குநராக வர முடியும். இணை இயக்குநர் பதவியில் எவ்வளவு காலம் பணியாற்றியிருக்கிறார்கள் என்பதைத் தான் கணக்கில் கொள்ள வேண்டும். அவர்கள் எவ்வளவு காலம் மொத்தமாக சர்வீஸில் இருந்திருக்கிறார்கள் என்பது இல்லை. டெப்யூடி டைரக்டராகவோ அல்லது துணை இயக்குநராகவோ எவ்வளவு காலம் இருந்தாலும் வர முடியாது சிறுபான்மையோர் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார் என்ற நிலை இல்லை.

இப்பொழுது இருக்கிற அளவிலே இணை இயக்குநர் என்! அளவிலே இருக்கும்பொழுது பணி மூப்பில் பெருமாள் அவர்க உயர்ந்தவர். அந்தத் தன்மையில்தான் போடப்பட்டிருக்கிறது இப்பொழுது இருக்கிற விதிகளின் அடிப்படையில் தான் போட பட்டிருக்கிறது. 10 ஆண்டு காலத்திற்கு முன்பு நடந்தை எண்ணிப்பார்த்து, இப்பொழுது அதைத் திருத்த முடியாத அப்பொழுதே அது தீர்க்கப் பட்டிருக்கவேண்டும். அ அப்பொழுதே தீர்க்கப்படாமல், இப்பொழுது அதை கொண்டு வந்து, இப்பொழுது இருக்கிற விதிமுறைகளின்ப ஒப்பிட்டுப்பார்த்து நாம் ஒன்றும் செய்ய முடியாது.





இப்பொழுது இருக்கிற விதியின்படி இணை இயக்குநர் பதவியில் இருந்த காலத்தைத் தான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த அளவில் சீனியாரிடி பார்த்துதான் போடப்பட்டிருக்கிறது. யாரும் புறக்கணிக்கப்படுகிற நிலைமை ஏற்படவில்லை. சிறுபான்மை யோருக்கு ஒரு வாய்ப்பு வரும்பொழுது அதைப் புறக்கணித்து விட்டு, வேறு ஒருவரைக் கொண்டுவரவேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு எப்பொழுதும் இருக்காது என்பதை பல்வேறு பதவிகளுக்கு நியமனம் செய்யப்பட்டிருப்பதை கண்டறிந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகத் தெளிவாகத் தெரிந்து கொள்ளவேண்டும்.

**திரு. எம். ஏ. லத்தீப்** : சிறுபான்மையோரைச் சேர்ந்தவர் என்ற ஒரு அடிப்படையில் மட்டும் நான் கேட்கவில்லை, சீனியாரிடி இருக்கிறது, தரம் இருக்கிறது என்ற அடிப்படையில் தான் கேட்கி றேன். 10 ஆண்டுக்கு முன்பு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. அந்த அநீதியை நியாயமாக உள்ள அரசு இப்பொழுது போக்கி வைக்கும் என்று நம்பினோம். எங்களைப் போன்றவர்களுக்கு ஏற்பட்டுள்ள அநீதியைப் போக்கும் வகையில் சில விதிகளை ஏற்கெனவே தளர்த்தி ஏன் இந்த ஒரு நியமனத்தைச் செய்யவில்லை என்பது தான் எங்களுடைய கேள்வி . . .

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : அவ்வப்பொழுது ஒவ்வொன்றுக்கும் சில பல விதிகள் இருக்கின்றன. ஆகவே அதை குறிப்பிட்ட காலத்திற்குள் செய்யவேண்டும். அந்தக் காலத்தி லேயே செய்து முடித்திருக்கவேண்டும். அந்தக் காலத்திலேயே அதைச் செய்ய முடியவில்லை என்றால் இப்பொழுது அதை மாற்றுவது என்றால், வேறு பல சட்ட சிக்கல்கள் அதன் மூலம் ஏற்படும். ஆகவே, இப்பொழுது இருக்கிற விதிமுறைகளின் படிதான் செய்திருக்கிறோம்.

**திரு. எம். ஏ. லத்தீப்** : விதி இருக்கிறது என்பதை அறிவோம். பல விதிகள் இருக்கின்றன. இந்த சமுதாயத்தின் விதி அப்படி இருக்கிறது என்பதைத் தான் நாங்கள் அறிந்துகொள்கிறோம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : சிறுபான்மையோருக்குப் பதவி கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். இன்னொரு புறத்தில் சிறுபான்மையோருக்குப் பதவி கொடுத்தால், பப்ளிக் ப்ராமிச்

கூட்டாக என் அவையைப் போட்டார்கள் என்று சொல்கிறார்கள். போடவில்லை என்றால் ஏன் போடவில்லை என்று முஸ்லீம் சமுதாயத்தினர் கேட்கிறார்கள். ஆக இரண்டு பக்கமும் இடி.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, கல்லூரியில் கையாடல் பற்றி மாண்புமிகு உறுப்பினர் தங்கமணி அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள். நாமக்கல் கல்லூரியைப் பொறுத்தவரையில் அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டு, அதற்கு அங்கே இருந்த முதல்வர் . . .

**திரு. எம். ஏ. லத்தீப்:** பள்ளிக் பாலிக்கூட்டாக தகுதியின் அடிப்படையில் அவர் நியமனம் பெறாமல், சிபாரிசின் அடிப்படையில் நியமனம் பெற்றிருந்தால் அந்த நியமனம் தேவையில்லை. தகுதியின் அடிப்படையில் அந்தப் பதவிக்கு நியமனம் கொடுக்கப்பட்டிருப்பதாகத்தான் நான் அறிகிறேன். யார் சிபாரிசின் பேரிலும் கொடுக்கவில்லை. தகுதியின் அடிப்படையில் கொடுக்காமல், யார் சிபாரிசின் பேரிலும் அப்படிப்பட்ட பதவி தேவையில்லை என்பது தான் முஸ்லீம் லீக்கின் நிலை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அந்த நியமனமும் முறைப்படித்தான் செய்யப்படுகிறது. சிறுபான்மையோர் என்பதற்காக புறக்கணிக்கப்படுவதும் இல்லை. பெரும்பான்மையினர் என்பதற்காக ஏற்றுக்கொள்ளப்படுவதும் இல்லை. மற்றவர்கள் உரிமைகள் பாதிக்கப்படாமல் தான் நியமனங்கள் செய்யப்படுகின்றன.

நாமக்கல் கல்லூரியில், அங்கு இருக்கிற முதல்வர் தான் முழு பொறுப்பு. அங்கு ஒரே இருக்கிற குமாஸ்தாக்கள் செய்கிற தவறுக்கும் முழுப்பொறுப்பு முதல்வருக்குத்தான் என்ற நிலை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆடிட்டரும் நிலைமையை கண்டுபிடித்திருக்கிறார். கணக்கு வைப்பதில் பல குறைபாடுகள் இருக்கின்றன. கல்லூரி முதல்வர் நிர்வாகத்தையும் கவனித்துக் கொள்ளவேண்டும், பாடங்களையும் கற்றுக் கொடுக்க வேண்டும், கணக்குகளையும் வைத்துக் கொள்ளவேண்டும் என்றால் கஷ்டமாக இருக்கிறது. இப்பொழுது அதற்கு ஒரு முறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.



ஆனால் நாமக்கல் கல்லூரியைப் பொறுத்தவரையில் வழக்கு தொடரப்பட்டு, அது பற்றிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. 1974-75-ம் ஆண்டிலிருந்து 21 கல்லூரிகளில் பர்சார்கள் நியமிக்கப்படுவார்கள். கணக்கு வழக்குகள் முறைப்படி வைப்பதற்கு, பொறுப்புள்ள ஒருவரை நியமித்துவிட்டால், முதல்வர் பொறுப்பு ஓரளவுக்கு குறையும். ஏனென்றால் முதல்வர் கல்லூரியையும் நிர்வகிக்க வேண்டும், மாணவ, மாணவிகளைச் சேர்க்கவேண்டும், பாடம் சொல்லிக் கொடுக்கவேண்டும். அப்படியிருக்கும்பொழுது கணக்கு வைப்பதிலும் ஈடுபாடு கொண்டால் பல்வேறு தவறுகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அவர்களுக்கு இந்தக் கணக்கு முறையில் அனுபவம் இல்லாத குறைபாடும் இருக்கிறது. ஆகவே 21 கல்லூரிகளில் பர்சார்கள் நியமிக்கப்படுவார்கள். எதிர்காலத்தில், அதனால் அப்படிப்பட்ட குறைபாடுகள் ஏற்படாமல் தடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ள முடியும் என்று நான் கூறிக்கொள்கிறேன்.

நூலக ஆணைக் குழுத் தலைவர் பதவியை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். 1948-ம் வருடத்திய சட்டத்தின் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆணைக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மேற்கொண்டு அங்கே என்னென்ன சீர்திருத்தங்கள் தேவை, எந்த அளவுக்கு நூலகங்களை நாம் அதிகப்படுத்த வேண்டும்—பெரும் பகுதி பணம் நிர்வாகச் செலவுக்குப் போகிறதே தவிர, புத்தகங்களை வாங்குவதற்கும், மற்றவைகளுக்கும் பயன்படவில்லை என்ற அளவுக்கு சூழ்நிலை இருக்கிறது—அதை எந்த அளவுக்கு சீர்திருத்தி அமைக்கலாம், நிர்வாகத்தை எப்படிச் செம்மைப்படுத்த வேண்டும், அதற்கு என்ன செய்யலாம் என்பதையெல்லாம் ஆராய்ந்து அறிந்து பரிந்துரைகள் செய்வதற்காக ஒரு நிபுணர் குழு திரு. சுப்பராயன் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த நிபுணர் குழு பல இடங்களுக்குச் சென்று அதற்குரிய ஆய்வை நடத்தி வருகிறது. விரைவிலே இரண்டு மாத காலத்திற்குள் அதன் அறிக்கை வரும் என்று எதிர் பார்க்கிறோம். அந்த அறிக்கை வந்ததற்கு பிறகு, அந்த சிபாரிசுகளின் அடிப்படையில் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் குறிப்பிட்டுச் சொல்லிக்கொள்கிறேன்.

பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக ஏற்பட்டிருப்பது குறித்த விவரத்தை நான் முதலிலேயே குறிப்பிட்டிருக்கிறேன். நம்முடைய மாநிலத்தில் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை மற்ற மாநிலங்களைவிட அதிகமாகவே உள்ளது.

தனியார் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் சுட்டிக்காட்டினார்கள். நன்கொடை வசூலிப்பதைப்பற்றி எடுத்துக் குறிப்பிட்டார்கள். நன்கொடை வசூலிப்பதைக் குறித்து நாம் சில பல சட்டதிட்டங்களை நிறைவேற்றி வைத்திருக்கிறோம். அப்படி நிறைவேற்றி வைத்திருந்தாலும் கூட, நடவடிக்கை எடுத்துக்கொள்ளத் தக்க அளவுக்கு வரமுடியாத அளவுக்கு பல இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. பல்கலைக்கழக அதிகாரத்தின் கீழ் பல கல்லூரிகளும் வந்திருக்கின்றன. தெளிவாக சில பல காரியங்களில் இன்கம் ஃப்ராம் பிரைவேட் ஸோர்ஸ் என்ற அளவுக்கும் நாம் சில விதிகளை வைத்திருக்கிறோம். கிராண்ட்-இன் எய்டு கோடிலும் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். எப்படி வசூல் பண்ணவேண்டும் என்பதற்கு தெளிவாக பல்வேறு விதிகளைப் போட்டு வைத்திருக்கிறோம்.

The income from Endowments, contributions and voluntary donations and collections from other private sources shall be brought into account and shall not be mixed with the general funds of the college. என்றெல்லாம் விதிமுறைகளைப் போட்டிருக்கிறோம். தவறு நடக்கிறது என்று சொல்கிறார்களே தவிர முறையீடு செய்ய யாரும் முன்வரவில்லை. முறையீடு வந்தால்தான் நடவடிக்கை எடுக்க முடியும். தவறு நடைபெற்றால், மேற்கொண்டு மானியங்கள் தராமல் நிறுத்தி வைக்கலாம். ஆக, புகார் சொல்கிறார்களே தவிர, முறையீடு செய்யவில்லை. முறையீடு இல்லாமல் நடவடிக்கை எடுக்க இயலாது.

மேலும், கல்லூரிகளின் கணக்குகளை தணிக்கை செய்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். கல்லூரிக் கல்வி இயக்குநர் தணிக்கையாளர்களை வைத்து, ஒவ்வொரு கல்லூரிக்கும் சென்று தணிக்கை செய்கின்ற முறையை ஒரே ஒரு கல்லூரி தவிர, மற்றெல்லாக் கல்லூரிகளும் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. அந்த ஒரு கல்லூரியைப் பொறுத்தவரையில் நாம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். கணக்கைக் காட்டாவிட்டால், [illegible] தரு





மானியங்களையும் மற்றவைகளையும் தர முடியாது என்று முன்கூட்டியே எச்சரிக்கை செய்திருக்கிறோம். ஆக, நன்கொடை கொடுத்தவர்கள் அதற்கான ரசீது கொடுக்கப்படவில்லை என்று முறையீடு செய்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜாதியின் பெயரால் பல கல்லூரிகள் அமைந்திருக்கின்றன என்றும், ஜாதிப் பெயரை எடுக்கவேண்டும் என்றும் பல உறுப்பினர்கள் தெரிவித்தார்கள்; வெட்டுத் தீர்மானங்களிலும் சொல்லியிருக்கிறார்கள். 178 கல்லூரிகளில் சில பல கல்லூரிகள் ஜாதியின் பெயரால் இருக்கின்றன; எல்லா கல்லூரிகளும் அல்ல. கல்லூரிகள் அமைக்கும்போது சிலர் நன்கொடை கொடுக்கிறார்கள். நன்கொடை கொடுக்கின்றவர்களின் பெயரை அந்தக் கல்லூரிக்கு வைக்கிறோம். அவர்கள் பெயரோடு ஜாதிப் பெயரும் ஒட்டிக்கொண்டிருக்கிறது. பெயரோடு வால்போல் ஒட்டிக்கொண்டிருக்கின்ற ஜாதிப் பெயரை வெட்டிவிட வேண்டும் என்று சொல்ல முடியவில்லை. ஆகவே, ஜாதியின் பெயரால் இருக்கின்ற பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் புதிய பெயர்களை வைக்கலாம் என்று சொல்லியிருக்கிறோம். அரசின் கொள்கையையும், அங்கத்தினர்களின் கருத்துக்களையும் தெரிவித்து, ஜாதிப் பெயர்களை மாற்றிக்கொள்ள வாய்ப்பு இருக்கும் என்று நம்புகிறேன்.

கல்வி நிலையங்களை எல்லாம் நிர்வகிப்பதற்கு தனி வாரியம் ஒன்றை அமைப்பது நல்லது என்ற கருத்தை பல அங்கத்தினர்கள் தெரிவித்தார்கள். வாரியம் அமைப்பது எந்த வகையில் அதிகப் பயனைத் தரும் என்பது புரியவில்லை. வாரியம் அமைத்தால் எல்.ஐ.சி., வங்கிகளிடம் இருந்து கடன் பெற்று வியாபார நோக்கத்தோடு லாபகரமாக நடத்தலாம். ஆனால் அந்த வாரியத்தை நாம் கட்டுப்படுத்த அதிக வாய்ப்பில்லாமல் போய் விடும். அந்த வகையிலேதான் வாரியத்தை அமைக்கின்ற முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

அப்படித்தான் நூல்களை வெளியிடுவதற்கு தமிழ்நாடு டெக்ஸ்ட் புக் சொசைட்டி என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தியிருக்கிறோம். டூரிசம் கார்ப்பரேஷன் கொண்டு வந்திருக்கிறோம். வேறு பல வாரியங்களை அமைத்திருக்கிறோம். அவைகளுக்கு எல்லாம் எல்.ஐ.சி.

நிறுவனங்களும் வங்கிகளும் கடன் வழங்குகின்றன. அதைக்கொண்டு நல்ல முறையில் வாரியங்களை நடத்த வழிவகை ஏற்பட்டிருக்கிறது. கல்விக்காக தனியாக ஒரு வாரியத்தை ஏற்படுத்தினால் இந்த வாரியங்களை எப்படி நம்மால் கட்டுப்படுத்த முடிகிறதோ அந்த அளவுக்குத்தான் கட்டுப்படுத்த முடியும். பணத்தை ஒதுக்கீடு செய்வதுதான் நம்முடைய வேலையாக இருக்கும். அதன் நடவடிக்கைகளை நாம் கண்காணிக்க முடியாமல் போய்விடும். அதற்கென்று ஒரு குழு அமைத்து, அதில் பலர் நியமிக்கப்பட்டு, அவர்கள் வரவு-செலவு கணக்கைப் பார்த்து, எந்த நோக்கோடு வாரியத்தை நடத்துவது என்பதைப்பற்றித்தான் யோசனை செய்வார்கள். ஆனால் நாம் இப்போது எதிர்பார்க்கின்ற பலன் கிட்டாது என்றே தெரிகிறது. 110 கோடி ரூபாய் ஒதுக்கிவிட்டு, அதைப் பற்றி இந்த அவையிலே விவாதிக்க முடியாமல் போய்விடும்.

அதுமட்டும் அல்ல. எல்லா கல்வி நிறுவனங்களையும் இந்த வாரியத்தின்கீழ் கொண்டுவர முடியாது. பல்வேறுவிதமான கல்விச் சாலைகள் எல்லாம் அமைந்திருக்கின்றன. அவை அனைத்தையும் வாரியத்தின்கீழ் கொண்டுவர இயலாது. வேறு எந்த மாநிலத்திலும் இப்படிப்பட்ட ஒரு அமைப்பு இருப்பதாகத் தெரியவில்லை. ஓரிரு மாநிலங்களில் இருப்பதாகச் சொன்னார்கள். அதைப்பற்றி இனிதான் தகவல் தெரிந்துகொள்ள வேண்டும். வாரியம் அமைத்து விட்டால் ஆசிரியர்களை எல்லாம் அவர்கள்தான் நியமிப்பார்கள். இப்போது அரசாங்கத்தின் கண்காணிப்பில் இருப்பதால், பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக ஆசிரியர்களை நியமனம் செய்கிறோம். நியமனங்களில் தவறு நடக்காமல் பார்த்துக் கொள்கிறோம்; ஏதாவது தவறு நடைபெற்றால் இந்த அவையிலே விவாதிக்கிறோம். வாரியம் அமைப்பதில் இப்படி பல்வேறு சங்கடங்கள் ஏற்படுகின்றன. பலன் தருமானால் வாரியம் அமைக்கலாம்; அதில் ஆட்சேபணை இல்லை. நாம் எதிர்பார்க்கின்ற பலன் கிடைக்காததால் கல்வி நிறுவனங்களுக்கு வாரியம் அமைப்பதை ஏற்றுக்கொள்வதற்கில்லை.

இப்போது கல்வி நிறுவனங்களை இரண்டு இயக்குநர்களின் கீழ் பராமரித்து, கண்காணித்து வருகிறோம். கல்லூரிக் கல்வி இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்குநர் என்று இரண்டு இயக்குநர்கள் இருக்கிறார்கள். அது போதாது; தொடக்கக் கல்விக்கு என்று தனியாக ஒரு இயக்குநரைப் போடவேண்டும் என்று பல





கருத்து தெரிவித்தார்கள். ஆனால் ஒரு காலத்தில் எல்லா கல்வி நிறுவனங்களையும் ஒரே இயக்குநரே கவனித்து வந்தார். அதற்குப் பின்னால் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் என்று ஒரு இயக்குநர் தனியாக நியமிக்கப்பட்டார். தொழில் நுட்பக் கல்வி மற்றக் கல்வியோடு தொடர்பு இல்லாமல் இருந்ததால் அதைத் தனியாகப் பிரிப்பதற்கு வசதியாக இருந்தது. அதைப் பிரித்ததில் சிக்கல் எதுவும் இல்லை. அதைப்போலவே சிக்கல் எதுவும் இல்லாததால் கல்லூரிக் கல்வி என்றும், பள்ளிக் கல்வி என்றும் இரண்டாகப் பிரிக்க முடிந்தது.

ஆனால், உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஒரு இயக்ககம், தொடக்கப் பள்ளிகளுக்கு ஒரு இயக்ககம் என்று பிரிப்பதில் சில பல சங்கடங்கள் இருக்கின்றன. இதில் சிக்கல்கள் இல்லை என்றால் பிரிப்பதற்கு தயாராக இருக்கிறோம். அதுபற்றி அன்பர் காங்கிரஸ் கட்சித் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அந்தக் கருத்தை மதிப்பிட்டுக் கூறியும் நான் தெரிவித்து இருக்கிறேன். அதை ஆராய்ந்து பார்த்து ஏற்படுத்தலாம் என்ற எண்ணம் இருந்தாலும் பல சங்கடங்கள் இருப்பதால் செயல்படுத்த முடியாத நிலை இருக்கிறது.

தொடக்கக் கல்வி என்று சொல்லும்போது 8-வது வகுப்பு வரையில் கவனிக்க வேண்டியிருக்கிறது. 7,000 உயர் தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 8-வது வகுப்பு வரையில் இருக்கிறது. மற்றெல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் 6 முதல் 11-வது வகுப்பு வரையில் இருக்கிறது. ஆக, 6, 7, 8 வகுப்புகள் உயர்நிலைப் பள்ளியிலும் இருக்கின்றன; தொடக்கப் பள்ளியிலும் இருக்கின்றன. தொடக்கப் பள்ளிகளுக்கு என்று தனி இயக்ககம் அமைத்தால் தொடக்கப் பள்ளியில் வருகின்ற 6, 7, 8 வகுப்புகள் இதன்கீழ் வரும்; ஆனால் உயர்நிலைப் பள்ளியோடு இருக்கின்ற 6, 7, 8 வகுப்புகள் வராது. இந்த முறையிலே பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. அதேமாதிரி மாவட்டக் கல்வி அதிகாரியும், முதன்மைக் கல்வி அதிகாரியும் அவர்களுடைய பணிகளை எப்படி வரையறை செய்வது என்பதிலும் சங்கடம் ஏற்படும். சங்கடங்கள் இல்லாமல் சுலபமாக இருக்குமானால் விரைவிலேயே பிரித்து விடலாம். ஆகவே, இதைப்பற்றி ஆராய்ந்துதான் செயல்பட வேண்டியிருக்கிறது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 மார்ச் 20

இப்போது பள்ளிக் கல்வி இயக்குநரின் கீழ் இரண்டு இணை இயக்குநர்கள் இருக்கிறார்கள். ஒருவரிடம் நிதித்துறையும் திட்டமிடுதலும் (பிளானிங்) கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னொருவரிடம் வேலை மாறுதல்கள் போன்ற பணிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்போது நாங்கள் நினைத்திருப்பது ஒரு இணை இயக்குநர் தொடக்கப் பள்ளிகள் நிர்வாகம் முழுவதையும் பார்த்துக்கொள்வது; இன்னொருவர் உயர்நிலைப் பள்ளிகள் நிர்வாகம் முழுவதையும் பார்த்துக்கொள்வது என்ற முறையிலே பொறுப்புக்களை ஒப்படைக்க வேண்டும் என்றிருக்கிறோம். இப்படி பிரித்து நிர்வகிப்பதில் ஏதாவது சங்கடங்கள் இருக்கின்றனவா என்று கண்டறிய வேண்டும். சங்கடம் ஏதும் இல்லை என்று தெரிந்தால் அதற்குப் பின்னால் இரண்டையும் தனித் தனியாகப் பிரிக்க வாய்ப்பு ஏற்படுமானால் பிரிக்கலாம். ஆக, இப்போது அதைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மாணவர்கள் அமைதியின்மையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மாணவர்கள் அமைதியின்மை உலகம் முழுவதும் இருக்கிறது; இந்தியா பூராவிலும் இருக்கிறது; தமிழ்நாட்டிலும் இருக்கிறது. இந்தியாவின் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது தமிழ்நாடு பெருமைப்படத் தக்க அளவில் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். 178 கல்லூரிகளில் ஒரு 10 அல்லது 15 கல்லூரிகளில் அமைதியின்மை இருக்கிறது. 2,600-க்கு மேற்பட்ட உயர்நிலைப் பள்ளிகளில் ஒரு 50 அல்லது 60 பள்ளிகளில் அமைதியின்மை இருக்கிறது.

எல்லா இடங்களிலும் அமைதியின்மை என்ற நிலை தமிழகத்தில் இல்லை. இந்த அமைதியின்மையைத் தவிர்க்க ஒரு முறையைக் கையாளலாமா என்று யோசித்துக்கொண்டிருக்கிறோம். அதாவது, ஒவ்வொரு இடத்திலும் கல்லூரி முதல்வரைத் தலைவராகக்கொண்டு ஒரு சீனியர் ப்ரொபசர், பழைய மாணவர் ஒருவர், மாணவர்களின் பெற்றோர் பிரதிநிதி ஒருவர், ஸ்டூடன்ட் செக்ரட்டரி அல்லது பிரசிடெண்ட் ஒருவர் ஆகியோரைக் கொண்ட குழு ஒன்றை அமைத்து, எந்தப் பிரச்சினை வந்தாலும் அந்தக் குழு ஆராய்ந்து முடிவு செய்யவேண்டும் என்ற முறையைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம்.



1974 மார்ச் 20] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இன்றைக்கு இருக்கின்ற நிலைமைகளைப் பார்த்தால் சில இடங்களில் மாணவர்களுக்கு தெரியாமலே வேலை நிறுத்தம் திடீரென்று ஆரம்பமாகிவிடுகிறது. வேலை நிறுத்தத்திற்கு என்ன காரணம் என்று அவர்களுக்குத் தெரியாது. அதேமாதிரி திடீரென்று வேலை நிறுத்தம் நின்றுவிடுகிறது. இவைகளுக்கு காரணம் மாணவர்களுக்குத் தெரியாமலே வேறு பல சக்திகள் தோன்றிவிடுவதுதான். இப்படிப்பட்ட ஒரு குழு அமைக்கப்பட்டால் இப்படிப்பட்ட பிரச்சினைகள் தவிர்க்கப்படுமா என்று ஆராய்ந்துகொண்டிருக்கிறோம்.

அடுத்து, புதிய கல்லூரிகள் வேண்டுமென்ற கொள்கையை பலரும் குறிப்பிட்டிருக்கிறார்கள். நாம் இன்றைக்கு இருக்கிற கல்லூரிகளின் வசதி வாய்ப்புகளைப் பெருக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். பல கல்லூரிகளில் மாணவர்கள் தங்கிப்படிக்கிற விடுதி வசதி இல்லை. சிலவற்றில் ஆய்வுக்கூட வசதி இல்லை. சில கல்லூரிகளில் கட்டிடமே இல்லை. ஆகவே இருக்கிற கல்லூரிகளின் வசதி வாய்ப்புகளை நாம் முதன்மையாக ஏற்படுத்தித் தர வேண்டியவர்களாக இருக்கிறோம். என்றாலும் இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஒரு அரசினர் கல்லூரியையும், இரண்டு தனியார் கல்லூரியையும் ஏற்படுத்த நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. தனியார் துறையிலும், அரசினர் துறையிலும் இன்னும் 25 கல்லூரிகள் வேண்டுமென்று விண்ணப்பங்கள் இருக்கின்றன. அவற்றை ஆராய்ந்து பல்கலைக்கழகத்தையும் கலந்துகொண்டு தக்க முடிவு எடுக்க அரசு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் தனியார் கல்லூரிகளை எல்லாம் அரசே மேற்கொள்ள வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். தனியார் பள்ளிகளை எடுத்துக்கொள்வதிலேயே பல சிரமங்கள் இருக்கின்றன. தனியார் பள்ளி பாதுகாப்புச் சட்டம் என்பதாக நாம் கொண்டு வந்து நிறைவேற்றி, அது குடியரசுத் தலைவர் கையெழுத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. தனியார் பள்ளிகள் என்கிறபோது அரசாங்கம் ஒரு பக்கம்—மானேஜ்மெண்டார் ஒரு பக்கம் தான். தனியார் கல்லூரிகள் என்கிறபோது அரசாங்கம் ஒரு பக்கம், மானேஜ்மெண்டார் ஒரு பக்கம்—பல்கலைக் கழகம் ஒரு பக்கம் ஆக மும்முனை வரும். தனியார் பள்ளி பாதுகாப்புச் சட்டம் அமலுக்கு

வந்த பிறகு, அந்தச் சட்ட அடிப்படையில் தனியார் கல்லூரி
பாதுகாப்புச் சட்டம் ஒன்றைக் கொண்டுவர முடியுமா என்பதை
சம்பந்தப்பட்டவர்களோடு கலந்து பேசி முடிவு செய்யலாம்.

இன்னும் ஆண்கள் கல்லூரியில் பெண்களைச் சேர்ப்பதுபற்றி
சொன்னார்கள். சென்னை பல்கலைக் கழகத்தைப்பொறுத்
வரையில் பி.ஏ., பி.எஸ்.ஸி. போன்ற மேல்படிப்புகளில்
பெண்களையும் ஆண்கள் கல்லூரியில் சேர்த்துக்கொள்ள வசதி
இருக்கிறது. பி.யு.சி.-க்கு மட்டும்தான் பெண்களைச் சேர்க்
வசதியில்லை. மதுரை பல்கலைக் கழகத்தினர் ஒருசில கட்டுப்பா
களோடு அதற்கும் அங்கே அனுமதி தந்திருக்கிறார்கள். குறிப்பா
10 மைல் வட்டாரத்தில் பெண்கள் கல்லூரி இல்லையென்றா
குறைந்தது 25 மாணவிகளாவது சேர்ந்து படிப்பார்கள் என்றா
அந்தக் கல்லூரியில் 2 பெண்கள் ஆசிரியை தனியாக இருக்
வேண்டும், பெண்களுக்கு என்று தனி அறை இருக்கவேண்டும்
இதுபோன்ற விதிகளுக்குட்பட்டு அங்கே பி.யு.ஸி.-யிலும் ஆண்க
கல்லூரியில் பெண்களைச் சேர்த்துக்கொள்ளலாம் என்று ஏற்படுத்
யிருக்கிறார்கள்.

அதேபோன்ற விதிகளுக்குட்பட்டு இங்கும் அனுமதிக்
வேண்டும் என்பதை பல்கலைக்கழகத்திடம் நாம் வற்புறுத்
வருகிறோம். குறிப்பாக திண்டிவனம், விழுப்புரம், அரியலூ
விருத்தாசலம் போன்ற இடங்களில் எல்லாம் பெண்களுக்கென்
தனிக் கல்லூரிகள் இல்லை. அங்குள்ளவர்களது பெண்கள் மே
படிக்கவேண்டுமென்றால், பெண்கள் கல்லூரியைத்தேடி, அதிக
தொகை செலவழிக்கவேண்டியதாக இருக்கிறது. ஆகவே, சென்
பல்கலைக் கழகமும், மதுரை பல்கலைக் கழகம் விதித்திருப்ப
போன்ற கட்டுப்பாடுகளுடன் இதை அனுமதிக்கலாம் என்
வற்புறுத்தப்பட்டு வருகிறது.

இன்னும் கான்வெண்ட் பள்ளிகளைக் கட்டுப்படுத்த வேண்
மென்று சொன்னார்கள். இன்றையதினம் அந்தப் பள்ளிகளுக்
நாம் மானியம் அளிப்பது இல்லை. அவர்களிடத்தில் எந்தவிதமா
கண்டிரோலும் நமக்கு இல்லை. சென்டிரல் ஸ்கூலோடு இணைத்து
கொண்டு சிலர் நடத்துகிறார்கள், சிலர் போர்டோடு அனுமதிபெற்
நடத்துகிறார்கள். சிலர் பல்கலைக் கழகத்தின் அனுமதி பெற்
மெட்ரிகுலேஷன் ஸ்கூல் என்று நடத்துகிறார்கள். அவற்றில் நா





தலையிடவோ, கட்டுப்படுத்தவோ உரிமையில்லை. சிறுபான்மையினர் நடத்துகிற பள்ளி என்கிற முறையில் நாம் அதில் தலையிட அரசியல் சட்டமும் இடம் கொடுக்கவில்லை.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் லட்சுமிபுரம் கல்லூரியைப் பற்றிச் சொன்னார்கள். அது பரிதாபத்திற்குரிய ஒன்றுதான். அங்கே பல்வேறு தகராறுகள் ஏற்பட்டு, வகுப்பு சம்பந்தமான உள்ளூர் பிரச்சினைகள் எல்லாம் உண்டாகி சரிவர நடைபெறவில்லை. நாம் அது நல்லமுறையில் நடக்கவேண்டுமென்று கல்வி இயக்குநர்—மாவட்ட ஆட்சித் தலைவருடன் பேசி—அந்தக் கல்லூரிக்கு ஒரு முதல்வரை அனுப்ப இருந்தோம். அப்புறம் அங்கே இருந்தவர்கள் பழைய முதல்வரே இருக்கட்டும் என்றார்கள். அப்புறம் நாம் இவரை அனுப்பவில்லை. இரண்டு மூன்று நாளைக்கு முன்னால் மறுபடியும் அங்கே ஒரு சிக்கல் ஏற்பட்டு உள்ளது. இந்த நிலையில் அரசாங்கமே அந்தக் கல்லூரியை எடுத்துக்கொள்வதற்கு உரிமையில்லை. அவர்களே அரசாங்கத்திடம் ஒப்படைப்பார்களானால் பார்க்கலாம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இதில் உள்ள அதிகமான டைரக்டர்கள் அதை அரசாங்கமே எடுத்துக்கொள்ளவேண்டுமென்று மனு செய்திருக்கிறார்கள். பல்கலைக் கழகத்திற்கும் மனு கொடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றி பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்துக் கொள்ள முடியுமா? மேலும் ஐந்தாறு மாதங்களாக ஆசிரியர்களுக்குச் சம்பளமே கொடுக்கப்படவில்லை. அரசாங்கமே நேரிடையாகச் சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஒருசிலர் ஆதரிக்கிறார்கள் என்ற வகையில் சட்டப்படி அதனை அரசாங்கமே எடுத்துக்கொள்ள முடியுமா என்பதைப் பரிசீலிக்க வேண்டும். அங்கே ஒரு சுமுகமான சூழ்நிலையை முதலில் உருவாக்கியாக வேண்டும். அதற்காகத்தான் உயர்கல்வி இயக்குநர், அங்குள்ள மாவட்ட ஆட்சித்தலைவரை வைத்துக்கொண்டு கல்லூரி நிர்வாகத்தினருடன் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அங்குள்ள ஆசிரியர்களுக்கு அரசாங்கமே நேரிடையாகச் சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்துவிட்டோம். (திரு. ஆர். பொன்னப்ப நாடார் : நன்றி) நல்ல ஒரு சூழ்நிலை அங்கே ஏற்பட அங்கத்தினர்களும் உதவி செய்தால் நன்றாக இருக்கும்.

[1974 மார்ச் 20]

**திரு. வ. சுப்பிரமணியம்:** கான்வென்ட் பள்ளிகளில் இப்போது பீஸ், ஸ்பெஷல் பீஸ் என்று அதிகமாக வாங்குகிறார்களே, அரசாங்கமே அவற்றுக்கு ஒரு கிராண்டு கொடுத்து, அதன் மூலம் அதை ஒரு கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவருவார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** கட்டுப்பாடு செய்வதற்கு வழிவகை ஏற்படவில்லை. பெரும்பாலான பள்ளிகள் ஆங்கிலோ இந்திய சமூகத்தினரது பள்ளியவாகத்தான் இருக்கின்றன. அந்த உரிமை அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** பாத்திமா மெட்ரிகுலேஷன் பள்ளியில் வருஷாவருஷம் சில பேர்களை வேலையைவிட்டு நீக்குகிறார்களே. சில பேர்களை புதிதாகப் போடுகிறார்களே, இதையாவது பல்கலைக்கழகத்திடம் அனுமதி பெற்று இருப்பதால் அவர்களைக் கொண்டு கட்டுப்படுத்த முடியாதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அதை வேண்டுமானால் பல்கலைக் கழக சிண்டிகேட் மூலமாக கட்டுப்பாடு செய்து, அப்படி வேலையைவிட்டு நீக்காது பாதுகாப்பு அளிக்க முயற்சிக்கலாம்.

அடுத்து குமரிமாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் தனியாக ஒரு முதன்மை கல்வி அதிகாரி போடவேண்டும் என்று சொன்னார்கள். பெரு மாவட்டங்களுக்கு தனியாகப் போட்டிருக்கிறோம். சிறு மாவட்டமாக இருந்தால் அதை மற்றதுடன் இணைத்திருந்தோம். அதுவும் இந்த ஆண்டு முதல் குமரி மாவட்டத்திற்கு தனி முதன்மை கல்வி அதிகாரி போடப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (திரு. ஆர். பொன்னப்ப நாடார்: மிக்க நன்றி).

அதுபோல தர்மபுரி மாவட்டத்திற்கும் கேட்டிருக்கிறார்கள். அது அடுத்த ஆண்டு பரிசீலிக்கப்படும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் நூலகங்களைப் பொறுத்தவரையில் குறிப்பிட்டுக் கூறினார்கள். நூலகங்களில் இருக்கின்றவர்கள் சம்பள விகிதத்தை அரசாங்கத்தில் கொடுக்கிற அளவுக்கு உயர்த்த பரிசீலனை செய்து முடிவு எடுக்கப்படும் என்று தெரிவி[illegible]



[1974 மார்ச் 20] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இன்னும் சிங்காநல்லூர் பள்ளியைப்பற்றி திரு. சுப்பிரமணியம் குறிப்பிட்டார்கள். நகராட்சி மன்றங்கள் நடத்துகிற பள்ளிகள் சரிவர நடைபெறவில்லை என்றால் அவற்றை சிக் பள்ளிகள் என்று வைத்து—ஆண்டுக்கு இவ்வளவு சிக் பள்ளிகளை எடுத்துக் கொள்வது என்கிற முறையை வைத்திருக்கிறோம். சென்ற ஆண்டு உயர்நிலைப் பள்ளிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் 10 பள்ளிகள் எடுத்துக்கொள்ள இருக்கிறோம். நகராட்சி மன்றங்கள் கிட்டத்தட்ட 120 பள்ளிகள் நடத்தி வருகின்றன. இந்த ஆண்டு நாம் எடுத்துக்கொள்வதாக இருக்கிற 10 பள்ளிகளில்—சிக் பள்ளி லிஸ்டில் சிங்காநல்லூர் பள்ளி—வரிசையில் ஒன்றாகவே கூட வரலாம். பத்தாவது—கடைசியாக இருந்தாலும்—எடுத்துக் கொண்டுவிடுவோம். ஆனால் சிங்காநல்லூர் பள்ளி லிஸ்டில் எங்கே வருகிறது என்பதை ஆராய்ந்து பார்த்துத் தான் சொல்ல வேண்டும்.

(இரவு 7.00)

பதவிகளை நிறைவு செய்வதில் தாமதம் ஏற்படுவதைப் பற்றி திரு. கோபால் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாவட்டக் கல்வி அதிகாரி, முதன்மைக் கல்வி அதிகாரி ஆகியோர் பதவிகள் இப்பொழுதே நிறைவு செய்யப்பட்டு விட்டன. இடையிலே நிரப்பப்படாமல் இருந்ததற்கான காரணம் நிர்வாக இடைஞ்சல்கள்தானே தவிர, அரசாங்கத் தலையீடோ, ஆளும் கட்சியின் தலையீடோ அல்ல. அவர்களின் தலையீடு இருப்பதற்கு நியாயமில்லை. காரணம், அப்பதவிகள் சீனியாரிட்டியின் அடிப்படையில் நிரப்பப்படுகின்றன. ஆகவே, அதிலே எந்தத் தலையீட்டிற்கும் இடமே இல்லை. இப்பொழுது எல்லா பதவிகளும் நிரப்பப்பட்டு விட்டன என்று நான் குறிப்பிட்டு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் வீராசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள், இந்த வர்த்தகத் துறையைப் பற்றி விளக்கக் குறிப்பில் ஒன்றுமே குறிப்பிடப்படவில்லையென்று. அது இந்தக் குறிப்பேட்டிலே சேர்க்கப்படவில்லை. சென்ற ஆண்டே அவர் சேர்க்கவில்லையென்று குறிப்பிட்டு, சேர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். சேர்க்க வேண்டுமென்றுதான் எண்ணினேன். ஆனால், மற்ற கல்விகள்பற்றியெல்லாம் போடப்பட்டதால், இது சேர்க்கப்படவில்லை. அடுத்த ஆண்டு வரும்போது அவருடைய விருப்பப்படி, இத்துறை பற்றிய

விளக்கக் குறிப்பு ஓரிரு பக்கமாவது சேர்க்கப்படும். இரு பக்கமாவது இதற்காக ஒதுக்கப்பட்டு, இந்தத் துறைபற்றிய குறிப்பு சேர்த்து, விளக்கப் புத்தகம் போடப்படும் என்று கூற விரும்புகிறேன்.

தொழில் நுட்பக் கல்வி இயக்ககம் இந்தத் துறையை எடுத்துக் கொண்ட பிறகு, பல்வேறு நிலைகளிலே சீர்திருத்தம் செய்யப்பட்டு வருகிறது. அகராதிகள், மற்றவைகள் எல்லாம் கொண்டு வருவதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. தேர்வு முடிவுகளை விரைவாக வெளியிட அரசாங்கம் முயற்சி செய்யும் என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பி பிரிவு, ஏ பிரிவு பட்டதாரி ஆசிரியர்களை ஒன்றாக இணைக்க வேண்டுமென்று பட்டதாரி ஆசிரியர்கள் கூறினார்கள். இரண்டையும் இணைக்க வேண்டுமென்ற கருத்தை நாங்கள் ஏற்கனவே கூறினோம். இரண்டு பிரிவினரும் உட்கார்ந்து பேசும் போது, ஒத்துவருகிற சூழ்நிலை வரவில்லை. ஒருவர் ஒன்றுக்கு ஒத்துக்கொண்டால், மற்றவர் அதை மறுக்கிறார். மற்றவர் ஒன்றுக்கு ஒத்துக்கொண்டால், இவர் அதை மறுக்கிறார். யாராவது விட்டுக் கொடுத்தால்தான் ஒத்துவரமுடியும். இரண்டையும் இணைக்கும்போது பாதகங்கள் ஏற்படும். சலுகைகள் முழுவதும் வேண்டும், பாதகங்களும் ஏற்படக் கூடாது, இணைப்பும் வேண்டுமென்று சொன்னால், அது முடியாத நிலைமைதான் வரும்.

முழுச் சலுகைகளைப் பெற வேண்டுமென்றால், சில பாதகங்கள் ஏற்படத்தான் செய்யும். இந் நிலையில் கல்வித் துறை செயலாளர் அவர்களும் இயக்குநர் அவர்களும் அவர்களோடு பேசிப் பார்த்து, பேசிப் பார்த்து, அவர்கள் ஒத்துவரக்கூடிய நிலைமைகள் வரவில்லை. ஆகவே, மற்ற வகைகளிலே சீர்திருத்திக் கொள்ளும்படி கேட்டிருக்கிறேன்.

பி பிரிவையும் ஏ பிரிவையும் தனித் தனியாக வைத்து, இரண்டு பிரிவினருக்கும் கிடைக்கின்ற உரிமைகள் பாதிக்கப்படாத அளவுக்கு ஒரு முறையைக் கொண்டு வந்து, சேருகின்றவர்களைப் புதுப் பிரிவின்கீழ் கொண்டு வந்து, நாளடைவிலே ஒரே பிரிவின் கீழ் வரக்கூடிய சூழ்நிலையை ஆராயும்படியாகக் கல்வித் துறையைக் கேட்டிருக்கிறேன். கல்வித் துறை ஆராயும்.



இப்படி வேறு பலப் பிரச்னைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் தனித் தனியாக எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். தனித் தனியாக எடுத்துச் சொன்ன கருத்துக்களை எல்லாம் இந்தத் துறையினர் ஆராய்ந்து அதுபற்றி தக்க முடிவை எடுப்பார்கள் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** ஏ பிரிவு, பி பிரிவு பட்டதாரி ஆசிரியர்களை ஒன்றாக இணைக்கும் முயற்சி துறையினரால் ஆராய்ச்சி செய்யப்பட்டு முடிவு அறிவிக்கப்படுகிற நேரத்தில், அந்த முடிவை எடுப்பதற்குமுன், அந்த இரு பிரிவினரையும் கலந்து முடிவு எடுக்க அரசு உத்தரவாதம் கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இதைக் கூடுமான வரையில் செய்யலாம். கடைசியில் அதிலும் ஒத்துவராவிட்டால், தீர்ப்பைத்தான் வழங்க வேண்டும். அந்த வகையில் செய்து பார்க்கலாம். ஏதாவது ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். அந்த வகையிலே இரண்டு பிரிவினருக்கும் பாதகம் வராத அளவுக்கு, நிர்வாகத்தில் பல சங்கடங்களிருந்தாலும், அவர்களைக் காப்பாற்ற விதிமுறையைக் காணவேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அதைப்பற்றி அவர்களோடு பேசலாம். பேசியும் முடிவு வராவிட்டால் தீர்ப்பு வழங்கவேண்டிய சூழ்நிலைதான் ஏற்படும்.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, கமர்ஷியல் எடுகேஷனைப் பற்றி சிறப்பாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், மிக்க மகிழ்ச்சி.

பள்ளிக் கல்வி இயக்குநரைப் பற்றி சொல்கின்றபோது, 5-வது வகுப்பு வரை உள்ள பள்ளிப் படிப்புக்கு ஒரு ஜாயின்ட் டைரக்டரை நியமித்து, அதை அவர் பார்த்துக்கொள்ளக்கூடிய ஏற்பாடுகள் செய்யப்படும் என்று சொன்னார்கள்.

அதேபோல், கமர்ஷியல் எடுகேஷனுக்காகத் தனியாக டைரக்டர் இல்லாவிட்டாலும் ஒரு ஜாயின்ட் டைரக்டரையாவது நியமிக்க, நியமிக்கப்படுகின்ற அவர் பி.இ. பட்டதாரியாக இல்லாமல், கமர்ஷியல் சப்ஜக்ட்ஸ் படித்தவராக, விவரம் தெரிந்தவராக இருக்கக்கூடிய முறையில், அதை நம்முடைய அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, கொழுக்கட்டை வேகவேண்டுமென்பதுதான் முக்கியமே தவிர, எப்படி வேகவேண்டும், எந்தச் சட்டியிலே வேகவேண்டும் என்பதல்ல. இந்தத் துறை செம்மையாக இருக்கவேண்டும் என்பதற்காக அவர்கள் சொல்லியபடி ஜாயிண்ட் டைரக்டர் இருக்க வேண்டும், தனி டைரக்டர் என்று இல்லாமல் என்றால், எப்படிச் செய்தால் சிறப்பாக இருக்குமோ அதைச் செய்ய அரசாங்கம் முயலும் என்று அறிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** காயிதே மில்லத் நினைவு கல்விக்கூடம் பற்றி வேண்டுகோள் விடுத்தேன். அது அனுதாபத்துடன் கவனிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, முதலிலே தெரிவித்தபடி, 25 கல்லூரிகளிலே அதுவும் இருக்கிறது. பல்கலைக் கழகமும், அரசும் ஆராய்ந்து முடிவெடுக்கின்ற நேரத்தில் அது கவனிக்கப்படும். 25 கல்லூரிகளிலே அரசாங்கச் சார்பிலே ஒரு கல்லூரியும், தனியார் சார்பிலே இரண்டு கல்லூரிகளையும் நிறுவத்தான் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. எல்லாம் ஆராய்ந்துதான் முடிவு எடுக்கப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி:** சார், மதுரைப் பல்கலைக் கழகத்திலே லெனினிஸத்தைப் பாடமாக வைத்திருக்கிறார்கள். சர்க்கார் அடிக்கடி சொல்கிற கொள்கைகளுக்கு ஏற்ப, மற்ற பல்கலைக் கழகங்களிலும் லெனினிஸத்தைப் பாடமாக வைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன். இதனால் சர்க்காருக்குச் செலவும் இல்லை. சர்க்கார், அடிக்கடி தன்னை, சுத்தமான கம்யூனிஸ்ட் என்று அறிவித்தும் இருக்கிறது. மற்றவர்களும் லெனினிஸத்தைத் தெரிந்து கொள்வதற்காக, மற்ற காலேஜ்களிலும் அதைப் படிப்பதற்கான வாய்ப்புகளை அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அரசாங்கம் ஏற்பாடு செய்ய இயலாது. பல்கலைக் கழகமே முடிவு செய்ய வேண்டிய ஒன்று அது. மதுரைப் பல்கலைக் கழகம் கூடத் தாம் சொல்லி ஏற்பாடு செய்யவில்லை. மதுரைப் பல்கலைக் கழ



ஆட்சிக் குழுவினர் அந்த முடிவை எடுத்திருக்கிறார்கள். சென்னைப் பல்கலைக் கழகமும் ஆராய்ந்து அத்தகைய முடிவை எடுக்கலாம். அரசாங்கம் ஆணையிடவோ, ஆதிக்கம் செலுத்தவோ முடியாது. சென்னைப் பல்கலைக் கழகம் அதைப்பற்றி ஆராயலாம்.

**திரு. எம். சுரேந்திரன்:** மதுரைப் பல்கலைக் கழகத்திலே லெனினிஸத்தைப் பாடமாக வைத்திருக்கிறார்களா, மார்க்ஸீய சித்தாந்தத்தைப் பாடமாக வைத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு உறுப்பினர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னபடி, மார்க்ஸீய சித்தாந்தத்தைத்தான் வைத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அது பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** சட்டக் கல்லூரியைப் பற்றி விளக்கம் பெறலாமா?

THIRU B. VENKATASWAMY: May I know from the Hon. Minister for Education whether this Government will introduce this job-oriented education at least from this year in Hosur?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கல்வி வேண்டுமென்கிற முறையிலேதான் சொல்கிறார்கள். அதையெல்லாம் நடைமுறைப்படுத்துகிற போது தான் பெரும் செலவுக்கு ஆளாக வேண்டியிருக்கிறது. அதிலே பல்வேறு வகைகளை ஏற்படுத்தி இருக்கிறோம். குறிப்பாக, 8-வது படித்து முடித்தவர்கள், ஐ.டி.ஐ. படித்துத் தொழில் நுட்ப அறிவு பெறலாம் என்று வைத்திருக்கிறோம். 10-வது வகுப்பு வரை படித்தவர்கள் பாலிடெக்னிக் படிக்க வரலாம் என்று வைத்திருக்கிறோம். பாலிடெக்னிக் படித்துவிட்டு பிறகு, கல்லூரியிலே முதலாண்டு, இரண்டாம் ஆண்டு, மூன்றாம் ஆண்டு படிக்கலாம் என்று வைத்திருக்கிறோம். பாலிடெக்னிக் படித்துவிட்டு, இன்ஜினீயரிங் கல்லூரிகளுக்குப் போகலாம், கலைக் கல்லூரிக்கும் போகலாம். 10-வது படித்தவர்கள் பாலிடெக்னிக்குகளுக்குப் போவார்களானால் தொழில் நுட்ப அறிவு பெற்று பல்வேறு வகைகளில் முன்னேற வாய்ப்பிருக்கிறது. பாலிடெக்னிக்குகளில்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 மார்ச் 20

சேர, 200-க்கு 110 எடுக்கவேண்டுமென்று இருந்ததை, 100-ஆக ஆக்கி, அதை 90 ஆக்கியும் பல பாலிடெக்னிக்குகளில் இடங்கள் காலியாக இருக்கின்ற அளவுக்கு மாணவர்கள் சேர மறுக்கிறார்கள்.

டைபர்கேட்டட் கோர்ஸ் என்று உயர்நிலைப்பள்ளிகளில், 300-க்கு மேற்பட்ட உயர்நிலைப்பள்ளிகளில் நாம் ஏற்பாடு செய்தோம். அந்த வகுப்புகளில் விவசாயம் மற்றும் தொழில் சம்பந்தமான பாடங்களை விருப்பப்பாடமாக வைக்க ஏற்பாடு செய்தோம். 300-க்கு மேற்பட்ட பள்ளிகளில் இதனை ஏற்பாடு செய்தோம். ஆனால், அவற்றிலே படிக்கின்றவர்கள் 7, 6, 5 என்ற அளவில்தான் இருக்கிறது. அவர்களுக்காக தனியாக ஆசிரியர்களைக் கூட வைத்திருக்கிறோம். இதனால்தான் டைவர்கேட்டட் கோர்ஸைக்கூட மற்ற பள்ளிகளில் விரிவுபடுத்த முடியாமல் அப்படியே இருக்கிறது. இதைப்பற்றி சொன்னபிறகு, வேலை வாய்ப்பு எங்கே இருக்கிறது என்று கேள்விகேட்கிற அளவு இருக்கிறது. இது தேசியப் பிரச்னையாக இருக்கிற காரணத்தால் அந்தக் கருத்தை வற்புறுத்துகிறோம். அதை எப்படி நிறை வேற்றுவது என்ற யோசனையின் பேரில்தான் நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் பொன்னப்ப நாடார் அவர்கள் சட்டக் கல்லூரிபற்றி கேட்டார்கள். சென்னையில் உள்ள சட்டக் கல்லூரியில் முன்பு 1,000 பேர் படித்தார்கள். இப்பொழுது, மாலை நேரக் கல்லூரியில் படிக்கின்றவர்களையும் சேர்த்து 2,000-க்கும் மேற்பட்டவர்கள் படிக்கிறார்கள். இதனை இரண்டாக ஆக்கி மதுரையிலே வைக்கலாம் என்றால், செலவு அதிகமாக ஆகும். இங்கேயுள்ள மாணவர்களுடைய எண்ணிக்கையைக் குறைத்து அங்கே கொண்டுபோய் பாதிப் பேரை வைத்தால், மாணவர்களுக்குக் கஷ்டங்கள் ஏற்படும். அங்கும் கட்டிடங்கள் வேண்டும், இடம் வேண்டும். கூடுதலான மாணவர்களை மதுரையில் சேர்க்கலாம் என்றால், அவர்கள் சொல்கின்ற மாதிரி வேலையில்லா திண்டாட்டத்தை வளர்க்கின்ற வகையில், வழக்கறிஞர்களை அதிகமாக உருவாக்குகின்ற நிலை வரும். ஆகவே, அந்த செயற்குறிப்பு இருந்தது. அது 'டெஃபர்ட்' என்ற நிலையில் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது. சூழ்நிலை வரும்போது ஆராயப் படும்.



1974 மார்ச் 20] டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மற்றைய கல்லூரிகளைப் பொறுத்தவரையிலும் லேபரட்டரி போன்றவை வைக்க வேண்டிய நிலைமைகள் எல்லாம் ஏற்படும் அதற்காக அதிகமாகச் செலவாகக் கூடிய பிரச்னையெல்லாம் வருகிறது. ஆனால் சட்டக் கல்லூரியிலே அப்படிப்பட்ட பிரச்னைகள் எல்லாம் வராது. இருக்கின்ற பிரச்னை இது ஒன்றுதான்—திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆந்திராவில் எத்தனை கல்லூரிகள் இருக்கின்றன, மகாராட்டிரத்திலே எத்தனை கல்லூரிகள் இருக்கின்றன என்றெல்லாம் சொன்னார்கள், ஆனால் அங்கே மொத்தம் எத்தனை மாணவர்கள் படிக்கிறார்கள் என்று தெரியவில்லை—அவர்களுக்கு வேலைவாய்ப்புப் பிரச்னை பற்றியும் கவனிக்க வேண்டும். ஆகவே அதற்கான செயற்குறிப்பு அறவே இல்லை என்றும் சொல்லிவிட முடியாது, சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டால் அதற்கான அவசியம் ஏற்படும்பொழுது அந்த நிலைமைகள் எல்லாம் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கையின்மீது பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். சொல்லப்பட்ட கருத்துக்கள், இது பரந்து விரிந்து கிடக்கின்ற துறையாக இருப்பதால் ஆங்காங்கே இருக்கின்ற சிலபல குறைபாடுகளைப் பற்றி இருக்கலாம், அவற்றை யெல்லாம் போக்குவதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரின் ஒத்துழைப்பும் தேவை, அந்த வகையிலே அவர்கள் எல்லாம் எடுத்துத் தெரிவித்த கருத்துக்கள் எல்லாம் மிக மிகப் பயன் தரும்.

இருட்டைச் சுட்டிக்காட்டுவதைவிட, மெழுகுவர்த்தியை ஏற்றி ஒளியை ஏற்படுத்த வேண்டுமென்று கன்ஃபூஷியஸ் தியரி கூறுகிறது. ஆகவே இருட்டைப் போக்குவதற்காக, அகற்றுவதற்காக மெழுகுவர்த்தியை ஏற்றி ஒளியைப் பெறுகின்ற அளவிலே மாண்புமிகு அங்கத்தினர்களின் கருத்துக்களின் அடிப்படையில் இந்தத் துறை மேலும் மேலும் செம்மையுறும் என்று நம்புகிறேன்.

ஒரு தனி ஆற்றலிலே துறை முழுவதையும் செம்மைப்படுத்திவிட முடியாது, ஒரு தனி அமைச்சரின் ஆற்றலிலே கல்வித் துறை முழுமையையும் சீர்படுத்திவிட முடியாது, எல்லோருடைய ஒத்துழைப்பைப் பெற்றுத்தான் அது நடக்கும் . . . . .

**திரு. கே. கந்தசாமி :** தலைவர் அவர்களே. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் முதலில் முடிக்கட்டும் அதற்குப் பிறகு உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். அமருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அந்த வகையில் எல்லோருக்கும் நான் அப்படிப்பட்ட வேண்டுகோளை விடுத்து இந்தத் துறையின் செயலாளர், இயக்குநர்கள், அதிகாரிகள் அலுவலர்கள் ஆகிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்து இந்தத் துறையை மென்மேலும் செம்மைப்படுத்த, சீர்படுத்த ஒத்துழைப்பை நல்கவேண்டுமென்று கேட்டு மாண்புமிகு பேரவை உறுப்பினர் பெருமக்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு உரையை முடிக்கிறேன்.

**திரு. கே. கந்தசாமி :** தலைவர் அவர்களே, ஜாப் ஓரியண்டட் எஜுகேஷன் கொண்டுவருவதிலே சிக்கல்கள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைக் கொண்டு வருவதைத் தவிர இப்பொழுதுள்ள சூழ்நிலையில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு வேறு வழியே இல்லை.

மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக நம்முடைய மாநிலத்திலே டாக்டர் கலைஞருடைய அரசு பலவிதமான நல் திட்டங்களையும் புரட்சிகரமான மாறுதல்களையும் கொண்டு வருகிறது, அதைப் போன்றே கல்வித் துறையிலேயும் ஒரு நல்ல மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய முறையிலே ஒரு எக்ஸ்பர்ட் கமிட்டி நிபுணர் குழுவை அமைத்து அதைச் செய்வதற்கான சாத்திய கூறுகளை ஆராய்வதற்காவது ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அந்த நோக்கத்தின் அடிப்படையிலேதான் கோத்தாரி கமிஷனின் அறிக்கையிலே சொல்லப்பட்டு காம்ப்ரஹென்சிவ் ஸ்கூல் எஜுகேஷன் கொண்டுவருவதைப்பற்றி ஆராயப்பட்டு தொழில் நுட்பக் கல்வியை வருகிற ஆண்டிலே 10 உயர்நிலைப் பள்ளிகளில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது, அது வெற்றிகரமாக அமைந்தால் மற்றைய பள்ளிகளுக்கும் விரிவுபடுத்துவது பற்றி யோசிக்கலாம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு.

திருவாளர்கள் எம். ஏ. லத்தீப், கே. டி. கே. தங்கமணி, பி. வெங்கடசாமி, க. உரோ. எட்மண்ட், சௌடி எஸ். சுந்தர பாரதி, எஸ். கோதண்டராமையா, திரு. ஏ. சுவாமிதாஸ் ஆகிய இவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

**திரு. எம். சுரேந்திரன்** அவர்களுடைய வெட்டுத்தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி : "நிதிக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,10,11,83,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவுற்று நாளைக் காலை 9 மணிஅளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை இரவு 7.15 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

## 8. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

190. Notification issued with G.O. Ms. No. 4, Rural Development and Local Administration, dated the 2nd January 1974 in regard to the division of Pattukottai Municipality into twenty-four wards and reservation of one seat for Scheduled Castes and one seat for women in the Pattukottai Municipal Council. [Laid on the table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

191. Notification issued with G.O. Ms. No. 1279, Rural Development and Local Administration, dated the 29th June 1973 in regard to approval of the list of all the parks and play fields in the area within the jurisdiction of Devakottai Municipality. [Laid on the table of the House under section 14 (3) of the Tamil Nadu Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Tamil Nadu Act 26 of 1959).]

192. Notification issued with Roc. No. 120329/73–E4, dated the 10th December 1973, in regard to extension of certain provisions relating to Building Regulation under the District Municipalities Act, 1920, in the entire area of Eriodu Town Panchayat in Madurai district [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

*B. Reports Notifications and Other Papers.*

† 85. Note on Agriculture Demands 1974–75 (English and Tamil).

† 86. Policy Note on Demand No. 22—Animal Husbandry 1974–75 (English and Tamil).

† 87. Progress of Education in Tamil Nadu 1974–75 (English and Tamil).

† 88. Performance Budget on Agriculture, 1974–75.

---

† Despatched to Members on 18th March 1974.



இணைப்பு- I.

[33-ம் பக்கத்தில் 528-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை ஆகியவற்றில் சீசன் டிக்கெட்டுகள் வழங்கப்படுவது குறித்த விவரங்கள்.

சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகம்:

சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகம் மாணவர்களுக்கு ட்டும் மாத அடிப்படையில் சீசன் டிக்கெட்டுகள் கொடுக்கிறது. இந்தப் பயனை சுமார் 40 மாணவர்கள் துய்த்து வருகின்றனர். ஒரு முறை சென்று திரும்பி வருவதற்கு கட்டணத்தில் 1-1/3 ங்கை கழகம் வசூலிக்கிறது. சீசன் டிக்கெட் வருவாயாக மாதம் ன்றுக்கு தோராயமாக ரூ. 750 வசூலிக்கப்படுகிறது.

சேரன் போக்குவரத்துக் கழகம்:

சேரன் போக்குவரத்துக் கழகம் கீழ்க்கண்ட சீசன் டிக்கெட்டுகளை வழங்குகிறது:—

வால்பாறை மலைப்பகுதி.

மாணவர்கள் (12 வயதும் அதற்கு மேலும்) பெரியவர்களுக்கான ட்டணத்தில் ½ கட்டண வீதப்படி சீசன் டிக்கெட் 12 வயதுக் ட்பட்ட மாணவர்கள் பெரியவர்களுக்கான கட்டணத்தில் 1/3 ட்டணம்.

வெளியூர் பேருந்துப்பணி

உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு 12 கிலோமீட்டர் வரை தி கட்டணம். கல்லூரி மாணவர்களுக்கு 24 கிலோமீட்டர் ரை பாதி கட்டணம். கழகத்தில் பணி புரிபவர்களுக்கு பாதி ட்டணம்.

பல்லவன் போக்குவரத்துக் கழகம்.

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்த வரையில், வகை மாத டிக்கெட்டுகள் (சலுகை சீசன் டிக்கெட்டுகள்) ப்படுகின்றன. ஒன்று மாணவர்களுக்கும் மற்றொன்று போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம்

செய்யும் பயணிகளுக்கும் வழங்கப்படுகின்றன. முன்னது சென்னை மாநகரப் பேருந்துப் பயணிகளுக்கு மட்டும் செல்திறனுடையதாகும்.. பின்னர் சொல்லப்பட்டது மாநகரப் பணிகளிலும் நகரப் பணிகளிலும் செல்திறனுடையதாகும்.

மாணவர்களுக்கான மாதாந்திர சீசன் டிக்கெட்டுகள் இரு வேறு வீதங்களில் வழங்கப்படுகின்றன. அவை மாதம் ஒன்றுக்கு ரூ. 10, ரூ. 15 ஆகும். ஒருவர் ஓரிடத்திற்குச் செல்ல இரண்டு பேருந்துகளில் பயணம் செய்ய வேண்டியிருந்தால் அல்லது பேருந்து புறப்படும் இடத்திற்கும் சென்றடையும் இடத்திற்கு மிடையே இரு வழித்தடங்களில் செல்ல வேண்டியிருந்தால் ரூ. 15 மதிப்புள்ள சீசன் டிக்கெட்டும், இடையில் பயணத்தை நிறுத்தாமல் ஒரே பேருந்தில் பயணம் செய்வதற்கு ரூ. 10 மதிப்புள்ள சீசன் டிக்கெட்டும் வழங்கப்படுகின்றன.

பயணம் செய்பவர்களுக்கு ஏதாவது ஒரு இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்ல மாத சீசன் டிக்கெட்டுகள் வழங்கப்படுகின்றன. ஆனால், அவ்வாறு ஒரு முறை செல்வதற்கான கட்டணம் 20 காசுக்குக் குறைவானதாக இருக்கக்கூடாது. இரண்டு முனைகளையும் இணைக்கும் மாநகர, நகரப் பேருந்துப் பணிகள் அனைத்திலும் இந்த டிக்கெட்டுகள் செல்திறன் உடையவையாகும். வழங்கப்பட்ட நாளிலிருந்து ஒரு திங்களுக்கு 40 பயணக் கட்டண வீதத்தில் 60 முறை தொடர்ந்து பயணம் செய்ய இந்த டிக்கெட்டுகள் செல்திறனுடையவையாகும்.

**பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம்:**

பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம் கீழ்க்கண்ட சீசன் டிக்கெட்டுகளை வழங்குகிறது:—

மாணவர்களுக்கும், அரசுப் பணியாளர்களுக்கும்—கட்டணத்தில் 1/3 பகுதிக் கட்டணம்.

கழகத்தில் பணி புரிபவர்களுக்கு—பாதி கட்டணம்.

மேற்படி சீசன் டிக்கெட்டுகள் மாநகரப் பேருந்துப் பணிகளுக்கு மட்டும் வழங்கப்படுகின்றன.

**அண்ணா போக்குவரத்துக் கழகம்:**

**எந்தவித சீசன் டிக்கெட்டுகளும் ...**



**தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை:**

சென்னை, திருச்சி, சேலம் ஆகிய மூன்று வட்டாரங்கள் எதிலும் சீசன் டிக்கெட்டுகள் எதுவும் வழங்கப்படுவதில்லை. எனினும், கன்னியாகுமரி வட்டாரத்தில், அதன் கிளையால் நடத்தப்படும் மாவட்ட, புறநகர், நகரப் பேருந்துப் பணிகளில், அரசு ஏற்பு பெற்ற அல்லது மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்கள் பயணம் செய்வதற்காக அவர்களுக்குச் சலுகைக் கட்டண டிக்கெட்டுகள் வழங்கப்படுகின்றன. இந்தச் சலுகைக் கட்டண டிக்கெட்டுகள், திருநெல்வேலி மாவட்டத்தின் எல்லையோரக் கிராமங்களில் வசிப்பவர்களும் ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு ஏற்பு பெற்ற அல்லது அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் படிக்கும் மாணவர்களுக்கும் வழங்கப்படுகின்றன. அனுமதிக்கப்படும் சலுகைக் கட்டணம் சாதாரண கட்டணத்தில் பாதியாகும்.

The details of the issue of season tickets by the Transport Corporations and the Tamil Nadu State Transport Department.

*Cholan Roadways Corporation.*—Cholan Roadways Corporation issues Season Tickets to students only on a monthly basis. About 40 students are availing this benefit. The Corporation collects 1-1/3rd of the fare for one 'to and fro' journey. Approximately Rs. 750 per mensem is collected as season pass revenue.

*Cheran Transport Corporation.*—The Cheran Transport Corporation issues the following season passes :—

*In Valparai Ghat Section*—

Students (for 12 years and above)—Season pass at ½ of the adult fare.

Students (below 12 years)—1/3 adult fare.

*In Mofussil Service*—

High School students up to 12 k.m.—half of the actual fare. College Students up to 24 k.m.—half of the actual fare.

Employees of the Corporation—half of the actual fare.

*Pallavan Transport Corporation.*

As far as the Pallavan Transport Corporation is concerned, two types of monthly (concessional-season) tickets are issued, one to students and another to commuters for travel in Pallavan Transport Corporation buses. The former is valid only in city services and the latter is valid both in City and Town services.

The students monthly tickets are issued at two different rates of Rs. 10 and Rs. 15 per month. If one has to travel by two buses or routes between origin and destination one way, a season ticket for Rs. 15 is issued and for travel by a single bus route without break of journey the ticket is priced at Rs. 10.

The monthly season tickets are sold to commuters for travel between any point to any other point provided the single journey fare is not less than 20 paise. These tickets are valid in all the city and town services connecting both the points without break of journey at 40 fares for 60 journeys for a month reckoned from the date of issue.

*Pandiyan Roadways Corporation.*

The Pandian Roadways Corporation issues the following season tickets :—

For students and Government employes—one-third of the actual fare.

For the employees of the Corporation—half of the actual fare. The above season tickets are issued only in city buses.

*Anna Transport Corporation.*

No season tickets are issued for any category.

*Tamil Nadu State Transport Department.*

No season tickets are issued in any of the three regions, namely Madras Region, Tiruchy Region and Salem Region. However, in Kanyakumari region, concession tickets are issued to students of educational institutions which are recognised or aided by Government to travel in the District, suburban and town services operated by that Branch. These concession tickets are also issued to the students who reside in the border villages of Tirunelveli District adjoining the Kanyakumari District but studying in the institutions in the Kanyakumari District which are recognised or aided by Government. The concession allowed is 50 per cent of the normal fare.



இணைப்பு II

[56-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

# தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சி

**மானியக் கோரிக்கை 17—கல்வி.**

*(1974–75 வரவு-செலவு மதிப்பீடு).*

## I. தோற்றுவாய்.

கல்விக்காக 1974–75ஆம் ஆண்டில் ரூ 110 கோடி நிதி துக்கம் செய்யப்பட்டுள்ளது. இத் தொகையை, 1956–57-ல் ல்விக்காக செலவிடப்பட்ட ரூ 11 கோடியுடன் ர்தூக்கிப் பார்த்தால், கல்வி வளர்ச்சியில் தமிழ் நாடு அரசு ந்த அளவுக்கு ஆர்வங்காட்டி ஆக்கம் கண்டு வருகிறது ன்பதைத் தெள்ளிதின் உணரலாம். வரவு-செலவுத் திட் த்தில் மற்றெல்லாத் துறைகளைக் காட்டிலும் கல்வித் றைக்கே அதிகத் தொகை அளிக்கப்பட்டுள்ளது.

2. கல்விக்கான செலவு தொடர்ந்து உயர்ந்து கொண்டே ருகிறது. 1973–74ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத் தயும், 1974–75ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தையும்

ஒப்பிட்டு, '277. கல்வி' என்னும் தலைப்பின்கீழ் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்க விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| (1) | 1973–74 வரவு-செலவு மதிப்பீடு. திட்டத்தின் கீழ் வராத செலவினம். (2) | 1973–74 திட்டச் செலவுகள். (3) | 1973–74 மொத்தம். (4) | 1974–75 வரவு-செலவு மதிப்பீடு. திட்டத்தின் கீழ் வராத செலவினம். (5) | 1974–75 திட்டச் செலவுகள். (6) | 1974–75 மொத்தம். (7) |
|---|---|---|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | | | |
| 1. தொடக்க நிலைக் கல்வி .. | 43,53 | 1,42 | 44,95 | 50,76 | 2,31 | 53,07 |
| 2. இடைநிலைக் கல்வி .. | 25,43 | 3,65 | 29,08 | 34,24 | 2,18 | 36,42 |
| 3. பல்கலைக்கழகக் கல்வி .. | 6,53 | 1,99 | 8,52 | 13 | 5 | 18 |
| 4. சிறப்புக் கல்வி (ஆசிரியர் பயிற்சி பள்ளிகள் முதலியன) | 1,12 | 31 | 1,43 | 4,24 | 11 | 4,35 |
| 5. பிற இனங்கள் .. .. | 7,86 | 60 | 8,46 | 3,62 | 72 | 4,34 |
| 6. தொழில் நுட்பக் கல்வி .. | 1,92 | 1,34 | 3,26 | | | |
| 7. தொழில் பயிற்சிப் பள்ளிகள் | 1,46 | 7 | 1,53 | | | |
| மொத்தம்—28. கல்வி .. | 87,85 | 9,38 | 97,23 | | | |
| மொத்தம்—277. கல்வி .. | | | | 1,01,99 | 6,56 | 1,08,55 |



வரவு-செலவுத் திட்டத் தலைப்புகள் 1974–75-ல் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. தொழிற் பயிற்சிப் பள்ளிகள் "கோரிக்கை 17. கல்வி" என்ற தலைப்பிலிருந்து "கோரிக்கை 29—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள் நலன்" என்ற தலைப்பிற்கு மாற்றப்பட்டுள்ளன. ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் "தொடக்க நிலை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளன. "பிற இனங்கள்" என்ற தலைப்பைச் சேர்ந்த பெரும்பாலான இனங்கள், 1974–75ஆம் ஆண்டில் "தொடக்க நிலைக் கல்வி", "இடைநிலைக் கல்வி", "பல்கலைக் கழகக் கல்வி" என்ற தலைப்புக்களின்கீழ் காட்டப்பட்டுள்ளன.

3. 17-வது மானியக் கோரிக்கையில், "277. கல்வி" என்ற தலைப்பின்கீழ் ரூ 108·55 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதுடன், பொது நூலகங்கள், தொல் பொருள் ஆராய்ச்சி, அரும்பொருட்காட்சிச் சாலைகள், பிற இனங்கள் ஆகியவற்றிற்கும் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது:

| | திட்டத்தின் கீழ்வராத செலவினம். | திட்டத்தின் கீழ்வரும் செலவினம். | மொத்தம். |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 277. கல்வி .. | 101,99 | 6,56 | 1,08,55 |
| 278. கலை, பண்பாடு. | 15 | 11 | 26 |
| தொல் பொருள் ஆராய்ச்சி. | 5 | 8 | 13 |
| பழஞ்சுவடிகளும் அரும் பொருட் காட்சி சாலைகளும். | 8 | 2 | 10 |
| பொது நூலகங்கள். | 75 | 7 | 82 |
| 288. சமூகப் பாதுகாப்பும் நலனும்—உடல் ஊனமுற்றோருக்கான பள்ளிகள் முதலியன. | 26 | .. | 26 |
| மொத்த மானியக் கோரிக்கை "17. கல்வி". | 1,03,28 | 6,84 | 1,10,12 |

4. கல்வி வளர்ச்சிக்காகச் செய்யப்பட்டுள்ள மேற்கண்ட கடன்கள் முதலியவற்றிற்காக பிற கோரிக்கைகளின் கீழ் நிதி ஒதுக்கங்கள் தவிர, பள்ளி, கல்லூரிக் கட்டிடங்கள், 1974–75-ல் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் வருமாறு :—

| | பொதுக் கல்வி | | | தொழில் நுட்பக் கல்வி | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | திட்டச் செலவு | திட்டத்தின் கீழ்வராத செலவு | மொத்தம் | திட்டச் செலவு | திட்டத்தின் கீழ்வராத செலவு | மொத்தம் | திட்டச் செலவு | திட்டத்தின் கீழ்வராத செலவு | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | | | | | | |
| (அ) வருவாய்க் கணக்கில் செலவு— | | | | | | | | | |
| 314 சமுதாய வளர்ச்சிப் பணிகள்—ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடங்கள் .. | 122 | .. | 122 | .. | .. | .. | 122 | .. | 122 |
| ஆசிரியைகளுக்குக் குடியிருப்புகள் | 18 | .. | 18 | .. | .. | .. | 18 | .. | 18 |
| மூலப்பணிகள்—அரசுப்பள்ளிகள் கல்லூரிகளுக்குக் கட்டடங்கள். | 1 | 3 | 4 | .. | .. | .. | 1 | 3 | 4 |
| 266. தனியார் மற்றும் உள்ளாட்சி மன்றப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் .. .. | .. | 155 | 155 | .. | .. | .. | .. | 155 | 155 |
| (ஆ) வருவாய்க் கணக்கின் கீழ் வராத செலவு— | | | | | | | | | |
| 459. பொதுப் பணிகளுக்கான மூலதனச் செலவு பள்ளிக் கல்வித் துறை அலுவலகக் கட்டடங்கள். | | 6 | 6 | .. | .. | .. | .. | 6 | 6 |
| 477. கல்வி, கலைகள், பண்பாடு ஆகியவற்றிற்கான மூலதனச் செலவு-அரசுப் பள்ளிகள், கல்லூரிகளுக்குக் கட்டடங்கள் .. .. | 141 | .. | 141 | 34 | .. | 34 | 175 | .. | 175 |
| 483. வீடு கட்டுவதற்கான மூலதனச் செலவு—அரசு உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் வீடுகள் | 2 | .. | 2 | .. | .. | .. | 2 | .. | 2 |
| 488. சமூக நலனுக்கான மூலதனச் செலவு—தருமபுரி பள்ளிக் கட்டடம் .. .. .. | 1 | .. | 1 | .. | .. | .. | 1 | .. | 1 |
| 677. கடன்கள்— | | | | | | | | | |
| மானியம் பெறும் பள்ளிகளின் ஆசிரியர்களுக்குத் திருமணக் கடன்கள் .. .. | .. | 2 | 2 | .. | .. | .. | .. | 2 | 2 |
| தேசியக் கடன் படிப்புதவித் தொகைகள் .. .. | .. | 54 | 54 | .. | .. | .. | .. | 54 | 54 |
| தொழில் நுட்பக் கல்வி மாணவர்களுக்குக் கடன்கள் .. | .. | .. | .. | .. | 12 | 12 | .. | 12 | 12 |
| மொத்தம் .. | 285 | 220 | 505 | 34 | 12 | 46 | 319 | 232 | 551 |

மேற்சொன்ன நிதி ஒதுக்கங்கள் அனைத்தும் கணக்கிற் கொள் ளப்பட்டால், 1974–75-ல் கல்விக்காகச் செலவிடப்படும் தொகை ரூ. 116 கோடியாகும்.

5. அரிசனங்கள், பின்தங்கிய வகுப்பினர் நலப் பள்ளிகள், விடுதிகள், அரிசனங்கள், பழங்குடி வகுப்பினர், பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகைகள் முதலியவற்றுக்கான செலவும் சீர்திருத்தப் பள்ளிகள், தொழிற் பயிற்சி நிறுவனங்கள் போன்ற வற்றிற்கான செலவுகளும் மேற்படி செலவினங்களின்கீழ் வாரா. இப் பல்வகை இனங்களின் மொத்தச் செலவு சுமார் ரூ. 16 கோடியாகும்.

6. மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால்நடை மருத்துவக் கல்வி ஆகியவற்றுக்கு, அந்தந்தத் துறைகளின்கீழ் 1974–75ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் தனித் தனியாக ஒதுக்கப்பட்டுள்ள நிதி மொத்தம் சுமார் ரூ 6 கோடி. மேற்கண்ட இரு இனங்களுக்கான செலவையும் (ரூ. 16 கோடியும், ரூ. 6 கோடியும்) கணக்கில் கொண்டால், 1974-75ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் கல்வி வளர்ச்சிக்கான மொத்தச் செலவு சுமார் ரூ. 138 கோடியாக இருக்கும்.

7. எல்லாத் தலைப்புகளின் கீழும் (277. கல்வி, 477 கல்வி மூலதனச் செலவு. 677. கடன்கள் முதலியன) கல்வியின் பல்வேறு துறைகளுக்கு 1974–75ஆம் ஆண்டில் செய்யப்படும் திட்டச் செலவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது. கூட்டல் குறிக்குப் பின்னர் உள்ள இலக்கங்கள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான செலவினைக் குறிக்கும்.

(ரூபாய் இலட்சத்தில்.)

| | பொறுப் பேற்ற செலவினம். | 1974–75ல் புதியதாக ஒப்பளிப்பு வழங்கப் படும் செல வினங்கள். | மொத் தம். |
|---|---|---|---|
| பொதுக் கல்வி— | | | |
| (1) பள்ளிக் கல்வி .. | 346 | 449 | 795 |
| (2) கல்லூரிக் கல்வி .. | 127 | 89 | 216 |
| | +23 | .. | +23 |
| | 473 | 538 | 1,011 |
| | +23 | | +23 |
| தொழில் நுட்பக் கல்வி .. | 49 | 72 | 121 |
| பொது நூலகங்களும் பண்பாடும். | 10 | 23 | 33 |



8. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாண்டாகிய 1974–75 தொடங்கும் இக்கட்டத்தில், இம்மாநிலத்தில் கல்வித்துறையில் இதுகாறும் ஆற்றியுள்ள பணியை மதிப் பிடுவதும், அடுத்துவரும் சில ஆண்டுகளில் நாம் தீர்வுகாண வேண்டிய சிக்கல்களின் தன்மை, அளவு, ஆகியவற்றை ஆய்ந்து அறிவதும், பொருத்தமாகும். இந்த நாட்டில் எழுத்தறிவை ஊட்டுவதிலும், கல்விக்காகச் செலவு செய் வதிலும், முன்னணியில் நிற்கும் மாநிலங்களில் நமது தமிழகம் ஒன்றாகும். 14 வயது வரை சிறார் அனைவருக்கும் தொடக்க நிலைக் கல்வியை இலவசமாக அளிக்க வேண்டுமென்ற அரசி யல் சட்ட நெறிமுறைக் கோட்பாட்டினை நிறைவேற்றுவதி லும், வேறுபல மாநிலங்களைக் காட்டிலும், தமிழகம் முன்னணியில் உள்ளது.

### 10+2+3 ஆண்டுக் கல்வி முறை

9. நாடு முழுவதும் கல்விப் பயிற்சி நிலைகளின் கால வரம்புகள் ஒரு நிகராக இருக்க வேண்டும் என்பது பற்றி தேசிய அளவில் ஒருமித்த கருத்தொன்று உருவாகிக் கொண் டிருக்கிறது. பள்ளிக் கல்வி 10 ஆண்டாகவும், ஹையர் செகண்டரி கல்வி அல்லது இளநிலைக் கல்லூரிக் கல்வி அல்லது நடுநிலைக் கல்லூரிக் கல்வி (Intermediate) கல்வி 2 ஆண்டு களாகவும், பட்டப் படிப்பு 3 ஆண்டுகளாகவும், இருக்க லாம் என்பதே அக்கருத்தாகும். அக்கருத்தின் அடிப்படைக் கேற்ப, தமிழ் நாட்டில் இப்போது பட்டம் பெற, பள்ளி களிலும் கல்லூரிகளிலும் சேர்த்து 15 ஆண்டுகள் படிக்க வேண்டும் என்ற முறை ஏற்கெனவே வழக்கில் இருந்து வருகிறது. ஆனால் ஆண்டு வரம்பு மட்டும் 11+1+3 என்று உள்ளது. இவ்வரம்பை மாற்றி 10+2+3 என்று திருத்தி அமைக்கவேண்டுமா என்பது பற்றி அனைத்திந்திய மட்டத்தில் முடிவு தெரிந்தபின் நம் மாநிலத்திலும் முடிவெடுக்கப்படும். நாடு முழுவதும் கல்வியின் ஆண்டு வரம்புகள் ஒரே மாதிரியாக இருக்கவேண்டுமென்பது விரும்பத் தக்கதுதான். எனினும், அவ்வரம்புகளில் அடிக்கடி மாறுதல்கள் செய்வது கல்வியின் தரத்தை ஓரளவு நிலைகுலையச் செய்து நிச்சயமற்ற சூழ்நிலையையும் தோற்றுவிக்கும் என்பதையும் கருத்திற் கொள்ளவேண்டும். பல்கலைக் கழகங்களின் கருத்துக்களை மட்டுமின்றி ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர்கள் பொது மக்கள் ஆகியோருடைய கருத்துக்களையும் முழு அளவில் பரிசீலித்தபின்னரே அரசு இது குறித்து முடிவு எடுக்கும்.

[1974 மார்ச்

10. நமது மாநிலத்தில் திருத்திய ஆண்டு வரம்பை
பின்பற்றுவதினால் மாணவர் பயிலவேண்டிய ஆண்டுக
எண்ணிக்கை அதிகமாகாது. எனினும் புதிய வரம்பை
மேற்கொள்ள ஹையர் செகண்டரி, இளநிலைக் கல்லூரிக் கல்
அல்லது நடு நிலைக் கல்லூரி நிலைகளில் அதிகப்படியா
வசதிகள் செய்து கொடுக்கவேண்டி வரும். இதற்கு
பெரியதொரு தொகையை முதலீடு செய்ய வேண்டியிருக்கும்
இதற்கென்று இந்திய அரசிடமிருந்து பெருமளவில் நிதியுத
கிடைக்குமென்று இவ்வரசு நம்புகிறது.

# II. தொடக்கக் கல்வி

**மாணவர் சேர்ப்பு :**

1. 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்
பின்படி, தமிழ் நாட்டில், 1973–74-ல், 6-11 வயதுத்
தொகுதிச் சிறுர்களின் எண்ணிக்கை, 60·24 லட்சமாகும்.
இவர்களில், 54·38 லட்சம் சிறுர்கள், அதாவது 90·2 விழுக்
காட்டினர், பள்ளியில் படித்துக் கொண்டுள்ளனர்.
1974–75-ல், இவ்வயதுத் தொகுதியினரில் மேலும் இரண்டு
லட்சம் பேரைப் பள்ளியில் சேர்த்துக் கொள்ளவேண்டும்
என்பது நமது நோக்கமாகும்.

2. 1973–74-ல், 11–14 வயதுத் தொகுதிச் சிறுர்கள்
27·11 லட்சம் பேர் இருந்தனர். அவர்களில், 14·19 லட்சம்
பேர் அதாவது, 52·3 விழுக்காட்டினர், பள்ளியில் சேர்த்துக்
கொள்ளப்பட்டனர். 1974–75-ல் இவ்வயதுத் தொகு
தியினரில் மேலும் ஒரு லட்சம் பேரைப் பள்ளியில் சேர்த்துக்
கொள்ளவேண்டும் என்பது நமது நோக்கமாகும்.

**கல்வித் தர உயர்வு :**

3. பள்ளிகளில் கல்வியின் தரத்தை உயர்த்தும் வகையில்
ஆசிரியர்—மாணவர் விகிதம் சீராக இருப்பதற்குத்
தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு
வருகின்றன. சாதாரணத் திட்டங்களின் கீழ் ஆண்டுதோறும்
நியமிக்கப்பட்ட கூடுதல் ஆசிரியர்கள் தவிர, வேலைவாய்ப்
பின்மை நிவாரணத்திற்கான மைய அரசுத் திட்டத்தின்கீழ்
1971–72, 1972–73 ஆண்டுகளில் கூடுதலாக நியமிக்கப்பட்
1,800 ஆசிரியர்களும் அடுத்த திட்டக் காலத்திலும் நீடிக்கப்
படுவர். இவர்களில் 1,200 பேர் பி.டி. பட்டம் பெற்றவர்
களாவர்; தொடக்க நிலையிலிருந்தே கல்வித் தரத்தை



1974 மார்ச் 20]

உயர்த்தும்பொருட்டு இவர்கள், உயர்தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர். அத்துடன், "ஐந்து லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புத் திட்ட"த்தின் கீழ் 1973-74-ல் நியமிக்கப்பட்ட சுமார் 7,428 தொடக்க நிலை (ஹையர் கிரேடு), உயர்நிலை (செகண்டரி கிரேடு), ஆசிரியர்கள் 1974–75-ல் நிரந்தரப் பதவிகளில் அமர்த்தப்படுவர். 1973–74-ல் உயர் தொடக்கப்பள்ளிகள் உட்பட, 32,499 தொடக்கப் பள்ளிகளில் மொத்தம் 1,73,175 ஆசிரியர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தனர். தொடக்கப் பள்ளி மாணவர்கள் 59·72 லட்சம் பேர்களாவர். ஆசிரியர்—மாணவர் விகிதாசாரம் 1:34 ஆகும்.

4. பள்ளிகளில் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கான ஒரு சிறப்பு முயற்சியாக, கடந்த சில ஆண்டுகளாக தொடக்க நிலை ஆசிரியர்களை நியமிப்பது படிப்படியாகக் குறைக்கப்பட்டு, அவர்களுக்குப் பதிலாக உயர்நிலை ஆசிரியர்களே நியமிக்கப்பட்டு வருகின்றனர். உயர்நிலை ஆசிரியர்களாகத் தேர்ச்சி பெற்ற தொடக்க நிலை ஆசிரியர்களின் பதவிகள், உயர்நிலைப் பதவிகளாக மாற்றப்பட்டு, அவர்கள் அப்பதவிகளில் அமர்த்திக் கொள்ளப்படுகின்றனர். இதுவரையில் 33,500 தொடக்கநிலை ஆசிரியர் பதவிகள் உயர்நிலை ஆசிரியர் பதவிகளாக மாற்றப்பட்டுள்ளன. எஞ்சிய பதவிகளும் உரிய காலத்தில் படிப்படியாகத் தரமுயர்த்தப்படும்.

5. தொடக்கப் பள்ளிகளில் அறிவியல் பாடத் திட்டமும் ஏனைய பாடத் திட்டங்களும் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. அறிவியல் சாதனங்கள் வாங்குவதற்காக, தொடக்கப் பள்ளிகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 300 வீதமும், உயர் தொடக்கப் பள்ளிகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 1,000 வீதமும், வழங்குவது என்ற அடிப்படையில், அறிவியல் சாதனங்களும், ஏனைய கல்விச் சாதனங்களும் வழங்கும் திட்டம் 1960-ல் தொடங்கப்பட்டது. இதுவரை இத்திட்டத்தின் கீழ், 11,400 தொடக்கப் பள்ளிகளும் 3,000 உயர்தொடக்கப் பள்ளிகளும் பயனடைந்துள்ளன. 1974–75ஆம் ஆண்டிலும், இத்திட்டத்தின் கீழ், 1,220 தொடக்கப் பள்ளிகளும் 334 உயர் தொடக்கப்பள்ளிகளும் பயன்பெறும்.

6. உயர்தொடக்க வகுப்புகளில் உடற்பயிற்சிப் பாடத்தைப் பேணிவளர்க்கும் வகையில், ஐந்து லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பளிக்கும் அனைத்திந்திய திட்டத்தின் கீழ் சுமார் 500 உடற்பயிற்சி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் 1974–75ஆம் ஆண்டிலும் நீடிக்கப்படுவர்.

[1974 மார்ச் 20

7. கல்வியில் தொடக்க நிலைகளிலிருந்தே, பாடத்
திட்டத்தின் ஒரு பகுதியாகப் பணிப்பயிற்சி அளிக்கப்பட்டு
வரவேண்டுமென்று கல்வி [illegible]நர்கள் வலியுறுத்தி
வருகின்றனர். இந்நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு,
1973–74ஆம் ஆண்டில், உயர் தொடக்கப் பள்ளிகளில் 573
முழுநேர கைத்தொழில் ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்
பட்டன. மேலும் கூடுதலாக முழு நேரக் கைத்தொழில்
ஆசிரியர்களை நியமிக்கவும் கருவிகளுக்கான மானியம்
அளிக்கவும் 1974–75 திட்டத்தில் வகை செய்யப்பட்
டுள்ளது. சிறுவர்களின் தொழில் நுட்பத் திறமைகளை வளர்ப்
பதும், ஆக்கபூர்வ திறமையை உருவாக்குவதும், அவ்வப்
பகுதிகளின் தேவைக்கேற்ப பயனுள்ள சில கைத்தொழில்
களை கற்றுக் கொள்ளச் செய்வதும், இத்திட்டத்தின்
நோக்கங்களாகும்.

நண்பகல் உணவுத் திட்டம்

8. தமிழ்நாட்டி[illegible]
உணவுத் திட்டம், இந்நாடு [illegible] நண்பகல்
துறை நிர்வாகிகள் போற்றிப் [illegible] உள்ள கல்வித்
செயல்பட்டு வருகிறது. தொடக்க [illegible] உணவுக்குச் சிறப்பாகச்
வகுப்புகளில் படித்துவரும் [illegible] உள்ள 1—8
ஒரு பங்கினரான 19 லட்சம் [illegible] மூன்றில்
திட்டத்தின் கீழ் இலவச நண்பகல் [illegible] மாணவர்களுக்கு இத்
அரிசன நலத்துறை நடத்திவரு[illegible] வழங்கப்படுகிறது.
மாணவர்களும் இந்த 19 [illegible] அரிசன நலப் பள்ளி
1974–75 வரவு செலவுத் திட்டத்தில் [illegible] அடங்குவர்.
லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கென ரூ. 235
யில் செய்யும் செலவுடன், 'கேர்' நிறுவனமும் மாநில அரசு இவ்வகை
ளுக்கு ரூ. 6 கோடி மதிப்புள்ள உணவுப்பொருள்களை ஆண்டொன்
வருகிறது. உதவி

9. [illegible]நார முறையில் நண்பகல் உணவு
காக, மின் சாதனங்களுடன் கூடிய 76 தயாரிப்பதத்
கூடங்கள், செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, மையச் சமையத்
ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு தென் ஆர்க்காடு
மையச் சமையற் கூடங்களில் தயாராகும் வருகின்றன. இந்த
புறங்களிலுள்ள பள்ளிகளுக்கு மூடிய மோட்டார் உணவு, சுற்றுப்
எடுத்துச் செல்லப்படுகிறது. இம்மாவட்டங்களில் வண்டிகளில்
21 மையச் சமையற் கூடங்கள் விரைவில் தொடங்கப்பட மேலும்
இருக்கின்றன. 1974–75ஆம் ஆண்டில் இம்மையச்
சமையற் கூடத் திட்டம் தஞ்சாவூர் மாவட்டத்திற்கும்
விரிவாக்கப்பட்டு, அங்கு 24 மையச் சமையற் கூடங்கள்
நிறுவப்படும்.



'74 மார்ச் 20]

10. இத்திட்டத்தின்கீழ் பயன்படுத்தப்பட்டு வரும்
மாட்டார் வண்டிகளையும், சமையல் சாதனங்களையும்
பழுது பார்த்து, பராமரித்து வருவதற்காக 'கேர்' உதவி
டன் சுமார் ரூ. 15 லட்சம் மொத்தச் செலவில், தென்
ஆர்க்காடு மாவட்டம் விக்கிரவாண்டியில் மத்திய பராமரிப்பு
ணிக்களரி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இத்
ட்டத்திற்குத் தேவைப்படும் உணவுப்பொருள்களை சீராகச்
சமித்து வைக்க வசதியாக, 'கேர்' உதவியுடன் வட்டாரக்
டங்குகள் 10 கட்டத் திட்டமிடப்பட்டது. இவற்றில்
வட்டாரக் கிடங்குகள் கட்டி முடிக்கப் பெற்று செயல்
ட்டுவருகின்றன.

11. பள்ளி நண்பகல் உணவுக்கான பல்வேறு 'கேர்'
றுவனத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் மாநில அரசின்
ங்காக, 1974–75-ல் சுமார் ரூ. 60 லட்சம் செலவிடப்படும்.

ற்கொடை

12. 1—3 வகுப்புகளில் பயில்வோரும், நண்பகல்
ணவு பெறுவோருமான ஏழை மாணவர்களுக்கு முதல்
குப்பில் பாடப் புத்தகங்களும் சிலேட்டும், இரண்டு,
ன்று வகுப்புகளில் பாடப் புத்தகங்களும் இலவசமாக
ழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் தற்போது ஆண்டு
தாறும் 12 லட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள்
யனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தின்கீழ், இலவசப்
ாடப் புத்தகங்கள் வழங்கும் செலவை 1972–73ஆம்
ஆண்டிலிருந்து தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனமே
ற்றுக்கொண்டு வருகிறது ; சிலேட்டுகளுக்கும், பாட நூல்
றுவனம் வெளியிடாத, சிறுபான்மையினர் மொழிகளுக்
ரிய பாடப் புத்தகங்களுக்கும் ஆகும் செலவை அரசே
ற்றுக்கொண்டு வருகிறது.

ட்டடங்கள்

13. ஊராட்சி ஒன்றியங்களைச் சேராத பகுதிகளில்
தொடக்கப் பள்ளிக் கட்டடங்கள் கட்ட நகராட்சிகளுக்கும்
தனியார் பள்ளி நிறுவனங்களுக்கும் மானியம் வழங்கிட
ரூ. 4 லட்சமும், அரசினர் தொடக்கப் பள்ளிகளுக்குக்
கட்டடங்கள் கட்ட ரூ. 6 லட்சமும், 1974–75 வரவு-
செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளன. 1974–75-ல்
ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பள்ளிக் கட்டட மானியங்கள்
வழங்கிட, 1974–75-ம் ஆண்டுக்கான சமுதாய வளர்ச்சிப்
பணிகள் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 1,22 லட்சம்

[1974 மார்ச் 20

நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவை தவிர, பள்ளிக் கட்டடங்கள்
கட்டுவதற்காக பரிசுச் சீட்டு விற்று முதலிலிருந்தும்,
கணிசமான தொகை வழங்கப்படுகிறது.

14. கிராமப் பகுதிகளில் ஆசிரியைகள் வசிப்பதற்கு
ஊக்கமளிக்கும் பொருட்டு, கிராமப் பகுதிகளில் ஆசிரியை
களுக்கான வீடுகள் கட்டும் திட்டம் செயல்பட்டு வருகிறது.
ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 1,600க்கு மேற்பட்ட வீடுகள்
இதுவரை கட்டப்பட்டுள்ளன. இதற்கென சமுதாய
வளர்ச்சிப் பணிகளின் வரவு-செலவுத் திட்டத்தில்,
1974—75-ல் ரூ. 17·50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஊராட்சி ஒன்றிய பள்ளிகள்**

15. தமிழ்நாட்டில் மொத்தம் சுமார் 32,500 தொடக்கப்
பள்ளிகள் உள்ளன. இவற்றில் சுமார் 22,000 பள்ளிகள்
ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்படுகின்றன. ஊராட்சி
கல்வி நிதி உதவி விசாரணைக்குழுவின் பரிவுரைகளின் பேரில்
அப்பள்ளிகளுக்கு அளிக்கப்படும் அரசு மானிய உதவி
முறையை அரசு அண்மையில் திருத்தியமைத்துள்ளது.
புதிய முறையின்படி, (ஒரு ரூபாய் நில வரிக்கு 45 காசு
என்று வசூலிக்கப்படும்) உள்ளூர் வரியில் 4/9 பாகம்,
தொடர்ந்து ஊராட்சி ஒன்றியத் தொடக்கக் கல்வி நிதிக்கு
வழங்கப்படும். மேலும், 1971 ஆம் ஆண்டு மக்கள்
தொகையை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு
வட்டாரத்திலும் உள்ள மக்கள் தொகைக்கு, தலைக்கு ரூ. 6
வீதம் கணக்கிட்டு, கல்வி மானியத்தையும் அரசு வழங்கும்.
தொடக்க நிலைக் கல்வியின் கீழ் ஆகும் எஞ்சிய செலவை
திருத்தியமைக்கப்பட்ட வட்டார வகைப்பாட்டிற்கு ஏற்ப,
அரசும் ஊராட்சி ஒன்றியங்களும் பகிர்ந்து ஏற்றுக்
கொள்ளும்.

# III. உயர்நிலைப் பள்ளிக் கல்வி

இம்மாநிலத்தில் 1973—74ஆம் ஆண்டில், 14—17 வயதுத்
தொகுதியினர் 22·38 லட்சம் பேர் இருந்தனர். இவர்களில்
7·39 லட்சம் பேர், அதாவது 33 விழுக்காட்டினர், உயர்நிலைப்
பள்ளிகளில் 9—11 வகுப்புகளில் பயின்றனர்.

2. இம்மாநிலத்தில் 2,823 உயர்நிலைப் பள்ளிகள் இருக்
கின்றன. நான்காவது திட்டக் காலத்தில் பள்ளியில் சேர்க்
கப்பட்ட இந்த வயது தொகுதியைச் சேர்ந்த மாணவர்களின்
எண்ணிக்கை, நியமிக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை
முதலியவற்றை இணைப்பு—1-ல் காணலாம்.



1974 மார்ச் 20]

3. 1974—75-ல் இவ்வயதுத் தொகுதியைச் சேர்ந்த
60,000 மாணவர்களைக் கூடுதலாகச் சேர்க்கவும், 1,500
ஆசிரியர்களை நியமிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஐந்து
லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பளிக்கும் அனைத்திந்திய திட்
டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் இந்த புதிய பதவி
களில் முதலாவது எடுத்துக் கொள்ளப்படுவார்கள். உயர்
நிலைப்பள்ளிகளுக்கு மரச் சாமான்கள், சாதனங்கள் ஆகியவை
வாங்குவதற்கு ரூ. 11 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(அ) கல்வித் தர உயர்வு

4. அறிவியல் சாதனங்களை வாங்குவதற்கு ரூ. 15,000-ம்,
ஆய்வுக் கூடக் கட்டடங்களுக்காக ரூ. 25,000-ம்,
உயர்நிலைப் பள்ளிகளுக்கு உதவி மான்யம் வழங்கும் திட்டம்
தொடர்ந்து செயல்படும். 1974—75-ல் இத்திட்டத்திற்கு
ரூ. 35 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை 810 உயர்
நிலைப்பள்ளிகள் பயனடைந்துள்ளன. 1974—75ஆம்
ஆண்டில் மேலும் 90 உயர்நிலைப் பள்ளிகள் இத்திட்டத்தினால்
பயனடையவிருக்கின்றன. மாநிலத்திலுள்ள ஒவ்வொரு
வருவாய் மாவட்டத்திலும், உயர்நிலைப் பள்ளிகளுக்குத்
தேவையான எல்லா அறிவியல் கருவிகளும் கொண்டுள்ள 14
ஆய்வுக்கூட இயல் ஊர்திகள் இயங்குகின்றன. இந்த வசதியை
படிப்படியாக விரிவாக்கி, 47 கல்வி மாவட்டங்களிலும் ஒரு
கல்வி மாவட்டத்திற்கு ஒரு ஆய்வுக்கூட இயல் ஊர்தி கிட்டும்
படி செய்வது, பள்ளிக்கல்வித் துறையின் நோக்கமாகும்.
1973—74ஆம் ஆண்டில் கூடுதலாக 3 இயல் ஊர்திகளும்,
1974—75-ல் மேலும் 10 இயல் ஊர்திகளும் வாங்கப்படும்.

5. பள்ளிகளில் அறிவியல் கல்வி கற்கும் தரத்தை உயர்த்து
வதற்காக, யூனிசெஃப் நிறுவனத்தின் உதவியுடன் ஒரு
முன்னோடித் திட்டம், சென்னை, செங்கற்பட்டு, தென்
ஆர்க்காடு மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 50
தொடக்கப் பள்ளிகளிலும் 30 நடுநிலைப் பள்ளிகளிலும்
(Middle Schools) கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்திற்கான
புதிய அறிவியல் பாடத் திட்டம் 1971—72-ல் 1—3
வகுப்புகளிலும், 6-வது வகுப்பிலும், 1972—73-ல் 4, 7,
ஆகிய வகுப்புகளிலும் 1973—74-ல் 5, 8 வகுப்புகளிலும்
அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தைச் செயல்படுத்து
வதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு
மறுபயிற்சி அளிக்கப்பட்டு, பின் அப்பட்டதாரி ஆசிரியர்கள்
இத்திட்டம் செயல்படும் பள்ளிகளின் மற்ற ஆசிரியர்களுக்குப்

பணிக்காலப் பயிற்சி நடத்தினர். 1974–75ஆம் ஆண்டில்
யூனிசெஃப் நிறுவனத்தின் உதவியுடன், மேலும் பல
பள்ளிகளுக்கு இத்திட்டம் விரிவாக்கப்படும்.

6. உயிரியல், இயல்பியல், வேதியியல் கணிதம் ஆகியவற்
றில், 1969 முதல் ஒவ்வோர் ஆண்டும் கோடை விடுமுறைக்
கால அறிவியல் பயிற்றுவிப்புப் பயிற்சி நிலையங்கள் நடத்தப்
பட்டு வருகின்றன. இவை, அறிவியல், கணித இயல், ஆசிரி
யர்களின் நன்மைக்காக, கல்வி ஆராய்ச்சி—பயிற்சி
தேசியக் குழு, பல்கலைக் கழக மானியக் குழு ஆகியவற்றின்
உதவியுடன் நடத்தப்படுகின்றன. 1,000-க்கு மேற்பட்ட
உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் ஏற்கெனவே இப்பயிற்சி
பெற்றுள்ளனர். 1974–75-ல் மேலும் ஏறக்குறைய 160 உயர்
நிலைப்பள்ளி ஆசிரியர்கள் மறுபயிற்சி பெறுவர்.

7. சென்னையிலுள்ள மாநிலக்கல்வி ஆய்வு நிறுவனத்
தின் ஒரு பிரிவாக, மாநில அறிவியல் கல்வி நிறுவனத்தை
ஏற்படுத்த அரசு அனுமதியளித்துள்ளது. பள்ளிகளில்
அறிவியல் கல்வி, அறிவியல் பாடத்திட்டம், ஆசிரியர்களின்
பயிற்சித் திட்டம், ஆய்வுக் குறிப்புரைகள் வெளியிடுதல்,
வளர்ச்சிப் பணி ஆகியவைகளின் மேம்பாட்டுக்கு இந்நிறு
வனம் பொறுப்பாகும்.

8. எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் நல்ல நூலகங்களை
அமைப்பதற்கு உதவும் திட்டத்தின்கீழ் இதுவரையில் 1,788
உயர்நிலைப்பள்ளிகளின் நூலகங்கள் உதவி பெற்றுள்ளன.
1974–75-ல், பள்ளி ஒன்றுக்கு ரூ. 1,000 மதிப்புள்ள நூல
கப் புத்தகங்கள் வீதம், மேலும் 342 உயர்நிலைப்பள்ளிகளுக்கு
புத்தகங்கள் வழங்கப்படும்.

9. காட்சி, கேள்வி, சாதனங்கள் மூலம், பள்ளிகளில்
கல்வியைக் கற்பிக்க வசதியாக, 1974–75-ல் ரூபாய் 1 லட்சம்
செலவில், 60 பள்ளிகளுக்கு வானொலிப் பெட்டிகளும், 50
பள்ளிகளுக்கு 35 மில்லிமீட்டர் துண்டுப் படச்சுருள் காட்டும்
கருவிகளும், 10 பள்ளிகளுக்கு 16 மில்லிமீட்டர் திரைப்படம்
காட்டும் கருவிகளும் வழங்கக் கருதப்பட்டுள்ளது.

10. கோத்தாரி கல்வி ஆணைக்குழுவின் கருத்துரைகளை
ஒட்டி, 1972–73-ல், ஆண்களுக்காக புதுக்கோட்டையில்
ஒரு முன் மாதிரிப் பள்ளியும், 1973–74-ல் சென்னையில் பெண்
களுக்காக ஒரு முன்மாதிரிப் பள்ளியும் திறக்கப்பட்டுள்ளன.
நன்கு தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களையும், விடுதி வசதிகளை



யும் கொண்ட இப்பள்ளிகள், தகுதியும் திறமையும் வாய்ந்த
மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளுகின்றன. அவர்களில்
பலருக்கு உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

11. உயர்நிலைப் பள்ளிக் கல்வியை வாழ்க்கைக் கேற்ப
தொழில் சார்ந்ததாக ஆக்குவதற்கு, கோத்தாரி கல்வி
ஆணைக்குழு பல்வகைப் பயிற்சிப் பள்ளிகள் (Comprehensive
Schools) அமைப்பு பற்றி பரிவுரை செய்தது. தற்போது நடை
பெறும் பள்ளிகளில் பத்தைத் தேர்ந்தெடுத்து, அவற்றை
மேம்படுத்தி, பொதுவான பயிற்சி முறைகளுடன் தொழில்
சார்ந்த பாடமுறைகளையும் கொண்ட பல்வகைப் பயிற்சி
களை அளிக்கிற பள்ளிகளாக ஆக்கிடக் கருதப்பட்டுள்ளது.
மாணவர்கள் தாமே சொந்த தொழில் நடத்துவதற்கும்,
தொழிற்சாலைகளில் வேலை பெறுவதற்கும் வசதியாக, அப்
பள்ளிகளில் வேளாண்மை, தையல், தச்சுத் தொழில்,
வானொலிப் பெட்டிகளைப் பழுதுபார்த்தல், டெலிவிஷன் பணி
முதலிய பாட முறைகள் இருக்கும். 1974–75 வரவு செலவுத்
திட்டத்தில் இப்பள்ளிகளுக்காக ரூ. 8·50 லட்சம் ஒதுக்கப்
பட்டுள்ளது.

### மாநிலக் கல்வி ஆய்வு நிறுவனம்.

12. சென்னையிலுள்ள மாநிலக் கல்வி ஆய்வு நிறுவனம்,
கல்வி ஆராய்ச்சி பயிற்சி குறித்த தேசிய மன்றத்துக்கு நிக
ரான மாநில அமைப்பாகும். அந்நிறுவனம், பள்ளி அளவில்
பணிக்காலப் பயிற்சிக்குப் பொறுப்பு ஏற்கிறது. பணி
யிருப்புப் பயிற்சித் திட்டங்கள் நடத்துவது தவிர, இந்த
நிறுவனம் கல்வி கற்பித்தல் தொடர்பான பல்வேறு பிரச்
சினைகள் பற்றியும் பாடத்திட்ட மேம்பாடு பற்றியும் ஆராய்ச்சி
நடத்துகிறது. தொடக்கக் கல்வி விரிவினை நிலையம்
ஒன்றும் இந்நிறுவனத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

### 8-ஆம் வகுப்பு பொதுத் தேர்வு.

13. ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் உள்ள எல்
லாப் பள்ளிகளுக்கும் 8-வது வகுப்பு ஆண்டுத் தேர்விற்கான
பொதுவான வினாத்தாள்கள் 1970–71-ம் ஆண்டிலிருந்து
தயாரிக்கப்பட்டு வருகின்றன. இம்முறை இவ்வாண்டும்
தொடர்ந்து பின்பற்றப்படும்.

### கட்டடத் திட்டங்கள்.

14. இம்மாநிலத்திலுள்ள 2,800 உயர்நிலைப்பள்ளிகளில்
சுமார் 1,200 பள்ளிகளில் போதிய இடவசதி இல்லை.
1974–75-ல் நகராட்சி, மற்றும் தனியார் உயர்நிலைப்

பள்ளிகளுக்குக் கட்டடம் கட்ட மான்யம் வழங்கிட ரூ. 19 லட்சமும், அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கும், அரசு (கழக) உயர்நிலைப்பள்ளிகளுக்கும் கட்டடம் கட்டவும், பழைய கட்டடங்களைப் பழுது பார்க்கவும் ரூ. 60 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

படிப்பு உதவித் தொகைகள்.

15. தமிழ்நாட்டில், பள்ளிகளில் எல்லா நிலைகளிலும் இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. கிராமத்தைச் சார்ந்த, கல்வியில் சிறந்த மாணவர்களுக்குப் படிப்பு உதவித்தொகை வழங்கும் ஒரு சிறப்புத் திட்டம் 1971–72-ல் தொடங்கப் பட்டது. அதன்கீழ் விடுதியில் தங்கி பயிலும் மாணவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,000, வீட்டில் தங்கி படிக்கும் மாணவர்களுக்கு ரூ. 500 என்ற விகிதத்தில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் இரண்டு மாணவர் களுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டம் 1974–75லும் தொடர்ந்து நிறைவேற்றப்படும். இது தவிர, பர்மா, இலங்கை அகதிகள், முன்னாள் இராணுவத்தினர், பாதுகாப்புப் படையினர், அரிசனங்கள், பழங்குடிமக்கள், தங்கக் கட்டுப் பாட்டு ஆணையினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள், அரசியல் தியாகிகள் ஆகியோரின் குழந்தைகளுக்குத் தாராள கல்விச் சலுகைகள் தொடர்ந்து அளிக்கப்படுகின்றன.

16. சென்னை மாநகரிலுள்ள தொடக்க, உயர்நிலைப்பள்ளி களிலுள்ள சுமார் 5,000 மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்வதற்காக முன்னோடித் திட்டம் ஒன்று 1971-ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டுள்ளது. வட ஆர்க்காடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய மாவட்டங்களில் மருத்துவர்கள், இயல் ஊர்திகளில் சென்று பள்ளி மாணவர்களின் உடல்நலனை பரிசோதனை செய்கிறார்கள். ஏனைய மாவட்டங்களுக்கும் இத்திட்டத்தை விரிவாக்கக் கருதப்பட்டுள்ளது.

பள்ளி வளர்ச்சி மாநாடுகள்.

17. பள்ளிக்குரிய வசதிகளையும், மாணவர்களுக்குரிய வசதிகளையும் சேகரித்துத் தருவதற்காக உள்ளூர் மக்களின் முயற்சிகளை ஒருங்கு திரட்டும் பொருட்டு, இதுவரை 500 பள்ளி மேம்பாட்டு மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன. இவற்றின் வாயிலாக பொதுமக்களிடமிருந்து ரூ. 13 கோடி மதிப்புள்ள உதவி பெறப்பட்டுள்ளது. இத்திட்டம் மும் முரமாக தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு



பொழுது அறிவியல், மற்றும் நூலக மேம்பாட்டிற்கான வசதி களைப் பெறுவதில் நாட்டம் செலுத்தப்படுகிறது. பொது மக்களின் நன்கொடையைக் கொண்டு 39 லட்சம் மாணவர் களுக்கு ரூ. 2·54 கோடி மதிப்புள்ள சீருடைகள் இதுவரையில் வழங்கப்பட்டுள்ளன.

நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை அரசு மேற்கொள்ளல்.

18. பள்ளிகளை நடத்த இயலாத நகராட்சிகளின் செலவுச் சுமையைக் குறைப்பதற்காக, 1972–73-ல் 7 நகராட்சி உயர் நிலைப் பள்ளிகள் அரசால் மேற்கொள்ளப்பட்டன. 1974–75ல் நகராட்சிப் பள்ளிகளை எடுத்துக் கொள்வதற்கு ஒதுக்கபபட்டுள்ள ரூ. 10 லட்சத்தைக் கொண்டு, மேலும் 10 நகராட்சிப் பள்ளிகள் எடுத்துக் கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(உ) கல்விச் சூழலை இசைவாக்கல்.

19. பாடமுறைத் திருத்தம்.—இப்பொழுது நமது பள்ளி களில் பின்பற்றப்படும் பாடமுறை 1965-ல் திருத்தியமைக்கப் பட்டதாகும். பாடத்திட்டங்களைத் தொடர்ந்து உயர்த்தி வருதல், கற்பிக்கும் முறைகளை மேம்படுத்துதல், ஆகியவற்றின் இன்றியமையாமையைக் கருத்தில் கொண்டு, பாடத் திட்டங்கள் முழுவதையும் திருத்தி அமைக்க 1970 டிசம்பரில் அரசு நிபுணர் குழுக்களை அமைத்தது. 1972–73-லிருந்து அறிவியல், கணிதப் பாடங்களைத் தவிர பிறபாடங்களுக்கு 1-5 வகுப்புகளில் திருத்தியமைக்கப்பட்ட பாடமுறை முதலில் நடைமுறைக்கு வந்தது. 1973–74 முதல், 1-5 வகுப்பு களில் அறிவியல் பாடத்துக்கும், 1-3 வகுப்புகளில் கணித பாடத்துக்கும், 6-வது வகுப்பிற்கு மொழிகள், வரலாறு, புவியியல் ஆகிய பாடங்களுக்கும், திருத்திய பாடத்திட்டம் நடைமுறைக்கு வந்தது. 1974–75-ம் ஆண்டில், 4-6 வகுப்புகளில் கணிதம், 6-ம் வகுப்பில் அறிவியல், 7-ம் வகுப்பில் வரலாறு, புவியியல் 7, 9 வகுப்புகளில் மொழிகள், 6-7 வகுப்புகளில் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு திருத்திய பாடத் திட்டம் நடைமுறைக்கு வரும்.

20. ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளுக்கான பாடத்திட்டங் களைத் திருத்தியமைப்பதற்காக அமைக்கப்பட்ட குழு, தனது பணியை முடித்துள்ளது. இப்பள்ளிகளுக்கான திருத்தி யமைக்கப்பட்ட பாடத் திட்டம் விரைவில் நடைமுறைக்கு வரும்.

[1974 மார்ச் 20

21. பாடத்திட்ட மேம்பாட்டுக்காக நிலையான அமைப்பு ஒன்றை ஏற்படுத்தும் நோக்கத்துடன் மாநிலக் கல்வி ஆய்வு நிறுவனத்தில் பாடத்திட்ட மேம்பாட்டுப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அரசுப் பாடநூல் வெளியீடு.

22. பள்ளிகளுக்கு, பாடநூல்களை வெளியிட்டு வழங்கும் பணி, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தரமான புத்தகங்களை மலிவு விலையில் விற்பதில் அது நல்ல பணி ஆற்றியுள்ளது. 1972-73 முதல் 1975-76 முடியவுள்ள நான்கு ஆண்டு காலத்தில், திருத்தியமைக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கேற்ப எழுதப்பட்ட பாடப் புத்தகங்களை, படிப்படியான திட்டத்தின்கீழ், இந்நிறுவனம் வெளியிட்டு வருகின்றது. 1973-74-ல் இந்நிறுவனம் சுமார் 232 லட்சம் பள்ளிப் பாடநூல் படிகளை அச்சிட்டு வழங்கியுள்ளது. 1974-75ல், 200 லட்சம் பள்ளிப் பாடநூல் படிகளை அச்சிடுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. உருது, மலையாளம், தெலுங்கு, கன்னடம் போன்ற சிறுபான்மை மொழிகளிலும், 1974-75-ம் கல்வி ஆண்டில் இருந்து படிப்படியாகப் பாடநூல்கள் வெளியிடக் கருதப்பட்டுள்ளது.

23. இந்த நிறுவன வெளியீடுகள், ஏற்பளிக்கப்பட்ட 57 வட்டப் புத்தக வியாபாரிகள் மூலமாகவும் 800 பதிவு செய்யப்பட்ட சில்லறை வியாபாரிகள் மூலமாகவும் மாநிலம் முழுதும் விற்பனை செய்யப்படுகின்றன. பள்ளி மாணவர்களுக்கு உரிய காலத்தில் குறித்த விலையில் பாடநூல்கள் கிடைத்திட இந்நிறுவனம் வகை செய்துள்ளது.

ஆசிரியர் பயிற்சி.

24. ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் 108 இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 58 பயிற்சிப்பள்ளிகளை அரசும், 50 பயிற்சிப் பள்ளிகளை தனியாரும் நடத்தி வருகின்றனர். பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் வேலை பெறுவது கடினமாகியுள்ள சூழ்நிலையில் ஆசிரியர் பயிற்சிக்கான தற்போதைய வசதிகளைச் சீர்தூக்கிப் பார்ப்பது தேவைப்பட்டது. 1972-73ம் ஆண்டு, ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வது நிறுத்தப்பட்டது. 1973-74ல் மாணவர்கள் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். ஆனால் 1974-75-ஆம் ஆண்டிற்கான கொள்கை, ஆய்வுக்குப் பின்னர்தான் முடிவு செய்யப்பட வேண்டும்.



1974-மார்ச் 20]

25. பணியிலுள்ள ஆசிரியர்கள் தங்கள் தொழில் தகுதிகளை மேம்படுத்திக்கொள்ள உதவும் வகையில், 1970-71 முதல், துணை ஆய்வாளர்களும், பள்ளி உதவி ஆசிரியர்களும் பட்ட மேற்படிப்பு பயிற்சிக்கு ( M. Ed. ) அனுப்பப்பட்டு வருகின்றனர். இதுவரை இத்திட்டத்தின்கீழ் 50 பேர் அனுப்பப்பட்டுள்ளனர். 1974-75-ல் மேலும் 20 பட்டதாரி ஆசிரியர்கள் இப்பயிற்சிக்கு அனுப்பப்படுவர்.

26. 1972-73-ல் ஆசிரியர்கள் மறு பயிற்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. தொடக்கப்பள்ளி வகுப்புகளில் புதிய அறிவியல், புதிய கணிதம் ஆகியவற்றைக் கற்பிப்பதற்கு, 60,000 தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு, பெரிய அளவிலான திட்டமொன்றின்கீழ், மறு பயிற்சியளிக்கப்பட்டது.

27. புதிய முறையில் கல்வி கற்பித்தல், அந்தந்தப் பள்ளி வளர்ச்சிக்குத் திட்டமிடுதல், பள்ளி மேற்பார்வை, ஆகியவற்றில் 1973-74-ல் எல்லா உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் பணியிருப்புப் பயிற்சியளிக்கப்பட்டது. 1974-75-ல், 6ஆம் வகுப்பில், அறிவியல், கணிதம் ஆகிய பாடங்களில் புதிய பாடத் திட்டத்தின்படி எவ்வாறு கற்றுத் தருவது என்பது குறித்து உயர் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கப்படும்.

28. பட்டதாரி ஆசிரியர்களுக்கு, புதிய முறைகளைப் பின்பற்றி, ஆங்கில மொழியைக் கற்பிப்பதில் ஆங்கில மொழிப் பயிற்சித் திட்டம் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. இத் திட்டத்தின்கீழ். இதுவரை, பள்ளிகளில் 5ஆம் வகுப்புவரை ஆங்கிலத்தைப் போதிப்பதற்கு 3,750 பட்டதாரி ஆசிரியர்களும், 34,200 செகண்டரி கிரேடு ஆசிரியர்களும் பயிற்சி பெற்றுள்ளனர். 6-8 வகுப்புகளுக்கு பாடம் கற்பிக்கும் 10,715 ஆசிரியர்கள், கடலூர், தஞ்சாவூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய நான்கு இடங்களில் உள்ள ஆங்கில மொழி கற்பிக்கும் நிலையங்களில் பயிற்சி பெற்றுள்ளனர். 1974-75-ல் மேலும் நான்கு நிலையங்களைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது. தலைமை ஆசிரியர்கள், அரசிதழ் பதிவு பெற்ற ஆய்வு அதிகாரிகள், ஆகியோருக்கு புதிய முறையில் ஆங்கில மொழியைப் போதிக்கும் முறைகளை விளக்கிட கருத்தரங்குகளும், கல்வி முகாம்களும் நடத்தும் திட்டமும் 1974-75-ல் தொடர்ந்து செயல்படும்.

தேர்வுகள்.

29. கல்வித் தர ஆய்வுமுறைகளை மேம்படுத்துவதற்காக 1972-73ல் கல்வித் தர ஆய்வு மாநிலப்பிரிவு அமைக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட 250 உயர்நிலைப் பள்ளிகளில், 10ஆம் வகுப்பில் முன்னோடித் திட்டமாக, மாணவர்களின் திறமையின் அனைத்துக் கூறுகளையும் அந்தந்த ஆசிரியர்களே முழு அளவில் மொத்தமாக மதிப்பீடு செய்யும் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டது. அது 1974–75ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படும். இந்த முன்னோடித் திட்டத்தில் பெற்ற அனுபவத்தை ஒட்டி இத்திட்டத்தை எல்லா உயர்நிலைப் பள்ளிகளுக்கும் விரிவாக்கக் கருதப்பட்டுள்ளது.

30. அரசுத் தேர்வு ஆணையாளர் 22 தேர்வுகளை நடத்துகிறார். இவற்றில் சில ஆண்டுக்கு ஒரு முறையாகவும், மற்றும் சில ஆண்டுக்கு இருமுறையும் நடப்பவையாகும். 1973 ஏப்ரல் திங்களில் 1,94,000 மாணவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதினார்கள். அவர்களில் 97,000 மாணவர்கள் தேர்ச்சி பெற்றனர். அது 50·8 விழுக்காடாகும்.

31. எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுகளை இயந்திரக் கணிப்புப் பொறியில் பதிவிடும் முறை இப்பணியினை விரைவில் முடிக்க வகை செய்துள்ளது. இத்தேர்வுப் பணிகளைத் துரிதப்படுத்த வசதியாக 1974–75-ல் சிறிய அச்சகம் ஒன்றை அமைக்கவும் கருதப்பட்டுள்ளது.

32. 18 வயது நிரம்பியவர் அனைவரும், ஏற்பு அளிக்கப்பட்ட இம்மாநிலப் பள்ளிகளில் ஒன்றில் 8-வது வகுப்புத் தேர்ச்சி பெற்றிருந்தால், தனிப்பட்ட முறையில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதலாம் என்று விதி செய்யப்பட்டுள்ளது. இது கல்வித் துறையில் அரசு கொண்டுவந்துள்ள குறிப்பிடத்தக்க சீர்திருத்தமாகும். படிப்பை முடிக்காமல் நின்றுவிட்டவர்கள், பிற்காலத்தில் தங்களுக்கு விருப்பமுள்ள வேளையில் தனிப்பட்ட முறையில் கல்வி பயில வசதி செய்ய வேண்டும் என்று மாநில திட்டக் குழு பொதுவாகப் பரிந்துரைத்திருந்தது. அப்பரிந்துரைக்கேற்ப இந்நடவடிக்கை பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளது.

சிறப்புப் பள்ளிகள்.

33. ஐந்து வயதுக்கும் குறைந்த சிறுவர் சிறுமியருக்கான 40 இளஞ்சிறார் பள்ளிகள், கல்வித் துறையினால் ஒப்புதலும், மானியமும் வழங்கப்பட்டு நடத்தப்படுகின்றன. இவை



பெரும்பாலும் நகர்ப்புற பகுதிகளில் உள்ளன. கிராமப் பகுதிகளில் குழந்தைகள் காப்பகங்கள் ஊராட்சி ஒன்றியங்களினால் நடத்தப்படுகின்றன.

தொழில் புகுமுகப் பயிற்சி நிலையங்கள்.

34. தொடக்கப் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு படிப்பை நிறுத்திவிட்ட 11—14 வயதுத் தொகுதியிலுள்ள இளஞ்சிறார்களுக்கு இந்திய அரசு தொடங்கிய தொழில் புகுமுகப் பயிற்சித் திட்டத்தின்கீழ் இம்மாநிலத்தில் 6 நிலையங்களில் புகுமுகத் தொழிற் பயிற்சி வழங்கப்படுகிறது.

உடற் குறையுள்ள சிறுவர்களுக்கான பள்ளிகள்.

35. உடல் ஊனமுற்ற சிறுவர்களுக்காகத் தற்போது இம்மாநிலத்தில் 27 பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. பார்வை இழந்த சிறுவர்களுக்காக 12 பள்ளிகளும், காது கேட்காத சிறுவர்களுக்காக 12 பள்ளிகளும், தொழு நோயால் வருந்தும் சிறுவர்களுக்காக 2 பள்ளிகளும், முடமாயுள்ள சிறுவர்களுக்காக 1 பள்ளியும் நடைபெற்று வருகின்றன. இப்பள்ளிகளில் 2,700-க்கு மேற்பட்ட மாணவர்கள் தற்போது பயின்று வருகின்றனர். காது கேட்காத சிறுவர்களுக்காக 1974—75-ல் தருமபுரி மாவட்டத்தில் மேலும் 1 பள்ளியைத் திறக்கக் கருதப்பட்டுள்ளது.

36. தனியார் நிறுவனங்களால் நடத்தப்படும் 379 அனாதை இல்லங்களில் ஏறத்தாழ 67,000 அனாதைச் சிறுவர்கள் உள்ளனர். இந்த அனாதை இல்லங்களுக்கு மாநில நிதியிலிருந்து நிதி உதவி அளிக்கப்படுகிறது.

வயது வந்தோருக்கான கல்வி.

37. 1974—75-ல் சேலம் மாவட்டத்தில் முதியோர் கல்வி நிலையங்களை தொடங்கி 1 லட்சம் முதியோர்களுக்கு எழுத்தறிவு அளிக்க கருதப்பட்டுள்ளது. 1974—75 வரவு-செலவுத் திட்டத்தில் இதற்காக ரூ. 4·84 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ''வேளாண்மைத் தொழிலோடு இணைந்த எழுத்தறிவிப்பு'' நிலையங்களுக்காகும் செலவையும் சேர்த்தால், முதியோர் கல்விக்காக 1974—75-ல் மொத்தம் ரூ. 6·42 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இளைஞர் நிலையங்கள்.

38. 1973 நவம்பர் திங்களில் மத்திய கல்வி அமைச்சகத்தால் தமிழ்நாட்டில் நேரு இளைஞர் நிலையங்கள் நான்கு திறக்கப்பட்டன. இந்த நிலையங்கள் தற்போது கடலூர், ராணிப்

பேட்டை, மேட்டூர் அணை, முசிறி ஆகிய இடங்களில் செயல் பட்டு வருகின்றன. பிற நடவடிக்கைகளுடன் இந்நிலையங்கள், பள்ளிப்படிப்பை நிறுத்திவிட்ட இளைஞர்களுக்குக் கல்வி அளிக்கும் திட்டங்களையும் மேற்கொள்ளும். வெகு தொலைவி லுள்ள டில்லியிலிருந்து இவை நிர்வகிக்கப்படுவதற்குப் பதிலாக இந்நிலையங்களை மாநில அரசின் நேரடி நிர்வாகத்தின்கீழ் கொண்டுவந்தால் அவை வெற்றிகரமான முறையில் செயல்படும் என்ற கருத்தை இந்த அரசு இந்திய அரசுக்கு வலியுறுத்தியுள்ளது.

விளையாட்டுக்களும் உடல்பயிற்சிக் கல்வியும்.

39. மாணவர்களிடையே மட்டுமின்றி பொதுமக்களிடை யேயும் விளையாட்டுக் கலைகளைப் பரப்புவதில் மாநில விளையாட்டுக் கழகமும், மாவட்ட விளையாட்டுக் கழகங்களும் பெரும்பங்கு ஆற்றி வருகின்றன. இதுவரை எட்டு மாவட்டங் களில் விளையாட்டு அரங்கங்கள் கட்டப்பட்டுள்ளன. 1974-75-ல் மேலும் ஒரு மாவட்டத்தில் விளையாட்டு அரங்கத்தைக் கட்டுவதற்கு மானியம் வழங்கப்படும்.

சாரணர், சாரணியர் இயக்கங்கள்.

40. 1974-75-ல் தமிழ் நாடு, பாரத சாரணர், சாரணியர் சங்கத்தின் மொத்த உறுப்பினர்கள் 73,504. 1974-75-ல் கூடுதலாக 14,000 சிறுவர்கள் சாரண இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

பள்ளிக் கல்வி நிர்வாகம்.

41. தொடக்கக் கல்விப் பிரச்னைகள் குறித்து சீரிய நாட்டம் செலுத்தும் நோக்குடன், பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் உள்ள இணை இயக்குநர் ஒருவரைத் தொடக்கக் கல்விப் பொறுப்பில் நியமிக்கக் கருதப்பட்டுள்ளது. தொடக்கப் பள்ளிக் கல்வி பற்றிய கொள்கைப் பிரச்னைகளுக்குப் பொறுப்பு, உயர்நிலைப் பள்ளிக் கல்வியுடன் ஒருங்கிணைப்பு, பள்ளிக் கல்வித் துறைக் கான முழுப் பொறுப்பு ஆகியவை பள்ளிக் கல்வி இயக்குந ரிடமே இருக்கும். தொடக்கக் கல்வி குறித்த அன்றாட பிரச்னைகளை முடிவு செய்யும் அதிகாரம் இணை இயக்குநருக் குத் தரப்படும்.

42. தொடக்கப் பள்ளிகளில் கல்வி மேம்பாட்டையும் மேற்பார்வையையும் தற்போது 381 சரக அதிகாரிகள் கவ னித்து வருகின்றனர். தொடக்கப் பள்ளி ... அதிகாரிக்






கும் பணியை நன்கு நிறைவேற்ற 1974–75ஆம் ஆண்டில் மேலும் முதுநிலை பள்ளித் துணை ஆய்வாளர்கள் 15 பேர் நியமிக்கப்படுவர்.

(ஙு) ஆசிரியர் நலன்.

43. தமிழ்நாட்டில் தற்போது 2·39 லட்சம் ஆசிரியர்கள் பள்ளிகளில் பணியாற்றி வருகிறார்கள். நிர்வாக வாரியாக ஆசிரியர்களின் விவரங்கள் வருமாறு :

| பள்ளிகள். | ஆண். | பெண். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| தொடக்கப் பள்ளிகள் .. | 67,408 | 38,924 | 1,06,332 |
| நடுநிலைப் பள்ளிகள் .. | 36,716 | 30,127 | 66,843 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. | 45,810 | 20,149 | 65,959 |
| மொத்தம் .. | 1,49,934 | 89,200 | 2,39,134 |

நிர்வாக வாரியாக ஆசிரியர் எண்ணிக்கை.

| பள்ளிகள். | அரசு. | அரசு (கழக). | ஊராட்சி ஒன்றியம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| தொடக்கப் பள்ளிகள் .. | 7,075 | .. | 62,315 |
| நடுநிலைப் பள்ளிகள் .. | 3,253 | .. | 28,577 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. | 6,055 | 29,172 | .. |
| மொத்தம் .. | 16,383 | 29,172 | 90,892 |

| பள்ளிகள். | நகராட்சி. | தனியார். | மொத்தம். |
|---|---|---|---|
| | (5) | (6) | (7) |
| தொடக்கப் பள்ளிகள் .. | 9,181 | 27,761 | 1,06,332 |
| நடுநிலைப் பள்ளிகள் .. | 6,545 | 28,468 | 66,843 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. | 4,331 | 26,401 | 65,959 |
| மொத்தம் .. | 20,057 | 82,630 | 2,39,134 |

[1974 மார்ச் 20

44. வேறுபல மாநிலங்களைப் போல் அல்லாமல், தமிழ் நாட்டில் மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களின் ஊதியச் செலவு முழுவதையும் மாநில அரசே ஏற்றுக்கொள்ளுகிறது. இம்மாநிலத்தில் உள்ள பள்ளிகள் அனைத்திலும் பணியாற்றும் ஆசிரியர்கள் அனைவருக்கும் ஊதியம் கொடுத்திட ஆன செலவு, 1970–71-ல் சுமார் ரூ. 55 கோடியாக இருந்தது, 1974–75-ல் சுமார் ரூ. 80 கோடியாக உயரும்.

45. கடந்த ஆண்டு மாநிலச் சட்ட மன்றம், தமிழ் நாடு தனியார் பள்ளிகள் முறைப்படுத்துதல் சட்ட வரைவை நிறைவேற்றியது. அச்சட்டத்துக்குக் குடியரசுத் தலைவரின் இசைவு எதிர்பார்க்கப்படுகிறது. தனியார் பள்ளி ஆசிரியர்களின் பணி நிலைமைகளுக்குச் சட்டப்படி பாதுகாப்பு அளித்திட இச்சட்டம் வகை செய்யும். தனியார் பள்ளி நிர்வாகிகள் தங்கள் பள்ளிகளை செவ்விய முறையில் நடத்தவும் அச்சட்டம் ஊக்குவிக்கும்.

46. உயர்நிலைப் பள்ளிகளில் பி.டி. ஆசிரியர்கள், முதல் நிலைத் தமிழாசிரியர்கள் சிறப்புத் துறை ஆசிரியர்கள் ஆகியோரில் பத்து ஆண்டு காலம் பணியாற்றியுள்ளோர்க்கு 1—4—1973 முதல் தேர்வு நிலைப் பதவிகள் அளிக்கப்பட்டுள்ளன.

47. 1974 சனவரி முதல் நாள் முதல், தமிழாசிரியர்களில் முதல் நிலைப் பதவிகளுக்கு மட்டுமே புதிய நியமனம் செய்யப்படும் என்று அரசு முடிவு செய்துள்ளது. முதல் நிலை பதவிக்குத் தகுதியுள்ள இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் அனைவரும் முதல் நிலை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு உள்ளனர். முதல் நிலை ஆசிரியருக்குத் தகுதி பெறாத இரண்டாம் நிலைத் தமிழ் ஆசிரியர்களுள், 1—1—1974 அன்று 10 ஆண்டுகள் பணி செய்து முடித்துள்ள இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களும், தனிச்சலுகையாக, முதல் நிலை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இதனால், தமிழ் ஆசிரியர்களின் பணி நிலைகள் உயர்வதோடு தமிழ் பயிற்றுவிக்கும் தரமும் உயரும் என்று நம்பப்படுகிறது.

48. அரசுப் பணியில் இல்லாத (தனியார், மற்றும் உள்ளாட்சி மன்றப் பள்ளி) ஆசிரியர்களுக்கான ஓய்வூதிய விதிகள் கடந்த சில ஆண்டுகளில் தாராளமாக்கப்பட்டுள்ளன. முதன் முதலாக, அரசுப் பணியிலுள்ள ஆசிரியர்களுக்கும், அரசுப் பணியிலில்லாத ஆசிரியர்களுக்கும் ஒரே நிகரான ஓய்வூதிய நலன்களை அளிக்கும் பெருமை தமிழ் நா... ...



1974 மார்ச் 20]

மானியம் பெறும் தனியார் பள்ளிகளில் பணி
எனலாம். மானியம் பெறும் தனியார் பள்ளிகளில் பணி
யாற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கும், 1972
ஏப்ரல் 1 ஆம் நாள்முதல், மாநில அரசுப் பணியாளர்களை ஒப்ப
ஓய்வூதியப் பயன்கள் தரப்பட்டுள்ளன. மானியம் பெறும்
பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு, அரசுப் பணி
யில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள
தைப்போலவே, விடுப்பை ரொக்கமாக்கிக்கொள்ளும் உரிமை
உட்பட, விடுப்பு நலன்களும் தரப்பட்டுள்ளன.

49. மாநில அரசுப் பணியாளர்களுக்கான தமிழ்நாடு
குடும்பநல நிதித் திட்டம், அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்குத்
தானுகவே பொருந்தும். மானியம் பெறும் பள்ளி ஆசிரி
யர்களுக்கும் அத்திட்டம் 1—1—1974 முதல் விரிவாக்கப்
பட்டுள்ளது. ஆசிரியர் நலனுக்கான தேசிய அமைப்பின்
திட்டத்தின் கீழ் நிதி உதவி பெறத் தகுதி பெற்ற 1,000
ஆசிரியர்களுக்கு 1973–74 ஆம் ஆண்டில் ரூ. 3·7 லட்சம்
நிதி உதவி கொடுக்கப்பட்டது.

50. ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் தொடக்கப் பள்ளி
ஆசிரியர்கள் இருவருக்கும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள்
இருவருக்கும் மாநில அரசு விருதுகள் வழங்கும் திட்டம்
தொடர்ந்து செயல்படுகிறது. கொடைக்கானலில் உள்ள
மதுரை மாவட்ட ஆசிரியர் இல்லத்திற்கும், உதக மண்டலத்
தில் நீலகிரி மாவட்ட ஆசிரியர்களுக்காக உள்ள இல்லத்
திற்கும் ஒவ்வொன்றிற்கும் ரூ. 1 லட்சம் மானியம் வழங்கப்
பட்டுள்ளது.

## IV. கல்லூரிக் கல்வி.

இம்மாநிலத்தில் 1961–62 ஆம் ஆண்டில் 59 கல்லூரி
கள் செயல்பட்டு வந்தன. 1973–74-ல் 178 கல்லூரிகள்
செயல்பட்டு வருகின்றன. 1961–62-ல் கல்லூரிகளில் மாண
வர்களின் எண்ணிக்கை 45,000 ஆக இருந்தது. 1973–74-ல்
1·95 லட்சமாக இந்த எண்ணிக்கை உயர்ந்துள்ளது.

2. இம்மாநிலத்தில் கடந்த சில ஆண்டுகளில் பள்ளி இறு
தித்தேர்வு (எஸ்.எஸ்.எல்.சி.) எழுதிய மாணவர்கள், தேர்
வில் தேர்ச்சி அடைந்த மாணவர்கள், இம்மாநிலத்திலுள்ள

[1974 மார்ச் 20

மூன்று பல்கலைக் கழகங்களில் சேர்ந்த மாணவர்கள் எண்ணிக்கை பற்றிய விவரம் வருமாறு :—

| | எஸ்.எஸ்.எல்.சி. எழுதிய மாணவர்கள். | எஸ்.எஸ்.எல்.சி. தேறிய மாணவர்கள். | கல்லூரியில் சேர்ந்த மாணவர்கள் (புகுமுக வகுப்பில்). | |
|---|---|---|---|---|
| ஏப்ரல் 1968 | 1,96,272 | 91,181 | 1968–69 | 60,000 |
| ஏப்ரல் 1969 | 1,82,829 | 91,794 | 1969–70 | 66,000 |
| மார்ச் 1970 | 1,91,853 | 1,03,974 | 1970–71 | 70,000 |
| ஏப்ரல் 1971 | 1,93,059 | 1,11,823 | 1971–72 | 76,814 |
| மார்ச் 1972 | 2,01,950 | 1,19,122 | 1972–73 | 80,506 |
| மார்ச் 1973 | 1,93,686 | 96,903 | 1973–74 | 72,646 |
| மார்ச் 1974 தோராயமாக. | 1,94,000 | .. | .. | .. |

3. பள்ளிகளில் சேர்க்கப்படும் மாணவர்கள் எண்ணிக்கை பெருகியதால் கல்லூரிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கையும் பெருகிவந்துள்ளது. நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 40 புதிய கல்லூரிகள்தான் தொடங்க வேண்டும் என்று முதலில் முடிவு செய்திருந்தபோதிலும், கல்லூரி மாணவர் எண்ணிக்கைப் பெருக்கம் காரணமாக 56 புதிய கல்லூரிகள் நான்காம் திட்டக் காலத்தில் தொடங், கப்பட்டுள்ளன.

4. மேலும் கல்லூரிகளைத் தொடங்குவதன் அவசியத்தை ஆய்வு செய்யவேண்டிய நிலையை நாம் தற்போது அடைந் துள்ளோம். தற்போதுள்ள புள்ளி விவரங்களின்படி, 1973–74-ல் தற்போதுள்ள கல்லூரிகளிலேயே 10,000-க்கும் மேற்பட்ட கல்லூரி புகுமுக வகுப்பு இடங்கள் காலியாக இருந்தன. இதிலிருந்து நகர்ப்புறங்களில் ஒருசில கல்லூரி களில் சேருவதற்கே மாணவர்கள் நெருக்கி முன்வருகின் றனர் என்பதும், ஆனால் கிராமப் பகுதிகளில் உள்ள கல் லூரிகளில் இப்போதே பல இடங்கள் காலியாக இருந்து வருகின்றன என்பதும் தெரியவரும். எனவே புதிய கல் லூரிகளைத் தொடங்க நாம் அனுமதிக்கும் முன்னர், தற் போதுள்ள கல்லூரிகளில் உள்ள இடங்கள் அனைத்தும் நிரப் பப்பட வேண்டுவது விரும்பத்தக்கதாகும். தற்போதுள்ள கல்லூரிப் படிப்பு வசதிகளை இன்னும் பெருக்குவதற்குப் பதி லாக கல்லூரிக் கல்வித் தரத்தை மேம்படுத்த அதிக நாட்டம் செலுத்துவதே சாலச் சிறந்ததாகும். ஐந்தாவது திட்டக் காலத்தில் புதிய கல்லூரிகளைத் தொடங்குவதற்கு அனுமதி அளிக்குமுன் இதனை ஆக [illegible]



1974 மார்ச் 20]

நமது மாநிலத்தில் தற்போதுள்ள 178 கல்லூரிகளில்
5. நமது மாநிலத்தில் தற்போதுள்ள 178 கல்லூரிகளில்
104 கல்லூரிகள் சென்னைப் பல்கலைக் கழகத்துடனும்,
74 கல்லூரிகள் மதுரைப் பல்கலைக் கழகத்துடனும் இணைந்
துள்ளன. ஒரு பல்கலைக் கழகம் தனது கல்விப் பொறுப்
புகள் முழுவதையும் நன்கு நிறைவேற்ற, அதனுடன் சேர்ந்த
கல்லூரிகளின் எண்ணிக்கை, மிஞ்சிப்போனால் 30 அல்லது
40-க்கு அதிகமாக இருக்கக் கூடாது என்று கஜேந்திரகட்கர்
குழு பரிவுரைத்துள்ளது. எனவே, தமிழ் நாட்டில் மேலும்
ஒன்று அல்லது இரண்டு புதிய பல்கலைக் கழகங்களை ஏற்படுத்த
வலுவான நியாயம் உள்ளது. நமது மாநிலத்திலுள்ள
நிலைமையை தெளிவாக மதிப்பிட்டு, அதன்பின் தமிழ்நாட்டில்
மேலும் ஓரிரு பல்கலைக் கழகங்களை ஏற்படுத்த பல்கலைக் கழக
மானியக்குழு தனது இசைவை அளிக்கும் என்று அரசு
நம்புகிறது.

6. தமிழ் நாட்டிலுள்ள 178 கல்லூரிகளில் 51 கல்லூரிகள்
அரசால் நேரடியாக நடத்தப்படுகின்றன. ஏனைய 127
கல்லூரிகள் மானியம் பெறும் தனியார் கல்லூரிகளாகும்.
1973–74 ஆம் ஆண்டில் கல்லூரிக் கல்விக்கான மொத்த
வரவு–செலவுத்திட்ட ஒதுக்கமாகிய ரூ. 11·28 கோடியில்
ரூ. 3·51 கோடி தனியார் கல்லூரிகளுக்கு உதவி மானியமாகச்
செலவிடப்பட்டது. 1973–74 ஆம் ஆண்டில் 51 அரசுக்
கல்லூரிகளில் சுமார் 51,000 மாணவர்கள் பயின்றனர்.
மானியம் பெறும் 127 கல்லூரிகளில் 1,45,000 மாணவர்கள்
பயின்றனர். தனியார் கல்லூரிகளுக்கு உதவி மானியம்
வழங்குவதற்கான நடைமுறை சீராக்கப்பட்டு, கடந்த ஆண்டி
லிருந்து நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. அரசுக்
கல்லூரி ஆசிரியர்களைப்போல அதே சம்பள வீதமும்,
ஏனையப் படிகளும், மானியம் பெறும் கல்லூரிகளில் பணி
யாற்றும் ஆசிரியர்களுக்கும் கொடுக்க வகை செய்து தனியார்
கல்லூரி மானியம் கணக்கிடப்படுகிறது. பட்ட மேற்படிப்புக்
கல்லூரிகளின் முதல்வர்கள், பட்ட மேற்படிப்புப் பாடமுறைப்
பேராசிரியர்கள் ஆகியோரின் சம்பள வீதங்கள் மானியம்
பெறும் கல்லூரிகளில் உள்ளவர்களுக்கும் விரிவாக்கப்
பட்டுள்ளன. மானியம் பெறும் கல்லூரிகளிலுள்ள ஆசிரியப்
பணியாளர்களுக்கும் தாராள ஓய்வூதியத் திட்டமும்
விரிவாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்க சாதனையாகும்.

7. அரசாங்கக் கோட்பாடான "சமூக நீதியை" செயல்
படுத்துவதில் அரசுக் கல்லூரிகளுக்கு முக்கிய பங்கு உண்டு.
பள்ளிப் படிப்புக்கு மேலும் கல்வி கற்க விருப்பமுள்ளவர்கள்
[illegible] தனியார் கல்லூரிகளில் சேர்ந்து படிக்க இயலாது

மூன்று பல்கலைக் கழகங்களில் சேர்ந்த மாணவர்கள் எண்ணிக்கை பற்றிய விவரம் வருமாறு :— [1974 மார்ச் 20

| | எஸ்.எஸ்.எல்.சி. எழுதிய மாணவர்கள். | எஸ்.எஸ்.எல்.சி. தேறிய மாணவர்கள். | | கல்லூரியில் சேர்ந்த மாணவர்கள் (புகுமுக வகுப்பில்). |
|---|---|---|---|---|
| ஏப்ரல் 1968 | 1,96,272 | 91,181 | 1968–69 | 60,000 |
| ஏப்ரல் 1969 | 1,82,829 | 91,794 | 1969–70 | 66,000 |
| மார்ச் 1970 | 1,91,853 | 1,03,974 | 1970–71 | 70,000 |
| ஏப்ரல் 1971 | 1,93,059 | 1,11,823 | 1971–72 | 76,814 |
| மார்ச் 1972 | 2,01,950 | 1,19,122 | 1972–73 | 80,506 |
| மார்ச் 1973 | 1,93,686 | 96,903 | 1973–74 | 72,646 |
| மார்ச் 1974 | 1,94,000 தோராயமாக. | .. | .. | .. |

3. பள்ளிகளில் சேர்க்கப்படும் மாணவர்கள் எண்ணிக்கை
பெருகியதால் கல்லூரிகளில் சேரும் மாணவர்களின் எண்
ணிக்கையும் பெருகிவந்துள்ளது. நான்காவது ஐந்தாண்டுத்
திட்ட காலத்தில் 40 புதிய கல்லூரிகள்தான் தொடங்க
வேண்டும் என்று முதலில் முடிவு செய்திருந்தபோதிலும்,
கல்லூரி மாணவர் எண்ணிக்கைப் பெருக்கம் காரணமாக
56 புதிய கல்லூரிகள் நான்காம் திட்டக் காலத்தில் தொடங்,
கப்பட்டுள்ளன.

4. மேலும் கல்லூரிகளைத் தொடங்குவதன் அவசியத்தை
ஆய்வு செய்யவேண்டிய நிலையை நாம் தற்போது அடைந்
துள்ளோம். தற்போதுள்ள புள்ளி விவரங்களின்படி,
1973–74-ல் தற்போதுள்ள கல்லூரிகளிலேயே 10,000-க்கும்
மேற்பட்ட கல்லூரி புகுமுக வகுப்பு இடங்கள் காலியாக
இருந்தன. இதிலிருந்து நகர்ப்புறங்களில் ஒருசில கல்லூரி
களில் சேருவதற்கே மாணவர்கள் நெருக்கி முன்வருகின்
றனர் என்பதும், ஆனால் கிராமப் பகுதிகளில் உள்ள கல்
லூரிகளில் இப்போதே பல இடங்கள் காலியாக இருந்து
வருகின்றன என்பதும் தெரியவரும். எனவே புதிய கல்
லூரிகளைத் தொடங்க நாம் அனுமதிக்கும் முன்னர், தற்
போதுள்ள கல்லூரிகளில் உள்ள இடங்கள் அனைத்தும் நிரப்
பப்பட வேண்டுவது விரும்பத்தக்கதாகும். தற்போதுள்ள
கல்லூரிப் படிப்பு வசதிகளை இன்னும் பெருக்குவதற்குப் பதி
லாக கல்லூரிக் கல்வித் தரத்தை மேம்படுத்த அதிக நாட்டம்
செலுத்துவதே சாலச் சிறந்ததாகும். ஐந்தாவது திட்டக்
காலத்தில் புதிய கல்லூரிகளைத் தொடங்குவதற்கு அனுமதி
அளிக்குமுன் இதனை அரசு கருத்தில் கொள்ளும்.



1974 மார்ச் 20]

5. நமது மாநிலத்தில் தற்போதுள்ள 178 கல்லூரிகளில் 104 கல்லூரிகள் சென்னைப் பல்கலைக் கழகத்துடனும், 74 கல்லூரிகள் மதுரைப் பல்கலைக் கழகத்துடனும் இணைந்துள்ளன. ஒரு பல்கலைக் கழகம் தனது கல்விப் பொறுப்புகள் முழுவதையும் நன்கு நிறைவேற்ற, அதனுடன் சேர்ந்த கல்லூரிகளின் எண்ணிக்கை, மிஞ்சிப்போனால் 30 அல்லது 40-க்கு அதிகமாக இருக்கக் கூடாது என்று கஜேந்திரகட்கர் குழு பரிவுரைத்துள்ளது. எனவே, தமிழ் நாட்டில் மேலும் ஒன்று அல்லது இரண்டு புதிய பல்கலைக் கழகங்களை ஏற்படுத்த வலுவான நியாயம் உள்ளது. நமது மாநிலத்திலுள்ள நிலைமையை தெளிவாக மதிப்பிட்டு, அதன்பின் தமிழ்நாட்டில் மேலும் ஓரிரு பல்கலைக் கழகங்களை ஏற்படுத்த பல்கலைக் கழக மானியக்குழு தனது இசைவை அளிக்கும் என்று அரசு நம்புகிறது.

6. தமிழ் நாட்டிலுள்ள 178 கல்லூரிகளில் 51 கல்லூரிகள் அரசால் நேரடியாக நடத்தப்படுகின்றன. ஏனைய 127 கல்லூரிகள் மானியம் பெறும் தனியார் கல்லூரிகளாகும். 1973–74 ஆம் ஆண்டில் கல்லூரிக் கல்விக்கான மொத்த வரவு–செலவுத்திட்ட ஒதுக்கமாகிய ரூ. 11·28 கோடியில் ரூ. 3·51 கோடி தனியார் கல்லூரிகளுக்கு உதவி மானியமாகச் செலவிடப்பட்டது. 1973–74 ஆம் ஆண்டில் 51 அரசுக் கல்லூரிகளில் சுமார் 51,000 மாணவர்கள் பயின்றனர். மானியம் பெறும் 127 கல்லூரிகளில் 1,45,000 மாணவர்கள் பயின்றனர். தனியார் கல்லூரிகளுக்கு உதவி மானியம் வழங்குவதற்கான நடைமுறை சீராக்கப்பட்டு, கடந்த ஆண்டிலிருந்து நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. அரசுக் கல்லூரி ஆசிரியர்களைப்போல அதே சம்பள வீதமும், ஏனையப் படிகளும், மானியம் பெறும் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் கொடுக்க வகை செய்து தனியார் கல்லூரி மானியம் கணக்கிடப்படுகிறது. பட்ட மேற்படிப்புக் கல்லூரிகளின் முதல்வர்கள், பட்ட மேற்படிப்புப் பாடமுறைப் பேராசிரியர்கள் ஆகியோரின் சம்பள வீதங்கள் மானியம் பெறும் கல்லூரிகளில் உள்ளவர்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளன. மானியம் பெறும் கல்லூரிகளிலுள்ள ஆசிரியப் பணியாளர்களுக்கும் தாராள ஓய்வூதியத் திட்டமும் விரிவாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்க சாதனையாகும்.

7. அரசாங்கக் கோட்பாடான '' சமூக நீதியை '' செயல்படுத்துவதில் அரசுக் கல்லூரிகளுக்கு முக்கிய பங்கு உண்டு. பள்ளிப் படிப்புக்கு மேலும் கல்வி கற்க விருப்பமுள்ளவர்கள் அனைவரும் தனியார் கல்லூரிகளில் சேர்ந்து படிக்க இயலாது

போகலாம். தனியார் நிறுவனங்களில் ஏற்படும் கல்விச் செலவை கொடுக்க இயலாதவர்களும், சமுதாயத்தில் சமூக, பொருளாதார, கல்வித் துறைகளில் பின் தங்கிய பிரிவுகளைச் சார்ந்தவர்களுமான, மாணவர்களுக்கு அரசுக் கல்லூரிகள் இடம் கொடுத்து கல்லூரிக் கல்வி பெற உதவுகின்றன.

8. இம்மாநிலத்தில் 1973–74ல் அரசுக் கல்லூரி மாணவர் ஒருவரிடமிருந்து கிடைக்கும் வருவாய், செலவை விட மிகக் குறைவாகவே உள்ளது என்பதைப் பின்வரும் புள்ளி விவரம் காட்டும். அரசு அவர்களுக்கு எந்த அளவுக்கு உதவித்தொகை அளிக்கிறது என்பது இதிலிருந்து தெளிவாகும்.

| | கல்லூரி புகுமுக வகுப்பு. | | பட்ட வகுப்பு. | | பட்ட மேற்படிப்பு. | |
|---|---|---|---|---|---|---|
| | கலை. | அறிவியல். | கலை. | அறிவியல். | கலை. | அறிவியல். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| ஆண்டொன்றுக்கு ஒரு மாணவருக்கு ஆகும் செலவு (ரூபாய்) .. | 380 | 500 | 410 | 600 | 775 | 11,20 |
| ஆண்டொன்றுக்கு ஒவ்வொரு மாணவரிடமிருந்தும் கிடைக்கும் கட்டணம் (ரூபாய்) .. | .. | .. | 183 | 183 | அரசுக் கல்லூரிகளில் ரூ. 250 தனியார் கல்லூரிகளில் ரூ. 300-லிருந்து ரூ. 360வரை | |

9. வரும் ஐந்தாவது திட்டக் காலத்தில் அரசுக் கல்லூரி
களில் கல்வித்தர மேம்பாடு குறித்து நாட்டம் செலுத்து
வதே முதன்மையான பணியாக இருக்கும், இம் மாநிலத்தின்
முதன்மையான இரண்டு அரசுக் கல்லூரிகளான மாநிலக் கல்
லூரியையும், ராணி மேரி கல்லூரியையும் பட்ட மேற்படிப்பு
அளவில் குறிப்பிட்ட பாடத்துறைகளில் சிறப்புக் கல்வி தரும்
நிலையங்களாக மேம்படுத்துவது பற்றி அரசு தீவிரமாக ஆய்வு
செய்து வருகிறது. அறிவியல் கல்வியை வளர்க்கும் பொருட்டு
அரசுக் கல்லூரிகளில் உள்ள ஆய்வுக்கூட வசதிகள் பெருக்கப்



படும். அதிக விலையுள்ள பாடப் புத்தகங்களை வாங்க இயலாத மாணவர்கள் பயன்படுத்துவதற்காக அரசுக் கல்லூரிகளில், தமிழ்ப் பாடப்புத்தகங்கள் உட்பட, அனைத்துப் பாடப் புத்தகங்களும், பொது அறிவிற்கான புத்தகங்களும் சேமித்துவைத்து வழங்கப்படும். அரசுக் கல்லூரிகளில் மாணவர்கள் வசதிக்காக உணவருந்தும் இடங்கள், சிற்றுண்டிச் சாலைகள், சைக்கிள் நிறுத்துமிடம் போன்றவற்றை அமைக்கவும் தாராளமாக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. அரசுக் கல்லூரிப் பணியாளர்களுக்கு வீடுகள் கட்டித்தர, 1974–75 ல் ரூ. 4 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. விளையாட்டுத் திடல்களைப் பேணி மேலும் வசதிகளைச் செய்வதற்கும் விளையாட்டுக்கான வேறு வசதிகளின் வளர்ச்சிக்கும் செலவிட நிதி ஒதுக்கப்படும்.

10. 1974–75-ல் மேலும் ஒரு அரசுக் கல்லூரியைத் தொடங்குவதற்கும், புதிய தனியார் கல்லூரிகள் இரண்டிலுக்கு அரசு மானியம் அளிக்கத் தொடங்குவதற்கும் 1974–75 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் படிப்படியாக செய்யப்பட்டு வருவதுபோல், 1974–75லும் அரசுக் கல்லூரிகளில் புதிய பட்டப் படிப்புப் பாடமுறைகளும், புதிய பட்ட மேற்படிப்புப் பாடமுறைகளும் தொடங்கப்படும்.

11. பகுதி நேரக் கல்வி வசதியை அனைவருக்கும் அளிப்பதற்குத் தற்போது முதன்மை அளிக்கப்பட்டு வருகிறது. இந்நோக்கத்துடன் மாலை நேர வகுப்புக்களும் அஞ்சல் முறைப் பாடப் பயிற்சிகளும், நடத்தப் படுகின்றன. கடந்த ஆண்டில் மாலை நேரக் கல்லூரி வகுப்புகளில் பயின்ற மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 8,800 ஆகும். 1974–75ல் மாலை நேர பட்டப்படிப்பு வசதிகளும், பட்ட மேற்படிப்பு வசதிகளும் விரிவாக்கப்படும். அஞ்சல் முறையில் கல்லூரி வகுப்பு நடத்திட மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு அரசு நிதியுதவி அளித்துள்ளது. இந்த அஞ்சல் வழிப்படிப்பு மாணவர்களின் பேராதரவைப் பெற்றுள்ளது மகிழ்ச்சிக்குரியதாகும்.

### கல்லூரி ஆசிரியர்கள் தகுதி வளர்ச்சி

12. கல்லூரி ஆசிரியர்களின் ஊதிய வீதங்களில் கணிசமான உயர்வுக்கு இரண்டாவது சம்பள ஆணைக் குழு வகை செய்துள்ளது. சிறந்த தகுதியுள்ளவர்கள் ஆசிரியர் தொழிலில் சேர முன் வருவதற்கு இது தூண்டுகோலாக உள்ளது. இது தவிர சாதாரணப் பேராசிரியர்களைவிட உயர்ந்த சம்பள வீதத்தில் அரசுக் கல்லூரிகளில் முதல்

நிலைப் பேராசிரியர் பதவிகள் 29 ஏற்படுத்தப் பட்டுள்ளன. இவற்றில் 50 விழுக்காடு பதவிகளுக்குத் தற்போதுள்ள பேராசிரியர்கள் பதவி உயர்வு கொடுத்து நியமிக்கப்படுவர். மீதி 50 விழுக்காடு பதவிகள் டாக்டர் பட்டம் பெற்றவர்களிடையே இருந்து நேரடித் தேர்வு நடத்தி நிரப்பப்படும். ஏற்கனவே பணியாற்றும் பேராசிரியர்களை முதல் நிலைப் பேராசிரியர்களாக பதவி உயர்வு கொடுக்கும் போது டாக்டர் பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

படிப்புதவித் தொகைகளும், பயிற்சி உதவித் தொகைகளும்

13. கல்லூரிப் புகுமுகப் படிப்பு அளவில் இலவசக் கல்வி அளிக்கும் ஒருசில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இத் திட்டத்தினால் அரசுக்கு ஆண்டுதோறும் ரூ. 2 கோடி செலவாகிறது. வேறு பல திட்டங்களின் கீழும் படிப்புதவித் தொகைகளும், பயிற்சி உதவித் தொகைகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் முக்கியமானவை வருமாறு:—

| திட்டம். | புதியதாகப் படிப்பு உதவித் தொகை பெற்றவர்கள் எண்ணிக்கை. | | மொத்தம் படிப்புதவித் தொகைகள் எண்ணிக்கை புதியவையும் புதுப்பிக்கப் பட்டவையும். | |
|---|---|---|---|---|
| | 1972-73. | 1973-74. | 1972-73. | 1973-74. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| தேசிய படிப்புத் உதவித் தொகைத் திட்டம் | 700 | 850 | 2,494 | 2,480 |
| ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் தேசியப் படிப்புதவித் தொகை .. .. | 47 | 47 | 249 | 264 |
| தேசியக்கடன் படிப்பு உதவித் தொகைத் திட்டம் .. .. | 1,499 | 749 | 6,999 | 5,264 |

அரிசன மாணவர்களும், பழங்குடி மாணவர்களும், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களும் அரிசன நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆகிய துறைகளிடமிருந்து படிப்புதவித் தொகைகள் பெற்று வருகின்றனர்.

14. படிப்புதவித் தொகைத் திட்டங்களில் கல்லூரிக் கல்வி இயக்குநர் பொறுப்பில் உள்ளவற்றிற்கு மட்டும் 1974—75 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு சுமார் ரூ. 1,24 லட்சமாகும்.



15. தாய்மொழியைப் பயிற்றுமொழியாகப் பின்பற்றும்
நடைமுறை, கல்விச் சீரமைப்புக்கு உகந்ததாக இருப்பதோ
டல்லாமல், சமுதாய மாற்றத்திற்கும் முன்னேற்றத்திற்கும்
உறுதுணையாக விளங்கும் என்றும், அது சமுதாயத்தின் பின்
தங்கிய பிரிவினர் கல்வி வசதி பெற வகை செய்யும் என்றும்
நாடெங்குமுள்ள கல்வித்துறை வல்லுநர்கள் எடுத்துக்காட்டி
வந்துள்ளார்கள். அவ்வாறே, அரசுக் கல்லூரிகளில் தமிழ்
மூலமாகவும் பாடம் கற்பிப்பதற்கான வசதிகளை அரசு
அளித்து வந்துள்ளது. 1973—74-ல் அனைத்து அரசுக் கல்லூரி
களிலும், மானியம் பெறும் கல்லூரிகளிலும் தமிழ்ப்பாட
மொழி வகுப்புகளில் பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை
வருமாறு:—

| | | |
|---|---|---|
| புகுமுக வகுப்பு | .. .. .. | 18,355 |
| பட்டப்படிப்பு வகுப்பு | .. .. | 18,693 |
| மொத்தம் | .. | 37,048 |

பி.ஏ., பி.எஸ்ஸி. பட்டப்படிப்பு வகுப்புகளில் தமிழ்மொழி
மூலம் பாடம் பயில விழையும் மாணவர்களுக்கு ஊக்கமளிக்க,
அரசு கல்லூரியில் படித்தாலும் சரி அல்லது தனியார் கல்லூரி
களில் படித்தாலும் சரி, மாணவருக்கு ஆண்டொன்றுக்கு
ரூ. 180 படிப்புதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.
கல்லூரிகள் அனைத்திலும் புகுமுக வகுப்பில் தமிழில் பயிலும்
மாணவர் ஒவ்வொருவருக்கும் புத்தகப்படியாக ரூ. 50
கொடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தால் அரசுக்கு
ஆண்டுதோறும் சுமார் ரூபாய் 40 லட்சம் செலவாகிறது.
இந்தத் திட்டம் கல்வி வளர்ச்சியிலும் சமூக வளர்ச்சியிலும்
நல்ல பலனைத் தந்துள்ளதாக அரசு மனநிறைவடைந்திருக்
கிறது.

வரலாற்று ஆராய்ச்சியை வளர்த்தல்.

16. 1973—74-ல், வரலாற்று ஆராய்ச்சிக் குழுவொன்றை
அரசு ஏற்படுத்தி, பட்ட மேற்படிப்பு நிலை ஆராய்ச்சி நடத்து
வதற்காக உதவித் தொகை அளிக்கும் ஒரு திட்டத்தைக்
கொண்டு வந்துள்ளது. இந்த ஆண்டில் வழங்கப்பட இருக்கும்
4 படிப்புதவித் தொகைகளுக்கு 700-க்கும் மேற்பட்ட
விண்ணப்பங்கள் வந்துள்ளன. அவற்றுள் தகுதியான விண்
ணப்பதாரர்கள் அடுத்த சில மாதங்களுக்குள் தெரிந்தெடுக்கப்
படுவார்கள். அரசு இக்குழுவை ஏற்படுத்தியதும், படிப்புதவி
தொகைகளை அளித்ததும் பரவலாக வரவேற்கப்பட்டுள்ளன.

**தமிழ்ப்பாட மொழியில் கல்லூரிப்பாட நூல்கள்.**

17. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் தமிழைப் பாட மொழியாகக் கொண்டுள்ள கல்லூரி மாணவர்களுக்காக இது வரையில் 600 புத்தகங்களை வெளியிட்டுள்ளது. 600 புத்தகங் களில் 450 மூல நூல்களாகும். 150 மொழி பெயர்ப்பு களாகும். இந்த வெளியீடுகளில் பலவற்றை பாட நூல் களாகவும், குறிப்புப் புத்தகங்களாகவும் மாணவர்கள் பயன் படுத்திடப் பல்கலைக் கழகங்கள் பரிவுரை செய்துள்ளன.

**தேசிய மாணவர் படை.**

18. தமிழ்நாடு தேசிய மாணவர் படை 1974 சனவரியில் தேசிய மாணவர் படை விருதைத் தொடர்ந்து மூன்றுவது முறையாகப் பெற்று வாகை சூடி வந்துள்ளது. தேசிய மாணவர் படையில் தற்போது 51 முதுநிலைப் பிரிவுகளும் (32,300 மாணவ மாணவியர்) 723 இளநிலைப் பிரிவுகளும் (72,300 மாணவ மாணவியர்) உள்ளன. இவற்றில் மாணவியர் முதுநிலைப்பிரிவுகள் ஐந்தும் (3,000 மாணவியர்) 57 மாணவியர் இளநிலைப் பிரிவுகளும் (5,700 மாணவியர்) அடங்கும். குறிப்பாக 1974 சனவரியில் புதுடில்லியில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் கலந்துகொண்ட தேசிய மாணவர் படை முதுநிலைப் பிரிவு அணிக்கு தமிழ்நாட்டு மாணவி தலைமை தாங்கி நடத்திச் சென்றுர். இவரே அனைத்து இந்திய தேசிய மாணவர் படையின் முதன்மையான மாணவியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். தேசிய இளநிலை மாணவர்படை மாணவரில் அனைத்திந்தியாவிலும் சிறந்த மாணவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவரும் தமிழ்நாட்டைச் சார்ந் தவரே.

**தேசியப்பணித் திட்டம்.**

19. கல்லூரி மாணவர்கள் நாட்டின் பணியில், குறிப்பாக கல்வி பணியில், தங்கள் ஓய்வு நேரத்தைச் செலவிட வாய்ப்பு அளிக்கும் நோக்குடன் தேசியப்பணிப் படைத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தைச் செயல் படுத்துகிற பல்கலைக் கழகங்கள், ஆண்டொன்றுக்கு மாணவர் ஒருவருக்கு ரூ. 120 என்ற வீதத்தில் மானியம் பெறுகின்றன. இதில் ரூ. 70-ஐ இந்திய அரசும் ரூ. 50-ஐ மாநில அரசும் கொடுக்கின்றன. அண்மை ஆண்டுகளில் சராசரியாக ஒவ் வோர் ஆண்டும் சுமார் 8 லட்ச ரூபாய் மானியமாக வழங்கப் பட்டுள்ளது. விருப்பமுள்ள கல்லூரி மாணவர்களும் ஆசிரியர் களும் இத்திட்டத்தில் பங்கு கொள்ளுகின்றனர்.



**சட்டக் கல்லூரி.**

20. சட்டக் கல்லூரி மாணவரின் எண்ணிக்கை 1968–69-ல் 1,045 ஆக இருந்தது. 1973–74-ல் இது சுமார் 2,527 ஆக (முறையான பட்டப்படிப்பு வகுப்புகளில் 1,830, மாலை நேர பட்டப்படிப்பு வகுப்புகளில் பாட முறைகளில் 610, எம்.எல். வகுப்புகளில் 87) உயர்ந்துள்ளது. சட்டப் படிப்பில் சேர் வதற்கான ஆர்வத்தை நிறைவு செய்யும் பொருட்டு மாலை நேர வகுப்புகள் 1966–67-ல் தொடங்கப்பட்டன. மாலை நேரக் கல்லூரி மாணவர்களுக்காக பட்ட மேற்படிப்பு வகுப்பு களும் (எம்.எல்.) 1969–70-ல் தொடங்கப்பட்டன. சட்டக் கல்லூரி மாணவர்களுக்காக ரூ. 12 லட்சம் செலவில் புதிய மாணவர் விடுதிக் கட்டடம் கட்ட அரசு அனுமதி வழங்கி உள்ளது. சட்டக் கல்லூரியில் அரங்கம் ஒன்று கட்டுவதற்கும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

# V. தொழில் நுட்பக் கல்வி.

1. தொழில் நுட்பக் கல்விக்காக 1972–73-ல் ரூ. 4,04 லட்சங்கள் ஒதுக்கப்பட்டதற்கெதிராக 1974–75-ல் ரூ. 4,97 லட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்துறையின் நிர்வாகத்தில் ஏழு பொறியியற் கல்லூரிகளும், 35 பல்தொழில் நுட்பப் பயிலகங்களும் (மூன்று மகளிர் பயிலகங்களும், ஐந்து தனித்தொழில் பயிலகங்களும் உட்பட) 14 தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகளும் உள்ளன. இதுவரை தொழில் வணிகத்துறை இயக்குநரால் நிர்வகிக்கப்பட்டு வந்த மூன்று கலைத்தொழில் பயிலகங்கள் 1–8–1973 முதல் தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

2. தற்போதுள்ள தொழில் நுட்பக் கல்வி பயிலகங்களின் எண்ணிக்கை, இன்னும் பல ஆண்டுகளுக்குத் தொழில் சம்பந்த மான தேவையை நிறைவு செய்யப் போதுமானதாக இருப்ப தால் இவ்வெண்ணிக்கையை அதிகப்படுத்துவதோ, அவற்றில் சேர்க்கும் மாணவர் எண்ணிக்கையை உயர்த்துவதோ, அவசிய மில்லையென்று 1966-ம் ஆண்டில் அனைத்து இந்திய மட்டத் தில் முடிவு செய்யப்பட்டது. அதற்கிணங்க நம் மாநிலத்தில் தொழில் நுட்பக் கல்வி பயிலகங்களின் எண்ணிக்கை அதிகப் படுத்தப்படவில்லை. 1973–74-ம் ஆண்டில் பொறியியற் கல்லூரிகளில் 1,832 மாணவர்களும், பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் 5,034 மாணவர்களும் சேர்க்கப்பட்டனர்.

3. இருக்கின்ற வசதிகளைச் சீர்செய்து ஒருமுகப்படுத்துவதிலும், பயிற்று முறை, ஆராய்ச்சி ஆகியவற்றின் தரத்தில் மேம்பாடு அடைவதிலும், கடந்த சில ஆண்டுகளில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்கவும், தொழில்களின் பல்வேறு தேவைகளை நிறைவு செய்யவும் தற்போதுள்ள பட்ட வகுப்புகளிலும் 'டிப்ளமோ' வகுப்புகளிலும் சிறப்பு பாடங்களைக் கொண்ட பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

4. 1974–75-ம் ஆண்டில் கீழ்க்கண்ட புதிய துறைகளும் சிறப்புப் பாடங்களும் துவக்கப்படவிருக்கின்றன:—

முதுநிலை பட்ட வகுப்பு நிலை.

| | |
|---|---|
| 1 நகர்ப்புற பொறியியல் (Urban Engineering) .. | பொறியியற் கல்லூரி, கிண்டி. |
| 2 கணிப்புப் பொறி அறிவியல். (Computer Science) | |

'டிப்ளமா' வகுப்புகள்,

| | |
|---|---|
| தொழில் மின்னணுவியல் (Industrial Electronics) .. | நாச்சிமுத்து பல்தொழில் நுட்பப் பயிலகம், பொள்ளாச்சி. |

விருப்பப் பாடங்கள்.

மின்னணுவியல் ;

| | |
|---|---|
| இயக்கிகள் பின்னுதல் (Motor Winding) மற்றும் நீரேற்றும் கருவி பழுது பார்த்தல் (Pumpset Repairs). | அரசினர் தொழில் நுட்ப உயர்நிலைப்பள்ளி, தூத்துக்குடி அரசினர் பல்தொழில் நுட்ப பயிலகத்துடன் இணைகப்பட்டது. |
| வரைபட வரைவாளர் சான்றிதழ் வகுப்பு (Certificate Course in Draughtsmanship) தானியங்கிப் பொறியியல் (Automobile Engineering) | அரசினர் தொழில்நுட்ப உயர்நிலைப்பள்ளி, நாகப்பட்டணம். வலிவலம் தேசிகர் தொழில் நுட்பப் பயிலகத்துடன் இணை பட்டது. |

5. 1974–75-ல் தற்போது கிண்டி பொறியியற் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட ஆராய்ச்சி நிறுவனத்திலுள்ள அடிப்படை பொறியியக் ஐ.பி.எம். 1630 என்



கணிப்புப் பொறியையும், சென்னை இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னலஜியிலுள்ள (Indian Institute of Technology) கணிப்புப் பொறியையும் இணைக்க ஒரு தொடர்புச் சாதனத்தை ரூ. 12 லட்ச மதிப்பீட்டில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6. ஏழை மாணவர்களுக்குப் புத்தகங்களைக் கடனுக கொடுத்து உதவுவதற்காக மாநிலத்திலுள்ள ஒருசில தொழில் நுட்பப் பயிலகங்களில் புத்தக வங்கிகள் ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந் நூல்களை அம் மாணவர்கள் கல்வி ஆண்டு முழுவதற்கும் படிப்பதற்காக அவர்களிடமே வைத்துக்கொள்ளலாம்.

7. வரப்போகும் திட்ட காலத்தில் கிண்டி பொறியியற் கல்லூரியை முன்னேறிய ஆராய்ச்சி, மேற்படிப்பு மையமாக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்தகைய முடிவைக் கருத்தில் கொண்டு, 'கோட்பாடு-செயல்முறை இயங்கு இயல்' துறை ஒன்றும், இயந்திர துணைக் கருவிகள், கட்டட இயக்கவியல், நிலைமின் கட்டுப்பாடு, ஒருங்கிணைந்த சுழற்சிகள் ஆகியவற்றிற்காக ஆய்வகங்களும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தொழில் நிறுவனங்களுக்கு, அவற்றின் தொழில் வளர்ச்சியில் ஏற்படும் தொழில் நுட்பச் சிக்கல்களைத் தீர்வு செய்யும் பணிகளை ஏற்றுக் கொள்ளும் 'பொறியியல்-ஆலோசனை' அமைப்புகளிலும், ஆராய்ச்சி அமைப்புகளிலும் அதிக கவனம் செலுத்தப்படும். 'டாக்டர்' பட்ட நிலையில் ஆராய்ச்சிகளுக்கான வசதிகள் விரிவுபடுத்தப்படும்.

8. மாநிலத்திலுள்ள, தனியார் நிறுவனங்களான, மூன்று பொறியியற் கல்லூரிகள், பதினெட்டு பல் தொழில் நுட்பப் பயிலகங்கள், மூன்று தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகள், ஆகிய எல்லாவற்றிற்கும் உதவி மானியத் தொகை படிப்படியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. 1968–69-ல் இந் நிறுவனங்கட்கு வழங்கப்பட்ட மானியத் தொகையான ரூ. 68 லட்சங்களுக்கெதிராக 1974–75-ல் ரூ. 108 லட்சங்கள் வழங்கப்படும்.

இரண்டாவது ஊதியக் குழு பரிந்துரைத்த ஊதிய விகிதங்கள், மானிய உதவி பெறும் தொழில் நுட்பக் கல்லூரிகள், பயிலகங்கள் இவற்றிலுள்ள பணியாளர்களுக்கும் நீடிக்கப்பட்டுள்ளன. தனியார் பொறியியற் கல்லூரிகள் ஆரம்பித்துள்ள புதிய துறைகட்கும், சிறப்புப் பாடப் பொறியியல் பிரிவுகட்கும், மானிய உதவி அனுமதிக்கப்

பட்டுள்ளது. இந்த மானிய உதவியில் கட்டடப் பொறியியல், சக்தி முறைப் பொறியியல் ஆகிய முது நிலைப் பட்ட வகுப்புகளும், செயல் முறை அறிவியல் பட்ட வகுப்பும் இடம் பெறுகின்றன. 1974–75-ம் ஆண்டில் பொள்ளாச்சி, நாச்சிமுத்து பல்தொழில் நுட்பப் பயிலகத்தில் தொழிலக மின்னணுவியல் துறையில் 'டிப்ளமா' வகுப்பு ஒன்றும் தொடங்கப்படும்.

9. ஒருசில பல்தொழில் நுட்பப் பயிலகங்களிலாவது பாடங்களைத் தாய்மொழியில் பயில்விக்க வேண்டும் என்று மாநிலத் தொழில் நுட்பக் கல்வி ஆலோசனைக் குழு பரிந்துரைத்துள்ளது. ஆகவே 1974–75-ல் ஒரு அரசினர் பல்தொழில் நுட்பப் பயிலகத்திலும், ஒரு தனியார் பல்தொழில் நுட்பப் பயிலகத்திலும் 'டிப்ளமா' படிப்புக்கு இந்த வசதியை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. முற்போக்கான இம்முயற்சி, தொழில் நுட்பப் பாடங்களைப் பயில்வதில் மாணவர்கள் தெளிவையும், உணரும் திறனையும் உயர்த்த உதவும் என்று நம்பப்படுகிறது.

10. அரசு பொறியியற் கல்லூரிகளிலுள்ள பல்வகைத் துறைகளின் முறையான, ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக அதிக அளவு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அகில இந்திய தொழில் நுட்பக் கல்விக் கழகம் பரிந்துரைத்தபடி, கடந்த சில ஆண்டுகளாக, ஆசிரியர்கள், பணியாளர்கள் ஆகியோர் கூடுதலாக அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

பொறியியற் கல்லூரிகளில் கல்வி பயில்விப்பதன் தரத்தை உயர்த்துவதற்கான ஒரு முக்கியமான நடவடிக்கையாக, உயர்நிலை ஆசிரியர் பதவிகளில் நேரிடையாக நியமனம் செய்ய '' டாக்டர் '' பட்டம் தேவையான தகுதியாக அமைக்கப்பட்டுள்ளது. பல்தொழில் நுட்பப் பயிலகங்களிலும் ஆசிரியர் பதவிகளுக்கான தகுதிகள் தகுந்த முறையில் வருங்கால நியமனங்களுக்கு உயர்த்தப்படும்.

11. தமிழ் நாட்டிலுள்ள கலைக்கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் பயிலும் மாணவர்கள் கட்டணம் செலுத்தாதது போல், தொழில் நுட்ப புகுமுக வகுப்பில் பயிலும் மாணவர்களும், கட்டணம் செலுத்தத் தேவையில்லை. இது தவிர, மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம், உதவித்தொகை மற்றும் கல்விக் கடன்கள் ஆகியன வழங்குவதற்கு, தாராளமான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. 1973–74-ல் மட்டும், பொறியியற் கல்லூரிகளிலும், பல்தொழில் நுட்பப்



பயிலகங்களிலும் பயிலும் மாணவர்களுக்குப் பல்வகைத் திட்டங்களின் கீழ் ரூ. 19 லட்சம் வரை உதவியாக அளிக்கப் பட்டுள்ளது.

12. கடந்த 1971–72-ம் ஆண்டில், 'டிப்ளமோ' தாரர்கள் பொறியியல் துறையில் பட்டம் பெறுவதற்காக, துவங்கப் பட்ட பகுதிநேர வகுப்புகள் பல கல்லூரிகளில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ஏறத்தாழ 470 மாணவர்கள் ஆண்டுதோறும் சேர்வதற்கு இத்திட்டத்தில் வசதி யிருக்கிறது.

13. வெளிநாடுகளில் பணிபுரியும் இந்திய அறிவியல் வல்லுநர்களின் சேவையைப் பயன்படுத்த வழி செய்யும் நோக்கோடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த திட்டம் 1973–74-ம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் வெளிநாட்டிலிருந்து நமது நாட்டிற்கு நீண்ட விடுமுறையிலோ அல்லது வேறுவகையிலோ வரும் அறிவியல் வல்லுநர்கள், நமது கலை, அறிவியல், தொழிலியல், மருத்துவம், வேளாண்மை ஆகிய துறைகளைச் சார்ந்த கல்லூரிகளிலும், ஆராய்ச்சி நிறுவனங்களிலும் ஆறு மாதம் முதல் ஓராண்டுவரை பணிபுரிய வாய்ப்பளிக்கப்படுகிறது, அவர்கட்கு மாதமொன்றுக்கு ரூ. 1,000 வீதமும், ரூ. 1,500 வீதமும் இரண்டு அளவுகளில் மதிப்பூதியம் வழங்கப்படுகிறது.

1974–75-லிருந்து இம்மதிப்பூதியத் தொகை ரூ. 1,000-லிருந்து ரூ. 1,200-க்கும், ரூ. 1,500-லிருந்து ரூ. 1,800-க்கும் உயர்த்தப்படும். இத்திட்டத்தின்கீழ் நான்கு அறிவியல் வல்லுநர்கள் இப்பொழுது பணிபுரிந்து வருகின்றனர். வருகிற ஆண்டில் வெளிநாடுகளில் பணிபுரியும் அறிவியல் வல்லுநர்களிடமிருந்து இத்திட்டத்திற்கு, நல்ல வரவேற்பு கிடைக்கும் என்று நம்பப்படுகிறது.

14. தமிழ் நாட்டில் தொழில் நுட்பக் கல்வி நல்ல முறையில் வளர்ச்சி பெறுவதற்காக ஒரு '' தொழில் நுட்பப் பல்கலைக்கழகம் '' நிறுவுவதில் மாநில அரசு நிறைந்த ஆர்வம் கொண்டுள்ளது. ஆனால் மைய அரசின் ஒப்புதல் இதுநாள்வரை கிடைக்கவில்லை. 1974–75-ம் ஆண்டிலாவது தொழில் நுட்பப் பல்கலைக்கழகம் நிறுவிட, மைய அரசு தனது ஒப்புதலை வழங்கிட முன்வரும் என்று நம்பப் படுகிறது.

[1974 மார்ச் 20

**கணித அறிவியல் நிறுவனம்.**

15. அடையாறு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கணித அறிவியல் நிறுவனம் தன்னுரிமை பெற்ற அமைப்பாக செயல்பட்டு வரும் ஆராய்ச்சி நிறுவனம் ஆகும். இதற்கு மாநில அரசும், மைய அரசும் மானியத்தொகை வழங்கி வருகின்றன. மாநில அரசின் மானியம், ஆண்டுக்கு ரூ. 3·5 லட்சம் ஆகும். இந்த நிறுவனம் தற்போது அடிப்படைக் கணிதத்திலும், பௌதிகக் கணிதத்திலும் மேல் மட்ட ஆய்வுகள் நடத்துவதில் கவனம் செலுத்தி வருகின்றது. இந்நிறுவனம் மைய அரசின் உதவியுடன் தனது வசதிகளை மேலும் பெருக்கிக்கொள்ள இயலும் என்று நம்பப்படுகிறது.

# VI. கலைப்பணிகள்

**இயல், இசை, நாடக மன்றம்.**

அரசின் முழு நிதி உதவியுடன் இயங்கும் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் சுய நிர்வாக உரிமையுள்ள ஒரு தனி நிறுவனமாகும். நடனம், நாடகம், இசை ஆகிய நுண் கலைகளை வளர்த்திட இம்மன்றம் அரும்பணிகளை ஆற்றி வருகிறது. மேலும், மத்திய அரசின் கலாச்சார பரிமாற்றுத் திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டிற்கு வரும் வெளிநாட்டுக் கலைஞர்களுக்கு இம்மன்றம் வரவேற்பளிக்கிறது. சிறந்த நாடக வளர்ச்சிக்கு ஊக்கமூட்டும் வகையில் தமிழ்நாட்டிலிருந்து மற்ற மாநிலங்களுக்குக் கலைக் குழுக்களை இம்மன்றம் அனுப்புகிறது. சிறந்த கலைஞர்களுக்கு இம்மன்றம் 'கலைமாமணி' என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பு செய்கிறது.

2. குறவஞ்சி, பாகவதமேளா போன்ற தமிழ்நாட்டின் பண்டைய கலைகளைப் பேணவும் வளர்க்கவும் இம்மன்றம் திட்டங்களை வகுத்துள்ளது. இதற்காக 1974–75ஆம் ஆண்டில் வரவு-செலவு மதிப்பீட்டில் ரூ. 2 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. பாரம்பரிய இசை, நடனம் முதலிய கலைகளின் ஒலி, ஒளிப்பதிவுகள் சேமிப்பு நிலையம் ஒன்றை அமைக்கவும் இந்த பாரம்பரியக் கலைகளின் இயங்கும் கண்காட்சிகளுக்கு ஏற்பாடு செய்யவும் இம்மன்றம் கருதியுள்ளது.

3. மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து பொறுப்
பேற்று வந்த ஒரு திட்டத்தின்கீழ் வறுமை நிலையில் உள்ள
259 கலைஞர்கள் ஒவ்வொரு மாதமும் ஓய்வு ஊதியம் பெற்று
வருகிறார்கள். இத்திட்டத்தின்கீழ் மேலும் அதிக கலைஞர்
களுக்கு ஓய்வு ஊதியம் அளிக்க மத்திய அரசு மறுத்துவிட்ட



1974 மார்ச் 20]

அளிக்கும் பொறுப்பை மாநில அரசே ஏற்றுக்கொண்டு
தன் நிதியிலிருந்து ஓய்வூதியம் வழங்கி வருகிறது.
இதற்கான மாநில அரசுத் திட்டத்தின்கீழ் 279 கலைஞர்
களுக்கு ஓய்வு ஊதியம் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணி
1974–75ஆம் ஆண்டிலும் தொடரப்பட்டு மேலும் 75
கலைஞர்களுக்கு ஓய்வு ஊதியம் அளிக்கப்படும் என எதிர்
பார்க்கப்படுகிறது.

4. ஓவியம் முதலிய நுண்கலைகளின் வளர்ச்சிக்கான தமிழ்
நாடு நுண்கலைக் குழுவை மீண்டும் செயல்படச் செய்வதற்
காக 1974-75ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்
டுள்ளது.

**அரும்பொருட்காட்சி சாலை.**

5. சென்னையிலும் புதுக்கோட்டையிலும், அரசு அரும்
பொருட்காட்சி சாலைகள் உள்ளன. அவற்றில் சிறந்த
சிற்பங்கள், மர வேலைப்பொருள்கள், வண்ண வேலைப்
பொருள்கள் முதலியவை உள்ளன. இவை தவிர தொல்
பொருளியல், மானிட இயல், இயற்கை அறிவியல் ஆகிய
துறைகளைச் சார்ந்த பொருள்களும் பார்வைக்கு வைக்கப்
பட்டுள்ளன. பொதுமக்களும், ஆராய்ச்சி வல்லுநர்களும்
இவற்றால் பெரும் பயன் அடைந்து வருகின்றனர். இந்த அரும்
பொருட்காட்சி சாலைகள் பொதுமக்களுக்கான அறிவியல்
விரிவுரைகளும், கண்காட்சிகளும் நடத்தி வருகின்றன.

6. சென்னையில் குழந்தைகள் அரும்பொருட்காட்சி
சாலை ஒன்று நிறுவுதல், சென்னையில் உள்ள தேசீய கலைக்
கூடத்துடன் இணைப்புக் கட்டடம் ஒன்று கட்டுதல் ஆகிய
பணிகளும் 1974–75 ஆண்டுப் பணிகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி.**

7. தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் 150 மாணவர்கள்
பயிலுகின்றனர். இதில் இசை உலகில் புகழ் பெற்ற 22 இசைக்
கலைவாணர்கள் ஆசிரியர்களாக உள்ளனர். இக்கல்லூரியில்
வாய்ப்பாட்டு, கருவி இசை, பரத நாட்டியம் ஆகிய துறை
களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தக் கல்லூரி அனைத்
திந்திய அளவில் நற்பெயர் பெற்றுள்ளது. மற்ற மாநிலங்கள்
பலவற்றிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் மாணவ
மாணவியர் இக்கல்லூரியில் பயில்கின்றனர்.

**பொது நூல் நிலையங்கள்.**

8 பொது நூல் நிலையங்களுக்கென்று சட்டம் இயற்றி
அவற்றின் வளர்ச்சிக்கு வகைசெய்துள்ள இந்திய மாநிலங்
களில் தமிழ் நாடும் ஒன்றாகும். கன்னிமாரா நூல் நிலையப்

மாநிலத்தின் மத்திய நூல் நிலையமாக இயங்குகிறது. இந் நூல்
நிலையத்திற்குப் புத்தகங்கள் வாங்குவதற்காக 1974–75ஆம்
ஆண்டுக்கு ரூ. 3 லட்சம் சிறப்பு நிதி ஒதுக்கம் செய்யப்
பட்டுள்ளது. இப்போது தமிழ்நாட்டில் 13 மாவட்ட மத்திய
நூல் நிலையங்களும் 1,457 கிளை நூல் நிலையங்களும் 1,882
புத்தகம் வழங்கும் நிலையங்களும் உள்ளன. இந் நூல்
நிலையங்களில் மொத்தம் சுமார் 3,000 பேர் பணி
செய்கின்றனர். இயங்கும் நூல் நிலையம் போன்ற, சிறப்பான
நூல் நிலையப்பணிகளையும் மாவட்ட நூலக மன்றங்கள்
அறிமுகப்படுத்தியுள்ளன.

9. நூலக நிதியின் பெரும்பகுதி வீட்டுவரி, சொத்துவரி
ஆகியவற்றின் மீது வசூலிக்கப்படும் நூலக மேல்வரியைக்
கொண்டதாகும். 1972 ஏப்ரல் முதல், நூலக வரி
ரூபாய்க்கு 3 காசிலிருந்து 5 காசாக உயர்த்தப்பட்டுள்ளது.
இதனால் மாவட்ட நூலக மன்றங்களின் வருவாய்
அதிகரிக்கும். 1973–74 ஆம் ஆண்டில் இம்மன்றங்கள் நூலக
மேல் வரியாக சுமார் ரூ. 70 லட்சம் பெறும். சென்னை தவிரப்
பிற மாவட்டங்களில் உள்ள மாவட்ட நூலக மன்றங்கள்
நூலக வரி மூலம் வசூலாகும் தொகைக்கு ஈடான இணை
மானியத்தை அரசிடமிருந்து பெறுகின்றன. 1973–74 ஆம்
ஆண்டிலிருந்து இணை மானியத்தில் 25 விழுக்காடு புத்தகங்
களாகக் கொடுக்கப்படும். திட்டப் பணிகளின் கீழ்
புதியதாகத் தொடங்கப்பட்ட நூலகங்களுக்கான
மானியத்தை அரசு தனி மானியமாக வழங்குகின்றது.
1973–74 ஆம் ஆண்டிலிருந்து திட்ட மானியத்தில் 50
விழுக்காடு புத்தகங்களாகக் கொடுக்கப்படுகின்றது.
1974–75 ஆம் ஆண்டில், நான்கு கிளை நூலகங்களுக்கான
கட்டடங்களைக் கட்டுவதற்காக ஒரு நூலகத்துக்கு
ரூ. 45,000 வீதம் ரூ. 1,80,000 மானியமாக வழங்கப்படும்.
1974–75 ஆம் ஆண்டில் பொது நூலகங்களுக்காக
மொத்தம் சுமார் ரூ. 82 லட்சத்தை அரசு செலவிடும்.

10. 1972 ஆகஸ்டு முதல் நாளிலிருந்து பொது நூலக
இயக்குநர் ஒருவர் தனியாக நியமிக்கப்பட்டுள்ளார். அண்
மையில் திரு. வி. என். சுப்பராயன் அவர்களின் தலைமை
யிலான ஐவர் குழு ஒன்றை அரசு நியமித்துள்ளது. அக்குழு,
தமிழ்நாட்டில் உள்ள நூலகப் பணியின் தற்போதைய
அமைப்பை ஆய்வு செய்து, நூலகங்களின் சீரமைப்பு மற்றும்
வளர்ச்சிக்கான [illegible]



தொல்பொருள் ஆராய்ச்சித் துறை.

11. தொல்பொருள் ஆராய்ச்சித் துறை சீரான
முறையில் செயலாற்றி வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்
திலும் கோயில்களில் உள்ள தொன்மைவாய்ந்த சிலைகள்
முதலிய கலைப்பொருள்களை நிழற்படம் பிடித்துப் பதிவு
செய்து கணக்கெடுக்கும் பணியை இத்துறை 1974–75 ஆம்
ஆண்டு தொடங்கும். 1973–74 ஆம் ஆண்டில் தொடங்கப்
பட்ட கல்வெட்டு ஆராய்ச்சி நிலையம் தமிழ்நாட்டில் உள்ள
கல்வெட்டுக்களைப் பதிப்பித்து வெளியிடும். 1974–75 ஆம்
ஆண்டில் தஞ்சாவூர் அரண்மனை உட்பட பல நினைவுச்
சின்னங்களைப் பாதுகாக்கும் பணி மேற்கொள்ளப்படும்.
தொல் பொருள் ஆராய்ச்சித் துறையின் அகழ்தல் பணித்
திட்டம் பாண்டிய மன்னர்களின் பண்டைய துறைமுகமாகிய
கொற்கையில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 1974–75
ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் தொல் பொருள்
ஆராய்ச்சி இயக்குநர் அலுவலகக் கட்டடம் ஒன்றைப் புதி
தாகக் கட்டுவதற்கு ரூ. 1 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.
இக்கட்டடத்தில் நிர்வாகப் பணியாளர்கள் பணியாற்றுவ
துடன் தொல்பொருள் காட்சிக் கூடம் ஒன்றும்
அமைக்கப்படும்.

## VII. தமிழ் வளர்ச்சி

தமிழை ஆட்சி மொழியாகச் செயல்படுத்தும்
கொள்கையை எல்லா மட்டங்களிலும் முழு ஆற்றலுடன் நிறை
வேற்ற வேண்டும் என்பதில் அரசு மிகுந்த ஆர்வம் கொண்
டுள்ளது. சட்டங்கள், விதிகள், நடைமுறை நூல்கள் ஆகிய
வற்றின் மொழி பெயர்ப்புப் பணிகள் மிகத் துரிதமாக நடந்து
வந்துள்ளன. ஆட்சிச் சொல் அகராதி, தொழில் நுட்பத்
துறைகளைச் சேர்ந்த சொல் அகராதி ஆகியவை
தொகுக்கப்பட்டு துறைகளுக்குப் 'பயன்படும் வகையில்
வெளியிடப்பட்டுள்ளன. தமிழை ஆட்சி மொழியாக்குதல்
எந்த அளவிற்குச் செயல்படுத்தப்பட்டுள்ளது என்பதை
ஆய்வதற்கு மாவட்ட மட்டத்தில் சிறப்பு ஆய்வுப்
பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். 1867ஆம் ஆண்டி
லிருந்து வெளியிடப்பட்ட தமிழ் புத்தகங்களின் விவரப்
பட்டியல் தொகுக்கப்பட்டு வருகின்றது.

2. மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர்
மு. வரதராசனார் அவர்களின் தலைமையிலான அறிஞர் குழு
ஒன்று ஆதார பூர்வமான தமிழக வரலாற்றை எழுதுவதற்கு
அமைக்கப்பட்டுள்ளது. இவ்வரலாற்று நூற்றொகுதி ஆறு
பகுதிகளைக் கொண்டது. முதல் பகுதி அச்சிடுவதற்குத்

யாராக உள்ளது. இத்துறை தமிழில் தரமான நூல்களை
வெளியிடுவதற்கு ஊக்கமளிக்கும் பொருட்டு நூலாசிரியர்
ளுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டமொன்றையும் செயல்
டுத்தி வருகிறது. தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூலகத்தில்
ள்ள சித்த வைத்திய பனை ஓலைச் சுவடிகளை ஆய்வு செய்து
திப்பிப்பதற்கும் நிதி உதவி அளிக்கப்படுகிறது. நாட்டிலுள்ள
ல்வேறு பல்கலைக் கழகங்கள் தமிழ் ஆராய்ச்சி துறைகளை
றுவி தமிழ் ஆராய்ச்சிப் பணியை மேற்கொள்ளுவதற்கும்
அவற்றிற்கு தாராளமான மானியங்களை இத்துறை வழங்கு
கிறது.

அனைத்து நாட்டுத் தமிழ் ஆராய்ச்சி நிலையம்.

3. அனைத்து நாட்டுத் தமிழ் ஆராய்ச்சி நிலையம் 1970
அக்டோபரில் நிறுவப்பட்டது. தமிழ் ஆய்வில் பற்றுள்ள
உலக அறிஞர்களின் ஒத்துழைப்புடன் தமிழ்த்துறையிலும்
தொடர்புள்ள பிற துறைகளிலும் ஆராய்ச்சியை ஊக்கு
விப்பதே இதன் நோக்கமாகும்.

4. இந்நிலையம் 1972 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்
ஆராய்ச்சி பற்றிய அரையாண்டு ஆய்வு இதழ்
ஒன்றை வெளியிட்டு வருகிறது. அவ்விதழில் உலக
நாடுகளின் அறிஞர்கள் எழுதும் ஆய்வுக் கட்டுரைகள் வெளி
வருகின்றன. இந்நிலையத்தில் ஆராய்ச்சிக்குப் பயன்படும்
முறையில் சிறந்த நூலகம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.
யுனெஸ்கோ நன்கொடையாக அளித்துள்ள காட்சி கேள்வி
சாதனங்கள் உதவியுடனும், மொழிப்பயிற்சிக் கூடத்தின்
உதவியைக் கொண்டும் வெளிநாட்டு மாணவர்களுக்கு இந்
நிலையம் சிறப்பான முறையில் தமிழ் கற்றுத் தருகிறது.
தமிழில் மொழி பெயர்க்கப் பட்டுள்ள பிற நாட்டு அறிஞர்
களின் இலக்கியங்களின் பட்டியல் ஒன்றையும் ஆங்கிலத்தில்
மொழி பெயர்க்கப்பட்டுள்ள தமிழ் இலக்கியங்களின் பட்டிய
யல் ஒன்றையும் இந்நிலையம் வெளியிடத் திட்டமிட்டுள்ளது.
இவை தவிர சங்க காலத் தமிழர்களின் சமூக வரலாற்றையும்,
தமிழிலக்கியத்திற்கு ஒரு துணை நூலையும், தமிழ்-ஆங்கில
அகராதி ஒன்றையும் இது வெளியிடக் கருதியுள்ளது.
1974–75 ஆம் ஆண்டில் தமிழ் நாடு அரசிடமிருந்து
ரூ. 3 லட்சம் மானியம் இந்நிலையத்திற்குக் கிடைக்கும். இந்
நிலையம் அடையாறு மத்தியப் பல்தொழில் பயிற்சி நிலையக்
கட்டடத்தில் தற்போது அமைந்துள்ளது. இந்நிலையத்திற்கு
நிலையான கட்டடம் கட்ட அது தற்போது அமைந்துள்ள
இடத்திற்கு அருகிலேயே 6 ஏக்கர் நிலத்தை அரசு ஒதுக்கி
யுள்ளது.

---

## தமிழ் நாடு சட்டப் பேரவை.

### வியாழக்கிழமை, 1974 மார்ச் 21.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

#### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

#### மல்லியங்குப்பத்தில் புதிய பள்ளி

*531 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எல்லாபுரம் ஒன்றியம், மல்லியங்குப்பம் கிராமத்தில் பள்ளி தொடங்கும் செயற்குறிப்பு தற்போது எந்நிலையிலுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம் மல்லியங்குப்பம் கிராமத்தில் பள்ளி தொடங்குவது சம்பந்தமான பிரேரணை பள்ளிக் கல்வி இயக்குநரால் பெறப்பட்டு, அதனைப் பரிசீலனை செய்ததில் மேற்படி கிராமத்தில் புதிய ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளி ஒன்று துவக்குவதற்கு அனுமதி வழங்குவதற்கில்லை என்று முடிவு செய்யப்பட்டது.

திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, மல்லியங்குப்பம் கிராமத்தில் இருக்கிற மாணவர்கள் இப்பொழுது அத்திவாக்கம் என்ற ஊருக்கு பெரிய கால்வாயைக் கடந்து செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. மேற்படி மல்லியங்குப்பம் கிராமத்தில் ஒரு கட்டடம் கூட கட்டி காத்துக் கொண்டிருக்கிறார்கள். இயற்கைத் தடை இருப்பதால், மறுபரிசீலனை செய்து மல்லியங்குப்பத்தில் ஒரு பள்ளிக்கூடத்தைத் திறக்க அரசு அனுமதி வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்பட்டதன் பேரில், அந்தக் கிராமம் பள்ளியில்லாக் கிராமம் அல்ல என்றும், மேற்படி கிராமத்தில் பள்ளி செல்லும் பிள்ளைகள் 37 பேர்தான் உள்ளனர் என்றும், இன்னும் பள்ளியில் சேர்க்கப்பட வேண்டிய பள்ளி வயதுப் பிள்ளைகள் 13 பேர் மட்டுமே இருப்பதால் புதிய பள்ளி துவக்க அந்த எண்ணிக்கை போதுமானதாக இல்லை என்றும் காரணம் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கிராமத்திலிருந்து அரை கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு பள்ளியும், 1.4 கிலோ மீட்டர் தூரத்தில் மற்றொரு பள்ளியும், 1½ கிலோ மீட்டர் தூரத்தில் மற்றொரு பள்ளியும், ஆக மூன்று பள்ளிகள் நடைபெறுகின்றன. அண்மையில் நடைபெறும் பள்ளிகளுக்குச் செல்ல இயற்கைத் தடை ஏதும் இல்லை. அருகிலுள்ள ஆரம்பப் பள்ளிகளில் மேற்படி கிராமத்து பள்ளி வயதுப் பிள்ளைகள் சேர்ந்து படிக்க வாய்ப்பு உள்ளது. இதற்கு அருகே நடைபெறும் பள்ளிகளில் இப்போதுள்ள இடத்தை அதிகப்படுத்தி, மேற்படி கிராமத்தில் இன்னும் பள்ளியில் சேர்க்கப்பட வேண்டிய பள்ளி வயதுப் பிள்ளைகள் அனைவரையும் அங்கே சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். புதிய பள்ளி துவக்க அனுமதி வழங்கினால் போதுமான பிள்ளைகள் வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்க இயலாது. மேற்படி கிராமத்தில் புதிய பள்ளி துவக்குவதால் அரசுக்கு கூடுதல் செலவினங்களுடன் தேவைக்கும் அதிகமாகக் கல்வி வசதிப் பெருக்கத்தையும் ஏற்படுத்தும்.

## *Ambikapuram Board High School*

* 532 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether the Hon. Minister for Education has received a petition, dated 27th July 1972 from the Building Committee Members of Board High School, Ambikapuram, Tiruchirappalli regarding the functioning of the school; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) எனினும் இதுபற்றிய புகார்கள் அரசின் கவனத்திற்கு வந்ததால் நிலைமை விசாரிக்கப்பட்டு வருகிறது.



## *School buildings*

* 533 Q.—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there are any rules now in force regarding the use of Government school buildings for public purposes; to state—

(*b*) if so, whether a copy of the same will be placed on the table of the House?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம். கல்வி நிலையக் கட்டடங்கள் மற்றும் விளையாட்டுத் திடல்கள் ஆகியவற்றை பொதுக் காரியங்களுக்குப் பயன்படுத்தலை சென்னை கல்வி விதி 81-ல் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளது.

(இ) விவர அறிக்கை @ ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: தலைவர் அவர்களே, முக்கியமான மாநாடுகள் நடத்துவதற்கு கட்சி வித்தியாசம் இல்லாமல் எல்லாக் கட்சிகளுக்கும் குறிப்பிட்ட சமயத்திற்குக் கொடுக்கக்கூடிய முறையில் சர்க்கார் உத்தரவை ரிலாக்ஸ் செய்து கொடுப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை. அரசியல் கட்சிக் கூட்டங்கள் தவிர மற்ற பொதுக் காரியங்களுக்கு இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிற வகையில் கொடுக்கலாம். அரசியல் கட்சிக் கூட்டங்களுக்குத் தருவதன் மூலம் பல மாச்சரியங்கள் ஏற்படுவதற்கும் பல நிலைமைகள் ஏற்படுவதற்கும் வழி ஏற்பட்டு விடக்கூடும். அதனால் பள்ளிக்கூடத்தின் சூழ்நிலை கெடும் என்ற காரணத்தால் அரசியல் கட்சிகளுக்கு அனுமதி அளிப்பதற்கில்லை.

திரு. ஆ. பாந்தாமன்: சில இடங்களில் அரசியல் கட்சிகளுடைய நாடகங்கள் அல்லது கூட்டங்கள் நடத்துவதற்காக இடமே இல்லாமலிருக்கிறது. அப்படிப்பட்ட நகரங்களில் முன் உத்தரவு பெற்று அந்தந்தக் கட்சிகள் தங்களுடைய கட்சியின் சார்பில் நாடகங்கள், கூட்டங்கள் முதலியவற்றை நடத்திக் கொள்ளலாம் என்ற உத்தரவை அரசு பிறப்பிக்குமா?

---

@ 212-ம் பக்கத்தில் இணைப்பு -ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1974 மார்ச் 21

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, முதலிலேயே குறிப்பிட்டேன். இப்படிப்பட்ட இடங்கள் பொதுவாகப் பாதுகாக்கப்பட வேண்டியவை. பொதுக் கூட்டங்கள் என்னும்போது பல இடங்களில் அரசியல் கட்சி மாச்சரியங்கள் ஏற்படுகின்றன. கலகம் போன்றவைகளும் விளைந்துவிடுகின்றன. ஏற்கெனவே ஓரளவுக்குப் பள்ளிகளில் கட்டுப்பாடற்ற நிலைமை இருக்கும்போது, அதற்கு இந்த வகையில் இடம் கொடுத்தால் பெஞ்சுகள், நாற்காலிகள் சில சமயங்களில் இருக்குமா என்ற சந்தேகம் ஏற்படும். கட்டடங்கள் கட்ட அரும்பாடு படும்போது, அந்தக் கட்டடங்கள் பாழ்படுகிற சூழ்நிலைக்கு இடம் கொடுக்கக்கூடாது. இப்படிப்பட்ட சூழ்நிலையைத் தவிர்ப்பதற்காக எந்த அரசியல் கட்சிக்கும் தருவதில்லை, பொதுவாக இருப்பவைகளுக்கு அனுமதி பெற்று வழங்கலாம் என்ற அளவு அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

**திரு. வ. சுப்பிரமணியம் :** பல நகரங்களில் இம்மாதிரி அரசியல் கட்சிகள் அல்லது பொது ஸ்தாபனங்களுடைய நிகழ்ச்சிகள் நடத்துவதற்குச் சரியான இடம் இல்லை. நம்மைவிட அதிக கட்சி மாச்சரியங்கள் உள்ள உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் கூட அரசாங்கப் பள்ளிகளை இம்மாதிரி காரியங்களுக்கு பள்ளிக்கூடம் இல்லாத நாட்களில் பயன்படுத்த அனுமதிக்கிறார்கள். அதுபோன்று இங்கும் அனுமதித்தால் அங்கெல்லாம் நடக்காத கோளாறு இங்கு என்ன நடந்துவிடும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அங்கெல்லாம் எப்படிப்பட்ட விளைவுகள் ஏற்பட்டன என்ற புள்ளிவிவரத்தை வேண்டுமானால் நான் பின்னர் தருகிறேன். பள்ளிக்கூடங்கள் மற்றவைகளில் எப்படிப்பட்ட மாச்சரியங்கள் ஏற்பட்டன என்பதையெல்லாம் கூறலாம். கூடுமானவரையில், தமிழகத்தைப் பொறுத்த வரையிலும் இப்படிப்பட்ட சூழ்நிலையை ஏற்படுத்திவிடுவோமானால் பெரும் கேடு ஏற்படும் என்பதற்காகத்தான். அரசியல் கட்சிக் கூட்டம் நடத்த பள்ளிகளை அனுமதிப்பதில்லை. ஆனால், அரசியல் கட்சி பொதுக் கூட்டம் கூடுவதற்கு, இன்னும் இப்படிப்பட்ட நிலைமைகளுக்கு இடம் வேண்டும் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், நகராட்சி மன்றங்கள் சார்பாக



1974 மார்ச் 21]

பொதுமக்கள் கூடுவதற்கும், அரசியல் கட்சிக் கூட்டங்களைக் கூட்டுவதற்கும், கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றை நடத்துவதற்கும் ஏற்ற வகையில் ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அது பற்றி அரசு பரிசீலிக்கும்.

**திரு. கு. காமாட்சி :** அரசாங்கப் பள்ளிகளில் கடைப்பிடிக்கப் பட்டுவரும் இந்த விதிமுறை தனியார்ப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட அரசுக்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்த விதி எல்லாப் பள்ளிகளுக்கும் பொருந்தும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** அமைச்சர் அவர்கள், இந்த விதி எல்லாப் பள்ளிகளுக்கும் பொருந்தும் என்றார்கள். திருச்சியில் இருக்கின்ற பிஷப் ஹீபர் கல்லூரியில் அரசியல் கூட்டங்கள் அடிக்கடி நடைபெறுவது அரசுக்குத் தெரியுமா ? இனிமேல் அதுபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெறாமல் தடுக்க முயற்சி எடுக்கப் படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, எல்லாக் கல்வி நிலையங்களிலுமே நான் குறிப்பிட்ட விதிமுறை கடைப்பிடிக்கப்படுவது நல்லது. தனிப்பட்ட ஆணை ஏதாவது பெறப்பட்டதா என்பதற்கு விவரக் குறிப்பு இப்பொழுது என்னிடம் இல்லை. அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

### வால்பாறையில் ஆசிரியர்களுக்கு குளிர்காலப் படி

*534 **வினா—திரு. இ. ராமசாமி :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடல் மட்டத்தில் இருந்து 1,000 மீட்டர் உயரத்தில் பணி புரியும் அரசு ஊழியர்களுக்கு குளிர்காலப் படி கொடுப்பது போல, வால்பாறை அரசினர் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்படுகிறதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** வால்பாறை அரசு உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு குளிர்காலப் படி கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு குளிர்காலப் படி வழங்குவதற்கான செயற்குறிப்பு ஒன்று அரசின் ஆய்வில் உள்ளது.

[1974 மார்ச் 21

**திரு. இ. ராமசாமி:** வால்பாறை பகுதியில் பல்வேறு துறைகளில பணியாற்றுகிற அரசு ஊழியர்களுக்கு குளிர்காலப் படி நமது அரசு கொடுக்கிறது. ஆனால், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும், அரிசன நலப் பள்ளி ஆசிரியர்களுக்கும் இந்த குளிர்காலப் படி இதுவரை கிடைக்கவில்லை. இது பரிசீலிக்கப் படும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். விரைவாகப் பரிசீலனை செய்து அவர்களுக்குக் கிடைக்க அரசு வழிவகை செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, ஆயிரம் மீட்டருக்கு மேல் உயரமுள்ள இடங்களில் இத்தகைய வசதி செய்யப்படுகிறது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் வால்பாறை, முடீஸ் ஆகிய இரு மலை நிலையங்கள் 1,082 மீட்டர் உயரத்தில் இருக்கின்றன; ஆகவே, குளிர்காலப் படி அவர்களுக்கு வழங்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அவர்களுடைய முறையீடு, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவருடனும் பள்ளிக் கல்வி இயக்குநருடனும் கலந்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து சில விவரங்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. அந்த விவரங்கள் வந்தபின் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. கு. அ. பொம்மன்:** தலைவர் அவர்களே, நீலகிரி உயர்ந்த மலைப் பிரதேசமாக இருப்பதால் அங்குள்ள உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் இந்த குளிர்காலப் படி கொடுக்கப்படுகிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, விதியின்படி கொடுக்கப்பட்டு வரும் என்று கருதுகிறேன். தனிக் கேள்வி போட்டால் முழு விவரம் அளிக்கலாம்.

THIRU B. VENKATASWAMY: Sir, even at Hosur, Winter Allowance is given to the Government employees only and not to the employees of the Panchayat Unions like teachers. So, will this Government assure this House that the allowance would be given to the employees of the Panchayat Union also, as they are also working in the same area?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்புகள் என்னிடம் இல்லை. உள்ளாட்சித் துறை அமைச்சரைக் கேட்க வேண்டும்.



1974 மார்ச் 21]

**திரு. கே. என். குமாரசாமி:** ஆயிரம் மீட்டருக்கு மேல் உயரம் உள்ள மலைப் பிரதேசத்தில் இருக்கிறவர்களுக்கு குளிர் காலப் படி கொடுக்க வேண்டுமென்பது விதி என்று சொன்னார்கள். ஆனால், மாவட்ட ஆட்சித் தலைவரையோ மற்றவர்களையோ கலந்து அதன் பிறகு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்வதற்கு என்ன காரணம் என்று புரியவில்லை. விதி இருக்கிறபோது அதன்படி உயரம் உள்ள இடங்களில் பணி புரிகிற ஊழியர்களுக்கு இந்தப் படி கொடுக்க உத்தரவிடுவதில் அரசு காலதாமதம் செய்வதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, ஆயிரம் மீட்டருக்கு மேலும் 1,500 மீட்டருக்குக் குறைவாகவும் உயரம் உள்ள மலைப் பிரதேசங்களில் பணி புரியும் ஊழியர்களுக்கு 1968–69 நிதி ஆண்டிலிருந்து மலைப் படி வழங்க 1968 ஆம் ஆண்டு நிதித் துறை ஆணை பிறப்பித்துள்ளது. 1,082 மீட்டர் என்கிறார்கள். 1,082 மீட்டர்தானா, அல்லது 900-த்தோடு நின்றுவிட்டதா என்பதையெல்லாம் கவனிக்க வேண்டும். புள்ளிவிவரங்களையெல்லாம் சேகரித்துத்தான் முடிவு எடுக்க வேண்டும். அதிலே எந்த இழுக்கும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப் படுகின்றன.

## தேர்வுநிலை ஆசிரியர்கள்.

*535 வினா—**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி தெற்கு சரகம், கல்வி அதிகாரியின் அதிகாரவரம்பிற்குட்பட்ட தனியார் பள்ளிகளில் பணி புரியும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு 1971 ஆம் ஆண்டில் தேர்வு நிலைப் பதவிகள் கொடுக்கப்பட்ட பிறகு One Man Commission ஆல் திருத்தப்பட்ட ஊதியம் நிர்ணயம் செய்யப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணமென்ன?

[1974 மார்ச் 21

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) பட்டதாரி ஆசிரியர்களது ஊதிய விகிதமும் தேர்வு நிலைப் பட்டதாரி ஆசிரியர்களின் ஊதிய விகிதமும் ஒரு மட்டத்தில் ஏறக்குறைய சமமாக இருப்பதால் நீண்ட கால சேவை செய்த பட்டதாரி ஆசிரியர்கள் தேர்வு நிலைப் பதவிகளை வகிக்கும்போது, அவர்கள் பட்டதாரி ஆசிரியர்களாக இருக்கும் போது பெற்று வந்த ஊதியத் தொகையை தேர்வுநிலை ஊதிய விகிதத்தில் பெற நேரிடுகிறது. சம்பளக் குழு நிர்ணயித்த ஊதிய விகிதத்தை மாற்ற இயலாது. ஆசிரியர்கள் ஊதியம் குறையாமல் பார்த்துக்கொள்ள என்ன செய்வது எனும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்:** தலைவரவர்களே, எவ்வளவு காலதாமதமாகக் கொடுக்கப்பட்டது? அந்தக் காலதாமதத்திற்கான காரணம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, திருநெல்வேலி தெற்கு சரகம் கல்வி அதிகாரியின் அதிகார வரம்பிற்குட்பட்ட தனியார் பள்ளிகளில் பணி புரியும் 15 பட்டதாரி ஆசிரியர்களுக்கு தேர்வுநிலை ஊதியம் நிர்ணயம் செய்யப்படவில்லை என்று பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவிக்கிறார். ஆகவே, அவர்கள் ஊதியம் குறையாத அளவிற்கு பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். அது பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கும் செலக்ஷன் கிரேட் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், மலையாள மொழி ஆசிரியர்கள் பல்லாண்டுகள் பணியாற்றினாலும் அவர்களுக்கு இந்த நன்மைகள் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. எனவே, அவர்களுக்கு செலக்ஷன் கிரேட் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? மேலும் 'ஃபிசிகல் எஜுகேஷன்' ஆசிரியர்களாக இருப்பவர்கள் செகண்டரி கிரேட் ஆசிரியர்களை விட சிறப்புப் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு ஸ்பெஷல் கிரேட் வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



1974 மார்ச் 21]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்புகள் என்னிடத்தில் இப்பொழுது இல்லை. அதைத் தனியாகத்தான் ஆராய வேண்டும்.

## நாட்ரம்பள்ளியில் துணைப் பதிவாளர் அலுவலகம்.

***536 வினா—திரு. டி. சி. திம்மராய கவுண்டர்:** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், நாட்ரம்பள்ளியில் துணைப் பதிவாளர் அலுவலகம் திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** (அ) & (இ) தலைவரவர்களே, வடார்க்காடு மாவட்டம், நாட்ரம்பள்ளியில் துணைப் பதிவாளர் அலுவலகம் திறக்கும் செயற்குறிப்பு ஏதொன்றும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. அது மட்டுமல்லாமல், ஆண்டுக்கு 1,500 பதிவுகளாவது பதிவு செய்யப்பட வேண்டும். இல்லையென்றால் நஷ்டத்திற்கு உரியதாகிவிடும் என்பதால் அது இப்பொழுது பரிசீலனையில் இல்லை.

## பயணியர் விடுதிகள்.

***537 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் நகரில் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் பயணிகள் விடுதி ஒன்று கட்டப்பட்டு வருகின்றதா?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

*538 வினா—திரு. ஜி. ராமசாமி :

திரு. டி. சி. திம்மராய கவுண்டர் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், நாட்றம்பள்ளியில் ஒரு பயணியர் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. ராமசாமி : தலைவரவர்களே, நாட்றம்பள்ளிக்கு அருகில் பாலாற்றின் குறுக்கே புல்லூர் என்ற இடத்தில் 4½ கோடி ரூபாயில் பெரிய அணை கட்டுவதாக இருக்கிறது. அந்த இடத்தில் அதிகாரிகள் வந்து தங்க, கிருஷ்ணகிரி, வாணியம்பாடி ஆகிய இரண்டு இடங்களில்தான் பயணியர் விடுதிகள் இருக்கின்றன; இருபது, 25 மைல் தூரத்திற்கு இல்லாமல் இருப்பதால் அங்கு பயணியர் விடுதியை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, புல்லூர் அணைக்கு ஒப்பம் அளிக்கப்பட்ட பிறகு இதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

*Loan faciliaties for farmers in the Nilgiris*

*539 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture, be pleased to state—

(a) whether the Indo-German-Nilgiris Project in the Nilgiris has opened a fund scheme to assist the small farmers; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) ஜெர்மன் கூட்டிணைவுக் குடியரசால் வழங்கப்பட்ட ரூ. 11 இலட்சம் தொகையைக் கொண்டு, நீலகிரி மாவட்டத்திலுள்ள சிறிய விவசாயிகளுக்கு பயிரிடுவதற்கு உதவும் பொருட்டு ஒரு குறுகிய காலக் கடன் திட்டத்தை செயல்படுத்தும் அமைப்பு ஒன்றிற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.



திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இது எப்பொழுது நடைமுறையில் வரும்? எப்பொழுது அமலுக்கு வரும்? இது வேறு இடங்களுக்கும் விஸ்தரிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இது அமலில் இருந்து கொண்டு இருக்கிறது, 1971-லிருந்து. இண்டோ-ஜெர்மன் ப்ராஜக்ட் நீலகிரி மாவட்டத்திற்கு மட்டும்தான். இண்டோ-ஜெர்மன் ப்ராஜக்ட் பணத்தைக்கொண்டு அந்த மாவட்டத்திற்கு மட்டும் சிறிய விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கிறோம்.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, சிறிய விவசாயிகள் என்றால் எத்தனை ஏக்கர் வைத்துள்ளவர்கள்? அதிக ஏக்கர் வைத்துள்ளவர்கள் கூட இந்தக் கடன்களைப் பெறுவதாகக் கேள்விப்படுகிறேன். அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஐந்து ஏக்கர் என்று Farmers owning less than five acres நிர்ணயித்திருக்கிறோம். அவர்களுக்குக்கூட சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன. இதைவிடப் பெரிய விவசாயிகளுக்குக் கொடுப்பதாக மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தகவல் இருந்து, தனியாகக் கொடுத்தால் விசாரிக்கிறேன்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, சிறிய விவசாயிகளுக்கும், பெரிய விவசாயிகளுக்கும் மத்திய வங்கிகள் அங்கேயுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் பயிர்க்கடன்கள், குறுகிய காலக் கடன்கள், மத்திய காலக் கடன்களைக் கொடுத்து வருகிறது. இண்டோ-ஜெர்மன் ப்ராஜக்ட் 11 லட்சம் ரூபாயை சிறிய விவசாயிகளுக்குக் கொடுப்பதாகச் சொல்கிறார்களே, அதை நேரடியாகக் கொடுக்கிறார்களா? அல்லது மத்திய வங்கியின் சொசைட்டிகளின் மூலம் கொடுக்கப்படுகிறதா? இல்லையென்றால் சொசைட்டிகள் மூலம் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, ஜெர்மன் அரசு கொடுக்கும் தொகையைக் கொண்டு சிறிய விவசாயிகளுக்குக் கொடுத்து வருகிறார்கள். அரசாங்கத்தின் மூலம்

கொடுக்கப்படுவது இல்லை. இதற்கு மட்டு 2 சதவிகிதம். அந்த வகையில் நமது கூட்டுறவு வங்கியோ வேறு வங்கியோ கொடுப்பதாக இருந்தால் அதை எடுத்து நாமே நடத்தலாம்.

### திருவள்ளூர் உதவிப் பொறியாளர் அலுவலகம்

*540 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூரில் செயல்பட்டுவரும் உதவி விவசாயப் பொறியாளர் அலுவலகம் (குழாய்க்கிணறுத் திட்டம்) தொடர்ந்து அங்கேயே செயல்பட அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

(இ) இங்கே பயன்படுத்தப்பட்ட போர் செட்டுக்கள் சில தஞ்சை மாவட்டத்திற்கு மாற்றப்பட்டது உண்மையா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, (இ) என்பதற்கு முதலில் சொல்கிறேன்.

(இ) ஆம். ஐக்கிய நாட்டு வளர்ச்சிக் கழகத்தில் குறிப்பிட்ட காலத் திட்டத்தின் கீழ், குழாய்க் கிணறுகளையும் வடிகுழாய்க் கிணறுகளையும் தோண்டுவதற்காக, திருவள்ளூர் சப்-டிவிஷனிலிருந்து 35 கைத்துளை கவிருகளும், 10 விசைத் துளைக் கருவிகளும் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

(அ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, நில நீரை அதிகமாகப் பயன்படுத்தும் செங்கற்பட்டு மாவட்டத்தில் திருவள்ளூர் வட்டம், பொன்னேரி வட்டம் ஆகிய வட்டங்களிலுள்ள ஏராளமான விவசாயிகள் திருவள்ளூரில் உள்ள இந்தத் துளை அலுவலகத்தின் மூலம்தான் பயன் பெறுகிறார்கள். ஆகவே, இந்த நோக்கில் இந்தத் துளை அலுவலகத்தை மாற்றாமல் இருக்கவோ அல்லது அங்கேயிருந்து தஞ்சை மாவட்டத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட ஹாண்ட் போரிங் செட்டுகளை மறுபடியும் திரும்பக் கொண்டு வருவதற்கான நல்ல முயற்சிகளையோ செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, நான் சொன்னபடி இது ஆய்வில் இருக்கிறது. திருவள்ளூர் வட்டத்திலும், பொன்னேரி வட்டத்திலும் இப்படிப்பட்ட குழாய்க் கிணறுகள் அமைப்பது மிகவும் அவசியம் என்பதால்தான் அந்த அலுவலகத்தைக் கலைக்காமல் வைத்திருக்கிறோம். எனவே, திருவள்ளூரில் உள்ளதைக் கலைந்து விட்டோம் என்பது சரியல்ல. ஹாண்ட் போரிங் செட்டுகளையும், பவர் டிரில்ஸ்-ஐயும் தஞ்சை மாவட்டத்திற்கு மாற்றியதற்கு முக்கிய காரணம் இருக்கிறது. அங்கே 'ஃபில்டர் பாயிண்ட் வெல்ஸ்' போடுவதால் அதிகப் பரப்பளவை, அதிக ஏக்கர்களை இருபோக சாகுபடிக்குக் கொண்டு வர முடியும். அதற்காக இந்தக் கருவிகள் தஞ்சை மாவட்டத்திற்கு மாற்றப்பட்டன.

**திரு. சி. வி. எம். அண்ணாமலை :** தலைவரவர்களே, தஞ்சை மாவட்டம் நீர் வசதி நிரம்பப் பெற்றிருக்கிறது என்பது நாடறிந்த உண்மை. ஆனால், செங்கற்பட்டு மாவட்டம் அத்தகைய வசதிகளைப் பெறாதது மட்டுமல்ல, பூமிக்குள் உள்ள தண்ணீரைக் கொண்டுதான் அவர்கள் பயிர் செய்ய வேண்டுமென்ற நிலையிருப்பதால் அங்கே அரசு ஆராய வேண்டும். அது போன்ற முக்கிய இடத்தில் இருந்த விவசாயப் பொறியியல் துறையை நாங்கள் எவ்வளவோ தடுத்தும் அவசரம் அவசரமாக தஞ்சை மாவட்டத்திற்கு மாற்றியிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்திற்கு மாற்றியதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் உடனடியாக அந்த இடத்தில் மறுபடியும் அந்தப் பொறியியல் துறையை ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் க்ரவுண்ட் வாட்டரைக் கொண்டு பயிர் செய்ய வேண்டுமென்பது மிகவும் நன்றாகத் தெரிந்த உண்மை இல்லை—36 யாரும். ஆனால் இந்தக் கருவிகள்—மிக அதிகமாக ஹாண்ட் போரிங் செட்டுகளும், 10 பவர் டிரில்ஸ்-ம் தான். இதை மாற்றுவதற்கு அவசியமான காரணம் இருந்தது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். உலக வங்கியின் பணமும் அதற்குக் கிடைத்ததால் அதை உடனடியாக மாற்றினோம். என் மாற்றினோம் என்பதை மீண்டும் சொல்ல வேண்டுமென்றால் சொல்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் ஒருபோகம் மட்டும் விளைந்த இடத்தில்

இருபோகத்திற்கு நாற்றங்கால் போடுவதால்—இது பின் வரிசை
பில் உள்ள விவசாயிகளுக்கு நன்ருகத் தெரியும், ஆனல் இன்றைக்கு
அவர்கள் இல்லை—இரண்டு போகமாக ஆக்குவதால், தஞ்சை
மாவட்டத்திலே போன ஆண்டைவிட இந்த ஆண்டு அதிக
உற்பத்தி செய்தால் மொத்தத்தில் தமிழகத்திற்கும் நல்லது,
இந்தியத் துணைக் கண்டத்திற்கும் நல்லது.

**திரு. எல். கணேசன் :** தஞ்சை மாவட்டத்தில் ஒரத்தநாடு
பகுதியில் 400-க்கு மேற்பட்ட ஆழ் குழாய்க் கிணறுகள் தோண்டத்
திட்டமிட்டு இதுவரை 45 கேணிகள்தான் தோண்டியிருக்கிருர்கள்
அதிகமாகத் தோண்ட, விரைவாக இயங்க போதுமான ட்ரில்கள்
இல்லையென்று சொல்லுகிருர்கள். இதனை விரைந்து செயற்
படுத்த வேறு ஏதேனும் ஏற்பாடுகள் உண்டா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** ஒரத்தநாடு பற்றிக்
கேட்கிருர்கள். ட்ரில்கள் போயிருப்பது ஒரத்தநாட்டுக்கு அல்ல.
தஞ்சையின் டெல்டா பகுதிகளில் ஏற்கனவே நஞ்சையாக
இருக்கும் பகுதிகளில் விளைச்சலை இரட்டிப்பாக்குவதற்காக அந்த
இயந்திரங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஒரத்தநாடு பற்றித்
தனியாகக் கேள்வி கேட்டால் நானே கூட்டுறவுத் துறை
அமைச்சர் அவர்களோ பதில் சொல்ல முடியும்.

**திரு. ஆ. பரந்தாமன் :** திருவள்ளூரில் குழாய்க் கிணறுகள்
திட்டத்தின்கீழ் பொறியாளர் அலுவலகத்திலிருந்து போதுமான
அளவு வாடகைத் திட்டத்தின் கீழ் ஆயில் எஞ்சின்கள் கொடுக்கப்
படவில்லை. அதை அதிகமான அளவு கொடுக்க அரசு முன்
வருமா ? வாடகைத் திட்டத்தின் கீழ் ஆயில் எஞ்சின்கள்
கொடுக்கும்போது மூன்று நான்கு மாதங்கள் விவசாயிகளே
வைத்துக்கொள்ளுகிருர்கள். மொத்தத்தில் கணக்குப் பார்த்தால்
ஆயில் எஞ்சின்களையே அவர்கள் வாங்கி விடலாம் போல் இருக்
கிறது. அவர்களுக்கே அந்த ஆயில் எஞ்சின்களைக் கொடுத்து
விடலாம் என்ற திட்டமும் இருந்து வருவதாகத் தெரிகிறது.
அந்தத் திட்டத்தின்கீழ் பல விவசாயிகள் மனுச் செய்திருக்கி
ருர்கள் அந்த மனுவை அரசு பரிசீலிக்குமா ?



**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** தனிப்பட்ட
விவசாயிகள் யாரும் டீசல் எஞ்சின் வாங்கி வைத்துக் கொள்வதில்
ஆட்சேபணை இல்லை. அப்படி வாங்கிக் கொள்வதன் மூலமாக
கடன் கொடுக்கும்போது சற்றுக் காலதாமதமாகிறது. டீசல்
எஞ்சினை சொந்தமாக வாங்கி வைத்துக்கொண்டு அந்தப் பம்புகளை
இயக்குவதில் அரசுக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை.

### *Agro-Industries Corporation aid for fisheries*

* 541 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister
for Agriculture be pleased to state the details of the financial
assistance offered by the Tamil Nadu Agro-Industries Corporation
towards the development of fisheries in the State?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** நிதி உதவி எதுவும்
செய்யவில்லை.

### செயற்கை முறை கருத்தரிப்புத் திட்டம்

* 542 வினு.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :
திரு. என். கே. பழனிசாமி : மாண்புமிகு
வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட
விளுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பால் மாடுகள் வைத்துள்ளவர்களின் வீடுகளுக்குச்
சென்று கால்நடைகளுக்கு செயற்கை முறையில் கருத்தரிப்புப்
பணி செய்யும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. சி. பா ஆதித்தனர் :** (அ) ஆம்.

(இ) ஒரு விவர அறிக்கை @ பேரவையின் முன் வைக்கப்
பட்டிருக்கிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** இந்த இனவிருத்தி முறை
தற்போது சென்னை மாநகரத்திலே மட்டுந்தான் நடைமுறைப்
படுத்தப்படுவது எந்த அளவுக்கு வெற்றி பெற்று வருகிறது ?
மாவட்ட அளவில் எப்போது விரிவுபடுத்தப்படும் ?

---

@ 213-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** நேற்றுகூட மாண்புமிகு திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள். ஆர்டிபிஷியல் இன்செமினேஷனுக்கு ஒரு மொபைல் வான் அவசியமாகத் தேவை என்று தொடங்கி இருக்கிறார்கள். மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தும் திட்டம் இருக்கிறது. எப்போது என்று என்றால் இப்போது செல்ல முடியவில்லை.

**திரு. என். கே. பழனிசாமி :** முதலில் கீ வில்லேஜ் சென்டர் மூலம் ஆர்டிபிஷியல் இன்செமினேஷன் முறை செயல்பட்டு வந்தது. இப்போது டிப்பார்ட்மெண்ட் மூலமாக அதிகாரிகள் பஞ்சாயத்து யூனியனின் கீழ் இருந்து செய்கிறார்கள். முன்னை விட இப்போது மோசமான நிலைமையில் இருப்பதால் பழைய கீ வில்லேஜ் சென்டரையே ஏற்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** முடியுமா என்று ஆலோசித்துப் பார்க்கிறேன்.

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** செயற்கை முறையில் கரு தரிப்பதில் ஃபெய்ல்யூர்ஸ் ஏற்படுவதாகச் சொல்லுகிறார்கள். செமனைச் சேகரித்து இன்னொரு இடத்திற்கு சைக்கிளில் எடுத்துச் செல்லுவதால் பொட்டன்சி போய்விடுகிறது என்று சொல்லுகிறார்கள். இதைத் தவிர்க்க அரசு வழிவகை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** ஃபெய்ல்யூர்ஸ் ஏற்பட்டிருக்கக்கூடும். எவ்வளவு ஃபெய்ல்யூர்ஸ் என்ற கணக்கு இல்லை. ஆகவேதான் மொபைல் வான் மூலமாக இப்போது எடுத்துச் செல்லப்படுகிறது. சர்ஜன்கள், லைவ் ஸ்டாக் அசிஸ்டென்ட்ஸ் கூடச் செல்கிறார்கள். இப்போது நல்ல முறையில் செயல்பட்டு வருவதாகத் தகவல் இருக்கிறது.

**திரு. எம். முத்தையா :** செயற்கை முறையில் பிறக்கும் கன்றுகள் இறந்துவிடுவதாகச் சொல்லப்படுகிறது. இதுபற்றி அரசு பரிசீலனை செய்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** கன்றுகள் ஒருவேளை இறந்துவிடலாம். பால் கறக்கிறவர்கள் கன்றுக்குப் பால் விடாமல் இறந்து விடுகின்றன என்பது கேள்விக்குரிய காரியமாக இருக்கிறது.



**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** 1973-ம் ஆண்டிலிருந்து இதுவரை எத்தனை மாடுகளுக்கு சென்னை மாநகரில் இந்த முறை கையாளப்பட்டது ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** கைவசம் விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரங்களைச் சேகரித்துத் தருகிறேன்.

THIRU B. VENKATASWAMY : Sir, we find it very difficult to store semen. So, may I know from the Hon. Minister whether he will make arrangements to de-freeze the semen so that more semen can be stored and distributed to semen banks and key village centres?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** செமனை ப்ரீஸ் பண்ணினாலும் கூட நீண்ட காலம் தாங்குவதில்லை. அதையும் நாம் தயார் செய்து வெகு சீக்கிரமாகப் பயன்படுத்த வேண்டியதாக இருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்தத் திட்டத்தை விரிவாக்கும் முறையில் வெளிநாட்டிலிருந்து காளைகள் வரவழைக்கப்படுகின்றனவா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த போதுமான புல்ஸ்—காளைகள் ஏற்கனவே நமது ஓசூர் பண்ணையில் இருக்கின்றன.

## திருச்சிராப்பள்ளியில் புதிய சாலை.

*543 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி நகரத்தில், தில்லைநகர், தென்னூர் ...க்கிய சாலையை இணைக்கும் சாலைக்கு தியாகி சாமிநாத சாஸ்திரி சாலை எனப் பெயரிட தீர்மானம் ஏதேனும் நிறைவேற்றி அனுமதி ...கேட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட முடிவுகள் யாவை ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (அ) & (இ) தென்னூர் நெடுஞ்சாலையிலிருந்து தில்லை நகர் வழியாக புதிதாக அமைக்கப்படும் சாலைக்கு "டாக்டர் சுவாமிநாத சாஸ்திரி சாலை" என்று பெயரிடுவது குறித்த நகராட்சி மன்றத்தின் செயற்குறிப்பை திருச்சிராப்பள்ளி நகராட்சி பொறுப்பதிகாரி ஒப்புதலுக்காக அரசுக்கு அனுப்பினார். நகராட்சி மன்றச் செயற்குறிப்பை ஏற்றுக்கொண்டு, பொதுத் (தேர்தல்) துறையின் 6—2—74-ஆம் நாளிட்ட 392-ஆம் எண் அரசாணையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசாங்கத்தின் ஒப்புதலுக்கு எப்போது அனுப்பப்பட்டது? அரசாங்கம் ஏதாவது இடையிலே தடை செய்ததா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** டாக்டர் சாமிநாத சாஸ்திரி சாலை என்ற பெயரிட வேண்டுமென்ற செயற்குறிப்பு திருச்சி நகர்மன்றத்திலிருந்து அரசாங்கத்தின் ஒப்புதலுக்கு 1972 ஆகஸ்டு திங்களில் நேரடியாக அனுப்பினார்கள். ஒரு பெயர் வைப்பது என்று சொன்னால் அது வருவாய்க் கோட்ட அதிகாரி மூலமாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகவும் அரசின் பொதுப் பிரிவின் தேர்தல் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். அவர்களுடைய பரிந்துரையின் பேரில் அரசு ஆணை பிறப்பிக்கிறது. டாக்டர் சாமிநாத சாஸ்திரி சாலை என்று பெயரிடுவது குறித்து நேரடியாக அரசுக்கு அனுப்பப்பட்ட காரணத்தால் வருவாய்க் கோட்ட அதிகாரிக்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் அது அனுப்பப்பட்டு பரிந்துரை கேட்கப்பட்டது.

அரசு விதியின்படி. சாதியின் பெயரால் தெருக்கள் இருக்கக் கூடாது என்ற விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கிற காரணத்தால் சாதியின் பெயரைக் குறிப்பிடுவது சரியல்ல என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்கு அனுப்பியிருந்தார்கள். ஆனால் அரசு பரிசீலனை செய்து டாக்டர் சாமிநாத சாஸ்திரி அவர்களை சாஸ்திரி என்று சொன்னால்தான் திருச்சி மாவட்டத்திலும் மற்றும் மாநிலத்திலும் பலருக்குத் தெரியும்; அவர் சிறந்த தேசியவாதி மாத்திரமல்ல, பார்ப்பனர் வகுப்பைச் சார்ந்தவராக இருந்தாலும் அவருடைய மகளுக்கே விதவா திருமணத்தை நடத்தி வைத்தவர் என்ற காரணத்தால் சாமிநாத சாஸ்திரி என்று பெயரிடுவது பொருத்தமானது என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.



### இராதாபுரம் ஒன்றியத்திற்கு டிராக்டர்கள் வழங்கல்.

* 544 வினா—திரு. வி. கார்த்திசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், இராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமாக டிராக்டர், புல்டோசர் வாங்குவதற்கு அரசுக்கு பரிந்துரைகள் வந்துள்ளனவா?

(இ) ஆம் எனில், எப்போது டிராக்டர்கள் வழங்கப்படும்?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

### *Wholesale rice trade*

* 545. Q.—THIRU N. K. PALANISAMY:
THIRU V. BALASUNDARAM: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether the Government had any discussions with the Central Government during September 1973 on the takeover of the wholesale rice trade in this State; and

(b) if so, the details of the same?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** (அ) ஆம்.

(இ) அரிசி மொத்த வியாபாரத்தை மேற்கொள்வது குறித்து புதுடில்லியில் 1973 ஆகஸ்டு 16-ம் தேதி நடந்த பேச்சு வார்த்தையில் மாண்புமிகு முதலமைச்சர் சார்பில் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கலந்து கொண்டார். மாநில அரசு மட்டும் அரிசி மொத்த வியாபாரத்தை மேற்கொள்வதானது தற்போது செயல்பட்டு வரும் சீரான முறையைப் பாதிக்கும் என்று பேச்சு வார்த்தையின்போது குறிப்பிட்டார். கொள்முதல் செய்யப்பட்ட அளவில் வரையறுத்த பொது விநியோக முறைக்காகத் தேவைப்படும் அரிசியை வைத்துக் கொண்ட பின்னர் உபரியாயிருக்கும் அரிசியை மத்திய தொகுப்பு இருப்புக்கு வழங்க இயலும் என்று கூறினார்.

[1974 மார்ச் 21

**திரு. என். கே. பழனிசாமி:** இந்த மொத்த வியாபாரத்தை எடுத்து மாநில அரசுக்கு விட்ட காரணத்தால் பற்றாக்குறை உள்ள அஸாம் போன்ற மாநிலங்களில் இது வெற்றிகரமாக நடக்கிறது. ஆகவே, அப்படி நம் சர்க்காரும் கொள்முதல் செய்து மக்களுக்கு அரிசி நியாயமான விலைக்குக் கிடைப்பதற்கு வழி செய்யலாமே. எனவே, இந்த மொத்த வியாபாரத்தைக் கைவிடக் காரணம் என்ன ?

(முற்பகல் 9-30)

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** இதை மாநில அரசு ஒரு கொள்கையாக வகுக்க முடியாது. மத்திய அரசு கொள்கையை வகுக்க வேண்டும். மத்திய அரசு அதில் ஒரு சரியான முடிவிற்கு வரவில்லை. பற்றாக்குறை மாநிலங்களில் வெற்றி பெற்றிருக்கிறது என்று சொன்னார்கள். முதல் அமைச்சர்கள் உணவுப் பங்கீடு பற்றிய மாநாட்டில் பேசும்போது கூட—அச்சுத மேனன் அவர்கள், சபையில் இல்லை—அப்போதிருந்த சேர்மன் அவர்கள் சொன்னார்கள், கேரள முதல் அமைச்சர் அவர்களால் கூட இந்தக் கொள்கையை நிறைவேற்ற முடியவில்லை, ஆகவே யோசித்துச் செய்யவேண்டும் என்ற முறையில் அவர்கள் தலைமை உரையில் பேசியிருக்கிறார்கள்.

**திரு. வை. பாலசுந்தரம்:** இந்த மொத்த வியாபாரத்தை மத்திய அரசே ஏற்று நடத்தக்கூடிய ஒரு நிலை இருந்தால் அது மாநில அரசை ஏதாவது சங்கடத்தில் ஆழ்த்துமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அதுபற்றி பின்னால் யோசித்துத்தான் சொல்லமுடியும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அரிசி மொத்த வியாபாரம் பற்றி இப்போது தென் மண்டலத்தை மறுமுறையும் அமல் படுத்தவேண்டும் என்ற ஒரு ஆலோசனையை மத்திய சர்க்கார் நம் மாநில சர்க்காருக்கு தெரிவித்ததாகப் பத்திரிகையில் செய்தி பார்த்தேன். அப்படி ஏதாவது தகவல் வந்திருக்கிறதா ? இந்த தென் மண்டலத்தை உருவாக்குவது பற்றி இந்த அரசு கொள்கை ஏதாவது தீட்டியிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அப்படி ஒன்றும் சர்க்காருக்கு வந்ததாகத் தெரியவில்லை.



1974 மார்ச் 21]

**திரு. கே. டி. கே. தங்கமணி:** கோதுமை மொத்த வியாபாரத்தை, அரசு நடத்துவது என்று மத்திய சர்க்கார் சில மாநிலங்களில் ஏற்று நடத்தினார்கள். தயாரிப்பு சரியாக இல்லாததால் தோல்வி அடைந்து விட்டது என்று சொல்கிறார்கள். அரிசி மொத்த வியாபாரத்தை ஏற்று நடத்தவேண்டுமென்று கொள்கை ரீதியாக ஒத்துக்கொள்ள மத்திய சர்க்கார் தயங்குவதாகத் தெரிகிறது. நம் சர்க்காரைப் பொறுத்தவரையில் நாம் இம்மாதிரி மொத்த வியாபாரத்தை அரசு ஏற்று நடத்தவேண்டும் என்று சொல்லி மத்திய அரசை வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அதுபற்றிய ஒரு கொள்கையை தீர யோசித்துத்தான் செய்யவேண்டும். இப்போதுள்ள முறை சரியாக இருப்பதால், இந்த முறை சரியாக செயல்படவில்லை என்றால்தான் அந்த முயற்சியில் ஈடுபட வேண்டும். இல்லாவிட்டால் மேலும் பொறுப்பை சுமந்து கொண்டு வாங்கக் கூடிய மக்களுக்கு ஆபத்து வராத முறையில் காப்பாற்றவேண்டும். மத்திய அரசின் தலையீடு இருப்பதால், இப்போதுள்ள முறை சரியாக செயல்படவில்லை என்றால்தான் அதைப்பற்றி யோசித்து முடிவு செய்யவேண்டும்.

**திரு. தோப்பூர் திருவேங்கடம்:** மாநில உணவு வழங்கு கார்ப்பரேஷன் மூலம் இந்த அரிசி மொத்த வியாபாரத்தை நடத்துவதற்கு மாநில அரசு மத்திய அரசின் அனுமதியைப் பெறுமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** இதுபற்றி முன்பே சொல்லியிருக்கிறேன். புதிய முறையை ஏற்படுத்துவது என்றால் இப்போதுள்ள முறை சரியான முறை இல்லை என்ற முடிவுக்கு வந்த பின்னர்தான் புது முறையை நாம் கொண்டுவர வேண்டும்.

THIRU B. VENKATASWAMY: Serveral governments have failed because of wholesale trading in rice and foodgrains. May I know from the Hon. Minister whether they would continue the present system of not having wholesale trade in rice and food-grains?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** எல்லா வற்றையுந்தான்.

[1974 மார்ச் 21

**டாக்டர் எச். வி. ஹாண்டே.** அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது தற்போது இருக்கக்கூடிய முறை சரியாகத்தான் இருக்கிறது என்று சொன்னார்கள். தற்போதுள்ள முறையிலும் பல வித கோளாறுகளைப் பார்க்கிறோம். இப்போது ரேஷன் கார்டுஸ் வாங்கமுடியவில்லை. ஏராளமான பெரிய க்யூக்கள் இருக்கின்றன. பொது மக்களுக்கு மிகவும் கஷ்டமாகயிருக்கிறது. அதைப் பத்திரிகைகளில் போட்டோ எடுத்துக்கூட போட்டிருக்கிறார்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவற்றையெல்லாம் பற்றி நாளைவரும் டிமாண்டில் பேசிக்கொள்ளலாம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** தற்போதுள்ள முறை திருப்திகரமாக இருக்கிறதா, சரியாக இருக்கிறதா, அதுபற்றி விளக்கம் சொல்வார்களா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** சரியாகத்தான் இருக்கிறது. ஒருசிலயிடங்களில் அங்குள்ள அதிகாரிகளால் தாமதம் ஏற்பட்டால் உடனடியாக நடவடிக்கைகள் எடுத்து திருத்தப்படும். / இவைபற்றி பத்திரிகைகளில் சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்ட் மூலம் அறிக்கைகள்கூட விட்டுக்கொண்டிருக்கிறோம்.

**திரு. எம். சுரேந்திரன் :** சாதாரணமாக உணவுப்பொருள்களை நேரடியாக விவசாயிகளிடம் இருந்து பல பேர்கள் வாங்கி அதை வாங்கி உண்பவர்களுக்குக் கிடைக்கும்போது இடையில் பல பேர்கள் இருப்பதால் அவர்களுக்கும் லாபம் போவதால் உணவுப் பொருள்களின் விலை உயருகிறது என்பது சாதாரணமாக அவ்வளவு பேர்களும் உணர்ந்த ஒன்றாகும். இன்று நம் மாநிலத்தில் அதிக உற்பத்தி இருக்கும் நிலையில் முழுவதையும் அரசே எடுத்து விநியோகம் செய்தால் இப்போதிருப்பதை விட இன்னும் குறைவான விலைக்கு மக்களுக்கு நாம் உணவுப் பொருள்களை வழங்க முடியுமே, அந்த முறை பற்றி இந்த அரசு ஏன் சிந்திக்கக்கூடாது ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** இப்போது கூட கோர்ஸ் க்ரெயின்ஸ், சோளம், கம்பு, கேழ்வரகு இவற்றிற்கு ஒரு கட்டுப்பாடு இருந்தகா அகில இந்திய சர்க்கார் அந்தக் கட்டுப்



1974 மார்ச் 21]

பாட்டை. எடுத்துவிட்டார்கள். கட்டுப்பாட்டில் வைப்பதற்கான உத்தரவை கேட்டுக் கொண்டிருக்கிறோம். எந்த ஒரு கொள்கையை வகுத்தாலும் உற்பத்தியாளரின் விலையைக் குறைக்காத அளவிலும், அதேசமயத்தில் அதை வாங்கிப் பயன்படுத்தும் மக்களுக்கும் நியாயமான விலையில் கிடைப்பதற்கும், விலை ஏறாமல் பார்த்துக் கொள்ளவும் வேண்டும்.

**திரு. சோ. அழகர்சாமி :** அரிசி மொத்த வியாபாரத்தை அரசாங்கமே ஏற்று நடத்துவதற்கு மத்திய அரசின் உத்தரவு வேண்டுமென்று சொன்னார்கள். வாங்கி உபயோகிப்பவர்களுக்கு நியாயமான விலையில் கொடுக்கவேண்டும் என்றும் சொன்னார்கள். இப்போது வியாபாரிகளை கொள்முதல் செய்ய விட்டுவிட்டு அவர்களிடம் லெவி வாங்குகிறோம். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் விவசாயிகளிடம் நேரடியாக கொள்முதல் செய்தால் விவசாயிகளுக்கும் நியாயமான விலை கிடைக்கும், மக்களுக்கும் நியாயமான விலையில் கிடைக்கும். எனவே, வியாபாரிகளிடமிருந்து லெவி வாங்குவதற்குப் பதிலாக அரசு நேரடியாகவே விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** உறுப்பினர் அவர்கள் சொல்வது, மொத்த வியாபாரத்தை அரசு எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதாகும். லெவி வாங்கக் கூடாது என்றால், மொத்த வியாபாரத்தை அரசு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்கிறார்கள். அதுபற்றி யோசித்து பின்னால்தான் முடிவு செய்யமுடியும்.

### உணவுப் பொருள்கள் கடத்தல்.

***546 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973-ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதத்தில், தமிழகத்திலிருந்து உணவுப்பொருட்களை கள்ளத்தனமாக கடத்தியவர்கள் எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர், மாவட்டவாரியாக?

(இ) அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ)**

| மாவட்டம் | கைது செய்யப்பட்டோரின் எண்ணிக்கை. |
|---|---|
| தர்மபுரி | 73 |
| கோயம்புத்தூர் | 1,222 |
| மதுரை | 66 |
| திருநெல்வேலி | 3 |
| கன்னியாகுமரி | 40 |
| | 1,404 |

(இ) 389 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு கடத்தப்பட்ட உணவுப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. மீதமுள்ளவை புலனாய்வில் உள்ளன.

**திரு. கே. என். குமாரசாமி :** உணவுப் பொருள்கள் கடத்தலைத் தடுக்க ஆங்காங்கே செக்போஸ்ட் போடுவதன் மூலம் ஏதேதோ தடுத்துவிட முடியும் என்று அரசாங்கம் நினைக்குமானால் அது தவறாகத்தான் முடியும். காரணம், தனி வியாபாரிகள் கொள்முதல் செய்து விற்பனை செய்வதை நாம் தடை செய்யாமல் இருப்போமானால் நிச்சயமாக அந்தக் கடத்தல் நடந்து கொண்டு தானிருக்கும். என்ன வழக்கு போட்டாலும் அவர்கள் அதைச் சந்திக்கத் தயாராயிருக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** கேட்டிருக்கிற கேள்விக்கும் இதற்கும் என்ன பொருத்தம் என்று தெரியவில்லை. அது பற்றிய கேள்விக்கான பதில் இல்லை

**திரு. என். கே. பழனிசாமி :** இது வரையில் சர்க்கார் எடுத்த நடவடிக்கைகள் பூராவும் ஸ்மகிள் செய்யக் கூடியவர்கள் மீதுதான் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பதுக்கல்காரர்கள் மீது அதிகப்படியான நடவடிக்கைகள் எடுப்பதில்லை. காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** பதுக்கலுக்குக் காரணமாக உள்ளவர்களைத்தான் பல பேர்களை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பிடித்துப் போட்டிருக்கிறோம்.



* 547 வினா—**திரு. வை. பாலசுந்தரம் :** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில், கடந்த ஜூன், ஜூலை, ஆகஸ்டு 11-ந் தேதி வரை எவ்வளவு கடத்தல் அரிசி பிடிபட்டது ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :**

| | அரிசி குவி. கி.கி. | நெல் குவி. கி.கி. |
|---|---|---|
| ஜூன், 1973 | 69.230 | 14.520 |
| ஜூலை, 1973 | 38.533 | 4.117 |
| ஆகஸ்ட், 11-ம் நா[illegible]ரை | 37.783 | 4.100 |
| மொத்தம் | 145.546 | 22.737 |

**திரு. வை. பாலசுந்த[illegible]** தலைவரவர்களே, [illegible] கடந்த ஆண்டு ஜூன், ஜூலை, ஆகஸ்[illegible] மாதங்களில்தான் [illegible] கன்னியாகுமரி மாவட்டத்தில் மிகவும் அதி[illegible] செய்யப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் [illegible]பட்டார்கள். அதற்குப் பிறகு கடத்தல் கட்டுப்பாட்டிற்குள் அடங்கியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** இல்லை, தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. செப்டம்பர் மாதம் 40 குவிண்டால் நெல்லும், 64 குவிண்டால் அரிசியும், அக்டோபர் மாதம் 23 குவிண்டால் நெல்லும், 53 குவிண்டால் அரிசியும், நவம்பர் மாதம் 26 குவிண்டால் நெல்லும், 103 குவிண்டால் அரிசியும், டிசம்பர் மாதம் 3 குவிண்டால் நெல்லும், 43 குவிண்டால் அரிசியும் கடத்தப்பட்டிருக்கிறது.

**திரு. சி. ஆறுமுகம் :** தலைவரவர்களே, சென்னையோடு, செங்கற்பட்டு மாவட்டத்தை இணைத்து இருப்பதால், இந்த ஆண்டு சம்பா போகம் செங்கற்பட்டு மாவட்டத்தில் சாவி ஆகி விட்டதால், சென்னைக்குக் கடத்திக்கொண்டு வருகிறார்கள். இதைத் தடுக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

[1974 மார்ச் 21

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இந்தக் கடத்தலைத் தடுப்பதற்காக புதிதாக ஏதாவது சிறப்புப் படை ஏற்படுத்தப்பட்டு இருக்கிறதா ? கடத்தலில் ஈடுபட்டு இருப்பவர்கள் அண்டை மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்று

தகவல் வந்திருக்கிறதே, அது சம்பந்தமாக வண்டிகளை ஏதாவது கான்பிஸ்கேட் செய்து இருக்கிறார்களா என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, கடத்தல் செய்பவர் என்று வெளி மாநிலத்தைச் சேர்ந்த ஒருவர் பிடிபட்டு இருக்கிறார். பல இடங்களில் வண்டிகள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன. பாதுகாப்புச் சட்டப்படி அவர்களைப் பிடித்து இருக்கிறோம். அதுவும் செய்தி கிடைத்துத்தான் அவர்கள் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கான புதிய திட்டங்கள், செக் போஸ்ட்களில் மேலும் பல அதிகாரிகளைப் போட்டு, 1 ஷிப்டு, 2 ஷிப்டு என்று இல்லாமல் 3 ஷிப்டு போட்டு, டெபுடி தாசில்தார் போன்ற அதிகாரிகளையும் மற்றவர்களையும் நியமிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, சில நேரங்களில் விவசாயிகள் தங்களுடைய வீட்டில் வைத்து இருக்கும் நெல்லைக் கூட கடத்துவதற்காக உள்ள நெல் என்று, வீட்டில் இருக்கும் 40 மூட்டைக்கு அதிகமாக இருப்பதை பறிமுதல் செய்யும் சூழ்நிலை இருக்கிறது. இது சம்பந்தமாக சில வழக்குகள் ஹைகோர்ட்டிற்குச் சென்று இருப்பதாக அறிகிறோம். எந்த அடிப்படையில் நெல் வைத்துக்கொள்ளலாம் என்று விவசாயிகளுக்குச் சொன்னால் நல்லது, அதை அரசு அறிவிக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** எந்த அளவுக்கு வைத்துக்கொள்ளலாம் என்று அறுதியிட்டுச் சொல்லப்பட்டு இருக்கிறது. ஆகவே, எந்தெந்த வழக்குகளை அப்படிப் போட்டு இருக்கிறார்கள் ? அதைப் பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அது உண்மையான வழக்கா இல்லையா என்பதைப் பரிசீலிக்கலாம்.



1974 மார்ச் 21]

**திரு. அ. தேவேந்திரன் :** தலைவரவர்களே, இந்த கடத்தல் காரியங்களில் ஈடுபடுகிறவர்கள் ஆயுதம் தாங்கிகளாக இருப்ப தாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா ? இந்த கடத்தல் செய்யப்படும் அரிசியை நாம் கைப்பற்றினால் அதை உடனடியாக டிஸ்போஸ் செய்து விடுகிறார்களா, அல்லது வழக்கு முடிகிற வரையில் வைத்துக்கொள்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** அப்படி ஆயுதம் தாங்கிகளாக இருப்பதாகக் கேள்விப்பட்டோம். அதிலேகூட மதுரை மாவட்டத்தில் இருக்கும் எல்லைப் பகுதிகளில் போடப் பட்டிருந்த நம்முடைய செக்போஸ்ட் அதிகாரிகளை அவர்கள் தாக்கி விட்டார்கள். அதற்குப் பிறகு அந்த மாவட்டத்திலுள்ள சூப்பிரண்டெண்ட் ஆப் போலீஸ் திரு. தேவாரா என்பவர் 16 மைல் இரவில் நடந்து சென்று 104 கழுதைகளைப் பிடித்து அந்தக் கடத்தல் செய்கிற நபர்களையும் பிடித்து இருக்கிறார்கள். கூடிய விரைவில் அவர்களையும் கைது செய்ய முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறோம்.

**திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி, மதுக்கரைப் பகுதிகளில் இன்று கூட தினசரி குறைந்த பட்சம் 10,000 மூட்டைகள் பக்கமாக கடத்தப் படுகிறது. லாரிகளில் மட்டுமல்லாமல், அமைச்சர் குறிப்பிட்ட மாதிரி, கழுதை மூலமும், தலைச்சுமை மூலமும் மூட்டை மூட்டையாக அரிசி கடத்துகிறார்கள். மேலும், எல்லை ஓரங்களில் இருக்கும் வியாபாரிகளே அந்தக் காரியங்களில் ஈடுபட்டு இருக்கிறார்கள். இவைகளையெல்லாம் தடுப்பதற்காக அரசு வேறு ஏதாவது புதிய முயற்சியை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, இந்தச் செய்தியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தத் துணை வினா வரும்போது தான் சொல்லியிருக்கிறார்கள். 10,000 மூட்டை என்று வரையறுத்துக்கூடச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட செய்திகளை தயவுசெய்து உறுப்பினர்கள் ஆங்காங்கு ரகசியமாகச் சொன்னால் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து வைத்து இருக்கிறோம். இங்கே இருக்கும் போலீஸ் அதிகாரிகள் போதாது என்று, சில இடங்களில் ராணுவம்கூட வைத்து தடுப்பதற்காக நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறோம்.

வருகிறோம். துணைக் கேள்விக்கு விடையளிக்கிறபோது சொன்னது போல், இந்தக் கழுதைகளைப் பிடிப்பதற்கும் ஏற்பாடுகளை மிகத் தீவிரமாகச் செய்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, உறுப்பினர்கள் எங்கெங்கே கழுதைகளைப் பராமரிக்கிறார்களோ, அவர்கள் அந்தப் பகுதிகளையெல்லாம் ஓரளவிற்குச் சொல்வார்களானால் நாம் அவர்களுக்கு 'ரிவார்டு' கொடுக்கக்கூட தயாராக இருக்கிறோம்.

## *Distribution of tyres and tubes.*

* 548. *Q.*—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(*a*) whether it is a fact that the Centre has delegated powers to the State Government under the Essential Commodities Act to regulate the supply of tyres and tubes; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) & (இ) சட்டமன்றப் பேரவையில் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவரவர்களே, டயர்கள் எல்லாப் நியாய விலையில் கிடைப்பது இல்லை. ஆனால், சென்னையில் இருக்கும் சௌக்கார்பேட்டையில் பிளாக்மார்க்கெட்டி எப்போது வேண்டுமானாலும் கிடைக்கும் நிலை இருக்கிறது. அதை முறைப்படுத்த வேண்டுமென்று மத்திய அரசு எசென்சிய கமாடிடீஸ் ஆக்டின் கீழ் மாநில அரசுக்கு அதிகாரம் வழங் வேண்டுமென்று 6, 7 மாதங்களுக்கு முன்னால் பத்திரிகைகளி செய்தி பார்த்தேன். அந்த முறையில் இப்போது எத்தகை நடவடிக்கையை அரசு எடுத்து இருக்கிறது என்பதை நான் அறி விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, டயர்கள் வினியோகத்தைப் பொறுத்தவரையில் எசென்சிய கமாடிடீஸ் ஆக்டின் கீழ் மாநில அரசே அதை ஒழுங்குமுறை படுத்தலாம். ஆனால் இப்போது இருக்கிற பிரச்னை டயர்கள் ந

@214-220-ம் பக்கங்களில் இணைப்பு -ஆக அச்சிடப்பட்டுள்ளது.



முடைய மாநிலத்திற்குப் போதுமான அளவுக்கு அளிக்கவில்லை என்பதுதான். மத்திய சர்க்காரிடத்தில் நம்முடைய மாநில அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்ட கருத்து, உற்பத்தியாகும் டயர்களையெல்லாம் அந்தந்த மாநிலங்களில் உள்ள 'வெகிகிள் பாபுலேஷன்' ஊர்திகளின் தொகையின் அடிப்படையில் அதை முறையாகப் பங்கிட்டுக் கொடுத்து விடுவார்களானால் அதை நாம் ஒழுங்காக மாநிலத்திற்குள் வினியோகிப்பது மிகவும் பொருத்தமாகவும், வசதியாகவும் இருக்கும். அதை விடுத்து, இப்போது ஒரு மாநிலத்திலே மட்டும் நாம் வினியோக முறையை மேற்கொண்டு விடுவோமானால் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு கடத்தப்படும் சூழ்நிலையை மாநில அரசால் தடுக்க இயலவில்லை.

**திரு. வெ. ந. முத்தமிழ் செல்வன் :** அவைத் தலைவரவர்களே, தமிழகத்திலுள்ள சர்க்கரை ஆலைப்பகுதி ஒவ்வொன்றிலும் விவசாயிகள் நிறைய டயர் வண்டிகளை வைத்து இருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான டயர்கள் கொடுப்பதற்கான வகையில் தற்போது ஒவ்வொரு சர்க்கரை ஆலையிலும் டயர்கள் வழங்கப்பட்டு வந்தாலும், தேவையான அளவுக்குக் கொடுக்க முடியவில்லை. இதற்கென தமிழக அரசு சிறப்பான முறையில் ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, உற்பத்தி என்பது ஒன்று, வினியோகம் என்பது மற்றொன்று. நமக்குக் கிடைக்கின்ற டயர்களை ஆங்காங்கு மாவட்டத்தில் உள்ள டயர் டீலர் மூலமும், ஊர்திகளின் சொந்தக்காரர்கள் வைத்து இருக்கும் குழுக்கள் மூலமும் வினியோகம் செய்து வருகிறோம். கிட்டத்தட்ட 80 சதவிகிதம் அப்படி வினியோகம் செய்யப்படுகிறது. 20 சதவிகிதம் டயர்கள் டீலரிடம் ஒப்படைக்கப்பட்டு, அவர்கள் அதை வினியோகம் செய்து வருகிறார்கள். டயர்கள் கிடைக்காமல் போவதற்கு நாம் பொறுப்பாளி இல்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, உற்பத்தியைப் பொறுத்த மட்டில் இந்த 'ஸ்கேர்சிடி' இருந்தாலும்கூட, நமது மாநிலத்திற்குக் கிடைக்கின்ற டயர்கள் ஒழுங்கான முறையில் வினியோகம் செய்ய எசன்ஷியல் கமாடிடீஸ் ஆக்டின் கீழ் நமக்குக் கிடைத்து இருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி, இப்படி இருக்கும் பிளாக் மார்க்கெட்டிங்கைத் தடுப்பதற்கும், டயர்களை ஒழுங்கான முறையில்

வினியோகம் செய்வதற்கும் இந்த அரசாங்கம் எடுத்து இருக்கும் நடவடிக்கைகள் எந்த ரீதியில் இருக்கின்றன. கமிட்டிகள் ஒழுங் கான முறையில் செயல்படாத காரணத்தால்தான் கள்ள மார்க்கெட் நடைபெறுகிறது என்று சொல்கிறார்கள். ஆகவே பிளாக்மார்க்கெட் நடைபெறாத முறையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, கமிட்டிகள் எங்கெங்கு ஒழுங்காக நடைபெறவில்லையோ அங்கெல் லாம் ஒழுங்காக நடைபெற வேண்டுமென்பதற்காக அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கமிட்டிகள் மாதத்திற்கு ஒரு முறை கூடி, வருகின்ற டயர்களை ஒழுங்காக வினியோகம் செய்யவேண்டுமென்று அரசாங்கத்தின் சார்பில் உத்தரவு அனுப் பப்பட்டிருக்கிறது. இப்போது இருக்கிற பிரச்னை கமிட்டிகளுக்கு போதிய டயர் வருவது இல்லை என்பதே தவிர வேறு அல்ல.

**திரு. சி. ஆறுமுகம்:** தலைவரவர்களே, உற்பத்தியாகின்ற டயர் களில் வியாபாரிகளுக்கு 25 சதவிகிதம் விற்பதற்கு என்று கொடுத்து விடுகிறார்கள். வருவதே குறைவான அளவு. அதிலே 25 சதவிகிதம் வியாபாரிகளுக்குக் கொடுத்து விடுவதால், கள்ள மார்க்கெட் ஏற்படுகிறது. இதைத் தடுக்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** 25 சதவிகிதம் அல்ல 20 சதவிகிதம்தான். சாதாரணமாக அவசர காரணங்களை முன்னிட்டு, 'கன்டின்ஜன்ட் சர்கம்ஸ்டான்சஸ்' என்று சொல்வார் களே, அதாவது திடீரென்று பஞ்சர் ஆகிவிடுவது அல்லது வேறு சில காரணங்களுக்காக அவசரமாகத் தேவைப்படுவது ஆகியவற் றிற்கு வேண்டுமென்பதற்காக இந்த 20 சதவிகிதம் டயர்களை வியாபாரிகளிடத்தில் ஒப்படைத்து இருக்கிறோம். மீதி 80 சத விகிதம் இந்த குழுக்களின் மூலம் ஆங்காங்கு மாவட்டங்கள் தோறும் வழங்கப்படுகின்றன.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** 1966-ம் வருடத்திலேயே எசென் ஷியல் கமாடிட்டீஸ் ஆக்ட்படி நம்முடைய மாநிலத்திற்கு டயர் போன்றவைகள் விநியோகிப்பதற்கு அதிகாரம் கொடுத்திருக் கிறார்களே. ஆகவே, நமக்கு கிடைத்திருக்கக்கூடிய டயர்கள் பூரா வுக்கும் விலை நிச்சயம் பண்ணி, பூராவும் அப்படி நிச்சயிக்கப்பட்ட விலையிலேயே கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா



அதே நேரத்தில் 3 மாத ஸ்டாக் வாங்கி வைக்கக்கூடிய அளவுக்கு மத்திய சர்க்காரிடம் வேண்டுகோள் விடுத்து, அதற்கான ஏற்பாடுகள் ஏதேனும் செய்யுமா இந்த அரசு என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** சட்டம் வந்தது 1966-ல். ஆனால் டயர் அதன்கீழ் கொண்டுவரப்பட்டது 1969-ல். இப்பொழுது நமக்கு இருக்கிற பிரச்னை அந்த, சட்டத்தில்,

Delegation of powers under Clause (d) shall not extend to inter-State transport or distribution.

என்று இருக்கிறது. அதனுடைய விளைவு என்ன ஆகும் என்றால் நாம் இங்கே இருக்கிற டயர்களை ஒழுங்காக விநியோகம் செய்கி றோம் என்று ஆரம்பித்தால், டயர் கிடைக்காமல் வேறு மாநிலங் களுக்குப் போவதற்கான வாய்ப்பு நிறைய இருக்கிறது. ஆகை யினால் நாம் மத்திய சர்க்காரிடம் வற்புறுத்தியிருக்கிறோம். இந்த நாட்டிலே எத்தனை டயர் தொழிற்சாலைகள் டயர்களை உற்பத்தி செய்கின்றன என்பது அவர்களுக்குத் தெரியும். அப்படி உற்பத்தி செய்யப்பட்ட டயர்களை மத்திய அரசாங்கமே இந்த நாட்டில் முழுவதும் கொள்முதல் செய்து அந்தந்த மாநிலங்களுக்கு உரிய வண்டிகளின் தொகையின் அடிப்படையில் அந்தந்த அரசாங்கத்திற்கு கொடுத்துவிடுவார்களேயானால் இந்தப் பிரச்னையை எளிதாகத் தீர்க்கலாம்.

**திரு. நா. வீராசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல உற்பத்தியாகின்ற டயர்களை மாநில அரசின் மூலம் விநியோகம் செய்யவேண்டும். அந்த அதிகாரத்தை மத்திய அரசாங்கத்தினிடமிருந்து நம்முடைய அரசாங்கம் பெறுவதில் அப்படி ஏதாவது சிக்கல் இருந்தால், அந்தத் தொழிலை அரசாங்கமே, எடுத்துக்கொள்ளும் திட்டத்தை நம்முடைய அரசாங்கம் உருவாக்குமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, விநியோகத்தைப் பொறுத்தவரையில் விநியோகிக்கின்ற அதிகாரம் மாநில அரசுக்கு உண்டு. ஆனால் டயர்களை கொள்முதல் செய்ய உற்பத்தியைப் பொறுத்தவரையில் நமக்கு காரண்டீட் சப்ளை இல்லை. அதனால் டிஸ்ட்ரிப்யூஷனை எடுத்தால் கஷ்டப்படவேண்டி வரும். காரண்டீட் சப்ளை நமக்கு மத்திய அரசு தரவேண்டும்

என்று அடிக்கடி டெல்லியில் வற்புறுத்தி வருகிறோம். போக்கு வரத்து அமைச்சர்கள் மகாநாட்டில் கூட இந்தக் கருத்து மத்திய சர்க்காரிடம் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் அதற்கு இன்னும் தகுந்த நடவடிக்கையோ, பதிலோ தெரிவிக்க வில்லை.

DR. H. V. HANDE : Sir, the Hon. Minister in his reply said that we do not have enough tyres. May I know whether an assessment has been made by the Ministry as to the quantum of tyres required by the State, the quantity that is available and if so, what is the difference between availability and needs of the State, whether this difference is more than the All-India difference, whether it is possible to prevail upon the Centre to allow manufacturers directly to supply to the requirements of the State and whether any such has been taken to assess and take necessary action?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, the position in regard to supply and demand has already been assessed. Though I do not have the details now, it is with us. The real difficulty is the demand as well as supply, being flexible. Thanks to the intelligence of our bus-owners and lorry-owners they adopt so many ways to fulfill their demands.

**திரு. எஸ். நல்லசாமி :** நம் நாட்டில் கட்டை வண்டியை விட்டு டயர் வண்டிகள் இப்பொழுது வளர்ந்து வந்திருக்கின்றன. விவசாயிகள் டயர் வண்டிகளுக்கு டயர் கிடைக்காமல் கஷ்டப் படுவது அரசுக்குத் தெரியுமா? விவசாயிகள் மார்க்கெட்டில் ஒரு டயர் ரூ. 800-க்கு வாங்கவேண்டியிருக்கிறது. அரசு அவர்களுடைய கஷ்டத்தைத் தீர்ப்பதற்கு 'ஸிக்ஸ்-ப்ளை' டயர், கான்வாஸ் உள்ள டயர்களை அதிகமாக விவசாயிகளுக்கு வாங்கிக் கொடுப்பதற்கு அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** விவசாயிகளுடைய கஷ்டம் இந்த அரசாங்கத்திற்குத் தெரியும். இன்னும் சொல்லப் போனால் லாரி, பஸ், இவைகளுக்கான டயர்களை உற்பத்தி செய் வதிலே இருக்கிற ஆர்வம், அக்கரை இதில் இல்லை; சாதாரண விவசாயிகளுக்கு பயன்படுகிற டயர் வண்டிகளுக்கு டயர் செய்வதிலே அந்த உற்பத்தியாளர்களே கூட அக்கரை [illegible]ந்திவதில்லை. கல்கத்தாவிலே எங்கேயோ ஒரு இடத்தில்

 



அதற்கான டயர்கள் செய்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அதுவும் போதுமான அளவுக்குக் கிடைப்பதில்லை. போகிற போக்கைப் பார்த்தால், டயர் வண்டிகளிலிருந்து மறுபடியும் மாட்டு வண்டிகள் காலத்திற்குப் போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**திரு. கே. எ. வகாப் :** இந்த டயர் பற்றாக்குறையைப் போக்குவதற்கு நம்முடைய மாநில அரசு போக்குவரத்துத் துறை ஒரு முயற்சி எடுத்து, கூட்டுத் துறையில் டயர் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு முயற்சி எடுக்குமா? நம்மிடத்தில் மத்திய சர்க்கார் சிமெண்ட், சர்க்கரை போன்ற பொருள்களை அதிகம் பெறுகிறார்கள். அவைகளுக்குப் பதிலாக டயர், ஏறி பொருள் போன்றவைகளை நமது அரசாங்கம் பெறுவதற்கு ஏதாவது முயற்சி எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** கூட்டுத் துறையில் ஒரு டயர் தொழிற்சாலை ஆரம்பிக்கவேண்டும் என்ற முயற்சி ஏற்கனவே நம்முடைய அரசின் சார்பில் இருக்கிறது. அதுவரையில் நாம் பொறுத்துத்தான் ஆகவேண்டும். நாம் இங்கேயிருந்து சிமெண்ட் போன்றவைகளை அனுப்பி, டயர்களைப் பெறலாம் என்றால், அப்படிப் பெறுவதற்கு மாநில அரசும் மத்திய அரசும் வாணிபம் நடத்தக் கூடிய நிலையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. காசிராமன் :** மின்சக்தி பற்றாக்குறை காரணமாக டயர் உற்பத்தி பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்ற எண்ணத்தில் அண்டை மாநிலங்களிலிருந்து மின்சாரத்தை அதிகமாக வாங்கி டயர் கம்பெனிகளுக்குக் கொடுத்திருக்கிறபொழுது, அதன் காரணமாக எந்த அளவுக்கு உற்பத்தி பெருகி பற்றாக்குறையைத் தீர்க்க அது உதவிகரமாக இருந்தது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப் பினர்கள் அவர்கள் தெரிவித்த ஒரு காரணத்தை டயர் உற்பத்தி யாளர்களும் தெரிவித்தார்கள். அண்டை மாநிலமான கர்நாடக அரசாங்கத்தோடு நேரில் பேசி ஒப்பந்தம் செய்து அவர்கள் மின்சாரம் அளிப்பதன் மூலம் டயர் உற்பத்தியை அதிகரித்து செய்ய முடிந்தது. அப்படி கிடைத்திருக்கிற டயர்களில் 60 பங்கு கர்நாடக மாநிலத்திற்கும், 40 பங்கு தமிழகத்திற்கும் என்று ஒப்பந்தம் செய்துகொண்டு டயர் கிடைத்தது ஓரளவுக்கு நிலைமை திருப்திகரமாக்கிற்று.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** இப்பொழுது நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற டயர்கள் எந்த முறையில் விநியோகிக்கப் படுகிறது? மத்திய அரசாங்கம் அந்தந்த மாநிலங்களுக்கென்று ஒதுக்குகின்றார்களா? அல்லது உற்பத்தியாளர்கள் அட்ஹாக்காக அவரவர்கள் இஷ்டத்துக்கு ஒதுக்கிக்கொடுக்கின்றார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மத்திய அரசாங்கம் ஒதுக்கித் தருவதில்லை. உற்பத்தியாளர்களே அவரவர்களுக்கு என்று ஏஜெண்ட்களை வைத்துக்கொண்டு, இதிலே வியாபாரம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** கன்யாகுமரி ஜில்லாவில் இருக்கிற மோட்டார் உடைமையாளர்கள் அங்கு டயர் ஒழுங்காக கிடைக்கப்பெறவில்லை, அங்கு இயங்குகின்ற கமிட்டியும் சரியான முறையில் இயங்கவில்லை என்ற புகாரினை அரசாங்கத்திற்கு தந்திருக்கிறார்களா? அப்படியானால் இப்பொழுது கொடுக்கின்ற 20 சத விகிதம் என்பதைக் குறைத்து மொத்தமாக அரசாங்கமே ஏற்று விநியோக முறையை சீர்படுத்த வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** கன்னியாகுமரி மாவட்டத்திற்குப் போதுமான டயர்கள் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் நமக்குக் கிடைக்கின்ற டயர்களை அந்தந்த மாவட்டத்தில் இருக்கிற ஊர்திகளின் தொகையை அடிப்படையாகக் கொண்டு நாம் ஒதுக்கித் தருகிறோம். கன்னியாகுமரி மாவட்டத்திற்கு இன்னும் டயர்கள் வந்து சேரவில்லை என்று இங்கே குறிப்பிடுகிறார்கள். சப்ளை கிடைத்திருக்காது என்ற காரணமே தவிர, எந்த மாவட்டத்தையும் புறக்கணிக்கவேண்டும் என்பதற்கான சூழ்நிலை நிச்சயம் இல்லை. அந்த 20 சத விகிதம் என்பதை எடுப்பதற்கு நமக்கு அதிலே சில சங்கடங்கள் இருக்கின்றன. நான் ஏற்கனவே சொன்னதுபோல டில்லியிடத்தில் நாம் பேசி முடிவுக்கு வரமுடியுமே தவிர, அவர்களிடமிருந்து எடுத்துக்கொள்கிற உரிமை நிச்சயம் மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்துதான் அதில் ஈடுபட வேண்டியிருக்கும்.



*Auto-rickshaws in Coimbatore*

*549 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Transport be pleased to stat —

(a) whether the Police detected a number of auto-rickshaws running in Coimbatore without licences in June 1973; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) ஆம்.

(இ) ஓட்டுவதற்கான உரிமம் இல்லாது, 22 ஆட்டோரிக்ஷா ஓட்டுநர் வண்டிகளை ஓட்டியதைக் கண்டுபிடித்து அவர்கள்மீது மோட்டார் வண்டிகளின் சட்டத்தின் கீழ் தொடர்புள்ள விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

*550 **வினா—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் ஓடும் ஆட்டோ ரிக்ஷாக்களின் மீட்டர் பழுதுபட்டு விட்டது என சொல்லி பொதுமக்களிடம் மீட்டர் கட்டணத்தை காட்டிலும் அதிகமான பணம் கேட்கிறார்கள் என்பது பற்றிய புகார் மனு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) & (இ) கோவையில் ஓடும் ஆட்டோ ரிக்ஷாக்களின் மீட்டர் குறைபாடு உடையதாக இருக்கிறது என்று சொல்லி பொதுமக்களிடமிருந்து மீட்டர் கட்டணத்தைவிட அதிகமாக தொகை வசூலிக்கப்படுகிறது என்பது குறித்து புகார்கள் ஏதும் வரப்பெறவில்லை. ஆனால், மீட்டரைப் போடாமலே அதிக கட்டணம் கேட்பதாகப் புகார்கள் வந்துள்ளன. நேர்மை தவறிய ஓட்டுநர்கள்மீது வழக்கு தொடரப் பட்டுள்ளது.

**திரு. என். டென்னிஸ்:** அவர்கள் எவ்வளவு காலமாக லைசென்ஸ் இல்லாமல் ஆட்டோ ரிக்ஷாக்களை ஓட்டிவருகிறார்கள்? மீட்டர் எடுக்காமல் ஆட்டோ ரிக்ஷாக்களை ஓட்டி அதிக கட்டணம் பெறுபவர்களின் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

[1974 மார்ச் 21

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** லைசென்ஸ் இல்லாமல் ஆட்டோ ரிக்ஷாக்கள் ஓட்டினார்கள் என்பது காவல் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டு, அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு காலமாக ஓட்டினார்கள், கண்டுபிடிப்பதற்கு முன்பு என்பதை நிச்சயமாகச் சொல்வதற்கு வாய்ப்பு இல்லை. மீட்டர் கட்டணத்தைவிட அதிகமாக கட்டணம் வாங்குகிறவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டார்கள். அதற்கும் அவர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டு அபராதம் போன்றவைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுடைய லைசென்ஸ்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கின்றன.

(முற்பகல் 10-00

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, due to the high cost of petrol, I think auto-rickshaws are more popular among the public. So will the Government increase the number of auto-rickshows in places like Coimbatore, Madras and Madurai?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, there is no such proposal at present.

**திரு. கோவை செழியன் :** தலைவரவர்களே, ஆட்டோ ரிக்சா, டாக்சிகளில் அதிகக் கட்டணம் கேட்டால் வழக்குத் தொடர வேண்டும் என்பது ஒருபுறமிருக்க, பல இடங்களில் ஆட்டோ ரிக்சாக்களையும், டாக்சிகளையும் வாடகைக்கு அமர்த்திச் செல்கின்றவர்கள் 20 மைல், 30 மைல் தூரம் சென்றவுடன் நிறுத்தி விட்டு, டிரைவருக்குத் தெரியாமல் ஓடிவிடுவதும் அல்லது கத்தியைக் காட்டி அவர்களிடம் இருக்கும் பணத்தைப் பிடுங்கி விட்டு ஓடிவிடுவதுமாக இருக்கிறது. ஆகவே ஆட்டோ ரிக்சா டாக்சி டிரைவர்களுக்கு பாதுகாப்புத் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, இது எல்லாம் சமுதாயக் குற்றங்களே தவிர, போக்குவரத்துத் துறையைச் சார்ந்ததல்ல.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** தலைவரவர்களே, இப்போது பெட்ரோல் விலை கூடிவிட்ட பிறகு, பழைய கட்டணம் அதிகமாயிருக்கிறது. மீட்டர்கள் பழைய கட்டண விகிதத்தில் பொருத்தப்



1974 மார்ச் 21]

பட்டிருப்பதால் ஓட்டுநர்கள் புதிய கட்டணமாக என்ன தொகை கேட்கிறார்களோ அதைக் கொடுக்கவேண்டியிருக்கிறது. புதியக் கட்டணத்திற்கான அட்டைகளை அவர்கள் காட்டுவதில்லை. ஆகவே உடனடியாக புதிய கட்டண விதத்தில் மீட்டர்களை மாற்றி அமைக்க உத்தரவிடப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, புதிய கட்டண விதத்தில் மீட்டர்களை மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டுமென்று ஏற்கெனவே உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மீட்டர்கள் திருத்தி அமைக்கப்படும் வரையில் புதிய கட்டண விகிதங்களைக் காட்டுகின்ற அட்டைகளை பயணிகளிடம் காட்டி, அதற்குரிய கட்டணங்களைப் பெற்றுக்கொள்ள உத்தரவு இருக்கிறது. அதற்கு மேற்பட்டு யாரும் வாங்கக்கூடாது.

**திரு. இரா. மாணிக்கவாசகம் :** தலைவரவர்களே, கோவை ஆட்டோ ரிக்சா சங்கத்திடமிருந்தும், இதர பிற சங்கங்களிடமிருந்தும் 'நாங்கள் மீட்டரைப் பொருத்திக்கொள்கிறோம்; புதிய கட்டணத்தை உடனடியாக அமுல் படுத்திக்கொடுத்தால் அதற்குத் தகுந்தமுறையில் திருத்தி அமைத்துக் கொள்கிறோம்' என்று அரசுக்கு கோரிக்கை வந்திருக்கிறதா? வந்திருக்கிறது என்றால் அதன்மீது என்ன முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, மீட்டர்களைப் பொருத்திக்கொள்வதானால் அரசு வரவேற்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்படாதது என்பதைக் குறிக்கும்.]

## 2. கவன ஈர்ப்பு.

**சென்னை நகரில் சமையல் வாயுக்கள் ஏற்பட்டுள்ள அல்லலுறும் குறையும் அதனால் மக்களுக்கு குறித்து**

THIRU G. R. EDMUND : Mr. Speaker, Sir, I call the attention of the Hon. Minister for Food and Co-operation to a matter of urgent public importance, namely, the serious shortage of cooking gas in Madras city causing hardships to the people.

[1974 மார்ச் 21

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே,

சென்னை மாநகரில் நுகர்வோர்களுக்கு "இன்டேன்", "கால்காஸ்" என்ற இரண்டு வகை சமையல் வாயுக்கள் வழங்கப்படுகின்றன. இன்டேன் வாயு சென்னை எண்ணெய் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டு, இந்திய எண்ணெய் கழகத்தால் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு, ஆந்திரா, மைசூர் மாநிலங்களிலுள்ள சென்னை மாநகர் உட்பட 55 அங்காடி நிலையங்களுக்கு இவை வழங்கப்படுகின்றன. கால்காஸ் விசாகப்பட்டினத்தில் உள்ள கால்டெக்ஸ் எண்ணெய் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டு சென்னை, ஈஸ்ட் கோஸ்ட் காஸ் நிறுவனத்தால் சென்னை மாநகர், சேலம், வேலூர், ஈரோடு, காஞ்சிபுரம், புதுச்சேரி ஆகிய இடங்களுக்கு வழங்கப்படுகிறது.

சென்னை மாநகரிலும், சுற்றுப்புறப்பகுதிகளிலும் 46,000 பேர் 'இன்டேன்' வாயுவைப் பயன்படுத்துகின்றனர். அவர்களுக்கு மாதமொன்றுக்கு சராசரியாக 1,050 டன் வாயு தேவைப்படுகிறது. தமிழ்நாடு, மைசூர், ஆந்திரா ஆகிய இடங்களில் உள்ள ஏனைய பகுதியினருக்கு மாதமொன்றுக்கு சுமார் 1,200 மெட்ரிக் டன் வாயு தேவைப்படுகிறது. சென்னை, எண்ணெய் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலை மாதமொன்றுக்கு சுமார் 2,000 முதல் 2,200 மெட்ரிக் டன் இன்டேன் வாயுவை உற்பத்தி செய்கிறது; இந்த வாயு வழங்கப்படுகிற சென்னை மாநகரிலும் ஏனைய அங்காடிப் பகுதிகளிலும் இந்த வாயு பயன்படுத்துவர்களின் தேவையை நிறைவு செய்ய ஏறத்தாழ இது போதுமானதாகும். எனவே, இன்டேன் வாயு வழங்குவதில் பற்றுக்குறை எதும் இல்லை. ஆனால், இன்டேன் வாயுவை வழங்குமாறு கேட்டு சுமார் 25,000 பேர் தங்கள் பெயரைப் பதிவு செய்துள்ளனர். ஆனால், இந்த வாயு குறிப்பிட்ட அளவுக்கே வழங்கப்படுவதனால், புதிதாக எவரையும் பதிவு செய்து கொள்ள இயலாது. தங்களது உலைகளில் திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயுவை பயன்படுத்துவதை நிறுத்திவிட்டு அதற்குப்பதிலாக எண்ணெயைப் பயன்படுத்தி அதன் மூலம் மீதமாகும் வாயுவை பொதுமக்களுக்குக் கிடைக்கச் செய்ய சென்னை எண்ணெய் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலை நடவடிக்கை எடுத்துவருவதாக கூறப்படுகிறது. சென்னை



1974 மார்ச் 21] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

எண்ணெய் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலையிலிருந்து தற்போது கிடைத்துவரும் வாயுவை கோயம்புத்தூருக்கும் ஏனைய சில பகுதிகளுக்கும் வழங்க இயலும் பொருட்டு, கொச்சி எண்ணெய் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலையில் திரவ பெட்ரோலியம் வாயுவின் உற்பத்தியை நிலைப்படுத்துவதற்கான திட்டங்களும் உள்ளன. இத்திட்டங்கள், நிறைவேற்றப்பட்டால் சென்னை மாநகருக்கும், பிற பகுதிகளுக்கும் அதிக அளவில் இன்டேன் வாயு வழங்கவும் வாயு வழங்கப்படுவதற்கான பட்டியலில் புதிதாகப் பலரைச் சேர்த்துக் கொள்ளவும் இயலும்.

சென்னை மாநகரில் 26,300 பேர் கால்காஸ் வாயுவைப் பயன்படுத்துகின்றனர். மாதமொன்றுக்கு சராசரியாக சுமார் 280 மெட்ரிக் டன் கால்காஸ் தேவைப்படுகிறது. தென் கிழக்கு ரயில்வே போக்குவரத்து பாதிக்கப்பட்டதால் கல்கத்தாவிலிருந்து விசாகப்பட்டினத்திற்கு வாகன்களை திருப்பி அனுப்புவதில் காலதாமதம் ஏற்பட்டது. விசாகப்பட்டினத்திற்கும் சென்னைக்குமிடையே வாகனங்களைக் கொண்டு செல்வதில் இடற்பாடுகள் ஏற்பட்டன. இதனால், சென்னை மாநகருக்குக் கீழ்க்காணும் அளவுகளில் மட்டுமே கால்கேஸ் சென்னை ஈஸ்ட் கோஸ்ட் காஸ் நிறுவனத்தால் வழங்க இயன்றது :—

| | |
|---|---|
| டிசம்பர் | 223 டன் |
| ஜனவரி | 181 டன் |
| பிப்ரவரி | 153 டன் |

தமிழ் நாட்டில் சென்னை மாநகரிலும் ஏனைய பகுதிகளிலும் கால்காஸ் கிடைப்பதில் ஏற்பட்ட பற்றுக்குறைக்கு இதுவே காரணமாகும். வாகன நிலைமையை சீர்படுத்தி, தமிழ்நாட்டில் சென்னை மாநகருக்கும் ஏனைய பகுதிகளுக்கும் கால்காஸ் அதிக அளவில் வழங்கப்படுவதற்கு கால்டெக்ஸ் நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

## (3) அறிவிப்பு.

### 1974-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1974-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

## (4) அரசினர் சட்ட முன்வடிவு.

### 1974-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, 1974-ம் ஆண்டு, இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இச்சட்ட முன் வடிவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

## (5) நடைமுறைக் கேள்வி.

### பேரவைத் துணைத் தலைவர் பதவிக்குத் தேர்தல் நடத்துவது குறித்து

**திரு. க. உரொ. எட்மண்ட் :** சார், பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவரவர்களே, பேரவையினுடைய துணைத் தலைவர் இந்த மாதம் 9-ந் தேதி தன்னுடைய பதவியை ராஜிநாமா செய்திருக்கிறார்கள். அவர்கள் பதவியை ராஜிநாமா செய்து ஏறத்தாழ 12 நாட்கள் ஆகின்றன. நம்முடைய சட்டமன்ற விதிமுறைகளின் பிரகாரம் துணை சபாநாயகர் தேவை. உடனடியாகத் துணைத் தலைவரை தேர்ந்தெடுப்பதுபற்றி தலைவரவர்களே அறிவிக்க வேண்டுமென்று சட்டமன்ற விதிமுறைகள் இருக்கின்றன. இதற்கு முன்னாலே



துணை சபாநாயகர் பதவியிலிருந்து நீக்கப்பட்டபோது சபாநாயகரே இந்த சபையை பல மாதங்களாக நடத்திச் சென்றிருக்கிறார்கள். அவ்வளவு பொறுப்பான பதவி இது. ஆகவே, இந்த சட்டமன்ற கூட்டத் தொடரிலேயே துணைத் தலைவரை தேர்ந்தெடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைத் தலைவர் இல்லாமலேயே பல மாதங்கள் சபை நடந்ததாக நீங்களே சொல்கிறீர்கள். அதைப்போலவே துணைத் தலைவர் இல்லாமலும் நடக்கலாம். இதில் பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை.

**திரு. பெ. சீனிவாசன் :** துணைத் தலைவர் இல்லாமல் சபை நடக்கலாம். ஆனால் துணைத் தலைவர் தேர்தலை நடத்துவதில் என்ன தடங்கல் இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் எட்மண்ட் அவர்கள் எழுப்பியது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல என்று சொன்னேன். தேர்தல் நடத்துவது என்பது வேறு.

**Thiru G. R. EDMUND :** Sir, in the rules it is only stated 'There shall be a Deputy Speaker' and not 'There may be a Deputy Speaker'. It is also stated that 'The Speaker shall fix a date'.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, டிபுடி ஸ்பீக்கர் பல கமிட்டி களுக்குத் தலைவராக இருக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. நாம் புதிய கமிட்டிகள் பலவற்றை அமைக்க இருக்கிறோம். அதனால் துணைச் சபாநாயகரை உடனடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டி யிருக்கிறது. துணைச் சபாநாயகர் தேர்தலை நடத்துவதில் ஏற்படக் கூடிய சங்கடம் என்ன? சங்கடம் ஏதும் இருப்பதாகத் தெரிய வில்லை. ஆகவே, எப்போது தேர்தல் நடக்கும் என்பதை அறிவித்தால் நாங்களும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வசதியாக இருக்கும், என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பெ. சீனிவாசன் :** தலைவரவர்களே, துணைத் தலைவர் சபார்டினேட் லெஜிஸ்லேஷன் கமிட்டிக்குத் தலைவராக இருக்கிறார்; ஹவுஸ் பிரிவிலேஜ் கமிட்டிக்குத் தலைவராக இருக்கிறார்;

[திரு. பெ. சீனிவாசன்] [1974 மார்ச் 21

கமிட்டிக்குத் தலைவராக இருக்கிறார். இந்த மூன்று கமிட்டிகளுக்கும் ஏற்கெனவே நான் சேர்மனாக இருந்திருக்கிறேன். அப்போது பல்வேறு தொல்லைகளினால், உள் கட்சி விவகாரங்களினால் அந்தக் கமிட்டிகள் ஒழுங்காக கூட்டம் நடத்த முடியவில்லை; சூழ்நிலை அப்படி இருந்தது. ப்ரிவிலேஜ் கமிட்டியை நடத்த முடியவில்லை. காரணம் ப்ரிவிலேஜுக்கு உட்பட்டவர் உள்ளே புகுந்துவிட்ட சூழ்நிலையின் காரணமாக நடத்த முடியாத சூழ்நிலையை உருவாக்கிவிட்டார்கள். ஆகவே, துணைத் தலைவர் இல்லையென்றால் 3 கமிட்டிகளையும் நடத்த முடியாத சங்கட நிலை தான் உருவாகும். உடனடியாக துணைத் தலைவர் பதவிக்கான தேர்தலை நடத்த வேண்டுமென்பது என் கருத்து.

**திரு. நா. வீராசாமி:** திரு. ஜேம்ஸ் அவர்கள் தேர்தல் தேதியை அறிவித்தால் தேர்தல் வேலையில் தாங்கள் ஈடுபட முடியும் என்றார்கள். என்ன வேலையில் ஈடுபடப்போகிறார்கள்?

**திரு. ஜே. ஜேம்ஸ்:** ஆளும் கட்சியிலேயே எங்களுக்கு நண்பர்கள் இருக்கிறார்கள். யாராவது வரலாம்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** சபாநாயகர் இல்லாமலேயே இந்த அவை பல மாதங்கள் நடந்திருக்கின்றது, ஆகவே துணைச் சபாநாயகர் இல்லாமல் நடக்கலாம் என்று சொன்னார்கள். சபாநாயகர் பதவியை காலியாக வைத்திருந்ததை நாங்கள் யாரும் சரியானது என்று கருதவில்லை. அரசியல் சட்டத்திலே சபாநாயகர் பதவி, துணைச் சபாநாயகர் பதவி கட்டாயம் இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அரசியல் சட்டத்தின் பிரிவை நிறைவேற்றுவது நம் கடமை. அரசியல் சட்டத்தின் லெட்டர் மாத்திரம் அல்ல ஸ்பிரிட்டையும் மதித்து நடப்பதாக இருந்தால் துணைச் சபாநாயகர் தேர்தலை உடனே நடத்துவது தான் முறை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே டி. கே. தங்கமணி:** சில கமிட்டிகள் கூடாமல் இருக்கின்றன என்று நானும் சொல்ல நினைத்தேன்.
(The election must take place as soon as possible.
"As soon as possible" என்றால் ஆறு மாதம் என்று அர்த்தம் இல்லை. சபாநாயகரே எந்த நேரமும் இந்த அவையில் உட்காருவது என்பது முடியாது. உதவி சபாநாயகர் தேர்தலைக் கொஞ்சம் சீக்கிரமாக நடத்தவ...



1974 மார்ச 21] [திரு. கே. டி. கே. தங்கமணி]

பல கமிட்டிகளுக்கு உதவி சபாநாயகர் எக்ஸ்அபிஷியோ
சேர்மென்னாக இருப்பதனால் அவர் இல்லாது பல கமிட்டிகள்
கூடுவது இல்லை. ரூல்ஸ் கமிட்டி கூடுவதே இல்லை. பிரிவிலேஜ்
கமிட்டியும் கூடவே இல்லை. இந்தமாதிரி சிக்கல் ஏற்படாதிருக்க
உடனடியாக சபாநாயகர் தேர்தலை நடத்துவது அவசியமாக
இருக்கும் என்று நான் சொல்லிக் கொள்கிறேன்.

Dr. H. V. HANDE : In continuation of points mentioned here,
the Hon. Speaker has already mentioned in this House that so far
as Privileges Committee, Public Accounts Committee and Public
Undertakings Committee are concerned, an election is to take place
shortly to elect the members for these Committees. Obviously
within a few days we have to elect members for Privileges Com-
mittee also. Once the members are elected, the rules say specifi-
cally that the Hon. Deputy Speaker shall be the Chairman for the
Privileges Committee. For every Committee the Chairman is
appointed. It would be incongruous, if the Committee members
are elected, and the Hon. Speaker is in a helpless position and not
able to nominate the Chairman. Normally the ex-officio Chairman
is Deputy Speaker. If the election of the Deputy Speaker is
postponed, I would like to know how the Speaker is going to
solve the problem of filling up Chairmanship of Privileges
Committee.

Quite a number of privileges might have come up but the
Privileges Committee has not met. I would like to know how the
Hon. Speaker is going to solve the problem.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு துணைத் தலைவர்
வேண்டும் என்பதில் உறுப்பினர்கள் காட்டிய அக்கறையை
வரவேற்கிறேன். துணைத் தலைவர் தேர்தல் நடத்தவேண்டும்
என்பதில் பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை. பேரவைத்
தலைவர் இல்லாமலேயே பல மாதங்கள் இந்த அவை நடந்திருக்
கின்றது. ப்ரிவிலேஜ் கமிட்டிக்குத் துணைத் தலைவர்தான்
தலைவராக இருக்கவேண்டுமென்ற நிலை இல்லை.

The Chairman of the Committee shall be nominated by the
Speaker from amongst the members of the Committee.

**திரு. க. உரா. எட்மண்ட்:** இதற்கு முன்னாலுள்ள
ப்ரீசிடெண்ட்.

[1974 மார்ச் 21

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நமது விதிகளில் ஹவுஸ் கமிட்டிக்குத்தான் துணைத் தலைவர் எக்ஸ்-அபிஸியோ சேர்மன். ஆயினும் துணைத் தலைவர் தேர்தலை விரைவில் நடத்த வழிமுறைகளைச் செய்யலாம்.

அடுத்து 1974-75 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மானியக் கோரிக்கைகள்.

**. 1974-75-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு —தொடர்ச்சி.**

**அ) நிதிக் கோரிக்கை எண் 30—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன்**

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"நிதிக் கோரிக்கை எண் 30—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 8,98,04,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU N. DENNIS : Sir, to discuss about the denial of benefits to a Scheduled Tribe or Caste as soon as he becomes a Christian, I move—

"That the allotment of Rs. 8,98,04,100 under Demand No. 30—Welfare of Scheduled Tribes, Castes, etc., be reduced by Rs. 100."

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, to discuss the need to provide houses to the Scheduled Caste people, I move—

"That the allotment of Rs. 8,98,04,100 under Demand No. 30—Welfare of Scheduled Tribes, Castes, etc., be reduced by Rs. 100."

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும், நகராட்சியிலும் ஆண்டொன்றுக்கு குறைந்தது 200 வீடுகளேனும் அரிசனங்களுக்காக அரசு கட்டித் தருவதன் அவசியம் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 30—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 8,98,04,100-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



1974 மார்ச் 21]

**திரு. கு. அ. பொம்மன் :** தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் அரிசனங்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் வீட்டு மனைகள் கொடுக்கப்பட்டிருந்தும் இன்னும் அவர்களுக்குப் பட்டா வழங்காததைப் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 30—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 8,98,04,100-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. எஸ். வடிவேல் :** தலைவர் அவர்களே, அரிசன மாணவர்களுக்கு உணவுக்காக வழங்கும் உதவித் தொகையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 30—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 8,98,04,100-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, அரிசன வகுப்பு மாணவர்களுக்கு படிப்பு உதவி வழங்குவது குறித்தும், வருமான வரம்பை நீக்குதல் குறித்தும் விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 30—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 8,98,04,100 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சு. ம. துரைராஜ் :** தலைவர் அவர்களே, டாக்டர் அம்பேத்கார் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு செய்த தியாகத்தின் நினைவாக அவரது திரு உருவப் படத்தை சட்டமன்றத்திலும், பள்ளிக்கூடங்களிலும் வைக்கவும், அவரைப்பற்றிப் பள்ளிப் பாடப் புத்தகங்களில் வெளியிட வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துக் கூற—

"நிதிக் கோரிக்கை எண் 30—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 8,98,04,100-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஆ) நிதிக் கோரிக்கை எண் 21—மீனளம்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,76,48,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, ஏழை மீனவர் களுக்கு மீன்பிடி உபகரணங்கள் இலவசமாக வழங்க வேண்டு மென்று விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,76,48,800-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்

**திரு. க. உரொ. எட்மண்ட் :** தலைவர் அவர்களே, மீனவர் பயிற்சி முடித்த மாணவர்களுக்கு விசைப்படகோ அல்லது, வேறு வேலை வாய்ப்புகளோ அளிக்கப்பெறாமல் இருத்தல்பற்றி எடுத்துக் கூற—

"நிதிக் கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,76,48,800-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, to discuss about the difficulties of the mechanised boat owners, I move—

"That the allotment of Rs. 1,76,48,800 under Demand No. 21—Fisheries be reduced by Rs. 100."

THIRU R. PONNAPPA NADAR : Sir, to discuss about the need to improve Colachel into a fishing port and to stop the shifting of the Fisheries Training Centre from Colachel to Kanyakumari, I move—

"That the allotment of Rs. 1,76,48,800 under Demand No. 21—Fisheries be reduced by Rs. 100."



**திரு. கே. எ. வகாப் :** தலைவர் அவர்களே, எண்ணூரில் உள்ள இறால் பதனிடும் தொழிற்சாலை நல்ல முறையில் நடக்க ஆவன செய்யவேண்டியது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண்—21 மீனளம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,76,48,800-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்துள்ள இரண்டு மானியங்களின் மீதான பேரவை விவர அறிக்கைகளை@ சட்டப் பேரவை குறிப்பேட்டில் பதிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக ஒரு சில முக்கியமான புதிய திட்டங்கள் குறித்து— இந்த இரண்டு துறைகளிலும் எடுத்துக்கொள்ளப்பட இருப்பதை நான் சிறிது அளவு எனது முன்னுரையில் எடுத்துக் கூற விரும்பு கிறேன்.

பொதுவாக தமிழ்நாடு ஜனத்தொகை 4,11,99,168 என்றால் தாழ்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 76,46,250 ஆகும். இந்தக் கணக்குக் கூட குறைவாகத்தான் இருக்க முடியும். காரணம், கணக்கு எடுப்பவர்கள் அரிசனக் காலனிக்குள் நுழைந்து ஒவ்வொரு வீடாகச் சென்று கணக்கு எடுக்கவில்லை. ஒட்டு மொத்தமாக ஒவ்வொரு கிராமத்திலும் எத்தனை தலைக்கட்டு இருக்கிறது என்ற முறையில் எடுக்கப்பட்ட கணக்காகும். இது குறைவான கணக்குதான் என்பது என் மதிப்பீடு. ஆனால், இன்றையதினம் இந்த 76,46,250 பேர்கள் 24,453 கிராமங்களில் வாழ்கிறார்கள்.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நல்ல பல வசதிகளையும், வாழ்வையும் தரவேண்டும் என்பதை மனதில் வைத்து, அவர்களது பொருளாதார முன்னேற்றத்திற்கு,

@496-555-ம் பக்கங்களில் இணைப்புகள் IV, V ஆக அச்சிடப்பட்டுள்ளன.

[திருமதி சத்தியவாணிமுத்து] [1974 மார்ச் 21

கல்வி முன்னேற்றத்திற்கு பலவிதமான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மின் விசையை எடுத்துக்கொண்டால் ஏறத்தாழ 23 ஆயிரம் கிராமங்களுக்கு மின்வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் ஓராயிரம் கிராமங்களே மிஞ்சி இருக்கின்றன.

அதேபோல் குடிதண்ணீர் திட்டத்தை எடுத்துக்கொண்டால் 21,268 கிராமங்களுக்கு கிணறுகள் வெட்டி, மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் கட்டி, ஓரளவு குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்த்து வைத்திருக்கிறோம். மேலும், 3,315 கிராமங்களுக்குத்தான் குடிதண்ணீர் தர வேண்டியிருக்கிறது. கல்வியில், பொதுவாகவே, இந்த 4½ கோடி மக்களில், 74,33,777 குழந்தைகள்தான் பள்ளியில் படிக்கின்ற பருவத்தை உடையவர்கள். சதவிகித அடிப்படையில் பார்த்தால், 18 சதவிகிதம் குழந்தைகள்தான் பொதுவான கல்வி பெறுகிறார்கள், எல்லா வகுப்புகளுக்கும் சேர்த்து. இதிலே, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவ மாணவிகள் பள்ளி வகுப்பு வரையில் படிப்பவர்கள் 12,30,113—அதாவது ஏறத்தாழ 16 சதவிகிதம் குழந்தைகள் பள்ளி வகுப்புகளிலே படித்துக்கொண்டு வருகிறார்கள். எனவே, ஆண்டுதோறும் அதிகப்படியான தொகையை கல்விக்காக ஒதுக்குகின்ற காரணத்தால், இந்த அளவுக்குக் குழந்தைகள் கல்வி பெறுகிறார்கள். நான் கூறுவது, கல்லூரிப் படிப்பை விட்டுவிட்டு, பள்ளிப் படிப்புக்கு மாத்திரம் 16 சதவிகிதத்தை நாம் பூர்த்தி செய்திருக்கிறோம்.

பொதுவாகவே, இந்தியாவிலே இருக்கிற மற்ற மாநிலங்களில் தமிழ்நாடு தாழ்த்தப்பட்ட நலத்துறையில் சிறப்பான பணியாற்றி வருகிறது என்பதை அனைவருமே ஒத்துக்கொள்கிறார்கள். Commissioner for Scheduled Castes and Tribes அந்தக் கமிஷனர்கூட— எல்லா மாநிலங்களையும்விட தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தமிழகத்தில் சிறந்த திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள் என்று அவர் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்.

வீட்டுமனையைப் பொறுத்தவரையிலே, நிறையப் பணத்தை நாம் ஒதுக்கி இருக்கிறோம். மற்ற 7, 8 மாநிலங்களைச் சேர்த்து ரூ. 38 இலட்சம் வீட்டு மனைக்காக செலவிடப்படுகிற நேரத்தில், நமது மாநிலத்திலே மாத்திரம் ரூ. 31 இலட்சம் செலவழித்து, வீட்டு வசதி செய்து கொடுத்திருக்கிறோம். மின் வசதியைப் பூர்த்தியாக்கி இருக்கிறோம். ஆகவே, இந்த இரண்டு திட்டங்களை



1974 மார்ச் 21] [திருமதி சத்தியவாணிமுத்து]

அவர்களே பாராட்டிக் கூறியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட வகையிலே, இன்றைக்கு அந்த இலாகா, அந்தச் சமூக மக்களுக்குச் சேவை செய்வதிலே, தீவிர நடைபோட்டு வருகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த ஆண்டு இருக்கிற புதிய திட்டங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் மனதிலே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றுதான் இவைகளை நான் கூறுகிறேன். வழக்கமாக ஒதுக்குகின்ற தொகையை விட, இந்த ஆண்டு ரூ. 2 கோடி அதிகமாகச் செலவாகி யிருக்கிறது. வீட்டு வசதிக் கழகத்திற்காக ரூ. 1 கோடியும் அதன்னியில் ரூ. 13.10 இலட்சம் கடன் வகைகளிலே அளிக்கப் படுகிறது. வட்டியில்லாத கடன் தருவதற்காக ரூ. 10 இலட்சமும் மாணவர்களுக்குக் கடன் வசதி அளிக்கும் அளவிலே, ரூ. 3 இலட்சமும், ஆக, ரூ. 13 இலட்சம் இந்த ரூ. 8 கோடியே 98 இலட்சம் நீங்கலாகத் தரப்படுகிறது. ஆக, மொத்தம் ரூ. 10 கோடியே 16 இலட்சம் இந்தத் துறைக்காக இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

கல்வியிலே மாணவிகள் குறைந்த அக்கறை காட்டுகிறார்கள். பெற்றோர்களும் பெண்களைப் பள்ளிக்கு அனுப்புவதிலே அக்கறை காட்டுவதில்லை. எனவே, மாணவிகளை ஊக்குவிக்க வேண்டுமென்ற நோக்கத்திற்காக இன்றைக்கு அதிகமான மாணவர்கள் படிப்பார் களானல், அவர்களுக்கு ஊக்கம் தரவேண்டுமென்ற எண்ணத்தில் 1974-75-ம் ஆண்டு 50 சதவிகிதத்திற்கு அந்தப் பெண் குழந்தை களுக்குத் தருகின்ற உதவித் தொகையை அதிகமாக்க வேண்டு மென்று இந்த அரசு முடிவெடுத்திருக்கிறது.

அதேபோன்று, சட்டப் படிப்பு படித்துவிட்டு, வக்கீல்களாகத் தொழில் நடத்த விரும்புகின்றவர்களுக்கு எத்தனையோ சங்கடங்கள் ஏற்படுகின்றன. இதை ஒவ்வொரு முறையும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எடுத்துக் கூறி இருக்கிறார்கள். அதை மனதிலே வைத்து சட்டத் தொழிலில் தங்களைப் பதிவு செய்துகொள்ளுவதற்கான கட்டணம், அறை வாடகை, முதலியவற்றிற்காக ஒவ்வொரு பட்டதாரிக்கும் ரூ. 750 கடனாகவும், புத்தகங்கள் வாங்குவது, மேசை நாற்காலி வாங்குவது முதலியவற்றிற்காக ஒவ்வொரு பட்டதாரிக்கும் ரூ. 500 உதவித் தொகையாகவும் இந்த ஆண்டு கொடுக்க அரசு முடிவெடுத்திருக் கிறது.

கல்லூரி மாணவர்கள் தோல்வி அடையக் கூடாது என்ற நிலையில், அவர்களை ஊக்குவிக்க, ரூ. 2 இலட்சம் ஒதுக்கி ஒரு புதிய திட்டத்தை உருவாக்கியிருக்கிறோம்.

விவசாயத்திலே தாழ்த்தப்பட்ட மக்கள் கூலிகளாக இருக்கிறார்களே தவிர, அவர்கள் சிறந்த விவசாயிகளாக, நுட்பம் தெரிந்த விவசாயிகளாக இருக்கவில்லை என்பதை அறிந்து நீலகிரியிலே தாழ்த்தப்பட்ட 'டிரைப்ஸ்'-ஐச் சேர்ந்தவர்களுக்கு கோலிக்கரையில் ரூ. 2.69 இலட்சம் செலவில் காப்பித் தோட்டத்திலே பயிற்சி செய்ய ஒரு திட்டம் வகுத்திருக்கிறோம்.

கோயில்பட்டியில் புன்செய் நிலப் பண்ணையை வைத்து, திருநெல்வேலி மாவட்டத்திலே இருக்கிற தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு விவசாய நோக்கங்களைச் சொல்லிக்கொடுத்து, அவர்களை நல்ல விவசாயிகளாக்க ஒரு திட்டத்தை உருவாக்கி இருக்கிறோம்.

நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலே அவர்கள் கடன் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று அரசு விரும்புகிறது. துறையின் மூலமாக, ரூ. 10 இலட்சம் வட்டியில்லாக் கடன் கொடுப்பது நீங்கலாக, தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலேயிருந்து இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மக்கள் கடன் பெற, அணுகும் முறையும் அவர்களுக்குத் தெரியவில்லை—வங்கிகளும் கடன் கொடுக்கத் தயங்குகிறார்கள். எனவே, அரசுத் துறையில் மாவட்டந் தோறும் ஒரு சிறப்புத் துணை தாசில்தாரை நியமித்திருக்கிறோம். அவர்கள் மூலமாக, தாழ்த்தப்பட்ட மக்கள் தனிப்பட்ட முறையிலே, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே கடன் உதவி பெற்று, தொழிலிலே ஈடுபட வேண்டுமென்ற முறையில், இந்தப் புதிய திட்டத்தை உருவாக்கியிருக்கிறோம்.

எல்லாவற்றிற்கும் மேலாக, வீட்டு வசதி கழகத்தை இன்றைக்கு உருவாக்கியிருப்பது மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும். 1973-74-ல் ரூ. 1 கோடியும், 1974-75-ல் ரூ. 1 கோடியும் ஆக ரூ. 2 கோடியில் 10,000 வீடுகளைக் கட்டுவது என்ற முனைப்பான திட்டத்தை இந்த ஆண்டு இந்தத் துறையின் மூலமாக அரசு துவங்கியிருக்கிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை நான் உங்களுக்கு நினைவூட்டுகிறேன்.



இன்னும் அதைவிடப் புரட்சிகரமான திட்டத்தை இந்த ஆண்டு இந்தத் துறையின் மூலமாகச் செய்துகொள்வது என்று நான் கூறுவது துப்புரவுப் பணியாளர்களின் துயர் தீர்ப்பதாகும். சமுதாயத்தில் மனிதனை மனிதன் இழுக்கின்ற கை ரிக்ஷாக்களை இந்த அரசு ஒழித்துவிட்டிருக்கிறது.

அதேபோல், மனிதன் இடுகின்ற மலத்தை, மனிதன் அள்ளுவது என்ற பயங்கரமான கொடிய, பாவ காரியத்தை யாரும் நீக்க முன்வரவில்லை. அவர்கள் கையினால் அள்ளக் கூடாது என்று கையுறைகள் கொடுத்து, தட்டுகளைக் கொடுத்தோம். காலணிகள் கொடுத்தோம். காலுக்கு கிளவ்ஸ் கொடுத்திருக்கிறோம். தள்ளு வண்டிகள் கொடுத்திருக்கிறோம். இவ்வளவு ஏற்பாடுகளைச் செய்தும் கையிலே அள்ளுகின்ற முறை இருக்கத் தான் செய்கிறது. அடியோடு, அந்த மக்களை இந்த இழிவானப் பணியிலேயிருந்து விடுபடுத்த, எந்தச் சுய மரியாதை உள்ளம் கொண்ட, சீர்திருத்த நோக்கம் கொண்ட, மனிதனுக்கு மனிதன் கேவலமாக நினைக்கக் கூடாது என்பதைக் கருவூலத்திலே, காரியத்திலே கொண்டு, அதைச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து, இந்த ஆண்டு ரூ. 5 இலட்சம் ஒதுக்கியிருக்கிறது.

அதன்மூலமாக, இப்பொழுது நகராட்சிகளில் பிளஷ் அவுட் 'சக்கூஸ்' கட்ட வேண்டுமென்ற திட்டத்தை நிறைவேற்ற வேண்டு மென்ற முறையில் அதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே, இன்றைக்கு உள்ளாட்சிகள், மன்றங்கள், பேரூராட்சிகள், நகராட்சிகளிலே நீரடிக் கழிப்பிடங்கள் கட்ட வேண்டுமென்று அரசு முடிவெடுத்துள்ளது.

கடந்த ஆண்டில் இருந்து 1.000 யூனிட்டுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. செங்கற்பட்டு மாவட்டத்தில் திருத்தணி, வில்லிவாக்கம், பூவிருந்தவல்லி, வாலாஜாபாத் ஆகிய பேரூராட்சி களில் 1,000 நீரடிக் கழிப்பிடங்களை அமைக்கக் கடந்த ஆண்டு அரசு முயற்சி எடுத்தது. ஒரு பேரூராட்சியில் 200, 300 கழிப் பிடங்கள் என்று இருந்தால், பலபேருக்குத் தனது தொழிலைவிட வாய்ப்பிருக்காது என்ற முறையில் 1,500, 2,000 வீடுகளைக் கொண்ட பேரூராட்சிகளில் ஒன்றிரண்டைத் தேர்ந்தெடுத்து, அங்குள்ள சாதாரண கழிப்பிடங்களை, நீரடிக் கழிப்பிடங்களாக மாற்ற ரூ. 5

[திருமதி சத்தியவாணிமுத்து] [1974 மார்ச் 21

இலட்சத்தை அரசு ஒதுக்கியிருக்கிறது. அங்குள்ள அத்தனை
கழிப்பிடங்களையும் இந்தத் துறையின் மூலமாக கட்டித்தர இந்தத்
தொகையை ஒதுக்கியிருக்கிறோம். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட
பேரூராட்சிகளிலே கழிப்பிடங்களைக் கட்டித் தருவதின் மூலமாக,
இதனாலே வேலை வாய்ப்பு இழக்கின்ற தொழிலாளர்களுக்கு வேறு
வேலைகளை, நகராட்சிகளிலே பியூன் வேலையையோ, அல்லது
பெருக்குகின்ற வேலையையோ, அல்லது நலத்துறை மூலமாக வேறு
பணியையோ கொடுத்து, அந்த இடத்திலே வேலைகளைச் செய்ய
விடுவது என்ற ஒரு புதிய திட்டத்தை இந்த அரசு இந்த ஆண்டு
கொண்டு வந்திருக்கிறது.

(முற்பகல் 10-30)

இது மேலும் மேலும் தொடர்ந்து அவர்கள் ஏறத்தாழ
25 ஆயிரம் பேர்கள் தான் இருக்கிறார்கள், மாநிலம் பூராவிலும்.
இருபத்தைந்து ஆயிரம் பேர்களுக்கும் இந்தத் திட்டத்தின்
மூலமாக அவர்கள் கக்கூஸ் அள்ளுகின்ற முறையை நீக்கி வேறு
வேலை வாய்ப்புகளை அவர்களுக்குக் கொடுத்து அவர்களுக்கு
தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்ன என்ன சலுகைகளையெல்லாம்
கொடுக்கிறோமோ அந்தச் சலுகைகளையெல்லாம் வீட்டுமனை
வழங்குதல், கடன் கொடுத்தல் போன்ற சலுகைகளையெல்லாம்
கொடுப்பதற்கு நம்முடைய அரசு நம்முடைய துறை முன்
வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீனளத் துறையிலே நல்ல முன்னேற்றகரமான திட்டங்களையும்
விரைவான திட்டங்களையும் இந்தத் துறை இந்த ஆண்டு கொண்டு
வந்திருக்கிறது. ஆய்வுச் சோதனை அடிப்படையில் மீன்பிடிப்பது
ஆகிய வேலைகள் மீனளத் துறையின் ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டக்
கால வேலைகளின் ஒரு முக்கிய பிரிவாக அமையும்.

நடுத்தர மற்றும் பெரிய கலங்களைக்கொண்டு ஆய்வு மற்றும்
சோதனை மீன்பிடிப்பை மேற்கொள்ள ஐந்தாம் ஐந்தாண்டுத்
திட்டத்தில் ரூ. 66.67 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடலின் நடுப்பாக மீன்வளத் திட்டம் ஒன்றைத் தமிழ்நாட்டில்
தலைமையிடத்தைக் கொண்டு செயல்பட மத்திய அரசை
நம்முடைய அரசு கேட்டிருக்கி—



1974 மார்ச் 21] [திருமதி சத்தியவாணிமுத்து]

அதைப்போலவே மத்திய அரசு 50 நடுத்தர அளவுள்ள
இழுபடகுகளை இறக்குமதிசெய்ய முடிவு செய்துள்ளதால் அதையும்
நமக்கு வழங்கவேண்டுமென்று நாம் அவர்களைக் கேட்டிருக்கிறோம்.

அது மட்டுமல்ல, பெரிய பெரிய டிராலர்கள் கட்டுகின்ற
தளத்தையும் தமிழ்நாட்டிலே அமைக்கவேண்டுமென்று கேட்டு
இருக்கிறோம். மெக்ஸிகோ, ஸ்பெயின் போன்ற நாடுகளோடு
தொடர்புகொண்டு அவர்களுடைய மாதிரிகளை வைத்துக்கொண்டு
பெரிய பெரிய டிராலர்களைக் கட்டுகின்ற தளத்தை அமைக்க
வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அது வந்தால் மீனளத்
துறையிலே முன்னேற்றம் ஏற்படவும் அன்னியச் செலாவணி
அதிகமாக ஈட்டிடவும் வழிவகை பிறக்கும் என்றும் நம்புகிறோம்.

பழவேற்காட்டிலே—உறுப்பினர்கள்கூட கேள்வி நேரத்திலே
கேட்டார்கள்—அக்ரிகல்சரைப்போல் மாரிகல்சர் என்பதற்கும்
முக்கியத்துவம் கொடுத்து—கடலிலே நாம் இதுவரையில் இறால்
மீன்களை அள்ளிக்கொண்டுவருகின்ற நிலைமைதான் இருந்தது,
நாம் உற்பத்திசெய்யமுடியாது—மாரிகல்சர் மூலமாக இறாலை, மீனை
எல்லாம் நாம் உற்பத்திசெய்யக்கூடிய திட்டத்தைக்கொண்டு வரப்
போகிறோம். பழவேற்காட்டிலே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற
இடத்திலே சிறிய இறால் மீன்களைப் பிடித்து அதை மீண்டும்
கடலிலே விட்டு அவை பெரிதாக வளர்ந்ததற்குப் பிறகு பிடித்துக்
கொள்ளலாம் என்ற திட்டத்தையும் இந்த அரசு கொண்டுவந்திருக்
கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஹாஃப் எ மிலியன் ஜாப் திட்டத்தின்கீழ் 1,090
படித்தவர்களுக்கும், 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட படிக்காதவர்
களுக்கும் வேலைவாய்ப்பு என்ற திட்டத்தின்கீழ் 86.61 லட்சம்
ரூபாய் செலவிடலாம் என்ற முறையிலே அவர்களுக்குப் பயிற்சி
அளித்து போட் பில்டிங், புராஸஸிங், சர்வீஸிங் இவற்றைப்பற்றி
பயிற்சியளித்து அவர்களுக்கு கூட்டுறவு அமைப்பு ஏற்படுத்திக்
கொடுத்து நிதி ஒதுக்கீடு செய்து மத்திய அரசின்மூலமாக கடன்
பெற்றுத்தந்து வேலைவாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்க இந்தத் துறை
முன்வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக நான் சட்ட மன்றத்திலே அடிக்கடி முத்துக்
குளிப்பதைப்பற்றிச் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறேன். உறுப்
பினர்களும் பல முறைகள் அதைப்பற்றியெல்லாம் என்னைக்

கேட்டுக்கொண்டிருந்தார்கள். அதிலே வெற்றிகாணமுடியவில்லை. 1964-ஆம் ஆண்டுமுதலே முத்துக்குளிப்பு நின்று விட்டது. நாம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம். நீங்கள் கேட்கும்பொழுது நானும் சொல்லிக்கொண்டு வந்தேன். அவை வளர்ந்துவரும் பொழுது டிராலர்கள்மூலம் அழிந்துவிடுகின்றன. பல காரணங்களால் கிடைக்காமல் போய்விடுகின்றன, வளர்ச்சியும் இல்லை. ஆனால் இந்தத் துறை முத்து உற்பத்தியிலே அக்கறைகாட்டி வந்திருக்கிறது. இதைப்பற்றி நான் பலமுறைகள் எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

ஜப்பான் நாட்டிற்கு நம்முடைய அதிகாரிகளை அனுப்பி அங்கே இருக்கின்ற முறைகளைப்பார்த்து இங்கே தூத்துக்குடிக்குப் பக்கத்திலே வேப்பலோடை என்ற இடத்திலே அதைச் செயல்முறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துவருகிறோம். ஆளிகளைப் பிடித்து முத்து உற்பத்தியாவதற்கான பொருளை அதற்குள் வைத்துவிடுவது, பிறகு கடலிலே விடுவது, சிறிது காலம் கழித்து அதை எடுத்துப் பார்த்தால் உள்ளே முத்து இருக்கும். ஜப்பான் நாட்டிலே கொக்கி மிக்கிமேட்டோ என்ற காய்கறி விற்பனையாளர் ஏதோ ஒரு பொருட்காட்சியிலே முத்தைப் பார்த்தாராம், முத்து உற்பத்தியாவதைப் பார்க்க விரும்பினாராம். அவர் காய்கறிக் கடையை விட்டுவிட்டு ஆளியைப்பிடித்து அதனுடைய வயிற்றிலே சிறு மணலை வைத்துவிட்டு விட்டபிறகு அதனுடைய வயிற்றுக்குள்ளே கசிவு நீர் ஏற்பட்டு அதைச் சுற்றிச் சுற்றிவந்து முத்து உண்டாயிற்று. இயற்கையாக எப்படியென்றால் ஆளி மண்ணை விழுங்கிவிடும், அதற்குப் பிறகு வயிற்றிலே உள்ள கசிவு நீர் மூலம் அது வளர்ந்து முத்தாகும்.

ஆனால் மிக்கிமேட்டோ என்ற அந்த ஜப்பான் நாட்டுக்காரர் செயற்கையாக முத்து செய்யவேண்டுமென்ற முறையிலே அதைப் பிடித்து வயிற்றிலே மண்ணைப் போட்டுப் பார்த்தார், முதலிலே வெற்றி பெறவில்லை, பல முறைகள் தோல்வியடைந்தார். கடைசியாக மூன்றாண்டுக் காலம் கழித்து அவர் இதிலே வெற்றிபெற்றார், அவருடைய மனைவி குக்கூம் என்பவர், அகோயே என்ற இடத்திலே இப்படி முத்தை உற்பத்தி செய்து வெற்றி கிடைத்திருக்கிறது அவர்களுக்கு.



நாம் நம்முடைய இலாகாவைச் சேர்ந்த அழகர்சாமி என்பவரை ஜப்பானுக்கு அனுப்பிவைத்தோம். 1933-ஆம் ஆண்டிலிருந்து நாமும் இந்த முறையைக் கையாண்டு பார்த்து வெற்றிபெற முடியவில்லை. அழகர்சாமி என்பவர் சென்ட்ரல் மாரைன் பிஷரீஸ் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட்டிலே இருந்தார், அவர் இதிலே ஈடுபட்டு வெற்றியும் கண்டிருக்கிறார் என்ற நல்ல செய்தியைக் கூற விரும்புகிறேன்.

ஜப்பான் நாட்டிலே 2, 3 ஆண்டு காலமாகிறது. ஆனால் நம்முடைய கடலில் தண்ணீருடைய தட்பவெப்ப நிலைமைக்கு ஏற்ப மாத காலத்திலே 88% வெற்றி நமக்குக் கிடைத்திருக்கிறது. 150 ஆளியைப் பிடித்து அதற்குள்ளே மண் போடுவதற்குப் பதிலாக பிளாஸ்டிக் பொருளைப் போட்டார்கள், 150 ஆளிகளில் 140 என்ற அளவிற்கு 88% என்ற அளவிற்கு நமக்கு வெற்றி வந்திருக்கிறது. அந்த வெற்றியின் அறுவடையை நான் உங்களுக்குக் காட்ட விரும்புகிறேன். வேப்பலோடையிலே செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின் பயனாக ஏற்பட்ட வெற்றியை உங்களுக்குக் காட்ட வேண்டுமென்ற முறையிலே அதைக் கொண்டு வந்திருக்கிறேன். இதுதான், அவையினருக்கு காட்டப்பட்டது) அந்த வெற்றியின் மூலம் கிடைத்த பயன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சங்கு குளிப்பதற்காக அவர்கள் கடலுக்குச் செல்லவேண்டும், ஆனால் இப்பொழுது ஆளிகளைப் பிடித்து அவற்றிலே ஒரு பொருளை வைத்து கடலிலே அந்த நீரிலே தொங்கவிட்டுவிட்டால் முத்து வளர்கிறது என்ற திட்டத்தை இந்தத் துறை கண்டுபிடித்து இருக்கிறது, மத்திய அரசுக்கு அதைப்பற்றித் தெரிவித்திருக்கிறோம், மேலும் இதற்காக உதவிகளைச் செய்யவேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அந்தத் திட்டமும் அடுத்த ஆண்டு வர இருக்கிறது என்ற நல்ல செய்தியை நான் எடுத்துச் சொல்லி நான் பொறுப்பேற்று இருக்கின்ற இந்த இரண்டு துறைகளிலும் நான் என்னால் முடிந்த அளவில் நல்ல பல காரியங்களைச் செய்து வருகிறேன் என்பதைத் தெரிவித்து, உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களின்மேல் அவர்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறுமாறு கேட்டு, முடித்துக் கொள்கிறேன்.

[1974 மார்ச் 21

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவர் அவர்களே, மூத்துக்குளிப் பதில் நம்முடைய அரசு வெற்றி பெற்றிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதன் அடையாளமாக நம்முடைய உறுப்பினர்களுக்கு எல்லாம் ஒவ்வொரு முத்தை அன்பளிப்பாக அளிப்பார்களா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** ஒவ்வொரு உறுப்பினருக்கும் கொடுக்கலாம், ஆனால் அன்பளிப்பாக அல்ல, அதுகூட இந்த ஆண்டு அல்ல.

**திரு. ந. தருமலிங்கம்:** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தேசியமயமாக்கப் பட்ட வங்கிகளிலே கடன் கொடுப்பதாகச் சொன்னார்கள். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லை. விவாதத்தில் சொல்லும்பொழுது கருத்தைச் சொல்லலாம்.

**திரு. ந. தருமலிங்கம்:** நான் பேசுவதற்கு வாய்ப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்காக பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லி கருத்தைச் சொல்ல முடியாது.

***திரு. குழ. செல்லையா:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மீனளத் துறை மானியத்தின் மீது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தரப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானத்தை வரவேற்கும் முகத்தான் ஒருசில கருத்துக்களைக் கூறுவதற்கு விழைகின்றேன்.

சென்னையிலேயிருந்து கன்னியாகுமரி மாவட்ட எல்லை வரையில் ஏறத்தாழ 600 மைல்களில் இருக்கும் அந்தக் கடற்கரைப் பகுதிகளில் வாழ்கின்ற மீனவ சமுதாய மக்கள் ஏறத்தாழ மூன்று இலட்சங்களுக்கும் மேற்பட்டவர்கள் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது.

இந்தியத் துணைக்கண்டத்தை எடுத்துக் கொண்டால் தமிழ் நாட்டைத் தவிர ஏனைய மாநிலங்களுக்கு இப்படிப்பட்ட வாய்ப்பு இல்லை என்றே கூறலாம். அந்த வகையில் மூன்று இலட்சம் மீனவர்கள் [illegible]





நேரத்தில், இங்கே அளிக்கப்பட்டிருக்கும் அறிக்கையிலே பார்க்கின்ற நேரத்தில், 1969-70 ஆம் ஆண்டிலிருந்து 1973-74 ஆம் ஆண்டு வரையிலும் ஏறத்தாழ 947 இயந்திரப் படகுகளை வழங்கியிருப்பதாக அறிகிறேன். ஆகவே மீதமுள்ள அத்தனை மீனவ சமுதாய மக்களும் தாங்கள் செய்யும் தொழிலை, கட்டு மரங்களையும், சிறிய படகுகளையும் கொண்டுதான் தங்கள் தொழிலைச் செய்து வருகிறார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அதை மறந்துவிடக் கூடாது.

எனவே, அப்படி அந்தக் கட்டுமரங்களின் மூலமாக அந்தப் பணிகளைச் செய்துவரும் மீனவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு தரப்பட வேண்டும். இருக்கின்ற தொழில்களிலேயே மிகவும் பயங்கரமான தொழில் மீன் பிடிக்கின்ற தொழில்தான் என்பதை, யாரும் மறுப்பதற்கில்லை. கட்டுமரத்தில் ஏறி கணவன் மீன் பிடிக்கச் சென்றுவிட்டால் அங்குள்ள தாய்மார்கள் தங்கள் கணவன் திரும்பி வருகின்ற வரையில் தாலியைக் கையில் பிடித்துக் கொண்டிருக்கின்ற அவல நிலைமையில் உள்ள பயங்கரமான தொழில்தான் மீன் பிடிக்கும் தொழில் என்பதைச் சுட்டிக் காட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்படிக் கட்டுமரங்களில் தொழில் செய்யும் அந்த மீனவர்களுக்கு, பல்லாண்டு காலமாக பரம்பரை பரம்பரையாக தொழில் செய்யும் அவர்களுக்குச் சொந்தமாகக் கட்டுமரங்கள் அத்தனை பேருக்கும் இருப்பது இல்லை. அங்கேயுள்ள வாய்ப்பு, வசதி நிறைந்த ஒருசிலர்தான் பல கட்டுமரங்களுக்குச் சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள். ஆனால் மீன் பிடிக்கின்ற அந்தத் தொழிலாளிகள் தினக்கூலியாக 1 ரூபாய் அல்லது 2 ரூபாய் பெறுகிறார்கள். முதல் நாள் செல்லுகின்ற அவர்கள் இரண்டு நாட்கள் கழித்துக்கூட கரைக்கு வருகின்ற நிலைமை இருக்கிறது. அப்படிப் பாடுபடும் அந்தத் தொழிலாளிகள் தினக்கூலியாக 2 ரூபாயோ, 3 ரூபாயோ அல்லது 4 ரூபாயோ தான் அந்த முதலாளிகளிடமிருந்து பெறுகிறார்களே தவிர இன்றைக்குச் சொந்தமாகத் தொழில் செய்தோம், ஏதோ 50 ரூபாய் கிடைத்தது என்ற நிலைமை இல்லை. இதைக் கவனமாக எண்ணிப் பார்த்து அரசு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. குழ. செல்லையா] [1974 மார்ச் 21

இதை நான் கோடிட்டுக் காட்டுவதற்குக் காரணம், பரம்பரையாகக் கட்டுமரங்களின் மூலம் மீன் தொழிலைச் செய்கின்ற மீனவர்களுக்குக் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகாவது அந்தக் கட்டுமரங்கள் அவர்களுக்குச் சொந்தமாக்கப் பட வேண்டும். அப்படிச் சொந்தமாக்குகின்ற நிலையை அரசாங்கம் கண்காணித்து, கட்டுமரத்தை அவர்களுக்கு வழங்குவதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், கட்டுமரங்களில் மீன் பிடிக்கின்றவர்கள் இன்னும் அதிகமாக இருக்கலாம். விசைப் படகுகளிலும் மீன் பிடிக்கிறார்கள். இப்படிப்பட்ட பகுதிகளில் விசைப் படகுக்காரர் களுக்கும், கட்டுமரங்களில் தொழில் செய்பவர்களுக்கும் இடையில் நிறைய தகராறுகள் இருக்கின்றன. அதற்குக் காரணம், கட்டுமரங்களில் செல்பவர்களின் வலைகளை விசைப் படகுகள் மூலம் தொழில் செய்கின்ற மீனவர்கள் அறுத்து விடுவதால் கலவரங்களும், தகராறுகளும் எல்லாப் பகுதிகளிலும் ஏற்படுகின்றன. திருநெல்வேலி மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம், தஞ்சை மாவட்டம் போன்ற பகுதிகளில் மீனவச் சமுதாயத்தில் அடிக்கடி இப்படிப்பட்ட பிரச்னைகள் வந்து, அதிகாரிகள் வந்துகூட பேசி சரியான முடிவை இன்னும் காண முடியவில்லை.

திருநெல்வேலி மாவட்டத்தில் இரா மீன்களைப் பிடிக்கும் காலங்களில் வாரத்திற்கு இரண்டு நாட்கள் விசைப் படகுக்காரர் கள் மீன் பிடிக்க வேண்டுமென்று அண்மையிலே ஒரு உத்தரவைப் பிறப்பித்திருப்பதாகத் தெரிகிறது. அந்த உத்தரவைப் பிறப்பித்திருப்பது சரியா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்களின் வியாபாரம் நல்ல முறையில் அமைவதாக இருக்காது. இதை நான் சொல்வதற்குக் காரணம், அந்த விசைப் படகு மூலமாகச் செய்யும் தொழிலை வாரத்திற்கு இரண்டு நாட்கள் தான் செய்யலாம் என்று வைத்துவிட்டால் அவர்களுக்கு நஷ்டம் ஏற்படக்கூடும். ஆகவே, அவர்களுக்குக் குறிப்பிட்ட ஒரு எல்லையைக் கோடிட்டுக் காட்ட வேண்டும். சாதாரணப் படகுகள், கட்டுமரங்களில் போகக்கூடியவர்கள் இத்தனை மைல் தூரத்திற்குள்தான் மீன் பிடிக்க வேண்டுமென்றும்,



1974 மார்ச் 21] [திரு. குழ. செல்லையா]

விசைப் படகுதாரர்கள் இத்தனை மைல்களுக்கு அப்பால் சென்று தான் மீன் பிடிக்க வேண்டுமென்றும் ஒரு வரைமுறையை வைத்தால்தான் இந்தப் பிரச்னைகள், சிக்கல்கள் போன்றவைகளைத் தீர்ப்பதற்கு வசதியாக இருக்கும். இந்த மாமன்றத்தில் இதைப் பற்றி நான் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதை அரசு கவனிக்க வேண்டுமென்று சொல்வதற்குக் காரணம், அதனால் அந்தச் சிக்கல்கள், ஜாதி உள்சண்டைகள் ஆகியவற்றைத் தவிர்ப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதால்தான் சொல்கிறேன்.

மீன்பிடித்து வருகின்ற மீனவர்களுக்கு கட்டுமரங்களையும், இன்னும் வலை போன்ற மற்ற உபகரணங்களையும் இந்த அரசாங்கமே கடன் மூலம் வழங்க வேண்டும். இல்லையென்றால் தனிப்பட்ட முதலாளிகளுக்கு அவர்கள் பரம்பரையாக அடிமைப் பட்டிருக்கும் துர்ப்பாக்கியமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதை மாற்றியமைப்பதற்கான வழிவகைகளைக் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்பொழுதுதான் ஏதோ மாற்றம், ஏதோ சீர்திருத்தம் உருவாகியிருக்கிறது என்ற நிலைமை ஏற்படும்.

குறிப்பாக, மீன்விசைப் படகுகள் இப்பொழுது வழங்கப் பட்டிருக்கின்றன. அதில் பல்வேறான குறைபாடுகள் இருப்பது இந்த மாமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. மீன்பிடி தொழிலில் ஈடுபட்டிருக்கும் மீனவ சமுதாய மக்களுக்கு மட்டும்தான் அந்த விசைப் படகுகளைத் தர வேண்டுமென்ற ஒரு முறையான திட்டத்தை வகுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். விசைப் படகுகள் வழங்கும் முறையில் 947 விசைப் படகுகள் வழங்கப்பட்டிருப்பதாகக் குறிப்பு இருக்கிறது. ஆனால் அவற்றை யார் யார் வைத்திருக்கிறார்கள், அரசாங்கம் யாருக்குக் கொடுத்திருக்கிறதோ அவர்களே அதை வைத்துக் கொண்டிருக்கிறார்களா அல்லது அரசாங்கம் வழங்கிய மானியத் தொகையை வாங்கிக் கொண்டு, பணக்காரர்களிடத் திலும், மற்ற வகுப்பினரிடத்திலும் பணத்தை வைத்திருப்பவர் களுக்கு விற்று விட்டார்களா, தொழில் நடக்கிறதா என்பன போன்றவைகளைக் கண்காணிக்க வேண்டும்.

[திரு. குழ. செல்லையா] [1974 மார்ச் 21]

திருநெல்வேலி மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம், தஞ்சை மாவட்டம் என்று மட்டுமல்ல, கடல் பகுதிகளில் விசைப் படகுகளுக்காக 20,000 ரூபாய், 25,000 ரூபாய் என்று மானியத்தைப் பெற்று, அதை விற்பனை செய்து, தனிப்பட்ட முதலாளிகள் இன்றைக்கு வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டுவதற்குக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இதிலே அரசு மிகவும் கவனமாக இருக்க வேண்டுமென்று சொல்லாமல் இருக்க முடியவில்லை.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு விசைப் படகுகளின் மூலமாக மீன் பிடிக்கும் நேரத்தில் அவர்களுக்கு டீசல் எண்ணெய் சரியாகக் கிடைப்பதில்லை. அதை முறைப்படுத்தி, அவர்கள் தொழில் செய்வதற்கேற்ற வசதிகளைச் செய்து, டீசல் எண்ணெயை வழங்குகின்ற நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விசைப் படகுகள் கடலில் செல்வதால் அடிக்கடி பழுதடைகின்றன, உப்புத் தண்ணீரில் இருப்பதால், எவ்வளவு திறமையாகச் செய்தாலும்கூட அடிக்கடி கோளாறுகள் உண்டாவதில் நியாயம் இருக்கிறது.

தஞ்சாவூர் ஜில்லாவில் மல்லிப்பட்டணத்தில் விசைப் படகுகளைப் பழுதுபார்க்கின்ற ஒர்க்ஷாப்புகள் இல்லை. அதனால் அங்குள்ளவர்கள் பழுதுபார்ப்பதற்காக சென்னைக்கோ நாகப்பட்டிணத்திற்கோ அல்லது கன்னியாகுமரி மாவட்டத்திற்கோ தான் போக வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அதனால் அவர்களது தொழில் கெட்டு விடுகிறது, செலவும் அதிகமாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி, அதனால் அவர்களுக்குத் தரப்பட்ட கடனைத் திருப்பிக் கட்ட முடியாத நிலைமைகளெல்லாம் ஏற்பட்டு விடுகின்றன. எனவே, இன்றைக்கு ஒரு ரூட்டிலே பஸ்ஸுக்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்றால் ஒர்க்ஷாப் இருக்கிறதா, ஷெட் இருக்கிறதா என்று கேட்பதைப் போல், 25 மைல் அல்லது 30 மைல்களுக்குள்ளேயாவது விசைப் படகுகளைப் பழுது பார்க்கும் ஒர்க்ஷாப் ஏற்பட வேண்டும். அது மிகமிக முக்கியம் என்பதைச் சுட்டிக் காட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.



[1974 மார்ச் 21] [திரு. குழ. செல்லையா]

அதுமட்டுமல்ல, மீனவர்களுக்கு இன்ஷ்யூரன்ஸ் என்ற முறையில் நிலைமைகளை உருவாக்கித் தருவது சாலப் பொருத்தமுடைய காரியமாக இருக்குமென்று சொல்லிக் கொள்கிறேன்.

நம்முடைய அமைச்சரவர்கள் இரா மீன்களைப் பற்றிச் (Prawns) சொன்னார்கள். சில கால கட்டங்களில்தான் அவைகள் கிடைக்கின்றனவே தவிர எப்பொழுதும் கிடைப்பதில்லை. சர்வே ஒழுங்காகச் செய்யப்பட்டு எந்தெந்தக் காலங்களில் எந்தெந்த மீன்கள் கிடைக்கும் என்ற நிலைமையை மீனவ சமுதாயத்திற்கு நல்ல முறையில் சுட்டிக்காட்ட வேண்டும்.

எல்லா நேரங்களிலும் எல்லா மீன்களும் கிடைப்பதில்லை. சிலர் 100 ரூபாய்க்குப் பிடிப்பார்கள், சிலர் 10 ரூபாய்க்குப் பிடிப்பார்கள், சிலர் ஒன்றுமே கிடைக்காமல் வெறுங்கையோடு திரும்புகின்ற நிலையும் ஏற்படும். எனவே, சரியாகச் சர்வே செய்து எந்தெந்தக் காலகட்டங்களில், எந்தெந்த மாதங்களில், எந்தெந்தப் பகுதிகளில் கிடைக்கிறது, எத்தனை மைல்களில் கிடைக்கிறது என்ற தெளிவான அறிவிப்பை முன்கூட்டியே மீனவ சமுதாயத்திற்குத் தெரிவிக்கின்ற நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இரா மீன்களைப் பிடிக்கும் நேரத்தில், அப்படிப் பிடித்துக்கொண்டு வருபவர்கள் நேரடியாக அந்தப் பலன்களைப் பெற முடிவதில்லை. அதை அவர்கள் தனியாரிடத்தில் விற்பனை செய்து, அதை அண்டை மாநிலங்கள் வாங்கி வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கிறார்கள். அதனால் நாம் பெற வேண்டிய லாபத்தை மற்ற மாநிலங்களில் உள்ளவர்கள் பெறுகிறார்கள். எனவே, அரசாங்கமே அந்த இரா மீன்களை வாங்கி வெளிநாடுகளுக்கு அனுப்புவதாலே அன்னியச் செலாவணியும் நமக்குக் கிடைக்கும், லாபமும் பெற முடியும். ஒரு கிலோ இரா 30 ரூபாயிலிருந்து 40 ரூபாய் வரையில் விற்கப்படுகிறது. ஆனால் பிடிக்கும் இடத்தில் அவனுக்கு 8 ரூபாயிலிருந்து 10 ரூபாய்க்கு மேல் கிடைப்பதில்லை.

இதையெல்லாம் அரசு கவனமாக எண்ணிப் பார்க்க வேண்டும். முற்போக்குத் திட்டங்களை, நல்ல காரியங்களைச் செய்கிறோம் என்று சொல்லுகிற அதே நேரத்தில் இருக்கும்

குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுகிற நேரத்தில் அதைப் போக்குகின்ற வகையில் அரசாங்கமே இந்த மீன்களை வாங்கி வெளிநாடுகளுக்கு அனுப்புகின்ற முறையைக் கூடிய விரைவில் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

மீனவப் பகுதியில் வாழ்கிறவர்களுக்கு லிங்க் ரோட் அவசியம். அது இல்லாமல் மீன்களை எடுத்துச் செல்ல முடியவில்லை. ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் சாலை அமைப்பதற்கான திட்டமிடும் போது மற்றச் சாலைகளுக்கு எஸ்டிமேட் தயார் செய்வது போலவே இதற்கும் தயாரிக்கப் படுகிறது.

பொதுப் பணித் துறை சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் இதோடு சேர்த்துக் கொள்வது என்ற வகையில் சொல்லுகிறேன். கடற்கரைப் பகுதியாக இருப்பதால் சாமான்களை எல்லாம் கொண்டு செல்ல முடியாத நிலையில் மணல் பகுதியாக இருப்பதால் ரேட்டை இதற்குக் கொஞ்சம் அதிகப்படுத்திக் கொடுத்தால்தான் காண்டிராக்டர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முன்வருவார்கள். இந்த இணைப்புச் சாலைகளைப் போடுவதில் அரசு இன்னும் கொஞ்சம் தீவிரமாகச் செயல்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மீனவ சமுதாயத்திலிருக்கின்ற குழந்தைகளுடைய கல்வி வளர்ச்சியில் அதிக அக்கறை காட்ட வேண்டும். மீனவ சமுதாயக் குழந்தைகள் கட்டு மரம் எப்போது வருகிறது வந்தவுடன் ஒரு மீனை எடுத்துக் கொண்டு போய்க் கொடுத்துவிட்டு கடலை வாங்கலாமா, பலகாரம் வாங்கலாமா என்ற எண்ணந்தான் இருக்கிறதே தவிர படிக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே, இந்தக் கடற்கரைப் பகுதிகளில் விதிமுறைகளை அதிகம் வற்புறுத்தாது ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பள்ளிக்கூடத்தை ஏற்படுத்த வேண்டும்.

110 கோடி ரூபாய்க்கு மேல் கல்விக்காகச் செலவழிக்கப்படும் போது இந்த மீனவ சமுதாயத்திற்காக இந்தக் காரியத்தை செய்வதன் மூலம் அவர்கள் ஓரளவு கல்வி பெற வாய்ப்பு ஏற்படும்.





மேலும் மதிய உணவு போடுகின்ற திட்டத்தையும் அமல்படுத்தினால் அந்தக் குழந்தைகள் அதற்காகவாவது பள்ளிக்கு வரக்கூடிய நிலையில் கட்டாயத்தின் அடிப்படையில் கல்வி வசதி செய்து கொடுக்க வாய்ப்பு ஏற்படும். மதிய உணவுக்காகக் கொடுக்கிற மானியம் போதாது. அதையும் இரண்டு மடங்கோ அல்லது மூன்று மடங்கோ உயர்த்திக் கொடுக்க வேண்டும்.

கடற்கரைப் பகுதியில் வாழ்கின்ற அந்த மக்களுக்கு மருத்துவ வசதி போதாது. பத்து மைல் தூரம் போனால்தான் மருத்துவ வசதி கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. நாலைந்து ஊர்களுக்கு ஒரு மருத்துவ மனை என்ற அடிப்படையிலாவது அந்தப் பகுதி மக்களுக்கு மருத்துவ வசதி கிடைக்கச் செய்ய வேண்டும்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை 9 மைல் கடற்கரை இருக்கிறது. குடிதண்ணீர் வசதி இல்லாமல் இருக்கிறது. அங்குள்ள மக்கள் எல்லாம் மணலில் குழி தோண்டி அகப்பையை வைத்துத் தண்ணீரை மொண்டு வடிகட்டிக் குடிக்கும் நிலைமை இருக்கிறது. நாலைந்து ஊர்களுக்குச் சேர்ந்தாற்போல் ஆழ்கிணறு தோண்டி பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்குவது சாலப் பொருத்தமுடையதாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மீனவர்கள் எல்லாம் பெரும்பாலும் குடிசையில் வாழ்கிறார்கள். காற்று அடித்தாலும் வெள்ளம் வந்தாலும் பாதிக்கப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. மீனவ மக்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதோடு எங்கெங்கு கடல் அரிப்பு இருக்கிறதோ அங்கெல்லாம் தடுப்புச் சுவர்களைக் கரை ஓரத்தில் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கல்பாக்கம் அணு மின் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட மீனவ மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டும்.

சென்னைத் துறைமுகப் பகுதியில் மீனவ மக்களுடைய குடிசைகளை அப்புறப்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு எல்லாம் தற்போது கொஞ்சம் தள்ளி இடம் கொடுத்து அங்கு இருப்பதற்கு உத்தரவாதம்

அளித்திருந்தும் கூட துறைமுகப் பகுதியை விரிவுபடுத்த வேண்டுமென்ற முறையில் காலி செய்ய வேண்டும் என்றும், வியாபாரம் செய்யக்கூடாது என்றும் நிர்ப்பந்திக்கப்படுகிற நெருக்கடியான சூழ்நிலை இருக்கிறது. இதுபற்றி டில்லி அரசுக்கு எடுத்துச் சொல்லி உடனடியாக அவர்களுக்கு மாற்று இடம் தருவதற்கு வழிவகைகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுப் பணித் துறையின் மூலமாக காட்டாற்று மணலை எடுத்துச் செல்ல ஏலம் விடுகிறார்கள். காட்டாற்று மணல் கடற்கரையில் வந்து மணல் மேடாகக் குவிந்து கிடக்கிறது. அந்த மணல் மேடுகளில் மீனவ மக்கள் குடிசைகளை அமைத்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் மல்லிப்பட்டணத்தில் சின்னமனை என்ற கிராமம் இருக்கிறது. அறுபத்தைந்து குடிசைகளை மணல் மேட்டில் மீனவர்கள் கட்டியிருக்கிறார்கள்.

பாப்பாம்கண்ணி ஆற்று மணலை எடுப்பதற்கு காண்டிராக்ட் எடுத்த காண்டிராக்ட்காரர் அந்த மணல் மேட்டிலிருந்து மணலை அள்ளிக் கொண்டிருக்கிறார். இதனால் அந்தக் குடிசைகள் பாதிக்கப்படும் என்று அந்த மீனவர்கள் அரசாங்கத்திற்கு மனு தந்திருக்கிறார்கள். அந்த மணலை எடுப்பதன் மூலம் 50-க்கு மேற்பட்ட குடிசைகள் வாரியில் விழுந்து விடும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, கடற்கரைப் பகுதிகளில் ஐந்து மைல் வரை மணலை எடுக்கக்கூடாது என்ற நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெல்லை மாவட்டத்தில் தென் பகுதியில் இருக்கும் நாங்குநேரி தாலுக்காவில் பலவிதமான பிரச்சினைகள், கொலைகள், அடிதடிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அது மீனவ சமுதாயத்தினருக்கும் நாடார்களுக்கும் இடையே ஏற்படுகிற கலவரமாக உருவெடுத்திருக்கிறது. மீனவ சமுதாயத்தினர் அதிருப்தியுடன் இருந்து கொண்டிருக்கிறார்கள். போக்குவரத்து பஸ்ஸில் போனதில் தகராறு, சினிமாவுக்குப் போனதில் தகராறு, ரோட்டில் போனதில் தகராறு என்று சிறு சிறு தகராறுகள் அடிப்படையில் தகராறுகள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. இன்னொரு முதுகளத்தூர் ஏற்பட்டுவிடுமோ என்ற சூழ்நிலை இருக்கிறது. இது வளர்ந்து கொண்டு போனால் தமிழ் நாடு





முழுவதும் இது பிரதிபலித்து கொந்தளிப்பான நிலைமைகள் ஏற்படும். யார் தவறு செய்திருந்தாலும் தக்க நடவடிக்கை எடுத்து மீனவ சமுதாயத்திற்குப் பாதுகாப்பளிக்க அரசு கடமைப்பட்டிருக்கிறது என்று சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இறுதியாக, தமிழ் நாடு மீன்வள மேம்பாட்டுக் கழகம் அமைக்கும் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். திட்டம் வரவேற்கக்கூடியதுதான். ஆனால் கட்சியிலே தகராறு, மனக் குழப்பமாக இருப்பவர்களைச் சரிக்கட்ட வாரியங்களை உருவாக்கி அவர்களைச் சரிக்கட்டுவதற்குப் பயன்படுத்தாது நன்கு படித்த மீனவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அனுபவம் வாய்ந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை இந்த வாரியத்தின் தலைவராகப் போட வேண்டும். அதிகாரிகளாக இருந்தாலும் திறமை வாய்ந்தவர்களாக இருந்தால் போடலாம். கட்சியைப் புகுத்த வேண்டுமென்பதற்காக, தன்னுடைய ஆட்கள் வேண்டுமென்பதற்காக இந்தப் பதவியைப் பயன்படுத்தக்கூடாது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** கழகம் அமைத்தாகி விட்டது. தலைவராக மதிப்பிற்குரிய பி. கே. நம்பியார் அவர்கள்—போர்டு மெம்பர் தான் தலைவராக, மானேஜிங் டைரக்டராகப் போடப்பட்டிருக்கிறார். சீப் எஞ்சினியரை பொறுப்பு அதிகாரியாகப் போட்டிருக்கிறார்கள். எந்தக் கட்சித் தகராறுக்கும், அல்லது யாரையும் திருப்திப் படுத்துவதற்கும் இது அமைக்கப் படவில்லை. ஏற்கனவே போட்டுவிட்டதைக் கூட உறுப்பினர் அவர்கள் அறிந்து கொள்ளாமல் பேசுவது சரியல்ல.

**திரு. குழ. செல்லையா :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்கு நன்றி.

பல வாரியங்கள் அந்த முறையில் அமைக்கப்பட்டு அப்படிக் கொடுக்கப்பட்ட காரணத்தால் சொன்னேன். மீனவ சமுதாயத்தில் உள்ள படித்த இளைஞர்களுக்குக் கூடக்கொடுக்கலாம் என்று குறிப்பிட்டேன்.

[திரு. கு.ம. செல்லையா] [1974 மார்ச் 21

நல்ல காரியங்கள் மேலும் மேலும் ஊக்கத்தோடு செய்து இந்தச் சமுதாயத்தை முன்னேற்றுவதற்குத் திட்டங்களை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

(முற்பகல் 11-00)

*திரு. ந. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த ஹரிஜன நல மானியக் கோரிக்கை மீது ஒரு சில வார்த்தைகள் கூறி முடிக்கலாம் என்று கருதுகிறேன்.

இன்று தாழ்த்தப்பட்டவர்களைப் பற்றி பேசாத அரசியல் தலைவர்களே இல்லை என்ற நிலை நாடு பூராவிலும் இருக்கிறது. காந்தியார் காலத்திலிருந்து இன்று வரை தாழ்த்தப்பட்ட மக்களின் மீது இரக்கம் காட்டி, இப்படி இந்த நாட்டில் புழுவினும் கேடான ஒரு சமுதாயம் இருக்கிறதே இதற்கு என்ன மாற்று வழி காணலாம் என்று பேசியும் எழுதியும், எண்ணற்ற எவ்வளவோ காரியங்களை செய்திருக்கிறார்கள் பலர்.

இன்று நம் திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்ததற்குப் பின்னால்தான் தாழ்த்தப்பட்ட மக்களுடைய நிலையை உயர்த்துவதற்காக மற்றவர்களைப் போல் எழுதுவதோடும் பேசுவதோடும் மட்டுமின்றி உளப்பூர்வமாக என்னென்ன திட்டங்களை மேற்கொண்டால் இந்த மக்கள் தலைநிமிர்ந்து நிற்க முடியும், இந்த மக்கள் உள்ளபடியே மேம்பாடு அடைய முடியும் என்று சிந்தித்து எண்ணற்ற காரியங்களைச் செய்திருப்பதில் தலையாய ஒன்று கலப்புத் திருமணம். கலப்பு மணம் செய்து கொண்டால் ஓரளவிற்கு ஜாதி ஒழியும் என்ற நம்பிக்கையில் கலப்பு மணம் செய்து கொள்கிற தம்பதிகளுக்கு தங்கப்பதக்கம் வழங்குவதோடு கூட எண்ணற்ற பல சலுகைகளை செய்துகொண்டும் இருக்கிறது இந்த அரசு.

காந்தியடிகள், பண்டித நேரு, ராஜாஜி, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா என்று இப்படி தலைவர்கள் யாரும் செய்ய முடியாத ஒரு காரியத்தை, அவர்கள் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத ஒரு காரியத்தை இன்றைய திராவிட முன்னேற்றக் கழக அரசின் முதல் அமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் செய்திருக்கிறார்கள். அதாவது அவர்கள் கலப்பு மணத்திற்கு



974 மார்ச் 21] [திரு. ந. சோமசுந்தரம்]

தன்னையே ஆட்படுத்திக் கொண்டு தனது மகனுக்கு தாழ்த்தப்பட்ட வகுப்பில் இருந்து பெண் கொண்டு தன்னையே தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலுடைய சம்பந்தியாக்கிக் கொண்டார்கள் என்றால் உள்ளபடியே மற்றத் தலைவர்கள் செய்ய முடியாததை இவர்கள் செய்து இருக்கிறார்கள். ராஜாஜி காந்தியடிகளோடு உறவு கொண்டார்களே தவிர சி. சுப்பிரமணியம் அவர்கள் நாயுடு வீட்டில்தான் பெண் கொள்ள முடிந்ததே தவிர முன்னாள் முதல் அமைச்சர் டாக்டர் சுப்பராயன் அவர்கள் ஒரு ஐயர் வீட்டில்தான் பெண் கொள்ள முடிந்ததே தவிர தாழ்த்தப்பட்ட வகுப்பில் உறவு வைத்துக் கொள்ள அவர்களால் முடியவில்லை.

ஆகவே, தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலிருந்து பெண் கொண்டதற்காக, அந்த அளவிற்குத் தம்மைத் தயார்படுத்திக் கொண்டதற்காக டாக்டர் கலைஞர் அவர்களுக்கு ஆதி திராவிட சமுதாய மக்களின் சார்பில் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று குடியிருப்புப் பட்டாக்கள் நாடெங்கும் வழங்கப்பட்டிருக்கின்றன. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் குடியிருப்பு பட்டா பெற நாங்கள் எல்லாம் எவ்வளவோ வேதனைப்பட்டிருக்கிறோம். ஒரு குழி நிலம் சொந்தமாக இல்லாத காரணத்தினால் தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஹரிஜன விவசாயத் தோழர்கள் எவ்வளவோ இன்னல்களை அனுபவித்திருக்கிறார்கள். ஒரு நாள் வேலைக்கு வரவில்லை என்றால் ஊரையே கொளுத்திவிடும் காட்சியைப் பார்த்திருக்கிறோம். ஒரு நாள் வேலைக்கு வராது இருந்துவிட்டால் வீடுகளை இடித்து தரைமட்டமாக்கி கொட்டை வாழைகள் போட்ட நினைவு வருகிறது.

ஒரு சமுதாயப் புரட்சி மூலம்தான் நாம் குடியிருக்கும் இடம் நமக்குச் சொந்தமாகும் என்று எண்ணியிருந்தோம். பெரியவர் மணலி அவர்கள் சொன்னதுபோல் ஒரு துளி ரத்தம் சிந்தாமல், ஒரு துளி மை சிந்தி உத்தரவு போட்டு தாழ்த்தப்பட்ட மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடக்கூடிய விதத்தில் குடியிருப்புப் பட்டாக்கள் இன்று எங்கள் மாவட்டத்தில் வழங்கப்பட்டிருக்கின்றன.

[திரு. ந. சோமசுந்தரம்] [1974 மார்ச் 21

கொத்தடிமை நிலை நம்மை விட்டுவிட்டது என்று தாழ்த்தப்பட்ட மக்கள் இன்று நிம்மதியோடு வாழ்கிறார்கள். மேல் ஜாதியினர் இருக்கும் இடங்களுக்குப் போனால் சாட்டை அடி, கசையடி கிடைக்கும் என்ற நிலைமைகள் எல்லாம் முன்பு இருந்தன. ஆனால் இன்று தாழ்த்தப்பட்ட மக்கள் எந்த இடத்திலும் வாழலாம், எந்த இடத்திலும் தன் தொழிலை நடத்தலாம் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

அடுத்து, உயர்நீதி மன்றம் ஏற்பட்டு 103 ஆண்டுகள் ஆகின்றன. எவருமே சிந்தித்துப் பார்க்கவில்லை. நாங்கள்தான் ஹரிஜனங்களுக்காக மறுஅவதாரம் எடுத்து வந்திருக்கிறோம் என்று பிரசாரம் செய்தவர்கள் கூட நினைத்துப் பார்க்க முடியாத வகையில் இன்று ஒரு தாழ்த்தப்பட்ட மகனை உயர்நீதிபதியாக ஆக்கியிருப்பதை எண்ணிப் பார்க்கும்போது தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரை அவர்கள் நெஞ்சை நெகிழ வைக்க இது ஒன்றே போதும்.

அதோடு இந்த தாழ்த்தப்பட்ட சமுதாயம் முன்னேற ஏற்கனவே வட்டியில்லாக் கடன்கள் கொடுத்து அதன் மூலம் தொழில் நடத்த வழிவகை செய்து கொடுத்திருக்கிறது இந்த அரசு.

பெரிய நகரங்களில் அல்லது பேரூராட்சிகளில் உயர்ந்த வகுப்பில் பிறந்தவர்கள்தான் கடைகள் வைக்கலாம் என்ற நிலையை மாற்றி தாழ்த்தப்பட்ட மக்கள் இன்று நாற்காலி போட்டு கொண்டு மருந்துக் கடைகள் வைக்கவும், அச்சுக்கூடங்கள் வைக்கவும், சைக்கிள் கடைகள் வைக்கவும் அப்படி தொழில் செய்து லாபம் சம்பாதிக்கக்கூடிய வகையில் வேண்டிய வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இப்போது நம் அரசு ஹரிஜன வீட்டுவசதிக் கழகம் என்ற ஒன்றை நிறுவியிருக்கிறது. வேறு எந்த மாநிலத்திலும் இப்படி ஒரு கழகம் அமைக்கப்படவில்லை. இதற்காகக் கோடிக்கணக்கில் ரூபாய் செலவு செய்ய, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப் போல் இந்த ஆண்டு 10,000 வீடுகள் கட்டித் தரத் திட்டமிடப் பட்டிருக்கிறது. உயர்ந்த ஜாதிக்காரர்கள்தான் மாடி வீடுகளில் அல்லது மச்சு வீடுகளில் குடியிருக்கலாம் என்ற நிலையை மாற்றி



1974 மார்ச் 21] [திரு. ந. சோமசுந்தரம்]

இன்று குப்பனும், சுப்பனும், குப்பாயியும் மாடி வீடுகளில் குடியிருக்கலாம் என்ற நிலையை உருவாக்கித் தந்திருக்கிறது கழக அரசு.

அதோடு ஆதி திராவிட மக்களும் அர்ச்சகர்களாக ஆகலாம்—ஐயர் ஐயங்கார் மட்டுமல்ல, மந்திரம் தெரிந்தால் தாழ்த்தப்பட்ட மக்களும் கோவில்களில் அர்ச்சகர்களாக ஆகலாம், மந்திரங்கள் சொல்லலாம் என்று இந்த மன்றம் ஒரு முடிவு எடுத்தது. ஆனால் அது எங்கேயோ போய் முடமாகிவிட்டது எல்லோரும் அறிந்த ஒன்றாகும். எவ்வளவோ நன்மைகளை இந்த அரசு செய்திருந்தும் கூட, இன்னும் சில குறைகள் இருக்கத்தான் இருக்கின்றன. நாளை நாடு நலம் பெறும் திட்டம், நன்மை பயக்கும் திட்டம் நானே போடப் போறேன் சட்டம் என்று பாடியவர்கள் எல்லாம் இன்று அண்ணாயிஸம் என்ற பெயரால் இந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு இவ்வளவு நன்மைகள் செய்துவிட்டால் சில நூற்றாண்டுகளுக்குப் பின்னால் இந்தச் சமுதாயம் முன்னேறி மற்றச் சமுதாயங்கள் தாழ்ந்து விட அப்போது அந்த சமுதாயத்தில் உள்ளவர்களுக்கு ஒரு திட்டம் போட வேண்டி வரும் என்று சொல்வது, இதுதான் அண்ணாயிஸம் என்றால் எங்கக் கடலோரம் துயில் புரியும் அண்ணாவிற்கே வெளிச்சம் என்று சொல்வதைத் தவிர வேறு ஒன்றும் சொல்ல முடியவில்லை.

எங்களில் படித்தவர்களுக்கு நல்ல வாய்ப்பு வசதிகள் அளிக்கப்படவில்லை. இந்த மன்றத்தில் கூட பல ஆண்டுகள் மன்றத் தலைவராக இருந்து நல்ல பணியாற்றி இருக்கிறார்கள். திரு. சிவஷண்முகம் பிள்ளை அவர்கள். அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கியதில் பெரும் பங்கு டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கு உண்டு. ஆகவே, தாழ்த்தப்பட்டவர்களும் பொறுப்பேற்று பல காரியங்களைச் சீரான முறையில், நல்ல முறையில் செய்து கொடுக்க முடியும், செய்துகொடுத்துமிருக் கிறார்கள்.

ஒரு காலத்தில் காந்தியாரின் உயிரைக் காக்க தில்லையாடி வள்ளியம்மை தன் உயிரை நீத்திருக்கிறார்கள். இன்று இந்த சமுதாயத்தைச் சேர்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இருக்கிறார்கள், ஆனால் அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று எங்களுக்கே தெரிவதில்லை. எங்கேயோ ஒரு மூலையில் அவர்கள் தூக்கி

வெளியிடப்பட்டிருக்கிறார்கள். பொறுப்பான பதவிகள் அவர்களுக்குத் தரப்படாமல் அவர்கள் அதிகாரம் இல்லாத இலாக்காக்களில் போடப்பட்டிருக்கிறார்களே என்ற எண்ணம் எங்களை உண்மையில் வேதனைப்படுத்துகிறது. இந்த நிலையை நான் இங்கு சொல்வது என் கடமை.

எவ்வளவோ வாரியங்கள் எல்லாம் ஏற்படுத்தப்படுகின்றன. ஆனால் எந்த ஒரு வாரியத்திலும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவரை தலைவராகப் போடவில்லை. ஹரிஜன வீட்டுவசதிக் கழகத்தின் தலைவராக ஒரு ஹரிஜனைத் தலைவரைப் போடுவார்கள் என்று எதிர்பார்த்தோம். அங்கு அதிகாரிகள் வந்துவிட்டார்கள். அதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் அங்கு இருக்கிற டைரக்டராக, உயர்ந்த ஜாதிக்காரர்களைப் போடுகிறார்களே என்று எண்ணிப்பார்க்கும்போது ஏன் தாழ்த்தப்பட்ட மக்களில் அரிய யோசனைகள் சொல்லக்கூடியவர்கள் யாரும் இல்லையா?

அடுத்து, இந்தச் சட்ட மன்றத்தில் நாங்கள் மதிக்கப்படுகிறோமா என்றால் எந்தக் குழுவிற்குத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் தலைவராக இருக்கிறார்?

சட்ட மன்றத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரிடையே எம்.ஏ., எம்.பி.பி.எஸ்., பி.எல். படித்தவர்கள் பலர் ஆளும் கட்சியிலும் இருக்கிறார்கள், எதிர்க்கட்சிகளிலும் இருக்கிறார்கள். அவர்களைச் சரியான முறையில் பயன்படுத்துகிறார்களா என்றால் நிச்சயமாக இல்லை. இவற்றையெல்லாம் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களும் அரசும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கலப்பு மணத் தம்பதிகளுக்கு பலவிதமான கஷ்டநஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஒரு ஹரிஜனப் பெண் ஒரு ஐயங்காரைக் கல்யாணம் செய்துகொண்டால், இன்றிருக்கிற அரசியல் சட்டப்படி தகப்பனார் எந்த ஜாதியைச் சேர்ந்தவரோ பிள்ளைகளும் அந்த ஜாதியைத்தான் சாரும் என்றிருக்கிறது. ஒரு ஹரிஜனப் பெண் ஒரு ஐயங்காரை மணம் செய்து கொண்டு பிறக்கும் குழந்தைகள் ஐயங்கார் என்றால், எங்களுக்கெல்லாம் தூக்கிவாரிப் போடுகிறது. ஒரு தனி சமுதாயம் உருவாகும் என்ற நிலைக்கு மாறாக இப்படி ஏற்படுகிற நிலைதான் இருக்கிறது. ஆகவே,





சட்டத்தைத் திருத்தியோ அல்லது என்ன செய்தாவது அதற்கு ஒரு பாதுகாப்பு தேடித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நாட்டில் எவ்வளவோ புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பட்டா போட்டுக் கொடுங்கள். நிச்சயமாக அவர்கள் வாழ்வு முன்னேற முடியும். வேலை வாய்ப்புக் கொடுப்பதில் முக்கியத்துவம் தரப்படவில்லை. சட்ட மன்றத் துறையில் தரப்படவில்லை, கூட்டுறவுத் துறையில் தரப்படவில்லை, போக்குவரத்துத் துறையில் தரப்படவில்லை, எத்தனையோ வாரியங்கள் அமைத்தோம் அவற்றிலும் தரப்படவில்லை, உயர்நிலைப் பள்ளிகளில் தரப்படவில்லை, கல்லூரிகளில் தரப்படவில்லை, தனியார் கல்லூரிகளில், பள்ளிகளில் ஒருவர் கூட தாழ்த்தப்பட்டவருக்கு பேராசிரியர், ஆசிரியர் வேலை, எழுத்தர் வேலை தரப்படவில்லை. இவைகளையெல்லாம் தயவு செய்து கவனிக்க வேண்டுகிறேன்.

இப்போது வட்டியில்லாக் கடனாக ரூ. 300 கிராமப்புறங்களில் வியாபாரம் செய்து பிழைப்பதற்காகத் தரப்படுகிறது. அங்கே இருக்கிற தேவதைகளுக்குப் பூஜை போடுவதற்கே அது போதவில்லை. கிட்டத்தட்ட ரூ. 300 என்று சொல்கிறபோது, அதை வாங்கி அவர்கள் ஒன்றும் செய்ய முடியவில்லை. நிச்சயமாக அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு இப்போதுள்ள விலைவாசியில் தொழில் நடத்த முடியாது, ஆகவே, அதற்குத் தகுந்த வகையில் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த மான்யத்தை வரவேற்று என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் அரிசன நலத்துறை மானியத்தின் மீது பேசும் வாய்ப்புக்கு நன்றி கூறுகிறேன்.

முக்கியமாக இதில் இருக்கும் முக்கிய கருத்துக்களைக் கூறிக் கொள்ள நான் விரும்புகிறேன். குறிப்பாக நாம் அரிசனங்கள் என்று கூறிக்கொண்டிருக்கிறோமே ஒழிய அவர்களுக்கு என்று ஒதுக்கப்படும் பணம் பல துறைகளில் அவர்களுக்குச் செலவு செய்யப்பட்டாலும் கூட, அந்தத் தீண்டாமையை ஒழிப்பதற்கு,

[திருமதி ஜோதி வெங்கடாசலம்] [1974 மார்ச் 21

ஜாதி அற்ற முறையில் மக்கள் வாழ வேண்டும் என்பதற்காகத் தான் செலவழிக்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது என்றாலும்கூட, திரும்பத் திரும்ப அந்த ஜாதியின் அடிப்படையிலே தான் நாம் வந்து நிற்கிறோம் என்பதை மறந்துவிட முடியாது.

இங்கே கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்குத் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டிருக்கிறது என்று கூடச் சொல்லியிருக்கிறார்கள். தீண்டாமை ஒழிப்பிற்கு தீவிர முறையில் பல குழுக்களை வட்ட அளவிலும், மாவட்ட அளவிலும் அமைத்து, அது நல்ல முறையில் செயலாற்ற வேண்டுமென்ற நல்ல எண்ணம் கொண்டிருந்தாலும், அந்தத் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தை மீறுகின்ற குற்றம் செய்பவர்களைத் தண்டிக்க காவலர் படை வைத்து இருக்கிறோம், வலம் வரும் காவல் படை வைத்து இருக்கிறோம், அதைத் தடுக்க தக்க முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று சொன்னாலும் கூட, அதையும் மீறி சில காரியங்கள் நடந்து வருகின்றன.

எனக்கு வந்திருக்கிற தகவல், என்னுடைய தொகுதியில் தாழக்குடி என்ற கிராமம் இருக்கின்றது. அந்தத் தாழக்குடி—வீரமங்கலம் கிராமத்தில் வார்டு எண் 3 வீட்டில் வசிக்கும் ஆ. விஸ்வலிங்கம் மகன் ஆறுமுகம் என்பவர் சென்ற மாதம் 2-ம் தேதி தங்கமணி சோடா பாக்டரிக்கு சென்று தாகம் எடுக்கிறது சோடா வேண்டுமென்று கேட்டபோது, அங்கே இருந்த மக்கள் ஒரு பள்ளனுக்கு இவ்வளவு உரிமையா கொடுப்பது, அனுமதிப்பது என்று கேட்டு அவனை முருங்கை மரத்தில் கட்டி வைத்து அடித்ததாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. இதைப் பற்றி அவர்கள் அரிசன நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், லால்குடியைச் சார்ந்த அமைச்சர் அவர்களுக்கும் மனு அனுப்பி இருக்கிறார்கள். அதில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது, அதில் உண்மை இருக்கலாம், உண்மைக்குப் புறம்பாகக் கூட இருக்கலாம். அதைத் தகுந்த முறையில் விசாரணை செய்ய வேண்டியது அரசின் கடமை. கனம் அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது தயவு செய்து இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கூற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1974 மார்ச் 21] [திருமதி ஜோதி வெங்கடாசலம்]

அரிசன மக்கள் எல்லாம் பல அசோசியேஷன்கள் வைத்து இருக்கிறார்கள். அரிசன மக்களுக்கு திருமண சமயங்கள், மற்றும் விடுகளில் நடக்கும் விசேஷ காரியங்கள் ஆகியவற்றைச் செய்வதற்கு தனிப்பட்ட முறையில் கட்டடங்கள் கிடையாது. நாம் வீடு கட்டிக் கொடுக்கிறோம்; அதற்காக லட்சக்கணக்கான ரூபாய்கள் ஒதுக்கி இருக்கிறோம். அவர்களுக்கு திருமணங்கள், மற்ற குடும்ப விசேஷங்கள் செய்வதற்கு சமுதாயக் கூடங்கள் கட்டித் தர வேண்டியது மிகவும் அவசியம் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

(திரு. வை. பாலசுந்தரம்—தலைமை)

அரிசன மாணவர்களுக்கு பள்ளியில் மதிய உணவு அளிப்பதற்காக ஒரு மாணவ-மாணவியருக்கு 15 பைசா என்று ஒதுக்கீடு செய்து இருக்கிறோம். இப்படி 15 பைசாவை ஒதுக்கி விட்டு, அரிசன மக்களுக்கு சத்துணவு கொடுக்கிறோம் என்று கூறப்பட்டிருக்கிறது. பதினைந்து பைசாவிலே என்ன சத்துணவு ஒரு பிள்ளைக்குக் கொடுப்பதற்கு முடியும் என்பது தாய்க் குலத்தைச் சேர்ந்தவர்களுக்கு அதிகப்படியாகத் தெரியும். பிள்ளைகள் நல்ல முறையில் சுகாதாரமாகவும், சுபிட்சமாகவும் வாழ வேண்டுமானால் அந்த 15 பைசாவை தயவு செய்து 30 பைசா அளவுக்கு உயர்த்த வேண்டும். நாம் எவ்வளவோ லட்சக்கணக்கான ரூபாய்களை பல்வேறு திட்டங்களுக்காக ஒதுக்கியிருக்கிறோம் என்று ஒவ்வொரு பக்கத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, அரிசன மக்கள் நல்ல முறையில் வளர்வதற்கு இதைக் குறைந்த பட்சம் 30 பைசாவாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது ஸ்கூல் ஹெல்த் ப்ரோக்கிராமிலே பார்ட்-டைம் டாக்டர்கள் போட்டு இருக்கிறோம். இதைக் குறித்து சுகாதார மானியம் வந்தபோது சென்ற ஆண்டு எடுத்துக் கூறினேன். இந்த பார்ட்-டைம் டாக்டர்கள் யாரும் பள்ளிக்கு பிள்ளைகளைப் பரிசோதிக்க வருவது கிடையாது. அந்த ஹெல்த் கார்டை தயவு செய்து எடுத்துப் பாருங்கள். எத்தனை பிள்ளைகளை அவர்கள் பரிசோதித்து, என்ன வியாதி என்று கண்டு பிடித்து, அவர்களுக்குச் சிகிச்சை அளித்து இருக்கிறார்கள் என்று கவனித்தால் தெரியும். இதைப் பற்றியும் அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறபோது கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற பரிட்சைகளுக்கு எல்லாம் பிரி-எக்சாமினேஷன் டிரைனிங் சென்டர் ஆரம்பித்து இருக்கிறீர்கள். அந்த பேசிக் டிரைனிங் எந்த அளவிற்கு அவர்களுக்கு உதவி புரிந்து இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். அவர்களெல்லாம் கண்டிப்பாக ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற பதவிகளுக்கு வரவேண்டுமென்ற எண்ணத்தை நான் கொண்டிருக்கிறேன்.

இப்போது சைதாப்பேட்டையில் ஆரம்பித்து இருக்கும் டிரைனிங் சென்டரைப் பார்த்தால், அங்கே எவ்வளவு கன்ஜஷன் இருக்கிறது, மாணவ-மாணவியர் அந்த இடத்தில் எப்படி இருக்கிறார்கள் என்று பார்த்தால் தெரியும். படிப்பதற்குச் சரியான வசதி இல்லை. அந்த பிரின்சிபால் உட்கார சரியான இடம் கூட இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்குமானால் அது எந்த விதத்தில் நல்ல ரிசல்டைக் கொண்டு வரும்? ஏதோ ஆரம்பித்து இருக்கிறோம் என்று ஸ்டாடிஸ்டிக்ஸ் சொல்வதற்கு வேண்டுமானால் பயன்படுமே தவிர உண்மையில் அவர்களுக்கு உதவி புரியும் நிலையில் இருக்காது.

அங்கே இருக்கிற மாணவர்களுக்கு மினிமம் அமெனிடீஸ் இருக்கிறதா என்று பாருங்கள். இரண்டாவதாக நாம் எப்போதும் சொல்கிறோம். 'என்விரான்மென்டல் சர்க்கம்ஸ்டான்ஸஸ்' அதாவது பிள்ளைகள் வளர்வதற்குரிய சுற்றுப்புற சூழ்நிலைகள் எப்படியிருக்கிறது என்று பாருங்கள். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற டிரைனிங் சென்டர்களிலேயே இந்த மாதிரி நிலை இருக்கிறது என்றால், பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றைப் பற்றி நான் கூறுவதற்கு இல்லை.

இப்போது உடுப்புகள் கொடுக்கப்படுகின்றன. இப்போது ரூ. 10, ரூ. 40, ரூ. 50 மேக்சிமம் என்று கொடுக்கிறோம். பெண் பிள்ளை என்று பார்த்தால் ஒரு பாவாடை, ஒரு ஜாக்கெட், ஒரு தாவணி இத்தனையும் கொடுத்தாக வேண்டியிருக்கிறது. இன்றைக்கு துணிகள் விற்கின்ற விலையில், விலைவாசி உயர்ந்திருக்கிற காரணத்தினால் அவர்களுக்கு என்ன துணி கொடுக்கிறார்கள் என்பதைத் தயவு செய்து சொல்லுங்கள். நல்ல துணியில் தாவணி கொடுக்க முடியுமா? மல் கூட வாங்கிக் கொடுக்க முடியாது. இவையெல்லாம் [illegible] கண்டிப்





பதற்கு வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம். செய்வதை நாம் ஒழுங்காகச் செய்கிறோமா என்பதைத் தயவு செய்து பார்க்க வேண்டும்.

பட்டா செய்து கொடுப்பதில் தமிழக அரசு மிகவும் ஆர்வம் காட்டி வருகிறது என்பதைப் பற்றி நான் வரவேற்கிறேன், ஒப்புக்கொள்கிறேன். ஆனால், மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக என்னுடைய தொகுதியிலே, அதாவது ஸ்ரீரங்கத்தில் முத்தரசு நல்லூர் என்ற கிராமம் இருக்கிறது—அந்த கிராமத்தில் அரிசனங் களுக்கு இடம் கொடுக்கப்பட்டது. மூன்று ஆண்டுகளாக இன்னும் அவர்களுக்குப் பட்டா கொடுக்கப்படவில்லை. ஆனால், ஸ்டாடிஸ்டிக்ஸ் பார்த்தால் லட்சக்கணக்கில் பட்டா கொடுக்கப் பட்டிருக்கிறது என்று பெருமைப்பட்டுக் கொள்கிறீர்கள்.

குறிப்பாக, நாங்கள் எடுத்துக்காட்டுகிறபொழுது பட்டா கொடுக்காத இடங்கள் பல இருக்கின்றன. பட்டா கொடுக்காத இடங்களையெல்லாம் பார்த்து அவர்களுக்கு உடனடியாக பட்டாக்கள் வழங்கப்பட வேண்டும். மூன்று ஆண்டுக் காலமாகப் பட்டா கொடுக்கப்படவில்லை. ஏன் இவ்வளவு கால தாமதம்? அன்றைக்கு ஒரு அங்கத்தினர் பேசும்பொழுது கூட குறிப்பிட்டார். பாக்வேர்டு கம்யூனிடி வெல்பேர் ஆபீசர் என்று தனியாகப் போட வேண்டும் என்று கூறினார். ஒரே வெல்பேர் ஆபீசர் எல்லாவற்றையும் கவனிக்க வேண்டும் என்றால், ஜனங்கள் தேடிப் போகிற சமயத்தில் அவர் இருக்கமாட்டார், அவர் வருகிற சமயத்தில் ஜனங்கள் இருக்க மாட்டார்கள். இப்படி ஒரு நிலைமை இருக்கிறது. அரசு இதற்கு உடனடியாக ஆவன செய்து, பட்டா கொடுக்காத இடங்களில், பல ஆண்டுகள் தள்ளிப்போடாமல் உடனடியாகக் கொடுப்பதற்கு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பூச்சி கொல்லி மருந்தைப் பற்றி நான் முக்கியமாகச் சொல்ல வேண்டும். ப்ளவிங் புல்ஸ் வாங்குவதற்கு 400 ரூபாயிலிருந்து சப்ஸிடியை ரூ. 500 ஆக உயர்த்தியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை வரவேற்கிறேன். ஸீட்ஸ் கொடுக்கிறோம், புல் வாங்குவதற்கு ஏர் உழுகின்ற எருதுகள் வாங்குவதற்குப் பணம் கொடுக்கிறோம். ஆனால், பயிர்களுக்கு பூச்சி கொல்லி மருந்து தெளிப்பதில் என்ன செய்கிறோம் என்பதைப் பார்ப்போம்.

[திருமதி ஜோதி வெங்கடாசலம்] [1974 மார்ச் 21

என்னுடைய தொகுதியான ஸ்ரீரங்கத்தில் எசனக்கோரை என்ற ஊராட்சி மன்றத்தில் பூச்சி கொல்லி மருந்து அடிப்பது சம்பந்தமாக தண்டோரா போட்டார்கள். தண்டோரா எப்பொழுது போட்டார்கள். மூன்று பஸ்லிக்கு முன்பாக போட்டார்கள். மூன்று பஸ்லியாக அங்கு மருந்து தெளிக்கப் படவில்லை. இன்றைக்கு அங்கே என்ன செய்கிறார்கள். மொத்தமாகச் சேர்த்து பூச்சி மருந்து தெளித்ததாகச் சொல்லி, செய்யாத ஒன்றைச் செய்ததாகச் சொல்லி, அதற்கு ரூ. 33 கொடுக்க வேண்டும் கிஸ்தியுடன் கட்ட வேண்டும், இல்லை என்றால் ஜப்தி செய்வோம் என்று சொல்கிறார்கள். ஏழை எளிய மக்களை ஜப்தி செய்வோம் என்று சொல்கிறார்கள். . . .

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** மாண்புமிகு உறுப்பினர் அம்மையார் அவர்கள் பூச்சி மருந்தைப்பற்றிச் சொல்கிறார்கள். நலத் துறையின் மூலம் பூச்சி மருந்து தெளிப்பதில்லை. விவசாயத் துறை மூலம், ஊராட்சியின் மூலம் இது செய்யப்படுகின்றது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** எங்களுக்கு எந்தெந்த மானியத்தில் சமயம் கிடைக்கிறதோ அப்பொழுது நாங்கள் சேர்த்துக்கொள்வோம். இருந்தாலும், எல்லா அமைச்சர்களுக்கும் பொறுப்பு உண்டு. சக அமைச்சர் அவர்களைக் கேட்டு தெரிந்துகொள்ளலாம். இப்பொழுது அந்த அமைச்சர் இங்கே இல்லை. அதுதான் எங்களுக்கு ஒரு பெரிய குறை. நாங்கள் இங்கே பேசும்பொழுது அமைச்சர் இல்லையென்றால் குறையாக இருக்கிறது. ஆனால் அவர்களுக்கும் பல தொல்லைகள் இருக்கின்றன என்பதை ஒப்புக்கொள்கிறேன். இப்பொழுது அவர்கள் என்னுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன். பூச்சி மருந்து தெளிக்காமலேயே அவர்களிடமிருந்து பணம் வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதினால் ஏழை எளிய மக்கள் மிகவும் பாதிக்கப் படுகிறார்கள். ஆகவே, அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு பூச்சி மருந்து கொடுக்காத இடங்களில் கொடுத்ததாக அவர்களுடைய சொத்துக்களை ஜப்தி செய்வதற்கு ஏற்பாடு செய்வதை நிறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.



1974 மார்ச் 21]

**திரு. கு. காமாட்சி:** ஆகாய விமானம் மூலம் அந்தப் பகுதியில் பூச்சிக் கொல்லி மருந்து அடித்ததற்கு இப்பொழுது வசூல் பண்ணலாம். பூச்சி மருந்து கொடுக்காமல் வசூல் பண்ணவில்லை.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** ஆகாய விமானம் மூலம் எப்பொழுது அடித்தார்கள் என்பதை கனம் அங்கத்தினர் சொல்வார்களா? அமைச்சர் அவர்கள் பதில் சொன்னால் நன்றாக இருக்கும்.

**திரு. கு. காமாட்சி:** 1971–72, 1969–70 ஆகிய ஆண்டுகளில் அடித்ததற்கு இப்பொழுது வசூல் பண்ணுகிறார்கள்.

**திரு. கோவை செழியன்:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் திரு. காமாட்சி அவர்கள் எப்பொழுது அமைச்சரானார் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. பாலசுந்தரம்):** இதிலே ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** அங்கத்தினர் காமாட்சி அவர்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாதலால் அவர்களுடைய தொகுதியில் அடித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் நான் இந்தக் குற்றச்சாட்டைக் கண்டிப்பாக அழுத்தம் திருத்தமாகக் கூற விரும்புகிறேன். உண்மைக்குப் புறம்பான தகவலை நான் எப்பொழுதுமே இந்தச் சபையில் பேசமாட்டேன். எனக்கு அப்படித் தகவல் வந்திருக்கிறது. அது உண்மையா, இல்லையா என்பதைக் கண்டுபிடிப்பது அரசினுடைய கடமை. ஆனால் அதை ஒப்புக்கொள்வதற்கு நான் தயாராக இல்லை என்பதையும் கூறிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. பாலசுந்தரம்):** நீங்கள் சீக்கிரம் முடித்து விடுங்கள். இன்னும் 24 பேர்கள் பேச இருக்கிறார்கள்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** எங்கள் கட்சியில் நான் ஒருவர்தான் பேசுகிறேன். கொஞ்சம் டயம் கொடுங்கள்.

[1974 மார்ச் 21

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. பாலசுந்தரம்):** இரண்டு பேர்கள் பேசுகிறீர்கள். திரு. ஜேம்ஸ் கடைசியில் பேசுகிறார்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** பிஸினஸ் அட்வைசரி கமிட்டி இம்மாதிரி முக்கியமான மானியத்திற்குக் கொஞ்சம் டயம் அதிகமாக ஒதுக்க வேண்டும். முன்பெல்லாம் அரிசன் டிமாண்ட், அக்ரிகல்சர் டிமாண்ட் என்றால் மூன்று நாட்களுக்குக்கூட விவாதம் நடக்கும், நாங்கள் மூன்று நாட்கள் பேசியிருக்கிறோம்.

இப்பொழுது அரை நாளில் ஒரு மானியத்தை விவாதித்து முடிக்க வேண்டுமென்றால் எப்படி? எங்கள் கட்சியில் நான் ஒருவர் தான் பேசுகிறேன். கொஞ்சம் சமயம் அதிகமாகக் கொடுங்கள். அரிசன மெம்பராக இருப்பதால் எல்லாவற்றையும் பேசியாக வேண்டியிருக்கிறது.

பால் விநியோக கூட்டுறவுச் சங்கங்களை அமைத்திருக்கிறார்கள். அம்மாதிரி அரிசனங்களுக்கு அமைத்துக் கொடுப்பது என்ற திட்டம் எங்களுடைய கட்சி ஆட்சியில் இருந்தபொழுது வந்த ஒன்று. அதை நான் பெருமையோடு கூறிக்கொள்கிறேன். இந்த மானியத்தைப் பொறுத்தவரையில் கூறப்பட்டிருக்கிறது. 82 லாபத்திலும், 32 'நோ ப்ராபிட் நோ லாஸ்', 228 சங்கங்கள் நஷ்டத்தில் நடைபெறுகின்றன என்று கூறப்பட்டிருக்கிறது. நஷ்டம் ஏற்படுவதற்குக் காரணம் என்ன? அரிசனங்கள் நடத்தக் கூடிய பல சொஸைடிகளிலிருந்து மற்றவர்களால் பால் வாங்கப் படவில்லையா? அல்லது பால் விற்பனை செய்வதற்கு அரசாங்கம் தக்க முயற்சி செய்யவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

இதற்கு முன்பு பேசிய மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கோவில்களில் அரிசனங்களை அர்ச்சகர்களாகப் போடக்கூடிய நிலைமையை நாங்கள் ஏற்படுத்தினோம், அரிசனங்களை அறங் காவலர்களாக நியமித்திருக்கிறோம் என்றெல்லாம் பெருமையாகக் கூறிக்கொண்டார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய உத்தமர் கோவில் தேவஸ்தானத்திற்கு ஒரு அரிசன் மனுப் போட்டு ஏறத்தாழ 2½ ஆண்டுக் காலமாகிறது. இன்னும் அங்கே அறங்காவலர் போடவில்லை. இவரைப் போட வேண்டும் என்று நான் சொல்லவில்லை.



1974 மார்ச் 21] [திருமதி ஜோதி வெங்கடாசலம்]

பல தேவஸ்தானங்களில் அறங்காவலர்களை நியமிப்பதில் மிகவும் காலதாமதம் ஆகிறது. நாங்கள் கேட்டுப் போட வேண்டும் என்பது அல்ல. அந்த இலாகாவைச் சேர்ந்தவர்களே அதை அதை முடிவுகைச் செய்ய வேண்டும். முடிவுகைச் செய்யப்பட வேலைகள் முடிவுகைச் செய்யப்படவில்லை என்ற குற்றச்சாட்டை நான் இங்கே கூற விரும்புகிறேன். தேவஸ்தானங்களில் உடனடியாக அறங்காவலர்களைப் போடும்படி கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கொள்ளிடம் பாலத்தில் சில மாதங்களாக விளக்கு எரியவில்லை. அதைப்பற்றிப் பலமுறை எடுத்துச் சொல்லி, மனுக்களையும் அனுப்பியிருக்கிறார்கள். அந்தப் பாலத்தின்மீது போக்குவரத்து அதிகமாக இருப்பதன் காரணமாக, அதற்கு மின்சாரம் கொடுப்பதற்கு மின்சார அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

பெற்றோர்கள், கார்டியன்கள் வருமான வரம்பு ரூ. 2,000 என்று இருந்ததை, ரூ. 2,500 ஆக உயர்த்தியதுபற்றி மகிழ்ச்சி. திருப்தி இல்லாமல் கேட்பது அல்ல. இதை ரூ. 3,000 ஆக செய்தால் ஓரளவுக்குப் பல ஏழை மாணவர்கள் பலன் அடைய முடியும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-30)

மற்றொன்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

" To discuss about the denial of benefits to a Scheduled Tribe or caste as soon as he becomes a christian ".

என்று வெட்டுப் பிரேரணை கொடுக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவ மதம் மாறியவர்களுக்கு எல்லாச் சலுகைகளும் வழங்கப்பட வேண்டும். கனம் அமைச்சர் அவர்கள்கூடக் கூறினார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பழங்குடி மக்களுக்கு, டிரைப்ஸ் களுக்குக் கொடுக்கக்கூடிய எல்லாச் சலுகைகளையும் இவர்களுக்குக் கொடுக்க முடியாது என்று சொன்னார்கள். நான் அதை இங்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறேன், எல்லாச் சலுகைகளும் இவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். அதைத் தயவு செய்து கவனித்து ஆவன செய்ய வேண்டும். இப்போது புத்த மதம் மாறியவர்களுக்கு மத்திய அரசு ஸ்காலர்ஷிப் கொடுக்க முன்வந்திருக்கிறது. அன்றைக்கு இருந்த பல காரணங்களால்,

[1974 மார்ச் 21]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. பாலசுந்தரம்): இரண்டு பேர்கள் பேசுகிறீர்கள். திரு. ஜேம்ஸ் கடைசியில் பேசுகிறார்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** பிஸினஸ் அட்வைசரி கமிட்டி இம்மாதிரி முக்கியமான மானியத்திற்குக் கொஞ்சம் டயம் அதிகமாக ஒதுக்க வேண்டும். முன்பெல்லாம் அரிசன் டிமாண்ட், அக்ரிகல்சர் டிமாண்ட் என்றால் மூன்று நாட்களுக்குக்கூட விவாதம் நடக்கும், நாங்கள் மூன்று நாட்கள் பேசியிருக்கிறோம்.

இப்பொழுது அரை நாளில் ஒரு மானியத்தை விவாதித்து முடிக்க வேண்டுமென்றால் எப்படி? எங்கள் கட்சியில் நான் ஒருவர் தான் பேசுகிறேன். கொஞ்சம் சமயம் அதிகமாகக் கொடுங்கள். அரிசன மெம்பராக இருப்பதால் எல்லாவற்றையும் பேசியாக வேண்டியிருக்கிறது.

பால் விநியோக கூட்டுறவுச் சங்கங்களை அமைத்திருக்கிறார்கள். அம்மாதிரி அரிசனங்களுக்கு அமைத்துக் கொடுப்பது என்ற திட்டம் எங்களுடைய கட்சி ஆட்சியில் இருந்தபொழுது வந்த ஒன்று. அதை நான் பெருமையோடு கூறிக்கொள்கிறேன். இந்த மானியத்தைப் பொறுத்தவரையில் கூறப்பட்டிருக்கிறது. 82 லாபத்திலும், 32 'நோ ப்ராபிட் நோ லாஸ்', 228 சங்கங்கள் நஷ்டத்தில் நடைபெறுகின்றன என்று கூறப்பட்டிருக்கிறது. நஷ்டம் ஏற்படுவதற்குக் காரணம் என்ன? அரிசனங்கள் நடத்தக் கூடிய பல சொஸைட்டிகளிலிருந்து மற்றவர்களால் பால் வாங்கப் படவில்லையா? அல்லது பால் விற்பனை செய்வதற்கு அரசாங்கம் தக்க முயற்சி செய்யவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

இதற்கு முன்பு பேசிய மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கோவில்களில் அரிசனங்களை அர்ச்சகர்களாகப் போடக்கூடிய நிலைமையை நாங்கள் ஏற்படுத்தினோம், அரிசனங்களை அறங் காவலர்களாக நியமித்திருக்கிறோம் என்றெல்லாம் பெருமையாகக் கூறிக்கொண்டார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய உத்தமர் கோவில் தேவஸ்தானத்திற்கு ஒரு அரிசன் மனுப் போட்டு ஏறத்தாழ 2½ ஆண்டுக் காலமாகிறது. இன்னும் அங்கே அறங்காவலர் போடவில்லை. இவரைப் போட வேண்டும் என்று நான் சொல்லவில்லை.



1974 மார்ச் 21] [திருமதி ஜோதி வெங்கடாசலம்]

பல தேவஸ்தானங்களில் அறங்காவலர்களை நியமிப்பதில் மிகவும் காலதாமதம் ஆகிறது. நாங்கள் கேட்டுப் போட வேண்டும் என்பது அல்ல. அந்த இலாகாவைச் சேர்ந்தவர்களே அதை அதை முறைகைச் செய்ய வேண்டும். முறைகைச் செய்யப்பட வேலைகள் முறைகைச் செய்யப்படவில்லை என்ற குற்றச்சாட்டை நான் இங்கே கூற விரும்புகிறேன். தேவஸ்தானங்களில் உடனடி யாக அறங்காவலர்களைப் போடும்படி கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கொள்ளிடம் பாலத்தில் சில மாதங்களாக விளக்கு எரியவில்லை. அதைப்பற்றிப் பலமுறை எடுத்துச் சொல்லி, மனுக்களையும் அனுப்பியிருக்கிறார்கள். அந்தப் பாலத்தின்மீது போக்குவரத்து அதிகமாக இருப்பதன் காரணமாக, அதற்கு மின்சாரம் கொடுப்பதற்கு மின்சார அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

பெற்றோர்கள், கார்டியன்கள் வருமான வரம்பு ரூ. 2,000 என்று இருந்ததை, ரூ. 2,500 ஆக உயர்த்தியதுபற்றி மகிழ்ச்சி. திருப்தி இல்லாமல் கேட்பது அல்ல. இதை ரூ. 3,000 ஆக செய்தால் தான் ஓரளவுக்குப் பல ஏழை மாணவர்கள் பலன் அடைய முடியும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-30)

மற்றொன்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

" To discuss about the denial of benefits to a Scheduled Tribe or caste as soon as he becomes a christian ". என்று வெட்டுப் பிரேரணை கொடுக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவ மதம் மாறியவர்களுக்கு எல்லாச் சலுகைகளும் வழங்கப்பட வேண்டும். கனம் அமைச்சர் அவர்கள்கூடக் கூறினார்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பழங்குடி மக்களுக்கு, டிரைப்ஸ் களுக்குக் கொடுக்கக்கூடிய எல்லாச் சலுகைகளையும் இவர்களுக்குக் கொடுக்க முடியாது என்று சொன்னார்கள். நான் அதை இங்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறேன், எல்லாச் சலுகைகளும் இவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். அதைத் தயவு செய்து கவனித்து ஆவன செய்ய வேண்டும். இப்போது புத்த மதம் மாறியவர்களுக்கு மத்திய அரசு ஸ்காலர்ஷிப் கொடுக்க முன்வந்திருக்கிறது. அன்றைக்கு இருந்த பல காரணங்களால்

[திருமதி ஜோதி வெங்கடாசலம்] [1974 மார்ச் 21

அப்போது உயர்ந்த ஜாதியைச் சார்ந்தவர்களாய் இருந்தவர்களின் இம்சை தாங்க முடியாமல் அரிசனங்கள் கிறிஸ்தவர்களாக மதம் மாறியவர்கள்தான் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் பாதுகாப்புக் கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. வ. முத்து :** தலைவரவர்களே, இந்த அரிசன மானியத்தின் பேரில் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற முன்வருகிறேன். இந்த அரசால் அரிசன வீட்டு வசதி வாரியத்திற்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

அடுத்தபடியாக, இந்தச் சர்க்கார் அரிசன மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்து கொண்டிருக்கிறது என்பதை நாம் எல்லோரும் கண்கூடாக தெரிந்து கொண்டிருக்கிறோம். அரிசன சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்கூட நகரத்தில் வந்து குடியேறியவுடன் முதலியார், பிள்ளைமார் என்று ஜாதிப் பெயரை மாற்றிச் சொல்லிக் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட இந்த நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அரிசன சமுதாயத்திலிருந்து பெண் எடுத்திருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

அடுத்தபடியாக, அரிசன மக்கள் வாழும் வீட்டில் தீ பிடித்துவிட்டால், அவர்களுக்குச் சர்க்காரில் 80 ரூபாய் கொடுக்கிறார்கள். அதை வைத்துக் கொண்டு அவர்கள் மறுபடியும் வீட்டைப் புதுப்பித்துக்கொள்ள முடியாது. அரிசனத் துறையில் பல வீட்டு மனைகளை ஒதுக்கிக் கொடுத்திருந்தாலும் போதிய வருவாய் இல்லாததால் நூற்றுக்கு 80 பேர் வீடு கட்டிக்கொள்ள முடியாமல் இருக்கிறார்கள். அப்படி இருக்க இந்த 80 ரூபாயை வைத்து அரிசனங்கள் ஒன்றும் செய்ய முடியாது. ஆகவே, அவர்களுக்கு இந்த 80 ரூபாயை 200 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அரிசன விவசாயிகளுக்கு உழவு மாடு பிடிக்க 500 ரூபாய் கொடுக்கிறார்கள் இன்றைக்கு இருக்கின்ற நிலையில் 500 ரூபாயை வைத்துக்கொண்டு உழவு மாடு வாங்கி, விவசாயம்



1974 மார்ச் 21] [திரு. வ. முத்து]

செய்ய முடியாது. ஆகவே, அந்த வகையில் 500 ரூபாயை 1,000 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று அரிசன விவசாயிகளுக்குக் கிணறுகள் வெட்டுவதற்கு மானியம் 2,000 ரூபாய் கொடுக்கிறார்கள். முன்னால் 3 ரூபாய் கொடுத்தால் கூலி ஆள் கிடைப்பார்கள். இப்போது 5 ரூபாய் கொடுத்தால் கூட கூலி ஆள் கிடைப்பதில்லை. அதனால் 2,000 ரூபாயை வைத்துக்கொண்டு சர்க்கார் கூறுகிற கிணற்றை வெட்ட முடியாது. ஆகவே, இந்த மானியத்தை 3,000 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, இந்த அரசு அரிசனங்கள் முன்னேற வேண்டும்; அரிசனக் குழந்தைகள் கல்வியில் முன்னேற வேண்டுமென்று நிறைய அரிசன மாணவர் இல்லங்களை ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால் அந்த இல்லங்களுக்குக் கொடுக்கின்ற தொகை போதுமானதாக இல்லை. அதனால் அவர்களுக்குப் போதுமான அளவுக்கு உணவு கிடைக்க வழியில்லாமல் இருக்கிறது. பல குற்றங்கள் செய்து கைதியாக இருக்கக்கூடியவர்களுக்குக்கூட காலையிலே இட்லி கொடுக்கிறார்கள். ஆனால் இந்த அரிசன இல்லங்களில் இருக்கின்ற மாணவர்களுக்கு கஞ்சி கொடுக்கிறார்கள். அவர்களுக்கும் காலை உணவாக இட்லி கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த மன்றத்தில் கேள்வி நேரத்தின்போது பல மாண்புமிகு உறுப்பினர்கள் அரிசனங்களுக்கு வீட்டுமனை, மயானம், கிணறு போன்றவை தனியாக இருக்கக்கூடாது; ஜாதி இந்துக்களோடு ஒன்றாக இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். அந்த யோசனை பாராட்டக்கூடியதுதான். ஆனால் அது நகரத்திற்குத்தான் பொருந்தும்; கிராமங்களுக்குப் பொருந்தாது. உதாரணத்திற்கு என்னுடைய பகுதியில் நடைபெற்ற ஒரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு விவசாயக் குடும்பம்; அண்ணன், தம்பி இரண்டு பேர். மூத்த சகோதரர் தன்னுடைய நிலத்தை 27,000 ரூபாய்க்கு விற்க தம்பியிடம் விலை கூறினார். தம்பி 25,000 ரூபாய்க்கு அந்த நிலத்தைக் கேட்டார். அந்த விலைக்கு, தம்பிக்குக்கொடுக்க மறுத்துவிட்டார். பிறகு அந்த

நிலத்தை ஒரு அரிசன விவசாயி 27,000 ரூபாய் கொடுத்து வாங்குவதற்குப் பேசி ஒப்பந்தம் செய்து கொண்டார். உடனே அந்த அரிசன விவசாயிடம் போய் 25,000 ரூபாய்க்கு மேல் வேண்டாம் என்று சொன்ன தம்பி 5,000 ரூபாய் உனக்கு கூட்டித் தருகிறேன்; அந்த நிலத்தை எனக்குக் கொடுத்துவிடு என்று கேட்டார். அதன் காரணம் என்னவென்றால், அரிசன விவசாயி நிலத்தைப் பெற்றுவிட்டால், அவர்களுடைய பொதுக் கிணற்றில் தண்ணீர் எடுப்பார்; பொது வீட்டில் குடியேறி விடுவார் என்பதற்காக 5,000 ரூபாய் கூட்டிக் கொடுத்தாவது தானே வாங்கிவிட்டால் இந்தத் தொல்லைகள் இருக்காது என்று கருதி அந்த முறையை கையாண்டார் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். ஆகவே, அரிசன மக்களுக்கு வீட்டுமனை, மயானம், கிணறு போன்றவை தனியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வீட்டுமனைகள் விஷயத்தில் கிராம அதிகாரிகள் செய்யும் தொல்லைகள் எல்லையில்லாமல் இருக்கின்றன. வீட்டு மனைக்கு என்று நிலத்தை எழுதிக்கொடுத்துவிட்டால், உடனே அங்கே நாட்டு வக்கீலாக இருக்கின்ற கிராம அதிகாரி, அந்த நிலச் சொந்தக்காரர்களிடம் யோசனை கூறி, லோன் போட்டு கிணறு வெட்டி, 4 தென்னம்பிள்ளை வை, ஒரு வீட்டைக் கட்டிக்கொள் என்று சொல்லிக்கொடுக்கிறார்கள். அதனால் அந்த வீட்டு மனை கிடைக்கத் தடை ஏற்படுகிறது. இம்மாதிரியான முறைகளைக் கவனித்து, தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மானியத்தை வரவேற்றுப் பாராட்டி அமர்கிறேன். வணக்கம்.

**திரு. எம். முத்தையா :** தலைவரவர்களே, இந்த அரிசன நல மானியத்தை ஆதரித்து, என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல முன்வருகிறேன்.

இந்த நாடு சுதந்திரம் அடைந்து 25 ஆண்டு கழிந்து, வெள்ளிவிழா எல்லாம் கொண்டாடிவிட்டோம். அதற்குப் பிறகு 26-வது ஆண்டு நடைபெறுகிற இந்த நேரத்தில் ஜாதி மத பேதம் ஒழிந்திருக்கிறதா என்றால் இல்லை. ஏனென்றால் 26-வது ஆண்டு நடைமுறையில்கூட சர்க்கார் பல தரப்புகளிலும் புராண காலத்திலே இருந்ததைப்போல பாகுபாட்டை ஏற்படுத்தி



யிருக்கிறது. பார்வெர்டு கிளாஸ், பாக்வெர்டு கிளாஸ், ஷெடியூல் காஸ்ட் என்று பிரித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் சலுகைகள் வழங்க முடியும் என்று சொல்கிறார்கள். வாஸ்தவம் தான். அப்படியானால் அந்த மூன்று வகுப்புகளுக்கும் கொடுத்தால் போதாதா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

ஒரு எஸ்.எஸ்.எல்.சி. புக்கை திறந்து பார்த்தால் பாக்வெர்டு கிளாஸ் என்று போட்டால் போதாதா? அரிசன வகுப்பு என்றால் அரிசன் என்று போட்டால் போதாதா? பாக்வெர்டு என்றால் அதில் எந்த ஜாதி, அரிசன் என்றால் அதில் எந்த ஜாதி என்றெல்லாம் சேர்த்து எழுதியிருக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது ஒரு ஜாதிக்குள்ளே எத்தனையோ ஜாதிகளை, எத்தனையோ ரூபங்களில் புகுத்தியிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்கிறோம். அது மிகவும் வருந்தத்தக்கது. மூன்று வகுப்புகளாகப் பிரித்துக்கொண்டால் அதற்குள்ள சலுகைகளைக் கொடுக்கலாம்; அதற்குள்ளே வேறொரு ஜாதியை ஏற்படுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று மானியம் ஒதுக்கிக் கொடுக்கிறார்கள். ஆனால் அந்த மானியம் அவர்களுக்கு நேரடியாகக் கிடைக்கிறதா என்றால் நிச்சயமாகக் கிடைப்பதில்லை. "ஆட்டில் பாதி கடா" என்பதைப்போல ஒதுக்கப்படுகின்ற மானியத்தில் பாதி ஆபீசர்களுக்குப் போய் விடுகிறது. மானியம் முழுவதும் அந்தச் சமுதாயத்திற்குப் போய் சேரவில்லை என்பதை மிகுந்த வருத்தத்துடன் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேலை வாய்ப்புக்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவிகிதம் ஒதுக்கியிருக்கிறார்கள். 18 சதவிகிதம் ஒதுக்கியிருக்கிறோம் என்று விளம்பரம்தான் பெரிதாக இருக்கிறதே தவிர எந்தத் துறையிலாவது 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடம் கொடுத்திருக்கிறார்களா என்பதைப் பரிசீலிக்க ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை. பல துறைகளில் இந்த 18 சதவிகிதம் இடம் கொடுக்கவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாகச் சொல்வதானால், மாவட்ட முன்சீப் அதிகாரி தேர்வில் தாழ்த்தப்பட்ட அரிசனங்களுக்கு என்று 4 இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. அந்த 4 இடங்களில் இரண்டுதான்

அரிசன மக்களுக்குக் கிடைத்தன. இரண்டு இடம் கிடைக்கவில்லை. அதற்கு என்ன காரணம் என்று பார்த்தால், 'காண்டிடேட்' கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். அதற்கான காண்டிடேட் இல்லை; 'நோ காண்டிடேட்' என்று அரசிதழில் வந்திருக்கிறது. இதை நிரூபிக்க வேண்டுமானாலும் நான் தயாராக இருக்கிறேன். இப்படிப்பட்ட ஒரு கண்ணாமூச்சி விளையாட்டு இருக்கக்கூடாது; அது நிறுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு முன்னால் சட்டக் கல்லூரியில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஆசிரியர்களாகப் பணியாற்ற இடம் கொடுக்கவில்லை. ஆனால் இப்போதாவது தாழ்த்தப்பட்டவர்கள் அந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்களா என்றால் இல்லை. இதற்குச் சட்டம் இடம் தரவில்லை என்றால் ஏன் சட்டத்தைத் தளர்த்தக் கூடாது? அதற்கு விண்ணப்பம் செய்த நபர்களும் எனக்குத் தெரியும். சட்டத்தைத் தளர்த்தியாவது அந்த வாய்ப்பு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதற்கடுத்தபடியாக 1973-இல் மதுரை டிவிஷனில் சப்-இன்ஸ்பெக்டர்கள், ஹெட் கான்ஸ்டபிள், கான்ஸ்டபிள் எல்லாம் எடுக்கப்பட்டது. அந்த நேரத்தில்கூட 18 சதவிகிதம் ஒதுக்கீடு கொடுக்கப்படவில்லை. கேள்வி போட்டாலும் சபையில் மதிப்பதில்லை. அரசாங்க உத்தியோகத்தில் மட்டுமல்ல—நகரசபைகள், நகராட்சி மன்றங்கள், ஊராட்சி மன்றங்கள் ஆகிய எல்லா இடங்களிலும் 18 சதவிகிதம் ஒதுக்கீடு தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீண்டாமை ஒழிப்புக்காக பறக்கும் படை இருப்பதாக அமைச்சர் சொன்னார்கள். அந்த பறக்கும் படை எங்கு பறந்துகொண்டிருக்கிறதோ, தெரியவில்லை. அது எந்த முறையில் செயல்படுகிறது என்பதை அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ். வடிவேல்:** சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். அரிசன நலத்துறை மானியம் விவாதத்தில் இருக்கிறது. இதில் அரிசன மக்களுடைய பல்வேறு சங்கடங்களை உறுப்பினர்கள் சொல்கிறார்கள். இந்த முக்கியமான நேரத்தில் நலத்துறை அமைச்சர் அவையில் இல்லாமல் இருப்பது சரிதானா?





**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. பாலசுந்தரம்):** வாக்களிக்கச் சென்றிருக்கிறார்கள். வந்துவிடுவார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** வாக்களிப்பு காலை 10 மணி முதல் மாலை மூன்று மணி வரை இருக்கிறது. பேரவை பிற்பகல் 1-30 மணிக்குப் பிறகு மாலை 4 மணிக்குத்தான்கூட இருக்கிறது. அந்த நேரம் வாக்களிக்கலாம். இப்போது நலத் துறை அமைச்சர் அவர்கள் இங்கு இல்லாமல் இருப்பது இந்த அவையை அவமதிப்பது போலாகும். மன்றத்திலுள்ள அங்கத்தினர்களை அவமதித்து, இந்த இலாக்கா நலனையே புறக்கணிப்பது போலாகும். இதற்கு பேரவைத் தலைவர் ஒரு முடிவு கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** அவர்கள் இவ்வளவு நேரம் இங்கேதான் இருந்தார்கள். இப்போதுதான் வாக்களிக்கச் சென்றார்கள். வந்துகொண்டே இருக்கிறார்கள். அங்கத்தினர்கள் கூறுகிற நல்ல கருத்துக்களை நாங்கள் குறிப்பு எடுக்கிறோம், அவர்களிடம் கொடுப்பதற்கு.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** நான் எங்கும் போகவில்லை—ஓட்டளிக்கத்தான் சென்றேன். பின்தங்கிய வகுப்பு நலத் துறை அமைச்சர் இங்கே குறிப்பு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** இங்கே சொல்லப்படுகிற நல்ல கருத்துக்கள் பயன்படாமல் போய்விடக்கூடாது என்கிற நல்ல நோக்கத்தோடுதான் நாங்களும் கூறினோம்.

**திரு. எம். முத்தையா:** தட்டெழுத்தர்கள் பதவி அரிசனங்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. கேட்டால் அவர்கள் பயிற்சி பெற வரவில்லை என்று சொல்கிறார்கள். அரிசன நலத் துறை அவர்களுக்குத் தனியாகவே பயிற்சி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் நெடுநாளாக அரிசன சமுதாயம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கக் கூடிய ஒரு குறிக்கோள் நிறைவேற்றப்பட வேண்டும். குறிப்பாக அரிசனத் தலைவரும் அரசியல் நிர்ணயச் சட்டத்தையே இயற்றித் தந்தவருமான டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய உருவப் படத்தை இந்தப் பேரவையில் திறந்து

[திரு. எம். முத்தையா] [1974 மார்ச் 21

வைக்க வேண்டுமென்பது இந்த அவையிலுள்ள அரிசன அங்கத்தினர்களின் ஏகோபித்த எண்ணமாகும். இதைக்கூட 68-இல் நடந்த கழக மாநாட்டில் தீர்மானமாகவே நிறைவேற்றி யிருப்பதாக அறிகிறேன். ஆகவே டாக்டர் அம்பேத்கார் திருவுருவப் படத்தை இங்கே திறக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு நான் விடைபெறுகிறேன். வணக்கம்.

* திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த அரிசன மானியக் கோரிக்கையின் பேரில் என கட்சியின் சார்பாகச் சில வார்த்தைகளைச் சொல்ல நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

நம் நாட்டிலே சாதி சமய பேதமற்ற சமுதாயத்தைச் அமைக்க வேண்டுமென்ற குறிக்கோளுடன் சில திட்டங்கள் ஏற்படுத்தப் பட்டன. காரணம் தொன்றுதொட்டு, நிலப்பிரபுத்துவ முறையில் இயங்கி வந்த நாட்டிலே பல்வேறு சாதிப் பிரிவுகள் நிலைத்துவிட்ட காரணத்தினால், அதில் இருந்து மாற, அதற்கு நேர்மாறான வழியைப் பின்பற்றி இதில் வெற்றி காண சகல மட்டத்திலும் எடுக்கப்பட்டு வருகிற நடவடிக்கைகள் நிச்சயமாக வெற்றி பெறும். ஆயினும் இன்றையதினம் நம் நாட்டில் சாதி வேற்றுமை தான் வளர்ந்து இருக்கிறது. காரணம் தொழில் துறை வளர்ச்சி முழுமையாக அமையாததுதான். தொழில் துறை வளர்ச்சி ஏற்படுகிறபோதுதான் இந்தப் பிரச்சினைக்கு முடிவு ஏற்படும்.

இன்றைக்கு அரிசன நலத் துறை மூலமாகப் பல கோடி ரூபாய் செலவழிக்கப்படுகிறது என்றால் அது ஒருசில பேர்களுக்குப் பயன்படுமேதவிர சமுதாய மட்டத்தில் அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கோ, உயர்த்துவதற்கோ பயன்படாது. இன்றைக்கு நாம் 6 கோடி செலவிடலாம். ஆனால் கிராமங்களில் உள்ள இந்தச் சமூகத்தினர்களுக்கு இவை பயன்படாது. இன்றைக்குக் கிராமங்களில் இவர்கள் விவசாயக் கூலிகளாகவே வேலை செய்கிறார்கள்.

நாம் மாடு வாங்கக் கடன் கொடுக்கிறோம் என்கிறோம்— மானியம் கூட இல்லை. முன்பு மானியமாகக் கொடுக்கப்பட்டது, அது நீக்கப்பட்டு இப்போது கடன்தான் கொடுக்கப்படுகிறது. உழவு மாடு, கறவை மாடுகளின் விலை எந்த அளவுக்கு





உயர்ந்திருக்கிறது என்று பார்க்க வேண்டும். உழவு மாடு ஆயிரம் ரூபாயாகிறது. 500 ரூபாய் கடன் கொடுத்தால் பாக்கி 500 ரூபாய்க்கு அவன் என்ன செய்வான்? கறவை மாடு என்றாலும்—சொஸைடியில் பால் கறந்து ஜீவிக்க அவன் எண்ணினால் ஆயிரத்திற்குக் குறைந்து மாடு வாங்கிக் கறக்க முடியாது. நாம் கொடுக்கிற கடன் தொகை கறவை மாடு வாங்க அவனுக்குப் போதாது. இதற்கு என்ன தீர்வு காணலாம் என்பதை யோசிக்க வேண்டும்.

தொழில் துறையில் அவர்களை மாற்றுவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதையும் யோசிக்க வேண்டும். இன்றைக்கு தோட்டி தொழிலில்தான் அவர்களுக்கு அதிக வாய்ப்பு அளிக்கப் படுகிறது. மற்றத் தொழில்களில் வாய்ப்பு அளிக்கப்படுவதில்லை. காரணம் என்ன? நாம் ஏதோ 18 சதவிகிதம் ஒதுக்கி இருக்கிறோம், மற்றத் துறைகளிலே அவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்பதற்காக, இருந்தாலும் தனியார் துறையிலே இருக்கிற தொழிற்சாலையிலே அவர்களைச் சேர்த்துக் கொள்கிறார்களா? இல்லையே, என்ன காரணம்? அரிசனங்கள் தோட்டி வேலைதான் செய்ய வேண்டும் என்ற நிலை. இது ரொம்ப மோசமான தொழில்தான். அதற்குப் பாதுகாப்பு கிடையாது. நவீன முறை ஆக்கப்படுகிற சூழ்நிலை கிடையாது.

தோட்டித் தொழிலாளர்களுக்குச் சரியாகச் சம்பளம் கொடுக் கிறோமா என்பது ஒரு பெரிய பிரச்னை. முனிசிபாலிடியிலே உடை கூடக் கொடுக்கவில்லை. அவர்கள் தகராறு பண்ணுகிறார்கள். அவர்களுக்குச் சுகாதார வசதி அளிக்க வேண்டும்.

அவர்களது குடியிருப்புகளைப் போய் பார்க்க வேண்டும். தகரத்தை ஓடாக வைத்து அந்தத் தகரத்திற்குக் கீழே குடியிருக்கிறான். வெயில் காலத்திலே அவன் எப்படி குடியிருக்க முடியும்? கீழ்மட்டத்திலே இருக்கிற தொழிலாளிக்குக்கூட வீடுகளை ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு நம்மால் பணம் செலவு செய்ய முடியாது என்று சொல்லக்கூடிய அளவிலே இன்றைக்குச் சமுதாயத்திலே ஒரு நிலை இருக்கிறது. சுகாதார வசதிகளைப்

பொறுத்து, எந்த அளவுக்கு அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கிறோம். அவர்களுக்கு அளிக்கும் வசதி மிகமிகக் குறைவு. அதிலே சந்தேகமே வேண்டாம்.

அரிசன நல இலாகா இருக்கிறது. இன்றைக்குக் கணக்குச் சொல்கிறார்கள். கிட்டத்தட்ட 2,000 கிணறுகள் அரிசன நல இலாகா மூலம் வெட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று புள்ளி விவரம் கொடுத்திருக்கிறார்கள். அரிசன நல இலாகா கிணறு வெட்டிக் கொடுக்கும்போது, ஒரு கிணற்றிற்கு அடி வெட்டு இல்லையென்று சொன்னால், அவர்கள் போய் பார்க்கிறார்களா, இல்லை. ஒரு விண்ணப்பம் போனால், அந்த விண்ணப்பத்தின் பேரிலே, ஒரு குறிப்பை காண்ட்ராக்டருக்கு அனுப்பி, 5 அடி வெட்டி விட்டு வா என்று சொல்கிறார்கள் சொல்லும்போது பழைய கிணற்றை அளப்பது கிடையாது.

அந்த காண்ட்ராக்டர் 2 அடி வெட்டிவிட்டு, 5 அடி என்று சொல்லலாம் 8 அடி என்று சொல்லலாம், 9 அடி என்று சொல்லலாம், 10 அடி என்றுகூடச் சொல்லலாம். அதைக் கேட்பதற்கு நாதி கிடையாது. அந்த ஊர் பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்டைக் கூடக் கலந்து கொள்ளாமல், யாரோ ஒரு ஆள் வந்து 2 அடி வெட்டி, 6 அடி வெட்டினோம், 10 அடி வெட்டினோம் என்று பணம் பறிக்கிறதே தவிர, இதை கரெக்ட் பண்ணுவதற்காக அந்த இலாகா இல்லை. அந்த இலாகாவினர் அவர்கள் இருக்கும் இடத்தைவிட்டு நகர மறுக்கிறார்கள். 2,000 கிணறுகள் வெட்டப் பட்டதாகக் கணக்கிலே வேண்டுமானால் இருக்குமே தவிர, பணம் முழுவதுமே செலவழிக்கப்பட்டிருக்குமேயொழிய அதிகாரிகள் தருகிற புள்ளி விவரத்தை வைத்து இங்கே பேசுவது சரியல்ல. போய்ப் பார்த்தால்தான் நிலைமை புரியும்.

என் ஊரிலேகூட, 2 அடி வெட்டிவிட்டு, 6 அடி வெட்டியதாகக் கணக்குச் சொல்லிப் பணம் வாங்கிக்கொண்டு போய்விட்டான். இந்தத் துறையில் எவ்வளவு செலவாகிறது என்பதை நிர்வாகத்திலே இருப்பவர்களும்சரி, நாமும்சரி, கண்காணிப்போமானால், பாதித் தொகையைக்கூட அவர்கள் செலவழித்திருப்பதாக நம்மால் காண முடியாது.



வீடுகளுக்கு நிலம் ஒதுக்க வேண்டுமென்பதற்காகப் பல ஊர்களிலிருந்து விண்ணப்பங்கள் வந்துகொண்டிருக்கின்றன. என்னுடைய தொகுதியில், 1969-லே போட்டிருக்கிற, அதுவும் நிரந்தரமாக திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கிற அரிசன மக்களது விண்ணப்பம் இதுவரை கவனிக்கப்படவில்லை. அமைச்சர் அவர்கள் அந்தக் கிராமத்திற்கு வந்தபோது நேரடியாக மனுவைக் கொடுத்தும், 1969-லிருந்து இன்னும் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட வில்லை. அவர்கள் அந்தப் பக்கத்திலேதான் குடியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களிடமும் நேரடியாக அவர்களே சொல்லி விட்டார்கள். இன்றைக்கும் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திலேதான் இருக்கிறார்கள். அந்த மக்களது குறைகளுக்குக் கூட நிவர்த்தி இல்லை என்றால், எதிர்க்கட்சிகளுக்குச் செய்யா விட்டால் பரவாயில்லை, கெஜட்டில் பிரசுரிக்கக்கூடிய அளவுக்குப் போய் தடைப்பட்டிருக்கிறது என்றால், அந்த அரிசன மக்கள் எப்படி குடியிருப்பார்கள்.

இருகூர் கிராமத்திலே 3 முறை அரிசன நல இலாகா அதிகாரி களும் மற்ற அதிகாரிகளும் வந்து பார்த்துவிட்டுப் போயும் ஒன்றும் பலனில்லையென்றால், அந்த அரிசன மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க ரூ. 1 கோடி செலவு செய்கிறோம் என்று சொல்லி என்ன பலன்? 24,000 கிராமங்களுக்கு மின் ஒளி அளித்து விட்டோம் என்றால், குடிநீர் வசதி இன்னும் செய்யப் பட்டிருக்கிறதா? பஞ்சாயத்திலே இருக்கிறவர்கள் குடி நீர் வசதியைச் சில இடங்களிலே செய்து கொடுத்திருக்கிறார்களே தவிர, இன்னும் முழுவதுமாகப் பல்வேறு பகுதிகளிலே குடிநீர் கிடைக்காமல், அவர்கள் ½ மைல், 1 மைல் தூரம் நடந்து குடிநீர் எடுத்து வருகிறார்கள். ஆற்றுப் படுகையிலிருந்து குடிநீர் எடுக்கிறான். விண்ணப்பம் கொடுத்தால்கூடப் பார்க்காத நிலைமை இருக்குமானால், எதற்காக இந்த இலாகாவை வைத்திருக்கிறோம். அதிகாரிகளாலே செய்ய முடியாது என்று சொன்னால், எதற்காக அந்த இலாகாவை வைத்திருக்கிறார்கள், உத்தியோகத்திலே வைத்திருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

இதுமாதிரிப் பல்வேறு பிரச்னைகள். பொருளாதாரத் துறையிலே மேம்பாடு செய்கிறோம் என்று சொல்லிவிட்டால் போதுமா? உழுதவனுக்கு நாம் நிலம் கொடுக்க முயற்சி எடுத்துக்

கொண்டோம். அரிசனங்களுக்குச் சுடுகாடு வேண்டுமென்று சொன்னால், அதற்கும் நிலத்தை ஒதுக்குவது கிடையாது. கிராமப்புறத்திலே மணியக்காரன், கணக்குப்பிள்ளை, பட்டா இல்லையென்று சொல்கிறான்.

என் தொகுதியிலே, கணக்குவளை என்ற ஊரிலே, 3 ஏக்க நிலத்தை, அரிசனங்களுக்காகப் பட்டா செய்து கொடுக் வேண்டுமென்று தாசில்தாரிடம் சொன்னோம். ஆனா கேட்டவனுக்குப் பட்டா கிடைக்கவில்லை, இன்னொரு விவசாயிக் 1½ ஏக்கர் நிலத்தை பட்டா செய்து கொடுத்திருக்கிறார்கள் அரிசன இலாகாவுக்கு விண்ணப்பம் போட்டால், தாசில்தாருக் விண்ணப்பம் போட்டால் அவர் என்ன செய்கிறார்? நில இருப்பவர்களுக்கே பட்டா செய்கிறார்கள் என்றால், லஞ்ச வாங்கிச் செய்கிறார்களா?

சுடுகாட்டைக்கூட நம்மால் சரியாகக் கொடுக்க முடியவில்லை அரிசனங்களுக்கு. ஆனால், இந்த டிமாண்டிலே அந்த இலாகாவுக் நிதி ஒதுக்குகிறோம் என்று சொன்னால், அந்த அந்த ஊர்களுக் அதிகாரிகள் போய் கணக்கு எடுக்க வேண்டும். கண்காணிப் செய்ய வேண்டியது அதிகாரிகளுடைய பொறுப்பு. ஆகவே இப்படிச் செய்யாததன் காரணமாக, எவ்வளவு பண செலவழித்தாலும் எவ்வளவு நல்ல வகையான திட்டங்களை போட்டாலும் அது மக்களுக்குப் பயன்படுகிற சூழ்நிலை ஏற்படவில்லையென்ற காரணத்தால், அரிசன மக்கள் பொருளாதாரத் துறையிலே, முன்னேற முடியவில்லை.

விவசாயத்திலே அவர்களுக்கு கூலி ரூ. 3 என்று சொல்கிறார்கள் அவர்களுக்குப் பல்வேறு வசதிகள் கிடையாது. துப்புரவு வசதி கிடையாது, பஞ்சாயத்துப் பள்ளிகளிலே படிக்கிற குழந்தை களுக்குச் சீருடை கொடுக்கிறோமா? எல்லோருக்கு கொடுக்கிற உணவுதான் இவர்களுக்கும் கொடுக்கிறோமே தவிர இப்படிப்பட்ட அரிசன மக்கள் பொருளாதாரத் துறையிலே முன்னேறுவதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதற்கு, இந் மானியக் கோரிக்கையிலே செலவழிக்கின்ற பணத்தை உருப்படியாகச் செலவழிக்க வேண்டும். யாரோ இடையிலே இருப்பவர்கள் செலவழிப்பதாகக் கணக்குக் கொடுக்கிறார்கள் (மணி அடிக்கப்பட்டது).





* திரு. வீ. செல்லதுரை: தலைவர் அவர்களே, அரிசன நலத் துறை மானியத்தை வரவேற்று சில கருத்துக்களை இங்கே சொல்ல விழைகிறேன்.

இன்றைக்கும் பறவைகளிலே தூக்கணாங் குருவிதான் சிறிய பறவை. அந்தச் சிறிய பறவை தனது அலகுகளால் அழகான கூடுகளைக் கட்டி, தனது குஞ்சுகளையும் நல்லமுறையிலே பாதுகாத்து வருகின்றது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆனால், சேரியில் புகுந்து, ஒரு அரிசனனுடைய வீட்டில் அண்ணாந்து பார்த்தால் சூரியன் ஒளிதான் அந்த வீட்டில் தெரியும். இந்த அவல நிலையைப் போக்க, கருணை உள்ளம் படைத்த நமது கலைஞர் அவர்கள் அரிசனப் பழங்குடி மக்களுக் கென்று ஒரு அரிசன வீட்டு வசதி வாரியத்தை ஏற்படுத்தி, அவருடைய 1974-75 வரவு-செலவு திட்டத்தில் அரிசன மக்களுக்கு ஒரு இலட்சம் வீடுகள் கட்டித் தரப்படும் என்று அறிவித்து உள்ளதை அரிசனப் பழங்குடி மக்களும், அரிசனனாகிய நானும் வரவேற்று, அவருக்கும், அரிசன அமைச்சருக்கும் நன்றி உள்ளவராக இருப்போம் என்று கூறிக் கொள்கிறேன்.

நகர்ப் புறத்தில் குடிசைகள் எவ்வளவு சீக்கிரம் அகற்றி மாடி வீடுகளை ஏற்படுத்துகிறோமோ, அதேபோல் இந்த அரிசன வீட்டு வாரியம் கிராமப் பகுதியிலே உள்ள சேரியிலே வீடுகளைக் கட்டித் தர வேண்டும், அந்தப் பணி துரிதமாக நடக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

(நண்பகல் 12.00)

ஏற்கெனவே உள்ள அரிசனக் காலனிகளில் காலனிகளைத்தான் கட்டித் தருகிறார்களே தவிர சுகாதார முறையிலே அவை அமைக்கப்படவில்லை. மழை பெய்தால் காலனியிலேயே தண்ணீர் தேங்கி நிற்கிறது, அங்கேயே நின்று வெளியே செல்ல முடியாமல் ஒரு வாரம் வரையிலும் தண்ணீர் தேங்கி விடுகிறது. ஆகவே நம்முடைய அரசு ஒவ்வொரு காலனிக்கும் டிரெய்னேஜ், சாக்கடை கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காலனி களுக்குப் பக்கத்திலே கக்கூஸ் இருக்கிறது, நான் ஊரைச் சொல்லவில்லை. என்னுடைய தொகுதியிலே ஒரு காலனி இருக்கிறது. முதல் லைனிலிருந்து 20 அடி தூரத்திலேயே ஒரு பொதுஜன கக்கூஸ் இருக்கிற [illegible] கக்கூஸ் எப்படி

இருக்கிறது என்றால் கருங்கல்லால் கட்டப்பட்டு நான்கு பக்கச் சுவரும் 2 அடி உயரம்தான் இருக்கும். பொது ஜனங்கள் மலஜலம் கழிக்கிறார்கள்.

இதைப்பற்றி நான் மாவட்ட நல அதிகாரி அவர்களிடம் பல்முறை சொல்லியும் அவர் செவி சாய்க்கவில்லை. ஆகவே நான் இந்த மன்றத்திலே சொல்கிறேன். இங்கே சொல்வதற்காக மிகவும் வருந்துகிறேன். நலத்துறை அதை உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முன்பு ஒவ்வொரு சாலனிக்கும் பக்கத்திலே ஊர் பெண்கள் பாத்ரூம் கட்டித் தருவார்கள், ஆனால் இப்பொழுது கட்டப்படுவதில்லை. ஏன் என்று தெரியவில்லை. அதிகாரிகளைக் கேட்டால் வேறுவிதமாகச் சொல்கிறார்கள். உடனடியாக ஒவ்வொரு காலனியிலும் பெண்கள் பாத்ரூம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தீண்டாமை இன்னும் பரவலாக இருந்து கொண்டுதான் இருக்கிறது. ஒழியவில்லை. நம்முடைய அரசு அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்தாலும் கூட. இன்னும் சரியாக அமல் ஆகவில்லை. அதை ஒழிப்பதற்காகக் காவல் படை இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் எனது மாவட்டத்தில் இல்லை. மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், தென் ஆர்க்காடு போன்ற மாவட்டங்களில்தான் இருக்கிறது. சேலம் மாவட்டத்திலே குறிப்பாக அது வேண்டும். அந்தக் காவல் படை குறிப்பாக ஒவ்வொரு மாவட்டத்திலேயும் ஏற்படுத்தப்பட வேண்டும், அதுமட்டுமல்ல, அது அருகாமையிலே இருந்தால்தான் கலந்துகொண்டு உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க முடியும், மேலும் அந்தக் காவல் படையை அரிசன நலத் துறையோடு சேர்த்து இயங்கும்படியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தங்கப் பதக்கம் கலப்புத் திருமணத்திற்காகக் கொடுக்கப்படுகிறது. அதைவிட கலப்புத் திருமணம் செய்து கொண்ட அதுவும் அரிசனப் பெண்ணை திருமணம் செய்துகொண்ட வாலிபருக்கு உத்தியோகச் சலுகைகள், உயர்வுகள் கொடுக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் ஓரளவிற்குத் தீண்டாமை ஒழியும்.





அதோடு பொதுமக்களிடம் பழக வேண்டிய கிராம அதிகாரி களாக ஒவ்வொரு வட்டத்திற்கும் ஐந்து அரிசனங்களை வலுக் கட்டாயமாக கிராம அதிகாரிகளாக நியமிக்க வேண்டும். நான் பெருமையோடுகூட சொல்லிக் கொள்வேன். நான் தேர்தலிலே நின்ற பிறகுதான் அரிசன் என்பது எங்கள் பகுதியிலேயே தெரிய வந்தது. நான் காண்ட்ராக்டிலே தொடர்பு கொண்டிருந்தது பற்றி அந்த முறையிலேதான் தெரியும். எலக்‌ஷனிலே நின்ற பிறகு தான் எல்லோருக்கும் நான் அரிசன் என்பது தெரிந்தது என்பதை நான் பெருமையோடுகூட சொல்லிக்கொள்வேன். ஆகவே கிராம அதிகாரிகளாக அவர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயம் செய்ய முன்வரும் விவசாயிகளுக்குப் பம்பு செட்டுகள் வைப்பதற்காகப் பாதித் தொகை மானியமாகவும் பாதித் தொகை கடனாகவும் கொடுக்க வேண்டுமென்று கேட்டு 1974-75 ஆம் ஆண்டு அரிசன நலத்துறையின் நிதிக் கோரிக்கை அரிசன மக்களுக்குப் பயன்படக்கூடிய நல்ல திட்டமாக இருக் கிறது என்று கூறி அதை வரவேற்று எனக்குப் பேச வாய்ப் பளித்த தலைவருக்கு நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

* திரு. எஸ். வடிவேல் : தலைவர் அவர்களே, அரிசன நலத்துறை மானியத்தின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன்.

நாடு விடுதலையடைந்து 26 ஆண்டுகள் கழிந்துவிட்டன. கிராமங்களிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இன்னும் விடுதலை கிடைக்கவில்லை என்பதை நான் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன். பொருளாதாரச் சுரண்டலாலும், சமூகக் கொடுமை களினாலும் பல்வேறு சோகச் சம்பவங்களுக்கு ஆளாக்கப்படுகி றார்கள் தாழ்த்தப்பட்ட மக்கள். தமிழ்நாட்டிலே 76 லட்சம் மக்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இவர்களில் பெரும்பகுதி மக்கள் உடல் உழைப்பால் உயிர்வாழ்ந்து நாள் ஓட்டும் கருவி யாகத்தான் இருக்கிறார்கள். தங்களுடைய உயிரைக் காப்பாற்றிக் கொண்டு வாழ்வதற்காக ஊதியம் கிடைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தாலும் விடுதலையடைந்த நாட்டிலே

ல்லோரையும்போல் சம உரிமைகளோடு வாழ வேண்டுமென்று னைத்தாலும் அவர்கள் மேட்டுக்குடி மக்களாகவும், நிலப் ரபுக்களாலும் பல கொடுமைகளை அனுபவித்துக் கொண்டு ருகிறார்கள்.

நான் ஒரு சம்பவத்தை நினைவுக்குக் கொண்டுவர விரும்பு றேன். 1968-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 25-ம் நாள் தஞ்சைத் ரணியில் கீழ்வெண்மணி என்ற கிராமத்திலே 44 பேர்கள் ாழ்த்தப்பட்ட மக்கள் உயிருடன் கொளுத்தப்பட்ட சோகச் ம்பவம் இன்னும் நம்முடைய உள்ளங்களிலே நிழலாடிக் கொண்டிருக்கிறது, நாடே கொதித்தது, பேரறிஞர். அண்ணா அவர்களுடைய உள்ளமே குமுறியது, உலகமே அழுதது, ஆனால் அந்தக் கோரச் சம்பவத்திற்குரிய தண்டனை இல்லை. நீதிமன்றத் திலே பிராஸிக்யூஷன் தரப்பிலே சரியான முறையிலே வழக்கைத் தயாரிக்கவில்லை என்ற முறையிலே தள்ளுபடி செய்திருக்கிறார்கள். நான் அந்தச் சம்பவத்தைப்பற்றி அவையில் எடுத்துக் கூறிய நேரத்தில் இந்த மன்றத்திலே முதலமைச்சர் அவர்கள் உச்ச நீதி மன்றத்திலே அப்பீல் செய்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். காவல் இலாக்கா யாரைக் காத்து நிற்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். கீழ்வெண்மணி சம்பவத்தைப் பற்றிப் பார்த்தால் தாழ்த்தப்பட்ட மக்களை அவர்கள் காப்பாற்றவில்லை என்று தெரிகிறது. அதைப் பற்றி அவர்கள் பதில் சொல்ல வேண்டு மென்று கேட்கிறேன். இப்படி ஒவ்வொன்றையும் அடுக்கிக் கொண்டே போகலாம், அது எல்லாம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும்.

தீண்டாமை ஒழிப்புபற்றி அரசியல் சட்டத்திலே இருந்தாலும் கூடச் சமூக ஏற்றத்தாழ்வுகள் நிறைந்து இருக்கின்றன. இந்த இலாக்காவை நல்ல முறையிலே செயல்படச் செய்ய வேண்டும்.

ஒவ்வொரு ஆண்டும் இந்தத் துறையைப்பற்றிச் சொல்லும் பொழுது ஒப்பாரி வைத்துச் சொல்லக்கூடிய நிலைமைதான் இருக் கிறது. நான் இங்கே வந்து மூன்று வருஷங்கள் ஆகிவிட்டன, எத்தனையோ பிரச்சனைகளைப்பற்றி அந்த அம்மாவிடம் கொடுத்து இருக்கிறேன். அவர்கள் ஆர்டர் போட்டார்கள், ஆனால் அதிகாரிகள் செய்வதில்லை, அவர்கள் செய்யமாட்டார்கள். இதுவரையில் ஒரு பிரச்சனைகூடத் தீர்க்கப்படவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன் . . .





**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எத்தனையோ பிரச்சனைகளை என்னிடம் கொடுத்ததாகவும் ஒன்றுகூட நிறைவேறவில்லை என்றும் சொன்னார்கள். நான் மாலையிலேதான் பதில் சொல்லப் போகி றேன், அதற்குள்ளாக அவர்கள் என்ன தேதியிலே என்ன என்ன பிரச்சனைகளைச் சொன்னார்கள் என்னிடத்திலே என்று தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ். வடிவேல்:** எத்தனையோ, தேதியை பிறகு சொல்கி றேன், எத்தனையோ கொடுத்திருக்கிறேன், ஒன்றும் நிறைவேற வில்லை.

வீட்டு மனை கொடுக்கச் சொல்லி, 3 ஆண்டுகள் ஆன விவரங்கள், 7 ஆண்டுகள் ஆன விவரங்கள், சுடுகாடு பாதை போன்றவைகள் எல்லாம் பற்றிக் கொடுத்திருக்கிறேன், இவர்களுடைய ஆர்டர் ஒன்றும் நடக்கவில்லை. காரணம் அதிகாரி சொன்னால் நிலக்காரர் ஒத்துக் கொள்வதில்லை. நிலக்காரர் ஒத்துக் கொண்டால் மணியக் காரர் ஒத்துக்கொள்வதில்லை. இப்படியேதான் போய்க் கொண்டிருக்கிறதே தவிர ஒன்றுமே நடக்கவில்லை.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** தலைவர் அவர்களே, அங்கத்தினர் பொதுவாகச் சொல்லாமல் என்ன என்ன கிராமங்கள், என்ன என்ன விவரங்கள் என்று சொன்னால் அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதாகச் சொன்னார்கள். ஆகவே உறுப்பினர் அவர்கள் அந்த விவரங்களை யெல்லாம் சொல்லாமல் பேசிக் கொண்டே போனால் சரியாக இருக்குமா?

**திரு. எஸ். வடிவேல்:** என்னுடைய தொகுதி சீர்காழி; எத் தனையோ ஊர்களைச் சொல்ல முடியும் . . .

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** அதுகூட அல்ல, இதுவரையிலும் நானும் அமைச்சராக ஏழாண்டுக் காலமாக இருக்கிறேன், ஒரு நாளாவது அவர்கள் என்னிடத்திலே வந்து ஒரு மனுவைக்கூடக் கொடுக்கவில்லை.

**திரு. எஸ். வடிவேல்:** [ * * * ]
50 மனுக்களாவது கொடுத்திருக்கிறேன், ஒன்றுகூட நடக்க வில்லை.

---

] மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அவர்கள் அமைச்சர் என்ற முறையிலே என்னிடம் ஏதாவது கொடுத்திருக்கிறார்களா? அவர்கள் [ * * * ] என்று சொல்வது சரியல்ல, எந்த எந்தக் கிராமங்களைப்பற்றி எத்தனை முறைகள் என்னிடத்திலே கொடுத்தார்கள் என்பதை அவர்கள் சொல்ல வேண்டும். என்னிடம் எத்தனையோ பேர்கள் கொடுக்கிறார்கள். அடுத்து அது என்ன ஆனது என்று கேட்கிறார்கள். ஆனால் அங்கத்தினர் அவர்கள் கொடுத்ததாகச் சொல்கிறார்களே, அவர்களே, அவர்கள் கொடுத்து இயக்குநரிடத்திலே கொடுத்தார்களா, மாவட்ட நல அதிகாரியிடம் கொடுத்தார்களா, செயலாளரிடம் கொடுத்தார்களா தெரியாது. என்னிடம் கொடுக்கவில்லை யென்பதைத்தான் நான் சொன்னேன். எங்கே என்னிடம் கொடுத்தீர்கள்? எந்தக் கிராமத்தைப் பற்றி, எப்பொழுது எந்த தேதியில் என்று சொல்லட்டும்.

**திரு. எஸ். வடிவேல் :** தேதியைப் பின்னால் சொல்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இந்த மன்றத்தில் சாதாரணமாக இந்த [ * * * ] என்ற வார்த்தையை உபயோகிப்பது அவ்வளவு பொருத்தமல்ல என்று நினைக்கிறேன். ஆதலால் அதை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்குவதுதான் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். உண்மைக்குப் புறம்பானது என்று வேண்டுமானால் சொல்லிக் கொண்டு போகட்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. பாலசுந்தரம்) :** (*) என்று திரு. வடிவேல் அவர்கள் சொன்னதை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன்.

**திரு. எஸ். வடிவேல் :** நான் உண்மையிலேயே சொல்கிறேன் தேதிவாரியாக வேண்டுமானால் தனியாகத் தங்களிடம் கொடுக்க தயாராக இருக்கிறேன். பனங்காட்டாங்குடி சம்பந்தமாக நான் மனுக் கொடுத்திருக்கிறேன். ஆலஞ்சேரி பற்றி மனுக் கொடுத்திருக்கிறேன், எசேறைகுடி சம்பந்தமாக மனுக் கொடுத்திருக்கிறேன். இப்படி கற்கோயில் சம்பந்தமாக மனு கொடுத்திருக்கிறேன். முறையில் எல்லாம் கொடுத்திருக்கிறேன். தனிப்பட்ட அதற்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.





தங்களைக் குற்றம் சாட்ட வேண்டுமென்பதற்காக, குற்றச்சாட்டுக் காகச் சொல்லவில்லை. ஆனால் ஒன்றுகூட நடக்கவில்லை என்பதற் காகத்தான் சொல்கிறேன். அந்த விஷயங்களைத் தேதிவாரியாகத் தங்களிடம் கொடுக்கிறேன்.

அடுத்தபடியாக, தீண்டாமைக்கும் ஜனநாயகத்திற்கும், நிலப் பிரபுத்துவத்தை ஒழிக்காமல் இன்றைக்கு ஒரு காரியம் நடைபெற முடியாது என்பதைப் பார்க்கிறோம். தீண்டாமை நோயை வேரோடு ஒழிக்க வேண்டும். இப்படி நுனிப்புல் மேய்ந்தால் மட்டும் போதாது. கடப்பாறையை விழுங்கிவிட்டு சுக்குத் தண்ணீர் குடித்த கதை மாதிரி ஆகிவிடக் கூடாது. தீண் டாமையை ஒழிப்பது என்றால் என்ன அர்த்தம்? இன்றைக்குக் காவல்துறையின் மூலம் பாதுகாப்புக் கொடுப்பது என்பது ஒன்றும் நடக்கவில்லை. அவர்கள் எந்தக் கேசும் போட முடிய வில்லை. ஏனென்றால் பலருடைய சிபார்சு. எனவே, எல்லா வகையிலும் கீழ்மட்டத்தில் இருப்பவர்களுக்கே நன்மை பயக்கும் முறையில் இல்லை, நடைமுறையில் இல்லை என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அரிசன தீண்டாமைக் கமிட்டி என்று போட்டிருக்கிறோம். அது பெயருக்கு இருக்கிறதே தவிர ஒன்றும் இயங்கவில்லை. என்னுடைய தொகுதியிலுள்ள ஆலஞ்சேரி, கரூர், வடாங்கம், தென்னம்பட்டணம் போன்ற ஊர்கள் சம்பந்தமாக மனுக்களைக் கொடுத்திருக்கிறேன். அவைகளைத் தேதிவாரியாகக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். அவர்கள் ஒருவேளை ஞாபக மறதியாகச் சொல்லுகிறார்களோ என்னவோ தெரியவில்லை.

மனைக்கட்டுகளைப் பொறுத்தவரையில் சரியான முறையில் அமையவில்லை. அதற்கு அலுவலர்கள் சரியாகத் துணை நிற்பது இல்லை. நந்தியநல்லூர் என்ற கிராமத்தைப்பற்றி மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரவர்களுக்கும் நன்கு தெரியும் என்று கருதுகிறேன். அங்கே மனைக்கட்டுகளுக்காக அரிசனங்களும் மனுப்போட்டார்கள். மனுப் போட்டார்கள், படையாச்சிகளும் மனுப்போட்டார்கள். அரிசனங்களுக்குக் கொடுக்கவில்லை. அதில் படையாச்சிகளுக்குக் கொடுத்தார்கள். என்னைப் பார்த்து, நீங்கள் ஆளுங் கட்சியில் இல்லாததால்தான் எங்களுக்குக் கிடைக்கவில்லை என்று அவர்கள் பேசித் தொல்லை கொடுக்கிறார்கள். கணக்குப் பிள்ளையைக் கேட்டால், அவர்கள் கோருகிற இடம் மேல்ஜாதிக்காரர்கள் வசிக்

இன்ற இடம், அவர்கள் கொடுக்க மாட்டார்கள் என்று சொல்லுகிறார். நீங்கள் சட்டம் இயற்றுகிறீர்கள், ஆனால் அது ஆமை வேகத்தில் போகிறது. அந்தக் குறையை நீக்க வேண்டும். இந்த நிலைமைகள் பல்லாண்டுக் காலமாக அவர்களுக்குக் குடியிருப்பு மனைகள் இல்லாமல் காலம் தள்ளக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. இந்த நிகழ்ச்சியை என்னுடைய தொகுதியில் கண்ணாரக் கண்டுக் கொண்டிருக்கிறேன்.

முதலமைச்சரவர்கள் கூடச் சொன்னார்கள், 18 சதவிகிதம் வேலை கொடுக்கிறோம், ஆனால் அரிசன சகோதரர்கள் அந்த வேலையை ஏற்றுக் கொள்ள முன்வரவில்லை என்ற கருத்தைக் கூறினார்கள். ஆளுங்கட்சியைச் சேர்ந்த, எஸ்டிமேட் கமிட்டியின் தலைவரான திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்கூடக் குறிப்பிட்டார்கள், பி.ஏ. படித்த ஒரு அரிசனப் பெண் புல் அறுத்து 1½ ரூபாய் கூலி பெற்றுக் காலம் தள்ளுகிறாள் என்று. அது கூடவா பொய்? நியாயமாக யோசனை செய்து பாருங்கள். வேலைக்கு வரவில்லை, வேலைக்கு வரவில்லை என்று ஏதோ சொல்லுகிறீர்கள். நாலடியும் இரண்டடியும் வாயடியும் கையடியும் செல்லாதப்பா என்பது மாதிரி ஏதாவது சொல்லிவிடுகிறீர்கள். தேதி கேட்கிறீர்கள்? இரண்டு நிமிஷங்களில் எப்படிக் கொண்டுவந்து கொடுக்க முடியும்? இன்றைக்குப் பல்லாயிரக்கணக்கான தாழ்த்தப்பட்டவர்கள் படித்துவிட்டு வேலையில்லாத் திண்டாட்டத்தில் இருக்கிறார்கள். அவர்கள் வேலை கிடைக்காததால் அரசைப்பற்றிப் பல்வேறு குறைகளைக் கூறித் திரிகிறார்கள்.

பழங்குடி மக்களுக்கான படிப்பு உதவித் தொகையை அதிகப்படுத்த வேண்டும். அரிசன மாணவர்களின் உணவுக்காகத் தற்பொழுது கொடுக்கப்படும் பணம் போதவில்லை. எதிர்கால இளைஞர்களாக வரக்கூடியவர்கள் நல்ல தெம்புடன் இருந்து படித்தால்தான் நல்லமுறையில் இருக்குமே தவிர இப்பொழுதே டி. பி அட்டாக் செய்யும் அளவில் இருந்தால் எப்படி? 20 காசுக்கும், 1 காசுக்கும் அவர்களுக்கு என்ன உணவைக் கொடுப்பது? யானை பசிக்குச் சோளப் பொறி போட்டதுபோல்தான் இருக்கும் (மணி யடிக்கப்பட்டது). நான் அதிக நேரத்தை எடுத்துக் கொள்ள மாட்டேன். சுருக்கமாகக் கூறிவிடுகிறேன். உணவுக்காகக் கொடுக்கப்படும் தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



இன்றைக்கு என்னுடைய தொகுதியில் மீனவர்கள், ஏழைகள் நிறைய இருக்கிறார்கள். அவர்கள் மீன் பிடித்துக் காலம் தள்ளக் கூடியவர்கள். அவர்களுக்கு மீன் பிடிப்பதற்கான உபகரணங்களை இலவசமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கிய கடன்களைப் பரிசீலனை செய்து ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்டவர்களின் தனிப் பெருந்தலைவரும், இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கித் தந்தவருமான டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய திருவுருவப்படத்தை இந்த அவையிலே வைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்.

ஜாதி ஒழிய வேண்டுமென்பதற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு தமிழ்ச் சமுதாயத்திற்காகப் பாடுபட்ட இந்த நாட்டின் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்தையும் இந்தச் சட்டமன்றத்தில் வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சுயமரியாதைக் கொள்கையைச் சிம்மக் குரலில் எடுத்துக் கூறிய சிங்காரவேலு மீனவ குடும்பத்தில் பிறந்தார் என்பதை அமைச்சரவர்களும் ஏற்றுக் கொள்வார்கள். அவருடைய திருவுருவப் படத்தையும் இந்த அவையிலே வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) என்னுடைய படத்தை எதற்காக வைக்க வேண்டும்?

கடைசியாகக் கூற விரும்புவதெல்லாம், என்னுடைய தொகுதி மீனவர்கள் நிறைந்த இடம். கோட்டபாளையம், கூழையார், பழவாறு பகுதிகளிலே கடல் திட்டிலே இருக்கிறார்கள். அதற்குப் பாலம் கட்ட வேண்டுமென்று மூன்றாண்டுக் காலமாக, ஒவ்வொரு பட்ஜெட் கூட்டத்திலும், ஒவ்வொரு இலாக்கா மானியம் வரும் சமயத்திலும் சொல்கிறேன். எனவே அங்கே ஒரு பாலம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அரிசனங்களுக்காக அரசாங்கம் போடும் திட்டங்களில் கிராம அதிகாரிகள் ஒத்துழைக்க மறுக்கிறார்கள் என்பதை மட்டும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஏனென்றால் அவர்களும் மேல்ஜாதிக்காரர்களாக இருப்பதால், இவர்களை நடுவில் உட்கார வைப்பதா என்று எண்ணுகிறார்கள். அதேபோல் ரோடு வசதிகளைச் செய்து தர வேண்டும்.

[திரு. எஸ். வடிவேல்] [1974 மார்ச் 21

மாதிரவேலனாரைப் பற்றி எடுத்துக் கொண்டால் சுடுகாட்டுப் பாதையிலே தகராறு வருகிறது. சுடுகாட்டிற்குப் போவதற்குக் கூட வழியில்லை. அந்தப் பிரச்னை இன்னும் தீர்க்கப்படவில்லை. அதை மேலோட்டமாகப் பார்க்காமல் நன்கு ஆழமாகப் பாருங்கள். எங்கள் வாயை அடைப்பதற்காக ஏதாவது சொல்லாதீர்கள், நன்றாக ஆழமாகப் பாருங்கள்.

ஆதித் திராவிட மக்கள் இன்றைக்கு நாதியற்றவர்களாக இருக்கிறார்கள். நாட்டிற்குச் சுதந்திரம் கிடைத்தும் அவர்களுக்குச் சுபிட்சம் கிடைக்கவில்லை. திட்டத்தை பத்து கோடி ரூபாய்க்குப் போட்டாலும் அதிலும் கல்வி இலாக்காவிற்கு எடுத்துக் கொள்ளுகிறீர்கள். பல இலாக்காக்களுக்கு எடுத்துக் கொள்ளுகிறீர்கள். மிச்சம் என்ன இருக்கிறது?

முதலமைச்சரவர்கள் நிதிநிலை அறிக்கையின் பொழுது சொன்னார்கள், ஆரம்பத்தில் 6 வயது முதல் 11 வயது வரையில் 90 சதவிகிதம் பேர் படிக்கிறார்கள், பிறகு 57 சதவிகிதம் படிக்கவில்லை என்று சொன்னால் யார் படிக்கவில்லை? அது தாழ்த்தப்பட்டவர்களாகவும், வறுமை எளிய குடியானவர்களுமாகத்தான் இருக்க முடியும். அவன் தன்னுடைய அப்பன் செய்த தொழிலையே செய்து வயிற்றைக் கழுவிக் கொள்ளும் நிலையில் இருக்கிறான். எனக்கு நேரம் இல்லாததால் என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

***டாக்டர் ச. அ. சின்னராசு:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, 1974-75-ஆம் ஆண்டுக்கான அரிசன நல மானியத்தை வரவேற்று இந்த மன்றத்திலே ஒருசில வார்த்தைகளை நான் கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்வியிலேயும், பொருளாதார மேம்பாட்டிலேயும், மற்ற துறைகளிலேயும் அரிசனங்களுக்கு ஆண்டுக்காண்டு மிக அதிகப்படியான தொகையை ஒதுக்கி வருவதற்காக இந்த அரசுக்கு இந்தச் சமுதாயத்தின் சார்பாக நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய குறிப்புகள் சிலவற்றை இங்கு தருவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.



1974 மார்ச் 21] [டாக்டர் ச. அ. சின்னராசு]

சட்டப் படிப்பு படித்தவர்களுக்கு இந்த ஆண்டிலேயிருந்து அவர்கள் தொழிலிலே மேம்பாடு அடையவும், தனியாகத் தொழில் நடத்தவும் அவர்களுக்கு அரசு உதவி அளிக்க முன் வந்துள்ளது. இது உண்மையிலேயே மிகவும் பாராட்டுதற்குரிய ஒன்றாகும்.

அதைப் போலவே மருத்துவம் பயின்று, இப்பொழுது மருத்துவத்திலே ஹவுஸ் சர்ஜன் முடித்தவுடனேயே உடனடியாக வேலை வாய்ப்புக் கிடைக்காமல் எத்தனையோ மருத்துவர்கள், குறிப்பாக அரிசன மருத்துவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தனியாகத் தொழில் தொடங்க—சட்டம் படித்தவர்களுக்குக் கொடுப்பதைப்போல்—உதவி அளிக்க வேண்டும். வேறு சில நிறுவனங்கள் கூட மருத்துவர்களுக்குத் தனியாகத் தொழில் நடத்த உதவுகிறார்கள். அந்த நிலையங்களிலே மருத்துவர்கள் தனக்கென்று ஒரு பகுதியைச் செலுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. அந்தத் தொகையைச் செலுத்த முடியாது திரம்ப கஷ்டப்படுகிறார்கள். தனியாக மருத்துவம் தொடங்கும் அரிசன மருத்துவர்களுக்குக் கடன் கொடுத்து உதவி செய்ய முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உழவு மாடுகள் வாங்க, தொழிற் கருவிகள் வாங்க மானியம் கொடுப்பது பற்றிப் பலரும் பேசினார்கள். இப்போது விலைவாசிகள் உயர்ந்திருக்கும் காரணத்தால் 500 ரூபாய்க்கு நல்ல உழவு மாடுகள் வாங்க முடியாது. மற்றக் கருவிகளையும் வாங்க முடியாது. ஆகவே, இதற்கான தொகையை அதிகமாக ஒதுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

கழக ஆட்சி வந்த பிறகு பரவலாகத் தொழில்களைத் தொடங்க கடன் கொடுத்து அதை 100 மாதங்களில் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்ற திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். சில தொழில்களுக்கு அரசு ஒதுக்கியிருக்கும் தொகை போதாததாக இருக்கிறது. குறிப்பாக ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால் ஃபயர்வுட் சார்கோல் டெப்போ ஒன்று தொடங்க வேண்டுமென்றால் அரசுத் துறையில் இருந்து 250 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். அதை வைத்து ஒரு லாரி விறகு கூட வாங்கி வைக்க முடியாது. அதைப் போன்ற தொழில்களுக்கு அதிகத் தொகை ஒதுக்க வேண்டும்.

[டாக்டர் ச. அ. சின்னராசு] 1974 மார்ச் 21]

அரிசனங்கள் பொருளாதார மேம்பாடு அடையவும் வேலை யில்லாத் திண்டாட்டம் போக்கப்படவும் அரிசன மக்கள் அதிகமாக உள்ள இடங்களில் தொழிற்சாலைகளை அரசு திறந்து அந்த அரிசனங்களுக்கு வேலை வாய்ப்பளித்தால் அவர்கள் பொருளாதார மேம்பாடு அடைய முடியும்.

குடி-தண்ணீர் வசதியைப் பொறுத்தவரை ஓவர் ஹெட் டாங்க் கட்டுவதற்கு அரிசன நல இலாக்காவில் இருந்து குறிப்பிட்ட சதவிகிதமே அரிசன நல இலாக்காவிலிருந்து அளிக்கப்படுகிறது. அளிக்கப்படுகிற தொகையைக் கொண்டு பெரும்பாலான ஊராட்சி ஒன்றியங்களால் ஓவர் ஹெட் டாங்க் கட்ட முடிவதில்லை. ஆகவே, அரிசன மக்கள் இருக்கும் பகுதிகளில் எல்லாம் அரசே தன்னுடைய நிதியிலிருந்து ஓவர்ஹெட் டாங்க் கட்டி பாதுகாக்கப் பட்ட குடி-தண்ணீர் வசதி செய்து கொடுக்க முன்வர வேண்டும்.

கழக அரசு வீட்டு மனைகளை அரிசன மக்களுக்கு நிறைய அளித்திருக்கிறது. ஆனால் அரிசனங்கள் அந்த மனையில் ஓலைக் குடிசை கூடப் போட்டுக் கொள்ளும் நிலையில் இல்லை. அவர் களுக்கு வீடு கட்டுவதற்காக அரசு மானியம் அளித்தும் வீ கட்ட முடியாமல் இருக்கிறது.

முதலமைச்சர் அவர்கள் அரிசன வீட்டு வசதிக் கழகத்தை இப்போது ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஏற்கனவே மனை வழங்க பட்ட அரிசன மக்களுக்கு இலவசமாகவே வீடு கட்டிக் கொடுக் வேண்டும்; அலுவலகங்களில் வேலை பார்க்கின்றவர்களுக்கு அர கடன் கொடுத்து வீடு கட்ட வசதி செய்து கொடுக்க வேண்டும் முதற்படியாக உள்ள பத்தாயிரம் வீடுகளை 1975-ம் ஆண்டு குள்ளாகக் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென் கேட்டுக் கொள்கிறேன்.

வேலை வாய்ப்புகளில் ஒதுக்கீடுகள் செய்துள்ளதைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். ஒரு திட்டத்தின் வெற்றி அ அமல்படுத்துபவர்கள் கையில் இருக்கிறது.

The successful implementation of a programme lies in t hands of the executives.

ஆகவே, அந்த இடங்களில் இருக்கும் அரசு அதிகாரிகள், அ வலர்கள் ஒதுக்கீடுகளை அரிசனங்களுக்குத் தர வேண்டுமென்



1974 மார்ச் 21] [டாக்டர் ச. அ. சின்னராசு]

நினைத்தால்தான் நிறைவேற முடியும் என்ற நிலை இருக்கிறது. என்னுடைய ஊருக்குப் பக்கத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியத்தில் சமீபத்தில் போடப்பட்ட ஆசிரியர் நியமனத்தில் ஒரு அரி சனுக்குக் கூட வாய்ப்புக் கொடுக்கவில்லை.

(திரு. துரைமுருகன் தலைமை)

நான் குடியிருக்கிற ஊத்தங்கரை ஒன்றியத்தில் 16 ஆசிரியர்கள் போட்டிருக்கிறார்கள். ஒரு அரிசனைக் கூடப் போடவில்லை என்று பார்க்கும்போது உள்ளபடியே வருத்தமாக இருக்கிறது. ஆகவே, இதிலே அரசு தனிக் கவனம் செலுத்தி ஒதுக்கீடுகள் படி முறை யாகப் போடப்படுகிறதா என்று கண்காணிக்க வேண்டும்.

மயானத்திற்குப் போக வழி இல்லை என்று பலர் சொன்னார்கள். உள்ளபடியே ஒருவன் இறந்துவிட்டால் குடும்பத்தில் உள்ளவர்கள் வேதனையோடு உள்ள நிலையில் அவனை அடக்கம் செய்ய எடுத்துச் செல்லும்போது அந்த வழியாகச் செல்லக் கூடாது என்று வழி மறித்தால் பரிதாபத்திற்குரிய அந்த நிலையை எண்ணிப் பார்க்கும் போது மிக மிக வருத்தமாக இருக்கிறது.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை நாலைந்து இடங் களில் அந்த நிலை இருந்தது. நான் உரிய அதிகாரிகளிடத்தில் எடுத்துச் சொல்லி அந்த நிலை இன்று மாற்றப்பட்டு விட்டது. வேறு சில மாவட்டங்களில் பரவலாக இந்த நிலை நீடித்து வருகிறது. இது பற்றி அரசு உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தீண்டாமை ஒழிப்பைப் பற்றி நிறையப் பேசினார்கள். டாக்டர் அம்பேத்கார் வாழ்க்கையைப் பற்றி எழுதிய ஒருவர் மிக அழ காகச் சொல்லியிருக்கிறார்—

Untouihability can be eradicated from the Society only with the kind co-operation of caste Hindus

தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்று அரிசனங்கள் பேசிக் கொண்டிருப்பதை விட சாதி இந்துக்கள் அதை ஒழிக்க முன்வர வேண்டும். கழக அரசு அதற்காக மிக அதிகமான காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறது என்றாலும் இன்னும் தீவிரமாக அந்தப் பணியைச் செய்து அந்தச் சமுதாயம் முன்னேற வழி வகுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமாதிகாரிகள் நியமனத்தைப் பற்றிச் சொன்னார்கள். (மணி அடிக்கப்பட்டது) இரண்டு நிமிஷத்தில் முடித்து விடுகிறேன். இந்த மன்றத்தில் அதுபற்றிக் கேள்வி கூட எழுப்பப் பட்டது. அரிசன மக்கள் கிராமாதிகாரிகளாக வரக் கூடிய அளவுக்குப் படிப்பின் தகுதியைப் பெற முடிகிறது. ஆனால் பொருளாதார வசதி இல்லாத காரணத்தால் அவர்கள் அந்த நியமனத்தைப் பெற முடிவதில்லை. அரிசனங்கள் கிராமாதி காரிகளாக வந்தால் தீண்டாமை ஒழிய பெரு வாய்ப்பாக இருக்கும்.

கேள்விக்குப் பதில் சொல்லும்போது ஓரளவு பொருளாதார வசதி இருக்க வேண்டுமென்ற நிலை இருப்பதால் சாத்தியமாக வில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதுபற்றி மேலும் பரிசீலித்து அரிசன மக்கள் கிராமாதிகாரி களாக நியமனம் செய்யப்படுவதற்கு ஆவன செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கோட்டப்பட்டியிலும் மற்ற இடங் களிலும் அரிசன நல விடுதிக்கு அரசே கட்டடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். அரூர் வட்டம் சக்கிலிப்பட்டு கிராமத்தில் சமுதாய நலக்கூடம் அமைக்க வேண்டு மென்று கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு. ந. தருமலிங்கம் :** அரிசன மானியம் முக்கியமானது. பேச வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) :** 15 நிமிடங்கள் கொடுத்திருக்கிறேன்.

***திரு. கு. அ. பொம்மன் :** தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து இரண்டொரு கருத்துக்களை அவை முன் வைக்க விரும்புகிறேன்.

அரிசன நலத் துறை மானியத்தைப் பொறுத்தவரை அறிக்கையில் சென்ற இரண்டு ஆண்டு மானியக் கோரிக்கையில் என்ன கூறியிருந்தார்களோ அதேதான் இந்த ஆண்டும் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று சொன்னால்





அது மிகையாகாது. புதுத் திட்டம் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்த புது திட்டங்களான வீட்டு வசதி வாரியம், வருமான வரம்பு 2,000-லிருந்து 2,500 ஆக உயர்த்தியதை தவிர வேறு எந்தப் புது திட்டங்களும் இல்லை என்பதை வருத்தத்தோடு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த ஆண்டு அரிசன, பழங்குடி மக்கள் நலன் என்ற தலைப்பில் கோரிக்கை 1,016.04 இலட்சம் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுதவிர கட்டடச் செலவினம், கடன்கள், முன்பணங்கள் எல்லாம் சேர்த்து மொத்தமாகப் பார்த்தால் அரிசன நலத் திட்டங்களுக்குச் செலவிடப்படும் தொகை 10,16.04 இலட்சங்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கல்விக்காக 625.52 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 12.30)

இந்த மாநிலத்தில் உள்ள ஹரிஜனங்களின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது 76,46,850 என்று இதில் குறிப்பிடப்பட்டிருக் கிறது. என்யூமரேஷன் எடுக்கும்போது அதற்காக நியமனம் செய்யப்பட்ட அதிகாரிகள் சேரிகளுக்குப் போய் சரியாகப் பதிவு செய்யவில்லை என்பதை அமைச்சர் அவர்களே மிக வருத்தத்துடன் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஆதி கர்நாடகாஸ் என்ற ஒரு பிரிவினர் நிறைய இருக்கின்றனர். என்யூமரேஷனுக்குச் செல்லும்போது நீங்கள் ஹரிஜனங்களா என்று கேட்கும்போது விவரம் தெரியாமல் நாங்கள் பேசுவது கன்னடம். நாங்கள் கன்னடியர்கள் என்று சொல்லிவிடுகிறார்கள். அப்போது அவர்களை உயர்ந்த ஜாதியினர் என்ற பட்டியில் சேர்த்து விடுகிறார்கள்.

ஆகவே ஹரிஜனங்கள் தொகை அப்படியே குறைந்து கொண்டே வருகிறது. இந்த எண்ணிக்கை சரியல்ல. எடுக்கப்பட்ட என்யூமரேஷனும் சரியல்ல. இதனால் அரிசனங்களுக்கு இருக்கக் கூடிய பல சலுகைகளை இழக்க நேரிடுகிறது. ஆகவே அடுத்த தடவை என்யூமரேஷன் செய்யும்போது இதை அமைச்சர் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று அதிகாரிகளுக்கு கடுமையான உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும் என்று மிக பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கு. அ. பொம்மன்] [1974 மார்ச் 21

அடுத்தபடியாக, இந்த மானியத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற இந்தத் தொகை போதாது. இந்த மாநிலத்திலுள்ள ஜனத் தொகையில் 14 பகுதி அரிஜனங்கள் உள்ளனர். ஆகவே இந்த மானியத்திற்காக அதிகப்படி தொகை ஒதுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசு ஹரிஜனங்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற கருத்தோடு இருக்கிறது. அதைச் செயலில் காட்ட வேண்டுமென்ருல் அதிகப்படியான தொகை இந்த மானியத்திற்கு அளிக்கப்பட வேண்டும். அதிகப்படி பணம் ஒதுக்கி அவர்கள் வாழ்க்கையை மலரச் செய்ய வேண்டும். அரசு செய்து கொண்டு வருவதைப் போற்றுகிருேம். செய் துள்ள, செய்து கொண்டு வருகின்ற நல்லவைகளை எடுத்து இந்த அவையில் சொல்ல வேண்டியதுதான்.

1960-ம் ஆண்டிக்கு முன்பே ஹரிஜனங்கள், மலைவாசிகள் ஆக்கிரமிப்புக் கையடக்கம் செய்த நிலங்களை உடனடியாக அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்று அரசு ஆணை இருந்தாலும் கூட, அதற்காக மனுக்கள் போட்டாலும் நிலங்களைப் பட்டா செய்து கொடுப்பதில்லை. நீலகிரி மாவட்டத்தில் அரிஜனங்கள் கையடக்கம் செய்த இடங்களுக்குப் பட்டா கொடுக்க வேண்டுமென்று மனுக்கள் போட்டாலும் அவை துரிதமாகப் பைசல் செய்யப் படாமல் இருக்கின்றன.

அடுத்தபடியாக, ஹரிஜன வீட்டு வசதிக் கழகம் என்று அமைக்கப்பட்டிருக்கிறது. இது வரவேற்கத்தக்க புதுத்திட்ட மாகும். இரண்டாண்டுகளுக்கு இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கி 10,000 வீடுகள் கட்டப் போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது, இந்த அறிக்கையில். கணக்குபடி வீடு ஒன்றுக்கு 2,000 ரூபாய் என்று வருகிறது. இரண்டாயிரம் ரூபாயில் மற்ற மாவட்டங்களில் வீடுகள் கட்ட முடியும். ஆனல் நீலகிரி மாவட்டத்தில் இரண் டாயிரம் ரூபாய்க்கு வீடு கட்ட முடியாது. இந்த வாரியத்தின் தலைவர் நீலகிரி ஜில்லாவின் கலெக்டராக இருந்திருக்கிருர்கள், அவர்களுக்கு அங்குள்ள நிலைமைகள், சீதோஷ்ண நிலை, மழை பெய்கிற தன்மை இவை எல்லாம் நன்கு தெரியும். ஆகவே மலைப் பிரதேசங்களில் இரண்டாயிரம் ரூபாயில் வீடு கட்டிக் கொடுக்க முடியாது. இந்தத் தொகை போதாது. ஆகவே மலைப் பிரதேசங்களில் வீடுகள் கட்ட அதிகப்படியான பணம் ஒதுக்கப் பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



974 மார்ச் 21] [திரு. கு. அ. பொம்மன்]

வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
தெளிவாகச்
தீண்டாமை பற்றி அநேகம் உறுப்பினர்கள் இல்லை என்று சொன்ஞர்கள். நகரங்களில் தீண்டாமை சொன்ஞலும் கிராமங்களில் இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. அதனல் மக்கள் படும் அல்லல் சொல்லி முடியாது.

மாவட்டங்களில்
வலம் வரும் காவல் படை என்று ஆறு வைத்திருக்கிருேம். அவர்கள் எவ்வளவு கேஸ்கள் கண்டு பிடித்தார்கள் என்று தெரியவில்லை. அதையும் இங்கு குறிப்பிட் டிருந்தால், உறுப்பினர்களுக்கு மிகவும் உதவிகரமாக இருந் திருக்கும்.

மொத்தம்
பின்னர் ஹரிஜன் ஹாஸ்டல், இந்த மாநிலத்தில் இருப்பது 544. அதில் 478 வாடகைக் கட்டடங்களில் இருக்கின்றன. புதிதாக எட்டு இந்த ஆண்டு கட்டப் போவதாக அறிக்கையில் குறிக்கப்பட்டுள்ளது. சர்க்கார் தரப்பில் 66 கட்டப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியான கடலூரில் உள்ள ஹாஸ்டலை அமைச்சர் அவர்கள் நேரில் பார்த்தால் அது ஹாஸ்டலா என்று தோன்றும். மழைக் காலத்தில் ஒழுகுகிறது, ஜன்னல்கள் கிடையாது, கதவுகள் கிடையாது. அதுபற்றி ஓனர்களைக் கேட்டால் நீங்கள் காலி செய்து விட்டுப், போனல் போதும், வேறு யாருக்காவது விட்டு அதிக வாடகை வாங்கலாம் என்று சொல்கிருர்கள்.

வீட்டின் சொந்த
இதைப் பற்றி அதிகாரிகள் பல முறை காரர்களிடம் எடுத்துச் சொல்லியும் ஒன்றும் செய்வதில்லை. எனவே ரொம்ப மோசமாக இருக்கும் ஹாஸ்டல்களுக்குச் சர்க்கார் துறையிலிருந்து கட்டடங்கள் கட்டி அந்த ஹரிஜன மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அமைச்சர்கள்
அடுத்தபடியாக, பட்டா வழங்கும் விஷயம். மாவட்டங்களுக்கு வரும்போது என்ன செய்கிருர்கள் என்ருல் பட்டா வழங்க விழா—பட்டா விழக்காள்—நடத்துகிருர்கள். இவ்வளவு பேர்களுக்குப் பட்டா கொடுத்திருக்கிருேம் என்று சொல்லி மலரில் வெளியிடுகிருர்கள். அப்படி வெளியிடப்பட்டு இருந்தும் இரண்டாண்டுகள் ஆகியும் கூடப் பட்டா வழங்கப் படாத நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. இவ்வளவு பேர்

[திரு. கு. அ. பொம்மன்] [1974 மார்ச் 21

களுக்குப் பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது என்றுதான் சொல்லப் படுகிறது. வெறும் பிரசாரத்திற்காக இல்லாமல் செயலில் நிரூபித்துக் காட்ட வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். என் தொகுதியில் அதாவது பந்தலூர், கூடலூர் இந்த இடங்களில் பட்டா விழா நடந்தது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு. ஆனால் குறிப்பிட்ட ஒரு சிலருக்குத் தான் பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது.

பின்னர் வட்டியில்லாக் கடன். இதற்காக இத்துறை மூலம் பத்து லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கடன்களைப் பெற நிறைய மனுக்கள் போடுகிறார்கள். அரிசன நலத்துறை மூலமாக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறதோ, அந்த அளவிற்கு இந்தத் துறை மூலம் கடன் கொடுத்துவிட்டு மீதி மனுக்களை தேசியமயமாக்கிய வங்கிகளுக்கு அனுப்புகிறார்கள். தேசிய மயமாக்கிய வங்கிகளுக்குச் சென்றால் அவர்கள் ஜாமீன் வேண்டும், நிலம் இருக்கிறதா என்றெல்லாம் கேட்டு, அப்படியிருந் தால்தான் கடன்கள் கொடுப்போம் என்று சொல்கிறார்கள். அத்துடன் கொடுக்கப்பட்டிருக்கும் கடன்களுக்கு 11 சதவிகிதம் வட்டியும் போடுவதாகச் சொல்கிறார்கள்.

நிலம் இல்லாது ஒட்டாண்டிகளாக இருக்கும் இந்த அரிஜன மக்களுக்கு யார் ஜாமீன் கொடுப்பார்கள்? ஆகவே, வங்கிகள் மூலம் கொடுப்பது என்பதை விட்டுவிட்டு இந்தத் துறையே வட்டியில்லாக் கடன் வழங்கினால்தான் அந்த மக்களுக்கு நன்மை செய்ய முடியும். சமுதாயக் கூடங்கள். 10,500 மக்கள் தொகைக்கு ஒரு சமுதாயக்கூடம் என்ற முறையில் 10 கூடங்கள் கட்டப் போகிறார்கள். எந்த மாவட்டத்தில் ஹரிஜனங்கள் ஜனத் தொகை அதிகமாக இருக்கிறார்களோ, அந்த மாவட்டங்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் இந்தச் சமுதாயக் கூடங்கள் கட்டு வதில்.

அடுத்தபடியாக, ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டுதல். இன்று மலைப் பிரதேசங்களில் ஆசிரியர்கள் ரொம்ப தூரம் உள்ள பள்ளி களுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. சரியானபடி வீடுகள் கிடைக்காததால் அவர்கள் சிலசமயங்களில் சரியாகப் பள்ளி களுக்குக் கூடச் செல்வதில்லை. அப்படி ஏற்படும் காலங்களில் பிள்ளைகளுக்குப் படிப்பு சொல்லிக் கொடுக்க முடியாத ஒரு நிலை



1974 மார்ச் 21] [திரு. கு. அ. பொம்மன்]

ஏற்படுகிறது. கடலூர் தொகுதியில் அப்படி நடந்திருக்கிறது
ஆகவே வீடுகள் கட்டிக் கொடுக்கும் இந்தத் திட்டத்தில் மலைப்
பிரதேசங்களுக்கு முதலிடம் கொடுக்கப்பட வேண்டும்.

கடைசியாக, பூமிதான நிலங்கள் பந்தலூர் பக்கமுள்ள உப்
பட்டியில் உள்ளன. அதை அப்படியே வைத்திருக்கிறார்கள்.
இந்த நிலங்களை ஹரிஜனங்களுக்குக் கூட்டாகவோ அல்லது தனிப்
பட்ட முறையிலோ கொடுத்தால் அவர்களின் பொருளாதாரத்
துறையை உயர்த்த பிரயோஜனமாக இருக்கும். அதை ஹரி
ஜனங்களுக்கு வழங்கலாம். கையடக்கம் செய்த நிலங்களைக்
கொடுப்பதில் ஒரு ஏக்கர்தான் கொடுக்க முடியும் என்றும் அதற்கு
மேல் உள்ளவற்றிற்குக் கிரயம் கொடுக்க வேண்டும் என்றும் சொல்
கிறார்கள். கிரயம் கொடுத்து வாங்கக்கூடிய நிலையில் அந்த ஏழை
அரிசன மக்கள் இல்லை. ஆகவே ஒரு ஏக்கர் என்பதை மூன்று
ஏக்கர் என்று வைத்து அதற்கு மேல் உள்ளவற்றிற்குக் கிரயம்
போட்டுக் கொடுக்கக் கூடிய சக்தி உள்ளவர்களுக்குக் கொடுக்
கலாம் என்று கூறிக் கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்
கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. அ. சின்னசாமி**: தலைவர் அவர்களே, 1974-75-ம் ஆண்டுக்
கான ஹரிஜன நல மானியக் கோரிக்கையை வரவேற்று இதில்
பங்கு பெற வாய்ப்புப் பெற்றமைக்கு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

காலையில் இருந்து இதுவரையில் பேசிய உறுப்பினர்கள், எதிர்க்
கட்சிகளைச் சார்ந்த நண்பர்களும், ஆளும் கட்சியைச் சார்ந்த
தோழர்களும் இந்த நாட்டில் உள்ள ஏழை ஹரிஜன மக்கள் படும்
துன்பங்கள்பற்றி யெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஆளும்கட்சி
நண்பர்கள் இன்னின்ன தேவை என்று சொன்னார்கள். எதிர்க்
கட்சித் தோழர்கள் இவை இவை செய்யப்படவில்லை என்று
சொன்னார்கள். மொத்தமாக நான் கூறிக்கொள்ள விரும்பு
கிறேன், இந்த நாட்டில் இருக்கிற ஹரிஜன மக்கள் 75 லட்சம்
பேர்கள். அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் பணம்
பத்து கோடி. அதில் கல்விக்காக ஆறு கோடி செலவு
செய்கிறோம். அதிகாரிகளின் சம்பளம் ஏறத்தாழ 58
லட்சம் ரூபாய். இந்தச் சூழ்நிலையில் அவர்களின் எந்தத்
தேவையை நாம் நிறைவேற்ற முடியும்? இன்று நம்
மாநிலத்தில் இருக்கிற 75 லட்சம் ஹரிஜன மக்களின் ஐந்து லட்சம்

[திரு. அ. சின்னசாமி] [1974 மார்ச் 21

பேர்கள் போக 70 லட்சம் பேர்கள் இந்த நாட்டுக்காக உழைக்கிறார்கள். இந்த நாட்டிலே ஏதாவது ஒரு வகையிலே அவர்கள் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மக்களுக்குத் தேவையான, போதுமான அளவுக்கு வசதி இல்லை என்று சொல்லிக் கொள்கிறேன். நான் எதிர்பார்த்தேன். அண்ணாயிசம் என்று சொல்கிறார்களே, ஏதோ ஒரு மறுமலர்ச்சி கொண்டு வருவார்கள் என்று எதிர்பார்த்தேன். பாண்டிச்சேரியில் ஒரு அரிசன அமைச்சர் இருப்பார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் ஏமாற்றம் அடைந்தேன். என்னைப்போல் பல தாழ்த்தப்பட்ட மக்கள் ஏமாற்றம் அடைந்து இருக்கிறார்கள். எல்லாப் பெண்களுக்கும் வேலை என்றார்கள். ஆனால் எல்லா அரிசனங்களுக்கும் வேலை என்று சொல்லவில்லை. இந்த நாட்டிலே உள்ள மக்கள் வேஷதாரிகளை நம்ப மாட்டார்கள். வேலைக்காரனைத்தான் நம்புவார்கள் என்று கூறிக் கொள்கிறேன்.

இப்போது 10 கோடி ரூபாயை நாம் செலவு செய்கிறோம். என்னதான் சிக்கனமாகச் செலவு செய்தாலும், 6 கோடி ரூபாய் கல்விக்குச் செல்கிறது, மீது 4 கோடி ரூபாய்தான் அந்தச் சமுதாயத்திற்காகச் செலவு செய்கிறோம். அதுவும் அந்த மக்களுக்குச் சரிவரப் போய்ச் சேரவில்லை. இப்போது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கிறோம். ஜூன், ஜூலை மாதங்களில் நாம் அதைச் சாங்ஷன் செய்து விட்டாலும், அந்த மாணவர்களுக்கு அடுத்த வருஷம் ஏப்ரல் மாதத்தில் தான் போய் சேருகிறது.

சில பகுதிகளில் அந்த ஸ்காலர்ஷிப் தொகையை வாங்கி வட்டிக்கு விடுகிறார்கள். என் தொகுதியைச் சேர்ந்த பகுதியில் இப்படி நடந்து இருக்கிறது. நான் இதைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் தெரிவித்து இருக்கிறேன். கமிட்டியில் சொன்னேன். இது வரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. நானே போய்ப் பார்த்தேன். அலுவலகத்தில் சென்று பார்த்தேன். அந்த அதிகாரிகள் ஸ்காலர்ஷிப் செக் அனுப்பாமல் வைத்து இருக்கிறார்கள். இது குறித்து அமைச்சர் அவர்களிடத்திலும் சொல்லியிருக்கிறேன். மாவட்ட அதிகாரிகளிடத்திலும் சொல்லியிருக்கிறேன்.



1974 மார்ச் 21] [திரு. அ. சின்னசாமி]

மாவட்ட அதிகாரிகள் போதுமான நேரத்தை இதில் செலுத்த முடியவில்லை. காரணம், அமைச்சர் வந்தால் அவர்களோடு போய் விடுகிறார்கள் அல்லது இன்ஸ்பெக்ஷன் என்ற முறையில் போய் விடுகிறார்கள். அவர்கள் ஆபீஸ் வேலை பார்க்க முடியவில்லை, ஆகவே, நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வேன், அவர்களுக்கு ஆபீஸ் வேலை பார்ப்பதற்காக ஒரு பி. ஏ. போட்டு, அல்லது அதற்கென தனி அதிகாரி போட்டு, அவர் ஸ்காலர்ஷிப் சர்டிபிகேட் ஒழுங்கான முறையில் அனுப்புவது, மற்ற மற்ற வேலைகளைச் செய்வது என்று முறையில் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாகவும், சிறப்பாகவும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய தோழர் சோமசுந்தரம் அவர்கள் சொன்னது போல் இந்த நாட்டிலே படித்தவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருந்தாலும் சரி, அல்லது வேறு பதவிகளில் இருந்தாலும் சரி, அவர் தாழ்த்தப்பட்டவர் என்று தெரிந்து விட்டாலே பார்வை வேறு மாதிரியாக இருக்கிறது. இதில் மாற்றம் ஏற்பட வேண்டுமானால் அரசியல் கட்சிகள் ஒத்துழைத்தால் தான் தீண்டாமை போக்கப்படும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

நாம் கூட கமிட்டி போட்டோம். எந்தக் கமிட்டி வேலை செய்து இருக்கிறது? எந்தெந்த கமிட்டிகள் வேலை செய்தன என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியாது என்று கருதுகிறேன். அந்தக் கமிட்டியில் ஒருவருக்கும் அக்கறை இல்லை. அதை யார் கூட்டுவது? மாவட்ட ஆட்சித் தலைவர் கூட்டுவதா, மாவட்ட எஸ். பி. கூட்டுவதா, யார் கூட்டுவது என்று தெரியவில்லை. இதை நல்ல முறையில் கவனித்துச் செய்ய வேண்டுமென்று கேட்டு இந்த மக்கள் நல்ல முறையில் வாழ வகை செய்து தரவேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, புல்லாய், பூச்சியாய், புன்மைத் தேரைகளாய் அல்லலுறும் மக்களுக்கு இன்று ஒரு மானியம் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். அரிசன் என்று அதற்குப் பெயரிட்டு அந்த மானியத்தின் அடிப்படையில் ரூ. 10 கோடியை தமிழக அரசு செலவ... ...ப்பயும் நோக்கிலே, ஆகித்

திராவிட மக்கள், நாதியற்று இருக்கிறார்கள் என்று நண்பர் ஆறுமுகம் சொன்னதை நாம் மனதார வரவேற்கும் நிலையில் இல்லை. நீங்கள் நாதியற்று இருக்க வில்லை, இந்த நாட்டில் இருக்கிற 4½ கோடி மக்களின் அன்பைப் பெற்று இருக்கிறீர்கள். அதுவும் இந்த ஆட்சியை நடத்தி வருகிற மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் உறவைப் பெற்று இருக்கிறீர்கள் என்று இந்த நேரத்தில் நான் பெருமையோடு எடுத்துச் சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

இந்த அரிசன நலத்துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற பணம் போதாது என்று உணருகிற நேரத்தில் பொருளாதாரக் காரணங்களை அரசு சொன்னாலும், சமுதாயத்தில் தீண்டாமையை ஒழிக்க, எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல், நாம் என்ன நடவடிக்கைகளை எடுத்து இருக் கிறோம். தீண்டாமை ஒழிப்புக்கென்று சட்டம் கொண்டு வந்து விட்டால் போதுமா? சமுதாயத்தில் இருக்கிற மனிதனின் மனதில் அந்தத் தன்மை மாற வேண்டும்.

இன்றைக்கு இந்தச் சமுதாயத்தில் இந்த மாற்றத்தைக் கொண்டுவருவதற்கு என்ன செய்திருக்கிறோம் என்று பார்க்கிற நேரத்தில், இஸ்லாமிய சமுதாயத்தினர் பந்தி போஜனம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் அதை வைத்து அவர்களுக்கு சமுதாயத்தில் சமத்துவம் அளித்து இருக்கிறார்கள். அப்படிப் பட்ட தத்துவம், சமதர்ம சமுதாயத் தத்துவம் இஸ்லாமிய மதத்தில் இருக்கிறது. இன்றைக்கு அல்ல, பல்லாண்டுக் காலத் திற்கு முன்பிலிருந்தே இருக்கிறது.

டாக்டர் அம்பேத்கார் அவர்கள் கூட ஒரு முறை சொல்லி யிருக்கிறார்கள். அந்தச் சமதர்ம சமுதாயத் தத்துவம் இஸ்லாமி யத்தில் இருப்பதால் இந்த மக்கள் இஸ்லாமியத்தில் சேரும் அபாயம் ஏற்படும், அதற்கு நானே முனைப்பாக இருப்பேன் என்று சொன்னார். அவர்கள் பொருளாதாரத்தில் தாழ்த்தப்பட்ட நிலையில் இருந்தாலும், சமுதாய அடிப்படையில் அவர்கள் மிக மிக பிற்போக்கான நிலையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அது போக்கப்பட வேண்டும்.

சில ஆதித் திராவிட மக்கள் இஸ்லாமிய சமுதாயத்தில் கிருஸ்துவ சமுதாயத்தில் சேர்ந்து தங்களுடைய நிலையை மாற்றி சமுதாயத்தில் சமத்துவம் அடைந்து இருக்கிறார்கள் தெனுல்





அவர்களுக்கு அளிக்கப்படும் சலுகை, ரத்து செய்யப்பட்டிருக் கிறது. அவர்கள் சமுதாயச் சமத்துவம் அடைந்து இருக்கிறார் களே தவிர, பொருளாதாரச் சமத்துவம் அடையவில்லை. ஆகவே, அவர்களுக்கு எந்த விதத்திலும் அந்தச் சலுகைகளை நிறுத்தக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரிசன நலத்துறையின் பணி இந்திய துணைக் கண்டத்திலேயே பாராட்டுப் பெற்று இருக்கிறது என்று சொன்னார்கள். பின் தங்கியோருக்கு என்று ஒரு துறை இருக்கிறது. அதன் அடிப் படையில் சில சலுகைகளை அரசு வழங்கி இருக்கிறது. பின்தங்கி யோர் என்ற முறையில் முஸ்லீம்களுக்கும் அளிக்கப்பட்டிருக் கிறது. அரிசன் என்று சொன்னால் என்ன சலுகை தரப்படு கிறதோ, அதே போன்ற சலுகையை பின்தங்கியோர் என்ற முறையிலும் தரப்படுகிறது.

ஆனால் இஸ்லாமியர்கள் பின்தங்கியோர் என்ற முறையில் சலுகைகளைக் கேட்டால் அதற்கு ஒரு வர்ணம் பூசப்படுகிறது, அதற்கு ஒரு காரணம் பொருள் கற்பிக்கப்படுகிறது. இந்த மாதிரி சூழ்நிலைகளை வளர விடக் கூடாது. எல்லாச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும், பின்தங்கியோர், தாழ்த்தப்பட்டோர் உயர்ந்த குடிமகனாக ஆவதற்கு சமுதாய சமத்துவம் அடைவதற்குப் போதிய வசதிகள், சலுகைகள் அளிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பேசிய நண்பர்கள் குறிப்பாக வீடு கட்டித் தருவது பற்றிச் சொன்னார்கள். அதற்காக தனி வாரியம்கூட அமைத்து இருக்கிறார்கள். அதைப் பாராட்டுகிறேன். ஆனால் சென்ற ஆண்டு கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் எல்லாம்—அரிசனங்களுக் காகக் கட்டிக் கொடுக்கப்பட்டவை—இன்று குட்டிச் சுவராக இருக்கும் நிலை இருக்கிறது. அதற்கு ஒதுக்கப்பட்ட பணம் குறைவாக இருக்கலாம், அல்லது காண்டிராக்ட் எடுத்தவர்கள் நல்ல முறையில் கட்டாமல் இருந்து இருக்கலாம். ஆனால் இந்த வாரியமாவது அந்த அரிசனங்களுக்கு உண்மையான முறையில் வீடுகளைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த வீடுகள் ஒரு 10-15 ஆண்டுகள் இருக்க வேண்டும், அந்த அடிப்படையில் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே. எ. வகாப்] [1974 மார்ச் 2

மனைப் பட்டா வழங்குவதைப் பற்றியும் குறிப்பிட்டார்கள்
இன்றைக்குப் பல ஊர்களில் நில ஆர்ஜிதம் செய்து இருக்கிறார்கள்
ஆனால் பட்டா இன்னும் வழங்கப்பட வில்லை. இதை யெல்லாட
கணக்கில் எடுத்துக் கொண்டு பார்த்தால், சில இடங்களில் நி
ஆர்ஜிதம் செய்து 5 ஆண்டுகள், 3 ஆண்டுகள் ஆகியும் மனை
பட்டாக்கள் வழங்கப்படவில்லை. இதற்கு ஒரு தீவிரத் திட்ட
தீட்டி ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கும் நிலங்களை முதலி
மனைப் பட்டா செய்து கொடுக்கச் செய்ய வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

இப்படி மனைப்பட்டா ஆர்ஜிதம் செய்வதில் தவறு ஏற்பட்
விடுகிறது. குறிப்பாகச் சிலவற்றைச் சொல்ல முடியும், சிலயிட
களில் முஸ்லீம்களுக்குச் சொந்தமான 'வக்ப்' இடங்களை அதிகா
கள் ரெகமெண்டு செய்து விடுகிறார்கள். எந்த அரிசன மக்களு
அந்த இடங்களை வேண்டுமென்று கேட்டதில்லை. சிலயிடங்களில்
முஸ்லீம்களுக்குண்டான சுடுகாட்டை ரெகமெண்ட் செய்து விடுகி
றார்கள். அவர்களுக்கு நல்ல இடங்களை, பொதுவான இடங்களை
ஊரின் மத்தியில் இருந்தாலும்கூட, அப்படிப்பட்ட இடங்களை
அவர்களுக்கு ஒதுக்கித் தாருங்கள். ஆனால் முஸ்லீம்
இடுகாட்டை எடுத்துக் கொள்வது என்றால் தயவு செய்து அந்தத்
துறை சிந்திக்க வேண்டும். அது நல்லதல்ல. எதிர்காலத்தில்
இந்த மாதிரி தவறு நடக்காதவிதத்தில் அந்தத் துறை பார்த்துக்
கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆண்டிப்பட்டி
பகுதியில் ஜெயமங்கலம் என்ற இடத்தில் இப்படி நடந்து இருக்
கிறது. அரிசன மக்கள் கூட அந்த இடத்திற்குச் சென்று வாழ
விரும்பவில்லை. அதைத்தான் அந்த அதிகாரிகள் ரெகமெண்டு
செய்து இருக்கிறார்கள். இதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் தீவிரமாகச் சிந்தித்து ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக மீனளத்தைப் பற்றி எல்லோரும் சொன்
னார்கள். உணவுப் பிரச்னையை நிர்வகிக்க முடியாத நிலையில்
மீன்வளத்தைக் கொண்டு இந்த நாட்டின் உணவுப் பிரச்னையைத்
தீர்க்கின்ற நல்ல சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. குறிப்பாகச்
சொல்ல வேண்டுமென்றால் வெளி நாட்டிலிருந்து அன்னியச் செலா
வணியை நாம் அதிகமாகச் சம்பாதிக்கக்கூடிய சூழ்நிலை இருக்
கிறது. எனக்கு நினைவு இருக்கிறது. ஐந்து, ஆறு ஆண்டுகளுக்கு



1974 மார்ச் 21] [திரு. கே. எ. வகாப்]

முன்பு பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த ஆட்சியை நடத்திக்
கொண்டிருந்த நேரத்தில் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு.
ஜகஜீவன்ராம் அவர்களைக் கொண்டு வட சென்னையிலே ஒரு
மீன்பிடித்துறைக்கு அடிக்கல் நாட்டினார்கள். 6, 7 ஆண்டுகளாக
முயற்சி செய்து அந்த மீன்பிடித் துறை கட்டப்பட்டிருக்கிறதா,
இல்லையா, அல்லது கட்டுகின்ற சூழ்நிலையாவது இருக்கிறதா
என்பதை அறிவதற்கு ஆவலாக இருக்கிறோம்.

மீன்பிடித் துறையை அங்கே கட்டினால் அதனுடைய வளர்ச்சி
இந்த நாட்டினுடைய வளர்ச்சியாக இருக்கும். இந்த நாட்டுக்கு
வெளி நாட்டிலிருந்து அன்னியச் செலாவணியைச் சம்பாதிக்கக்
கூடிய வாய்ப்பு அங்கே இருக்கிறது. மேலும், மீனவ மக்கள் நல்
வாழ்க்கை நடத்துவதற்கு சாத்தியக் கூறுகள் இருக்கும் என்பதை
யும் கனம் அமைச்சர் அவர்கள் கனிவோடு கவனித்து உடனடியாக
நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி இராமநாதபுரம் மாவட்டத்தில் வாலிமங்கலம்
என்ற இடத்தில் மீன்பிடித் துறை அமைப்பதற்குச் சாத்தியக்
கூறுகள் இருக்கின்றன. அதுவும் இப்படிக் கவனிக்கப்படாமல்
இருக்கிறது. அங்கே எல்லா சமுதாயத்தினரும், குறிப்பாக
முஸ்லீம் மக்களும் மீன்பிடிக்கின்ற தொழிலில் அக்கறையோடு
ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் இதைக் கவனத்தில் கொண்டு இந்த இரண்டு இடங்
களிலும் உடனடியாக நடவடிக்கை எடுத்து, அதைச் செயல்
படுத்துவதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.

இரால் மீன்களுக்கு வெளிநாடுகளில் நல்ல கிராக்கி இருக்கிறது.
அது அன்னியச் செலாவணியை அள்ளிக் கொடுக்கின்ற ஒரு ரக
மீனாக இருக்கிறது. இரால் மீன்கள் மீனவர்களிடமிருந்து
வாங்கப்படுகின்ற நிலையைப்பற்றி பல நண்பர்கள் எடுத்துச்
சொன்னார்கள். மீனவர்களுக்கு உரிய தொகை கிடைக்கக்கூடிய
அளவில் விலையைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்து அவர்
களுக்கு நல்ல தொகை கிடைக்கச் செய்ய வேண்டும். வெளி
நாட்டிற்கு ஏற்றுமதி செய்யக்கூடியவர்கள் கொள்ளை லாபம்
அடித்துக்கொண்டு போகக்கூடிய நிலையைத் தவிர்க்க வேண்டும்.

[திரு. கே. எ. வகாப்] [1974 மார்ச் 21

மீன்வளத்தைப் பெருக்க வேண்டுமென்றால் குளம் குட்டை ஏரிகளில் நல்ல ரக மீன்களை வளர்க்க வேண்டும். ஜிலோபி கண்டை பெரிய மீனாக சீக்கிரம் வளர்ந்துவிடுகிறது. ஆனால் அது சாப்பிடுவதற்கு லாயக்கு இல்லை. விலாங்கு மீன் உடலுக்கு நல்லது என்று சொல்கிறார்கள். மூல வியாதி பிடித்தவர்கள் அதைச் சாப்பிட்டால் குணம் அடைகிறார்கள் என்று சொல்லப் படுகிறது. ஏராளமான விலாங்கு மீன்களை நல்ல முறையில் வளர்ப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. விரால், விலாங்கு போன்ற மீன்களை அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும். இம்மாதிரி திட்டங்களை நல்ல முறையில் தீட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அம்மையார் அவர்கள் முன்னுரையில் பேசுகிறபொழுது செயற்கை முத்துக்களைப்பற்றிப் பெருமையோடு சொன்னார்கள். அது வரவேற்க வேண்டிய அம்சம். நாங்களெல்லாம் ஜப்பான் நாட்டிற்குச் சென்றிருந்தபொழுது அதனுடைய சிறப்பையும், மதிப்பையும் கண்டோம். அங்கே நல்ல முறையில் அதை வளர்த்து வெற்றி பெற்று அதிகமாகச் செயற்கை முத்துக்களை வெளிநாட்டிற்கு அனுப்புகின்ற நாடு ஜப்பான் நாடாக இருக் கிறது. அங்கே அதிகமாகப் பெண்கள் அதில் ஈடுபட்டு முத்துக் குளித்தல் போன்ற வேலைகளைச் செய்கிறார்கள்.

முத்தைக் கையில் கொண்டு வந்து காண்பித்தார்கள், அமைச்சர் அவர்கள். அது ஒரு நல்ல முத்தாகத்தான் இருக்கும். நம்முடைய நாட்டு பெண்களுக்குத் தங்கத்தில் அதிகமாக மோகம் இருக்கிறது. ஆனால் பணம் இல்லை. இப்பொழுது சவரன் 350, 400 ரூபாய் விற்கிற நிலையில் அதை வாங்குவதற்கு வழி வாய்ப்பு இல்லை. ஆகவே, முத்துக்களை அதிகப்படியாக உற்பத்தி செய்து நம் நாட்டிலுள்ள பெண்கள் அணிகின்ற வகையில் பிரசாரம் செய்ய வேண்டும்.

மீனளத் துறையில் நிர்வாகம் நல்ல முறையில் நடந்து வரு கிறது. இதில் விரிவான திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன என்பதை உணர்ந்து, இதை நல்ல முறையில் விருத்தி செய்து நல்ல திட்டங்களைத் தீட்ட வேண்டும் என்று சொல்லி என்னுடைய உரையை நிறைவு செய்துகொள்கிறேன்.



1974 மார்ச் 21]

*திரு. எம். எஸ். கே. சத்தியேந்திரன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கோரப்பட்டுள்ள மானியக் கோரிக் கையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழை கின்றேன்.

எனக்கு முன்பு பேசிய நண்பர்களெல்லாம் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்காக இந்த அரசு எந்த அளவுக்கு நல்ல திட்டங்களை யெல்லாம் தீட்டியிருக்கிறது என்பதில் எந்தவிதமான மாறுபட்ட கருத்துக்களைச் சொல்ல முடியாத நிலைமையை நான் நன்றாகப் பார்த்தேன். எதிர்க் கட்சி வரிசையில் இருந்தாலும் சரி, எந்த வரிசையில் இருந்தாலும் சரி, திட்டங்களில் எந்தவிதமான குறை யையும் சொல்ல முடியாத ஒரு சூழ்நிலையை நாம் தெளிவாகப் பார்க்க முடிகிறது.

ஆனால் செயல்படுத்தும்பொழுது நடைமுறையில் ஏற்பட் டிருக்கிற சிக்கல்கள் பற்றி நண்பர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை முழுவதுமாக மறுப்பதற்கு இல்லை. ஏன் என்றால் நல்ல திட்டங்களை நிறைவேற்றுகிறபொழுது கீழ் மட்டத்திலுள்ள அதி காரிகளின் ஒத்துழைப்பும், பொது மக்களுடைய நல்ல ஆதரவும் இருந்தால்தான் தாழ்த்தப்பட்ட மக்கள் மற்ற மேட்டுக்குடி மக்களோடு ஒன்றாக வாழ்வதற்கு சூழ்நிலை உருவாகும்.

சமுதாயப் புரட்சியை ஏற்படுத்திய தந்தை பெரியார் போன்ற நல்ல பெரிய மனிதர்கள் இப்பொழுது நாட்டில் இல்லை என்ற நிலைமையை எண்ணிப்பார்க்க வேண்டும். சமுதாயப் புரட்சிக்கு நம்மை நாமே அர்ப்பணித்துக்கொள்ள ஒரு உறுதியை எடுத்துக் கொண்டால்தான், இந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியும் என்ற கருத்தைச் சொல்லிக் கொள்கிறேன்.

நடைமுறையில் உள்ள சில சிக்கல்களை எடுத்துச் சொல்ல விழைகின்றேன். என்னுடைய தொகுதியிலே தாமரைக்குளம் என்ற ஒரு ஊர் இருக்கிறது. காங்கிரஸ் கட்சி ஆண்ட காலத்தில் அங்கே வாழ்கின்ற ஏழை எளிய அரிசன மக்களுக்கு வீடுகளைக் கட்டித்தர வேண்டும் என்ற திட்டம் தீட்டி வீடுகளைக் கட்டிக் கொடுத்தார்கள். ஆனால் அந்த வீடுகள் ஓராண்டுக்குள்ளாகவே தரை மட்டமாகிவிட்டன. அதை எப்படியாவது சீர்திருத்தம் செய்தாக வேண்டும் என்ற எண்ணத்தில் நம்முடைய அரசு ஏற்பட்டதற்குப் பிறகு பல முறை கோரிக்கைகள் கொடுத்திருக் கிறோம். அவர்களுக்கு மாற்று வீடுகள் கட்டித்தர வேண்டும்

[திரு. எம். எஸ். கே. சத்தியேந்திரன்] [1974 மார்ச் 21

என்று கேட்டிருக்கிறோம். அந்த இலாக்காவிலே பரிந்துரை
செய்தார்கள். அதே நேரத்தில் அரசுத் துறையில் அந்தக்
காரியங்களைச் செய்ய முடியாது என்று சொல்லி விட்டார்கள்.
அதிலே சட்டச் சிக்கல்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். மாண்பு
மிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன், சட்டச்
சிக்கல் எதுவாக இருந்தாலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவி
செய்ய வேண்டும், வீடு இல்லாதவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க
வேண்டும் என்பதை உறுதியாக எடுத்துக் கொண்டு சட்டச்
சிக்கலை நீக்க வேண்டும் என்று அம்மையார் அவர்களை நான் இந்த
நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய நகர மன்றத்திலேகூட இதுபோன்ற ஒரு
பிரச்னை இருக்கிறது. நகர மன்றத்தில் தோட்டிகளாகப் பணி
யாற்றுபவர்களுக்கு வீடுகள் கொடுப்பதற்கு ஒரு இடத்தை நகர
மன்றம் மூலம் ஒதுக்கியிருந்தோம். அதற்குரிய இடத்தை இது
வரையில், நகர மன்றம் தீர்மானம் போட்டு இரண்டு ஆண்டுகள்
ஆகியும்கூட, நகரமன்றம் தொடர்புடைய இடத்தைக் கொடுக்க
முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. காரணம் சாலை புறம்போக்கு
என்று இருக்கிறது.

மாவட்ட கலெக்டர் எலியனேஷனை மாற்றிக் கொடுத்தால்தான்
அந்த இடத்தைக் குடியிருப்பு இடமாக மாற்றி அமைக்க முடியும்
என்று சொல்கிறார்கள். வெள்ளம் ஏற்பட்ட காலத்தில் அந்தச் 1
சாலையில் அவர்கள் குடியமர்த்தப்பட்டார்கள். கிட்டத்தட்ட
ஆண்டுக் காலமாக அந்தச் சாலையில்தான் அவர்கள் குடியிருந்து
கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே போக்குவரத்து
இல்லாத காரணத்தினால் அதற்கு யாரும் மறுப்புச் சொல்
வில்லை. அதன் அருகில் உள்ள ஒரு பெரியதனக்காரர் அந்
இடத்தில் ஏழை எளிய மக்கள் நிரந்தரமாகக் குடியேற்ற
பட்டால் அவர் கவுரவத்தைப் பாதிக்கும் என்று கருதி, அதிகாரி
களைச் சந்தித்து அந்தக் காரியங்களைச் செய்து கொண்டிருக்
கிறார். இதையெல்லாம் கவனமாக நிச்சயம் அதிகாரிகள்
ஆராய்ச்சி செய்து நல்ல காரியங்களைச் செய்வதற்கு அரசாங்க
துடன் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் நகரத்தில் இன்னொரு குறை இருக்கிறது
அரிசன மாணவர்களுக்கு விடுதி கொடுத்திருக்கிறார்கள். அந்
விடுதி நகரத்தில் இருக்கிற குடிதண்ணீர் ஊருணிக்கு அருகா



[திரு. எம். எஸ். கே. சத்தியேந்திரன்]

974 மார்ச் 21] [திரு. எம். எஸ். கே. சத்தியேந்திரன்] சாப்பாட்டுத்

மையில் இருக்கிறது. மாணவர்கள் தங்களுடைய சாப்பாட்டுத்
ட்டுக்களை அந்த ஊருணியில் கழுவுகின்ற சூழ்நிலை இருப்பதினால்
அந்தப் பகுதியில் வாழ்கின்ற மக்கள் அதைப் பெரிய குறையாகக்
கருதுகிறார்கள். அவர்களுக்கு இடம் கொடுப்பதற்கு நகரமன்றம்
யாராக இருக்கிறோம். அந்த இடத்தைக் கொடுப்பதற்குத்
யாராக இருப்பதை அமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு
ராமநாதபுர நகரில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள், மாணவிகள்
தங்குவதற்கு விடுதிகள் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்
றேன். இதே கோரிக்கையை பரமக்குடி தொகுதி சட்டமன்ற
உறுப்பினர் திரு. சிறை மீட்டான் அவர்களும் வற்புறுத்தி வரு
கிறார்கள். பரமக்குடியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விடுதி
அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதையும்
கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மீனளத்துறை இன்று சிறப்பான காரியங்களைச் செய்துகொண்டி
ருக்கிறது. நீலப் புரட்சி செய்ய வேண்டும் என்று அம்மையார்
அவர்கள் காலையில் தெரிவித்தார்கள். மீன்வள மேம்பாட்டுக்
கழகத்தைத் துவக்குவதற்கான திட்டத்தை நாம் தீட்டியிருக்
கிறோம். மீனளத் துறையைப் பொறுத்த அளவுக்கு இன்னும்
அதிகமான காரியங்களைச் செய்ய வேண்டுமென்றால் கூடிய விரை
வில் டீப் ஸீ ஸர்வே செய்ய வேண்டியிருக்கிறது. ஜப்பான்
நாட்டிலிருப்பவர்கள் நம்முடைய சேது சமுத்திரத்திற்கு அருகில்
வந்து, இங்கே இருக்கிற கிழக்கு இராமநாதபுரத்திலுள்ள மீன்
களைப் பிடித்துச் செல்கிறார்கள். ஆனால் இங்கே வாழ்கின்ற
மக்களுக்கு அதன் பலன் குறைவாக இருக்கிறது. முழுப்பலனை
யும் அனுபவிக்கின்றார்களா என்றால் நிச்சயமாக இல்லை. மீன்
களைப் பிடிக்கிறோம். லாப்ஸடர், பிரான்ஸ் போன்ற மீன்கள்
அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற மிகப் பெரிய சாதனங்
களாக இருந்து கொண்டிருக்கின்றன. ஆனால், அதன் முழுப்
பலனையும் அனுபவிப்பவர்கள் கேரள நாட்டைச் சேர்ந்தவர்களாக
இருக்கிறார்கள். இது அம்மையாரின் கவனத்திற்கு வந்திருக்கும்
என்று நான் கருதுகிறேன். கேரளத்தில் இருக்கிறவர்கள் அந்த
தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலைச்
செய்து கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திற்கு எந்தவிதமான
வருமானமும் இல்லாமல் இருக்கிற சூழ்நிலை இருந்து கொண்டிருக்
கிறது. மேம்பாட்டுக் கழகத்தை ஏற்படுத்தும்பொழுது இதுபற்றி

[திரு. எம். எஸ். கே. சத்தியேந்திரன்] [1974 மார்ச் 21

அம்மையார் அவர்கள் கவனத்தில் வைத்திருப்பார்கள் என்று கருதுகிறேன். கூடிய விரைவிலே அன்னிய நாட்டுச் செலாவணியை ஈட்டித் தருவதற்குத் தமிழக அரசு காரியத்தை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்கள் சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு வீடுகள் கட்டித் தருகின்ற காரியங்களை நிச்சயமாக மேற்கொள்ள வேண்டும். மீனவர்கள் காலையிலே கடலிலே செல்கிறார்கள். வீடு திரும்புவார்களா என்ற நிச்சயமற்ற சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. அவர்கள் வசிக்கின்ற வீடாவது நிரந்தரமான வீடாக இருக்கிறதா என்றால், நிச்சயம் இல்லை. அந்த நிலைமையை மாற்றி அமைக்க வேண்டும் என்று அம்மையார் அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1.00)

மண்டபம் பகுதியில் இருக்கின்ற 'ஃபிஷ் மீல் பிளான்ட்', போட் பில்டிங் யார்டு இவைகளை விரிவுபடுத்த வேண்டும். அதோடு 'ஃபிரீசிங் கப்பாசிட்டி' யையும் இன்னும் அதிகப்படுத்த வேண்டும். இவைகளை எல்லாம் செய்தால் நிச்சயமாக மீன் வளத்தில் அபிவிருத்தி ஏற்படும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

வெளிநாடுகளுக்கு நம்முடைய மீன்களை அனுப்பி, அதிகப் பொருள் ஈட்டுவதற்கு சேதுசமுத்திரத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டிய அவசியத்தில் நாம் இருக்கிறோம். இந்தக் கருத்தை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, மேற்கொண்டு சேதுசமுத்திரத் திட்டத்திற்கு காலதாமதம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

கேரள அரசாங்கம் லட்சம் வீடுகள் கட்டுகின்ற திட்டத்தின் கீழ் பல வீடுகள் கட்டப்பட்டிருப்பதாகச் செய்தி அறிந்து, நாங்கள் கேரள பகுதிக்குச் சென்று அந்த வீடுகளைப் பார்த்தோம். பல வீடுகள் பழுதடைந்து கிடந்த காட்சியை அங்கே நாங்கள் கண்டோம். அதைப் போன்று தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நாம் கட்டிக் கொடுக்கின்ற வீடுகள் நிச்சயமாக அமையக் கூடாது. நல்ல தரமான வீடுகளைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்து, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



1974 மார்ச் 21]

*திரு. மு. இராமன்: பேரவை மாற்றுத் தலைவரவர்களே, 1974-75-ம் ஆண்டுக்கான அரிசன நல மானியத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்காக முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அரிசன நலனுக்கான பொது மானியத்தின்கீழ் 8,98,04,000 ரூபாய், அரிசன வீட்டு வசதிக்காக 1,04,90,000 ரூபாய், கடன் வழங்குவதற்காக 13,10,000 ரூபாய்—ஆக மொத்தம் 10,16,04,000 ரூபாய் இந்த ஆண்டுக்கு வகை செய்யப்பட்டிருக்கிறது.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, 1947-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் நம்முடைய நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்து கிட்டத்தட்ட 26 ஆண்டுகாலமாகியும் கூட இன்னும் இருக்க குடியிருப்பு மனை, வீட்டுவசதி, இடுகாட்டுக்குச் செல்வதற்கு பாதை வசதி இல்லை என்றால் உண்மையிலே இந்த தாழ்த்தப்பட்ட மக்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்பதைப்பற்றி சிந்திக்க வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம்.

1957-ல் குடியிருப்பு வசதிக்காக வளவனூர் அரிசன காலனிக்கு ஹென்றி பீட்டர் காலத்தில் திட்டம் தீட்டி நடவடிக்கை எடுக்கப் பட்டு, 1962 ஆகஸ்டு 14-ந்தேதி 4(1)-ன்படி கெஜட்டில் நோட்டிபிகேஷன் செய்யப்பட்டும், இன்னும் அந்த அரிசன மக்களுக்கு மனைக்கட்டு வழங்கப்படவில்லை என்றால் இந்தநாட்டு மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், ஆதித் திராவிட மக்கள்—பள்ளர்கள், பறையர்கள், சாம்பார்கள், சண்டாளர்கள், சக்கிலியர்கள் என்ற பிரிவுகள் எல்லாம் அதிலே இருக்கிறது—நிலை எப்படி இருக்கும் என்பதை மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும், பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு என். வி. என். அவர்களும், இந்த இலாகாவிலே பணியாற்றுகின்ற செயலாளர் திரு. மணி அவர்களும், இந்த இலாகாவின் இயக்குநர் அவர்களும், மற்றும் இந்த இலாகாவிலே பணியாற்றுகின்ற கீழ்மட்ட அதிகாரிகளும் உணர்வார்கள். இந்தத் தாமதத்திற்கு அரசியல் சட்டத்திலே இருக்கின்ற ஓட்டைதான் காரணமா? 1962-லே உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டு, 1974 மார்ச் 21-ம் தேதி ஆகியும் வழக்கு முடியவில்லை என்று சொன்னால் எப்படிப்பட்ட சட்டத்தை

நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம்; அதிகாரிகளும் மற்றவர்களும் எப்படி செயலாற்றுகிறார்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

சட்டத்திலே ஓட்டை இருக்கிறது என்றால் சட்டத்துறை அமைச்சர்களும், சட்டத் துறை அதிகாரிகளும், நலத்துறை அமைச்சரவர்களும், முதல்வர் அவர்களும், இந்த இலாகாவின் செயலாளர் அவர்களும், இயக்குநர் அவர்களும் அந்தச் சட்டத்தை திருத்தி அமைத்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நன்மை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே 7, 8 ஆண்டு காலம் சட்டமன்றத்தில் வலியுறுத்தி வந்திருக்கிறேன். நான் ஒரு சாதாரண ஹையர் கிரேடு ஆசிரியராக பல ஆண்டுகள் பணியாற்றியிருக்கிறேன். அரிசன மக்கள் படுகின்ற தொல்லைகள் எனக்கு நன்றாகத் தெரியும். அவர்களுடைய துயரங்களைப்பற்றி சட்ட அமைச்சர், இந்தத் துறை அமைச்சர், முதலமைச்சர், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பலமுறை தெரிவித்திருக்கிறேன். சாதகமான முடிவு இன்னும் ஏற்படவில்லை. இன்னும் வழக்கே முடிவடையவில்லை. வழுதாவூர் அரிசன காலனியும் இதே கதியில்தான், இருக்கிறது. நோட்டிபிகேஷன் ஆகி, சம்பந்தப்பட்ட கட்டுகள் முதலமைச்சரவர்களுக்கு அனுப்பப்பட்டு, 10 மாதங்கள் ஆகியும் அந்த கட்டுகள் அங்கேயே தங்கி இருக்கிறது என்றால் அந்த மக்களுக்கு நியாயம் கிடைக்குமா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். சாலையம்பாக்கத்திக்கும் அதே கதிதான்; வல்லமூர் காலனிக்கும் அதே கதிதான்; வழக்கு தொடுக்கப்பட்டு, வழக்கு தள்ளப்பட்டு, மீண்டும் நடவடிக்கை எடுக்கப்பட்ட கட்டுகள் அமைச்சர்களிடத்திலேயும், அலுவலர்களிடத்திலேயும் தங்கி இருக்கின்றன. இப்படி காலம் தாழ்த்தினால் அந்த மக்கள் எப்படி பயனடைய முடியும்? அவர்கள் மனநிலை எப்படி இருக்கும் என்பதை எல்லாம் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குடிநீர் வசதி செய்துகொடுப்பதற்காக மேல்மட்ட நீர் தேக்கத் தொட்டி ஒன்றுக்கு 10,000 ரூபாய் என்று ஒதுக்கியிருக்கிறார்கள். அதிகாரிகளும், அமைச்சர்களும் அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கிறார்கள் [illegible] இந்தத்



திட்டத்தின் கீழ் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 40-ம், பழங்குடி மக்களுக்கு 8-ம் கட்டுவதற்கு வகைசெய்யப்பட்டிருக்கிறது. அதற்காக அமைச்சர்களையும், அதிகாரிகளையும் பாராட்டாமல் இருக்க முடியாது; பாராட்ட வேண்டியதுதான்.

என்னுடைய தொகுதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, சேதமடைந்திருந்தபோது, அப்போது அரிசன நலத்துறை இயக்குநராக இருந்த திரு. கோமேதகவேல் அவர்களுடன் சுற்றிப் பார்த்தேன். ஒரு நாள் வெகுநேரம் சுற்றிப்பார்த்துவிட்டு, இரவு 11 மணிக்கு அவரை விழுப்புரத்தில் கொண்டுவந்து விட்டேன். அவருக்கு அதற்குள் உடல் நலம் சரியில்லாமல் போய்விட்டது. இப்படி உடல் நலம் இல்லாத அதிகாரிகள் அரிசன நலத் துறைக்குத் தேவையில்லை. இந்தத் துறைக்கு வரக்கூடியவர்கள் நல்ல வேலை செய்யக்கூடிய அளவுக்கு திடகாத்திரம் உள்ளவர்களாக இருக்க வேண்டும்; நல்ல பலம் பொருந்தியவர்களாக இருக்க வேண்டும்.

தாழ்த்தப்பட்டவர்கள் நலனை கவனிக்கும் பொறுப்புகளில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை அமர்த்தவே கூடாது. அவர்கள் சரியாக வேலை செய்ய மாட்டார்கள். மற்ற ஜாதிக்காரர்களையும், பிராமணர்களையும் போட வேண்டும். முன்பு சிவசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ். இந்த இலாகாவின் பொறுப்பை ஏற்றிருந்தபோது எப்படி பணியாற்றியிருக்கிறார், அதற்குப் பின்னால் வந்தவர்கள் எப்படி பணியாற்றியிருக்கிறார்கள் என்பதைப் பார்த்தால் உண்மை நன்றாகத் தெரியும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தாழ்த்தப்பட்ட அதிகாரிகளால் பயனில்லை.

தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு இன்றுவரையில் உதவித் தொகை கொடுக்கப்படவில்லை. பள்ளி மாணவர்களுக்கும் கிடைக்கவில்லை; கல்லூரி மாணவர்களுக்கும் கிடைக்கவில்லை; மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கும் கிடைக்கவில்லை; விவசாயக் கல்லூரி மாணவர்களுக்கும் கிடைக்கவில்லை. அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்கள்தான் இன்றைக்கு அதிகாரிகளாக இருக்கிறார்கள். ஜூன் திங்களில் கொடுக்கவேண்டிய உதவித்தொகை 1974 மார்ச் 21 ஆகியும் கொடுக்கப்படவில்லை. எல்லோருக்கும் ஸ்காலர்ஷிப் கொடுப்பட்டிருந்தால் அந்த புள்ளி விபரத்தை இந்த மன்றத்திலே வைக்க வேண்டும். இன்னும் எல்லோருக்கும்

கொடுக்கப்படவில்லை. எனக்கு நன்றாகத் தெரியும். பிற்பட்டோர் நலத் துறையில் 1973 டிசம்பர் 31-ந் தேதிக்குள்ளேயே ஸ்காலர்ஷிப் கொடுத்துவிட்டார்கள். அரிசன நலத் துறையினர் இன்னும் கொடுக்காததற்கு காரணம் என்ன என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த அதிகாரிகளே இந்தத் துறையின் பொறுப்பை ஏற்றிருந்தும் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பயனில்லை என்றால், இந்த தாழ்த்தப்பட்ட அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டியது நியாயமா என்று சிந்திக்க வேண்டுகிறேன்.

தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்று சட்டம்போட்டு பல ஆண்டுகாலம் ஆகிறது. தமிழ்நாட்டில் முன்னாள் முதலமைச்சராக இருந்த காமராஜ் அவர்கள் 1955-ம் ஆண்டில் தீண்டாமையை ஒழிக்க சட்டம் ஒன்றைக் கொண்டுவந்தார்கள்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** தலைவரவர்களே, இந்த விளக்க உரையில் 28—2—1974 வரையிலும் எத்தனை பேருக்கு உபகாரச் சம்பளம் அளிக்கப்பட்டிருக்கிறது என்ற புள்ளிவிபரம்தான் தந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்றுவரையிலும் என்று கூறுவது தவறு; விளக்க உரையில் அப்படி இல்லை.

**திரு. மு. இராமன்:** பலருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது இன்னும் சிலருக்குக் கொடுக்கப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய அரிசன பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் படிக்கிறார்கள்; மாணவர்கள் என்றால் அதில் மாணவிகளும் சேருவார்கள். ஒரு கண்ணில் வெண்ணெயும், ஒரு கண்ணில் சுண்ணாம்பும் தடவுவதுபோல் இருக்கிறது பல இடங்களில்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். தென்னார்க்காடு மாவட்டத்தில் சேத்தியா தோப்பு பள்ளிக்கூடத்தில் பிற்பட்ட வகுப்பு மாணவர்களும் படிக்கிறார்கள்; தாழ்த்தப்பட்ட மாணவர்களும் படிக்கிறார்கள். பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு சீருடை வழங்கப்பட்டிருக்கிறது; தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு உடை





வழங்கப்படவில்லை. இது மிகவும் வருந்தத்தக்கது. எல்லா வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கும் சீருடை கொடுக்க வேண்டும். ஏழை மாணவர்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவராக இருந்தாலும் எல்லோருக்கும் உடை வழங்கப்பட வேண்டும். சமன்செய்து சீர்தூக்கிப் பார்த்து எல்லோருக்கும் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** தலைவரவர்களே, சீருடை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டிருக்கலாம். அதற்காகக் கொடுக்கவில்லை என்று சொல்ல முடியாது. ஆடை வழங்குவதற்காக ஒப்பந்தம் செய்துகொண்டவர்கள் கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டிருக்கலாம்; அதனால் மாணவர்களுக்கு உடை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டிருக்கும். எல்லாக் குழந்தைகளுக்கும் சீருடை வழங்கும் திட்டம் இருக்கிறது; சீருடை கொடுக்கிறோம். உடை கொடுப்பதில் ஏற்படுகின்ற தாமதத்தினால், உடை கொடுக்கப்படுவதில்லை என்று சொல்வது சரியல்ல.

**திரு. மு. இராமன்:** சேத்தியாத்தோப்பு தாழ்த்தப்பட்டோர் விடுதியில் படிக்கிற மாணவர்களுக்கு எத்தனை உடைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்கிற புள்ளிவிவரத்தைக் கொடுங்கள். நான் பேசியதைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக விடுதிகள் கட்டுவதில் அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும். இன்றைக்கு கிராம கர்ணம், மணியம் உத்தியோகம் சம்பந்தமாக 18 சதவிகிதம் கொடுக்கப்பட வேண்டும். இன்றைக்கு தமிழ்நாட்டில் எங்காவது ஒரு தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் மணியக்காரராக இருக்கிறார் என்று சொல்லுங்கள். கிடையாது.

தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் கடன் கொடுக்கிறபோது 5 கிலோமீட்டர் வரைதான் கடன் கொடுக்கிறார்கள். 10 கிலோமீட்டர் வரை கடன் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் பள்ளிக்கூடங்கள் ஜூன் மாதம் ஆரம்பிக்கிறது என்றால் சிறப்பு ஆசிரியர்கள் அக்டோபர் மாதம்தான் போடப்படுகிறார்கள். அதுவின்றி ஜூன் மாதமே போட்டால்தான் அரிசன

[திரு. மு. இராமன்] [1974 மார்ச் 21

மாணவர்களுக்கு வருட ஆரம்பம் முதலே நல்ல முறையில் சொல்லிக் கொடுக்க வாய்ப்பு ஏற்படும் என்று தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவர் அவர்களே, இன்றையதினம் அரிசன நலத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற மானியத்தின் மீது எனது கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன். அரிசனங்கள்—பழங்குடி மக்களின் முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு அரசு ஏறத்தாழ 10 கோடி ரூபாயை ஒதுக்கி, 6 கோடியை கல்விக்காகச் செலவழிப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அரிசனங்களுடைய நீண்ட நாளைய குறைகளை எல்லாம் நிறைவு செய்ய வேண்டுமென்றால் இன்னும் 10 கோடி ரூபாயை ஒதுக்குவதன் மூலம்தான் வேகமாகப் பல திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரிசனங்கள் 1 கோடிக்கு மேல் இருப்பார்கள். கணக்கு என்னமோ 75 லட்சம் என்று சொல்லப்படுகிறது. எப்படிக் கணக்கு எடுத்தார்களோ எனக்கு ஐயமாக இருக்கிறது.

அரிசன மாணவர்களுக்கு கல்விக்காக வழங்கப்படுகிற உதவித் தொகையில் தாமதம் ஏற்படுவதைப்பற்றி பலபேர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நிர்வாகம் ஆமை வேகத்தில் சென்று கொண்டிருப்பதன் காரணமாக, இன்றையதினம் இம்மாதிரி குறைபாடுகள் ஏற்படுகின்றன. எவ்வளவு தொகை அரசு ஒதுக்கினாலும் அது காலத்திலே அந்த மாணவர்களுக்குப் போய்ச் சேருவதில்லை என்கிற குறைபாடு இருக்கிறது என்பதை நானும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

உதவித்தொகை வழங்குவதில் வருமான வரம்பை அரசாங்கம் எடுத்துவிட வேண்டும். 2,500 என்று விதித்திருக்கிற வருமான வரம்பு விலைவாசி உயர்வுக்குப் பொருத்தமாக இல்லை. இந்தச் சமூகத்தில் அதிகமான வருவாய் வரக்கூடியவர்கள் நூற்றுக்கு 1 சதவிகிதம் கூட இருக்கமாட்டார்கள். அதை எடுப்பதன் மூலமாகத்தான் சகல பேர்களுக்கும் உதவி கிடைக்க முடியும்.



1974 மார்ச் 21] [திரு. ஆ. கு. சுப்பையா]

மேலும் விடுதியில் தங்கிப் படிக்கிற மாணவர்களுக்கு அரசாங்கம் உதவி அளிக்கிறார்கள். 2,500-க்கு உட்பட்டு வருமானம் வரக்கூடிய எல்லோருடைய குழந்தைகளையும் விடுதியில் சேர்க்க முடிவதில்லை. விடுதியில் சேர முடியாத காரணத்தினால் அந்தப் பிள்ளைகள் கல்லூரிகளில் படிக்க முடியவில்லை. ஆகவே விடுதியில் சேர்ந்து படித்தாலும் விடுதிகளில் சேர்ந்து படிக்காது, வெளியில் இருந்து படித்தாலும் அவர்கள் எல்லோருக்கும் உதவித் தொகை தரவேண்டுமென்று நான் அரசாங்கத்திற்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவ்வாறு கொடுப்பதன் மூலமாகத்தான் எல்லாக் குழந்தைகளுக்கும் படிப்புக்கு உதவித்தொகை கொடுத்ததாக இருக்க முடியும்.

மதிய உணவுக்காக நாம் கொடுக்கிற தொகை மிகமிகக் குறைவானது. அதை உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலம் வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுகிறது. நில உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் எடுக்கப்பட்ட நிலமானாலும் சரி, அரசாங்க தரிசு நிலங்களானாலும் சரி—மேல்சாதிக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறதே தவிர அரிசனங்களுக்கு சரியாக வழங்கப்படவில்லை. நீங்கள் ஒரு கமிட்டியைப் போட்டு பரிசீலனை செய்தாலும் இந்த உண்மை விளங்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நிலம் வழங்குவதில் ஏற்கனவே இருந்த வரிசையில் 9 ஆவதாக இருந்ததை 2 ஆவதாகக் கொண்டுபோய் வைத்திருக்கிறார்கள். என்ன ஆனால் அரிசனங்களுக்கு நடைமுறையில் கொடுப்பதில்லை. என்ன போய்ச் சொன்னாலும் அதிகாரிகள் நியாயமாக நடப்பதில்லை. அதிகாரிகளுக்கே அரிசனங்கள் முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள், டாக்டர்களாக வந்துவிடுகிறார்கள் என்று பொறாமைப்படுகிறார்கள் என்பதை என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

இன்றையதினம் அரிசன சமூகத்தைச் சேர்ந்தவர்கள் டாக்டராகவே வருகிறார்கள் என்றாலும் அவர்களை தண்ணீர் இல்லாக் காட்டில் கொண்டுபோய்ப் போடுகிறார்கள். நகர்ப்புறங்களில் அவர்களுக்கு வேலையில்லை. அவர்கள் திறமைக் குறைவானவர்களா, படிப்பில் கவனம் இல்லாதவர்களா என்பது இன்றைய

தினம் ஆராயவேண்டிய விஷயமாக இருக்கிறது. ...ரிய குடும்
பத்தைச் சேர்ந்த—லட்சாதிபதி குடும்பத்தைச் சேர்ந்த டாக்
டர்கள் சென்னை நகரில் பரம்பரையாகத் தொழில் செய்துகொண்
டிருக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அரிசன சமூகத்
தைச் சேர்ந்த டாக்டர்களோ நாலாபக்கமும் தூக்கி எறியப்படுகி
றார்கள்.

அடுத்து, பஞ்சாயத்துக்களாக இருந்தாலும், பஞ்சாயத்து
ஒன்றியங்களாக இருந்தாலும், நகராட்சிகளாக இருந்தாலும்,
மாநகராட்சிகளாக இருந்தாலும் அங்கெல்லாம் குறைந்த பட்சம்
18 விழுக்காடாவது அரிசனங்களுக்கு வேலை கொடுக்கப்பட
வேண்டும். அப்படி இன்றையதினம் வேலை கொடுப்பது கிடையாது.
படித்திருக்கக்கூடிய ஆசிரியர்களில்—அரிசன சமூகத்தைச் சேர்ந்
தவர்கள்—பலபேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இதைப்
பரிசீலனை செய்து அரிசனங்களுக்குத்தான் முதல் சலுகை கொடுக்க
வழி செய்யவேண்டும். ஒரு நான்கு பேர்கள் இண்டர்வியூவுக்கு
வந்தால் 2 பேர்களை எடுப்பதாக இருந்தால் ஒருவர் அரிசன சமூ
கத்தைச் சேர்ந்தவராக இருக்கவேண்டும். ஒருவர்தான்
வேலைக்கு எடுக்கப்படுகிற நிலைமை இருந்தால், அந்த ஒருவர்
அரிசன சமூகத்தைச் சேர்ந்தவராக இருக்கவேண்டும்.

சிறுதொழில் சம்பந்தப்பட்ட வரையில் கடன் மிகக் குறைவாக
இருந்துகொண்டிருக்கிறது. 250 ரூபாய், 500 ரூபாயைக்கொண்டு
எந்தத் தொழிலும் நடத்தமுடிவதில்லை. அச்சு இயந்திரம்
வைப்பது என்றால் 20 ஆயிரம் ஆகிறது. ஐந்தாயிரம் கடன்
கொடுக்கிறார்கள். இன்னும் அதிகமாகக் கொடுக்க வேண்டும்,
மருந்து ஷாப் வைக்கவும் அதிகமாகக் கொடுக்க வேண்டும்.
கிராமப்புறங்களில் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பெண்கள்
பாய் முடைகிறார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் அதில் ஈடுபட்டி
ருக்கிறார்கள். இந்தத் தொழிலுக்கும் கடன் கொடுக்க ஆவன
செய்யவேண்டும்.

வீட்டு மனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்தச் சட்டம்
வந்தபிறகு அநேகமாக குடியிருப்பு மனை சொந்தமாக்கப்பட்டு
விட்டது. மீதம் இருக்கக்கூடிய மனைகளையும் சொந்தமாக்க நட
வடிக்கை எடுக்கப்படுமா என்றதற்கு இல்லை என்று அமைச்சர்
அவர்கள் சொன்னார்கள். அதிகாரிகள் என்ன செய்கிறார்கள்





என்று சொன்னால் கிராம வீட்டுவசதி திட்டத்தின் கீழ் உபரியான
நிலங்களை கொடுத்துக்கொண்டிருக்கிறபோது, தனியாக அரிசனங்
களுக்கு நில ஆர்ஜிதம் செய்யவேண்டியதில்லை என்று நிறுத்தி
விட்டார்கள். அதன் காரணமாக, இன்றையதினம் தடை ஏற்
பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே, நம்முடைய இலாகாவிலே
அரிசனங்களுக்கு தனியாகவே, இந்த 3 சென்ட், 5 சென்ட்
நிலத்தை வாங்கிக் கொடுக்கவேண்டும். அப்படி வாங்கிக் கொடுக்
கின்றபொழுது, மத்திய அரசினுடைய நிதியைப் பயன்படுத்திக்
கொள்ளவேண்டும். நாம் வாங்கிக் கொடுக்கக்கூடிய 3 சென்ட்
நிலம், மத்திய அரசு கொடுக்கக்கூடிய 2 சென்ட் நிலத்திற்கான
ரூபாய், இரண்டையும் சேர்த்து 5 சென்ட் நிலம் வாங்கிக் கொடுத்து
உதவி செய்யவேண்டும்.

வீட்டு வசதி வாரியத்தைப் பற்றிப் பேசும்போது, மன்றத்
திலே அங்கத்தினர்கள் சொன்ன கோரிக்கையை அரசு ஏற்றுக்
கொண்டு, வாரியம் அமைத்திருக்கிறது. அது மிகவும் பாராட்டு
தலுக்குரியது. ஆனால், அதன் தலைவராக ஏன் அதிகாரியைப்
போட வேண்டுமென்பது எங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறது.
ஏன், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவரைத் தலைவராகப்
போட்டால், அது செயல்படாதா? . . .

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** கொஞ்சம் முன்னால்
மாண்புமிகு உறுப்பினர் குழ. செல்லையா, கட்சியிலே வேறுபாடு
கொள்ளுகின்றவர்களுக்கு எல்லாம் இப்படி பதவி கொடுக்க இந்த
வீட்டு வாரியமா என்று கேட்டார்கள். இப்படிச் சொல்வதால் வீட்டு
வசதி வாரியத்திற்கு கட்சியிலே இருந்து போடாமல், அதிகாரி
யைப் போட்டோம். ஆனால், இப்பொழுது உறுப்பினர் வேறு
ஆளைப் போடாமல், ஏன் அதிகாரியைப் போட்டீர்கள் என்று கேட்
கிறார். யாரைத் தான் போடுவது?

**திரு. ஆ. கு. சுப்பையா:** என்னுடைய கேள்வி எல்லாம், இந்த
இலாகாவிற்கு மாத்திரம், இந்த ஒரு கழகத்திற்குத்தான் இம்
மாதிரியான குறை வருகிறதா? இதிலே இருக்கக்கூடியவர்கள்தான்
திறமையில்லாதவர்களா? இதற்கு போடக்கூடாது என்று எந்தக்
கட்சியாவது சொல்லட்டும். இந்தக் கழகத்திற்கு மாத்திரம்

[திரு. ஆ. கு. சுப்பையா] [1974 மார்ச் 21

அதிகாரியல்லாத யாரையும் தலைவராகப் போடக் கூடாது என்று சொன்னால், அவர்களை அரிசன மக்கள் கவனித்துக்கொள்வார்கள். ஆகவேதான், இதைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன்.

மீண்டும் மீண்டும் இந்தச் சபையிலே சொல்லிக்கொள்வது தேவையில்லாத இடங்களிலே நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக் கிறது. அங்கேதான் வீடு கட்ட வேண்டுமென்ற கொள்கை அரசாங்கத்திடம் இருந்தால் அதை மாற்றிக் கொள்ளவேண்டும். வசதியாகவும், மேடாகவும் போக்குவரத்துக்கு வசதியாகவும் உள்ள இடங்களைப் பார்த்து, நிலத்தை ஆர்ஜிதம் செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொண்டு இந்தச் சந்தர்ப்பத்திலே அதைச் செய்யவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

விவசாயிக்கு மானியம் வழங்குகிறோம். கிணறு வெட்ட ரூ. 2,000, மாடு வாங்க ரூ. 500 வழங்கப்படுகிறது. அந்தத் தொகையையும் உயர்த்த வேண்டும்.

அங்கத்தினர்கள் சொன்னார்கள், டாக்டர் அம்பேத்கார் அவர் களுடைய படத்தை இங்கே வைக்க வேண்டும் என்று. அது எங்க ளுடைய ஏகோபித்த அபிப்பிராயமாகும். அந்தப் படத்தை, முதல்வர் அவர்களோடு கலந்து பேசி, இங்கே வைக்கவேண்டு மென்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. வடிவேலு அவர்கள் மனு கொடுத்தது சம்பந்தமாக சர்ச்சை எழுப்பப்பட்டது. அந்த மனுக்கள் அமைச்சரிடம் இருந்து இலாகாவிற்குப் போயிருக்கிறது. சம்பந்தப்பட்ட இலாகா அதன்மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுதான் அவருடைய ஆட்சேபணையாகும். நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால் அந்த மாதிரி நடக்கக் கூடாது என்று இலாகாவிற்கு . . .

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** இன்று மாலை பதில் கூறும்போது, அவர் யாரிடத்திலே கொடுத்தார், என்ன நட வடிக்கை எடுக்கப்படும் என்ற விவரத்தைச் சொல்வதாகச் சொன் னேன். ஆகவே, மாலை சொல்கிறேன் என்று தெரிவித்துக்கொள் கிறேன்.



1974 மார்ச் 21]

**திரு. ஆ. கு. சுப்பையா:** இந்த மாதிரியான குறைபாடுகள் இல்லாமல், வேகமாக அந்த வேலை செய்யக்கூடிய முறையிலே நட வடிக்கைகள் எடுக்கின்ற அளவிலே அந்த இலாகா பணியாற்ற வேண்டுமென்று சொல்லி, என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. இரா. இராமலிங்கம்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட மானியக் கோரிக்கைகளை வரவேற்று, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசிய உறுப்பி னர்கள் அரிசன நலத் துறையைப் பற்றி இங்கு விளக்கமாகச் சொன்னார்கள். ஆகவே, அதை விட்டுவிட்டு, மீனளத்தைப் பற்றிப் பேசலாம் என்று நினைக்கிறேன்.

இன்றைக்கு கடற்கரையிலே, ஆயிரம் கிலோமீட்டர் தூரத் திற்கு சுமார் ஒரு இலட்சம் தொழிலாளர்கள் மீன் பிடிப்பதில் ஈடு பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது, மீன் பிடிப்பதிலே அதிகமான லாபமும், மீன் பிடிக்கின்ற தொழிலாளர்களுக்கு அதிக மான சம்பளமும் இந்தத் தொழிலிலே கிடைக்கிறது. ஆகவே, அந்தத் தொழிலில் அதிகமானவர்கள் ஈடுபடுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். இத்தொழிலில் முதலீடு போட பல்லாயிரக் கணக்கானவர்கள் தயாராக இருக்கிறார்கள் போல் தெரிகிறது.

சிங்கரால், இரால் மீன்களுக்கு வெளிநாடுகளிலே நல்ல கிராக்கி இருக்கிறது, நல்ல விலையும் போகிறது. ஆகவே, அந்தத் தொழி லிலே எல்லோரும் ஈடுபடக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. சாதாரண மாக, விசைப் படகு வைத்திருப்பவர்களுக்கு ரூ. 10,000, ரூ. 20,000 முன்பணம் கொடுக்கின்ற நிலைமை தமிழ் நாட்டிலே இருக்கிறது.

மீனள வளர்ச்சிக்கு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே, 1,880 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பது பாராட்டக் கூடியதாகும். இன்னமும் கட்டுமரத்திலே மீன் பிடிக்கிறார்கள். சிறு சிறு வள்ளங்களிலே மீன் பிடிக்கிறார்கள், இயந்திரப் படகுகளை வைத்து மீன் பிடிக்கிறார்கள். இந்தத் துறையிலே அதிகமான இயந்திரங் களை நவீனப்படுத்துவது இன்றியமையாததாகும். இதுவரை யிலே 1,860 படகுகள் புகுத்தப்பட்டிருக்கின்றன. அதை இன்னும் அதிகமாக்க வேண்டும்.

1969-70-லிருந்து 1973-74 வரை ரூ. 6,08 இலட்சம் நிதி ஒதுக்கப் பட்டிருக்கிறது. 1,860 இயந்திரப் படகுகள் வரை ஓடிக்கொண்டி ருக்கின்றன. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ரூ. 1,011 இலட்சம் இயந்திர வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டிருப்பது பாராட்டக்கூடிய ஒன்றாகும்.

வேளாண்மை மறுநிதிக் கழகத்தின் உதவியின் மூலம், சென்னை மாவட்ட மீனவர் கூட்டுறவு சம்மேளனம், தூத்துக்குடியிலே இருக்கிற திருநெல்வேலி மீனவர் கூட்டுறவு சம்மேளனம் இன்றைக்கு மீன் பிடிப்புப் படகுக் கட்டுவதிலே முனைந்து இருக் கிறது. இன்னும் அதிகமான பணத்தை இந்த மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்குக் கொடுத்து, அதிகமான படகுகளைக் கட்டவேண்டு மென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

படகுகள் கட்டுவதிலே, தனியாரை அதிகமாக ஊக்குவிக்க வேண்டும். படகுக் கட்டுகின்ற பணத்திலே 20 சதவிகிதம் இன்டரஸ்ட் ஃப்ரீ லோன்-ஐ அரசு கொடுப்பதாக அரசு அறிவித் திருந்தது. அது கடந்த ஆண்டு யாருக்கும் கொடுக்கப்பட வில்லை. தூத்துக்குடியில் இருக்கிற ரீஜியனல் டெப்புட்டி டைரக்டரை நான் சந்தித்துக் கேட்கிற நேரத்தில், இந்த ஆண்டு 20 சதவிகிதம் இன்டரஸ்ட் ஃப்ரீ லோன் கொடுக்கவில்லையென்று சொன்னார்கள். இந்த ஆண்டு தொடர்ந்து கொடுக்கவேண்டு மென்று சொல்லிக்கொள்கிறேன்.

இப்பொழுது நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகள் கூட கடன் கொடுக்க முன்வரவில்லை. அவர்கள் கூட நிறுத்தி விட்டார்கள். இது இந்தத் தொழிலை மிகவும் பாதிக்கும் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கேரள கடற்கரைப் பகுதிகளில் நம்மைவிட அதிகமாக மீன் படகுகள் இருப்பதைப் பார்க்கிறோம்.

குளித்தலையிலே 18 வள்ளப் படகுகள் பிடிக்கின்ற மீனை வெளி நாடுகளுக்கு அனுப்புவதிலே, அதிக சுறுசுறுப்பாக இருக்கிறார்கள். அவர்கள் இறால் மீன்களைப் பிடிக்கிறார்கள். அவர்கள் அத்தொழி லிலே அதிகமாக ஈடுபட முன்வருவதால், நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளிலே கடன் கொடுக்கச் செய்ய அரசு வற்புறுத்தவேண்டும் அதேபோல், 20 சதவிகிதம் இன்டரஸ்ட் ஃப்ரீ லோனைப் கொடுக்க அரசு முன்வரவேண்டும்.





அந்தத் தொழிலிலே யாரெல்லாம் ஈடுபட்டிருக்கிறார்கள்? பிரபல சினிமா நடிகைகூட இத்தொழிலில் ஈடுபட்டிருப்பதாக அறி கிறேன். இத்தொழிலில் அவ்வளவு ஆர்வம் இன்றைக்கு ஏற்பட் டிருக்கிறது. இப்பொழுது முக்கியமான தேவை, நவீனமாக்கப் பட்ட படகு; அடுத்து, பிஷிங் கிரவுண்ட் எங்கே இருக்கிறது என் பதைக் கண்டு பிடிக்க வேண்டும். குறிப்பிட்ட சில இடங்களிலே தான் அவர்கள் அடிக்கடி போய் மீன் பிடிக்கிறார்கள். அதற்குப் பதிலாக எங்கெங்கு மீன் அதிகமாக இருக்கிறது என்பதை உட னுக்குடன் சென்று கண்டுபிடித்து அவர்களுக்குச் சொல்ல வேண்டும்.

தூத்துக்குடியிலே ஆப்ஷோர் பிஷிங் ஸ்டேஷன் என்ற மத்திய அரசு நிறுவனம் இருந்தது. அது ஆழ்கடலிலே ஆராய்ச்சி செய்ய வேண்டும், செய்ததாகச் சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் ஆழ்கடலிலே சென்று மீன் பிடிப்பதற்குப் பதிலாக கடற்கரை ஓரத்திலேயே ஆராய்ச்சி செய்தார்கள், 4 டிராலர்களை வைத்துக் கொண்டு. அதனால் எந்தவிதமான பயனும் ஏற்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. இராமலிங்கம் தொடர்ந்து மாலை பேசுவார். பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து, மாலை 4.00 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.30 மணியளவில் ஒத்திவைக்கப் பட்டது.

இடைவேளைக்குப் பின் பேரவை மீண்டும் பிற்பகல் 4.00 மணி யளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தலைமையில் கூடியது.

**திரு. இரா. இராமலிங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் உள்ள ஆப்ஷோர்பிஷிங் ஸ்டேஷனுடைய பலன்கள் எல்லாம் அங்கேயுள்ள மீனவர்களுக்கு சரிவரக் கிடைக்க வில்லை. அதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். தூத்துக் குடியில் மீனவர் கூட்டுறவு சங்க மூலம் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் மீனவர்களுக்கு 1 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் கடனைக் கொடுக்கப்பட்டது. இன்னும் அந்த பாக்கியை மீனவர்களால் திருப்பிக் கொடுக்க முடியவில்லை. அவர்கள் கட்டியதுபோக

இன்னும் பாக்கி அசலில் 40 ஆயிரம் ரூபாயும் வட்டியில் 20 ஆயிரம் ரூபாயும் இருக்கிறது. இந்தத் தொகையை மீனவர்களால் கட்ட முடியவில்லை. ஆகவே அதிகமான நாட்கள் ஆகிவிட்ட காரணத்தினாலும் மீனவர்களால் அந்தத் தொகையைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலைமை ஏற்பட்டதாலும் அரசாங்கம் அந்தக் கடனை ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நைலான் நூலுக்கு 20 சதவிகிதம் உதவித்தொகை வழங்கப்படுகிறது. நைலான் நூலின் விலை அதிகமாகியிருக்கிறது. ஆகவே, அந்த உதவித் தொகையை 20 சதவிகிதமாக இருப்பதை 50 சதவிகிதமாக ஆக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடியிலே சங்கு குளிக்கின்ற தொழிலாளர்கள் 1,500 பேர்கள் இருக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த கடற்கரையிலே தவிர மற்ற கடற்கரையிலேதான் சங்கு குளிக்க அனுமதிக்கப்படுகிறார்கள். நெல்லை மாவட்டத்திலேயுள்ள கடற்கரையிலே அனுமதிப்பதில்லை. கட்டுப்பாடு இருக்கிறது. 2¼" முதல் 3½" வரையுள்ள சங்கு எடுக்கிறவர்களுக்கு ரூ. 1.25 பைசாவும் 3½" க்கு மேல் உள்ள சங்கு எடுக்கிறவர்களுக்கு ரூ. 1.75 பைசாவும் கூலியாகக் கொடுக்கப்படுகிறது. இந்தச் சங்கினுடைய விலை வெளி மார்க்கெட்டிலே அதிகமாக இருக்கிறது. பக்கத்திலே உள்ள இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மார்க்கெட்டிலே அதிகமான விலைக்கு விற்கிறார்கள்.

ஆனால் தூத்துக்குடியிலே அரசின் கட்டுப்பாடு இருக்கின்ற காரணத்திலேதான் அந்த விலையைப் பெறமுடியாத நிலைமை இருக்கிறது. அரசு நிர்ணயித்த விலை வெளிமார்க்கெட் விலையைவிட மிகக் குறைவாக இருக்கிறது. சில சமயங்களிலே எடுத்த சங்குகளைக் கொடுக்க முடியாத சூழ்நிலைகூட வருகிறது. ஆகவே, சங்குகளுக்கு விலையை அதிகரிக்கவேண்டும்.

கடந்த ஆண்டு அரசுக்கு குறைந்த விலைக்கு சங்குகளை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக அவர்களுக்கு போனஸ் வழங்கப்பட்டதைப்போல இந்த ஆண்டும் அவர்களுக்கு போனஸ் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் இலவசமாக அங்கே சங்கு குளிப்பதற்கு அனுமதிக்க வேண்டும்.





அரசாங்கக் கட்டுப்பாடு இல்லாமல் சங்கு குளித்தால் முத்து சிப்பிகளுக்கு ஏதாவது இடர்ப்பாடு வந்துவிடும் என்ற ஒரே காரணத்திற்காகத்தான் கட்டுப்பாட்டை வைத்திருக்கிறார்கள். அவர்கள் சொல்கிறார்கள், முத்து சிப்பிகளுக்கு எந்தவிதமான இடைஞ்சலும் வாராமல் சங்கு குளிக்க முடியும் என்றும் ஒரு முத்து சிப்பியினுடைய வளர்ச்சி மூன்று ஆண்டுகளுக்குள் முடிந்துவிடுகிறது, பூரணமாக அதற்குள் வளர்ந்து விடுகிறது, ஆனால் பெரும்பான்மையான முத்துச்சிப்பிகள் நல்ல முறையிலே விளைவதில்லை என்று சொல்கிறார்கள்.

அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், முத்துச்சிப்பி புதிய முறையிலே வளர்க்கப்படுகிறது. அதிலே 88 சதவிகிதம் உற்பத்தி செய்ய முடிகிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியைச் சொன்னார்கள். வணிக ரீதியிலே அரசு ஒரு திட்டத்தைப் போட்டு அதை அமலாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உலக மார்க்கெட்டிலே தங்கத்தைவிட முத்துக்குத்தான் அதிகமாகத் தரப்படுகிறது. தூத்துக்குடியிலே எடுக்கப்படுகின்ற முத்துக்களுக்கு அதிகமான விலையைக்கூடப் பெறமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடலிலே வேலை செய்கின்ற தொழிலாளர்கள் இறந்து விட்டால் அவர்களுடைய குடும்பத்திற்கு 1,000 ரூபாய்தான் உதவித் தொகை கொடுக்கப்படுகிறது, அதை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு காலையிலே பேசிய உறுப்பினர் திரு. குழ. செல்லையா அவர்கள் பேசும்பொழுது நாங்குனேரியிலே மீனவர்களுக்கும் வேறு ஒரு சமுதாயத்திற்கும் ஏற்பட்ட கலவரங்களைப் பற்றிக் குறிப்பிட்டார். அங்கே ஏற்பட்ட கலவரத்திலே சமூக விரோதிகள் புகுந்து கொண்டிருக்கிறார்கள். இரண்டு பக்கத்திலேயும் இரண்டு கொலைகள் செய்யப்பட்டு இருக்கின்றன, ஆகவே சமூக விரோத சக்திகளைக் கண்டுபிடித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. சு. ம. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அரிசன மானியக் கோரிக்கையில் நடைபெறுகின்ற இந்த விவாதத்தில் நானும் கலந்துகொள்ள வாய்ப்புத் தந்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. சு. ம. துரைராஜ்] [1974 மார்ச் 21

ஒன்றையதினம் அரிசன மானியத்தைப் பார்த்தால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏற்கனவே செய்ததைப்போல்தான் இருக்கிறதே தவிர வேறு புதிதாக ஒன்றும் தென்படவில்லை. கல்விச் சலுகைகள் அளிக்கின்ற வகையிலே இந்த மானியத்திலே நிறைய பணத்தைப் போட்டுக் காட்டியிருக்கிறார்களே தவிர வேறு எதுவும் அவர்களுக்காகச் செய்திருப்பதாகத் தெரியவில்லை. 1961 ஆம் ஆண்டு முதல் அரசு விடுதியிலே தங்கியுள்ள தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு மாதம் ரூபாய் 40 தான் கொடுக்கப்பட்டு வருகிறது, அது உயர்த்தப்படவில்லை, மத்திய அரசு உயர்த்தி அளிக்கவேண்டுமென்று கேட்ட நிலைமை என்ன ஆயிற்று என்றே தெரியவில்லை. அந்த மாணவர்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள்.

பள்ளி மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் உதவித் தொகை சரிவரக் கொடுக்கப்படவில்லை. அந்த மாணவர்களுக்குப் பொங்கல் சீருடை சென்னை மாவட்டத்தில் இன்னும் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதற்கான காரணம் என்னவென்று தெரியவில்லை. இதைச் செய்தோம், அதைச் செய்தோம் என்று இவர்கள் சொல்கிறார்கள். காலையில் பேசிய திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கூடக் குறிப்பிட்டார்,

தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு இந்த ஆட்சி நிறையச் சலுகைகளைச் செய்திருக்கிறது, குறிப்பாக நீதிமன்றத்தில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவரை நீதிபதியாகப் போட்டிருப்பதாகச் சொன்னார். நான் இதைக் கேட்டு வேதனைப்படுகிறேன். அந்த நீதிபதி, மாஜிஸ்ட்ரேட்டாக இருந்த அளவில் ஜூனியராக இருந்தாரா அல்லது சீனியராக இருந்தாரா? அவர் ஜூனியராக இருந்து அவருக்கு நீதிபதி பதவி கொடுத்திருக்கிறார்களா? வேறு எந்த ஆட்சி வந்தாலும்கூட அவருக்குக் கொடுத்துத்தான் தீர வேண்டும், அத்தகைய இடத்தில், சீனியர் மோஸ்ட் மாஜிஸ்ட்ரேட்டாக இருந்ததால் நீதிபதி பதவியைக் கொடுத்திருக்கிறார்கள். அப்படிக் கொடுத்துவிட்டு, தம்பட்டம் அடித்து தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு இதைச் செய்துவிட்டோம், அதைச் செய்துவிட்டோம் என்று சொல்கிறார்கள். அதைப் பற்றி நாட்டு மக்களைப் பார்த்துக் கேட்டால் தெரியும்.

தாழ்த்தப்பட்ட அதிகாரிகளில் உயர்ந்த பதவிகளிலே இருப்பவர்களை இந்த அரசு மட்டம் தட்டியிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் ஐ.ஏ.எஸ். கிரேடில் இருப்பவர்கள்



1974 மார்ச் 21] [திரு. சு. ம. துரைராஜ்]

5-வது இடத்தில் இருந்தாலும்கூட அவர்களைத் தள்ளிவிட்டு 12-வது இடத்தில் இருப்பவர்களுக்கு ஐ.ஏ.எஸ். கொடுக்கிறார்கள். இப்படித் தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பல கொடுமைகளை இந்த அரசு செய்கிறது.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் எந்த அதிகாரி, எந்தத் துறையிலே இருக்கிறார், எந்த ஐ.ஏ.எஸ். அதிகாரியை பத்தாவது இடத்திலே இருந்தவரைத் தள்ளிப் போட்டு விட்டது என்று அவர் கூற முடியுமா ?

**திரு. சு. ம. துரைராஜ் :** இப்பொழுது சென்னை மாநகராட்சியில் இருக்கின்ற கருப்பன் என்பவருக்கு ஐ.ஏ.எஸ். கொடுக்காமல் கிரேடில் இருப்பவர்—அவர் சீனியர் மோஸ்ட் ஐ.ஏ.எஸ். கிரேடில் இருப்பவர்—சாதாரணமாக ஆர்.டி.ஓ.வாக இருந்த வைத்தியலிங்கத்திற்கு ஐ.ஏ.எஸ். கொடுத்திருக்கிறார்கள். இது என்ன நியாயம் என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

இன்றைக்குள்ள நிலைமையில் மத்திய சர்க்கார் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்காக வழங்கும் 3½ கோடி ரூபாயில் மாநில அரசு வேறு சில காரியங்களுக்காகப் பணத்தை ஒதுக்கிக்கொண்டு, மீதமுள்ள தொகையைத்தான் இந்த மாணவர்களுக்கு அளிக்கிறார்கள். அதே நேரத்தில் தாழ்த்தப்பட்ட இலாக்கா மாணவர்களுக்குக் கொடுக்கும் சலுகைகளையும் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, பிற்பட்ட மாணவர்களுக்கு அதிகச் சலுகைகளைத் தருகிறார்கள், ஸ்காலர்ஷிப் விஷயத்தில். ஆனால் அப்படிப்பட்ட சலுகைகளைத் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குக் கொடுக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சென்னையில் 17 விடுதிகளைத் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்காக ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் அங்கே வார்டன் விடுதியில் தங்குவதில்லை. அருகிலே உள்ள அவருடைய வீட்டிலேயும் தங்குவதில்லை. அதனால் மாணவர்களுக்குத் தொல்லையாக இருக்கிறது.

[திரு. சு. ம. துரைராஜ்] [1974 மார்ச் 21

பிற்பட்ட மாணவர்களுக்குப் புத்தகம் வாங்குவதற்கு, Book Money உதவித் தொகை இருப்பதைப்போல் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. நான் இதைப் பொறுமையால் சொல்லவில்லை. அந்த இலாக்கா அவ்வளவு அருமையாகப் பணி செய்கிறது. ஆனால் அதே நேரத்தில் தாழ்த்தப்பட்ட இலாக்கா அந்த அளவில் செய்யவில்லை என்பதற்காகத்தான் சொல்ல விரும்புகிறேன்.

தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு எம்.ஏ., எம்.எஸ்ஸி. பி.டெக்., எம்.பி.பி.எஸ்., எம்.காம். போன்ற படிப்புகளுக்கு 71-ஆம் ஆண்டு வரையில் கடன் கொடுக்கப்பட்டது. ஆனால் 73-ஆம் ஆண்டிலிருந்து அது நிறுத்தப்பட்டிருக்கிறது. அது ஏன் என்று புரியவில்லை. அதேபோல் பிற்பட்ட மாணவர்கள் பி.ஏ., பி.காம். படிக்கும்பொழுது அந்தக் கடனை அளிக்கிறார்கள். அது என்ன காரணம் என்று தெரியவில்லை. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., மாணவர்களுக்குப் பயிற்சி தரும் ஆசிரியர்களை அனுபவம் இல்லாதவர்களை தகுதியற்ற ஆசிரியர்களை நியமிக்கிறார்கள் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு. அதே நேரத்தில் பிற்பட்ட மாணவர்களுக்கு பேராசிரியர்களை நியமிக்கிறார்கள். அதனால்தான் தேர்வில் தாழ்த்தப்பட்ட மக்கள் தேறுவதில்லை.

அதுமட்டுமல்ல, பெற்றோர்களுக்கு ஆண்டுக்கு 2,500 ரூபாய் என்பதை இன்னும் அதிகமாக ஆக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் திண்டிவனம் நகராட்சியில் ஞானகிராம் என்பவர் எஸ்.எஸ்.எல்.சி. பொய் சர்ட்டிபிகேட் கொடுத்து செகண்டரி கிரேட் ஆசிரியராகப் பணிபுரிகிறார். அதை நம்முடைய அரசாங்கம் கெஜட்டிலே கூட சொல்லியிருக்கிறது. பொய் சர்ட்டிபிகேட் கொடுத்ததைப் போலீசார் கண்டுபிடித்தும், அவர் இன்னும் வேலை செய்கிறார். திரு. வெங்கடபதி என்ற ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த ஆசிரியருக்கு உரிய அந்தஸ்து தரப்படவில்லை என்று அவர் அதிகாரிகளிடத்திலும், அரசாங்கத்தினிடத்திலும் கோரியும் நீதி கிடைக்கவில்லை. ஆகவே, அந்த ஆதித் திராவிட ஆசிரியர் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார். இப்படி ஆதித் திராவிட ஆசிரியர்கள் நீதி கேட்டு நீதிமன்றத்



1974 மார்ச் 21] [திரு. சு. ம. துரைராஜ்]

திற்குப் போகும் அளவிற்கு இந்த அரசாங்கம் தாழ்த்தப்பட்ட மக்களை வைத்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அடுத்து, திருவள்ளூர் தொகுதியில் கூளிப்பாளையம் என்ற இடத்தில் சர்க்கார் சுமார் பத்தாண்டுகளுக்கு முன்பு இலவச வீடு கட்டும் திட்டத்தின் கீழ் சுமார் 20 வீடுகள் கட்டிக் கொடுக்கப் பட்டன. அங்கு காண்டிராக்ட் எடுத்த வீராசாமி ரெட்டியார் என்பவர் 250 ரூபாய் கொடுத்ததாக, ஏமாற்றி பொய்க் கையெழுத்து வாங்கியிருக்கிறார். இப்போது பத்து ஆண்டு களுக்குப் பிறகு இந்த ஆண்டு அதிகாரிகள் அரிசன காலனிக்குச் சென்று வீட்டை ஜப்தி செய்கிறோம் என்று சொல்கிறார்கள். இதைக் கருணைகூர்ந்து அம்மையார் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, எங்கள் தொகுதியில் ராமாபுரம் என்ற இடம் இருக்கிறது. நூறு ஆண்டுகளாக இருந்த குடும்பங்களை, பூண்டி ஏரி அரசாங்கத்திற்குத் தேவை என்பதால் அங்குள்ள அந்தக் கிராமத்தை அப்புறப்படுத்தி ராமாபுரத்திற்கு அனுப்பியிருக் கிறார்கள். அவர்கள் அங்கே வசதியோடு வீடு கட்டிக்கொண்டிருக் கிறார்கள். அப்படி இருப்பவர்களை, அந்த இடத்தை தொழில் பேட்டை விவகாரத்திற்காக உத்தரவிட்டு அதனால் காலி செய்ய வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அங்கே தொழில் பேட்டை இருக்கிறது, அரசாங்க கட்டிடம் இருக்கிறது, அது காலியாக இருக்கிறது. ஆனால் அந்த அரிசனங்கள் காலி செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். அதேநேரத்தில் பெரிய பணக்காரர்கள் அங்கே பங்களாக்கள் கட்டிக்கொண்டிருக் கிறார்கள்; ஆனால் அதன் சொந்தக்காரர்கள் சென்னையிலே இருக்கிறார்கள், எப்பொழுதாவது அங்கே வந்து தங்குகிறார்கள். அப்படி இருக்கும் அவர்களை ஏன் காலி செய்ய முன்வரவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

அடுத்து, அரியலூர் அருகில் அரிசனங்களை மிகவும் கொடுமைப் படுத்துகிறார்கள். 24 சென்ட் நிலம் வேண்டுமென்று தாசில்தாரைக் கேட்டபொழுது அவர் மனமிரங்கி 24 சென்ட் உள்ள ஒரு இடத்தில் அவர்களை வைத்தார்கள். ஆனால் ஜாதி இந்துக்கள் சேர்ந்துகொண்டு அந்த 13 குடும்பங்களை அடித்து நொறுக்கி வெளியே தள்ளியிருக்

கிறார்கள். அந்தக் குடும்பங்கள் இப்பொழுது தெருவீதியிலே அவதிப்படுகிறார்கள். இதற்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த எம்.எல்.ஏ.-வாகும். யாராக இருந்தாலும், எந்தச் சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் துரோகம் செய்தால் தீண்டாமைச் சட்டத்தின்படி எப்படிச் செய்ய வேண்டுமோ அப்படிச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தண்ணீர் விஷயத்தை எடுத்துக்கொண்டால், தண்ணீர்க் குழாய் மூலம் கொடுக்கிறோம் என்று புத்தகத்திலே காட்டுகிறார்கள். ஆனால் என்னுடைய தொகுதியிலே தண்ணீருக்காக அவதிப்படுகிறார்கள். குறிப்பாக வேப்பம்பட்டு என்ற கிராமத்தில் சுமார் 1,200 மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்குத் தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று நான் பலமுறை இந்தச் சட்ட மன்றத்தில் வாதாடியிருக்கிறேன். அங்குள்ள பெண்கள் இரண்டு மைல் தொலைவிலுள்ள ஆற்றுக்குச் சென்று தலையில் குடத்தை வைத்துத் தண்ணீர் கொண்டு வருகிறார்கள்.

அவர்களுக்குத் தண்ணீர் கொடுக்காவிட்டாலும் அந்தப் பெண்களின் மானத்தையாவது இந்த அரசாங்கம் காப்பாற்ற வேண்டும். ஏனென்றால் இப்படிப் பானைகளைத் தலையில் சுமந்து வரும் நேரத்தில் தலைமயிர் கொட்டி, தலைமயிர் இல்லாமல் இருக்கும் காட்சியைப் பார்க்கிறோம். அதனால் அந்த ஊரிலுள்ள ஆண் களுக்குப் பெண் கேட்டாலும் பெண் கொடுக்க மறுக்கிறார்கள். அப்படி இரண்டு மைல் தொலைவிலுள்ள ஆற்றுக்குச் சென்று தண்ணீர் எடுத்து வருவதால் மயிர் கொட்டுகின்ற அவல காட்சியைப் பார்க்கிறோம். இந்த நிலையை மாற்ற அரசாங்கம் பெரிய கிணற்றை வெட்டி பைப்புகளின் மூலம் தண்ணீர் கொடுக்க வசதி செய்ய வேண்டுமென்று கேட்டுக்காள்கிறேன.

இன்றைக்கு அரிசன நலத்துறையிலே மிகவும் ஊழல் நிரம்பி யிருக்கிறது. குறிப்பாக அரிசன நலத்துறையிலே ஆசிரியர்களை நியமிக்கிறார்கள். அதில் எவ்வளவு ஊழல் நடக்கிறது. சென்னையில் டி.டபிள்யு. அவர்கள் யாருடைய உத்தரவும் இல்லாமல் ஆசிரியர்களை வைத்திருக்கிறார்கள். பள்ளியில் வகுப்புகள் இல்லாமலேயே 4 ஆசிரியர்களை வைத்திருக்கிறார்கள்



சென்னையில் உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், நான்கு வெங்கடாபுரம் என்ற இடத்தில் அரிசன நல இலாக்கா ஆசிரியர்களை நியமித்திருக்கிறார்கள், சம்பளப் பட்டுவாடாவும் செய்து வருகிறார்கள். ஆனால் வகுப்புகள் இல்லை. இது என்ன நியாயம்? இதை யார் செய்தது என்பதை இந்த அரசாங்கம் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலம் வாங்கினால் அதில் ஊழல் காட்சியளிக்கிறது.

செங்கை மாவட்டத்தில் திருக்கழுக்குன்றம் ஒன்றியத்தைச் சேர்ந்த கடம்பாடி கிராமத்தின் ஹரிஜன காலனி 1966-ம் ஆண்டு கிராம வீடு கட்டும் திட்டத்தின்கீழ் அரசாங்க உத்தரவு எண் 82542/எச்.யு./1173/70-3 படி ரூ. 1,50,000 கொடுக்கப்பட்டும் இதுவரை வேலை நடைபெறாமல் இருக்கிறது. ஊராட்சித் தலைவர் வேதாசல முதலியார் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள், ஆளும் கட்சி மேலிடத்தில் அதிகத் தொடர்பு உள்ளவர்கள். அந்த ஏழை மக்களுக்கு இதுவரை ஒன்றும் செய்யாததற்குக் காரணம் என்ன வென்று தெரியவில்லை. உடனடியாகப் பார்த்து தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரிசன மக்களுக்கு நல்லது செய்கிறோம் என்று சொல்லு கிறார்கள். ஏழை மக்கள் தொழிலிலும் பொருளாதாரத் துறையிலும் வளரவேண்டும், வசதி பெறவேண்டுமென்று அரசாங்கம் கூறுகிறது. நடைமுறையில் அது நிச்சயமாக இல்லை. ஆந்திர மாநிலத்திலும் கேரள மாநிலத்திலும் அந்த மக்களுக்கு நிதி கார்ப்பரேஷன் அமைத்து பணத்தைக் கொடுக்கிறார்கள். அதே போன்று தமிழகத்திலும் தனி நிதி கார்ப்பரேஷன் அமைத்து அந்த மக்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட சதவிகிதத்தின்படி எவ்வளவு வேலைகள் கொடுத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. உண்மையிலேயே நல்ல அரசாங்கமாக இருந்தால் ஒரு நீதிக் கமிஷன் வைத்து உண்மையிலேயே தாழ்த்தப் பட்டவர்களுக்கு எத்தனை சதவிகிதம் வேலை கொடுத்திருக்கிறோம் என்ற கணக்கைக் கொடுக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

[1974 மார்ச் 21

**திரு. வை. பாலசுந்தரம்:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, அரிசன நல மானியத்தை வரவேற்று சில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.

கல்வி, பொருளாதார மேம்பாடு, சுகாதாரம், வீட்டு வசதி திட்டங்களுக்காக இந்த நாட்டிலே வாழ்கின்ற தாழ்த்தப்பட்ட மக்களுடைய நலனைக் கருதி இந்த அரசு ஏறத்தாழ 10 கோடி ரூபாயை அந்த மக்களுக்கு நல்ல திட்டங்களைத் தீட்டுவதற்கு வழிவகை செய்திருக்கிறது என்பதை மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் காலையிலிருந்து இதுவரை பேசிய அங்கத்தினர்கள் அத்தனை பேரும் இந்த 10 கோடி ரூபாய் செலவு செய்வதில் 6 கோடி ரூபாய் கல்விக்காகச் செலவிடுகிற தன்மையை அரிசன நல இலாகா ஏற்றுவிட்ட காரணத்தால் மற்றப் பணிகளைச் செய்ய முடியாமல் போகிற தன்மை ஏற்படுகிறது.

பக்கத்தில் மதிப்பு மிக்க கல்வியமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். கல்விக்காக நம்முடைய அரசு 100 கோடி ரூபாய்க்கு மேல் செலவிடுகிற தன்மையில் அரிசன நல இலாகா கல்விக்காகச் செலவிடுகிற 6 கோடி ரூபாயையும் மானியமாகத் தந்தால் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் நன்றியுடையவர்களாக இருப்பார்கள் என்பதை இந்த நேரத்தில் கல்வியமைச்சர் அவர்களுக்கும் இந்த அரசுக்கும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

கல்வி கண் போன்றது என்பதை நாம் அறிவோம். கல்வியைக் கொண்டுதான் இந்த நாட்டில் வாழ்கின்ற தாழ்த்தப்பட்ட மக்களுடைய கண்களைத் திறக்க வேண்டுமென்ற கருத்தைக் காரணமாகக் கொண்டு கல்வியமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். கல்விக்காக ஆகக்கூடிய 6 கோடி ரூபாயை அவர்கள் ஏற்றுக்கொண்டு செயல்படுவார்களானால் மற்றத் திட்டங்களின் மூலம் தாழ்த்தப்பட்ட மக்கள் பல முனைகளில் வளர்ந்து இந்த ஆட்சியை வாழ்த்துவார்கள்; இந்த ஆட்சியை வழி நடத்திச் செல்லும் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களையும் வாழ்த்துவார்கள் என்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1974 மார்ச் 21] [திரு. வை. பாலசுந்தரம்]

இந்தச் சமுதாயம் எதிர்காலத்திலே வளரவேண்டும், வாழ வேண்டுமென்ற அக்கறை அத்தனை பேருக்கும் உண்டு. ஆளும் கட்சி உறுப்பினர்கள் கூட எதிர்க்கட்சி வரிசையிலிருந்து பேசுகின்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களைப் போல் காரசாரமாகப் பேசியதை நாம் பார்த்தோம். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கட்டுப்பட்டு இருக்கும் சூழ்நிலை இருந்தாலும் இந்த மானியத்திலே மட்டும் எப்படியும் பேசலாம் என்ற கருத்தைக் கொண்டு வந்திருப்பதற்காக உள்ளபடியே திராவிட முன்னேற்றக் கழகத்தின் பரந்த மனப்பான்மையை இந்த மானியத்திலே காட்டியிருக்கிறது என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரிசனப் பள்ளிகள் ஏறத்தாழ 839 பள்ளிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதிலே 714 பள்ளிகள் சொந்தக் கட்டடத்தில் நடத்தப்படுகின்றன. 125 பள்ளிகளுக்குச் சொந்தக் கட்டடம் கிடையாது. 1968-69-ல் இவைகளுக்கெல்லாம் சொந்தக் கட்டடம் தேவை, கட்ட வேண்டுமென்ற அறிகுறி சொல்லப்பட்டது. இன்றையதினம் 1974-75-ல் ஒரு ரூபாய் ஏற்பட்டு ஒதுக்கியிருக்கக் கூடிய தொகை கடலில் கரைத்த பெருங்காயம் என்ற நிலைமையில் தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

எதைஎதையெல்லாமோ இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செய்து வருகிற இந்த அரசு அந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைத்தால் அவர்கள் மிகவும் நன்றியுடையவர்களாக இருப்பார்கள். ஏறத்தாழ 21,000 கிராமங்களுக்குக் குடிநீர் வசதி தந்து 3,000 கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்து தரவேண்டுமென்ற நிலை இருக்கிறது. அதையும் இந்த அரசு செய்து முடிக்கும் என்று நம்புகிறேன்.

ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டித் தர நல்ல மனது வைத்திருக்கும் இந்த அரசு 1972-ல் 1.94 லட்சம் ரூபாய் ஒதுக்கி யிருந்தது; 1973-74-ல் 2.50 லட்சம் ஒதுக்கியிருந்தது; 1974-75-ல் அது 2.25 லட்சமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய காரணம் என்னவென்று தெரியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. வை. பாலசுந்தரம்] [1974 மார்ச் 21

வீடு கட்டுகின்ற திட்டத்தை இந்த நாட்டினுடைய தாழ்ந்து கிடக்கிற சமுதாயத்தை வாழ வைக்கும் திட்டமாக சென்ற ஆண்டிலேயே முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. சென்ற ஆண்டே பணியைத் துவக்கியிருந்தால் இந்த ஆண்டு சிறப்பான பணியாக ஏதுவாகியிருக்கும். இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருப்பதில் எந்தெந்தத் திட்டங்கள் அடிப்படையில் செய்ய இருக்கிறார்கள் என்பதைத் தெளிவாக அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என்று கருதுகிறேன். ஒரு கோடி ரூபாயில் ஒரு லட்சம் வீடுகள் கட்டுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எத்தனை ஆண்டுகளில்? ஆண்டுக்கு எத்தனை வீடுகள்; ரூபாய் எவ்வளவு ஒரு வீட்டுக்கு என்பதை எல்லாம் அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என்று நம்புகிறேன்.

தாழ்த்தப்பட்டவர்கள் சிறு தொழில் செய்வதற்காக அரசு கடன் தருகிறது. இது வீண் விரயம் என்பதுதான் என்னுடைய கருத்தாகும். ஒருவருக்கு 500 ரூபாய் தருகிறார்கள் என்றால் உண்மையிலேயே 250 ரூபாய்தான் கைக்குப் போய்ச் சேருகிறது. ஆகவே, இதை அடியோடு நிறுத்திவிட்டு பத்து லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றால் மாவட்டத்திற்கு ஒரு லட்சமோ, இரண்டு லட்சமோ ஒதுக்கி வசதியற்றவர்கள் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் தொழிற்சாலை அமைக்கும் அளவுக்கு நல்ல நிலைமையை உருவாக்கி வந்தால் ஆண்டுக்கு 10, 15 தாழ்த்தப்பட்டவர்கள் தொழிலதிபர்களாக மாற சாத்தியக்கூறு இருக்கிறது. அரசு இந்த முயற்சியைக் கையாள வேண்டும்.

பால் வழங்கு திட்டத்திற்காக அரசு நல்ல நிலைமைகளைச் செய்திருந்தாலும் இந்த ஆண்டு பால் வழங்குகின்ற கறவை மாடுகளுக்கு ஒன்றுமே செய்யாத நிலைமை இருக்கிறது. இதற்கு ஆவன செய்ய வேண்டும்.

தீண்டாமை நாட்டினுடைய கோரப் பிரச்சினை; நாட்டை உலுக்கிக் கொண்டிருக்கும் பிரச்சினை. அதை மீறுகின்றவர்கள் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று எண்ணிப் பார்க்கும்போது எத்தனை வழக்குகள் பதிவு செய்திருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் தெளிவாகத் தெரிவிக்க வேண்டுமென்று கோரிக்கையை விடுக்கிறேன்.



1974 மார்ச் 21] [திரு. வை. பாலசுந்தரம்]

கலப்புத் திருமணங்களுக்குத் தங்கப் பதக்கம் வழங்கும் திட்டம் தீவிரமான திட்டம், புரட்சிகரமான நடவடிக்கை. அதிலே முதல்வர் கலைஞர் அவர்கள் வழிகாட்டியாக இருக்கிறார். அவர் தாழ்த்தப்பட்ட சமுதாயப் பெண்ணைத் தன் மகனுக்கு எடுத்து வழிகாட்டியிருக்கிறார். சட்டமன்ற உறுப்பினர்களைத் தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்வது—திருமணமாகாத சிலர் இருப்பார்கள் என்று கருதுகிறேன். அவர்கள் எல்லாம் இன்றையதினம் தாழ்த்தப்பட்ட சமுதாயப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள முன்வர வேண்டும்.

திருமணமாகிவிட்டாலும் பரவாயில்லை. தங்கள் பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் தாழ்த்தப்பட்ட பெண்களை, பிள்ளைகளைத் திருமணம் செய்வித்து நாட்டுக்கு வழி காட்டுகிற அளவுக்குச் சென்றால்தான் இந்த நாடு உருப்படும். கலப்புத் திருமணம் செய்து கொள்வதற்கான சூழ்நிலை மேலோங்கும். முதல்வர் அவர்களுக்கு மட்டும் அக்கறை இருந்தால் போதாது; முதல்வர் வழி காட்டி விட்டால் மட்டும் போதாது. அவர் பின்னாலே செல்லுபவர்களும் அவர் காட்டிய வழியைப் பின்பற்றாவிட்டால் நாடு உருப்படாது என்பது என்னுடைய கோரிக்கை.

(பிற்பகல் 4.30)

அடுத்து, இந்த மன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற, அ.தி.மு.க.-வின் தலைவர் ஒரு, நான்கு மாதங்களுக்கு முன்பு தாழ்த்தப்பட்டவர்களுக்கு விகிதாசாரம் மூலம் சலுகைகள் அளிப்பது குற்றம், என்று பகிரங்கமாக ஏடுகள் மூலம் சொல்லியிருப்பது எங்களையெல்லாம் பாதிக்கக்கூடியதாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சமுதாயத்தில் தாழ்ந்து வீழ்ந்து போய் கிடக்கக்கூடிய இந்த மக்களை வாழ்விக்க, அவர்களுக்கு வாழ்வளிக்க சலுகைகள் அளிக்கப்படுகின்றன என்பதைப் புரிந்து கொள்ளாமல் வேடம் போட்டு ஏமாற்றுகிற தன்மையில் . . .

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** அவையில் நடக்கிற நிகழ்ச்சிகளுக்கும் உறுப்பினர் அவர்கள் சொல்வதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது, என்ன தொடர்பு இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

[1974 மார்ச்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் பார்த்துக் கொண்டுதா இருக்கிறேன்.

**திரு. வை. பாலசுந்தரம்:** இது எங்களுடைய உரிமையை பாதிக்கக்கூடிய பிரச்னையாக இருப்பதால்தான் சொல்கிறேன் அவர்கள், எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிறார்கள். நமது முத அமைச்சர் அவர்கள் அவருக்கு மதிப்பளித்து ஏதாவது செய் விடக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

புரட்சித் தலைவர் என்று சொல்லிக்கொண்டிருப்பவர், தாழ்ந் நிலையில் உள்ள மக்கள் இன்று ஒரு அடி மேலே வரும்போத தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று சலுகைகள் கொடுப்பது தவ அது சமுதாய விரோதத் தன்மை, அது சமுதாய துரோகத் தன்மை, அது நாட்டுக்கு விரோதமானது என்று ஒரு தலைவ பேசுகிறார் என்றால் என்ன அர்த்தம் என்று எனக்குப் புரியவில்லை

(திரு. பெ. சௌந்தரபாண்டியன் எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களைப் பற்றி என்ன சொன்னார்? உட்காருங்கள்.

**திரு. வை. பாலசுந்தரம்:** சமுதாயத்தில் வீழ்ந்து கிடக்கு மக்களுக்குச் சலுகைகள் அளிப்பதால் அவர்களை ஓரளவிற்கு உயர்த்துவதற்கு அரசு வசதிகள் செய்து தருகிறது, வாய்ப்புகள் செய்து தருகிறது. இந்த வகையில் ஒரு சமுதாயம் அவர்கள் சலுகை பெறுகிற காரணத்தால் படிப்படியாக மேலே போகிறார்கள் என்றால் மேல்குடி மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் மேலே போகி காரணத்தால் மேட்டுக்குடியில் இருப்பவர்கள் கீழே வீழ்ந்து வி வார்கள். கீழே இறங்கிவிடுவார்கள், அப்படி மேட்டுக்குடி மக்கள் கீழே இறங்கி விட்டால் அவர்களை உயர்த்த ஒரு திட்டம் தேவை படும் என்று இப்படி ஒரு தலைவர் கூறுகிறார்.

இந்தச் சங்கடங்களைத் தவிர்க்க இந்த அரசு சிறந்த சேவை களைச் செய்யவேண்டும் என்பது என் கோரிக்கை. தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை உயர்த்தப் பாடுபடும் இந்த அரசு யார் போடுகி வேஷத்திற்கும், யார் போடுகிற மாலைக்கும், யார் போடுகி தூபத்திற்கும் அடிமையாகாது என்பது திண்ணம். (மணியடிக்கப் பட்டது.)





முதல்வர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இது ஒரு சாபக்கேடான சமூகம். ஒரு சமுதாயம், தாழ்த்தப்பட்ட சமுதாயம் வளர்வதற்கு சில சலுகைகளைப் பயன்படுத்துகிற நேரத்தில் பொறுமைக்காரர்கள் அதைத் தூண்டிக்க அரசின் மீது பழிபோடுவார்கள். அதையெல்லாம் பொருட்படுத்தாமல்—முதல்வர் அவர்கள் சொன்னதுபோல்—தன் மீது குழந்தை கழிக்கும் மலஜலத்தை தாய் சந்தனமாகக் கருதி அதை எடுத்து எறிவது போல் யாராவது தூண்டி விட்டாலோ அல்லது தாழ்த்தப்பட்ட மக்கள் சிலநேரங்களில் சலுகைகளை யாராவது தவறாகப் பயன் படுத்தினால் அதைப் பொருட்படுத்தாமல் இந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு வழங்குகிற சலுகைகளை துணிவாக உளப்பூர்வமாகச் செய்தால் கார் உள்ளளவும் கடல்நீர் உள்ளளவும் தாழ்த்தப்பட்ட மக்கள் டாக்டர் கலைஞர் அவர்களே உங்கள் பக்கம்தான் இருப்பார்கள், உங்கள் பக்கம்தான் இருப்பார்கள் என்று. தலைவர் அவர்களே தங்கள் மூலம் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** ஏற்கனவே நான் எழுப்பிய பிரச்னைதான். தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு ரூ. 25 கொடுக்கிறார்கள். அதை மாற்றியமைத்து ரூ. 50 என்றளவிற்கு உயர்த்தி அறிவிப்பார்கள் என்று அன்றே நினைத்தேன். இன்று ஹரிஜன நலத் துறை அமைச்சர் அவர்கள் ஏதாவது அறிவிப்பு செய்ய இருக்கிறார்களா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். கடந்த ஆகஸ்ட் மாதம்தான் ரூ. 25 என்றிருந்ததை ரூ. 28-ஆக உயர்த்தியிருக்கிறோம். அதிலும் மாணவிகளுக்கு ஒரு ரூபாய் கூட, ரூ. 29 என்று உயர்த்தியிருக் கிறோம்.

*** திரு. என். மருதாசலம்:** தலைவர் அவர்களே, இந்த ஹரிஜன நல மானியக் கோரிக்கை மீது என் கருத்துக்களைச் சொல்ல ஆசைப் படுகிறேன்.

இந்த மானியத்திற்காக ரூ. 10 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது ஹரிஜனங்களின் நலனுக்காகப் போய் சேருகிறதா என்று பார்த்தால் இல்லை என்பதுதான் என் அபிப்பிராயம். இன்று

[திரு. என். மருதாசலம்] [1974 மார்ச் 21

ஹரிஜன இல்லங்களில் ஹரிஜன மாணவர்கள் தங்கிப் படிக்கிறார்கள். அங்குள்ள வார்டர்கள் இல்லங்களில் மாணவர்களுக்குச் சரியானபடி உணவு கொடுப்பதில்லை. காலையில் சிறிது கஞ்சி ஊற்றுவது மாலையில் சிறிது கஞ்சி ஊற்றுவது என்று செய்து அரசாங்கம் கொடுக்கக்கூடிய பணத்தைத் திருடுகிறார்கள் என்பது தான் என் கருத்து. ஆகவே ஹரிஜன இல்லங்களை நல்ல முறையில் கண்காணிக்கவேண்டும். அங்குள்ள மாணவர்களை சுகாதார முறையில் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சத்தியமங்கலத்தில் தலைமை இல்லத்தில் ஒரு பெரிய வார்டன் இருக்கிறார். அவர் அந்த இல்லத்தில் உள்ளதை தனக்கே பயன் படுத்திக்கொண்டு அங்குள்ள ஏழை மாணவர்களுக்கு கஞ்சி ஊற்றி மோசம் செய்கிறார். ஆகவே பல புகார்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதனாலேயே அவர் செல்வந்தராக ஆகியிருக்கிறார் என்று தெரிய வருகிறது. ஆகவே அதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று மாணவமாணவிகளுக்கு ஸ்காலர்ஷிப் வழங்கப்படுகிறது. கோவையில் இந்த ஸ்காலர்ஷிப்ஸ் அங்குள்ள ஹரிஜன மாணவர் களுக்கு கொடுக்கப்படவில்லை. ஆகவே அந்த ஸ்காலர்ஷிப்பை உடனடியாகக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பின்தங்கிய வகுப்பினருக்கு முன்னாலேயே ஸ்காலர்ஷிப் கொடுத்துவிடுகிறார்கள். அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் அதிகமாகவும் கொடுக்கிறார்கள். ஆகவே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அதிகமாகக் கொடுக்கவேண்டும், தக்க சமயத்தில் கொடுக்க வேண்டும் என்றும், கேட்டுக்கொள்கிறேன். மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கிடைக்காத தால் அவர்கள் படிக்க முடியவில்லை என்ற நிலை இருக்கிறது. அதைக் கவனிக்கவேண்டும்.

இப்போது ஒரு முனிசிபல் தொழிலாளிக்கு ரூ 100 சம்பளம் இருக்கிறது, வேறு பல சலுகைகளும் இருக்கின்றன, ஆக மொத்தம் ரூ. 200-க்கு மேல் வருமானம் வருகிறது. மில் தொழிலாளிகளுக்கும் ரூ. 200-க்கு மேல் சம்பளம் வருகிறது. ஆக, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2,500-க்கு மேல் வருமானம் வருகிறது. ஆனால் இப்போது ஆண்டு ஒன்றுக்கு வருமானம் 2,500 ரூபாய்க்கு குறைவாக உள்ளவர்களின்



1974 மார்ச் 21] [திரு. என். மருதாசலம்]

பிள்ளைகளுக்குத்தான் பள்ளிகளில் சலுகை அளிக்கப்படுகிறது. ஆகவே இந்த ரூ. 2,500 என்ற வரம்பை ரூ. 5,000 என்றளவிற்கு உயர்த்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பின்னர், ஊராட்சி ஒன்றியங்களிலும் சரி அல்லது நகரசபை களிலும் சரி அல்லது சர்க்கார் காரியாலயங்களிலும் சரி உத்தியோகங்களில் 18 சதவிகிதம் கொடுக்கவேண்டுமென்றிருக் கிறது. ஆனால் அந்த 18 சதவிகிதம் அளவிற்கு கொடுப்பதில்லை. ஒரு கமிட்டியை சர்க்கார் அமைத்துப் பார்த்தால் இதன் உண்மை தெரியும். ஆகவே அந்த முறையைக் கையாளவேண்டும்.

பின்னர், குடியிருப்பு மனைகளுக்காக கோவையில் பல ஊர்களில் இருந்து மனுக்கள் போட்டிருக்கிறார்கள். 1967-ல் போட்டவர் களுக்குக் கூட இதுவரை குடியிருப்பு மனை வழங்குவது பற்றி எந்தவிதமான பதிலும் வரவில்லை. குடியிருப்பு மனைகளுக்காக எந்தெந்த ஊர்களிலிருந்து மனுக்கள் போட்டார்கள் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். குமாரபாளையம், பன்றிபாளையம், மதுக்கரை, வெள்ளலூர், போன்ற ஊர்களில் போட்டு இருக்கிறார்கள். மூன்று வருஷம் ஆகிறது. இது வரையிலும் அவர் களுக்குக் குடியிருப்பு மனைகளை வழங்கவில்லை. சென்ற ஆண்டு நமது அரசாங்கம் ஒதுக்கிய பணத்திலிருந்து தையல் மிஷின், டோபிகளுக்கு பட்டா இதுவெல்லாம் கொடுக்கப்பட்டது என்று சாதனையாகச் சொல்லியிருக்கிறார்களே தவிர, இது வரையிலும் கோவையில் கொடுக்கப்படாமல் இருக்கிறது. உடனடியாக அவற்றைக் கொடுக்க உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

நகர் சுத்தித் தொழிலாளர்களுக்குத் தள்ளு வண்டி மூலம் மலம் எடுத்துச்செல்வதற்கு வசதி செய்து கொடுத்திருப்பதாக இந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தாலும், சில இடங்களில் இன்னும் தலைமேல் மலத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு செல்லும் நிலை இருக்கிறது. அதை மாற்றுவதற்கு அரசு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசன நல மானியத்தின் மூலம் என்னென்ன நடவடிக்கைகளை அரிசனங்களுக்கு நன்மை செய்வதற்காக அரசு கருதியிருக்கிறதோ அவற்றைச் செவ்வனே செய்வதற்கு உரிய முறைகளை அரசு கையாள வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. மு. வேதாசலம் :** [1974 மார்ச் 21

தலைவரவர்களே, மீன் வள மானியத்தை வரவேற்றுப் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மீன் வள மானியத்தைப் பொறுத்தவரையில் 1 கோடியே 76 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது போதாது. இந்த மானியத்திற்கு ரூ. 10 கோடியாவது ஒதுக்க வேண்டும். நமக்குப் பெரிய கடல் இருக்கிறது. கடலில் ஏராளமான பொருள்கள் இருக்கின்றன. அதைப் பிடிக்க மீனவர்களால் முடியவில்லை. நம்முடைய ஆட்சிக் காலத்தில் அதற்குத் தகுந்த விஞ்ஞானக் கருவிகளைக்கொண்டு தந்து, அதன் மூலம் அவைகளைக் கொண்டு கடலில் உள்ள மூலப் பொருள்களை எடுத்துக் கொள்ள முடியும். இதற்கு 10 கோடி ரூபாய் ஒதுக்கினால் ரூ 30 கோடி வருமானம் வர வாய்ப்பு உண்டு. இந்த அரசாங்கம் இதை உடனடியாகக் கவனிக்க வேண்டும்.

நம்முடைய டாக்டர் கலைஞர் ஆட்சியில் மீனவர்களுக்கு நிறைய மானியங்களைத் தந்து, நிறைய வசதிகளைத் தந்து, அவர்களுக்குப் புதிய படகுகளைத் தந்து, விஞ்ஞானப் படகுகளைத் தந்து, மீன் எடுக்க உதவி செய்தால் உணவு பற்றுக்குறையைத் தடுக்க முடியும். நம்முடைய வருமானமும் பெருகும், உணவுப் பற்றுக்குறையும் நீங்கும் என்பதால், இதற்கு அதிகப் பணம் ஒதுக்கவேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய நாட்டிலே உணவுப் பற்றுக்குறையை காட்டு கிறார்கள். அதிக உற்பத்தி செய்வதற்கு முடியவில்லை. ஆகவே, இந்த மீன் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு ஒரு 'மாஸ்டர் பிளான்' போட்டு, அதன் மூலம் மீனவர்களுக்கு எல்லா உதவி யையும் செய்து அதிக அளவில் மீன் பிடிப்பதற்கான வழிவகை களைச் செய்யவேண்டுமென்று வேண்டிவிரும்பிக் கேட்டுக்கொள் கிறேன். அந்த மாஸ்டர் பிளானுக்கு அதிகப் பணம் ஒதுக்க வேண்டும். அப்படிப் பணம் ஒதுக்கினால் எல்லாக் காரியங் களையும் செய்ய முடியும்.

நமக்கு இப்போது மிகத் திறமையான ஒரு டைரக்டர் கிடைத்து இருக்கிறார்கள். அந்த டைரக்டரை வைத்து, அந்த இலாகா நல்ல காரியங்களைச் செய்ய முடியும். சென்னை மாநில





பெடரேஷனுக்கு ரூ. 35 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். அது போலவே ரூ. 75 லட்சத்தை திருநெல்வேலி பெடரேஷனுக்கும் ஒதுக்கியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நல்ல காரியங்களைச் செய்வதற்கு இந்த அரசை நான் பாராட்டுகிறேன்.

வடசென்னை நகரத்தில், இராயபுரத்தில் இருக்கும் மீன் பிடி துறைமுகத்தை விரைவில் வண்ணைப்பகுதியில் கட்டித் தரவேண்டு மென்று பல ஆண்டுகாலமாகச் சொல்லி வருகிறோம். அங்கே யிருக்கும் மீனவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அது உங்களுக்கும் நன்றாகத் தெரியும். அதைத் துரிதப்படுத்தவேண்டு மென்று வேண்டிவிரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் ஏ.ஜி. காலனி, சி.ஜி. காலனி என்று 1954-ம் ஆண்டிலிருந்து அந்த மீனவர்களுக்கு லீஸ் லேண்டாக கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதைப் பட்டா செய்து தருமாறு வேண்டிவிரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

விசைப்படகுகள் மீனவர்களுக்கு வழங்கப்படுகின்றன. சில நேரங்களில் மீனவர்களுக்கு மழையாலோ அல்லது மீன் உற்பத்தி இல்லாததாலோ அவர்கள் பணம் சம்பாதிக்க முடிவதில்லை. அதனால் அவர்கள் அந்த விசைப்படகுகளுக்கு உண்டான மாதத் தவணைப் பணத்தைக் கட்டத்தவறினால் 'பெனல்டி இன்டரஸ்ட்' போட்டு வாங்குகிறார்கள். விவசாயிகளுக்கு என்னென்னவோ செய்கிறீர்கள், இப்படி மீனவர்களிடமிருந்து 'பெனல்டி இன்டரஸ்ட்' வாங்குவதைக் கேன்சல் செய்யவேண்டுமென்று டாக்டர் கலைஞர் அவர்களை வேண்டிவிரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்கள் வாழும் பகுதி குடிசைப் பகுதி. கடற்கரைப் பகுதிகளில் அவர்கள் குடிசைகளைக் கட்டிக்கொண்டு எவ்வளவு மோசமான நிலையில் வாழ்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். அவர்களுக்கு ரோடு வசதி, லைட் வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சரியான சாலை வசதி, லைட் வசதி இல்லாததால் அவர்கள் பிடிக்கும் மீன்களை சாலையில், கொண்டு வரமுடியவில்லை. இதையெல்லாம் பலமுறை சொல்லி யிருக்கிறேன். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விசைப்படகுகளை மீனவர்களுக்கு தருகிறார்கள். அதிலே வேலை செய்யும் மீனவர்களுக்கு கட்டாய இன்ஷூரன்ஸ் தேவை. அவர்கள் இறந்தால் அரசாங்கம் ரூபாய் 1,000 தருகிறார்கள். அது போதாது. இன்ஷூரன்ஸ் செய்தால்தான் அவர்கள் குடும்பம் வாழ முடியும். ஆகவே, மீனவர்களுக்குக் கட்டாய இன்ஷூரன்ஸ் திட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று வேண்டிவிரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

குடிசையில் வாழ்கிற மீனவர்களை அப்புறப்படுத்தி, கல் விடுகளைச் சென்னையில் கட்டிக்கொண்டு வருகிறோம். அது போலவே, கிராமப்புற பகுதியில், கடற்கரைப் பகுதியில் குடிசையில் வாழ்கிற மீனவர்களுக்கு வீடுகள் கட்டித் தரவேண்டுமென்று வேண்டிவிரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். பட்டா இல்லாத புறம்போக்கு நிலங்களில் மீனவர்கள் குடிசை கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அதைப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று வேண்டிவிரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்கள் எல்லாத் தரத்திலும் குறைந்து இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களிலும் தாழ்த்தப்பட்டவர்களாக மீனவர்களின் நிலை இருக்கிறது. ஆகவே, நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் மீனவர்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று பலமுறை சட்டமன்றத்தில் கேட்டு இருக்கிறேன். யார் யாருக்கோ, என்னென்னவோ செய்யும் டாக்டர் கலைஞர் அவர்கள் எங்களுடைய சமுதாயத்தையும் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கவேண்டுமென்று பலமுறை சட்டமன்றத்தில் கேட்டிருக்கிறேன். எங்களுக்கு எந்த உயர்ந்தப் பதவி இல்லாவிட்டாலும், எங்களுக்கு சாதாரண டிபுடி கலெக்டர் பதவி கூட கொடுக்கப்படவில்லை என்ற குறை இருக்கிறது. தயவுசெய்து உங்களுடைய நல்ல காலத்திலேயே, உங்களுடைய ஆட்சி காலத்திலேயே எங்களுக்கு இந்த மாதிரியான நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று வேண்டிவிரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

பல பகுதிகளில் மீனவர்களுக்கு மீன் பிடிப்பதற்கு நல்ல துறைமுகம் இல்லை. எண்ணூரிலும், குளச்சலிலும் மீன் பிடிப்புத் துறைமுகம் ஏற்படுத்த வேண்டும். அங்கேயெல்லாம் மீன் பிடிப்பதற்கு நல்ல வசதிகளைச் செய்து கொடுத்தால் சால



சிறந்ததாக இருக்கும் என்று சொல்லி, இந்த மீன் உற்பத்தியால் கண்டிப்பாக உணவுப் பற்றாக்குறையைத் தீர்க்க முடியும், ஆகவே, இதற்கு ஒரு மாஸ்டர் பிளான் போடவேண்டுமென்று கேட்டு, அப்படிப் போட்டால் இந்த நாட்டில் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும், கண்டிப்பாக முடியும் என்று கூறி, எனக்கு வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. கருப்பையா :** பேரவைத் தலைவரவர்களே, இந்த அரிசன நல மானியத்தை நான் மனப்பூர்வமாக ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

இந்த மானியத்தில் ஏதோ இருப்பதை நல்ல விதமாக செய்ய நல்லபல திட்டங்களைத் தீட்டி இருக்கிறார்கள். இந்த மானியத்தின் உரையைப் பார்க்கிறபோது, ஒரு உயர்ந்த திருமண வீட்டில் எல்லாப் பதார்த்தங்களும் இருப்பது போல் தெரிந்தாலும், உண்மையிலேயே வயிறு புடைக்கச் சாப்பிட முடியாதது போல் தெரிகிற மாதிரி இருக்கிறது. காரணம் பொருளாதார நெருக்கடி என்று நினைக்கிறேன். இந்தப் பொருளாதார நெருக்கடியில் இவ்வளவு தான் செய்யமுடியும் என்பதை நான் உணருகிறேன்.

இருந்தாலும் கூட, இந்த தமிழகத்தைப் பொறுத்தவரையில் 4-ல் ஒரு பங்கு தொகையுள்ள அரிசன மக்களுக்கு இந்த மானியத்தில் ஒதுக்கப்பட்டிருக்கும் இந்தப் பணம் காணாது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. இங்கே பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த 10 கோடி ரூபாயில் கல்விக்கு ஒதுக்க வேண்டும், ரோடு வசதி செய்து கொடுக்க வேண்டும், சுகாதாரத்திற்கு செலவழிக்கவேண்டும், இவையெல்லாம் பார்த்தால் இது உண்மையிலேயே பற்றாக்குறையாக இருக்கிறது என்பது தெரியும். இதிலே நல்ல திட்டங்கள் இருக்கின்றன. ஏழைகளுக்கு பட்டப்படிப்பிற்கு கடன் கொடுப்பதும், வீட்டு வசதி மற்றும் நல்ல பல திட்டங்கள் இருந்தாலும் அதற்கெல்லாம் ஒதுக்கியிருக்கும் பணம் அந்தச் சமுதாயத்திற்கு நிறைவு செய்ய முடியுமா என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இங்கே காலையிலிருந்து பேசிய அத்தனை பேரும் இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கிய பணம் காணாது என்பதை ஒப்புக் கொண்டார்கள். ஆகவே, எதிர்க்கட்சியில் இருக்கிறவர்கள் எல்லோரும் ஒன்றாகக்கூடி மாண்புமிகு முதலமைச்சர் அவர்

[திரு. ஆ. கருப்பையா] [1974 மார்ச் 21

களிடத்தில் இந்த இலாகாவிற்கு அதிகமாக பணம் கொடுக்க வேண்டும் என்று கேட்கவேண்டும். அப்படிக் கேட்பதன் மூலம் இந்தச் சமுதாயத்தை உயரத் தூக்கி விடுவதற்கு இந்த சட்ட மன்றத்தில் இருக்கும் அத்தனை உறுப்பினர்களும் போராடி, அந்தப் பணத்தை ஒதுக்கித் தருவதற்கு நீங்கள் எல்லாம் உதவிசெய்ய வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஏனென்று கேட்டால் இன்றைக்கு பல சங்கடங்கள் இந்த சமுதாயத்தை அதிகம் உள்ளாக்கிக்கொண்டிருக்கிறது; சுதந்திரம் கிடைத்து 26 ஆண்டுகள் ஆகியும் கூட இன்னும் சரியான நிலையில் மற்ற மக்களோடு தொடர்புகொண்டு வாழ முடியாத சூழ்நிலையில் அவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்காக நாம் ஆண்டுக்கு ஆண்டு பணம் ஒதுக்கி செலவழித்தாலும் ஒரு சிலரைத் தான் முன்னேற்றம் அடையச் செய்ய முடிகிறதே தவிர, பலரையும் அந்த அளவுக்கு முன்னேற்றம் அடையச் செய்ய முடியாத நிலை இருக்கிறது. காரணம், பொருளாதார நெருக்கடியினால் அவர்கள் எல்லோரையும் முன்னேற்ற முடியவில்லை.

ஆகவே, அவர்கள் முன்னேற்றத்திற்கு இன்னும் கொஞ்சம் கூட பணம் ஒதுக்கிக்கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அண்ணன் பாலசுந்தரம் அவர்கள் சொன்னது போல கல்வி மானியத்திலே 6 கோடி ரூபாயை கல்வி அமைச்சர் கொடுத்துவிட்டால், இந்த 6 கோடி ரூபாய் மற்ற காரியங்களுக்கு இந்த இலாகாவுக்கு மிஞ்சும். மனமுவந்து அப்படிச் செய்தால் நாங்களெல்லாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் ஒரு சில காரியங்களை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த 18 சதவிகிதம் ரிசர்வேஷன் எல்லா வேலைகளிலும் கொடுத்துவருகிறார்கள். நாங்கள் அதை பாராட்டு கிறோம். ஆனால் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் வேலைக்கு ஆள் தேர்வு செய்யும்பொழுது, பாதியும் முழுவதற்கும் ஒட்டு மொத்தமாக வைத்து செலக்ஷன் பண்ணி அதில் 18 சதவிகிதம் கொடுக்கிறார்கள். அப்படிப் பார்க்கிறபொழுது அதில் நகரவாசிகளும் பட்டணத்துவாசிகளும் தான் அந்தத் தேர்விலே தேர்வு பெற்று அந்த வேலைக்கு வரமுடிகிறது. விளையாட்டு போன்றவை



1974 மார்ச் 21] [திரு. ஆ. கருப்பையா]

களுக்கு அவர்கள் தான் மார்க் பெற்று வரமுடிகிறது. கிராமப் புறத்திலுள்ளவர்கள் அம்மாதிரி தேர்வில் வெற்றி பெற்று வர முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, மாவட்டங்களில் அங்கங்கே தேர்ந்தெடுக்கப்படுபவர்களுள் அரிசனங்களுக்கு அந்தச் சலுகைகளை மாவட்டவாரியாகக் கொடுக்கவேண்டும். அப்பொழுது தான் கிராமப்புறத்திலுள்ளவர்கள், கிராம சூழ்நிலை தெரிந்தவர்கள் அந்த உத்தியோகத்திற்கு வரமுடியும். ஏழை எளிய சமுதாயத்திற்கு நல்ல பாதுகாப்பாக இருக்கும் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அளவுக்கு அரசு கொஞ்சம் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

இன்றைக்கு இருக்கிற பொருளாதார நெருக்கடியில் தாழ்த்தப் பட்ட மக்களுக்கு, நலிந்துகிடக்கும் சமுதாயத்தினருக்கு பலன் அளிக்கும் வகையில் கிராமப்புறங்களில் அதிகமாக கூட்டுறவு அரிசன பால் வழங்கு சொஸைடிகளை ஏற்படுத்தவேண்டும். நஷ்டம் வந்தது என்றெல்லாம் சொன்னார்கள். எப்படி வந்தது என்றெல்லாம் கேட்டார்கள். பால் விற்கமுடியாமல் நஷ்டம் வரவில்லை. சரியானபடி மாடுகளுக்கு தீவனம் கொடுக்கமுடியாத நிலையில் தான் நஷ்டம் வந்திருக்க முடியும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் அரிசன பால் வழங்கும் சொஸைடி களிலுள்ள பாலை நல்ல முறையில் விற்றுக் கொடுக்கும் பொறுப்பை அரசாங்கம் எடுத்துக்கொண்டால் நஷ்டம் ஏற்படாது என்பதையும் மிகத் தாழ்மையுடன் கூறிக்கொள்கிறேன். அந்தத் திட்டம் நல்ல திட்டமாக இருக்கிற காரணத்தினால் இதை அதிகமாக கிராமப் புறங்களில் விஸ்தரிக்கவேண்டும். எல்லா கிராமங்களிலும் சேரிகளில் இந்த பால் வழங்கு சொஸைடிகளை விஸ்தரிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய ஏழை நலிந்த குழந்தைகளுக்கு சத்துணவு கொடுக்கிறோம். அந்த சத்துணவுத் திட்டம் பெரும்பாலும் எங்கே இருக்கிறது என்று கேட்டால் மேல் மக்கள் வாழக்கூடிய, உயர்ந்த சகமான மக்கள் வாழக்கூடிய அந்த இடங்களில் தான் இருக்கின்றன. அதனால் ஏழை எளிய மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எந்தவிதமான பலனும் இல்லை. காரணம் என்னவென்று கேட்டால் ஊராட்சி மன்றத்தில் பொறுப்பிலிருப்பவர்கள் மேல்

ஜாதிக்காரர்களாகத் தான் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு வேண்டிய பக்கத்து கிராமங்களில் தான் பால்வாடிகளை ஏற்படுத்து கிறார்கள்.

நல்ல சத்துணவு வழங்கும் இடத்தை ஏழை எளிய தாழ்த்தப் பட்ட மக்கள் வாழும் இடங்களில் வைக்கவேண்டும். இல்லா விட்டால் அவர்கள் அங்கே போய் பயனடைய முடியாமல் இருக்கிறது. இந்தத் துறை அமைச்சர் அவர்கள் கண்டிப்பாக 300 ஜனத்தொகை உள்ள அரிசன கிராமங்களில் அந்த மக்களுக்கு பயன்படத்தக்க வகையில் பால்வாடிகள் ஏற்படுத்தவேண்டும் என்று உத்தரவிடவேண்டும். ஏனென்றால் அப்படிப்பட்ட இடங் களில் தான் தாய்மார்கள் குழந்தைகளை காலையிலே 6 மணிக்கு விட்டுவிட்டுப்போனால் மாலையில் திரும்பிவருகிற வரையில் அங்கு என்ன கிடைத்தாலும், மண் கிடைத்தாலும் அதையே சாப்பிட்டுக் கொண்டிருக்கவேண்டிய நிலையில் இருக்கிறது. மற்ற தாய்மார்கள் நிலை அப்படியில்லை. வீட்டில் குழந்தைகளை பார்ப்பதைவிட்டுவிட்டு குழந்தைகளை பால்வாடிகளில் விட்டுவிட்டு காலை 6 மணிக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

நான் மனப்பூர்வமாகக் கூறிவிட்டேன். எங்கள் பஞ்சாயத்தில் இருந்த பால்வாடியை உடனே அரிசன சேரிக்கு மாற்றிவிட வேண்டும் என்று சொல்லிவிட்டேன். எல்லா கிராமங்களிலும் கண்டிப்பாக பால்வாடிகள் இருக்கவேண்டும். ஏழை எளிய குழந்தைகளை யாரும் பார்த்துக்கொள்ள முடியாத நிலையில் தாய்மார்கள் காலையில் குழந்தைகளை விட்டுவிட்டுப்போனால், அந்தப் பிள்ளைகள் அவர்கள் திரும்பி வரும் வரைக்கும் தெருவில் கடந்து கஷ்டப்படவேண்டியிருக்கிறது, திண்டாடவேண்டி யிருக்கிறது. அவர்களுக்கெல்லாம் பாதுகாப்பு அளிக்கும் முறையில் பால்வாடிகளை அரிசனச் சேரிகளில் ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் கூட இந்த சமுதாயத்தை உயர்த்துவதற்கு நாம் தீண்டாமை ஒழிப்பு என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். தீண்டாமையை ஒழிக்க பறக்கும் படைகள் போட்டிருக்கிறோம். பறக்கும் படைகள் போட்டிருந்தாலும் கூட, அப்படியிருந்தும் தீண்டாமை ஒழிந்தபாடில்லை. காரணம் என்ன? பறக்கும்



படையினரிடம் அதற்கான ஆட்களை கண்டுபிடித்துக் கொடுத்தாலும் கூட, அதிலே சில மேல் மக்களை கையில் வைத்துக் கொண்டு, கோர்ட்டுக்குப் போனாலும் இந்த சமுதாயத்திலிருக்குப் பலன் கிடைக்கவில்லை, சாட்சிகளை உழப்பிவிடுகிறார்கள்.

ஆகவே தீண்டாமையை ஒழிக்கவேண்டுமானால், அதற்கு முக்கியமாக எந்தவிதமான விசாரணையும் இல்லாமல் அவர்களை தண்டிப்பதற்கு ஒரு சட்டத்தை இயற்றவேண்டும். அப்பொழுது தான் தீண்டாமையை இந்த நாட்டை விட்டு விரட்ட முடியும்.

இங்கே இருக்கிற அரிசன உறுப்பினர்கள் அத்தனை பேர்களையும் கேட்டுக்கொள்கிறேன். மயிலே மயிலே என்றால் இறகு போடாது. காலால் மிதித்து பிடுங்கிக்கொள்ள வேண்டும். தாக்கினால் திருப்பித் தாக்க வேண்டும். அதற்குத் தயாராக இருக்க வேண்டும், அப்பொழுது தான் தீண்டாமையை இந்த நாட்டை விட்டு விரட்ட முடியும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து, முடித்துக்கொள் கிறேன்.

* **திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** அரிசன நல இலாகா, மீன்வளத் துறை மான்யங்களின் பேரில் எனது கருத்துக்களைச் சொல்ல முன்வந்துள்ளேன்.

அரிசன நலத் துறையில் 10 கோடி ரூபாய் அளவுக்கு இங்கே அமைச்சர் அவர்கள் மான்யம் கேட்டிருக்கிறார்கள். இதிலே 220 லட்சம் ரூபாய் பள்ளிக் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் அறிவோம். பொதுவாக நாட்டிலே அரிசனங்கள் இல்லாத மக்களுக்கெல்லாம் இலவசக் கல்வியை நாம் கொடுக்கின்ற பொழுது, அரிசனங்களுக்கும் கல்வி மான்யத்திற்கு உட்பட்டுத் தான் இந்தத் தொகை செலவழிக்கப்படவேண்டுமே தவிர, அரிசனங்களுக்கு சலுகை கொடுக்கிறோம் என்ற பெயரால், ஏதோ தனிச் சலுகை கொடுக்கிறோம் என்ற பெயரால் அவர்களுடைய பள்ளிக் கல்விக்காக செலவழிக்கப்படுகிற தொகையை அரிசன நல மான்யத்தில் கேட்பது அவ்வளவு நியாயமானது அல்ல என்பது என்னுடைய கருத்து.

நாட்டிலே கல்வி வளர்ச்சி நன்றாக இல்லை, நல்ல முறையில் கல்வி புகட்டப்படவேண்டும் என்ற கருத்து இருக்கும்பொழுது, கல்வி ஒரே நிர்வாகத்தின் கீழ் வரவேண்டும் என்று நினைக்கிறபொழுது, அரிசன நல இலாகா மூலம் இம்மாதிரியாக தனியாக பள்ளிகள் நடத்துவது சரியான கல்வியைக் கொடுப்பதற்கு உதவிபடியாக இருக்காது. அதுவும் அல்லாமல் அரிசனங்களுக்கு ஏதோ தனி சலுகைகள் கொடுப்பதுபோல், இந்தத் தொகையை செலவழித்து கணக்கில் காட்டுவது அதைவிட நியாயத்திற்கு புறம்பானது. இந்தப் பள்ளிகளுக்கு செலவழிக்கக் கூடிய தொகையை பொதுக் கல்வியோடு சேர்த்துக்கொள்ள வேண்டும், அரிசன நல மான்யத்தில் சேர்த்துக்கொள்ளக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஹாஸ்டல்களுக்கு தொகை ஒதுக்கும்பொழுது, ஒரு மாணவனுக்கு ரூ. 25 என்று இருப்பதை ரூ. 28 ஆக்கியிருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய விலைவாசி ஏற்றத்தில் 28 ரூபாயில் ஒரு மாதத்திற்கு ஒரு பிள்ளை சாப்பிட முடியுமா? அப்படிக் கணக்குப்போட்டு விகிதாசாரம் பார்த்தால் 85, 90 காசு வருகிறது. 90 காசை வைத்துக்கொண்டு மூன்று வேளை உணவு உண்ணக்கூடிய மாணவர்களுடைய உடல் நிலை எப்படி இருக்கும் என்பதை தயவுசெய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். நிதிநிலை இடம் தரவில்லை என்பதற்காக மட்டும் விட்டுவிட முடியாது. வேறு ஏதாவது வழிவகைகள் கண்டுபிடித்தாக வேண்டும். அவர்களுடைய உடல் நலம் பாதிக்காமல் அவர்களுக்கு சரியான சாப்பாடு போடக்கூடிய அளவுக்கு விலைவாசி ஏற்றத்துக்கு தகுந்தமாதிரி தொகையை அதிகரிக்கத் தான் வேண்டும். இதே நிலைமை நீடிக்கக் கூடாது. அப்படியிருந்தால் ஹாஸ்டல் மாணவர்கள் சொல்லிக்கொள்ளாமல் ஓடிப்போய்விடுவார்கள். படிப்பும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம், யார் பட்டினி கிடப்பது என்று ஓடிப்போய்விடுவார்கள். எங்கள் ஊரில் ஒரு ஹாஸ்டல் இருக்கிறது. நாற்பது பையன்களில் 10 பிள்ளைகள் ஓடிவிட்டார்கள். யார் பட்டினி கிடப்பது என்று ஓடிப்போய்விட்டார்கள். அதனால் நாம் செலவழிக்கின்ற பணம் விரயமாகும். அது நல்ல முறையில் பயன்படுத்தமுடியாத நிலைமைகள் ஏற்படும். ஆகவே, அதற்கான தொகையை அதிகரிக்கத் தான் வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





கல்லூரியில் படிக்கின்ற மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் தொகை போதாது. விலைவாசி ஏறிப்போய் வாழ்க்கைச் செலவு அதிகரித்திருக்கிற காரணத்தினால் அதையும் நாம் அதிகரித்துத் தான் கொடுக்கவேண்டும். இதற்கு ஏதாவது வழி வகைகள் கண்டு பிடித்தாகவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தீண்டாமை ஒழிப்பு பற்றி ரொம்ப உணர்ச்சிவசப்பட்டு உறுப்பினர்கள் இங்கே பேசினார்கள். இவ்வளவு ஆண்டுக் காலமாக தீண்டாமையை ஒழிக்கிறோம் என்று நாம் முயற்சி செய்தாலும், தீண்டாமை ஒழிந்ததா என்று பார்த்தால் ஒழியவில்லை. ஏதோ நகர்ப்புறங்களில் அது அதிகப்படியாக, வெளிப்படையாக தெரியாமல் இருக்கிறது. கிராமப்புறங்களில் வெகு காலத்திற்கு முன்பு எப்படி நிலைமை இருந்ததோ, அதே நிலை தான் இன்றைக்கும் கிராமங்களில் இருக்கின்றன. ஆகவே, தீண்டாமை ஒழிப்பை அமுலாக்குவதற்கு தீவிரமான முறையில் புதிய வழி முறைகளை கையாள்வதற்கு அரசாங்கம் முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5.00)

இன்னும் அரிசன சேரிகளுக்கு நல்ல பாதை வசதி இல்லை; அவர்கள் இடுகாட்டுக்குச் செல்ல பாதை வசதி இல்லை போதுமான அளவுக்கு. எத்தனையோ ஆண்டுகளாக அவர்களுக்கு எத்தனையோ நன்மைகளைச் செய்வதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். ரொம்பக் காலமாக இந்த முக்கியமான தேவைகளைக்கூட நிறைவு செய்ய முடியவில்லை. சொல்லிக்கொண்டே இருப்பதில் இனி பிரயோஜனம் இல்லை; ஒரு ஆண்டு அல்லது இரண்டு ஆண்டு காலத்தில் இன்னின்ன வசதிகளைச் செய்து முடிக்கவேண்டுமென்று திட்டமிட்டு ஒவ்வொன்றாக செய்து முடித்துவிட வேண்டும். ஆகவே, ஆண்டாண்டு காலமாகச் சொல்லிக்கொண்டிருக்காமல் இன்னும் 2 அல்லது 3 ஆண்டு காலத்திற்குள்ளாக எல்லா அரிசன சேரிகளுக்கும் பாதை வசதியும், இடுகாட்டுக்குச் செல்ல பாதை வசதியும் செய்துகொடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல இடங்களில் குடிதண்ணீர் வசதி இன்னும் செய்து கொடுக்கப்படவில்லை. குடிதண்ணீருக்காக கிணறு வெட்ட ஒதுக்கப் படும் தொகையும் குறைவாக இருக்கிறது. அரசாங்கம் ஒதுக்கக் கூடிய பணத்திற்கு ஒரு கிணற்றை வெட்டிக்கொடுங்கள் என்று கான்ட்ராக்டர்களைக் கேட்டால் இந்த பணத்திற்கு எங்களால்

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1974 மார்ச் 21

வெட்ட முடியாது என்று சொல்லிவிடுகிறார்கள். அந்தப் பகுதி அரிசன மக்களையாவது கான்ட்ராக்ட் எடுத்துக்கொள்கிறீர்களா என்று கேட்டால் 'நாங்கள் கூலி வேலை செய்து பிழைப்பை நடத்துவோமா அல்லது கான்ட்ராக்ட் எடுப்போமா' என்று கேட்கிறார்கள். ஆகையால் கிணறு வெட்டுவதற்கு எவ்வளவுத் தொகை தேவைப்படுகிறதோ அவ்வளவையும் அரசாங்கமே கொடுத்து கிணற்றை வெட்டிக்கொடுக்க, வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரிசனங்களுக்கு மனைக்கட்டுகள் அரிசனத் துறையின் மூலமாகக் கொடுக்கப்படுகிறது. கிராம வீட்டு வசதி திட்டத்தின்—அதாவது மத்திய அரசு திட்டத்தின்—அடிப்படையில் சென்ட்ரல் கவர்ன்மென்ட் மூலம் மனைக்கட்டுகள் கொடுக்கிறோம். இந்த மனைக்கட்டுக்களை ஆர்ஜிதம் செய்து அவர்களுக்கு கொடுக்கும் போது ஒரு நபருக்கு 2 சென்ட் தான் வருகிறது. இந்த 2 சென்ட் என்பது மிகவும் குறைவானதாகும். ஆனால் மத்திய அரசு கொடுக்கின்ற பணத்திற்கு அவ்வளவுதான் வரும். ஆகவே, அரிசனங்களுக்கு இந்தக் காரியங்களுக்காக நாம் தனியாக நிலம் ஆர்ஜிதம் செய்வதை விட, மத்திய அரசாங்கத்தின் உதவியைப் பயன்படுத்தி, அவர்கள் கொடுப்பது போக நாம் ஓரளவு சேர்த்துக் கொடுத்தால் நல்லது. முழு உதவியையும் மாநில அரசே செய்ய வேண்டுமென்று அவசியம் இல்லை. அவர்கள் 2 சென்ட் நிலம் கொடுத்தால், அரிசன நிதியிலிருந்து இன்னொரு சென்ட் வாங்கி, அரிசனங்களுக்கு 3 சென்ட்டாக கொடுக்கலாம். ஆகவே, மத்திய அரசாங்கத்தின் நிதியையும் சேர்த்து மாநில அரசாங்கம் குறைந்த அளவு உதவி செய்தால் போதுமானதாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி நேரத்தின்போது கூட இந்த விபரத்தைப்பற்றிச் சொன்னார்கள். ஒரு குறிப்பைக் கூட எழுதிக் கொடுத்தார்கள். பட்டுக்கோட்டை தாலுகாவில் அரிசனங்களுக்கு இரண்டு சென்ட் அளவில் ரூரல் ஹவுசிங் ஸ்கீமில் கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். ரூரல் ஹவுஸ்லெஸ் ஸ்கீம் தான் மத்திய அரசின் திட்டம், அதில் ஜாதி பாகுபாடு கிடையாது. அரிசனங் களுக்கும் மற்றவர்களுக்கும் அந்தத் திட்டப்படி கொடுக்கலாம்.



1974 மார்ச் 21] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

அரிசனங்களுக்கு என்று நாம் கொடுப்பது, அரிசன் வெல்பேர் இலாகா மூலமாக நிலத்தை ஆர்ஜிதம் செய்து, ரெவின்யூ இலாகா மூலமாக பட்டா கொடுக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த குறிப்பின் பேரில் அதிகாரிகளை விசாரித்தேன். அவர்கள் இந்த விபரங்களைத்தான் கொடுத்திருக்கிறார்கள். மத்திய அரசின் திட்டம் ரூரல் ஹவுஸ்லெஸ் ஸ்கீம். நிலமற்ற எல்லோருக்கும் அது பொருந்தும். நாம் கொடுப்பது, அரிசன் வெல்பேர் டிப்பார்ட்மென்டின் மூலம் நிலத்தை ஆர்ஜிதம் செய்து, ரெவின்யூ டிப்பார்ட்மென்ட் மூலமாக அரிசனங்களுக்குப் பட்டா கொடுக்கிறோம். ஆக, இரண்டும் வெவ்வேறு விதமானவை. அவர்கள் சொல்வதுபோல் அரிசனங் களுக்கு 2 சென்ட் நிலம் அல்ல, 3 சென்ட், 4 சென்ட் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திடம் சொல்லி வாங்கிக் கொடுத்தால் அதைப்பெற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** இரண்டு சென்ட் அல்ல, 3 சென்ட் அல்ல ; 5 சென்ட் கொடுங்கள் என்று வேண்டுமானாலும் நாங்கள் சொல்லத் தயார்தான். யார் எப்படி செய்தாலும், செய்கின்ற உதவி போதுமானதாக இருக்க வேண்டும் என்பதுதான் எங்கள் எண்ணம்.

அடுத்தபடியாக மீனவர் சமுதாயத்தைப்பற்றி இரண்டொரு கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். அரிசன சமுதாயத்தைவிட மிகவும் மோசமான நிலையில் மீனவர் சமுதாயம் இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது மிகவும் அவசியமாக இருக்கிறது.

(திரு. வை. பாலசுந்தரம் தலைமை)

எவ்வளவோ உதவிகளைச் செய்திருந்தாலும். அவர்கள் நிலை உயர்ந்திருக்கிறதா என்று பார்த்தால் இல்லை.

மீனவர்களுக்கு போட்டுகள் கொடுக்கிறோம் ; நைலான் நூல் கொடுக்கிறோம். அதைப் பயன்படுத்தி அந்த சமுதாயம் முன்னேறி யிருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. அதற்கு காரணம் என்ன என்று நாம் பார்க்க வேண்டும்.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1974 மார்ச் 21

மீனவர்கள் மிகவும் ஏழைகளாக இருக்கிறார்கள். அரசாங்கம் கொடுக்கின்ற போட்டுகளையும், நைலான் நூலையும் பெற்று அவர்களால் சரியாகத் தொழில் நடத்த முடியவில்லை. ஆகவே, அவர்கள் பெயரைச் சொல்லி, வேறு சில ஜாதிக்காரர்கள், வசதி படைத்தவர்கள் பலனடைந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் மீனவர்கள் கூலி வேலை செய்கிறார்கள். கூலி வேலை செய்து, அவர்கள் கொடுக்கின்ற கூலியில் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலை இன்னும் மாறவில்லை. இந்த நிலையை மாற்ற வேண்டும்.

இந்த ஆண்டு ஆரம்பக் காலத்திலிருந்து மீனவர்களுக்குக் கொடுக்கப்பட்ட படகுகள் அவர்கள் வளர்ச்சிக்கு பயன்பட்டிருக் கிறதா என்பதை ஒரு குழு போட்டு பரிசீலனை செய்ய வேண்டும். மீனவர் பெயரால் யாரோ பயனடைகிறார்கள். அதை சிக்கார்டுகளில் எப்படி வைத்துக்கொள்கிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. ஆக உரியவர்களுக்கு பலன் கிடைக்க வில்லை என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீனவர்களுக்கு உதவி செய்கிறோம். ஒரு படகு கொடுத்தால், அந்தக் குடும்பத்தில் எத்தனை பேர் வாழ்க்கை நடத்துகிறார்கள்; வாழ்க்கை நிலை மேம்பட்டிருக்கிறதா என்பதை கண்டறிய வேண்டும். இரண்டு படகு கொடுத்தால் 20 பேர், 30 பேர் பிழைப்புக்கு வகை செய்திருக்கிறோம் என்ற நிலை ஏற்பட வேண்டும். அதல்லாமல் யாரோ ஒருவர் பயனடைந்து, அவர்களிடமிருந்து 3 ரூபாய், 5 ரூபாய் கூலி பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்ற நிலை இருக்கக்கூடாது. சாதாரண கட்டு மரங்களை வைத்து 100 ரூபாய்க்கு மீன் பிடித்துக்கொண்டிருந்தால், நாம் கொடுக்கின்ற படகை வைத்து 500 ரூபாய்க்கு மீன்பிடித்து, அதன் பலனை அவர்கள் அடைந்தால் அவர்கள் வாழ்க்கை முன்னேறியிருக்கிறது என்று பொருள். ஆனால் அந்த பலன் அவர்களுக்குப் போகாமல் எங்கோ போகிறது. அதை பரிசீலனை செய்து, மீனவர்களுக்கு பலன் கிடைக்கத்தக்க வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது 'ஃபிஷிங் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன்' ஏற்படுத்தப்பட்டிருப்பது நல்லது; வரவேற்கிறேன். மீன் வளத்தைப் பெருக்கி உணவுப் பற்றாக்குறையை போக்குவது, மீனவர் சமுதாயம் அதிக வருமானம் பெற வழி செய்வது என்ற இரண்டு



1974 மார்ச் 21] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

நோக்கத்தோடு இந்த கார்ப்பரேஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த நோக்கம் நல்ல முறையிலே ஈடேற வேண்டும். மீன்பிடித் தொழிலில் கிடைக்கின்ற வருவாய் முழுவதும் மீனவர் சமுதாயத்திற்கே போய்ச் சேர வேண்டும். நலிந்திருக்கின்ற அந்தச் சமுதாயத்தினர் அதனால் முன்னேற வேண்டும்; அந்த சமுதாயம் வாழ்க்கையில் முன்னேற வேண்டும். அந்த வகையில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

கடற்கரை ஓரத்தில் இருக்கின்ற பல மீனவர் குடியிருப்புகளுக்கு சரியான பாதை வசதி இல்லை. அதை உடனடியாக செய்து கொடுக்க வேண்டும்.

விசைப்படகுகள் எல்லோருக்கும் கொடுக்க முடியாது. ஆனால் விசைப்படகு ஓட்டுவதற்கு தகுதி படைத்தவர்களுக்கு கொடுக்க வேண்டும். எல்லோருக்கும் விசைப்படகுகள் கொடுக்க முடியும் என்ற நிலை வரும் வரையில் விசைப்படகு கிடைக்காத குடும்பங்களுக்கு நாட்டுப்படகுகள், கட்டுமரங்களை கொடுக்கலாம். விசைப் படகு கொடுக்கும்வரையில் அவர்களை அப்படியே விட்டுவிடக் கூடாது. மெகனைஸ் பண்ணுவது ஒரு புறம் இருந்தாலும் அவர்களுடைய பரம்பரைத் தொழிலுக்கு உதவ வேண்டும்.

நைலான் நூலுக்கு 20 சதவிகிதம் சப்சிடி கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இருக்கின்ற நிலைமை என்ன? எங்கே போனாலும் நூல் கிடைக்கவில்லை என்ற நிலை இருக்கிறது. பிளாக் மார்க்கெட்டில் கிடைக்கிறது. ஆகவே, சப்சிடியில் நைலான் நூல் கொடுக்காவிட்டால் கூட பரவாயில்லை. நியாயமான விலையில் கிடைக்கச் செய்தால் போதும். சப்சிடி கொடுத்து அரசாங்கம் நஷ்டமாவதைவிட, நியாய விலையில் கிடைக்கச் செய்தால் அவர்களுக்குப் பெரிதும் பயன்படும். அதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இருப்பது உள்நாட்டில் மீன் வளர்ப்பு பற்றியது. இருக்கின்ற குளங்களில் எல்லாம் மீன் வளர்ச்சி செய்ய முயற்சிக்க வேண்டும். அதில் அதிகக் கவனம் செலுத்தப்படவில்லை. எங்கோ ஒன்றிரண்டு குளங்களில் மீன்களை வளர்த்தால் போதாது. உள்நாட்டு நீர் நிலைகளில் மீன் வளர்ச்சியைப் பெருக்கினால் இங்கே இருக்கின்ற ஏழை மக்களும் பெரும் பயனடைவார்கள். மேட்டூர் அணை, பெரியாறு அணை போன்ற பெரிய நீர்

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1974 மார்ச் 21

நிலைகளில்தான் இப்போது வளர்க்கப்படுகிறது. 10 ஏக்கர், 5 ஏக்கர், 3 ஏக்கர் பரப்புள்ள ஏரிகளில் கூட மீன்களை வளர்க்கலாம். எல்லா குளம் குட்டைகளிலும் மீன்களை வளர்க்க வேண்டும். ஒரு ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்தால் கிடைக்கும் வருமானத்தை விட, ஒரு ஏக்கர் குளத்தில் மீன்களை வளர்த்தால் அதிக வருமானம் கிடைக்கும் என்று நான் சொல்லவில்லை; இத்துறையிலே உள்ள வல்லுநர்கள், அதிகாரிகள் எல்லாம் சொல்கிறார்கள். ஒரு 50 ஏக்கர் பரப்புள்ள குளத்தில் மீன்களை வளர்த்தால் 50 குடும்பங்கள் அதில் பிழைக்கலாம். உள் நாட்டில் மீன் வளர்ப்பதற்கு என்று புதிதாக குளம் குட்டைகளை வெட்ட வேண்டியதில்லை.

இருக்கின்ற குளங்களையே பயன்படுத்திக்கொள்ளலாம். சிறிய சிறிய குளங்களில் மீன்களை வளர்த்து, உள்நாட்டிலே இருக்கின்ற மீனவர் சமுதாயங்களுக்கு அல்லது அத்தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு பிழைப்புக்கு வழிவகைச் செய்யலாம். அதனால் பல குடும்பங்கள் வாழ்க்கை மேம்பட வசதி இருக்கிறது. ஏனென்றால் சாகுபடி செய்வதை விட மீன்வளர்ப்பில் அதிக வருமானம் வருவதாகச் சொல்கிறார்கள். ஒரு ஏக்கர் குளத்தில் குறைந்தது 3,000 ரூபாய் வருமானம் கிடைக்கும். அதிகாரிகளின் கணக்கு இதைவிட அதிகம். 500 ரூபாய், அல்லது 1,000 ரூபாய் செலவழித்தால் போதும். ஆகவே, அதில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி அதிராம்பட்டிணத்தில் மணல் பகுதி கிடையாது. கடற்கரை பகுதி சேறானது. கடலில் மீன்பிடிக்கப் போகவேண்டுமென்றால் 1½ மைல் சேற்றில் நடந்துபோகவேண்டியிருக்கிறது. அங்கே இயற்கையாகவே ஒரு காட்டாறு இருக்கிறது. அதைவெட்டி அகலப்படுத்தி (Boat) போய்வர வசதி செய்துகொடுத்தாலே போதும். வேறு அங்குள்ள மீனவ சமுதாய மக்களுக்கு வேறு எதுவும் செய்யவேண்டாம். இதுபற்றி நான் முன்பே எழுதி, அதிகாரிகள் எல்லாம் வந்துபார்த்து ஐந்து வருஷத்திற்கு முன்னடி 2 லட்சம் எஸ்டிமேட் போட்டார்கள். அந்தக் காரியத்தைச் செய்துகொடுத்தால் ஆயிரம் மீனவர்களுக்குமேல் பயன் அடைய முடியும். அதைச் செய்துகொடுத்தால் அங்குள்ள மீனவச் சமுதாயத்தினர் சங்கடம் இல்லாமல் வாழ்வார்கள் என்று சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.



1974 மார்ச் 21]

**திரு. எம். பன்னீர்செல்வம் :** சட்டப்பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1974-75-ம் ஆண்டுக்கான அரிசன நலத் துறை மானியக் கோரிக்கையை வரவேற்று எனது சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மானியக் கோரிக்கைகளை ஆளும் கட்சியில் உள்ளவர்கள் ஆதரித்து, வரவேற்றுப் பேசினார்கள். எதிர்க்கட்சியில் இருக்கிறவர்கள், எதிர்க்கவேண்டுமென்கிற நிலை யையில் பல தவறுகளை எடுத்துச் சுட்டிக்காட்டிப் பேசினார்கள்.

நான் வடாற்காடு மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்களைக் கொண்டு கூட்டுறவு பஸ் டிரான்ஸ்போர்ட் ஒன்றை நடத்த தாழ்த்தப்பட்ட மக்களிடம் 10¼ ரூபாய் வீதம் வசூலித்து ஏறத்தாழ 84 ஆயிரம் ரூபாய் மத்திய கூட்டுறவு வங்கியில் பற்றுக் கணக்கில் வைக்கப்பட்டிருக்கிறது. நான் அதன் தலைவர். ஆனால் போக்குவரத்துத் துறை அமைச்சரை அணுகிக் கேட்டபோது, வழித்தடங்களை நாட்டுடைமை ஆக்கப்பட்ட காரணத்தினால் அதற்கு அனுமதி உத்தரவு அளிக்க மறுத்துவிட்டார்கள்.

இன்றையதினம் தாழ்த்தப்பட்ட மக்களது கூட்டுறவு பண்டக சாலையாக அதை மாற்றுகிறபோது அரசாங்கம் அந்தப் பண்டக சாலை மூலமாகவே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உணவுதானியங்கள் விநியோகம் செய்ய அதனை உபயோகப்படும்படி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் தமிழகத்தில் பார்க்கிறபோது 3-இல் ஒரு பங்கு இந்தச் சமுதாய மக்கள் வாழ்கிறார்கள். இவர்களுடைய நன்மைக் காக இந்த அரசு 110 கோடி ரூபாய் செலவழிக்கிறது என்பதைப் பார்க்கிறபோது இந்த அரசைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இன்றையதினம் உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் ஆகியவை அடிப்படையாகக் கொடுத்தாகவேண்டும் என்பதை உணர்ந்து அரசு பல திட்டங் களைத் திட்டிச் செயல்படுகிறது.

மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப்பார்க்கிறபோது இந்த அரசு செய்து வருகிற காரியங்கள் எல்லாம் பெருமைப்படக்கூடியதாக இருந்தாலும் அங்கங்கே இருக்கக்கூடிய ஒன்றிரண்டு குறைபாடு களையும் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

[திரு. எம். பன்னீர்செல்வம்] [1974 மார்ச் 21

அப்படிப் பார்க்கிறபோது இந்தச் சமுதாயத்தினருக்கு வேலைகளுக்கு 18 சதவிகிதம் ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று இந்த அரசு சொன்னாலும்—ஊராட்சிகளை எடுத்துக்கொண்டாலும், நகராட்சிகளை எடுத்துக்கொண்டாலும்—ஆம்பூர் அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியத்தையே எடுத்துக்கொண்டாலும் அதுபோல 18 சதவிகிதம் கொடுக்கப்படுவதில்லை. மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் பேசுகின்றபோது நான் இதைக் குறிப்பிட்டிருக்கிறேன், உள்ளே இருக்கிற அதிகாரிகள் இருட்டடிப்புச் செய்கிறார்கள் என்பதையும் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இந்த அரசு அதற்குத் தக்க நடவடிக்கை எடுத்து, இந்தச் சமுதாயத்தினருக்கு 18 சதவிகிதம் வேலை வாய்ப்புகளில் இடம் ஒதுக்கித்தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல இன்றையதினம் இந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்காக சட்டமன்றத்திற்குத் தனித் தொகுதி இருக்கிறது, பாராளுமன்றத்திற்குத் தனித் தொகுதி இருக்கிறது. அதைப்போல ஊராட்சி மன்றம் 386 இருக்கின்றன, நகராட்சிகள் 90 இருக்கின்றன என்றால் அவற்றின் தலைவராக இந்தச் சமுதாய மக்கள் வருவதற்காக—தனித் தொகுதி ஒதுக்கீடுபோல—இவ்வளவு சதவிகிதம் இவர்களுக்காக என்று ஒதுக்கித் தர வேண்டும். மாற்றுத் தலைவர் அவர்களே, நீங்கள் சென்னைமாநகராட்சி மன்றத் தலைவராக இருந்திருக்கிறீர்கள்.

அதுபோல இன்றையதினம் தமிழகத்தில் இருக்கக்கூடிய 365 ஒன்றியங்களில், 90 நகராட்சி மன்றங்களின் தலைவர்களில்—இந்தச் சமுதாயத்தினர்களும் வரவேண்டுமென்றால் நான் தமிழக முதல்வர் அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். சிலபல இடங்களை இவர்களுக்காகவே என்று ஒதுக்கித்தந்தாகவேண்டும். எனக்கு முன்னால் திரு. பாலசுந்தரம் பேசுகின்றபோது, மாண்புமிகு சௌந்தரபாண்டியன் பேசியபோது—நான் இதைத்தான் சுட்டிக் காட்ட நினைத்தேன். இன்றையதினம் நாங்கள் ஒரு பெரிய அணியில் இருந்து பணியாற்றிக்கொண்டிருக்கிறோம். பவுடர் போடுகிறவர்களோடு ஓடவில்லை. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் வாழ்வளிக்கிறது என்பதை பலரும் உணர்கிற காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது.



1974 மார்ச் 21]

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** சார் ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். இந்தச் சட்டமன்றத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தான் இருக்கிறது. பவுடர் போடுகிற இயக்கம் என்று இல்லை. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்த வார்த்தையை நடவடிக்கைக் குறிப்பில் இருந்து எடுக்கவேண்டும். அதற்கு மிகக் கடுமையான ஆட்சேபணையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** பவுடர் போடுகின்ற இயக்கம் என்றால் அண்ணா தி.மு.க. இயக்கம்தான் என்பதை ஏற்றுக்கொள்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** என் பெயரைக் குறிப்பிட்டு விட்டு அந்த இயக்கம் என்றதால் நான் ஆட்சேபணையை எழுப்பினேன். இதுநேரம் வேடிக்கைக் கேள்விக்கு பொருத்தம் இல்லை, வேதனைப்படுகிறேன். நான் எழுப்பிய நடைமுறைக்கேள்விக்கு பேரவைத் தலைவர் என்ன ரூலிங் கொடுக்கிறார் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. பாலசுந்தரம்) :** திரு. பன்னீர்செல்வம் அவர்கள் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பவுடர் போடுகிற இயக்கம் என்றால் நீங்கள் ஏன் உங்களைத் தான் என்று எடுத்துக் கொள்கிறீர்கள்? இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** அவர் என் பெயரைக் குறிப்பிட்டு பின் அதைச் சொன்னார். நமது சட்டமன்றத்தில் காங்கிரஸ் கட்சி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்றுதான் இருக்கிறதே தவிர . . .

**திரு. கு. காமாட்சி :** சார் ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் தம் அபிப்பிராயத்தைச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் சௌந்தரபாண்டியன் அவர்கள் வேடிக்கை பார்க்கலாமே தவிர அபிப்பிராயம் சொல்லக் கூடாது என்று சொன்னது முறைதானா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** என்னுடைய கேள்வி இந்த அவையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தான் இருக்கிறது. அவர் சொன்னதுபோன்ற இயக்கம் இல்லை. அவரது

[திரு. பெ. சௌந்தரபாண்டியன்] [1974 மார்ச் 21

அடிப்படை பேச்சே தவறானதாக இருக்கிறது. அதை அனுமதித்தால் அதைப்போல நாங்களும் பேசமுடியும். அது இந்த அவைக்குப் பொருந்துமா ?

**திரு. என். கணபதி :** தலைவர் அவர்களே, பவுடர் போடுகின்ற இயக்கம் சட்டமன்றத்தில் இல்லையென்று உறுப்பினர் சௌந்தரபாண்டியன் அவர்கள் சொன்னார். பவுடர் போடுகின்ற இயக்கம் வெளி உலகத்தில் இருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. பாலசுந்தரம்) :** அவர் பேசுகின்றபோது ஒரு கருத்தைச் சொன்னார், இன்னார்தான் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை. அவர் பவுடர் போடுகின்ற இயக்கம் என்று சொல்லும்போது உங்களைத்தான் சொன்னார் என்று நீங்கள் ஏன் கற்பனையாக நினைத்துக்கொள்கிறீர்கள் ?

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** இந்த அவையே இப்பொழுது கற்பனையில்தான் நடந்து கொண்டிருக்கிறது என்று நினைக்கிறேன். பொறுப்புள்ள ஒரு கட்சியைப் பார்த்து, அவர் இதைப் போல் சொல்வது, அதற்கு பேரவைத் தலைவர் இப்படி சொல்வது முறையல்ல. இது வளருமேயானால், பேரவைக்குக் களங்கம் ஏற்படுத்தும், இதை வளர விட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது, நமது சௌந்தரபாண்டியன் அவர்களுடைய பேச்சையும் குறிப்பிட்டு, பௌடர் போடுகிற கட்சி என்று குறிப்பிட்டார். தாங்களே கேட்கலாம் எந்தக் கட்சி என்று. எந்தக் கட்சியையும் வேறுவிதமாகவோ, அல்லது இரண்டு அர்த்தத்திலோ சொல்கிற அளவிலே பேசக் கூடாது என்று ஏற்கெனவே தீர்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையில், தாங்கள் தீர்ப்பு சொல்வது உதவிகரமாக இருக்கும். இல்லாவிட்டால், இதேவிதமாக, கிண்டல் பண்ணுகிற முறையிலே பேச எல்லோருக்கும் தெரியும் என்ற முறையில் விவரங்கள் வராமல், உறுப்பினர்கள் இதேமாதிரி பேசுகிற நிலை ஏற்பட்டுவிடும். It is not in good taste. ஆகவே, உறுப்பினர் சொல்லும்போது இம்மாதிரி பேசாமல் தாங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.



1974 மார்ச் 21]

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. பாலசுந்தரம்) :** நீங்கள் குறிப்பிட்ட கட்சியைச் சொல்லி, சொன்னீர்களா என்பதற்கு விளக்கம் சொல்லுங்கள்.

**திரு. எம். பன்னீர்செல்வம் :** நான் பேசினேன் என்றுதான் சொன்னேனே தவிர, சௌந்தரபாண்டியனைப்பற்றிச் சொல்லவில்லை. குறிப்பிட்டவர்கள் பவுடர் போடுகிறவர்கள் பின்னால் போகிறார்கள் என்று சொன்னேனே தவிர, அவரைப் பற்றிச் சொல்லவில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** இந்த அவையில் நான் பேசவே இல்லை. அவர் இப்பொழுது சொன்னார். இங்கே இருக்கிற முதலமைச்சர் பவுடர் போட்டவர்தான் ; அமைச்சர் நாவலர் அவர்களும் பவுடர் போட்டவர்தான் ; அவைத் தலைவர்கூட பவுடர் போட்டவர்தான். அத்தனைபேரும் பவுடர் போடுபவர்தான். என்னுடைய பெயரைக் குறிப்பிட்டு, அவர் சார்ந்திருக்கிற இயக்கம் என்று சொன்னார். தயவுசெய்து நடவடிக்கைக் குறிப்பைப் பாருங்கள். இங்கே தனியாக எந்தக் கட்சியையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்று சொல்கிறார். நடவடிக்கைக் குறிப்பைப் பாருங்கள், நன்றாகத் தெரியும்.

**திரு. நா. வீராசாமி :** ஒரு உறுப்பினர் தான் பேசியதற்கு, விளக்கம் கூறியதற்குப் பின்னாலே, அதைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது நம்முடைய மரபு. ஆகவே, மாண்புமிகு பன்னீர்செல்வம் அவர்கள் அதைச் சொல்லியிருந்தாலும், நான் குறிப்பிட்டு இன்னாரைச் சொல்லவில்லையென்று சொன்னதற்குப் பின்னால். . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. பாலசுந்தரம்) :** உறுப்பினர்கள் எதைச் சொன்னாலும் ஏற்றுக்கொள்ள வேண்டியதா ? மரபுக்கு உட்பட்டு சொன்னதைத்தான் ஏற்றுக்கொள்வது என்று நடைமுறை இருக்கிறது.

**திரு. நா. வீராசாமி :** அவர் எந்தப் பொருளில் சொன்னார் என்பதற்கு விளக்கம் சொல்லியாயிற்று. அப்படி சொன்னால், ஒரு உறுப்பினர் இந்த மன்றத்திலே சொன்ன விளக்கத்தை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்றுதான் இந்த மன்றத்திலே தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதை மீண்டும் மீண்டும் நண்பர் சௌந்தரபாண்டியன் அவர்கள் எழுப்புவது சரியல்ல என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பவுடர் போடுவதைப்பற்றி சௌந்தரபாண்டியன் அவர்கள் சொன்னது, பவுடர் போடுவதே தப்பு என்ற எண்ணத்தையும் ஏற்படுத்திவிடும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. பாலசுந்தரம்):** நான் ரெக்கார்டைப் பார்க்கிறேன்.

**திரு. எம். பன்னீர்செல்வம் :** ஊராட்சி ஒன்றியத்திலே ஒரு தனித் தொகுதியையும், நகராட்சியிலே ஒரு தனித் தொகுதியையும் ஏற்படுத்த, தமிழகத்து முதல்வர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டிலும் இப்பொழுது அகரம் என்கிற காலனியில் சுடுகாடு இல்லாமல் ஏறக்குறைய 10 ஆண்டுகாலமாக நாங்கள் மாவட்ட நல அதிகாரியைச் சந்தித்து, மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்துச் சொல்லியிருக்கிறோம். அதற்கு ஆவன செய்ய வேண்டும், ஏழை எளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் அங்கு சுடுகாடு அற்று, புதைக்கப்படுவதற்குக் கூட தகுதியற்றியிருக்கிறார்கள் என்று கூறிக்கொண்டு, அங்கு சுடுகாடு அமைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வீட்டு மனையைப் பெறுகின்ற பொழுது எல்லா உறுப்பினர்களும் சொல்லியதுபோல், என்னுடைய தொகுதியில் ஆம்பூர் டவுனில், கோவிந்தபுரம் என்ற கிராமத்தில் வீட்டு மனை கொடுக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆகின்றன.

ஆம்பூர் நகராட்சி இருக்கிற பகுதியில் வாழ்கின்ற தாழ்த்தப்பட்ட மக்கள் அங்கு ஓடுகின்ற கானாற்றின்மேல் மேம்பாலம் கட்டுவதற்காக எல்லாவிதமான. . .

(மணி அடிக்கப்பட்டு, திரு. தொ. ப. சீனிவாசன் அழைக்கப்பட்டார்)

**திரு. நா. வீராசாமி :** இருவருமே வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். திரு. சீனிவாசன் அவர்களுடைய நேரத்திலே இவருக்குக் கொஞ்சம் கொடுங்கள். இருவருமே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.





**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. பாலசுந்தரம்) :**
அவர் ஒத்துக்கொண்டால் பேசலாம்.

**திரு. எம். பன்னீர்செல்வம் :** அந்தக் கானாற்றின்மேல் மேம்
பாலம் கட்டுவதற்காக எல்லாவிதமான ஏற்பாடுகளும் செய்யப்
பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே எல்லா பொறுப்புக்
களையும் ஏற்றியிருக்கிறார்கள். ஏறத்தாழ 7 ஆண்டுகள் ஆகின்றன.
எல்லா சமுதாய மக்களும், நாள் ஒன்றுக்கு 30,000 பேர் அந்த
ஆற்றைக் கடந்து செல்லவேண்டிய சூழ்நிலை இருந்து வருகிறது.
இதை வெல்பேர் டிபார்ட்மெண்ட் மூலமாகச் செய்ய வேண்டு
மென்று கூறி, பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி
கூறி, விடை பெறுகிறேன். வணக்கம்.

**திரு. தொ. ப. சீனிவாசன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, மீனவ மானியத்தை நான் மனமார வரவேற்று என்
னுடைய கருத்தை இங்கே சொல்ல நான் ஆசைப்படுகிறேன்.
சென்ற ஆண்டு இதேபோல் மீனவ மானியத்தை வரவேற்று பேசிய
பொழுது, நான் மீனவ மக்களுக்காகச் சில வேண்டுகோள்களை
இந்த மன்றத்தின் மூலமாக விடுத்தேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்த அரசும், அதிகாரிகளும் அந்த வேண்டுகோளை நிறைவேற்றி
னார்கள் என்பதற்காக இந்த மன்றத்திலே அரசை நான் பாராட்
டாமல் இருக்க முடியாது. அதாவது, எண்ணூர், அடையாறு,
காட்டாறு, சைதாப்பேட்டை போன்ற பகுதியிலே இருக்கிற உள்
நாட்டு மக்கள் அந்தப் பகுதியிலே இருக்கிற எண்ணூரிலேயும்,
அடையாறிலேயும் விஷம் கலந்துவிட்டதன் காரணமாக, தண்ணீர்
பாதிக்கப்பட்டது. அதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மானிய
மாகப் பணம் தரவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தேன்.
அந்த வேண்டுகோளை அக்கறையாக ஏற்றுப் பணம் தந்ததற்காக,
அந்த அதிகாரிகளையும், இந்த அரசையும் பாராட்டுகிறேன்.

இப்பொழுது மீன்துறை இரண்டு நிலையிலே இயங்கிக்கொண்
டிருக்கிறது. கடலிலே இருக்கிற மீன் வளங்களை எந்த அளவுக்கு
மீனவர்கள் பயன்படுத்துகிறார்கள், அவர்களுக்கு எந்த அளவு
செய்து கொடுக்கவேண்டுமோ அதே நிலையிலே உள்நாட்டு நீர்
நிலைகளிலே மீன் பிடிப்பவர்களுக்கு எந்த அளவுக்கு வளத்தைப்
பெருக்கமுடியும் என்ற நிலையை ஆராய்ந்து அதிகாரிகளும் மற்ற

வர்களும் இங்கே கருத்தரங்கு நடத்தி ஆராய்ச்சி செய்து கொண்டு வருகிறார்கள். இந்த அரசு உள்நாட்டு மீனவர்கள் கடலிலே சென்று மீன் பிடிக்க விசைப்படகு தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அதே போல், இந்த ஆண்டு உள்நாட்டு மீனவர் களுக்கு விசைப்படகு கொடுத்த பெருமை இந்த முன்னேற்றக் கழக அரசுக்குத் தான் இருக்கிறது என்று என்னால் சொல்லாமல் இருக்கமுடியவில்லை. கடலிலே ஆற்று நீர் சங்கமம் ஆகின்ற மாற்றுப் பகுதியிலே வாழ்கின்ற உள்நாட்டு மீனவர்களுக்கு, படுவூர், கடலூர், கொடுவா, பரங்கிப்பேட்டை, அதிராம்பட்டிணம், நாகப் பட்டிணம் போன்ற பகுதிகளிலே வாழ்கின்ற உள்நாட்டு மீனவர் களுக்கு விசைப்படகு கொடுத்தால், இத் தொழில் உற்சாகமாக நடக்க வாய்ப்பாக இருக்கும். அடுத்த மாதம், கோயம்புத்தூரில் நடக்க இருக்கிற உள்நாட்டு மீனவர்கள் கருத்தரங்கிலே இதை ஆராயும்படி நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களிலே, மற்றும் துறைகளிலே இருக் கிறவர்கள் சென்ற ஆண்டு மீனவ வளர்ச்சி ஒத்துழைப்பதாக ஒப்புக்கொண்டாலும், அந்தப் பகுதியிலே இருக்கிற ஊராட்சி ஒன்றியங்கள் அதற்குச் சரியான வகையிலே ஒத்துழைப்பு கொடுக்காத காரணத்தால், அங்குள்ள உள்நாட்டு மீனவர்கள் பல தொல்லைகளுக்கு ஆளானார்கள். இதை அக்கறையோடு கவனிக்க வேண்டுமென்று அரசை இந்த மன்றத்தின்மூலமாக நான் பணிவன் போடு கேட்டுக்கொள்கிறேன்.

மீன் இலாகாவிலே பல வேலை வாய்ப்புகள் வருகின்றன. அந்த வேலை வாய்ப்புகளை அருமை நண்பர் வேதாசலம் அவர்கள் கேட்டார்கள். அந்த வேலை வாய்ப்புகளில் அவர்களுடைய மீனவ மக்களுக்குத் தனிச் சலுகை அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மற்றொரு நிலையில், தமிழக அரசையும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களையும் பாராட்ட வேண்டி யுள்ளது.

(மாலை 5.30)

உள்நாட்டு மீனவர்களுக்கு—அவர்களுடைய சார்பாகச் சென் ஆண்டுகூட நான் கேட்டேன்—அந்த மீனவர்களின் சார்பா ஒருவர்கூட இல்லையே என்று கேட்டேன், அந்தக் கோரிக்கை ஏற்றுக்கொண்டு நிறைவேற்றியதற்காக நான் நம்முடைய டாக்ட கலைஞர் அவர்களைப் பாராட்ட விரும்புகிறேன், அந்த மக்களின்



சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அன்னியச் செலாவணியைச் ஈட்டித்தருகின்ற இறால் மீன்கள் அதிகமாக முகத்துவாரத்திலே இருந்துதான் கடலுக்குச் செல்கின்றன.

இறால் மீன்கள் மழைக்காலத்திலே இயற்கையில் முகத்துவாரம் திறந்திருப்பதால் அங்கிருந்து கடலுக்குச் சென்றுவிடுகின்றன, பிறகு மழைகாலம் முடிந்தவுடன் இயற்கையாகவே முகத்துவாரம் மூடிக்கொள்வதால் அவை செல்வதில்லை. அதிகாரிகள் அதிலே தனிக்கவனம் செலுத்தி முகத்துவாரத்திலிருந்து எல்லாக் காலங் களிலும் இறால்கள் கடலுக்கு போவதற்கு ஏற்பாடுகளைச் செய் தால் அதன்மூலம் நமக்கு அன்னியச் செலாவணியும் கிடைக்கும், மீனவ மக்களுக்கு சிறந்த வசதியையும் செய்து தருவதற்கு அது ஏதுவாக அமையும்.

மீனவர்களுக்கு நைலான் நூல் கொடுக்கப்படுகிறது, அதை மானியமாகக் கொடுக்கிறார்கள். உள்நாட்டு மீனவர்களுக்கும் பஞ்சு நூல் வழங்குவதற்கான உதவிகளைச் செய்தால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற ஆண்டு கூட நான் இந்த மன்றத்திலே கேட்டேன், மீனவர்கள் வீடுகள் கட்டிக்கொள்வதற்காக ஒரு தொகையை ஒதுக்கவேண்டுமென்று கேட்டேன். அதிலே சட்டச் சிக்கல்கள் இருந்தாலும்கூட அவற்றையெல்லாம் போக்கி அந்த மக்களுக்கும் வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், இந்த அளவிற்கு இந்த அரசு எந்த ஒரு துறையை எடுத்துக்கொண்டாலும்கூட பலவிதமான சலுகைகளைச் செய்து கொண்டுதான் இருக்கிறது.

மீனவ மக்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகளுக்காக அவர்கள் எந்த அளவிற்கு நன்றியுடையவர்களாக இருப்பார்கள் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

மீனவர்களுக்குப் படகுகள் அளிப்பதிலே சிக்கல்கள் இருந் தாலும் அவர்களுக்கு அவற்றை வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அரிசன இலாகா அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே வைத்திருக்கிற மானியக் கோரிக்கையின் மீது எங்கள் கட்சியின் சார்பாக கொடுத் திருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஒட்டி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1974 மார்ச் 21

சுதந்திரம் அடைந்து 25 ஆண்டுகள் ஆகியும்கூட சமுதாயத்தில் தாழ்ந்த நிலையில் இருந்த அந்த மக்கள் இன்னும் அதே நிலையிலே தான் இருக்கிறார்கள் என்று சொன்னால் எந்த நோக்கத்தோடு சுதந்திரம் பெற்றோமோ அந்த நோக்கம் நிறைவேறவில்லை என்று தான் சொல்ல இயலும்.

மகாத்மா காந்தியடிகள் நம்முடைய நாட்டிற்கு சுதந்திரம் வாங்கினார் என்று சொன்னால் அரிசன மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டும், அவர்களுடைய பொருளாதாரம் தழைக்க வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு தான் சுதந்திரத்தைப் பெற்றார்கள். அவர்களுடைய வாழ்க்கைத்தரம் நினைத்த அளவிற்கு உயர்த்தப்படவில்லை என்றால் அதற்கு இந்த நிர்வாகங்களும் அரசுகளும் தான் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

சமதர்ம சமுதாயம் அமைக்கவேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற அரசுகள் அரிசனங்களுக்கு வீட்டுவசதி செய்யவில்லை என்றால் அது மன்னிக்க இயலாதது. இந்த மாமன்றத்திலே அன்றாடம் வருகின்ற கேள்விகளைப் பார்த்தால் ஒவ்வொரு தாலுகாவிலும் அரிசன மக்களுக்கு வீட்டு வசதிகள் செய்வதற்கு என்ன செய்திருக்கிறது இந்த அரசு என்ற கேள்விதான் வருகின்றன, இதிலேயிருந்து இந்த அரசு அரிசன மக்களுக்கு வீட்டுவசதிகளைச் செய்துகொடுக்கத் தவறிவிட்டது என்று தெரிகிறது.

பட்டா வழங்கியிருக்கிறோம் என்று சொன்னாலுங்கூட அந்த மனைகளிலே அவர்கள் வசதியில்லாதவர்கள் வீடுகள் கட்டிக் கொள்வதற்கான பண உதவிகளைச் செய்ய இந்த அரசு தவறி விட்டது. இதுவரைக்கும் அவர்களுக்கு வீட்டுவசதிகள்கூட செய்ய வில்லை என்று சொன்னால் அதற்குப் பொறுப்பை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும். அமைச்சர் அவர்கள் சொல்வார்கள். வீட்டு வசதிகள் செய்துகொடுப்பதற்காக ஒரு கழகத்தை ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று சொல்வார்கள். வரவேற்கிறேன். ஆனால் அமைத்த கழகம் அந்த அளவிலே இருந்து விடக்கூடாது.

இதுவரையிலும் பல்வேறு கழகங்களை ஏற்பாடு செய்திருக் கிறோம். அவையெல்லாம் நாம் நினைக்கின்ற அளவிற்கு பணி புரிகின்றனவா என்பதை அரசு கவனிக்கவேண்டும். இதற்கெல்லாம் ஒரு கால வரம்பு ஏற்படுத்தவேண்டும். இத்தனை ஆண்டுகளுக்



குள்ளே நம்முடைய மாநிலத்திலேயுள்ள அரிசன மக்களுக்கு எல்லாம் வீட்டு வசதி செய்துகொடுக்கப்படும். அதற்குப் பிறகு வீட்டுவசதியில்லாதவர்களே இல்லை என்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டும்.

அரிசன காலனிகளைப் பொறுத்தவரையில் மின்சார வசதி இல்லை, ஆனால் எல்லா கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து விட்டோம் என்று பறைசாற்றுகிறோம். ஆனால் மாநிலத்திலே எத்தனையோ கிராமங்களிலே மின்சார வசதியோ, குடிநீரோ இல்லாத நிலைமையெல்லாம் இருக்கிறது. உண்மையிலேயே பல கிராமங்களுக்கு மின்சார வசதி இல்லை, குடிநீர் வசதியில்லை. சுடுகாட்டுக்கு பாதைகூட அவர்களுக்கு அமைத்துக்கொடுக்கப்பட வில்லை என்ற நிலைமை இருக்கிறது. இதைவிட வருந்தத் தக்க நிகழ்ச்சி இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

எனது தொகுதிக்குப் பக்கத்திலே உள்ள ஒரு இடத்தில் ஒரு அரிசனக் காலனி இருக்கிறது, அங்கே கூரையோடு இருக்கிறதே தவிர வேறு எந்தவிதமான வசதியும் செய்யப்படவில்லை. கட்டடங்கள் கட்டிக்கொள்வதற்கு அவர்களுக்கு அரசு பணஉதவி செய்யவேண்டும். காலனியிலே பலவிதமான வசதிகளைச் செய்து கொள்வதற்கு அரசு பணஉதவிகளைச் செய்யவேண்டும்.

ஏழை அரிசன மாணவர்களைப் பொறுத்தவரையிலும் நிச்சயமாக காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே இருந்த வசதிகூட இன்றைய ஆட்சியிலே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற விளக்க உரையைப் பார்க்கிறபோது 1972-ஆம் ஆண்டில் எந்த அளவிற்கு பள்ளிக் கூடங்களிலே படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை 1973-ஆம் ஆண்டிலே குறைந்திருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். 1972-73-ஆம் ஆண்டிலே 4,74,308 மாணவர்கள் படித்து இருக் கிறார்கள், 1973-74 ஆம் ஆண்டிலே 4,00,033 மாணவர்கள்தான் அரிசன மாணவர்கள்தான் படிக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, கல்லூரி மாணவர்களைப் பொறுத்தவரையில் 1972-73-இல் 7,604 ஆக இருந்த எண்ணிக்கை 1973-74-இல் கூடுவதற்குப் பதிலாக 5,532 ஆகக் குறைந்திருக்கிறது.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1974 மார்ச் 21

அதுபோல் பழங்குடி மக்களைப் பார்க்கும்பொழுது அந்த வகுப்பைச் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை 1972-73-ஆம் ஆண்டிலே இருந்ததைவிட 1973-74-ஆம் ஆண்டிலே குறைந்து இருக்கிறது. ஆக இந்த நிலையில் இந்த அரசு ஏழை அரிசன மாணவர்களுக்கு பழங்குடி மாணவர்களுக்கு கல்வித் துறையிலே நிச்சயமாகச் செய்யவேண்டிய கடமைகளைச் சரிவர ஆற்றவில்லை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அரிசனப் பள்ளிகளை எடுத்துக்கொண்டால் நிச்சயமாக அங்கே பயில்கின்ற மாணவர்களுக்கு மதிய உணவு போதாது. எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னதாக ஒரு மாணவருக்கு 15 பைசா என்று வைத்திருந்தது, இன்றும் அந்த அளவிலேதான் கொடுக்கிறோம் என்று சொன்னால் ஏறியிருக்கின்ற விலைவாசியைப்பார்த்து அந்த அளவிற்குப்போதுமா என்பதைச் சிந்திக்க வேண்டும். அது போதாது. நாம் கொடுக்கிற தொகையை அதிகமாகக் கொடுக்க வேண்டும்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாக நான் எஸ்டிமேட்ஸ் கமிட்டியிலே உறுப்பினராக இருந்தபொழுது அரிசன மாணவர்கள் விடுதிகளையெல்லாம் பார்க்கநேரிட்டது. அங்கே பார்த்தால் 100-க்கு 99 மாணவர்களுக்கு வாய்ப்புண் வியாதி வந்திருக்கிறது, அவர்களுக்கு சத்துணவு கொடுக்கப்படுவதில்லை என்ற காரணத்தினாலே தான் இந்த வியாதி வருகிறது என்று டாக்டர்கள் சொல்கிறார்கள். சத்துணவு அவர்களுக்கு விடுதிகளிலே கொடுக்காததால்தான் பல்வேறு வியாதிகள் ஏற்படுகின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆகவே, அரசாங்க இல்லங்களில் இருக்கும் அரிசன மாணவர்களுக்கு சத்துணவு கொடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் முன்னேறியிருக்கும் மற்றச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களோடு போட்டியிட்டு வர வேண்டுமென்றால் நிச்சயமாக அவர்களுக்கு நல்ல உணவு, உடை இன்னும் மற்ற எல்லா வசதிகளையும் செய்தாலொழிய இந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாயம் முன்னுக்கு வருவதற்கான வாய்ப்பு இல்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தப்படியாக, அரசாங்கத்தில் ஒரு கொள்கையை அமைச்சரவர்கள் பலதடவைகள் கூறியிருக்கிறார்கள். மாநில அரசு நீதியாகவும், நியாயமாகவும் மதம் மாறிய அரிசனங்களுக்குச்



1974 மார்ச் 21] [திரு. ஜே. ஜேம்ஸ்]

செய்து கொண்டிருக்கிறோம், ஆனால் மத்திய அரசுதான் ஒழுங்காகச் செய்யவில்லை என்று கூறுவார்கள். நான் ஒன்றைக் கேட்கிறேன். நாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்தச் சட்ட மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம், மத்திய சர்க்காரைக்கேட்டு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம், மத்திய அரசு தவறு செய்திருந்தாலும்கூட, மதம் மாறிய அரிசனங்களுக்கும்கூட ஹிந்து அரிசனங்களுக்குக் கொடுக்கப்படும் அந்தச் சலுகைகள் கிடைக்கும் வகையில் இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறது.

மதம் மாறிய அரிசனங்களுக்கும், இந்து அரிசனங்களுக்கும் எந்தவிதமான வித்தியாசமும் பொருளாதார நிலையில் ஏற்படவில்லை. ஆகவே, இந்த வித்தியாசத்தை நிச்சயமாக நாம் இந்தச் சமுதாயத்தில் உருவாக்கக் கூடாது. அந்த வித்தியாசத்தை வளர்ப்பதற்கு இந்த அரசு உறுதுணையாக இருக்கக்கூடாது என்று கூறி இந்த மதம் மாறிய அரிசன மக்களுக்கும் அத்தனை சலுகைகளையும் கொடுக்கவேண்டும், இந்து அரிசன மாணவர்களுக்குக் கிடைக்கும் அத்தனை சலுகைகளும் மதம் மாறிய அரிசன மாணவர்களுக்கும் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் மாவட்டத்தில் காணிக்காரர் என்ற மலைஜாதி மக்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் கன்னியாகுமரி மாவட்டம் திருக்கொச்சியின் ஒரு பகுதியாக இருந்து, திருவிதாங்கூர் ராஜா ஆண்டு வந்தார் என்பதும் இந்த அரசுக்கும் தெரியும். அங்கே நாம் சுதந்திரம் அடைவதற்கு முன்னால் இந்தக் காணிக்காரர்களைப் பொறுத்தவரையில் ராஜா ஒரு சட்டத்தை ஏற்படுத்தியிருந்தார். அதாவது காணிக்காரர் ரூல்ஸ் என்று. அதன்படி காணிக்காரர்கள் பயிர் செய்ய வேண்டுமென்றால் வன இலாக்கா அதிகாரியின் அனுமதியைப் பெற வேண்டும். அவர்கள் உற்பத்தி செய்யும் உணவுப் பொருட்களை வெளியே விற்க வேண்டுமென்றால் அவர்கள் வன இலாக்கா அதிகாரிகளுடைய அனுமதியைப் பெற வேண்டும்.

ஆனால், ஒருவேளை அந்தக் காலத்திற்கு இந்தச் சட்டதிட்டங்கள் பொருத்தமாக இருந்திருக்கும். ஏனென்றால் வனத்தில் காணிக்காரர்களுக்கு எல்லா உணவுப் பொருள்களையும் பயிர் செய்ய வசதியில்லை. மரச்சீனி கிருஷி, கரிநெல் தானியம் முதலியவற்றைப்

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1974 மார்ச் 21

பயிர் செய்வதற்கான வாய்ப்பு வசதிதான் அந்தக் காலத்தில் இருந்தது. அவைகளைத் தவிர மலைப்பிரதேசத்தில் காணிக்காரர்கள் மற்றவற்றைப் பயிர் செய்ய முடியாது. அந்த மரச்சீனியை வெளிச் சந்தையில் விற்றுத்தான் அவர்களுக்குத் தேவையான மற்ற உணவுப்பொருட்களை வாங்க வேண்டியிருந்தது.

ஆனால், இன்றுள்ள சட்டப்படி அவர்கள் உற்பத்தி செய்யும் தானியங்களை வெளியே கொண்டு வந்து விற்க இயலாது. அவர்கள் அரசாங்க வன இலாக்கா அதிகாரியின் அனுமதியைப் பெற்றாக வேண்டும். அனுமதி பெற வேண்டுமானால்—நிச்சயமாக நாம் நன்றாக உணர்வோம்—அது ஏழை ஜனங்களுக்குச் சாத்தியமாக வில்லை. அந்த அனுமதியைப் பெறுவதற்கு பல இடையூறுகள் இருக்கின்றன, தர்மசங்கடங்கள் இருக்கின்றன. எனவே, இப்பொழுதுள்ள சட்டதிட்டத்தை மாற்றி, அரசு அளித்துள்ள நிலத்தில் சுவாதீனமாக, சுதந்திரமாக தேவைப்படும் பயிர்களைப் பயிர் செய்யவும், அப்படிச் செய்கின்ற பயிர்களில் கிடைக்கும் பொருட்களை வெளி மார்க்கெட்டில் விற்கவும் வசதி செய்கின்ற வகையில் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து. மீனள இலாக்காவைப்பற்றிச் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது இந்த இலாக்காவில் இருக்கும் பெரும் பிரச்னை, நீண்ட நாட்களாக இருந்து கொண்டிருக்கின்ற பிரச்னை என்னவென்றால் போட் விநியோகத்தில் உள்ள கோளாறுதான். எந்த அளவிற்கு அந்தக் கோளாறு வளர்ந்திருக்கிறது என்று நான் கூறத் தேவையில்லை. எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் அதைப்பற்றி எடுத்துக் கூறினார்கள்.

இப்பொழுது இருக்கும் சிக்கல் என்னவென்றால், மீன் தொழில் செய்யும் ஏழைத் தொழிலாளர்களுக்கு நாம் கொடுக்கும் போட்டுகள் சரிவரப் போய்ச் சேரவில்லை என்பதுதான். இடையிலே இருக்கின்ற தரகர்கள், சுரண்டல்காரர்களுக்குப் போட்டுகள் கிடைக்கின்றன. அவர்கள் ஏதோ பினாமி முறையில், ஏழைத் தொழிலாளியின் பெயரில் வைத்து போட்டுகளை வசதி படைத்தவர்கள்தான் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் போட்டுகளினால் கிடைக்கும் ஊதியம் ஏழைத் தொழிலாளர்களுக்கு கிடைக்க வழியில்லாமல் வசதியுள்ளவர் களுக்குத்தான் போய்ச் சேருகிறது என்ற திர்ப்பாக்கியமான நிலைமை



1974 மார்ச் 21] [திரு. ஜே. ஜேம்ஸ்]

இருக்கிறது. ஆகவே, அரசு விசாரித்து, உண்மையில் ஏழைத் தொழிலாளியாக இருப்பவர்கள் அந்தப் போட்டுகளை வைத்திருக் கிறார்களா என்று பார்க்க வேண்டும். அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் மீனவர்களுக்கு அந்தப் போட்டுகள் போய்ச் சேர்ந்திருக்கிறதா என்பது சந்தேகமாக இருக்கிறது. அல்லது இடைத்தரகர்கள், சுரண்டல்காரர்கள், சமூக விரோதிகள் இதைப் பயன்படுத்திக் கொள்கிறார்களா என்பதை அரசு நன்கு பரிசீலனை செய்து இதைச் சீர்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த மீனவ சமுதாயத்தைச் சேர்ந்தவர் களுக்கு வானிலை காரணமாக, புயல் அடிப்பதால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. இப்பொழுதுகூட ரேடியோ மூலமாக வானிலை பற்றி அறிவித்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் அது எந்த அளவிற்குச் சாதாரண மீனவ மக்களுக்குத் தெரிய வேண்டுமோ அந்த அளவில் ரேடியோவில் விளம்பரம் செய்யாததால் அதனால் பயன் இல்லை என்று கூற விரும்புகிறேன். ஆகவே, டாம்டாம் அடித்து, எப்பொழுது வானிலையில் வித்தியாசம் ஏற்படுகிறதோ, புயல் வருவதற்கான சூழ்நிலைகள் இருக்கிறதோ அப்பொழுது டாம்டாம் அடித்து கிராமங்களிலுள்ள ஏழை மக்களுக்கு அந்தத் தகவலைக் கொடுத்தால் இப்படிப்பட்ட விபத்துக்களில் மாட்டிக் கொள்ளாமல் தப்பித்துக் கொள்வார்கள்.

அதுமட்டுமல்லாமல், விபத்தில் மாட்டிக்கொண்டாலும்கூட அவர்களைக் காப்பாற்றும் வேலை, மீட்பு வேலை மெதுவாகத்தான் நடக்கிறது. ஏறத்தாழ சில விபத்துக்களில் கிட்டத்தட்ட 10 நாட்கள், 15 நாட்கள், ஒரு மாதம் வரையில்கூட கடலில் தங்கியிருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. எனவே, உடனடியாக மீட்பு வேலை செய்தால் இந்தச் சூழ்நிலை ஏற்படாது. இதை அரசு நன்றாக ஆராய வேண்டும். அதிகக் கஷ்டம் அவர்களுக்கு ஏற்படாத வகையில் இந்த மீட்பு வேலைகளை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மதுவிலக்கினால் அதிகமாகப் பாதிக்கப்படும் மக்கள் மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் என்பதை இந்த அரசுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, மீனவ சமுதாயத்தினர் இருக்கின்ற பகுதிகளில் மதுவிலக்கைத் தீவிரமாகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1974 மார்ச் 21

அடுத்தபடியாக, எங்கள் மாவட்டத்தில் குளச்சலில் ஒரு 'ஃபினிஷிங் டிரெயினிங் செண்டர்' இருக்கிறது—அதில் பல்வேறு அரசியல் காரணங்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள்—குளச்சலில் இருக்கும் அந்த டிரெயினிங் செண்டரை கன்னியாகுமரிக்கோ அல்லது மற்ற பகுதிக்கோ மாற்றப்போவதாக அரசின் ஆலோசனையில் இருப்பதாகக் கூறப்படுகிறது. நிச்சயமாக குளச்சலில் இருக்கின்ற அந்த நிறுவனம் அங்கேயேதான் இருக்க வேண்டும். ஏனென்றால் குளச்சல் ஒரு முக்கியமான துறைமுகம். அங்கே மீனவ சமுதாய மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். அது அந்த மக்களுக்கு அதிகப் பயன் தரக்கூடிய முறையில் இருக்கிறது. ஆகவே, மாற்றுவதற்கான எண்ணத்தை அரசாங்கம் விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, குளச்சல், முட்டம், லீபுரம் ஆகிய மூன்று சிறிய துறைமுகங்கள் இருக்கின்றன. எனவே, அதை ஃபிஷிங் ஹார்பராக மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** பேரவைத் தலைவரவர்களே, இன்று காலை முதல் அரிசன நலத்துறை மானியத்தின்மீதும், மீனளத்துறை மானியத்தின்மீதும் மாண்புமிகு உறுப்பினர்கள் சிறந்த கருத்துக்களையும், குறைபாடுகளையும், அவர்கள் தொகுதியிலே இந்த அரசு மேலும் முயற்சியெடுத்து ஆற்ற வேண்டிய சில நல்ல பணிகளைக் குறித்தெல்லாம் பேசியிருக்கிறார்கள்.

பொதுவாகவே, தாழ்த்தப்பட்ட மக்களது முன்னேற்றத்தைப் பொறுத்தவரையில், பேசிய அனைவருமே—ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்—சுதந்திரம் பெற்ற இந்நாள் வரையில் அந்த மக்கள் பெறவேண்டிய முன்னேற்றத்தைப் பெறவில்லை என்று கூறியிருக்கிறார்கள்.

அரசுச் சார்பில் பேசியவர்கள்கூட திருமண வீட்டுச் சாப்பாட்டைப் போல் எல்லாவிதமான திட்டங்களும் படிக்கும் போது இனிக்கின்ற வகையில் இருக்கிறதே தவிர, அள்ளிச் சாப்பிடலாம் என்று கருதுகிறபோது மன நிறைவு தரவில்லை என்று கூறியிருக்கிறார்கள். எவ்வளவோ ஆண்டு காலமாகத்



1974 மார்ச் 21]

தொடர்ந்து இப்படிப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் செய்து பல திட்டங்களை நிறைவேற்றுகிறோம். திட்டங்களிலே ஏதும் குறை இல்லை.

என்ன காரியங்களை நலத்துறை செய்யலாம், செயல்படவேண்டுமென்று நினைக்கிறோமோ அத்தனையையும் காண்கிறீர்கள். அந்தப் பலன் போய்ச் சேரவேண்டிய மக்களுக்குப் போய்ச் சேருகிறதா என்று பார்த்தால் அந்த மக்களுக்கு இருக்கின்ற குறைபாடுகள் அப்படியே இருக்கின்றன என்பதை இந்த மன்றத்தில் இருக்கின்ற அனைவரும் கருத்து வேறுபாடு இன்றி ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

உள்ளபடியே இந்த அவல நிலை இந்தத் துறையின் மூலமாக எவ்வளவோ செய்தும் இந்த மக்கள் நிறைவு பெறாத அளவுக்கு இருக்கிறதே; நாமும் அதற்கு அமைச்சராக இருக்கிறோமே என்று நினைக்கும்போது மெத்தவும் வேதனையாகத்தான் இருக்கிறது. இந்த வேதனை எனக்கு இப்போது ஏற்படவில்லை. நானும் இதனை உணருகிறேன். மக்களைச் சந்திக்கும்போது, அந்த மக்களுடைய குறைகளைக் கேட்கும்போது எனக்கே அந்தச் சந்தேகம் வருகிறது. இதற்கெல்லாம் திட்டங்கள் போடுகிறோமே; அவை என்ன ஆகின்றன? அந்தப் பலன்கள் மக்களுக்குப் போய்ச் சேரவில்லை என்பதை நானும் உணர்ந்துதான் பல கருத்தரங்குகள், மாநாடுகள் நடக்கும்போது மனம் விட்டு நானே கூறுவதுண்டு.

அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சியின் தலைவர்கள், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முன்னேற்றம் தரவேண்டுமென்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லாத அளவுக்கு மக்களைச் சந்தித்து, மக்களுக்குச் சில நன்மைகளைச் செய்ய வேண்டுமென்று மனப்பூர்வமாக உணர்ந்து கொள்கைகளை வகுத்து மக்கள் மத்தியில் வைத்து மக்கள் ஆதரவு பெற்று, வாக்குகளை வாங்கிச் சட்ட மன்றத்தில் ஆளும் கட்சியாகவும், எதிர்க் கட்சியாகவும் வந்து அமர்ந்திருக்கிறோம்.

கொடுத்த வாக்குகளைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் எங்களுக்கு இருக்கிறது. ஆளும் கட்சி மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றத் திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றி மேலும் அவர்களது ஆதரவைப் பெற வேண்டுமென்ற எண்ணத்தில் பணியாற்றுகிறோம். எதிர்க்கட்சிக்காரர்கள் அந்தக் குறைகளை

[திருமதி சத்தியவாணிமுத்து] [1974 மார்ச் 21

எல்லாம் எடுத்துச் சொல்லி நாங்கள் உங்களுக்காக இதைப்பற்றிக் கேட்டோம்; அதைப்பற்றிக் கேட்டோம் என்று சொல்லி ஆளும் கட்சி செய்யவில்லை என்று சொல்வதற்காக அவர்களும் பேசுகிறார்கள். இரண்டிலுமே ஒரே உண்மைதான் இருக்கிறது. யாராக இருந்தாலும் அந்த மக்களுக்குத் திருப்தி அளிக்கின்ற வகையில் நம்முடைய பேச்சும் சொல்லும் செயலும் இருக்க வேண்டுமென்ற எண்ணத்தில் பயந்தோ பயப்படாமலோ, உள்ளப் பூர்வமாகவோ, இல்லாமலோ அந்த பிரச்சினையை மக்கள் மத்தியில் பேசிக் கொண்டு வந்திருக்கிறோம்.

ஆனால் ஆட்சி செய்கிறவர்கள் போடுகின்ற திட்டங்களும், எதிர்க் கட்சிக்காரார்கள் கூறுகின்ற குறிப்புகளும் இந்தச் சட்ட மன்றத் திலே, செயலகத்திலே, போடுகின்ற முறைகளிலேயே நின்று விடு கிறது. அதை நிறைவேற்ற வேண்டிய அதிகாரிகள், சிப்பந்திகள், அரசியல்வாதிகள் கொண்டிருக்கிற கொள்கையை, வேதனையை, படுகின்ற துன்பங்களை உணருவார்களேயானால் இத்தனை ஆண்டுக் காலமாக நாம் எடுத்த முயற்சி நிச்சயமாக வெற்றி பெற்றிருக்க முடியும்.

ஒரு சிறு குறை கூட இல்லாத அளவுக்கு எவ்வளவோ அக்கறை எடுத்தாலும், இந்த மக்களுக்காக ஆண்டு தோறும் நிதியை ஒதுக்கினாலும் நல்ல முறையில் செயல்படவில்லை என்று நினைக்கும் போது தவறு எங்கே என்று இந்தச் சட்டமன்றத்தில் பல தடவை சுட்டிக்காட்டினார்கள்—அதிகாரிகள் அந்த அளவுக்குச் செயலாற்ற வில்லை என்று. அதற்குக் காரணம் அரசியல்வாதிகளுக்கு இருக் கிற அவசரம், தேவை, உணர்வு, எப்படியாவது செய்ய வேண்டு மென்ற துடிப்பு—உள்ளப்பூர்வமான துடிப்போ, மேலெழுந்த வாரி யான துடிப்போ—எப்படி இருந்தாலும் சிறிதளவாவது துடிப்பு அதிகாரிகளுக்கு இருந்தால் இந்தத் திட்டங்களை எவ்வளவோ நல்ல முறையில் செயலாற்றி இருக்க முடியும்.

நலத் துறையில் இருக்கும் அதிகாரிகளைப்பற்றியெல்லாம் குறை சொன்னார்கள். உணவு சரியாகத் தரப்படவில்லை; சீருடை சரி யாகத் தரப்படவில்லை; நில ஆர்ஜிதம் செய்து முடிக்கப்படவில்லை வீடுகளைக் கட்டுவதில் சலுகை காட்டவில்லை, எந்தத் திட்டத்தை யும் ஒழுங்காக நிறைவேற்றவில்லை என்று சொன்னார்கள். இவை களுக்கெல்லாம் இலாகாவில் இருக்கும் தாமதந்தான் காரணம் ஆனால் இந்த இலாகாவில் மட்டுந்தான் தாமதமா என்றால் இல்லை மற்ற இலாகாகளிலும் தாமதம் இருக்கிறது.



1974 மார்ச் 21] [திருமதி சத்தியவாணிமுத்து]

ஆனால் சாதாரண ஏழை மக்கள், ஏங்கிக் கொண்டிருக்கும் மக்கள், பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கக்கூடிய மக்கள் இன்னும் வாவில்லையே என்று கேட்கிற நிலை மற்ற இலாகாகளிலே இருக்க முடியாது. இந்த இலாகா எவ்வளவோ ஆண்டுக்காலமாக ஏங்கிப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருப்பவர்களுக்கு மேலிடத்தில் இருக்கும் நாங்கள் இதைக் கொடுக்கிறோம், அதைக் கொடுக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது அது வந்து சேர வில்லையே, சோவில்லையே என்ற ஆவல்தான் அவர்களுக்குள்ள பசி என்பதை சட்ட மன்ற உறுப்பினர்கள் பேசிய வார்த்தைகள் பிரதி பலிக்கின்றன.

எனவே, அதிகாரிகள் இவற்றையெல்லாம் உணர வேண்டும்; செயலாற்ற வேண்டும்; தவறுகள் இல்லாத அளவுக்குச் செயல்பட வேண்டும். எங்களது இயக்கத் தலைவர் மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக வந்ததும் முதல் பணியாக இந்தச் செயலகத்தில் இருக்கும் அதிகாரிகள் அனைவரையும் அழைத்து முதல் நாள் சந்தித்தது அதிகாரிகளைத்தான், இந்த ஆட்சி சரியாக, நிலையாக, ஒழுங்காக, நாங்கள் நினைத்ததைப் பிரதி பலிக்கும் அளவுக்குச் செயல்பட வேண்டுமானால் ஆட்சிச் சக்க ரத்தை உருட்டுகின்ற, இயக்குகின்ற அதிகாரிகளாகிய நீங்கள் மனப்பூர்வமாக, நியாயமாக நாங்கள் நினைப்பதைச் செய்யுங்கள் என்று கேட்டுக் கொண்டார்கள். அது இன்றைக்கு நிறைவேறு கிறதா என்றால் இல்லை என்று சொல்ல நான் வெட்கப்படுகிறேன்; வேதனைப்படுகிறேன், குறிப்பாக இந்தத் துறையைப் பொறுத்து.

நலத்துறை மாவட்ட அதிகாரிகளாக ஏன் இந்த இனத் தவரையே போடுகிறீர்கள் என்று கேட்கிறார்கள். வேறு இனத் தவரைப் போட்டால் அவர்களுக்கு என்ன அக்கறை இருக்கும் என்று கூறுகிறார்கள். நான் பொறுப்பேற்றவுடன் பார்ப்பன சமு தாயத்தைச் சேர்ந்தவர் அரிசன நலத் துறைக்குத் துணைச் செய லாளராக இருந்தார்கள். அப்போது நலத் துறை ஹோம் டிப்பார்ட்மென்டைச் சேர்ந்ததாக இருந்தது. அப்போது அதற்குச் செயலாளராக இருந்தவர்கள் இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மறைந்த வெங்கடேசன்.

அப்போது என்ன சொன்னார்கள்? செயலாளரும் இந்தச் சமூகம், அமைச்சரும் இந்தச் சமூகம், இயக்குநர் சங்கரனும் இந்தச் சமூகம்; என்று சொன்னார்கள். இன்றைக்குத் துணைச்

[திருமதி சத்தியவாணிமுத்து] [1974 மார்ச் 21

செயலாளர் பார்ப்பன சமூகத்தைச் சேர்ந்த வெங்கடாசலம் என்
பவர். அவருக்கு என்ன தெரியும், அவரைப் போட்டு வைத்திருக்
கிறீர்களே என்று கேட்கிறார்கள். இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்
தவர்களைப் போட்டால் இவர்களையே போட்டிருக்கிறீர்களே என்று
கேட்கிறார்கள். பார்ப்பன சமுதாயத்தைச் சேர்ந்தவர்களைப்
போட்டால் 'பார்ப்பானுக்கு என்ன அக்கறை ?' என்று கேட்
கிறார்கள். ஆகவே, எந்தச சாதிக்காரராக இருந்தாலும், யாரைப்
போட்டாலும் பணியாற்றுகிறவர்கள் சரிவரக் காரியமாற்றவில்லை
என்பதை நானும் ஒத்துக் கொள்கிறேன்.

அதிலே, ஒரே ஒரு மாவட்ட அதிகாரி மாவட்டம் பூராவிலும்
செல்ல வேண்டும். இருக்கின்ற குறைபாடுகளை அவரிடமே சொல்
வார்கள். தேவைகள் அதிகமாக இருக்கின்றன. அந்த மாவட்ட
நல அதிகாரி பொறுப்போடு இருந்து செயலாற்ற வேண்டுமென்றால்
செயலாற்ற முடியவில்லை. நானும் பல முறை கேட்டுக் கேட்டுச்
சிலரை எல்லாம் மாற்றியும் இருக்கிறேன். கடுமையான வார்த்தை
களால் பேசியிருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அதிகாரிகள்
மாநாடு நடக்கும்போதெல்லாம் கூறியிருக்கிறேன். இன்றைக்குக்
குறை எங்கே இருக்கிறது என்பதை மனம்விட்டு ஒத்துக்கொள்ள
வேண்டும்.

தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு முன்னேற்றம் தருகிறோம்
என்று சொன்னால் அதிலே அரசியல்வாதிகளுக்குக் கொள்கை
அளவில் இருக்கும் எண்ணத்தைப்போல் மற்றவர்களுக்கு இருப்ப
தில்லை. நானே உத்தரவு போட்டேன். அதுவே செயல்பட
வில்லை என்றுதான் சற்று ஆத்திரத்தோடு இன்று காலை மாண்புமிகு
திரு. வடிவேல் அவர்கள்கூடச் சொன்னார்கள். நீங்கள் உத்தரவு
போட்டு விட்டீர்கள், வந்திருக்கிறதா ? தாழ்த்தப்பட்டவர்கள்
நிலம் கேட்கிறார்கள். பட்டா கொடுக்கிறேன் என்று சொல்லு
கிறீர்கள். நிலத்தைத் தாழ்த்தப்பட்டவனும் கேட்டு படையாச்சி
யும் கேட்டால் படையாச்சிக்குத்தான் நிலம் கிடைக்கிறது,
தாழ்த்தப்பட்டவனுக்கு நிலம் கிடைக்கவில்லை என்றெல்லாம் என்
னிடத்தில் சொல்லுகிறார்கள்.

நான் உத்தரவுதான் போட முடியும். அந்த இடத்திற்கே
வந்து நானே கையெழுத்துப் போட்டு பட்டா செய்து கொடுக்க
முடியாது. இது பொதுவாக இன்றைய சமுதாயத்தில் இருக்கும்
நிலைமை.



1974 மார்ச் 21] [திருமதி சத்தியவாணிமுத்து]

படித்தவர்களாக இருந்தாலும் படிக்காதவர்களாக இருந்
தாலும், அரசியல்வாதிகளாக இருந்தாலும், வேறு எந்த மட்டத்
தில் இருப்பவர்களாக இருந்தாலும், இன்றும் சாதி வேறுபாடு
உள்ளத்தில், இதயத்தில் ஆழப் பதிந்திருக்கிறது. அரசியல்
நோக்கங்களோடு கட்சி என்ற வகையில் பேசுகிறவர்கள்கூட கட்சி
மட்டத்திலேதான் பேச முடிகிறதேதவிர, தன்னைச் சார்ந்த
மக்கள் மத்தியில் போய் இருக்கின்ற கொள்கைகளை எடுத்துச்
சொல்ல முடியாத நிலையிலேதான் தமிழ்நாடு இன்றைக்கு
இருக்கிறது என்பதை நாம் இங்கே ஒப்புக் கொண்டாக வேண்டும்.

எந்த ஆட்சி இதுபோல் அருமையான திட்டங்களை நிறைவேற்றி
இருக்கிறது ? சமுதாயத்தில் இருக்கிற சீர்கேடுகளைப் போக்க
மன்ற உறுப்பினர்கள் உருக்கத்தோடு விளக்கமாக எடுத்துப் பேசி
னார்கள். எத்தனை திட்டங்களைப் போட்டாலும் ஏட்டளவில்
இருக்கிறதேதவிர, செயலளவில் வரவில்லை என்று சொன்னார்கள்.
உங்களை எல்லாம் நான் பணிவோடு கேட்டுக்கொள்வது—இந்தத்
திட்டங்களை நிறைவேற்ற நீங்கள் எங்களுக்கு உறுதுணையாக
இருக்க வேண்டும்.

(மாலை 6.00)

மாண்புமிகு உறுப்பினர் திரு. வடிவேல் அவர்கள் விவசாயத்
தொழிலாளர்கள் மத்தியில் பழகுகிறார்கள். கீழ்வெண்மணிபற்றிச்
சொன்னார்கள். அந்த மக்கள் சுட்டெரிக்கப்பட்டார்கள். வழக்கு
தொடரப்பட்டது. இந்த நீதிமன்றத்தில் சரியானபடி வழக்கு
தொடரப்படவில்லை, சாட்சிகள் சரியானபடி உருவாக்கப்படவில்லை,
எனவே, அந்த வழக்குத் தோல்வி அடைந்தது என்று கைவிட்டு
விட்டார்கள். முதல் அமைச்சர் அவர்கள் உச்சநீதிமன்றத்தில்
வழக்கைத் தொடர்ந்திருப்பதாகக் கூறினார்கள் என்று சொன்
னார்கள். நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கீழ்வெண்
மணி விவசாயிகள் கூலித் தகராறால்தான் சுட்டெரிக்கப்பட்டார்கள்.
இரண்டு தரப்பாருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது.
அதற்காக மாண்புமிகு உறுப்பினர் வடிவேல் அவர்கள் எடுத்த
முயற்சி என்ன ? நடவடிக்கைகள் என்ன ? ஆளுகிற ஆட்சி
பார்த்துக்கொள்ளட்டும் என்பது வேறு. நாங்கள் பார்த்துக்கொள்
கிறோம், பார்த்துக் கொண்டோம். வீடுகள் கட்டிக்கொடுத்தோம்.
புதிய ஊரையே அமைத்துக்கொடுத்தோம். வழக்காடினோம்.

உச்சமன்றத்திற்கு எடுத்துச் செல்ல இருக்கிறது. அந்த மக்க சார்பில் அவர்கள் எடுத்த முயற்சி என்ன? அந்த மக்களுக்கா அவர்கள் செய்கிற காரியங்கள் என்ன?

**திரு. எஸ். வடிவேல் :** நான் என்ன செய்யமுடியும். அப்போ நான் சட்டமன்ற உறுப்பினராகக்கூட இல்லை. செத்தவுடனே சென்ற முதல் ஆள் நான். பின்னர் மன்னை வந்தார். பி கலெக்டர் வந்தார். பிணங்களைத் தூக்கி வைத்து அழுதோம் பின்னர் அம்மையார் அவர்கள் வந்தார்கள். நான் என்ன அமை சரா? உத்தரவு போடவா முடியும்? ஆகவே நான் செய்யவில்லை என்று சொல்லவேண்டாம். முப்பது ஆண்டுகளாக சுயமரியாதை இயக்கத்தில் நான் இருந்தபோதும்சரி கம்யூனிஸ்ட் கட்சிக்கு வந்த பிறகும்சரி தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, அடக்கப்பட்ட மக்களுக்காக என் பணியை நான் செய்து வருகிறேன். ஆகவே நான் ஒன்றும் செய்யவில்லையே என்று வருத்தப்படுவதில் அர்த்த மில்லை. நான் மந்திரி இல்லை என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** மந்திரியாக இருப் பதாலேயே செய்துவிடமுடியாது. இவையெல்லாம் சமுதாயத்தில் இருக்கிற உணர்வுகள். தவறான முறையில் அந்த உணர்வுகள் செல்லாத அளவிற்கு அரசியல்வாதிகள் பார்த்துக்கொள்ள வேண்டும்.

தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்பற்றி எல்லாக் கட்சிக்காரர் களும் பேசுகிறார்கள். ஆனால் செயலில் காட்டுகிறார்களா என்றால், நான் இதயபூர்வமாக எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் சொல்லிக் கொள்கிறேன், அந்தச் சமுதாய மக்கள் சார்பில் இந்த வழக்கை உச்சநீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லக்கூடிய அளவிற்கு முயற்சி எடுக்கக்கூடாதா? எவ்வளவு பெரிய பயங்கரமான கொடூரமான நிகழ்ச்சி அது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். அந்த முயற்சியில் நீங்கள் ஈடுபட்டிருந்தால் உள்ளபடியே நீங்கள் இந்தச் சமுதாய மக்களுக்காக உங்களை அர்ப்பணித்துக்கொண்டு விட்டீர்கள் என்று பொருளாகும். அவரைப் போன்ற முடிப் புள்ளிகள் இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடவேண்டும்.





நில ஆர்ஜிதம்பற்றி, கேட்டுகேட்டுத் தரப்படவில்லை என்று சொன்னார்கள். என்னிடம் பல மகஜர்கள் கொடுத்திருப்பதாகவும் சொன்னார்கள். அதிகாரிகள்மூலம் அதற்கான விளக்கங்களைக் கேட்டபோது அவர்கள் கொடுத்திருக்கிற விளக்கம், ஏறத்தாழ ஏழு இடங்கள், ஏனைக்குடி, ஆரூர், அகாஇலத்தூர், தத்தக்குடி, ராமபுரம், ஆலஞ்சேரி என இப்படி ஏழு இடங்கள். இன்னும் நில ஆர்ஜிதம் செய்து பட்டா வழங்கப்படவில்லை என்று சொன் னார்கள். அதிகாரிகள் கொடுத்த தகவல்படி, நான் கேட்டபிறகு கொடுத்தார்கள். பட்டா வழங்கக் கூடிய கேஸ்கள் எதுவுமே இல்லை என்று கூறியிருக்கிறார்கள். அரப்பள்ளம் இந்த இலாகா விற்கு இல்லை. ரூரல் ஹௌஸிங் ஸ்கீமில் கேட்டிருக்கிறார்கள். அதற்கு கலெக்டர் பதில் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. எஸ். வடிவேல் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர் களிடம் ஒரு ஆண்டுக்கு முன்பு ஒரு மனு கொடுத்திருக்கிறேன். நான் தொகுதியில் இருக்கிறேன், கண்ணாரப் பார்க்கிறேன். பொய் சொல்லவில்லை. தவறான தகவல்கள் அல்லது புள்ளிவிவரங்கள் கொடுப்பதால் பல கஷ்டங்கள் வருகின்றன.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** திரு. எஸ். எம். துரைராஜ் அவர்கள் நிலம் ஆர்ஜிதம் செய்தும் லட்சத்து சொச்சம் பணம் கொடுத்தும் வீடுகள் கட்டவில்லை என்று சொன்னார்கள். 60 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் இந்த இலாகா மூலமாக இல்லை. ரூரல் ஹௌஸிங் மூலம் கொடுத்திருக்கி றார்கள் என்ற தகவல்தான் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

எனவே கட்சிக்காரர்களுக்குச் செய்துவிட்டோம் என்பது சரி யல்ல. அது 1966-ல் நடந்தது. அப்போது இருந்தது எங்கள் கட்சி அல்ல. மற்ற வகுப்பு மக்களுக்கு உள்ள வாய்ப்பு வசதிகள் இந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு இல்லை. மற்ற வகுப்பு மக்களுக்கு அலுவலகங்களுக்குச் செல்ல முடியும். அதிகாரிகளை அணுகிக் கேட்கவும் முடியும். திட்டங்களை அவர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

சட்டமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியங்கள் போன்ற வற்றின் பொறுப்பில் இருப்பவர்கள் இவர்களுக்கும் மற்றச் சமூக மக்களுக்கும் தொடர்பு இருக்கிறது. ஆனால் இந்த தாழ்த்தப் பட்ட சமுதாய மக்களுக்கு விவரம் தெரிவதும் இல்லை, என்னென்ன

திட்டங்கள் இருக்கின்றன என்பதும் அவர்களுக்குத் தெரியவில்லை. எந்த இலாகாவிற்குப் போய் யாரைக் கேட்பது என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. இவர்கள் எங்கேயோ பாதைகள் அற்ற இடங்களில் குக்கிராமங்களில் வாழ்கிறார்கள். பஸ் வசதியிருக்காது. எந்த அலுவலகத்திற்குச் சென்று யாரைக் கேட்பது என்பது தெரியாது. அப்படிப் போய்க் கேட்டாலும் அதிகாரிகள் புறக்கணிக்கிறார்கள்.

பொறுப்பில் உள்ளவர்கள் இந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய முன்வந்தால்தான், சமூகப் பணி செய்வதுபோல் உதவி செய்ய முன்வந்தால்தான் அரசால் அளிக்கப்படுகின்ற நன்மைகள் இவர்களைச் சென்று அடைய முடியும். இதர சமுதாய மக்களுக்குப் பல பேர்கள் உதவி செய்கிறார்கள். படிப்பு இருக்கலாம், வசதி படைத்தவர்கள் இருக்கலாம். உதவி செய்யக் கூடிய ஆற்றல், திறமை உள்ளவர்கள் கிராமத்தில் ஒருவர் இருவர் இருந்தால் போதும் அந்தக் கிராம மக்களுக்கு நன்மை கிடைக்கும்.

ஆனால் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பணம் படைத்தவர்களும் இல்லை, வசதிபடைத்தவர்களும் கிராமங்களில் இல்லை. படித்துப் பட்டம் பெறுகிற இளைஞர்கள் படித்தவுடன் பதவியை எதிர்பார்த்துப் பட்டணக்கரைக்கு வந்துவிடுகிறார்களே தவிர தங்கள் சொந்தக் கிராமத்தைத் திரும்பிப் பார்ப்பதுகூடக் கிடையாது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்ன செய்தாலும்சரி அது அவர்களைப் போய்ச் சேருவது கிடையாது சரியாக என்ற நிலைதான் இருக்கிறது. எனவே இதை ஒரு சமூகப் பணியாகச் செய்ய வேண்டும். எங்கள் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது சொன்னார்கள். நீங்கள் தருகிற எந்தத் திட்டமும் கடைசியில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்குப் போய்ச் சேரும்போது இரண்டு சொட்டு ஐஸ் தண்ணீர்தான் போய்ச் சேருகிறது என்று சொன்னார்கள். இன்னும் அந்த நிலைதான் இருக்கிறது. காரணம் கொடுக்கிற ஐஸ் கரையாதபடி அப்படியே தூக்கிக்கொண்டு போய்ச் செல்கிற நிலையில் இல்லை. பல கைகள் மாறவேண்டியிருக்கிறது.

ஒரு உத்தரவு போட்டால் செயலாளர், பிறகு இயக்குநர், பிறகு மாவட்ட நல அதிகாரி, பிறகு தாசில்தார், பிறகு வேறு பல சிப்பந்திகள் என்று இவர்கள் இடம் கை மாறிமாறிப் போகும்போது தடை ஏற்படுகிறது, தாமதம் ஏற்படுகிறது. நான்



அடிக்கடி கூறுவதுபோல் அந்த மக்களுக்கு அந்த எழுச்சியும் உணர்வும், விவேகமும் வரவேண்டும். பண வசதியற்றவர்கள், படிப்பில் குறைவாக இருந்து வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் இதை எப்படிப் பெறமுடியும்? ஆகவே இதை ஒரு சமூகப் பணியாகக் கருதவேண்டும்.

அரசு எவ்வளவு செலவுசெய்தாலும் அவை சரியாக அவர்களைச் சென்று அடைகிறதா என்றால் இல்லை. காரணம் என்ன? வட்டியில்லாக் கடன்கள் கொடுக்கிறோம். இன்னின்ன திட்டங்கள் உள்ளன என்று அறிவித்தால் அந்த மக்கள் நேரடியாக அதை வந்து பெறுவதற்கான வாய்ப்பில்லை, வசதியில்லை. யார் இடம் மனுப் போடுவது என்று வரும்போது இடையில் தரகர்கள் வருகிறார்கள். நீ மனு போடு நான் வாங்கிக் கொடுக்கிறேன் என்கிறான். அங்கேயும் அவன் பணம் வாங்கிக் கொள்கிறான். ஏழை மக்கள் அவர்களுக்கும் பணம் கொடுக்கிறார்கள். தரகர்கள் பணத்தைப் பெற்றுக்கொண்டு வேறு ஒரு அலுவலகம் செல்கிறார்கள். அங்கு என்ன செய்கிறார்கள் என்று இவர்களுக்குத் தெரியாது.

ஆகவே, கொடுக்கப்படுகிற சலுகைகள் நேரடியாக இந்த ஏழை மக்களுக்குப் போய்சேராததால் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன இந்த மக்களுக்கு. அலுவலங்களுக்கு சென்று மனு போட்டு நேரடியாகப் பெற்றுக்கொள்ளும் நிலையில் அந்த மக்கள் இல்லை. அப்படித் தெரியாத மக்களுக்கு அதைத் தெரிந்து பெற்றுத்தரக் கூடியவர்களும் இல்லை என்ற நிலைதான் இருக்கிறது.

தீண்டாமை ஒழிப்பு பற்றிச் சொன்னார்கள். இட்டுகிற திட்டங்களில் இருக்கும் குறைபாட்டையும் சொன்னார்கள். பொதுவாக நான் இவைகளைச் சொன்னாலும், சிறப்பான குறைகளுக்கு உள்ளபடியே பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. குழ. செல்லையா அவர்கள் தொகுதியில் இருக்கும் மீனவச் சமுதாய மக்களுக்கு லிங்க் ரோடு, கல்வி வசதி, மருத்துவ வசதி இவைகளையெல்லாம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். மீனளத் துறையின் மூலம் அந்த மீனவச் சமுதாய மக்களுக்கு வேண்டிய பல சமுதாயப் பணித் திட்டங்களை அரசு நிறைவேற்றி வருகிறது. கல்வி ஒன்று மாத்திரம் தான் நாம் செய்யவில்லை. ஒவ்வொரு குப்பத்திற்கும் ஒரு பள்ளி என்று வைக்கவில்லை. ஒரு குப்பத்தில் ஏறத்தாழ 50 அல்லது 60 வீடுகள் இருக்கலாம். ஒரு குப்பத்திற்கு ஒரு பள்ளி என்று வைக்க

முடியாது. அவர்களுக்கு ½ மைல், 1 மைல் தொலைவில் பள்ளிகள் இருந்தால் அவர்கள் அங்கே போய் படிக்கட்டும் என்று விட்டு விடுகிறோம். ஆனால் 5-6 குப்பத்தைச் சேர்த்து, அவற்றிற்கு அருகாமையில் பள்ளிகள் இல்லாமல் இருந்தால், அங்கே பள்ளிகள் வைக்க சாத்தியக் கூறுகள் இருந்தால் வைக்கலாம் என்று இருக்கிறோம். ஆனால் அப்படிப்பட்ட இடங்கள் எதுவும் இல்லை. அதனால் பள்ளிகள் நிறுவவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

நீடாமங்கலம் சோமசுந்தரம் அவர்கள் பல குறைகளைச் சொன்னார்கள். ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை எங்கோ போட்டு விடுகிறார்கள், வாரியத் தலைவராகப் போடவில்லை என்று சொன்னார்கள்.

கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு தந்தை ஜாதி என்னவோ அந்த ஜாதிப் பெயர்தான் வைக்க வேண்டுமா என்று கேட்டார்கள். அப்படித்தான் நடைமுறை வைத்து இருக்கிறோம். இது ஏற்கனவே இருக்கும் முறை. ஹிந்து லா படி தந்தையின் ஜாதி பெயர்தான் மகனுக்கும் இருக்கவேண்டுமென்றிருக்கிறது.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே, இன்னின்ன சிக்கல்கள் இருக்கின்றன, இங்கே அமைச்சரவர்கள் போடும் ஆணை சரிவர நடைமுறைப்படுத்தவில்லை, என்பதைப் பற்றியெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். அதனால் அரிசன மக்களுக்கு பயன் கிடைக்கவில்லை என்று சொல்லி மிகவும் வருத்தப்பட்டார்கள். இத்தகைய இன்னல்களைப் போக்குவதற்காகத்தான் இந்த அரசு தனியாக அரிசன நலத்துறை ஆரம்பித்து. ஒரு அமைச்சரையும் வைத்து, நடத்தி வருகிறது. அமைச்சர் அவர்களே அவர்களுடைய உத்தரவுகளை அதிகாரிகள் நிறைவேற்றவில்லை என்று சொல்கிறபோது நாங்கள் எல்லாம் ஜனநாயகத்தில் நம்பிக்கை இழந்துவிடும் நிலையில் இருக்கிறோம். இது மிகப் பெரிய ஒரு குற்றச்சாட்டு என்று நான் கருதுகிறேன். யார் அந்த அதிகாரிகள், அமைச்சரின் உத்தரவுகளை நிறைவேற்றாத அந்த அதிகாரிகள் யார், ஏன் அவர்களை டிஸ்மிஸ் செய்யவில்லை, அவர்களை டிஸ்மிஸ் செய்யாமல் இருப்பதற்குக் காரணம் என்ன அப்படிப்பட்டவர்களை உடனடியாக டிஸ்மிஸ் செய்யவில்லை என்றால் இந்த நாட்டில் ஜனநாயகம் தேவையில்லை.





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, அதிகாரிகள் அரசு இட்டுகின்ற திட்டங்களை ஒழுங்காகச் செயல்படுத்தவில்லை என்ற புகாரை அமைச்சரவர்கள் இப்போதுதான் இங்கே வெளியிட்டு இருக்கிறார்கள். நண்பர் லத்தீப் அவர்களின் கேள்வியும் நான் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருக்கிறது. எப்படி சிக்கலைத் தீர்க்கலாம். எப்படி அரிசன நல இலாகாவை ஒழுங்குபடுத்தலாம் என்பதை வெகு விரைவில் முடிவு செய்வேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல முடிவுக்கு வந்து இருக்கிறார்கள். அதற்காக நன்றி செலுத்திக்கொள்கிறேன். இது பரவலாக மேலே இருந்து கீழே தாசில்தார் வரையிலும் இந்தக் குறைகள் இருக்கின்றன. இதற்குக் காரணம் அவர்களுக்கு அந்த உணர்வு இல்லை. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அந்தத் திட்டங்களின் மூலமாக நன்மை செய்யவேண்டுமென்ற உணர்வு இல்லை. அவர்களுக்கு ஏன் செய்யவேண்டும், எடுத்துப் போட்டு வைக்கலாம் என்று இருக்கிறார்கள். கேட்கிறார்கள், உங்களுக்குச் செய்யவேண்டுமா என்று.

இங்ஙனே மாணவர்கள் வந்து என்னிடத்தில் குறைபட்டுக்கொண்டிருக்கிறார்கள். கூழ் குடித்தவனுக்கு வசதி தேவையா, இந்தப் பணம் போதாதா, இதற்கு மேலும் வேண்டுமா என்று கேட்கிற அதிகாரிகள் இருக்கிறார்கள். இதுபோன்ற தாழ்த்தப்பட்ட மக்கள் அரசு செய்கிற திட்டங்களைப்பற்றிக் கேட்கிறபோது எத்தனை அதிகாரிகள் மனம் சலித்துக்கொண்டு பேசியிருக்கிறார்கள், எத்தனையோ புகார்கள் என்னிடத்தில் வந்திருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல முடிவு எடுக்க வேண்டும், நல்ல வழி காண்பது நல்ல நோக்கமாக இருக்கும் எனக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

எல்லோருக்கும் அந்தச் சமுதாய மக்கள்மீது அக்கறை இருக்க வேண்டும். ஏதோ மேலெழுந்தவாரியாக பேசிவிடுவது நல்லதல்ல. அரசு கொடுக்கிற உதவித் தொகைகளை அதிகாரிகள் அவர்களுக்கு வழங்கவேண்டும். அரசு அதிகாரிகள் அப்படிச் செய்யாது கேட்கிறவர் மனத்தைப் புண்படும்படி பேசுவது சரியல்ல. அப்படிப்பட்ட அதிகாரிகளும் சிப்பந்திகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். எத்தனை பேர் மீது வழக்குத் தொடர்ந்து எத்தனை

பேர்களை டிஸ்மிஸ் செய்து நடவடிக்கை எடுப்பது ? அதுவும் ஒரு பெரிய பிரச்னைதான். அனுமார் வால் போல் நீண்டு கொண்டே போகும். அந்த அதிகாரிகள் மனதில் அப்படிப்பட்ட எண்ணம் இருக்கக் கூடாது.

தந்தையின் ஜாதிப் பெயர்தான் பிள்ளைக்கு என்று ஹிண்டு லா சொல்கிறது. அதிலும் குறிப்பாக கலப்புத் திருமணம் செய்கிற பிள்ளைகளுக்குத்தான் இது பற்றி பேசுகிறோம். கலப்புத் திருமணம் ஏன் செய்து கொள்கிறார்கள் ? ஜாதி ஒழியவேண்டுமென்பதற்காக கலப்புத் திருமணம் செய்து கொள்கிறார்கள். இப்படிப்பட்ட திருமணம் செய்துகொண்டு விட்ட பிறகு மறுபடியும் இதே ஜாதி பெயர்களைப் போட்டுக்கொள்வது என்றால் கலப்புத் திருமணத்தால் ஜாதி ஒழியாது என்று சொன்னார்கள்.

கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்கள் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்களுக்குப் பிறக்கின்ற பிள்ளை களுக்கு அந்த இரண்டு ஜாதிகளின் பெயரையும் விட்டு விட வேண்டும். அவர்கள் உயர்ந்த ஜாதியாக இருந்தாலும் சரி, தாழ்ந்த ஜாதியாக இருந்தாலும் சரி. அப்படியில்லையென்றால், அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகள் தாழ்ந்த ஜாதியில் தான் இருக்கவேண்டுமென்றால், அந்த ஜாதியின் எண்ணிக்கை வளர்ந்து கொண்டே போகும். எனவே கலப்புத் திருமணம் செய்துகொண்ட வர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு தகப்பன் எந்த ஜாதியைச் சேர்ந்தவனோ அந்த ஜாதியின் பெயர்தான் வரும். அவன் தாழ்த் தப்பட்ட ஜாதியைச் சேர்ந்தவனாக இருந்தாலும் சரி, உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவனாக இருந்தாலும் சரி. ஒருவருக்கு ஒரு முறை, இன்னொருவருக்கு இன்னொரு முறை என்று வைக்க முடியாது. அப்படி இரண்டு பேருடைய ஜாதியும் வரக்கூடாது என்று சொன்னால் கலப்புத் திருமண ஜாதி என்று ஒரு புதிய ஜாதியை உருவாக்கவேண்டும். அதற்கு நாம் தயாராக இருக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லிக்கொள் கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் அம்மையார் அவர்கள் ஜாதி முறை ஒழியவில்லை என்று சொல்லி. அவர்கள் தொகுதியில் தாழக் குடி என்ற இடத்தில் ஒருவர் தாக்கப்பட்டார் என்று சொன் னார்கள். தாக்கப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட் டிருக்கிறது. 5 பேர் மீது வழக்கு தொடரப்பட்டு இருக்கிறது.





இப்படி அரிசன மக்கள் தாக்கப்பட்டார்கள் என்று புகார் கொடுக் கப்பட்டால் உடனேயே அந்த 5 பேரும் அரஸ்ட் செய்யப்பட்டு, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. எனவே அரசாங்கம் அதை விட்டு வைக்கவில்லை, நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

இப்படி அரசாங்கத்திற்கும் போலீசிற்கும் தகவல் வந்தால் நடவடிக்கை எடுக்கிறோம். போலீஸ் நடவடிக்கை எடுக்கிறது. ஆனால் போலீசிற்குச் சரியான சாட்சிகள் கிடைக்கவில்லை. ஆதலால் வழக்கைப் போட்டாலும் அது ஜெயிப்பது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் இந்தப் பக்கத்திலிருந்து கூறியதை யும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அதற்காகத்தான் சொன்னேன். தனி போலீஸ் அதிகாரி போட்டிருக்கிறோம். கடுமையான சட்டம் வைத்து இருக்கிறோம். தனி தாலுக்கா போர்டு வைத்திருக்கிறோம்.

தீண்டாமை ஒழிப்பிற்கு இன்னும் என்ன செய்யவேண்டும்? ஒரு முறை தவறு செய்தால் ரூ. 250, இரண்டாவது முறை தவறு செய்தால் ரூ. 500, மூன்றாவது முறை தவறு செய்தால் ரூ. 1,000. அபராதம் என்று சட்டம் அமைக்க வேண்டுமென்றால் மத்திய அரசுக்குச் சொல்கிறோம். ஒரு முறை தவறு செய்தால் இரண்டு மாதம், இரண்டாவது முறை தவறு செய்தால் 6 மாதம், மூன்றாவது முறை தவறு செய்தால் ஒரு வருடம் என்று தண்டனை கொடுக்க வேண்டுமென்று சொல்லுங்கள். சட்டம் போட்டு மத்திய அரசுக்குச் சிபார்சு செய்கிறோம், தனி தாலுக்கா போர்டு போடுகிறோம், கமிட்டிகள் போடுகிறோம். இத்தனையும் போட்டு ஒழியவில்லை என்றால், குறை எங்கேயிருக்கிறது, இயங்க வேண்டியவர்கள் இயங்கவில்லை என்றுதானே பொருள்.

சாட்சி கலைக்கப்படுகிறது, சரியான பெயர் கொடுப்பது இல்லை என்றால், என்னதான் சட்டம் போட்டு இருந்தாலும் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. அரசு நடவடிக்கை எடுக்கவில்லையா சொல் லுங்கள் ஒப்புக்கொள்கிறேன். தீவிரமாக, கடுமையாக சட்டங்கள் கொண்டுவர வேண்டுமா, கொண்டு வருகிறோம். எது எப்படிக் கொண்டு வந்தாலும், அந்த இடத்தில் இருக்கிறவர்களுக்கு அதைச் செய்ய மனம் இல்லை.

[திருமதி சத்தியவாணிமுத்து] [1974 மார்ச் 21

போலீஸ் இலாகாவில் உட்கார்ந்து இருப்பவர்களுக்கும் அதைச் சரிவர செய்ய மனம் இல்லை. அல்லது அங்கே சாட்சிகள் சரி யில்லை, இது சரியில்லை, அது சரியில்லை என்றுதான் போய்விடுகிறது. இப்படி கூட்டி கழித்துப் பார்த்தால் நன்மை ஏதும் இல்லை.

இன்னும் கடுமையான சட்டங்கள் போடவேண்டுமென்று சொன்னால், அதையும் பரிசிலிக்கிறோம். முடிந்தால், ஏற்றுக்கொள் கிறோம்.

பல நடவடிக்கைகளை தீண்டாமை ஒழிப்பிற்காக நாம் கடந்த 25 ஆண்டு காலமாக எடுத்து வருகிறோம், எவ்வளவு கடுமையாகச் சட்டம் போட்டாலும் அதை ஒழிக்க முடியவில்லை என்று திரு. ஜேம்ஸ் அவர்கள் சொன்னார்கள். காந்தியார் மிகச் சிறந்த திட்டங் களைத் தீட்டினார்கள். ஆனால், இன்னும் அந்த மக்கள் முன்னேற்றம் அடையவில்லை. சட்டத்தாலோ, அல்லது வேறு நடவடிக்கை யாலோ அவர்கள் முன்னேற்றம் பெற முடியாது என்பதை பேரறிஞர் அண்ணா அவர்கள் பலமுறை கூறியிருக்கிறார்கள். மன மாற்றத்தால்தான் அதை நிறைவேற்ற வேண்டும்.

அதிலும், குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், கடித்த பாம்பு தான் விஷத்தை எடுக்கவேண்டும். அதைத்தான் டாக்டர் சின்ன ராசு அவர்கள் சொன்னார்கள். ஜாதி இந்துக்கள் தான் அந்தத் தீண்டாமையை ஒழிப்பதற்கு முன்வரவேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள், கடித்த பாம்பு தான் விஷத்தை எடுக்கவேண்டும். கடித்தது யார்? உயர்ந்த ஜாதிக்காரர்கள்; விஷத்தை எடுக்கவேண்டியது அவர்கள்தானே தவிர வேறு எதுவும் அல்ல.

எனவே,தான் அந்த இடத்தில் இருப்பவர்கள் உயர்ந்த ஜாதிக் காரர்கள் இருக்கிறார்கள், போலீஸ் இலாகாவில் இருந்தாலும், நலத் துறையில் இருந்தாலும் அவர்கள்தான் விஷத்தை எடுத்தாக வேண்டும். அவர்கள் விஷத்தை எடுக்காத வரையில் என்ன திட்டங்கள் தீட்டப்பட்டாலும், எத்தனை கோடி செலவழித்தாலும், எத்தனை பெரிய காந்தியார் வந்தாலும் சமுதாயத்தில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட முடியாது.

எனவே, மறுமலர்ச்சி ஏற்படவேண்டும் என்பதை பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறினார்கள். மறுமலர்ச்சியை இன்றைக்கு இந்த நாடு எதிர்பார்க்கிறது. திட்டங்களைக் கொடுக்கிறோம் அதிலே குறைகள் இருக்கலாம்.



1974 மார்ச் 21] [திருமதி சத்தியவாணிமுத்து]

பதினைந்து பைசாவுக்கு மதிய உணவு, இது நீண்ட காலமாக குறை. ஆனால், கல்வி இலாகாவிலே 10 பைசாவுக்கு மதிய உணவு பத்து பைசாவில் கல்வி இலாகா கொடுக்கிற உணவு சத்து உணவாக இருக்கிறது. பதினைந்து பைசாவில் நலத் துறையில் கொடுக்கும் உணவு, சத்து உள்ளதாக இல்லை. நான் போய சமைத்துக் கொடுக்க வேண்டுமா? பணத்தைத்தான் கொடுக்க முடியும். மாண்புமிகு கல்வி அமைச்சர் 10 பைசா என்றால் நல்ல உணவாக இருக்கிறது. நான் 15 பைசா கொடுத்தால் சத்து இல்லாத உணவாக இருக்கிறது. அதை அறிந்துதான் 5 ரூபாய அதிகமாகப் போட்டு வாரத்துக்கு 5 நாள் முட்டை கிடைக்கிறது என்றால் முட்டை என்று வைத்து சத்துணவு, முட்டை, பா கொடுக்கச் செய்திருக்கிறோம். அதுவும் கிடைக்கவில்லை என்ற புகார் வந்தால். . . .

**திரு. ஜே. ஜேம்ஸ்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்க 10 பைசாவுக்குக் கொடுக்கிற உணவை அரிசன மக்களோடு உயர்ந் ஜாதி மக்களும் சேர்ந்து அதைச் சாப்பிடுகிறார்கள். அவர்களுக்கு அது போதுமான அளவுதான். மாண்புமிகு அரிசன நல இலாக அமைச்சர் கொடுக்கின்ற உணவு அரிசன மக்களுக்காகக் கொடுக்க படுகிறது. அரிசன மக்கள் பிறவியிலேயே போதுமான சக் அற்றவர்களாக பிறக்கின்ற காரணத்தினால் அவர்கள் பிறந் பிறகாவது சத்து உணவு கொடுத்தால் ஒழிய மற்ற சமுதா மக்களோடு அவர்களால் போட்டி போட இயலாது என் காரணத்தினால் அவர்களுக்கு சத்து உணவு வழங்கவேண்டும் என். சொன்னேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** மாண்புமி உறுப்பினர் அவர்கள் திசை திருப்புகிறார்கள். பைசா கணக்கி சொன்னீர்கள், 15, 10 என்ற அளவில் சொன்னீர்கள். பத் பைசாவுக்கு நல்ல உணவு, 15 பைசாவுக்கு நல்ல உணவு இல் என்றுதான் சொல்லப்பட்டது. அதாவும், இந்த சமுதாயத்தி பிறக்கிற குழந்தைகள் சத்து அற்ற குழந்தைகள் என் சொன்னது தவறு. பிளாட்பாரத்தில் போய்ப் பார்த்தா பிள்ளைகள் கொழு கொழு என்று தான் இருக்கும். மாடி வீட்டு பிள்ளைகள் தான் நோஞ்சாம் பிள்ளைகளாக இருக்கும்.

[திருமதி சத்தியவாணிமுத்து] [1974 மார்ச் 21

அதையும் இன்றைக்கு மாற்றி கேர் நிறுவனம் மூலம்—கல்வி இலாகாவில் அவர்கள் மூலம் தயார் செய்து கொடுத்தார்கள்—அதைக் கொடுத்தால் சற்று அக்கறை எடுத்துக்கொண்டு பில்பரேஜ் இல்லாமல் ஒழுங்காக செய்வார்களா என்று இப்பொழுது செய்துகொண்டிருக்கிறோம். அவர்கள் மூலமாக இந்த 15 பைசா உணவு என்றாலும், நாங்கள் நடத்துகிற விடுதிகளில் தான் முட்டை, பால் கொடுக்கின்ற திட்டத்தைப் போட்டிருக்கிறோம். காய்கறிகளுக்குப் பணம் போதவில்லை என்று கூறினார்கள். விடுதிகளிலும், பள்ளிகளிலும் உள்ள தோட்டங்களில் காய்கறிகளை உற்பத்திசெய்யுங்கள் என்று உத்தரவு போட்டிருக்கிறோம். சத்து உணவு நன்றாகத் தரவேண்டும் என்பதுதான் எங்களுடைய எண்ணமும், இந்த இலாகா அதுபற்றி அதிக கண்காணிப்பாக இருக்கிறது என்பதையும் நான் கூறிக்கொள்கிறேன்.

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பயிற்சி நிலையங்களில் மேஜை நாற்காலிகள் இல்லை என்று குறைப்பட்டுக்கொண்டார்கள். என்விரன்மென்ட் நன்றாக இருந்தால் தான் படிக்க முடியும் என்று அம்மையார் அவர்கள் சொன்னார்கள். இதை மத்திய அரசு நடத்துகிறது. மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். எனவே, அது கிடைத்த பிறகு அவர்களுக்கு அந்த வசதிகளையெல்லாம் செய்து கொடுக்க முடியும்.

கிறிஸ்துவ மக்களுக்கு நன்மை செய்துதர வேண்டும் என்று மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் இதுபற்றி முன்னமே கூறியிருக்கிறேன். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள்கூட நமது பிரதம அமைச்சர் இந்திரா காந்தி அவர்களுக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, இந்து அரிசனங்களுக்கு தருகின்ற பல வசதிகளைப் போல் கிறிஸ்துவ அரிசனங்களுக்கும் தருவதற்கு மத்திய அரசு ஒப்புதல் தரவேண்டும். மத்திய அரசு நிதி ஒதுக்கீட்டில் கிறிஸ்துவ அரிசனங்களுக்கு எல்லா சலுகைகளையும் அளிப்பதற்கு அனுமதி தர வேண்டும் என்று எழுதியிருக்கிறோம். அதற்கு இன்னும் பதில் வரவில்லை.

எனவே, நாங்கள் முயற்சி எடுத்திருக்கிறோம். அவர்கள் கூறுவது போல இந்த மாமன்றத்தில் வேண்டுமானால் தீர்மானம் போட வில்லை என்றாலும், முதல் அமைச்சர் எழுத்தைவிட மாமன்றம் தீர்மானம் போடவேண்டுமா? முதல் அமைச்சர் அவர்கள் எழுதி



1974 மார்ச் 21] [திருமதி சத்தியவாணிமுத்து]

யிருக்கிறார்கள், வாதாடிக்கொண்டிருக்கிறார்கள். நாமும் பல முறை கேட்டு வருகிறோம். ஆனால், மத்திய அரசு இன்னும் அதற்கு பச்சை விளக்குக் காட்டவில்லை. ஜேம்ஸ் அவர்களே அதற்கு முயற்சிப்பார்கள் என்று கருதுகிறேன். விரைவிலே அதைக்கூட பெற்றுவிட முடியும். பல முறை இந்த மன்றத்திலே அதைப்பற்றி விவாதித்திருக்கிறோம்.

கிறிஸ்துவ மக்களுக்கு எந்தவித குறைபாடும் இல்லாத அளவுக்கு இந்த அரசாங்கம் ஒதுக்குகின்ற நிதி ஒதுக்கீட்டில் இருந்து என்னென்ன திட்டங்கள் செயல்படுகின்றனவோ, அவைகள் அத்தனையும் மற்ற அரிசன மக்களுக்குக் கொடுத்துக் கொண்டு வருவதுபோல், கிறிஸ்தவ மக்களுக்கும் கொடுத்துக் கொண்டுதான் வருகிறோம். அதிலே குறைகள் இருக்காது. அதிலே வேண்டுமானால் யாராவது எங்கேயாவது தாசில்தார் உபகாரச் சம்பளம் கொடுக்க வேண்டியதில்லை என்று மனுவைத் திருப்பி அனுப்பியிருக்கலாம். அப்படிப்பட்ட சம்பவங்களும் நடைபெறுகின்றன. எனக்கு அப்படிப்பட்ட புகார்கள் வந்திருக் கின்றன. தாசில்தாருக்கு யார் எப்படிச் சொன்னார்கள் என்று உடனே அதைத் திருத்தி வேறு உத்தரவு போடுங்கள் என்ற அளவுக்கு இங்கேயிருந்து அவர்களுக்கு உத்தரவு அனுப்புகிறோம். எனவே, ஏற்கனவே ப்ரொவிஷன் இருக்கிறது அவர்களுக்கெல்லாம் கொடுப்பதற்கு, அதற்காக புதியதாக ஒன்றும் நாம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்பதையும் கூறிக்கொள்கிறேன்.

தொழில் துறையில் 18 சதவிகிதம் பூர்த்தியாக்கப்படவில்லை என்று பொதுவாக எல்லோரும் எடுத்துச் சொன்னார்கள். 18 சதவிகிதம் பூர்த்தியாக்கப்பட்டதா என்பதைக் கண்டறிய ஒரு கமிஷன் போடவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். எம். துரைராஜ் அவர்கள் சொன்னார்கள். இப்பொழுதே அதற்கு ஒரு ஹைலெவல் கமிட்டி போடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அதற்குத் தலைவராக இருக்கிறார்கள். எல்லாத் துறைகளிலும் 18 சதவிகிதம் கொடுக்கப் பட்டிருக்கிறதா என்பதை அறிய இந்தக் கமிட்டி இப்பொழுதும் இருக்கிறது. சமூக நலத்துறை துணைச் செயலாளர் அதற்கு செயலாளராக இருக்கிறார்கள். அவர்கள் மாவட்டவாரியாக ஒவ்வொரு இலாகாவிலும் 18 சதவிகிதம் பூர்த்தி ஆக்கப்பட் டிருக்கிறதா என்று கணக்கைப் பெற்று, பரிசீலனை செய்து

எங்களிடம் வந்து சொல்கிறார்கள். குறைகள் இருக்கிற இடங்களில் நாம் அதைப்பற்றி கண்காணித்து வருகிறோம். ஆனாலும், தேவையான மரங்கள் இல்லை, தகுதியுள்ள பயனர்கள் இருக்கவில்லை என்ற பொதுவான சில சங்கடங்கள் நிலவிக் கொண்டு வருகின்றன. இருந்தாலும் 18 லட்சத்தை பூர்த்தியாக்க இந்த அரசு முயற்சி அத்தனையும் எடுத்துக்கொண்டு வருகிறது என்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

சட்ட பட்டதாரிகளுக்குக் கொடுப்பதைப்போல் ஹவுஸ் ஸர்ஜன்களுக்கு தனி உதவி தரவேண்டும் என்று கேட்டார்கள். அது இப்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை. சட்ட பட்டதாரிகளுக்குத்தான் இந்த ப்ரொவிஷன் ரூ. 1,250, ரூ. 750 கடனாகவும் ரூ. 500 அவர்களுக்கு மான்யமாகவும் தருகின்ற ஒரு திட்டத்தை இன்றைக்கு வைத்திருக்கிறோம். எனவே, நிச்சயம் அவர்களுக்கும் நாங்கள் பரிசீலனை செய்கிறோம் என்பதை மாத்திரம் நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் பல பேர்கள் அவரவர்கள் தொகுதியிலே இருக்கிற குறைபாடுகளை எடுத்துச் சொன்னார்கள். நில ஆர்ஜிதத்தில் ஏற்படுகின்ற தாமதங்கள், சில பள்ளி மாணவர்களுக்கு சீருடை வழங்கவில்லை, உபகாரச் சம்பளம் தாமதமாகக் கிடைக்கிறது என்றெல்லாம் கூறினார்கள். தாமதத்தைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறோம் என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் இந்த உபகாரச் சம்பளம் கொடுக்கிற கணக்கில் 1972-73-ம் ஆண்டில் இருந்ததைவிட 1973-74-ல் கல்லூரி, பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து இருப்பதாகச் சொன்னார்கள். அதற்குக் கீழே கொடுத்திருக்கிறோம். 28—2—1974 வரைக்கும் கொடுக்கப்பட்டிருக்கிற உபகாரச் சம்பளத்தின் எண்ணிக்கைதான் அது. இன்னும் மார்ச் 31-ம் தேதி வரை உள்ள கணக்கைப் பார்த்தால் மேலே இருக்கிற 4 லட்சத்தை விட 1974-ம் ஆண்டிலே அதிகமாகப் போகும். எனவே இறுதி வரையில் எல்லா உபகாரச் சம்பளம் கொடுத்து விட்ட பிறகு 1972-73-ம் ஆண்டை விட 1973-74-ல் அதிகமாகத்தான் வரும். எனவே அரைகுறையாக இருக்கும்பொழுது இருக்கிற கணக்கைப் பார்த்துவிட்டு குறைந்திருக்கிறதே என்று கேட்க வேண்டாம்.



கடந்த ஆண்டு என்ற அளவுக்கு கணக்கு கொடுக்கும்பொழுது, இதைவிட நான் அதிக கணக்கை காட்ட முடியும். இன்னும் இது முடிகின்ற தருவாயில் இருக்கிறது. உபகாரச் சம்பளம் வழங்குவதில் தாமதம் இருந்தால், அதைத் தவிர்க்கவேண்டும் என்று அதிகாரிகளுக்கு உத்தரவிடப்படும். அதைத் தவிர்ப்பதில் எந்தவிதமான கஷ்டமும் இருக்காது.

மதிப்பிற்குரிய திரு. அ. ந. சுப்பையா அவர்கள் அதிகாரிகள் செய்கின்ற தவறுகளைப் பற்றிக் கூறினார்கள். அதிகாரிகளுக்கு பொறுமை ஏற்பட்டிருக்கிறது. அரிசனங்களுக்கு நிலம் கொடுத்தாலும், சாமர்த்தியம் உள்ளவர்கள் அதைப் போய் வாங்கிக் கொள்கிறார்கள், சாமர்த்தியம் இல்லாதவர்கள் வாங்க முடியவில்லை என்று சொன்னார்கள். நான் துவக்கத்திலேயே சொன்னேன். ஆனால் ஹவுஸிங் ஸ்கீமில் மொத்தம் 2 செண்ட் நிலம்தான் தரப்படுகிறது. வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். ஆனால் ஹவுஸிங் ஸ்கீமின் கீழ் கொடுக்கப்படும் 2 செண்ட் நிலம் பற்றாது என்று மத்திய அரசுக்கு எழுதியிருப்பதாக மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் அவர்கள் எழுதியிருக்கிறார்கள் என்று கூறினார்கள். மத்திய அரசுக்கு சொன்னார்கள்.

பல திட்டங்கள் பல்வேறு இலாகாக்களின் கீழ் செய்யப்படும் பொழுது, எல்லாமே இந்த ஒரு இலாகா என்று நினைத்து மாண்புமிகு உறுப்பினர்கள் என்னிடம் குறை கூறுகிறார்கள். சத்து உணவு என்றால் என் இலாகா மாத்திரம் இல்லை. மருத்துவ சுகாதார இலாகா மூலம் சத்து உணவு தரப்படுகிறது, ஆர்.டி.எல்.ஏ. மூலம் கொடுக்கப்படுகிறது, விமன் வெல்பேர் டிபார்ட்மெண்ட் மூலம் கொடுக்கப்படுகிறது. எனவே சத்து உணவு என்று வருகிறபொழுது நலத்துறை இலாகா தான் என்று எடுத்துக்கொள்ளக்கூடாது.

அதே போல நில ஆர்ஜிதம் என்று பார்க்கும்பொழுது எல்லா ஏழைகளுக்கும் நிலம் என்று ஆனால் ஹவுஸிங் இலாகாவில் கொடுக்கிறார்கள். அதே போல ரெவின்யூ இலாகா மூலம் நிலமற்ற ஏழைகளுக்கு நிலம் தரப்படுகிறது. நலத் துறையில் பணம் போட்டு நிலம் வாங்கிக் கொடுக்கிறோம்.

[திருமதி சத்தியவாணிமுத்து] [1974 மார்ச் 21

எனவே எதற்கெடுத்தாலும் நலத் துறை ஏன் செய்யவில்லை என்று எந்த இலாகாவிலோ ஏற்படுகிற குறைகளை இந்த இலாகாவிற்கு வந்து என் மீது சொன்னால் நான் என்ன செய்வது? நான் திருப்பித் திருப்பிச் சொல்கிறேன். எந்த இலாகாவில் எந்தத் திட்டம் இருக்கிறது என்பதையெல்லாம் வெளியிலே இருக்கிற மக்கள் தெரிந்து கொள்ள வாய்ப்பு இல்லை என்றாலும், அருள் கூர்ந்து உறுப்பினர்கள் அதைத் தெரிந்துகொண்டு அந்த முறையில் செயல்பட்டால் காரியங்களை வேகமாக விரைவில் செய்ய முடியும்.

டாக்டர் அம்பேத்கார் படத்தை இங்கே வைக்கவேண்டும் என்று பல உறுப்பினர்கள் கேட்டார்கள். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அதற்கான பதிலைக் கூறுவார்கள் என்று நான் கூறிக் கொள்கிறேன்.

பொதுவாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இருக்கிற பல குறைகளை உறுப்பினர்கள் எடுத்துச்சொன்னார்கள். எல்லோருமே இலாகாவில் உள்ள பல குறைபாடுகளை சொல்லியிருக்கிறார்கள். அவைகளுக்கெல்லாம் நான் நடவடிக்கை எடுக்கிறேன். அவரவர்கள் தொகுதியிலிருக்கிற குறைகளைப் பற்றியும் சொன்னார்கள். அவைகள் குறித்தும் நடவடிக்கை எடுக்கிறேன் என்று குறிப்பிட்டு, நலத்துறைக்காக நீங்கள் நல்ல நோக்கத்தின் அடிப்படையில் கொடுத்த கருத்துக்களைப் பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்கிறேன். எனவே, வெட்டுத் தீர்மானங்களை நீங்கள் திரும்பப் பெறவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 6.30 மணி)

மீன்வளத் துறையைப் பொறுத்தவரையில் இன்று காலையில் பேசும்போதே சொன்னேன். பல நல்ல திட்டங்களை எல்லாம் இந்த அரசு தீட்டி, நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் வேதாசலம் அவர்கள் பேசும்போது ஒரு மாஸ்டர் பிளான் தயாரிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அந்தத் திட்டத்தை ஏற்கெனவே போட்டிருக்கிறோம். திட்டத்தைப் போட்டு மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். இன்னும் அங்கிருந்து ஒப்புதலாகி வரவில்லை.



1974 மார்ச் 21] [திருமதி சத்தியவாணிமுத்து]

எல்லா வகையான திட்டங்களையும் இந்த அரசு நிறைவேற்றி
வருகிறது. சாதாரண தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டுமல்ல;
மீனவர் சமுதாயத்திற்கு மட்டுமல்ல; தமிழ் நாட்டு மக்கள்
எல்லோருக்கும் பயன்படுகின்ற திட்டங்களை எல்லாம் இந்த அரசு
நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது. இதுவரையிலும் யாரும்
போடாத திட்டங்களையும் இனி யார் வந்தாலும் போட முடியாத
திட்டங்களையும் நாங்கள் போட்டு நிறைவேற்றிக்கொண்டிருக்
கிறோம். வேறு யாராவது வந்தாலும் நாங்கள் போட்ட திட்டங்
களைத்தான் நிறைவேற்ற வேண்டிய அளவுக்கு செய்துகொண்டிருக்
கிறோம். வரக்கூடியவர்கள் புதிதாகப் போடுவதற்கான திட்டங்கள்
எதையும் நாங்கள் விட்டு வைக்கவில்லை. சில திட்டங்களை நிறை
வேற்றுவதில் எங்களுக்குப் பல சங்கடங்கள் இருக்கின்றன.
போடுகிற எல்லாத் திட்டங்களையும் நாங்களே நிறைவேற்றிவிட
முடியாது. மத்திய அரசும் சிலவற்றைச் செய்ய வேண்டியிருக்
கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'ஹாஃப் எ மில்லியன் ஜாப் புரோகிராம்' திட்டத்தின்கீழ் 6,000
பேர்களுக்கு இந்தத் துறையிலே வேலைவாய்ப்புத் தருகிறோம்.
அதிலே பெரும்பாலானோர் மீனவர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்.
ஃபிரீஸ் பிளான்ட், ஐஸ் பிளான்ட், கோல்டு ஸ்டோரேஜ், போட்
பில்டிங் இவைகளில் பயிற்சி கொடுக்கிறோம். கூட்டுறவு மூலம் நிதி
உதவி செய்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள் பேசும்
போது மீனவ மக்களுக்கு நல்ல திட்டங்களைத் தீட்டி நிறைவேற்ற
வேண்டும் என்றும், மீனவ மேம்பாட்டுக் கழகம் வந்தாலும் அவர்
களுக்கே நன்மைகள் போய்ச் சேரவேண்டும் என்றும் சொன்
னார்கள். மேம்பாட்டுக் கழகம் 'காரீரியல் ஆப்பெக்டில்' செயல்
பட்டாலும் கூட, அதிக அளவில் மீன்களைப் பிடித்து, பதப்படுத்தி,
நல்ல நிலையில் தயார் செய்து, அயல்நாடுகளுக்கு அனுப்பி, அந்
நியச் செலாவணியைத் தேடித்தர வேண்டுமென்பது மட்டுமல்ல
இதன் நோக்கம். எல்லாவிதமான நன்மைகளையும் இந்தச் சமுதா
யத்திற்குச் செய்யவேண்டுமென்றுதான் இந்த இலாகா செயல்படு
கிறது. அந்த வகையிலே திட்டங்கள் தீட்டப்பட்டு நிறைவேற்றப்
படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திருமதி சத்தியவாணிமுத்து] [1974 மார்ச் 21

உள்நாட்டு மீன் வளர்ப்பு பற்றிய கருத்தையும் அவர்கள் தெரிவித்தார்கள். உள்நாட்டில் இருக்கின்ற குளங்களை தூர் வாரி, அதிக அளவில் மீன்களை வளர்க்க நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். உள்நாட்டு மீனினங்களை அதிக அளவுக்கு உற்பத்தி செய்யக்கூடிய வகையில் தூண்டுதல் முறையில் மீன் இனங்களைப் பெருக்குவதற்கு நிறைய வசதிகளைச் செய்திருக்கிறோம். 'ஃபிஷ் பாண்ட்ஸ்' நிறைய வைத்திருக்கிறோம்.

ஊராட்சித் துறை, பொதுப்பணித் துறைகளின்கீழ் இருக்கின்ற குளங்களில் மீன்களை வளர்த்து, மக்களுக்கு விநியோகம் செய்கிறோம். இந்த விஷயத்தில் மிகவும் அக்கறை செலுத்தி வருகிறோம்.

பழவேற்காடு போன்ற இடங்களில் மீன்களை வளர்க்க நல்ல வசதி இருக்கிறது. உழாமலேயே பலனை அள்ளிக்கொண்டு வருவதைப்போல கடலிலிருந்து மீன்களை அள்ளிக்கொண்டு வந்தோம். இப்போது உழுது பலன் எடுக்கின்ற முறையைப்போல் குளங்களிலே நல்ல தரமான இறால் குஞ்சு, மடவா குஞ்சுகளை வளர்த்து பலன் எடுக்க திட்டமிட்டு, நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம். கடல் மீன்களைக்கூட இப்போது வளர்க்கத் தொடங்கிவிட்டோம்.

பல துறைமுகங்களைப்பற்றிச் சொன்னார்கள். சென்னை துறைமுகத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது சென்னை துறைமுகம் ஒரு கோடி, இரண்டு கோடியில் அல்ல; 6 கோடி ரூபாயில் விரிவுபடுத்தப்பட இருக்கிறது. இது வரையில் இத்திட்டத்திற்கு டிசைன் தாமதம்; இடத்திற்கு தாமதம் இருந்தது. இப்போது எல்லாம் முடிவாகி, வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தூத்துக்குடி துறைமுகம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது; இன்னும் தொடக்க விழா செய்யவில்லை. அந்தத் துறைமுகமும் விரைவிலே செயல்பட இருக்கிறது.

குளச்சல் பற்றிச் சொன்னார்கள். அங்கே இருக்கிற டிரெயினிங் சென்டரை எங்கும் மாற்றிவிடப்போவதில்லை; அங்கேதான் இருக்கும். மாற்றிவிடுவோம் என்று யாரோ தவறாக கட்டிவிட்ட கதைதான் அது. அதை நம்ப வேண்டாம்.



1974 மார்ச் 21] [திருமதி சத்தியவாணிமுத்து]

குளச்சலை இன்னும் பெரிய துறைமுகமாக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இப்போதே போட் ஜெட்டி, ஐஸ் பிளாண்ட், ஃபிரீஸ் பிளாண்ட் முதலியவை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. மேலும் விரிவாக்க இந்தத் துறை முயற்சி எடுக்கும். அங்கே இருக்கின்ற டிரெயினிங் சென்டரை நாகர்கோவிலுக்கோ அல்லது வேறு இடங்களுக்கோ மாற்றம் செய்ய மாட்டோம் என்ற உறுதிமொழியினை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு கூறிக்கொள்கிறேன்.

மண்டபத்தில் பெரிய ஃபிஷ் மீல் பிளாண்ட் இருக்கிறது. அங்கே டிராலர்ஸ் வேண்டுமென்று அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. சத்தியேந்திரன் அவர்கள் சொன்னார்கள். 50 டிராலர்ஸ் வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம். இங்கும் பெரிய டிராலர்ஸ் கட்டவேண்டுமென்றும் பல படகுத் துறைகள் கட்ட வேண்டுமென்றும் திட்டம் போட்டு அனுப்பியிருக்கிறோம். நிறைய துறைமுகங்கள் வந்தால், மீனவ மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் நிறைய படகுகளைக் கட்டிக்கொடுக்கவும், நிறைய மீன்களைப் பிடித்து பதப்படுத்தி, அதன் மூலம் அந்நியச் செலாவணியை ஈட்டவும் நல்ல வாய்ப்பு ஏற்படும். தமிழகத்தின் மீனளத் துறை இப்படி பல்வேறு வகைகளில் நல்ல முன்னேற்றம் அடைவதற்கான வாய்ப்பு இருக்கிறது; அந்த வகையில் நல்ல திட்டங்களைத் தீட்டி செயலாற்றி வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் முத்துச் சிப்பிபற்றிச் சொன்னார்கள். முத்து இப்போது குளிக்கப்படாததால் சங்கு குளிக்க உத்தரவு கொடுங்கள் என்று சொன்னார்கள். முத்து கிடைக்கவில்லை என்ற நிலை இருந்தாலும் ஆய்ஸ்டர்ஸ் தூத்துக்குடியில் இருக்கின்றன. அவைகளை உயிரோடு வைக்க வேண்டாமா? அந்த இனம் உயிரோடு இருந்தால்தான் முத்து உற்பத்தியாகும். இப்போது அங்கே சங்கு குளிக்க உத்தரவு கொடுத்தால் அந்த இனம் அழிந்துபோகும். ஆகவேதான் தூத்துக்குடி தவிர மற்ற எல்லா இடங்களிலும் சங்கு குளிக்க உத்தரவு கொடுத்திருக்கிறோம். அதற்கு 10 ரூபாய் செலுத்தி

லைசென்ஸ் பெற்றுக்கொள்ள வேண்டும். தூத்துக்குடியில் மட்டும் அனுமதி தரப்படவில்லை. ஆழிகள் உயிரோடு இருக்க வேண்டும். செயற்கை முறையில் முத்து தயாரிக்க வேண்டுமானால் ஆழிகள் வேண்டும். உயிரோடு இருக்கின்ற ஆழிகளில் வைத்துத்தான் செயற்கை முத்துக்களை உருவாக்க வேண்டும். ஆகவே, தூத்துக் குடியில் சங்கு குளிக்க அனுமதி கொடுக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறங்காவலர்களை நியமிப்பதில் தாமதம் ஆகிறது; அதைத் தவிர்க்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு சட்டம் இயற்றியாகிவிட்டது. அந்தந்த வட்டாரத்திலே இருக்கிற அறங் காவலர் குழுக்களை மாற்றி அமைக்கும்போது தாழ்த்தப்பட்ட சமு தாயத்தைச் சேர்ந்தவர்கள் உரியவர்களுக்கு மனுப் போட்டு, சம்பந்தப்பட்ட துறை மூலம் பெற்றுக்கொள்ளலாம். அதற்கு உரியவர்களும் மற்றவர்களும் ஆணை புரிந்தால் நிச்சயம் தாழ்த்தப் பட்டவர்களுக்கு இடம் கிடைக்கும்; தாமதம் தவிர்க்கப்படும்.

கல்லூரி மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதை அதிகமாக்க வேண்டுமென்று சொன்னார்கள். மத்திய அரசாங்கம் உபகாரச் சம்பளத்தை 50 சதவிகிதத்திற்கு உயர்த்தி இருப்பதாக வும் சொன்னார்கள். மத்திய அரசு இன்றைக்கு எல்லா மாணவர் களுக்கும் உபகாரச் சம்பளம் கொடுக்கவில்லை. 1968-69-ம் ஆண்டு வரையில் எத்தனை மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுத் தார்களோ அத்தனை மாணவர்களுக்கு மட்டும்தான் கொடுக் கிறார்கள். அதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

இங்கே உபகாரச் சம்பளம் வழங்குவதற்காக வழங்கப்படுகின்ற நமூனாவில் தவறு இருக்கிறது. தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு இன்னின்ன கோர்ஸுக்கு இவ்வளவு பணம், பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு இன்னின்ன கோர்ஸுக்கு இவ்வளவு பணம் என்று மத்திய அரசு தெளிவுபடப் போட்டு திட்டவட்டமாகத் தெரிவித்துவிட வேண்டும். பிற்பட்ட வகுப்பினர் நலன், தாழ்த் தப்பட்ட வகுப்பினர் நலன்—இந்த இரண்டு பிரிவுகளையும் ஒரே செயலாளர், சமூக நலத் துறை செயலாளர் பார்த்துவருகிறார். இந்த இரு பிரிவினர்களைச் சேர்ந்த மாணவர்கள் உபகாரச் சம்பளத்திற்கான நமூனாக்களை இந்தச் செயலாளரே தயார் செய்





கிறார். அந்த நமூனாக்களில் சில விபரங்கள் மாறி மாறி இருக் கின்றன. அந்த நமூனாவில் ஒன்று இருக்கிறது; இந்த நமூனாவில் ஒன்று இருக்கிறது; அந்த நமூனாவில் உள்ளவர்களுக்கு டிவிஷன் கிடைக்க பீஸ் கிடைக்கிறது; இந்த நமூனாவில் உள்ளவர்களுக்கு இல்லை வில்லை; அதற்கு புக் மணி இருக்கிறது; இதற்கு புக் மணி இப்போது என்று மாணவர்கள் குழம்பிக் கொண்டிருக்கிறார்கள். அதை மாற்றிக்கொண்டிருக்கிறோம்.

இன்னின்ன கோர்ஸுக்கு இந்தப் பிரிவு மாணவர்களுக்கு இவ்வளவுதான் உபகாரச் சம்பளம் என்று, அதுவும் மத்திய அரசு கொடுக்கிறதா மாநில அரசு கொடுக்கிறதா என்பதை எல்லாம் திட்டவட்டமாக நமூனாவில் குறிப்பிட வேண்டுமென்று சொல்லி யிருக்கிறோம்.

பி.சி. மாணவர்களுக்கு மத்திய அரசு உதவித்தொகை கொடுக்க வில்லை. அதைத் திட்டவட்டமாகப் போட்டுவிட வேண்டும். அதை இப்போது வலியுறுத்தி இருக்கிறேன்; கண்டிப்பாகவே இருக் கிறேன். இதிலே மாணவர்களுக்கு தெளிவு ஏற்பட்டுவிட்டால் வீணாக குழம்பமாட்டார்கள். பீதிகளுக்கு ஆளாக மாட்டார்கள்; அரசியல் வாதிகளின் தூண்டுதல்களுக்கும் இடமிருக்காது. அதற்கு இந்த வகையிலே வேகமாக நடவடிக்கை எடுக்கும்படி சொல்லியிருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் மீனவத்துறைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களையும் திரும்பப் பெற்று இந்த மானியக்கோரிக்கைகள் இரண்டையும் நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. என் இராஜாங்கம்:** சட்டமன்றத் தலைவர் அவர்களே, இங்கே சட்டமன்றத்தில் பேசுவதும். அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதுமான உள்ள ஒரு விஷயத்தில் உள்ள சிக்கல்—இந்து என்ற மதத்தில் இருந்து வேறு மதத்திற்குப் போய்விட்டால் இந்து என்ற பெயரும் போய்விடுகிறது. இந்த கிறிஸ்தியன் என்று இல்லை. இல்லை. இந்து காரணம் கிறிஸ்துவர்களில் அரிஜன் என்று இருக்க மதத்தில் இருக்கிற வரையில்தான் இந்து அரிசன் என்று இருக்க முடியும். இந்து அரிசன் ஆக இருக்கிற வரையில் மத்திய அரசு

சட்டப்படி சலுகைகள் இருக்கின்றன. இந்து அரிசன் கிறிஸ்துவனாகிவிட்டால் அரிசன என்ற பெயர் அங்கே இல்லை. அவர்களுக்கும் சலுகை வேண்டுமென்றால் மத்திய அரசுதான் சட்டத் திருத்தம் செய்யவேண்டியிருக்கிறது என்பது ஒன்று. ஆகவே கிறிஸ்துவ அரிசன் என்று சொல்வது தவறு. மதம் மாறிவிட்டாலேயே இந்து என்ற பெயர் போய்விடுகிறது.

இரண்டாவது, இவர்களுக்கும் சலுகை வேண்டுமென்று சொல்வது அழகாக இருக்கிறது. என்றாலும் அது மத்திய அரசாங்கம் சட்டத் திருத்தம் செய்யவேண்டியது.

மூன்றாவதாக, முன்பே 80 லட்சம் அரிசனங்கள் இந்து மதத்தில் இருந்ததாகச் சொல்லப்பட்டது. அதில் 20 லட்சம் பேர்கள் மதம் மாறிவிட்டார்கள். இன்றையதினம் அரிசனங்கள் 76 லட்சம்தான் இருக்கிறார்கள் என்பது நாளுக்கு நாள் இந்த மக்கள் தொகை குறைவதுபோல இருக்கிறது. சரியான கணக்கு விவரத்தை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** அரிசனங்கள் கிறிஸ்துவர்களாக மாறிவிட்டவுடன் அவர்களது பொருளாதார நிலை மாறிவிடவில்லை. சமுதாயத்தில் கிறிஸ்துவர்களாகியும் முன்பு இருந்த அடிப்படையிலேதான் இருக்கிறார்கள். ஆகவே இவர்கள் கிறிஸ்துவர்களாக மாறினாலும், பொருளாதார அடிப்படையில் கவனித்து இவர்களுக்கும் சலுகை கொடுக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். கொடுக்கவேண்டுமென்பதுதான் அரசியல் சட்டத்தின் விதி என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** இந்த மாமன்றத்தில் டாக்டர் அம்பேத்கார் படத்தை வைக்கவேண்டுமென்று திரு. வை. பாலசுந்தரம் அவர்களும், மற்றவர்களும் எடுத்துச் சொன்னார்கள். அதற்குப் பதில் அளிக்கிறபோது முதல் அமைச்சர்தான் அதற்கு பதில் சொல்லவேண்டுமென்று நலத்துறை அமைச்சர் சொன்னார்கள். இந்த அரசாங்கம் என்ன கருத்தில் இருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்க முடியுமா?



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** டாக்டர் அம்பேத்கார் இந்தியா பூராவுக்குமே அரசியல் சட்டத்தை வகுத்துக் கொடுத்தவர். அகில இந்திய, மாநில சட்டமன்ற அவைகளிலும் அவர் படம் வைக்கப்படவேண்டுமென்றுதான் திராவிட முன்னேற்றக் கழகம் எழுப்பும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 28—2—1974 ஆம் நாள் வரை பள்ளியில் பயில்வோர், கல்லூரியில் பயில்வோர் எண்ணிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது, இன்னும் ஒரு மாதம் இருக்கிறது, இந்த எண்ணிக்கை அதிகமாகலாம் என்றார்கள். மாணவர்கள் எண்ணிக்கை எப்படி இன்னும் ஒரு மாதத்தில் அதிகமாகும்? மேலும் ஆண்டுக்கு ஆண்டு கல்லூரி மாணவர்கள் எண்ணிக்கை இதன்படி குறைந்துவருகிறதாகத் தெரிகிறதே, இதற்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** 28—2—1974 ஆம் நாள் வரை என்று கொடுக்கப்பட்டிருக்கிற கணக்கில் இதுவரை ஸ்காலர்ஷிப்—பயன் பெற்றவர்களின் எண்ணிக்கைதான். கல்லூரிகளில், பள்ளிகளில் படிக்கிற மாணவர்களின் எண்ணிக்கை அல்ல. அங்கே படிக்கிற மாணவர்கள் உதவித்தொகை கோரி விண்ணப்பித்திருக்கிறார்கள். நாம் அந்த நமூனாக்களைப் பரிசீலனை செய்து இதுவரை இந்த எண்ணிக்கையினருக்குக் கொடுத்திருக்கிறோம். மேலும் இருக்கிற நமூனாக்களைப் பரிசீலனை செய்து இன்னும் இருக்கிற ஒரு மாதத்தில் மேலும் பலருக்கு வழங்கக்கூடும். ஆகவேதான் இந்த எண்ணிக்கை அதிகரிக்கும் என்று சொன்னேன். எண்ணிக்கை அதிகரிப்புக்குத் தகுந்தாற்போல பணமும் அதிகரிக்கும்.

மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் தாழ்த்தப்பட்டவர் கிறிஸ்துவராக மாறினவுடனேயே அவரது பொருளாதார நிலையில் மாற்றம் இல்லை என்கிறார்கள். அதை நானும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் மத்திய அரசு சொல்வது கிறிஸ்துவ மதத்தில் சாதி இல்லை, இஸ்லாமிய மதத்தில் சாதியில்லை. இந்து மதத்தில்தான் வர்ணாசிரம முறைப்படி பல சாதிகள் இருக்கின்றன. இதில் அரிசனங்கள் இருக்கிறார்கள்—தீண்டாதவர்களாகவே இருக்கிறார்கள். உயர்ந்த

[திருமதி சத்தியவாணிமுத்து] [1974 மார்ச் 21

சாதி, தாழ்ந்த சாதி என்ற பிரிவு இருக்கிறது. ஆகவே இந்து மதத்தில் உள்ள அரிசனங்களுக்கு இந்தச் சலுகைகள் தரப்பட வேண்டும். இந்து மதத்தைச் சேர்ந்த அரிசன் கிறிஸ்துவ மதத்திலோ, இஸ்லாம் மதத்திலோ சேர்ந்துவிட்டால் இந்தச் சலுகை கிடையாது என்பதுதான். இதுதான் நடைமுறை.

ஆனால் நமக்குத் தெரியும். ஒரு அரிசன் கிறிஸ்துவராக மாறினவுடனேயே சாதி பாகுபாட்டில் இருந்து விலக்குப் பெறவில்லை. ஒரு பாதிரியார் சுடுகாட்டில் சவத்தைப் புதைப்பதற்குக் கூட தாழ்த்தப்பட்ட சாதிக்கார கிறிஸ்துவர்களது சவத்தைப் புதைக்க சுவர் வைத்து சுடுகாட்டைப் பிரித்திருப்பதைப் பார்க்கும்போது கிறிஸ்தவ சாமியாருக்கே அந்தப் பக்குவம் இன்னும் வராதபோது நடைமுறையில் எப்படியிருக்கிறது என்பதை நாம் அறிவோம். ஆனால், அந்த மதத்தின் கொள்கை—டாக்ட்ரின் சாதிப் பிரிவு கிடையாது என்பதை வைத்துத்தான் மத்திய அரசு இப்படித் தீர்மானித்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது.

திரு. என். டென்னிஸ், திரு. கு. அ. பொம்மன், திரு. ஆ. கு. சுப்பையா, திரு. கே. எஸ். கோதண்டராமையா ஆகியவர்கள் இருக்கையில் இல்லாததால் நிதிக் கோரிக்கை 30-க்கு கொடுக்கப்பட்டிருந்த அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திரு. ஏ. சுப்பிரமணியம், திரு. எஸ். வடிவேல், திரு. சு. ம. துரைராஜ் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 30—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 8,93,04,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.



74 மார்ச் 21] [பேரவைத் தலைவர்[

திரு. க. உரொ. எட்மண்ட், திருமதி த. ந. அனந்தநாயகி, திரு. ர். பொன்னப்ப நாடார் ஆகியவர்கள் இருக்கையில் இல்லாததால் திக்கோரிக்கை 21-க்கு கொடுக்கப்பட்டிருந்த அவர்களுடைய வட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திரு. சோ. அழகர்சாமி, திரு. கே. எ. வகாப் ஆகியவர்களுடைய வட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்ப பற்றுக் கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 21-மீனளம் என்ற தலைப்பின் கீழ் 5. 1,76,40,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று பேரவை நாளைக் காலை 9 மணி அளவில் மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை மாலை 6.50 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

193. Notification issued with G.O. Ms. No. 3314, Public (Elections-IV), dated the 15th December 1973 in regard to an amendment to the Tamil Nadu Legislature Travelling Allowance Rules, 1955. [Laid on the table of the House under section 14 (3) of the Tamil Nadu Payment of Salaries Act, 1951 (Tamil Nadu Act XX of 1951).]

194. Notification issued with G.O. Ms. No. 375, Rural Development and Local Administration, dated the 19th February 1974 in regard to an amendment to the Rural Development and Local Administration Notsfication No. II (2) Rule 1283/(AAE)/74, dated the 18th January 1974 relating to redivision of wards and reservation of seats in the Tiruvannamalai Municipal Council. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

## B. *Reports, Notifications and Other Papers.*

89. Notification issued with G.O. Ms. No. 7378, Revenue, dated the 13th December 1973 in regard to remission of stamp duty chargeable under the Indian-Stamp Act, 1899 in respect of the bonds to be issued in connection with the floating of an open market loan by the Madras Port Trust.

90. Notification issued with G.O. Ms. No. 6368, Revenue, dated the 15th October 1973, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the sale deed to be executed in favour of the Tamil Nadu Housing Board.

91. Notification issued with G.O. Ms. No. 6958, Revenue, dated the 19th November 1973, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the mortgage deed to be executed in favour of the Housing and Urban Development Finance Corporation (Privdte) Limited, New Delhi.

@ 92. Policy Nota on Demand No. 30—Welfare of the Scheduled Tribes, Castes, etc., 1974–75 (English and Tamil).

@ 93. Performance Budget on School Education, 1974-75.

@ 94. Performance Budget on Technical Education, 1974-75.

@ 95. Performance Budget on Collegiate Education, 1974-75.

---

* Cut motions circulated separately.

@ Despatched to Members on 19th March 1974.



## இணைப்பு I

279 பக்கத்தில் 533-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற் குரிய விடையைக் காண்க.]

## EXTRACT OF RULE 81 OF THE MADRAS EDUCATIONAL RULES.

*Use of Buildings.*

The premises of an educational institution or any subsidiary building appertaining to it or a play-ground or vacant site belonging to the institutions, whether adjacent to or removed from it shall ordinarily be used only for the purposes of functions conducted by such institution. But the Executive authority of the local body, the District Educational Officer or the Inspectress of Girls' Schools, as the case may be in the case of a Government institution other than a Government College, the Principal in the case of a Government College, the manager or Correspondent in the case of an Aided Secondary or special institution and the Principal in the case of an Aided College is empowered to grant permission, on such conditions as he deems fit to impose, for the use of such building or ground or site belonging to the institution for holding public functions arranged by the management, or by a department of the State or the Union Government for any non-political purposes.

The authority concerned should obtain the orders of the Director of Public Instruction in doubtful cases.

In no case shall the use of such buildings, play-grounds or vacant site be given for political meetings.

*Note.*—This rule is applicable to all institutions under different managements recognized under the Madras Educational Rules.

## இணைப்பு II

ம் பக்கத்தில் 542-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற் குரிய விடையைக் காண்க.)

சென்னை மாநகரத்தின் எல்லைக்குள் செயற்கை முறையில் இனவிருத்தி செய்யும் பொருட்டு 1973ஆம் ஆண்டு சூன் மாதத்தில் நடமாடும் செயற்கை இனவிருத்தி குழு ஒன்று ஏற்படுத்த அரசு ஒப்புதல் அளித்தது. சென்னை மாநகரின் எல்லைக்குள் இருக்கும்

[1974 மார்ச் 21

மாடு/எருமை இவைகளுக்கு செயற்கை இனவிருத்தி செய்யும் பொருட்டு, நடமாடும் செயற்கை இனவிருத்திக்குழு, மாட்டின் சொந்தக்காரர்களின் வீட்டிற்குச் சென்று பணிபுரியும் வகையில் ஒவ்வொரு முறையும் ரூ. 5 கட்டணமாக வசூலிக்கப்படும். போக்கு வரத்திற்காக ஏற்படும் செலவை ஈடுசெய்ய மட்டும்தான் இந்தக் கட்டணம் வசூலிக்கப்படுகிறதேயன்றி அலுவலர்கள் புரியும் பணி இலவசமாகவே செய்யப்படும்.

2. தானியங்கும் உந்து ஊர்தி வாங்க போக்குவரத்து ஆணை யாளரிடம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வூர்தி கிடைக்கப் பெற்றதும் இத்திட்டம் அமுலாக்கப்படும்.

3. இத்திட்டம் திருப்திகரமாக நடப்பதை அறிந்து மற்ற மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தும் திட்டம் பரிசீலிக்கப்படும்.

In June 1973, the Government have sanctioned the establishment of a Mobile Squad exclusively for Artificial Insemination Service in Madras City. Under this scheme a fee of Rs. 5 will be levied for every visit made by technical staff of the Mobile Squad to carry out artificial insemination of cows and she--buffaloes at the residence of the breeders within the city area. The charges levied are only to cover the transport and maintenance charges of the vehicle while services rendered by the technical staff are to be considered as free.

Order have been placed with the Transport Commissioner for the supply of a Mobile Van. This scheme will be implemented as soon as the Mobile Van is made available by the Transport Commissioner.

The successful working of the scheme will be watched and the question of extending the scheme to other districts will be considered in due course.

## இணைப்பு III

304-ம் பக்கத்தில் 548-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்
குரிய விடையைக் காண்க.)

இன்றியமையாப் பொருள்கள் சட்டத்தின் 2 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சில பொருள்களின் உற்பத்தி, வழங்கல், பங்கீடு மற்றும் அப்பொருள்களின் தொழில் வாணிகம். வாணிகம்



1974 மார்ச் 21]

ஆகியவற்றின் கட்டுப்பாட்டுக்கு வகை செய்வதற்காக 1955-ல்
இந்திய அரசினால் இச்சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம்
இயற்றப்படுகையில் "மோட்டார்களின் டயர்களும், டியூப்களும்"
இன்றியமையாப் பொருள்களின் கீழ் வரும் ஓர் இனமாகச்
சேர்க்கப்படவில்லை.

2. இச்சட்டத்தின் 5-ஆவது பிரிவு, ஏதேனும் இன்றியமையாப்
பொருளின் வழங்கல், பங்கீடு மற்றும் அதன் தொழில் வர்த்தகம்,
வணிகம் ஆகியவற்றிற்காக மாநில அரசுகளுக்கு அதிகாரங்களைப்
பிரித்துக்கொடுக்க மத்திய அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது.
இந்திய அரசு, 18—6—1966, 30—7—1966 ஆகிய நாட்களிட்ட
தனது அறிவிப்புகளின் மூலம் சில நிபந்தனைகளின் கீழ்
இன்றியமையாப் பொருள்கள் சட்டத்தின் 3 (2) உட்பிரிவைச்
சேர்ந்த (c) (d) (e) (f) (g) (h) (i) i (ii) மற்றும் (j)
பகுதிகளில் குறிப்பிட்டுள்ள பொருள்களுக்கு வகை செய்து,
ஆணைகள் பிறப்பிக்க, மாநில அரசுகளுக்கு அதிகாரங்களைப்
பிரித்துக் கொடுத்துள்ளது.

3. 1969-ஆண்டு ஜனவரி திங்களில், இந்திய அரசு, ஓர்
அறிவிப்பின் மூலம், "கார்கள், பேருந்துகள், ஜீப்புகள், வேன்கள்
(vans) சரக்கு வண்டிகள், பிறவகை மோட்டார்கள், மற்றும்
எந்த ஒரு வகையான வண்டிகள் டிராக்டர்கள் மற்றும் தள்ளு
வண்டிகளின் டயர்கள், டியூப்களை" இன்றியமையாப் பொருள்கள்
என்பதின்கீழ் வரும் ஓர் இனமாகச் சேர்த்தது.

4. இன்றியமையாப் பொருள்கள் சட்டத்தில் பொருத்தமான
பகுதிகளும் இந்திய அரசினால் வரையறுக்கப்பட்ட நிபந்தனை
களும் வருமாறு :

இச்சட்டத்தின் 3 (2) (c) பகுதி: ஏதேனும் ஓர் இன்றி
யமையாப் பொருள் வாங்கப்படக் கூடிய அல்லது விற்பனை
செய்யப்படக் கூடிய விலையைக் கட்டுப்படுத்த வகை செய்கிறது.

இந்திய அரசினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகள்:—தற்போ
தைக்குச் செயலில் உள்ள பிறிதொரு சட்டத்தினால் அல்லது
சட்டத்தின்கீழ் ஏதேனும் ஓர் இன்றியமையாப் பொருள் வாங்கப்

படக் கூடிய அல்லது விற்கப்படக்கூடிய விலை கட்டுப்படுத்தப் பட்டிருக்கையில் இதனால் பிரித்துக் கொடுக்கப்படும் அதிகாரங் களையொட்டி ஆணை எதுவும் பிறப்பிக்கப்படக் கூடாது.

(ii) அவ்வாறு விலைக்கட்டுப்படுத்தப்படாதபோது

(a) அத்தகைய பொருளின் மொத்த விலைகள் அல்லது சில்லறை விலைகள் அல்லது இரண்டும் மத்திய அரசின் ஒப்புத லுடன் அதன் தயாரிப்பாளர் அல்லது உற்பத்தியாளரினால் முடிவு செய்யப்பட்டிருந்தால், அத்தகைய விலைகளின் அடிப்படையில் தவிர மற்றப்படியும்,

(b) பிற நேர்வில், மத்திய அரசின் முன் அனுமதியுடன் அன்றி மற்றப்படியும், ஓர் இன்றியமையாப் பொருள் குறித்து இதனால் பிரித்துக் கொடுக்கப்பட்ட அதிகாரங்களையொட்டி ஆணை எதுவும் பிறப்பிக்கப்படக் கூடாது.

(iii) பிறப்பிக்கப்படும் ஆணை, மேற்படி சட்டத்தின்கீழ் மத்திய அரசினால் பிறப்பிக்கப்பட்ட பிறிதொரு ஆணைக்கு முரணாக இருப்பின், இதனால் பிரித்துக் கொடுக்கப்படும் அதிகாரங் களையொட்டி, ஆணை எதுவும் பிறப்பிக்கப்படக் கூடாது.

இன்றியமையாப் பொருள்கள் சட்டத்தின் 3 (2) (d) பகுதி:— ஏதேனும் ஓர் இன்றியமையாப் பொருளின் சேமிப்பு, போக்கு வரத்து, பங்கீடு, ஒருவகை செய்தல், கையகப்படுத்துதல், பயன் அல்லது உபயோகம் ஆகியவற்றை உரிமங்கள் அனுமதிகள் மூலம் அல்லது பிற வகையில் முறைப்படுத்த ஓர் ஆணை வகை செய்யலாம்.

இந்திய அரசினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகள்.—(d) பகுதியின்கீழ் செய்யப்பட்ட அதிகாரப் பிரிவினை மாநிலங்களுக் கிடையிலான போக்குவரத்து அல்லது பங்கீட்டிற்குப் பொருந் தாது. அப்பகுதியின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மத்திய அரசின் ஓர் ஆணையையொட்டி, நடைபெறும் அத்தகைய போக்குவரத்து அல்லது பங்கீட்டைப் பாதிக்கும் வகையில் செயற்படுத்தக் கூடாது.

**இன்றியமையாப் பொருள்கள் சட்டத்தின் 3 (2) (c) பகுதி.**— சாதாரணமாக விற்பனைக்கென்று வைக்கப்பட்டுள்ள ஏதேனும் இன்றியமையாப் பொருளை விற்பனை செய்யாமல் நிறுத்திவைத்துக் கொள்வதற்குத் தடைவிதிக்க ஓர் ஆணை வகை செய்யலாம்.







இச்சட்டத்தின் 3 (2) (f) பகுதி.—ஓர் ஆணை, ஏதேனும் இன்றியமையாப் பொருளை இருப்பு வைத்துள்ள ஒரு நபர், அந்த இருப்பு முழுவதையும் அல்லது குறிப்பிட்ட அதன் ஒரு பகுதியை மத்திய அரசுக்கு அல்லது ஒரு மாநில அரசுக்கு அல்லது அந்த ஆணையில் குறிப்பிடப்படக்கூடிய பிற நபருக்கு அல்லது நபர் களுக்கு அந்த ஆணையில் குறிப்பிட்டுள்ள சந்தர்ப்பங்களில் விற்பனை செய்ய வேண்டுமெனக் கோருவதற்கு வகை செய்யலாம்.

இந்திய அரசினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகள்.— (f) பகுதியின் கீழ் பிறப்பிக்கப்படும் எல்லா ஆணைகளுக்கும் மத்திய அரசின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

இச்சட்டத்தின் 3 (2) (g) பகுதி.—உணவுப் பொருள்கள் அல்லது பருத்தித் துணிகள் தொடர்பான வணிக அல்லது நிதி பற்று வரவுகள் ஆணை பிறப்பிக்கும் அதிகாரி கருத்துப்படி ஒழுங்காக முறைப்படுத்தப்படவில்லை என்கிறபோதும், பொது நலனுக்குப் பாதகம் விளைவிக்கக்கூடும் என்கிற போதும் அவற்றை முறைப்படுத்துவதற்கு அல்லது தடை செய்வதற்கு ஓர் ஆணை வகை செய்யலாம்.

இச்சட்டத்தின் 3 (2) (h) பகுதி.—மேற்சொன்ன பொருள்கள் எவற்றையேனும் முறைப்படுத்துவதற்கு அல்லது தடை செய்வ தற்கான தகவல் அல்லது புள்ளி விவரங்கள் எவற்றையேனும் சேகரிப்பதற்கு ஓர் ஆணை வகை செய்யலாம்.

இச்சட்டத்தின் 3 (2) (i) பகுதி—ஓர் ஆணை ஏதேனும் ஓர் இன்றியமையாப் பொருளின் உற்பத்தி, வழங்கல் அல்லது பங்கீடு அல்லது அப்பொருளின் வர்த்தகம் அல்லது வணிகத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள், அவர்களது வணிகம் தொடர்பாக அந்த ஆணையில் குறிப்பிடப்படக்கூடிய புத்தகங்கள், கணக்குகள் அல்லது ஆவணங்களை வைத்து வந்து பார்வையிடப்படுவதற்காக அவற்றைக் காட்ட வேண்டும் என்று வகை செய்யலாம்.

இச்சட்டத்தின் 3 (2) ( i) (ii) பகுதி.—உரிமங்கள் அனுமதிகள், அல்லது பிற ஆவணங்கள் வழங்கப்படவும், அவற்றுக்குக் கட்டணங்கள் விதிக்கப்படவும் அத்தகைய உரிமம் அல்லது அனுமதி அல்லது பிற ஆவணத்தின் நிபந்தனைகள் உரியவாறு நிறைவேற்றப்படுவதற்காக ஆணையில் குறிப்பிடக் கூடியவாறு ஏதேனும் பிணையத் தொகை கட்ட வேண்டியிருப்பின் அத் தொகையைச் செலுத்துவதற்கும், மற்றும் அத்தகைய நிபந்தனைகள் எவையேனும் மீறப்படின் அவ்வாறு செலுத்தப்பட்ட தொகையை அல்லது அதன் ஒரு பகுதியை பறிமுதல் செய்யப்படவும், அந்த ஆணையில் குறிப்பிடக்கூடிய அதிகாரியினால் பறிமுதல் பற்றிய தீர்ப்பு வழங்கப்படவும் இந்த ஆணை வகை செய்யலாம்.

இச்சட்டத்தின் 3 (2) (j ) பகுதி.—ஓரிடத்தில், விமானத்தில், கப்பல்களில், வண்டிகளில் அல்லது மற்ற வாகனங்களில் நுழைவது, விலங்குகளைச் சோதனையிடுவது, ஆராய்வது உட்பட இது சம்பந்தப்பட்ட விவகாரங்கள் எதற்காயினும், அவ்வாறு நுழைந்து சோதனையிட்டு ஆராய்வதற்காக அதிகாரமளிக்கப் பட்டுள்ள ஒரு நபர்—

( ) அந்த ஆணை மீறப்பட்டுள்ளது, மீறப்படுகிறது அல்லது மீறப்படவிருக்கிறது என்று நம்புவதற்குக் காரணமாயிருந்த பொருள்களையும், மற்றும் அத்தகைய பொருள்கள் காணப்பட்ட சிப்பங்கள், மூடிகள் அல்லது கொள் கலன்களையும்;

( ii ) அத்தகைய பொருட்களை எடுத்துச் செல்லப் பயன் படுத்தப்பட்ட விமானம், படகு, வண்டி அல்லது பிற போக்குவரத்துச் சாதனம் அல்லது விலங்கு, இச்சட்டத்தின் விதித்துறைகளின்கீழ் பறிமுதல் செய்யத்தக்கவை என்று அத்தகைய நபர் நம்புவதற்குக் காரணமாயிருந்தால், அத்தகைய விமானம், படகு அல்லது பிறவகைப் போக்குவரத்துச் சாதனம் அல்லது விலங்கையும் பயன்படுத்தப்பட்ட கால்நடை;

( iii)இச்சட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்குப் பயனுள்ளதாய் இருக்கும் அல்லது பொருத்தமானவையாய் இருக்கும் என்று அத்தகைய நபர் கருத்துப்படி அமைந்த ஏதேனும் கணக்கும் புத்தங்கள், ஆவணங்களையும் ஆகியவற்றைப் பறிமுதல் செய்வதற்கும் ...



பட்ட முறையில் அந்த நபர் உறுதியளித்தவாறு நகல்கள் அல்லது பகுதி நகல்கள் எடுத்துக் கொண்ட பிறகு எவரிடமிருந்து அவை பறிமுதல் செய்யப்பட்டனவோ அவருக்குத் திருப்பிக் கொடுக்கவும் இந்த ஆணை வகை செய்யலாம்.

The Essential Commodities Act was enacted by the Government of India in 1955 to provide for the control of the production, supply and distribution of, and trade and commerce in certain commodities mentioned in section 2 (a) of the Act. "Tyres and Tubes of automobiles" was not included as an item of Essential Commodity at the time of enacting the Act.

2. Section 5 of the Act empowers the Central Government to delegate powers to the State Governments for regulating supply and distribution of, and trade and commerce of any Essential Commodity. The Government of India by their notifications, dated 18th June and 30th July 1966 have delegated powers to the State Governments to make orders to provide for the matters specified in clauses (c), (d), (e), (f), (h), (i), (i), (ii) and (j) of sub-section 3 (2) of the Essential Commodities Act under certain conditions.

3. In January 1969, the Government of India by a notification included "Tyres and Tubes of Cars, Buses, Jeeps, Vans, Trucks, Automobiles of any other category whatsoever, Trastors and Tractor Trollies" as an item of Essential Commodity.

4. The relevant clauses in the Essential Commodities Act and the conditions stipulated by the Government of India are as follows :—

*Clause* 3 (2) (*c*) *of the Act* provides for controlling the price at which any essential commodity may be bought or sold.

*Conditions stipulated by the Government of India.*—(i) Where the price at whirh any essential commodity may be bought or sold is controlled by or under any other law for the time being in force, no order shall be made in pursuance of the powers hereby delegated.

(ii) Where the price is not so controlled, no order shall be made in pursuance of the powers hereby delegated in respect of any Essential Commodity,—

(a) if the whole sale prices, or retail prices, or both of such commodity have been fixed by the manufacturers or producers thereof with the approval of the Central Government, except on the basis of such prices;

(b) in any other case, except with the prior concurrence of the Central Government;

(ii) No order shall be issued in pursuance of the powers hereby delegated if it is inconsistent with any order issued by the Central Government under the said Act.

*Clause* 3 (2) (*d*) *of the Essential Commodities Act.*—An order may provide for regulating by licences, permits or otherwise the storage, transport, distribution, disposal, acquisition, use or consumption of, any essential commodity.

*Conditions stipulated by Government of India.*—The delegation of powers under Clause (*d*) shall not extend to inter-State transport or distribution and the powers under that clause shall not be exercised so as to prejudicially affect such transport or distribution in pursuance of any order of the Central Government.

*Clause* 3 (2) (*e*) *of the Essential Commodities Act.*—An order may provide for prohibiting the withholding from sale of any essential commodity ordinarily kept for sale.

*Clause* 3 (2) (*f*) *of the Act.*—An order may provide for requiring any person holding in stock any essential commodity to sell the whole or a specified part of the stock to the Central Government or a State Government or to such other person or a class of persons and in such circumstances as may be specified in the order.

*Conditions stipulated by Government of India.*—All orders under Clause (*f*) shall require the prior concurrence of the Central Government.

*Clause* 3 (2) (*g*) *of the Act.*—An order may provide for regulating or prohibiting any class of commercial or financial transactions relating to foodstuffs or cotton textiles which in the opinion of the authority making the order, are, or if unregulated, are likely to be detrimental to the public interest.



*Clause* 3 (2) (*h*) *of the Act.*—An order may provide for collecting any information or statistics with a view to regulating or prohibiting any of the aforesaid matters;

*Clause* 3 (2) (i) *of the Act.*—An order may provide for requiring persons engaged in the production, supply or distribution of, or trade and commerce, in any essential commodity to maintain and produce for inspection such books, accounts and records relating to their business and to furnish such information relating thereto, as may be specified in the order.

*Clause* 3 (2) (i) (ii) *of the Act.*—An order may provide for the grant or issue of licences, permits of other documents, the charging of fees therefor, the deposit of such sum, if any, as may be specified in the order as security for the due performance of the conditions of any such licence, permit or other document, the forfeiture of the sum so deposited or any part thereof for contravention of any such conditions, and the adjudication of such forfeiture by such authority as may be specified in the order.

*Clause* 3 (2) (*j*) *of the Act.*—An order may provide for any incidental and supplementary matters, including, in particular, the entry, search or examination of premises, aircraft, vessels, vehicles or other conveyances and animals, and the seizure by a person authorised to make such entry, search or examination,—

(i) of any articles in respect of which such person has reason to believe that a contravention of the order has been, is being, or is about to be, committed and any paikages, coverings or receptacles in which such articles are found;

(ii) of any aircraft, vessel, vehicle or other conveyance or animal used in carrying such articles, if such person has reason to believe that such aircraft, vessel, vehicle or other conveyance or animal is liable to be forfeited under the provisions of this Act;

(iii) of any books of accounts and documents which in the opinion of such person would be useful for, or relevant to, any proceedings under this Act and the return of such books of account, and documents to the person from whom they were seized after copies thereof or extracts therefrom, as certified by that person in the manner specified in the order, have been taken.

## இணைப்பு IV.

[323-ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க]

## அரிசன நலத்துறை மானியம்

### கொள்கை விளக்கக் குறிப்பு 1974–75.

"அரிசன, பழங்குடி மக்கள் நலன்" என்ற தலைப்பின்கீழ் 1974–75 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையை நான் இம்மன்றப் பேரவையின் முன் வைத்து ரூ 8,98·04 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய அவையின் ஒப்புதலைக் கோருகிறேன். இத்துடன் "கட்டிடச் செலவினம்" என்ற தலைப்பின்கீழ் ரூ 1,04·90 இலட்சமும் "கடன்களும் முன்பணங்களும்" என்ற தலைப்பின் கீழ் ரூ. 13·10 இலட்சமும் இத் துறைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன நிதி ஒதுக்கங்கள் அனைத்தும் கணக்கிற் கொள்ளப்பட்டால் 1974–75-ல் அரிசன நல திட்டங்களுக்காக செலவிடப்படும் தொகை ரூ. 10,16·04 இலட்சங்களாகும்.

அரிசன, பழங்குடி மக்களின் நலன்களைப் பேணுவதற்காகத் தமிழ் நாடு அரசு ஆற்றும் ஆக்கப் பணிகளை—

1. கல்வி,

2. பொருளாதார மேம்பாடு,

3. சுகாதாரம், வீட்டுவசதித் திட்டங்கள் என்ற இந்த மூன்று முக்கிய தலைப்புகளின்கீழ் தொகுக்கலாம்.

### I. கல்வி.

3. ஆண்டுதோறும் அரிசன நலத்திற்கென ஒதுக்கப்படும் நிதியில் பெரும்பகுதி அரிசனங்கள், பழங்குடியினர் கல்விக்காகச் செலவிடப்படுகிறது. அதன் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | | | அரிசன நலக்கோரிக்கையின் மொத்தம். | அரிசனங்கள், பழங்குடியினர் கல்விக்காக மட்டும் ஒதுக்கப் பட்ட தொகை. |
|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1971–72 | .. | .. | 8,12·33 | 5,19·85 |
| 1972–73 | .. | .. | 8,05·84 | 5,80·36 |
| 1973–74 | .. | .. | 8,98·88 * | 5,98·21 |
| 1974–75 | .. | .. | 10,16·04 | 6,25·52 |

(* தமிழ் நாடு அரிசன வீட்டு வசதிக் கழகத்திற்காக ரூ. 1,00 இலட்சம் நீங்கலாக.)







**படிப்பு உதவித் தொகைகள் :**

அரிசன, பழங்குடி வகுப்பைச் சார்ந்த (மதம் மாறியவர்கள் உட்பட) மாணவ மாணவியர்களுக்கு தங்கிப் பயிலுவதற்கென உதவித்தொகை களும், படிப்பு உதவித் தொகைகளும், தொடரா மானியங்களும் தொடக்க வகுப்புகளிலிருந்து பட்டமேற்படிப்பு வரையிலும், கலைப் படிப்பிற்கும், அறிவியல் படிப்பிற்கும், தொழில் படிப்பிற்கும் தொடர்ந்து அளிக்கப்படு கின்றன.

1969–70 முதல் 1973–74ஆம் ஆண்டுவரை வழங்கப்பட்ட படிப்பு உதவித் தொகையும் இதனால் பயன் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையும் கீழ் வருமாறு :—

| ஆண்டு. | அரிசன மாணவ மாணவியர்கள் (பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை.) பள்ளியில் பயில்வோர். | அரிசன மாணவ மாணவியர்கள் (பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை.) கல்லூரியில் பயில்வோர். | செலவான மொத்த தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) | பழங்குடி மாணவ மாணவியர்கள் (பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை.) பள்ளியில் பயில்வோர். | பழங்குடி மாணவ மாணவியர்கள் (பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை.) கல்லூரியில் பயில்வோர். | செலவான மொத்த தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| **தமிழ் நாடு அரசு படிப்பு உதவித் தொகை.** | | | | | | |
| 1969–70 .. .. .. | 3,52,155 | 7,640 | 82·55 | 744 | .. | 0·14 |
| 1970–71 .. .. .. | 3,86,843 | 8,136 | 88·02 | 1,004 | .. | 0·13 |
| 1971–72 .. .. .. | 4,17,639 | 5,702 | 94·16 | 597 | .. | 0·11 |
| 1972–73 .. .. .. | 4,74,308 | 7,604 | 98·79 | 1,758 | .. | 0·20 |
| 1973–74 .. .. .. | 4,33,352 | 5,535 | 94·04 | 1,579 | .. | 0·22 |
| (28–2–74-ஆம் நாள் வரை.) | | | | | | |
| **மத்திய அரசு படிப்பு விதிமுறை உதவித்தொகை (மத்திய அரசு உதவி சிறிதளவுடன்).** | | | | | | |
| 1969–70 .. .. .. | .. | 11,527 | 57·43 | .. | 117 | 0·70 |
| 1970–71 .. .. .. | .. | 13,138 | 64·03 | .. | 158 | 0·87 |
| 1971–72 .. .. .. | .. | 15,408 | 72·80 | .. | 164 | 0·87 |
| 1972–73 .. .. .. | .. | 17,585 | 79·16 | .. | 166 | 0·90 |
| 1973–74 .. .. .. | .. | 15,295 | 72·77 | .. | 162 | 0·81 |
| (28–2–74-ஆம் நாள் வரை.) | | | | | | |

குறிப்பு.—(1) மெட்ரிக் படிப்புக்கு முந்திய படிப்புக்கு, படிப்புதவித்தொகை யேதும், இந்திய அரசு திட்டத்தின்கீழ் வழங்கப்படவில்லை.

(2) மெட்ரிக் படிப்புக்கு மேற்பட்ட படிப்பிற்காக பழங்குடி மாணவர்களுக்கு, இந்திய அரசு படிப்புதவித் தொகை விதிமுறைகளின் கீழ் படிப்புதவித் தொகைகள் வழங்கப்படு கின்றன. எனவே, இப் படிப்பிற்காக அவர்களுக்கு தொகையேதும் மாநில அரசுப் படிப்புதவித் தொகைத் திட்டத்தின்கீழ் வழங்கப்படுவதில்லை.

(3) இந்திய அரசு படிப்புதவித் தொகைத் திட்டத்தின்கீழ், 1968-69-ஆம் ஆண்டு இறுதியில் ஏற்பட்ட செலவின் அளவுக்கு மேற்பட்ட செலவுத் தொகையை மட்டுமே இந்திய அரசு தருகிறது. ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியிலும் செலவு செய்த தொகை அடுத்த திட்டத்தில் மாநில அரசு பொறுப்பேற்ற செலவாகிறது.

இவ்வாறாக, மேலே கண்ட புள்ளி விவர அட்டவணையிலிருந்து, படிப்புதவித் தொகையின் அளவும் பயன்பெறுபவர்களின் எண்ணிக்கையும் ஆண்டுக்காண்டு கூடிக் கொண்டு வருவது நன்கு விளங்கும். அரிசனங்கள், பழங்குடி வகுப்பைச் சேர்ந்த அதிகமான மாணவர்கள் இப் பயனைப் பெறுவதற்கு இயலும் வண்ணம் இப் படிப்புதவித் தொகையைப் பெறு வதற்குத் தகுதி வாய்ந்த ஆண்டு வருமான அளவை 2,000 ரூபாயிலிருந்து 2,500 ரூபாயாக உயர்த்தப்பட்டது. இது, கல்விக் கட்டணத்திற்கும் பொருந்தும். மெட்ரிக் படிப்புக்கு முந்திய படிப்புக்கு மாணவியர்களுக்கு படிப்பு உதவித் தொகையை 1974-75-ம் ஆண்டிலிருந்து 50% உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது.

4. பட்டமேற்படிப்பு, ஆசிரியர் பட்டப்பயிற்சி முதலிய ஐம்பது வகைப் படிப்புகளுக்கு உதவித் தொகை வழங்க நிர்ணயிக்கப்பட்டிருந்த உச்ச வரம்பு எண்ணிக்கை 1970–71 முதல் அறவே நீக்கப்பட்டு, கல்வி கற்கத் தகுதி பெற்ற அனைவரும் உதவித் தொகை பெற வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. பல்கலைக் கழகம் நடத்தும் நூலக அறிவுப் பட்டப்படிப்பிற்கும் உதவித் தொகை வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

5. கல்வியில் சிறந்த மாணவர்களுக்குச் செயலூக்கம் அளிக்கும் வண்ணம் "காந்தி அடிகள் நினைவுச் சிறப்புக் கல்வி உதவித் தொகை திட்டம்" நமது பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு 1970–71-ம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

அரிசன நலத்துறையிலிருந்து மாணவர்கள் பெறத் தகுதிவாய்ந்த படிப்புதவித் தொகையோடு இந்தப் படிப்புதவித் தொகையும் கொடுக்கப் படுகிறது. இதன் மூலம் பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | பயனடைந்தோர் எண்ணிக்கை. |
|---|---|
| 1970–71 | 27 |
| 1971–72 | 52 |
| 1972–73 | 79 |
| 1973–74 | 90 |



6. புத்தமதத்திற்கு மாறியுள்ள அரிசன மாணவ மாணவியர் களுக்கும் 1971–72-ம் ஆண்டு முதல் மேல்படிப்பு உதவித் தொகைகள் வழங்க மத்திய அரசு உத்தரவிட்டது. 1973–74ஆம் ஆண்டு முதல் உள்நாட்டு மீனளத்தில் தகுதிப் பட்டப்படிப்பைத் தொடரும் மாணவர்கள் இந்திய அரசு படிப்புதவித் தொகை விதிமுறைகளின்கீழ் மெட்ரிக் படிப்புக்கு மேற்பட்ட படிப்பிற்கான படிப்புதவித் தொகை பெறு வதற்குத் தகுதியுடையோராவர்.

7. 1971–72ஆம் ஆண்டிலிருந்து பள்ளி மற்றும் பல்கலைக் கழக ஆண்டு இறுதித் தேர்வில் 60 சதவிகிதத்திற்குமேல் மதிப்பெண்கள் பெற்றுத் தேர்வு பெறும் அரிசன மற்றும் பழங்குடி மாணாக்கர்களுக்கு (புத்த மதம் மாறியவர்கள் உட்பட) மத்திய அரசு உதவித்தொகை திட்டத்தின்கீழ், விடுதிக் கட்டணம் 1½ மடங்காக வழங்கப்பட்டு வருகிறது. 60 சதவிகிதத் திற்குக் குறைவான மதிப்பெண்கள் பெறும் மாணாக்கர்களுக்கு வழக்கம் போல் விடுதிக் கட்டணம் வழங்கப்படும்.

8. பொறியியல், உழவியல், மருத்துவம் போன்ற கல்விகளைக் கற்கும் மாணவர்கள் அரசினரால் வழங்கப்படும் உதவித் தொகைகளுக்கு மேல் கூடுதலாகச் செலவு செய்ய நேரிடுகிறது. இந்த இடர்ப்பாட்டைக் கருத்தில் கொண்டு அத்தகைய கல்வி பயிலும் மாணவர்களில் பொருளுதவி தேவைப்படுபவர்களுக்குக் கடன் வழங்கவும் அரசு உத்தரவு பிறப்பித் துள்ளது. இதன் மூலம், அத்தகைய மாணவர்கள் நிதிநிலை இடர்ப் பாடின்றி தொடர்ந்து கல்வி பயில வசதி ஏற்படுகிறது. இதற்காக 1973–74ஆம் ஆண்டில் ரூ 2 இலட்சம் ஒதுக்கியிருக்க இத் திட்டத்தின்கீழ் பெருகியுள்ள தேவையைக் கருத்தில் கொண்டு 1974–75ஆம் ஆண்டில் ரூ. 3 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் 28—2—1974ஆம் நாள் வரை 411 மாணவர்களுக்குக் கடன் வழங்கப் பட்டுள்ளது.

9. மத்திய அரசின் உதவி வழங்கும் முறைக்கிணங்க, மெட்ரிக் படிப்புக்கு மேற்பட்ட படிப்புக் குறித்த செலவின் பெரும்பகுதி, மாநில அரசு நிதியில் பொறுப்பேற்ற செலவாக ஆகிறது. இந்திய அரசு படிப்பு உதவித் தொகை விதிமுறைகளின்கீழ் மாநில அரசுக்கு ஏற்படும் செலவின் பங்குகூட படிப்படியாகப் பெருகியுள்ளது. கல்வியைப் பரப்புவது என்பது, அரிசனங்கள், பழங்குடியினரின் பொருளாதார சமூக மேம்பாட்டிற்கான இன்றியமையா முன் தேவையாகும். இதனைக் கருத்தில் கொண்டு, இந்த முக்கிய இனத்தின் கீழுள்ள செலவு உயர்வைச் சரிக்கட்ட தமிழ் நாடு அரசு நிதி ஒதுக்குவதில் தயக்கமேதும் காட்டவில்லை. தமிழ் நாடு அரசு, ஆண்டுக்காண்டு கூடுதலாக நிதி ஒதுக்கம் செய்கிறது.

ஒரு மாணவருக்கு மத்திய அரசு வழங்கும் உதவித் தொகை மாநில அரசு தரும் உதவித் தொகை வீதத்தைவிடக் குறைவாகயிருந்தால், மாநில அரசு உதவித் தொகைக்கும் மத்திய அரசின் உதவித் தொகைக்கும் உள்ள வித்தியாசத் தொகையை மாணவர் இடர்ப்பாடு அடையாமலிருப்பதற் காக இவ்வரசு ஈடு செய்து அளித்து வருகின்றது.

10. மத்திய அரசு விதிமுறைகளுக்கிணங்க மெட்ரிக்குக்கு மேற்பட்ட படிப்புக்கு உதவித் தொகை வழங்கச் செய்யப்பட்ட மொத்தச் செலவும் மத்திய அரசு கொடுத்துள்ள தொகையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டு. | இந்திய அரசு படிப்புதவித் தொகை விதிமுறைகளின் கீழ் அரிசனங்கள் பழங்குடியினர் மாணவர்களுக்கு மெட்ரிக் படிப்புக்கு மேற்பட்ட படிப்புக்காகக் கொடுக்கப் பட்ட மொத்த படிப்புதவித் தொகை. | இந்திய அரசால் கொடுக்கப்பட்ட தொகை. |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1969–70 .. .. | 58·13 | 5·00 |
| 1970–71 .. .. | 64·83 | 8·79 |
| 1971–72 .. .. | 73·67 | 22·90 |
| 1972–73 .. .. | 80·07 | 30·40 |
| 1973–74 .. .. (28–2–74-ம் நாள் வரை) | 73·64 | 20·25 |

அரிசன நலத்துறைப் பள்ளிகள் (அரிசனங்கள்).

11. இம் மாநிலத்தில் அரிசன மாணவ மாணவியர்களுக்காக மொத்தம் 839 பள்ளிகள் இயங்கி வருகின்றன. அவற்றில் தொடக்கப் பள்ளிகள் 740, நடுத்தரப் பள்ளிகள் 84, மற்றும் உயர்நிலைப் பள்ளிகள் 15, மொத்தம் 839. இப் பள்ளிகளில் சுமார் 1,22,147 அரிசன, பழங்குடி மாணவ மாணவியர்கள் கல்வி கற்றுப் பயனடைந்து வருகின்றனர். இப் பள்ளிகள் பற்றிய புள்ளி விபரங்கள் மாவட்ட வாரியாக விவரப்பட்டி 2-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

1973–74 ஆம் ஆண்டில், கீழ்க்காணும் நான்கு அரிசன நல நடுத்தரப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டன :—

| | தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| அரிசன நல நடுத்தரப் பள்ளிகள் செங்கற்பட்டு மாவட்டத்தி லுள்ள நாகல்கேணி, பாலூர், மீனம்பாக்கம். | 3 |
| திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நல்லம்மாள்புரத்தி லுள்ள அரிசன நல நடுத்தரப் பள்ளி. | 1 |



அரிசன நலத்துறைப் பள்ளிகள் (பழங்குடியினர்).

பழங்குடியினர் மாணவ மாணவியர்களுக்காக 74 உறைவிடப் பள்ளிகளை அரிசன நலத்துறை நடத்தி வருகிறது. அவற்றில், தொடக்கப் பள்ளிகள் 66, நடுத்தரப் பள்ளிகள் 7, உயர்நிலைப் பள்ளி 1. இவை களைத் தவிர பழங்குடி மாணவர்கள் நலனுக்காக உறைவிட வசதி யில்லாப் பள்ளி ஒன்று இயங்கி வருகின்றது. மாவட்ட வாரியாக உள்ள பள்ளிகளின் எண்ணிக்கையும், பயிலுகின்றவர்களின் எண்ணிக்கையும் விவரப்பட்டி 3-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

12. 1973–74 ஆம் ஆண்டில், தென் ஆர்க்காடு மாவட்டம், அரசம் பட்டில் உறைவிட வசதியுள்ள பள்ளி ஒன்று புதிதாகத் தொடங்கப்பட்டது. மதுரை மாவட்டம் நல்லூர்க்காடு வலசுவிலுள்ள உறைவிட வசதியில்லாத பள்ளி உறைவிட வசதியுள்ள பள்ளியாக மாற்றப்பட்டது. சேலம் மாவட்டம் அறமுதுமலையிலுள்ள உறைவிட வசதியுள்ள ஆரம்பப்பள்ளி 1973–74 ஆம் ஆண்டில் நடுத்தரப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டது. முள்ளுக் குறிச்சியிலுள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளியை அரசு ஏற்றுக் கொண்டு, பழங்குடியின் மாணவர் இல்லத்தை அதனுடன் 1974–75ஆம் ஆண்டில் இணைத்த பிறகு பழங்குடியினர் உறைவிட வசதியுள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தக் கருதப்பட்டுள்ளது.

பள்ளிகளில் வசதிகள் பெ[illegible] நலப்பள்ளிகள் [illegible] கட்டிடங்களைக் அமைந்துள்ள கட்டிடங்களைப் பேணு[illegible] 13·[illegible] இலட்சம் கட்டுவதற்காகவும், 1974–75ஆம் ஆண்டில் ரூ. ஒதுக்கப்பட்டுள்ளது.

அரிசன நலப் பள்ளிகள் 8[illegible] உள்ளன. அவற்றில், [illegible]4 பள்ளிகள் அரசுக் கட்டிடங்களில் அமைந்[illegible]ன. எஞ்சியுள்ள 12[illegible] பள்ளிகள் வாடகைக் கட்டிடங்களில் உள்ள[illegible] அரசு கணிசமான நிதி ஒது[illegible]கி படிப் படியாக நிறைவேற்றும் திட்டத்[illegible] இப் பள்ளிகளுக்குக் [illegible]டங்கள் கட்ட வேண்டுமென 1968–69 [illegible] ஆண்டு ம[illegible]ட்டு [illegible]ய்வுக்குழு பரிவுரை செய்திருந்தது. அதற்கின[illegible] ஒரு படிப்படியாக [illegible]றவேற்றும் திட்டத்தின்கீழ் பள்ளிக் கட்டிட[illegible] கட்டுவதற்கு [illegible] ஒதுக்கப் படுகிறது. ரூபாய் 3·48 இலட்சம் செ[illegible] [illegible]காடு மாவட்டம் தர்மநல்லூரில் அரிசன நல உயர்நிலைப் [illegible] கட்டிடங்கள் கட்ட அரசு கருதியுள்ளது. இதற்காக, 1974–75-ல் ரூபாய் 1·5 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

தென் ஆர்க்காடு மாவட்டம், சிதம்பரத்திலுள்ள நந்தனார் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு 1974–75-ல் ரூபாய் 50,000 செலவில் உணவு அறையாகப் பயன்படுத்த கச்சா கொட்டகை கட்டவும் கருதியுள்ளது.

13. மாணவர்களுக்குச் சீருடை வழங்கல்.—அரிசன நலப் பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் எல்லா மாணவியர்களுக்கும் அரிசன நலப் பள்ளிகளில் பயிலும் எல்லா மாணவியர்களுக்கும் (இனப்பாகுபாடின்றி) ஆண்டுக்கு இருமுறை பொங்கல், தீபாவளி, விழாக்களை யொட்டி சீருடை வழங்கப்பட்டு வருகிறது.

அரிசன நலத் துறைப் பள்ளிகளில் முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம்
வகுப்பு வரை பயிலும் எல்லா மாணவர்களுக்கும் ஆண்டுக்கு ஒரு
முறை பொங்கல் விழாவை ஒட்டி ஒரு சிறுவனுக்கு ரூ. 10. என்ற வீதத்தில்
சீருடை வழங்கப்படுகிறது. இத் திட்டம் அரிசன நல மாணவர் இல்லங்களில்
தங்கி நான்காவது, ஐந்தாவது வகுப்புகளில் பயிலும் எல்லா மாணவர்
களுக்கும் நீடிக்கப்பட்டுள்ளது. (முதல் வகுப்பிலிருந்து மூன்றும் வகுப்பு
வரையில் பயிலும் மாணவர் மாணவியர் இல்லங்களில் தங்கிப்
படிக்கவில்லை யாதலால் அவர்கள் சேர்க்கப்படவில்லை) இந்தத்திட்டத்தின்
சுமார் 64,000 சிறுமிகளும், 55,000 சிறுவர்களும் பயனடைகின்றனர்.
இத் திட்டத்திற்காக, 1974-75ஆம் ஆண்டிற்கு ரூ. 24·35 இலட்சம்
ஒதுக்கப்பட்டுள்ளது.

பழங்குடியினர் உறைவிட வசதியுள்ள அரசினர் பள்ளி, மாணவர்
இல்லங்கள், தனியாரால் நிர்வகிக்கப்படும் உறைவிட வசதியுள்ள பள்ளி
களில் தங்கிப் பயின்று உணவு வசதி பெறும் பழங்குடியின் மாணவர்
களுக்கு ஆண்டொன்றுக்கு ஒரு சீருடையின் விலை ரூ. 25 என்ற வீதத்தில்
இரண்டு சோடி உடைகளை, ரூ. 97,000 செலவில் 1974-75 ஆம் ஆண்டில்
வழங்க அரசு கருதியுள்ளது.

14. <u>சுற்றுலா</u>.—பழங்குடியினருக்கான பள்ளிகளில் பயிலும்
மாணவர்களைப் பொது வெளி உலக அறிவு வளர்ச்சிக்காக ஆண்டில் ஒரு
முறை நமது நாட்டிலுள்ள முக்கிய இடங்களுக்குச் சுற்றுலா அழைத்துச்
சென்று வரும் திட்டம் 1969-70 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்
பட்டு வருகிறது. இதற்காக, 1973-74 ஆம் ஆண்டுக்கு ரூபாய் 1,000
நிதி ஒதுக்கப்பட்டது. இதற்காக, 1974-75 ஆம் ஆண்டுக்கு ரூபாய்
4,000 நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டமானது, அரிசன
மாணவர்களுக்கும் 1974-75-லிருந்து நீட்டிக்கப்பட்டு ரூபாய் 40,000
நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

15. <u>மதிய உணவு</u>.—அரிசன நலப் பள்ளிகளில் பயிலும் எல்லா
மாணவ மாணவியர்களுக்கும் மதிய உணவு வழங்கும் இத் திட்டம்
பயனுள்ளதாக இருக்கிறது. ஆகவே, இத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்
படுகிறது. இதனால், ஆண்டுதோறும், சுமார் 1,25,000 குழந்தைகள்
பயனடைகின்றனர். ஏனைய பள்ளிகளில் பயிலும் மாணவர்களில்
மொத்தத்தில் 75 விழுக்காட்டிற்குக் குறையாமல் அரிசன மாணவர்கள்
இருந்தால் அவ் வரிசன மாணவர்களுக்கும் மதிய உணவு வழங்கும் திட்டம்
நீட்டிக்கப்பட்டுள்ளது. மதிய உணவு வழங்கும் திட்டத்திற்கு 1973-74-ல்
ரூபாய் 36·53 இலட்சம் வகை செய்யப்பட்டிருக்க, 1974-75 ஆம் ஆண்டி
டிற்கு ரூபாய் 41·43 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

16. <u>இலவசமாகப் புத்தகங்களும் பலகைகளும் வழங்கல்</u>.—அரி
சன நலப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்குப் புத்தகங்கள்.
எழுது பலகைகள், படிப்பதற்கு நோட்டுப் புத்தகங்கள் முதலியன இலவச
மாக வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது,
இத் திட்டம் 1972-73 முதல் மையமாக்கப்பட்டுள்ளது. பள்ளி மவாணா
களுக்குப் புத்தகங்கள், எழுது பலகைகள், எழுது பொருட்கள். இதர பள்ளிச்



சாதனங்கள் வழங்குவதற்காக 1973-74 ஆம் ஆண்டில் ரூ 6.10 இலட்சம்
நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்க, 1974-75 ஆம் ஆண்டில் ரூ 7·86
இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

17. <u>அரிசன நலப் பள்ளிகளில் சுகாதார வசதிகள்</u>.—அரிசன நலப்
பள்ளிகளில் உள்ள மாணவியர்களுக்கும், ஆசிரியைகளுக்கும் சுகாதார
(கழிவு அறை) வசதி செய்து தரப்படுவது அவசரத் தேவை என்பதை
உணர்ந்து படிப்படியாக நிறைவேற்றும் திட்டத்தின்கீழ் இத் தேவையைப்
பூர்த்தி செய்ய அரசு முடிவு செய்தது. முதல் கட்டமாக ரூபாய் ஒரு இலட்சம்
செலவில் 50 அரிசனப் பள்ளிகளில் ஆசிரியைகளுக்கும், மாணவியர்களுக்
கும், சுகாதார (கழிவு அறை) வசதிகள் ஏற்படுத்தப்படுகிறது. இத் திட்டம்
எல்லாப் பள்ளிகளுக்கும் வசதி செய்து கொடுக்கும் வரை தொடர்ந்து
செயல்படுத்தப்படும்.

18. <u>ஆசிரியர்களுக்கு வீடுகள்</u>.—அரிசன நலப் பள்ளிகளில் பணி
யாற்றும் ஆசிரியர்களுக்குக் குடியிருப்பு வசதிகள் செய்து தரும் திட்டத்
தின் முதல் கட்டமாக பழங்குடி மக்களுக்காக பள்ளிகள் உள்ள
இடங்களில் ஆசிரியர்களுக்கான இல்லங்கள் 1967-68-ம் ஆண்டு முதல்
கட்டப்பட்டு வருகின்றன. இதற்காக 1971-72-ல் ரூ 50,000 நிதி ஒதுக்கம்
செய்யப்பட்டது. இத் திட்டமானது 1971-72-ல் அரிசனங்களுக்கான
பள்ளிகளுக்கும் நீட்டிக்கப்பட்டது. இதற்காக 1971-72-ம் ஆண்டிற்கு
20 குடியிருப்புக்கள் அமைப்பதற்கு மொத்தம் ரூ 1·12 இலட்சம் செல
விடப்பட்டது. இத் திட்டத்தின்கீழ் 1972-73-ம் ஆண்டிற்கு ரூ 1·94
இலட்சமும் 1973-74-ம் ஆண்டிற்கு ரூ 2·50 இலட்சமும் ஒதுக்கப்பட்டது.
1974-75-ம் ஆண்டிற்கு ரூ 2·25 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்
பட்டுள்ளது.

19. <u>தட்டெழுத்து, சுருக்கெழுத்துப் பயிலத் திட்டம்</u>.—அரிசன பழங்
குடி மாணவர்-மாணவியர்களில் தட்டெழுத்து, சுருக்கெழுத்து
பயின்றவர்கள் போதிய அளவு இல்லாத காரணத்தால் மேற்படி பணிகளில்
அவர்களுக் கென ஒதுக்கப்பட்ட விழுக்காடு இடங்களை நிறைவு செய்ய இயல
வில்லை. இதை உணர்ந்து, அரிசனப் பழங்குடி மாணக்கர்களை இப்
பயிற்சிகளில் தேர்வு பெற தனிப்பட்ட நிறுவனங்களில் பயிற்சியளிக்கும்
நோக்கத்துடன் திட்டம் ஒன்றை அரசு கொண்டு வந்தது. இத் திட்டம்
முதன் முதலில் சென்னை, கோவை, திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம்,
தென் ஆற்காடு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. பின்னர் இத்
திட்டம் மற்ற எல்லா மாவட்டத் தலை நகரங்களுக்கும் 1972-73-ல் நீட்டிக்
கப்பட்டது. இத் திட்டத்தின் படி தனியார் பயிற்சிப் பள்ளிகளில் தட்டெ
ழுத்துப் பயில 850 மாணக்கர்களுக்கும், சுருக்கெழுத்துப் பயில 425
மாணக்கர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதற்காக, 1974-75
வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ 5·00 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்
பட்டுள்ளது.

20. <u>தேர்வுகளில் தேருத மாணக்கர்களுக்குச் சிறப்புப் பயிற்சி</u>.—
அரிசன நல உயர்நிலைப் பள்ளிகளில் 9-ம் வகுப்பு முதல் 11-ம் வகுப்பு
வரை உள்ள தேர்வுகளில் தேருத, பழங்குடி மாணவர்களுக்குச் சிறப்புப்

பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்று அரிசன நல உயர்நிலைப் பள்ளிகளில் 1971-72-ம் ஆண்டு முதல் கொண்டுவரப்பட்டது. இத் திட்டம் ஆண்டு தோறும் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது.

21. பட்டயக் கணக்கர் தேர்வுக்கான பயிற்சி.—அரிசன மாணவர்கள் தங்களது வள வாய்ப்புக்களை மேம்படுத்த உதவுவதற்காக "பட்டயக் கணக்கர் படிப்பை" மேற்கொள்வதற்கான திட்டம் ஒன்றுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. தொடக்கத்தில், பரிசோதனை நடவடிக்கையாகத் சென்னை மாநகரில் அரிசன மாணவ-மாணவியர்களுக்குப் பட்டயக் கணக்கர் தேர்வுக்கான பயிற்சி தரப்பட்டு வருகின்றது. இத் திட்டத்திற்காக 1974-75-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ 15,000 நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

22. சட்டப் பட்டதாரிகளுக்கு நிதி உதவி.—அரிசனங்கள்/பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்தவர்களிலுள்ள சட்டப் பட்டதாரிகள் சட்டத் தொழிலை மேற்கொள்ளுவதற்கு அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, அவர்களுக்கு நிதி உதவி வழங்குவதற்கான முக்கிய திட்டமொன்றை அரசு கொண்டு வந்துள்ளது. இத் திட்டத்தின்கீழ், அரிசனங்கள்/பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த சட்டப் பட்டதாரிகள் சட்டத் தொழிலை மேற்கொள்ள விரும்பினால் அவர்களுக்கு அடுத்த கல்வி ஆண்டிலிருந்து கீழ்க்காணும் நிதி உதவியை அரசு அளிக்கும் :—

1. சட்டத் தொழிலில் தங்களைப் பதிவு செய்து கொள்ளுவதற்கான கட்டணம், அறை வாடகை, முதலியவற்றிற்காக ஒவ்வொரு பட்டதாரிக்கும் ரூ 750 கடன் வழங்குதல்.

2. புத்தகங்கள் வாங்குவது, மேசை நாற்காலி வாங்குவது முதலியவற்றிற்காக ஒவ்வொரு பட்டதாரிக்கும் ரூ 500 உதவிக் கொடை வழங்குதல்.

பட்டதாரி ஒவ்வொருவருக்கும் சட்டத் தொழிலில் தங்களைப் பதிவு செய்து கொள்ளுவதற்காக ரூ 250 கொடுப்பது என்ற தற்போதுள்ள திட்டம், மேலே குறிப்பிட்டுள்ள தாராளமான நிதி உதவிகளைக் கருத்தில் கொண்டு நிறுத்தப்பட்டு விட்டது.

23. கல்லூரி மாணவர்களுக்கான சிறப்பு பயிற்சித் திட்டம்.—ஆங்கிலம், தமிழ், பொருளாதாரம், அரசியல், கணித இயல், முதலிய பாடங்களில் கல்லூரி மாணவர்களுக்குச் சிறப்புக் கல்வி அளிக்க 1974-75-ம் ஆண்டில் ரூ 2 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டமானது இந்த ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படவிருக்கும் புதிய திட்டமாகும்.

24. கல்வித் தகுதியில் மேம்பாடுள்ள மாணவ-மாணவியர்களுக்குச் சிறப்புப் பயிற்சித் திட்டம்.—கல்வியில் சிறப்புத் தகுதியுள்ள அரிசன பழங்குடி மாணவ-மாணவியர்களுக்குத் தரமான தனிப்பயிற்சி அளிப்பதற்கான திட்டம் ஒன்றுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டம் வெளியூர்களில் படிக்கும் முதலாண்டு பி.எஸ்ஸி. மாணவ-மாணவியர்



களுக் கென்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் 1973-74-ம் ஆண்டில் 164 அரிசனப் பழங்குடி மாணவ-மாணவியர்களுக்கு இத் தனிப் பயிற்சி அளிக்கப்பட்டது. மேற்படி திட்டத்திற் கென்று 1973-74-ம் ஆண்டிற்கு 1·00 இலட்சம் ரூபாயும், 1974-75-ம் ஆண்டிற்கு 1·00 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

25. மாணவர் இல்லங்கள்.—தொலை தூரத்திலுள்ள கிராமங்கள், நகரங்களிலிருந்து பள்ளிகள், கல்லூரிகள், தொழிற் பயிற்சிப் பள்ளிகளுக்கு வரும் மாணவர்களுக்கு மாணவர் இல்ல வசதியானது தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது. நிதி நிலைமையைப் பொறுத்தும் தேவைக்கேற்பவும் புதுப்புது இல்லங்கள் ஆண்டுதோறும் திறக்கப்படுகின்றன. தனியாரால் நடத்தப்படும் மாணவர் இல்லங்கள் படிப்படியாக நிறைவேற்றும் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் அரசால் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அவற்றில் கீழ்க்காணும் வீதத்தில் இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன :—

| | சத விகிதம். |
|---|---|
| அரிசன மாணவர் இல்லங்கள்— | |
| அரிசனங்கள், பழங்குடியினர் .. .. .. .. | 75 |
| பின்தங்கிய வகுப்பினர் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினர் .. .. .. .. | 20 |
| முன்னிலை வகுப்பினர் .. .. .. .. | 5 |
| பழங்குடியின மாணவர் இல்லங்கள்— | |
| அரிசனங்கள் .. .. .. .. | 30 |
| பழங்குடியினர் .. .. .. .. | 60 |
| பின்தங்கிய வகுப்பினர், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினர் .. .. .. .. | 10 |

1973-74-ம் ஆண்டில் புதிதாகத் தொடங்கப்பட்ட அரிசன மாணவர் இல்லங்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| விவரங்கள். | எண்ணிக்கை. |
|---|---|
| 1. உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்காக .. | 13+2 (உளுந்தூர்பேட்டை, உசிலம்பட்டி ஆகிய ஊர்களில் அரசால் எடுத்துக் கொள்ளப்பட்ட மாணவர் இல்லங்கள்). |
| 2. உயர்நிலைப்பள்ளி மாணவியர்களுக்காக .. | 3 |
| 3. கல்லூரி மாணவர்களுக்காக .. .. | 3 |

பழங்குடி மாணவர்களுக்காக, இம் மாநிலத்தில் 15 மாணவர் இல்லங்கள் இருக்கின்றன. இவற்றில் மொத்தம் 670 மாணவர்கள் உணவு வசதி பெறுகின்றனர். இதில், 1973-74-ம் ஆண்டில், தென் ஆர்க்காடு மாவட்டம் சங்கராபுரத்தில் தொடங்கப்பட்ட பழங்குடி மாணவர்களுக்கான இல்லமும் அடங்கும்.

[1974 மார்ச் 21

அரிசன நலத்துறையால் நடத்தப்படும் மொத்தமுள்ள மாணுக்கர் இல்லங்களின் எண்ணிக்கையும், தங்கி பயிலுபவர்களின் எண்ணிக்கையும் விவரப்பட்டி 4 (அரிசனங்கள்) மற்றும் விவரப்பட்டி 5 (மலைவாசிகள்)-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

மாணவர் இல்லங்களைப் புதிதாக ஏற்படுத்துவதற்கும், உதவித் தொகை பெறும் தனியார் மாணவர் இல்லங்களை அரசு எடுத்துக் கொள்வதற்கும் 1974-75-ம் ஆண்டில் ரூ 4·56 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டில், பழங்குடியினரைச் சேர்ந்த மாணவியர்களுக்காக கன்னியாகுமரி மாவட்டம் பத்துகாணியில் ரூ 1·50 இலட்சம் செலவில் மாணவியர் இல்லம் ஒன்றுக்கான கட்டிடம் கட்டவும், பழங்குடியினரைச் சேர்ந்த மாணவர்களுக்கான ரூ 1·4 இலட்சம் செலவில் வட ஆர்க்காடு மாவட்டம் ஆரணியில் மாணவர் இல்லத்திற் காகக் கட்டிடம் கட்டவும் அரசு முடிவு செய்துள்ளது. சேலம் மாவட்டம், அச்சம்குட்டம்பட்டியில் பழங்குடியினரைச் சேர்ந்த 30 மாணவர்களுக்கு உணவு வசதியுடன்கூடிய மாணவர் இல்லத்தை ரூ 12,300 செலவில் 1974-75-ம் ஆண்டில் தொடங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

26. உணவுப் பொருட்களின் விலைவாசி உயர்வின் காரணமாக, அரிசனங்கள், பழங்குடியினர், பின்தங்கிய வகுப்பினர் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியர் ஆகிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கான மாணவர் அரசினர் இல்லங்களிலும், பழங்குடியினர் மாணவர்கள் தங்கிப் பயிலும் அரசினர் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கும் கொடுக்கப்படும் உணவுச் செலவுத் தொகையை உயர்த்துவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. சென்னை மாநகரிலுள்ள கல்லூரி மாணவர்கள் அல்லது மாணவியர் அரசினர் இல்லங்கள், தொழிற் பள்ளிகளில் பயிலும் மாணவர் இல்லங்கள் ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் கூடுதல் தொகை 4 ரூபாயாகவும், ஏனைய இடங்களிலுள்ள மாணவர் இல்லங்களைப் பொறுத்த மட்டில் 3 ரூபாயாகவும் உள்ளது.

27. <u>மாணவர் இல்லக் கட்டிடங்கள் கட்டுதல்.</u>—அரிசன நலத் துறையால் நடத்தப்படும் மொத்தமுள்ள 544 இல்லங்களில் 66 இல்லங்கள் அரசுக் கட்டிடங்களிலும் 478 இல்லங்கள் வாடகைக் கட்டிடங்களிலும் உள்ளன. அவசியமான வசதிகளுடன் கூடிய கட்டிடங்களை அமைத்துத்தர வேண்டியதின் அவசியத்தை உணர்ந்து, படிப்படியாக நிறைவேற்றப் படும் திட்டத்தில் புதுக் கட்டிடங்களைக் கட்டுவதென அரசு முடிவு செய்துள்ளது. ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ள கட்டிடங்களை நிறைவு செய்வதற்கும் புதிய கட்டிடங்களை கட்டவும் 1974-75-ம் ஆண்டிற்கு ரூ 5·42 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இது தவிர தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கணிசமான தொகையைக் கடனாகப் பெற்று மாணவர் இல்லங்கள் கட்டப்படுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இத் திட்டம் வணிக வகையில் கட்டுப் படியாகக் கூடியது அல்ல. ஆகவே இதற்குக் கடன் வழங்க இந்திய ரிசர்வ் வங்கி அனுமதியளிக்கவில்லை.



1974 மார்ச் 21]

28. <u>பகுதி நேர ஆசிரியர்கள்.</u>—மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவ மாணவியர்களின் கல்வித் தரத்தை உயர்த்தவும், ஆண்டுத் தேர்வில் அவர்களது செயல்திறனை வளர்க்கவும் பகுதி நேர ஆசிரியர்களை நியமனம் செய்து பாடம் சொல்லித்தரும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

29. <u>தனியார் விடுதிகளுக்கு மானியங்கள்.</u>— ஏற்புப் பெற்ற தனியார் விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவ-மாணவிகளைப் பேணுவதற்காக உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்த வகையின்கீழ் அரசு உதவி பெறும் மாணவர் இல்லங்கள் 58 உள்ளன. அவைகளின் பெயர்கள் விவரப்பட்டி 7-ல் கொடுக்கப்பட்டுள்ளன. இதற்காக, 1974-75-ல் ரூ. 6·41 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## II. பொருளாதார மேம்பாடு

30. <u>வேளாண்மை.</u>—பெரும் பான்மையான அரிசன, பழங்குடி மக்கள்
வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். ஆகவே, அவர்களின் வாழ்க்கைத்
தரத்தை உயர்த்துவதற்கு உழவு மாடுகள், விதை, விவசாயக் கருவிகள்
முதலியன வாங்க மானியம் வழங்கப்படுகிறது. இந்த வகையில் வழங்கப்
பட்டு வந்த தொகை போதுமானதாக இல்லை என்பதை உணர்ந்து உடன்
பெறுபவர் ஒவ்வொருவருக்கும் உழவு மாடுகள் வாங்க ரூபாய்
400-லிருந்து 500 ஆகவும் கிணறு தோண்ட ரூ. 1,500-லிருந்து 2,000
ஆகவும் 1970-71-ம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது. 1974-75-ம்
ஆண்டில் அரிசன மக்களுக் கென ரூ. 5 இலட்சமும், பழங்குடி
மக்களுக்கென ரூ. 4·77 இலட்சமும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நீலகிரி
மாவட்டம், கோலிக் கரையில் பழங்குடியினர் வைத்துள்ள நிலங்களை நன்கு
பயன்படுத்தவும், அந்த நிலங்களிலிருந்து நல்ல காப்பி விளைச்சலைப் பெறு
வதற்கும், ரூ. 2·69 இலட்சம் செலவில் 1974-75-ல் நிறைவேற்றும்
திட்டம் ஒன்றுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத் திட்டத்தில், 350
ஏக்கரில் மண்வளப் பாதுகாப்புக்கும், 350 ஏக்கரில் நிலச் சீர்திருத்தத்திற்கும்
சம ஆழசால் வெட்டுவதற்கும், தற்போதுள்ள காபி செடிகளை முறைப்படி
தறிக்கவும், பரவலாக்கவும், களை எடுக்கவும், இடைவெளியை நிரப்புவதற்
கும், நிழல் தரும் மரங்களை முறையாக ஒழுங்குபடுத்தி வளர்க்கவும்,
பயிர்ப் பாதுகாப்பு இரசாயனங்களுக்கும் வகை செய்யப்பட்டுள்ளது.

31. <u>கோயில்பட்டி புன்செய் நிலப்பண்ணை ஆராய்ச்சி நிலையத்தில் புன்செய்ப் பண்ணை முறையில் அரிசன உழவர்களுக்குப் பயிற்சி.</u>—
அரிசனங்களில் பெரும்பாலோர் ஏழைகளாகவும் நிலமற்றோராகவும் இருக்
கிறார்கள். அவர்களில் ஒரு சிலர் சொந்தமாக சிறிதளவு நிலம்
வைத்துள்ளார்கள். அண்மைக் காலங்களில், புதிய வேளாண்மை
உத்திகள், புன்செய்ப் பயிர்ச் சாகுபடியின் உற்பத்தித் திறனை அதிகப்
படுத்தியுள்ளன. எனவே, திருநெல்வேலி மாவட்டம், கோயில்பட்டியி
லுள்ள புன்செய் நிலப்பண்ணை ஆராய்ச்சி நிலையத்தில், தெரிந்
தெடுக்கப்பட்ட அரிசன உழவர்களுக்கு அரசுச் செலவில் பயிற்சியளிப்
பதற்கு அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

அரிசனங்களுக்குத் தரிசு நிலங்களைத் தாராளமாக ஒப்படை செய்து தரும் பொருட்டு முதலுரிமை வரிசையில் அவர்களுக்கு முன்னர் அளிக்கப்பட்டிருந்த ஏழாவது இடத்துக்குப் பதிலாக நிலம் ஒப்படை செய்வதைப் பொறுத்தவரை இப்போது இரண்டாவது இடம் அளிக்கப்பட்டுள்ளது.

32. கருவிகளை இலவசமாக வழங்குதல்.—கருமார் தொழில், தச்சுத் தொழில், தையல் வேலை முதலியவற்றில் பயிற்சி பெற்ற தொழில் நுட்பத் திறன் பெற்றவர்களுக்குக் கருவிகளையும் சாதனங்களையும் இலவசமாக வழங்கும் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. 1974-75-ம் ஆண்டுக்கென இத் திட்டத்திற்காக ரூ. 2·60 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

33. சிறு தொழில்களுக்கான கடன்கள்.—சைக்கிள் கடைகள் வைத்தல், ஓட்டல்கள், மளிகைக் கடைகள் முதலியன வைத்தல் போன்ற பல சிறுதொழில்களைச் செய்வதற்கு அரிசனங்களுக்குச் சிறு தொழிலுக்கான கடன்கள் வழங்கும் திட்டம் 1968-69-லிருந்து தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொழிலின் இயல்பைப் பொறுத்து, 250 ரூபாயிலிருந்து 10,000 ரூபாய் வரை கடனாக வழங்கப்படுகின்றன.

இத் திட்டத்தின்கீழ் பயன்பெற்றவரின் மொத்த எண்ணிக்கையும் வழங்கப்பட்ட மொத்த கடன் தொகையும் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | பயன்பெற்றோர் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|
| 1968-69 .. .. | 170 | 1·00 |
| 1969-70 .. .. | 707 | 3·01 |
| 1970-71 .. .. | 1,853 | 10·02 |
| 1971-72 .. .. | 1,450 | 10·11 |
| 1972-73 .. .. | 1,633 | 10·09 |
| 1973-74 (28-2-1974 வரை). | 1,455 | 9·40 |

1974-75ஆம் ஆண்டுக்காக ரூ. 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத் திட்டம் 1973-74ஆம் ஆண்டிலிருந்து பழங்குடி மக்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

அரிசனங்களும் பழங்குடி மக்களும் சொந்தத் தொழில் தொடங்குவதற்காக, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் உதவி பெறுவதற்கு உதவும் பொருட்டு, சிறப்புத் திட்டம் ஒன்றை அரசு கொண்டு வந்துள்ளது. விண்ணப்பதாரர்களுக்குக் கடன் பெறுவதில் உதவும் பொருட்டு, மாவட்டந்தோறும் சிறப்புத் துணைத் தாசில்தார் ஒருவரை





அரசு நியமித்துள்ளது. இதுகாறும் அரிசனங்கள், பழங்குடி மக்களைச் சேர்ந்த 2,553 பேர்களுக்கு இத் திட்டத்தின்கீழ் கடன் பெறுவதற்கு உதவி அளிக்கப்பட்டுள்ளது. திட்டம் தொடங்கிய காலத்திலிருந்து இதுவரையில் இத் திட்டத்தால் பயன் பெற்றவர்களுக்கு மொத்தம் சுமார் ரூ. 23 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

பாங்க் ஆப் மதுரையிலிருந்து கடன் பெற்று, அரிசனங்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்குவதற்கான திட்டம் ஒன்றுக்கு அரசு ஏற்பளிப்பு செய்துள்ளது. இவர்களுக்குக் கடன் வழங்க அந்த வங்கி ஒப்புக் கொண்டுள்ளது.

34. பயிற்சி நிலையங்கள்.—அரிசனங்களின் நலனுக்காக வேலை வாய்ப்பு-பயிற்சித்துறை இயக்குநரால் பயிற்சி நிலையங்கள் நடத்தப்படுகின்றன. இந்த நிலையங்களில் பயிற்சி பெறுகின்ற அரிசனங்கள், பழங்குடி மக்களைச் சேர்ந்தவர்களுக்கு அரிசன நலத் துறையால் பயிற்சி உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. இதற்கென 1974-75ஆம் ஆண்டிற்கு ரூ. 12·76 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

35. கூட்டுறவு—அரிசனங்கள்.—தொழில் துறையில் அரிசனங்கள் மிக விரைந்து முன்னேற்றம் பெறுவதற்கு உதவும் நோக்குடன், குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் பலவற்றை அரசு அமைத்துள்ளது. அவை தொழில் வாணிகத் துறை இயக்குநராலும், தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியத்தாலும், சமூக நலத் துறை இயக்குநராலும் நடத்தப்படுகின்றன. இந்தத் துறைத் தலைவர்களிடம் அவற்றுக்கு அவசியமான தொழில் நுட்ப வல்லுநர்களும், தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற பணியாளர்களும், பிற பணியாளர்களும் உள்ளனர். இந்த நிலையங்களையும் சங்கங்களையும் நடத்துவதற்குத் தேவைப்படும் செலவுத் தொகையை அரிசன நலத் துறையே கொடுத்துவிடுகிறது.

பழங்குடி மக்கள்.—ஈவிரக்கமற்று நடந்து கொள்கிற வணிகர்களும், வட்டிக்குக் கடன் கொடுப்போரும், மலைப் பகுதிகளிலும் காட்டுப் பகுதிகளிலும் வசிக்கின்ற பழங்குடி மக்களின் கல்வி அறிவின்மை, வறிய நிலை சமூகத்தில் பின் தங்கியுள்ள நிலைமை ஆகிய இந்தத் தாழ்வுகளைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். இந்தச் சமூக விரோதச் சக்திகளிடமிருந்து அவர்களைக் காக்கும் நோக்குடனும், அவர்கள் பெறுகின்ற காடுபடு பொருள்கள் அங்காடிகளில் விற்பனை செய்யப்பட உதவும் பொருட்டும் அவர்களது பொருளாதார நிலைமையைச் சீரமைக்கும் எண்ணத்தோடும் பழங்குடி மக்களுக்காகக் கூட்டுறவு விற்பனை சங்கங்களையும் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும் அரசு அமைத்துள்ளது. இம் மாநிலத்தில் அத்தகைய பழங்குடி மக்களுக்கென சங்கங்கள் மொத்தம் 19 உள்ளன.

36. பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள்.—உழவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் அரிசனங்களுக்குப் பெரும்பாலும் ஆண்டு முழுவதும் வேலை இருப்பது இல்லை. பயிர்த் தொழில் நடைபெறாத காலங்களில்

அவர்கள் பெரும்பாலும் வேலையின்றி இருக்கின்றனர். பயிர்த் தொழில் நடைபெறாத காலத்தில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு களை அளிக்கும் நோக்குடனும், ஏழை அரிசனங்களுக்கு உதவும் பொருட்டும், பால் வழங்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தச் சங்கங்கள் மூலமாக அரிசனங்களுக்குக் கறவை மாடுகள் வாங்கு வதற்காக ரூ. 150 மானியமாகவும் ரூ. 150 கடனாகவும் வழங்கப்பட்டது. இத் திட்டம் 1968-லிருந்து செயல்பட்டு வருகிறது. ஆனால், 1969-70ஆம் ஆண்டிலிருந்து இவ்வாறு வழங்கப்படும் தொகை ரூ. 500 உயர்த் தப்பட்டது. இத் தொகையில் ரூ. 250 மானியமாகவும் ரூ. 250 கடனாகவும் வழங்கப்படுகிறது. 1970-71 வரையில் இத்தகைய 352 சங்கங்கள் தொடங்கப்பட்டன. 1971-72-ல் இச் சங்கங்கள் திறனுடன் இயங்கவும் ஆதாயம் உள்ளவையாக, உதவியை எதிர்நோக்காது தனித்து இயங்கச் செய்யும் பொருட்டு இத்திட்டத்தில் பல மாறுதல்கள் செய்யப்பட்டன. திருத்திய திட்டத்தின்கீழ், இச்சங்கத்தில் 150 உறுப்பினர்கள் இருந்தாக வேண்டும். (முன்னர் உறுப்பினர்களின் எண்ணிக்கை 50). உறுப்பினர் களுக்குக் கீழே காட்டப்பட்டுள்ளவாறு மும்முறை கறவை மாடுகள் வாங்க கடன்கள் வழங்கப்படுகின்றன.

முதல் முறை கறவை மாடு வாங்க—ரூ. 375 கடன், ரூ. 125 மானியம்.
இரண்டாவது முறை மாடு வாங்க—ரூ. 375 கடன், ரூ. 125 மானியம்.
மூன்றாவது முறை மாடு வாங்க—ரூ. 500 கடன்.

இத்தகைய உதவி பெறுவதற்கு அரிசனங்கள் அல்லாதோர் உறுப்பினராக உள்ள பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களில் சிறுபான்மை இடம் பெற்றுள்ள அரிசன உறுப்பினர்களுக்குத் தகுதி உண்டு. இத் திட்டம் 1974-75ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. அரிசனங்கள் பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவி அளிக்கும் இத் திட்டம் 1973-74-இலிருந்து பழங்குடி மக்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

37. தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம் நடத்தும் தேர்வு எழுதப் பயிற்சி அளித்தல்.—தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகத்தால் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்ற IV-வது தொகுதி பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் எழுதுகின்ற அரிசனங்கள், பழங்குடி வகுப்பினருக்கு வேலை வாய்ப்புகள் பெருகச் செய்யும் நோக்குடன் அவர்களுக்கு அத் தேர்வெழுதப் பயிற்சியளிப்பதற்காக மாநிலத்தில் 30 இடங்களில் பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இந்தப் பயிற்சிக் காலம் மூன்று திங்களாகும். இக் கால அளவில் பயிற்சி பெறுவோருக்குத் தலைக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 45 வீதம் பயிற்சி உதவித் தொகை வழங்கப்படுகின்றது. ஆண்டுதோறும் இத் திட்டத்தின்கீழ் 1,500 பேர் பயன் பெறுவர். இத் திட்டத்திற்காக 1973-74ஆம் ஆண்டில் ரூ. 2·25 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 1974-75-ஆம் ஆண்டில் ரூ.4·40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

38. ஊக்க உதவித் திட்டம்.—ஒவ்வொரு மாவட்டத்திலும் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் முதலாவது, இரண்டாவது இடம் பெறுகின்ற அரிசன மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, கல்லூரிக் கல்வியை



தொடருவதற்கு உதவி அளிக்கப்படுகின்றனர். அவர்கள் ஒவ்வொரு வருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 80 சிறப்பு உதவித் தொகை வழங்கப் படுகிறது. இதற்கு வருமான வரம்பு எதும் விதிக்கப்படவில்லை. இத் திட்டத்தின்கீழ பயன் பெறும் மாணவர்கள் அரிசன மாணவர் இல்லங் களில்தான் தங்கவேண்டும் என்ற முன் நிபந்தனை விதிக்கப்படுவதும் இல்லை. இத் திட்டம் 1971-72 முதற்கொண்டு செயல்படுத்தப்பட்டு வரு கின்றது. ஆண்டுதோறும் இத் திட்டத்தின் மூலம் 28 அரிசன மாணவர் கள் பயன்பெறுவர்.

## III. சுகாதாரமும், வீட்டுவசதியும்.

39. வீட்டு மனைகள்.—எந்தவொரு மனிதனுக்கும் வீடு என்பது இன்றியமையா அடிப்படை வசதியாகும். வீடுகளில்லாத அரிசனங்களுக்கு வீட்டு மனைகள் வழங்கவும், அவர்கள் தாங்களே சொந்தமாக வீடு கட்டிக் கொள்ள உதவி அளிக்கவும் அரசு அவாவுறுகின்றது. இதற்கென, அரிசனங்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்காக மறுப்புக்கு இடமில்லாத புறம்போக்கு நிலங்களை அரசு ஒதுக்கித் தருகிறது. புறம்போக்கு நிலங்கள் கிடைக்காத இடங்களில் அரசே நிலங்களைக் கையகப்படுத்தி அரிசனங் களுக்கு வீட்டு மனைகளைப் பட்டா செய்து கொடுக்கிறது. இப் பணியைக் கவனிப்பதற்கெனச் சிறப்பு பணியாளர்கள் உள்ளனர். அவர்கள் நிலங்களை கையகப்படுத்தி அரிசனங்களுக்குப் பட்டா வழங்குகின்றனர். 1973-74-ல் முதற்கண் ஒதுக்கப்பட்டிருந்த ஒதுக்கீடான ரூபாய் 15 இலட்சம் 26 இலட்சம் ரூபாயாகப் பின்னர் உயர்த்தப்பட்டது. 1974-75-ல் இதற் கென ரூபாய் 15 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரையில் இவ்வாறு கையகப்படுத்தி வழங்கப்பட்ட வீட்டு மனைகளின் மொத்த எண்ணிக்கை 2,22,972 ஆகும். அதன் மொத்தப் பரப்பு 14,498·30 எக்கர்களாகும். வழங்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை 214,545. 1,32,628 வீட்டு மனைகளில் வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

குடியிருப்புச் சட்டத்தின்கீழ் தஞ்சாவூர் மாவட்டத்தில் அரிசனங்களுக்கு ஒரு இலட்சத்திற்குமேல் மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. வெளியூர்களில் பல்லாண்டுகளாகப் புறம்போக்கு நிலங்களில் பெரும்பகுதியை அரிசனங்கள் தன்வயப்படுத்தி குடியிருந்து வந்துள்ளனர். அவர்கள் தம் வசத்தி லுள்ள வீட்டு மனைகள் தங்களுக்கே பட்டா செய்து தரப்பட வேண்டும் என்று முறையிட்டுக் கொண்டனர். இவ்வரசு பதவி யேற்ற பின்னர், அவர்களது கோரிக்கைகளைக் கவனமாகப் பரிசீலித்து, 1960-க்கு முன்னர் இருந்தே மறுப்பில்லாத புறம்போக்கு நிலங்களில் குடியிருந்து வருகின்ற அரிசனங்களுக்கு அந்த வீட்டு மனைகள் பட்டா செய்து கொடுக்கப்பட வேண்டுமென்று ஆணையிட்டது.

40. வீட்டு வசதி—தமிழ் நாடு அரிசன நல மேம்பாடு—வீட்டு வசதிக் கழகம்.—அரிசனங்களுக்கு வீட்டு மனைகள் கையகப்படுத்தும் திட்டத்தின் கீழ் இதுவரை இரண்டு இலட்சம் வீட்டு மனைகளுக்கு மேல் கையகப் படுத்தப்பட்டிருந்தும்கூட, இதனால் பயன் பெற்றவர்கள் இதுவரையில் 1,32,628 மனைகளில் மட்டுமே வீடுகள் கட்டியுள்ளனர். இவ்வாறு இன்னும் 80,000 வீட்டு மனைகள் கட்டப்படாமல் காலியாகவுள்ளன.

அரிசனங்களுடைய வறிய நிலைமைக்கும், அவர்களின் வீட்டு வசதி குறித்த நிலைமையைப் பொறுத்த வரையில் மன நிறைவளிக்காத நிலைமைக்கும் இது ஓர் எடுத்துக் காட்டாகும். எனவே, அரசு 1973-74-ஆம் ஆண்டில் மாநில நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாயும் 1974-75-ஆம் ஆண்டில் ஒரு கோடி ரூபாயும் ஒதுக்கித் தந்து அரிசன வீட்டு வசதிக் கழகம் ஒன்றை அமைத்துள்ளது. இக் கழகம் குறிப்பாக இதற்கென ஏற்கெனவே அரசால் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலங்களில் வீட்டு வசதிகளை உருவாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும். இத் திட்டம் ஐந்தாண்டு காலத்திற்குச் செயல்படும் என்றும், இது, படிப்படியாக நிறைவேற்றி வைக்கப்படும் என்றும் இதன் ஒரு பகுதியாக முதற்கண் இலட்சம் வீடுகள் கட்டித் தரப்படும் என்றும் ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள் தமது வரவு-செலவுத் திட்ட உரையில் அறிவித்துள்ளார்கள். கழகத்தின்முன் உள்ள உடனடியான பணி 1974-75-ல் 10,000 வீடுகள் கட்டித் தருவதாகும். கழகம் ஏற்கெனவே இப் பணியில் முனைந்து ஈடுபட்டு வருகிறது.

41. துப்புரவுப் பணியாளர்கள், தோட்டிகள் ஆகியோரின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்தல்.—நமது நகராட்சிகளிலும் பேரூராட்சிகளிலும் இன்றும் கூட துப்புரவுப் பணியாளர்கள் மலக் கழிவுப் பொருள்களைத் தலைச்சுமையாக எடுத்துச் செல்லும் பழக்கம் இருந்து வருவது பற்றி அரசு ஆழ்ந்த கவலை கொண்டிருக்கிறது. அவர்களுக்குத் தள்ளு வண்டிகள், கையுறைகள், புதை காலணிகள், தட்டுகள், கரண்டிகள், ஆகியவற்றை இலவசமாக வழங்கி, இந்தப் பழக்கமானது நாளடைவில் சில ஆண்டுகளுக்குள்ளாக முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே இத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்துள்ளது. எனினும், அளிக்கப்பட்ட வசதிகள் யாவும் பிரச்னையை ஓரளவே தீர்த்துள்ளன. நகராட்சிகளிலும் பேரூராட்சிகளிலும் நீரடிக் கழிப்பிடங்கள் அமைத்துக் தரப்பட்டாலன்றி, அறுவெறுக்கத்தக்க இந்த நடைமுறைக்கு முடிவு கட்ட இயலாதென்பதை அரசு முழுமையாக அறிந்துள்ளது.

இது தொடர்பான பணி ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில், செங்கற்பட்டு மாவட்டத்தில் திருத்தணி, வில்லிவாக்கம், பூவிருந்தவல்லி, வாலாஜாபாத் ஆகிய பேரூராட்சிகளில் மேற்சொன்னது போன்ற நீரடிக் கழிப்பிடங்கள் (1,000 பிரிவுகள்) அமைக்கப்பட்டு வருகின்றன. இத் திட்டத்திற்கு 1973-74-ஆம் ஆண்டில் ரூபாய் 1·2 இலட்சம் செலவாகும்.

1974-75-ஆம் ஆண்டில் இத் திட்டத்தைக் கணிசமான அளவிற்கு விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ், 1,500 அல்லது 2,000 வீடுகளைக் கொண்ட பேரூராட்சிகள் ஒன்றிரண்டைத் தேர்ந்தெடுத்து, அவற்றில் சாதாரண கழிப்பிடங்களை நீரடிக் கழிப்பிடங்களாக மாற்றுவதற்கான அடங்கல் திட்டமொன்றை நிறைவேற்றுவது பற்றிய செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன. இதன் மூலம் இந்த ஓரிரு பேரூராட்சிகளில் தோட்டிகள் மலக் கழிவுப் பொருட்களை எடுத்துச் செல்லும் பழக்கம் ஒழிக்கப்பட இயலும்.



இந்தச் செயற்குறிப்புகள் இப் பழக்கத்தை ஒழிப்பதுடன் அதே சமயத்தில் இதனால் வேலையிழந்த தோட்டிகளுக்கு அதே பேரூராட்சிகளில் மாற்று வேலை வாய்ப்புக்கு வகை செய்ய அல்லது அரிசன நலத் துறையின் வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் அரிசனங்களின் வேலை வாய்ப்பு, பொருளாதார முன்னேற்றத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டதிலிருந்து அவர்களுக்குப் புது வாழ்வு அளிப்பதற்காக நிதி உதவி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

உள்ளாட்சி அதிகார மன்றங்கள், பேரூராட்சிகளிலும் நகராட்சிகளிலும் நிலவறைக் கழிவு நீர்த் தொட்டியுடன் கூடிய நீரடிக் கழிப்பிடங்களை அமைப்பதை விரைவுபடுத்துவது இயலும் வகையில், தமிழ்நாடு 1920-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தையும், தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தையும் திருத்துவதற்கான செயற்குறிப்புகள் உள்ளன.

நான்காவது திட்ட காலத்தில் துப்புரவுப் பணியாளர்களுக்கும், தோட்டிகளுக்கும் வீடு கட்டுவதற்கான திட்டமொன்று மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டது. 1973-74-ஆம் ஆண்டில் இத் திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு ரூ. 8 இலட்சம் ஆகும். 1974-75 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இது தொடர்பாக ரூ. 9 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில், தோட்டிகள், துப்புரவுப் பணியாளர்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதற்கானத் திட்டம் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மத்திய அரசு பொறுப்பேற்கும் பிரிவின்கீழ் இந்திய அரசால் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பதை ஈண்டு எடுத்துக் கூற வேண்டியது அவசியமாகிறது. இந்த மக்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதற்காகப் இன்னும் செய்யப்பட வேண்டியவை ஏராளமாக இருப்பினும், இவர்கள் நலனுக்காகப் பயனுறு திட்டங்களைக்கூட மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களில் மத்திய அரசு சேர்க்காமலிருப்பது நமது நல்வாய்ப்புக் குறைவேயாகும்.

42. குடிநீர்க் கிணறுகள்.—அரிசனங்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் நல்ல குடிநீர் வழங்க வகை செய்யும் நோக்குடன், அரிசனக் குடியிருப்புகளில் குடிநீர்க் கிணறுகளை அரசு அமைத்துத் தருகிறது. ஒவ்வொரு கிணற்றுக்கும் தோராயமாக ரூபாய் 3,000 முதல் ரூபாய் 5,000 வரை செலவாகிறது. கடந்த ஐந்தாண்டுகளில் அமைத்துத் தரப்பட்ட குடிநீர்க் கிணறுகளின் எண்ணிக்கை பின்வருமாறு :—

| ஆண்டு. | கிணறுகளின் எண்ணிக்கை — அரிசனங்களுக்கு. | கிணறுகளின் எண்ணிக்கை — பழங்குடி மக்களுக்கு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1969-70 .. .. .. .. | 337 | 37 |
| 1970-71 .. .. .. .. | 372 | 30 |
| 1971-72 .. .. .. .. | 666 | 68 |
| 1972-73 .. .. .. .. | 651 | 72 |
| 1973-74 (31 டிசம்பர் 1973 வரை). .. | 360 | 44 |

அரிசனக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்க வகை செய்வதற்காக
ஒதுக்கித் தரப்படும் தொகை ஆண்டுதோறும் உயர்த்தப்பட்டு வருகிறது.
1973-74-ஆம் ஆண்டில் இதற்காக ரூ. 20·19 இலட்சம் ஒதுக்கித் தரப்
பட்டது. 1974-75-ஆம் ஆண்டில் இதற்கென ரூ. 25·05 இலட்சம் ஒதுக்
கிடு செய்யப்பட்டுள்ளது. இம் மாநிலத்தில் குடிநீர் வசதியில்லாத அரிசனக்
குடியிருப்புகள் எவையும் இல்லை என்று உறுதி செய்யும் வகையில் இத்
திட்டத்தைப் படிப்படியாக நிறைவேற்ற அரசு விழைகிறது.

குடிநீர்க் கிணறுகளுடன்கூட, அரிசனங்கள், பழங்குடி மக்களின்
நலனுக்காக நிலமட்ட நீர்த் தேக்கங்களும் அமைத்துத் தரப்படுவது
அவசியம் என்று கருதப்படுகிறது. 1974-75-ஆம் ஆண்டில் ஒவ்வொன்
றும் ரூபாய் 10,000 மதிப்பீட்டுச் செலவில் அரிசனங்களுக்காக நிலமட்ட
நீர்த் தேக்கங்கள் 40-ம், பழங்குடி மக்களுக்காக 8-ம் அமைத்துத்
தருவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

43. மின்வசதி.—அரிசனக் குடியிருப்புகளுக்கும், பழங்குடி மக்கள்
வாழும் பகுதிகளுக்கும் மின்வசதி செய்து தரும் திட்டம் முழுமூச்சுடன்
நடைபெற்று வருகிறது. கீழே கொடுத்துள்ள புள்ளிவிவரங்கள் இதைத்
தெற்றென விளக்கும் :—

| ஆண்டு. (1) | மின்வசதிக்கெனச் செலவிடப்பட்ட தொகை. (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1967-68 .. .. .. .. | 5·07 |
| 1968-69 .. .. .. .. | 5·67 |
| 1969-70 .. .. .. .. | 9·15 |
| 1970-71 .. .. .. .. | 20·03 |
| 1971-72 .. .. .. .. | 40·05 (மின்சக்திக் கட்டணங்கள் உள்பட.) |
| 1972-73 .. .. .. .. | 40·00 |
| 1973-74 .. .. .. .. | 48·00 |
| 1974-75 .. .. .. .. | 82·00 |

மொத்தமுள்ள 24,000 அரிசனக் குடியிருப்புகளில் இதுவரையில்
சுமார் 23,000 குடியிருப்புகளுக்கு மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. அரி
சனக் குடியிருப்புக்களில் மின்வசதி செய்து தரும் பணியை விரைவு
படுத்தும் பொருட்டும் அவைகளுக்குத் தெரு விளக்குகள் அமைத்துத்
தருவதற்காகவும், அரிசனக் குடியிருப்புகளிலுள்ள தெரு விளக்குகளுக்கு
ஆகும் மின்சக்திக் கட்டணச் செலவை அரசே ஏற்றுக் கொள்கிறது. எஞ்சி
யுள்ள 1,000 குடியிருப்புகளிலும் மிக விரைந்து மின்வசதி செய்து
தரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



44. சமுதாயக் கூடங்கள்.—அரிசனக் குடியிருப்புகளில் வாழும்
மக்கள் திருமணம், கூட்டங்கள் முதலியன நடத்துவதற் கென்று
அரிசனக் குடியிருப்புகள் ஒவ்வொன்றிலும் சமுதாயக் கூடங்கள் கட்டு
வதற்கான திட்டத்திற்கு 1971-72-ல் அரசு அனுமதி வழங்கியது. அந்த
ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் ஐந்து கூடங்கள் வீதம், கூடம் ஒன்றிற்கு
ரூபாய் 10,500 செலவில் சமுதாயக் கூடங்கள் கட்டுவது இத் திட்டத்தின
நோக்கமாகும்.

1973-74-ஆம் ஆண்டில் கீழ்க்காணும் இடங்களில் சமுதாயக் கூடங்
கள் கட்டுவதற்கு அரசு அனுமதித்துள்ளது :—

| இராமம். | மாவட்டம். |
|---|---|
| 1. சங்கரன்கோவில் .. .. | திருநெல்வேலி. |
| 2. எத்திலோடு இராமத்தைச் சேர்ந்த முத்தாலபுரம் சிற்றூர். | மதுரை. |
| 3. சில்வார்பட்டி .. .. .. | மதுரை. |
| 4. திருச்சுழிப்பாச்சேரி .. .. | இராமநாதபுரம். |
| 5. சிறுவாடை .. .. .. | செங்கற்பட்டு. |

1974-75 ஆம் ஆண்டில், ஒவ்வொன்றும் 15,000 ரூபாய் மதிப்பீட்டுச்
செலவில் 10 அரிசனக் குடியிருப்புகளில் சமுதாயக் கூடங்கள் கட்டுவ
தென அரசு முடிவு செய்துள்ளது.

45. தீண்டாமை ஒழிப்பு.—தீண்டாமைக் குற்றச் சட்டத்தைச் செயல்
படுத்தியது குறித்து ஆய்வு செய்வதற்காகவும், தீண்டாமை ஒழிப்பைத்
திறமையுடன் செயல்படுத்தும் பொருட்டும், வட்ட அளவிலும், மாவட்ட
அளவிலும் அரிசன நலக் குழுக்களைப் பெரும்பாலான மாவட்டங்களில்
அரசு அமைத்துள்ளது. மேலும் இராமப் பகுதிகளிலுள்ள அரிசன மக்கள்,
பழங்குடி மக்கள் முன்னேறிய சமுதாயத்தினரால் வன்முறைகள்,
கொடுமைகளுக்கு உட்படுத்தப்படாமல் தடுக்கும் பொருட்டும், 1955 ஆம்
ஆண்டு தீண்டாமைக் குற்றங்கள் சட்டத்தின் விதி முறைகளை மீறுகின்ற
நிகழ்வுகளைக் கண்டுபிடிக்கும் பொருட்டும், குற்றவாளிகள் மீது வழக்குத்
தொடர்ந்து தண்டிக்கும் பொருட்டும், தீண்டாமை ஒழிப்பை விரைந்து
செயல்படுத்தும் பொருட்டும், கோயம்புத்தூர், மதுரை, தென்னார்க்காடு,
தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மாவட்டங்களில் வலம்
வரும் காவற்படைப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

46. கலப்புத் திருமணங்கள்.—சாதிப் பிரிவுகள், வகுப்பு வேறு
பாடுகளற்ற சமுதாயம் ஒன்றை அமைத்திட ஊக்கமளித்திடும் நெறியின்
கண் ஓர் நடவடிக்கையாகத் கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதி
யினருக்குத் தங்கப் பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கும் திட்டம்

1968-69-ல் கொண்டு வரப்பட்டது. தற்போது கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதியினர், கீழ்க்காணும் பரிசுகளும் சலுகைகளும் பெறுவதற்குத் தகுதியுடையவர்களாவர் :—

(i) ஒன்றரை சவரன் மதிப்புள்ள (14 காரட்) தங்கப் பதக்கமும் பாராட்டுச் சான்றிதழும்.

(ii) சிறு தொழில்களுக்கான கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் சிறு தொழில்கள் தொடங்குவதற்கு தம்பதியருள் அரிசன வகுப்பைச் சார்ந்தவருக்கு வட்டியில்லாக் கடன்கள்.

(iii) மூன்று செண்ட் பரப்புள்ள வீட்டு மனை ஒப்படை செய்தல்.

(iv) ரொக்கப் பரிசு ரூபாய் 200.

இத் திட்டத்திற்கு மக்களிடையே பெருமளவில் வரவேற்பு உள்ளது. இத்தகைய திட்டத்தைச் செயல்படுத்துவதில் நமது மாநிலமே முன்னோடியாக விளங்குகிறது. இத் திட்டத்தைச் செயல்படுத்துவது பற்றிய விவரங்களைக் கேட்டு மற்ற மாநிலங்களிலிருந்து கடிதங்கள் வந்த வண்ணமுள்ளன.

47. <u>அரசுப் பணிகளில் அரிசனங்கள், பழங்குடி மக்களுக்கு இடம் ஒதுக்குவதற்கான விதியைச் செயற்படுத்துதல்.</u>—மாநில அரசுப் பணிகளில் உள்ள பதவிகளில் 18 சதவீதம் அரிசனங்கள், பழங்குடி மக்களுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ளன. நியமன அதிகாரிகள் இந்த இட ஒதுக்க விதியைப் பின்பற்றுகிறார்களா என்பது குறித்துத் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. இவ்விஷயம் பற்றி உயர்மட்டக் குழுவும் பரிசீலனை செய்கிறது. இக்குழுவிற்கு முதலமைச்சர் தலைவராகவும், அரிசன நலத் துறை அமைச்சர் துணைத் தலைவராகவும் உள்ளனர்.

48. <u>பொது.</u>—அரிசன மக்கள், பழங்குடியினரின் உயர்வுக்காக அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு நலத் திட்டங்கள் குறித்த நடவடிக்கைகளைச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டியுள்ளது. நடைபெற்று வருகின்ற திட்டங்கள் விரைந்து செயற்படுத்துமாறு பார்த்துக் கொள்ளுகையில், 1974–75-ஆம் ஆண்டில் அரசு பின்பற்றுகின்ற அரிசன நல நடவடிக்கைகளின் புதிய கூறுகளில் அரிசன நல மேம்பாடு வீட்டு வசதிக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற அரிசன வீட்டு வசதி குறித்த உதவி பெறும் திட்டமும், தோட்டிகள், துப்புரவுப் பணியாளர்களின் வாழ்க்கை நிலைமையைச் சீரமைத்திடுவதற்கான சமூக-பொருளாதாரத் திட்டமும் அடங்கும். புதிய பல திட்டங்களைக் கொண்டுவருவதன் மூலம் சமுதாயத்தில் எளிய பிரிவினர்களாய் உள்ள இந்த மக்களின் வாழ்க்கையிலே மறுமலர்ச்சியைத் தோற்றுவித்திட இயன்ற முயற்சிகள் அனைத்தையும் அரசு எடுத்து வருகிறது.

இவை கூறி, அரிசன நலக் கோரிக்கையை இப்பேரவை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று வேண்டிக்கொண்டு, எனது உரையை முடிக்கின்றேன்.



## விவரப்பட்டி 7.

### அரிசன நலத் துறை.

### <u>மானியம் பெற ஏற்புப் பெற்ற தனியார் விடுதிகளின் பட்டியல்.</u>

சென்னை நகரம்.

1. நகர மகளிர் இல்லம், சென்னை-31.
2. ராவ்சாகிப் டி. ஆர். எஸ். பிள்ளை மகளிர் இல்லம், சென்னை-5.
3. சென்னபுரி அன்னதான சமாஜம், சென்னை-3.
4. எ. டி. எஸ். எல். மாணவர் விடுதி, சென்னை-21.
5. ராமகிருஷ்ண மிஷன் மாணவர் விடுதி, சென்னை-4.

தென் ஆற்காடு மாவட்டம்.

6. பர்வதராஜ் குலம் ஏழை மாணவர் விடுதி, காட்டுமன்னார்கோயில்.
7. சேவக சங்க மாணவர் விடுதி, திருக்கோயிலூர்.
8. சகஜானந்தா அரிசன விடுதி, குறிஞ்சிப்பாடி.
9. விக்டரி மெமோரியல் விடுதி, விருத்தாசலம்.

செங்கற்பட்டு மாவட்டம்.

10. திரு. டபிள்யூ. டி. மாசிலாமணி முதலியார் குழந்தைகள் விடுதி, வாலாஜாபாத்.
11. வள்ளுவர் குருகுலம், தாம்பரம்.
12. குருகுலம் உணவு விடுதி, மதுராந்தகம்.
13. ராமகிருஷ்ண மிஷன் விடுதி, பல்லியன்கரனை.
14. புனிதமேரி மகளிர் உயர்நிலைப்பள்ளி உணவு விடுதி, செங்கற்பட்டு.

வட ஆற்காடு மாவட்டம்.

15. காந்தி மிஷன் குழந்தைகள் விடுதி, வாலாஜா.
16. ஆர். எஸ். எஸ். விடுதி, ராணிப்பேட்டை.

கோயம்புத்தூர் மாவட்டம்.

17. டி. எஸ். இராமன், சரோஜினி தேவி விடுதி, கோபி.
18. பி. எல். ஜி. கங்கா நாயுடு நினைவு விடுதி, பீளமேடு.

நீலகிரி மாவட்டம்.

19. புனித மேரி மகளிர் விடுதி, கோட்டகிரி.
20. திரு. சற்குரு மாணவர் விடுதி, குன்னூர்.
21. சி. எஸ். ஐ. கெல். மெமோரியல் மகளிர் விடுதி.
22. தக்கர்பாபா குருகுலம், நர்சாசிமண்டு

[1974 மார்ச் 21

திருநெல்வேலி மாவட்டம்.

23. வ. வே. சு. ஐயர் நினைவு விடுதி, சேரன்மாதேவி.
24. திரு. புனித மைக்கேல் உணவு விடுதி, சுவாமிநாதபுரம்.
25. பிஷப் சார்ஜெண்ட் பயிற்சிப்பள்ளி உணவு விடுதி, பாளையங்கோட்டை.

திருச்சிராப்பள்ளி.

26. காந்திஜி விடுதி, புத்தனாம்பட்டி.
27. திருவள்ளுவர் ஆர்ப்பனேஜ், லிங்கத்தடிமேடு.

ராமநாதபுரம் மாவட்டம்.

28. கஸ்தூரிபா மகளிர் விடுதி, மானாமதுரை.
29. தக்கர்பாபா விடுதி, மானாமதுரை.
30. ராஜாஜி மாணவர் விடுதி, கமுதி.

தஞ்சாவூர் மாவட்டம்.

31. கிரியாஸ் சத்திரம் விடுதி, தஞ்சாவூர்.
32. சத்திரம் உணவு விடுதி, ஒரத்தநாடு.
33. அரிசன விடுதி, வல்லம்.
34. ராஜம் விடுதி, ஒரத்தூர்.
35. அரிசன விடுதி, திருககாட்டுப்பள்ளி.
36. மகாத்மாஜி அரிசன விடுதி, கனமங்கலம்.
37. கோகுலம் விடுதி, வெள்ளம் பெரம்பூர்.
38. எஸ். எம். சி. உணவு விடுதி, சீர்காழி.
39. கஸ்தூரிபா கன்யா குருகுலம், வேதாரண்யம்.
40. ஆர். எஸ். எஸ். விடுதி, பட்டுக்கோட்டை.
41. காந்திஜி அரிசன விடுதி, பேராளம்.

மதுரை மாவட்டம்.

42. சேவாலயா மாணவர் விடுதி, மதுரை.
43. கஸ்தூரிபா மகளிர் விடுதி, மேலூர்.
44. ஜவஹர் மாணவர் விடுதி, சோழவந்தான்.
45. காந்திஜி மாணவர் விடுதி, மேலூர்.
46. சாந்தி மாணவர் விடுதி, நிலக்கோட்டை.
47. விவேகானந்தா மாணவர் விடுதி, கம்பம்.



1974 மார்ச் 21]

48. பாரதி மாணவர் விடுதி, திண்டுக்கல்.
49. கஸ்தூரிபாய் மகளிர் விடுதி, திண்டுக்கல்.
50. மகாதேவ தேசாய் மாணவர் விடுதி, வத்தலகுண்டு.
51. ஆதார விடுதி, காந்தி கிராமம்.

மலைவாசிகள்.

1. ஸ்ரீ சற்குரு மாணவர் உணவு உறைவிடப்பள்ளி, கூனூர் (நீலகிரி).
2. ஸ்ரீ சற்குரு மாணவிகள் உணவு உறைவிடப்பள்ளி, கூனூர் (நீலகிரி).
3. ஸ்ரீ சற்குரு உணவு உறைவிடப்பள்ளி, கல்லாறு (கோவை).
4. தக்கர்பாபா குருகுலம், நீர்க்காசிமண்டு (நீலகிரி).
5. பழனிமலை ஆதிவாசிகள் சேவா சங்கம், தாண்டிக்குடி (மதுரை).

அரிசனங்கள்.

6. ஆல்காட் மெமோரியல் பள்ளி, அடையாறு, சென்னை.

7. போர்டு உயர்நிலைப் பள்ளி, இராஜபாளையம், இராமநாதபுரம் மாவட்டம்.

## விவரப்பட்டி 8.

அரிசன நலத் துறை.

தமிழ் நாட்டில் மலைவாசிகள் மக்களின் நலனுக்காக இயங்கிவரும் கூட்டுறவுச் சங்கங்கள்.

அ. கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்.

1. போளூர் வட்ட மலைவாசி கூட்டுறவு விற்பனைச் சங்கம், வட ஆற்காடு மாவட்டம்.

2. பச்சைமலை கூட்டுறவு விற்பனைச் சங்கம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

3. துணைக்கடவு சரக மலைவாழ் மக்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் கோயம்புத்தூர் மாவட்டம்.

4. பூனைச்சி சரக மலைவாழ் மக்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், கோயம்புத்தூர் மாவட்டம்.

5. சத்தியமங்கலம் சரக மலைவாழ் மக்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், கோயம்புத்தூர் மாவட்டம்.

6. கல்ராயன் குன்று மலைவாசி கூட்டுறவு விற்பனைச் சங்கம், தென் ஆற்காடு மாவட்டம்.

[1974 மார்ச் 21

ஆ. வனத் தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்.

1. செண்பக தோப்பு மலைவாழ் மக்கள் தொழிற் ஒப்பந்த கூட்டுறவுச் சங்கம், இராமநாதபுரம் மாவட்டம்.

2. சர்க்கரபதி மலைவாழ் மக்கள் தொழில் ஒப்பந்த கூட்டுறவுச் சங்கம், கோயம்புத்தூர் மாவட்டம்.

3. தலிஞ்சி மலைவாழ் மக்கள் தொழில் ஒப்பந்த கூட்டுறவுச் சங்கம், கோயம்புத்தூர் மாவட்டம்.

4. புதூர் நாடு வன தொழில் ஒப்பந்த கூட்டுறவுச் சங்கம், வட ஆற்காடு மாவட்டம்.

5. தங்க மரபடா மலைவாழ் மக்கள் தொழில் ஒப்பந்த கூட்டுறவுச் சங்கம், நீலகிரி மாவட்டம்.

6. மசினகுடி மலைவாழ் மக்கள் தொழில் ஒப்பந்த கூட்டுறவுச் சங்கம், நீலகிரி மாவட்டம்.

7. பீஞ்சிமடை தொழில் ஒப்பந்த கூட்டுறவுச் சங்கம், வட ஆற்காடு மாவட்டம்.

இ. பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்.

1. பேச்சிப்பாறை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், கன்னியாகுமரி மாவட்டம்.

2. அகத்தியர் பொதிகை மலை ஆதிவாசிகள் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், கன்னியாகுமரி மாவட்டம்.

3. தோடர்கள் கூட்டுறவு பல நோக்கு ஊரக வரவுச் சங்கம், வன்லாக் டவுன், நீலகிரி மாவட்டம்.

4. வெள்ளக்கடை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், சேலம் மாவட்டம்.

5. வளவந்தி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், சேலம் மாவட்டம்.

6. வளவந்தி நாடு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், சேலம் மாவட்டம்.



1974 மார்ச் 21]

## இணைப்பு V.

(323ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### முகவுரை.

''கோரிக்கை 21—மீனளம்'' என்பதன்கீழ் ரூ. 1,76,48,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டுமென முன் மொழிகிறேன்.

இவ்வரசு, 1973-74 ஆம் ஆண்டில் செயற்படுத்தியுள்ள முக்கியமான மீனளத் திட்டங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் பற்றிக் கீழ்க்காணும் பத்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1974-75-ல் மேற்கொள்ளக் கருதியுள்ள புதிய பணிகள் பற்றிய முக்கியக் கூறுகளும் ஈண்டு கொடுக்கப்பட்டுள்ளன.

### நோக்கம்.

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் ''மீனளம்'' முக்கிய அங்கம் வகிக்கிறது. மீனள சமுதாயத்தினல் மேற்கொள்ளப்படுகின்ற கடல் மீன் பிடி தொழில், தமிழ்நாட்டின் கடற்கரை நெடுகவும் உள்ள சுமார் 350 கிராமங்களில் வாழ்கின்ற சுமார் 3 லட்சம் மீனவர்களுக்கு வாழ்வளிக்கின்ற தொன்மைக்குரிய தொழில்களுள் ஒன்று என்பது மட்டுமல்ல இதற்குக் காரணம். ஆனல், கடல் மற்றும் உள்நாட்டு மீனளத்தில் ஏற்பட்டுள்ள விரைவான வளர்ச்சி, இம் மாநிலத்தின் உணவு உற்பத்தியைக் கணிசமான அளவுக்குப் பெருக்கி நமது மக்களின் அன்றாட உணவில் காணப்படும் புரதச் சத்துப் பற்றாக்குறையை நிறைவு செய்கிறது என்பதும் அதற்குக் காரணமாகும். தமிழ்நாடு, மீனள வளர்ச்சியின் முக்கியத்துவத்தைச் சரிவர உணர்ந்து, இவை, மீன் உற்பத்தியைப் பெருக்குவதில் மாநிலத்திற்கு உதவியாக இருக்கக் கூடிய பல்வேறு வசதிகளை அடுத்தடுத்த திட்டங்களில் அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

2. தமிழ்நாடு 1,000 கி. மீ. நீளமுள்ள கடற்கரையையும் கடற்கரையை ஒட்டி சுமார் 77,000 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள மீன் பிடிப்பதற்கேற்ற பகுதியையும் கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் 60-240 அடி வட்டாரத்தில் 22 இலட்சம் ஹெக்டேர் தூரக் கடல் பகுதியுள்ளது. இப் பகுதிக்கு அப்பாலுள்ள ஆழ்கடலில் கடல் தரையை யொட்டியும், கடலின் நடு ஆழத்திலும் வாழும் பல்வகை மீன் இனங்கள் உள்ளன. உணவு வேளாண்மை நிறுவனம் மற்றும் இந்திய அரசின் மதிப்பீடுகளின்படி தமிழ்நாட்டுக் கடலில் கடல் தரையை யொட்டியும், கடலின் நடு ஆழத்திலும் வாழும் மீன்களை தற்போதுள்ளதைப்போல் இரட்டிப்பாகப் பிடிக்க முடியுமென்று காணப்பட்டுள்ளது. ஆழ்கடல் மீன் உற்பத்தியை 4 மடங்கு அதிகரிக்கலாம். ஆழ்கடலிலுள்ள மதிப்புயர்ந்த சூரை மீன்கள் அந்நிய நாட்டுப் பெரிய கலங்களால் ஏற்கெனவே பிடிக்கப்பட்டு வருகின்றன. இந்திய நார்வே திட்ட

டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட மீன்பிடி ஆய்வு வேலைகள் கடல் தரையையொட்டியுள்ள மீன் வள வாய்ப்புக்களைப் பற்றி சிறந்த தகவல்களைத் தந்துள்ளன. தென் வட்டாரத்திலுள்ள நிலம்படு கடற்பகுதிச் சரிவில் ஆழ்கடல் சிங்கிறால், ஆழ்கடல் இறால் பல் வகை மீன்கள் வாழும் வளமான மீன் பிடிப்பிடங்கள் கண்டுபிடிக்க பட்டுள்ளன. மன்னார் வளைகுடாப் பகுதியிலும், பாக் விரிகுடாப் பகுதியிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு பணிகள் மூலம் நல்ல கெளுத்தி மீன்கள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்தி யாவில் தென் மேற்குக் கடற்கரைக்கெதிரில் நெத்திலி வாழு மிடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இம்மீன்கள் பர்ஸ் மீன் வலை களையோ அல்லது கடலில் பயன்படுத்தப்படும் மீன் வலைகளையோ கொண்டுள்ள கலங்களால் பிடிக்கப்படுகின்றன.

3. தமிழ்நாட்டில் வற்றாத ஆறுகள், நீர்த்தேக்கங்கள், பாசன நீர்-நிலைகள் உள்ளிட்ட 7.9 இலட்சம் ஹெக்டேர் பரப் புள்ள உள்நாட்டு நீர்நிலைகள் உள்ளன. இந் நீர்நிலைகளிலிருந்து உள்நாட்டு மீன் உற்பத்திக்கான சிறந்த பங்கை இம்மாநிலம் நல்கியுள்ளது. பெரும்பாலான இந் நீர் நிலைகளில் மீன் உற்பத்தி குறைவாகவே காணப்படுகிறது. முனைப்புடன் மீன்குஞ்சுகளை விடுதல், அறிவியல் மீன் வளர்ப்பு முறைகளைக் கையாளுதல், நிர் வாகத் திறன் ஆகியவைகளின் மூலம் உள்நாட்டு மீன் உற்பத்தி யைக் கணிசமாகப் பெருக்க முடியுமென்பது நிச்சயமாகும். இது போன்றே கழிமுகங்கள், காயல்கள், உப்பங்கழிகளிலுள்ள 46,750 ஹெக்டேர் நீர்ப்பரப்பிலும், குட்டைகள் போன்ற உள்ளமைப்பு களை நிறுவுவதற்கு முதலீடு செய்தபின், இறால்கள், இப்பி இன உயிர்கள், நண்டுகள், மீன்கள், கடற்பாசிகள் போன்றவைகளின் உற்பத்தியைப் பெருக்குவது சாத்தியமாகும்.

4. தமிழ்நாட்டில் மீனள வளர்ச்சிக்காக பல்வேறு திட்டக் காலங்களில் செய்யப்பட்ட செலவுகள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன:—

| | |
|---|---|
| முதல் ஐந்தாண்டுத் திட்டம் — | ரூ. 31.34 லட்சம். |
| இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம். | ரூ. 75.30 லட்சம். |
| மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் .. | ரூ. 2,57.27 லட்சம். |
| ஆண்டுத் திட்டங்கள் 1966-67 .. | ரூ. 1,28.69 லட்சம் |
| ,, 1967-68 ... | ரூ. 1,50.55 லட்சம். |
| ,, 1968-69 ... | ரூ. 1,21.71 லட்சம். |
| நான்காவது ஐந்தாண்டுத் திட்டம், 1969-74. | ரூ. 7,85.00 லட்சம் (எதிர்ப்பார்க்கப்பட்டது). |
| ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம், 1974-79. | ரூ. 18,80.00 லட்சம். |

1974-75-ஆம் ஆண்டுக்கு ரூ. 1,90.00 லட்சம் ஒதுக்க ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. இது ஐந்தாவது திட்டத்தின் முதல் ஆண்டாகும்.





**மீன்பிடி படகுகளை இயந்திரமயமாக்குதல்.**

5. தமிழ்நாட்டிலுள்ள 3 லட்சம் கடல் மீனவர்களில் 1 லட்சம் பேர் முனைப்புடன் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் 30,000 கட்டுமரங்களையும், 5,000 வள்ளங்களையும் கொண்டு மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளனர். இக் கலங்களை இயக்கு வது, சோர்வூட்டுவதும், கடினமானதும், அபாயகரமானதுமாகும். இவற்றிலிருந்து கிடைக்கும் வருவாயோ மிகவும் குறைவாகும். இந் நிலையில் நோக்குவோமேயானால் மீன்பிடி படகுகளை இயந்திர மயமாக்குவது பொதுவாக மாநிலப் பொருளாதாரத்திற்கும், குறிப்பாக மீனவ சமுதாயத்திற்கும் ஏராளமான நன்மைகள் பயத் துள்ளது என்பதில் ஐயமில்லை. தொடர்ந்து வரும் திட்ட காலங் களில் மீன்பிடி தொழிலை இயந்திர மயமாக்குவதன் அவசியத்தை அரசு வலியுறுத்தி வருகிறது. மூன்றும், நான்காம் திட்ட காலங் களில் இயந்திரப் படகுகளின் திட்டத்தில் பெற்ற இயக்காற்றல் இன்னும் தொடர்ந்து இருந்து வருகிறது. நான்காம் திட்டத் துவக்கம் வரை 861 இயந்திரப் படகுகள் புகுத்தப்பட்டன. நான்காம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மட்டுமே ஏறத்தாழ 1,000 இயந்திரப் படகுகள் வழங்கப்பட்டிருக்கலாம். 30', 32' மற்றும் 36'யுள்ள ஏறத்தாழ 1,860 இயந்திரப்படகுகளை கொண்டு கடல் மூல வளங்களைக் குறிப்பிடத் தக்க அளவில் நம் மாநிலம் பிடித்து வருகிறது.

6. இயந்திரப் படகுகளை வழங்கியதிலும், நிதி ஒதுக்கீட்டிலும் காணப்பட்டுள்ள சாதனைகள் கீழே தரப்பட்டுள்ளன :—

| வரிசை எண். | ஆண்டு. | கலங்களின் எண்ணிக்கை. | நிதி ஒதுக்கீடு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | 1969-70 | 135 | 89·92 |
| 2. | 1970-71 | 186 | 94·26 |
| 3. | 1971-72 | 131 | 1,28.33 |
| 4. | 1972-73 | 250 | 1,44.65 |
| 5. | 1973-74 | 245 | 1,51.12 |

7. சென்னை மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சம்மேளனமும் திருநெல்வேலி மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சம்மேளனமும் வேளாண்மை மறு நிதி நிறுவனத்தின் நிதி உதவியுடன் இயந்திரப் படகுகளைக் கட்டி வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வரு கின்றன. சென்னை சம்மேளனம் இதுவரை 50 இயந்திரப் படகு களை வழங்கியுள்ளது. திருநெல்வேலி சம்மேளனம் 1973-74-ல் 30 படகுகளைக் கட்டி முடிக்கும்.

8. நான்காம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இயந்திரப்படகு களைப் புகுத்துவதற்கான இலக்கை தமிழ்நாடு முழுமையாக எய்தியுள்ளது.

[1974 மார்ச் 21

9. முக்கியமான இந்தத் திட்டம் இயற்கையாகவே ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் முனைப்புடன் செயல்படுத்தப்படும். இத் திட்ட காலத்தில் துறைத் திட்டத்தின்கீழ் பல்வகை அளவுள்ள 725 கலங்களையும் தனியார் மற்றும் கூட்டுறவு, நிறுவனங்கள் மூலமாக சுமார் 500 கலங்களையும் கட்டி வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. 1974-75-ல் 200 கலங்களைப் புகுத்த ஏற்பாடாகியுள்ளது. மீன்பிடி படகுகளை இயந்திரமயமாக்குதல் மற்றும் கடல் மீன் வள வளர்ச்சிக்கான ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்ட முதலீடு ரூ. 1,015.25 இலட்சமாகும்.

10. முந்திய ஆண்டுகளில் வழங்கிய படகுகள் சிலவற்றிற்கு இயந்திரங்கள் மாற்ற வேண்டியது அவசியமாயிற்று. சில நிபந்தனைகளுக்குட்பட்டு, முதலில், இயந்திரங்கள் வழங்கப்பட்டவர்களுக்கு இரண்டாவது தடவையாக இன்ஜின்களை வழங்குவதற்கு அரசு ஆணை பிறப்பித்தது. இன்சூரன்ஸ் செய்யப்பட்டுள்ள படகுகள் இயற்கையின் விளைவுகளால் மூழ்கிப்போனால் புதிய படகுகளை வழங்க அனுமதிக்கவும் அரசு கருதியுள்ளது.

11. மீனவர்கள் முறையீடுகளுக்கேற்ப இயந்திரப்படகுகளின் ஒதுக்கீட்டாளர்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ற இயந்திரங்களைத் தெரிந்தெடுத்து தங்கள் படகுகளில் பொறுத்திக்கொள்ள இப்போது அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். மீன்பிடி படகுகளின் திறனை அதிகப்படுத்தவும், அதிகப்படியான மீன்களைப் பிடிக்கவும் உதவும் ஏற்றப்பொறிகள் (Winches), விசைப் பொறிகள் (Power take-off) போன்றவை கோரிக்கையின் பேரில் படகுகளில் அமைத்துத் தரப்படுகின்றன.

12. மீன்பிடி படகுகளைக் கட்டுவதில் பல்வேறு பொருட்களுக்கு ஆகும் செலவைக் குறைப்பதற்கான ஆராய்ச்சியைத் தொடர்ந்து மீன்துறை செய்து வருகிறது. ஃபெர்ரோ சிமிண்டுப்படகுகள் கட்டுவதில் இத்துறைச் செய்துள்ள முன்னோடி வேலைகள் நன்கு தெரிந்ததாகும். ஃபெர்ரோ சிமிண்டு உருவரை மாதிரிகள் வெளிநாட்டிலிருந்து பெறப்பட்டன. 38 அடி மற்றும் 16 அடி இயந்திர ஃபெர்ரோ சிமிண்டுக் கலங்கள் கட்டப்பட்டு பல்வகைச் சோதனைகளில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாய் காணப்பட்டன. 1973-74-ல் மூன்று 38 அடி ஃபெர்ரோ சிமிண்டுப் படகுகளைக் கட்டி முடிக்க இத்துறை திட்டமிட்டுள்ளது. கனடாவிலிருந்து பெறப்பட்ட உருவரை மாதிரிகளைக்கொண்டு 52அடி ஃபெர்ரோ சிமிண்டுக் கலம் ஒன்றைக் கட்ட துறைத் திட்டமிட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் இப்போது செயல்பட்டுவரும் இந்திய-பெல்ஜிய மீன்வளத் திட்டத்திற்குப் பயன்படுத்த இக்கலம் கட்டப்படும். 1974-75-ல் மேலும் 5 ஃபெர்ரோ சிமிண்டுக்கலங்கள் கட்டப்படும். ஃபெர்ரோ சிமிண்டு படகுகட்டும் தளத்திற்கான நிலையான இடத்தைப் பெறுவதில் இத்துறை இன்னும் வெற்றி காணவில்லை. 1974-75-ல் நம் முயற்சி வெற்றியளிக்குமென்று நம்பப்படுகிறது.



1974 மார்ச் 21]

13. சோதனை மீன் பிடிப்பு வேலைகளுக்கும் கடல் மற்றும் மீன்பிடிப்பு நிலைமைகள் வேறுபட்ட நிலைமைகளுக்கு ஏற்றவகையில் பல்வேறு பொருள்களான படகுகள் கட்டுவது குறித்து ஆய்வு செய்யவும் ஒரு 32½ அடி கண்ணாடி இழை படகைப் பெற இத்துறை திட்டமிட்டுள்ளது.

14. நெடுங்காலமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் மீன்பிடி கலங்களின் திறமையை மிகுதிப்படுத்துவதற்கான இடைநிலைத் தொழில் நுட்ப இயலின் வெற்றி வாய்ப்பு இத்துறையின் கவனத்தைக் கொண்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்திய-பெல்ஜியம் மீன்வளத் திட்டத்தின்கீழ் கட்டுமரங்களில் வெளிப்புறத்தில் இயந்திரங்களைப் பொருத்தும் திட்டம் சோதனையாக மேற்கொள்ளப்பட்டு வெற்றி காணப்பட்டுள்ளது. இதுவரை பெறப்பட்டுள்ள முடிவுகளின் அடிப்படையில் 1974-75-ல் 30 வெளிபுற இயந்திரங்களை வெளிநாட்டிலிருந்துபெறத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுபோலவே சில வள்ளங்களில் குறிப்பாக மல்லிப்பட்டினம், தூத்துக்குடி ஆகிய இடங்களிலுள்ளவற்றில் உட்புற இயந்திரங்களைப் பொருத்தக்கூடும் என்று கண்டறியப்பட்டுள்ளது. இத்தகைய உட்புற இயந்திரங்கள் இக்கலங்களின் வேகத்தை மிகுதியாக்கும். குறிப்பிட்ட மீனவர் குழுக்களுக்கு வழங்க 10 உட்புற இயந்திரங்கள் வாங்க திட்டமுள்ளது. வலையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டதிலிருந்து மீனைப் பாதுகாப்பது மிகவும் அவசியமாகும். பிடிக்கப்பட்ட மீன்கள் படகுகளிலேயே நன்கு பாதுகாத்துக் கொள்ளப்பட்டால் அவைகளின் விலை மதிப்பு மிகவும் அதிகமாயிருக்கும். வாடகைக் கொள்முதல் அடிப்படையில் 200 காப்பிட்ட பெட்டிகளைக் குறிப்பிட்ட மீனவர்களுக்கு வழங்கத் திட்டமுள்ளது. இதன் மூலம் பனிக்கட்டியை இப்பெட்டிகளில் எடுத்துச் சென்று பிடித்த மீன்களைக் கலங்களிலேயே பாதுகாக்க முடியும்.

## ஆய்வும், மீன்பிடித்தலும்.

15. ஏற்கெனவே குறிப்பிட்டபடி தமிழ்நாட்டுக் கடலோரப் பகுதியில் நிறைந்த கடல் வளங்கள் உள்ளனவென்பதை சோதனைகள் காட்டியுள்ளன. பொதுவான மதிப்பீடு இருப்பினும் குறிப்பிட்ட மீன்வள மதிப்பீடு மற்றும் வளமான மீன்பிடிப்பிடங்களை பல்வேறிடங்களில் கண்டறிதல், நல்ல மீன்பிடி பருவங்களைக் கரையோரப்பகுதியிலும், அண்மைக் கடல் பகுதிகளிலும் குறிப்பிடல் போன்றவையும் அவசியமாகும். இதற்காக இத்துறை, சென்னை, கடலூர், இராமேஸ்வரம், கன்னியாகுமரி போன்ற இடங்களில் கடலோர மீன்பிடிப்பு நிலையங்களைக் கொண்டுள்ளது. 1974-75-ல் மல்லிப்பட்டணத்தில் மேலும் ஒரு நிலையம் நிறுவப்படும். சென்னை, இராமேஸ்வரம், கன்னியாகுமரி ஆகிய இடங்களிலுள்ள நிலையங்கள் சுற்றாய்வை முனைப்புடன் மேற்கொள்ள 43½ மற்றும் 50 அடிப் படகுகளைப் பெறும்.

16. " முல்லை " " மருதம் " ஆகிய இரண்டு இழுபடகுகளும் பாக் விரிகுடா, மன்னார் வளைகுடா மற்றும் சென்னையையொட்டியுள்ள கடற்பகுதியில் மீன்பிடிப்பு, சுற்றாய்வு, வேலைகளை

974-75-ல் தொடர்ந்து செய்து வரும். ஆய்வுப்பணிகளுக்கா
ற்பொழுது பயன்படுத்தப்பட்டு வரும் இழுபடகுகளின் எண்ணி
கயை அதிகரிக்க இன்னும் இரு 57 அடி எஃகு இழுபடகுகள்
974-75-ல் பெறப்பட்டு அதன் உதவியுடன் நம் மாநிலக்
டலோரப் பகுதிகளின் விரிவாக சுற்றுய்வு செய்யப்படும்.

17. ஆய்வு சோதனை அடிப்படையில் மீன்பிடிப்பது ஆகிய
வலைகள் மீனளத்துறையின் ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்ட கா
வலைகளின் ஒரு முக்கிய பிரிவாக அமையும். நடுத்தர மற்றுப்
பரிய கலங்களைக் கொண்டு ஆய்வு மற்றும் சோதனை மீன்
டிப்பை மேற்கொள்ள ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தி
. 66·67 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

18. தூரக்கடல் பகுதிகளின் ஆய்வு வேலைகள் இந்திய அரசின்
பொறுப்பாயுள்ளது. தூத்துக்குடியிலுள்ள தூரக்கடல் மீன்
டிப்பு நிலையம் தூத்துக்குடி பகுதியிலுள்ள தூரக்கடல் மீன்வள
தைப் பற்றி அறிய சிறந்த பணியாற்றி வருகிறது. மேலும் இ
லையம் மாநில மீனளத் துறையும் நெருங்கிய தொடர்
கொண்டு செயல்பட்டு வருகிறது. பர்ஸ் சீன் மற்றும் நவீன
டுப்பாக டிரால போன்ற பல்வகை வலைகளைப் பயன்படுத்
தில் சோதனைகளைச் செய்து வருகிறது. சென்னை கரையோர
ாரக்கடல் பகுதியில் ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள இந்தி
அரசு சென்னையில் மேலும் ஒரு நிலையம் துவக்கியுள்ளது.

19. தூரக்கடல் மற்றும் ஆழ்க்கடல் பகுதிகளிலுள்ள மீன்
வளத்தைப் பற்றி நாம் அறிந்துள்ளது மிகவும் குறைந்ததாகும்
ழைக் கடலோரத்தில் கரையையொட்டியும், ஆழ்க்கடலிலும்,
5ு ஆழத்தில் காணப்படும் மீன்களைப் பற்றியும் நமக்குத்
தெரிந்தது மிகவும் குறைந்ததாகும். எனவே இப்பகுதியில்
சுற்றுய்வு மற்றும் சோதனைப்பணிகள் முனைப்புடன் மேற்கொள்ளு
தல் மிகவும் அவசியமாகும். இதன் பொறுப்பு முக்கியமாக இந்திய
அரசைச் சார்ந்தததாலால் கடலின் நடுப்பாக மீன்வளத் திட்டம்
ஒன்றைத் தமிழ்நாட்டில் தலைமையிடத்தைக் கொண்டு செயல்பட
இந்திய அரசை மாநில அரசு வலியுறுத்தி வருகிறது. இந்திய
அரசானது இத்தேவையின் அவசியத்தையுணர்ந்து அந்நியத்
தொழில் நுட்ப உதவியுடன் விரைவில் ஒரு கடலின் நடுப்பாக
மீன்வளத் திட்டம் ஒன்றை நிறுவுமென்று நம்பப்படுகிறது. இத்
திட்ட அமைப்பும் ஆய்வுப்பணிகளின் முடிவுகளும் பொது மற்றும்
தனியார் துறைகளுக்கு மீன்பிடிப்பிடங்களைப் பற்றிய சிறந்த
விவரங்களைத் தந்து அவை நடுத்தர மற்றும் பெரிய கலங்களைக்
கொண்டு வணிக அடிப்படையில் வெற்றியுடன் மீன்பிடிப்பை
மேற்கொள்ள உதவியாய் இருக்கும்.

20. கரையோர மீன்பிடிப்பில் இப்போது எடுத்துக்கொள்ளப்
படும் நடவடிக்கைகள் ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்ட முடிவுக்கு
முன்னரே பெரும்பாலான கரையோர மீன்பிடிப்பகுதிகளில் மீன்
பிடி இயந்திரப் படகுகளைக் கொண்டு மீன்பிடிக்கப்படும் என்று
உறுதியாகக் கூறலாம். எனினும் தூரக்கடல் மற்றும் ஆழ்கடல்





மீன்பிடிப்பிற்குப் பொருத்தமான கலங்கள் போதிய அளவு இல்லை. இந்திய அரசு 50 நடுத்தர அளவுள்ள இழுப்படகுகள் இறக்குமதி செய்வதற்கான அனுமதி வழங்க முடிவு செய்துள்ளது. இத்தகைய கலங்களின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய வேண்டியுள்ளதால் இழுப்படகுகளை உற்பத்தி செய்வதற்குள்ள வசதிகளைப் பயன்படுத்தி நம் நாட்டிலேயே இழுப்படகுகள் கட்டும் தளம் நிறுவ வேண்டியது முக்கியத்துவம் பெற்றுள்ளது. மண்டபத்தில் உள்ள கப்பல் பழுது பார்க்கப்படும் தளம் சறுக்குப் பாதை மற்றும் பட்டறைக்கட்டிடங்கள் ஆகியவை இழுப்படகுகள் கட்டும் தொழில் நிறுவ மிகவும் பொருத்தமானவையென்று கருதப்பட்டதால் அவற்றை தென்பிராந்திய ரயில்வேயிடமிருந்து எடுத்துக்கொண்டுள்ளோம். எனவே, நடுத்தர அளவுள்ள டிராலர்களைக் கட்டுவதற்கு கூட்டுத் துறையில் பொறுப்பு வரையறுக்கப்பட்ட ஒரு பொதுக் கம்பெனியை நிறுவ தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு அனுமதி வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இக்கம்பெனியானது பதிவு செய்யப்பட்டுள்ளது. மண்டபத்தில் டிராலர் கட்டுவதற்கான உருவரை மாதிரிகளை அந்நிய உற்பத்தியாளர்களிடமிருந்து பெறுவதற்கான ஒப்பந்தப்பேச்சுகள் துவக்கப்பட உள்ளன.

## மீன்பிடி பொருட்கள் வழங்கல்.

21. நான்காம் திட்டக் காலத்தில் 50 டன் நைலான் வாங்கப்பட்டு இயந்திரப்படகுகளுடன் வழங்கப்பட்டுள்ளது. மீனவர் கூட்டுறவுகளுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் துறையால் தரப்படும் 20 சதவீதம் உதவித் தொகையைப் பெற்று கூட்டுறவு சங்கங்கள் அவைகளாகவே 65 டன் நைலானை வாங்கியுள்ளன.

22. முந்திய திட்டக்காலங்களில் செய்யப்பட்டதைப் போலவே படகு வழங்கப்பட்டவர்களுக்கும், கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கும் நைலான் மற்றும் செயற்கை நூல் வழங்கும் திட்டம் ஐந்தாம் திட்டத்திலும் தொடர்ந்து நிறைவேற்றப்படும். இதற்கென திட்ட முதலீட்டில் ரூ. 1,49·30 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1974-75-ல் உறுப்பினர்களுக்குப் பகிர்ந்தளிக்க மீனவர் கூட்டுறவு சம்மேளனங்கள் வாங்கும் நைலானின் விலையில் 20 சதவீதம் அதாவது ரூ. 5 லட்சம் அரசாங்கக் கடனுகை வழங்கப்படும். மேலும் கடன் அடிப்படையில் வழங்கப்படும் இயந்திரப் படகுகளுடன் தர ரூ. 5 லட்சம் மதிப்புள்ள நைலான் இத்துறையால் வாங்கப்படும்.

## உள்நாட்டு மீனளம்

### மீன்குஞ்சு உற்பத்தியும், உள்நாட்டு நீர்நிலைகளில் மீன்குஞ்சு விடுதலும்.

23. சென்ற சில ஆண்டுகள்வரை நீர்நிலைகளில் விடுவதற்கு வேண்டிய பெரிய கெண்டை மீன் குஞ்சுகளுக்கு இயற்கை மூலங்களையே எதிர் நோக்க வேண்டியிருந்தது. ஆனால்

[1974 மார்ச் 2.

தூண்டுதல் முறை மீன் குஞ்சு உற்பத்தி நுட்பத்தை அதிகப்படி
யாகக் கையாண்டதால் மீன் குஞ்சுகளின் தேவையைப் பூர்த்தி
செய்வதில் பெருத்த முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

24. தமிழ்நாட்டின் தற்போதைய மீன்குஞ்சு உற்பத்தி ஏறத்
தாழ 6 கோடி மீன்குஞ்சுகளாகும். இதில் 4·50 கோடி மீன்
குஞ்சுகள் இயற்கை மூலங்களினின்றும், 1·50 கோடி மீன்குஞ்சுகள்
தூண்டுதல் முறை மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களிலிருந்துப்
பெறப்படுகின்றன. தற்போதுள்ள 12 தூண்டுதல் முறை
மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களும் இது குறித்து சிறந்த பணி
யாற்றி வருகின்றன.

25. மீன் வளர்ப்புக்குகந்த எல்லா நீர்நிலைகளிலும் விடுவதற்கு
10·50 கோடி மீன்குஞ்சுகள் தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது
நமது தேவைக்கும் இப்போதுள்ள உற்பத்திக்கும் பெருத்த இடை
வெளியுள்ளது. மேலும் இயற்கை நீர்நிலைகளிலிருந்து பெறப்படும்
மீன்குஞ்சுகளும் எப்போதும் சிறந்தவையாய் இருப்பதில்லை. எனவே
அதிகப்படியாகத் தேவைப்படும் மீன்குஞ்சுகளைத் தூண்டுதல் முறை
உற்பத்தி நிலையங்களிலிருந்தே பெறுதல் அவசியமென்று
உணரப்பட்டுள்ளது. இந்நோக்குடன் பூண்டி, சாத்தனூர், அள்
யாறு, திருமூர்த்தி, அமராவதி ஆகிய இடங்களில் கூடுதலான
மீன்-மீன்குஞ்சு வளர்ப்பிடங்கள் 1974–75-ல் உருவாக்கப்படும்.
கூடுதலான தூண்டுதல் முறை மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்கள்
மற்றும் பெரிய நீர்நிலைகளில் மீன்விட்டு நீர்வகிப்பதைப் படிப்
படியாக உணர்த்துவதையும் உள்ளடக்கிய பல்நோக்குத் திட்டம்
1973–74 முதல் மூன்றாண்டுகளுக்குச் செயல்படுத்த மேற்
கொள்ளப்படும்.

26. மீன்வளர்ப்புக்கென ஊராட்சிகளிலும் குளங்களைப்
புதுப்பித்தல் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் மீன் குஞ்சு வளர்ப்
பினை மேற்கொள்ளுதல் ஆகியவை ஊரக வளர்ச்சி இயக்குநரால்
செயல்படுத்தப்படும் ஆண்டுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்
பட்டு வருகின்றன.

### நீர்தேக்கங்களில் மீன் பண்ணைகள் நிறுவுதல்.

27. பெரிய நீர்த்தேக்கங்கள் அனைத்தும் மீன்வள அபிவிருத்திக்
கென மீன் துறையால் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. சாத்தனூர்
மற்றும் அமராவதி நகர் நீர்த்தேக்கங்கள் ஏக்கர் ஒன்றுக்கு மிக
அதிக அளவில் மீன் உற்பத்தி செய்துள்ளன. பவானிசாகரத்தி
லுள்ள நன்னீர் உயரியல் ஆய்வு நிலையம் உள்நாட்டு நீர்த்
தேக்கங்களிலுள்ள மீன் வள உயிரின வாழ்க்கைச் சூழலை
கண்டறிவதில் சிறந்த பணியாற்றியுள்ளது. பவானிசாகரத்தி
லுள்ள இந்திய வேளாண்மை ஆய்வுக் குழு ஒருங்கிணைந்த
மீன் வளர்ப்புத் திட்டம் ஒன்றைச் செயற்படுத்தி வருகிறது
இது நம் மாநிலத்திலுள்ள உள்நாட்டு நீர்நிலைகளில் பல்வகை
மீன் இனங்களை விடுவதுபற்றி ஆய்வு செய்யும்.



1974 மார்ச் 21]

28. நீலகிரி மாவட்டத்திலுள்ள அவலாஞ்சியில் புதிதாக
அமைக்கப்பட்ட குட்டைகளில் 1973–74-ல் நன்னீர் உணவு மீன்
வகையை வளர்க்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. நன்னீர்
மீன்களுக்குகந்த உணவுத் தேவையைக் கண்டறிவதற்கான
சோதனை வேலைகள் இந்நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு
வருகின்றன.

### உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் பாசிக் குத்தகை.

29. அரசுடைமையாக்கப்பட்ட நீர்நிலைகள் மற்றும் ஊராட்சி
ஒன்றியம் நீர்நிலைகள் ஆகியவற்றில் மீன்பிடிக்கும் உரிமையை
பொது ஏலத்தில் விடாமல், 1970 ஆம் ஆண்டிலிருந்தோ அல்லது
1380-ஆம் பசலி ஆண்டிலிருந்தோ தொடர்ந்து மூன்றாண்டுகளுக்கு
1969-ஆம் ஆண்டின் குத்தகைத்தொகையுடன் 10 சதவீதம் கூடுதல்
தொகைக்கு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் குத்தகைக்கு
வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. மீனளத்துறை பொதுப்பணித்
துறை ஆகியவற்றின் கீழ்உள்ள நீர்நிலைகளுக்கு இச்சலுகையை
1973-ஆம் ஆண்டிலிருந்து மேலும் மூன்றாண்டுகளுக்கு வழங்க
ஆணையிடப்பட்டுள்ளது.

### கழிமுக மீன்வளம்—கடலோர மீன் வளர்ப்பு.

30. கழிமுகம் அல்லது கடலோர மீன் வளர்ப்பு மேம்பாட்டுக்கு
ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் முதலிடம் தரப்பட்டுள்ளது
செங்கல்பட்டு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருநெல்வேலி
கன்னியாகுமரி மாவட்டங்களில் 46,750 ஹெக்டேர் பரப்புள்ள
கழிமுக நீர்நிலைகள் உள்ளன. இந்நீர்நிலைகள் சிலவற்றில் கடலோர
மீன் வளர்ப்பு முன்னோடியாகக் கையாளப்படும். அறிவியல் முறை
களைக் கொண்டு கையாளப்படும் இம்மீன் வளர்ப்பில் காணப்படும்
அபிவிருத்திகள் மீன் வளர்ப்பில் அக்கரைக்காட்டும் தனியார்
முதலீட்டாளர்களுக்கு எடுத்துரைக்கப்படும். இத்தகைய சோதனை
திட்டங்கள் பரங்கிப்பேட்டையிலும், மணக்குடியிலும் கையாள
பட்டு வருகின்றன. இத் திட்ட காலத்தில் கழிமுக நீர்நிலைகளில்
சுற்றாய்வு மேற்கொள்ளப்படும். இத்துறையின் நோக்கமாவது
கழிமுக நீர்நிலைகளில் நவீன மீன்பிடிப்பு முறைகளைப் புகுத்து
வதும் அதன் மூலம் அந்நியச் செலாவணியை ஈட்டித்தரு
கழிமுக மீன் வகைகளின் உற்பத்தியைப் பெருக்குவதுமாகும்.

31. இம்மாநிலத்திலுள்ள எல்லா கழிமுக நீர்நிலைகளிலும்
பழவேற்காடு கழிமுகம் மிகப் பெரிதானதும், 178 சதுர மைல்பரப்
புள்ள நீர்நிலைகளைக் கொண்டதுமாகும். பழவேற்காடு கழிமுகத்தில்
பூர்வாங்க ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இங்குள்ள இறால் மீன்
வளத்தைப் பெருக்குவதற்கான வழிவகைகளை கொண்டுள்ள
விரிவான அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது. இவ்
வறிக்கையின் அடிப்படையில் 1974–75-ல் ஒரு முன்னோடித்
திட்டத்தை மேற்கொள்ள எண்ணமுள்ளது.

[1974 மார்ச் 21

பயிற்சி.

32. இத்துறையால் கட்டி வழங்கப்பட்டு வரும் மீன்பிடி இயந்திரப்படகுகளை இயக்கவும், பேணிப் பராமரிக்கவும் தேவைப் படும் மனித சக்தியைப் பெறுவதற்குச் சென்னை, கடலூர், நாகப்பட்டினம், மண்டபம், தூத்துக்குடி, குளச்சல் ஆகிய ஆறு இடங்களில் மீனவர் பயிற்சி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இவை தவிர மேட்டூர் அணையில் உள்நாட்டு மீனவர் பயிற்சி நிலையமொன்று செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சியாளர்களுக்கு நவீன மீன்பிடிப்பு முறைகள், கப்பலோட்டும் முறை, மாலுமி இயல், இயந்திர பராமரிப்பு முறை ஆகியவற்றில் 10 மாதப் பயிற்சியளிக்கப்படுகிறது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் உபகாரச் சம்பளமாக, மாதம் ஒன்றுக்கு ரூ. 50 அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி நிலையங்களில் இதுவரை ஏறத்தாழ 3,000 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

33. சென்னையில் செயல்பட்டு வரும் பணியாளர் பயிற்சி நிலையத்தில் மீன்துறை பணியாளர்களுக்கு மீன்பிடி தொழிலின் பல்வேறு பிரிவுகளில் பயிற்சியளிக்கப்படுகிறது. இது தவிர, சென்னை, கொச்சி, பம்பாய், ஐதராபாத், கட்டாக், பேரக்பூர் போன்ற இடங்களிலுள்ள மத்திய பயிற்சி நிலையங்களில் நல்கப் படும் பயிற்சியையும் இத்துறைப் பயன்படுத்தி வருகிறது.

34. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கீழ்க்கண்ட செல வினங்களுக்காக ரூ. 22·50 லட்சம் முதலீடாகச் சேர்க்கப்பட் டுள்ளது.

(1) தற்போதுள்ள பயிற்சி நிலையங்களை விரிவுபடுத்தல் மற் றும் இவைகளுக்குப் பொருத்தமான படகுகள், தளவாடக்கருவி களை அளித்தல்.

(2) மத்திய பயிற்சி நிலையங்களில் அதிகப்படியான துறை யின் பணியாளர்களுக்குப் பயிற்சியளித்தல்.

(3) தற்போதுள்ள பணியாளர் பயிற்சி நிலையத்தை வலுப் படுத்தல் மற்றும் பல்வேறு நிலைகளிலுள்ள துறையின் பணியாளர் களுக்கு மறுபயிற்சியளிக்க ஏற்பாடு செய்தல்.

பனிக்கட்டி நிலையங்கள், குளிர்ப்பதன அறைகள் மற்றும் உறையவைப்பு நிலையங்கள்

35. தொடர்ந்து செயல்பட்டு வரும் ஐந்தாண்டுத் திட்டங் களில் 42 பனிக்கட்டி நிலையங்கள், குளிர்ப்பதன அறைகள், உறையவைப்பு நிலையங்கள், உறையவைப்புக் கிடங்குகள் ஆகி யவை கடலோர முக்கிய மீன் இறங்குமிடங்களில் அமைக்கப்பட் டுள்ளன. இந்நிலையங்கள் மீனவர்கள் பிடிக்கும் மீன்களைப் புதிய நிலையில் விற்பனை இடங்களுக்குக் கொண்டு வர உதவுகின்றன. அண்மையாண்டுகளில் இந்திய கடல் பொருள்களின் மீது அந்நியர் கள் காட்டும் வேட்கையால் இம்மாநிலமானது நண்டுகள், இறால் கள், தவளைக்கால்கள் போன்றவற்றைப் புதிய நிலையில் ஏற்றுமதி



1974 மார்ச் 21]

செய்து வருகிறது. இது நம் மீனவர்கள் பிடிக்கும் மீன், இறால் போன்றவற்றிற்கு நல்ல விலையைப் பெற்றுத் தருகிறது. இந்தியா விலும், வெளிநாடுகளிலும் உறைய வைத்த கடல்பொருள்களுக்குத் தேவையிருந்து வருவதால் இப்போதுள்ள உறையவைப்புத் திறனை விரிவுபடுத்தவும் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் முக்கிய மீன் பிடிப்பிடங்களில் கூடுதல் உறையவைப்பு நிலையங் களை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

36. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பெரிய மீன்பிடி துறைமுகங்கள் உள்ள இடங்களில் பெருமளவில் பனிக்கட்டி நிலை யங்கள், குளிர் பதனம் மற்றும் உறையவைப்புக் கிடங்குகள் அமைக்கவும், உள்நாட்டில் மீன் விற்பனைக்கு உதவும் வகையில் கடலோரத்தில் தொடர்ந்து குளிர் பதனம் மற்றும் உறைபதனக் கிடங்குகளை அமைக்கவும் திட்டமுள்ளது. இதற்காக ஐந்தாவது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ. 88 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள் ளது. 1974–75-ல் குளச்சலில் குளிர் அறை வசதியுடன் கூடிய ஒரு பெரிய பனிக்கட்டி குளிர்ப்பதன நிலையம் அமைக்கப்படும். எண்ணூர், தூத்துக்குடி, மண்டபம், கன்னியாகுமரி ஆகிய இடங் களில் ப்ளேட் பிரீச்சர்கள் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. மீனைப் புதிய மற்றும் உறையவைத்த நிலையில் விற்பனைச் செய் வதற்குத் தற்போதுள்ள 8 குளிர் அறைகளை உறைய வைப்புக் கிடங்குகளாக மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

கலனடைப்புத் தொழிற்சாலையும், மீன் தூள் நிலையமும்,

37. 1966 ஜூன் திங்களில் உற்பத்தியைத் துவக்கிய தூத்துக் குடி கலனடைப்பு தொழிற்சாலை 1969–70-ல் தனியார் ஒருவருக் குத் குத்தகைக்கு விடப்பட்டது. இக்குத்தகையாளர் இத் தொழிற்சாலையைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளாததாலும், குத்தகைத் தொகையைச் செலுத்துவதில் நிலுவை ஏற்பட்ட தாலும் இக்குத்தகையை ரத்துசெய்து துறை மூலமாக நடத்தப்பட இருக்கிறது. நாள் ஒன்றுக்கு 50 டன் மீனை 10 டன் மீன்தூளாக்கும் திறன் கொண்ட இந்தியாவிலேயே மிகப் பெரிய மீன்தூள் நிலைய மொன்று மண்டபத்தில் நிறுவப்பட்டுள்ளது. இந்நிலையம் இந்திய நார்வே திட்டத்தின்கீழ் நார்வே உதவியுடன் நிறுவப் பட்டது. இந்நிலையம் 1971ல் செயல்படத் தொடங்கியதிலிருந்து 1971–72 முடிய 245 டன் மீன்தூளையும், 1972–73-ல் 253 டன் மீன்தூளையும் உற்பத்தி செய்துள்ளது. இந்நிலையம் அமைத்ததின் நோக்கமானது 'கழிவு மீனுகக்' கருதப்படும் காரல் மீன்களுக்கு நல்ல விலையை மீனவர்களுக்கு நல்கித் தரவேண்டுமென்பதாகும். காரல் மீன்களின் விலை உயர்ந்ததன் வாயிலாக இவ்வெண்ணம் ஈடேறியது. எனினும் அண்மைக் காலத்தில் பெரும்பாலான மீன வர்கள் இறால் மீன்பிடிப்புக்குச் செல்வதால் எதிர்பார்க்கும் அள வுக்கு மீன்தூள் நிலையம் பயன்படுத்தப்படவில்லை. எனவே இந் நிலையத்திற்குத் தேவைப்படும் மூலப் பொருளைப் பெறுவதற்கு மீன்துறை கலங்களில் தொகுதியொன்றை இத்துறை ஏற்பாடு செய்துள்ளது. இந்நிலையம் செயல்படுவதும், இதற்குத் தேவை

[1974 மார்ச் 21

யான மூலப் பொருள்களை முழு அளவில் வழங்குவதில் கலங்களின்
தொகுதியின் வேலையும், இந்நிலையத்தைப் பயன் நல்கும்
வழியில் முழுமையாகச் செயல்படுத்துவது குறித்துக் கண்டறியப்
பட்டு வருகிறது.

### மீன் பிடி தொழிலுக்கான நிறுவன நிதியுதவி.

38. தமிழ்நாட்டையொட்டியுள்ள கடற்பகுதிகளில் நல்ல மீன்
பிடிப்பிடங்களை மீன்துறை கண்டுபிடித்துள்ளதாலும், இங்குள்ள
மீன் வளத்தில் அதிகப்படியான நாட்டம் காட்டப்பட்டு வருவ
தாலும், இறால்கள், கடல் நண்டுகள் போன்றவைகளின் யூனிட்
விலை அதிகமாயுள்ளதாலும், வெளிநாட்டுச் சந்தைகளில் இக்கடல்
பொருள்களுக்குள்ள தேவை நாள்தோறும் அதிகரித்து வருவதா
லும் மீனவர் தவிரவுள்ள எண்ணற்ற ஏனைய தனி முதலீட்டாளர்
கள் இயந்திரப்படகுகளைக் கொண்டு மீன்பிடி தொழிலிலீடுபட
விரும்புகின்றனர். தனியார் முதலீட்டார்களின் பெருகிவரும்
ஆர்வத்தை அரசு உணர்ந்து இவர்களுக்கு உதவும் மீனை வணிக
ரீதியில் பிடிக்கவும் ஒரு திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
இதன்படி இதற்காகும் முதலீட்டில் 20 சதவிகித தொகையை
தனியார் முதலீட்டார்கள் முதலீடு செய்ய முன் வந்ததால் அரசாங்
கத்திடமிருந்து 20 சதவிகித தொகை வட்டியில்லாக் கடனாக
வும், 60 சதவிகித தொகை வணிக வங்கிகளிலிருந்து கடனாகவும்
பெறுவதற்குத் திட்டமுள்ளது. இந்த புதிய திட்டம் தனியார்
முதலீட்டார்களிடையே ஊக்கத்தை உண்டாக்கியுள்ளது. இது 11
முதலீட்டார்களுக்கு 20 சதவிகித தொகை வட்டியில்லாக் கடனாக
ரூ. 2·27 லட்ச ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இம்முதலீட்டார்
கள் பயிற்சி பெற்ற மீனவர்களுக்கு வேலை வாய்ப்பை நல்குவ
தோடல்லாமல், பதன நிலையங்களை நிறுவி மீன்பிடி தொழிலின்
பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவுவார்கள்.

39. அரசு மற்றும் வணிக வங்கிகள் தவிர கூட்டுறவு நிலையங்
கள் மீன் பிடி தொழில் வளர்ச்சியில் அக்கறைக்காட்டி வருகின்
றன. மீனவ சமுதாயத்திற்குப் பயன்நல்கும் மீன்வளத் திட்டங்
களைச் செயல்படுத்துவதற்குகந்தவை ''மாவட்ட மீனவர் கூட்டு
றவுச் சம்மேளனங்களேயாகும்''. ரூ. 33·82 லட்ச ரூபாய் செல
வில் 1969-70ஆம் ஆண்டுமுதல் சென்னை, செங்கைமாவட்டங்களில்
சென்னை சம்மேளனம் ஒரு திட்டத்தை, செயல்படுத்தி வருகிறது.
இதேபோல் திருநெல்வேலி மாவட்ட மீனவர் கூட்டுறவு சம்மே
ளனமும் ஒரு திட்டத்தை 1972–73 முதல் ரூ. 78·70 லட்சம்
செலவில் செயல்படுத்தி வருகிறது. இந்த இரண்டு திட்டங்களும்
வேளாண்மை மறுநிதிக் கழகத்தின் பொருளுதவியுடன் செயல்
படுத்தப்பட்டு வருகின்றன. இம்மாதிரியான திட்டங்கள் தென்
னாற்காடு, தஞ்சை, இராமநாதபுரம், கன்னியாகுமரி மாவட்டங்
களிலும் ஒவ்வொன்றுக்கும் ஒரு கோடி ரூபாய் முதலீட்டுடன்
ஆரம்பிக்கும் திட்டம் பரிசிலனையில் உள்ளது. வேளாண்மை மறு
நிதிக் கழகத்திலிருந்து பொருளுதவி கிடைத்தவுடன், இந்த திட்



1974 மார்ச் 21]

டங்கள் செயல்படுத்தப்படும், 1974–75ல் ஒன்று அல்லது இரண்டு
திட்டங்களுக்கு அனுமதி கிடைக்கப்படுமென்று எதிர்பார்க்கப்
படுகின்றது.

40. மீன் உற்பத்தியைப் பெருக்கவும், மீன்பிடிதொழிலை நவீன
மயமாக்குவதற்கும், இந்திய அரசு ஒரு திட்டத்தைத் தயாரித்து
இருக்கிறது. இத்திட்டத்தில் வெளிநாட்டிலிருந்து மீன் பிடி
டிராலரை இறக்குமதி செய்ய விரும்பும் முதலீட்டாளர் உள்
நாட்டில் கட்டப்படும் டிராலரை குறைந்த விலையில் வாங்கு
வதுடன் இவ்விரு டிராலர்களின் விலையிலுள்ள வித்தியா
சத்தில் 27½ சதவீதத்திற்கு சலுகை விலையில்
உள்நாட்டு டிராலர் வழங்கப்படுவதுடன் இந் நிபந்தனையின்பேரில்
தான் வெளிநாட்டிலிருந்து டிராலரை இறக்குமதி செய்ய அனுமதி
தரப்படுமென்றும் காணப்பட்டுள்ளது. மாநில அரசால் தன்
பங்காகத் தயாரிக்கப்பட்டுள்ள திட்டத்தில் தனியாரால் பெறப்
படும் டிராலரின் விலையில் ஒரு பகுதியை வட்டியில்லாக் கடனாக
வழங்க ஏற்பாடுள்ளது. இச்சலுகைகள் கூட்டுறவுகளுக்கும் நல்
கப்படும். இவ்வுதவியை நல்க ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டதில்
ரூ. 47·45 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### மீன் தொழில் சார்ந்த தொழிற்பேட்டைகள்.

41. தனியார் முதலீட்டாளர்கள் மீன்பிடி தொழிலில்
புகுவதை ஊக்குவிக்க நம் மாநிலத்தில் பல்வேறு இடங்களில்
வரவிருக்கும் மீன்பிடி துறைமுகங்களுக்கு அருகில் பதன நிலையங்
கள், படகுகட்டும் தளங்கள், போன்றவை நிறுவுவதற்கான இடங்
களை அளிக்க ஏற்பாடுள்ளது. இதற்கான இடங்கள் எண்ணூர்,
கடலூர், மண்டபம் போன்ற இடங்களில் ஏற்கனவே பெறப்பட்
டுள்ளன. தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்தருகே சீர் செய்யப்
பட்ட நிலங்கள் இக்காரணத்திற்காக வழங்கப்படும். இந்நிலங்களை
எவ்வாறு வழங்கப்படவேண்டும் என்றுள்ள வழிவகைகள் பற்றி
அரசு முடிவெடுத்தபின், இவை தனியார்களுக்கு வழங்கப்படும்.

42. **பட்டறை வசதிகள்.**—நான்காவது ஐந்தாண்டுத் திட்ட
முடிவில் 1,861 இயந்திரப் படகுகளை மாநில அரசு கட்டிவழங்கி
யுள்ளது. இப்படகுகள் அதிக நாட்கள் இத்தொழிலில் ஈடுபட
இவைகளுக்கு முக்கிய இடங்களில் பராமரிப்பு மற்றும் பழுது
பார்க்கும் வசதிகளைச் செய்து தர வேண்டியுள்ளது. இது குறித்த
சிக்கல்களை மீன்துறை பரிசீலனைச் செய்து, போதிய உதிரிப்
பொருட்கள் வழங்குமிடங்கள், மற்றும் பணி நிலையங்களை ஏற்படுத்
துவதற்கு தீர்மானித்திருக்கிறது. முன்னமேயே உதிரிப்
பொருட்களை வழங்குவதற்கும், படகுகளைப் பராமரிப்பதற்கும்,
பணி நிலையங்கள் சென்னை, கடலூர், நாகப்பட்டிணம், மண்டபம்,
இராமேஸ்வரம், தூத்துக்குடி, குளச்சல் முதலிய இடங்களில் நிறு
வப்பட்டுள்ளன.

43. இந்த கலன்களின் செயல்திறன் கணிசமாக முன்னேறுவதற்கு இந்த பராமரிப்பு வசதிகளைப் பெறுக்குவது தேவையாகிறது. இக்குறிக்கோளை அடைவதற்குத் தமிழ்நாட்டில் முக்கியமான இறங்கு துறைகள், 'ஏ' வகுப்பு, 'பி' வகுப்பு பணி நிலையங்களை ஏற்படுத்துவதற்கு அடிப்படைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் ஒரு பணி நிலையம் மல்லிப்பட்டிணத்தில் ஏற்படுத்துவதற்கும், கடலூரிலிருக்கும் நிலையத்தை இறங்குதுறை சாய்மேடை வசதியோடு பெரிதாக்கவும் அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது. 1974–75-ல் பரங்கிப்பேட்டையில் ஒரு புதிய பணி நிலையமும், தூத்துக்குடியிலிருக்கும் நிலையத்தைப் பெரிதாக்கவும் அரசு தீர்மானித்துள்ளது. வரும் ஆண்டுகளில், இந்த அடிப்படைத் திட்டத்தைப் படிப்படியாக செயல்படுத்துவதற்கு அரசு நினைக்கிறது.

முத்து மற்றும் சங்கு மீன்வளம்.

44. தூத்துக்குடியை ஒட்டியுள்ள முத்து பார்களில் முத்து வளம் அருகிய காரணத்தால் 1961ஆம் ஆண்டுக்குப்பிறகு, முத்துச் சலாபம் நடத்தப்படவில்லை. இருந்தபோதிலும் இத்துறை முத்துச்சிப்பிகளை வளர்க்க வேண்டிய முறைகள் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

45. சங்கு குளியாட்களுக்கு உதவும் பொருட்டு திருநெல்வேலி கடற்கரையைத் தவிர மற்றைய எல்லா கடல் பகுதிகளிலும் இலவச சங்கு குளியிடமாக அரசு 1971-ம் ஆண்டில் ஆணை பிறப்பித்துள்ளது. தென்னாற்காடு, தஞ்சை, இராமநாதபுரம், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மீனவர்கள் தாங்களாகவே சங்கு குளிப்பதற்கு ஆள் ஒன்றுக்கு, ஆண்டொன்றுக்கு ரூ. 10 (ரூபாய் பத்து) உரிமத் தொகைக்கு மீனவர்களுக்கு உரிமம் வழங்கப்படுகிறது.

ஆராய்ச்சி.

46. கன்னியாகுமரி, தூத்துக்குடி, நாகைப்பட்டினம், இராமேஸ்வரம், அடையாறு, சேத்துப்பட்டு, எண்ணூர், பவானிசாகர், ஊட்டி முதலிய இடங்களில் கடல்நீர் உயிரியல், நன்னீர் உயிரியல், நீர் உயிரியல், மீன் துறை தொழில் நுட்பம் ஆகியவைகள் பற்றிய ஆய்வு செய்ய மீன் துறை ஆராய்ச்சி நிலையங்கள் உள்ளன. கழிமுக மீன் வளத்தின் அவசியத்தை உணர்ந்த அரசு, கோவளத்தில் கடலோர மீன் வளர்ப்பில் ஆராய்ச்சி செய்வதற்கு ஒரு திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. தற்போது இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் குழு உதவியுடன் உவர் நீர் மீன் வளர்ப்பு மற்றும் கழிவு மீன்களைப் பயன்படுத்தும் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மண்டபத்திலுள்ள மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையத்தின் உதவியுடன் தூத்துக்குடியில் 'முத்து வளர்ப்பு' ஆராய்ச்சி திட்டம் ஒன்றுக்குச் சமீபத்தில் அரசு அனுமதியளித்துள்ளது.





47. மாநில அளவில் ஆராய்ச்சிக் குழு ஒன்று இத்துறையில் ஆராய்ச்சி வேலைகளைக் கண்காணித்து பதிப்பாய்வு செய்கிறது. இதுவரைச் செய்யப்பட்ட ஆய்வு வேலைகளை ஒருங்கிணைக்கவும், திறமையான நிர்வாகத்திற்கு வழிகாட்டுவதற்கும், நெருங்கிய தொடர்புக்கும், ஆராய்ச்சி நிலையங்களை மையப்படுத்துவதற்கான ஒரு திட்டம் பரிசீலனையில் உள்ளது.

சமூக நலத் திட்டங்கள்.

48. 1968–69-ல் வீடு கட்டும் திட்டத்தை அரசு மறு பரிசீலனைச் செய்து நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 300 வீடுகளைக் கட்ட ஒப்புதல் அளித்தது. எல்லா வீடுகளும் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் கட்டி முடிக்கப்பட்டன. ஒவ்வொரு வீட்டிற்கும் ஒப்புதலளிக்கப்பட்ட ரூ. 1,000-ல் ரூ. 750 மான்யமாகவும் ரூ. 250 சுலபத் தவணையில் திரும்பச் செலுத்தும் கடனாகவும் வழங்கப்பட்டது. இத்தொகையானது பின்னர் ரூ. 2,000 ஆக உயர்த்தப்பட்டு இதில் மான்யமும் கடனும் 50 : 50 என்ற விகிதத்தில் தரப்பட்டது.

49. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தஞ்சை மாவட்டத்தில் இரு பெரிய சாலைகளும், தென்னாற்காடு மாவட்டத்தில் மேலும் ஒன்றும் அமைக்கப்பட்டன. இவை தவிர, ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிதியுதவி நல்கி சிறு சாலைகளும் அமைக்கப்பட்டன.

50. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சாலைவேலைகளையும், மீனவர்களுக்கு வீட்டு வசதியளித்தலையும், மத்திய ஆதரவுத்திட்டத்தின்கீழ் ரூ. 50 லட்சம் முதலீட்டில் செயல்படுத்தத் திட்டமுள்ளது. எனினும், மேற்குறித்த காரணங்களுக்காக துறையின் மாநிலத் திட்டத்திலும் ரூ. 20 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

51. புயல், வெள்ளம், தீ விபத்துக்களினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இத்துறை உதவி வருகிறது. மீன் பிடிப்பின் போது உயிரிழந்தவரின் குடும்பத்தார்களுக்கு ரூ. 1,000 கருணை மானியமாக வழங்கப்படுகிறது. இதுவரை, 1·39 லட்ச ரூபாய் கருணை மானியமாக மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இயற்கை விபத்துக்களின்போது தங்களுடைய கடன்களையும், கருவிகளையும் புதுப்பிப்பதற்கும், மறுவாழ்க்கை வசதி வழங்குவதற்கும் மீனவர்களுக்குக் கடனும், உதவித் தொகையும் இத்துறை வழங்குகிறது. கடல் அரிப்பினாலோ, எண்ணெய் துறைகள் மீன்பிடி துறைமுகங்கள் அணுசக்தி நிலையம் முதலியனவற்றைக் கட்டுவதாலோ, வெளியேற்றப்பட்ட மீனவர்களுக்குக் குடியிருப்புகளையும் மாதிரி மீனவ கிராமங்களையும் இத்துறை அமைத்துள்ளது. கல்பாக்கம், அம்மாபட்டினம் ஆகிய இடங்களிலுள்ள இரண்டு குடியிருப்புகளிலும், இதுவரை 373 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 1974-75-ல் கல்பாக்கம் அணுசக்திநிலையத்தினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு ரூ. 1·88 லட்சமும், பலகைத் தோட்டம்,

மீனவர் கூட்டுறவு சங்க மீனவர்களுக்கு, வீடுகள் கட்டுவதற்கு நிலங்கள் உரிமைப்பெற கடனும், உதவித் தொகையும் ஆக ரூ. 34,600-ம், கன்னியாகுமரி மாவட்டத்தில் கடலரிப்பினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு ரூ. 0·54 லட்சமும் மத்திய ஆதரவு திட்டத்தின்கீழ் இவ்வரசு அனுமதியளித்துள்ளது.

### இந்திய-நார்வே திட்டம்.

52. ஒரு படகு கட்டும் நிலையம், ஒரு மீனவர் பயிற்சி நிலையம், ஒரு பனிக்கட்டி-குளிர்ப்பதன நிலையம், ஒரு உறையவைப்பு நிலையம், ஒரு மீன்தூள் நிலையம், தங்குதுறை வசதிகள், ஒரு பராமரிப்பு நிலையம் முதலியன நார்வேயிலிருந்து கிடைக்கப்பெற்ற பொருட்கள், தொழில்நுட்ப உதவி இவைகளுடன் ஏற்படுத்தப்பட்டு, இவை அனைத்தும் ஒருங்கிணைந்த மீன் வளத் திட்டமாக மண்டபத்தில் செயல்பட்டு வருகின்றன. 1972ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31-ல் உடன்பாடு காலம் முடிந்தவுடன் இத்திட்டம் மாநில அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

53. இத்திட்ட உதவிக்கு உடன்பாடு முடிந்தபோதிலும், நார்வே அரசு, மீன் வள அபிவிருத்திக்குப் பொருள்களும், கருவிகளும் தந்து உதவுகின்றன. இவ்வுதவித் திட்டத்தின் கீழ் நார்வே அரசு கீழ்க்கண்ட சாதனங்களை அத்தகைய நிதியுதவியின் கீழ் வழங்குவதற்கு ஒப்புக்கொண்டுள்ளது.

| வருடம். | சாதனம். | எண்ணிக்கை. | விலை (ரூ. லட்சத்தில்.) சுங்க வரிநீங்கலாக. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1972-பை | போன்ற மீன் வலைக்கான துணைப் பொருள்கள். | 2 | 1·000 |
| | மீனைக் கண்டமாகத் துண்டு படுத்தும் கத்திகள். | 360 | 0·079 |
| | உறைய வைக்கும் துணைக் கருவித் தொகுதி. | 1 | 0·700 |
| 1973- | உறையவைக்கும் துணைக் கருவித் தொகுதி. | 1 | 1·000 |
| | ஆழ்கடல் மிதவைகள் | 250 | 0·06 |
| | எக்கோ-சவுண்டர் | 2 | 0·14 |
| | | | 2·97 |
| | மொத்தம் | | அல்லது 3·00 இலட்சம் |



1973 நவம்பரில் ஒரு உறைய வைக்கும் துணைக் கருவித் தொகுதி கிடைக்கப் பெற்றது. மால்களையும், தளவாடங்களை யும் பொறுப்பேற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன. மற்றைய தளவாடங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.

### அரை மிலியன் வேலை வாய்ப்புத் திட்டம்.

54. மீன் வளப் பகுதியில் வேலை வாய்ப்புத் திட்டத்தைப் பெருக்குவதற்காகவும், படித்த தொழில் நுட்பத் தகுதி வாய்ந்த வர்களை வேலைக்கு எடுத்துக் கொள்வதற்கும், மத்திய அரசு ஒரு திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் வேலையில்லாத, தகுதியுள்ளவர்களைப் படகு கட்டுதல், பதனம் செய்தல், படகுகளைப் பராமரித்தல் போன்ற துறைகளில் ஈடு படுத்த மீனளத் துறை திட்டமிட்டுள்ளது. இத்துறை ரூ. 86·61 இலட்சம் செலவில் தீட்டப்பட்ட திட்டம் அரசு ஒப்புதல் பெற்று 1973-74, 1974-75-ல் செயல்படுத்த எடுத்துக்கொள்ளப்படும். இத்திட்டம் முழுதும் செயல்படும்பொழுது, சுமார் 5,000 பணி யாளர்களுக்கு வேலை வாய்ப்பும், 1,090 படித்த வேலையில்லாதவர் களுக்கு வேலை வாய்ப்பும் நல்கும்.

### கருத்தரங்குகள்.

55. 1973-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் 'தமிழ்நாடு கடல் வளப்பெருக்கம்' பற்றிய கருத்தரங்கு நடைபெற்றது. இக் கருத்தரங்கை மாண்புமிகு மீன் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார். மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் சிறப்பு மலரை வெளியிட்டார். இந்நாட்டின் எல்லாப் பகுதி களிலிருந்தும் வந்த முக்கிய பிரதிநிதிகள் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டார்கள். சிறந்த கட்டுரைகள் இக்கருத்தரங்கு களில் கொடுக்கப்பட்டு, விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதில் தேசீய முக்கியத்துவம் வாய்ந்த பரிந்துரைகள் வழங்கப் பட்டன.

56. மற்றொரு 'உள்நாட்டு மீன்வளம்' பற்றிய வட்டாரக் கருத்தரங்கு தஞ்சையில் 1973-ல் நடைபெற்றது. இக்கருத் தரங்கின் பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்டு முடிந்த அளவு செயல் படுத்தப்பட்டுள்ளன. இம்மாதிரியாக வட்டார மீன்வளக் கருத் தரங்குகள், வருகின்ற ஆண்டுகளில், ஏனைய மாவட்டங்களிலும் நடத்தப்படும். 1974-75 ஆம் ஆண்டு கோயம்புத்தூரில் உள்நாட்டு மீன்வளம் பற்றிய அகில இந்தியக் கருத்தரங்கு நடத்தத் திட்டமுள்ளது.

### மீன் பிடித் துறைமுகங்களும், தோணித் துறைகளும்.

57. கடல் மீன் வளர்ச்சியில் மாநிலக் கடலோரம் நெடுகிலும் மீன் பிடி துறைமுகங்கள் மற்றும் இறங்கு துறை வசதிகளை உள் ளடக்கிய ஒருங்கிணைந்த திட்டம் முக்கியமானதாகும். கடலூர்,

நாகைப்பட்டினம், மண்டபம், இராமேசுவரம் ஆகிய இடங்களில் இறங்கு துறை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கடலூரில் கட்டிட வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. துறைமுக பொறுப்பிலிருந்து படகுத் துறையை ஆழம் செய்வதற்கான தூர்வாரி எதிர்பார்க்கப்படுகிறது. மண்டபத்தில் கரையோர ரேவு ஒன்று கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. ஆனால், இங்கும் ஆழம் செய்யப்பட வேண்டியுள்ளது. புன்னைக்காயல், பழைய காயல், பழவேற்காடு முதலிய இடங்களில் ஆற்று முகத்துவாரங்களில் மணல் தூர்ந்து மீனவர்கள் தங்கள் மீன் பிடி கலங்களை எடுத்துச் செல்ல சிரமம் ஏற்படுகிறது. இம்மணல் ஆட்களைக் கொண்டு அப்போதைக்கப்போது அப்புறப்படுத்தப்பட்டாலும், தமிழ்நாட்டிலுள்ள இறங்குத் துறைகளில் தூர்வாரி அவசியமாகத் தேவைப்படுகிறது. இதை ஏற்றுக்கொண்ட அரசு கல்கத்தாவிலுள்ள கார்டன் ரீச் பணிமனை (Garden Reach) யிடமிருந்து ஓர் தூர்வாரி 16 லட்ச ரூபாயில் வாங்க ஒப்புதல் வழங்கியுள்ளது. கட்டப்பட்டு வரும் இத் தூர்வாரி 1974-ல் இத்துறையிடம் ஒப்படைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

58. எம். ஓ. டி. தூர்வாரிக்கொண்டு 9 அடி ஆழப்படுத்தப் பட்டுள்ள வளர்ச்சியடைந்து வரும் தூத்துக்குடி மீன் பிடி துறைமுகத்தில் இயந்திரப் படகுகள் தங்க வசதியுள்ளது. கட்டுமான வேலைகள் முடிந்துவிட்டன. அங்குள்ள பாறை வெடி வைத்து நீக்கப்பட்டால் ஒழிய (——) 13 அடி ஆழம் தோண்ட முடியாத நிலையில் உள்ளது. இப் பணியை மேற்கொள்ள துறைமுகப் பொறுப்பிடம் உள்ள தூர்வாரியைச் சீர்படுத்தி தூத்துக்குடியில் ஆழ்படுத்தும் பணியை மேற்கொள்ளும் துறைமுகத்தை ஆழப்படுத்துவதிலுள்ள செலவுகள் அதிகமாகி இத் துறைமுக அமைப்புக்கான ரூ. 466 லட்சம் செலவில் பொதுப் பணித் துறையால் திருத்தப்பட்ட மதிப்பீடுகள் இந்திய அரசின் ஒப்புதலை எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், தற்போதுள்ள ஆழத்தைப் பயன்படுத்தி சிறிய படகுகள் இத் துறைமுகத்தைப் பயன்படுத்தி வருகின்றன.

59. சென்னையில் மிகப் பெரிய மீன் பிடி துறைமுகமொன்றை அமைப்பதற்கான ரூ. 668 லட்சம் செலவிலான மதிப்பீடு இந்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 1974-75-ல் மத்திய திட்டத்தின்கீழ் இத் துறைமுகத்தைக் கட்டி முடிப்பதற்கான நடவடிக்கைகளை சென்னை துறைமுகப் பொறுப்பு எடுத்துக் கொண்டுள்ளது.

60. மீன் பிடி இயந்திரப்படகுகளின் எண்ணிக்கை அதிகமாகி வருவதாலும், மாநிலத்திலுள்ள எண்ணற்ற இறங்கு துறைகளில் அதிக அளவில் இவை நிறுத்தி வைக்கப்படுவதாலும், இவைகளுக்கான இறங்குத் துறை, தங்கு துறை வசதிகள் முக்கியத்துவம் பெற்றதுடன், இவைகளை அவசரமாகவும் செய்ய வேண்டியுள்ளது. இதன் அவசியத்தை உணர்ந்த அரசு இரு பிரிவுகளைக் கொண்ட துறைமுக விசாரணைக் குழு ஒன்று சென்னையிலும், மற்றொன்று மண்டபத்திலும் தமிழ்நாட [illegible] ங்கரை





யோரத்தில் இறங்கு துறை, தங்கு துறை வசதிகளுக்கேற்ற இடங் களைக் கண்டறிய வேண்டிய நடவடிக்கைகளை அமைத்திருக்கிறது. இக் குழுக்கள் இதுவரை ஏறக்குறைய 30 இடங்களை ஆய்வு செய்து, இது குறித்து பூர்வாங்க அறிக்கைகளை அனுப்பியுள்ளது. பெங்களூரிலுள்ள முன்னோடி ஆய்வின் ஒப்புதலைப் பெறுவதற் காக தங்கு துறை இறங்கு துறை இடங்களைத் தேர்ந்தெடுப்பதற்கு இவ்வறிக்கைகள் பொதுப் பணித் துறையினரின் ஆலோசனையுடன் பரிசீலிக்கப்படுகிறது.

61. இத் துறையின் வேண்டுகோளுக்கிணங்க, தஞ்சை மாவட் டத்திலுள்ள மல்லிப்பட்டணம், கோடிக்கரை, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சின்ன முட்டம் ஆகிய இடங்களில் இறங்கு துறை அமைப்பதின் தகுதியைப் பெங்களூரிலுள்ள முன்னோடி ஆய்வு விரிவாக ஆய்வு செய்து, பரிசீலனைச் செய்துள்ளது. இது குறித்த விரிவான திட்ட அறிக்கைகளும் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்வேலைகளை மத்திய திட்டத்தின் கீழ் மேற்கொள்ளுவதற்கு இந்திய அரசின் ஒப்புதலைப் பெறு வதற்குக் கோடிக்கரை, மல்லிப்பட்டினம் ஆகிய இடங்களுக்கான மாநில பொதுப் பணித் துறையின் மதிப்பீடுகளும், திட்டங் களும் அரசின் பரிசீலனையில் உள்ளன. சின்னமுட்டத்தைப் பொறுத்தமட்டில் திட்டங்கள் மதிப்பீடுகளில் சில திருத்தங்களை மேற்கொள்ளச் சொல்லியுள்ளதால் இது குறித்த மதிப்பீடுகள் பொதுப் பணித் துறையால் முடிக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளது.

62. இன்னும் சில திட்டங்களைச் சேர்த்து மத்திய அரசின் 100 சத வீத உதவி பெறுவதற்கு மத்திய ஆதரவுத் திட்டங்களை விரிவாக்க இந்திய அரசு எண்ணி வருகிறது. இதைப் பொறுத்த மட்டில், தங்கு துறை, இறங்கு துறை வசதிகளைத் தவிர ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்ட மத்திய ஆதரவுத் திட்டங்களின்கீழ் (1) வீடு கட்டுதல், (2) சாலை வசதி, (3) தண்ணீர் வசதி, (4) மீன் விளக்கம் மற்றும் பதன நிலையங்கள், (5) மாநில மீன் விதைப் பண்ணை அமைத்தல், மீன் வளர்ப்போர் அபிவிருத்தி நிறுவனம் ஆகியவை உள்ளடங்கும். எனினும், இத் திட்டம் குறித்து மத்திய அரசிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

### மாநில மீன்வள மேம்பாட்டுக் கழகம்.

63. மீனவர்களின் பொருளாதார மேம்பாட்டை உயர்த்து வதற்கு துவக்கம் முதற்கொண்டே பல திட்டங்களை தமிழ்நாடு மீன் துறை செயல்படுத்தி வருகிறது. படகுகளை இயந்திர மயமாக்கும், பதனம் மற்றும் உறையவைப்பு நிலையங்கள் தொழிற்பேட்டைகள், பணி பராமரிப்பு நிலையங்கள், பணி சோதனை ஆய்வுகள் ஆகிய எல்லாத் திட்டங்களும் கடல் மீன் வளப் பெருக்கத்தையே முக்கிய குறிக்கோளாகக் கொண் டுள்ளன. எனினும், இத் துறை மேற்கொள்ளும் பணிகளில் வணிக முறையிலும், பணி அடிப்படையிலுமுள்ள வேறுபாட்டை யுணர்ந்து செயல்படும் நேரம் ஏற்பட்டுள்ளதுடன் வணிக முறையி

லுள்ள செயல்களை தன்னுரிமைப் பெற்ற நிறுவனத்திடம் ஒப் படைத்து அதன் மூலம் வணிக மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை விரிவுபடுத்தி கடல் வள வாய்ப்புகளைப் பயன்படுத் திக்கொள்வதற்கான பெருந்திட்டங்கள். இவைகளைப் பதனம் செய்து உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் பயன் படுத்துவது குறித்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். இத்தகைய தன்னுரிமைப் பெற்ற கார்ப்பரேஷன் நிதி நிறுவனங்களிட மிருந்தும் நிதி வசதிகளைப் பெறலாம். இத்தகைய நோக்குடன் 'தமிழ்நாடு மீனவள மேம்பாட்டுக் கழகம்' அமைக்க கொள்கை யளவில் மாநில அரசு முடிவெடுத்துள்ளது. இக் கழகம் விரைவில் துவக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இக் கழகம் அமைப்புடன் மீன் துறையால் இதுவரை மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு இக் கார்ப்பரேஷனும் மீன் வள மேம்பாட்டிலும், நம் மாநில உணவு வள வாய்ப்புக்களைப் பெருக்குவதிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் மீன் துறையானது விரிவாக்க வேலைகள் ஆராய்ச்சி, மீனவ சமுதாய முன்னேற்றத்திற்கான சமூக பொருளாதார வேலைகள் மற்றும் மீன் வளப் பெருக்கத்திற்கான திட்டங்களைச் செயல்படுத்துவதில் தொடர்ந்து முக்கிய பங்கேற்று வரும்.

64. அண்மை கடல் மீன் வளத்தை அதிக அளவில் பயன் படுத்துவதைத் தவிர்ப்பதற்காக, மீனளக் கழகம், ஆழ்கடல் மீன் பிடிப்பு போன்றவற்றை மேம்படுத்துவதற்கான புதிய பகுதி களைப் பயன்படுத்தும் என்று நம்பப்படுகிறது. தற்பொழுது, நமது இயந்திரப் படகுகள், கட்டுமரம் போன்றவற்றைக் கொண்டு மீன் பிடிக்கப்படுகின்ற அண்மைப் பகுதிகளில் மீன்பிடி பணிகளில் ஈடுபட்டுள்ளன. இதனால், நாட்டுப் படகுச் சொந்தக்காரர் களுக்கும், இயந்திரப் படகுச் சொந்தக்காரர்களுக்கும் இடையே தேவையற்ற பகைமை ஏற்படுகிறது. அதோடல்லாமல், இதைவிட மிக முக்கியமானது என்னவென்றால், இதனால் அண்மை கடல் பகுதிகளிலேயே அதிக அளவில் மீன்பிடிக்கும் நிலை ஏற்படு கிறது.

65. கேரளாவில் சுமார் 1,000 கிலோ மீட்டர் கடற்கரைத் தொலைவில் சுமார் 2,800 இயந்திரப் படகுகள் மீன் பிடிக்கின்றன என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது கிட்டத்தட்ட தமிழ்நாட் டின் கடற்கரை நீளத்திற்குச் சமமாகும். உண்மையில் நம்மிடம், 1,400 இயந்திரப் படகுகள்தான் உள்ளன. ஆனால், அவற்றின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்துக் கொண்டு வருகிறது. கடற்கரை ஓரப் பகுதிகளில் மீன்பிடிக்கப் பயன்படுத்தப்படும் படகுகளின் எண்ணிக்கை அதிகரிப்பதை நாம் தவிர்க்க வேண்டும். தொடக்கத்தில் சில தொழிற்சாலை வகையைச் சேர்ந்த கப்பல் களைக் கொண்டாவது நாம் ஆழ்கடல் மீன் பிடிப்பில் அதிக அளவில் ஈடுபட வேண்டும். கன்னியாகுமரிக்கு அப்பால் உள்ள வாட்ஜ் கரை ( Wadge Bank ) போன்ற ஆழ்கடலில் மீன் செறிந்த, பகுதிகள் பெரும்பாலும் நம்மால் பயன்படுத்தப்



படாமலேயே உள்ளன. ஆழ்கடல் மீன்பிடி படகுகள் கண்டு பிடிக்கப்பட்டாலன்றி, எதிர்கால மீன் வளத்திற்கு பாதகமின்றி நாம் அதிக அளவில் மீன் பிடிக்க இயலாது. ஆழ்கடல் மீன் பிடிப்பை மேம்படுத்த மீனளக் கழகம் சிறந்த நடவடிக்கைகள் எடுக்கும் என்று நம்பப்படுகிறது.

## முடிவுரை.

66. மாநிலத் திட்டங்களுக்காக நான்காம் திட்டக் காலத்தில்
இருந்த ரூ. 1,009 லட்சம் முதலீட்டுக்கெதிராக ஐந்தாம் திட்ட
காலத்திற்கு ரூ. 1,880 லட்சம் முதலீடு குறிக்கோளாகக் கொள்ளப்
பட்டுள்ளது. தற்போதைய ஆண்டொன்றுக்கு 4·50 லட்சம் டன்
மீன் உற்பத்தியை 6·30 லட்சம் டன்னாக உயர்த்துதற்கு
ஐந்தாண்டுத் திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்துவதால்
இயலும். போதுமான வசதிகளைப் பெற்ற மேலும் வளர்ச்சிக்குத்
தேவையான வாய்ப்புக்களைப் பெற்றும், இம்மாநிலம் இந்நாட்டில்
மீன் உற்பத்தியிலும் , வேலை வாய்ப்பு வசதிகளிலும் மக்களுக்கு
புரதச்சத்துள்ள உணவு அதிகமாக அளிப்பதிலும் முக்கிய இடத்
தைப் பெறும். விஞ்ஞானமும், தொழில் நுட்ப அறிவு மீன் வள
வாய்ப்புகளை ஆய்வு செய்து பயன்படுத்துவதில் முக்கிய பங்கினை
ஏற்கும். உள்நாடு மற்றும் கழிமுக நீர்நிலைகளில் விஞ்ஞான
அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மீன்பிடி
தொழிலை வாழ்க்கையோடு ஒட்டிய தொழிலாக இல்லாமல் ஒரு
முன்னேறிய தொழிலாக்குவதற்கு நவீன முறைகள் மேற்கொள்
ளப்படும். இதன் மூலம் வேலைவாய்ப்பு பெருகுவதுடன் உணவுப்
பெருக்கமும் அதிகரிக்கும். மக்களின் நலனுக்காக தமிழ்நாடு
'மீனளப் புரட்சி'யை (BLUE REVOLUTION) உண்டாக்கும்.

## தமிழ்நாடு சட்டப் பேரவை.

### வெள்ளிக்கிழமை, 1974 மார்ச் 22.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை.

* 551 வினா—திரு. எம். முத்தையா :<br>
திரு. வை. பாலசுந்தரம் :<br>
திரு. ரா. ரா. முனுசாமி :<br>
திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பாஞ்சாலங்குறிச்சியிலுள்ள கட்டபொம்மன் கோட்டையை ஓர் நினைவுச் சின்னமாக கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஆம். பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மனுக்கு ரூ. 5 இலட்சம் செலவில் நினைவுச் சின்னமெழுப்ப அரசு ஆணையிட்டிருக்கிறது.

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவர் அவர்களே, வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்த கட்டபொம்மனுடைய வீரத்தையும் தியாகத்தையும் மதிக்கும் நம்முடைய அரசு, பாஞ்சாலங்குறிச்சியில் அமைக்கும் நினைவுச் சின்னத்தைப் போல. தமிழகத்தின் தலைநகராம் சென்னை மாநகரத்திலும் நினைவுச் சின்னம் அமைக்க முன்வருமா ?

[1974 மார்ச் 22

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அந்த மாவீரன் உலவிய இடமும் கால் பதிந்த இடமும் பாஞ்சாலங்குறிச்சி என்பதாலும், அதற்கு அருகாமையில்தான் அவன் தூக்கிலிடப்பட்டான் என்ற காரணத்தாலும், நெல்லைச் சீமையிலே அந்த நினைவுச் சின்னம் அமைவது மிகவும் பொருத்தம் உடையதாகும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, கட்டபொம்மன் காலத்தில் கட்டப்பட்ட அந்தக் கோட்டை அகழ்ந்தெடுக்கப்பட்டதே, அதிலே என்ன என்ன விவரங்கள் கிடைத்தன என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, கட்டபொம்மன் காலத்தில் கட்டப்பட்ட அந்தக் கோட்டை அவனுடைய மறைவுக்குப் பிறகு, ஊமைத்துரை காலத்திலும் பாதுகாக்கப்பட்டு, ஆனால், அன்னியருடைய நடவடிக்கை காரணமாக ஊமைத்துரையும் மாய்ந்த பிறகு, அந்தக் கோட்டை உழுது போடப்பட்டது அன்னியரால். அதற்குப்பிறகு, அந்தக் கோட்டை இருந்த தடமே தெரியாமல் மண் மேடிட்டிருந்தது. நம்முடைய ஆட்சிக் காலத்தில் அதை அகழ்ந்து பார்க்க வேண்டும் என்று ஆணையிடப்பட்டு, அது அகழ்ந்து பார்க்கப்பட்டது. அப்படி அகழ்ந்து ஆய்ந்ததில், அன்னியர்கள் பயன்படுத்திய இரும்பு பீரங்கிக் குண்டுகள், வண்ணம் பூசப்பட்ட சுதை பீங்கான்கள், கட்டபொம்மன் காலத்தில் பயன்படுத்தப்பட்ட தட்டுகள் இவைகளெல்லாம் கண்டுபிடிக்கப்பட்டன. அகழ்வாயின் பயனாக கட்டபொம்மனுடைய ஆலோசனை மாளிகை, திருமண மண்டபப் பகுதி, அந்தப்புரப் பகுதி, இன்னும் சில பகுதிகள் வெளிக்கொணரப்பட்டன. இவற்றின் அடித்தளங்கள் அனைத்தும் அகழ்வாராய்ச்சியிலே கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 33 ஏக்கரா பரப்புள்ள அந்த நிலம் அகழ்வாய்விலே கண்டுபிடிக்கப்பட்டது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, இந்த 33 ஏக்கரா நிலத்தில் தனியார்த் துறையிலிருந்து ஏதாவது நிலத்தை ஆர்ஜிதம் செய்ய வேண்டிய நிலைமை இருந்திருக்கிறதா? அப்படியென்றால், அதன் விவரம் என்ன ? அதன் செலவு என்ன ?



1974 மார்ச் 22]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தனியார் துறையிலிருந்து நிலம் எதுவும் ஆர்ஜிதம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அந்த 33 ஏக்கரா நிலத்தைச் சுற்றி வேலி போட்டுப் பாதுகாக்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்து, 53,000 ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. இவை போக எஞ்சியிருக்கும் நிலத்தை அங்கு ஏற்கனவே இருந்த ஏழை எளிய மக்களுக்குப் பிரித்து அளிப்பது என்ற முயற்சியும் மேற்கொள்ளப்பட்டு, இப்பொழுது 9 ஏக்கரா நிலம் கட்டபொம்மனுடைய இரண்டு வாரிசுகளுக்கு 4—1—1974 இல் கொடுக்கப்பட்டிருக்கிறது. கட்டபொம்மன் வாரிசுதாரர்கள் என்ற அளவில் இன்னும் 200 குடும்பத்தார்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நிலத்தைப் பிரித்துக் கொடுப்பதற்காக காட்டு நிலங்கள் விவசாய நிலங்களாக மாற்றி யமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கோட்டை கட்டுவது மாத்திரமல்லாமல், கட்டபொம்மன் வாரிசுகள் என்று அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் அனைவருக்கும் அரசாங்கம் பல நல்ல திட்டங்களை இப்பொழுது நிறைவேற்றி அவைகளையெல்லாம் அமல் நடத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டிய கட்டபொம்மனுடைய கோட்டையை நாம் புதுப்பித்து மற்றும் பல நல்ல திட்டங்களை நாம் நிறைவேற்றினாலும், இன்றைய தினத்தில்கூட எட்டப்பன் பரம்பரை இதைப்பற்றிக் குறை கூறுகிறார்களே, அது அரசுக்குத் தெரியுமா ? அப்படிக் குறை கூறுகிறவர்களுடைய வாயை மூட அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நல்லவைகளையும் கேட்டு, தீமைகளையும் கேட்டு, நல்லவைகளைச் செய்துகொண்டிருப்பதுதான் இந்த அரசினுடைய மரபு.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, கட்டபொம்மனுக்கு நினைவுச் சின்னம் எழுப்புவதற்கு ஐந்து லட்ச ரூபாய் அரசு செலவு செய்கிறது. அதே நேரத்தில், கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட புளியமரம் இன்னும் இருக்கிறதா? அப்படியானால், அதைப் பாதுகாத்து, அதை ஒரு நினைவுச் சின்னமாக அமைத்து, மக்களுக்குக் காட்டுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

[1974 மார்ச் 22

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அந்த மரம் இப்பொழுது இருப்பதாகத் தெரியவில்லை. அவர் தூக்கிலிடப்பட்ட இடத்தில் கட்டபொம்மன் சிலையொன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது, கட்டபொம்மன் வாரிசுக்கு அந்தப் பகுதியில் நிலம் ஜாரி செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். கட்டபொம்மன் வாரிசு யார் என்பதில் அவர்களுக்குள்ளேயே தகராறு இருப்பதாக எனக்குச் செய்திகள் வந்திருக்கின்றன. ஆகவே, கட்டபொம்மனின் உண்மையான வாரிசு யார் என்பதை விசாரணையின்மூலம் தெரிந்து கொள்ள இந்த அரசு முயற்சி எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இப்படியொரு பிரச்சினையை எழுப்பித்தான் முன்பிருந்த அரசு, கட்டபொம்மன் வாரிசுகளுக்கு எந்த உதவியும் செய்யாமல் போகக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்த அரசு அவைகளையெல்லாம் ஆராய்ந்து, வாரிசுகள் ஐந்து பேர் என்று தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் மானிய உதவி பெறத் தகுதியுள்ளவர்கள் என்று முடிவு செய்து, அவர்களுக்கு உதவி அளித்து வருகிறது. திரு. சுப்பிரமணிய கட்டபொம்மன் துரை (சூடாமணி துரையினுடைய மகன்), திரு. சைவவீர பாண்டியதுரை, திரு. சுப்பிரமணிய கட்டபொம்மு துரை, திரு. ஜகவீர பாண்டிய துரை, திரு. பின்னபொம்மு துரை ஆகிய ஐந்து பேருக்கு 11—1—1971 முதல் ரூ. 50 மாத ஊதியம் அளிக்கப்பட்டு வந்து, 15—8—1972 முதல் அது 75 ரூபாயாக உயர்த்திக் கொடுக்கப்பட்டு வருகிறது. இருநூறு குடும்பத்தார்கள் அவர்களுடைய வாரிசுதாரர்கள் என்று கருதப்படுகிறார்கள். அவர்களில் 66 விவசாயிகளுக்கு கறவை மாடுகள் வாங்க 66,000 ரூபாய் நிதி வழங்கப்பட்டிருக்கிறது. 41,000 ரூபாய் செலவில் பாறை பிளக்கும் கருவிகள் வாங்கும் பொறுப்பு ஊராட்சி மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டு, அந்தப் பகுதியில் நிலங்களை விவசாயத்திற்குத் தகுதியான நிலங்களாக ஆக்குவதற்கான அந்தக் காரியங்களையும் இந்த அரசு நிறைவேற்றி வருகிறது. ஒட்டப்பிடாரத்திற்கும் பாஞ்சாலங்குறிச்சிக்கும் இடையே ஒரு மைல் தொலைவிற்கு மின் விளக்கு வசதி வேண்டுமென்று அங்குள்ள மக்கள் கேட்டார்கள். அதற்கும் அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.



1974 மார்ச் 22]

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, may I know from the Hon. Chief Minister whether a correct history of Kattabomman has been written and published and if not, will the Hon. Chief Minister make arrangements for the same?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஏற்கெனவே கட்டபொம்மனுடைய சரித்திரம் வெளிவந்திருக்கிறது. சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் கட்டபொம்மன் சரித்திரத்தை எழுதி வெளியிட்டிருக்கிறார். இன்னும் விரிவான விதத்தில் கட்டபொம்மன் சரித்திரத்தை வெளியிடவேண்டுமா என்பதை வேண்டுமானால் அரசு பரிசீலிக்கும்.

**திரு. ஆ. பரந்தாமன்:** தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள கோட்டைகளைப் புதுப்பிக்கவேண்டுமானாலும், நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டுமானாலும், மத்திய அரசாங்கத்தினுடைய ஒப்புதல் பெறவேண்டியிருக்கிறதே. இந்த நினைவுச் சின்னம் எழுப்புவதற்கு மத்திய அரசாங்கத்தின் ஒப்புதலைப் பெறுவதில் ஏதாவது சங்கடம் ஏற்பட்டதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நல்ல வேளை, மத்திய அரசினுடைய தொல்பொருள் ஆய்வுத்துறையின்கீழ் இது அடங்கவில்லை. அந்தக் காரணத்தால் நாம் நல்ல காரியங்களை அங்கே செய்ய முடிகிறது.

**திரு. என். கே. பழனிசாமி:** தலைவர் அவர்களே, கட்டபொம்மனுடைய சரித்திரத்தைப் பற்றி இருவிதமான அபிப்பிராயங்கள் இருக்கின்றனவா? அப்படியானால் அதைப்பற்றி சர்க்கார் கருத்து என்ன? சரியான முறையில் சரித்திரம் எழுதப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்த மண்ணைக் காப்பதற்காகப் போராடிய ஒரு மாவீரனைப்பற்றி இரண்டு விதமான சரித்திரங்கள் இருந்தாலும், நல்லதை நாம் எடுத்துக்கொள்வதுதான் முறையாகும்.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** தலைவர் அவர்களே, வீரபாண்டிய கட்டபொம்மனுடைய நினைவுச் சின்னமாகக் கோட்டையைக் கட்டுவது மட்டும் அல்லாமல், ஒலி-ஒளி அமைப்பை அங்கே அமைக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஒலி-ஒளி அமைப்பு அமைக்கப்படும் நேரத்தில் அதை நாள்தோறும் ஏராளமான மக்கள் கண்டு களிக்கின்ற அளவு வசதிகள் வேண்டும். பாஞ்சாலங்குறிச்சி கிராமப் பகுதி. அதிகச் சாலைத் தொடர்பு இல்லாத பகுதி. அதிக அளவு மக்கள் செல்ல முடியாத பகுதி. ஆண்டுக்கொருமுறை கட்டபொம்மன் விழா நடக்கிற அந்த நேரத்தில் வேண்டுமானால், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை யோசிக்கலாம்.

திரு. க. உரொ. எட்மண்ட்: தமிழ்நாட்டில் வெள்ளையன் ஆதிக்கத்தை எதிர்த்து முதன் முதலில் போராடியது கட்டபொம்மன்தான் என்று சரித்திரத்தின் மூலம் ஆராயப் பட்டதா? பூலித்தேவன் அதற்கு முன்னாலேயே அந்தப் போராட்டத்தை நடத்தியதாக ஒரு சரித்திரத்தை சிலர் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே, அதைப்பற்றிய ஆராய்ச்சியை இந்த அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பூலித்தேவனைப்பற்றி அதிகமாகப் பேசியவர் அமைச்சர் திரு. ஆதித்தனார் அவர்கள். இந்த ஒரு விஷயத்திலாவது அவருடன் நண்பர் எட்மண்ட் அவர்கள் ஒத்துப்போவதற்கு நன்றி.

திரு. க. மு. இராசகோபால்: தலைவர் அவர்களே, வெள்ளையனை எதிர்த்துப் போராடிய வீரபாண்டிய கட்டபொம்மனுக்குச் சிலை எழுப்பப்பட்டிருக்கிறது. அந்தச் சிலைக்கு எதிராக, அவரைக் காட்டிக்கொடுத்தவர் யார் என்பதை மக்கள் பார்ப்பதற்காக, எட்டப்பனுக்கும் ஒரு சில ஆயிரம் ரூபாய் செலவில் கட்டபொம்மன் சிலைக்கு எதிராக வைக்க உத்தேசம் உண்டா? காரணம் காட்டி கொடுத்தவனை பல ஆண்டு காலத்திற்குப் பின் மக்கள் மறந்துவிடுவார்கள். அதனால் கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கட்டபொம்மனைக் காட்டிக் கொடுத்தவருக்குச் சிலை வைக்கவேண்டுமென்கிறார் காட்டிக் கொடுத்தவருக்கு சிலை வைத்து நாம் வழிபடத் தேவை இல்லை. (சிரிப்பு)



## கோயில்பட்டியில் தீயணைப்பு நிலையம்

*552 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

கோயில்பட்டியில் தீயணைக்கும் படை ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 18—1—1974 முதற் கொண்டு கோயில்பட்டியில் தீயணைப்பு நிலையம் ஒன்று இயங்கி வருகிறது.

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, புதிதாக கோயில்பட்டியிலே தீயணைப்பு நிலையம் ஆரம்பித்ததற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன். நெல்லையிலே இதைச் சேர்த்து 3 தீயணைப்பு நிலையங்கள்தான் இருக்கின்றன. ஆகவே, முக்கியமான தாலுகா தலைநகரங்களில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஏற்கனவே முன்னுரிமை வரிசைப் பட்டியலில்—தீயணைப்பு நிலையங்கள் அமைப்பதற்காகத் தயாரிக்கப்பட்டிருக்கிற அந்த வரிசைப் பட்டியலில்—கடைய நல்லூர், புளியாங்குடி, சங்கரன்கோவில், செங்கோட்டை, அம்பாசமுத்திரம், திருச்செந்தூர், மேலப்பாளையம், நாங்குநேரி—ஆகிய 8 இடங்கள் இடம் பெற்றிருக்கின்றன. அவைகளை வரிசைப்படி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோயில்பட்டியில் தீணைக்கும் படைபற்றிய கேள்வி இது. மற்றைய இடங்களைப் பற்றி நாளை, மானியக் கோரிக்கையில் பேசிக்கொள்ளலாம்.

## Central Schools

*553 Q.—Thiru N. Dennis: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) the total number of Central Schools functioning in this State as on the 30th April, 1973; and

(b) the details thereof district-wise?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ)

| | |
|---|---|
| சென்னை நகரில் | 7 |
| கோயம்புத்தூர் மாவட்டத்தில் | 2 |
| மதுரையில் | 1 |
| திருச்சிராப்பள்ளியில் | 2 |
| தென் ஆற்காடு மாவட்டத்தில் | 1 |
| நீலகிரி மாவட்டத்தில் | 1 |

ஆக மொத்தம் பதினான்கு மைய அரசுப் பள்ளிகள் தமிழ் நாட்டில் நடைபெற்று வருகின்றன.

**திரு. எல். கணேசன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசுப் பள்ளிகளில் இந்தி பயிற்சி மொழியாகவோ, அல்லது பாடமொழியாகவோ போதிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்தியும் ஆங்கிலமும் இருக்கவேண்டும். பயிற்சி மொழி இந்தியிலோ அல்லது ஆங்கிலத்திலோ இருக்க வேண்டுமென்ற கட்டாயம் இருக்கிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளியில் எந்த எந்த இடத்தில் இந்த மைய அரசுப் பள்ளி இருக்கிறது? என்ன என்ன பாடமுறை போதிக்கப்படுகிறது என்பதை அறியலாமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** கேந்திரிய வித்யாலயா ஆர்டினன்ஸ் எஸ்டேட்டிலே இப்பள்ளி ஒன்றிருக்கிறது. ஆர்.எஸ்.கே. ஹையர் செக்கண்டரி ஸ்கூல், கைலாசபுரத்திலே இருக்கிறது. அதிலே ஆங்கிலம் அல்லது இந்தி ஆகிய இரண்டு மொழிகளிலே பயிற்சி தரலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. தமிழகத்திலே இருக்கிற பள்ளிகளிலே ஆங்கிலம்தான் பயிற்சி மொழியாக இருக்கிறது. அதனுடைய துணைமொழியாக இந்தியைப் படிக்க வேண்டுமென்ற கட்டாயம் இருக்கிறது.

**திரு. எல். கணேசன் :** இந்தி பாடமொழியாகவோ பயிற்சி மொழியாகவோ இருக்கத் தேவையில்லை என்று தமிழக சட்டமன்றம் தீர்மானம் நிறைவேற்றியதற்குப் பின்னால், அதற்கு



எதிர்மாறாக மத்திய அரசு இந்தியை வைத்திருப்பது, மறைமுகமாக, தமிழகத்தில், தமிழ் மக்களுடைய விருப்பத்திற்கு மாறாக இந்தியை திணிப்பது ஆகாதா என்பதை அறிய விரும்புகிறேன். அவ்வாறு திணிப்பதைத் தடுப்பதற்கான முயற்சிகளில் தமிழக அரசு ஈடுபடுமா, ஈடுபட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்தப் பள்ளிகளுக்கும் தமிழக அரசுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை. அப்பள்ளிகள் நம்முடைய உதவியும் பெறுவது இல்லை. நம்முடைய அனுமதியும் அவர்களுக்குத் தேவையில்லை. அப்பள்ளிகளுடைய முக்கிய நோக்கம்—மத்திய அரசாங்கத்தின் சார்பாக பெரிய பெரிய தொழிற்சாலைகள், பணிமனைகள், அலுவலகங்கள் பல நிறுவப்பட்டிருக்கின்றன. அகில இந்தியா முழுவதும் சுற்றக்கூடிய வாய்ப்புள்ளவர்களுக்கும், மாற்றம் பெறக் கூடிய வாய்ப்புள்ளவர்களுக்கும், அவர்களுடைய பிள்ளைகள் மாற்றம் பெறக்கூடிய இடங்களில் பள்ளிகளில் சேர்க்கக்கூடிய வகையில், அமைய வேண்டும் என்பது.

எல்லா மாவட்டங்களிலும் இந்தப் பள்ளிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இங்கிருந்து படித்துப் போகிறவர்களுக்கு அதேபோன்று அமைக்கப்பட்டிருக்கிற வேறு பள்ளிகளில் சேர்வதற்கு வாய்ப்பிருக்கிறது என்ற காரணத்தினால், மைய அரசு அந்தப் பள்ளிகளை நடத்தி வருகிறது. அப்பள்ளியில் தமிழையும் வைத்து நடத்த வேண்டும் என்று நாம் சொல்லியிருக்கிறோம்.

ஆனால், மைய அரசு தமிழைக் கட்டாய பாடமாக ஆக்க இயலாது. குறிப்பிட்ட எண்ணிக்கையுடைய மாணவர்கள் தமிழைப் பயில முன்வருவார்களானால், பள்ளி முடிந்த பிறகு அதனைக் கற்றுத் தர வாய்ப்பு ஏற்படுத்தித் தருவோம் என்றும் அதற்கான செலவில் 50 சதவிகிதத்தினை மைய அரசு ஏற்றுக் கொள்ளுமென்றும், 50 சதவிகிதத்தினை மாநில அரசு ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும் நிபந்தனை விதித்திருக்கிறார்கள்.

**திரு. கே. என். குமாரசாமி :** நமது இந்திய நாடு ஒரே நாடு. பலமொழிகளையும் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகவே. நம்முடைய தமிழ் மாநிலத்திலே இருக்கக் கூடியவர்கள், வடக்கே போய் உத்தியோகம் பார்க்க வேண்டுமென்று சொன்னால், இந்தி அவசியமாக இருக்கிறது

இந்தியைக் கட்டாயமாக இல்லாவிட்டாலும் விருப்பப் பாடமாகவாவது படிக்க மற்ற எல்லா பள்ளிகளிலும் கற்றுக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** திட்டவட்டமாகவும் தெளிவாகவும் 1968-ம் ஆண்டு, ஜனவரி மாதம் 23-ம் தேதியன்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம். மும்மொழித் திட்டம் அல்லது இருமொழித் திட்டம் என்ற அளவுக்குக் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே, இரு மொழித் திட்டம்—வட்டார மொழி, அல்லது தாய் மொழி, ஆங்கிலம் இரண்டும் இடம் பெறும் என்று சொல்லியிருக்கிறோம். இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள், சிறுபான்மையோரைப் பொறுத்தவரையில், இந்தியைப் பயிற்சிமொழியாகக் கொள்ள தடை எதுவும் நாம் ஏற்படுத்தவில்லை. சென்னையிலே 2 பள்ளிகள் இந்தியைப் பயிற்சி மொழியாகக் கொண்டு நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தி வித்தியாலயா—இந்தி பிரச்சார சபை போன்றவர்கள், தனியாக அரசாங்க உதவி இல்லாமல், மத்திய அரசாங்க உதவி பெற்று நடத்தி வருகிறார்கள். அதை நாம் தடுக்கிற நிலை இல்லை. தமிழகத்தின் சார்பாக நடைபெறுகிற பள்ளிகளில் இரண்டு மொழிக் கொள்கையிலேதான் பாடங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கொள்கை சம்பந்தமான கேள்விகளை துணைக்கேள்வியிலே கேட்கக் கூடாது.

**திரு. க. சோணையா :** தமிழ் நாட்டிலே மத்திய அரசு அலுவலகங்களிலே வேலை செய்கிறவர்கள், வட மாநிலங்களுக்குச் செல்கிற காரணத்தால், அவர்களுடைய பிள்ளைகள் இந்தி கற்றுக் கொள்ளவேண்டுமென்ற எண்ணத்தோடு, மத்திய அரசு இங்கே பள்ளிகளை திறக்கிறதே. அதைப் போல, வடக்கே இருந்து தமிழ் நாட்டுக்கு உத்தியோகம் பார்க்க வருகிறவர்களுக்காக, வட மாநிலங்களில் தமிழிலே பாடம் சொல்லிக் கொடுக்கப்படுகிறதா? அப்படி இல்லாவிட்டால், தமிழில் பாடம் கற்றுக்கொடுக்க, மத்திய அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மாநில அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்த அரசு அப்படிப்பட்ட முயற்சிகளைச் செய்ய இயலாது. வேறு மொழியை பயிற்சி மொழியாகவும், பாட மொழியாகவும், துணை மொழியாகவும் ஆக்குகின்ற பொறுப்பு அந்த அந்த மாநிலங்களைச் சேர்ந்ததாகும். ஆங்கிலம் அல்லது இந்தி இருக்க வேண்டுமென்றுதான் கூறப்பட்டிருக்கிறது. பெரும்பாலான இடங்களிலே, பெரும் தொழிற்சாலைகள், பணிமனைகள் நடைபெறுகின்ற இடங்களில் ஆங்கிலத்தைத்தான் பயிற்சிமொழியாகக் கொண்டிருக்கிறார்கள். இங்குள்ள 14 பள்ளிகளிலும் ஆங்கிலம்தான் மீடியம் ஆப் இன்ஸ்டரக்ஷன் ஆக இருந்து வருகிறது.

### *Visual Education*

* 554 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to include Visual Education in the syllabus of the schools; and

(*b*) if so, the details of the same?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (ஆ) தேவையான இடங்களில் திரைப்படம் காட்டுதல் முதலிய ஒளிக் கல்வி முறைகளைக் கையாண்டு பாடம் புகட்ட ஏற்கனவே உள்ள பள்ளிப் பாடத் திட்டத்திலேயே வகை செய்யப்பட்டு உள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி :** தற்பொழுது டெலிவிஷன் முறை வரப்போவதால், விஷுவல் எஜுகேஷனையும் அதோடு இணைத்து எல்லா பள்ளிகளிலும் வைக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அந்த தொலைக் காட்சி வந்ததற்குப் பிறகுதான் அதுபற்றி நடவடிக்கை எடுக்கவேண்டிவரும். அது வந்ததற்குப் பிறகு பயன்படுத்துகிற அளவுக்கு பல ஆசிரியர்களுக்கு இப்பொழுதே பயிற்சி தருகிற அளவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுதே 35 எம்.எம். துண்டு திரைப்படங்கள் போடுகின்ற ப்ரொஜக்டர்களும் 16 எம்.எம். ஒலி, ஒளிபோடுகின்ற ப்ரொஜக்டர்களும் பல்வேறு இடங்களிலும் செய்து வருகிறோம். தொலைக்காட்சி வந்ததற்குப் பிறகுதான் இவைபற்றிய திட்டங்கள் தீட்ட வேண்டிவரும்.

**திரு. கே. கந்தசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மாணவர்களின் தரம் குறைந்திருக்கிறது என்ற நிலைமை உணர்ந்ததற்குப் பின்னால் இப்படிப்பட்ட திரைக்காட்சிகளின் மூலம், ஒழுக்கத்தையும், நாணயத்தையும், தேசப் பொதுமக்கள் சேவைக்கு மதிப்பளிக்கக்கூடிய நடத்தையைப் போதிக்கக்கூடிய படங்களைத் தேர்ந்தெடுத்து, அல்லது அரசின் சார்பாக உருவாக்கி, அவைகளைக் காண்பிக்க அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, சில உயர்நிலைப் பள்ளிகளிலே, இப்படிப்பட்ட புரஜக்டர்கள் எல்லாம் இருந்து வருகின்றன. அங்கே பள்ளி சம்பந்தமான பாடங்களைக் கற்பதற்கு, ஓரளவு தமிழகக் கல்வி இயக்கத்திலே சிலபல படங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. பள்ளி சம்பந்தமான படங்களை வெளிநாட்டுத் தூதரகங்கள் ஏராளமாக வைத்திருக்கிறார்கள். எந்த எந்த பள்ளி அவற்றைப் போட விரும்புகிறார்களோ, அவர்கள் கேட்டால், தூதரகங்கள் தரத் தயாராக இருக்கிறார்கள். பல பள்ளிகள் அவைகளைப் பெற்று மாணவர்களுக்குக் காட்டி, பயன்படுத்தி வருகிறார்கள்.

### *Houses for Tourists in Ootacamund*

* 555 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether there is any proposal to construct rented houses in Ootacamund for tourists of middle income groups; and

(b) if so, the details of the same?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) & (ஆ) உதகமண்டலத்தில் நடுத்தர வருமானத் தொகுதியைச் சேர்ந்த சுற்றுலா பயணிகளுக்காக வாடகை விடுகள் கட்டும் தனிப்பட்ட செயற்குறிப்பு ஏதும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் இல்லை. எனினும், உதகமண்டலத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சுற்றுலா மாளிகை ஒன்று உள்ளது. இதில் ரூ. 10.5 லட்சம் செலவில் 24 அறைகள் கொண்ட புதிய கட்டடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இக் கட்டடம் நடுத்தர வருமானத் தொகுதியைச் சேர்ந்தவர்களுக்கு ஏற்றதாகவும் பயனுடையதாகவும் உள்ளது.





**திரு. என். கே. பழனிசாமி:** சார், சீஸன் காலங்களிலே இப்பொழுது இருக்கக்கூடிய கட்டடங்கள் போதுமானதாக இல்லாததன் காரணத்தால் அதிகப்படியான வசதிகளைச் செய்து தரக்கூடிய முறையிலே வேறு ஒரு 100 அறைகள் கொண்ட கட்டடத்தைக் கட்டுவதற்கு அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இப்பொழுது பத்தரை லட்சம் ரூபாய் செலவிலே கட்டப்பட இருக்கிற கட்டடத்திலே ஏற்கனவே இருந்ததுபோக ஏறத்தாழ 192 படுக்கைகள் கொண்ட அறைகளாகக் கட்டப்படுகின்றன. மற்றபடி கட்டவேண்டுமென்றால் அதற்கான நிதி வசதியைப் பொறுத்துத்தான் மேற்கொள்ள வேண்டும். இப்பொழுது நாம் கட்ட இருக்கிற 10 லட்சம் ரூபாயில் அமைய இருக்கிற கட்டடமானது 193 படுக்கைகளைக் கொண்டதாக அமையும்.

**திரு. எம். தேவராசன்:** தலைவர் அவர்களே, உதகையிலே உள்ள "தமிழகத்திலே" சீஸன்காலங்களிலே எல்லா அறைகளிலுமே நிறையப் பேர்கள் வந்து தங்குகிறார்கள். அதிலே எம்.எல்.ஏ.-க்களுக்கு முன்னுரிமை தரப்படுவதில்லை. முன்பு பேரவைத் தலைவருடைய கட்டுப்பாட்டின்கீழ் அது இருந்தபோது அப்படிப்பட்ட நிலைமை இருந்தது. இப்பொழுது தலைமைச் செயலாளருடைய கட்டுப்பாட்டில் அது இருப்பதால் எம்.எல்.ஏ.-க்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுவதில்லை. ஆகவே பழையபடி பேரவைத் தலைவருடைய கட்டுப்பாட்டின்கீழ் அதைக் கொண்டு வந்து எம்.எல்.ஏ.-க்களுக்கு முன்னுரிமை கிடைக்கச்செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அரசாங்கத் துறையின் சார்பாக பொதுப் பணித் துறையினரால் கவனிக்கப்படுகின்ற ஓய்வகங்கள் தவிர மற்றவர்கள் வந்து தங்குவதற்கான ஓய்வகங்கள் வேறு இருக்கின்றன. பயணிகள் வந்து தங்குவதற்காக ஏற்பாடு செய்திருக்கின்ற இடத்திலே முன்னுரிமை கொடுத்தால் இங்கே உள்ளவர்கள் அங்கே போய் 10 நாட்கள், 15 நாட்கள் தங்கிவிடுகிற நிலைமை ஏற்படுமானால் வருகின்ற சுற்றுலாப் பயணிகள் அங்கே வந்து தங்க முடியாத நிலைமை வரும். தமிழகத்திலே தான் அப்படிப்பட்ட ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

[1974 மார்ச் 22

## குடியாத்தம் பகுதியில் காலரா.

*556 வினா—திரு. வை. பாலசுந்தரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973 ஆம் ஆண்டு ஜூலை–ஆகஸ்டு மாதங்களில் குடியாத்தம் பகுதியில் காலரா நோய் பரவியதா?

(இ) ஆம் எனில், அதைக் கட்டுப்படுத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) ஆம்.

(இ) காலரா நோயால் வாடியோர் என சந்தேகிக்கப்பட்டவர்களும், குடற்காய்ச்சல் நோயால் வாடியவர்களும் குடியாத்தம் அரசினர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டனர்.

தடுப்பு நடவடிக்கைகளுக்காக நகராட்சியால் சிறப்புப் பணியாளர்கள் அமர்த்தப்பட்டனர். அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையைச் சேர்ந்த நல்வாழ்வு பணியாளர்கள் பலரும் தடுப்பு நடவடிக்கைகளில் முழுமையாக ஈடுபடுத்தப்பட்டனர்.

நீரில் குளோரின் மருந்து கலக்கப்பட்டது. காலரா நோயுற்றவர்களுடன் இருந்தவர்களுக்கு காலராத் தடுப்பு ஊசிகள் குத்தப்பட்டன.

நலத்துறை இணை இயக்குநரும், துணை இயக்குநரும் நோயுற்ற மக்கள் வசித்த பகுதிகளைப் பார்வையிட்டு காலராத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்பார்வையிட்டனர்.

விரைந்து முழுமூச்சுடன் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகளின் பலனாக காலரா நோய் கட்டுப்படுத்தப்பட்டுவிட்டது.

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவர் அவர்களே, கடந்த சில ஆண்டுக்காலமாக இல்லாமல் கடந்த ஆண்டும் அதற்கு



1974 மார்ச் 22] [திரு. வை. பாலசுந்தரம்]

முன் ஆண்டும்தான் தமிழ்நாட்டிலே ஒரு சில சமயங்களிலே காலரா நோய் தலைகாட்ட ஆரம்பித்திருக்கிறது. அந்த நோயை அடியோடு கட்டுப்படுத்துவதற்குத் தனித் திட்டம் ஏதாவது கொண்டுவர அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, காலரா நோயைத் தடுப்பது என்பது நேரடியாக ஒரு தொத்துநோயைத் தடுக்கிற முயற்சியாக அமைவதல்ல. எல்லா மக்களுக்கும் பாது காக்கப்பட்ட குடிநீர் கிடைக்கச் செய்வதற்கான ஏற்பாடுகள் மெல்ல மெல்லப் பூர்த்தியடைகின்ற கட்டத்திலே அதைத் தடுக்க முயல்வது எளிதாகும். காலரா தலை காட்டாமல் இருப்பதற்காக எல்லாவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. தலை காட்டிவிட்டால் அதைப் போக்குவதற்காக ஆயிரக்கணக்கான ஊசிகள் போடப்பட்டு அந்த வட்டாரம் பாதுகாக்கப்படுகிறது. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஒன்றுக்கொன்று சங்கிலிபோன்று தொடர்புடையவை ஆகும்.

## குடிநீர் வழங்கு திட்டங்கள்.

*557. வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லித் துறை குடிநீர்த் திட்டம் இந்தாண்டு தொடங்க அரசாங்க பட்ஜெட்டில் பணம் ஒதுக்கப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இல்லை.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவர் அவர்களே, இந்த நெல்லித் துறைத் திட்டத்தின் மூலமாக—சிங்காநல்லூர் முனிசிபாலிடி, பல்லடம், சூலூர், சோமனூர் போன்ற இடங்களிலே தண்ணீர் கிடைக்காத காரணத்தினாலே—அந்தத் திட்டத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று பல வருடங்களாக வற்புறுத்தப்பட்டு அதை ஏற்றுக்கொண்ட அரசாங்கம் எதன் காரணமாக தாமதிக்கிறது, நிதியில்லையா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** [1974 மார்ச் 22 தலைவர் அவர்களே, சில திட்டங்கள் மிக விரிவாக, பரவலான பகுதிகளுக்குப் போடப் படுகிறபோது மிக நீண்டகாலம் ஆகும். குறிப்பிட்ட ஐந்து ஆண்டுகளுக்குள்ளாக அல்லது மூன்று ஆண்டுகளுக்குள்ளாக என்று திட்டம் போட்டால்தான் அது விரைவிலே மக்களுக்குப் பயன் அளிக்கக்கூடியதாக இருக்கும். மிக நீண்டகாலத் திட்ட மாக இருந்தால் கோவை நகர், சிங்காநல்லூர், பல்லடம் பேரூராட்சி, சோமனூர் பேரூராட்சி என்று தொடங்கி ஏறத்தாழ 13, 14 பகுதிகளை உள்ளடக்கி 14 கோடி ரூபாய் அளவிற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாகத் திட்டம் தயாரிக்கப்பட்டது, அது நிறைவேற்றப்படுகின்ற காலத்திலே 20, 22 கோடி ரூபாய் ஆகி விடும்.

அது மட்டுமல்ல, ஒரு ஆண்டிற்கு மெயின்டனன்ஸ் செய்வதற் காக 95 லட்சம் ரூபாய் ஆகும், அதுவும் வளரும்.

இதற்கிடையில் சிறுவாணித் திட்ட ஒப்பந்தம் வெற்றிகரமாக நிறைவேறுகின்ற நிலைமை ஏற்பட்டு இருப்பதால் அதைக்கொண்டு அந்தக் குறைகளைப் போக்கமுடியும், அந்தக் குறிக்கோளிலேதான் அரசு செயல்படுகிறது, காரணம் அதனுடைய மெயின்டனன்ஸ் செலவு 10 அல்லது 11 லட்சம் ரூபாய்தான் ஆகும்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவர் அவர்களே, இதற்கு முன்னாலே இந்த மன்றத்திலே பொதுப் பணித்துறை அமைச்சர் பதிலளிக்கும்போது நெல்லித் துறைத் திட்டம் சென்ட்ரல் வாட்டர் போர்டால் அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் இப்பொழுது சொல்வது சிறுவாணித் திட்டம் வந்துவிடும், ஆகவே, பிரச்னை தீர்ந்துவிடும் என்றார்கள். அது சரியல்ல. அந்தத் திட்டத்தினால் வடக்கே இருக்கின்ற பகுதி களுக்குப் பலன் கிடைக்காது. அதற்கு அந்தத் திட்டம்தான் போடப்படவேண்டும். பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் சென்ட்ரல் வாட்டர்போர்டு சாங்ஷன் செய்துவிட்டது என்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலே அந்தத் திட்டத் திற்கான சாமான்களை இறக்குமதி செய்ய முயற்சி செய்யப் போகிறார்களா? அந்த வேலையை இப்பொழுது தொடங்கி குறைந்தது 3 ஆண்டுக்காலத்திற்குள்ளாக நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுகின்றவகையிலே தொடக்க வேலையை ஆரம்பிக்க அரசு முன்வருமா?



1974 மார்ச் 22]

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, சென்ட்ரல் வாட்டர் போர்டு அல்லது கமிஷன் சொல்லிய கருத்து, ஒரு ஆற்றினுடைய நீரை வேறு பகுதிக்குப் பயன்படுத்தும்போது வேறு சிலருடைய மறுப்பு அல்லது அவர்களுடைய இடை யூறுகள் ஏற்படாமல் இருப்பதற்காகத்தான். ஒரு திட்டம் போடுகிறபோது அதனுடைய ஃபீஸிபிளிட்டி எந்த அளவிற்கு அது விரைவாக நிறைவேற்றப்படும் என்பதையெல்லாம் பொறுத்தது ஆகும். அந்த முறையிலே தமிழ்நாட்டிலே கோடிக் கணக்கான ரூபாய்களைப் பல்வேறு திட்டங்களில் செலவழிக்கின்ற வாய்ப்பும் இல்லை, அப்படியே நிதி கடன் கிடைக்கிற நிலைமை ஏற்பட்டாலும்கூட அதற்குத் தேவையான சாதனங்கள், தேவைப் படுகின்ற குழாய்கள் இவைகளையெல்லாம் உற்பத்திசெய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் தமிழ் நாட்டிலே இல்லை.

அது மட்டுமல்ல, மூலப்பொருட்களும், பட்டறை வைத்து அதை இயக்கவேண்டுமென்றால்கூட அதற்கான மின்சாரம் கிடைப் பதிலேகூட தடங்கல் இருக்கின்ற நிலைமை, உற்பத்தி செய்கிற ஆற்றல், தேவையான சாதனங்கள் பொருள்கள் இல்லாமை, தேவையான மூலதனம் இவையெல்லாவற்றையும் குறிப்பிட்ட காலத்திலே நாம் திரட்டி நிறைவேற்றுவது என்பது முடியாத காரியம். ஆகவே, ஒவ்வொரு திட்டமாகச் சாத்தியக்கூறுகள் இருக்கின்ற அடிப்படையிலே எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி 558.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** சார். . . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், நான் அடுத்த கேள்விக்குப் போய்விட்டேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** அமைச்சர் அவர்களுடைய பதில் 'வேக்' ஆக, 'ஜெனரலாக' இருக்கிறது. ஆகவே. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியம் வரும்பொழுது விவரமாகச் சொல்லுங்கள், இப்பொழுது என்ன கேட்டாலும் 'வேக்' ஆக, 'ஜெனரலாக' இருப்பதாகத்தான் தெரியும், வினா 558

[1974 மார்ச் 22

* 558—திரு. நா. வீராசாமி
திரு. கே. எ. வகாப் } மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

1972-73, 1973-74 ஆகிய ஆண்டுகளில், வடார்க்காடு மாவட்டத்தில், தமிழ்நாடு குடிநீர் வழங்கு-கழிவு நீரகற்று வாரியம் மேற்கொண்டுள்ள பணிகள் யாவை ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தமிழ் நாடு குடிநீர் வழங்கு—கழிவு நீரகற்று வாரியம், வட ஆர்க்காடு மாவட்டத்தில் 1972-73-லும் 1973-74-லும் மேற்கொண்டுள்ள பணிகளின்விவரம்—

1. ஆம்பூர் குடிநீர் வழங்கு திட்டம்
2. திருப்பத்தூர் குடிநீர் வழங்கு திட்டம்
3. வாணியம்பாடி குடிநீர் வழங்கு திட்டம்
4. மேல்விஷாரம் குடிநீர் வழங்கு திட்டம்
5. காவேரிபாக்கம் குடிநீர் வழங்கு திட்டம்
6. போளூர் குடிநீர் வழங்கு திட்டம்
7. குடியாத்தம் குடிநீர் வழங்கு திட்டம்
8. திருவண்ணுமலை குடிநீர் வழங்கு திட்டம்
9. வந்தவாசி குடிநீர் வழங்கு திட்டம்
10. சோளிங்கபுரம் குடிநீர் வழங்கு திட்டம்
11. அரக்கோணம் குடிநீர் வழங்கு திட்டம்
12. பள்ளிக்கொண்டான்பட்டி—சின்னகாங்கையனூர் குடிநீர் வழங்கு திட்டம்
13. நல்லம்பிள்ளைபேட்டை குடிநீர் வழங்கு திட்டம்
14. காட்பாடி பிற கிராமங்களுக்கான ஒருங்கிணைந்த குடிநீர் வழங்கு திட்டம்
15. திருவேத்திபுரம் குடிநீர் வழங்கு திட்டம்
16. பேரணும்பட்டு குடிநீர் வழங்கு திட்டம்



1974 மார்ச் 22]

(முற்பகல் 9-30)

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் படித்த பட்டியலில் ஆற்காடு நகர மன்றம் இல்லை, விளாப்பாக்கம் இல்லை, கலவை இல்லை, திமிரி இல்லை. 71-ஆம் ஆண்டே குடிநீர் வழங்கு வாரியத்தால் ஆய்வு செய்யப்பட்டு தொகையைக் கட்டச் சொன்னூர்கள். இரண்டாண்டுகளுக்கு மேல் ஆகிறது. இன்னும் குடி தண்ணீர் வரவில்லை. எனவே நகர மன்றமாக இருக்கின்ற ஆற்காடு போன்ற பெரிய நகரங்களிலாவது உடனடியாக இதை அமலாக்க வேண்டும். தவிரவும், நான் சொன்ன விளாப்பாக்கம், கலவை, திமிரி ஆகியவைகளையும் எடுத்துக்கொள்ள உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, ஏற்கனவே தொடங்கப்பட்ட திட்டங்கள் தவிர புதிதாகத் திட்டங்கள் தொடங்கப்பட வேண்டுமானுல் அதற்கான நிதி வசதி எந்த வகையிலே அமைகிறது என்பதைபற்றிப் பரிசீலிக்க வேண்டும். மத்திய அரசோ அல்லது ஆயுள் காப்பீட்டுக் கழகமோ தருகின்ற நிதி வசதியின் அடிப்படையில்தான் ஆற்காடு வரும், பக்கத்தில் திமிரி, கலவை வரும். இன்னும் சொல்ல வேண்டுமானுல், எவ்வளவு திட்டம் ஆகிறது என்ற விவரங்கள் இந்தக் கேள்வியில் சொல்ல வேண்டிய அவசியமில்லையாதலால் அதுபற்றிய விவரங்கள் இல்லை. தனியாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேள்வி கேட்டால் விவரம் தரப்படும்.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, இந்த ஆற்காடு, இராணிப்பேட்டையைத் தனித்தனியாகப் பிரித்து இரண்டு குடிநீர் திட்டங்களை ஏற்படுத்துகின்ற செயற்குறிப்பு அரசிடம் இருப்பதாக அறிகிறோம். அதைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மேல்விஷாரம், வந்தவாசி ஆகிய இடங்களுக்கு நல்ல குடிநீர் வசதி கொடுத்திருந்தும் அதை இன்னும் அமலாக்காததால் கஷ்டமாக இருக்கிறது. மேல்விஷாரத்தில் இன்னும் பூரணமாக அமல்படுத்த முடியாமல் பைலட் ஸ்கீம் அளவிலேயே இருக்கிறது. அதில் கட்டப்பட்டிருக்கும் குடி தண்ணீர் டேங்க்கூட சரியாகக் கட்டப்படாததால் பல குறைபாடுகள் இருப்பதாகத் தெரிகிறது. எனவே, அரசு உடனடியாக அதைப் பரிசீலித்துச் சீர்திருத்துவதற்கு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1974 மார்ச் 22

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, இதிலே, மேல்விஷாரத்தைப் பொறுத்தவரையில் அதனுடைய பரீட்சார்த்த திட்டம் என்ற முறையில் தண்ணீர் வழங்கப்படுவதே தவிர, தொடர்ந்து அதற்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

The pilot water supply has been effected from November 1972. The remaining works such as ground level service Reservoir II of headworks are in progress.

என்று தெரிவித்திருக்கிறார்கள், தொடர்ந்து அந்தப் பணி முறைப்படி நிறைவேற்றப்படும். அதற்குப் பிறகுதான் மேல்விஷாரத்திற்குத் தகுந்த பலன் கிடைக்கும். இராணிப்பேட்டை, ஆற்காடு பற்றி இதில் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

* 559 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை நகரத்திற்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வேலை பூர்த்தியாகிவிட்டதா?

(இ) ஆம் எனில், அதற்கு மொத்தம் எவ்வளவு ரூபாய் செலவாகியுள்ளது?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) இரயில்வே பாதையின் குறுக்கே ஒரு இடத்தில் வினியோகக் குழாய் பதிக்கும் பணி தவிர, குளித்தலை நகரத்திற்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வேலைகள் அனைத்தும் முடிந்துவிட்டன.

(இ) டிசம்பர் 1973 முடிய இத் திட்டத்திற்குச் செலவான ரூபாய் 10,36,514.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, வேலைகள் முடிந்ததும் இன்னும் பொது மக்களுக்குத் தண்ணீர் வசதி அளிக்கப்படவில்லை. அதற்கு என்ன காரணம்? அதைத் துரிதப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, ஒப்படைக்கப்பட்ட வேலைகள் முடிந்து நகரசபையில்கூட பெரும் பகுதி



1974 மார்ச் 22]

ஒப்படைக்கப்பட்டது. இரயில்வே பாதையின் குறுக்கே குழாய் பதிக்கப்பட வேண்டிய பணி முடிந்தவுடன் வழங்கப்படும் என்று கருதுகிறேன். ஏனென்றால் அதற்குக் கிடைக்க வேண்டிய அனுமதி கிடைத்திருக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை.

**தேயிலைத் தோட்டத்தில் பணிபுரியும் இலங்கை அகதிகள்.**

* 560 வினா—**திரு. கு. அ. பொம்மன்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தில் இலங்கை அகதிகளுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனைக் கவனிக்க மாவட்ட மட்டத்தில் குழு அமைக்கப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** இல்லை.

**திரு. எம். தேவராசன்:** தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் சேரன்பாடி என்ற பகுதியில் உள்ள இலங்கை அகதிகள் அல்லலுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு குடும்பத்தில் பல பேர் இருந்தாலும், ஒருவருக்குத்தான் அங்கே வேலை தருகிறார்கள். அதனால் பெரிய குடும்பமாக இருப்பவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள் எனவே, இதை அரசு கவனித்து வேலை செய்யக்கூடிய அனைவருக்கும் அங்கே வேலை வாங்கித் தர ஏற்பாடு செய்யுமா? அதே நேரத்தில் அங்குள்ள அதிகாரிகள், குறிப்பாகக் காட்டிலாக்கா அதிகாரிகள் தமிழர்களாக இருக்கும் அளவிற்கு அரசு பார்த்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** தலைவரவர்களே, ஏறத்தாழ 276 குடும்பங்கள் அங்கே குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, 68 அகதிகள் பணியாளர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தைச் சரியான முறையில் கவனித்துக்கொள்ளவும், அவர்களது நலன்களைப் பராமரித்துக் கொள்ளவும் ஒரு குழு ஏற்கனவே அரசாங்கத்தால் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு அவர்களது நலன்களையும் கவனித்து, அந்தத் திட்டத்தையும் முறையாகச் செயல்படுத்திச் செய்து வருகிறது. ஏதாவது குறையிருந்தால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. இ. ராமசாமி:** தலைவரவர்களே, சிலோன், பர்மா தமிழர்களுக்கு வால்பாறையில் 1,000 ஏக்கர்களில் தேயிலை அல்லது காப்பித் தோட்டம் அமைக்கலாம் என்று அறிவிக்கப்பட்டது. அது இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** தனிக் கேள்வி போடவும்.

## உவரியில் மீன் பதனிடும் தொழிற்சாலை

*** 561 வினா—திரு. வீ. கார்த்தீசன்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், உவரியில் கிடைக்கும் மீன்களைப் பயன்படுத்தும் வகையில் அங்கு ஒரு மீன் பதனிடும் சாலை நிறுவும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது நிறுவப்படும்?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அ) & (இ) இல்லை.

## போந்தவாக்கம்-மாதர்பாக்கம் சாலை.

*** 562 வினா—திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், போந்தவாக்கம் முதல் மாதர்பாக்கம் வரையுள்ள பேருந்துகள் செல்லும் சாலையைப் பெருவழித் துறையில் எடுத்து தார்ச்சாலை போடும் திட்டம் நிறைவேற்றப்படுவதில் ஏற்படும் தாமதத்திற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இச் சாலையைப் பெருவழித் துறைக்கு மாற்ற 1973-74 ஆம் ஆண்டுதான் மாவட்ட வளர்ச்சி மன்றம் குறைந்த முதன்மையுடன் பரிந்துரை செய்தது. அதனால் இதுவரை இச் சாலையை பெருவழித் துறைக்கு மாற்ற முடியவில்லை.

**திரு. கா. வேழவேந்தன்:** தலைவரவர்களே, ஆந்திர எல்லையில் இருக்கும் இந்த ஊராட்சி ஒன்றியச் சாலையில் நீண்டநாட்களாகப்



பேருந்துகள் போய்க்கொண்டிருக்கின்றன. அது மிகவும் கலனாக இருக்கிறது. எனவே, தயவு கூர்ந்து வருகிற ஆண்டிலேயாவது அதற்கு முன்னுரிமை அளித்து பெருவழித் துறையில் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, நிதி வசதிக்கேற்ப இந்த ஆண்டு பரிசீலிக்கப்படும்

## உத்திரராசாக்குட்டையில் ஏரி அமைப்பு

*** 563 வினா.—திரு. வீ. செல்லதுரை:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் வட்டம், டேனிஸ்பேட்டை ஊராட்சி, சின்ன வடகம்பட்டி, கணவாய்ப்புதூர், உத்திரராசாக்குட்டையில் ஏரி ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. வீ. செல்லதுரை:** பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பகுதியில் அந்த ஏரியைக் கட்டினால் கிட்டத்தட்ட 500 ஏக்கர்களுக்கு மேல் பாய்வதற்கு வசதியிருக்கிறது. அந்தப் பகுதி வறட்சியான பகுதி. ஆகவே, இனியாவது மறுபரிசீலனை செய்து அந்த ஏரியைக் கட்டுவதற்கு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, 500 ஏக்கர்கள் அல்ல, இந்த சின்னவடகம்பட்டி, உத்திரராசாக் குட்டையில், அந்தக் குட்டையினால் பலன் அடையக்கூடிய ஏக்கராக்கள் சுமார் 46.50 ஆகும். அது சிக்கனமான திட்டமாக இல்லாததால் கைவிடப்பட்டது. மறுபடியும் புனராலோசனை செய்ய வேண்டுமென்று வேறு மாற்று யோசனைகள் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த மேல் பொறியாளர் அதைப்பற்றி ஆராய்ந்து வருகிறார்.

## பெரிய ஆற்றின் குறுக்கே அணை

*564 விஞ.—திரு. வீ. செல்லதுரை: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

ஓமலூர் வட்டம், தேக்கம்பட்டி ஊராட்சிப் பகுதி, குடுவம் பட்டியில் ஓடிக்கொண்டிருக்கும் "பெரிய ஆற்றில்" அணை கட்டும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இல்லை.

## வந்தவாசியில் தெரு விளக்குகள்

*565 விஞ.—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி பேரூராட்சி எல்லையில் உள்ள குழல் விளக்குகள் ஓராண்டு காலமாக எரியாத காரணத்தால் குழல் விளக்குகளுக்குப் பதில் சாதாரண மின் விளக்குகளைப் போடும் படி பேரூராட்சி கோரியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (அ) ஆம்.

(இ) மின்வாரியம் தக்க நடவடிக்கை எடுத்து 350 குழல் விளக்குகளில் 225 குழல் விளக்குகள் எரிகின்றன. மீதி இருக்கும் குழல் விளக்குகளும் எரிவதற்காக, மின்வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. தற்போது பெரும்பாலான குழல் விளக்குகள் எரிந்து கொண்டிருப்பதனுல், இப்பொழுது சாதாரண விளக்கு களாக மாற்ற வேண்டிய அவசியம் இல்லை என வந்தவாசி பேரூராட்சி கூறியுள்ளது.

**திரு. கே. எ. வகாப்:** தலைவரவர்களே, 200-க்கும் அதிகமாக எரிவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறுகிறுர்கள். நான் அந்த வந்தவாசி பேரூராட்சித் தலைவனுக இருக்கிறேன். உண்மை யிலேயே அங்கே எரியும் விளக்குகள் 100-க்கும் குறைவுதான், அது



சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பல முறை அணுகி, நீங்கள் குழல் விளக்கு இல்லையென்ருலும் சாதாரண விளக்குகளை யாவது போட்டுக் கொடுங்கள் என்று கேட்டால், அதற்குப் புரொ விஷன் இல்லை என்று சொல்கிருர்கள். குழல் விளக்குகளும் ஸ்டாக் இல்லை, சோக் ஸ்டாக் இல்லை என்று சொல்கிருர்கள். எனவே, அந்தத் தகவல் பொருத்தமுடையதாக இருக்க முடியாது. ஆகவே, எல்லா விளக்குகளும் எரிவதற்கு உடனடியாக நடவ டிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, என் னிடத்தில் கிடைத்த தகவல்படி சொன்னேன். இப்பொழுது அங் கத்தினர் சொன்னதை நான் உடனுக்குடன் விசாரணை செய்யச் சொல்கிறேன். தற்போது நடைமுறையில் எரியாத விளக்கு களுக்கு ஒரு வருடத்தில் மூன்று முறைகள் பல்புகள் மின்வாரியம் எந்தவிதக் கட்டணமின்றி போடவேண்டும் என ஆணை உள்ளது. மின்வாரியம் மாற்று பல்புகள் போட தாமதமானுல் ஊராட்சிகள் பல்புகளை மொத்த விற்பனை விலையிலாவது அல்லது டைரக்ட்ரேட் ஜெனரல் ஆப் சப்ளைஸ் விலைவிகிதப் படியிலாவது வாங்கி மின்வாரியத்திடம் கொடுத்து வருடத்திற்கு சாதாரண பல்புகளை மூன்று முறைகள் மாற்றலாம். பிறகு அந்த பல்புகளின் ரசீதுகளை இணைத்து மின்வாரித்திடம் கொடுத்து அந்தப் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம். மூன்று முறைகளுக்கு மேலாக பல்புகள் மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அந்தந்த ஊராட்சிகளே, அந்த கட்டணத்தை ஏற்கவேண்டும். மின்வாரியம், எரியாத குழல் விளக்குகளுக்கு வருடத்திற்கு ஒரு முறை மட்டும் பல்புகள் மாற்றும். எனவே, உடனடியாக அந்த பேரூராட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு பேரவை உறுப்பினர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டால் அதைப்பற்றி நான் வேண்டிய ஏற்பாடு களைச் செய்கிறேன்.

**திரு. கே. எ. வகாப்:** தலைவரவர்களே, அப்படிப் பேரூராட்சியே வாங்கிப் போட்டுக் கொள்கிருேம் என்று சொன்னுலும், அதற்கும் புரொவிஷன் இல்லை என்று மின்சாரத் துறையில் சொல்லி விட்டார்கள். ஆகவே, அதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, 27-ம் தேதிக்குப் பிறகு அதை அறிவிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து வினா எண் 566.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். இங்கே ஒரு விவர அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அதில் யார் கேட்ட கேள்வி என்ற விவரமே இல்லை. ஆனால் இன்னொரு விவர அறிக்கையில், 'திரு. என். கிட்டப்பா, எம்.எல்.ஏ. விடுத்த சட்டமன்றப் பேரவையின் உடுக்குறியிட்ட வினா எண் 1992-க்கு அளித்த விடையைக் காண்க' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதைப்போல இரண்டு, மூன்று தடவைகள் கொடுத்திருக்கிறார்கள். இது நடைமுறைக்கு ஒத்ததாக இல்லை. எனவே, ஒரே முறையானபடி இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் பேரவைத் தலைவரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி எண் 5008 (ஆ)விற்கான விவரங்கள் என்று போடப்பட்டிருக்கிறது.

"Details for (B) for the starred question No. 5008" சில சமயங்களில் பெயர் போடப்பட்டிருக்கும், சில சமயங்களில் எண் போடப்பட்டிருக்கும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** இன்னொரு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு உறுப்பினர் பெயர் விவரமும் இருக்கிறது. எனது பெயர் அச்சிடப்படவில்லையே. அதைத்தான் சுட்டிக் காட்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டிப்பார்ட்மெண்ட் கொடுத்த விடை அப்படியே அச்சடித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இனி அப்படிப்பட்ட நிலை வராமல் பார்த்துக் கொள்ளப்படும்.

### திரிபுரா மாநில அதிகாரிகள் வருகை

* 566 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973 நவம்பர் மாதம் திரிபுரா மாநிலத்தைச் சேர்ந்த அதிகாரிகள் சிலர் நமது மாநிலத்தில் நடைபெறும் பஞ்சாயத்து ஆட்சி முறையைக் கண்டறிய வந்தனரா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) ஆம்.

(ஆ) விவரங்கள், @அவைமுன் தனியே வைக்கப்பட்டுள்ளன.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** இந்த திரிபுரா மாநில அதிகாரிகள் நம்முடைய ஊராட்சி முறை பற்றி என்ன கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்? எழுத்து மூலமாகத் தெரிவித்திருக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** அந்தக் குழுவினர் சென்னையிலிருந்து புறப்பட்டு செங்கல்பட்டு, இராமநாதபுரம், கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்து பல்வேறு பகுதிகளைப் பார்வையிட்டுப் பல்வேறு வேலைகள், நடைபெறுகிற திட்டங்களை எல்லாம் பார்வையிட்டு அவற்றுக்காக எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சிகளைப் பெரிதும் பாராட்டியுள்ளார்கள். பாராட்டியதோடு மட்டுமல்லாமல் இப்படிப்பட்ட இந்த நல்ல ஏற்பாடுகளுக்கு திரிபுரா அரசு அகர்தாலாவிலுள்ள ஊராட்சி இயக்குநர் தமிழக அரசுக்கு 5—12—1973-ம் நாளிட்ட தந்தி மூலம் நன்றி தெரிவித்துள்ளார்கள்.

### வீட்டு வசதி வாரிய அலுவலர்கள்

* 567 வினா.—திரு. என் கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மின்சார வாரிய அலுவலர்களுக்கு போனஸ் தொகை தரப்படுவதைப் போல வீட்டு வசதி வாரிய அலுவலர்களுக்கும் போனஸ் தொகை வழங்க அரசினரிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இல்லை.

### *Employees in Ribbon factories*

* 568 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) the total number of men and women employed in the Art Silk Ribbon Factories in Coimbatore district as on date ; and

(*b*) their wage structure?

---

@ 760-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :**

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் செயற்கைப்பட்டு சிப்பன் தொழிற்சாலைகள் இரண்டு உள்ளன. இவற்றில் 15 ஆண்களும், 15 பெண்களும் வேலையில் உள்ளனர்.

(இ) அவர்களது ஊதிய அமைப்பு பின்வருமாறு :—

| ஊதிய அமைப்பு. (1) | நாளொன்றுக்கு உயர்ந்தளவு வீதங்கள். (2) | நாளொன்றுக்கு குறைந்தளவு வீதங்கள். (3) |
|---|---|---|
| முறுக்கேற்றுதல் | ரூ. 2.62 | ரூ. 1·25 |
| சுற்றுதல் | ரூ. 2·00 | ரூ· 1·25 |
| சிட்டம் சுற்றுதல் | ரூ. 1·37 | ரூ. 1·75 |
| சிப்பம் செய்தல் | ரூ. 2·12 | ரூ· 2·12 |
| நெய்தல் | ரூ· 3·50 | ரூ· 3.00 |

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அவர்களுக்குக் கொடுக்கின்ற சம்பள விகிதம் எல்லாம் எப்போது நிர்ணயம் ஆயிற்று ? அதிகப் படி சம்பளம் வேண்டுமென்ற கோரிக்கை தந்தார்களா ? என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** இது இப்போது நிலவி வருகிற நிலவரம். அதிகச் சம்பளம் கேட்கவில்லை. இரண்டு இடங்களிலேதான்—சேலத்திலுள்ள குமாரபாளையத்திலும், கோவையிலுள்ள பவானியிலுந்தான்—இந்தத் தொழில்கள் நடக்கின்றன. வேறு எந்தவிதமான கோரிக்கையும் தற்போது இல்லை.

*Meeting of Transport Development Council*

* 569 Q.—THIRU A. M. RAJA :
THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether a meeting of the Transport Development Council was held at Delhi during February 1973; and

(b) if so, the important decisions taken at the meeting?



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :**

(அ) & (இ) பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. ஏ. எம். இராஜா :** இந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கும் பெரும்பாலான பரிந்துரைகள் 1971-ம் ஆண்டில் கூறப்பட்டது. மீண்டும் 1973-ம் ஆண்டிலும் பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது. ஏன் இவ்வளவு காலதாமதமாகிறது ? மத்திய அரசை வற்புறுத்தி மாநில அரசுகள் விரைவாக முடிவு எடுக்க முயற்சிகளை மேற் கொள்ளுமா ? 8, 10 ஆகிய விளக்கங்களில் டயர் போன்றவைகள் பற்றிய பரிந்துரைகள் பல ஆண்டுக் காலமாகத் தள்ளிப் போடப் பட்டு வருகிறது. இதற்கெல்லாம் என்ன காரணம் ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல் இதில் இருக்கும் முக்கிய மான சப்ஜெக்ட்ஸ் எல்லாம் 1971-லேயே பேசப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மத்திய அரசாங்கத்தைப் பொறுத்த வரை போக்குவரத்துத் துறை அமைச்சரகம் ஆலோசனைகள் வழங்குகின்ற வடிவமைப்பில்தான் போக்குவரத்து அமைச்சர் மாநாடு நடைபெறுகிறது. மத்திய சர்க்காரைச் சேர்ந்த மந்திரி தலைமை வகித்து மாநிலங்களைச் சேர்ந்த போக்குவரத்துத் துறை அமைச்சர் கலந்து கொண்டு முடிவெடுத்தாலும்கூட மத்திய அரசின் இதர இலாகாக்கள் காலதாமதப்படுத்துவதால் எல்லா நிர்வாகத்தையும் பாதிக்கின்றது.

**திரு. ஆ. பரந்தாமன் :** தமிழ்நாட்டில் இருக்கின்ற மோட்டார் வாகனங்கள் பெட்ரோலைப் பயன்படுத்துகின்றன. பெட்ரோல் மீது மத்திய அரசு ஒருவிதமான வரியை விதிக்கிறது. அந்த வரியிலிருந்து 70 சத விகிதத்தைப் பிரித்து மாநிலங்களுக்குத் தந்து கொண்டிருக்கிறது. 30 சத விகிதத்தை ரிசர்வாக வைத் திருக்கிறார்கள். அப்படிப் பிரித்து மாநிலங்களுக்குக் கொடுப் பதில் குறிப்பாக தமிழ்நாட்டுக்குப் பகிர்ந்து கொடுக்கின்ற அளவு குறைவாக இருந்து வருகிறது. இதை அமைச்சர் அவர்கள் அந்தக் கூட்டத்தில் வலியுறுத்துவதோடுகூட பெட்ரோலுக்கு விதிப்பது போல் டீசலுக்கும் விதிக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்துவார்களா ?

---

@ 763-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப் பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** போக்குவரத்துத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் இந்தக் கருத்து தமிழக அரசின் சார்பில் வலியுறுத்தப்பட்டு சாதாரணமாக மோட்டார் வாகனங்கள் பயன்படுத்துகிற எரிபொருளில் ஒரு சத விகிதத்தை சென்ட்ரல் ரோடு ஃபண்ட் என்று வைத்துக் கொள்ளுகிறார்கள். அந்த ரோடு பண்டில் இருந்து கிராமப் புற சாலைத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கம் செய்கிறார்கள். அதற்கு பெட்ரோலை மட்டுந்தான் கணக்கில் எடுத்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் இன்றைய தினம் டீசல் அதிகமாக வாகனங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. ஆகவே, டீசலையும் கணக்கில் எடுத்துக் கொண்டு அந்த சத விகிதத்தையும் இந்த நிதியில் சேர்த்துப் பணம் தரவேண்டுமென்று கேட்கிறோம். பெட்ரோலை மட்டும் எடுத்துக்கொள்வதால் போதிய பணம் சேருவதில்லை. டீசலையும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னதால் சென்ட்ரல் ரோடு ஃபண்டையே எடுத்து விடலாமா என்று மத்திய சர்க்கார் நிதியமைச்சரகம் ஆலோசனை செய்து வருகிறது. போக்குவரத்து ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் பேசிய விவரங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

The Council also took note of the suggestion of the Tamil Nadu representative for taking into account HSD for approvals to the Central Road Fund for road development, including rural roads keeping in view the fact that HSD consumption was increasing annually at the rate of 10 per cent, but did not contribute anything to the Central Road Fund at present.

**திரு. நா. வீராசாமி :** பேரவைமுன் வைக்கப்பட்டிருக்கும் விவர அறிக்கையில் மோட்டார் வண்டிகளின் பதிவுக் குறிகள் ஆங்கிலத்திலும் வட்டார மொழியிலும் இருக்க வேண்டுமென்று இந்திய அரசால் அமைக்கப்பட்ட செயற்குழு தெரிவித்திருந்த பரிவுரை ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். டில்லி, அரியானா, பஞ்சாப் போன்ற மாநிலங்களில் ஓடுகின்ற மோட்டார் வண்டிகளில் பதிவுக் குறிகள் இந்தியில் குறிப்பிட்டிருக்க வேண்டும். தமிழ்நாட்டில் எந்த ஒரு வண்டியிலும் வட்டார மொழியான தமிழில் எழுதப்படவில்லை. ஒரு முடிவு எடுத்தும் இன்னும் தமிழ்நாட்டில் அரசுத் துறையால் அமல்படுத்தவில்லை. இனிமேலாவது அமல்படுத்த அரசாங்கம் முன்வருமா ?







**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மோட்டார் வாகனங்களின் நம்பர் பிளேட்டுகளைப் பொறுத்தவரை ஆங்கிலத்திலும் வட்டார மொழியிலும் இருக்க வேண்டுமென்ற கருத்தை. அரசாங்கம் வலியுறுத்தியது. ஆனால் இந்தி பேசுகின்ற மாநிலங்களைப் பொறுத்த வரை நாங்கள் இந்தியில் மட்டுந்தான் வைத்துக் கொள்வோம் என்ற கருத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லியிருந்தாலும் அந்தக் குழுவில்—

The Ministers from Assam, Kerala, Megalaya, Mysore, Tamil Nadu, West Bengal were in favour of English and the regional script on the number plates and urged the acceptance of the report of the Working Group.

இது ஏற்கனவே அந்தக் குழுவில் ஒப்புக் கொண்டாலும் கூட முறைப்படுத்தும் பொறுப்பு, அதற்கான சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரும் பொறுப்பு மத்திய அரசாங்கத்திடம் இருக்கிறது. மத்திய அரசாங்கம் இந்திக்காரர்களிடத்தில் இருக்கிறது.

**திரு. பெ. சீனிவாசன் :** ஒரு மாநிலத்தில் வாங்குகின்ற டாக்ஸி பெர்மிட், லாரி பெர்மிட், பஸ் பெர்மிட் என்பது இந்திய பெர்மிட் அந்தஸ்தைப் பெறும் முயற்சியில் ஈடுபடுவார்களா? ஒவ்வொரு மாநிலத்திலும் ஸ்டேட் பெர்மிட் வாங்குவது என்றால் லாரி ஓனர்களுக்கும், டாக்சிகாரர்களுக்கும் சிரமமாக இருக்கிறது. அடுத்த கூட்டத்திலாவது அமைச்சர் அவர்கள் இதுபற்றி வற்புறுத்துவார்களா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பஸ்களைப் பொறுத்த வரை இந்தக் கருத்தை வற்புறுத்தவில்லை. லாரிகளைப் பொறுத்த வரை 4 ஸ்டேட் பெர்மிட், 5 ஸ்டேட் பெர்மிட் என்று ஸோனைப் பிரித்துக் கொண்டு மத்திய சர்க்கார் ஆங்காங்கு ஸோனல் பெர்மிட் சிஸ்டத்தைக் கொண்டு வந்தார்கள். நம்முடைய அரசாங்கத்தின் சார்பில் தெரிவித்த கருத்து—இந்தியா முழுவதற்கும் ஒரே பெர்மிட் எடுத்தால் போதும்; ஆனால் அதே நேரத்தில் எந்த மாநிலங்களுக்கிடையே லாரிகளை ஓட்டுவது என்றாலும் பெர்மிட்டை லாரி உரிமையாளர்களுக்குக் கொடுத்து விட வேண்டும்—

The whole of India has to be considered as a single zone with option to operate in four or five contiguous States

என்று நாம் வற்புறுத்தியிருக்கிறோம். அது இன்னும் இதர மாநிலங்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

[1974 மார்ச் 22

**திரு. சி. ஆறுமுகம் :** வட்டார மொழியும் ஆங்கிலமும் இருக்க வேண்டுமென்று மத்திய அரசிடமிருந்து ஆலோசனை வந்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மற்ற வட மாநிலங்களில் நம்பர் ப்ளேட்ஸ் அவர்கள் தாய்மொழியாகிய இந்தியில்தான் இருக்கிறது. அதற்குச் சட்டமும் இடம் கொடுக்கிறது. எனவே தமிழ் நாட்டில் அந்த நம்பர் ப்ளேட்ஸ் ஏன் தமிழிலேயே இருக்க வேண்டும் என்று செய்யக் கூடாது? ஏன் அந்த உணர்வு நமக்கு ஏற்படக் கூடாது? ஆகவே அப்படிச் செய்வதற்கு காலதாமதம் ஏற்படக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மோட்டார் வண்டிகளில் பயன்படுத்த வேண்டிய அந்த எழுத்துக்கள் டி.எம், டி.என். த.ந., த.செ., போன்ற எழுத்துக்கள் மத்திய அரசின் ஷெட்யூல்படி அவர்கள் தரவேண்டும். ஏன் காலதாமதமாகிறது என்றால், மத்திய அரசு செய்கிற வரையில் இந்த உணர்வுகளினால் பலன் இல்லை. அந்த உணர்வுகளின் உருவம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அமைச்சர் அவர்கள் சொல்கிற போது வட்டார மொழியிலும் ஆங்கிலத்திலும் நம்பர் ப்ளேட்ஸ் இருக்கலாம் என்று சொன்னார்கள். அதற்குத் தமிழக அரசு ஒத்துக் கொண்டதாகவும் சொன்னார்கள். அப்படி ஒத்துக் கொண்டும்கூட வட மாநிலங்களில் இந்தியில்தான் போடுகிறார்கள். இது மறைமுகமாக இந்தி ஆதிக்கம் ஆகாதா? அப்படியிருக்க நம் அரசு ஏன் இது குறித்து நோட் ஆப் டிஸென்ட் கொடுக்கவில்லை? தமிழகத்திற்கு வட மாநிலங்களிலிருந்து கார்கள் வரும்போது இந்தியில் மட்டும் நம்பர் ப்ளேட்ஸ் இருக்குமானால் ஏதாவது ஆக்ஸிடென்ட் ஏற்பட்டால் அந்த காரின் நம்பர் என்ன என்று போலீஸ்காரர்களுக்கும் தெரிவதில்லை; நமக்கும் தெரிவதில்லை. ஆகவே இந்தியில் மட்டும் நம்பர் ப்ளேட்ஸ் உள்ள கார்கள் அல்லது வண்டிகள் நம் மாநிலத்திற்கு வருவதைத் தடுப்பதி அல்லது அந்த போர்டை மாற்றி எழுத உத்தரவு போட மாநில சர்க்கார் தயாராயிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அந்தக் கருத்தின்படி நாம் தீவிரமான ஆட்சேபணையைத் தெரிவித்ததன் காரணத்தால்தான் அந்தக்



1974 மார்ச் 22]

குறிப்பு அவர்களுடைய மினிட்ஸில் இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் நல்லவேளையாக மற்ற மாநிலங்களில் உள்ளவர்களும் அந்தக் கருத்து வரவேற்கத்தக்கது என்று ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் ஒரு விபத்தில் ஈடு பட்டால் அல்லது வேறு காரணங்களால் இதர மாநிலங்களிலிருந்து வருகிற வண்டிகளின் நம்பரை அடையாளம் கண்டு கொண்டு வழக்குத் தொடர காவல் துறையினருக்கு வசதியாக இருக்க வேண்டும். ஆகவே எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்தியா முழுதும் செல்கிற வண்டிகளில் ஆங்கில எழுத்துக்களையும் சேர்த்துப் பயன்படுத்தாவிட்டால் அதை இந்த அரசு ஏற்றுக் கொள்ளாது என்ற கருத்து வற்புறுத்தப்பட்டது. இந்தி பேசுகிற மாநிலத்தில் உள்ளவர்கள் ஆங்கில எழுத்துக்களையும் பயன்படுத்த வேண்டுமென்ற வகையில் அந்தக் குழு தீர்மானித்தது.

**திரு. ஏ. எம். இராஜா :** அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு வருமான வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று ஒரு பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அதை மத்திய அரசு ஏற்றுக் கொண்டு அதற்குரிய விதிவிலக்கை அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குக் கொடுத்திருக்கிறார்களா?

தொழிலாளர்கள் கூட்டுச் சேர்ந்து நடத்துகிற போக்குவரத்துக் கழகங்களுக்காவது முதல் கட்டமாக, பரீட்சார்த்தமாக, இந்த வருமான வரியிலிருந்து விலக்களிக்க வேண்டும் என்பதைப் பற்றி அங்கு விவாதிக்கப்பட்டதா? அப்படியானால் அதன் முடிவு என்ன?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** நிதி ஆதாரங்கள் குறித்து எடுக்கப்பட்டிருக்கிற ஆலோசனைகள் அத்தனையும் தமிழக அரசால் வழங்கப்பட்டவை. மோட்டார் வாகனத் தொழிலை வளர்ப்பதன் மூலம் வேலைவாய்ப்பை அதிகரிக்க முடியும் என்ற கருத்தை நாம் தெரிவித்து அந்தப் போக்குவரத்துக் கழகங்களில் லாபம் வருமேயானால் அந்த லாபத்திற்கு வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்ற கருத்தை எல்லாப் போக்கு வரத்துத் துறை அமைச்சர்களும் நாம் சொன்னதை ஏற்றுக் கொண்டார்கள். அதேபோல் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கார்ப்ப ரேஷன் என்று மின்சாரத்திற்கு ரூரல் எலக்ட்ரிபிக்கேஷன்

[1974 மார்ச் 22

கார்ப்பரேஷன் என்றிருப்பதுபோல், ஒரு மோட்டார் டிரான்ஸ்போர்ட் பைனன்ஸ் கார்ப்பரேஷனை நிறுவி மாநில போக்குவரத்துப் பேருந்துகளுக்குக் கடன் வழங்கும்போது அதற்கு 4 சதவிகிதம் என்றும் விரைவுப் பேருந்துகளுக்குக் கடன் வழங்கும்போது 12 சதவிகிதம் என்றும் கடன் கொடுக்கலாம் 'differential system of interest rates' என்று சொல்வார்கள். ஆகவே, இதற்கு என்று ஒரு நிதி வாரியமும் வைத்து இந்தத் தொழில் மேம்பாடு அடையச் செய்யவேண்டுமென்று தமிழக அரசின் சார்பில் வற்புறுத்தப்பட்டு அதை எல்லாப் போக்குவரத்துத் துறை அமைச்சர்களும் வரவேற்றார்கள்.

மத்திய அரசு போக்குவரத்துத் துறையும் தீர்மானமாக அதை நிறைவேற்றி அனுப்பியது. ஏற்கனவே சொன்னதுபோல் மத்திய அரசு நிதி இலாக்கா அதை முடியாது என்று நிராகரித்துவிட்டது.

### மாநிலங்களுக்கிடையே பேருந்துப் பணி

***570 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதத்தில் நமது மாநிலத்தின் பிரதிநிதிகளுக்கும், கருநாடக மாநில பிரதிநிதிகளுக்கும் இடையில் பஸ் போக்குவரத்து வசதிகளை அதிகரிப்பது குறித்து பேச்சுவார்த்தை நடைபெற்றதா?

(இ) ஆம் எனில், அதில் எடுக்கப்பட்ட முடிவுகள் யாவை?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) ஆம்.

(இ) அதன் தொடர்பாகக் கருநாடக, தமிழ்நாடு மாநிலங்களுக்கிடையே போக்குவரத்து குறித்து ஒப்பந்தம் ஒன்று 1—5—1973 அன்று இரு அரசிதழ்களிலும் வெளியிடப்பட்டன. அந்த ஒப்பந்தத்தின் நகல் @ அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

---

@ 780-ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1974 மார்ச் 22]

**திரு. கா. வேழவேந்தன்:** தலைவர் அவர்களே, கருநாடக மாநிலத்தின் தலைநகரான பெங்களூரிலிருந்து வருகிற பேருந்துகள் நல்ல லாபத்தில் தமிழ்நாட்டிற்கு வந்து போய்க் கொண்டிருக்கின்றன. காரணம் நம் வழித்தடங்கள் நல்லமுறையில் அமைந்துள்ளன. ஆனால் பெங்களூரில் நம் மையப் பேருந்து நிலையத்திற்கு உரிய வசதிகள் செய்து கொடுக்கப்படாமலும் நிலையத்திற்கு வேண்டிய இடம் கூடச் சரியான முறையில் ஒதுக்கப்படாததால் நம் தொழிலாளர்களுக்கு இடர்ப்பாடுகள் ஏற்படுவதாகத் தெரிகிறது. ஆகவே இதைப் பரிசீலனை செய்து உரிய வசதிகளை கர்நாடக அரசு அங்கிருக்கிற தொழிலாளர்களுக்குச் செய்து தர நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** கருநாடக மாநிலத்தைப் பொறுத்தவரையில் நமக்கு எந்தவிதமான பிரச்னையும் இல்லை. தொழிலாளர்களுக்கு ஏதாவது வசதிகள் செயய வேண்டுமென்ற நிலை ஏற்படுமானால் அதை அரசுப் போக்குவரத்துத் துறை மேற்கொள்ளலாம்.

**திரு. எம். தேவராசன்:** இந்தப் பேச்சுவார்த்தைகளின் பயனாக உதகைக்கும் பெங்களூருக்கும் இடையே துரிதப் பேருந்துகள் விட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா? ஏற்கனவே அமைச்சர் அவர்கள் விரைவுப் பேருந்துகள் விடப்படும் என்று சொன்னார்கள். அது எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** 1972-ல் இந்த ஒப்பந்தம் கருநாடக அரசோடு நாம் செய்துகொண்டோம். ஆனால் இன்டர் ஸ்டேட் ரூட்டை அரசாங்கமே நடத்துவது என்பதைக் கொள்கை ரீதியாக இரு அரசுகளும் ஒப்புக்கொண்டன. இதைத் தனிப்பட்ட பஸ் முதலாளிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே அந்த ஒப்பந்தத்தை நாம் நோட்டிபிக்கேஷன் செய்தவுடனே அவர்கள் மைசூர் ஹைகோர்ட்டுக்குப் போய் ஸ்டே வாங்கிவிட்டார்கள். இப்போதுதான் அண்மையில் அந்த ஸ்டே ரத்து செய்யப்பட்டிருக்கிறது. இனிமேல்தான், மற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** பெங்களூரிலிருந்து அடிக்கடி டூரிஸ்ட் பஸ் என்ற பெயரால் நம் மாநிலத்திற்குப் பல வண்டிகள்

வந்து கொண்டிருக்கின்றன. இது சம்பந்தமாக இரு மாநிலங்களுக்குமிடையே ஏதாவது பேச்சுவார்த்தை ஏற்பட்டு ஏதாவது முடிவிற்கு வந்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இந்த டூரிஸ்ட் பஸ்கள் என்ற பெயரால் அரசாங்கப் பஸ் போக்குவரத்து நிறுவனங்களுக்குப் பேரிழப்பு ஏற்படுகிறது என்பதைத் தமிழ்நாடு மட்டுமல்ல கர்நாடக அரசும் ஒப்புக்கொண்டு இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்ற அடிப்படையில் இரு மாநிலங்களுக்குமிடையே ஓடுகிற பேருந்துகள் அரசாங்கப் பேருந்துகளாக அமைய வேண்டும் என்பதைக் கொள்கை ரீதியில் இரண்டு மாநிலங்கள் மட்டுமல்ல தென்னகத்தைப் பொறுத்த வரையில் நான்கு மாநில போக்குவரத்துத் துறை அமைச்சர்களும் கொள்கை அளவில் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

THIRU B. VENKATASWAMI : Even after the agreement, the people in Hosur are finding it difficult to go to Bangalore and other places for various purposes. May I know from the Hon. Minister for Transport whether he would see that the buses from Hosur to Bangalore, Hosur to Royakota, Hosur to Denkanikota and Hosur to Krishnagiri are increased? I understand that the people are suffering a lot because of scarcity of buses from Hosur?

THE HON. THIRU S. RAMACHANDRAN : The difficulty is not the scarcity of buses. We wanted to increase the number of trips to Bangalore. The problem is the whole agreement is pending before the High Court. Some private operators have gone to the Court for stay. Very recently information has been received that the stay has been vacated by the High Court of Karnataka and action will be taken shortly.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



## நடைமுறைக் கேள்விகள்

### அண்ணா தி. மு. க. தலைவர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் பேரவை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாதது குறித்து.

(முற்பகல் 10.00)

**திரு. நா. வீராசாமி :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். தலைவரவர்களே, நேற்றையதினம் இந்த மன்றத்தில் தாழ்த்தப்பட்டோர் மானியத்தைப் பற்றி விவாதம் நடைபெற்றது. நேற்று தான் ராஜ்ய சபைக்குத் தேர்தல் நடந்தது. அதந்தத் தேர்தலில் பொறுப்புள்ள அண்ணா தி.மு.க. தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஓட்டுப் போட்டார்கள் என்று பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. அப்படி ஓட்டுப் போடுவதில் அக்கறை காட்டியவர், இந்த மன்றத்தில் தாழ்த்தப்பட்டோர் மானிய விவாதத்தில் பங்கு கொள்ளாமல் அப்படியே போய் விட்டது முறை தானா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதிலே எந்த விதமான பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை.

DR. H. V. HANDE : Sir, I am on a point of order. May I know whether the Hon. Speaker is in order in coming to a decision in this House after allowing certain points of order to be raised and then without giving proper reasons as to why a Member is allowed to raise a point of order. For instance, the Hon. Member, Thiru Veeraswamy has not participated at all in the Harijan Demand . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களுடைய பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்று சொல்லுங்கள்.

DR. H. V. HANDE : Sir, the whole point is that on behalf of A.D.M.K. normally one Member participates. Yesterday two Members participated on behalf of A.D.M.K. In spite of that unnecessarily the name of our Leader has been dragged in. I can also say that some other Member has not participated and that would be casting aspersion on that particular Member. In this case, it is done with the deliberate and mischievous intention at damaging our Party. Will you allow such things? If you allow such things, we will be compelled to take strong exception to it and we will have to do something. The hon. Member says something and goes scot-free and gets away with it and you have allowed him to say what he wants to say . . . .

**அண்ணா தி.மு.க. தலைவர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் பேரவை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாதது குறித்து.**

*[1974 மார்ச் 22*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் ஹாண்டே, நீங்கள் இவ்வளவு நேரம் பேசினீர்கள். இவ்வளவு நேரம் பேசிய பிறகு தான் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று சொல்ல முடியும். திரு. வீராசாமி எழுந்த உடனே உட்கார் என்று சொல்ல வேண்டுமா ?

**திரு. நா. வீராசாமி :** 'மிஸ்சிவஸ்' என்று கூறியிருக்கிறார்கள். அதை நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் உட்காருங்கள்.

DR. H. V. HANDE : Sir, I can also say the hon. Member, Thiru Veeraswamy, is not at all bothered about the Harijan Demand. That is not the point, and that is absolutely meaningless. On behalf of our Party we have argued . . .

**திரு. பெ. சீனிவாசன் :** நான் ஒரு உரிமை பிரச்னை எழுப்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் இரண்டு பேரும் உட்காருங்கள். நான் டாக்டர் ஹாண்டே அவர்களின் பாயின்ட் ஆப் ஆர்டருக்கு முடிவு தெரிவித்து விடுகிறேன். இப்படி ஒருவருக்கொருவர் குற்றம் சாட்டி பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவது முறையல்ல. நேற்றைக்குப் பின்தங்கியோர் நலத் துறை மானியத்தின் மீது விவாதம் நடந்து கொண்டிருந்தபோது, அந்தத் துறை அமைச்சர் இல்லை என்று பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினார்கள். அந்த நேரத்திலேயே சொன்னேன். அதற்குப் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப முடியாது என்று சொன்னேன். (குறுக்கீடு) அப்படிப்பட்ட கருத்து இந்த மன்றத்திலே எழுப்பப் பட்டது. அதிலே எந்த விதமான பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை என்று சொன்னேன். இப்போது திரு. வீராசாமி எழுப்பிய உடனேயும் எந்தவிதமான பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை என்று சொன்னேன்.

**திரு. பெ. சீனிவாசன் :** திரு. வீராசாமி எழுப்பியது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று தீர்ப்புச் சொன்னீர்கள். ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பியுள்ள விஷயம் எங்கள் கட்சித் தலைவரை அவமானப்படுத்துவதாக இருக்கிறது. எங்கள் கட்சித் தலைவரைப்பற்றித் தவறான



கருத்தை உருவாக்கும் முறையில் அந்த பாயின்ட் ஆப் ஆர்டர் இருக்கிறது. எனவே, அதைச் சபை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) இப்போது நான் கேட்கிறேன், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இப்போது சபையில் இல்லை, அப்படியில்லை என்றால் அது பெரிய குற்றமா, பெரிய குற்றமா என்று கேட்கிறேன்.

**திரு. நா. வீராசாமி :** முதலமைச்சர் அவர்கள் வந்து விட்டுத் தான் போனார்கள்.

**திரு. பெ. சீனிவாசன் :** இப்போது இல்லை, அது பெரிய குற்றமா ?

**திரு. சி. ஆறுமுகம் :** தலைவரவர்களே, நேற்று காலையில் பிற்பட்டோர் நலத் துறை மானியம் விவாதம் நடந்து கொண்டிருந்தபோது, அமைச்சர் அவர்கள் சபையில் இருக்க வேண்டுமென்று கேட்டார்கள். அதற்கு மறுப்புத் தெரிவிக்கத் தேவையில்லை. ஆனால் அதே நேரத்தில் கட்சிக் கண்ணோட்டத்தோடு, வாக்களிக்கச் சென்றிருந்த நேரத்தில், சம்பந்தப்பட்ட அமைச்சர் இல்லை, இந்த மானியத்தின் மீது நடக்கும் விவாதத்தைக் கூர்ந்து கவனிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு அவையில் எழுந்தது. ஆனால் ஒரு கட்சித் தலைவர் அந்தச் சமூகத்திற்காக இந்த அவையில் அவர்களுக்கு இருக்கிற குறைகளை எடுத்து வாதாடி, ஆட்சியிலிருந்து பெற்றுக் கொடுப்பதற்குத் தவறி விட்டார், ஓட்டு மட்டும் போட்டு விட்டுப் போய் விட்டார், அது எந்த வகையில் நியாயம் என்பதை அந்தக் கட்சி உறுப்பினர்கள் தெரிவிக்க வேண்டும்.

(பல உறுப்பினர்கள் எழுந்தனர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, முதலில் மாண்புமிகு தலைவர், பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப வந்த நேரத்தில், பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்க வேண்டாம் என்று சொன்னபோது என்ன சொல்லப்பட்டது, கேட்டுக் கொண்டு தீர்ப்பு அளிக்கவேண்டுமென்று பல உறுப்பினர்கள் கூறினார்கள். அவையில் இருக்க வேண்டும், பேச வேண்டுமென்று எந்த உறுப்பினரையும், யாரும் கட்டுப்படுத்த முடியாது. இருந்து தான்

[1974 மார்ச் 22

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

தீர வேண்டுமென்று சொல்ல முடியாது. அவையில் எல்லா அமைச்சர்களும் இருக்க வேண்டுமென்று அன்றொருநாள் ஒழுங்குப் பிரச்னை எழுப்பப்பட்டபோது, மாண்புமிகு தலைவர் குறிப்பிட்டு இருக்கிறார்கள். குறிப்பிட்ட மானியக் கோரிக்கை மீது விவாதம் நடக்கிறபோது அதற்குப் பொருத்தமான அமைச்சர் இருக்க வேண்டும். மற்ற அமைச்சர்கள் எல்லாம் இருந்தே தீரவேண்டு மென்று சொல்ல முடியாது. ஆனால் இங்கே என்ன நடக்கிறது என்று கவனித்துக் கொள்கிற வகையில் அவர்கள் அறையில் ஒ பெருக்கிப் பெட்டி வைக்கப்பட்டு இருக்கிறது. அதன் வாயிலா அவர்கள் அறிந்து கொள்ள முடியும் என்று சொன்னீர்கள்.

அன்று திமுக. தலைவர் வந்து இருக்க வேண்டும், பேசியிருக் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்க கூறினார்கள். அப்படி யாரையும் வற்புறுத்திச் சொல்ல முடியாது யாரும் வந்து தீரவேண்டுமென்று சொல்ல முடியாது 60 நாட்களுக்கு ஒரு நாள் வந்து கையெழுத்துப் போட்டு விட்டுப் போனாலே சட்டப்படி செல்லும் என்ற அளவுக்கு இருக்கிறது ஆகவே, இந்தப் பிரச்னையை மேலும் கிளப்ப வேண்டாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** தலைவரவர்களே, நம்முடைய அவை முன்னவர் சொன்னது போல் மன்றத்திலே இருக்கிற எந்த உறுப்பினரும் 60 நாளைக்கு ஒரு தடவை வந்து கையெழுத்துப் போட்டுவிட்டுச் சென்றாலே போதும் என்று விதி இருக்கிறது ஒரு உறுப்பினர் காலை 9 மணிக்கு வந்து கையெழுத்துப் போட்டு விட்டு வெளியே சென்றுவிட்டால் கூட அவர் காலை 9 மணியிலிருந்து 1½ மணி வரை இங்கே இருந்தார் என்று தான் கருத வேண்டும்

The presumption is that he has attended the Assembly the whol day.

அப்படியிருக்கும்போது இதைப் பெரிய பிரச்னையாகப் பேசுவது சரியா? எங்கள் கட்சித் தலைவர் அரிசன நல மான யத்தின் விவாதத்தில் கலந்து கொள்ளவில்லை என்று வெளியே வேண்டுமானால் அவர்கள் விளம்பரம் செய்து பார்க்கட்டும். கவலை



1974 மார்ச் 22]

[திரு. க. உரொ. எட்மண்ட்]

யில்லை. நடந்து முடிந்த கோவை, பாண்டிச்சேரி தேர்தலிலும் சொன்னார்கள். 'சட்டமன்றத்திற்கு வராதவர்கள்' என்று எல்லாம் சொன்னார்கள். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது வேண்டாம். உங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்பதை மட்டும் சொல்லுங்கள். வெளியே எந்தெந்தத் தேர்தலில் என்னென்ன பேசினார்கள் என்பதைப் பற்றிச் சொல்ல வேண்டாம்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** அமைச்சர் இருக்க வேண்டியது அவசியம். எதிர்க்கட்சியில் இருப்பவர்கள், ஆளும் கட்சியில் இருப்பவர்கள், பல கருத்துக்களைச் சொல்வார்கள், அரசாங்கத்தை இடித்துக் கூறுவார்கள், ஆலோசனை சொல்லுவார்கள். அதற்காக அமைச்சர் இருக்கையில் இருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்பதைப் பற்றிச் சொல்லுங்கள்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** அவர்கள் மானியக் கோரிக்கை விவாதத்திலே கலந்து கொள்ளவில்லை என்று சொன்னார்கள். இங்கே இருக்கும் 233 உறுப்பினர்களுக்கும் பேச வாய்ப்பு இருக்கிறதா? ஏதோ ஒரு 15 பேர் பேசுவதற்கு இருப்பார்கள். மற்றவர்கள் வெளியே இருக்கலாம். இங்கே வந்து கலந்து கொள்ளவில்லை என்று கேட்பது முறைதானா என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முன்பு சொன்னார்கள்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** சட்ட மன்றத்திற்கு வாராமல் கையெழுத்துப் போட்டு விட்டுப் போகலாமா?

THIRU G. R. EDMUND : It is the privilege of an hon. Member. How can you compel him to attend the House?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் முன்பே ஒரு முறை சொல்லியிருக்கிறேன். (திரு. வி. கிருஷ்ணமூர்த்தி எழுந்திருந்தார்)

**திரு. க. உரொ. எட்மண்ட்:** உங்கள் அனுமதியில்லாமலே அவர் பேச ஆரம்பிக்கிறார். . .

(மற்றும் சில உறுப்பினர்கள் எழுந்திருந்தார்கள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் இப்பொழுது யாரையும் அனுமதிக்கவில்லை. மாண்புமிகு அவை முன்னவர் சொன்னது போல எந்த உறுப்பினரும் சபைக்கு வந்துதான் தீரவேண்டும் என்று வற்புறுத்துவதற்கு இந்த மன்றத்தில் விதி இல்லை. ஆகவே எந்த ஒரு உறுப்பினரும் வந்தாரா, வரவில்லையா என்றெல்லாம் எழுப்புவது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்ற தீர்ப்பை முதலிலேயே சொல்லிவிட்டேன்.

திரு. சீனிவாசன் அவர்கள் இதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு ஒன்று சொல்லிக் கொள்கிறேன். ஏற்கனவே ஒரு மானிய விவாதத்தின் போது இந்தப் பிரச்னை எழுப்பப்பட்டு, எந்த அமைச்சரும் இல்லை என்ற பிரச்னை எழுப்பப்பட்டபொழுது அதிலே எந்தவிதமான பாயின்டு ஆப் ஆர்டரும் இல்லை என்ற அளவோடு தீர்ப்பு அளிக்கப்பட்டு, அது நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீக்கப்படவில்லை.

அதே மாதிரி நேற்று அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு சிறிது நேரம் வாக்களிக்கச் சென்றபொழுது, அவர்கள் சபையில் இல்லை என்ற ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பப்பட்டது. அதுவும் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று தீர்ப்பு அளிக்கப்பட்டு அவை நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீக்கப் படவில்லை.

இன்று திரு. வீராசாமி அவர்கள் எழுப்பியதும் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று தீர்ப்பளித்து அந்த அளவோடு இதை முடித்துக் கொள்கிறேன்.

### 3. 1974-75 ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு

#### (அ) நிதிக் கோரிக்கை எண் 34—உணவுப் பொருள் வழங்கல்

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.





"நிதிக் கோரிக்கை எண் 34—உணவுப் பொருள் வழங்கல் * என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,18,89,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கவேண்டும்".

**திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி:** தலைவர் அவர்களே, கொள்கைபற்றி விவாதிக்க

'நிதிக்கோரிக்கை எண் 34—உணவுப் பொருள் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,18,89,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, to discuss policy, I move :— "That the allotment of Rs. 2,18,89,800 under Demand No. 34—Cifil Supplies be reduced by Rs. 100."

THIRU M. A. LATHEEF: Sir, to discuss the need to ensure judicious and equitable distribution of basic foodstuffs and prevent smuggling of such foodstuffs, I move—

"That the allotment of Rs. 2,18,89,800 under Demand No.34—Civil Supplies be reduced by Rs. 100".

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களுக்கு உணவுப் பொருள்களைக் கொண்டு செல்ல, தனியாருக்குப் பர்மிட் கொடுப்பதைத் தடுத்து நிறுத்துவது பற்றி விவாதிக்க.

"நிதிக் கோரிக்கை எண் 34—உணவுப் பொருள் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,18,89,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, எல்லா விதமான உணவுப் பொருள்களும் நியாய விலையில் கிடைக்க, அபிராமி மக்கள் தொகைக்கு ஒரு நியாய விலைக் கடை வீதம் கூட்டுறவு மூலம் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண் 34—உணவுப் பொருள் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,18,89,800-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

---

* 797–812-ம் பக்கங்களில் மாண்புமிகு அமைச்சரின் அச்சிட்ட உரை இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**திரு. ஏ. சுவாமிதாஸ்:** தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்குளம் தாலுக்காவில் அரிசியின் விலை படிப்படியாக உயர்ந்துகொண்டு போவதோடு வாங்கக் கிடைக்காத நிலையிருந்தும் அங்கும் நியாய விலைக் கடைகள் இதுவரைத் திறக்காதது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 34—உணவுப் பொருள் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,18,89,00-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

DR. H. V. HANDE: Sir, to discuss the necessity to issue new samba rice to the ration card holders at the rate of one rupee a measure, I move—

"That the allotment of Rs. 2,18,89,800 under Demand No. 34—Civil Supplies be reduced by Rs. 100."

THIRU B. VENKATASWAMY: Sir, to discuss about the delay in issue of foodgrain licences for supply of millet and rice to all the merchants who have applied for the same in Hosur and Denkanikota taluks, I move—

"That the allotment of Rs. 2,18,89,800 under Demand No. 34 Civil Supplies be reduced by Rs. 100".

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, to discuss the necessity to supply wheat and wheat products to the rural areas in Dharmapuri district, I move—

"That the allotment of Rs. 2,18,89,800 under Demand No. 34—Civil Supplies be reduced by Rs. 100."

**(ஆ) நிதிக் கோரிக்கை எண் 55—பல்வகை மூலதனச் செலவு**

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"நிதிக் கோரிக்கை எண் 55—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 10.38,93,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."



THIRU R. PONNAPPA NADAR: Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 10,38,93,800 under Demand No. 55—Miscellaneous Capital Outlay be reduced by Rs. 100."

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** தலைவர் அவர்களே, கொள்கையைபற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 55—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 10,38,93,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

DR. H. V. HANDE: Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 10,38,93,800 under Demand No. 55—Miscellaneous Capital Outlay be reduced by Rs. 100."

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் நிதி வசதிகளை அதிகரிப்பது குறித்து சந்தானம் குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்துவது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 55—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 10,38,93,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் அவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது நான் முன்னுரையாக அதிகமாகப் பேசத் தேவையில்லை என்று கருதுகிறேன். ஏனென்றால் ஒவ்வொரு நாளும் கவன ஈர்ப்புத் தீர்மானங்களின் வாயிலாக இதிலே பேச இருக்கிற பல விஷயங்களைப்பற்றி பல விளக்கங்கள் தந்திருக்கிறேன். தனியார் தீர்மானத்தில் இதுகுறித்து எதிர்க் கட்சித்தலைவர்கள் பலர் விவாதித்திருக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய விவாதங்கள் தான் நீண்டு இருக்கின்றன.

[திரு. மன்னை ப. நாராயணசாமி]

என்னுடைய பதிலுக்கு அவ்வளவாக நேரம் கிடைக்கவில்லை. உறுப்பினர்களெல்லாம் அநேகமாகப் பேசியதைப்பற்றி மீண்டும் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

ஆகவே, எந்த அளவுக்கு நீங்கள் இந்த மான்யத்தைப் பொறுத்த அளவில் அதிலும் குறிப்பாக உங்களுக்குத் தமிழ் நாட்டினுடைய நிலைமை நன்றாகத் தெரிந்திருந்தும் பக்கத்தில் இருக்கிற மாநிலங்களில், இந்தியாவில் ஒரு சில மாநிலங்களில் உணவுப் பிரச்னை சம்பந்தமாக பல கொடுமையான சம்பவங்கள் நடந்து வருகின்றன. உயிர் இழப்பு நேரிட்டிருப்பது உங்களுக்குத் தெரியும்.

அது மாத்திரமல்ல. அண்டை மாநிலமான கேரளாவில் எந்த அளவுக்கு அரிசி மற்ற பொருள்களின் விலை அதிகமாக உயர்ந்திருந்தாலும் கூட, தமிழ் நாட்டைப் பொறுத்த அளவில் எந்த அளவுக்கு சமாளித்திருக்கிறோம் என்பதில் நீங்கள் நல்ல முறையில் கவனம் செலுத்தி, எந்த முறையில் அதிகாரிகளும் மற்றவர்களும் இந்த உணவுக் கொள்கையை சர்க்கார் கொடுக்கக்கூடிய நல்ல திட்டங்களைப் பயனுறச் செய்வதிலே தங்களுடைய ஒத்துழைப்பை எல்லாம் தந்து, மாநில மக்களை உணவுப் பிரச்னையில் காப்பாற்றியிருக்கிறார்கள் என்ற உண்மையை உணர்ந்து, நியாயமான உங்களுடைய விவாதத்தை இங்கே வைப்பதன் மூலம் இந்த உணவுக் கொள்கை விவாதம் சிறப்பாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அகில இந்திய ரீதியிலே இன்றைக்கு 22 சதவிகிதம் வாழ்க்கைச் செலவு உயர்ந்திருக்கிறது. தமிழ் நாட்டில் 11 சதவிகிதம்தான் உயர்ந்திருக்கிறது என்பதையும் உங்களுக்கு இந்த அறிக்கையிலே தந்திருக்கிறேன். ஆகவே, இதையெல்லாம் நீங்கள் ஒரு நல்ல பிரச்னையாக எடுத்துக் கொண்டு நல்ல கொள்கைகளையெல்லாம் சொல்லி எனக்குப் பேசுவதற்கு நேரத்தையும் கொடுக்க வேண்டும் என்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவர் அவர்களே, இந்த உணவு மான்யக் கோரிக்கையின் பேரில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன்வந்துள்ளேன். அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையிலே இந்த உணவுக் கொள்கை சம்பந்தப்பட்ட மட்டில்



[திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளின் பலனாக இங்கு பல மாறுதல் ஏற்பட்டு, ஒரு ஸ்திரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது போன்ற ஒரு உணர்வை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

இந்த அறிக்கையில் அவர்கள் மிகுந்த திருப்தியோடு இங்கே விலைவாசி இதர மாநிலங்களில் போல் அல்லாமல் கட்டுப்படுத்தப்பட்டு சீரான விநியோகம், முறையான நல்ல அமைப்பு ஏற்படுத்தியிருப்பது போன்ற ஒரு கருத்தை இங்கே கூறியிருக்கிறார்கள். ஆனால் உண்மை என்ன என்றால் எதார்த்த நிலை என்ன என்று ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது அவர்களுடைய கருத்து சரியானது அல்ல என்பதை முதலிலேயே நான் குறிப்பிட்டுவிட விரும்புகிறேன்.

இன்றைக்கு நாட்டில் ஏற்பட்டிருக்கிற ஒட்டுமொத்தமான சில விளைவுகளின் பலனாக உலக நாட்டு அரங்கில் ஏற்பட்டிருக்கிற சில விளைவுகளின் பலனாக நமக்குக் கிடைக்கக்கூடிய அத்தியாவசியமான பண்டங்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்ற உண்மையை நாம் கருத்தில் கொண்டு பார்க்க வேண்டும். நாட்டின் தேவைக்கு அதிகமாக உற்பத்தி இருக்குமானால் பண்டங்கள் கிடைக்கும். அரசு தலையிட்டு கட்டுப்படுத்தி எடுத்து விநியோகம் செய்ய வேண்டிய அவசியம் கிடையாது.

தட்டுப்பாடு இருக்கிறபொழுது, சங்கடங்கள் இருக்கும்பொழுது நியாயமான பகுதியினருக்கு நியாயமான அளவுக்கு நியாயமான முறையில் நியாயமான விலையில் பொருள்கள் கிடைக்கச் செய்ய வேண்டியது அரசின் கடமையும் பொறுப்புமாகும். இந்தக் கடமையை நாம் எந்த அளவுக்கு நிறைவேற்றியிருக்கிறோம், சமுதாயத்தில் அடித்தட்டில் வாழ்க்கை வசதியற்ற நிலையில் கஷ்டத்தில் உழன்று கொண்டு இருக்கக்கூடிய மக்களுக்கு நியாயமான விலையில் பொருள்களை விநியோகம் செய்வதற்கு—நம்முடைய தேவை 10 இருக்கலாம், கிடைப்பது 5 இருக்கலாம், இந்த ஐந்தையும் நியாயமான முறையிலே விநியோகம் செய்திருக்கிறோமா என்பதைக் கணக்கில் கொண்டு பார்த்தால், விநியோக முறை சரியானதாக இல்லை, பழுதடைந்திருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[1974 மார்ச் 22

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயே இந்த உணவுப் பொருள் வழங்குத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஒன்று. அப்போதே இந்த முறை உருவாகியிருக்கிறது. சுதந்திரம் அடைந்து 25 ஆண்டுகளுக்கு மேலாகியும் அந்த முறையில் இன்னும் ஒரு மாற்றம் ஏற்படவில்லை. ஒரு புதிய அமைப்பு, நல்ல அமைப்பு, ஒரு சீரான அமைப்பு நமது அனுபவத்தின், 25 ஆண்டு அனுபவத்தின் அடிப்படையில் உருவாகவில்லை என்றால் இன்னும் எத்தனை ஆண்டு காலத்திற்கு இப்படியே போய்க் கொண்டிருப்பது என்பதை அமைச்சரவர்கள் சிந்திக்க வேண்டும்.

உணவு விலை சீரமைப்புக்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்று வேண்டுமானால் சொல்லலாம். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் நம்முடைய அரிசி உற்பத்தி 59 லட்சம் டன். இது ஒரு உபரி மாநிலம். பற்றாக்குறை என்பது இங்கே இல்லை. 59 லட்சம் டன் அரிசி உற்பத்தியாகக்கூடிய இந்த மாநிலத்தில் என்ன சீரமைப்பை ஏற்படுத்தி விட்டீர்கள்? 2,09,000 டன் அரிசியைத்தான் கொள்முதல் செய்கிறீர்கள். அதில் 1,11,000 டன் அரிசியை மத்திய அரசின் உணவு பொருள் வழங்கு துறைக்கு இந்திய உணவு கார்ப்பரேஷனால் கொள்முதல் செய்யப்பட்டது. அதுபோக மீதி உங்களால் விநியோகம் செய்யப்படுவது கிட்டத்தட்ட ஒரு லட்சம் டன்தான். 59 லட்சம் டன் விளையக்கூடிய இந்த உபரி மாநிலத்தில் ஒரு லட்சம் டன்தான் விநியோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது என்றால் எப்படி விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியும்? எப்படிச் சீரமைப்பு செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியும்? ஒரு லட்சம் டன்னை வைத்துக் கொண்டு நிச்சயமாக விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியாது; கட்டுப்படுத்தி விட்டோம் என்று நீங்கள் கூறுவது சரியல்ல.

ஒரு கிலோ அரிசி 1.30 ரூபாய்க்கு விற்றது இன்றைக்கு உங்கள் நியாய விலைக் கடைகளிலேயே 1.50 ரூபாய்க்கு விற்பனை செய்கிறீர்கள். அதுவும் நடுத்தர ரக அரிசிதான். ஆனால் அந்த அரிசி வெளியிலே என்ன விலைக்கு விற்கிறது? 2½ ரூபாய்க்கு விற்கிறது. அதைத்தான் இந்த நாட்டிலே இருக்கின்ற அதிகமான பேர் வாங்கிச் சாப்பிடுகிறார்கள். அரசுத் துறை மூலம் கிடைக்கின்ற உணவுப் பொருள் மிகவும் குறைவாகத்தான் இருக்கிறது; மிகக்



1974 மார்ச் 22]

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

குறைந்த பேர்களுக்குத்தான் அது கிடைக்கும். சாதாரண மக்கள் அதனால் இன்றைக்கும் உணவுப் பொருள் வாங்க முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். மக்களுக்கு உகந்த விலையில் உணவுப் பொருள் கிடைக்கவில்லை; ஆகவே, இப்போ திருக்கின்ற பங்கீட்டு முறை சரியில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசுத் துறையிலே இவ்வளவுதான் செய்து கொடுக்க முடிகிறது என்று வேண்டுமானால் நீங்கள் சொல்லலாம். அப்படியானால் இந்த அமைப்பை விரிவுபடுத்த நீங்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன? அதில் கவனம் செலுத்தியிருக்கிறீர்களா? போதிய கவனம் செலுத்தப்படவில்லை என்பது தான் என்னுடைய கருத்து. சில பொருட்களுக்கு இங்கே பற்றாக்குறை இருக்கலாம்; பற்றாக்குறை இல்லாமலும் இருக்கலாம். பற்றாக்குறை இருந் தாலும் இல்லாவிட்டாலும் அத்தியாவசியப் பொருட்களை நியாய மான விலைக்கு கொடுக்கச் செய்வதற்கு ஒரு நிரந்தரமான ஸ்தாபன அமைப்பு நமக்கு வேண்டும். அதற்கு என்ன செலவானாலும் பரவாயில்லை. அப்படிப்பட்ட ஒரு அமைப்பை உருவாக்க அரசாங்கம் முயற்சி செய்ய வேண்டும்.

முதலமைச்சரவர்கள் கூட ஆரம்பத்தில் சொன்னார்கள். உணவுப் பொருள் விநியோகத்தை அரசாங்கமே ஏற்று நடத்துவது என்ற திட்டத்தை கொள்கை அளவில் ஒப்புக்கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். எல்லோரும் அதை வரவேற்கிறார்கள். ஆனால் இன்னும் அது கொள்கை அளவிலே தான் இருக்கிறதே தவிர, நிறைவேற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வில்லை; அதிலே கவனம் செலுத்தப்படவில்லை. ஆகையால் தனியார் இடத்திலே விநியோகத்தை விட்டுவிட்டு, அவர்கள் கருணையிலே மக்களை வாழ வைத்திருக்கிறீர்கள் என்றுதான் நாங்கள் சொல்ல வேண்டும்.

அத்தியாவசியப் பண்டங்களை நியாயமான விலையில் எல்லோ ருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும். அதற்கு ஒரு நிரந்தர அமைப்புத் தேவை. அதற்கான ஒரு நிரந்தர அமைப்பை ஏற்படுத்தப் போதுமான சூழ்நிலை இங்கே இருக்கிறது. இதர மாநிலங்களில் அதற்கான நல்ல சூழ்நிலை இல்லை. அங்கெல்லாம்

[1974 மார்ச் 22

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

பல தொல்லைகள், சச்சரவுகள் இருக்கின்றன. அந்த நிலைமைகள் இங்கே உருவாகக் கூடாது.

ஆக, இன்றைக்கு இங்கே ஒரு நல்ல சூழ்நிலை இருக்கிறது. அடிப்படை அமைப்புகள் சரியாக இருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் இருக்கின்றன. அவைகள் சரியாகச் செயல் படுகின்றனவா என்று பார்த்தால் சில இடங்களில் தவறுகள் நடக் கலாம். அவைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம். ஒன்று இரண்டு ஆண்டுகளில் சீர்படுத்திக் கொள்வதற்கான சாத்தியக் கூறுகள், வாய்ப்புகள் நம்மிடத்திலே இருக்கின்றன. அதனால் பலப் படுத்திக் கொள்ளலாம். ஆகவே, அத்தியாவசியப் பண்டங்கள் நியாயமான விலையில் எல்லா இடங்களிலும் எல்லா மக்களுக்கும் கிடைக்கச் செய்கின்ற ஒரு நிரந்தர ஸ்தாபன அமைப்பை உருவாக்கி, அதன் மூலம் நல்ல முறையிலே செயல்பட பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

59 லட்சம் டன் அரிசி உற்பத்தியாவதால், உற்பத்தியாளர்கள் பயனுக்குப் போக 25 லட்சம் டன் அரிசியாவது மார்க்கெட் உபரி மிஞ்சும். அதில் 25 சதவிகிதம் கொள்முதல் செய்தாலும் 6 லட்சம் அல்லது 7 லட்சம் டன் கிடைக்கும். ஆகவே, 10 லட்சம் டன் கொள்முதல் செய்து வைத்துக் கொள்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும்.

இப்போது நடுத்தர நெல் ரகம் குவிண்டாலுக்கு 70 ரூபாய் என்று அரசாங்கம் விலை நிர்ணயம் செய்திருக்கிறது. வெளி விலை குவிண்டாலுக்கு 70 ரூபாய். அதை அரிசியாக்கினால் 65 கிலோ கிடைக்கும். அரிசி ஆக்கி விற்கின்றபோது அதற்கு 97½ ரூபாய் என்று ஆகிறது. 70 ரூபாய்க்கு வாங்கி 97½ ரூபாய்க்கு விற்பது எந்த முறையில் நியாயமாகும்? போக்குவரத்துச் செலவு, இதர சார்ஜ்கள் எல்லாம் சேர்த்தால் கூட 8 அல்லது 10 ரூபாய்க்கு மேல் வராது. அப்படிப் பார்த்தாலும் 80 ரூபாய்க்குமேல் விற்கக் கூடாது. ஆனால் 97½ ரூபாய்க்கு விற்கிறீர்கள். அந்த அளவில் பார்த்தால், அதாவது 97½ ரூபாய் என்ற அளவில் பார்த்தால் ஒரு கிலோ அரிசிக்கு 1½ ரூபாய் சுமாராக வரும். இன்று காலையி லிருந்தே கணக்குப் போட்டுப் பார்த்தேன். 1½ ரூபாய்தான் வருகிறது. வாங்கும் விலையை விட இது கிட்டத்தட்ட



1974 மார்ச் 22]

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

சதவிகிதம் அதிகமாக இருக்கிறது. இது மிகவும் அதிகம். எப்படிக் கணக்குப் பார்த்தாலும், எல்லாவிதமான செலவுகளையும் கூட்டிப் பார்த்தாலும் 78 அல்லது 80 ரூபாய்க்குமேல் விற்க வேண்டிய அவசியம் வராது. ஆகவே, கிலோ அரிசி 1.20 ரூபாய்க்குமேல் விற்பனை நியாயமில்லை. இந்த ஒரு ரூபாய் 20 காசுக்குத் தாராளமாகக் கொடுக்கலாம். ஆகவே, அப்படிக் கொடுப் பதற்கு ஆலோசிக்க வேண்டும்; அதுதான் நியாயம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விலை கட்டுப்படி ஆகாது; அதற்கு மேல் விலை வர வேண்டும் என்று சொன்னால், நிர்வாகத்தில் திறன் இல்லை; நியாயமாக கண்காணிக்கவில்லை என்றுதான் பொருள்.

அரசாங்க நிர்ணய விலை குவிண்டாலுக்கு 70 ரூபாய் என்றிருந் தாலும், விவசாயிகளுக்கு அந்த விலை சரியாகக் கிடைக்கவில்லை. உற்பத்தியாளர்களுக்கும் நியாயமான விலை கிடைக்கவில்லை; வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கும் நியாயமான விலைக்குக் கிடைக்க வில்லை. வெளியே அந்த நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு நாணயச் சங்கங்களில் கடன் வாங்கி பயிர் செய்கிறார்கள். உற்பத்தியாகின்ற நெல்லை 40 ரூபாய்க்கு அவர்களிடம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதற்கு மேல் அவர்கள் கொடுப்பதில்லை. உற்பத்தியில் 40 சதவிகிதம் இப்படிக் கொடுத்து விட்டால் மீதி அவர்களுக்கு என்ன கிடைக்கப் போகிறது.

அண்மையில் பழனிக்குப் போயிருந்தேன். ஐ.ஆர். 20 நெல் ரகம்—அது ஃபைன் வரைட்டி—மூட்டை ஒன்றுக்கு 86 ரூபாய் என்று விற்கப்பட்டது. ஆனால் தஞ்சாவூரில் அந்த விலை கிடைக் கிறதா என்றால் இல்லை. தஞ்சாவூருக்கும் பழனிக்கும் இடையில் கிட்டத்தட்ட 150 மைல் இருக்கும். தஞ்சாவூரிலிருந்து கொள் முதல் செய்து பழனிக்குக் கொண்டு வந்தால், என்னதான் செல வானாலும் டிரான்ஸ்போர்ட் சார்ஜ் மூட்டைக்கு 2 ரூபாய்தான் வரும். இதர செலவு ஒரு ரூபாய் ஆனாலும் மொத்தம் மூட்டை ஒன்றுக்கு 3 ரூபாய்தான் வரும். ஆக, டிரான்ஸ்போர்ட் சார்ஜ், இதர செலவுகள், லாபம் எல்லாம் வைத்துப் பார்த்தால் கூட மூட்டைக்கு 3 அல்லது 4 ரூபாய்தான் அதிகம் வைத்து விற்க

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

வேண்டும். ஆனால் அங்கே தலைகீழ் விலையில் விற்கப்படுகிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். உற்பத்தியாளர்களுக்கு அந்த விலை கிடைக்குமானால் பரவாயில்லை. இடையிலே இருக்கின்ற தனியார்கள் இடைத் தரகர்களுக்கு அந்த விலை கிடைக்கிறது. இடையிலே இருக்கின்றவர்களுக்கு ஏன் இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்? அரசாங்கமே எல்லாவற்றையும் கொள்முதல் செய்து, நியாயமான விலைக்கு விற்றால் உற்பத்தியாளர்களுக்கும் நியாய விலை கிடைக்க வழி ஏற்படும்; அதே நேரத்தில் வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கும் நியாய விலைக்கு கிடைக்கும். அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10.30)

அதாவது, தஞ்சை மாவட்டத்தில் வியாபாரிகள் கொள்முதல் செய்கிறார்கள். 40 சதவிகிதம் நெல்லை அரசாங்கக் கொள்முதலுக்குக் கொடுத்துவிட்டு, பாக்கி 60 சதவிகிதம் நெல்லை அவர்கள் கொண்டுபோய் விற்றுக்கொள்ள அவர்களுக்கு உரிமையிருக்கிறது. அதன் காரணமாக நெல்லை அதிக விலைக்கு விற்கிறார்கள். அதைத் தான் சொன்னேன்—இப்படி உற்பத்தி பண்ணுகிறவர்களுக்கும் இல்லாமல்—வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கும் இல்லாமல் இடையில் இருக்கிறவர் அடித்துக் கொண்டு போகிறார் என்று சொன்னால் இது அவசியம்தானா, இது நடந்தே தீர வேண்டுமா என்பதைத்தான் ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் உற்பத்திச் செலவுகள் அதிகமாகிவிட்டன. தஞ்சை மாவட்டத்தில் விளைச்சலும் போதுமானதாக இல்லை. திருத்துறைப்பூண்டியில் இருந்து வந்தவர் என்னிடம் சொன்னார் அவருக்கு 7 ஏக்கர் நிலம் இருக்கிறது—அதில் 1½ ஏக்கரா இருபோக சாகுபடி, பாக்கி ஒருபோக சாகுபடி செய்கிறபோது வருடத்திற்கு 2500, 3000 மேல் கிடைக்கவில்லை என்றார். நான் கமர்ஷியல் க்ராப் போடுகிறவர்களைப்பற்றிச் சொல்லவில்லை. நெல்லே பயிரிடுகிறவர்களைப் பற்றிச் சொல்கிறேன். அதுவும் பூச்சி வெட்டு, வெள்ளம் ஏற்பட்டுவிட்டால் எல்லாம் போச்சு.

உணவுப் பொருள் விலை ஏறினால் ஒட்டுமொத்தமாக மற்ற பொருள்களின் விலையும் ஏறிவிடும் என்பது சரிதான். ஆயினும்



[திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

மற்ற பொருள்கள் எல்லாம் ஏறியிருக்கிற நிலையில் விவசாயிகளை மட்டும் சாக அடிப்பது சரிதானா? ஆகவே கூடுமான வரையில் விவசாயிகளுக்குக் கொஞ்சம் கூடுதலாக நெல்விலை தந்தாலும் பரவாயில்லை—இடையில் உள்ளவர்களை ஒழித்தால் இன்றைய தினம் இப்போது அரசாங்கம் வாங்கி உபயோகிப்பவர்களுக்கு விற்கிற விலையை விடக் குறைவாக விற்க முடியும். அரசாங்கத் தரப்பில் கொள்முதல் செய்கிறபோது அறுவடை சமயத்தில் அரசாங்கமே கொள்முதல் செய்தால் இந்த 40 சதவிகிதத்துக்கும் அதிகமாகக் கொள்முதல் செய்ய முடியும்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** உறுப்பினர் தனியார் வியாபாரம் செய்வதாகச் சொல்கிறார்கள். யாரும் குறிப்பிட்ட அளவுக்கு மேல் நெல்லை கையில் ஸ்டாக் வைத்துக் கொள்ள முடியாது.

திருச்சி மாவட்டத்திலே அதிகமாக உற்பத்தியாகிறது என்றால் —சேலம் மாவட்டத்திற்கு 2 ஆயிரம் டன் நெல் வேண்டுமென்றால் கலெக்டர் பர்மிட் கொடுக்கிறார். இன்ன மணியில் இருந்து இன்ன மணிக்குள்ளாக—போக்குவரத்து நேரம் உள்பட—நெல் அந்த ஜில்லாவிற்குள் வந்துவிட பர்மிட் நேரம் போட்டே கொடுக்கிறார். அரசாங்க கோடவுனில்தான் ஸ்டாக் வைக்கப்படுகிறது—அரசாங்கமேதான் அரைத்து விநியோகிக்கிறது. அந்த கோடவுன் சாவி வியாபாரியிடம் ஒன்று இருந்தால் அரசாங்கத்திடம் ஒன்று இருக்கிறது. நிலச் சொந்தக்காரர்களேகூட இந்த அளவுக்குமேல் கையில் ஸ்டாக் வைத்துக் கொள்ளக் கூடாது என்று தடை விதித்திருக்கிறோம்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** சட்டம் இருக்கலாம். நான் நடைமுறையில் இருப்பதைச் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** நடைமுறையைச் சொல்வதாகச் சொன்னார். நான் கொள்கையைச் சொன்னேன். இந்தக் கொள்கைக்கு மாறாக—நடைமுறையில் எந்த வியாபாரியாவது கையில் ஸ்டாக் வைத்திருக்கிறார் என்று உறுப்பினருக்குத் தெரிந்தால் உடனே சொல்லலாம். அவர் விவரம் தெரிந்து சொல்வதாகவே நினைக்கிறேன். அப்படி அவர்கள் விவரம் கொடுத்தால் நான் உடனே நாளைக்கே நடவடிக்கை எடுக்கிறேன். திரு. வகாப்

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1974 மார்ச் 22

அவர்கள் பேசும்போதுகூட, அவரது மாவட்டத்தில் நிலக்காரர்கள் தங்கள் வீட்டில் சொந்த உபயோகத்திற்கு நெல் வைத்திருந்தால் கூட எடுத்துப் போய்விடுவதாகச் சொன்னார். நாங்கள் யாரையும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் வீட்டில் நெல் வைத்துக் கொள்ள அனுமதிப்பதில்லை.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** நான் நீங்கள் கொள்முதல் செய்கிற 40 சதவிகிதம் நெல்லைப்பற்றிச் சொல்லவில்லை. அது அரசாங்க கோடவுனில்தான் இருக்கிறது. நீங்களேதான் அரைத்து விநியோகிக்கிறீர்கள். மீதமுள்ள 60 சதவிகிதம் நெல் என்ன ஆகிறது?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** மீதி 60 சதவிகிதத்துக்கு உடனே பர்மிட் கொடுத்து மூவ் பண்ணுகிறோம்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** இந்த 60 சதவிகிதம் நெல்லைத்தான் வாங்குகிற இடத்தில் ஒரு விலை என்றால் அதைவிட கிட்டத்தட்ட 40, 50 சதவிகிதத்திற்கு மேல் அதிகமாக வெளியிடத்தில் இன்றைய தினம் வியாபாரிகள் விற்கிறார்கள். இதற்குமேலே எனக்கு விளக்கம் சொல்ல முடியவில்லை. இப்படி நடப்பது என்னவோ உண்மை.

இன்னொரு வேடிக்கை என்னவென்றால் போன ஆண்டு ஹல்லிங் ஏஜெண்டுகள் போட்டிருந்தோம். இந்த வருஷமும் ஹல்லிங் ஏஜெண்டுகள் போட்டிருப்பதாக அறிகிறேன். அவர்களிடம் 40 சதவிகிதம் லெவி நெல்லைக் கொண்டு போய்ப் போடுகிறபோது மூட்டைக்கு 2 ரூபாய் அவர்கள் இந்த வியாபாரிகளிடம் கேட்டு, வாங்கிப் பெறுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அது உண்மையாக இருந்தால் அதுவும் வாங்கிச் சாப்பிடுகிறவர்கள் தலையில்தான் போய்ச் சேருகிறது. விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை.

சென்னையில் நாம் அரிசி விநியோகம் செய்கிறோம். சிலர் ஈரப் பசையோடு அரிசியைக் கொண்டு வந்து கொடுத்து விடுகிறார்கள் நெல்லாக இருந்தால் கெடாதே தவிர, ஈரப் பசையோடு அரிசியை வைத்தால் கெட்டுத்தான் போகும். இங்கே வேலை செய்கிற ஊழியர் ஒருவரே சொன்னார். ஒரு கிலோ நல்ல அரிசி, ஒரு கிலோ கெட்டுப்போன அரிசி வாங்கிக்கொண்டால் தான் மைதா தருவதாகச் சொல்கிறார்கள் என்றார். அந்த கெட்டுப்போன



1974 மார்ச் 22]

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

அரிசியை சாப்பிடவே முடியவில்லை என்கிறார்கள். ஆக ஈரப் பசையோடு அரிசி ஸ்டாக் பண்ணுவதற்கு இங்கே அனுமதிக்கக் கூடாது. இதனால் எல்லாம் ஏற்படுகிற கெட்ட பெயர் அமைச்சரையேதான் சாரும்.

மண்ணெண்ணெயை எடுத்துக்கொள்ளுங்கள். நமக்கு கிடைக்கிறது குறைவு என்றாலும் ஒழுங்கான முறையில் அதையாவது விநியோகம் செய்தாக வேண்டும். பீப்பாயில் போய் வாங்குகிற போது பில்லைத் தவிர தனியாக 15 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று வாங்கிக் கொள்கிறார்களாம். இந்த 15 ரூபாயையும் கூட்டித்தான் இந்த வியாபாரி மக்களுக்கு விற்க வேண்டியதாக இருக்கிறது.

அதைப்போல டீசல் 1.50-க்கு விற்கப்படுகிறது. அதன் விலை 95 காசுதான். இப்படி பற்றாக்குறை வந்தால், அதை எப்படி காசாக்கி, பெரிய முதலாளி ஆகலாம் என்கிற எண்ணமே வியாபாரிகளிடம் இருக்கிறது. இதைத் தடுக்க உறுதியான நடவடிக்கை, கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொண்டாக வேண்டும்.

இன்றைக்கு கோதுமை நமக்கு 10 ஆயிரம் டன்தான் கிடைக்கிறது. தேவை 35 ஆயிரம் டன் என்கிறார்கள். ரேஷன் கடையில் கோதுமை கேட்டால் இல்லை. ஆனால் அதே சமயம், வெளியிலே அதிகக் காசு கொடுத்தால் கோதுமை கிடைக்கிறது. எப்படிக் கிடைக்கிறது? இது எல்லாம் விநியோக முறையில் உள்ள கோளாறு. ஆகவேதான் அத்தியாவசியப் பண்டமான நெல், கோதுமை, மண்ணெண்ணெய், சர்க்கரை போன்ற பொருள்கள் எல்லாம் அரசாங்கமே நேரிடையாக விநியோகம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் கலப்படத்தைப் பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை. ஜீனியிலே ரவையைக் கலக்கிறார்கள். காலையிலே காப்பி சாப்பிட்டால், அடியில் ரவை இருந்தது என்று திரு. சுப்பிரமணியம் சொன்னார்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஆளும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் வேறு ஒரு பிரச்சினைக்குப் போய்விட்ட காரணத்தினால் கேட்கிறேன். பத்திரிகையில் உணவுமண்டலத்தையே

[டாக்டர் மு. கருணாநிதி]

[1974 மார்ச் 22

எடுத்து விடுவதுபற்றி மத்திய அரசு யோசனை செய்கிறதே, இது பற்றி மாண்புமிகு உறுப்பினர் காங்கிரஸ் கட்சி சார்பில் என்ன கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** அதற்கு இவ்வளவு சுலபமாகப் பதில் சொல்ல முடியாது. மத்திய அரசு அதுபற்றி ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. நாடு பூராவுக்குமான நலனை அவர்கள் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. தமிழ் நாட்டின் நலன் பாதிக்கப்படாத அளவு நாமும் உதவி அளிக்கிற முறையில் நடந்து கொள்வதுதான் சரியானதாக இருக்கும் என்று சொல்ல விரும்பு கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தொடக்கத்திலே பேசிய பேச்சு, இருக்கிற குறைபாடுகளை எல்லாம் மிகத் துல்லியமாகவும் நல்ல முறையிலேயும், அரசும் அந்த இலாகாவைக் கவனிக்கின்ற அதிகாரிகளும் சிந்திக்கின்ற அளவுக்கும் நம்முடைய மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவருடைய பேச்சு இருந்தது. அதை நான் பாராட்டுகின்றேன்.

இதைப்பற்றி இவ்வளவு சிந்தித்துப் பேசுகின்ற அவர்கள் கடந்த 5, 6 நாட்களாக பத்திரிகையிலே வருகின்ற பரபரப்பான செய்தி, உணவு மண்டலம் பற்றியது. அப்படி உணவு மண்டலம் ஏற்படுத்தப்படுமானால், தமிழ் நாடே நலியக்கூடிய அளவுக்கு நிலைமை ஏற்படும். அப்படி உணவு மண்டலத்தை ஏற்படுத்தி, தமிழ் மாநிலத்தினுடைய கதவுகளை இதற்காக, அரிசிக்காக, திறந்து விடக் கூடாது என்று தமிழ்நாடு அழுத்தம் திருத்தமாகக் கருத்துக் கொண்டிருக்கிறது. இவ்வளவு பெரிய பிரச்னையைப் பற்றி, ஆளும் காங்கிரஸ் கட்சித் தலைவர் சிந்திக்காமல் இருப்பது வருந்தத்தக்க விஷயம். ஆகவே, அவர்களுடைய கருத்தை வழங்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** மாண்புமிகு முதலமைச்சரவர்கள் வேறு திசையில் திருப்பி விடுகிறார்கள் (சிரிப்பு).

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நான் திசை திருப்புவதற் காகக் கேட்கவில்லை. ஏதோ கேள்விகேட்டு, உங்களால் பதில் சொல்ல முடியவில்லையென்ற பாராட்டைப் பெறுவதற்காக நான் கேட்கவில்லை. தமிழ் நாட்டிலே இருக்கிற 4½ கோடி மக்கள்



974 மார்ச் 22]

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

ிரச்னை இது. எல்லாக் கட்சிகளும் ஏகோபித்து ஒரே முடிவை டுக்க வேண்டிய பிரச்னை. இது கூடாது என்பதற்கு ஆளும் ாங்கிரஸ் கட்சியின் சார்பிலே நீங்கள் ஆதரவாக இருப்பீர்கள் ன்ற அந்த வேண்டுகோளைத்தான் உங்களிடத்திலே விடுக்கிறேன். தை வழங்குவீர்களா ?

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தமிழ் நாட்டைப் பொறுத்த ரையில், சீரான விலையிலே, குறைந்த விலையிலே உணவுப் பாருள்கள் கிடைக்க வேண்டுமென்று நீங்கள் சொல்கின்ற காள்கைக்கு எதிராக நான் சொல்ல முடியாது. இருந்தாலும் ந்தியா என்று ஒட்டுமொத்தமாகப் பார்க்கிறபொழுது, சுற்றி ிருக்கிற மாநிலங்களிலே கஷ்டங்கள் ஏற்படுகின்ற நேரத்திலே, வர்களுடைய கஷ்டத்திலே ஓரளவு பங்கு ஏற்றுக்கொள்வது வறாக இருக்காது என்று தான் சொல்கிறேன். இது பேச்சள ிலே இருக்கிறதே தவிர, எப்படி முடிவெடுக்கப் போகிறார்கள், ந்த முறையைக் கையாளப் போகிறார்கள் என்று தெரியாமல் து சம்பந்தமாக எப்படிக் கருத்துச் சொல்ல முடியும் ?

ஃபுட் மூவ்மென்ட்டை ஃப்ரீயாக விட்டுவிட்டு, இந்த ராசாங்கத்திற்கு அதைக் கட்டுப்படுத்த அதிகாரமில்லை, கரளத்திலிருந்து யார் வேண்டுமானாலும் வந்து அரிசி ாங்கலாம் என்று மத்திய அரசு சொல்லும் என்று நான் ருதவில்லை. பற்றாக்குறை மாநிலமான கேரள மாநிலத்திற்குத் தேவையான அரிசியை நீங்கள் கொடுங்கள் என்று நம்மிடம் றலாம். மத்தியில் வைத்துப் பண்ணாமல், அங்குள்ள 'ஸோன்' ற்படுத்தினால், மாநிலத்திற்கு அதிகார வரம்பு கொடுத்து, தற்கு மேலே தேவையானதை எல்லாம் பூர்த்தி பண்ண வண்டும்.

கேரளாவுக்கு 1 லட்சம் டன் தேவை என்றால், நீங்கள் உங்கள் தேவைக்கு மேல் உள்ளதைக் கொடுக்க வேண்டுமென்றால் பரவா பில்லை. இல்லாவிட்டால், நம்முடைய சாப்பாட்டைக் குறைத்துக் ாண்டு கொடுக்க வேண்டிவரும். இதில் கொள்கை எப்படி வகுக்கிறார்கள், எப்படி நடைமுறைப்படுத்தப் போகிறார்கள் என்று பார்த்துத்தான் அது சம்பந்தமான கருத்தைச் சொல்வது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

ஆகவே, பக்கத்து மாநிலத்திலே கஷ்டப்படும்போது, அதிலே ஓரளவு பாரத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதுதான் சரியாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து.

இங்கு சொல்லப்பட்ட கருத்துக்களைச் சரியான வகையிலே எடுத்துக் கொண்டு, கீழ் நிலையிலே வாழ்கின்றவர்களுக்கு, தேவையான அளவிலே குறைந்த விலையிலே, தானியங்கள் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. கி. ஜெயராமன்:** பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய உணவுப் பொருள்கள் விநியோகம், கொள்முதல் ஆகிய முறைகளில் அரசு மேற்கொண்டிருக்கிற வழியை நான் பாராட்டாமல் இருக்க முடியாது.

இங்கே, ஆளும் காங்கிரசைச் சேர்ந்த தலைவர், நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் அரிசி மண்டலம் ஒரு மாநிலமாக இருப்பதைவிட, தெற்கத்திய மண்டலமாக, 4 மாநிலங்களையும் சேர்த்து மண்டலமாகச் செய்யப்போகிறோம் என்று மத்திய அரசு சொன்னதை, செய்திகளை அல்ல, நிகழ்ச்சிகளை, எதிர்ப்பீர்களா என்று சொன்னதையும், இதை மத்திய அரசிலே ஆட்சி செலுத்துகின்றவர்கள் கவனித்துத்தான் செய்ய வேண்டும் என்றும் சொன்ன நேரத்திலும், அதற்கு இங்கிருக்கிற காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கை என்ன என்பதைப்பற்றி பிறகு யோசித்துச் சொல்லப்போகிறோம் என்று சொன்னார். பின்னாலே பேச வருகின்ற அவர்களுடைய கட்சிக்காரர்கள் ஒரே மண்டலமாக மாற்றுகின்ற கொள்கையில் அவர்களுடைய நிலை என்ன என்பதைப்பற்றி விளக்குவார்கள் என்று கருதுகிறேன்.

தமிழக புஞ்சை தானியங்களெல்லாம், வெவ்வேறு மாநிலங்களுக்கு, இன்டர்ஸ்டேட் என்ற முறையில் செல்லலாம் என்று மத்திய அரசு அவசரமான முடிவு எடுத்ததற்குப் பின்னாலே, நம்முடைய மாநிலப் புஞ்சைப் பயிர்கள் மற்ற மாநிலங்களுக்குச் சென்றால், ஏழை மக்களுடைய உணவுப் பொருள்களின் விலை கூட ஏறும் என்று அரசு சொன்னது. ஏறியிருக்கிறது. அதைப் போலவே, இப்படி ஒவ்வொரு பொருளையும் இங்கே நாம். . .





**திருமதி த. ந. அனந்தநாயகி:** இப்பொழுதுகூடத் தமிழகத்து புஞ்சை தானியங்கள் எல்லாம் அண்டை மாநிலங்களாகிய மைசூருக்குத்தான் போய்க் கொண்டிருக்கின்றன. ஏதோ புதிதாக போவது மாதிரி சொல்கிறாரே.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு உறுப்பினர் நான் மேலவையிலே பேசியதைக் குறிப்பிடுகிறார்கள். அவர்கள் கேட்டு அனுப்புவது என்பது வேறு. ஏற்கனவே இருக்கிற கட்டுப்பாடுகளை எடுத்து விட்டு மாநிலத்திற்கு மாநிலம் கேழ்வரகு, கம்பு, சோளம் இவை போன்ற சிறு தானியங்களை, இங்கேயிருக்கிற பொருள்களை எல்லாம் எடுத்துச் செல்ல தடை இல்லை என்று, இப்பொழுது மத்திய அரசு தடையை தளர்த்திவிட்டிருக்கிறது. நம்முடைய உணவு அமைச்சர் அவர்கள், அண்மையில் டெல்லியில் நடந்த மாநாட்டில், அந்தத் தடையைத் தளர்த்தியுள்ளதைத் தவறு என்று நம்முடைய அரசின் சார்பாகச் சுட்டிக்காட்டினார்கள். ஆனாலும் பயன் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அந்தத் தவறைத் தொடர்ந்து கண்டிக்கிறோம்.

நம்முடைய மாநில அரசைக் கூடக் கலந்து ஆலோசிக்காமல், மத்திய அரசே, அவர்களே, ஒரு உத்தரவை, கம்பு, சோளம், கேப்பை போன்ற பொருள்களையெல்லாம் மாநிலத்திற்கு மாநிலம் எடுத்துச் செல்லலாம் என்று உத்தரவிட்டிருப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. தொடர்ந்து கண்டித்திருக்கிறோம். இப்பொழுது நமக்கு ஏற்பட்டிருக்கிற பயமெல்லாம், நாம் ஏற்கனவே குறிப்பிட்டதைத் தொடர்ந்து, அரிசி மண்டலத்தை ஏற்படுத்த முயன்றால், தமிழ் நாடு அதை வாளாக இருந்து பார்த்துக் கொண்டிருக்க முடியாது. உணவு மண்டலம் ஏற்படுமேயானால், தமிழ் நாடு கொடிய பஞ்சத்தைச் சந்திக்க வேண்டிய அவல நிலைக்கு ஆளாகும். மத்திய அரசினர் எந்த முடிவை எடுக்கப் போகிறார்கள், எப்படி கையாளப் போகிறார்கள் என்பதைப் பார்த்து கருத்துச் சொல்வதாக ஆளும் காங்கிரஸ் கட்சித் தலைவர் மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள். அது பிரச்னையிலிருந்து நழுவிக்கொள்கிற காரியமே தவிர, பிரச்னையைத் தீவிரமாக அணுகுகிறோம் என்பதாகாது. ஒரே மண்டலமாக இருக்குமானால், நிச்சயமாக பற்றாக்குறை ஏற்படும். இவ்வரசு தமிழக அரசின் சார்பாகக் கண்டித்து, மத்திய அரசோடு போராடத் தயாராக இருக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஃப்ரீ டிரேடுக்கு நீங்கள் பயப்படுவதிலே நியாயம் இருக்கிறது, இல்லையென்று சொல்லவில்லை. அதே சமயத்திலே நெற்களஞ்சியமாக இருக்கிற ஆந்திர மாநிலத்திலேயிருந்து இங்கு அரிசி வர வழியிருக்கிறது என்று சொல்கிறார்கள். அதன்மூலம், விலை கூடக் குறையும் என்று சொல்கிறார்கள். அதுபற்றி உங்கள் கருத்து என்ன என்று சொன்னால், நன்றாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பலாக்காயை எதிர்பார்த்து, களாக்காயை பறி கொடுத்துவிடக் கூடாது.

திரு. கி. ஜெயராமன்: நாம் நிலக்கரியை நம்பியிருக்கிறோம். அதுவும் வந்தபாடில்லை. காவிரி தண்ணீருக்கும் ஆபத்து வந்து கொண்டிருக்கிறது. அரிசி நிலைமையும் காற்றிலே பறந்தால், சோலைவனமெல்லாம் பாலைவனமாகிவிடும். மத்திய அரசு வேறு மாநிலங்களில், கொள்முதல் கொள்கையில், உணவுக் கொள்கையில் அட்டர் பெயிலியூர் அடைந்ததற்குப் பிறகு, இந்த மண்டலத்தைப் பிரித்து விட வேண்டுமென்று தவறான கொள்கையை வைத்திருக்கிறது. நம்முடைய அரசு மேற்கொண்டிருக்கிற பைலேட்டரல் அக்ரீமெண்ட் மூலம், அவ்வப்போது இங்கே எடுத்துச் சொல்லியிருப்பதைப் போல், இந்த உணவுப் பொருள்களைப் பற்றாக்குறை மாநிலங்களுக்கு நாம் ஒட்டு மொத்தமாகக் கொடுத்துவிட முடியும். இப்பொழுது மத்திய அரசு உணவுக் கொள்கையை மாற்றுவதை நாம் கடுமையாக எதிர்க்க வேண்டும். அதில் பின் வாங்கக் கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்ற மாநிலங்கள் செய்யாத நல்ல காரியத்தை நம்முடைய தமிழக அரசு செய்திருக்கிறது. உணவுப் பொருள் பற்றாக்குறையாக இருந்த நேரத்தில் நாம் விலையை நிர்ணயிக்கக் கூடாது, வேண்டுமென்றால் லாப சதவிகிதம் மட்டும் விற்பனையிலே வைக்கலாம் என்று முடிவெடுத்தோம். கேரளாவும், மகாராஷ்டிரமும் உற்பத்தியாகும் பொருள்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிற நேரத்தில் அவெய்லபிலிட்டி இஸ் ரெட்யூஸ்ட்—அவர்கள் அவசரமாக வேண்டுமென்றே உணவுப்பொருள்களின் விற்பனை விலையை நிர்ணயித்தார்கள். அதிலும், விற்பனை விலையை



நிர்ணயித்த நேரத்தில், ஏட்டிலே ஏதோ புள்ளிவிவரம் இருக்குமே தவிர, அனுபவத்தில் மக்கள் சென்று கடைகளில் கேட்டால் கிடைக்காது.

ஆனால், நம்முடைய அரசு, தீர்க்க தரிசனத்தோடு நடவடிக்கை எடுத்து, லாப சதவிகிதத்தை நிர்ணயித்து, அதிலேதான் விற்க வேண்டுமென்று முடிவெடுத்திருக்கிறது. அதிலே நாம் வெற்றி பெற்றிருக்கிறோம். இப்படி நாம் வெற்றி பெற்றிருக்கிற நேரத்தில், டூ டையர் பாலிஸி என்று இரு விலைகளை நிர்ணயிக்க வேண்டுமென்று அவர்கள் முடிவெடுத்திருக்கிறார்கள். அந்த விலை முறையை தற்காலிகமாக வரவேற்கலாம். இந்திய துணைக் கண்டத்தையே ஆளும் கட்சியைச் சேர்ந்த காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள், சாதாரண ஏழை மக்களுக்குப் பற்றாக்குறை, உணவுப் பொருள்களில் பற்றாக்குறை ஏற்படும் நேரத்தில் நாம் கொள்முதலை மேற்கொள்ள வேண்டும் என்றார். மேலும் அவர், சரியான கொள்முதலை, விநியோகத்தை மேற்கொள்ள வேண்டும் என்றார். ஆனால், திடீரென்று அரசே நெல்கொள்முதலை மேற்கொள்ள வேண்டுமென்று சொன்னார். பக்கத்து மாநிலங்களில் கோதுமைக் கொள்முதலையும் விநியோகத்தையும் அரசே மேற்கொள்ள வேண்டி வந்ததால், அவர்கள் வெற்றி பெறவில்லை. தோல்வியைத்தான் கண்டார்கள். கடைசியிலே மத்திய சர்க்கார் பற்றாக்குறை பட்ஜெட் போட்டதால் கோதுமை விலையைக் குறைக்கமுடியாத நிலைமையைப் பார்க்கிறோம், தனிப்பட்டவர்களிடமிருந்து கோதுமையை வாங்கி, அதிகபட்சம் விளைகின்ற இடங்களிலே வாங்கி பற்றாக்குறை இடங்களில் விற்பதால் விலையேறிவிட்டது, கோதுமை கிடைக்கவில்லை என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டதே, இதைப்பற்றி ஆளும் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் என்ன சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. இருவிலைக் கொள்கையிலே Strengthening the weak by weakening the strong என்ற பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கைப்படி நம்முடைய சர்க்கார் சர்க்கரை விநியோகத்தைச் செய்து கொண்டிருக்கிறது.

மத்திய சர்க்காருடைய இருவிலைக் கொள்கையை நாம் மற்ற தொழில் பொருள்களைப் பொறுத்தவரையில் ஆதரிக்காவிட்டாலும் கூட இதிலே இருவிலைக் கொள்கையை நாம் ஆதரிக்கிறோம். இரு

[திரு. கி. ஜெயராமன்]

விலைக் கொள்கையை எல்லாப் பொருட்களுக்கும் கொண்டுவர ஆரம்பித்தால் அது பெரிய மோசமான நிலைமைக்குத்தான் கொண்டுபோய்விடும்.

குறிப்பாக சிமிண்டுக்குக் கொண்டுவர இருக்கிறார்கள், இரும்புக்குக் கொண்டுவர இருக்கிறார்கள். சிமிண்டும், இரும்பும் தொழில் பொருட்களாக இருப்பதால் அதற்கு இருவிலைக் கொள்கையைக் கொண்டுவரக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெட்ரோலிய எண்ணெய் பொருட்களின் பற்றாக்குறை காரணமாக ஏற்றுமதிக் கொள்கையை மாற்ற வேண்டுமென்று மத்திய சர்க்காரிடம் சொல்லியும் அவர்கள் பேசாமல் இருக்கிறார்கள்.

எண்ணெய் வித்துக்கள், சர்க்கரை போன்றவைகளை எல்லாம் ஏராளமாக ஏற்றுமதி செய்யவேண்டுமென்று அவர்கள் சொல்வதால் பொருள்களின் விலை அதிகமாகும். இதனால் பெரிய இடர்ப்பாடுகள் எல்லாம் வரும், நாம் விநியோகத்தில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னதாக மத்திய நிதி அமைச்சர் அவர்கள் விலைவாசியைக் கட்டுப்படுத்துவதுபற்றி சொல்கிற நேரத்திலே

'No miracle cure for price rise'

என்று அவர்களே கையை விரித்துவிட்டார்கள்.

'There is no miracle cure for price rise'

என்று சொல்லிவிட்டார்கள். இதைத்தவிர மத்திய அரசின் விவசாயத் துறை அமைச்சர் மாண்புமிகு ஷிண்டே அவர்கள் கூட

'National Food Budget is not at all feasible'

என்ற முறையிலே சொல்லியிருக்கிறார்கள். பற்றாக்குறை மாநிலங்களுக்கு தானியங்களை விநியோகம் செய்வதற்கு இயலவில்லை என்பதைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

'National Food Budget is not feasible'

என்று சொல்லி அவர்கள் பச்சை விளக்கைக் காட்டாமல் சிகப்பு விளக்கைத்தான் காட்டியிருக்கிறார்கள்.



[திரு. கி. ஜெயராமன்]

இந்த நிலையில் தமிழ்நாடு அரசின் கொள்முதல் கொள்கையைப் பாராட்டத்தான் வேண்டும். விலைவாசியைக் குறைப்பதற்கு என்ன நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது என்று அவர்கள் கேட்டார்கள். குறிப்பாக கடலை எண்ணெய். அது வட மாநிலங்களுக்கு வனஸ்பதி போன்ற பொருட்களுக்காக அனுப்பப்படுகிறது, அது வட மாநிலங்களுக்கு போவதை நிறுத்துவதற்காக, நம்முடைய மக்களுக்கு அது தேவைப்படுகிறது என்பதற்காக எண்ணெய் வித்துக்களின்மீது ஒரு லெவியை வைக்கவேண்டுமென்று அனுமதி கேட்டோம். உடனே இல்லையென்று சொல்லியிருக்கலாம், அவர்கள் தாமதித்து இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த லெவியின் மூலமாக விலையைக் குறைக்கமுடியும். அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அப்படிச் செய்தால், கிலோ 6 ரூபாய்க்குக் கொடுக்கமுடியும் என்று சொன்னார்கள்.

விலையைக் குறைக்க நம்முடைய சர்க்கார் நடவடிக்கை எடுக்க மத்திய அரசு அனுமதி கொடுக்கவில்லை. ஒரு பக்கத்திலே உணவு மண்டலத்தினை எடுத்துவிடுகிறோம் என்று சொல்கிறார்கள். இன்னொரு பக்கத்திலே எண்ணெய் விலையைக் குறைப்பதற்காக ஒரு நல்ல வழியை, சரியான வழியைச் சொன்னால் அதை ஒப்புக் கொள்ள மாட்டேன் என்று சொல்கிறார்கள். வேண்டுமென்றே தமிழக சர்க்காருக்கு ஒரு இடையூறை, விளைவை ஏற்படுத்த வேண்டுமென்று, ஒரு மாசு கற்பிக்கவேண்டுமென்று அப்படிச் செய்கிறார்கள்.

நம்முடைய அமைச்சர் அவர்கள் கண்காணிப்புக் குழுவிற்கு சென்ற ஆண்டு ஒதுக்கிய 55 லட்சம் ரூபாயை 74 லட்சம் ரூபாயாக உயர்த்தி இருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலே பதுக்கல் காரர்கள் கொள்ளை லாபக்காரர்கள் ஏராளமாக இருக்கிறார்கள் என்று கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒரு மூவ்மெண்ட் நடத்தினார்களே. அது வெற்றி பெறவில்லை என்பது தெரியும். காரணம், சர்க்கார் நல்லமுறையிலே இங்கு கண்காணித்துக் கொண்டு வருகிறது.

ஆனால், நம்முடைய மாநிலத்திலே பதுக்கல்காரர்களே இல்லை என்று நான் சொல்லவில்லை. மற்ற மாநிலங்களில் இருக்கிற அளவுக்கு இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. கி. ஜெயராமன்]

கோதுமை விநியோகத்திலே நம்முடைய சர்க்கார்
கொண்டிருக்கிற முறை பாராட்டுக்குரியது. மற்ற மாநிலங்களிலே
ரவை, மைதா, சேமியா போன்றவைகள் எல்லாம் கணக்குப்
பிரகாரம் இல்லாமல் அதிகமான விலைக்கு விற்கிறார்கள். ஆனால்
நம்முடைய சர்க்கார் மூன்று ஆண்டுகளாக இருக்கிற விற்பனை
விதிப்பு கணக்கைப் பார்த்து நல்லமுறையிலே வழங்குகிறார்கள்.

கலப்படத்தையும் ஒழிப்பதிலே நம்முடைய சர்க்கார்
ஜாக்கிரதையாக இருக்கிறது. குற்றம் நிரூபணம் செய்யப்பட்டால்
அவர்களுடைய முனிசிபல் லைசென்ஸை கான்சல் செய்தோ
சஸ்பெண்ட் செய்தோ நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று
கேட்டுக்கொண்டு எனக்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு
நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற
வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச்
சொல்ல முன்வந்திருக்கிறேன்.

முதலிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சற்று
நேரத்திற்கு முன்பாக இந்த மன்றத்திலே நம்முடைய
தமிழகத்தைப் பொறுத்தவரையில், சௌத் ஸோன் என்று தென்
நாட்டுக்கு என்று முழுமையாக இருக்கவேண்டுமா அல்லது
தமிழகத்திற்கு மட்டும் என்று இருக்கவேண்டுமா என்ற
பிரச்னையை எழுப்பினார்கள். அதைப்பற்றிக் கூறுவதற்கு
முன்னாலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். முதலமைச்ச
ராக இருந்தாலும் எந்த அமைச்சராக இருந்தாலும் இந்த
அமைச்சரவையோ தன்னுடைய முக்கியமான கடமையிலிருந்து
தவறியிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுவது கடமை என்று
கருதுகிறேன்.

முதலமைச்சராக இருந்தாலும், உணவு அமைச்சராக
இருந்தாலும் முதலமைச்சர்கள் மாநாட்டிற்குப் போனவர்கள்
அங்கே என்ன என்ன கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டார்கள்
என்பதை ஒரு தடவையாகிலும் இந்த மன்றத்திலே ரூல் 82-ன்
மூலமாகவோ அல்லது நாங்கள் ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு



வாய்ப்பு ஏற்படுத்தித் தந்தபொழுதோ கொடுத்திருக்கிறார்களா
என்றால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். ஏதோ திடீரென்று
அமைச்சர் அவர்கள் சென்றார்கள், அங்கே என்ன பேசப்பட்டது
என்பதை டாப் சீக்ரெட்டாக வைத்திருக்கிறார்கள், அமைச்சர்
அவர்கள் அதைப்பற்றி இந்த அவையினருக்குச் சொல்லியிருக்க
வேண்டாமா? இந்த மன்றம் நடந்துகொண்டிருக்கும்பொழுது
மாண்புமிகு உறுப்பினர்களை முன்னதாகவே அணுகி நான் போகப்
போகிறேன், போவதற்கு முன்னாலே உங்களைக் கேட்கிறேன்,
பல்வேறு பிரச்னைகளை அங்கே எழுப்பலாம், நாங்கள் என்ன
செய்யவேண்டும், எந்த வகையிலே முடிவு எடுக்கவேண்டுமென்று
அமைச்சர் அவர்கள் அணுகினார்களா? அவர்களுக்கு அதைப்பற்றி
யெல்லாம் கவலையே கிடையாது. Absolute contempt for the
House. You must take us into confidence. அது இல்லாமல் இந்த
மன்றத்திலே எழுந்து சொல்லிவிட்டால் சாமர்த்தியமா?

ஆந்திராவிலே எவ்வளவு உபரி இருக்கிறது என்று
உங்களிடத்திலே கணக்கு இருக்கிறதா? தமிழ்நாட்டிலே எவ்வளவு
உபரியாக இருக்கிறது என்று கணக்கு இருக்கிறதா? அதை
யெல்லாம் சொன்னால்தானே அதைப்பற்றிச் சொல்ல முடியும்.
அதை வைத்துக்கொண்டிராமல் சாமர்த்தியமாகப் பதில்
கொடுத்தால் முடிந்துபோகுமா?

நான் கேட்கிறேன், கேரளத்திலே எவ்வளவு டெபிசிட், கணக்கு
இருக்கிறதா? ஆந்திராவிலே எவ்வளவு உபரி வருகிறது, கணக்கு
இருக்கிறதா? ஆந்திராவிலே எவ்வளவு உபரி வருகிறது கணக்கு
இருக்கிறதா? உங்களிடத்திலே • இப்பொழுது அந்தப் புள்ளி
விவரங்கள் எல்லாம் இருக்கிறதா என்று கேட்கிறேன், உங்களிடம்
இருக்காது. மோஸ்ட் இன்எஃபிஷியன்ட் ஆகத்தான் இருக்கிறது,
எஃபிஷியன்ஸி இருக்கிறது என்பதற்கு அடையாளமாக எதுவும்
பார்க்கமுடியவில்லை. உங்களிடம் புள்ளிவிவரங்கள் கிடையாது,
விவரங்கள் தெரியாது. இந்த மன்றத்தின் டேபிளிலே உங்களால்
புள்ளிவிவரங்கள் வைக்கப்படவில்லை. ஏதோ திடீரென்று
மாநாட்டிற்குப் போய் இருக்கிறீர்கள்—என்ன என்ன கருத்து

[1974 மார்ச் 22

[டாக்டர் எச். வி. ஹாண்டே]

சொல்லப்படுகிறது, என்ன காரணம் சொல்லப்படுகிறது என்பதைச் சொல்லவேண்டாமா? அதைவிட்டுவிட்டு பேசுவது சாமர்த்தியமா?

தமிழ்நாடு பாதிக்கப்படுகிறது என்றால் இங்கே அத்தனை கட்சித் தலைவர்களும் தொண்டர்களும் அதற்காகத் தயாராக இருக்கிறார்கள், ஏதோ இவர்கள்தான் நல்லது செய்கிறார்கள் என்பதுமாதிரியாக எதிர்க்கட்சிகள் ஒன்றும் செய்யாதது மாதிரியாகவும் தோற்றம் கொடுக்கத் தேவையில்லை. புள்ளி விவரங்களை இங்கே கொடுக்க வேண்டும். சம்பந்தம் இல்லாத, உண்மைக்கு மாறான உரையை இங்கே சமர்ப்பிப்பது இங்கே வழக்கமாகிவிட்டது. "இத்தகைய இருளார்ந்த சூழ்நிலையில் நாடு நலிந்து தவித்துக் கொண்டிருக்கையில், பொதுமக்களும் உற்பத்தியாளர்களும் மனநிறைவு பெறும் வகையில் தமிழ்நாடு தனித்து நின்று தன்னை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளைச் சமாளித்தது" என்று அறிக்கையிலே சொல்லியிருக்கிறீர்கள். எங்கே சமாளித்தீர்கள், எங்கே தனித்து நின்றீர்கள்? மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. அரிசி சாப்பிடுகின்றவர்களுக்கு, கோதுமை வாங்கக் கூடியவர்களுக்கு, யாருக்கும் எந்தவிதமான திருப்தியும் இல்லை. எனவே, உண்மைக்கு மாறாக, My charge is that the information given is totally and absolutely at variance of **facts.**

குழப்பமான நிலையை உண்டாக்குகின்ற அரசாங்கத்தின் இந்தச் செயலை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இப்பொழுது என்ன நிலைமை என்று படிப்படியாகப் பார்த்தால் அரிசி என்ன விலை விற்கிறது? 1 ரூபாய் 20 காசாக இருந்த அரிசி இன்றைக்கு 1 ரூபாய் 50 காசாக ஆகியிருக்கிறது. அதுவும் இரண்டாம் தரமான அரிசி, மட்டமான அரிசி. அதைப் பார்த்தால் சாப்பிடக்கூட முடியாது. சாப்பிடுவதற்காக அதைச் சுத்தப் படுத்தினால், ஒரு கிலோ அரிசியை சுத்தப்படுத்தினால் அரை கிலோதான் மிச்சம் இருக்கிறது. அப்படிப்பட்ட அரிசி 1 ரூபாய் 50 காசுக்கு விற்கப்படுகிறது.



1974 மார்ச் 22]

[டாக்டர் எச். வி. ஹாண்டே]

மார்ச் மாதத்திலே என்று போட்டு, 216-லிருந்து 241-ஆக உயர்ந்திருக்கிறது, 22 சதவிகிதமாக இருக்கிறது என்று புள்ளி விவரத்தைத் தருகிறீர்கள். இப்படித் திடீரென்று உயர்த்தினீர்களே, அதற்குக் கணக்குக் காட்டப்பட்டிருக்கிறதா? கிடையாது. இது பழைய கணக்கு. பழைய கணக்கைச் சமர்ப்பித்தால் முடியுமா?

அரிசி விலை உயர்வினால், சாதாரண, நார்மல் ஃபேமிலியாக இருக்கக்கூடிய நிலையில், கணவன், மனைவி, 3 குழந்தைகள் ஆக மொத்தம் 5 பேர் இருக்கின்ற குடும்பத்திற்கு மட்டும் மாதம் 1-க்கு 25 ரூபாய் அதிகமாகக் கொடுக்கும் துர்ப்பாக்கியமான நிலையை வைத்துக்கொண்டு நீங்கள் என்ன செய்தீர்கள்? உங்களுடைய திறமையின்மையைத்தான் காட்டினீர்கள். உங்களுடைய இலாக்கா, அமைச்சர், அமைச்சரவை இந்த முக்கியப் பொறுப்பிலே செய்ய வேண்டிய கடமையிலேயிருந்து தவறிய திறமையின்மையைத்தான் முழுமையாகக் காட்டினீர்கள் என்ற மாபெரும் குற்றச்சாட்டை உங்கள்மீது சுமத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகள் கஷ்டப்பட்டு உற்பத்தியைப் பெருக்குகிறார்கள். விவசாயிகளுடைய திறமையினால் உற்பத்தியைப் பெருக்குகிறார்கள். ஆனால் உங்களுடைய திறமையின்மையால் அது சரியாகப் பொதுமக்களுக்கு வழங்கப்படவில்லை. தலையாட்டுகிறார் மாண்புமிகு அமைச்சரவர்கள். எனக்கு உங்கள்மீது கோபம் இல்லை. உங்களுடைய திறமையின்மை என்று சொல்வதற்குக் காரணம், அவ்வளவு உற்பத்தியான பிறகு ஏன் பொதுமக்களுக்குப் போய்ச் சேரவில்லை என்பதுதான். அதிகாரிகள் என்ன செய்தார்கள்?

'இஷ்யூ ஆஃப் ரேஷன் கார்ட்ஸ்' சரியான முறையில் கொடுக்க முடியவில்லை. எங்கே உங்கள் திறமையிருக்கிறது? சாதாரண ரேஷன் கார்டுகளைக் கூட சரியாக விநியோகம் செய்ய முடியவில்லை. "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர்" என்றபடி விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆனால் அதிகாரிகள் அந்த அரிசியை கார்டு மூலம் சரியாக விநியோகம் செய்தார்களா? அதற்கு எவ்வளவு பெரிய க்யூ? எதற்காக அந்த க்யூ?

[1974 மார்ச் 22

[டாக்டர் எச். வி. ஹாண்டே]

ஒரு அடிப்படையான சாதாரண விஷயம். அந்த ரேஷன் கார்டுகளை சரியாக விநியோகிக்கவில்லை. நான்கு நாட்கள் அடிதடி, அண்ணாநகரிலே அடிதடி, ராயப்பேட்டையிலே அடிதடி, இப்படி சென்னை முழுவதும் அதற்காக அடிதடி. இந்து, எக்ஸ்பிரஸ், மெயில், தினமணி போன்ற பல பத்திரிகைகளில் போட்டிருக்கிறார்கள். போட்டோவோடு போட்டிருக்கிறார்கள். நேற்றுகூட நான் அமைச்சரிடத்திலே சொன்னேன். ஏதோ செய்கிறார்கள் என்று மொட்டையாகப் பதில் கொடுக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று சொல்ல முடியுமா? யார் காரணம், எந்த அதிகாரி காரணம் என்று அவ்வளவு தெரியாதா உங்களுக்கு?

சாதாரண ரேஷன் கார்டுகளை இஷ்யூ செய்கின்ற முறைகூடத் தெரியாதா? திறமையாக அதைச் செய்யக்கூடாதா? ஒரு நாளைக்கு ஒரு உத்தரவு, அடுத்த நாளைக்கு இன்னொரு உத்தரவு, மூன்றாவது நாளைக்கு இன்னொரு உத்தரவு. இப்படி உத்தரவுக்கு மேல் உத்தரவு.

அடுத்தபடியாக உங்கள் வீட்டிற்கே அனுப்பப்படும் என்று சொல்கிறார்கள். அதை நம்பியிருப்பவர்களின் கதி அதோகதியாகத்தான் இருக்கப் போகிறது. அரிசி ரேஷன் கார்டு வீட்டிற்கு வருகிறது என்று சொன்னால் அது வருகிறதா? போய்க் கேட்டாலே கிடைக்கவில்லை. இதில் விளக்கம் வேறு. இதற்கு யார் பொறுப்பு?

நல்ல காரியம் என்றால் உடனே அமைச்சர் மார் தட்டிக் கொண்டு, பார்த்தீர்களா என்று சொல்வார்கள். ஆனால், தவறான காரியம் செய்துவிட்டால் அதற்கு அரசாங்க அதிகாரிகள்தான் காரணம், நம்முடைய பொறுப்பு அல்ல என்று பொறுப்பைத் தட்டிக் கழிப்பார் நம்முடைய அமைச்சரவர்கள். இப்படிப்பட்ட தவறான காரியத்திற்கு, திறமையின்மையைக் காட்டியதற்கு, மூல காரணமே மாண்புமிகு அமைச்சர் மன்னை நாராயணசாமி அவர்கள்தான் என்ற குற்றச்சாட்டை இந்த மன்றத்தில் நான் சாட்டுகிறேன். இதற்குப் பதில் கொடுக்க வேண்டும்.



1974 மார்ச் 22]

[டாக்டர் எச். வி. ஹாண்டே]

அடுத்தபடியாக, அரிசியைப்பற்றி நாங்கள் எத்தனை தடவைகள் இங்கே சொன்னோம். கவர்னர் உரையிலே பேசுகின்ற நேரத்திலேயும்கூடச் சொன்னோம். கடத்தல் நடந்து கொண்டிருக்கிறது, பலயிடங்களில் நடந்து கொண்டிருக்கிறது என்று பல தடவைகள் இந்த இடத்திலே நாங்கள் சொன்னோம். கேட்டார்களா? அதற்கு ஏதாவது ஒரு பதிலைக் கொடுத்தார்களே தவிர அதைக் கட்டுப்படுத்தவில்லையே. கடத்தல் நடக்கிறது என்ற குற்றச்சாட்டிற்குச் சரியான வகையில் பதில் கொடுக்க முடியவில்லை. பலயிடங்களில் கடத்திக்கொண்டு போயிருக்கிறார்கள். பலயிடங்களில் லாரிகள் எல்லாம் வைக்கப்பட்டிருக்கின்றன. வெட்டுத் தீர்மானம் கூடக் கொடுத்து வெட்டுத் தீர்மானம் 626-ல், "தென்னார்க்காடு மாவட்டம் வளவனூரில் 22—11—1973 அன்று கோதுமை கடத்தி வந்த லாரி ஒன்று பிடிபட்டது குறித்து விவாதிக்க" என்று கொடுத்திருக்கிறேன். லாரிக்கு என்ன ஆயிற்று, பிறகு அந்த லாரியின் நிலைமை என்ன? நம்பர் எல்லாம் என்னிடத்தில் இருக்கிறது. பிறகு அதை விசாரித்துக் கண்டு பிடித்தீர்களா? சிம்பல் எஸ்.எம்.டி., ரிஜிஸ்தர் டிஎன்ஜே 1006. வேறு ஏதோ நம்பர் போட்டிருக்கிறார்கள். பிறகு தென்னார்க்காடு மாவட்டத்தில் அந்த லாரி சுற்றிக்கொண்டிருக்கிறது. நான் சிம்பலைக் கொடுத்து விட்டேன், இதற்கு மேல் விவரம் தேவையில்லை. நான்கு நாட்கள் போலீஸ் ஸ்டேஷனில் வைத்திருந்தார்கள். ஆனால், கேஸ்கூட ரெஜிஸ்தர் செய்யவில்லை. எந்தக் கேசும் இல்லை. மூன்று, நான்கு நாட்கள் இருந்திருக்கிறது. பிறகு அந்த லாரி அங்கேயிருந்து காணாமல் போய்விட்டது.

வளவனூரிலிருந்த பொதுமக்கள் பெரிய போராட்டம் நடத்தி அங்கே தங்களுக்கு இருக்கும் அதிருப்தியையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனக்கு வந்த தகவலை நான் சொல்கிறேன். எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பதற்காகச் சொன்னேன். இப்படிப் பலயிடங்களில் நடந்துகொண்டிருக்கிறது. பொது மக்கள் முயற்சி எடுத்துப் பிடித்துக் கொடுக்கிறார்கள். எப்படி வெற்றி பெற முடியும்?

[1974 மார்ச் 22

[டாக்டர் எச். வி. ஹாண்டே]

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயராமன் அவர்கள்கூடச் சொன்னார்கள். எப்படி வெற்றி பெற முடியும் என்று கேட்கிறேன். பிடித்துக் கொடுத்த பிறகு, பிடித்து போலீஸ் ஸ்டேஷனில் கொடுத்த பிறகு, லாரியை வைத்த பிறகு தப்பித்துக் கொண்டார்கள் என்று சொன்னால் என்ன செய்ய முடியும்? நான் அதைத்தான் சொன்னேன். விவசாயிகள் எவ்வளவோ கஷ்டப்பட்டு உற்பத்தி செய்து கொடுத்ததை கடத்திச் செல்லும்பொழுது அதைச் சரியான முறையில் பிடிக்கவில்லை என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

திருக்கோயிலூரில் ஒரு வியாபாரிக்கு ரேஷன் அரிசியை விநியோகம் செய்வதற்கு அதிகாரம் கொடுத்தார்கள். அந்த வியாபாரி 'இன்சால்வென்சி பெட்டிஷன்' கொடுத்தவர். இந்த அரசாங்கத்திற்கு எத்தனை தடவை சொன்னாலும் எடுத்துக்கொள்ள மாட்டேன் என்கிறார்கள். கவர்னர் உரையிலேயே பேசும் நேரத்தில் சொன்னேன். விவரங்களை அத்தனையையும் கொடுத்தேன். அவருக்கு எப்படிக் கொடுத்தார்கள்? இதற்கு மூல காரணம் யார்? கவர்னர் உரையிலேயே பேசும்பொழுது சொன்னேன். முதலமைச்சரவர்கள் பதில் கொடுத்தார்கள். அந்தப் பதில் திருப்தியாக இல்லை. பிடிக்கப்பட்டவர்கள் யார் மேலே யாவது வழக்குப் போட்டீர்களா? அவர்கள் தப்பித்துக்கொண்டு போகிறார்கள். இன்சால்வென்சி பெட்டிஷன் கொடுத்த பிறகு என் அரசாங்கம் அவருக்குக் கொடுத்தது? திருக்கோயிலூரிலிருந்து வந்தவர்கள் இந்தக் குறையை என்னிடத்தில் சொன்னார்கள். அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தொண்டர்கள்.

ஆனால், அப்படிச் சொன்னவர்களையே அடித்து நொறுக்க, பலருக்குக் காயம் ஏற்பட்டு பத்திரிகைகளில் கூட வந்திருக்கிறது. அவர்கள் சொன்னார்கள் என்பதால் நான் கவர்னர் உரையிலே சொன்னேன். ஆனால், அவர்களை அடித்து இந்த விஷயத்தை ஏன் ஹாண்டேயிடம் சொன்னீர்கள், எப்படிச் சொல்லலாம் என்று அடிக்கிறார்கள். நீங்கள் நல்ல காரியம் செய்ய வேண்டுமென்று அரசாங்கத்திற்கு வாய்ப்பு தருகிறேன். என்ன நடந்திருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுகிறேன். திருத்திக் கொள்வதற்காக



1974 மார்ச் 22]

[டாக்டர் எச். வி. ஹாண்டே]

இப்படிப்பட்ட வாய்ப்பைக் கொடுத்து, ஆதாரத்தோடு எல்லா விஷயங்களையும் சொன்னதற்குப் பிறகு, இந்தத் தகவலை ஹாண்டேயிடம் சொன்னாயாமே, அதற்காக இந்தத் தண்டனை என்று அடித்துப் போடுகிறார்கள், பெரிய பெரிய வேட்டை நாய்களை விடுகிறார்கள். நேற்று காலையில்கூடச் சந்தித்தார்கள், அழுதார்கள். என்னிடத்தில் இந்தத் தகவலை கொடுத்துப் போயிருக்கிறார்கள். எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், நல்லதாகச் சொன்னாலும்கூட நீங்கள் இந்தமாதிரி தவறு செய்பவர்களுக்கு உடந்தையாக, சாதகமாக இருக்கிறீர்களே தவிர, தவறு செய்பவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இன்னும் பல விஷயங்கள் இருக்கின்றன. ரேஷன் ஷாப்புகளுக்கு லைசென்ஸ் கொடுக்கும் முறையில் எப்படி செயல்படுகிறீர்கள்? இஷ்டம்போல் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகையில் உத்தரவு போட்டுக் கொண்டிருக்கிறீர்களே தவிர, ரேஷன் கடைகளைப் பொறுத்த வரையில் திட்டவட்டமாக எந்த விதமான சந்தேகத்திற்கும் இடமில்லாத வகையிலே எப்படி நீங்கள் அவர்களுக்கு லைசென்ஸ் கொடுக்கப் போகின்றீர்கள்? கூட்டுறவுச் சங்கங்களுக்கு எவ்வளவு? ஃபேர் பிரைஸ் ஷாப்புக்களுக்கு எவ்வளவு என்று சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் செய்யுங்கள். அதை யார் வேண்டாமென்று சொன்னது. அதற்கு நாங்கள் அத்தனை பேரும் ஆதரவு கொடுக்கிறோம். எனவே, தாக்க வேண்டுமென்ற அடிப்படையில் நாங்கள் சொல்லவில்லை. திட்டவட்டமாகச் சொல்கிறோம், Take us into confidence அப்படிச் செய்யுங்கள். எங்கு பார்த்தாலும் சந்தேகமற்ற நிலைமையை உருவாக்க வேண்டும், திட்டவட்டமான ஒரு கொள்கையை உருவாக்க வேண்டும். ஃபேர் பிரைஸ் ரேஷன் ஷாப்புக்காக என்ற அந்த வகையிலே யார் யாருக்கு அனுமதி கொடுக்கிறீர்கள் என்ற விஷயத்தைச் சொல்ல வேண்டும்.

கோதுமை பற்றிப் பேசினார்கள். என்ன பயன்? கோதுமை கள்ளமார்க்கெட்டில் ஏராளமாகக் கிடைக்கிறது என்ற தகவல் இருக்கிறது. ஆனால், கிடைக்க வேண்டிய இடத்தில் நியாயமான ரேட்டில் கிடைக்கவில்லை என்பதுதான் குற்றச்சாட்டு.

[டாக்டர் எச். வி. ஹாண்டே]

நீங்கள் மாநாட்டுக்குப் போனீர்களே? எவ்வளவு கோதுமை வாங்கிக்கொண்டு வந்தீர்கள்? எவ்வளவு வாங்க முடிந்தது? அது டாப் சீக்ரட்டா? எங்களுக்குச் சொல்லக் கூடாதா? பறந்து போய் வந்தார்கள். எவ்வளவு கோதுமை கொடுக்கிறேன் என்று சொன்னார்கள்? இதையெல்லாம் இங்கே சொல்லக் கூடாதா?

மைதா மாவு ரொட்டி செய்கிறவர்களுக்குச் சரியான முறையில் கிடைக்கவில்லை. பெட்டிஷன்கள், கம்ப்ளெயின்ட்கள் பல இடங்களில் இருந்து வந்திருக்கின்றன.

விவசாயிகளின் ஆயில் எஞ்சின் பம்ப் செட்டுக்கு ஆயில் கொடுக்கிறீர்களா? மின்சார வெட்டு ஒரு பக்கத்தில். அதைப் பற்றி இப்போது சொல்லக்கூடாது என்று சொல்வார்கள். விவசாயிகளுடைய ஆயில் எஞ்சின்களுக்கு எண்ணெய் கொடுக்க வேண்டிய பொறுப்பு உணவு அமைச்சருடைய பொறுப்புதானே. பிளாக் மார்க்கெட்டில் எண்ணெய் விற்கப்படுகிறது. ஆனால், உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு எண்ணெய் கிடைக்கவில்லை. எவ்வளவு பெரிய பயங்கரமான நிலைமை? இதைத் தவிர்க்க முடியாதா?

மண்ணெண்ணெய் நிலைமை எப்படி இருக்கிறது? அதற்காக பல இடங்களில் க்யூ, அடிக்கடி, ரகளை நடக்கிறது. உங்களுக்குக் கொஞ்சம் கூட இரக்கம் கிடையாதா? நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்? அதிகாரிகள் என்ன செய்கிறார்கள் என்று தெரியவில்லை. இத்தனை அதிகாரிகள், பெரிய அறிவாளிகள் இருக்கக் கூடிய இலாகா என்று சொல்லப்படுகிறது. நாங்கள் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

சௌத் ஸோனைப் பொறுத்தவரை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சொல்வது என்னவென்றால் திட்டவட்டமாகப் புள்ளிவிவரங்களைக் கொடுங்கள். நம்முடைய மாநிலத்திலே அரிசியோ, மற்றப் பொருள்களோ குறைவாகக் கிடைக்கக்கூடிய நிலைமை இருந்தால் சௌத் ஸோனை நிச்சயமாக ஏற்றுக்கொள்ள மாட்டோம். நாங்கள் எதிர்க்கிறோம். புள்ளி விவரத்தைக் கொடுங்கள். நம்மைப் பொறுத்தவரை நம்முடைய மாநிலத்திற்கு பஸ்ட் ப்ரிபரன்ஸ்.



[டாக்டர் எச். வி. ஹாண்டே]

மதிப்பிற்குரிய அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னது மாதிரி கடத்தல் நடந்து கொண்டிருக்கிறது. எவ்வளவு டெலகிராம்ஸ் வந்திருக்கின்றன? நானும் எழுதியிருக்கிறேன். வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறேன். ஒரு பக்கத்தில் கட்டுப்பாடு. மற்றொரு பக்கத்தில் கடத்தல் போய்க் கொண்டிருக்கிறது.

குமரி மாவட்டத்தில் பயங்கரமான நிலைமை. படி அரிசி ஐந்தாறு ரூபாய் விற்கிறது. அதைப்பற்றி யாருக்கும் எந்த விதமான கவலையும் கிடையாது.

இப்படிக் கோளாறாக இருக்கும் இந்த நேரத்தில் நாங்கள் சொல்வது நம்முடைய கட்சியின் சார்பாகத் திட்டமாகச் சொல்லுகிறேன்—நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை சௌத் ஸோனை நாங்கள் ஆதரிக்க மாட்டோம் என்று கூறி அந்தப் புள்ளி விவரங்களைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய முழு அதிருப்தியை, இந்த இலாகா நல்ல முறையில் செயல்படவில்லை என்பதற்காக என்னுடைய முழு அதிருப்தியை, கடுமையான அதிருப்தியைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவர் அவர்களே, இங்கே அச்சடித்துக் கொடுக்கப்பட்டிருக்கும் புத்தகத்தில், தமிழில் கொடுக்கப்பட்டிருக்கும் புத்தகத்தில், 7-ம் பக்கத்தில் துவரம் பருப்பு இவ்வளவு, உளுத்தம் பருப்பு இவ்வளவு என்ற விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அது டன்னா, கிலோவா, குவிண்டாலா ஒன்றுமே காணோம். 46,000, 65,000, 1,11,000 என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் டன் சாப்பிடுகிறோமா, கிலோ சாப்பிடுகிறோமா என்று ஏதாவது தெரிந்தால் பேசுவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** இந்தப் புத்தகமே சரியாக இல்லை. முழுக்க முழுக்க தலைகீழாக இருக்கிறது.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு பற்றி போடப்பட்டிருக்கிற விவரங்கள் எல்லாம் டன்தான். சாப்பிடுவது என்று போடவில்லை, வருவது என்று போடப்பட்டிருக்கிறது.

[1974 மார்ச் 22

[திரு. மன்னை ப. நாராயணசாமி]

தலைவர் அவர்களே, நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்கள் அவர்களிடம் சொல்லிவிட்டுப் போகவில்லை என்று சொன்னார்கள். புள்ளிவிவரம் இப்போது கொடுக்க முடியுமா என்று சவால் விட்டார்கள். நாங்கள் புள்ளிவிவரம் எல்லாம் தருகிறோம். அவர் பெரிய புத்திசாலியாயிற்றே, கடைசியில் அவர் புள்ளிவிவரம் கொடுப்பார் என்று பார்த்தேன். ஒன்றையும் காணோம். அவர் சொல்லுகின்ற நிலைமை எல்லாம் தெரியும். எதை வைத்துச் சொல்லுகிறார்? காரசாரமாகப் பேசி பத்திரிகையில் வரவேண்டுமென்பதற்காகச் சொல்லுகிறார். அவர் எங்களைப் பார்த்தே பேசிக் கொண்டிருக்கிறார். தயவுசெய்து உங்களைப் பார்த்து பேசச் சொல்லுங்கள்.

THIRU G. R. EDMUND: Unwanted commentary. I am raising a Point of Order.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** நான் பேசி முடித்ததும் சொல்லுங்கள். இங்கே பார்த்து கையை நீட்டி நீட்டிப் பேசுகிறார். கை கொஞ்சம் நீளமாக இருந்தால் குத்தி விடுவார்கள் போல் இருக்கிறது. அவருக்கு வீரம் இருக்கலாம் தைரியம் இருக்கலாம், ஆனாலும் கொஞ்சம் சட்டசபையின் கவுரவம், நிலைமைகளைப் பார்த்துப் பேசவேண்டும். அமைச்சரை நேரடியாகப் பார்த்து ஒன்றும் தெரியாது, ஒன்றும் இல்லையென்று சொல்லுவதை விட சபாநாயகர் மூலமாகத் தெரிவித்தால் திருத்திக்கொள்ள வசதியாக இருக்கும்.

ஆயில் என்ஜினுக்கு எண்ணெய் கொடுக்கும் பொறுப்பு உணவு அமைச்சருக்கு இல்லை. அவர் ரொம்ப அழுத்தமாகச் சொன்னார் அதையாவது தெரிந்து சொல்லியிருக்கலாம்.

DR. H. V. HANDE: On a point of personal explanation

அமைச்சர் அவர்கள் தன்னைப் பார்த்து கையைக் காட்டி சொல்லக் கூடாது என்று சொல்லுகிறார்கள். நாங்கள் பேசுகின்ற மரபு என்னவென்றால் நாங்கள் நேராகப் பார்த்துப் பேசினாலும் முதலமைச்சர் அவர்களும் நேராகப் பார்த்துப் பேசினாலும்



1974 மார்ச் 22]

[டாக்டர் எச். வி. ஹாண்டே]

பேசுகின்ற பொருள் உங்கள் மூலமாகத்தான் போகிறது. அதுதான் அடிப்படை, சட்டசபையின் மரபு என்பது மதிப்பிற்குரிய அமைச்சருக்குத் தெரியவில்லை என்று வருத்தப்படுகிறேன்.

நான் பேசும்போது ஒரு தவறான வார்த்தையைக் கூடப் பயன்படுத்தவில்லை. அப்படிப் பயன்படுத்தி இருந்தால் ஆட்சேபணை செய்யுங்கள், நடவடிக்கை எடுங்கள். கண்ணியமாக என்னுடைய பேச்சு இருந்தது. காட்டமாக இருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கூடுமானவரை உறுப்பினர்கள் பேசுகின்ற நேரத்தில் 'நீங்கள்' என்று மற்ற உறுப்பினர்களையோ அமைச்சர்களையோ பார்த்துப் பேசக் கூடாது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** நீங்கள் என்று சொன்னால் அது சபாநாயகரைக் குறிப்பிடவில்லை. சொல்ல வேண்டிய கருத்தைச் சொல்லுகிறோம். என்ன சொல்ல வேண்டுமோ அதை அமைச்சரிடத்தில் சொல்லியிருக்கிறேன். அதைச் சரியான வகையில் சொல்லியிருக்கிறேன். அவருக்குப் புரிந்திருக்கிறது. இப்போது அவர் செய்வது பத்திரிகை விளம்பரத்திற்காகச் சொல்லுவதாகும்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** இவர் மகா புத்திசாலி என்று இப்போதுதான் தெரிகிறது. அவர் பேசும்போது உங்களைப் பார்த்துப் பேசவேண்டுமே தவிர, இங்கே பார்த்துக்கொண்டு அமைச்சருக்கு ஒன்றும் தெரியவில்லை என்று பேசுவது முறையல்ல.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்தப் புள்ளிவிவரங்களைப் பொறுத்தவரை அங்கத்தினர்கள் எல்லாப் புள்ளிவிவரங்களையும் தெரிந்துகொள்ள வாய்ப்பு இல்லை என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசாங்கம் புள்ளிவிவரங்களைத் தெரிந்து கொள்வதற்கு எல்லா வகையிலும் வாய்ப்பும் வசதிகளும் இருக்கின்றன. முன்பு மதிப்பிற்குரிய தலைவர் அண்ணா அவர்கள் இந்த மன்றத்தில் பேசுகின்றபோது புள்ளிவிவரத்தைப் பற்றி இதே கருத்தைத்தான் சொல்லியிருக்கிறார்கள் என்பதையும் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆளும் கட்சியிலுள்ளவர்கள் புள்ளிவிவரங்களைக் கொடுத்தால்தான் எங்களுடைய கருத்துக்களை எல்லாம் சொல்ல ஏதுவாக இருக்கும்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

ஆகவே, யார் புத்திசாலி என்ற விவாதத்திற்குள்ளே இறங்காமல் இந்த மன்றத்தின் மரபைக் காப்பாற்றுகின்ற முறையில் நடந்து கொள்ள வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவையில் பேசுகிற நேரத்தில் கருத்துக்களைச் சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் அமைச்சரைப் பார்த்து புத்திசாலியான அமைச்சர் என்று சொல்கிற கூற்றும் முறையற்றது. அதைச் சொல்கிற காரணத்தால் அமைச்சர்களும் உறுப்பினர்களைப் பார்த்து மகாபுத்திசாலி என்று சொல்வதும் முறையற்றதாகும். இந்த இரண்டு முறைகளும் தவிர்க்கப்படவேண்டும். உறுப்பினர் அமைச்சரைப் பார்த்து புத்திசாலி என்று சொல்வதும் அமைச்சர் உறுப்பினரைப் பாாத்து மகா புத்திசாலி என்று சொல்கிற முறையும் வரவேற்கக் கூடியதல்ல.

இரண்டாவதாக, நான் அவையில் பலமுறை சொல்லியிருக்கிறேன். வேகத்தைக் குறைப்பதற்காக வேண்டித்தான் பேசுகிற உறுப்பினர்கள் சபாநாயகர் அவர்களைப் பார்த்துப் பேசவேண்டும் என்றிருக்கிறது. நேரிலே இருக்கிற அமைச்சரைப் பார்த்துப் பேசுகிற நேரத்தில் நீங்கள், நீ என்று சொல்கிற அந்த வார்த்தைகளை உபயோகிக்கக் கூடாது என்ற முறையில் இங்கு பல முறை தீர்ப்பளிக்கப்பட்டிருக்கின்றது.

'The expression 'you' நீங்கள் refers to the Chair and should not be used when the Chair is not referred to.

When addressing the other Members, Members should not use the expression 'you' as it would refer only to Chair.

Use of the word 'You' நீங்கள் with reference to another Member or Party should be avoided.

Reference to the Members of a party should be by the name of the party and not by the word 'You' which has reference only to the Chair.'



[பேரவைத் தலைவர்]

இப்படி பல தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. (குறுக்கீடு) முதல் அமைச்சர் அவர்கள் பேசுகிற நேரத்திலும் சரி அல்லது உறுப்பினர்கள் பேசுகிற நேரத்திலும் சரி பொதுவாக ஒரு மரபு இருக்கிறது. அந்த மரபை இந்த மன்ற உறுப்பினர்கள் எல்லோரும் மதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மு. சுருளிவேல் :** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கோரியிருக்கக்கூடிய உணவு வழங்கு துறை மானியத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்ததற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1967-க்குப் பிறகு தமிழ்நாட்டினுடைய ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நம்முடைய இதய தெய்வம் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய அமைச்சரவை உணவு உற்பத்தியில் எந்த அளவிற்கு ஒரு புரட்சிகரமான சாதனையைச் செய்திருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் இருக்கக்கூடிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். ஆனால் சபைக்கு வராமலேயே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதெல்லாம் வேண்டாம். உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

**திரு. மு. சுருளிவேல் :** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் அண்ணா தி.மு.க. சார்பில் பேசுகிற நேரத்தில் இந்த அமைச்சரவை மோஸ்ட் இன்எபிஷியன்ட் என்று குறிப்பிட்டார்கள். நான் அதை வாதத்திற்காக ஒப்புக் கொள்கிறேன். எதிலே எங்களுக்கு எபிஷியன்ஸி இருக்கிறதோ இல்லையோ நிச்சயமாக அரிசி கடத்துவதில் எங்களுக்கு, இந்த அமைச்சரவைக்கோ அல்லது அமைச்சரவையை நடத்துகிற திராவிட முன்னேற்றக் கழகத்திற்கோ நிச்சயமாக எபிஷியன்ஸி இல்லை என்பதை அரிசி கடத்தல் விஷயத்தில் நான் தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் நான் கேரள மாநிலப் பகுதியை ஒட்டியிருக்கக் கூடிய போடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** யாரோ சிலர் செய்வதை வைத்து மாநிலம் என்ற அளவில் வர வேண்டாம்.

[1974 மார்ச் 22

**திரு. மு. சுருளிவேல் :** கேரளாவிற்கு கடத்துபவர்களைப் பற்றி நான் புள்ளிவிவரங்களோடு ஆதாரங்களோடு இன்றையதினம் கூற முடியும். அண்ணா தி.மு.க.-வைச் சேர்ந்த ஒருவர் ஜீனியில் ரவையைக் கலந்து விற்றார் என்ற குற்றத்திற்காக நீதிமன்றத்தில் ஆயிரம் ரூபாய் தண்டிக்கப்பட்டார். அவர் பெயர் சுப்பிரமணி. அதற்குப் பிறகு அரிசி விநியோகம் செய்வதற்காக அமைச்சரைப் பார்க்கவேண்டுமென்று அணுகினார். நான் மறுத்துவிட்டேன். அதன் காரணமாக அவர் இன்று அண்ணா தி.மு.க.-வில் சேர்ந்திருக்கிறார். அவர் ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டவர், நீதிமன்றத்தில் தண்டனை பெற்றவர். அவர் அண்ணா தி.மு.க.-வில் சாதாரண உறுப்பினராகச் சேர்ந்து குறுகிய காலத்திற்குள்ளே இன்றையதினம் பொதுக் குழு உறுப்பினராக அவர் நியமிக்கப் பட்டிருக்கிறார். இதை மாண்புமிகு உறுப்பினர் எட்மண்ட் மறுக்க முடியாது.

**திரு. க. உரோ. எட்மண்ட் :** நண்பர் சுருளிவேல் பேசும்போது கடத்தல் செய்து ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்ட பின்னர் உறுப்பினர் அவர்களுடைய உதவியை நாடியதாகவும் அப்படி அவர் உதவி செய்ய மறுத்ததினால் அவர் அண்ணா தி.மு.க.-வில் சேர்ந்ததாகவும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே உண்மையில் தவறு செய்து அபராதம் விதிக்கிறபோது அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தார் என்பதை ஒப்புக் கொள்கிறாரா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தவறு செய்தவர்களை யெல்லாம் அண்ணா தி.மு.க.-வில் சேர்த்துக்கொள்கிறீர்களா?

**திரு. க. உரோ. எட்மண்ட் :** தவறு செய்தவர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஏராளமாக இடம் இருக்கிறது என்பது தெரியும். * *

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் இந்த விவாதத்தில் * * மாண்புமிகு எட்மண்ட் அவர்கள் வீணாக * * அவர்களின் பெயரை இழுத்து

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1974 மார்ச் 22] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்

அவரது பெயருக்கு ஒரு மாசு கற்பிக்கிறார். அதை நான் வன்மையாக ஆட்சேபிக்கிறேன். அதுகுறித்து தங்கள் ரூலிங்கை எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எட்மண்ட் அவர்கள் * * அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டதை நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

**திரு. பெ. சீனிவாசன் :** கூடாது. I object to it.

(கூச்சல், குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எட்மண்ட் அவர்கள் ஒரு வார்த்தையைச் சொன்னார்கள். அந்த வார்த்தை இந்த அவையின் மாபைக் காக்கக்கூடிய முறையில் இல்லாததால் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன் என்று சொன்னேன். நீக்கக் கூடாது என்று சொல்வது, பேரவைத் தலைவர் தீர்ப்புக் கொடுத்த பிறகு அதை நீக்கக்கூடாது என்று சொல்வது எந்த அளவில் முறை என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

மற்ற உறுப்பினர்கள் தவறு செய்கிறார்கள் என்றால் திரு. சீனிவாசன் அவர்கள் இந்தப் பொறுப்பில் இருந்தவர். அவர்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டும்? மற்றவர்கள் உணர்ச்சிவசப்படுகிறார்கள் என்றால் திரு. சீனிவாசன் அவர்களும் உணர்ச்சிவசப்படுகிற ஒரு முறை இருந்தால் இந்த அவையை நல்லமுறையில் நடத்தமுடியாது. பேரவைத் தலைவர் நின்று கொண்டிருக்கும்போது மற்றவர்கள் நின்று கொண்டிருக்கக் கூடாது. அந்த முறையைப் பின்பற்ற வேண்டும். திரு. எட்மண்ட் அவர்கள் * * அவர்களைப் பற்றிக் குறிப்பிட்ட அந்த வாக்கியத்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சீனிவாசன், நான் உங்களுக்கு வாய்ப்பு தருகிறேன்.

THIRU M. A. LATHEEF : Sir, on a point of order....

THIRU P. SEENIVASAN : Sir, on a point of personal explanation. This will apper in the Press and that will tarnish my name. I am a politician. My name should not be tarnished on the floor of the House.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[1974 மார்ச் 22

**திரு. எம். ஏ. லத்தீப் :** இந்த மன்றத்தில் உறுப்பினர்கள் பேசும்போது எவ்வளவுதான் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் எவ்வளவுதான் ஒரு எண்ணத்திற்கு மாறுபட்ட கருத்தை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டாலும் நாம் இந்த மன்றத்தின் கண்ணியத்தை கடைப்பிடிக்கக்கூடிய முறையில், நாம் இந்த மன்றத்தின் கண்ணியத்திற்கு உதாரணமாக விளங்கக் கூடியவர்கள் என்ற முறையில் இருக்கிறோம். * * என்று பரிமாறிக் கொண்ட வார்த்தையை இந்த அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவை அவைக் குறிப்பிலேயே ஏறாது.

**திரு. பெ. சீனிவாசன் :** பேரவைத் தலைவரின் தீர்ப்பை நான் மறுத்துப் பேசுவதாகக் கருதவேண்டியதில்லை. திரு. எட்மண்ட் அவர்கள் * * என்று சொன்னார்கள். உடனே இவ்வளவு தூரம் ஆளும் தரப்பிலிருந்தும் தோழமைக் கட்சியினரும் ஆத்திரப்படுகிறார்கள்.

எங்கள் கட்சித் தலைவரைப் பற்றி இன்று திரு. வீராசாமி அவர்கள் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டரை எழுப்பினார்கள். அதைக் கேட்டுக்கொண்டிருந்தீர்கள், இதை நீக்கவேண்டும் என்று சொல்கிறீர்கள். எங்கள் தரப்பிலிருந்து ஒரு வேண்டுகோள் வரும்போது சரியான நியாயம் பெறவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். * * * அவர்களைப் பற்றி ஒரு கருத்தை சொன்னவுடன் அதை நீக்க வேண்டுமென்று இவ்வளவு பேர்களும் ஆவேசத்தோடு சொல்கிறார்கள்.

எங்கள் தலைவர், அவர்கள் சபைக்கு வருவது அல்லது வராதது என்பது அவர்களுடைய விருப்பம். அதற்கான காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் எழுந்து பேசுகிற நேரங்களில் அங்கிருந்து குரல் எழுப்பி உட்கார்ந்து கொண்டு பேசுவதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். அந்த முறையை இந்தப் பேரவையில் வளர்க்கக்கூடாது. அந்த முறையை வளர்ப்போமானால், உரத்த குரல் எழுப்பி எங்களை அல்லது எங்கள் கருத்துக்களை அடக்க முயற்சி செய்தால் நாங்கள் 12 பேர்களே இருந்தாலும் எங்களாலும் அதைப்போல் செய்ய முடியும்.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1974 மார்ச் 22]

(முற்பகல் 11-30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது நல்லதல்ல. உங்களுடைய பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்பதைச் சொல்லுங்கள். திரு. சீனிவாசன், உங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்று சொல்லுங்கள்.

**திரு. பெ. சீனிவாசன் :** சட்டசபை ஆளும் கட்சிக்கு மட்டும் சொந்தமா சொல்லுங்கள். இஷ்டம்போல் உட்கார்ந்து கொண்டு பேசுவது என்றால் . . .

(பல உறுப்பினர்கள் குரலெழுப்பினர்)

**திரு. நா. வீராசாமி :** 12 பேர் இருந்தால் என்ன செய்து விடுவீர்கள் ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சீனிவாசன் அவர்கள் ஒரு கருத்தை எழுப்பினார்கள். "காலையிலே எங்கள் கட்சித் தலைவரைப் பற்றி குறிப்பிடப்பட்டதை நீக்குவதற்கு ஆணையிட வில்லை, ஆனால் இப்போது ஆளும் கட்சி உறுப்பினரைப் பற்றி குறிப்பிட்டதை நீக்கும்படி ஆணையிட்டு இருக்கிறீர்களே ?" என்று கேட்டார்கள். எந்த நேரத்தில் எப்படிப்பட்ட வார்த்தைகள் வருகின்றனவோ, எந்தெந்தச் சூழ்நிலையில் வருகின்றனவோ அதையொட்டித் தான் அப்படிப்பட்ட வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கும் முயற்சி எடுக்கப்படும். எல்லாப் பெயர் களையும் நீக்குவது முறையல்ல.

மற்றொன்று, ஆளும் கட்சி உறுப்பினர்கள் உட்கார்ந்துகொண்டு பேசுவது முறைதானா என்று கேட்டார்கள். ஆளும் கட்சி உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சி உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, உட்கார்ந்து கொண்டு இந்த மன்றத்தில் பேசுவதற்கு உரிமை கிடையாது. எந்த உறுப்பினருக்கும் கிடையாது. அது அமைச்சராக இருந்தாலும் சரி, சாதாரண உறுப்பினராக இருந்தாலும் சரி, இந்த மன்றத்தில் முறையாக பேரவைத் தலைவர் கூப்பிட்ட பிறகு தான் பேசவேண்டும். இருக்கையில் உட்கார்ந்து கொண்டு உரத்த குரலில் பேசுவது முறையல்ல. அந்த முறையைப் பிறருக்கு உபதேசம் செய்பவர்கள்

தாங்களே பின்பற்றி வருவார்களானால் அது இந்த மன்றத்தை நல்லமுறையில் நடத்துவதற்கு உறுதுணையாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** பாயின்ட் ஆப் ஒளாரிபிகேஷன். தலைவரவர்களே, * * நான் ஒரு கருத்தைச் சொன்னதற்கு சபையின் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து அதை நீக்கவேண்டுமென்று உத்தரவிட்டு இருக்கிறீர்கள். நாங்கள் கட்டுப்படுகின்றோம். அந்தத் தீர்ப்பை ஏற்றுக்கொள்கின்றோம். அதே நேரத்தில் தங்களிடமிருந்து ஒரு விளக்கத்தையும் பெற விரும்புகிறோம். * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதிலே ஒளாரிபிகேஷன் எதுவும் இல்லை, உட்காருங்கள்.

**திரு. மு. சுருளிவேல் :** தலைவரவர்களே, நான் இதை எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால் மாண்புமிகு அன்று திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் ஹாண்டே அவர்கள் பேசுகிற நேரத்தில், ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்று சொன்னார்கள். அதே போல், போடியில் இருக்கும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் அரிசி . . .

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** சபாநாயகர் அவர்களே, இங்கே ஒரு ஒழுங்குப் பிரச்னையை எழுப்ப விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** நான் கட்சி சார்பாக ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். வெளியே இருக்கிற ஒரு கட்சி உறுப்பினரைப் பற்றி ஏதாவது குற்றச் சாட்டு இருந்தால் அதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கலாமே தவிர அவர் ஒரு கட்சியில் இருக்கிறார் என்பதற்காக அவருடைய பெயரைக் குறிப்பிட்டுப் பேசுவது அவ்வளவு சரியான முறையல்ல. இதை அங்கத்தினர் போடி சுருளிவேல் கருத்தில் கொண்டு, பொதுவான கருத்துக்களைப் பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அதைச் சொல்வதற்குத்தான் நானும் எழுந்தேன். அதை எக்ஸ்பஞ்ச் செய்யவேண்டும்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அது எக்ஸ்பஞ்ச் செய்யப்பட வேண்டிய அளவுக்கு பெரிய விஷயம் அல்ல. தவறு செய்பவர்கள் எந்தக் கட்சியிலும் இருப்பார்கள். எந்தக் கட்சியிலும் குற்றவாளிகள் இருப்பார்கள். ஆளும் கட்சியில் இருக்கிறார்கள் என்பதற்காக அவர்களை விட்டு விட முடியாது. எந்தக் கட்சியில் உள்ளவர்கள் என்று வெரிபை செய்ய முடியாது. யாராக இருந்தாலும் அவர்கள்பேரில் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது என்று சொல்லலாம். இன்ன கட்சிக்காரர்கள் குற்றம் செய்தார்கள் என்பதைச் சொல்லி பிரச்னையாக்குவது பொருத்தமல்ல. ஆகவே, பொதுவான கருத்தைப் பேசுவது அவையின் சிறப்புக்கு ஏற்றது என்று சொல்லிக்கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** என்னுடைய ஒழுங்குப் பிரச்னை என்னவென்றால்—யாருக்கும் சூடு உண்டாக்குவதற்காகப் பேச வில்லை, சட்டசபை அமைதியாக நடைபெற வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன் * * நாங்கள் சொன்னதை நீங்கள் நீக்கவேண்டுமென்று சொன்னீர்கள், அதை ஏற்றுக் கொள்கிறோம். அதே மாதிரி மாண்புமிகு அமைச்சர் சொன்ன மாதிரி, எங்களுடைய கட்சிக்காரர்களைப் பற்றி இருந்தால், அதை எங்களுக்குத் தெரிவித்தால் நாங்கள் விசாரித்து நடவடிக்கை எடுப்பதற்குச் சாத்தியமாக இருக்கும். ஆளும் கட்சி உறுப்பினர்களைப் பற்றி குறிப்பிட்டதை சபை நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று சொன்னால், எதிர்க்கட்சியில் இருப்பவர்களைப் பற்றிச் சொன்னதையும் சபைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டும். இப்படி ஒரு கட்சிக்கு ஒரு வகை, இன்னொரு கட்சிக்கு ஒரு வகை என்று சொன்னால் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஏனென்றால், எங்களுக்கு மெஜாரிட்டி இல்லை.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, இந்தப் பேரவையைப் பொறுத்தவரையில், தண்டிக்கப்பட்டவர் அந்த நேரத்தில் தி.மு.க.-வில் இருந்து இருக்கலாம். தி.மு.க.-வில் இருந்தாலும் குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்பட்டார்கள் என்று சொன்னால் எங்களுக்குப் பெருமை. தி.மு.க.-வில் இருந்ததால்

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[திரு. க. அன்பழகன்]

விடப்பட்டார் என்று சொன்னால்தான் எங்களுக்கு மரியாதைக் குறைவு. யாராவது குற்றம் செய்திருந்தால் அதை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரவேண்டுமே ஒழிய, அதை அவையில் ஒரு பிரச்னையாகக் கொண்டு வரக்கூடாது. அப்படிப்பட்ட பிரச்னையை சபையில் பேசுவதற்கு விதிமுறை கிடையாது. மிக அவசியமாக இருந்தால் சில நேரங்களில் அப்படிப் பேச வேண்டி வரும். அப்போது கூட இன்ன கட்சியில் இருந்தார்கள் என்று சொல்லக்கூடாது. ஆகவே, அவர்களுடைய பேச்சில் அதை மட்டும் விட்டு விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சுருளிவேல், இன்னும் ஐந்து நிமிடத்தில் பேசி முடித்து விடுங்கள். இது உணவு மானியம், இதன் மீது பேசுங்கள்.

**திரு. மு. சுருளிவேல் :** தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய சகல அதிகாரத்தையும் பயன்படுத்தி மக்களின் வசதிகளை நிறைவேற்ற இயலவில்லை என்றாலும், நம்முடைய மாநிலத்திற்குச் சேர வேண்டிய சர்க்கரைப் பங்கீட்டைத் தருவதற்கு திட்டமிட்டு மத்திய சர்க்கார் மறுத்து வருகிற காரணத்தாலே, நம்முடைய தேவைகளை மத்திய சர்க்கார் புறக்கணித்து வருகிற காரணத்தாலே, நம்முடைய மாநிலத்தை இந்திரா காந்தி சர்க்கார் வஞ்சித்து வருகிற காரணத்தினாலே எந்த அளவுக்கு இன்னல்களை நாம் சந்திக்க வேண்டியிருக்கிறது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மத்திய சர்க்கார் என்று சொன்னீர்கள். இந்திரா காந்தி சர்க்கார் என்று வேறு சொல்ல வேண்டுமா ?

**திரு. மு. சுருளிவேல் :** 1966-67-லே நம்முடைய மாநிலத்தை காங்கிரஸ் கட்சி தன்னுடைய கடைசி காலத்தில் ஆண்டு கொண்டிருந்தது என்பதை நாடு அறியும். அப்போது மத்திய அரசு 16,000 டன் சர்க்கரையை நம்முடைய மாநிலத்திற்கு அனுப்பியது. 1967-ல் கழக ஆட்சி வந்த உடனே டிசம்பர் மாதத்தில் 12,000 டன்தான்—4,000 டன் குறைத்து—அனுப்பியது. மீண்டும் அந்த சர்க்கரைக் கண்ட்ரோலை ரத்து செய்து விட்டு, 1971-லே மறுபடியும் சர்க்கரைக் கண்ட்ரோலை இன்ட்ராடியூஸ் செய்த



[திரு. மு. சுருளிவேல்]

போது நமக்கு சேர வேண்டிய 16,000 டன் சர்க்கரைக்கு பதிலாக 9,000 டன்தான் இப்போது ஒரு மாதத்திற்கு வழங்கி வருகிறது. இதை மாண்புமிகு உறுப்பினர்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

நான் மத்திய அரசை தாக்கிப் பேசவில்லை. எந்த அளவுக்கு இந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை அவர்கள் புறக் கணித்து வருகிறார்கள் என்பதற்காகச் சொல்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இங்கே கொடுத்திருக்கிற தகவலுக்கும் மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற தகவலுக்கும் வித்தியாசம் இருக்கிறது. தவறான தகவலைக் கொடுத்துக் கொண் டிருக்கிறார்கள். இந்தப் புத்தகத்தின் அனெக்சரில் சொல்லப் பட்டிருக்கிறது, 1974-ம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் சர்க் கரை 1,24,660.12 டன் ஆகும். நீங்கள் சொல்கிற கணக்கிற்கும், இதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. நீங்கள் எப்படி ஒரு தனி கணக்கைக் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இருக்கின்ற புள்ளி விவரத்தை மாற்றிச் சொன்னார்கள்.

**திரு. மு. சுருளிவேல் :** ஆண்டு ஒன்றுக்கு தமிழகத்தில் உற் பத்தியாகும் சர்க்கரையின் அளவு 3½ லட்சம் டன் ஆகும். மாதத்திற்கு 30,000 டன் உற்பத்தியாகிறது. ஒரு மாநிலத்தில் உற்பத்தியாகும் சர்க்கரையில் 70 சதவிகிதம் அந்த மாநிலத்திற்கு ஒதுக்கவேண்டுமென்று விதியிருக்கிறது. அதை மத்திய அரசு தரவேண்டும். அதன்படி, மத்திய அரசு நமக்கு 21,000 டன் ஒதுக்கித் தரவேண்டும். மாதம் ஒன்றுக்கு 9,000 டன் தான் இப் போது ஒதுக்கித் தந்து இருக்கிறது. இதை மாண்புமிகு உறுப் பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கிரசின் பற்றாக்குறையைப் போக்க கருணாநிதி அரசு கவலைப் படவில்லை என்று பத்திரிகைகளில் பார்த்தேன். காங்கிரஸ் ஆட்சி காலத்தில் கொடுக்கப்பட்ட சர்க்கரை அளவை கழக ஆட்சி வந்த வுடன் கொடுக்கவில்லை. இந்தக் கிரசின் பிரச்னையிலும் இந்த மத்திய அரசு இதே போக்கைத்தான் காட்டிவருகிறது. எந்த அளவுக்குத் தமிழகம் புறக்கணிக்கப்படுகிறது என்பதை எடுத்துக் காட்டவேதான் அடிக்கடி மத்திய அரசு, இந்திரா காந்தி

சர்க்கார் என்று சொல்லிக்கொண்டு வருகிறேன். தயவு செய்து திருமதி அனந்தநாயகி அவர்கள் தவறாக எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1973-ல் மத்திய சர்க்கார் நமக்கு அக்டோபர் மாதத்தில் 30,000 டன் அளித்தது. ஒரே மாதத்தில் நவம்பர் மாதத்தில் 30,000, 27,000 ஆகக் குறைந்தது. 27,000 டிசம்பர் மாதத்தில் 24,000 ஆகக் குறைந்தது. 1974-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் 24,000 20,000 ஆகக் குறைந்தது. இப்படி நான்கு மாதங்களுக்குள் 30,000 டன்னாக இருந்தது 20,000 டன்னாகக் குறைந்திருக்கிறது. அதற்குப் பிறகு மாண்புமிகு முதல் அமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் மத்திய சர்க்காருடைய மாற்றாந்தாய் மனப்பான்மையை சுட்டிக்காட்டி மாநிலத்தின் தேவையை திட்டவட்டமாக தெரிவித்த நேரத்தில் இன்று 22,000 டன் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். . . (மணி அடிக்கப்பட்டது).

* **திரு. ஏ. சுவாமிதாஸ்:** தலைவர் அவர்களே, இந்த உணவு மான்யக் கோரிக்கையின் மீது என் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.

உணவுத் துறையே முன்பு பேசிய நண்பர் குறிப்பிட்டதைப் போல மிகக் கஷ்டமான துறை. எந்த மாநிலமாக இருந்தாலும் சரி, மத்திய சர்க்காராக இருந்தாலும் சரி, உணவுத் துறையை வகிக்கின்ற அமைச்சர் அவர்களுக்கும், அந்தத் துறையிலே பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கும் எப்பொழுதும் கவலையைக் கொடுத்துக்கொண்டிருக்கிற ஒரு துறையாகும். எண்சாண் உடம்பிற்கும் சிரசே பிரதானம் என்று குறிப்பிடுவார்கள். இப்பொழுது இருக்கிற நிலைமையில் எண்சாண் உடம்பிற்கும் வயிறே பிரதானம் என்று கூறக்கூடிய நிலைதான் இருக்கிறது. வயிற்றை நிரப்புவதற்கு வகை இல்லாமல் வயிற்றைக் குறித்தே பிரச்சனையாக இருக்கிறது.

"ஒரு நாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்
இருநாளைக்கு ஏலென்றால் ஏலாய்
இடும்பை கூர் என் வயிறே—எந்நாளும்
உன்னோடு வாழ்தல் அரிது"





என்று பண்டைக்கால புலவர் பாடியிருக்கிறார்கள். அதே நிலையைத்தான் இந்தத் துறை வகுத்துக்கொண்டிருக்கிறது. உணவு அமைச்சரும் அதே நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்.

இந்த உணவைப் பொறுத்த அளவிலே படிப்படியாக விலைவாசி ஏறிக்கொண்டிருக்கிறது என்ற புள்ளிவிவரத்தை இந்த அறிக்கையில் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதைத் துருவி துருவி ஆராய முற்பட்டால் கொடுத்திருக்கிற காலம் போதாது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இன்று இருக்கிற உணவு நிலைமையைப் பற்றி ஒரு சில கருத்துக்களை குறிப்பிட்டுவிட்டு நான் முடித்துக்கொள்கிறேன்

இந்த மாநிலத்தைப் பொறுத்துள்ள அளவிலே அரிசியின் விலை உயர்ந்துகொண்டே போகிறது. உச்ச கட்டத்தை அடைந்து கொண்டிருக்கும் மாவட்டம் கன்னியாகுமரி. இன்றைக்கு நாகர்கோவில் நகரில் ஒரு படி அரிசி விலை ரூ. 4, எல்லையோரத்தில் கல்குளம் விளவங்கோடுப் பகுதிகளில் ஒரு படி அரிசி விலை ரூ. 5. இதை மனதிலே வைத்துக் கொள்ளவேண்டும் என்று இந்தத் துறையினரை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுக்கு வேண்டியதெல்லாம் உண்ணுவதற்கு தேவையான அரிசி. நீங்கள் எப்படி கொடுக்கிறீர்களோ, கொடுப்பதற்கு எந்த முறையைக் கையாள்கிறீர்களோ அதைப்பற்றி எங்களுக்குத் தெரியாது. அங்கிருந்து அரிசி கடத்தப்படுகிறது, அதனால் கொடுக்க முடியாது என்று சொல்லக்கூடாது. எங்களுக்கு வேண்டியது அரிசி.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 13 லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். அரசாங்கம் கொடுக்கின்ற புள்ளிவிவரங்களின்படி கணக்குப் பார்த்தால் 60,000 டன் அரிசி அங்கே உற்பத்தியாகிறது என்று சொல்கிறார்கள். தமிழ்நாட்டில் அரிசியில் தன்னிறைவு பெற்றுக்கொண்டிருக்கிறோம் என்றும் கூறப்படுகிறது. அரிசி உற்பத்தி அப்படியிருக்கும் பொழுது நாகர்கோவிலில் படி அரிசி ரூ. 4-க்கு விற்பதற்குக் காரணம் என்ன?

[திரு. வ. சுவாமிதாஸ்] [1974 மார்ச் 22

கல்குளத்தில் தக்கலைப் பகுதியிலே ரூ. 5 வரைக் காரணம் என்ன? அதைக் கட்டுப்படுத்தவேண்டிய பொறுப்பு யாரிடம் இருக்கிறது? அதைக் கட்டுப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமை அல்லவா? பொறுப்பு அரசிடம் இருக்கும் பொழுது, இந்தத் துறையை வகிக்கின்ற அதிகாரிகள் ஒன்றும் கருத்துமாக இருந்து பணியாற்றுகிறார்களா என்று கவனிக்கவேண்டிய பொறுப்பு அரசாங்கத்தினுடையது அல்லவா?

சில நாட்களுக்கு முன்பு, படி அரிசி ரூ. 3½ என்ற அளவில் இருந்தபொழுது இந்தத் துறையை வகிக்கின்ற செயலாளர் அவர்கள் அங்கு வந்து ஒரு கூட்டத்தைக் கூட்டினார்கள். அப்பொழுது அங்கிருக்கிற நிலைமைகளைப்பற்றியெல்லாம் நாங்கள் எடுத்துச் சொன்னோம். அவர்கள் அதையெல்லாம் ஊன்றி கவனித்து, கல்குளம் பகுதியில் இருக்கிற பொன்மனைக் கிராமத்திற்கு மாத்திரம் நியாய விலைக் கடை திறப்பதற்கு அனுமதி வழங்கினார். நாங்கள் பன்னிப் பன்னிச் சொன்னோம். கல்குளம் தாலுகாவில் எல்லா பகுதியிலும் விலைவாசி ஏறிக் கொண்டிருப்பதால் கல்குளம் தாலுகாவில் எல்லாப்பகுதியிலும் நியாய விலைக் கடைகளைத் திறந்து, அவைகளின் மூலம் அரிசி வழங்கவேண்டும் என்று எடுத்துச் சொன்னோம். ஆனால் பொன்மனைப் பகுதியில் மட்டும் வழங்கினார்கள், அந்தப் பகுதி வாழ் மக்கள் சார்பில் அமைச்சர் அவர்களுக்கும், அந்தத் துறையினருக்கும் நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால், இதரப் பகுதிகளில் இன்னும் நியாய விலைக்கடைகளை திறக்கவில்லை. இதரப் பகுதிகளிலும் விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது என்பது குறித்து அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிலைமையை அங்கே தொடர்ந்து நீடிக்க இந்த அரசு அனுமதிக்குமானால், நமது மாநில செயலகத்திற்கு முன்னால் அங்கு இருக்கிற மக்களுடைய பிரதிநிதிகள் சட்டமன்ற உறுப்பினர்கள் நாங்கள் அத்தனை பேரும் உண்ணாவிரதம் இருப்பதைத் தவிர வேறு வழியே கிடையாது. ஏனென்றால் நாங்கள் தொகுதிக்கே போக முடியாத அளவில் நிலைமை முற்றிக்கொண்டிருக்கிறது. அரிசி கிடைக்கவில்லை வாங்கி உண்ணுவதற்கு, விலைவாசி உயர்ந்துகொண்டே போகிறது. எவ்வளவு நாட்கள்தான் இந்த நிலையைச் சமாளிக்க முடியும்?



1974 மார்ச் 22] [திரு. வ. சுவாமிதாஸ்]

நாம் சொல்லிக்கொள்கிறோம், தமிழ் நாடு தன்நிறைவு பெற்றிருக்கிறது என்று. அப்படியிருந்தும் அரிசி கிடைக்காத நிலை கன்யாகுமரி மாவட்டத்தில் உருவாகிக் கொண்டே போனால் நிச்சயம் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டிய கட்டாயத்திற்கு நாங்கள் ஆளாகிக்கொண்டிருக்கிறோம் என்ற எச்சரிக்கையை அரசுக்குச் சொல்லிக்கொள்ள முற்படுகிறேன்.

கேரளத்திற்கு அரிசி கடத்தப்படுகிறது என்று சொல்கிறார்கள். தடுப்பதற்கு என்ன? தீவிர முயற்சி எடுத்து ஏன் தடுக்கக் கூடாது என்றுதான் கேட்கிறேன். கடத்தல் யார் செய்தாலும் சரி, அவர்களின் மீது வழக்குத் தொடருங்கள். ஒருவன் 10 படி அரிசி அல்லது ஒரு மூட்டை அரிசி கடத்திக்கொண்டு சென்றால், அவனைப் பிடித்து கோர்ட்டுக்குப் போகும்படி வழக்கு போடுங்கள். அவன் ஒரு மாத காலம் கோர்ட்டுக்கும், வக்கீல் வீட்டிற்கும் நடக்கும்படி செய்துவிட்டால், அந்தத் தொழிலையே அவன் விட்டு விடுவான். கடுமையான நடவடிக்கையை எடுக்க இந்த அரசு ஏன் தயங்கவேண்டும்? ஏன் கடுமையான நடவடிக்கை எடுக்கக் கூடாது? அதற்காக கூடுதலாக அதிகாரிகளை போடக்கூடாதா? கடத்திச் செல்வதற்கு எந்த மார்க்கமும் இல்லாமல் அதைத் தடுத்து நிறுத்துங்கள்.

ஜோனல் சிஸ்டம் என்று சொல்கிறார்கள். பண்ட மாற்றம் முறையில் நெல் உற்பத்தியைப் பெருக்க முடியுமாயின், அதை நான் வரவேற்கிறேன். ஆந்திராவில் கோதாவரி, கிருஷ்ணா தண்ணீர் இருக்கிறது. கேரளாவில் தண்ணீர் இருக்கிறது. அந்தத் தண்ணீரை தமிழ்நாட்டில் பயன்படுத்தி ஏராளமான நிலத்தை சாகுபடி செய்து நெல்லை உற்பத்தி செய்யுங்கள். தமிழ் நாட்டில் ஏராளமாக நிலங்கள் இருக்கின்றன. பிற மாநிலத்தில் உள்ள நீரைப் பயன்படுத்தி அதிக விளைச்சலை ஏற்படுத்தக் கூடாதா? காவேரி ஆற்றுத் தண்ணீருக்கு மைசூரை நம்பியிருக்கிறோம். அங்கிருந்து நிறைய தண்ணீர் பெற்று ஏன் உணவு உற்பத்தியை அதிகரித்து மற்ற மாநிலங்களுக்கும் உணவு அனுப்பக் கூடாது? உற்பத்தியை பெருக்கி இந்தியா தேசம் பூராவுக்கும் ஏன் அரிசியை வழங்கக் கூடாது? ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியுடன் பேசிக்கொண்டிருந்தபொழுது, “ஆந்திர மாநிலத்தில் உள்ள நீரையும் நிலத்தையும் பயன்படுத்தி அதிக உற்பத்தி செய்ய

[திரு. ஏ. சுவாமிதாஸ்] [1974 மார்ச் 22

இந்தியா பூராவுக்கும் அரிசி கொடுக்க முடியும்" என்ற கருத்தைச் சொன்னார்கள். ஆந்திராவில் தண்ணீர் இருக்கிறது, பூமி இருக்கிறது. மத்திய அரசாங்கம் அதிலே கவனம் செலுத்தி உற்பத்தியைப் பெருக்கினால் இந்தியா எங்கும் அரிசி கொடுப்பதற்கு அங்கே வழிவகை இருக்கிறது என்று எடுத்துக் கூறினார். உண்மைதான்.

தமிழ் நாட்டைப் பொறுத்த அளவில் இன்னும் ஏராளமான நிலம் நீர்ப்பாசனத்திற்குக் கொண்டு வரவேண்டியிருக்கிறது. அவை இப்பொழுது பாழாகக் கிடக்கின்றன. நீர் இல்லை. நீர் ஆந்திராவில் இருக்கிறது, மைசூரில் இருக்கிறது. கேரளத்தில் இருக்கிறது. அந்த நீரை வாங்கி நாம் இங்கே நெல் உற்பத்தி அதிகம் செய்தால் பிற மாநில மக்களுக்கும் அரிசி கொடுக்க முடியும் என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்தத் தடவை அறுவடை எங்கள் பகுதியிலே முடிந்து விட்டது. அப்படியிருந்தும் ஏன் அரிசி விலை ரூ. 4, 5 விற்கிறது? அதிகாரிகள் கொடுத்திருக்கக்கூடிய புள்ளி விவரங்களில் ஏதோ கோளாறு இருக்கிறது. அந்தப் புள்ளி விவரங்களின் அடிப்படையில் எங்களுக்குத் தேவையான அரிசியைக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அங்கே ஏறத்தாழ 10,000 ஏக்கர் கரையில் தண்ணீர் பட்டமைல் காய்ந்து போய் விளைச்சல் கிடையாது. ஆகவே விளைச்சல் குறைந்துபோய் விட்டது. பத்து, பலன் தரவேண்டிய கால கட்டத்தில் மழை பெய்ததினால் அங்கே நல்ல விளைச்சல் இல்லாத நிலை ஏற்பட்டது.

அறுவடை காலத்தில் எவ்வளவு பலன் கிடைக்க வாய்ப்பு இருந்ததோ, அந்த வாய்ப்பு பாதி நிலச் சொந்தக்காரர்களுக்குத்தான் கிடைத்தது. ஆகவே, அங்கே நெல் விளைச்சல் குன்றிப் போய் விட்டது. குன்றிப்போய்விட்ட காரணத்தினால் விலைவாசி இவ்வளவு ஏறிக்கொண்டிருக்கிறது. இதைத் தடை செய்வதற்கு கேரளத்திற்குப் போவதை நிரந்தரமாக தடை செய்யவேண்டும். எங்களுக்குத் தேவையான அரிசியை எங்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

திருநெல்வேலியில் ரூ. 2½-க்கு படி அரிசி கிடைக்கிறது. அங்கிருந்து 50 மைல் தொலைவு தானுள்ள எங்கள் பகுதியில் ரூ. 4 விற்கிறது. தமிழ் நாட்டிலிருந்து தமிழ் நாட்டின் ஒரு பகுதியான எங்கள் பகுதிக்கு அரிசி போகாத நிலை இருக்கிறது. அந்த



1974 மார்ச் 22] [திரு. ஏ. சுவாமிதாஸ்]

நிலையை மாற்றி அங்கு காவல்கிணறு செக்போஸ்ட் அகற்ற நடவடிக்கை எடுத்தால் ஓரளவுக்கு அரிசி விலை குறையலாம். இல்லை என்று சொன்னால், எப்படியாவது தீவிர திட்டங்களை அமைத்து கன்யாகுமரி மாவட்டத்தில் எங்கும் நியாய விலைக் கடைகளைத் திறந்து அவைகளின் மூலம் அரிசி கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

படி அரிசி ரூ. 5, 6 என்ற நிலையை மாற்றி அமைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

கார்டு கொடுக்கின்ற முறையைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறி முடித்துக்கொள்கிறேன். கட்டாயமாக ரேஷன் அமுலில் இருக்கிற பகுதிகளில் கார்டு கொடுக்கிறார்கள். எல்லா மக்களுக்கும் அந்தக் கார்டுகள் போய்ச் சேரவில்லை. சென்னை நகரத்தில் கார்டுகள் வழங்கப்படுகின்றன. சென்னையில் ஹோம்கார்டு மூலம் கார்டுகள் வழங்கப்படும் என்று சொல்கிறார்கள். ஒரு கருத்தை நான் கூற எண்ணுகிறேன். பள்ளி ஆசிரியர்களை வைத்தாவது அல்லது பொது நலச் சேவை செய்வதற்கு முன்வருகிற நல்லவர்களை வைத்தாவது வீடு வீடாகச் சென்று கார்டுகளை வழங்க வேண்டும். வீடு வீடாகச் சென்று ஆசிரியர்களை வைத்து ஜனத்தொகை புள்ளி விவர கணக்கை எடுக்கிறோம், ஒரு வாரக் காலத்திற்குள் சென்ஸஸ் எடுத்து விடுகிறார்கள். அதைப் போலவே அதிகாரிகள் வீடுவீடாகச் சென்று கார்டுகளை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

எல்லோருக்கும் கார்டு கொடுக்க வேண்டும். நிலம் உடைமையாளர்களுக்கும் ஏழைகளுக்கும்—எல்லோருக்கும் கார்டு கொடுக்க வேண்டும். கார்டுகளைக் கொடுத்துவிட்டு, நெல் உற்பத்தியாளர்களுக்கு மட்டும் அரிசி வாங்கும் உரிமையை அவர்களுக்கு வழங்கிய கார்டில் ரத்து செய்துவிட வேண்டும். இப்போது 25 சென்ட் நிலம் இருந்தால் கார்டு வழங்குவதில்லை. அந்த 25 சென்ட் நிலத்தில் எவ்வளவு நெல் விளைந்துவிடும்? 10, 15 பேர் உள்ள ஒரு குடும்பத்திற்கு அது எத்தனை நாளைக்கு வரும்? இதையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? அதிகப்பட்சம் சில நாட்களுக்கு வரும். அதற்கு மேல் வராது. வேண்டுமானால் 25 சென்ட் நிலம் வைத்திருக்கிறவர்களுக்கு அந்த அரிசி வாங்க களுக்கு அவர்களுக்கு ரத்து செய்யப்பட்ட கார்டுகள் வழங்க

ஏற்பாடு செய்ய வேண்டும். இதைப்பற்றி அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறோம். அதிகாரிகள் கேட்க மாட்டோம் என்கிறார்கள். அதிகாரிகள் இந்த விஷயத்தில் ஒத்துழைக்கவில்லை. என்ன கூறினாலும் கேட்க மாட்டோம் என்றிருக்கிறார்கள்.

இந்தத் துறையிலே இருக்கின்ற அதிகாரிகள் எப்படி நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு ஒரு சம்பவத்தை மட்டும் கூறிக் கொள்ள விரும்புகிறேன். 1967 தேர்தல் காலத்தில் நடந்திருக்கிற ஒரு நிலைமை நினைவுக்கு வருகிறது. அப்போது 50,000 டன் அரிசியை கையில் ஸ்டாக் வைத்துக்கொண்டு, இந்த நாட்டு மக்களுக்கு வழங்காத அதை விநியோகம் செய்யாமல், அரிசி இல்லை. அரிசி இல்லை என்று சொல்லி, அரிசி கிடைக்காமல் மக்களை வாட்டி விட்டார்கள். அதனால்தான் அன்று காங்கிரஸ் கட்சிக்கு மக்கள் ஓட்டுப் போடவில்லை. அந்த நேரத்தில் 5 ரூபாய், 7 ரூபாய் என்று அரிசியின் விலை இருந்தது. அதற்கு அதிகாரிகள்தான் காரணம்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** அரிசி ஒழுங்காகக் கிடைக்காததால்தான் மக்கள் காங்கிரஸ் கட்சிக்கு ஓட்டுப் போடவில்லை என்று சொல்கிறார்கள். இப்போதும் அதிகாரிகள் அரிசி கிடைக்காமல் செய்தால் எங்களுக்கு ஓட்டுப் போடமாட்டார்கள் மக்கள். அப்படியானால் அது கனம் அங்கத்தினர் அவர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடியதுதானே!

**திரு. எ. சுவாமிதாஸ்:** காங்கிரஸ் கட்சிக்கு ஓட்டுப் போட்டால் நீங்கள் பட்டினி கிடந்து சாகுங்கள் என்ற நிலையை உருவாக்குவதற்காவும் இருக்கலாம் அல்லவா? இந்த நிலைமைகளை மாற்றி அமைக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய நோக்கம்.

இந்த உணவு விநியோகத்தில் ஈடுபட்டிருக்கின்ற அரசாங்க அதிகாரிகள் கடமையில் தவறியிருக்கிறார்கள் என்பதற்கு என்னிடம் ஒரு தகவல் வந்திருக்கிறது. அது உண்மை என்றுதான் நான் நினைக்கிறேன். அது உண்மையா இல்லையா என்பதை அமைச்சரவர்கள் தெரிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



சென்னையில் பெரியமேடு என்ற இடத்தில் 'வெல்கம் லாட்ஜ்' இருக்கிறது. அதில் கிட்டத்தட்ட 3 மாத காலமாக ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் தங்கியிருக்கிறார். அவர் உணவுப்பொருட்கள் விநியோகத்தைக் கண்காணிக்கின்ற பொறுப்பில் இருக்கக்கூடியவர். அவருக்கு பல ஸ்டோர்களிலிருந்தும் உணவுப் பொருட்கள் போய்ச் சேருகின்றன. அதற்கு ஏஜெண்டுகள் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** கனம் அங்கத்தினர் அவர்கள் ரகசியமான விஷயங்களை ரகசியமாக எங்களுக்குத் தெரிவித்திருந்தால் அது குறித்து தக்க நடவடிக்கை எடுத்து, தவறு செய்கின்ற அதிகாரிகளைப் பிடிக்கலாம். ரகசியமாகச் சொல்லாமல் சட்டசபையில் பகிரங்கமாகச் சொல்லலாமா? ரகசியமாக எங்களிடம் தெரிவித்து, நாங்கள் நடவடிக்கை எடுக்காவிட்டால் அதைப்பற்றி பகிரங்கமாக இந்த மன்றத்தில் சொல்லலாம். இங்கே பேசுகின்ற தகவல் தவறு செய்கின்ற அதிகாரிகளுக்குத் தெரிந்த பின்னால் எப்படி அவர்களைக் கண்டுபிடிக்க முடியும்? தவறு செய்திருந்தாலும் திருத்திக்கொள்வார்களே. ஆகையால் கனம் அங்கத்தினர் சுவாமிதாஸ் அவர்கள் இதுபோன்ற ரகசியங்களை முதலில் ரகசியமாக எங்களுக்குத் தெரிவித்துவிட்டு, நாங்கள் நடவடிக்கை எடுக்காவிட்டால் சபையில் சொன்னால் நல்லது.

**திரு. எ. சுவாமிதாஸ்:** அமைச்சரவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊர் மக்கள் ஏற்கெனவே இதுபற்றி புகார் எழுதியிருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டப் பிரச்சினையை வேறு தானே என்று நினைக்காமல், எல்லா மக்களுக்கும் உணவு கிடைக்க வசதி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் கேரளத்தோடு இருந்த சமயத்தில் 'தமிழன், தமிழன்' என்று புறக்கணிக்கப்பட்டோம். தமிழ்நாட்டுக்கு வந்த பின்னால் விமோசனம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் இங்கே 'மலையாளி, மலையாளி' என்று எங்களைச் சொல்கிறார்கள். (குறுக்கீடு) மலையாளிகளோடு இருக்க விரும்பாமல்தான் போராடி, தமிழ் நாட்டோடு சேர்ந்திருக்கிறோம். அப்போது தமிழகத்தில் இருந்தவர்கள் எங்களுக்கு ஒத்துழைப்புத் தராமலிருந்த பின்னாலும் நாங்கள் தாய் தமிழகத்தோடு சேரவேண்டுமென்று போராடி, வந்தவர்கள்.

[திரு. வ. சுவாமிதாஸ்] [1974 மார்ச் 22

ஆகவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் அரிசி கிடைக்கவில்லை என்பதற்காக அங்கே மீண்டும் ஒரு போராட்டத்தை உருவாக்க வழிவகை செய்யாதீர்கள், போதுமான அளவுக்கு அரிசி வழங்க ஏற்பாடு செய்யுங்கள் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. எம். ஏ. லத்திப்: தலைவர் அவர்களே, இந்த உணவு மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன்.

'பசி வந்திடப் பத்தும் பறந்துபோகும்' என்பது நம்முடைய நாட்டு பழமொழி. இன்றைக்குப் பத்து மட்டுமல்ல; பதினாறும் பறந்து போகின்ற நிலையை இந்திய உபகண்டத்திலே பார்த்துக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சுவாமிதாஸ் அவர்கள் பேசும்போது, போதுமான ஒரு 'ஜோன்' வைத்துக்கொண்டால் பெருமளவில் பயனடையலாம் என்று சொன்னார்கள். ஆந்திர மாநிலத்திலே ஓடுகின்ற கோதாவரி, கிருஷ்ணா நதிகளின் தண்ணீரைப் பெற்று, நம் மாநிலத்தில் உற்பத்தியைப் பெருக்கிக் கொள்ளலாம் என்று சொன்னார்கள்.

ஆனால் கங்கை பாய்கின்ற நாட்டிலும், யமுனை, கோமுகி, சரஸ்வதி போன்ற மற்றும் பல நதிகள் பாய்கின்ற நாட்டிலும் எந்த அளவுக்கு மக்கள் பசிப்பிணியால் வாடிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நாடு பார்த்துக்கொண்டிருக்கிறது. ஆகையால் நாட்டின் முன்னேற்றத்திற்கு நீர் வளம் மட்டும் இருந்தால் போதாது; நிலவளம் இருந்தால் மட்டும் போதாது; திட்டம் தீட்டிச் செயல்படுகின்ற முயற்சியும் நமக்கு இருந்திட வேண்டும். அது இல்லாவிட்டால் எந்த வளம் இருந்தாலும் நம் நாட்டுக்கு போதிய அளவுக்கு உணவைக் கொடுக்க முடியாது பசியை அகற்ற முடியாது என்பதைத்தான் இன்றைக்கு நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

சென்ற வாரம் தான் விவசாயத் துறையிலே மிகப்பெரிய மாற்றத்தை, மிகப் பெரிய புரட்சியை ஏற்படுத்திய ஜெர்மனி நாட்டு விவசாயத் துறை நிபுணர் ஒருவர் இந்திய நாட்டுக்கு வந்திருந்தார். அவருடைய பெயர் பெனர்லோக் என்பது. இந்திய நாட்டுக்கு வந்து ஒரு அபாய அறிவிப்பைத் தந்திருக்கிறார்கள். தென்புலத்திற்கு அவர் வரவில்லை. ஆனால் பஞ்சாப்



1974 மார்ச் 22] [திரு. எம். ஏ. லத்தீப்]

மாநிலத்திலும் உத்தரப்பிரதேசத்திலும் அவர்கள் சுற்றுப்பயணம் செய்துவிட்டு இறுதியாக டெல்லிக்கு வந்து, ஒரு அபாய அறிவிப்பை நமக்குத் தந்திருக்கிறார்கள். நம்முடைய நாட்டில் 1972 வரையில், 1972 இறுதியிலே இருந்த உணவு தானியத்தின் ஸ்டாக் சுமார் 9.5 மில்லியன் டன். ஆனால் இன்றைக்கு 1974-ல் பெனர்லோக் சொல்கிறார், ஸ்டாக் என்று சொல்லக்கூடிய அளவுக்கு உணவுப்பொருள் இல்லை; இந்த நாட்டில் உணவுப்பொருள் ஸ்டாக் நில்—ஒன்றுமே இல்லை என்று சொல்கிறார்.

அதுமட்டுமல்ல. ஐக்கிய நாடுகள் சபையினுடைய உணவு வேளாண்மைத் துறையின் சார்பில் இந்தியாவுக்கு வருகை தந்த டாக்டர் பயோர்மா 'நாம் தீட்டுகின்ற திட்டங்கள் எல்லாம் உண்மையின் அடிப்படையில் அமையவில்லையாதலால் இந்த நாட்டின் மிக முக்கியப் பிரச்சினையாகிய உணவுப் பிரச்சினையை தீர்க்க முடியாது; உண்மையின் அடிப்படையில் திட்டங்கள் தீட்டப்பட்டால்தான் பிரச்சினையை தீர்க்க முடியும்; இப்படியே போய்கொண்டிருந்தால் எதிர்காலத்திலே ஒரு பயங்கர சூழ்நிலையை சந்திக்க வேண்டிவரும்' என்று கூறியிருக்கிறார்.

ஐக்கிய நாடுகள் சபையிலிருந்து வருகை தந்த இன்னொரு நிபுணர் டாக்டர் மாத்தூர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் சுவாமிதாஸ் அவர்கள் சொன்னதுபோல, ஆந்திர மாநிலத்தில் அகிரிகல்சர் சர்வே நடத்தினார்கள். அவர் சொல்கிறார், 'இந்த நாடு முன்னேற வேண்டுமானால், இந்த நாட்டிலே உண்மையான சுதந்திரம் பெற்றிருக்கிறோம் என்று சொன்னால், அரசியல் சுதந்திரம் மட்டும் இல்லாமல் பொருளாதார அடிப்படையிலும் சுதந்திரம் பெற்றுள்ளோம் என்று நம்மை நாமே சொல்லிக் கொள்ள வேண்டுமானால் இந்த நாட்டிலே இருக்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்கள், இந்த நாட்டிலே இருக்கின்ற கிராமப்புறங்களிலே உழைப்பையே ஜீவாதாரத் தொழிலாகக் கொண்டிருக்கின்ற மக்கள் தங்கள் வாழ்க்கையிலே முன்னேற்றம் பெற்றிட வேண்டும்; அவர்களுக்கு வசதிகள் செய்துதரவேண்டும்; இன்றைக்கு நாம் உணவு உற்பத்தியில் அதிக அக்கறை காட்டுகிறோம் என்று சொல்லுகிறோமே தவிர, எந்தெந்த வகையிலே உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று

பேசுகிறோமே தவிர அவைகளுக்கு எந்த வகையில் திட்டங்களைத் தீட்டினால் நடைமுறைக்கு சாத்தியமாகும் என்ற நடைமுறை இல்லை என்று டாக்டர் பாத்தூர் சொல்கிறார்கள்.

(நண்பகல் 12-00)

டாக்டர் சுவாமிநாதன் அவர்கள் இராஜஸ்தான் மாநிலத்தைப் பார்த்துவிட்டு வந்து சொல்கிறார்கள். உலகுக்கே ஒரு பெரும் சோதனை ஏற்பட இருக்கிறது, இரண்டு மாதங்களில் இந்தியா ஒரு பெரும் நெருக்கடியைச் சந்திக்க வேண்டியதாக இருக்கும் என்கிறார். அந்த வகையில் நம்மை எதிர்நோக்கியுள்ள உணவு நெருக்கடியைப் போக்கிக்கொள்ள வேண்டுமானால் பர்டிலைசர் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலைகள் அதிகம் ஏற்படுத்தியாக வேண்டும். அப்போதுதான் மிகக் கஷ்டப்பட்டு பெற்ற சுதந்திரத்தை இந்தியா காப்பாற்றிக்கொள்ள முடியும் என்கிறார்.

இன்றைக்கு பீகார் மாநிலத்தைப் பார்க்கிறோம். உத்திரப் பிரதேசத்தைப் பார்க்கிறோம். குஜராத் மாநிலத்தில் உள்ள நிலை என்ன என்பது எல்லாம் நமக்கு எச்சரிக்கையாக அமைகின்றன. அவற்றை எல்லாம் பார்த்து, நம்முடைய மாநிலம் பாதிக்கபடவில்லை என்று நம்மை நாமே தேற்றிக்கொள்வதில் ஆறுதல் அடையாமல், அந்த நிலைமை நாளைக்கு இங்கும் ஏற்பட்டுவிடாதிருக்க நல்ல திட்டங்களை எல்லாம் அமைத்தாகவேண்டும்.

இன்றைக்கு ஒரு உண்மையை உறுதியாகச் சொல்கிறேன். நிச்சயமாக விவாசாயத் துறையில்—உணவு உற்பத்தியில் மிகப் பெரிய சாதனையை நாம் கண்டிருக்கிறோம். இதை யாரும் மறுக்க முடியாது. ஆயினும் மக்கள் படுகிற இன்னல்களுக்குக் காரணம் என்ன?

ரேஷன் கார்டுகளை வழங்குகிறோம். இரண்டுமூன்று நாட்களுக்கு முன்னர் ரேஷன் கார்டுகளை வழங்கும் நிலையில் சென்னை நகரிலே நின்ற க்யூக்களை நாம் அறிவோம். இந்த நீண்ட வரிசையை தமிழ்நாடு ஒருகாலத்தில் கண்டது. அதன் விளைவாக என்ன முடிவு ஏற்பட்டது என்பதை நாமே பல மேடைகளில் பேசியிருக்கிறோம். இன்றைக்கு வீட்டுக்கே கார்டு வரும் என்கிற முடிவை அரசு எடுத்திருப்பதற்குப் பாராட்டுகிறேன்.





இன்றைக்கு இருக்கிற சிக்கல்கள் எல்லாம் உற்பத்தித் துறையில் இல்லை. உற்பத்தியில் மாபெரும் சாதனையை ஏற்படுத்தியிருக்கிறோம். ஆனால் பங்கீட்டு முறைதான் சரியாக அமையவில்லை. நம் நாட்டிலே இருக்கிற உழைப்பாளிகள், உழவர்கள், தொழிலாளர்கள் தம்முடைய இரத்தத்தை வியர்வையாகச் சிந்தி உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்கள். ஆனால் இந்த வருமானத்தை நடுவில் இருக்கிற நச்சுப்பாம்புகள், பலவிதமான வியாபாரம் செய்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிற கள்ளச்சந்தை வியாபாரிகள், தேசத் துரோகிகள் தங்கள் கையிலே முடக்கி, நாட்டை அவல நிலைக்குள்ளாக்குகிறார்கள்.

கிணற்றிலே தண்ணீர் இருக்கிறது. பாய்ச்சுகிற தண்ணீர் வாய்க்கால்வழியே ஓடுகிறது. பயிருக்கு நீர் கிடைத்ததா என்றால் இல்லை. கிணற்றில் இருந்து நாம் தான் நீர் இறைக்கிறோமே, வாய்க்கால் வழியேதான் ஓடுகிறதே, பயிருக்கு நீர் போய்ச் சேர்ந்திருக்கத்தான் வேண்டும் என்று நினைத்துக்கொண்டிருப்பதில் பயன் இல்லை. வாய்க்கால்களின் நடுவிலே, ஆங்காங்கே உள்ள சந்து பொந்துகள் அடைக்கப்படாத வரை பயிருக்கு நீர் எட்டாது. அப்படி இன்றைக்கு இருக்கிற விநியோக முறைகளில் உள்ள சந்து பொந்துகள் அடைக்கப்படாதவரை, கள்ளச் சந்தைக்காரர்கள் மீது கடுமையான, உறுதியான நடவடிக்கை எடுக்கப்படாதவரை மக்களுக்குப் பயன் இல்லை என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில விவரங்களைத் தந்திருக்கிறார்கள். கோயம்புத்தூர் மாவட்டத்திலே எவ்வளவு கள்ளக் கடத்தல்காரர்களைப் பிடித்திருக்கிறோம், கன்னியாகுமரியிலே எத்தனை கள்ளக்கடத்தல்காரர்களைப் பிடித்திருக்கிறோம் என்கிற புள்ளி விவரங்களைத் தந்திருக்கிறார்கள். கோயம்புத்தூரிலே 2,500 பேர்களைப் பிடித்திருப்பதாகச் சொன்னார், எத்தனை பேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? Reasonable opportunity, legal aspects என்பதை எல்லாம் தூக்கிப் போடுங்கள். கள்ளக் கடத்தல்காரர்களை, கள்ளமார்க்கெட்காரர்களை கடுமையான நடவடிக்கை எடுத்து சிறையில் அடையுங்கள், சுடுங்கள், வீதியில் வைத்து கசையடி கொடுங்கள்; சமுதாயம் ஏற்றுக்கொள்ளும்; இவர்களை அடிக்காவிட்டால் நாம் எதைச் செய்தும் மக்களுக்குப் பயன் இல்லை.

இன்றைக்கு மதுரை மாவட்டத்தைப்பற்றி, கன்னியாகுமரி மாவட்டத்தைப்பற்றிச் சொல்கிறோம். கம்பம் பகுதி எவ்வளவு வளமான பகுதி. பெரியாறு, சுருளியாறு ஓடுகிற கம்பம் பகுதியில் இன்றைக்கு படி அரிசி 4 ரூபாய் விற்கிறது. தந்திக்குமேல் தந்தி வருகின்றன. நாம் உற்பத்தி செய்திருக்கிறோம். செய்ததோடு மட்டுமல்ல. மற்ற மாநிலங்களுக்கு சுமார் 34 ஆயிரம் டன் அளவுக்கு கொடுத்து உதவி செய்திருக்கிறோம்.

மத்திய அரசு ஒரு லட்சத்து பதினோராயிரம் டன் உணவு தானியம் தரவேண்டுமென்று நமக்குக் கட்டளையிடுகிறது. ஆனால் நமக்கு 34 ஆயிரம் டன் கோதுமை வழங்கி வந்தார்களே, அதில் இன்றைக்கு 9 ஆயிரம் டன்தான் அவர்கள் கொடுக்க ஒத்துக் கொண்டிருக்கிறார்கள் என்கிற விவரத்தையும் அமைச்சர் சொன்னார்கள். “கோதுமை தானே, கோதுமை சாப்பிடுகிறவர்கள் இங்கே குறைவு” என்று இதை உதாசீனப்படுத்த முடியாது. எத்தனையோ தொழிற்சாலைகள் பேக்கரிகள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நமக்குக் கொடுக்க வேண்டும் என்கிறபோது இதுதான் கொடுக்க முடியும் என்கிறது மத்திய அரசு. ஆனால் அவர்களுக்கு என்றால் இந்த அளவு கொடுத்தாகவேண்டும் என்று உத்தரவிடுகிறது. இதுதான் ஜனநாயகம், இதுதான் அரசியல் சட்டமா? இங்கே அரைவயிற்றுக்குக்கூடக் கிடைக்காது பட்டினி கிடந்தாலும் பரவாயில்லை, எங்களுக்குக் கொடுங்கள் நாங்கள் உல்லாசமான முறையில் வாழ்க்கை நடத்த என்றால் இதை நமது அரசு வன்மையாக எதிர்த்து, நமது ஆட்சேபணைக் குரலை உயர்த்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு என்னுடைய வடஆற்காடு மாவட்டம் ஆந்திரப் பகுதியோடு ஒட்டியது. நான் உறுதியாகச் சொல்வேன். ஒரு நாளைக்கு என்னுடைய தொகுதியில் இருந்து மட்டும் 10 லாரி அரிசி ஆந்திராவுக்கு கடத்தப்படுகிறது. உரம் கடத்தப்படுகிறது. சர்க்கரை கடத்தப்படுகிறது. துரைமுருகன் தொகுதியில் இருந்து கடத்தப்படுகிறது. துரைசாமி தொகுதியில் இருந்து கடத்தப்படுகிறது. இதுவரை நான் அதுபற்றி பல புகார்கள் கொடுத்தும் அந்தப் பகுதியில் ஒருவர் கூட கைதுசெய்யப்பட்டதாக இந்த அறிக்கையில் இல்லாதது எனக்கு பெரிய ஆச்சரியத்தையும்,



வேதனையையும் அளிக்கிறது. வடாற்காடு மாவட்டம் உபரி மாவட்டம்; அங்கிருந்து தினந்தோறும் இப்படி அரிசி கடத்தப்படுமானால் என்ன ஆகும்?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** வடாற்காடு மாவட்டத்தில் இருந்து அரிசி கடத்தப்படுவது குறித்து, மாண்புமிகு உறுப்பினர் புகார் கொடுத்ததாகச் சொன்னார்கள். புகார் மாவட்ட அளவில் செய்யப்பட்டதா? அல்லது அமைச்சரிடத்தில் தரப்பட்டதா?

**திரு. எம். ஏ. லத்தீப் :** மாவட்ட அதிகாரிகளிடத்தில் பலமுறை சொன்னேன். மாவட்ட ஆட்சி தலைவரிடத்தில் சொன்னேன். டி. எஸ். ஓ. விடத்தில் எழுத்து மூலமாகக் கொடுத்தேன். உணவுத் துறை அமைச்சரிடத்திலும் எழுத்து மூலமாகக் கொடுத்தேன் அவர் உடனடியாக என்னைத் தட்டிக்கொடுத்து, உற்சாகப்படுத்தி, நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார். ஸ்பெஷல் ஸ்க்வாட் அனுப்பியிருப்பதாகச் சொன்னார். அவர்கள் வந்து எம். எல். ஏ. வீட்டில் இல்லாதபோது, அவர் இருக்கிறாரா என்பதாக, தாம் வந்ததற்கான ஆஜரைக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார்கள். ஆனால் யார் மீது நடவடிக்கை எடுத்தார்கள்? கள்ளக்கடத்தல்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்காத அதிகாரியின் மீது நடவடிக்கை எடுங்கள்.

(திரு. கே. எ. வகாப் தலைமை)

இன்றைக்கு இங்கே இருப்பவர்கள், இந்த ஆட்சியைப்பற்றி பேசினார்கள். நான் சொல்கிறேன், இந்த ஆட்சியினுடைய மாட்சி இன்றைக்குத் தெரியாது. அதைக் காலம்தான் பதில் சொல்லும். நிழலின் அருமை வெய்யில் இருக்கும்போதுதான் தெரியும். நிழலிலேயே இருக்கும்வரையில் நமக்கு நிழலினுடைய அருமை தெரியாது. நிழலிலிருந்து வெய்யிலுக்குச் சென்றால்தான் நிழலினுடைய அருமை தெரியும்.

நான் குற்றங்குறைகளைச் சொல்கின்ற நேரத்தில், மந்திரிகளிடம் சொல்கின்ற நேரத்தில், மாண்புமிகு அமைச்சர் மன்னை அவர்களே சென்று காவல் செய்யவேண்டுமென்று சொல்லவில்லை. அப்படிச் சொல்வது முட்டாள்தனமாகத்தான் இருக்கும். அந்த மாதிரியான நிலைமை இருப்பது, —you overhaul the entire Department. அந்த டிபார்ட்மெண்டில் மிகப் பெரிய குறை இருக்கிறது. டிஸ்டிரிபியூஷனிலே மிகப் பெரிய தவறுகள் இருக்கின்றன. வாணியம்பாடி

யிலே பூங்குளம் கிராமத்தைப்பற்றிச் சொன்னேன். அங்கு ஷுகர் பர்மிட் கொடுக்கப்படுகிறது. தனிப்பட்டவர்கள், சமூகவிரோதிகள், மூட்டை மூட்டையாக வாங்கிக்கொண்டு, அதிக விலைக்கு வியாபாரம் செய்கிறார்களே தவிர, மக்களுக்குக் கொடுப்பதில்லை. கொடுக்க மறுக்கிறார்கள். கோவாப்பரேடிவ் பேஸிஸிலே ஓரளவுதான் காரியங்கள் நடைபெறுகின்றன. ஆனால், அது முழுமையான திருப்தி அளிக்கவில்லை. எந்த தனிப்பட்ட நபருக்கும் எந்த கோட்டாவும் கொடுக்க தேவையில்லை. அரசாங்கமே செய்வதாக இருந்தால் செய்யட்டும், இல்லாவிட்டால் கோவாபரேடிவ் செய்யட்டும்.

THIRU MANALI S. KANDASAMY: How many minutes you have fixed for the hon. Member?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. எ. வகாப்):** தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முடித்துக்கொள்ள வேண்டும். இன்னும் 7, 8 பேர் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. எம். ஏ. லத்தீப்:** மாண்புமிகு உறுப்பினர் மணலி அவர்களுக்கு பேசவேண்டுமென்ற ஆர்வம். அவர் பெரியவர் அவருக்கு இடம் கொடுக்க வேண்டும். . . .

THIRU MANALI S. KANDASAMY: I do not want to interrupt. But you have to keep up time.

**திரு. எம். ஏ. லத்தீப்.** சபாநாயகர் அவர்கள்தான் சொல்ல வேண்டும். அவர்கள் ரொம்பக் கோபமாகச் சொல்வது மாதிரி தெரிகிறது. அவர் பெரியவர். அவருக்குக் கோபம் வந்தால்—எனக்கும் கோபம் வரும்—பெரியவர் அவர்கள் சபாநாயகர்போல் சொல்லக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் வேண்டிக்கொள்வது எல்லாம், இந்த டிஸ்டிரிபியூஷன் சிஸ்டத்தை மாற்றுங்கள். உண்மையாக, நேர்மையாகச் சொல்கிறோம், இந்த ஆட்சி செய்திருக்கிற நல்ல திட்டங்களை அவர்கள் ஆற்றுகின்ற சேவைகளை உணர்ந்து சொல்கிறேன். அவர்கள் ஆற்றுகின்ற சேவைகளுக்குக் களங்கம் விளைவிக்கின்ற வகையிலே கீழே இருக்கிற அதிகாரிகள் இருப்பார்களானால், அதைத் தடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இதைச்சொன்னேன்.



அரிசிக்காக இன்றைக்கு ரேஷன் கார்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நல்ல திட்டங்களை அரசு கொண்டு வந்திருக்கிறது. ஆனால், என்ன செய்கிறார்கள்? அரசுக்குச் சாதகம் இல்லாமல், பாதகமாக மற்றவர்கள் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே தயவுசெய்து நான் கேட்டுக்கொள்வது, இப்பொழுது என்ன சொல்கிறார்கள், பழைய கார்டுக்குப் பதில் புதிய கார்டு கிடைக்க வில்லையென்றால், பழைய கார்டு அடிப்படையிலேயே கொடுப்போம் இல்லாவிட்டால் எலக்டரல் ரோல் அடிப்படையிலே கொடுப்போம் என்று சொல்கிறார்கள்.

வாணியம்பாடி சட்டசபை உறுப்பினர் லத்தீப்புக்கு இன்னும் கார்டு கிடைக்கவில்லை. என்னுடைய தாயார், கொடுக்க மறுக்கிறார்கள், நீ போய் கேட்கக் கூடாதா என்று என்னைக் கேட்டார்கள். நான் நம்முடைய பிரச்சனையை முதலாவதாகச் சொல்லக் கூடாது. வாணியம்பாடி தொகுதி மக்களுடைய பிரச்சனையைத் தீர்த்த பிறகு நம்முடைய பிரச்சனையைத் தீர்ப்போம், நம்முடைய காரியங்களைப் பிறகு செய்வோம் என்று கூறி, விட்டுவிட்டேன்.

சட்டமன்ற உறுப்பினருக்கே இந்த கதி என்றால், சாதாரண உறுப்பினருக்கு என்ன கதி ஏற்படும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கூறி, இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர் மணலி கந்தசாமி அவர்களுக்கும் நன்றி கூறி விடை பெறுகிறேன்.

*** திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, இந்த உணவு மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன்.

நம்முடைய அமைச்சர் அவர்கள், எப்படியாவது, திறமையாக நிர்வகிக்கவேண்டுமென்று கடுமையாக முயற்சி செய்தார்கள் என்றுதான் நினைக்கிறேன். மொத்தத்திலே, நம்முடைய பிரதானமான, வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருளாகிய அரிசி சம்பந்தப்பட்ட முறையிலே, இன்றைக்கு சந்தையிலே ரூ. 3.60-க்குத்தான் கிடைக்கிறது. மிக மட்டமான அரிசிகூட ரூ. 2-60-க்குத்தான் கிடைக்கிறது. ஆனால், கொள்முதல் பண்ணக்கூடிய விலை ரூ. 70 ஒரு குவிண்டாலுக்கு.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் அழகாகச் சொன்னார்கள். ரூ. 70-க்குக் கொள்முதல் பண்ணக்கூடிய அரிசி ரூ. 1.10-க்குத்தான்

[திரு. சோ. அழகர்சாமி] [1974 மார்ச் 22

இருக்கவேண்டும். மற்ற செலவுகள் எல்லாம் சேர்த்தால் கூட ஒரு படி ரூ. 1.60, 1.70-க்குக் கிடைக்க வேண்டும், என்று. ஆனால், இப்பொழுது மட்டமான அரிசி கூட ரூ. 2.60-க்குத்தான் கிடைக்கிறது. இன்னும் சில இடங்களிலே ரூபாய் 4-க்குத்தான் கிடைக்கிறது.

சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்ட், அரிசி, கோதுமை, சீனி போன்ற பண்டங்களை விநியோகம் செய்வதிலே சரியான நடைமுறையைக் கடைபிடிக்கவில்லையென்று குற்றம் சாட்டுகிறேன். சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டிலே வேலை செய்கிறவர்களுக்குப் பல நேரங்களிலே சர்க்காரிடமிருந்து சிறு சேமிப்பு வசூலோ, அல்லது சைக்கிள் ரிக்ஷா நிதி வசூலோ, அல்லது கண்ணொளி வழங்கும் திட்டத்திற்கு நிதி வசூலோ மற்ற வசூலோ ஒப்படைக்கப்படுகிறது. அவர்கள் சீனி வியாபாரிகளிடம் நீ ரூ. 400 கொடுக்க வேண்டும், உனக்கு 4 மூட்டை சீனி அதிகமாகக் கொடுக்கிறோம் என்று கொடுக்கிறார்கள். இப்படியே தவறுகள் நடக்கின்றன. இதற்கு, ஆதாரம் இருக்கிறதா, என்றால், ரசீது ஒன்றும் கிடையாது. இது எல்லோருக்கும் தெரியும். ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் தெரியும். அவர்கள் கொடுத்த 4 மூட்டைகளை, மூட்டைக்கு ரூ. 150 அதிகமாக வைத்து, ரூ. 400-க்கு விற்கிறார்கள். இதனால், மக்களுக்கு நியாயமான விலைக்குப் போய்ச் சேருகிறதா என்றால், இல்லை கடைசியிலே, கிலோ ஒன்று ரூ. 4-க்குக் கடைக்கு விற்கிறார்கள். சில்லறை வியாபாரிகள் டீ கடைகளுக்குக் கொடுத்து, நாம் அதிக விலைக்கு டீ வாங்கி சாப்பிடுகிற நிலைதான், இருக்கிறது. சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்ட் உணவுப் பொருள்கள் வழங்குவதிலே தவறு இருக்கிறது. கூட்டுறவுத் துறை மூலமாக, பொருள்களை விநியோகம் செய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

இப்பொழுது, கூட்டுறவு சங்கங்களால் நடத்தப்படுகின்ற கடைகள் 4,753, தனியாரால் நடத்தப்படுபவை 4,987. கிட்டத்தட்ட 5,000 தனியார் வியாபாரிகள் தமிழ் நாட்டில் இன்னமும் இருக்கிறார்கள். அத்தியாவசியமான பொருள்களை விநியோகம் செய்யக் கூடிய தனியார் வியாபாரிகள் இன்னமும் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** புட் கார்ப்பரேஷன் கடைகள் 100, கூட்டுறவுகளால் நடத்தப்படுபவை 4,753.



1974 மார்ச் 22]

**திரு. சோ. அழகர்சாமி:** புட் கார்ப்பரேஷன் மூலமாக, 102 கடைகள்; கூட்டுறவுகளால் நடத்தப்படுபவை 4,753; தனியார் அமைப்பில் இயங்குபவை 4,987. ஆகவே, இன்னமும், கிட்டத்தட்ட 5,000 தனியார்கள் இருககிறார்கள். மக்களுக்கு நியாயமான முறையிலே, அத்தியாவசியமான உணவுப் பொருள்களை விநியோகம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு அவர்கள் இல்லை.

மதிப்பிற்குரிய லத்தீப் அவர்கள் சொன்னார்கள், எப்படி எல்லாம் கடத்தல் நடைபெறுகிறது என்று. வெளியிலே இப்படி எல்லாம் ஏற்பாடு செய்து, விற்பனை செய்கிறார்கள். சீனி, வெளியிலே ரூ. 4க்கு விற்கப்படுகிறது, அதற்காகக் கொண்டு போகிறார்கள். இதைத் தடுப்பதற்கு நியாயமான முறையிலே என்னுடைய ஆலோசனை என்ன என்றால், கோதுமைப் பண்டங்கள் கூட, இன்றைக்கு மத்திய சர்க்காரால் கட்டுப்படுத்தப்படுகிறது என்றார்கள். ஆனால், கடைக்குக் கோதுமை பண்டங்கள் எப்படி போகிறது?

சேமியா பாக்டரி வைக்க வேண்டுமென்று யாராவது கேட்டால், உடனே லைசென்ஸ் கொடுத்து விடுகிறோம். நியாயமாக, ரொட்டிக் கடை வைத்திருக்கிறவருக்குக் கிடைக்காமல், பொய்யாகக் கேட்பவர்களுக்குக் கிடைக்கிறது. கிராமத்திற்கு பூராவும் வேண்டிய ஆள்களுக்கு எல்லாம் சீனி லைசென்ஸ் கொடுத்து, 10 மூட்டை கொடுக்கப்படுகிறது என்று சொன்னால், 2 மூட்டைகூட மக்களுக்கு கொடுப்பது கிடையாது. மாதாமாதம் ஆயிரம் ரூபாய் கெஸடட் ஆபீசருக்குச் சம்பளம் வருகிற மாதிரிதான் அவர்களுக்கு வந்துகொண்டிருக்கிறது. சிவில் சப்ளைஸ் ஆபீஸர்கள் ரூ. 1 இலட்சம், 2 இலட்சம் எப்படியோ சம்பாதித்து விடுகிறார்கள். மூட்டைக்குக் கொஞ்சம் என்று ஆளுக்குப் பாதி பங்கு போட்டுவிடுகிறார்கள்.

இம்மாதிரி முன்பு ஒரு நிலை இருந்தது. 1946-ம் ஆண்டு என்று நினைக்கிறேன், பிரகாசம் அவர்கள் முதல் அமைச்சராக இருந்தார்கள். அப்பொழுது இதைவிடக் கடுமையான, கஷ்ட நிலை இருந்தது. மண்ணெண்ணெய், சீனி, அரிசி போன்ற பொருள்கள் எல்லாம் கிடைக்காத நிலை ஏற்பட்டது. அப்பொழுது கிராமக் கமிட்டிகள் அமைக்கப்பட்டு, தாலுகா கமிட்டிகள் அமைக்கப்

[திரு. சோ. அழகர்சாமி] [1974 மார்ச் 22

பட்டு, ஜில்லாக் கமிட்டிகள் அமைக்கப்பட்டு வழங்கப்பட்டன.
இப்பொழுது மக்களுடைய பிரதிநிதிகளை வைக்க சிரமங்கள்
இருக்கும் என்றால், சர்வ கட்சி உறுப்பினர்களைப் போட்டு
விடலாம். கிராமங்களிலே கமிட்டி, தாலூகாவிலே கமிட்டி,
பிர்காவிலே கமிட்டி போட்டு, நியாயமான விலையிலே பொருள்களை
விநியோகம் செய்தால் நலமாக இருக்கும். இன்று நம்முடைய
சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக கொள்முதல் செய்கிறோம்.
1¼ லட்சம் கொள்முதல் செய்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.
குறுவையை 87 ஆயிரம் டன்தான் லெவி மூலமாகக் கொள்முதல்
செய்திருக்கிறார்கள். மைஸ்மில்காரர்களிடமிருந்தும், வியாபாரி
களிடமிருந்தும் வாங்குவதற்குப் பதிலாக நேரடியாக விவசாயி
களிடத்திலிருந்து நீங்கள் வாங்கவேண்டும். விவசாயிகள்
தருவதற்கு தயாராக இருக்கிறார்கள், அவர்கள் மறுக்கவில்லை.

இப்பொழுது நிர்ணயிக்கப்பட்டு இருக்கிற விலை சரியான விலை
யைக்கூட அவர்கள் பெறுவதில்லை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

தஞ்சாவூரிலே குறுவை சாகுபடியின்போது ஒரு மூட்டை
35 ரூபாய்க்குக் கொடுத்திருக்கிறார்கள், ஆனால் சர்க்காருடைய விலை
40 ரூபாய். 25 சதவீதத்தை 40 ரூபாய்க்குக் கொடுத்துவிட்டு மீதி
75 சதவீதத்தை 80 ரூபாய்க்கு வெளியே கொண்டுவந்து விற்கி
றார்கள். இந்த மாதிரியில்லாமல் மக்களுக்கு அத்தியாவசியமான
பொருட்களை நியாயமான விலையில் கிடைக்கக்கூடிய வழி
வகைகளைச் செய்யவேண்டும்.

அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், பசி வந்திடப் பத்தும்
பறந்துப்போம் என்று, உணவுப் பிரச்னை சரியாக இல்லையென்றால்
மக்களுக்கு ஆத்திரம் வருவது சகஜம்தான். ஆகவே கள்ள
மார்க்கெட்டுக்காரர்களிடத்திலும் கொள்ளை லாபக்காரர்களிடத்
திலும் இதை விடுவதைவிட விவசாயிகளிடமிருந்தே அரசு நேரடி
யாக வாங்குவதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகள் சர்க்காருக்குக் கொடுக்கத்
தயாராக இருக்கிறார்கள். அப்படியில்லாமல் இதற்காக ஒரு
ஏஜெண்டை நியமித்து மைஸ்மில்காரரை நியமித்து அவர்கள்
25 சதவீதத்தை சரியான விலைக்கு விற்று மீதியை ஒன்றிற்கு
இரண்டு விலை வைத்து விற்று கொள்ளையடிக்கிறார்கள். அந்த மீதி



1974 மார்ச் 22] [திரு. சோ. அழகர்சாமி]

அரிசியாக
தான் இப்பொழுது ரூ. 3.60 காசுக்கு விற்கக்கூடிய
இருக்கிறது.

நெல் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு அதிகமாக விளைந்தது
என்று சொன்னார்கள். 59 லட்சம் என்று சொன்னார்கள், 1¼
லட்சம் கொள்முதல் என்பது மிகக் குறைச்சல், சிவில் சப்ளைஸ்
கார்ப்பரேஷன் மூலமாக அதிகமாகக் கொள்முதல் செய்ய
வேண்டும், கூட்டுறவு முறையிலே—நம்முடைய அமைச்சர் அவர்கள்
கூட்டுறவிலே அக்கறையோடு இருக்கிறார்கள்—அவர்கள் ஆயிரம்
மக்களுக்கு ஒரு கூட்டுறவு கடை என்று ஏற்படுத்தி கார்டுகள்
மக்களுக்கு வழங்கி அவர்களுக்கு அரிசி, மண்ணெண்ணெய், சீனி,
கோதுமைப் பண்டங்கள் இப்படிப்பட்ட அத்தியாவசியப்
பண்டங்கள் நிச்சயமாகக் கிடைக்கக்கூடிய வகையை ஏற்படுத்த
வேண்டும். கேட்டபொழுது கிடைக்கவேண்டும்.

ஒரு வாரத்திற்குள் கடைசி நாளன்றைக்குப் போய்க் கேட்
டாலும் கூட கொடுப்பது அரை கிலோவாக இருந்தாலும் அது
நிச்சயமாக இல்லையென்று சொல்லாத முறையில் கொடுக்கப்பட
வேண்டும். அந்த உத்தரவாதம் அளிக்கக்கூடிய முறையிலே
அமைச்சர் அவர்கள் முயற்சி செய்யவேண்டும். இப்பொழுது
பார்த்தால் 1 மைல் நீளத்திற்கு க்யூ நிற்கிறார்கள், நான் சொல்கிற
படி நீங்கள் செய்தால் கியூ நிற்காது, மக்கள் நல்ல முறையிலே
உணவுப் பொருட்களைப் பெற்றுச் செல்வார்கள், நமக்குக் கிடைக்க
கூடிய பங்கை, நல்ல முறையிலே விநியோகம் செய்யவேண்டும்
(மணியடிக்கப்பட்டது.)

* திரு. எல். கணேசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, உணவு
மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைச்
சொல்லுகின்ற முகத்தான் அதனை வரவேற்று ஆதரிக்கிறேன்.

இங்கே பலரும் பேசினார்கள். அதிலும் குறிப்பாக எதிர்த்
தரப்பிலே இருக்கக்கூடியவர்கள் பல ஆக்கப் பூர்வமான விமரிச
னத்தைச் செய்தார்கள், சில பேர்கள் விமரிசிக்கவேண்டுமென்பதற்
காகவே விமரிசித்தார்கள். உண்மையிலேயே தமிழ் நாட்டினு
டைய இன்றைய நிலைமையை இதற்கு முன்னர் 1967-ஆம்
ஆண்டிலே தமிழகத்திலே இருந்த நிலைமையையும் உணவுத்
துறையையும் அறிந்தவர்கள் எம்மைப் பாராட்டத்தான்
செய்வார்கள்.

1967-ஆம் ஆண்டிற்கு முன்னர் அரிசி கிடைக்கவில்லை, தமிழ் நாடு ஒரு பற்றாக்குறை மாநிலம், தமிழ்நாட்டு மக்களுக்கு அரிசி கிடைக்காமல் அவர்கள் எல்லாம் நீண்டு வளர்ந்த வரிசைகளிலே நின்றார்கள், தமிழர்களின் குடல் காய்கிறது, கூழுக்குவழி சொல்லுங்கள் என்று கேட்ட நேரத்திலே அன்றைய முதலமைச்ச ராக இருந்த பக்தவத்சலனார் அவர்கள் பாலும் பழமும் சாப்பி டுங்கள் என்று சொன்னார்கள். அதற்குப் பின்னாலே அப்போ திருந்த ஒரு மத்திய அமைச்சர் எலிக்கரியைச் சாப்பிடுங்கள் என்று யோசனை சொன்னார்கள் . . .

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இந்த அவையிலே அமைச்சர் அவர்கள்கூட பன்றிக்கறி சாப்பிட வேண்டுமென்று சொன்னார்கள் என்பதை மறந்துவிட வேண்டாம்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** பன்றிக் கறியைக் கேவல மாக அம்மையார் அவர்கள் பேசினார்கள். நலிந்து இருக்கின்றவர் களுக்கு அது ஒரு சத்துணவு என்பது அவர்களுக்குத் தெரியா விட்டால் ஏதாவது விருந்து வைக்கின்றபொழுது அவர்கள் அதை உணர்ந்துகொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** எலிக்கறி சாப்பிடச் சொன்னதாக சொல்லும் அந்த அமைச்சர்கூட எலிக்கறியில் சத்து இருக்கிறது என்று தான் சொன்னார்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** சோறுபோட யோக்கியதை இல்லாத நேரத்திலே எலிக்கறியைச் சாப்பிடச் சொன்னார்கள். உணவு கிடைத்த நேரத்திலே சத்துணவிற்காக ஏழை மக்கள் நலிவை ஈடுகட்டிக்கொள்வதற்காக சீமைப்பன்றிக் கறியைச் சாப்பிட்டால் அது நல்ல சத்துணவாக அமையும் என்று விஞ்ஞான அடிப்படையிலே எடுத்துச் சொல்லப்பட்டது. ஒரு மாவட்ட கலெக்டர் கூட விருந்திலே கலந்துகொண்டு சீமைப்பன்றி இறைச்சி யைச் சாப்பிடுவதற்கு முயற்சியெடுத்துக் கொண்டார்கள். அந்தப் பரந்த நோக்கம் அம்மையார் அவர்களுக்கும் வரவேண்டும்.

**திரு. எல். கணேசன்:** மாண்புமிகு அம்மையார் அவர்கள் குறிப் பிட்டார்கள். குடிக்கக் கூழ் கிடைக்கவில்லை. உண்ண உணவு கிடைக்கவில்லை என்று சொன்னால் எலிக்கறியைச் சாப்பிட வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கும் இன்றைக்கும் உண்ண



உணவும் கொடுத்துவிட்டு சத்துணவிற்காக அதையும் சாப்பிடலாம் என்று சொல்வதற்கும் இருக்கிற வேறுபாட்டை அம்மையார் அவர்கள் உணர்ந்து கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

பற்றாக்குறை மாநிலத்தை உபரி மாநிலமாக மாற்றி அண்டை மாநிலங்களுக்கும் உணவை வழங்கி வருகின்ற தமிழ்நாடு அரசு மண்டினிஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம் உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்று சொல்வதற்கொப்ப தமிழக அரசு நன்றிக்குரியது. அண்டையிலே இருக்கின்ற மைசூர் மாநிலத் திற்கும், கேரள மாநிலத்திற்கும் இன்னும் பல மாநிலங்களுக்கும் உணவு அளித்ததற்காக இந்த அரசை அவர்கள் பாராட்டியிருக்க வேண்டும்.

இந்த மாமன்றத்திலே பேசிய பட்டுக்கோட்டை உறுப்பினர் அவர்கள் மிகத் தெளிவாக கருத்துக்களை எடுத்து வைத்தார்கள். இவ்வளவு இடையூறுகளுக்கிடையிலே உணவுச் சிக்கல் வருகிறது என்றால், அதற்குக் காரணம் மற்ற மாநிலங்களுக்கு உணவு கடத்தப் படுகிறது என்பதுதான். கள்ளக்கடத்தல்காரர்களை, பதுக்கல் காரர்களை ஒழிக்க நடவடிக்கை எடுத்தோம், தண்டனை கொடுத் தோம் என்ற சூழ்நிலை இருக்கிறது.

ஆனால் 'டு லீகலைஸ் ஸ்மக்ளிங்' என்று சொல்லத்தக்க வகை யிலே அவர்கள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். சட்டப்படி குற்றவாளியாக இருக்கிறவர்களுக்கு நாம் தண்டனைக் கொடுக் கிறோம், நடவடிக்கை எடுக்கிறோம். ஆனால் இனிமேல் அது குற்றம் இல்லை. நீ தாராளமாக எடுத்துச் செல்லலாம் என்று சொல்லக் கூடிய முறையிலேதான் அவர்கள் இன்றைக்குத் தென் மண்டலம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதைக் கொண்டு வந்தால் ஒரு வாரத்திற்குள்ளாக தமிழகம் பயங்கரமான பஞ்ச நிலைமையைச் சந்திக்க வேண்டிவரும் என்று நாம் சொல்கிறோம்.

மற்ற மற்ற காரியங்களையெல்லாம் கண்டிக்கிறவர்கள், அங் கொன்றும் இங்கொன்றுமாக நடைபெறும் சிறு தவறுகளையெல்லாம் பெரிதாகப் பேசுகிறவர்கள், தனிப்பட்டவர்களுடைய புகார்களை யெல்லாம் எடுத்துச் சொல்கிறவர்கள் இது மிகப் பெரிய கொள்கைப் பிரச்னை, நாலரைக்கோடி தமிழ்மக்களின் வாழ்வைப் பொறுத்த பிரச்னை, இதில் அவர்கள் ஏன் நழுவி விடவேண்டும்,

[திரு. எல். கணேசன்] [1974 மார்ச் 22

வழுவிடவேண்டும்? இந்தப் பிரச்சனையிலே ஒரு உறுதியான கருத்தைச் சொல்வதற்காக அவர்கள் இந்த மாமன்றத்தைப் பயன் படுத்தாமல் வேறு எதற்காகப் பயன்படுத்தப்போகிறார்கள் இதை நான் ஒரு குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை.

நான் அன்றைக்கும் சொன்னேன், அதைத்தான் இன்றைக்கும் சொல்லிவிடவிரும்புகிறேன். தமிழர்களுடைய நலன்கள் பாதிக் கப்படுகின்ற நேரத்திலே தமிழ்ச் சமுதாயத்திற்கு துரோகம் செய் கிற செயலை யாரும் அருள்கூர்ந்து செய்யவேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் பெருமைப்படக்கூடியதாக இருக்கிறது என்றாலும்கூட எதிர்காலம் ஒளிமயமானதாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மைசூர் மாநிலத்திலே காவிரியின் குறுக்கே அணைக்கட்டு கட்டுகிறார்களே அவர்கள் தேச ஒருமைப்பாட்டினை நம்புகிறவர்கள், மத்திய அரசிற்கும் மாநில அரசிற்கும் சுமுகமான உறவு இருக்க வேண்டுமென்று வாதாடுகிறவர்கள் கட்டுகிறார்கள். ஆனால்

(பிற்பகல் 12.30)

அப்படிக் கட்டுவதால் ஏற்படுகின்ற விளைவு, ஆபத்து என்ன என்பதைப் பார்க்க வேண்டும். தஞ்சைத் தரணியைப் பொறுத்த வரையில் சொல்வார்கள், "தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே, மண்ணாவதும் சோழ மண்டலமே" என்று. இனிமேல் அது வரண்டுவிடப் போகிறது. ஆனால் இதை உறுதியான நெஞ்சத்தோடு எடுத்துக்கூறிய நம்முடைய தமிழக முதல்வரவர் களுக்குத் தமிழர்களின் சார்பில் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படியொரு அபாயம் வருமானால், நிச்சயமாக அதை எதிர்க்க வேண்டும், உறுதியோடு எதிர்க்க வேண்டும், இதில் கட்சி என்று இல்லை. தமிழர்கள் ஒட்டுமொத்த உணர்வோடு இந்த 'சவுத் ஸோன்' முறையை, தென் மண்டல முறையை எதிர்க்க வேண்டும்.

அதைப்போலவே எதிர்காலத்தில் உணவுத்துறைக்கு ஒரு அபாயம் இருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள் கிறேன். இது இந்த ஆண்டேகூட தொடங்கியது. தொடர்ந்து அந்த அபாயம் வரப்போகிறது. மிகப் பெரிய ஆபத்து தமிழ கத்தை எதிர்நோக்கியிருக்கிறது.



1974 மார்ச் 22] [திரு. எல். கணேசன்]

தமிழகத்தில் இப்பொழுது இலை, தழை போன்ற உரங்களை விவசாயிகள் எருவாகப் பயன்படுத்தி விவசாயம் செய்வதில்லை.

நாம் பசுமைப் புரட்சியை வெற்றிகரமாக நடத்த முடிவதற் கான காரணங்களில் ஒன்று, இந்த 'பெர்டிலைசர்', 'கெமிகல் பெர்டிலைசர்', என்று சொல்லப்படும் இந்த இரசாயன உரங்க ளாகும். அது இப்போது கிடைக்குமா என்பது ஐயத்திற்குரிய தாக உள்ளது. அதற்கு ஆயிரம் காரணங்களைச் சொல்வார்கள். அந்த உரங்களை வாங்கியளிக்கின்ற பொறுப்பிலே உள்ள மத்திய சர்க்கார்—நான் நம்புகிறேன்—நம்மை வஞ்சித்தோ அல்லது தவிர்க்க முடியாத நிர்ப்பந்தங்களைக் கொண்டுவந்து வைத்தோ தமிழகத்தில் உணவுப் பற்றாக்குறையை செயற்கை முறையிலே உருவாக்க வேண்டுமென்று இந்த ஏற்பாட்டைச் செய்கிறதோ என்று நம்பும் அளவில் நம்முடைய உணவு உற்பத்தியை வெகு வாகப் பாதிக்கும் அளவில் இருக்கிறது. ஆகவே, தமிழக அரசை நான் கேட்டுக்கொள்வேன், தமிழகத்திற்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் உரப்பற்றாக்குறை, 'கெமிகல் பெர்டிலைசர்ஸ் ஷார்ட் டேஜ்' வந்துவிடக்கூடாது. அப்படி வந்தால் அது மிகப்பெரிய ஆபத்தை, மிகப் பெரிய அபாயத்தை உருவாக்கிவிடும். அதனால் உணவுத்துறையில் மட்டுமல்லாமல் எல்லாவகைகளிலும் பின் தங்கி விடுவோம் என்பதை எடுத்துச் சொல்லி, தமிழக அரசு இந்தத் துறையில் பல அரிய சாதனைகளைச் செய்திருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எல்லோரும் பேசுகிறார்கள். உணவுக்காக மிகப்பெரிய கிளர்ச்சி நடக்கிறது, துப்பாக்கிச்சூடு நடக்கிறது, இராணுவம் வரவழைக்கப்படுகிறது. கடைகள் சூறையாடப்படுகின்றன, சட்டமன்றம் கலைக்கப்படுகிறது, ஜனாதிபதி ஆட்சி பிரகடனப் படுத்தப்படுகிறது, இத்தனைக்கும் பிறகு தொடர்ந்து நடக்கிறது, பல்வேறு மாநிலங்கள் அப்படி நடக்கிறது. ஆனால் இங்கே அப்படிப்பட்ட நிலைமைகள் இல்லை. அது வரவேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஆனால் இவ்வளவு சங்கடமான சூழ்நிலை யிலும் உணவுப் பற்றாக்குறை என்ற நிலைமையிலிருந்து தமிழகத் தைக் காப்பாற்றியிருக்கிறது என்பதற்காக நம் அரசுக்கு நன்றி தெரிவித்து, இந்த மானியத்தை வரவேற்று, விடை பெறுகிறேன், வணக்கம்.

THIRU B. VENKATASWAMY: Sir, in support of the cut motions given already. I want to speak a few words on this Demand. In the first place, as has been stated in the Policy Note, some Governments have failed because they are not in a position to supply food stuffs to the people, examples are Gujarat, and other places. Afterwards only, the Government of India realised that there was defect in the distribution system and the control system. They came forward to de-control the coarse grains in the pepining. Really, it is a welcome feature to the entire nation.

At the same time, they are not able to realise the defects and troubles involved in control over the people. I want to quote Gandhiji regarding control. He said · 'People should stand on their own legs and not be spoon-fed by the Government. Otherwise, democracy will be a mockery and Swaraj a delution.' Therefore this food control will only increase the dominance of the Government over the people.

At the same time, I am very happy that this Government has taken up wholesale trade. I appreciate our Government. At the same time, there is no use of simply de-controlling coarse grains only. It is an one-sided policy. It is partial

If Government is interested in de-control, they should do the same thing for wheat also. Why should they have control on wheat, paddy, etc.? If they are really interested in the people, they must de-control the entire foodstuffs. This de-control of coarse grain only is no good, as this will create difficulties to our people. We are producing these in a large measure and we are in a position to send to outside also.

The policy of the Swatantra Party is to have de-control on all foodstuffs. We disapprove of this one-sided policy.

The Policy Note says that sugar will be supplied through co-operative societies; so also kerosene and other essential commodities. I am sorry to state that sugar, kerosene, etc., are not supplied to the villagers. The other day also when I was speaking I said that for getting one bottle of kerosene a villager has to walk about 6 or 7 miles. I only want to know whether it is possible for the Hon. Minister to give a suitable reply for this. Some arrangement should be made for supplying essential articles to the villagers.



It is all right in the Cities and towns. But in villages, it is difficult. What is the machinery the Government have for supplying these things to the villagers? When there is no machinery, why should the Government take this on their hands? They have to entrust this even to the Presidents of Panchayats, because they are responsible people in the villages and essential commodities like sugar, kerosene, etc., can be supplied through them to the villagers and they will also be happy.

It is clearly stated that supplies would be made through co-operative societies. I strongly oppose this. They have failed. So many members have also spoken about it. There is no use of co-operative societies.

For example, I can quote one instance. In a society they did not have the receipt book; because of that they did not issue the fertiliser for 18 or 20 days. Can crops wait for this? If the Supervisor goes on leave, there is no issue. There are so many difficulties.

So, I request that these co-operative societies should not be encouraged. If the Government are not in a position to serve the people, they should not at least trouble the people. I strongly object to this distribution through co-operatives. There should be some other arrangement for supply and essential articles should reach the people.

Coming to the other points, I would like to say a word. Any Nation or State cannot rely only on rice and coarse grains. We should not depend only on food-stuffs like Rice, Wheat and coarse grains. In addition to that, we must have egg, milk meat and vegetables.

As our hon. Friend pointed out, in highly developed countries, they are not depending only on millets and other grains. They can be substituted by means of having good poultry, piggery, animal husbandry and so on. We can substitute the deficiency in foodstuffs by means of these things. In addition to the foodstuffs, we must see that these things are produced more in our State. If this is done, there will be reduction in the consumption of foodstuffs.

Now a man will be consuming 15 or 16 ounces of rice or other grains and if they are substituted by egg, milk, meat and vegetables, it will come to 10 or 12 ounces and food intake will also be reduced. There is good scope for growing good vegetables and also for improving poultry and piggery in our State. I am sorry to point out that the Hon. Minister for Food is not having those portfolios. All these things should be taken into consideration by the Government and it should see that the production is increased in due course so that the people need not worry about food shortage.

Coming to the local points, I would like to say that I have already given two or three cut motions. I have given the cut motion No. 618 to discuss about the issue of ration cards in the belt areas of the State especially at Hosur and Denkanikota. I have given this cut motion only because the people there are suffering a lot especially in belt areas. In the non-belt areas, it is all right because the food grains dealers can get any number of bags and distribute them. In belt areas, the people have to get the permission from the Collector to get the foodgrains. Actually in Hosur all the merchants are suffering because they have not been issued licences though they have applied.

I have given cut motion No. 620 to discuss about the delay in issue of foodgrain licences for the supply of millet and rice to all the merchants who have applied for the same in Hosur and Denkanikota taluks. A number of merchants have applied for licence but none of them in the villages has been issued with a licence. No licence has been issued to the merchants in Hosur and Denkanikota taluks. I have explained this to the District Collector and requested him to distribute the foodstuffs through giving licence to merchants. The quantity allotted for the taluks may be given to the merchants and they may be asked to distribute them. The licences may be given to those who have already applied for them.

In the belt areas, one cannot have one or two bags of rice. If anyone keeps with him one or two bags of rice, the Inspector will go and take away the bags. Actually the merchants are harassed there. Therefore, I request the Government to issue licences to all those who have applied and allot the quantity provided for the taluks, which would enable them to distribute the grains equally. If this is done, the people and the merchants would be happy. Now people are suffering a lot.



(The Hon. Speaker sounded the gong)

I shall finish it in 2 minutes.

I have already explained to the Hon. Minister for Food in person about the difficulties of the people in the belt areas. The check-posts have been located 5 miles prior to the State border. People there are also suffering a lot because of the checkposts.

If the licences are given to the merchants, there will be better control and people will also be benefited.

At present, the people in Hosur which is in a belt area are very unhappy due to this food policy of this Government. If they are to be happy, I request the Government to issue ration cards and distribute the allotted quantity through the merchants to whom the licences are given. Every village Panchayat must have a retail point. I request the Hon. Minister for Food to consider this also and see that the people in the belt areas are happy.

Thank you, Sir.

* **திரு. மணலி சி. கந்தசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின்மீது எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைய தினம் நாட்டிலே நடக்கக்கூடிய நிகழ்ச்சிகளைப் பார்க்கக்கூடிய காலத்தில் இந்த நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கக் கூடிய துறை இந்தத் துறை என்பதை யாரும் மறுக்க முடியாது.

பாட்னாவில் நடக்கக்கூடிய சம்பவங்களை, குஜராத்தில் நடக்கக் மக்கள் கூடிய சம்பவங்களைப் பார்க்கக்கூடிய காலத்தில் நாட்டு அவர்களுக்கு உணவு கொடுக்கப்படவில்லையென்றால், அத்தியா வசியமான பண்டங்கள் கிடைக்கவில்லை என்றால் சும்மா பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள். ஆகவே, அந்த அளவுக்கு இது முக்கியத்துவம் பெற்ற துறையாக இருக்கிறது என்ற அடிப் படையில் மாண்புமிகு மன்னை அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மிக ஜாக்கிரதையாக சொல்லப்பட்ட விஷயங்களைப் பற்றி எல்லாம் கவனிக்க வேண்டும். எல்லாம் சரியாக இருக்கிறது என்று மேலெழுந்தவாரியாக இருக்கக்கூடாது. உண்மையாக இருக்கும் விஷயங்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு இந்தத்

[திரு. மணலி சி. கந்தசாமி] [1974 மார்ச் 22

துறையைச் சரிப்படுத்தும் நடவடிக்கையை எடுத்து அதன் காரணமாக பட்ஜெட் முடிந்து வரக்கூடிய சில மாதங்களில் தங்களுடைய வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படக்கூடிய புதிய ஆரம்பம் ஏற்பட்டிருக்கிறது என்று ஜனங்கள் உணரவேண்டும்.

இந்த ஜனநாயகத்தில் அரசியலுக்கு எதையும் பயன்படுத்திக் கொள்வது என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கத்தான் செய்கிறது. அதிலே கொஞ்சம் அதிகப்படியாகப் பேசுகிறார்கள் என்பது உண்மைதான். ஆனாலும் சிறுவிஷயங்களாவது இருக்காதா என்று பார்த்து திருத்தும் வகையில் சர்க்கார் தன்னுடைய கடமையைச் சரிவரச் செய்யவேண்டும்.

அப்படி சர்க்கார் தன்னுடைய கடமையைச் சரிவரச் செய்ய வேண்டுமென்றால், சிவில் சப்ளைஸ் இலாகாவில் திறமையானவர்கள், நாணயமானவர்களைப் போட்டு இலாகா திருத்தியமைக்கப்பட வேண்டும். தனிப்பட்ட முறையில் எனக்கு யார் மீதும் காழ்ப்புணர்ச்சி கிடையாது. தெரியவும் தெரியாது.

பொதுவாக, நாட்டு மக்கள் மத்தியில் இந்த இலாகா பற்றி நல்ல விதமான கருத்து இல்லை. வியாபாரிகள் சில கிளர்ச்சிகளைக் கிளப்பி விடுகிறார்கள் என்பதும் உண்மைதான். சர்க்கார் துறை வியாபாரத்தைத் தடுக்க வேண்டுமென்பதற்காக அப்படிக் கிளப்பி விடுபவர்கள் இந்த நாட்டில் இருந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

பொன்னி விளைந்து ஆரம்பத்தில் 52 ரூபாய் விற்றது அறுத்துப் போடுகிற காலத்தில் 40 ரூபாய்க்கு வந்து விடுகிறது. நெல் விலையில் மிகப் பெரிய தாரதம்மியம் ஆரம்பத்திற்கும் சில மாதங்களுக்குப் பிறகும் ஏற்படுகிற நிலைமை இருக்கிறது. இடைத்தரகர்கள் தட்டிக் கொண்டு போவதைத் தடுப்பது சர்க்காரின் திறமையைப் பொறுத்திருக்கிறது. அதை எந்த அளவுக்குத் தடுக்கிறார்களோ, அந்த அளவுக்கு நாட்டு மக்களுக்கு நல்லது, உற்பத்தியாளருக்கு நல்லது; சர்க்காருக்கும் நல்ல பெயர்.

உளுந்து விளைய ஆரம்பித்து விட்டது. உளுந்து விலை படு பாதாளத்திற்குப் போய்விடும். சில மாதங்களுக்குப் பிறகு இரண்டு மடங்கு விலை ஏறிவிடும். அந்த அளவுக்கு விவசாயிகள் சூறையாடப்படாமல், ஜனங்களுக்கு நன்மை பயக்க என்ன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டும்.



1974 மார்ச் 22] [திரு. மணலி சி. கந்தசாமி]

இலாகாவில் இருக்கும் பொறுப்புள்ள உத்தியோகஸ்தர்களும் வேலையில் இருக்கிறோம் என்பதோடு மட்டுமல்லாமல் நாட்டு மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய துறையில் இருக்கிறோம் என்ற எண்ணத்தில் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்.

கோதுமையை எடுத்துக் கொண்டால் நான் ஒரு டயபிடிக் பேஷண்ட், நானே அதிக விலை கொடுத்துத்தான் வாங்குகிறேன்.

சைல்டு புட் கிடைக்க மாட்டேன் என்கிறது. வியாபாரிகள் நாணயம் தவறிவிட்டார்கள். அதனால்தான் இந்த நிலை. பலமுனை வியாபாரிகள் பலவிதமான கோரிக்கைகளை வைக்கிறார்கள். அவர்கள் சமுதாயத்திற்கு வரி வேண்டாமென்று சொல்லுகிறார்கள். செய்ய வேண்டிய கடமையைச் செய்கிறார்களா என்றால் இல்லை.

நெல்லை எடுத்துக் கொண்டால், இன்றைக்கு நம்முடைய மாநிலத்திலேயே 19 ஸோன்கள் இருக்கின்றன. ஒரு இடத்தில் இருக்கக்கூடிய விலை எல்லா மாவட்டங்களிலும் இருக்கும்படி ஏற்பாடுகளைச் செய்வதில் என்ன தயக்கம்? எங்கே தவறு இருக்கிறது? தகுதியுள்ள உத்தியோகஸ்தர்கள் இல்லையா? திறமையானவர்கள் இல்லையா? தஞ்சையில் உள்ள விலை கன்னியாகுமரியிலும் இருந்தால் என்ன? அப்படி இருக்கும் அமைப்பு வந்தால்தான் நாம் சோஷலிச சமுதாயத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறோம் என்று பொருள்.

ரஷ்யாவைப் பற்றி ஒரு விஷயத்தைச் சொல்லுகிறேன். ரஷ்யாவில் தாஷ்கண்டில் என்ன விலையோ, அதே விலைதான் மாஸ்கோவிலும் இருக்கும். அங்கு எங்கு போனாலும் ஒரே விலை. அந்த அளவுக்குச் சமுதாயம் முன்னேறி இருக்கிறது. அந்தப் பாதையில் நாம் முன்னேறுகிறோமா என்று யோசிக்க வேண்டும். அத்தகைய விதத்தில் சிவில் சப்ளைஸ் இலாகா ஒழுங்காகச் செயல்பட வேண்டும்.

பல விஷயங்களைக் கூறுகிறார்கள். ரேஷன் கார்டு மக்களுக்குக் கிடைக்கவில்லை என்று கூறுகிறார்கள். தனக்குக் கிடைக்கவில்லை என்றோ, தான் சிபாரிசு செய்தவர்களுக்குக் கிடைக்கவில்லை என்றோ என்று இருக்கும் சூழ்நிலை கூட எம்.எல்.ஏ. க்கள் கூறுகிறார்கள். இன்று இருக்கும் சூழ்நிலை மாற வேண்டுமென்றால், அது இந்த இலாகா எந்த அளவுக்குச் சிறப்பாகச் செயலாற்றுகிறதோ அதைப் பொறுத்திருக்கிறது.

போன சர்க்காரே கவிழ்ந்தது சிவில் சப்ளைஸ் காரியதரிசியால் தான் என்று சொல்லுகிறார்கள். உண்மையோ, பொய்யோ எனக்குத் தெரியாது. இதிலே ரொம்ப ஜாக்கிரதையாகச் செயல்பட வேண்டுமென்று மிக வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

இன்று பலபேர்கள் பேசும்போது தான் யோக்கியம் மாதிரி நினைத்துப் பேசுகிறார்கள். என்னைப் பற்றி எனக்குத் தெரியாது. அரசியலிலே ஒரு சுயேச்சை 41 வோட்டுகள் வாங்கி ஜெயிக்கிறார். அவர் எந்தக் கட்சியிலும் சேராதவர். பல கதைகளைக் கேட்கும் போது வருத்தமாக இருக்கிறது. அவர் அறிக்கை விடுகிறார். தி.மு.க. வின் மதி நுட்பம் எனக்கு உதவி செய்தது என்று சொல்கிறார், எனக்குப் புரியவில்லை. சம்பந்தமில்லாத விஷயத்தைப் பற்றிப்பேசுகிறேன். மற்றவர்கள் சொல்லுவதால் சொல்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** போகும் போக்கிலே பிடித்திழுக்காமல் விட்டு விட்டதை மதிநுட்பம் என்று அவர்கள் பொருள்கொள்வார்களானால் அதை ஒப்புக்கொள்கிறேன்.

**திரு. மணலி சி. கந்தசாமி:** அறிக்கையைப் பார்த்தேன். சந்தேகம் வந்தது, கேட்டேன். வோட்டு போடாதவர்களுக்கு நன்றி சொல்லவில்லை. எல்லோருக்கும் நன்றி சொல்லும்போது அதை மட்டும் விட்டு விட்டார். சாரிட்டி பிகின்ஸ் அட் ஹோம் என்று சொல்வார்கள்.

இந்த மன்றத்திலே உள்ள உறுப்பினர்கள், அவர்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி அல்லது எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி நாம் ஒரு புனித உணர்ச்சியோடு செயல்பட ஆரம்பித்தால் பெரும் குறைகளை எல்லாம் நீக்க முடியும்.

ஒரு அமைச்சர் சொன்னார், புகார்களைச் சொன்னால் ஒழுங்காகச் சொல்லுங்கள் என்று. இப்போது நாம் 94 லட்சம் கார்ட்ஸ் வழங்கியிருக்கிறோம். இதிலும் பல ஊழல்கள் இருந்திருக்கலாம். தெரியாது. 94 லட்சம் பேர்களுக்கு கார்டுகள் கொடுப்பது என்பது ஒரு பெரிய வேலை. வீட்டிற்கு கொண்டு வந்து கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதைச் செய்யும் அளவிற்கு அமைச்சர் அவர்கள் நல்ல ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். இதில் கூட ப்ராட் நடக்கிறது. சர்க்கரையை வாங்கிக் கொண்டு அங்கேயே விற்றுவிடுகிறார்கள்.





ஆகவே சமுதாயத்தில் இன்று முன்னோடியாக இருக்கக்கூடிய அரசியல் வாதிகள், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இவர்கள் எல்லாம் ஒரு உதாரணமாக இருக்கக்கூடிய முறையில் செயல்பட்டால் பல சிக்கல்களைத் தீர்க்க முடியும். கொள்முதல் விலையை எடுத்துக்கொண்டால் 52 ரூபாய்க்கு விற்றவர்களும் இருக்கிறார்கள், நான் ரூ. 42 க்கு விற்றேன். இதற்கு ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** ரூ 42க்கு விற்றிருக்கிறேன் என்று சொல்கிறார்கள். அதற்கு மேலே விற்கமுடியவில்லையே என்று சொல்கிறார்கள். ரூ. 42 தான் சர்க்கார் நிர்ணயித்துள்ள விலை. குறுவையில் 91,000 டன் லெவி போடாமல் வாங்கியிருக்கிறார்கள். சர்க்கார் நிர்ணயித்துள்ள விலைக்குக் குறையாமல் பார்த்துக் கொள்ளமுடியுமே தவிர, ஏறுகிறபோது அதிக லாபம் கிடைக்கவில்லையே என்று சொல்லக்கூடாது. நஷ்டப்படாத அளவிற்கு விவசாயிகளைக் காப்பாற்றிக்கொண்டிருக்கிறோம்.

**திரு. மணலி சி. கந்தசாமி:** அமைச்சர் அவர்கள் நான் சொல்வதைப் புரிந்துகொள்ளாமல் பேசுகிறார்கள். எல்லோருக்கும் ரூ. 42 என்று கிடைக்கட்டும். அல்லது ரூ. 40 என்று எல்லோருக்கும் கொடுத்தால்கூட எனக்கு ஆட்சேபணையில்லை. சர்க்கார் நிர்ணயித்த ரூ. 42க்கு மேல் ஏன் கொள்முதல் செய்தான்? பக்கத்தில் இன்னொருவன் கூடுதல் ரூ. 10 பெறும்போது எனக்கு வயிறு எரியத்தானே செய்யும். சட்டப்படி உள்ளதை நான் வாங்கியே தீருவேன்.

உளுந்துக்கு என்ன விலை? யார் அதை கொள்முதல் செய்யப் போகிறார்கள்? உளுந்தை ஏன் கொள்முதல் செய்யக்கூடாது? தனியாரிடம் விட்டு விட்டால் கொஞ்சநாட்களில் படி மூன்று அல்லது நான்கு ரூபாய்க்கு விற்கப்போகிறார்கள். உளுந்தை நியாயமான முறையில் கொள்முதல் செய்யுங்கள்.

சிவில் சப்ளைஸ் இலாகா இருக்கிறது, புட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியாவும் இருக்கிறது. மன்னையிடம் பேசிக் கொண்டிருந்த போது ஒருவர் வந்தார். பதம், ஈரம் பார்க்க ஒரு ஆள் இருக்கிறான். 40,000, 50,000 ரூபாய் அவன் சம்பாதித்துவிடுகிறான். எவ்வளவு ஈரம் இருக்கிறது என்று கணக்கு பார்க்கிற அதிகாரி

[திரு. மணலி சி. கந்தசாமி] [1974 மார்ச் 22

ஒரு சீசனுக்கு ரூ. 40,000 சம்பாதித்துவிடுகிருர். அந்த ஆளுக்கும் நமக்கும் சம்பந்தம் கிடையாது என்று சொன்னர். நாட்டில் உணவு நெருக்கடி, பல உற்பாதங்கள், பல நெருக்கடிகள் உள்ளன. தமிழ்நாட்டில் உற்பாதங்கள் ஏற்படவேண்டாம். குஜராத்தில் நடந்ததுமாதிரி, பரோடாவில் நடந்தது மாதிரி, பாட்னவில் இன்று நடக்கக்கூடிய நிகழ்ச்சிகள் மாதிரி இங்கு வராமல் தடுப்பதற்கு இந்த இலாகாவிற்கு பொறுப்பிருக்கிறது.

அதிகப்படியான அளவில் கொள்முதல் செய்தால் இதைத் தடுக்கமுடியும். நேர்மையான முறையில் விநியோகம் செய்வதன் மூலம் இப்படிப்பட்ட நிலைகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும். எனவே இந்த இலாகாவை விஸ்தரிக்கவேண்டும்.

அதோடு இந்த இலாகாவிற்கு அதிகப்படியான மானியத்தை ஒதுக்கி இந்த இலாகா நல்லமுறையில் செயல்படும் விதத்தில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எம். ஆர். கண்ணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, உணவு மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய எண்ணங்களைக் கூறிக்கொள்ள விழைகிறேன்.

நாம் எல்லோரும் இந்த தமிழ்நாட்டில்தான் இருக்கிறோம். ஆனால் நாங்கள் தமிழ் நாட்டில் இருப்பதுபோலவே பல மாண்புமிகு உறுப்பினர்கள் பேசவில்லை. அவர்கள் எல்லாம் வேறு எங்கேயோ இருந்து வந்தவர்களைப் போல் பேசுகிறார்கள்.

இருபது ஆண்டுகளாக ஒரு கட்சி மத்தியிலும் மாநிலத்திலும் ஆட்சி செய்து வந்தது. நாட்டுக்காக எவ்வளவோ தியாகங்கள் செய்த பல பெரியோர்கள் எல்லாம் இருந்தார்கள் ஆட்சியில். அந்த ஆட்சியின் கடைசியில் மக்கள் வறுமையால் வாடினார்கள். அந்தக் காலத்தில் மக்கள் அரிசி கிடைக்காது திண்டாடினார்கள். அப்போது அந்தக் குறைபாடுகளை எல்லாம் எடுத்துச் சொல்லி மக்களின் ஆதரவைப் பெற்று நாங்கள் ஆட்சிக்கு வந்தோம்.

மக்களின் அடிப்படைத் தேவைகளில் முக்கியமானதொன்று உணவு, உணவு மக்களுக்குக் கிடைக்கவில்லை என்றால் மற்ற எந்த அடிப்படைத் தேவைகள் மக்களுக்குக் கிடைத்தாலும் பலன்



1974 மார்ச் 22] [திரு. எம். ஆர். கண்ணன்]

இல்லை. ஆகவே உணவுத் துறை என்பது மிக முக்கியமான தாகும். அந்தமுறையில் மக்களுக்கு உணவை நல்லமுறையில் அளிக்கவேண்டுமென்று பாடுபட்டு இந்த ஆட்சி விவசாயத் துறையில் கண்ணும்கருத்துமாக இருந்து பல திட்டங்களைத்தீட்டி பசுமைப் புரட்சியை எல்லாம் செய்து உணவுப் பற்றுக்குறையாக இருந்த நம் மாநிலத்தை தன்னிறைவு பெறச் செய்து இப்போது உபரி மாநிலமாக ஆக்கி இங்குள்ள அனைவருக்கும் நல்லமுறையில் உணவு வழங்கிவருகிறது.

ஆனல் சிலர் சொல்கிருர்கள், உணவு அமைச்சர் திறமையற்றவர் என்று. இன்னின்ன குறைகள் இருக்கின்றன அவற்றை இப்படி இப்படியெல்லாம் போக்கவேண்டும் என்று எடுத்துக்காட்டியிருந்தால் அவர்களின் திறமையை நாம் பாராட்டலாம். ஏதோ பேசவேண்டுமென்று பேசலாம்.

இவ்வளவு நாட்கள் இங்கிருந்தவர்கள் திடீரென்று அங்கு போய்விட்ட பிறகு உடனே பெரிய மேதாவிகள்போல் அறிவுரை சொல்கிருர்கள். அரிசியின் விலை உயர்வு என்று சொல்கிருர்கள். எப்படி உயர்ந்தது? உபரி மாநிலம் என்று சொல்கிறோமே அப்படியிருக்க அரிசியின் விலை உயரலாமா என்று கேட்கிருர்கள். இந்தக் கொள்கையின் அடிப்படையின்பேரில் விலை உயருகிறது, ஆகவே அந்தக் கொள்கையைத் திருத்திக்கொள்ளுங்கள் என்று ஒருவராவது சொல்லட்டும்.

விலை உயருகிறது என்று அனைவரும் சொல்கிருர்கள். நமக்கு காரணம் தெரிகிறது. இங்கு உரம் கிடைக்கவில்லை. உரம் மத்திய அரசிலிருந்து கொடுக்கிருர்கள். அவர்கள் சொல்கிற விலை கொடுக்க வேண்டும். பவர் கிடைக்கவில்லை. அதற்காக எப்படி எப்படியோ பாடுபடுகிறோம். மற்றப் பொருள்களின் விலைகள் எல்லாம் மத்திய அரசின் வரிவிதிப்பின் மூலம் ஏறிவிடுகின்றன. ஆகவே அரிசியின் விலை ஓரளவு ஏறத்தான் செய்யும்.

இப்போது நம் மாநிலத்தில் என்னென்ன வகையான அரிசி வேண்டுமோ அவ்வளவு வகைகளும் கிடைக்கின்றன. குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு, மாதம் ஒன்றுக்கு ரூ. 300 க்கு குறைவாக வருமானம் உள்ளவர்களுக்கு சர்க்கார் பொறுப்பேற்று அவர்களுக்கெல்லாம் எந்தவிதமான கஷ்டமும் இல்லாமல் அவர்கள் நல்லமுறையில் வாழவேண்டுமென்று கார்டுகள் வழங்கப்பட்டு

அரிசி குறைந்த விலையில் கொடுக்கப்படுகிறது. இந்த அளவிற்கு மக்களுக்காகப் பாடுபடுகிற இந்த அரசை எப்படிக் கண்டிக்கிறார்கள் என்று தெரியவில்லை.

மற்ற பயிர் வகைகளை வேறு மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்கிறோம். சீனி சர்க்கரை வியாபாரிகள் மூலம் கொள்முதல் செய்தால் அதை நல்ல முறையில் பராமரிக்க முடிவதில்லை. ஆகவே கொள்முதல் செய்த தானியங்களைத் தனியார்களுக்கு விற்கிறார்கள். அதனால் சர்க்கார் பணம் வீணாகிறது. இந்தக் கொள்கையில் இன்னின்ன தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன என்று எடுத்துச்சொன்னால் திருத்திக்கொள்ளலாம். ஒவ்வொரு இலாகாவும் அந்தந்த இலாகா அதிகாரிகளின் பொறுப்பில் இருக்

(பிற்பகல் 1.00)

கின்றன. இங்கே நாடாளுமன்ற உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் சொன்னார்கள். உடனடியாக அவர்களை ஏன் டிஸ்மிஸ் செய்யவில்லை என்று கேட்டார்கள். உடனடியாக தண்டனை கொடுப்பதற்கு ஜனநாயக நாட்டில் எப்படி முடியும்? ஒரு தொழிலாளியை வேலையை விட்டு எடுக்கவேண்டுமானாலும்கூட ஷோ காஸ் நோட்டீஸ் கொடுக்க வேண்டும், பிறகு மற்ற நடைமுறைகள் எல்லாம் செய்ய வேண்டும். அப்படிச் செய்த பிறகு டிஸ்மிஸ் ஆர்டர் கொடுப்பதற்கு 5 வருடங்கள்கூட ஆகலாம். அந்தந்தத் துறையில் இருப்பவர்கள் மனிதாபிமான உணர்வோடு நடக்க வேண்டும். சம்பளம் வாங்குகிறவர்கள். நாம் வாங்குகிற சம்பளம் மக்களின் வரிப் பணம். நாம் செய்கிற தொண்டு மக்களுக்குப் பயன்படுகிற அளவுக்கு இருக்கவேண்டுமென்ற உணர்வு வரவேண்டும்.

ஒவ்வொரு அமைச்சரும் அதிகாரிகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று அவர்கள் பின்னாலே போய் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அமைச்சர்கள் உத்தரவு போட முடியும். அதை அதிகாரிகள் நிறைவேற்றவில்லையென்றால், எந்த விதத்தில் அவர்கள் பொறுப்பு? சட்டதிட்டங்களை நாம் வகுத்து இருக்கிறோம். இந்த சட்டதிட்டங்களில் ஏதாவது தவறு, எந்தக் கொள்கை தவறு என்று சுட்டிக் காண்பித்தால் நிச்சயமாக அதை மாற்றுவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. நல்ல முறையில் பணியாற்றுகிற அதிகாரிகள் இருக்கிறார்கள். அப்படி சரியாகப் பணியாற்றாத அதிகாரிகள் இருந்தால், அவர்களை அரசின்



கவனத்திற்குக் கொண்டுவந்தால் அதை மாற்றி அமைக்க அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

இங்கே அமைச்சர்கள் பதில் சொல்வதற்கு சில விளக்கங்களை அதிகாரிகள் தருகிறார்கள். அவர்களுக்கு அமைச்சர்களெல்லாம் நன்றி கூட தெரிவிக்கிறார்கள். அது கூட தேவையில்லை. 'தே ஆர் பெய்ட் பார் தேர் ஜாப்'. இதற்கு மேல் அமைச்சர்கள் எந்த முறையில் அவர்களிடம் கனிவோடு நடந்து கொள்ள முடியும். இந்த அரசின் கொள்கை இந்தத் திட்டத்தில் சரியில்லை என்று குறிப்பிட்டால், அதை மாற்றுவதற்கு இந்த அரசு தயாராக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ரேஷன் கார்டு வினியோகிப்பதில் தவறு நடந்திருப்பதாக உண்மையிலேயே எல்லோரும் எடுத்துச்சொன்னார்கள். இந்த அரசு எத்தனையோ ஆயிரம் கார்டுகளைத் தயாரிக்க வேண்டியிருக்கிறது. அவற்றை வினியோகிப்பது என்பது மிகவும் கடினமான காரியம் தான். ஒரு இடத்தில் 10,000 கார்டுகள் கொடுக்கவேண்டுமென்று சொன்னால் அதை மூன்று நாட்கள், நான்கு நாட்கள் என்று பிரித்து இருக்கிறார்கள். இன்று காலையில் கார்டு வினியோகம் ஆரம்பம் ஆகிறது என்று சொன்னால், கியூவில் ஒரு 200-300 பேர் நிற்கத்தான் செய்வார்கள். இங்குள்ள சில பத்திரிகைக்காரர்களுக்கு இந்த ஆட்சியை எப்படியாவது ஒழித்து விட வேண்டுமென்று எண்ணம். உடனே அதைப் படம் பிடித்துப் போட்டு விடுகிறார்கள். இது சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியாதா? 3,000 பேர்க்கு ஒரு நாளைக்கு கார்டு வினியோகம் நடைபெறுகிறது என்று சொன்னால் ஒரு 200, 300 பேர் கியூவில் நிற்கத்தான் செய்வார்கள். சினிமாவில் டிக்கெட் வாங்க கியூ நிற்பது இல்லையா . . . .

**திருமதி த. ந. அனந்தநாயகி:** மக்கள் கியூவில் நிற்கவேண்டுமென்று சொல்கிறீர்களா? கியூ நிற்கிறார்கள் என்று போட்டோ போட்டதால்தான் இன்றைக்கு சீரணிப்படை, தேறாம் கார்டு மூலம் மக்களுக்கு வீடு தேடி கார்டு வருகிறது. எட்டு மணி நேரம், 9 மணி நேரம் கார்டு வாங்குவதற்கு கியூவில் நிற்பது என்றால் எப்படி? போட்டதில் என்ன தவறு?

**திரு. எம். ஆர் கண்ணன்:** கியூவில் நின்று முறையாக வாங்கிச் செல்வார்கள் என்று தான் அரசு கருதுகிறது. முறைப்படி கொடுப்

பதில் தவறு இருந்தால் அந்தத் தவறைச் சுட்டிக்காட்டி அதைத் தடுக்க வழி என்ன வென்று சொல்லுங்கள். இங்கே பல திறமை சாலிகள் இருக்கிறார்கள், இந்த சட்டமன்றத்திலே 7 ஆண்டுகால மாக இருக்கிறார்கள், இன்ன குறை இருக்கிறது, இன்ன குறையை இப்படி நீக்கலாம், என்று சொன்னால் நன்றாக இருக்கும். இந்தச் சமுதாயம் எப்படி இருக்கிறதோ, அதேபோன்றுதான் அதிகாரிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் இருப்பார்கள்.

பெரியவர் மணலி அவர்கள் சொன்னது போல் சமுதாயம் திருந்தினால் ஒழிய இந்த நாட்டு மக்கள் முன்னேற முடியாது. நாம் மனிதர்களை ஒருவருக்கொருவர் ஓரளவிற்கு நம்புகிறோம். அதற்கு ஏற்ற வழியில் வழிவகை செய்கிறோம். ரூ. 10 கோடிக்கு வரி சீரமைப்பின் மூலம் போட்டால், ஆகா! வரிபோட்டு விட்டார்கள் என்று சொல்கிறார்கள். முன்பு ரூ. 200 கோடியாக இருந்த வருமானம் இப்போது 500 கோடி வருகிறது என்றால் யாருக்கு வரி போட்டு வசூல் செய்தோம் . . . (மணியடிக்கப் பட்டது).

* **திரு. கே. கந்தசாமி:** பேரவைத் தலைவரவர்களே, இன்று தமிழக அரசின் சார்பாக கொண்டு வரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையை பார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பாக வரவேற்று, ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கி றேன்.

இந்தியா எங்கினும் பசி என்றால் பத்தும் பறந்திடும் என்ற நிலையைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத்தோரே" என்று சிலப்பதிகாரத்தில் சொல்லப்பட் டிருக்கிறது. உண்டி, உணவு இல்லாமல் கஷ்டப்படுகிறவர்களைப் பார்த்துக்கொண்டு இருப்பது தமிழனின் பண்பாடு அல்ல. அந்த அடிப்படையில் நம்முடைய கலைஞர் அரசு பிற மாநிலங்களுக்கும் உணவு கொடுத்துதவும் பாங்கினை நாம் காணுகிறபோது, நிச்சய மாக அவரைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

மத்திய அரசின் கொள்கை காரணமாக உரப் பற்றாக்குறை இருந்தாலும், உர விநியோகத்தில், சர்க்கரை விநியோகத்தில் நாம் 100 டன் உற்பத்தி செய்கிறோம் என்றால் 70 சதவிதம் மத்திய அரசே எடுத்துக்கொண்டு அதை குறைந்த விலையில் விற்பதற்கு



உரிமை இருந்தாலும், மத்திய அரசு தரும் அளவை 30 சதவிதத்தை வைத்துக்கொண்டு நல்ல முறையில் விநியோகத்தைச் செய்து இந்த அளவுக்கு தமிழ்நாட்டில் உணவுத் துறை தன்னிறைவு அடைந்து இருக்கிறது என்றால், அதற்கு உள்ளபடியே இந்த அரசைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

இங்கே பல உறுப்பினர்கள்—என் போன்ற ஆதரவு கட்சி உறுப்பினர்கள்கூட—அத்தனைபேரும் ஒரு குறைபாட்டைச் சுட்டிக் காட்டினார்கள். விநியோக முறையில் தவறு இருக்கிறது என்ற விவரத்தைப் பல கோணங்களில் அத்தனை உறுப்பினர்களும் மொத்தக் கருத்தாகச் சொன்னார்கள். அதை நானும் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய அரசு கொள்கை அளவில் அதை நிறைவேற்றியிருந்தாலும், நடைமுறைக்கு வருகிற போது விநியோக முறையில் ஏதோ கோளாறு இருக்கிறது என்பதை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும். அப்படிக் கோளாறு இருப்பதை எப்படி நிவர்த்திக்க முடியும் என்பதை மிகத் தீவிர மாகப் பரிசீலித்து, அதற்கு ஏற்பான காரியங்களை செய்வதற்கு, அந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கு ஒரு நிபுணர் குழு அமைத்து கலைஞர் அரசு அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த உணவுப் பிரச்சனை நாட்டின் முதுகெலும்புப் பிரச்சனை யாக இருப்பதால், அந்தக் குழுவின் ஆலோசனைகளைக் கேட்டறிந்து, அந்தக்குறையை நிவர்த்தி செய்ய சிறப்பான முறையில் ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். அதை முறைப்படிச் செய்தால் எதிர்க்கட்சித் தோழர்கள் கூட அதைப் பாராட்டத் தவற மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

அந்த முயற்சிக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகத்தான், இன்றைக்கு உணவுப் பொருள்கள் வழங்கலை கூட்டுறவுத் துறை மூலம் அரசு செய்ய ஏற்பாடு செய்திருக்கிறது என்று கருதுகி றேன். அதை இன்னும் விரிவு படுத்தி மாநிலம் முழுவதும் அந்தத் திட்டத்தைச் செயல் படுத்த அரசு முனைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உணவுப்பிரச்சனை உயிர் பிரச்சனை என்ற காரணத்தால் பங்கீட்டு முறை, நல்ல முறையில் இருக்கவேண்டு மென்றும், அந்த உணவுப் பொருள் குறைந்த விலையில் கொடுக்க வேண்டுமென்பதிலும் அக்கரை கொண்டவர்களில் நானும் ஒருவன்.

ஆனல், அதே நேரத்தில் உணவு உற்பத்தி செய்யும் விவசாயிகளின் நிலைமையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். விவசாயிகள் வாங்கும் பொருள்கள்—அதாவது அவர்கள் வாங்கும் வேஷ்டி, துணி மணிகள், உரம் மற்றவைகளின் விலை—சென்ற ஆண்டில் இதே நாளில் எந்த விலையில் இருந்ததோ அதைவிட ஒரு மடங்கு, 1½ மடங்கு உயர்ந்து இருக்கிறபோது அவர்கள் உற்பத்தி செய்யும் நெல், பருப்பு, தானியங்கள் போன்ற மற்ற பொருள்களுக்கு விலையை நாம் இன்னமும் குறைத்துக்கொடுத்தால் என்ன செய்ய முடியும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்த நாட்டின் சமுதாயம் உயிர் வாழ்வதற்கு விவசாயிகள் தான் காரணம். அவர்கள் நல்ல முறையில் உணவு உற்பத்தியைச் செய்தால்தான் இந்தச் சமுதாயம் வாழ முடியும். நாட்டில் இருக்கும் ஜனத்தொகையில் 80 சதவிகிதம் விவசாயிகள். பெரும்பாலும் ஏழைகள்தான். நடுத்தர விவசாயிகள் கொஞ்சம் பேர்தான் இருக்கிறார்கள்.

நம்முடைய அரசின் சில புரட்சிகரமான திட்டத்தின் காரணமாக இந்த நாட்டில் பழைய மிட்டா மிராசுகள், ஜமீந்தார்கள் இல்லை. ஒருசிலர் வேண்டுமானல் கொஞ்சம் வசதியாக இருக்கலாம். எல்லோரும் ஏழை விவசாயிகள் தான், சாதாரண விவசாயிகள் தான். கடன் வாங்கித்தான் விவசாயம் செய்கிறார்கள். அவர்கள் விவசாயத்திற்காக வாங்கிய கடனைத் திருப்பித் தர முடியாமல் இருக்கிறார்கள். அவர்களுடைய மாடுகளை ஜப்தி செய்யும் நிலைமையைக்கூட நாம் பார்க்கிறோம்.

இதற்குக் காரணம் என்ன? மான்சூன் பெயிலியூர் என்று சொல்கிறார்கள். பருவ மழையின்மையின் கோளாறு காரணமாக. இன்னும் சில பகுதிகளின் காரணமாக பெய்ய எதிர்பார்த்த அளவுக்கு மழை கிடைக்காமல் போய், கிடைத்த பொருளையும் எதிர்பார்த்த விலைக்கு விற்க முடியாமல் போய் விவசாயிகள் பாதிப்பு அடைந்து, அவர்களுக்குப் பொருளாதாரச் சிக்கல் ஏற்படுகிறது. ஆகவே, கிராப் இன்ஷூரன்ஸ் திட்டத்தை நமது அரசு பரிசீலனை செய்யக்கூடாதா என்பதை தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவர்களை அறியாமல் அவர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டால் அதை ஈடு செய்வதற்கு குறைந்த பிரீமியம் வாங்கிக்கொண்டு, லைஃப் இன்ஷூரன்ஸ்



உயிர் பாதுகாப்பு திட்டம் எப்படி இருக்கிறதோ அதேபோல இதற்கும் கொண்டு வந்தால் நல்லது என்று கூறிக்கொள்கிறேன்.

Prices of agricultural produce must be fixed in proportion to the rise in prices of other commodities and then only the agriculturists can be saved.

என்ற கருத்தை ஆணித்தரமாக அமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மற்றப் பொருள்களின் விலைக்கு உகந்த முறையில் விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு விலை நிர்ணயிக்கப்பட்டால் தான் அவர்களும் மற்ற சமுதாயத்தைப் போன்ற அமைப்பு, அங்கங்கள்போல வாழ முடியும். அந்தப் பெரும் சமுதாயத்தைப் பாதுகாப்பதற்கு இப்படிப்பட்ட நல்ல திட்டங்களைக் கொண்டுவர வேண்டும். அமைச்சர் அவர்கள் இதற்காக எடுத்துக்கொள்ளக்கூடிய தனிப்பட்ட சிரமங்களையும் முயற்சிகளையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்கள் பகுதியில் கள்ளக்கடத்தலைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று விரைவாக அதிகாரிகளோடு பிரயாணம் செய்யும்பொழுது கார் விபத்துக்குள்ளாகி, சில கஷ்டங்களுக்குள்ளானர்கள் சில மாதங்களுக்கு முன்னல். அந்த அளவுக்கு இந்த இலாகாவை திறமையாக கவனித்து உண்மையாக மக்களுடைய நலன்களுக்காகப் பாடுபடுவதை நான் பாராட்டுகிறேன். அவர்களுடைய பயிற்சியின் வெற்றி பெற மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லிய கருத்துக்களை அவர்கள் எல்லாம் விரைவாக செயல்பட வேண்டும் என்று என்னுடைய கருத்தைக் கூறி, அனுமதி அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, அமர்கிறேன். வணக்கம்.

**திரு. நா. வீராசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து எனது கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

அகில இந்தியாவிலே பல மாநிலங்களிலே ஆட்சி கவிழ்ந்து கொண்டிருக்கிறது. முதல் அமைச்சர் கேரோ செய்யப்படுகிறார், நிதி அமைச்சர் தாக்கப்படுகிறார், கவர்னர் உரை நடத்த முடிய

[திரு. நா. வீராசாமி] [1974 மார்ச் 22

வில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலை ஏன் வந்தது என்று பார்த்தால் அங்கே எல்லாம் பசி இருக்கிறது. பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. உண்ண உணவு கிடைக்கவில்லை. ஆக, உண்ண உணவு கிடைக்காவிட்டால், பஞ்சம் வந்தால், பசி ஏற்பட்டால் என்ன நடக்கும் என்பதை அகில இந்தியாவும் இன்றைக்குக் காட்டிக்கொண்டிருக்கிறது. அதற்கு மாறாக தமிழ் நாட்டில் ஒரு நிம்மதியான ஆட்சி, நிலையான ஆட்சி நம்முடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் நடைபெறுகிறது என்று சொன்னால் அதைக் கூட சிலரால் தாங்க முடியவில்லை. எப்படியாவது இந்த ஆட்சியில் பஞ்சம் ஏற்படாதா என்று நினைக்கிறார்கள். எப்படியாவது இந்த நாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டு, அதன் மூலம் இந்த அரசு கவிழாதா என்று நினைக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் இருக்கிற அரிசியை வேறு எங்கேயாவது கொண்டு போவதன் மூலம், உணவுப் பொருள்களைக் கொண்டு போவதன் மூலம். ஒரே ஸோனாக செய்வதன் மூலம் இந்த நாட்டில் பஞ்சம் வரும், பசி வரும், அதனால் ஆட்சி கவிழும் என்று இப்படிப்பட்ட கொள்கையை அகில இந்திய ரீதியிலே பேசுவதைப் பார்த்து வருகிறோம்.

ஆனால், இன்று இங்கே உணவுப் பொருள்கள் கிடைக்கின்றன. இந்த நாட்டில் பஞ்சம் இல்லை. இதைப் பாராட்டுவதற்குப் பதிலாக விலைவாசி ஏறிவிட்டது என்று சொல்கிறார்கள். உள்ளபடியே நாட்டிலுள்ள விலைவாசி ஏறியதற்கு யார் காரணம் என்பதை நிபுணர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்திய அரசினுடைய தவறான பொருளாதாரக் கொள்கையும், வரி போடுகின்ற விதமும்தான் காரணம், அதனால்தான் விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது என்று கூறியிருக்கிறார்கள். அப்படிப் பார்த்தால் கூட, மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற நோக்கில் தமிழ் நாட்டில் விலைவாசி குறைந்து இருக்கிறது. அகில இந்தியாவிலும் கடந்த ஒரு ஆண்டில் பார்த்தால் 22.4 சதவிகிதம் விலைவாசிகள் உயர்ந்திருக்கின்றன. ஆனால், தமிழ் நாட்டில் மட்டும் 11.6 சதவிகிதம்தான் அந்த விலைவாசிகள் உயர்ந்திருக்கின்றன. முக்கியமான மற்ற உணவுப் பொருள்களைப் பொறுத்தவரையில் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிற நோக்கில் எந்த அளவுக்கு



1974 மார்ச் 22] [திரு. நா. வீராசாமி]

விலைவாசி இருக்கிறது என்பதை நேரம் இல்லாத காரணத்தினால், ஒன்றிரண்டை மட்டும் சுட்டிக்காட்டுகிறேன்.

அரிசியை எடுத்துக்கொண்டால், தமிழ்நாட்டில் இன்று ஒரு குவிண்டால் ரூ. 135-க்கு அரிசி கிடைக்கிறது.

கல்கத்தாவுக்குப் போனால் ஒரு குவிண்டால் ரூ. 350 முதல் 375 வரையில் அரிசி விலை இருப்பதைப் பார்க்கிறோம்.

அடுத்தாற்போல் கம்பு போன்ற உணவுப்பொருளை எடுத்துக்கொண்டால் தமிழ் நாட்டில் ரூ. 90 முதல் 95 வரையில் கிடைக்கிறது. பம்பாய், கல்கத்தா போன்ற இடங்களில் ரூ. 150, 160 கொடுத்தால் கூட கிடைக்கவில்லை என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

சோளம் தமிழ் நாட்டில் ரூ. 106-லிருந்து ரூ. 110 வரையில் கிடைக்கிறது. ஆனால், அகில இந்தியாவிலும் மற்ற மாநிலங்களில், பஞ்சாப் போன்ற மாநிலத்தில் கூட ரூ. 210-லிருந்து ரூ. 270 வரையில் விலைவாசி உயர்ந்திருக்கிறது.

மக்காச் சோளம் போன்ற உணவு தானியத்தை எடுத்துக்கொண்டால் தமிழ் நாட்டில் ரூ. 105-க்கு கிடைக்கிறது. பம்பாய், இதர மாநிலங்களில் ரூ. 150-லிருந்து 160 வரையில் விலைவாசி உயர்ந்திருக்கிறது.

இப்படி விலைவாசிகள் உயர்கின்ற நேரத்தில் அதை எப்படியாவது கட்டுப்படுத்த வேண்டும் என்று நம்முடைய முதல்வர் அவர்கள் பட்ஜெட் உரையில் தெளிவாகச் சொன்னார்கள்.

பருப்பு வகைகள், எண்ணெய் வகைகள் ஆகியவைகளுக்கு நாம் போட்டிருக்கிற வரியிலிருந்து விலக்கு அளித்திருக்கிறோம். ஆனாலும், அந்தப் பொருள்கள் நம் நாட்டில் கிடைக்கவில்லை. நம்முடைய உணவு அமைச்சர் அவர்கள் உரையிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த நாட்டில் பருப்பு, எண்ணெய் வகைகள் பற்றாக்குறையாக இருப்பதினால் அண்டை மாநிலங்களை நாம் எதிர்பார்த்து இருக்க வேண்டிய காரணத்தினால் ஓரளவுக்கு விலைவாசி 15.5 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

[திரு. நா. வீராசாமி] [1974 மார்ச் 22

இப்படிப்பட்ட சூழ்நிலையிலே ஒரு பக்கத்திலே நம்முடைய அரசுக்கு மத்திய அரசு நமக்குத் தேவையான உரத்தைக் கொடுக்கவில்லை, தேவையான பூச்சிக்கொல்லி மருந்து கொடுக்கவில்லை. இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில்கூட நம்முடைய அரசு போட்ட நல்ல திட்டங்களின் மூலமாகத்தான் தட்டுப்பாடு இன்றி உணவுப் பஞ்சம் வராமல், நமது தமிழ் நாடு உணவுப் பொருள்களைப் பொறுத்த அளவில் தன்னிறைவு பெற்றிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பத்தொன்பது மண்டலங்களாகப் பிரித்திருப்பதைப் பற்றி பெரியவர் மணலி அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் முதல் அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்வேன், 19 மண்டலங்கள் என்பதை 4, 5 ஆகக் குறைத்து, வட ஆற்காடு, செங்கற்பட்டு, சென்னை, தென் ஆற்காடு போன்ற நான்கு மாவட்டங்களை ஒரு மண்டலமாக வைத்து, கோவை, சேலம் போன்ற மாவட்டங்களை ஒரு மண்டலமாக வைத்து, இப்படிப் பிரித்தால் விலைவாசி ஒரு பக்கத்தில் குறைவதற்கு சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. விலைவாசியைப் பற்றிக் கூட அல்ல.

இன்னும் பல இடங்களில் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டு போவதற்கு தடை இருக்கிறது. தமிழ் நாட்டைப் பொறுத்த அளவில் பலத்த காவல் போட்டு இந்த நாட்டில் உற்பத்தியாகின்ற உணவு தானியங்களை வேறு எங்கேயும் கொண்டு போக முடியாதபடி எவ்வளவு தடுக்க முடியுமோ அவ்வளவு தடுங்கள். ஆனால், வட ஆற்காடு மாவட்டத்தில் உற்பத்தியாகக் கூடிய அரிசி சென்னைக்கு வருவதற்கு தடை இருக்கிறது.

குறிப்பாக, ஆற்காடு கிச்சலி அரிசியைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். சென்னையில் இருக்கக்கூடிய வசதி படைத்தவர்கள் அதை வாங்கிச் சாப்பிடுவார்கள். அங்கே உற்பத்தியாகின்ற அந்த ஃபைன் வெரைட்டியை அங்கே இருக்கக்கூடியவர்கள் அதிகமாக வாங்கிப் பயன்படுத்துவதில்லை. அந்த அரிசி இங்கே வருவதற்குத் தடை இருக்கக்கூடாது. இந்தத் தொழிலில் அங்கே 1.000 தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் நல்ல முறையில் இந்தத் தொழிலை அங்கே நடத்தி வந்தார்கள்.



1974 மார்ச் 22] [திரு. நா. வீராசாமி]

அறுவடை காலத்தில் ஏறத்தாழ 5,000 குடும்பங்கள் இதிலே ஈடுபட்டிருக்கிறார்கள். ஒரு மாத காலமாக அவர்கள் எந்த வேலையும் இல்லாமல் பட்டினியால், பசியால் வாடிக்கொண்டிருக்கிறார்கள்.

வண்டி இழுக்கின்ற தொழிலாளிகள் நெல்லை அரைத்து, அரிசியை பதப்படுத்தி, சென்னை மக்களுக்கு அனுப்பிக் கொண்டிருப்பதில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் அத்தனை பேரும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கம் இதை மிகக் கருணையோடு கவனித்து ஃபைன் வெரைட்டியை—மோட்டா ரகத்தை அங்கு இருக்கிறவர்களுக்குக் கொடுக்கலாம்—ஆற்காடு கிச்சிலி அரிசி என்று சொல்லப்படுகிற வகை அரிசியை ஆற்காட்டிலிருந்து சென்னைக்குக் கொண்டு வருவதற்கு தனி அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட சந்தர்ப்பம் ஒரு பக்கத்தில் இருக்கிற நேரத்தில் நம்முடைய அரசு மிகக் கருணையோடு மற்ற மாநிலங்கள் பசியால் வாடுகின்ற நேரத்தில் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கவில்லை.

பார்வேர்டு பிளாக் கட்சியைச் சேர்ந்த திரு. கந்தசாமி அவர்கள் குறிப்பிட்டதுபோல எந்த அளவுக்கு நாம் பெருந்தன்மையோடு நடந்து கொண்டிருக்கிறோம், இந்தியா ஒரே நாடு என்பதை ஒத்துக்கொண்டு மற்ற மாநிலங்களுக்கு அரிசி கொடுத்திருக்கிறோம் என்பதை என்னைப் போன்றவர்கள் ஒரு பக்கத்தில் நன்றாக உணர்கிறோம்.

மத்திய தொகுப்பு ஏற்பாட்டிற்கு இந்த மாநிலத்தின் பங்காக 1,11,435 டன் அரிசி கொடுக்க வேண்டுமென்று சொன்னபொழுது அதையும் கொடுத்துவிட்டு, மகாராஷ்டிரம் நம்மைப் பார்த்துக் கேட்ட நேரத்தில் 10,000 டன் அரிசி அனுப்பி வைத்தோம்.

குஜராத் முதல் அமைச்சர் அவர்கள் கடிதம் எழுதியவுடன் 11,000 டன் அரிசியை வழங்கினோம்.

கேரளா கேட்ட நேரத்தில், பல முறை அரிசி கொடுத்திருந்தாலும், சிறப்பாக 9,000 டன் அரிசி கொடுத்து உதவினோம்.

மைசூர் மாநிலம் தனக்கு ஒன்றும் இல்லையா என்று கேட்ட பொழுது 3,000 டன் அரிசி வழங்கினோம்.

மேற்கு வங்காளத்திற்கு 1,000 டன் அரிசி கொடுத்தோம்.

இப்படி கேட்கிற நேரத்திலெல்லாம் மற்ற மாநிலங்களுக்கு அரிசி வழங்கியிருக்கிறோம். நமக்குத் தேவையான பங்கை, நமக்குத் தேவையான கோதுமையை மற்ற மாநிலங்கள் நமக்குத் தந்து உதவியிருக்கின்றனவா என்பதைப் பார்க்க வேண்டும். 1972-73-ல் நமக்குக் கொடுக்கப்பட்ட கோதுமையின் அளவு 3,59,000 டன். 1973-74-ல் நமக்குக் கொடுக்கப்பட்டது 1,47,000 டன். மாதாமாதம் நமக்குத் தேவைப்படுவது 34,000 டன் கோதுமை. இப்பொழுது நமக்குக் கிடைப்பது 9,000 டன் கோதுமைதான்.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கோதுமை சாப்பிடுங்கள், கோதுமை சாப்பிடுங்கள் என்று கட்டாயப்படுத்தினார்கள்; கோதுமை சாப்பிட்டு இப்போது பழக்கப்படுத்திக்கொண்டார்கள் மக்கள். இப்போது கோதுமை கிடைப்பதற்கு வழியில்லை. கோதுமை மட்டுமல்ல; அதன் உப பொருட்களும் கிடைக்கவில்லை; அதுபோல மைதா, ரவை, ஆட்டா போன்ற உணவுப் பொருட்களை சாப்பிடுகிறவர்களும் அவை கிடைக்காமல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மத்திய அரசு 34,000 டன் கோதுமை கொடுத்து வந்ததை இப்போது 9,000 டன்னாகக் குறைத்துவிட்டார்கள். அதை 25,000 டன் என்ற அளவுக்காவது உயர்த்திக் கொடுப்பதற்கு, மத்திய அரசாங்கத்தோடு போராடியாவது பெற்றுத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இருப்பது சர்க்கரை. உள்ளபடியே தமிழ் நாட்டிலுள்ள ஒரு கோடி மக்களுக்கு கார்டுகள் வழங்கி, இந்தியத் துணைக்கண்டத்திலே வேறு எந்த மாநிலத்திலும் செய்யாத ஒரு சாதனையை நாம் செய்திருக்கிறோம். சர்க்கரை விநியோகத்தை சிறந்த முறையில் செய்துகொண்டிருக்கிறோம். ஏராளமான அளவுக்கு இங்கே சர்க்கரை உற்பத்தியாகிறது. உற்பத்தியாவதில் 70 சதவிகிதம் சர்க்கரையை மத்திய சர்க்கார் லெவி என்று எடுத்துக் கொள்கிறது. கிலோ ஒரு ரூபாய் 65 காசுக்கு எடுத்து விட்டு, மக்களுக்கு 2 ரூபாய் 15 காசுக்கு விற்கிறார்கள். ஓப்பன்



மார்க்கெட்டில் எவ்வளவு விலைக்கு வேண்டுமானாலும் விற்றுக் கொள்ளலாம். இது மத்திய அரசாங்கத்தின் தவறான ஒரு பொருளாதாரக் கொள்கையாகும்.

நம்முடைய நாட்டில் கரும்பு உற்பத்தியாகிறது. ஒரு டன்னுக்கு 90 ரூபாய் முதல் 110 ரூபாய்வரை கொடுக்கப்படுகிறது. சர்க்கரையை உற்பத்தி செய்கிறோம். 1.65 ரூபாய் என்று மத்திய அரசு வாங்கி, அமெரிக்க நாட்டுக்கு ஒரு ரூபாய்க்கும் கீழாக விற்கிறார்கள். எப்படி இந்த நாடு முன்னேறும்? எப்படி இந்த நாட்டின் பொருளாதாரம் வளரும்? சர்க்கரையை உற்பத்தி செய்கின்ற இந்த நாட்டு மக்களுக்கு கிலோ 2.15 ரூபாய்க்கு விற்கிறார்கள்; அதுவும் சரியாக எல்லோருக்கும் கிடைக்கவில்லை; மூன்று ரூபாய், 4 ரூபாய்க்குத்தான் கிடைக்கிறது. ஆனால் அமெரிக்க நாட்டுக்காரர்களுக்கு கொண்டுபோய் ஒரு ரூபாய்க்கு விற்கிறார்கள். இது எந்த முறையில் பொருத்தமாகும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்றைக்கு இந்த நாட்டிலே சர்க்கரை மார்க்கெட் எப்படி இருக்கிறது என்றால், மகாராஷ்டிராக்காரனும், உத்திரபிரதேசத்துக்காரனும் என்ன சொல்கிறார்களோ அதைத்தான் நாங்கள் செய்வோம் என்று மத்திய அரசாங்கம் சொல்கிறது. அவர்கள்தான் இந்திய அரசை ஆட்டிப் படைக்கிறார்கள் என்ற நிலை இருக்கிறது. இதை மாற்றி அமைக்க வேண்டும். மாண்புமிகு உணவு அமைச்சரவர்கள் டில்லிக்குப் போகும்போது அமைச்சர்கள் மாநாட்டிலே ஒரு முறைக்கு பல முறை இதை வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு கருத்தை பல உறுப்பினர்கள் இங்கே தெரிவித்தார்கள். இவ்வளவு உற்பத்தி செய்கிறோம். ஆனால் கள்ளக்கடத்தல் இருக்கிறது; எங்கோ கொண்டு போகிறார்கள்; நடவடிக்கை எடுக்கவில்லை என்றெல்லாம் சொன்னார்கள். கள்ளக்கடத்தலைத் தடுப்பதில் இந்த அரசு எந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கள்ளக் கடத்தல்காரர்கள் மீது வழக்குகளே போடவில்லையா என்றால் எந்த எந்த வகையிலே நடவடிக்கை எடுக்கப்

பட்டிருக்கிறது, எத்தனை வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன என்பதை அமைச்சரவர்கள் தெளிவாகக் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

சமூகத்திலே விரோதிகள் இருக்கிறார்கள். அவர்கள் தண்டிக்கப்படவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும் போது கள்ளக்கடத்தல்காரர்களை சுட்டுத்தள்ள வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு ஜனநாயக நாட்டிலே சட்டம் இடம் தராது. இருக்கின்ற சட்டத்தை வைத்து எந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்க முடியுமோ அந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரிசிக் கடத்தல் செய்துகொண்டிருக்கிறார்கள். அதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. கடந்த ஆண்டு 10,505 வழக்குகள் போட்டு, ஏராளமான உணவு தானியங்களை அரசு கைப்பற்றி இருக்கிறது. 31,026.23 குவிண்டால் அரிசியை கடத்தல்காரர்களிடமிருந்து கைப்பற்றியிருக்கிறோம். 20,458.75 குவிண்டால் நெல்லைப் பறிமுதல் செய்திருக்கிறோம்.

மோட்டா ரக தானியங்கள் 8,295.83 குவிண்டால் கைப்பற்றியிருக்கிறோம்.

அதேமாதிரி மண்ணெண்ணெய் கைப்பற்றப்பட்டிருக்கிறது.

உரம் கைப்பற்றப்பட்டிருக்கிறது.

சிமெண்ட் கைப்பற்றப்பட்டிருக்கிறது.

கைப்பற்றப்பட்ட பண்டங்களின் மொத்த மதிப்பீடு 62,25,542 ரூபாய்.

இப்படி வழக்குகள் தொடரப்பட்டு, உணவு தானியங்கள் கைப் பற்றப்பட்டு, இவ்வளவும் செய்த பின்னால் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்து 126 வழக்குகள் போட்டிருக் கிறார்கள். அதிலே 20 பேர்களுக்கு தண்டனை கொடுத்திருக் கிறார்கள். இருபத்தெட்டு வழக்குகள் விசாரணையில் இருக்கின்றன புலன் விசாரணையில் உள்ள வழக்குகள் 73. மூன்று வழக்குகளை எடுக் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். இப்படி அரசாங்கம் வழங் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து. தண்டனை செய்ய வேண்டியவர்களுக்கு தண்டனை வழங்கி, கடமையை கொண்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.





இந்த நேரத்திலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர் களுக்கும் மாண்புமிகு உணவு அமைச்சரவர்களுக்கும் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்றையதினம் தமிழ் நாட்டிலே இருந்து சோளம், கம்பு உணவு தானியங்கள் பல்வேறு மாநிலங்களுக்குப் போக அனுமதித்து இருக்கிறோம். உடனடியாக இதைத் தடுக்க வேண்டும்.

ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்கள் சோளம், கம்பு, கேழ்வரகு போன்ற உணவு வகைகளை வாங்கிச் சாப்பிடுகிறார்கள். இந்த உணவு வகைகள் மற்ற மாநிலங்களுக்கு போய்விட்டால், அவர்களும் அரிசி உணவு சாப்பிட விரும்புவார்கள். அவர்களும் அரிசி உணவு சாப்பிடத் தொடங்கிவிட்டால், அரிசிப் பஞ்சம் வரக்கூடிய அபாயம் இருக்கிறது. ஆகவே, இவ்வகை உணவு தானியங்கள் வெளி மாநிலங்களுக்குப் போகாமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வடாற்காடு மாவட்டத்தில் என்ன காரணத்தினாலோ கடந்த 5, 6 நாட்களாக விவசாயத்திற்கு மின்சாரம் கிடைக்கவில்லை. இந்த நேரத்தில் விவசாயத்திற்கு மிகவும் முக்கியமாகத் தேவைப் படுவது மின்சாரம். அங்கே 1,40,000 பம்புசெட்டுகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. அவை 5, 6 நாட்களாக ஓடவில்லை மின்சாரப் பற்றாக்குறையினால். அதனால் உணவு தானிய உற்பத்தி பெரிதும் பாதிக்கக்கூடிய நிலையில் இருக்கிறது.

அங்கே இருக்கின்ற விவசாயிகளுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் நஷ்டம் வந்துவிடுமோ என்று பயந்துகொண்டிருக்கிறார்கள். முதலமைச்சரவர்கள் மின்சாரம் வழங்க இரவு பகலாக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று கேள்விப் படுகிறோம். உடனடியாக மின்சாரம் வழங்கினால்தான் உற்பத்தி பாதிப்பைத் தவிர்க்க முடியும். அதற்கு ஆவன செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, ஒன்றை மட்டும் கூறி முடித்துக்கொள்கிறேன். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில் 400 பேர் வேலை செய்கிறார்கள். இந்த 400 பேர்களுடைய பணிகளும் நிரந்தரமாக்கப்பட வேண்டும். எத்தனையோ தொழிலாளர்கள் பிரச்சனைகளை

[திரு. நா. வீராசாமி] [1974 மார்ச் 22

கருணையோடு கவனித்து இருக்கும்போது இந்த 400 பேர்களுடைய—கிளார்க், அசிஸ்டன்ட், சூப்பிரண்டென்டென்ட் போன்றவர்களுடைய பணிகளை நிரந்தரமாக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

## 4. அறிவிப்பு.

## பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 27—3—1974-ம் நாளன்று விவாதத்திற்கும் வாக்கெடுப்பிற்கும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன 3—4—1974-ம் நாளன்றும், 3—4—1974-ம் நாளன்று எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய மானியக் கோரிக்கைகள் எண்கள் 24—தொழில்கள், 26—கைத்தறியும் துணித் தொழிலும், 49—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு, 13—நீதி நிர்வாகம், 14—சிறைச்சாலைகள் ஆகியவை 27—3—1974-ம் நாளன்று இரு வேளைகளிலும் எடுத்துக்கொள்ளப்படும்.

மேலும், 30—3—1974-ம் நாளன்று விவாதத்திற்கும் வாக்கெடுப்பிற்கும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய மானியக் கோரிக்கைகள் எண் 8—தேர்தல்கள், 9—மாநில ஆட்சித் தலைவர், 7—மாநில ஆயத் தீர்வை, 5—முத்திரைத் தாள்கள், நிர்வாகம், 4—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் ஆகியவை 1—4—1974-ம் நாளன்றும், 1—4—1974-ம் நாளன்று எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய மானியக் கோரிக்கைகள் எண் 24—தொழில்கள், 26—கைத்தறியும் துணித் அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், 40—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, 41—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும், 42—பல்வகை, 45—ஒதுக்கீடுகளும், ஒதுக்கீடுகளும், 46—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு, 56—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் ஆகியவை 27—3—1974-ம் நாளன்று இரு வேளைகளிலும் எடுத்துக்கொள்ளப் அறிவிக்கிறேன்.



1974 மார்ச் 22] [பேரவைத் தலைவர்]

பேரவையின் இன்றைய காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4.00 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-27 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

இடைவேளைக்குப் பின் பேரவை மீண்டும் மாலை 4.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமையில் கூடியது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முக்கியமான மானியத்திலே எங்கள் கட்சியின் சார்பாகக் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஓரிரு கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.

முதலிலே இங்கு விவாதத்திலே மிக முக்கியமாக எழுந்த பிரச்சினை தென்மண்டலம் என்ற நிலையில் ஜோன் உருவாக்கப்பட வேண்டும் என்பது. தென்ராஜ்யங்கள் எல்லாம் ஒரு மண்டலமாக இருக்க வேண்டுமென்ற கருத்தினை ஒருசிலர் இங்கே எடுத்துக் கூறினார்கள். இந்த மண்டலக் கொள்கையைப் பொறுத்தவரையில் திட்டவட்டமான, தெளிவான சில கருத்துக்கள் நமக்குத் தேவை. இன்றைக்கு ஆந்திரா, உபரிப் பிரதேசமாக இருக்கிறது. கர்நாடக மாநிலம் பற்றாக்குறை மாநிலமாக இருக்கிறது. கேரள மாநிலம் அதைவிடப் பற்றாக்குறை மாநிலம். தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஓரளவு சர்ப்ளஸ் என்ற நிலைமையில்தான் இருக்கிறது. மார்ஜினல் சர்ப்ளஸ்.

பசுமைப் புரட்சியின் காரணமாக இங்கு உற்பத்தி பெருகிவிட்டது என்று புள்ளிவிவரங்கள் எல்லாம் நமக்குத் தந்திருக்கிறார்கள். உணவு உற்பத்தி 73 லட்சம் டன். தமிழகத்தின் தேவை 55 லட்சம் என்பதாக எல்லாம் கணக்குத் தாப்பட்டிருக்கிறது. இப்படி அதிகமாக உணவுப் பண்டங்கள் இருக்கின்றன என்றால் விலைவாசி ஏன் குறையவில்லை என்கிற கேள்வி எழுகிறது.

எனக்கு முன்பு பேசிய உயர்திரு கண்ணன் அவர்கள், 'உருப்படியான திட்டங்கள் எதுவும் எதிர்க்கட்சியினர்களிடம் இருந்து வரவில்லையே, விலை குறையவில்லை என்கிறார்கள், விலை

குறையாததற்குக் காரணம் மத்திய அரசின் வரிக்கொள்கை—'டாக்ஸ் பாலிஸிதான்' என்பதாகச் சொன்னார்கள்.

தேவைக்கு அதிகமாக உணவுப் பண்டங்கள் இங்கே இருக்கிறது என்றால் ரூபாய்க்கு ஒரு படி அரிசி இவர்கள் போடலாமே, மகாராஷ்டிரம், குஜராத், கேரளம், மைசூர், மேற்கு வங்காளம் ஆகியவற்றுக்கு எல்லாம் 34 ஆயிரம் டன் அரிசியைக் கொடுத்திருக்கிறோம் என மன நிறைவோடு அறிக்கை தந்திருந்தாலும் தமிழகத்திலே உற்பத்தியாகக்கூடிய தானியம் 73 லட்சம் டன் என்பதாகக் கொடுத்திருப்பது சரிதானா என்பதை ஆராய வேண்டும். 73 லட்சம் டன் உற்பத்தி இருந்திருந்தால் விலை சரியத்தான் செய்யும். புள்ளிவிவரமே தப்பு என்றுதான் நான் ஐயப்படுகிறேன். அதுவும் தமிழகத்தை தனி மண்டலமாக வைத்து, தமிழகத்தையே 10 விதமான ஜோனாகப் பிரித்து, பலவிதமான கட்டுப்பாடுகளை எல்லாம் வைத்திருக்கிறபோதே இங்கே நியாயமான விலையில் அரிசி கிடைக்கவில்லை. என்னைப் பொறுத்தவரையில் இது தனி மண்டலமாக இருப்பது நிச்சயமாகத் தேவை. காங்கிரஸ் கட்சி ஆண்டபோது, முதலமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம் அவர்கள் தமிழகம் தனி மண்டலமாகத்தான் இருக்கவேண்டும் என்பதை மத்திய அரசிடம் வற்புறுத்தினார்கள்.

தென் ராஜ்யங்கள் நான்கும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டால் இங்கிருக்கிற உணவுப் பண்டங்கள் கேரளத்திற்கும், மைசூருக்கும் போய்விடும். அங்கே பணப் பயிர்கள் அதிகம். எத்தனை விலை வேண்டுமானாலும் கொடுத்து வாங்கிக்கொண்டு விடுவார்கள். ஆதலால் அரசாங்கம் இதனை ஆராய்ந்து, தமிழகத்தின் நலனைக் கருதி இதைத் தனி மண்டலமாகவே வைத்திருக்க வேண்டும். எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் தமிழகத்தின் நலனில் இதுதான் சரியான முடிவாக இருக்கும். இது தனி மண்டலமாகவே இருக்கவேண்டுமென்ற கருத்தினை வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அடுத்தபடியாக, உணவுப் பண்டங்கள் விலை குறைந்துவிட்டதாகவும், 2 ரூபாய்க்கு ஒரு படி கிடைப்பதாகவும் இங்கே எடுத்துச் சொல்கிறார்கள். என் கையில் ஒரு பில் வைத்திருக்-



கிறேன். நியாயவிலைக் கடையில் கொடுக்கப்பட்ட பில்—6 கிலோ 9 ரூபாய் என்று பில்போடப்பட்டிருக்கிறது. ஆறு கிலோ 9 ரூபாய் என்றால் எங்கே படி 2 ரூபாயாகிறது?

ஏதோ விலைவாசி குறைந்துவிட்டதைப்போல இந்த மன்றத்தில் கூறலாம். நானும் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்த நேரத்தில், நாகர்கோயில் தாலுக்காவில் தக்கலை, குழித்துறை ஆகிய இடங்களில் உள்ள விலையேற்றத்தைச் சொன்னேன். உணவு அமைச்சருக்கு அதிகாரிகள் புள்ளிவிவரங்கள் கொடுத்திருக்கிறார்கள். உண்மைக்கும் அதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்று நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

நான் ஏதோ அரசியல் பிரச்சாரத்திற்காக அந்தப் பகுதியிலே ஏதோ. இப்படி விலைவாசி கூடியிருக்கிறது என்று சொல்வதாய் கருதினால், ஆளும் கட்சி உறுப்பினர்களோ அல்லது அமைச்சர் பெருமக்களோ யாராவது அந்தப் பகுதிக்குச் சென்று நேரடியாக விசாரித்துப் பார்க்கட்டும். அப்படி நான் சொல்வது பொய்யாக இருக்கிறது என்று சொன்னால், என்ன தண்டனைக்கு ஆளாக வேண்டுமோ அதற்குத் தயாராக இருக்கிறேன் என்று சொல்ல விரும்புகிறேன். குற்றம் சாட்ட இதை நான் சொல்லவில்லை.

நமக்கும் கேரள மாநிலத்திற்கும் நேச்சுரல் பவுண்டரி இல்லையென்ற காரணத்தினால், அங்கு இப்பொழுது போகத்தான் செய்கிறது. ஆனால், இப்பொழுது தாராளமாகச் செல்வது குறைந்திருக்கிறது. அந்தப் பகுதியிலே இப்பொழுதிருக்கிற கஷ்டம் என்னவென்றால், அங்கு சுமார் 27,000 ஏக்கர் நிலம் இருந்தாலும், மழை பெய்யாததன் காரணமாக, தீய்வு ஏற்பட்டிருக்கிறது. பருவக் கோளாறின் காரணமாக, உணவு உற்பத்தி குறைந்திருக்கிறது. ஆதலால். அங்கு விலை கிடுகிடு என்று ஏறிக்கொண்டிருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

என்னைக் கேட்டால், அந்தப் பகுதியிலே நிச்சயமாக, உணவு தானியத்தை ரேஷனாகக் கொடுப்பதை நான் முழுமையாக ஆதரிக்கிறவன். அந்த ஜில்லா முழுவதும் ஸ்டாச்சுட்டரி ரேஷன் போட்டால், நாங்கள் அதை நிச்சயமாக வரவேற்போம்.

அதல்லாமல், இதைப் பிரச்சாரத்திற்காகவோ, அல்லது வேறு வாதத்திற்காகவோ நான் சொல்லவில்லை. ஏனென்றால், ஏனைய பகுதிகளிலிருந்து அங்கு வருவது கட்டுப்படுத்தப்படுகிறது. அங்கு விளைவு குறைவாக இருக்கிறது. ஆகவே, பெரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. குஜராத் போன்ற மாநிலங்களிலே உணவு நெருக்கடி காரணமாக, விலைவாசிப் போராட்டங்கள் நடப்பதெல்லாம் குறித்து இந்த அறிக்கையிலே வெளியிட்டிருக்கிறார்கள். அத்தகைய நிலைமையை எடுத்துக் கூறத் தேவையில்லை. முன்பொரு முறை போராட்டம் நடந்து அதிலே காரியங்களெல்லாம் செய்து கொடுத்திருக்கிறார்கள். இல்லையென்று சொல்லவில்லை. இப்பொழுதும் சாதாரண மக்கள் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால், அவர்களுக்குக் குறைந்த விலையிலே அரிசி கிடைக்க அரசு வழிவகை செய்ய வேண்டுமென்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த அரசாங்கம், வர்த்தகத்தை, ஹோல்சேல் டிரேடை ஏற்க இருக்கிறார்களா இல்லையா என்பதைப் பற்றி என்ன கருதிக் கொண்டிருக்கிறது என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். இந்தச் சந்தர்ப்பத்திலே நமது ஐந்தாவது திட்ட அணுகுமுறை பற்றிய விரைச் சுருக்கம் என்ற புத்தகத்திலிருந்து கவர்ன்மெண்ட் ஆப் இந்தியா வெளியிட்ட ஒரு பகுதியைப் படித்து அந்தக் கொள்கையை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறதா என்று கேட்க ஆசைப்படுகிறேன். அதில் கீழ்க்கண்டவாறு கூறப்பட்டுள்ளது :—

"உணவுத்தானிய மார்க்கெட்டுகளில் பலவிதமான சங்கடங்களும் நிச்சயமற்ற நிலைமைகளும் இருந்து வருவதை உத்தேசித்து அத்தியாவசிய உணவுப் பொருள்கள் விஷயத்தில் உள்நாட்டு வர்த்தகம், விநியோகம் சம்பந்தமாக அரசு மென்மேலும் முக்கியமான பங்கு வகித்து வரவேண்டும் என்று ஐந்தாவது திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. நிச்சயமற்ற பருவ நிலை, உணவுப் பொருள்களின் விலைவாசிகளுடன் விளையாடி வரும் எதற்கும் துணிந்த வாய்தா வர்த்தகர்கள், விவசாயிகளுக்கும் பொருள் வாங்குவோருக்கும் இடையே செயல்பட்டு வரும் சில்லரை





கடைக்காரர்கள், முதலாக பலதரப்பட்ட இடைத்தரகர்கள் ஆகியோரின் தயவின் கீழ் நாம் இனியும் நீடித்து வருவது சாத்தியமில்லை. மேலும் மக்களுக்குச் சமுதாய நியாயம் வழங்க வரவேண்டும் என்றால் உணவுத் தானிய வர்த்தகத்தில் அரசு பிரவேசிப்பது இன்றியமையாததாகும் என்பதும் நன்கு தெளிவாகும்".

அரசு வாணிபம் அல்லது வர்த்தகத்தை உருவாக்க வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையிலே அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். கோதுமை, அரிசி போன்ற வகைகளெல்லாம் அத்தியாவசியப் பண்டங்களாக இருக்கிற காரணத்தால் அரசாங்கம் திட்டவட்டமான கொள்கையை வகுக்கவேண்டும். அரசு, ஒருவேளை, நமது சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக இந்த உணவுப் பங்கீட்டினை எந்தமுறையிலே நிர்வகித்து வருவார்கள் என்பதை நாம் சிந்திக்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

சென்னை, கோவை போன்ற நகரங்களிலே நேரடியாகக் கடைகள் வைத்து நடத்தி வருகிறார்கள். அதையெல்லாம் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்கவேண்டுமென்ற ஆணை அண்மையிலே பிறப்பித்ததாக அறிகிறேன். இப்படி கூட்டுறவு மூலம் விநியோகம் செய்தால் இங்கிருக்கிற நெருக்கடியைச் சமாளிக்க முடியுமா என்பதை அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுமக்களுக்கு இருக்கிற கஷ்டங்களும், துன்பங்களும் குறைகளும் தீரவேண்டுமானால் நிச்சயமாக இந்தப் பங்கீட்டு முறை ஒழுங்காக இருக்கவேண்டும். பங்கீட்டுமுறை ஒழுங்காக இருக்க வேண்டுமானால் டிஸ்டிரிபியூஷன் பாயின்ட்டிலே நடக்கிற தவறுகள் அத்தனையையும் சமாளிப்பதற்கு அரசாங்கத்திடம் போதிய அதிகாரம் வேண்டும். அதை இல்லையென்று சொல்லவில்லை. இன்றிருக்கிற பொருள் கட்டுப்பாடு சட்டத்தின்கீழே அதிகாரங்கள் எல்லாம் வழங்கப்பட்டு இருக்கின்றன. அந்த அதிகாரத்தை, நல்லமுறையிலே பயன்படுத்தி, நிச்சயமாக இப்பொழுது விலையைக் கட்டுப்படுத்த முடியும் என்று நான்

[1974 மார்ச் 22 [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

கருதுகிறேன். ஏனென்றால், இன்று உணவு தானியம் முழுமையாக ஒருசில வர்த்தகர்களுடைய கையிலே சிக்கிக் கொண்டிருக்கிற காரணத்தால், அவர்கள் தாறுமாறாக ஆக்குகின்ற நிலையைப் பார்க்கின்றோம். ஆகவே, அரசாங்கமே ஹோல்சேல் டிரேடைப் பற்றி நடவடிக்கை எடுப்பது பொருத்தமாக இருக்கும் என்று துணிச்சலாக நான் கூற முற்படுகிறேன் . . .

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இந்தப் புத்தகத்தினுடைய பெயரே 'திரும்பு முனை'. சரியாகத் திரும்புகிறார்களா என்பது அவர்களுக்கே தெரியாத காரணத்தால், கோதுமை வர்த்தகத்தை மத்திய அரசு மேற்கொண்டதைப் பற்றி அவர்களே திரும்பவும் பரிசீலித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று வெளியிடப்பட்டிருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட நோக்கில், அந்தத் திரும்பு முனையிலே எந்தப் பக்கம் போவது என்பதை யார் சொல்வது?

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** எந்த முனையாக இருந்தாலும், மக்களுடைய நன்மையைக் காக்கவேண்டிய பொறுப்பு, கடமை, நம்மைச் சேர்ந்தது என்ற கண்ணோட்டத்துடன்தான் நான் கூறுகிறேனேயொழிய ஏழை எளிய மக்களுக்கு உணவுப் பண்டங்கள் கிடைத்தாகவேண்டும். பெரும் செல்வந்தர்களுக்கும், மிட்டா மிராசுகளுக்கும் உணவு அதிகமாகக் கிடைக்கும். அவர்களைப் பற்றி அக்கறை கொள்ளத் தேவையில்லை. உழைத்து, உருக்குலைந்து போனவர்களுக்கு நாம் உணவு கொடுக்க வேண்டும். இந்த ஹோல்சேல் டிரேடிலே, ஊழையவேண்டாம் என்று முடிவு செய்யப்பட்டிருப்பதாக நான் பத்திரிகையிலே பார்த்தேன். முதலமைச்சர்கள் மாநாட்டில், ஒருசில முதலமைச்சர்கள் அதை ஒத்துக்கொள்ளவில்லை. ஆதலால், அது கைவிடப்பட்டது.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மத்திய அரசு அந்த நோக்கத்தை ஏற்றுக்கொண்டிருந்தாலும் செயல்படுத்துவதிலே ஏற்பட்ட இடர்ப்பாடுகள் காரணமாக வெற்றிகரமாக நிறைவேற்ற முடியவில்லை என்ற கருத்தை அவர்களே வெளியிட்டிருக்கிறார்கள். இந்த நோக்கில் வெற்றிகரமாக இல்லாவிட்டால், அதனால் ஏற்படும் விளைவுகள் எப்படி இருக்கும் என்பதை நீங்கள்தான் சொல்லவேண்டும்.



1974 மார்ச் 22]

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இது மத்திய அரசாங்கமும், மாநில முதலமைச்சர்களும், அதிகாரிகளும் கூடி, அந்தந்த மாநிலத்திலே இருக்கிற நிலைமைகளுக்கு ஏற்ப செய்வதுதான் சாலச்சிறந்ததாக இருக்கும் என்பதைத்தான் நான் கூற விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலும் என்ன விலை நிர்ணயப்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அரிசி ஒரு கிலோ ரூ. 1.50 என்று கொடுத்திருக்கிறார்கள்.

ஆனால் கொள்முதலில், இந்த அரசாங்கம் நிர்ணயித்திருக்கின்ற விலையைப் பார்க்கும்போது, அதிக இடைவெளி இருக்கிறது என்பதை நான் கூறக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். கொள்முதல் செய்வதை சுமார் 1½ ரூபாய்க்குக் கொடுக்க வேண்டிய நிலைமையிலே இருக்கிறோம். சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்ட் மூலமாகச் செலவழிக்கின்ற செலவு அத்தனையையும் இந்த விலையிலே சேர்த்து நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த இலாகாவிலே இருக்கிற சிப்பந்திகள் செலவு, அது மட்டுமின்றி, ஹாண்ட்லிங் சார்ஜஸ், மற்றும் விதவிதமான சார்ஜஸ்ஸை எல்லாம் சேர்த்து, அதிலே லாபமும் இல்லை, நட்டமும் இல்லையென்று கணக்கு ஒருவேளை கூறினாலும், அந்தச் செலவு அதிகமாக இருக்கிற காரணத்தால், இந்த விலையானது அதிகமாக இருக்கிறது என்று நான் கூற முற்படுகிறேன். நிச்சயமாக இந்தச் செலவினத்தை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்தச் சிப்பந்திகளுடைய செலவை இத்தோடு சேர்க்காமல் விடுவதுதான் பொருத்தமாக இருக்கும். ஒருவேளை, இதிலே நட்டம் ஏற்பட்டால், நட்டம் ஏற்பட்டது என்று கணக்கைப் பார்க்காமல், நிச்சயமாக உணவு வழங்குவதிலே எல்லோரும் பரோபகாரியாக நடந்து கொள்ளவேண்டுமென்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

உணவு வர்த்தகத்தைப் பொறுத்தவரையிலும் மொத்த வியாபாரத்தை எடுப்பதிலே கஷ்டம் இருக்காது என்ற கருத்தை நான் எப்பொழுதும் கூறத்தயாராக இருக்கிறேன். இது விவாதத்திற்குரிய ஒரு பிரச்னையாக இருக்கும். ஃப்ரீ மார்க்கட் வேண்டுமென்று சொல்வார்கள், ஆனால் அது வந்தால் என்ன

நடக்கும் என்பது நமக்குத் தெரியும். அப்படிச் சொல்வதற்குக் காரணம் அவர்களுடைய அரசியல் கொள்கையாக இருக்கலாம். எங்கள் கட்சியைப் பொறுத்தவரையிலே நாங்கள் பலமுறைகள் எடுத்துக் கூறியிருக்கிறோம், இந்த உணவு வர்த்தகத்திலே நாம் கொஞ்சம் ஜாக்கிரதையாக இல்லாவிட்டால் நிச்சயமாக மக்கள் தள்ளிவிடுவார்கள் என்ற உணர்வோடு மக்களுக்கு நன்மை செய்கின்ற முறையிலே இந்தப் பிரச்சினையை அணுகவேண்டும்.

குழந்தைகளுடைய உணவு இன்று கிடைக்கப்பெறவில்லை. கேட்டால், டாக்டர் சர்டிபிகேட் வேண்டும், வேறு சர்டிபிகேட் வேண்டுமென்று சொல்கிறார்கள். அதற்குக் கட்டுப்பாடு இருக்கிற காரணத்தினால்தான் மார்க்கெட்டில் கிடைக்கவில்லை, பல இடங்களிலும் சிறப்பு அங்காடிகள் இருக்கின்றன. அங்கே கேட்டால்கூட டாக்டர் சர்டிபிகேட் வேண்டுமென்று கேட்கிறார்கள். அதற்கு அலைகின்ற தன்மையெல்லாம் இருக்கின்றது. கட்டுப்பாட்டினால் அது ஓடி ஒளிந்து மறைந்துவிட்டதோ என்ற நிலைமை இருக்கிறது. குழந்தை உணவு வழங்குவதிலே அதிக அக்கறை செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிமிண்டைப் பொறுத்தவரையிலும் கன்ட்ரோல் வைக்கப்பட்டிருக்கிறது. ஒருவேளை முதலாளிகளுக்கு மட்டும் பயன்படக்கூடியபொருள் என்று நினைப்பதற்கு இல்லை. கட்டட வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் எல்லாம் இதனால் பாதிக்கப்படுகிறார்கள். பலரும் கட்டடம் கட்டமுடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒருசில இடங்களிலே சிமிண்ட் கிடைக்கிறது இல்லையென்று சொல்லவில்லை. எல்லா இடங்களிலேயும் ஜனத்தொகையின் அடிப்படையிலேயும் தேவையின் அடிப்படையிலேயும் சிமிண்ட் விநியோகம் செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது, அரசுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தியே நல்லமுறையிலே மக்களுக்கு அதிகமாக சிமிண்ட் கிடைக்கச் செய்யவேண்டும்.

மண்ணெண்ணெய் வழங்குவதற்கு மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் வேண்டிய திட்டங்களை வகுக்கவேண்டும். சென்னை



நகரத்தைப் போன்ற பட்டணங்களிலே கிடைக்காமல் பலரும் அவதிப்படவேண்டிய நிலைமை இருக்கிறது. கிராமங்களிலே இருக்கிற மக்கள் எல்லாம் விளக்குகளுக்கு இதைப் பயன்படுத்துகிறார்கள் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. விலை நிர்ணயம் செய்யப்பட்டிருந்தாலும்கூட அந்த விலையிலே கிடைக்கவில்லை பல இடங்களிலே. அதைக் கண்டுபிடித்து சீரான விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, கொள்முதல் விலையைப்பற்றி ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நமக்கு அச்சிட்டுக் கொடுக்கப்பட்டிருக்கின்ற புத்தகத்திலே 11-வது பக்கத்திலே வேளாண்மைப் பொருள் விலை ஆணைக் குழுவின் பரிவுரையின் மேல் இந்திய அரசு முடிவுசெய்த பல்வேறு தானிய வகைகளின் விலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே நடுத்தர நெல் ரூ. 70 ஒரு குவிண்டாலுக்கு, சோளம் ரூ. 63, கம்பு ரூ. 65, மக்காச்சோளம் ரூ. 63, கேழ்வரகு ரூ. 62 என்றெல்லாம் பட்டியல் தந்திருக்கிறார்கள்.

எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் ஒரு நீண்ட பட்டியலைக் கொடுத்தார்கள், மகாராஷ்டிரத்திலே என்ன என்ன விலை இருக்கிறது என்று கொடுத்தார்கள், அங்கே குறைவாக இருப்பதாகவும், அது ஒருவேளை நமக்கு மனநிறைவு அளிப்பதாக இருக்கிறதாகவும் சொன்னார்கள். மத்திய அரசு தானியக் கட்டுப்பாட்டை நீக்கியதன் காரணமாகத்தான் விலைவாசி உயர்ந்திருக்கிறது என்று சொன்னார்கள்.

உணவுப் பண்டங்கள் அதிகமாக இருக்கின்றன, மற்ற மாநிலங்களுக்கு நாம் வழங்குகிறோம் என்று சொல்லலாம். சோளம், கம்பு, மக்காச்சோளம் போன்ற தானியங்கள் மற்ற மாநிலங்களுக்குச் செல்வதைப்பற்றி மத்திய அரசோடு பேசி கட்டுப்படுத்த நமக்கு உரிமை இருக்கிறது. வாதாடி நம் பக்கம் இழுப்பதற்கு நியாயம் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுப் பங்கீட்டு முறையைப்பற்றி நான் முன்பே எடுத்துச் சொன்னேன். ரேஷன் கார்டுகளை வழங்குவதிலே குற்றங்குறைகள்

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 மார்ச் 22

இருக்கின்றன. க்யூ வரிசைகள் நிற்கின்றன. எங்கள் பகுதியிலே 25 சென்ட் நிலம் இருக்கிறவர்களுக்கு ரேஷன் கார்டு இல்லையென்று உத்தரவு போடப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. குறைந்தபட்சம் 75 சென்ட் வைத்திருக்கின்றவர்களுக்கு ரேஷன் கார்டு கொடுக்க வேண்டும். அவர்களுடைய குடும்பத்திலே எத்தனை பேர்கள் இருக்கிறார்களோ, அங்கு விளைகிற நெல்லைக் கணக்கிலே எடுத்து அவர்களுக்குக் கொடுப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில் மாடர்ன் ரைஸ்மில்கள் வைத்திருக்கிறார்கள், அவை லாபமாக ஓடுகின்றனவா அல்லது நஷ்டத்திலே ஓடுகின்றனவா என்பது தெரியவில்லை. அங்கு உற்பத்தியாகிற அரிசியெல்லாம் பல நேரங்களில் தரமில்லை. எங்கள் மாவட்டத்தில் உள்ள மக்கள் அது கெட்டுப்போன அரிசியாக இருக்கிறது, உளுத்துப்போன அரிசியாக இருக்கிறது என்று சொல்லி வாங்க மறுத்தார்கள். விலையையும் தெரியாத்தனமாக 2 ரூபாய் என்று போட்டுவிட்டார்கள், நடவடிக்கை எடுப்பார்கள் என்று கண்டபிறகு 1.50 என்று குறைவாகப் போட்ட நிலைமையைப் பார்க்கிறோம்.

மாடர்ன் ரைஸ்மில்லில் உற்பத்தியாகிற அரிசியின் தரம் குறைவாக இருக்கிறது, காரணம் சரியாக உலராத காரணத்தினால் ஈரம் அப்படியே இருப்பதால் சீக்கிரமாகக் கெட்டுவிடுகிறது. குவாலிடி கண்ட்ரோல் இருக்கிறது. அதற்காக ஆய்வாளர்கள் எல்லாம் இருக்கிறார்கள், இருந்தாலும் அவர்கள் ஒழுங்காகக் கவனிப்பதாகத் தெரியவில்லை. இங்கே பேசியவர்கள் அதைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். ஆகவே திறம்பட அதை நடத்தினால் நிச்சயமாக நல்லமுறையில் இயங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சீனியைப் பொறுத்தவரையிலே அதிக அதிகாரம் இல்லை நமக்கு. லெவி சர்க்கரை இருக்கிறது, ஓப்பன் மார்க்கட் சர்க்கரை இருக்கிறது. நாம் சரியாகக் கொடுக்க முடியவில்லை என்று பொறுப்பைத் தட்டிக் கழிக்காமல் நம்முடைய கையிலே உள்ளதை ஒழுங்காக விநியோகம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1974 மார்ச் 22] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

சில
ஒட்டுமொத்தமாகப் பார்க்கிறபோது இன்னும் மாற்றங்களைச் செய்வது பொருத்தமாக இருக்கும். மற்ற மாநிலங்களுக்கு அரசு கொடுக்கவேண்டுமானால், அது அரசாங்கக் கணக்கிலிருந்துதான் கொடுக்கப்படவேண்டும். நேரடியாக ஒரே ஸோன் ஆகப் போட்டுவிட்டு நம்மிடத்திலே உள்ள மக்களை பசி பட்டினியால் வாடவைக்கவேண்டுமென்று கருதவில்லை. எல்லா மக்களும் நியாயமாக உணவு பெறக் கூடிய முறையிலே சீரோடும் சிறப்போடும் இயங்கவேண்டும். ஒரு பகுதியிலே விலை குறைவாகவும், ஒரு பகுதியிலே விலை அதிகமாகவும் இருக்கக் கூடாது. அத்தியாவசியப் பண்டங்கள் பல இருக்கின்றன, எண்ணெய் இருக்கிறது, டீஸல் இருக்கிறது, இவையெல்லாம் இந்த இலாகாவின் கீழ் இருப்பதால் பம்புசெட்டுகளாக இருந்தாலும் சரி, ரசாயன உரமாக இருந்தாலும் சரி வேண்டிய முறைகளோடு திட்டங்களைத் தீட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இலாகாவிலே
ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது உணவு இன்று நெருக்கடியான நிலைமை இருந்துவருகிறது. வருகிற மே, ஜூன், ஜூலை மாதங்களிலே உணவுப் பஞ்சம் வரும் என்று பத்திரிகைகளிலே பல நிபுணர்கள் கூறி இருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களை நாம் சீர்தூக்கிப் பார்த்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். உலகத்திலேயே பற்றாக்குறை இருக்கிறது, இந்தியா முழுவதும் பற்றாக்குறை இருக்கிறது, குஜராத்திலே இருக்கிறது, வங்காளத்திலே இருக்கிறது, இத்தனை இடங்களிலே பற்றாக்குறை இருக்கிற நேரத்திலே நாம் சற்று ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பகுதியாக
எங்கள் பகுதி கேரள எல்லையோடு ஒட்டிய இருக்கிறது. அதனால் பல கஷ்டங்கள் இருக்கின்றன. கேரளத்தி லிருந்து வந்து அரிசியை வாகனங்களிலே கடத்திக்கொண்டிருக் கிறார்கள். நம்முடைய அதிகாரிகள் அங்கே போய்பிடிக்க பயப்படுகிறார்கள். நம்முடைய அதிகாரிகளையெல்லாம் ஆயுதங்கள் தாங்கி துன்புறுத்திய நிலைமை எனக்குத் தெரியும். அங்கே பயங்கரவாதிகள் நக்ஸலைட் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் இருக்கிறார்கள்.

(மாலை 4.30)

இவர்களெல்லாம் என்னென்னவோ காரியங்களைச் செய்கிறார்கள். ஆகவே, எல்லையோரப் பகுதியில் உள்ள காவலைச் சற்றுத் தீவிரப்படுத்த வேண்டும். யார் தவறு புரிந்தாலும் அவர்களுக்கு என்ன தண்டனையையும் கொடுப்பதிலே எங்களைப் போன்றவர்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால் மலிவான விலையிலே, நியாயமான விலையிலே எங்களுக்கு அரிசி கொடுக்க வேண்டும்.

கேரளத்திற்கு அரிசி கொண்டு போவதற்காகக் கன்னியாகுமரி ஜில்லாவிற்கு அதிக அரிசி வேண்டுமென்று நாங்கள் வாதாடவில்லை என்பதைக் கன்னியாகுமரி ஜில்லாவின் பிரதிநிதி என்ற முறையிலே இந்த அரசாங்கத்திற்கு மறுபடியும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். யார் தவறு செய்தாலும் அவர்களை நிச்சயமாக சிறைச்சாலையில் தள்ளினாலும் சரி, அல்லது பகிரங்கமாக விசாரணை செய்து தெருக்களிலே இழுத்துச் சென்றாலும் சரி அதற்கு நாங்கள் ஆட்சேபணைகள் தெரிவிக்க மாட்டோம். எனவே, கடுமையாகவும் இருக்க வேண்டும், அதைப்போல கருணையாகவும் இருக்க வேண்டும், எங்களுக்கு அரிசியும் கருணையாகக் கிடைக்க வேண்டுமென்று கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, இதுவரையிலே பல உறுப்பினர்கள் நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்குப் புரிந்த வரையில் எந்த அளவிற்கு இந்த நிர்வாகம் நல்லமுறையில் நடக்க வேண்டும், அதுவும் குறிப்பாக, பசிவந்தால் பத்தும் பறந்து போகும் என்ற அளவில் பலரும் அதைக் குறிப்பிட்டு, பசித்த மக்களுக்குச் சோறு போடுகின்ற அந்தக் கொள்கையை நல்ல முறையிலே நடத்த வேண்டுமென்பதிலே தங்கள் நல்லெண்ணத்தை இங்கே பலரும் காட்டியிருக்கிறார்கள். ஒருசிலர் தங்களுக்குத் தெரிந்திருந்தாலும் கூட வேண்டுமென்றே சில குற்றங்குறைகளை இங்கே சொல்லி யிருக்கிறார்கள்.

ஆகவே, இன்றைக்கு நடைபெறுகின்ற இந்த நிர்வாகத்திற்கு மாநிலத்தினுடைய சுயாட்சி இல்லை என்பது உங்களுக்குத்



தெரியும். ஆகவே, இங்கு ஒரு உணவு அமைச்சர் நான்
இருக்கிறேன். கூப்பிடும் நேரத்திலெல்லாம் முதலமைச்சர் உட்பட
உணவு அமைச்சரும் டெல்லியிலே உட்கார்ந்து பல கொள்கைகளை
வகுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த மக்களின்
தலையெழுத்து இரண்டு உணவு அமைச்சர்கள் என்ற அளவிலே,
இங்குள்ள உணவு அமைச்சர் என்ன செய்கிறார், என்ன
நிலைமைகளைச் செய்கிறார் என்பதையெல்லாம், பற்றாக
நிலைமைகளையெல்லாம் போய்ச் சொன்னாலும், எந்த அளவிற்கு
அவர்கள் பரிவு காட்டுகிறார்கள் என்பதையெல்லாம் நம்முடைய
முதலமைச்சரவர்கள் இங்கே சொன்னார்கள். என்றாலும்கூட பலர்,
அதிலும் ஆத்திரத்தோடு, இப்படியெல்லாம் செய்யக்கூடாது,
நீங்கள் செய்துதான் ஆக வேண்டும் என்று சொல்கிறார்கள்.

அதே நேரத்தில் அதிக அதிகாரம் வேண்டுமென்றாலோ, உங்களை
நம்ப முடியாது என்று சொல்லி, இருக்கிற அதிகாரமே போதும்
என்று சொல்கிறார்கள். உங்களுக்கே நன்றாகத் தெரியும்.
திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசும்பொழுது நமக்குள்ள
அதிகாரத்தைக் கொண்டு விலைகளைக் கட்டுப்படுத்த வேண்டும்,
நம்முடைய சர்க்காரே எல்லாவற்றையும் வாங்கி சேமித்து
வைத்து மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற கொள்கையைச்
சொன்னார்கள். அந்தக் கொள்கையை நாங்கள் ஒத்துக்கொண்
டிருக்கிறோம். அதிலே நம்முடைய முதலமைச்சரவர்கள் சிறப்பான
முறையிலே வகுத்திருக்கிறார்கள் என்பதையெல்லாம்கூடச்
சொன்னார்கள்.

இந்தக்கொள்கை இன்று நேற்று ஏற்பட்ட கொள்கை அல்ல,
நாங்கள் ஆளுங்கட்சியாக வருவதற்கு முன்பே இந்தக்
கொள்கையை வகுக்க வேண்டுமென்றுதான் நாங்கள் அரசியலுக்கு
வந்தவர்கள். அந்தக் கொள்கையை எப்படியாவது செய்ய
வேண்டுமென்ற முறையிலேதான் இன்றைக்கிருக்கிற அதிகாரத்தை
வைத்துச் செய்கிறோம். அதுவும் திரு. பொன்னப்ப நாடார் அவர்
களுக்குத் தெரியும். அவர்களுடைய மாவட்டத்திலே பொதுத்
தொகுப்பு அரிசியைக் கூட்டுறவு மூலம்தான் கொண்டு போகிறோம்.
எங்களுடைய கொள்கையைச் சன்னம் சன்னமாகந்
கொடுத்திருக்கிறோம். என்றாலும்கூட இருக்கின்ற நிலைமைகளை
அவர்கள் அறிவார்கள்.

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1974 மார்ச் 22

இந்தச் சாதாரண கம்பு, கேழ்வரகு, சோளம், இவைபோன்ற சாதாரண மக்கள் சாப்பிடுகின்ற சாதாரண உணவு, இதற்குக் கட்டுப்பாடு இருந்தது. அந்தக் கட்டுப்பாடு வேண்டுமென்றும் பொன்னப்ப நாடார் அவர்கள் சொல்கிறார்கள். கட்டுப்பாட்டை எடுத்தால் நாங்கள் உங்களோடு போராடத் தயார் என்று பலரும் சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது கட்டுப்பாட்டை எடுத்திருக் கிறார்கள்.

இங்கே விளைகின்ற சோளம், கம்பு இதை இங்கேயுள்ள உழுது உண்டாக்கிய அந்த மக்களுக்கு, அவர்கள் சாப்பிட வேண்டு மென்பதிலே, நீ வைத்துக்கொள் என்று சொல்லும் அதிகாரம் எங்களிடத்தில் இல்லை. முதலமைச்சரையோ, உணவு அமைச்சரையோ கூப்பிட்டு இந்தக் கொள்கையை வகுக்காமல் அதைப்பற்றிப் பேசாமல், திடீரென்று சிறு தானியங்களுக்கு இருந்த கட்டுப்பாட்டை எடுத்துவிட்டோம் என்று அவர்கள் செய்திருக்கிறார்கள்.

எங்கே விலையை நிர்ணயிப்பது? எந்தக் கட்டுப்பாட்டைச் சேர்ப்பது? எங்கே பொதுத் தொகுப்பை ஏற்படுத்துவது? எங்கே நாங்கள் வாங்குவது? எங்கே வைப்பது? இவைகளையெல்லாம் எப்படிப் பரிசீலிப்பது என்பதுதான் நம்முடைய சர்க்காரின் பிரச்னை. கொள்கையைச் சொல்ல வேண்டுமென்று கேட்கிறார்கள். நிச்சயமாகச் சொல்கிறேன், சர்க்கார் தனிப்பட்ட எந்தவொரு வியாபாரியிடமும் நிச்சயமாக எந்தவிதமான மக்களுக்குத் தேவையான எந்தப் பொருளையும் விடக்கூடாது என்பது தான் அழுத்தந்திருத்தமான கொள்கை. அதில் கொஞ்சங்கூடச் சபலம் . . .

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேசிமுடித்தவுடன் கடைசியாக விளக்கம் கேட்டுக்கொள்ளலாமே.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இடையிலே கேட்டு கிளாரிபை செய்துவிட்டால் நல்லது. இப்பொழுது ஏதோ தடையை எடுத்து விட்டார்கள். கம்பு, சோளம் அடுத்த மாநிலங்களுக்குப் போகிறது என்று சொல்கிறார்கள். இவர்கள் கொடுத்த அறிக்கையிலே



1974 மார்ச் 22] [திருமதி த. ந. அனந்தநாயகி]

இவ்வளவு சிறு தானியங்கள் விளைகிறது, இந்தத் தடையை எடுத்துவிட்டதனால் இவ்வளவு கஷ்டம் வரும் என்று விளக்கிச் சொல்லவில்லை. அப்படிச் சொல்லியிருந்தால் எல்லாக்கட்சி களுக்கும் வாய்ப்பாக இருந்திருக்கும். அப்படிச் சொல்லாமல், மத்திய சர்க்கார் தடையை நீக்கிவிட்டது, தடையை நீக்கி விட்டது என்று சொல்கிறார்கள். பிரச்னை என்ன என்று சொல்லுங்களேன். கேட்டால் எங்கே வாங்குவது, எங்கே கேட்பது, எங்கே வைப்பது என்று சொல்கிறார்கள். ஏன், விளைகிற இடத்திலே வாங்குவது, கிடங்குகளிலே வைப்பது, கடையிலே விற்பது. ஒரு பிரச்னையைச் சொல்லும்பொழுது ஆணித்தரமாக எதைச் செய்தால் சாதகம், எதைச் செய்தால் பாதகம் என்று விரிவாகச் சொல்ல வேண்டும். அதைச் சொல்லாமல் மத்திய சர்க்காரை மட்டும் குற்றம் சொல்லிக்கொண்டிருந்தால் எதிர்க் கட்சிகள் என்ன செய்வது?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** நான் தமிழிலே தான் சொன்னேன். அவர்களைப்போல் ஆடி, அசைந்து சொல்வதற்கு எனக்குத் தெரியவில்லை, எனக்கு அப்படிக் கற்றுக் கொடுக்கவும் இல்லை. நான் அந்தக் குலத்திலே பிறக்கவில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இரண்டுபேரும் ஒரு குலம் தான்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** நான் சொன்னது பெண் குலம் என்று சொன்னேனம்மா. அறிக்கையிலே கொடுக்க வில்லை என்று சொல்கிறார்கள். அவர்கள் முதலமைச்சரைக் கேட்கவில்லை. பொதுத் தொகுப்புக்கு அரிசித் கட்டுப்பாடு இருக்கிறது. கேரளத்திற்குக் கொடுக்கவேண்டும், மகாராஷ்டிரத் திற்குக் கொடுக்கவேண்டும் என்றால், எல்லா அமைச்சர்களும் வருகிறார்கள். முதலமைச்சரோடு பலமணிநேரம் பேசிவிட்டு கேட்டு வாங்குகிறார்கள். ஆனால் தடையை எடுக்கும்பொழுது எங்களுக்குத் தெரியாது. இல்லாவிட்டால் சேர்த்திருப்போம். திடீரென்று எடுத்துவிட்டார்கள். மத்திய உணவு அமைச்சர் தலைமையில் நடந்த அந்தக் கூட்டத்தில் இந்தப் பிரச்னையை வைத்திருக்கிறோம். கட்டுப்பாட்டை மறுபடியும் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். ஆகவே, சொல்லவில்லை

என்றால் காலம் தாழ்ந்து விட்டதா? காலம் தாழ்ந்து சொன்னாலும், கட்டுப்பாட்டை எடுத்து விட்டார்கள் என்று ஒரு பக்கம் பூராவுமா எழுதிக்கொடுக்க முடியும், ஒரு புத்தகம் பூராவுமா எழுதிக்கொடுக்க வேண்டும். கட்டுப்பாட்டை எடுத்துவிட்டார்கள், மீண்டும் கட்டுப்பாடு வேண்டும், எடுக்கும்பொழுது ஒருவரையும் கூப்பிட்டுக் கேட்கவில்லை.

காலையிலே பேசியவர் உங்களுக்குத் தெரியுமா, புள்ளிவிவரம் தெரியுமா, அது தெரியுமா, இது தெரியுமா என்று கேட்டார்கள். அவருக்குத் தெரியவில்லை. அவர்களைப்போல் புத்திசாலித்தனமாக உட்கார்ந்திருக்கிறவர்கள் முதலமைச்சர் நிர்வாகம் பண்ணுபவர்களைக் கூப்பிட்டு உத்தரவு போட வேண்டுமென்று அவருக்குத் தெரியவில்லை.

எங்கள் மேல் கோபம் இருந்தால் அப்பாவி மக்களுக்காகப் பரிந்துரைத்து இந்தக் கட்டுப்பாட்டை எடுக்க வேண்டாம் என்று சொல்லியிருக்கலாம். ஒரே மண்டலமாக்கும் பிரச்சினையில் உங்கள் கொள்கை என்னவென்றால், அம்மையார் அவர்கள் ஆந்திராவிலேயிருந்து இங்கே வடிந்துவிடும் என்று சொல்கிறார்கள். இது வடியக்கூடிய நிலம் இல்லை. அது பள்ளம், இது மேடு. இந்த மேட்டிற்கு அந்தப் பள்ளத்திலேயிருந்து தண்ணீர் பாயாது. ஆகவே, இப்படிப்பட்ட ஒரு கனவைக் கண்டு இந்தப் பிரச்சினையைச் சாதாரணமாக மாற்றுகிறீர்கள்.

இந்த மக்களுக்கு விரோதமான ஒரு வார்த்தையை ரொம்ப அழகாக, நாசுக்காக காலையிலே சொன்னார்கள். இதைத் திறந்து விட்டால், கட்டுப்பாட்டை எடுத்துவிட்டால் அங்கே உள்ள அரிசி இங்கே வந்துவிடும் என்று சொல்கிறார்கள். இதிலே தெரிந்தோ, தெரியாமலோ மத்திய சர்க்காருக்கு நீங்கள் துணை புரிகிறீர்கள். இதனால் எதிர்காலத்திலே என்ன பயங்கரம் வரும் என்றே தெரியவில்லை. எனவே, இதிலே என்னுடைய கவனத்தைத் திருப்ப வேண்டாம்.

கட்டுப்பாடு வரவேண்டும். பொதுத் தொகுப்புக்கு எடுக்க வேண்டும் என்ற எண்ணம் இருப்பதால் அதற்கான முயற்சிகளை நம்முடைய சர்க்கார் செய்திருக்கிறது. வேறு துறையிலே





செய்வதற்கில்லை, ஆகவே கூட்டுறவுத் துறை ஒன்றுதான் இருக்கிறது.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கூட்டுறவுத் துறையில் செய்யமுடியுமா என்றால், கூட்டுறவுத் துறையை அந்தக் காலத்தில் ஆரம்பித்ததே மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்பதற்காகத்தான். ஏழை எளிய விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருட்களை நஷ்டமில்லாமல், தனிப்பட்ட கொடுமைக்கார வியாபாரிகளிடம் மாட்டிக்கொள்ளாமல், கூட்டுறவுத் துறை மூலம், அவர்கள் உற்பத்திச் செய்வதை வாங்கவேண்டும். அதே நேரத்தில் வாங்குகின்ற மக்களுக்கும் நியாயமாகக் கிடைக்கவேண்டும், அதற்காகத்தான் கூட்டுறவுத் துறை, லாப நஷ்டம் பார்க்காமல் இருக்கும் தொழில்.

சில சங்கடங்களை மணலி அவர்கள்கூடக் காலையிலே பேசும் பொழுது சொன்னார்கள்.

சர்க்கார் கடைகளைத் திறப்பது, கூட்டுறவுச் சங்கங்களைத் திறப்பது என்ற வகையிலே நாலாயிரத்துக்கு மேற்பட்ட வியாபாரிகளிடமிருந்து பிடுங்கியிருக்கிறோம். அப்படிச் செய்தும் குற்றச்சாட்டு சாட்டுகிறார்கள். கூட்டுறவுச் சங்கம் எடுத்ததே தவறா? கூட்டுறவுச் சங்கங்கள் எடுத்து நடத்தியதில் ஏதோ 10 சதவிகிதம் தவறு நடந்திருக்கலாம். 90 சதவிகிதம் நல்ல முறையில் நடக்கிறது. முழுமையும் ஒழுங்காக நடக்க வேண்டுமென்றால் இன்னும் கொஞ்சம் காலமாகும்.

மண்ணெண்ணெய் விநியோகம் மற்ற மாநிலங்களில் எப்படி நடந்தது என்று பார்க்கும்போது தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் எல்லோரும் பாராட்டுகிறார்கள். தட்டுப்பாடு வந்த உடனேயே கூட்டுறவுச் சங்கங்களிடம் கொடுத்து எவ்வளவு கஷ்டம் வந்தாலும், நஷ்டம் ஏற்பட்டாலும் அதைச் செய்ய வேண்டுமென்ற முறையில் வற்புறுத்தினோம். கூட்டுறவு ஸ்தாபனங்கள் எடுக்க மறுத்தார்கள். கலெக்டர், மற்ற அதிகாரிகளிடம் எல்லாம் கூறி அவர்கள் எடுத்து நடத்தச் செய்தோம். ஓரளவு நல்ல முறையில் நடந்து வருகிறது. அதேபோன்று மேலும் செய்ய வேண்டிய விநியோகங்களைக் கூட்டுறவுத் துறைக்கும் மற்றத் துறைகளுக்கும் விரிவுபடுத்த எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும்.

இதிலே எந்தக் காரியத்தைச் செய்யவும் நம்முடைய மாநிலத்திற்கு அதிகாரம் இல்லை. உணவுப் பொருள் விலையை நிர்ணயிக்கும் அதிகாரம் நமக்கு இல்லை. உணவுப் பொருள் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் நமக்கு இல்லை. லெவி விதிக்க அதிகாரம் கிடையாது. அதைப் பெறுவதற்காக இங்கிருந்து 3 மந்திரிகள் பத்து தரம் போனாலும் காரியம் நடக்கவில்லை.

வேர்க்கடலைப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்த லெவி விதிக்க வேண்டுமென்று கேட்டால் பல மாதங்களாகியும் பதில் வரவில்லை.

மண்ணெண்ணெய் நிறுவனம் ஆங்காங்குள்ள தேவைக்கேற்ப மண்ணெண்ணெய் வழங்க உத்தரவு பிறப்பிக்க அதிகாரம் இல்லை. அவர்களே ஏஜண்ட் நியமித்திருக்கிறார்கள். பாவலாகக் கொண்டு போனால் டிரான்ஸ்போர்ட் மிச்சமாகும். விலை வித்தியாசம் அதிகமாக இருக்காது. இப்போது தஞ்சையில் ஒரு விலை, சென்னையில் ஒரு விலை என்ற வகையில் எடுத்துப் போகும் செலவு ஆகிறது. கொச்சியில் மண் எண்ணெய் இல்லை என்றால், சென்னையிலிருந்து தூத்துக்குடிக்கு எடுத்துச் செல்லும் நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, ஏஜெண்ட் நிலைமைகளைக் கண்காணிக்க அதிகாரம் வேண்டுமென்று கேட்டிருக்கிறோம்.

வனஸ்பதி வழங்க தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு கழகத்தின் மொத்த விற்பனையாளரை நியமித்தால் நியாய விலையில் கிடைக்கும் என்பதற்கான அதிகாரத்தைக் கேட்டிருக்கிறோம். இப்படி கிட்டத்தட்ட ஆறு அதிகாரங்களைக் கேட்டிருக்கிறோம். இன்னும் கொடுக்கப்படவில்லை.

**திரு. சோ. அழகர்சாமி:** வேர்க்கடலை வாங்க மத்திய சர்க்காரிடம் அனுமதி வாங்க வேண்டுமென்று சொன்னார்கள். வெட்டி எடுக்கிற காலத்திலேயே 50 சதவிகித விலையாக இருக்கும் போதே சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கொள்முதல் செய்து வைத்துக் கொண்டு எண்ணெயாக விநியோகிக்கலாமே. அப்போது வாங்குவதில் மத்திய சர்க்கார் தடை இருக்காதே.





**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அப்படி சிறு அளவில் பொருள்களை வாங்குவதால் மிச்சம் ஏற்படாது. உதாரணமாக, ஐந்து மூட்டை சீனியை விற்பதற்குத் தனிப்பட்ட வியாபாரி ஒரு ஆளைப்போட்டு விற்று விடுவான். சர்க்காரில் விற்க வேண்டுமென்றால், ஒரு சீனியர் இன்ஸ்பெக்டர், இரண்டு கிளார்க்குகள் போட வேண்டியிருக்கிறது. சிறிய அளவில் பொருள்களை வாங்கப் போகும்போது செலவினங்கள் சாதாரணமாக இருப்பதை விட அதிகமாக வந்து விடுகிறது. வியாபாரிகள் வாங்கப் போகும்போது 50 ரூபாய் என்று சொன்னால் நாம் வாங்கப் போகும்போது 60 ரூபாய் என்று விலையை உயர்த்தி விடுகிறார்கள். லெவி போட்டு விட்டால் விலையை உயர்த்த முடியாது. விவசாயிக்கும் விலை கிடைக்கும், நமக்கும் பொருள் கிடைக்கும்.

தஞ்சை மாவட்டத்தில் குறுவை நெல்லை லெவி போடாமலே வாங்கினோம். மற்ற மாவட்டங்களிலிருந்து அதை வாங்க ஆள் இல்லை. கொஞ்சம் ஈரமான நெல். சரித்திரத்திலேயே இல்லாத நிலைமையில் லெவி இல்லாமலே 91,000 டன் கொள்முதல் செய்தோம்.

குஜராத் மற்றப் பகுதிகளிலிருந்து வியாபாரிகள் வந்து விலையை ஏற்றி விடுகிற காரணத்தால் 70 ரூபாய், 75 ரூபாய் விற்ற வேர்க்கடலை 100 ரூபாய்க்கு, 105 ரூபாய்க்கு விற்கப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, கட்டுப்படுத்தாமல் வாங்க முடியாது என்ற நிலைமையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறு தானியங்களைக் கட்டுப்படுத்தி வைத்துக் கொள்ளலாம் என்று மாநில சர்க்கார் எண்ணிக் கொண்டிருக்கும்போது திடீரென்று திறந்து விட்டிருக்கிறார்கள். அதுபற்றி மத்திய சர்க்கார் அமைச்சரிடம் பேசியிருக்கிறேன். பின்னர் விவரம் சொல்லுகிறேன்.

திரு. மாரிமுத்து அவர்கள் ரொம்பக் காட்டமாகப் பேசியது இதுதான். பக்கத்தில் இருப்பதைச் சொல்லாதீர்கள், இந்தப் பிரச்சினையில் தமிழ் நாட்டைப் பற்றி மட்டுந்தான் பேசவேண்டுமென்று சொன்னார்கள். அவரும் தமிழ் நாட்டில் பிறந்த ஒருவர்

என்ற முறையில் பேசலாம். நானும் அவரும் ஒரே மாவட்டந்தான். பசி எல்லோருக்கும் ஒன்றுதான். நம்முடைய மக்களுக்கு நன்மை செய்வதில் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோதுமைப் பொருள்களை சர்க்காரே எடுத்துக் கொள்வது என்ற கொள்கை பற்றி எல்லோரையும் கூப்பிட்டு வாதித்தார்கள். எங்களையும் கூப்பிட்டார்கள். அவர்களுடைய தலைவர்களே இன்னும் அதிலே முடிவுக்கு வரமுடியவில்லை. அவர்கள் முடிவுக்கு வந்து விட்டால் தீவிரமாகக் கொள்கையை நிறைவேற்றுவோம் என்று முன்வந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

இந்த மாநில சர்க்கார் மட்டும் தனி வியாபாரிகளை ஒழிக்க நடவடிக்கை எடுத்தால் நிச்சயமாக அது முடியாது.

பச்சிளம் குழந்தைக்கு வேண்டிய பால் உணவு கூட வாங்கிக் கொடுக்க முடியவில்லை. பரிதாபத்திற்குரிய நிலை. அதிகாரம் இல்லை நமக்கு. நீங்களும் அமைச்சர்களாக வர உத்தேசித்துக் கொண்டிருக்கிறீர்கள். எங்களோடு சேர்ந்து அதிகாரத்தை வாங்கி விட்டால் பின்னால் வருபவர்களுக்குச் சாதகமாக இருக்கும்.

அரிசி ஆலைகள் 13 தமிழ் நாடு உணவுப் பொருள் கழகத்தின் சார்பிலும் 4 மத்திய உணவு கார்ப்பரேஷன் சார்பிலும் இருக்கிறது. ஒரு மொத்தம் 17 ஆலைகள். 50,000 டன் அரிசி அரைக்க முடிகிறது, ஒரு வருஷத்திற்கு.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அதில் லாபமா? நஷ்டமா?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** லாபம் எங்கே? நஷ்டந்தான். தஞ்சை மாவட்டத்திலேயே நெல் கிடைக்கவில்லை என்று மாடர்ன் ரைஸ் மில்லை மூடுகிறார்கள். இந்த மாதிரி நிலைமை இருந்தால் எப்படி மாடர்ன் ரைஸ் மில்லுக்கு அரிசி கிடைக்கும்?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** எங்கிருந்து சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. கனவு கண்டு பேசுகிறார்களோ என்னவோ தெரியவில்லை.

உணவு கார்ப்பரேஷனை நாமே நடத்துகிறோம். மணலி அவர்கள் சொன்னதுபோல் ஈரம் பார்க்க ஒரு எக்ஸ்பர்ட் இருக்கிறார்கள். நாம் கொள்முதல் செய்து அங்குதான் அரைக்கிறோம். லாபமா



நஷ்டமா என்பதை இனிமேல்தான் பார்க்க வேண்டும். லாபகரமாக வருவது சிறிது கஷ்டம்தான்.

பச்சரிசி அரைத்தால் லாபம், புழுங்கல் அரிசி அரைத்தால் அவ்வளவாக லாபம் இருக்காது. சாதாரண மில்களில் அரைப்பதை விட இங்கு அரைத்தால் அரிசி நிரம்பக் கிடைக்கிறது.

ஜப்பானில் பச்சரிசியை அரைப்பதற்காக இதைக் கண்டு பிடித்தார்கள். ஆனால் இங்கே நாம் 90 சதவிகிதம் புழுங்கல் அரிசிதான் சாப்பிடுகிறோம்.

சாதாரணமாக மில்களில் இரண்டரை அல்லது மூன்று ரூபாய்க்கு அரைத்துக் கொடுத்துவிடுவார்கள். இங்கு பாயிலருக்கு ஆயில் தேவையாக இருக்கிறது. ஒரு மணி நேரம் ஓடுவதற்கு 40 ரூபாய் ஆயில் தேவைப்படுகிறது. அதைக் கவனிக்க ஒரு மெக்கானிக்கல் என்ஜினியருக்குச் சம்பளம் ரூ. 600. ஆனால் இந்த மில்லில் இருந்து வரும் அரிசி கலரில் சிறிது மந்தமாக இருக்கும், ஆனால் சத்துள்ள அரிசியாக இருக்கும். நாம் இங்கிருந்து சில வெளி மாநிலங்களுக்கு சூப்பர் ஃபைன் அல்லது ஃபைன் வெரைட்டி அரிசி அனுப்பினால் வாங்கமாட்டார்கள். கேரளாவில் கூட சூப்பர் பைன் அனுப்பினால் கிச்சிலிச் சம்பா அனுப்பினால் கள்ளக்கடத்தல் இருக்காது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அப்போது சூப்பர் பைன் வெரைட்டியை அங்கு அனுப்பினால் போதுமே, இந்தக் கள்ளக் கடத்தலைத் தடுக்கலாமே.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** இந்த மெஷின் முன்பு வெளிநாட்டிலிருந்து வந்தது, ரப்பர் ரோலரில் ஓடுகிறது. ஆனால் இப்போது இந்திய சர்க்கார் சட்டம் போட்டுவிட்டதால் உள்நாட்டு ரப்பரைத்தான் அதற்கு வாங்கவேண்டியிருக்கிறது. ஆகவேதான் நம் மீது கலர் ஒட்டிக்கொள்கிறது. பார்ப்பதற்கு அழகாக இருக்காதே தவிர ருசியாக இருக்கும். அதோடு உடலுக்கும் ரொம்பவும் நல்லது. ஆனால் 50,000 டன்தான் அரைக்க முடிகிறது.

மேலும் அரிசி அரைக்கவேண்டியிருப்பதால் சில ஏஜெண்ட்களை நியமித்திருக்கிறோம். அவர்கள் கூட முன்பு மாதிரி மூட்டைகளை

யாற்றுகிற நிலை இல்லாமல் கண்காணிப்பு இருக்கிறது, சாவி போடப்பட்டிருக்கிறது.

மாய்ஸ்சர் எக்ஸ்பெர்ட், தனி அதிகாரிகள் எல்லாம் நியமித்து தினம் பார்க்கக்கூடிய அளவில் நன்கு கண்காணிக்கும் வகையில் ஏஜென்ட்களை நியமித்திருக்கிறோம். அநேகமாக இந்த ஏஜென்ட்களால் தவறு செய்யமுடியாது. பொறுப்பு நம்மிடம் இருக்கிறது.

திரு. மாரிமுத்து அவர்கள் அரிசிபற்றிச் சொன்னார்கள். ரூபாய் 20-க்கு கூடுதல் வருகிறது என்று சொன்னார்கள். வேண்டுமென்றே கூட்டி போடவில்லை. ரூ. 53-க்கு நெல் வாங்கும்போது ரூ. 1-10-க்கு விற்றோம். இப்போது ரூ. 70-க்கு விற்கும்போது ரூ. 1-40 ஆகியிருக்கிறது. ரூ. 220 லட்சம் சிவில் சப்ளைசுக்குச் செலவாகிறது. 150 லட்சம்தான் அதிலிருந்து கிடைக்கிறது. கிட்டத்தட்ட 70 லட்சம் சர்க்கார் செலவில் செய்து கொண்டிருக்கிறோம். சிவில் சப்ளைசுக்கான செலவு பூராவும் அரிசியின் விலையை வைத்துச் செய்யவில்லை. வேறு சாக்கு, போக்குவரத்துச் செலவு என்றெல்லாம் ஆகின்றன. மொத்தம் ரூ. 320 லட்சம் செலவாகிறது.

நாகர்கோவில் எம்.எல்.ஏ. அவர்களிடம் இந்த லிஸ்டை எல்லாம் காண்பித்திருக்கிறேன். வியாபார நோக்கோடு நிச்சயமாகச் செய்யவில்லை. மக்களுக்கு உதவி செய்யவேண்டும், நன்மை செய்யவேண்டும் என்ற அடிப்படையில்தான் செய்கிறோம்.

கன்னியாகுமரி பகுதியில் ரூ. 1.50-க்கு விற்கிறது. கன்னியாகுமரிப் பகுதி சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியும். பக்கத்தில் ஒரு மைலுக்கு அப்புறம் அரிசி ரூ. 6, ரூ. 7-க்கு விற்கப்படுகிறது. பெரிய கொந்தளிப்பான நேரத்தில் கல்குளம் பகுதியில் அரிசி ரூ. 1.50-க்கு, இருபது கிராமங்களுக்கு மேல் 1.50-க்கு அரிசி போடுகிறோம் என்றால் அது நார் செய்த பாக்கியம் என்று கருதுகிறேன்.

காலையில் திரு. சுவாமிதாஸ் அவர்கள் கூட நன்றி சொன்னார்கள். முழுமனதோடு சொல்லியிருப்பார்கள் என்று கருதுகிறேன். இன்னும் குறைகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். கூடுமான வரையில் அவற்றை நிவர்த்திக்க அரசு நடவடிக்கை எடுக்கிறது.



நம் முதல்வர் அவர்கள் கன்னியாகுமரியில் இருந்து எந்தச் செய்தி வந்தாலும் நிலைமை எப்படி, என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று பார்த்து வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதில் நிச்சயமாகத் தவறவில்லை.

திரு. லத்தீப் அவர்கள் கள்ளக்கடத்தல் பற்றிச் சொன்னார்கள். ரகசியமாக லாரியில் போவது பற்றிச் சொன்னார்கள். சொல்லுங்கள், உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். உறுப்பினர்கள் இதை ஒரு மேடைப் பேச்சாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டாம். கள்ளக்கடத்தல் காரர்கள் எந்தத் துறைக்குப் போனாலும் மோசடி செய்வதில் திறமையுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்று தனி பார்ட்டி போட்டு அனுப்பினோம். அந்த மாவட்டத்தில் 95 கடத்தல் வழக்குகள் போட்டிருக்கிறார்கள். பதுக்கல் வழக்குகள் 33. 21 லாரிகள் கைப்பற்றப்பட்டன. வண்டி, மாடுகள் உட்பட 37 பிடித்திருக்கிறார்கள்.

ஆக, பல காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. என்னென்ன நடந்திருக்கின்றன என்பதை எம்.எல்.ஏ.-க்கள் தேவைப்பட்டால் சொல்கிறேன். கடத்தல்காரர்களைப் பிடிப்பதில் எல்லா உறுப்பினர்களும் ஒற்றுமையாக இருக்கவேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டம் பொறுத்து அதைக் கேட்க முடியாது. அவர்களே சொல்லிவிட்டார்கள். இருக்கிற அதிகாரிகளே பயப்படுகிற வகையில்—பொன்னப்ப நாடார் அவர்களே சொன்னார்கள், அங்கு நக்ஸலைட்ஸ் இருக்கிறார்கள் என்றும் ஆயுதங்கள் வைத்திருப்பதாகவும் சொன்னார்கள். நீங்கள் சொல்வது வாஸ்தவந்தான், இல்லையென்று சொல்லவில்லை. அதைத் தடுக்க, அந்த மாவட்டத்தில் ஒரு கமிட்டிபோடவேண்டும் என்று, எல்லோரும் சேர்ந்து ஒரு கமிட்டி போட அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய ஒரு முயற்சி செய்தோம். அதில் இருக்க ஒத்துக்கொள்ளமாட்டேன் என்று சொன்னார்கள், அதற்குக் காரணங்கள் எல்லாம் உள்ளன என்றும் சொல்லிவிட்டார்கள்.

கடுமையாக முயற்சி எடுத்து ரொம்பப் பேர்களைப் பிடித்திருக்கிறோம். வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அவ்வளவு தான் சொல்லமுடியும். அதன் விவரங்களை இங்கு சொல்லத் தேவையில்லை.

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [19[illegible] மார்ச் 22

காடுகள் பற்றிச் சொன்னார்கள், தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. ஏ. சுவாமிதாஸ்:** கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஆங்காங்கு கமிட்டிகள் போடவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கு யாரும் அடங்கலாக இல்லை. நானே கலெக்டரிடத்தில் சொன்னேன். பஞ்சாயத்து யூனியன் அளவிலே கமிட்டிகள் போட்டு கள்ளக் கடத்தலைத் தடுக்க ஏதாவது ஏற்பாடு செய்யக்கூடாதா என்று சொன்னேன். இதுவரை அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அவர்களுக்கு அது மட்டும்தான் தெரியும். கமிட்டிகள் போடுவதற்கு நாங்கள் தயார். எனக்குப் பதிலும் தெரியும்.

விளக்கங்களை எல்லாம் இங்கே சொல்லக்கூடாது. பொன்னப்ப நாடார் அவர்கள் வேறு திசை மாற்றிச் சொன்னார்கள். எங்களுக்கு வேண்டியவர்கள் எல்லாம் வருத்தப்படுவார்கள் என்ற முறையில் சொன்னதால் நிறுத்திவிட்டோம். சட்டசபையில் உறுதியாகச் சொல்லாவிட்டால் சட்டசபை முடிந்தவுடன் . . .

(மாலை 5-30)

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, ஒரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். அந்தக் கமிட்டி போடுவதில் எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. எங்களுக்கு வேண்டப்பட்டவர்கள் யாரும் அந்த மாநிலத்தில் கிடையாது. ஆதலால் என்ன நடவடிக்கை எடுத்தாலும் நாங்கள் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம். கள்ளக்கடத்தலைத் தடுப்பதற்காக நாங்களெல்லாம் முனைப்பாக நின்று ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** ரொம்ப நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** தலைவரவர்களே, மதிப்பிற்குரிய அமைச்சரவர்கள் கார்டு கொடுப்பதை ஒழுங்குமுறைப்படுத்தியிருக்கிறோம் என்று சொன்னார்கள். சபையில் நான் சொன்ன



[டாக்டர் எச். வி. ஹாண்டே] 1974 மார்ச் 22]

ஏறக்குறைய 1 வார காலமாக பலவிதங்களில் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அதை நிவர்த்திக்க என்ன செய்திருக்கிறீர்கள் என்று விரிவாகக் கூறும்படி கேள்வி நேரத்திலே கேட்டேன். ஏற்கெனவே அந்தத் தவறுகள் ஏற்பட்டிருந்தனவா? என்ன காரணம், அதற்குரிய பதிலை எதிர்பார்த்தேன். அந்தத் தவறுகளை எப்படிக் கண்டுபிடித்தார்கள், இனிமேல் வரும் கார்டு விநியோகத்தை எப்படிச் சீர்படுத்தப் போகிறீர்கள் என்று சொன்னால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** நான் கடைசியில் அதைப்பற்றி சொல்ல இருக்கிறேன்.

இப்போது 19 மண்டலமாக இருக்கிறதே, அதை நான்கு மண்டலமாகச் செய்யவேண்டுமென்று மாண்புமிகு வீராசாமி அவர்கள் சொன்னார்கள். அவர்கள் எந்த எண்ணத்தில் அப்படிச் சொன்னார்கள் என்று தெரியவில்லை. 19 மண்டலமாக வைத்து, இவ்வளவு செக்போஸ்ட் வைத்திருக்கும்போதே, லாரியில் கொண்டு போகிறார்கள், என்று மாண்புமிகு உறுப்பினர்கள் லத்தீப் அவர்களும், ஹாண்டே அவர்களும் சொன்னார்கள். இன்னும் நான்கு மண்டலமாக ஆக்கினால் மடை திறந்து விட்டதுபோல் ஆகும். முழுவதும் வடிந்து விடும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி:** நான் எந்த எண்ணத்திலும் சொல்லவில்லை. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பலத்த போலீஸ் காவல் போட்டுவிட்டு, தமிழ் நாடு பூராவிலும் ஏறக்குறைய ஒரே மாதிரியான முறையில் விலைவாசி இருக்கவேண்டும், சென்னையில் ஒரு விலை, மற்ற இடங்களில் ஒரு விலை, என்ற முறையில், தமிழ் நாட்டு மக்களிடையே ஒரு பாகுபாடு வந்துவிடக் கூடாது என்ற நல்லெண்ணத்தில்தான் சொன்னேன்.

வடாற்காடு மாவட்டத்தில் விளையும் பைன் வரைடி கிச்சிலிச் சம்பாவை அங்கேயிருக்கிற மக்கள் அதிகம் பயன்படுத்த முடியவில்லை. பத்தொன்பது மண்டலமாக இருப்பதால் அங்கேயிருக்கும் விளைபொருள்கள் சென்னை போன்ற இடங்களுக்கு வர முடியவில்லை. ஆகவே, செங்கற்பட்டு, சென்னை, தென்னாற்காடு ஒரே வட்டமாக இருப்பதைப் போல், அதிலே வடாற்காட்டையும் சேர்த்து விட்டால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, என்ன பாதுகாப்பு இருந்தாலும், வீட்டின் தெருக் கதவையும், கொல்லைக் கதவையும் பூட்டி விட்டாலும், அறைக் கதவையும், அடுப்பங்கரைக் கதவையும் தாளிட்டுக்கொண்டு விடுகிறோம். அதுபோல் மண்டலங்கள் அதிகமாகத் தேவைப்படுகிறது பாதுகாப்புக்காக.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். அவர்கள் சென்னைக்கு உயர்ந்த ரக அரிசி கொண்டு வரமுடியவில்லை என்று சொன்னார்கள். தேவைப்படுகிறபோது நிச்சயமாக எடுத்துக்கொள்வோம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. சுவாமிதாஸ் கூறிய பிரச்னைகளைப் பற்றிச் சொல்லி விட்டேன். அவர்கள் பகுதியில் கல்குளம் தாலுக்கா பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறோம். மற்ற இடங்களில் மக்களைத் தவிக்க விடவில்லை.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சில இடங்களில் விலை ஏறியிருப்பதாகச் சொன்னார்கள். திடீரென்று விலை ஏறுகிறது. உடனடியாக நடவடிக்கை எடுக்கிறோம். கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கும் மக்கள் ரூ. 2.50 கொடுத்து வாங்கிச் சாப்பிடும் பொருளாதார நிலையில் இல்லை. அங்கேயிருக்கிற டெபிசிட் 30,000 டன்கள்தான். நாம் அங்கே 60,000 டன் அரிசி அனுப்பி வைத்து இருக்கிறோம். பற்றாக்குறை ஏற்பட்டு இருக்கிறது என்றாலும், நிச்சயம் மக்களைப் பட்டினி போட்டாகிலும் கடத்தலைச் செய்ய வேண்டுமென்று செய்து வருகிறார்கள். அதைத் தடுப்பதற்கு அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்று நாடார் அவர்களுக்கும், சுவாமிதாஸ் அவர்களுக்கும் சொல்லிக்கொள்கிறேன்.

நம்முடைய ஹாண்டே அவர்கள் கார்டு பிரச்னையைப் பற்றிச் சொன்னார்கள். அது 25 சிவில் சப்ளை கார்ப்பரேஷன் மூலம் வழங்கப்பட்டு வந்தது. அங்கே கிட்டத்தட்ட 3 லட்சத்திற்கும் மேற்பட்ட கார்டுகள் வழங்கப்பட்டன.

போன சட்டமன்றக் கூட்டத்தொடரில் அம்மையார் அவர்கள் 25 கியூ வரிசை அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஒரு இடங்கள் என்று சொல்கிறபோது, 8,000—10,000 கார்டுகள் ஒரு





இடத்தில் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆதலால் கியூ வரிசை இருக்கிறது. ஆதலால்தான் அதை 200 டி.யு.சி.எஸ். கடைகள் மூலம் வினியோகிப்பதற்கு இப்போது நடவடிக்கை எடுத்து இருக்கிறோம். இதனால் ஒரு கடைக்கு 2.000, 3,000 கார்டுகள் தான் வரும். இதனால் கியூ வரிசை குறைந்துவிடும் என்று எதிர்பார்க்கிறோம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இப்போது நாங்கள் ஒரு கடையில் ரேஷன் வாங்கி வருகிறோம். அந்தக் கடை மூலமே புதிய கார்டை கொடுத்து, பழைய கார்டை வழங்கலாம். அப்படியில்லையென்றால், இந்தச் சீரணிப்படை மூலம் வீட்டிற்கு வீடு கொண்டுவந்து கொடுக்கச் செய்யலாம். அவரவர்கள் வீட்டிற்குக் கார்டு கொண்டுவந்து கொடுத்தால், அவர்கள் 4 மணி நேரம், 8 மணி நேரம் கியூவில் நின்று கார்டு வாங்கவேண்டிய அவசியம் இருக்காது. அப்படிச் செய்வது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். பழைய கார்டு எந்தக் கடையில் வாங்குகிறோமோ அந்தக் கடை மூலமே புதிய கார்டை வினியோகிக்கலாம்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** இப்போது வீட்டிலே கொண்டு வந்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்து இருக்கிறோம். 22—3—1974 முதல் 25—3—1974 வரையிலும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அவரவர்கள் வீட்டிற்கே கார்டுகளைக் கொண்டு வந்து சேர்ப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். இருக்கின்ற நெரிசலைக் குறைத்து, கியூ வரிசையைக் குறைத்து, ஜனங்களுக்கு வசதியான முறையில் உணவுப் பொருள்கள் கிடைக்கச் செய்வதற்காகத்தான் 25 இடங்களில் என்று இருந்ததை 200 இடங்களுக்கு விஸ்தரிப்புச் செய்கிறோம். 16, 17, 18 தேதிகளில் முடித்து விடலாம் என்று நினைத்தோம். அதில் கொஞ்சம் சிரமம் ஏற்பட்டு விட்டதால் இப்போது வீட்டிற்கே அனுப்புவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். புதிய கார்டுகள் கிடைக்கும் வரையில் பழைய கார்டிலேயே ரேஷன் வாங்கிக்கொள்வதற்கு வழிவகை செய்து இருக்கிறோம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** சபாநாயகர் அவர்களே, இந்த மாதிரியான பிரச்னை சென்ற ஆண்டு வரவில்லை. புதிதாக இந்த ஆண்டுதான் வந்திருக்கிறது. அதற்குத்தான் காலையில் கேட்டேன்.

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1974 மார்ச் 22

சென்ற ஆண்டு வரவில்லையே, இந்த ஆண்டு வந்திருக்கிறதே, அது எப்படி வந்தது? இதுவரையில் ரூ. 1.20 என்ற முறையில் அரிசி விற்று வந்தார்கள். இப்போது ரூ. 1.50 என்று ஆக்கியிருக்கிறீர்கள். ஒரு படி ரூ. 3 விற்கிறது. இந்த பாயின்டிற்கு விளக்கம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** முதலில் 25 கடைகள் இருந்தன. அதனால் நெரிசல் இருந்தது. கூட்டம் இருந்தது. இப்போது அதைப் பிரித்து 200 கடைகளுக்குப் போட்டு இருக்கிறோம். 1 நாளைக்கு இரண்டு நாட்களுக்கு கூட்டம் இருக்கும். பிறகு கூட்டம் இருக்காது.

நாங்கள் 53 ரூ. நெல் வாங்கியபோது ரூ. 1.10 என்று விற்றோம். விலை ரூ. 70 என்று டிசம்பர் மாதத்திலே கூட்டிவிட்டோம். இருந்தாலும் இந்த மாதம் 15-ம் தேதி வரையில் அந்த ரூ. 53 விலையில் வாங்கி அரைத்த அரிசி இருந்தது. இப்போது அது ஸ்டாக் தீர்ந்துவிட்டதால் புதிய விலையில் ரூ. 1.50 என்று போட்டு விற்கிறோம். அதைத்தான் நான் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

நம்முடைய ஹாண்டே அவர்கள் நான் முதலமைச்சர் மாநாட்டிற்குப் போனதைப்பற்றிச் சொன்னார்கள். ஏன் என்னைக் கேட்காமல் போனீர்கள், உங்களுக்கு என்ன தெரியும், உங்களுக்கு என்ன தெரியும் என்று கேட்டார்கள் (குறுக்கீடு) இது எல்லாம் குறிப்பில் இருக்கிறது. பேசினார். அமைச்சராக இருப்பதால் பேசிவிட்டார் என்று நினைக்கிறேன். சாதாரண முறையில் அப்படிப் பேசமாட்டார் என்று கருதுகிறேன். ரொம்ப வேகமாகப் பேசிவிட்டார்கள். கால நிலைமை அப்படி.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பல காரியங்களை எடுத்துச் சொன்னார்கள்.

சுவாமிதாஸ் கூட பல காரணங்களைச் சொன்னார்கள். ஆனால் உங்களுக்கு என்ன தெரியும், நாய்களை எல்லாம் விட்டு பிடிக்கச் சொன்னார் முதலமைச்சர் என்று சொன்னார்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** நான் சொல்லவில்லை.



1974 மார்ச் 22]

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அப்படி எழுதியிருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** திருக்கோவிலூரில் இந்த கள்ளக்கடத்தல்காரர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் என்று சொன்னார்கள். சொன்னதை அடுத்து கோவை செழியன் பதில் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்கு, சோதனையிடுவதற்கு அவர்கள் வீட்டிற்கு நாய் அனுப்பினார்கள் என்று சொன்னேனே தவிர அமைச்சரைப் பற்றி நான் சொல்லவில்லை. உங்களுடைய கவனத்திற்காகச் சொன்னேனே தவிர, உங்கள் மீது நான் எதையும் சொல்லவில்லை. முதல் அமைச்சர்கள் மகாநாட்டிற்குப் போனதைப்பற்றி நான் வேகமாகப் பேசவில்லை. நம்மை கேட்டுவிட்டுப் போயிருக்கலாம் என்றுதான் சொன்னேன். போய்வந்த பிறகு ரூல் 82ன் கீழ் ஒரு அறிக்கை கொடுத்திருக்கலாம். அதைச் செய்யாவிட்டால் எப்படி இருக்கும் என்றுதான் கேட்டேன்.

ஆந்திரா மாநிலத்தில் எவ்வளவு உபரி இருக்கிறது என்றெல்லாம் முதல் அமைச்சர் அவர்கள் விவரம் தந்திருந்தால் இந்த மன்றத்தில் அதை வைத்துக்கொண்டு பேசுவதற்கு கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு அனுகூலமாக இருக்கும் என்றுதான் சொன்னேன். பேச்சில் வேகம் இருக்கிறது என்பதற்காக வருத்தப்படாமல் சொல்லக்கூடிய கருத்துக்களுக்குப் பதில் கொடுத்தால் மிகவும் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நம்முடைய மாநிலத்தில் எவ்வளவு உபரி இருக்கிறது என்ற கணக்கை தனியாகக் கேட்டுப் பெற்றிருக்கலாம். கொள்கை ரீதியாக இங்கே அவருடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கலாம்.

சிறு தானியங்களைப் பொறுத்தவரையில் நம்முடைய அரசைக் கேட்காமல் அவர்கள் கட்டுப்பாட்டை எடுத்து விட்டார்கள். பத்திரிகையிலே பார்த்துத்தான் நாங்கள் தெரிந்து கொண்டோம்.

உணவு அமைச்சர்கள் மகாநாடு நடந்தது. அந்த மகாநாட்டில் உணவு அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி அங்கே பேசும் பொழுது கட்டுப்பாட்டை எடுத்தது தவறு என்று வாதித்திருக்கி

[1974 மார்ச் 22

[டாக்டர் மு. கருணாநிதி]

ஞர்கள். லெளியாவது நாங்கள் விதித்துக் கொள்வதற்கு
எங்களுக்கு அனுமதி வழங்கவேண்டும் என்று அவர்கள் கேட்டு
வந்திருக்கிறார்கள்.

நான் மேல் அவையிலே இதைப்பற்றி எடுத்துக் கூறியிருக்
கிறேன். இந்தப் பேரவையிலே கேள்வி நேரத்தில் இதைப்பற்றி
எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இன்று காலையில்கூட இது
பற்றிப் பேசினோம். எவ்வளவு இருக்கிறது, விவரம் என்ன என்று
அந்த அறிக்கையை தந்தால்தான் இதுபற்றி நாங்கள் கொள்கை
என்ன என்று சொல்ல முடியும் என்று அவர்கள் கூறுவது
அவ்வளவு பொருத்தம் அல்ல. அறிக்கைக்கும் கொள்கைக்கும்
சம்பந்தம் இல்லை.

திருட்டு போகக்கூடாது என்று நாம் வாதிக்கின்ற நேரத்தில்
வீட்டில் என்னென்ன சாமான்கள் இருக்கின்றன என்று சொல்,
அதற்குப் பிறகுதான் திருட்டுப் போகலாமா, போகக்கூடாதா
என்று சொல்ல முடியும் என்று வாதிப்பது சரியானது அல்ல.

கட்டுப்பாடு எடுக்கப்பட்டு ஒரே மண்டலமாக்கப்பட்டு, அதனால்
தமிழ் நாட்டில் பஞ்சம், பசி, பட்டினி என்ற நிலைமை உருவாகி,
குஜராத்தில் ஏற்பட்ட நிலைமை இங்கேயும் உண்டாக வேண்டும்
என்று வேண்டுமென்றே தானாகவே மத்திய அரசு இந்தக்
கொள்கையைக் கடைப் பிடித்து அதற்கு வழிவகுக்குமானால்,
இந்த அரசு எது வந்தாலும் பரவாயில்லை என்று மத்திய
அரசோடு போராடி வருவதற்குத் தயாராக இருக்கிறது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** நான் காலையிலே சொன்னேன்.
என் கட்சியின் சார்பாக அபிப்பிராயத்தைச் சொன்னேன்.
ஸத்தேர்ன் ஸோனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம் என்று
சொன்னேன். விவரம் தந்திருந்தால் மிக நன்றாக இருந்திருக்கும்,
இன்னும் வலிமையாகப் பேசியிருப்பேன் என்று சொன்னேன்.
என்னுடைய நிலைக்கும் நம்முடைய முதல் அமைச்சர் அவர்
களுடைய நிலைக்கும் கருத்து வேறுபாடு கிடையாது, தீர்மானம்
போடவில்லை என்றாலும், கம்பு சோளம் போகிறது, அது ஆபத்து
என்று சொன்னேன்.



[1974 மார்ச் 22

[டாக்டர் எச். வி. ஹாண்டே]

மேலவையிலே முதல் அமைச்சர் அவர்கள் பேசியதைப் பத்திரி
கையிலே பார்த்தேன். அந்த அளவிலே எந்தவிதமானக் கருத்து
வேறுபாடும் கிடையாது. அவர்கள் போராட்டத்தில் குதிக்கின்ற
நேரத்தில் உங்களோடு நாங்களும் இருக்கிறோம். அதில்
சந்தேகம் கிடையாது. இந்த மாநிலத்திற்காகப் போராடும்
பொழுது நாங்களும் சேர்ந்துகொள்கிறோம். அதில் சந்தேகம்
கிடையாது. கருத்து வேறுபாடு கிடையாது.

எவ்வளவு இருக்கிறது, எவ்வளவு பற்றாக்குறை என்று பார்டி
குலர்ஸ் இருந்தால், அதன் அடிப்படையில் வலிமையாக வாதாட
லாம் என்றுதான் சொன்னேன். கருத்து வேறுபாடு கிடையாது.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** நம்முடைய
ஹாண்டே அவர்கள் அந்தப் பிரச்னையைப்பற்றிச் சொன்னார்கள்.
காலையிலே அவர் வேகமாகப் பேசுகின்றபொழுது சபாநாயகர்கூட
அதைப்பற்றிச் சொன்னார்கள். இப்பொழுது இல்லை என்று
சொல்கிறார்கள். எல்லோரும் இங்கு இருந்திருக்கிறோம். அது
பற்றி பரவாயில்லை.

கடைசியாக ஒரே மண்டலத்தைப்பற்றி சொன்னார்கள். அவர்
களுடைய கொள்கையைச் சொன்னார்கள். நான் பாராட்டு
கிறேன். டெல்லியில் உணவு அமைச்சர்கள் மகாநாட்டில் நான்
ஆற்றிய உரையின் அம்சங்கள் இதுதான்.

அரிசியைப் பொறுத்த வரையில் மழையின்மையினாலும் உரங்
கள் பூச்சி கொல்லி மருந்துகள் இவற்றின் பற்றாக்குறையினாலும்
தமிழ்நாட்டில் உணவு உற்பத்தி 50 லட்சம் டன்னிலிருந்து 53
லட்சம் டன்களாகத்தான் கிடைக்கும் என்று சொன்னேன்.
கோதுமை சம்பந்தமாக, தமிழ் நாட்டுக்கு ஒதுக்கப்படும்
கோதுமை அளவு கடந்த மூன்று மாதங்களாக 9,000 டன்கள்
தான், இதனை மாதம் ஒன்றுக்கு 20,000 டன்கள் ஆக உயர்த்த
வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். கோதுமையின் விலை
விவசாய விலைக் குழு சிபாரிசு செய்தபடி குவிண்டால் ஒன்றுக்கு
ரூ. 95 என்று நிர்ணயம் செய்ய வேண்டும் என்றும் கேட்டிருக்
கிறோம்.

கோதுமை மொத்த வாணிபத்தை அரசு மேற்கொள்வதை
ஒப்புக் கொள்ளலாம் என்று டெல்லியில் சொல்லியிருக்கிறேன்.

சிறு தானியங்கள் குறித்து, தமிழ் நாட்டில் அரிசி சிறு தானியங்கள் ஆகியவற்றின் உற்பத்தி ஏறத்தாழ 67 லட்சம் டன்கள் ஆகும். இது தமிழ் நாட்டின் தேவைக்குத்தான் போதுமானது.

சிறு தானியங்களின் பேரில் விதிக்கப்பட்ட தடைகளை நீக்கியது புத்திசாலித்தனம் ஆகாது. சிறு தானியங்கள் போக்குவரத்தை கட்டுப்படுத்தும் மத்திய இருப்பு மையத்திற்கும் மாநிலங்களுக்கு வழங்குவதற்கு முடையிருப்பு பெறுவதற்கும் லெவி முறை விதிக்க வேண்டும். இந்தக் கொள்கைகளைத்தான் நாங்கள் சொல்லிவிட்டு வந்திருக்கிறோம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சிறு தான்யங்கள் எத்தனை லட்சம் டன்? 67 லட்சம் டன் என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** எல்லாவற்றையும் சேர்த்து மொத்தமாகச் சொன்னேன். புள்ளிவிவரங்களிலேயே ரொம்ப நேரத்தைச் செலவழிக்கச் சொல்கிறீர்கள். அப்படிப் பட்ட பிரச்னையை நாமும் உணவு அமைச்சர்கள் மகாநாட்டில் சொல்லியிருக்கிறோம். மகாநாட்டிற்குத் தலைமை வகித்த சேர்மன் உணவு அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்னையில் ஒவ்வொரு மாநிலத்திலுமுள்ளவர்கள் அவரவர்களுடைய கொள்கையைச் சொல்லியிருக்கிறார்கள்.

அங்குகூட இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசப்பட்டது. 'அச்சுத தலைவர் அன்றைக்குப் பேசும்பொழுது சொன்னார்கள். 'அச்சுத மேனன் அவர்கள் இந்தக் கொள்கையிலே மிக முன்னேற்றமாக இருந்தார்கள். அச்சுத மேனன் பேசிவிட்டு வெளியே போய் விட்டார்கள். இப்பொழுது அவர் அவையிலே இல்லை. அவரா லேயே அந்த மாநிலத்தில் அந்தக் கொள்கையை நிறைவேற்ற முடியவில்லை. ஆகவே, 'இந்தப் பிரச்சினையைப் பற்றி காபினெட்டில் பேசிவிட்டு பிறகு சொல்கிறோம்' என்ற அளவில் சொல்லியிருக்கிறார்கள்.

**இந்தப் பிரச்னையைப் பற்றி நான் ஒன்று கூற விரும்புகிறேன். தயவுசெய்து நம்முடைய முதல் அமைச்சர், அம்மையார் அனந்தநாயகி, மற்றும் அவர்களுடைய இயக்கத்தைச் சேர்ந்த அகில இந்திய காங்கிரஸைச் சேர்ந்தவர்கள், ஆளும் கட்சியைச்**



சேர்ந்தவர்கள் எல்லோரும் இந்தக் கொள்கையை நிறைவேற்றித் தருமாறு அவர்கள் தமிழ் நாட்டு மக்கள் என்ற முறையிலே நான் கேட்டுக்கொள்கிறேன் (வரவேற்பு).

மற்ற பிரச்னைகளையெல்லாம் இங்கே மற்ற மக்கள் எந்த அளவுக்கு அனுபவிக்கவேண்டும் என்பதை மற்ற மக்களுக்கு யார் சொல்லவேண்டுமோ அவர்கள் சொல்லவேண்டும். சர்க்கார் எடுத்திருக்கிற திட்டங்களைப் பற்றி பலர் பேசினார்கள்.

பொதுவாக சர்க்கரையைப் பற்றி இங்கே பேசினார்கள். நம்முடைய மணலி அவர்கள் பேசும்பொழுது கூட சர்க்கரைப் பிரச்னையைப் பற்றி எந்த அளவுக்கு தவறுகள் நடைபெறுகின்றன என்றெல்லாம் சொன்னார்கள். கூடியவரையில் சர்க்கரை விநியோகத்தை இப்பொழுது மற்றவர்களிடமிருந்து பிடுங்கி கூட்டுறவுத் துறையிலே கொண்டுவந்து ஒழுங்குபடுத்திக் கொண்டிருக்கிறோம். எல்லாவிதமான இடங்களிலும் சர்க்கரை கிடைப்பதற்கு நீங்கள் ஒத்துழைப்பு தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தேவையில்லாத மக்கள் கார்டுகளை வாங்கி வைத்துக்கொண்டு, கார்டுக்கு வாங்குகிற பொருள்களை வெளியிலே விற்றுவிடுகிறார்கள் என்று மணலி அவர்கள் சொன்னார்கள். அப்படி கொடுக்கப்பட்ட 1,000 கார்டுகள் சில பகுதிகளில் பறிமுதல் செய்யப்பட்டு வழக்குகள் தொடர்ந்திருக்கிறோம். இப்படிப்பட்ட நிலைமையில் ஒரு சில குறைகள் இருந்தாலும் அவற்றைக் களைவதற்கு நடவடிக்கை எடுத்துவருகிறோம்.

நம்முடைய பங்கீட்டு முறையில் குறைகள் இருக்கின்றன என்ற நிலைமைகளை நீங்கள் அதிகமாகச் சொன்னாலும், நான் உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், எந்தெந்த இடத்தில் குறைகள் இருக்கின்றனவோ, எந்தெந்த இடத்தில் நடைபெறுகிறதோ அதுபற்றி நீங்கள் உடனுக்குடன் எனக்கு செய்தியை அனுப்பிவைத்தால் நான் நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும். ஒட்டுமொத்தமாக சேர்த்து வைத்துக் கொண்டு, ஏதோ பொதுவாகப் பேசிவிட்டு போனால் நல்லது அல்ல. எல்லோரும் சேர்ந்து தான் செய்யவேண்டும்.

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1974 மார்ச் 22

வீராசாமி அவர்கள் சொன்னதுபோல பலத்த போலீஸ் போட வேண்டும், பலத்த போலீஸ் போடவேண்டும் என்ற அளவிலே சொன்னால் எல்லா போலீஸையும் சேர்க்க முடியாது. பத்து வருஷங்களுக்கு முன்பு இருந்த போலீஸ் தான் இப்பொழுதும் இருக்கிறது. எனக்கு இருக்கிற ஒரு டி.ஐ.ஜி., இரண்டு சூப்பிரண்டெண்டெண்ட் இவர்களை வைத்துக்கொண்டு, இந்த அதிகாரிகளை வைத்துக்கொண்டு தான் மாநிலம் பூராவும் நான் இந்தப் பிரச்னையை கவனித்துக்கொண்டு வருகிறேன்.

தமிழ் நாட்டில் அரிசி உற்பத்தி 53 லட்சம் டன் ஆக இருக்கிறது. சிறு தானியங்கள் 14 லட்சம், 15 லட்சம் டன். மொத்தத்தில் 67 லட்சம், 68 லட்சம் டன். நாம் 22 லட்சம் டன் அதிகமாக உற்பத்தி செய்திருக்கிறோம், அதனால் நாம் கொள்முதல் செய்யலாம் என்று காலையில் மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள்.

தமிழ் நாட்டில் மொத்தம் உள்ள 4.5 கோடி மக்களில் 300-க்கும் குறைந்த வருமானம் உள்ள மக்கள் 3.91 கோடி மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் 400 கிராம் வீதம் கொடுப்பது என்று சொன்னால் கிட்டத்தட்ட 50 லட்சம் டன் தேவைப் படுகிறது.

அதற்குப் பிறகு அதைக் குறைந்த விலைக்கு விற்க சர்க்கார் உதவித்தொகை எல்லாம் கொடுக்க வேண்டுமென்றால் அதற்கே கிட்டத்தட்ட 375 கோடி ரூபாய் ஆகும். ஆக, பட்ஜெட் தொகை இதற்கே சரியாகிவிடும். சோசலிசக் கொள்கையில் நாங்கள் எப்போதும் பின்னடைந்தவர்கள் அல்ல. அந்தக் கொள்கையின் அடிப்படையில் நிறைய செய்யவேண்டுமென்பதில் எங்களுக்கு ஆசை இருக்கிறது. இதுவரையில் எத்தனையோ கொள்கைகளை நிறைவேற்றியிருக்கிறோம்.

நிலச் சீர்திருத்தம், பஸ் தேசியமயம் இப்படிப்பட்ட பல திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம். இதையெல்லாம் பாராட்ட வேண்டாமா? பாராட்டிவிட்டால் முதலாளிகளுக்கு கோபம் வந்துவிடும் என்று கருதி பாராட்டமாட்டேன் என்கிறார்கள்.

தொழிலாளர்களுக்கு இப்போது பல தொழிற்சங்கங்கள் தேவை இல்லை என்று சொல்கிறோம். அதனால் சிலர் பாராட்



[திரு. மன்னை ப. நாராயணசாமி] 1974 மார்ச் 22]

டமாட்டேன் என்கிறார்கள். உள்ளபடியே பாராட்ட வேண்டிய பல அம்சங்களை நாங்கள் செய்திருக்கிறோம்; மிகப் பெரிய அளவில் செய்திருக்கிறோம். இன்னும் எதை எதைச் செய்யவேண்டுமோ அதையெல்லாம் செய்வதற்கு வேகமாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம்.

சில்லரைக் கடைகளை எல்லாம் அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டும் என்று அழகர்சாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்போதே 5,000 கடைகளை எடுத்திருக்கிறோம். எஞ்சியிருக்கிற கடைகளையும் எடுத்துக்கொள்ள ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம்.

மற்றப் பிரச்சனைகளைப்பற்றி அடிக்கடி இங்கே பேசிக் கொண்டிருக்கிறோம். இன்னும் நான் பதில் சொல்லாமல் ஏதாவது விட்டுப் போயிருந்தாலும் அடிக்கடி நாம் விவாதிக்கும்போது பதில் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** சிமிண்ட் பற்றாக்குறை இருக்கிறது. அதற்கு என்ன ஏற்பாடு செய்யப்போகிறீர்கள் என்று சொன்னால் நல்லது.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அது என்னுடைய இலாகாவைப் பொறுத்ததல்ல. அதனால் அதுபற்றிய முழு விவரம் எனக்குத் தெரியாது. அதனால் அதை விட்டுவிடுகிறேன்.

ஆகவே, இந்த வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் எல்லோரும் திரும்பப்பெற்று மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவாளர்கள் சௌடி எஸ். சுந்தரபாரதி, கே. எம். சுப்பிரமணியம், கே. என். குமாரசாமி ஆகியோர் இருக்கையில் இல்லாததால் நிதிக் கோரிக்கை எண் 34-க்கு கொடுத்திருந்த அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திருவாளர்கள் எம். ஏ. லத்தீப், சோ. அழகர்சாமி, பி. வெங்கடசாமி, கே. எஸ். கோதண்டராமையா, டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. எ. சுவாமிதாஸ் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 34—உணவுப்பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,18,89,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரியத் தொகை வழங்கப்பட்டது.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி, திரு. ஏ. சுப்பிரமணியம் ஆகியோர் இருக்கையில் இல்லாததால் நிதிக் கோரிக்கை எண் 55-க்கு கொடுத்திருந்த அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திரு. அர். பொன்னப்ப நாடார், டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 55—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,38,93,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரியத் தொகை வழங்கப்பட்டது.

5. அரசினர் சட்ட முன்வடிவு

**தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/74).**

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவரவர்களே,

"தமிழ்நாடு 1974-ம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/74) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

* 1974-ம் ஆண்டு மார்ச் திங்கள் பத்தொன்பதாம் நாள் தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய ஆலோசனைகளை எதிர்பார்த்து, இறுதியாக என்னுடைய உரையை வைத்துக்கொள்ளலாம் என்று நான் கருதுகிறேன்.

DR. H. V. HANDE: Sir, in connection with this Bill, I would like to offer a few remarks.

Sir, first of all, I would like to draw the attention of the Hon. Minister for Transport that Bills of this type which are very comprehensive in nature and persuasive in content should have been sent to a Select Committee. I purposely did not give notice of such an amendment for reference of this Bill to a Select Committee, because I thought that if we give an amendment of that nature on behalf of our Party, it might embarrass the Minister and create difficulties for the Government for political reasons.

So I thought that it would be best in the interests of all to leave it to the Hon. Minister to move an amendment for referring the Bill to a Select Committee.

For, it is a Bill with about 30 clauses and many clauses with far reaching consequences. Therefore, it is better that a Committee of this Assembly and of the Council sit together and offer their considered views. Only then, several of the smaller problems could be solved. Therefore I say that this Bill should be referred to a Select Committee.

If we look into clause 27, it is a Repeal Clause and it repeals two original old Acts, firstly the Tamil Nadu Motor Vehicles Taxation Act of 1931 and the Tamil Nadu Motor Vehicles (Taxation of Passengers and Goods) Act of 1952. By repealing these two Acts, a fresh legislation is brought. This is said to be a comprehensive Bill. Normally, if you take the history of Legislature, it will be seen that most of the Bills of this nature are referred to the Select Committee. After all, we want to pass it soon. That can be done in about 4 or 5 sittings of the Committee and before the 9th or 10th April, the Bill can come before the House. Now, the Chief Minister is here and almost all Ministers are here and the whole Cabinet is here. So, let

them take a decision. Let the Bill be referred to a Select Committee. Then there would not be much discussion in the House. It can be passed quickly.

Otherwise, it will look very odd that a Bill with so many clauses is passed without taking expert opinion on it. A number of persons should be given a chance to go through the clauses and consider their implications. This is brought before the House during the Budget, in the middle of Budget discussions. Just now, we have finished discussion on a Demand and immediately after that this Bill is brought here. A number of members could not participate in it for several reasons. Therefore I make an impassioned plea.

I thought of it half a dozen times whether to give notice of such an amendment. Then I left it because the Minister will feel embarrassed, for he cannot accept our amendment and it is not proper for political reasons. I wanted to make things easy for the Hon. Minister. It is not too late now. He can give an amendment, just as he has given notice of many amendments which have been received by us just one hour before.

Just like that if it is done, I should be very very happy. It will be in the interests of all, in the interest of healthy legislation and later on people would not criticise us if the Courts strike down the sections of this legislation. Whatever I say now may become true after some months. Probably the Chief Minister will say then when the Bill was passed Hande said this. I am only pleading so that people may not think that we as legislators have acted wrongly.

Another point is this, and that is with regard to clause 3—Levy of tax. Here, the sub-clause (2) says: 'The Government may by notification from time to time increase the rate of tax specified in Schedule'. The Government can at any time without passing through the Legislature increase the tax. Otherwise, this is very arbitrary and arbitrary powers are vested in the Government. If this Bill is passed and put on the Statute Book, then arbitrary powers will be given to the Rule Making Authority and officials by notification from time to time can



increase the rate of tax specified in the Schedule. That is why I would like this Bill to go before a Select Committee.

Then again there is clause 16. I would like to draw the attention of the Hon. Minister and the Members of the Treasury Benches to the provisions here. Here also very arbitrary powers are taken in the penal clause. This deals with penalty for failure to pay tax. It is said :

(Thiru K. A. Wahab in the Chair.)

'If the tax due in respect of any motor vehicle has not been paid within the period prescribed under section 8, the registered owner or the person having possession or control there shall

(a) pay, in addition to the tax, a penalty of such sum, not exceeding twice the amount of the quarterly tax payable, as may be prescribed, and different sums may be prescribed for different classes of motor vehicles and for different periods, etc.

In other words, wide powers, strong powers are delegated to the authorities, who are going to make subordinate legislation, and administer the penal clause. This is very, very arbitrary, very, very heavy and very, very damaging. This is one more reason why I would like the Hon. Minister to consider my plea to send this Bill to a Select Committee.

Then again another point which I would like the Hon. Minister to go through is at page 47.

In page 47 of the Bill it is stated—

மாலை 5-30

" Goods vehicles plying for hire or reward and used for the transport of goods—

| | Rs. | P. |
|---|---|---|
| (a) Vehicles not exceeding 3,000 Kgs. in weight laden ... ... ... ... | 250 | 00 |
| (b) Vehicles exceeding 3,000 Kgs. but not exceeding 5,500 Kgs. in weight laden ... ... ... ... | 525 | 00 |

What does it indicate? Heavy taxation is envisaged by this Government on transport vehicles on goods vehicles like lorries.

What would be the result of such a heavy taxation? Have the Government considered the disastrous effect this legislation will have. Prices of essential commodities will go up and lorries will not ply properly. Now most of the lorries are finding it difficult to cope up with the expenditure involved in their business. Most of the lorry-owners are now in the grip of money-lenders and many of them are on the street. They have become paupers. Many of them are not able to pay quarterly or monthly interest to the money-lenders. When such is the case, if we are going to throw heavy burden, what disastrous effect it will have on them. So, is it proper for the Government to completely demoralise and paralyse the entire lorry traffic in the State ?

Sir, I know the Government want money through this tax with one particular motive. They want to avoid the corporate tax and get all the taxes for themselves. If the Government make some profit, then they would have to pay the corporate tax and a portion of it will go to the Central Government. To prevent the Central Government from getting that tax amount, the Government have come forward with this legislation.

Finally, I would like to say that by means of this Bill, we are going to increase the revenue of the State by about 20 to 25 crores of rupees. The Hon. Minister has under-estimated the revenue from this tax. Though this is a Money Bill we do not know the quantum of money that they would get . . . .

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, already the Hon. Chief Minister has announced in the Budget speech that by this measure we will get about Rs. 6 to 6½ crores.

DR. H. V. HANDE : I have estimated much higher. Next year you will know whether my estimate is correct or the Hon. Minister's estimate is correct.

Once again I say that this Bill will have disastrous and far-reaching consequences. I request the Hon. Chief Minister to consider whether it is not possible to refer the Bill to a Select



Committee. Though I have not given notice of an amendment on those lines, it is open to the Government to move such an amendment, namely, that the Bill be referred to a Select Committee.

திருமதி த. ந. அனந்தநாயகி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை அரசாங்கம் ரொம்ப அவசரமாகக் கொண்டு வருவதாகத் தான் எல்லோரும் உணர்கிறோம். இதை தயவு செய்து பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பினால் எந்த அளவுக்கு இதனால் ஏற்படக்கூடிய கஷ்டங்களைக் குறைக்கலாம் என்பதை யோசித்துச் செய்யலாம்.

'யார் தலை எவ்வளவு தாங்கும்' என்பதை யோசித்துத்தான் போடுகிறோம். நாங்கள் 'தாங்கும் தலையில்தான் போடுகிறோம்' என்று சொல்லிக் கொண்டே—தாங்க முடியாதவர்கள் தலையில்—குனியக்குனியத்தான் போடுகிறீர்கள். தாங்கக் கூடிய பெரிய தலைகளை எல்லாம்—வழித்தடங்களை அரசுடைமையாக்குகிறோம் என்று சொல்லி—ஹையர் அமௌண்ட் காம்பென்சேஷன் என்று கொடுத்து அவர்கள் தப்பிவிட்டார்கள். இன்றையதினம் சிறிய ஆபரேட்டர்கள், லாரி ஓனர்கள்தான் பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருக்கிறார்கள்.

ஏற்கனவே மத்திய அரசு போட்டிருக்கிற வரியினால்—எண்ணெய் உயர்வு, டயர் உயர்வு இவற்றினால் செத்துக் கொண்டிருக்கிறவர்கள் மீது, நாங்களும் ஒரு பிடி மண் போடுகிறோம் என்பதாக—மேலும் அவர்களைச் சாகடிக்கிற நிலையில்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள்.

இன்னும் தனியார்களிடம் 5 ஆயிரம் பஸ்கள் தானே இருக்கின்றன. அவற்றையும், லாரிகளையும் நாட்டுடைமையாக்கி விடுங்கள். அப்படியின்றி ராஷனலைஸ் பண்ணுகிறோம் என்பதாக பஸ்களில் சீட் டாக்சை உயர்த்திவிட்டீர்கள்—லாரிகளுக்கு டாக்சை உயர்த்திவிட்டீர்கள். இதனால் என்ன ஆகப் போகிறது? டாக்டர் ஹாண்டே சொன்னதுபோல, பொதுமக்கள்தான் பாதிக்கப்படப் போகிறார்கள். உணவுப் பண்டங்கள் விலை இன்னும் ஏறப்போகிறது.

முன்பாவது சென்னைக்கு பக்கிங்ஹாம் கால்வாய் மூலம் விறகுகள் போட்டில் வந்து, ஹாம்டன் வாராவதியில் தோணித் துறையில் இறக்குவார்கள். இப்போது விறகுகள் எல்லாம் லாரிகளில்தான் வருகின்றன. விறகுக்கு வரியை எடுத்து விட்டோம் என்று சொன்னாலும் விறகு விலை இறங்கவில்லை, ஏறிக் கொண்டேதான் இருக்கின்றன. இன்னும் கொத்தவால்சாவடி பக்கம் போனால் தெரியும். காய்கறிகள் எல்லாம் லாரிகளில்தான் வருகின்றன. இன்னும் உணவுப்பண்டங்கள் எல்லாம் லாரிகளில் தான வருகின்றன. ரெயில் குட்ஸ் மூலமாக அனுப்பினால் தாமத மாகிறது, பில்பரேஜ் ஆகிவிடுகிறது என்று லாரிகள் மூலமாகத் தான் கொண்டு வருகிறார்கள். அவற்றின் விலை எல்லாம் மேலும் ஏறிவிடப் போகின்றன.

இன்னும் இந்தச் சட்டத்தைப் பாருங்கள். டைம் டு டைம் இவர்கள் ஒரு நோட்டிபிகேஷன் மூலமாக வரியை உயர்த்த அதிகாரம் இருக்கிறது.

'The Government may, by notification, from time to time, increase the rate of tax specified in the Schedule'

என்பதாக ஏதோ 2 ரூபாய் டாக்ஸ் போடுவது போல பெனல்டி மத்தியானம் கூட்டி வைத்துக்கொண்டு—காலையில் இருந்து வேலை செய்து மூளையே வேலை செய்யவில்லை (திரு. என். கணபதி: காப்பி சாப்பிட்டீர்களா?) அதைக் கூட சூடாகக் கொடுக்கவில்லை. விளக்கெண்ணை மாதிரி எங்கள் தலையில் கட்டுகிறார்கள்—இப்படி இந்த நேரத்திலே இதைக் கொண்டுவர வேண்டிய அவசியம் என்ன? பத்துப் பதினைந்து நாட்கள் கழித்து வரக் கூடாதா? வரி போடுவதிலே இவ்வளவு பேராசையா? இவ்வளவு பணம் வாங்குவதில் இவ்வளவு பேராசை கூடாது. இந்த அளவுக்கு வரி ஆசை பிடித்து, அவசரமாகப் போடுவது வரவேற்கத்தக்கது அல்ல.

இன்னும் பெனல்டி க்ளாசை எடுத்துக் கொள்ளுங்கள்.

'Penalty ........... not exceeding twice the amount of the quarterly tax and a fine extending to Rs. 50'

என்பதாக—ஒரு சட்டம். அதையும் அவசரம் அவசரமாக—இரண்டு மடங்கு என்கிறார்கள். டாக்சே ஆயிரம், இரண்டாயிரம்



போடப்படுகிறது. இதிலே பெனல்டி டபிள் என்றால் அவன் கதி என்ன ஆகும்?

அண்டை மாநிலங்களில் கூட இந்த அளவுக்கு லாரிகளுக்கு டாக்ஸ் கிடையாது. இப்படி வரி போடுவதனாலே உங்கள் உள்ளக் கிடக்கையையே சந்தேகிக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இன்றையதினம் நீங்களே பெரிய பஸ் ஆப்பரேடர். ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட பஸ்கள் உங்களிடம் இருக்கின்றன. கார்ப்பரேஷன் டாக்ஸ் என்று மத்திய சர்க்காருக்குப் போய்விடக் கூடாது என்று இந்த மாதிரியாக டாக்ஸ் போடுகிறீர்களோ என்னமோ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பெனல்டி கிளாஸைப் பொறுத்தவரையில் ஏற்கனவே இந்தச் சட்டமன்றத்தில் அந்தத் திருத்தம் நிறைவேற்றப்பட்டு சட்டமாக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்திலே அது புதிதாக வரவில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஏற்கனவே இருந்தால், அதை எடுங்களேன். ஏற்கனவே இருந்தால், அதை மீண்டும் செய்ய வேண்டுமென்று இருக்கிறதா? ஏற்கனவே இருந்தால், சொல்லாமல் இருக்கலாம். நான் ஏற்கனவே தப்பு பண்ணினேன், இப்பொழுதும் பண்ணுவேன் என்றால்? ஏற்கனவே நாங்கள் முழிக்கவில்லை, இப்பொழுது முழித்துக் கொள்கிறேன், வேண்டாமென்று சொல்கிறேன் . . .

**THE HON. THIRU S. RAMACHANDRAN** : The point is that the amendment has once been approved by the Legislature. Therefore, that is not relevant for discussion now.

**THIRUMATHI T. N. ANANDANAYAKI** : One mistake does not justify the other mistake. What is wrong in saying it now ?

**THE HON. THIRU S. RAMACHANDRAN** : I mean the present Legislature during its last session has voted on it, not any other Assembly before 1967.

**THIRUMATHI T. N. ANANDANAYAKI** : Even then, you should have thought of it. Because you are in a big majority . . .

நீங்கள் என்ன சொல்வது, நாங்கள் என்ன கேட்பது என்று நடந்து கொள்கிறீர்கள். நாங்கள் 4 பேர், 2 பேர் உட்கார்ந்திருக்கிறோம். நீங்கள் உங்களுடைய ரோட் ரோலர் மெஜாரிட்டியைக் கொண்டு . . .

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** நீங்கள் இப்பொழுது பேசுவதையெல்லாம், அப்பொழுதே பேசிவிட்டீர்கள். ஆகவே, வேறு எதையாவது பேசலாம் என்பதற்காகச் சொல்கிறேன். திருப்பித் திருப்பிச் சொன்னாலும் உங்களுடைய காதிலே விழவில்லை என்பதற்காகத்தான் அதைத் திருப்பித் திருப்பிச் சொல்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: You cannot go on repeating your mistake. There is a point of saturation for everything. People are not going to tolerate your taxation policies.

அதற்காகத்தான் சொல்கிறேன். திருப்பித் திருப்பிச் சொன்னால், அப்படியாவது ஏறுமா என்று பார்க்கிறோம். ஒரு டைம் இல்லாவிட்டால், ஒரு டைமிலாவது செவி சாய்க்குமா அரசு என்றுதான் சொல்கிறேன். எங்களை நீங்கள் ஸ்டாப் பண்ண முடியாது. என்றைக்கு எப்படிச் சொல்ல வேண்டுமோ அப்படித் தான் நாங்கள் சொல்வோம். செய்வதோ, விடுவதோ உங்களுடையது. அதை, ஏன் சொல்கிறாய் என்று கேட்கக் கூடாது.

இந்த மாதிரி குவார்ட்டர்லி டாக்ஸை ஜாஸ்தியாக்கி, 4,000 அரசாங்கப் பஸ்களுக்கு டாக்ஸேஷன் இல்லாமல் காட்டிவிட்டு, லாபத்தைக் குறைத்துக் காட்டினால் கார்ப்பரேஷன் டாக்ஸிலே லாபம் வரும். 57 சதவிகிதம் சென்ட்ரல் கவர்ன்மென்ட்டுக்குப் போகப் போகிறது. ஆகவே, அவர்களை ஏமாற்றுவதற்காக, [illegible] இங்கே வரியை ஏற்றினால், மற்ற 5,000 பேர் கஷ்டப்படுவார்களே. அதனாலே ஸ்டேட் கவர்ன்மென்ட்டுக்கு லாபம் வரும் என்றால் தாராளமாகச் செய்யுங்கள். தனி முதலாளிகள் தலையிலே, லாரி முதலாளிகள் தலையிலே பாரம் வைத்தால், தாங்காது, தாங்கிக் கொள்ளவும் முடியாது. அந்த அளவு நசுக்கியாயிற்று. ஆகவே, இந்த வரிக் கொள்கையிலே சற்று யோசிக்கப் பார்க்க வேண்டும்.



வரவுசெலவுத் திட்டத்திலே ரொம்ப தெளிவாக, 1973-74-லே ரூ. 27 கோடி எஸ்டிமேட்டிலும் வந்திருக்கிறது, ரிவைஸ்ட் பட்ஜெட்டிலும் வந்திருக்கிறது. ஆனால், நீங்கள் 1974-75-லே ரூ. 23 கோடி தான் காட்டியிருக்கிறீர்கள். இது எப்படி ரூ. 27 கோடியிலிருந்து, ரூ. 23 கோடியாகக் குறைகிறது என்று தெரியவில்லை. அப்பொழுதே சொன்னேன், கனம் முதலமைச்சரவர்கள் அதைப் பற்றி கவலையே படவில்லை. இப்பொழுது ரூ. 6 கோடி எதிர் பார்ப்பதாகச் சொல்கிறார்கள். இங்கே ரூ. 12 கோடி பற்றாக் குறையும் பார்த்துவிட்டு அதற்கு மேலே சொற்பம் வரக்கூடிய அளவிலே கூடக் கொஞ்சம் வரப் போகிறது. எப்பொழுதும் செலவைக் குறைத்துக் காட்டுவார்கள். அந்தக் குறையும் இருக்கிறது. இதன் காரணமாகத்தான், விலைவாசி ஏற்றத்திற்குத் தான் வழி செய்யப் போகிறீர்கள். ஏற்கனவே, விலைவாசிப் பிடியிலே சிக்கித் தவிக்கின்ற மக்கள் எல்லையில்லாத் தொல்லைக்கு ஆளாகப் போகிறார்கள், அதுதான் இந்தச் சட்டத்தின் விளைவு என்று கூறி, இதை வன்மையாக நான் கண்டிக்கிறேன்.

THIRU M. A. LATHEEF: Mr. Chairman, I would like to make a few comments on the Bill that has been presented to us, for our consideration.

The Bill before us, the Tamil Nadu Motor Vehicles Taxation Bill 1974 L.A Bill No. 10 of 1974, is obviously, primarily intended to raise revenues for the State and to use the same for the purposes that are considered by the Government as of prime importance.

Now, as I see from the way in which the Bill has been drafted, it seems to be a compendium of different purposes and it attempts to accomplish social, financial, economic and legal aspirations of the Government as well as the community. I do not know how it is going to be sustained in a court of Law as an Act to raise the revenues of the State as has been defined in the Bill.

As we go through the Bill from section to section, we see that the Bill is intended to reach its logical point, namely to get as much money as possible from the private owners and fleet owners of buses and other transport. There should be some

limit for taxation. That is what I would like to submit. We do agree that the sources of abnormal profits should be taken over by the Government and if the Government feels that this bus transport is a source of abnormal profits, then I would suggest to the Government to nationalise the entire bus transport in the State instead of leaving some of the people who are not able to make both ends meet.

Therefore, if you want a comprehensive legislation as you have mentioned in the Objects and Reasons 'to rationalise and revise the tax structure', then as has been suggested by other hon. Members of this House, there should be allowed a thorough discussion upon the various aspects of the Bill that is before us.

I do agree with others that unless an opportunity is given to the hon. Members of this House to discuss the various aspects and implications of the various sections threadbare and if this Bill is to be pushed through this fine evening without giving proper opportunity to Members, I think it will not meet the ends of justice.

I therefore request the Hon. Minister to give us some opportunity, because this Bill if passed, I do not know whether it will be sustained in a court of law. If this legislation is passed by this Legislature and later on struck down by the Judiciary, it will be telling upon the legislative competence and vigilance of the hon. Members of this House. Therefore an opportunity must be given to study whatever the legal implications, whatever the judicial pronouncement later on. If there is any adverse reaction by the judicial tribunal then the responsibility for that will not be shouldered by the members of this House, but the Government alone should bear the responsibility for such adverse comment by any judicial tribunal.

Unless and until an opportunity is given to the hon. Members to discuss these various aspects threadbare by sending this Bill to a Select Committee, at least for a short time, as has been pleaded by the members who have spoken before me, it will be very unfair.



Now, Sir, I submit that the burden of taxation is such that the small fleet owners who are owning only 3 buses or 4 buses or 2 buses or even one bus, they are not able to run their buses efficiently, because they are always indebted to the Marwadies as they are not able to get sufficient returns from their transport business.

If you go on increasing the tax burden, then I think I would strongly plead with the Hon. Minister and the Government of Tamil Nadu to nationalise all the buses without giving any opportunity to private owners. Please nationalise at once. Please leave the small bus owners out of these difficulties that are being experienced by the small bus owners. That is my strong plea and imploration to the Hon. Minister.

Now, Sir, clause 3 about which reference was made by the Hon. Member, Dr. Hande and Thirumathi Anandanayaki, as has been pointed out by them, it contains a great amount of arbitrariness and a great amount of illegalities in seeking revenue from the people. When you seek revenue from the people, you should have necessarily the sanction of the Legislature. Then, having come before the Legislature for sanction, you cannot reserve the work of the Legislature to yourselves and assume the power to fix any amount as and when you feel it is necessary to do so.

That is not upheld and that is against the concept of natural justice and against the concept of constitutional law. Such an illegality cannot be upheld by the Legislature. You cannot ask this House to give that right without legislative action, even for a good purpose. You want to raise revenue by means of a governmental notification as and when you feel necessary. This is going to be struck down when it is taken before the judicial tribunal and so this Bill may be withdrawn or may be referred to the Select Committee where it can be discussed in all its aspects.

Now under clause 3 you levy some tax. I would ask, whether the tax is upon the vehicle or upon the person who owns the vehicle. Upon when the tax liability is vested, whether it is upon the vehicle or upon the person? If you say that it is upon the person, then this Bill, as has been drafted, will not be

[திரு. எம். ஏ. லத்தீப்] [1974 மார்ச் 22

valid. If you say that it is only upon the vehicle, even then the Bill is invalid. Therefore, you must properly differentiate between a person and a vehicle. If you say that it is a tax upon the vehicle, then you say that the person is not responsible for payment. When the vehicle will be plying on the road, it will be paying the tax and whenever it is sick or it is kept in the garage without any work, then you cannot tax it as such. And when you say that it is the person who owns it, then you cannot ask the successor of the vehicle to pay the tax. So, the legal implications should be properly viewed. Without giving proper thought to the legal implications, you cannot bring forward the Bill in a haphazard manner.

Now I come to the successor's liability and the recovery under the Revenue Recovery Act. If you say that the tax payable should be borne by the successor then it is definitely a tax upon the vehicle. If you say that when the vehicle is transferred by a transfer deed or by transfer by mutual agreement, then the tax is upon the vehicle. From this we understand that this tax is upon the vehicle, and the successor will not be liable. The person who owns and subsequently transfers it alone should be liable. So, you should recover the amount from the seller and not from the buyer.

Then I come to clause 3 which says—

'Subject to the provisions of sub-section (2), tax shall be levied on every motor vehicle kept or used in the State of Tamil Nadu at the rate specified for such vehicle in the Schedule . . .'

Here the words 'kept or used' are used. Now what happens is that in many routes buses are plying under temporary permits issued by the District Collector. When the period of temporary permit is over, what would happen to the vehicle. It will be kept for some time in the garage till the owner gets another permit from the appropriate authority. During that period, what would happen? If you say that it is a tax upon the vehicle, then I would say that this is a great injustice and it cannot be held constitutionally. Suppose a small owner becomes insolvent and the vehicle is kept in the garage. Even then you will ask him to pay Suppose I am one of the unfortunate small bus owners . . . .



1974 மார்ச் 22]

THE HON. THIRU S. RAMACHANDRAN : Unfortunately the amendment which has already been passed by this very small Legislature has now been commented upon by the hon. Member Thiru Latheef. As far as the definition of the vehicle kept or used is concerned, the obligation upon the owner is to pay the tax. Suppose if the vehicle has not been used, it is for him to produce evidence and get refund and that is all.

THIRU M. A. LATHEEF : That is not in the Bill.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Whenever the vehicle is under repair and if the owner gives a certificate that it is in the workshop, can the tax be refunded? According to the earlier amendment passed by this House, even if the owner produces evidence, the amount is not refunded. So, the Hon. Minister is, misleading the House.

THE HON. THIRU S. RAMACHANDRAN : I am not misleading the House. Hitherto the obligation of proof that the vehicle has not been on the road was vested on the Motor Vehicles Inspector. According to this Bill, it is for the owner to establish that he has not used the vehicle. The burden of proof now rests with the owner and that is all. Also clause 14 clearly states that if the vehicle is not used for more than one month, he can always get refund.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Suppose if a Motor Vehicles Inspector says that he has seen a lorry plying on the road on a certain date, in spite of the fact that it has not been used and evidence to that effect has been produced, the owner cannot convince the concerned authorities and he has to pay the tax.

THIRU M. A. LATHEEF : I have gone through the entire provision and I have spent considerable time over it and the legal implications therein. I am also quite conscious of clause 14 wherein some relief is understood to be given to the vehicles that are kept without use.

(மாலை 6-00)

But what I submit is the question of differentiating between the vehicle and the person. In one place it gives the implication that it is a definite tax upon the vehicle and in another place when you say that the tax is to be apportioned by the successor

and then it will be recovered under the Revenue Recovey Act, the legal implication is that it is not upon the vehicle, but upon the person who owns the vehicle.

In order to give a clear picture as to whether this tax is upon the person or the vehicle, I submit with my little knowledge of law that this should be referred in the interests of proper legislation to a Select Committee so that it may be discussed fully.

After all, our purpose is to accomplish certain things. I am also with the move of the Government that the maximum advantage will go to the community, not to any individual by means of this legislation. Our purpose is to get the maximum advantage, of the maximum social advantage and we do not want sources of abnormal profits to go unchecked and the difference between the Haves and Have-nots should be wiped out.

But at the same time, if you have the good intention of doing the maximum social advantage and march towards the goal of socialism, then I would submit, please do not bring in any legislation without giving proper consideration to the implications of the provisions of the Bill.

Another very serious point is this. In clause 15 (3) what has happened ? Certain penal provisions are made, I am wondering. Social aspects have been embedded in the Bill ; financial questions are embedded. The question of raising revenues from the Public for the Treasury has been embedded. And there is the social aspect that this amount will be utilised for laying of rural roads. The amounts that are raised by means of surcharge will be utilised for the purposes of laying of certain rural roads. Social goal is one, and financial aspect is another and there is the legal aspect also.

All these are embedded in a single piece of law. What a great achievement and what a great achievement. What I submit is that there should be some limit in drafting a law. What has happened here? When a penal clause is incorporated, what is done here? In clause 15 (3), it says :

'Any person failing to stop a motor vehicle when required to do so by any of the officers specified in sub-section (2) or resisting



such officer shall be punishable with fine which may extend to fifty rupees'.

Who is to impose this Rs. 50? The courts are brought into the picture. What is this new technique? New techniques of crimes are now in existence. Mostly these vehicles are used for accomplishing many criminal acts.

Many crimes are committed by the use of vehicles. Recently we heard of the murder of 7 persons. The matter has gone to the Sessions Court. There vehicles have been used. Innocent persons are given poisonous injections. If anybody stopped such vehicles, all right, they are prepared to pay the fine of Rs. 50. They are ready even to Pay Rs. 500. The penalty should be rigorous and deterrent.

If a vehicle is not stopped for verification, for questioning or for examination, then the number of the vehicle is noted and the matter will be taken to the court. Any regular criminal or anti-social element is always ready to pay the fine.

Therefore, I submit if this legislation is to be comprensive, if it should accomplish the purposes we have in view, then opportunity should be given to the hon. Members of this House to discuss threadbare in detail all these legal abnormalities, sub-normalities and extra-ordinarinesses that have been embedded in this Bill and they should all be weeded out and the Bill made into an ideal Bill, legally sustainable, constitutionally sustainable. Otherwise if this legislation is to be examined and reviewed by legal experts later on and if they pass any adverse comments upon the wisdom and upon the legal acumen of the members of this House, then I submit Sir, we are not responsible, and we cannot accept responsibility for such adverse comments and it will be for the Government to accept full responsibility.

Therefore, I strongly plead with the Government that this Bill be referred to a Select Committee.

I am also for nationalisation ; there should not be any misunderstanding and therefore I submit I am for nationalisation and I say and plead with you, please do not leave the small bus owner to all these difficulties, but immediately nationalise all the bus transport or allow them to run their business in an efficient and workable way.

My only request to the Government is this. Sir, with these observations, I conclude my speech.

THIRU R. PONNAPPA NADAR : Sir, I oppose this Bill with all the emphasis at my command. So far as this Bill is concerned, it is a hurried piece of legislation and this Bill is being hustled through and it should not be on the legislative anvil. I do not understand why this much of urgency is shown in passing this Bill.

Sir, the Hon. Minister who has introduced this Bill raised a technical objection to the effect that the clauses contained in this Bill had been considered by this Legislature and so much so there is legal impediment or constitutional bar in discussing the matters which have been already passed in the earlier Bill. Suffice it for me to say that the legal knowledge and acumen that is possessed by the hon. Members of this House requires that the whole matter will have to be discussed afresh and legal formalities followed.

Sir, the Bill is meant to consolidate and amend the laws relating to taxation of motor vehicles in the State. So it is a Bill for consolidation as well as for amendment. So the whole matter is open. We cannot now say that because you have earlier voted upon and this Legislature has passed the provisions of this law. Therefore, there is a legal flaw to further consideration afresh. I would not agree with the Hon. Minister and according to me it is a plausible argument unsustainable and that has to be rejected.

[Mr. Speaker in the Chair]

The next point is rationalisation of tax structure aimed by the Bill. So far as the existing law, two in number, is concerned, they are sought to be repealed by clause 27. That clause repeals the Tamil Nadu Motor Vehicles Taxation Act of 1931 and the Tamil Nadu Motor Vehicles (Taxation of Passengers and Goods) Act of 1952.

These are the two Acts which have now been sought to be repealed and the provisions contained in the previous enactments are sought to be included in this single piece of legislation. It may be argued that for legal convenience and for easy reference, a single law would be more advantageous.



I would once again say that this is an unconscionable Bill and the amount that is sought to be raised according to the budget estimate is Rs. 6½ crores. That is a modest estimate and an under-estimate.

I would say that the proceeds would be even Rs. 10 crores because the tax is so high and the motor vehicles industry would die a natural death. Perhaps the Ministers or the present Government want to kill the goose that lays the golden egg. It may be argued that we are all lawyers and that we are supporting the bus operators but that argument is a flimsy argument. We may also be accused as right reactionaries and that is no argument. You must consider it dispassionately and in the interest of the country. Will it be advantageous? Of course, this may be one of the methods of taxation and the Government need more money and for this, this is said to be a fertile source. But I would say that the tax is too heavy that the industry would die a natural death and that is the point which I would emphasise again.

Another point is that because of this legislation, there would be a boosting of prices because the freight charges would increase. Passenger fares may also increase. In view of the inflationary budgets presented by both the Central and State Governments, are we justified in imposing further taxation, is the point which we will have to consider.

Another point is with regard to clause 3 which deals with the levy of tax. In this connection, I would refer to sub-clause (2) of the clause, the proviso and Clause 25 (*d*). So far as these provisions are concerned, there is excessive delegation of the legislative powers and excessive delegation will be struck down by the court. So, I think, if the Bill goes to the Select Committee, we can consider all the aspects and remove the legal flaw.

Then I come to clause 10 of the Bill which deals with the levy of additional surcharge on tax on certain motor vehicles. We can more or less understand why this has been introduced. Probably certain fleet owners may be tortured or done to death and that is one of the modus operandi that has been adopted here.

Sir, during the Governor's Address, I had occasion to say that certain operators had been discriminated upon in the Tiruchirappalli route. There are certain nationalised routes but there are other routes where the private parties are also plying buses. But in such of those routes, the Government vehicles also are plying in season and out of season and they may say that they have got the time schedule.

But why should differentiation be made in the case of persons having certain political leanings?

' There shall be constituted for the State of Tamil Nadu a plated in clause 11 which says—

' There shall be constituted for the State of Tamil Nadu a fund called the Tamil Nadu Rural Road Development Fund to which the proceeds of the surcharge collected under sub-section (1) of section 9 shall be credited............

(iii) any township constituted under any law for the time being in force.'

I would say that sub-item (iii) may be deleted from the Bill. Some of the townships like Courtallam and Cape Camorin are very small and can you call them big towns like Madras and Madurai and can you compare them to the municipal towns ? So, they should not come within the purview of the Bill so far as the allotment or devolution of funds are concerned. This aspect of the matter which the Hon. Minister for Transport may well consider.

As regards the clause dealing with the payment of penalty, it is unconscionable, excessive and penal.

Then the procedure under the Revenue Recovery Act is contemplated in clause 17. This would cause hardship to the small operators as well as fleet owners. Such a stringent provision should not be there, and so far as the recovery under the Revenue Recovery Act is concerned, it should be seasoned by mercy and it should not be cruel and we shall not have the pound of flesh according to the law.



Then I come to clause 18 which deals with the utilisation of the proceeds of the tax. In this clause it is stated—

' After deducting the expenses of collecting the tax............ apportionment shall be in accordance with such rules as may be made in this behalf.'

Will it be proper to delegate it under the rule-making powers ? This is also an excessive delegation of power and it should be provided in the Bill itself. That will have to be made clear in the Bill. If that is not made clear that itself would be valid ground for this piece of legislation being struck down by the High Court or other Courts.

Now, Sir, another exemption has been given—' Saving as to vehicles used for agricultural purposes '—Under this provision, there is an explanation—a funny explanation and it says ' A motor vehicle used for transporting agricultural produce of persons other than the owner cultivator shall not, for the purpose of this section, be deemed to be used solely for the purposes of agriculture '. Supposing, a land-lord owns a vehicle and for some time if he puts it to some other use, the ambit of the law is large enough to take away from exemption that has been granted under this clause. So much so, I think there should be re-thinking and re-drafting so far as this section is concerned.

Sir, I would be failing in my duty, if I do not point out that this hasty piece of legislation should not be hustled through; this requires careful consideration and deep examination by a Select Committee composed of members of this House and also members of the Upper House; it may call for the views of the Bar Associations and persons who have been really affected by this legislation and I think there is no urgent necessity that this Bill should be passed now. This can be extended by a notification.

Even for fiscal matters, this House has extended Acts with retrospective effect and I think an announcement has already been given. Therefore, there need not be any hurry with this legislation that it should be passed before 1st April. I think, Sir, the whole matter will have to be examined and studied carefully and I may even confess that we do not have sufficient time to go through the entire provisions of this Bill

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 மார்ச் 22

We had no time to digest all the implications of the various provisions with the little knowledge that we have. I confess before this House that sufficient attention has not been bestowed on this piece of legislation. So, I would once again urge and repeat through the Chair that this House may refer this piece of legislation to a Select Committee. I think this will be accepted and I can say without fear of contradiction that there are legal flaws and all this will have to be examined thoroughly and at great length.

With these words, I once again oppose this Bill with all the emphasis at my command and I would even now say that this Bill will not have the desired effect, for this will have very bad repercussions on the finances of this State.

With these words I conclude, Sir.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன் வடிவில் மாண்புமிகு உறுப்பினர்கள் கலந்து கொண்டு நல்ல பல கருத்துக்களையெல்லாம் வழங்கியுள்ளார்கள்.

இதன் பின்னணியை நான் தெரிவிப்பது என் கடமை என்று கருதுகிறேன். மோட்டார் வாகனங்களைப் பொறுத்த வரையில் தமிழகத்தில் நடைமுறையில் இரண்டு சட்டங்கள் இரண்டு நிலையில் வரி விதிக்கக்கூடிய நிலையில் இருக்கின்றன. ஒன்று, தமிழ்நாடு மோட்டார் வெகிக்கிள்ஸ் டாக்ஸேஷன் ஆக்ட், 1931, இன்னொன்று, தமிழ்நாடு மோட்டார் வெகிக்கிள்ஸ் (டாக்ஸேஷன் ஆப் பாஸன்சேர்ஸ் அண்ட் குட்ஸ்) ஆக்ட், 1952.

இந்த இரண்டு நிலைகளில் வரிகள் விதித்தாலும் கூட வாகனங்களுடைய உரிமையாளர்கள் ஒரே நேரத்தில்தான் இந்த வரிகளைக் கட்டுகிறார்கள். ஆகவே நடைமுறையில் இதில் ஒரு பெரிய மாற்றம் ஏற்படுவதில்லை. நாம் மோட்டார் வாகனங்கள் என்று பார்க்கிற போது அவற்றிற்கு ஒரே சட்ட முறையை, ஒரே வரி அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் இந்த மசோதாவின் முதல் நோக்கம், முக்கிய நோக்கமும் கூட.

இரண்டாவதாக, போக்குவரத்துத் துறை என்று பார்க்கிற போது போக்குவரத்துத் துறை பொருளாதார வளர்ச்சியில் ஒரு



1974 மார்ச் 22] [திரு. ச. இராமச்சந்திரன்]

முக்கியமான கருவி. உற்பத்தியானாலும் சரி அல்லது விநியோகமானாலும் சரி எந்த அடிப்படையில் பார்த்தாலும் ஒரு முக்கியமான கருவியாகப் போக்குவரத்துத் துறை இயங்கி வருகிறது. இந்திய துணைக் கண்டத்தை எடுத்துப் பார்க்கிற போது சென்னையைச் சுற்றியுள்ள நான்கு மாநிலங்கள் ஒரு பொருளாதார அமைப்பாகவும், அதுபோல் பம்பாயைச் சுற்றியுள்ள மாநிலங்கள் ஒரு பொருளாதார அமைப்பாகவும். டெல்லியைச் சுற்றியுள்ள பஞ்சாப், ஹரியானா போன்ற மாநிலங்கள் ஒரு பொருளாதார அமைப்பாகவும், கல்கத்தாவைச் சுற்றியுள்ள மேற்கு வங்காளம், அஸ்ஸாம், ஒரிஸா போன்ற மாநிலங்கள் ஒரு பொருளாதார அமைப்பாகவும் இயங்கி வருகின்றன.

உற்பத்தி செய்த பொருள்களைக் கொண்டு வரவும், கொண்டு வருகிற பொருள்களை விநியோகம் செய்யவும், தொழில் அபிவிருத்திக்கு உதவவும், வாணிபத்தைப் பரப்பவும் இப்படி பிராந்திய அளவில் பொருளாதார இயக்கங்கள் நடைபெறுகின்றன. இந்தப் பொருளாதார இயக்கங்களை அடிப்படையாக வைத்து அதற்கேற்ற வகையில் சுமுகமாகவும், அதேநேரத்தில் நல்லமுறையில் போக்குவரத்து இயங்க வேண்டும் என்ற அடிப்படையிலும் தென்னகத்தைச் சேர்ந்த தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த போக்குவரத்துத்துறை அமைச்சர்கள் கூட்டம் 1972 டிஸம்பர் மாதம் கோவையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தை தமிழ்நாடு சார்பில்தான் ஏற்பாடு செய்தோம்.

இந்த நான்கு மாநிலங்களும் சென்னையைச் சுற்றி, இன்னும் சொல்லப்போனால் சென்னையை அடிப்படையாக வைத்து பொருளாதார ரீதியில் இயங்கக் கூடிய மாநிலங்களாக இருக்கிற காரணத்தால் இந்த நான்கு மாநிலங்களுக்கு இடையே உள்ள போக்குவரத்து முறைகள், போக்குவரத்துச் சட்டங்கள், சாலை விதிகள் இவைகள் எல்லாம் எவ்வளவுக்கெவ்வளவு ஒன்றாக ஒருங்கே அமைக்கப்பட வேண்டுமோ அந்த அடிப்படையில் அமைக்கப்பட வேண்டும் என்று அந்தப் போக்குவரத்துத் துறை அமைச்சர்கள் மகாநாட்டில் முடிவு எடுக்கப்பட்டது.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1974 மார்ச் 22

இப்போது நாம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இதேபோல் ஏற்கனவே ஆந்திர மாநிலத்தைப் பொறுத்தவரையில் 1963-ம் ஆண்டிலேயே இத்தகைய ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து விட்டார்கள். காம்ப்ரஹென்ஸீவ் லெஜிஸ்லேஷன் மோட்டார் வாகனங்களுக்கு என்று சொல்லும்போது அவைகளுக்கு எவ்வளவு வரி விதிக்க வேண்டும், எந்த அடிப்படையில் விதிக்க வேண்டும்; எந்தச் சட்டம் இயங்க வேண்டும் என்று ஏற்கனவே ஆந்திர மாநிலத்தில் கொண்டு வந்துவிட்டார்கள்.

தமிழ்நாட்டில் நாமும் அத்தகைய ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதற்கு அந்த மாநாட்டில் ஒப்புக் கொண்டிருக்கிறோம். கேரளமும் அதேபோல் கர்நாடகமும் இதே வகையில் ஒரு சட்டத்தைக் கொண்டுவர அவர்களும் முயற்சி செய்து வருகிறார்கள். தென்னக மாநிலங்களைப் பொறுத்தவரையில் இந்தச் சட்டமுன்வடிவை கருத்தில் கொண்டு இந்திய துணைக்கண்டம் முழுவதும் இந்த மோட்டார் வெகிக்கிள்ஸ் டாக்ஸேஷன் ஆக்ட், மோட்டார் வெகிக்கிள்ஸ் (டி.பி.ஜி.) ஆக்ட் இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து, ஒரே சட்டமாக எல்லா மாநிலங்களிலும் கொண்டு வர வேண்டுமென்ற அடிப்படையில் அகில இந்திய ரீதியில் இப்போது போக்குவரத்துத் துறை சம்பந்தப்பட்ட சட்ட நிபுணர்கள் கமிட்டி பரிந்துரை செய்திருக்கிறது.

ஆகவே இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதன் மூலம், மோட்டார் வாகனங்களை எடுத்துக் கொள்கிறபோது பல சட்டங்களைத் தேடிக் கொண்டு அலைவதை விட ஒரே சட்டப் புத்தகத்தில் அவையெல்லாம் அடங்க வேண்டும் என்றிருக்கக்கூடிய நல்ல வாய்ப்பினை இச்சட்டம் தேடித் தருகிறது. இந்தச் சட்டத்தின் சில முக்கியமான கருத்துக்களை நான் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

இன்னொன்றையும் எடுத்துக் கூற விரும்புகிறேன். இங்கு போடப்பட்டிருக்கிற வரிகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அந்தத் தொழிலே நசுங்கிப்போய்விடும், அந்தத் தொழிலே வளராது; அந்தத் தொழிலுக்கு ஒரு பேரிடி என்றனர். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள்.



1974 மார்ச் 22] [திரு. ச. இராமச்சந்திரன்]

இந்த வரி விதிப்பினை திருமதி அனந்தநாயகி அவர்கள் வரவேற்பார்கள் என்று எதிர்பார்த்தேன். ஏனெனில் போக்குவரத்துத் துறை மானியத்தின்மீது பேசுகிறபோது நாலாயிரம் பஸ்களை நடத்தினால் இருபது அல்லது முப்பது கோடி ரூபாய் லாபம் வர வேண்டுமே, தனியாரிடத்தில் விட்டுப் பாருங்கள் கட்டாயம் அவ்வளவு லாபம் வரும் என்று சொன்னார்கள். ஐயாயிரம் பஸ்களை தனியார் நடத்துகிறார்கள் ஆகையால் எவ்வளவு கோடி ரூபாய் லாபம் வரும் என்று பார்த்து அதற்குப் பிறகு இத்தகைய ஒரு வரி விதிப்பு வந்திருக்கிறபோது உண்மையிலே இந்தச் சட்டத்தை அவர்கள் நிச்சயமாக வரவேற்பார்கள் என்று நம்பினேன். ஆனால் அந்த நம்பிக்கை பலன் அளிக்கவில்லை.

இன்னொரு கருத்தையும் சொன்னார்கள். அவர்களே ஒப்புக் கொண்டதற்காக அவர்களுக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். தனிப்பட்டவர்கள் இந்த பஸ்களை நடத்துவதில் கஷ்டங்கள் அடைகிறார்கள். ஆனால் போக்குவரத்துக் கழகங்கள் அனுப்பாமல் மாநில அரசே பெற்றுக்கொள்வதற்காக இந்த வரிகள் உயர்த்தப்பட்டிருக்கின்றன என்ற கருத்தைச் சொன்னார்கள்.

(மாலை 6.30)

முதலாவதாக போக்குவரத்துக் கழகங்கள் தனியார் துறையை விட நன்றாக நடக்கின்றன என்பதை இந்தச் சட்டத்தின் மூலமாக அவர்கள் ஒப்புக் கொண்டிருப்பதற்கு நான் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மத்திய சர்க்காருக்கு நாம் வருமான வரி கட்டவேண்டுமென்றால் கட்டிவிடலாம். கார்ப்பரேட் டாக்ஸ் கூட கட்டிவிடலாம். அதனால் கட்டிய வரி போய்விடாது. மத்திய சர்க்கார் அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு இருப்பதா என்று பார்த்தால், நிச்சயமாக அந்தப் பணத்தை அவர்களுக்கு அனுப்புவது பொருத்தமாக இருக்காது என்ற கருத்தை நான் சொல்கிறேன்.

இந்த முதலுக்கு இவ்வளவு தான் லாபம் வருமா என்று கேட்டார்கள். நான் இரண்டு தினங்களுக்கு முன்னால் மத்திய சர்க்கார் 5,888 கோடிக்கு தொழில் நடத்துகிறார்கள். பப்ளிக்

செக்டார் அன்டர்டேகிங்ஸ். நல்லவேளை இரண்டு தினங்களுக்கு முன்னால் 'எகனமிக் டைம்ஸ்' என்ற பத்திரிகையில் மத்திய சர்க்கார் எப்படியெல்லாம் தொழில் நடத்துகிறது என்பதைப் பற்றி விளக்கமாகக் கொடுத்திருப்பதைப் பார்த்தேன். அதிலே அவர்களுக்கு 1972-73-ல் எத்தனை சதவிகிதம் லாபம் கிடைத்து இருக்கிறது என்று பார்த்தால் 2.7 சதவிகிதம் தான் வந்திருக் கிறது. 100-க்கு 2.7 சதவிகிதம் எங்கேயாவது வட்டிக்கு விட்டிருந்தாலும் 10 சதவிகிதம் நிச்சயமாக வந்திருக்கும்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, are we to commit the very same mistake that has been committed by the Central Government or are we to mend our affairs?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** ஆக, 5,888.5 கோடி ரூபாய்க்கு 24.17 கோடி தான் நெட் பிராபிட், அதிலிருந்து அவர் களுக்கு ரிடர்ன் கிடைத்து இருக்கிறது என்று ரெவ்யூ இருக்கிறது. ஆனால் நான் சேரன் போக்குவரத்துக் கழகத்தைப் பற்றிச் சொல்கிறபோது, 45 லட்ச ரூபாய் முதல் போட்டு, அதே ஆண்டில் 45 லட்சம் கிடைத்திருக்கிறது என்று சொன்னேன். நமக்கு 100-க்கு 100 லாபம் கிடைத்து இருக்கிறது. மத்திய சர்க்காருக்கு 2.7 சதவிகிதம் தான் கிடைத்து இருக்கிறது. ஆகவே, வரிப் பணம் போக வேண்டிய இடம், மத்திய சர்க்காருக்கா, மாநில சர்க்காருக்கா என்பதை இந்த மன்றம் தீர்மானிக்க வேண்டிய விஷயம் என்பதற்காகச் சொல்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** அமைச்சர் அவர்கள் ஒட்டு மொத்தமாக சென்ட்ரல் கவர்ன்மென்ட் நிர்வாகத்தில் இருப்பதைப் பற்றிச் சொன்னார்கள். மாநில சர்க்காரின் தொழில்களில் மொத்த முதலீடு என்ன. அதிலிருந்து வருவாய் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, நான் அதைத்தான் அந்தத் துறையைப் பற்றித்தான் சொன்னேன். அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களைப் பற்றியும் சொன்னேன். ஆனால், நிச்சயமாகச் சொல்கிறேன், இவ்வளவு மோசமாக இருக்காது. அதிலே மாண்புமிகு உறுப்பினர்கள் மாட்டிக்கொள்ள வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.


தமிழ் நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/74)


இருந்தாலும் இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் வரி விதிப்பு என்கிற அமைப்பு பஸ்களுக்கே தவிர லாரிகளுக்கு அல்ல. லாரிகளுக்கும் மற்ற வாகனங்களுக்கும் 'கூட்ஸ் டிரேட் ரேட்' அதனால் பொருள்களின் விலை அதிகமாக ஆகிவிடும் என்று சொன்னார்கள்.

வரிவிதிப்பைப் பொறுத்தவரையில் 'கூட்ஸ்' வாகனங்களைப் பொறுத்தவரையில் ஏற்கனவே 19 கிளாசிபிகேஷன்கள் இருந்தன. அந்த 19 கிளாசிபிகேஷன்களை ஏற்கனவே இருக்கின்ற வண்டி களின் எடைக்கு ஏற்ப அமையவில்லை என்ற காரணத்தாலே, அந்த 19-ஐ 7-ஆக மாற்றி இருக்கிறோம். அப்போதே நாம் லாரி களுக்கு வரிபோட்டு விட்டோம் என்று சொல்வது சரியாக அமையாது. 1,800 ரூபாய்க்கு அதிகமாக வரி விதித்ததாக மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னார்கள். ஏற்கனவே முன்பு 15 டன்னுக்கு மேலாக இருக்குமானால், Rs. 1,050 plus Rs. 25 for every 250 kgs. or part thereof. என்று இருக்கிறது- ஆகையால் சாமான்களைப் பொறுத்தவரையில் எந்த விதமான வரி உயர்வும் இல்லை. ஆகவே, விலைவாசி உயர்வு என்கிற நிலை நிச்சயமாக இதிலே அமையவில்லை.

அடுத்தபடியாக, பஸ்களைப் பற்றிச் சொன்னார்கள். பேருந்து களைப் பற்றி நான் ஏற்கனவே சொன்னதைப்போல் வரி விதிக்கும் கட்டணத்தைப் பொறுத்தவரையில், தென் மாநிலங்களைப் பொறுத்தவரையில் நாம் ஒரு நிலைக்குக் கொண்டு வரவேண்டு மென்று தென் மாநிலங்கள் போக்குவரத்துத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் எடுத்த அந்த முடிவிற்கு ஏற்ப எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்குச் செயல்படுத்துகிறோம். ஆந்திராவில் ஒரு சீட்டிற்கு ரூ. 110 என்று இருக்கிறது.

ஆனால், கட்டணம் 4 பைசா ஒரு கிலோ மீட்டருக்கு என்று அனுமதித்து இருக்கிறார்கள். கருநாடகத்தில் ஒரு சீட்டிற்கு 67½ ரூ. வரி விதித்து இருக்கிறார்கள். ஆனால் தாராளமாக 5 பைசா டிசம்பர் 1971-ல் இருந்து அனுமதித்து இருக்கிறார்கள். கேரளத்தில் 75 ரூ. ஒரு சீட்டிற்கு. அவர்கள் அனுமதித்து இருப்பது 3.3 பைசா. ஆனால் அண்மையில் கேரளத்தைச் சேர்ந்த போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் வந்தார்கள். அவர்களோடு நான்

பேசிக்கொண்டிருந்தபோது, அவர்களும் ஒரு கணிசமான அளவுக்கு உயர்த்தப் போவதாகத் தகவல் தந்தார்கள். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் நாம் இன்றையதினம் போட் இருக்கும் வரி 132 ரூ. ஆனால் கட்டணம் 3 பைசா என்கிற அளவிலே தான் இருக்கிறது. பஸ்களைப் பொறுத்தவரையில், தென் மாநிலங்களைப் பொறுத்தவரையிலும் வரி விதிக்கும் முறை ஒழுங்குபடுத்தப்பட்டு, கட்டண விகிதமும் ஒருமுகப்படுத்தப் பட்டு இருக்கவேண்டுமென்ற கொள்கை நிலை இருக்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே தெரிவித்ததைப் போல இந்தக் கட்டணங்களை ஓரளவு உயர்த்துவதன் மூலமாகத் தான் இந்த நிலை சரிகட்ட முடியும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகையால் இந்தச் சட்டத்தில் கூடுதலான வரி விதிப்பு இருக்கிறது என்று நாம் கருதத் தேவையில்லை. ஓரளவிற்குச் சீரமைப்புதான் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால், இந்தச் சட்டத்தை வரவேற்பதில் யாருக்கும் எந்தக் கருத்து வேற்றுமையும் இருக்க நியாயம் இல்லை என்று நான் எடுத்துத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்தச் சட்டத்தில் கிளாஸ் 3 பற்றிச் சொன்னார்கள். இதிலே ஒரு வரி விகிதத்தைப் போட்டு விட்டு 50 சதவிகிதம் வரை அரசாங்கம் உத்தரவு மூலம் வரியை உயர்த்த ஆர்பிட்ரரியாக பவர் எடுத்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். வரி விகிதத்தைப் பொறுத்தவரையில் நான் தெரிவிக்க விரும்புவது எவ்வளவு வரி விதிக்கப் போகிறோம் என்ற வரையறையை நாம் சட்டமன்றத்திற்குத் தெரிவித்து இருக்கிறோம். ஏற்கனவே உள்ள ஷெட்யூலில் என்ன வரி விதிப்பு என்று தெரிவித்து இருக்கிறோமோ அதற்கு மேலே எவ்வளவு மேக்சிமம் 50 சதவிகிதம் விதிக்கலாம் என்ற கருத்தையும் இந்த சட்டமன்றத்திற்கு இந்தச் சட்டத்திலே தெளிவாக ஆக்கி யிருக்கிறோம். It is new made definite. ஆகவே, சட்டமன்றத்திற்குத் தெரியாமல், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்த வாய்ப்பு அளிக்காமல் அந்த அதிகாரத்தை [illegible] ஏதோ கையகப்



படுத்திக்கொள்வதாகக் கருதுவது நிச்சயமாகச் சரியல்ல என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு லத்தீப் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். நாம் வரி போடுவது வாகனத்திற்கா அல்லது வாகன உரிமையாளருக்கா என்ற சட்ட நுணுக்கத்தைச் சொன்னார்கள். ஒருவேளை அந்தச் சட்ட நுணுக்கம் நீதி மன்றங்களுக்கு வேண்டுமானால் பயன்படுமோ என்னவோ எனக்குத் தெரியாது. ஏனெனில் நான் சட்ட நிபுணன் அல்ல. என்னைப் பொறுத்த வரையில் வரி போடுவது வாகனத்திற்குத்தான் என்றாலும் கட்ட வேண்டியவர் வாகன உரிமையாளர் தான் என்பதை என்னுடைய பதிலாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** வரி போடுவது வாகனத்திற்கு என்றாலும், வாகனமே வந்து வரி கட்டாது என்பதை எல்லோரும் அறிவார்கள். வாகன உரிமையாளர் தான் அதைக் கட்டவேண்டும். இங்கே இருக்கும் பிரச்னை ஒரு வாகனம் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு கை மாறுமானால், கை மாறிய வாகனத்திற்குக் கட்டவேண்டிய வரியை வாங்கியவர் கட்ட வேண்டுமென்று சில விதி இருக்கிறது. அது சட்டப்படி சில சிக்கல்களை உண்டாக்கும்.

'லெவி ஆப் டாக்ஸ்' கிளாஸ் 3 (2)-ஐ பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே சட்டமன்றத்திற்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதிலே எந்தவிதமான சிக்கலும் இல்லை நாம் சட்டமன்றத்தில் தெரிவித்து இருப்பது, அது தனிப்பட்ட அறிக்கையாக இருக்க வேண்டும். எதிர்காலத்தில் அது எங்களுக்குத் தெரியாது என்று சொல்லவில்லை. அது ஒரு விவாதத்திற்கு அல்லது நீதிமன்றத்திற்குச் செல்லுமானால் இந்தச் சட்டத்தின் வரையறை வைத்து அவர்கள் முடிவு செய்வார்களே தவிர இந்தச் சட்டமன்றத்தில் என்னென்ன கொடுக்கப்பட்டது என்று அவர்கள் ஆராய்ந்து பார்க்க மாட்டார்கள். நடைமுறையில் பல சிக்கல்களை உண்டாக்கும்.

ஆகவே தான் சில சட்டக் குறைகள் இருக்கின்றன. அந்தக் குறைகளை நிவர்த்தி செய்து இந்தச் சட்டத்தை இந்த மன்றம் எடுத்துக் கொண்டால் நல்லதாக இருக்கும், இந்த மன்றத்திற்கு

கௌரவத்தையும் அளிக்கும் என்பதால் தான் இதைச் செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று சொன்னேன். அதற்குப் பிறகு இதை நிறைவேற்றினுல் அதை நாம் வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறோம். வரிபோடுவதை நான் எதிர்க்கவில்லை. ஆனல் போடுகிற முறையில் போடவேண்டுமென்று தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எழுப்பப்பட்ட பிரச்னையைப் பற்றி மட்டும் தான் பேசவேண்டும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, I want a clarification. Clause 7 of the Bill would create a confusion. Whom you are going to tax, the owner or the person who is in possession of the vehicle? The owner has to pay the tax. But it is stated in the Bill that if the ownership of the motor vehicle has been transferred, the person to whom the ownership of the vehicle has been transferred or the person who is in possession or control of such vehicle, shall be liable to pay the tax. This will create a lot of confusion. The Hon. Minister should clarify the position. From whom is the tax to be collected, has to be made clear.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** That is all the more reasons for clause 7.

க்ளாஸ் 7 பொறுத்தவரையில், சில பேர் வரி கட்டுவதில்லை. வண்டியின் சொந்தக்காரர்கள் வரியை வசூலிக்கப்போகும்பொழுது வண்டியை ஏற்கனவே விற்றுவிட்டதாகச் சொல்லி விடுகிறார்கள். ஆகையினுல் அப்படிப்பட்ட வண்டிகளை யாராவது வாங்கினுல் அவர்கள் அந்த வரியைக் கட்டவேண்டும் என்று வரி விதிப்பு கொள்கையின்படி ஒழுங்காக எல்லோரும் வரி செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில் இந்தப் பிரிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது. எல்லோரும் ஒழுங்காக வரி செலுத்திவிட்டால் நிச்சயம் எந்த விதமான கஷ்டமும் யாருக்கும் ஏற்படாது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் . . .

**திரு. எம். ஏ. லத்தீப்:** இதற்கு டிரான்ஸ்பர் ஆப் ப்ராபர்டி ஆக்டில் ப்ரொவிஷன் இருக்கிறது. மூவபிள் பிராபர்டி, இம்மூவபிள் பிராபர்டியை டிரான்ஸ்பர் செய்யும்பொழுது எந்த முறையில் செய்யப்பட வேண்டும் என்பதற்கு ப்ரொவிஷன் இருக்கிறது. நீங்கள் வேண்டுமானுல் ஒரு புதிய சட்டம் கொண்டு வாருங்கள்.



பஸ் மூவபிள் ப்ராபர்டி ஆக இருக்கிறது. அதன் விலை ரூ. 50,000 ஆகவே அந்த பிராபர்டி டிரான்ஸ்பர் ஆப் ரிஜிஸ்டர் மூலம் தான் செய்யப்பட வேண்டும், அப்படி ரிஜிஸ்டர் செய்யும்பொழுது டாக்ஸ் பே பண்ணவேண்டும் என்று அம்மாதிரியாக ஒரு சட்டம் கொண்டு வந்தால் அந்தச் சட்டம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்கும், மிக உறுதியாக இருக்கும். இம்மாதிரியாக ஒரு நிறைவேற்ற முடியாத சட்டத்தை ஏன் கொண்டுவர வேண்டும்? நடைமுறையில் சிக்கல்கள் ஏற்படக்கூடிய ஒரு சட்டத்தை ஏன் கொண்டுவரவேண்டும். நீங்கள் போடுகிற வரியைப் பற்றி நான் குறை கூறவில்லை.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, ஒவ்வொன்றுக்கும் ஒரு சட்டமாகக் கொண்டு வாராமல் ஒரே சட்டமாக இருக்கட்டும் என்று தான் இப்பொழுது இதைக் கொண்டுவந்திருக்கிறோம். ஆகையினுல் அந்தக் கருத்தின் அடிப்படையில் கிளாஸ் 7 கொண்டு வரப்பட்டிருக்கிறது.

கிளாஸ் 10-ஐப் பொறுத்தவரையில் ஃப்ளீட் ஆபரேடர் என்கின்ற அந்தப் பாகுபாடு இருக்கும் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் முன்பே குறிப்பிட்டார்கள். கிளாஸ் 10-ஐப் பொறுத்த வரையில் அதை நீக்குவது என்று அரசாங்கம் ஏற்கனவே திருத்தம் கொடுத்திருக்கிறது.

அதோடுமட்டுமல்லாமல் இந்தச் சட்டத்திலே மிக முக்கியமானது ஒன்று. இதுவரையில் பேருந்துகள் எவ்வளவு தூரம் ஓடுகின்றன என்பதைப் பார்த்து வரி விதித்துக் கொண்டிருந்தார்கள். ஆனல் இப்பொழுது நிறைய அளவுக்குப் பேருந்துகள் பயன்பட வேண்டும் என்ற அடிப்படையில் தூரத்தைப் பொறுத்து போட்டப்பட்ட வரி ரத்து செய்யப்பட்டிருக்கிறது. சில பேருந்துகள் நகரங்களில் ஓடுவதற்கும், கிராமங்களில் ஓடுவதற்கும், நீண்ட தொலைவு பேருந்துகள் ஓடுவதற்கும் ஆகின்ற வசூல் நிச்சயம் வித்தியாசப் படுகிறது. அதைக் கருத்தில் கொண்டு எந்த அளவுக்கு ஒரு பேருந்து வருமானத்தைக் கொடுக்கிறதோ அந்த வகையில் இந்தச் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது—இதைப்போல பல நல்ல அம்சங்களையெல்லாம் நடைமுறைப்படுத்துகிற வகையில் வர இருக்கிற சிறந்த நல்ல அமைப்பாக இந்தச் சட்டமானது

[திரு. ச. இராமச்சந்திரன்] [1974 மார்ச்

காரணத்தினால் இதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரு மனமுவந்து ஏற்று நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டு கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/74) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 9 வரை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**பிரிவு 10**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பிரிவு 10-ஐ நீக்க வேண்டு மென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள்.

பேரவையின் 76 (2) விதியின்படி ஒரு பிரிவை நீக்குவதற்கான திருத்தம் கொடுக்க முடியாது. அந்தப் பிரிவை எதிர்த்து வாக்களிப்பதன் மூலம் தான் நீக்க முடியும். எனவே, அதன்படி செய்யலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 10 இந்த சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு தோல்வி யுற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மற்ற பிரிவுகளின் எண்களை மாற்றக் கோரி கொடுத்துள்ள திருத்தத்தை முன்மொழியலாம்.



1974 மார்ச் 22]

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, since clause 10 has been rejected by the House, I move—

'That clauses 11 to 27 be re-numbered as clauses 10 to 26 respectively'.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, பிரிவுகள் 11 முதல் 27 வரை பிரிவுகள் 10 முதல் 26 என்று திருத்தப்பட்டன.

பிரிவுகள் 10 முதல் 22 வரையில் (திருத்தப்பட்ட எண்கள்படி) பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**பிரிவு 23 (திருத்தப்பட்ட எண்)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 23 (திருத்தப்பட்ட எண்) இந்த சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட்வேண்டும்."

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, I move—

'In clause 23 (re-numbered), in sub-clause (1)—

(a) in item (i), for '15', read '14';

(b) in item (iii), for '16', read '15';

(c) in item (b), for '16', read '15'.

மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 23 (திருத்தப்பட்ட எண்) திருத்தப்பட்டபடி பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

**பிரிவு 24 (திருத்தப்பட்ட எண்)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 24 (திருத்தப்பட்ட எண்) இந்தச் சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, I move—

'In clause 24 (re-numbered), in sub-clause (2), in item (d), for '16', read '15',

மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 24 (திருத்தப்பட்ட எண்) திருத்தப்பட்டபடி பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

**திரு. செ. கந்தப்பன் :** இந்தச் சட்டத்தைப் பொறுத்து அல்ல. எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கூட இங்கே பேசுகிறபொழுது இது ஒரு முக்கியமான சட்டம், இதைப் பொறுக்குக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். இது ஒரு முக்கியமான சட்டம். மிக முக்கியமான கட்சிகள் என்று கருதப் படுகின்ற மூன்று எதிர்க்கட்சியினரைக் காணோமே இங்கே, ஏன் என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஒருவேளை அவர்கள் இதைப் புறக்கணிக்கிறார்களோ என்னவோ என்பதற்காகக் கேட்கிறேன்.

பிரிவுகள் 25, 26 (திருத்தப்பட்ட எண்) பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

அட்டவணை, பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே,

'தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/74), திருத்தப்பட்டபடி நிறைவேற்றப்பட வேண்டும்' என்று முன்மொழிகிறேன்.

THIRU M. A. LATHEEF : I oppose this entire Bill. The Bill as has been drafted is opposed by us.

THIRU R. PONNAPPA NADAR : I oppose this Bill, Sir.

அரசினர் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு, திருத்தப்பட்டபடி, சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவில் முடிவுற்று நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.



பின்னர் பேரவை மாலை 6.48 மணியளவில் ஒத்திவைக்கப் பட்டது.

## 6. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders*

195. Notification issued with G.O. Ms. No. 2100, Agriculture, dated the 8th October 1973 in regard to declaration of notified market area for Uthiramerur market in respect of groundnut. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

196. Notification issued with G.O. Ms. No. 2101, Agriculture, dated the 8th October 1973 in regard to declaration of notified market area for Madhurantakam market in respect of groundnut. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

197. Statement of guarantees given by the Government of Tamil Nadu to the Tamil Nadu Slum Clearance Board. [Laid on the table of the House under section 92 of the Tamil Nadu State Housing Board Act, 1961 (Tamil Nadu Act 17 of 1961) read with section 41 of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971 (Tamil Nadu Act 3 of 1971).]

198. Notification issued with G.O. Ms. No. 2720, Public (Services-A), dated the 15th October 1973 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for inclusion of the post of Librarian, Government College of Indian System of Medicine, Palayamkottai in Tamil Nadu Medical Subordinate Service within the Commission's purview. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India).]

### B. *Reports, Notifications and Other Papers*

96. Notification issued with G.O. Ms. No. 6382, Revenue, dated the 16th October 1973 in regard to exemption from stamp

duty and registration fees in respect of mortgage deeds to be executed by the repatriates from Ceylon in favour of the Government while obtaining agricultural loans.

@ 97. Speech by Hon. Mannai Thiru P. Narayanasamy, Minister for Food and Co-operation on the Food Demand (English and Tamil).

@ 98. Policy Note on Demand No. 21—Fisheries 1971-75 (Tamil).

@ 99. Performance Budget on 'Fisheries' 1974-75.

@ 100. Performance Budget on Harijan Welfare, 1974-75.

## இணைப்பு I.

(583-ம் பக்கத்தில் 566 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.)

உள்ளாட்சி நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டுள்ள அலுவலரல்லாதோர் அறுவருடன், ஓர் அலுவலரையும் கொண்ட ஆய்வுக் குழு ஒன்றினை, இம்மாநிலத்திற்கு திரிபுரா அரசின் ஊராட்சிகள் இயக்குநர் அனுப்பினார். அக் குழு 17—11—1973 முதல் 26—11—1973 வரை, தமிழ்நாட்டில் சுற்றுப்பயணம் செய்தது.

2. ஆய்வுக் குழுவினர் ஊர்வளர்ச்சி இயக்குநர், மற்றும் அவருடைய அலுவலருடன், தமிழ்நாட்டிலுள்ள ஊராட்சிகள் அமைப்பு பற்றி, 17—11—1973 அன்று, கலந்துரையாடினர்.

3. பின்னர் 18—11—1973 தொடக்கம் 25—11—1973 வரை, செங்கற்பட்டு, தஞ்சாவூர், இராமநாதபுரம், மதுரை, கன்னியாகுமரி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் சுற்றுப்பயணம்

* Cut Motion circulated separately.

@ Despatched to Members on 20th March 1974.



செய்து, ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர்கள், மாவட்ட வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் பல்வேறு மாவட்ட வளர்ச்சி அலுவலர்கள் ஆகியோருடன் ஆங்காங்கே கலந்துரையாடினர். தமிழ்நாட்டில் ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் அமைப்பு முறை, சட்டப்பூர்வமாக ஒப்படைக்கப்பட்ட பணிகள் போன்றவையும், குழுவிற்கு விரிவாக விளக்கப்பட்டன. சத்துணவுத் திட்டம், தீவிரப்பகுதி வேளாண்மைத் திட்டம், கூட்டுறவு, கிராம வேலைவாய்ப்பு விரைவுத் திட்டம் போன்றவை விளக்கப்பட்டதுடன், இவற்றில் சில திட்டங்கள் நிறைவேற்றப்படும் இடங்களுக்கும் சென்று நேரில் பார்வையிட்டனர்.

4. 26—11—1973 அன்று, இவ் வாய்வுக்குழு, கல்கத்தா வழியாக, திரிபுராவிற்குப் புறப்பட்டது.

5. தமிழ்நாடு அரசின் அலுவலர்கள், அலுவலர்களல்லாதோர், இக்குழுவிற்கு நல்கிய ஒத்துழைப்பிற்காக திரிபுரா அரசின் சார்பாக, அகர்தலாவிலுள்ள ஊராட்சிகள் இயக்குநரிடமிருந்து நன்றி தெரிவித்து, தமிழ்நாடு அரசுக்கு, 5—12—1973 நாளிட்ட தந்தியொன்று கிடைக்கப் பெற்றது.

The Director of Panchayats of the Government of **Tripura** sent a study-team of non-officials, associated with Panchayat Raj institutions, consisting of six non-officials and one conducting officer. The study-team visited Tamil Nadu, from 17th November 1973 to 26th November 1973.

2. On 17th November 1973, the members of the study-team met the Director of Rural Development and his officers and had discussion about the Panchayat Raj set-up in Tamil Nadu.

3. From 18th November 1973 to 25th November 1973, the team visited Chingleput, Thanjavur, Ramanathapuram, Madurai, Kanyakumari and Tirunelveli districts and had discussions with Presidents of Panchayats' Chairmen of Panchayat Union, District Development Officers and other various district level officers. The constitution of Panchayats, and Panchayat Unions, the responsibilities entrusted with Panchayat Unions on statutory basis and allied matters, were explained in detail to the members of the

study-team. They also had discussion on Applied Nutrition Programme, Intensive Agriculture Area Programme, Co-operation, Crash Scheme on Rural Employment, etc. Besides, the study team also visited the places, where the above schemes were implemented.

4. On 26th November 1973, the team left for Agartala, via Calcutta.

5. A telegram, dated 5th December 1973, was received from the Director of Panchayats, Agartala, Government of Tripura, expressing gratitude to the Government of Tamil Nadu and officials and non-officials, for having rendered co-operation and help.



## இணைப்பு II.

(585-ம் பக்கத்தில் 569 ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.)

(அ) போக்குவரத்து வளர்ச்சிக் குழுவின் பத்தாவது கூட்டம் 1973 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 15, 16 ஆகிய நாட்களில் புது டில்லியில் நடத்தப்பட்டது. மாநில அரசின் போக்குவரத்து அமைச்சரும் நான்கு அதிகாரிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

(இ) இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட பொருள்களும் எடுக்கப்பட்ட முடிவுகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| பொருட்கள். | எடுக்கப்பட்ட முடிவுகள். |
|---|---|
| (1) | (2) |
| 1. மோட்டார் வண்டிகளின் எண் தகடுகளில் பதிவுக் குறிகளைக் காட்டி வைத்தல், கிலோ மீட்டர் கற்கள் முதலியவற்றில் எண்களைப் பொறித்து வைத்தல் முதலியன. | மோட்டார் வண்டிகளின் பதிவுக் குறிகள் ஆங்கிலத்திலும் வட்டார மொழியிலும் இருக்க வேண்டுமென்று இந்திய அரசால் அமைக்கப்பட்ட செயற்குழு தெரிவித்திருந்த பரிவுரை ஏற்றுக் கொள்ளப்பட்டது. |
| சாலைப் போக்குவரத்தை நாட்டுடைமையாக்குவதற்கான நடைமுறைகளை எளிதாக்குவதற்காக 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தைத் திருத்துதல். | நாட்டுடைமையாக்கும் பணியை விரைவுபடுத்துவதற்கான சட்டம் குறித்து ஆராய்வதற்காகக் குழுவொன்றை அமைக்க வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டது. |
| சாலைப் பாதுகாப்பு குறித்த ஆய்வுக்குழுவின் அறிக்கையை பரிசீலனை செய்தல். | மாநில அரசுகள் தெரிவித்துள்ள கருத்துக்களின் அடிப்படையில் சாலைப் பாதுகாப்புக் குறித்த ஆய்வுக்குழுவின் பரிவுரைகளை இந்திய அரசு மேலும் பரிசீலனை செய்ய வேண்டுமென்றும், இப்பொருள் போக்குவரத்து வளர்ச்சிக் குழுவின் அடுத்த கூட்டத்தில் வைக்கப்பட வேண்டுமென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. |

| பொருட்கள். (1) | எடுக்கப்பட்ட முடிவுகள். (2) |
|---|---|
| 4. பயணவழி வசதிகள் குறித்த ஆய்வுக்குழுவின் அறிக்கையைப் பரிசீலனை செய்தல். | மாநில அரசுகள் தெரிவித்துள்ள கருத்துக்களின் அடிப்படையில் பயண வழி வசதிகள் குறித்த ஆய்வுக்குழுவின் பரிவுரைகள் இந்திய அரசு மேலும் பரிசீலனை செய்ய வேண்டுமென்றும், இப்பொருள் போக்குவரத்து வளர்ச்சிக் குழுவின் அடுத்த கூட்டத்தில் வைக்கப்பட வேண்டுமென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. |
| 5. சாலைப் போக்குவரத்து அதிகார அமைப்புகளில் இரயில்வே துறையினருக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில் 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் 44 (2) பிரிவைத் திருத்துதல். | (1) இரயில்சாலை ஒருங்கிணைப்பிற்கு மேலும் வாய்ப்புள்ள அவசியமுள்ள வட்டாரங்களைப் பொறுத்த அளவில், இரயில்வே துறை பிரதிநிதிகளை சாலைப் போக்குவரத்து அதிகார அமைப்புகளில் சேர்த்துக்கொள்ள மாநில அரசுகளுக்கு அதிகாரங்கள் வழங்கும் வகையில் மோட்டார் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்றும், <br> (2) மத்திய போக்குவரத்து வளர்ச்சிக் குழுவின் அடிப்படையில் மாநில அளவிலும் போக்குவரத்து வளர்ச்சிக்குழு அமைக்கப்படவேண்டும் என்றும், போக்கு எல்லா வகைப்பட்ட போக்குவரத்துக்களையும் ஒருங்கிணைப்பது குறித்தும் மாநில அளவிலான குழுக்கள் சிறப்பாகக் கருதிப் பார்க்கவேண்டும் என்றும், <br> (3) சாலைப் போக்குவரத்துக் கழக வாரியங்களில் உள்ள இரயில்வே பிரதிநிதிகள், |



| பொருட்கள். (1) | எடுக்கப்பட்ட முடிவுகள். (2) |
|---|---|
| | இரயில்சாலை ஒருங்கிணைப்புப் பணியை அடிப்படை நோக்கமாகக் கொண்டு வாரியம் நடத்தும் கூட்டங்களில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும் என இரயில்வே அமைச்சகம் வற்புறுத்தப்பட வேண்டும் என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. |
| இரயில்—சாலை ஒருங்கிணைப்பு. | தற்போது, போக்குவரத்து வாய்ப்புகள் அதிகமாயிருந்தும் இரயில் வசதி இல்லாத வட்டாரங்களில் அந்தந்த மாநில அரசுகள் மூலம் கிடைக்கக் கூடிய சாலைப்போக்குவரத்து வண்டிகளைக் கொண்டு வட்டாரப் போக்குவரத்து வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை அம்மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டுமென்றும் ஒப்புக்கொள்ளப் பட்டது. |
| (ஆக்ட்ராய்) சுங்க வரி ஒழிப்பு. | "ஆக்ட்ராய்" சுங்க வரி ஒழிப்பு குறித்து முன்னதாக எடுக்கப் பட்ட முடிவு மீண்டும் வலியுறுத்திக் கூறப்பட்டது. (தமிழ் நாட்டில் "ஆக்ட்ராய்" வரி விதிக்கப்படுவதில்லை.) |
| சாலைப் போக்குவரத்துத் தொழிலுக்கு நிதியுதவி அளித்தல். | 1971 ஆகஸ்டில் நடைபெற்ற ஒன்பதாவது கூட்டத்தில் குழு தாம் செய்திருந்த கீழ்க்கண்ட பரிவுரைகளையே மீண்டும் வலியுறுத்திக் கூறியது:— <br> (i) அரசுப் போக்குவரத்து நிறுவனங்கள் வெளிச் சந்தைகளில் கடன் வாங்கத் தொடங்க வேண்டும்; |

| பொருட்கள் (1) | எடுக்கப்பட்ட முடிவுகள் (2) |
|---|---|
| | (ii) அரசுப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு வருமான வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து போக்குவரத்து அமைச்சகம் தொடர்ந்து கவனிக்க வேண்டும்; |
| | (iii) தேசிய மோட்டார் போக்குவரத்து நிதிக் கழகமொன்று அமைக்கப்பட வேண்டும். |
| | (iv) தற்போது துறை மூலமாக இயங்கி வரும் அரசுப் போக்குவரத்து நிறுவனங்கள், சாலைப் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் சாலைப் போக்குவரத்துக் கழகங்களாக மாற்றப்பட வேண்டும்; |
| | (v) சம்பந்தப்பட்ட மாநில அரசு தமது மூலதனப் பங்கை தம்முடைய மாநில அரசுப் போக்குவரத்துக் கழகத்துக்குச் செலுத்த வேண்டும்; |
| | (vi) இரயில்வே அமைச்சகம் ஒவ்வொரு மாநில அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் மொத்தப் பங்கிலும் தம்முடைய பங்கை 33 சதவீதம் என்னும் அளவுக்கு உயர்த்த வேண்டும். |
| | (vii) போக்குவரத்துக் கழகத்தின் மூலதன ஏற்பாட்டில் ஆயுள் ஈட்டுறுதிக் கழகமும் தொழில் கடன் முதலீட்டுக் கழகமும் பங்கேற்குமாறு நயந்து கேட்க வேண்டும்; |
| | (viii) கடன்கள் பெற, இந்திய ரிசர்வ் வங்கியையும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளையும் அணுக வேண்டும். |



| பொருட்கள் (1) | எடுக்கப்பட்ட முடிவுகள் (2) |
|---|---|
| | (ix) வணிக வங்கிகளும் நிதியுதவி அளிக்கும் பிற நிறுவனங்களும் கடன் வழங்குவது குறித்த நடைமுறை எளிதாக்கப்பட வேண்டும். |
| 9. மாநிலங்களிடையே சென்று வரும் உல்லாசப் பயண வண்டிகள் மீது ஒரு முனை வரி விதித்தல், உல்லாசப் பயண வண்டிகளுக்கு உரிமம் வழங்குவதைத் தாராளமாக்குதல், உல்லாசப் பயண வண்டிகளுக்கு சுங்க வரி விதித்தல். | (i) உல்லாசப் பயண வண்டிகளுக்கு அனைத்திந்திய உரிமங்கள் வழங்குவதில் அரசுப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்; |
| | (ii) உல்லாசப் பயண வண்டிகள் சாலை வரி, பயணிகள் வரி ஆகியவற்றைச் செலுத்துவதிலிருந்து விதி விலக்களிக்கப்படுவது குறித்த அறிவிப்பு விரைவில் வெளியிடப்படலாம்; |
| | (iii) மாநிலங்களுக்கிடையிலான வழித்தடங்களில் தற்போது சென்று வரும் உல்லாசப் பயண டாக்சிகளின் எண்ணிக்கை உயர்த்தப்பட வேண்டும்; |
| | (iv) உல்லாசப் பயண வண்டி உரிமம் வழங்குவதில் மேலும் தாராளமான கொள்கையைப் பின்பற்ற வேண்டும். |
| | (v) தனியார் சுற்றுலா வண்டி இயக்குபவர்கள் அறிவிக்கப்பட்ட வழி தடத்தில் தங்களுடைய வண்டியை ஓட்ட அனுமதிக்கப்பட வேண்டும். |

| பொருட்கள். (1) | எடுக்கப்பட்ட முடிவுகள். (2) |
|---|---|
| 10. மாநில சாலைப் போக்குவரத்து நிறுவனங்களுக்குத் தேவைப்படும் டயர்கள், டியூப்கள், பேருந்து அடிச் சட்டங்கள். | ஒவ்வொரு மாநிலத்திற்கும் யூனியன் ஆட்சிப் பகுதிக்கும் தேவைப் படும் டயர்கள், டியூப்கள், இன்றி யமையாத மிகவும் அரிதான உதிரி பாகங்கள் ஆகியவற்றின் தனிப் பங்கு அளவுகள் நிர்ணயம் செய்யப்பட்டு மாநிலத்திற்குள் வினியோகம் செய்வதற்காக இருப்புப் பொருள்களை மாநில அரசு களிடமும் யூனியன் நிர்வாகங்க ளிடமும் ஒப்படைக்க வேண்டும். இப்பணியை மேற்கொள்வதற்காக மாநில அளவில் சட்டம் இயற்று வது அவசியமானால், விரைந்து அதை இயற்ற வேண்டும். |
| 11. குடி மயக்கத்திலுள்ளவர் கள் மோட்டார் வண்டிகள் ஓட்டுவதைத் தடை செய்ய நடவடிக்கைகள் மேற் கொள்வதன் அவசியம். | இது குறித்த மோட்டார் வண்டிகள் சட்டம் திருத்தப்பட வேண்டு மென்று (உள்துறை அமைச்சகம் நியமித்த) மதுவிலக்கு ஆய்வுக் குழு புதுடில்லி அனைத்திந்திய மதுவிலக்குக் குழு, சார்பாக பாது காப்பு ஆய்வுக் குழு ஆகியவை தெரிவித்துள்ள கருத்துரைகள் பரிசீலிக்கப்பட்டு, தகுந்த திட்டங் கள் இயன்ற வரையில் வகுக் கப்பட வேண்டுமென்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. மோட்டார் வண்டி ஓட்டும் ஒருவர் குடி மயக்கத்தில் உள்ளாரா என்பதை மூச்சோட்டப் பகுப்பாய்வு முறை மூலம் (Breath Analyser System) கண்டறிவதற்கான ஏற்பாடுகளை எல்லா மாநிலங்களும் பின்பற் றுவது குறித்துப் பரிசீலனை செய்யப்பட வேண்டுமென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. அத்தகைய நபர்களைக் கண்டறிந்து அவ்விடத்தி லேயே அவர்களைத் தண்டிப்பதற் கான உடனடி அதிகாரங்களை |



| பொருட்கள். (2) | எடுக்கப்பட்ட முடிவுகள். (2) |
|---|---|
| | போக்குவரத்துக் காவலர்களுக் கும் போக்குவரத்து விதிகளைச் செயற்படுத்தும் பிற பணியாளர் களுக்கும் வழங்க வேண்டும். |
| 12. சரக்குப் போக்குவரத்துக்கு மண்டலத் திட்டங்கள். | சாலைப் போக்குவரத்து உரிமையாளர் களுக்கு ஒரே மண்டலம் இருப்பது குறித்துப் பரிசீலனை செய்யப்பட வேண்டும். |
| 13. மோட்டார் வண்டிப் பயணி கள் மீதான வரிவாயி லாகக் கிடைக்கும் தொகை களை மாநில சாலைப் போக்கு வரத்து நிறுவனங்கள் வளர்ச்சித் திட்டத்திற்குப் பயன்படுத்தல். | மோட்டார் வண்டி பயணிகள் மீதான வரி வாயிலாகக் கிடைக் கும் தொகைகளை மாநில சாலைப் போக்குவரத்து நிறுவனங்கள் வளர்ச்சித் திட்டத்திற்கு பயன் படுத்த வேண்டும் என்று மாநில சாலைப் போக்குவரத்து நிறுவனங் கள் சங்க நிலைக்குழு (நிதி) செய் திருந்த பரிவுரையை குழு ஏற்றுக் கொள்ளவில்லை. |
| 14. மத்திய அரசு அளவிலும் மாநில அரசுகள் அளவி லும் கிராமப்புறச் சாலை களுக்கென்று கிராமப்புறச் சாலைகள் ஆணைக்குழுவை அமைத்தல். | (i) நாட்டிலுள்ள கிராமங்கள் அனைத்திற்கும் எளிதில் சென்று வர வசதியாக இயன்ற விரைவில் சாலை வசதிகள் ஏற்படுத்த வேண்டிய அவசி யமும் அவசரமும் குறித்து குழு பரிவுரை செய்துள்ளது. மேலும் அது தெரிவித்துள்ள கருத்துக்கள் வருமாறு:— மேற்சொன்ன குறிக்கோளை அடைவதில் மக்கள் தொகை யை அடிப்படையாகக் கொண்ட கிராமத்தின் அளவை மட்டுமே ஒரு முக்கிய கூறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. கிராமப் பகுதிகளுக்கும் நாட்டின் தொலை தூரப் பகுதியிலுள்ள கிராமங்கள், பழங்குடியினர் வாழும் பகுதிகள், ஏனைய பின்தங்கிய பகுதிகள் ஆகிய |

1974 மார்ச் 22]

| பொருட்கள். (1) | எடுக்கப்பட்ட முடிவுகள். (2) |
| --- | --- |
| | வற்றிற்கும் சாலைத் தொடர்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். கிராமப் பகுதிகளின் பெரும் பகுதிக்கு சாலைத் தொடர்பு ஏற்படுத்த வசதியாக கிராமப்புற சாலைகளை சரியான முறையில் இணைக்கும் பணியில் உடனடி கவனம் செலுத்த வேண்டும். |
| | (ii) கிராமப்புறச் சாலைகள் அமைக்கத் தேவைப்படும் நிலத்தை கிராமங்களுக்கே அல்லது மாநில அரசுகளுக்கே இலவசமாகக் கிடைக்கச் செய்ய வேண்டும். |
| | (iii) நிதியில் 50 சதவீதத்தை மாநில அரசே செலுத்த வேண்டும். |
| | (iv) வேளாண்மை போன்ற காரியங்களுக்காக சிறப்பு வசதிகள் தேவைப்படும் இடங்களில் சம்பந்தப்பட்ட அமைச்சகங்களே விகிதாசாரப்படி உதவித் தொகையளிக்க வேண்டும். |
| 15. சாலைகள் சம்பந்தமாக நான்காவது ஐந்தாண்டுத் திட்ட மத்திய அரசுத்துறை திட்டப் பணிகளை செயற்படுத்துவதில் கண்டுள்ள முன்னேற்றம். | ஒப்பந்தப் புள்ளிகளுக்குத் தீர்வு காண்பதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்த்தல் ஒப்பளிப்பு கிடைத்தவுடனே பணியைத் தொடங்குதல் ஆகியவற்றின் அவசியம் குறித்தும் ஏனைய சில மாநிலங்களில் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளதைப் போன்று தேசிய நெடுஞ்சாலைப் பணிகளைக் கவனிப்பதற்கென்றே தனி அமைப்புகள் ஏற்படுத்த வேண்டிய உடனடி தேவை ஆகியவை குறித்தும் வலியுறுத்தப்பட்டது. |



1974 மார்ச் 22]

| பொருள்கள். (1) | எடுக்கப்பட்ட முடிவுகள். (2) |
| --- | --- |
| 16. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சாலைகள் தொடர்பான திட்டங்கள் குறித்து முன் கூட்டிய நடவடிக்கையும் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சாலைகளுக்கென வகுக்கப்பட்ட திட்டங்களில் கண்டுள்ள முன்னேற்றமும். | இந்திய அரசு வகை செய்துள்ள நிதி வசதிகளை முழு அளவில் பயன்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகள் அனைத்தையும் மாநில அரசு மேற்கொள்ள வேண்டுமென்று குழு பரிவுரை செய்துள்ளது. |
| 17. பின் தங்கிய பகுதிகளில் சாலை வளர்ச்சி. | 10 சதவீதம் மத்திய உதவிபெறும் திட்டத்தின் கீழ் தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களிலும் சாலை அமைப்புப் பணிக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென்றும், அதே சமயத்தில் அல்லது விரைவிலேயே மத்திய நிதியுதவி நிறுவனங்களின் சலுகை நிதித் திட்டத்தின் கீழ் பிற மாவட்டங்களிலும் அதே மாதிரியான முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. |
| 18. மாநிலத்தின்/வட்டாரத்தின் சாலை வளர்ச்சிக்குத் திட்டம் வகுப்பதில் அரசுப் போக்குவரத்து அதிகார மன்றங்கள் சங்கம்/வட்டாரப் போக்குவரத்து அதிகார மன்றங்கள். | மாநில அல்லது வட்டாரச் சாலை வளர்ச்சிக்கு முன்னுரிமைத் திட்டங்கள் வகுக்க மோட்டார் வண்டிகள் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட அரசுப் போக்குவரத்து அதிகார மன்றத்தையும் வட்டாரப் போக்குவரத்து அதிகார மன்றத்தையும் சேர்த்துக் கொள்வது குறித்துப் பரிசீலனை செய்யுமாறு மாநிலங்களின் பொதுப் பணித்துறைகளை இக்குழு வற்புறுத்தியது. |
| 19. சாலைகள்-சாலைப் போக்குவரத்து வளர்ச்சிக் குழுவின் நிலைக் குழுவை புதிதாக அமைத்தல் | சாலைகளுக்காகவும் சாலை போக்குவரத்துக் குழுவிற்காகவும் நிலைக் குழுக்களின் தற்போதைய அமைப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது. |

போக்குவரத்து வளர்ச்சிக் குழுவின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் பரிசீலனையிலுள்ளன.

(a) The tenth meeting of the Transport Development Council was held at New Delhi on 15th and 16th February 1973. The Minister for Transport and four officials of the State Government attended the meeting.

(b) The subjects discussed and the decisions taken in the said meeting are given below :—

| Subjects. | Decisions taken. |
|---|---|
| (1) | (2) |
| 1. Display of registration marks on the number plates of motor vehicles and on inscriptions on kilometre stones, etc. | The recommendation of the Working Group constituted by the Government of India that the display of registration marks on motor vehicles should be in English and regional script was accepted. |
| 2. Amendment of the Motor Vehicles Act, 1939, so as to simplify procedures for nationalisation of road transport. | It was decided to constitute a Committee to go into the question of legislation for speeding up nationalisation. |
| 3. Consideration of the report of the Study Group on Road Safety. | It was agreed that the recommendations of the Study Group on Road Safety be examined further by the Government of India in the light of the comments received form the State Governments and placed before the next meeting of the Transport Development Council. |
| 4. Consideration of the report of the Study Group on wayside amenitides. | It was agreed that the recommendation of the Study Group on wayside amenities be examined further in the light of the comments received from the State |



| Subjects. | Decisions taken. |
|---|---|
| (1) | (2) |
| 4. Consideration of the report of the Study Group on Wayside amenities—*cont.* | Governments and the matter placed before the next meeting of the Transport Development Council. |
| 5. Amendment of section 44 (2) of the Motor Vehicles Act, 1939, to provide for representation to the railways on the Transport Authorities. | It was agreed that (1) the Motor Vehicles Act should be amended to provide for permissive powers to State Governments to take Railway representatives on the Transport Authorities in respect of the regions where there was scope/need for further rail-road co-ordination ;<br>(2) that Transport Development Council should set up at the State level, on the lines of the Transport Development Council at the centre and that the State Level Councils should also specially consider questions relating to co-ordination of all forms of transport ; and<br>(3) that the Ministry of Railways should be urged to advise their representatives on the Boards of the Road Transport Corporations in the various States to attend the Board meetings regularly in the interest of rail-road co-ordination, which was the basic objective of providing representation to them on these Boards. |

| Subjects. (1) | Decisions taken. (2) |
|---|---|
| 6 Rail-road Co-ordination .. | It was agreed that steps should be taken to develop regions which have traffic potential but are not served by rail presently, by having a fleet of road vehicles which might be made available by the State Governments in their respective areas. |
| 7 Abolition of Octroi .. | Earlier decision to abolish Octroi was reiterated. (No Octroi is levied in Tamil Nadu.) |
| 8 Financing of Road Transport Industry. .. | The Council reiterated its following recommendations made in the ninth meeting held in August 1971:— |
| | (i) that State Transport Undertakings should resort to open market borrowing ; |
| | (ii) that the question of exemption of State Road Transport Corporation from income-tax should be pursued by the Transport Ministry ; |
| | (iii) that the National Motor Transport Finance Corporation should be set up ; |



| Subjects. (1) | Decisions taken. (2) |
|---|---|
| 8 Financing of Road Transport Industry—*cont.* | (iv) that the existing departmentally operated State Transport Undertakings should be converted into Road Transport Corporations under Road Transport Corporation Act ; |
| | (v) that the concerned State should pay their share of capital to their State Road Transport Corporation ; |
| | (vi) that the Railway Ministry should increase their contribution to a uniform level of 33 per cent of the total in each State Road Transport Corporation ; |
| | (vii) that the Life Insurance Corporation and the Industrial Credit Investment Corporation should be pursuaded to participate in the capital structure of the Transport Corporation. |
| | (viii) that the Reserve Bank of India and the nationalised banks should be approached for loans ; and |
| | (ix) that procedure for lending by the Commercial Banks and other financial institutions should be streamlined. |

| Subject. (1) | Decisions taken. (2) |
| --- | --- |
| Inter-State movent of tourist vehicles on single point taxation, liberalisation of issue of permits for tourist coaches and tariff for tourist vehicles. | It has been decided—<br>(i) that the State Transport Undertakings should be given preference in the matter of grant of All-India permits for tourist vehicles;<br>(ii) that notification exempting the tourist vehicles from payment of road tax and passenger tax may be issued expeditiously;<br>(iii) that the existing number of tourist taxis on inter-State route should be increased;<br>(iv) that a more liberal policy in issuing tourist vehicle permit should be followed; and<br>(v) that the private tourist coach operators should be allowed to run their vehicles on notified route. |
| 10 Requirements of State Road Transport Undertakings in respect of tyres, tubes and bus chassis. | Special quotas of tyres and tubes and essential and critical spare parts should be fixed for each State and Union Territory and the stocks placed at the disposal of the State Governments and Union Administrations for making arrangements for internal distribution. If legislation at the State level was necessary for taking up this work, it should be undertaken speedily. |



| Subjects. (1) | Decisions taken. (2) |
| --- | --- |
| 11 Need for measures to prevent the driving of motor vehicles by persons under the influence of drink. | It was agreed that the suggestions made by Study Team on Prohibition (appointed by the Ministry of Home Affairs), All India Prohibition Council, New Delhi and the Study Group on Road Safety for amendment of the Motor Vehicles Act in this regard should be examined and suitable proposals drawn up as soon as possible. It was also agreed that arrangements for detecting whether a person is driving a motor vehicle under the influence of drink by the breath analyser system should be considered for adoption by all the States. The traffic police and other enforcement staff should be vested with summary powers to detect such persons and punish them on the spot. |
| 12 Zonal Schemes for goods transport. | It was agreed that the facility of having a single zone for road transport operators should be considered. |
| 13 Utilisation of proceeds of tax on passengers carried in motor vehicles for the expansion programme of State Road Transport Undertakings. | The Council did not agree to the recommendation of the Standing Committee (Finance) of the Association of State Road Transport Undertakings that the proceeds of the tax on passengers carried in motor vehicles should be utilized for the development programmes of the State Road Transport Undertakings. |

| *Subjects.*<br>(1) | *Decisions taken.*<br>(2) |
|---|---|
| 14. Rural roads need for setting up of Rural Road Commission at the Centre and in the States. | (i) The Council recommended the need and urgency for providing easy access to all the villages in the country as early as possible and observed that in achieving this objective the size of village in terms of population need not necessarily be the only criterion but that a more important consideration should be to open up rural areas and villages in the interior of the country, in the tribal belts and other backward areas and that immediate attention should be given to the proper alignment of rural roads so as to open up the maximum part of the rural areas ;<br><br>(ii) that the land required for village roads should be made available free of cost by villagers or by State Government themselves ;<br><br>(iii) that 50 per cent of the Fund should be contributed by the State Government.<br><br>(iv) Where special interests were required to be served like those of agiculture, the concerned Ministries should make contribution proportionately. |
| 15. Progress in the implementation of the 4th Plan Central Sector Schemes relating to roads. | The need for cutting out delays in setting tenders and commencing work soon after sanction and the urgency for setting up separate organisations for dealing with National Highways exclusively as had already been done in certain other States was stressed. |
| 16. Advance action for the 5th Plan projects relating to road and progress made in the formulation of the 5th Plan for roads. | The Council recommended that the States should do all that is possible to make the fullest possible use of the funds provided by the Government of India. |
| 17. Road Development in Backward Areas. | It was agreed that top priority should be given to road building activity in the districts selected for the 10 per cent Central Subsidy Scheme and simultaneously, or soon thereafter, in the remaining districts covered by the Concessional finance Scheme of Central financing institutions. |
| 18. Association of State Transport Authorities/Regional Transport Authorities in planning development of roads for the State Region. | The Council urged the Public Works Department of the State and Union Territories to consider associating the State and Regional Transport Authorities appointed under the Motor Vehicles Act in planning priorities for development of roads in the State or region. |

| Subjects. (1) | Decisions taken. (2) |
| --- | --- |
| 19. Reconstitution of the Standing Committee of the Transport Development Council for Roads and Road Transport. | The composition of the two Standing Committees of the Council on Roads and Road Transport was accepted. |

The decisions taken at the meeting of the Transport Development Council are under examination.

## இணைப்பு III.

(590-ம் பக்கத்தில் 570 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினவிற்குரிய விடையைக் காண்க.)

விவர அறிக்கை.

**தமிழ்நாட்டிற்கும் கருநாடக மாநிலத்திற்கும் இடையிலான போக்குவரத்து குறித்து இவ்விரு மாநிலங்களும் செய்து கொண்ட பரஸ்பர ஒப்பந்தம்.**

(உள்துறையின் 30—4—1973 ஆம் நாளிட்ட 1178 ஆம் எண் அரசு ஆணை).

11-1 எண் 1909 (i) 1973.

1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 63-வது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவில் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு அரசிதழில் கீழ்க்காணும் ஒப்பந்தத்தை இதனால் வெளியிடுகிறார். இந்த ஒப்பந்தத்தின் வரைவு மேற்படி பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவில் சொல்லியுள்ளவாறு 24—6—1972 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளதோடு, இதனால் பாதிக்கப் படுவோர் தமது தரப்பை எடுத்துச் சொல்ல அவர்களின் பிரதிநிதிகளுக்கு வாய்ப்பளித்த பின்னரும். இவ்வொப்பந்தம் குறித்து வந்துள்ள மறுப்புரைகளும் கருத்துரைகளும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத்துறை அதிகார மன்றத்துடன் கலந்தாலோசிக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்ட பின்னரும் மேற்படி ஒப்பந்தம் இவ்வாறு வெளியிடப்படுகிறது.



## ஒப்பந்தம்.

தமிழ்நாடு, கருநாடகம் மாநிலங்களுக்கிடையேயான வழித் தடங்களில் போக்குவரத்து வண்டிகள் சென்று வருவதைக் கட்டுப்படுத்த முடிவு செய்துள்ளபடியால், தமிழ்நாடு அரசும் கருநாடக அரசும் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தம் செய்து கொள்கின்றன :—

தமிழ்நாடு ஆளுநரை (இதன் பின்னர் தமிழ்நாடு அரசு என்று குறிப்பிடப்படுவதுடன், இச்சொற்றொடரில், இவருக்குப் பின்னர் பதவியில் இருப்பவரும் அடங்குவர்) ஒரு தரப்பினராகவும் கருநாடக மாநில ஆளுநரை (இதன்பின்னர் மைசூர் மாநில அரசு என்று குறிப்பிடப்படுவதுடன், இச்சொற்றொடரில் இவருக்குப் பின்னர் பதவியில் இருப்பவரும் அடங்குவர்) மற்றொரு தரப்பின ராகவும் கொண்டு இவ்விருவர் இடையேயும் இவ்வொப்பந்தம் செய்து கொள்ளப்படுகிறது. இந்த ஒப்பந்தம் 1—5—1973-லிருந்து செயலுக்கு வரும்.

**பயணிப் பேருந்துப் பணிகள் :** (a) இரு மாநிலங்களும் ஒப்புக்கொண்டுள்ளவாறும், இணைப்பு I and II ஆகியவற்றில் காட்டப்பட்டுள்ளவாறும் இவ்விரு மாநிலங்களுக்கும் சொந்தமான பயணிப் பேருந்துகளை. இவ்விரு மாநிலங்களுக்கிடையிலான வழித் தடங்களில் தமிழ்நாடு பேருந்து உரிமையாளர்களும், இணைப்பு II and IV ஆகியவற்றில் காட்டப்பட்டுள்ளவாறு கருநாடக மாநிலப் பேருந்து உரிமையாளர்களும் இயக்க வேண்டும்.

(b) இவ்விரு மாநில வழித்தடங்களில் ஒரு மாநிலத்தில் மட்டுமே அமைந்திருக்கக் கூடிய வழித்தடப் பகுதி ஒன்று குறித்து, அந்த மாநிலத்தில் பேருந்து உரிமையாளர்கள் இயக்கி வரும் பேருந்துப் பணிகளைப் பொறுத்தவரையில், அந்த மாநிலத்தின் போக்குவரத்துத்துறை அதிகார மன்றம் மாறுதல் எதனையும் செய்து கொள்ளலாம். ஆனால், அந்த மாநிலத்தைச் சேர்ந்த போக்குவரத்து அதிகார மன்றம் செய்யக்கூடிய அத்தகைய மாறுதல் பரஸ்பர ஒப்பந்தம் செய்து கொண்ட மற்றொரு மாநிலத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட வேண்டும். இவ்விரு மாநில வழித்தடங்களைப் பொறுத்தவரையில் ...த்த மாநிலத்தின் வழித்தடப் பகுதியில் மாறுதல் செய்ப

பட்டால், அந்தந்த மாநிலப் போக்குவரத்துத்துறை அதிகார மன்றங்கள் கீழே (c) பத்தியில் குறிப்பிட்டுள்ள பயணத்தொலைவு பற்றிய கோட்பாட்டைக் கருத்திற்கொண்டு, பரஸ்பர ஒப்பந்தம் செய்து கொள்வதன் மூலமும் மேற்சொன்ன மாறுதல் குறித்து முடிவு செய்யும்.

(c) இரு மாநில வழித்தடங்களைப் பொறுத்தமட்டில், பயண தூரம் கிலோ மீட்டர் அளவில் இயன்றவரை சமமாக இருக்க வேண்டும். எனினும், தற்போது மைசூர் மாநிலம் 1,500 கிலோ மீட்டர் அளவில் கூடுதல் பயணதூர அனுகூலத்தைப் பெற்றுள்ளது. வருங்காலத்திலும் சம அளவுக்கு மேல் இந்த கூடுதல் அனுகூலத்தை அந்த மாநிலம் பெற்றிருக்கும்.

(d) அடுத்த மாநிலத்தில் பேருந்து உரிமையாளர் ஒருவர் வசூலிக்கும் பயணக் கட்டணங்களும் சரக்குக் கட்டணங்களும் அந்த மாநிலத்தில் அதே போன்ற பேருந்துப் பணிகளுக்கு அந்த மாநிலத்தைச் சேர்ந்த பேருந்து உரிமையாளர்கள் வசூலிக்கும் பயணக் கட்டணங்களைவிட குறைவாக இருக்கக்கூடாது.

(e) வழக்கமாக இயங்கிவரும் பேருந்துகள் பழுதடையும் நேர்வில், இவ்விரு மாநில வழித்தடங்களில் குறைந்தது ஒரு மாற்றுப் பேருந்தையேனும் இயக்குவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, இவ்விரு மாநில வழித்தடங்களில் பேருந்து உரிமையாளர்கள் வழக்கமாக இயக்கிவரும் பேருந்துகளில் 20 சதவீதம் வரை மாற்றுப் பேருந்துகளை இயக்க அனுமதிக்கப்படுவர்.

பேருந்துகள் பழுதடையும் நேர்வில் அல்லது எதிர்பாராத சமயங்களில், இரு மாநில உரிமையாளர்களும் பயண தூரத்தை (கிலோ மீட்டர் அளவில்) அதிகரிக்காமல் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வழித்தடத்தில் பேருந்து ஒன்றை இயக்க அனுமதிக்கப்படுவர்.

II. பொது சரக்கு வண்டிகள் — a) 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 4/1939) 63 (3) பிரிவைச் சேர்ந்த வரம்பு நிபந்தனைக்கேற்ப ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கப்படுபவையும் அடுத்த மாநிலத்தினால் மேலொப்பம் இடப்படுபவையுமான பொதுச் சரக்கு வண்டி



களுக்கான அனுமதிகளின் எண்ணிக்கை 1,200 ஆக இருக்க வேண்டும்; ஒரு மாநிலத்தில் வழங்கப்படும் அனுமதிகளின் எண்ணிக்கை 1,100 ஆக இருந்தால் அது குறித்த நிலைமை மறு ஆய்வு செய்வதற்குட்பட்டு மேற்படி அனுமதிகள் வழங்கப்பட வேண்டும்.

(b) தேசிய அல்லது மாநில நெடுஞ்சாலைகளிலிருந்தும் (தடை செய்யப்பட்ட வழித்தடங்கள் நீங்கலாக) 30 கிலோ மீட்டர் அளவுக்குத் தாண்டிச் செல்லும் வகையில் தேசிய நெடுஞ்சாலைகளிலும் மாநில நெடுஞ்சாலைகளிலும் வண்டிகளை ஓட்டுவதற்கு மேலொப்பம் அளிக்கப்பட வேண்டும். ஆனால், அந்த வண்டிகள் அடுத்த மாநிலத்திற்குச் சென்றுவிட்டுத் திரும்பும் வழியில், அம்மாநிலத்தின் ஓரிடத்தில் இறக்குவதற்கென்று சரக்குகள் எவற்றையும் ஏற்றிக் கொள்ளக் கூடாது.

மேலும், அடுத்த மாநிலத்தை நோக்கிச் செல்கையில், அம்மாநிலத்தில் யாதொரு பகுதியின் சரக்குகளை இறக்குவதற்கு எவ்வித கட்டுப்பாடும் விதிக்கப்படக் கூடாது; ஆனால், அம்மாநிலத்தில் சரக்குகள் எவற்றையும் ஏற்றிக் கொள்ளக் கூடாது.

(c) பெட்ரோல் வண்டிகள்—ஒவ்வொரு மாநிலத்திற்கும் பரஸ்பர அடிப்படையில் ஒதுக்கப்பட்ட பொதுச் சரக்கு வண்டிகள், தனியார் வண்டிகளின் எண்ணிக்கை நீங்கலாக பெட்ரோல் வண்டிகளின் எண்ணிக்கை 50 ஆக முடிவு செய்யப்படுகிறது.

(d) பொது சரக்கு வண்டிகளுக்கும் பெட்ரோல் வண்டிகளுக்கும் ஒரு முனை வரி விதிக்கப்பட வேண்டும்.

III. **தனியார் சரக்கு வண்டிகள்.**—தனியார் சரக்கு வண்டிகள் குறித்து ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கப்படுவதும், அடுத்த மாநிலத்தினால் மேலொப்பம் இடப்படுவதுமான அனுமதிகளின் எண்ணிக்கை 50 ஆக இருக்க வேண்டும். பிற மாநில விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்துக் கொண்டுள்ள பகுதி அல்லது வழித்தடங்கள் குறித்த அவர்களின் விண்ணப்பங்களுக்கு மேலொப்பமிட பரிந்துரை செய்வதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட மாநிலப் போக்குவரத்துத்துறை அதிகார மன்றம், அடுத்த மாநிலத்தில் விண்ணப்பதாரர் செய்யவிருக்கும் தொழில் உண்மையானதுதானா என்பது பற்றித் தாமே அறிந்து கொள்ள வேண்டும்.

பொதுச் சரக்கு வண்டிகளுக்கும் தனியார் சரக்கு வண்டிகளுக்கும் வண்டியில் ஏற்றப்படுவதற்கு அனுமதிக்கப்பட்ட எடையான 15 டன் அல்லது ஏற்றப்படும் பதிவு எடை இவற்றில் எது குறைவாக உள்ளதோ அந்த எடை அளவுக்கு பரஸ்பர அடிப்படையில் மாநிலங்கள் இரண்டிலும் சரக்குகளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும்.

**(VI) வாடகை மோட்டார் வண்டிகள் (Taxis)** —ஒவ்வொரு மாநிலத்திற்கு ஒதுக்கப்படுபவையும் அடுத்த மாநில அரசினுல் மேலொப்பமிடப்படுபவையுமான சாதாரண வாடகை மோட்டார் வண்டி அனுமதிகளின் எண்ணிக்கை 100 ஆக இருக்க வேண்டும். இந்த வண்டிகள் பரஸ்பர ஒப்பந்தம் செய்து கொண்ட மாநிலங்களின் வழித்தடங்கள் அனைத்திலும் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும்.

**(V) தற்காலிக அனுமதிகள்.**—சரக்கு வண்டிகள், ஒப்பந்த ஊர்திகள் (வாடகை மோட்டார் வண்டிகள் மட்டும்) ஆகியவற்றைப் பொறுத்தமட்டில், ஒவ்வொரு மாநில அரசும் வழங்கும் தற்காலிக அனுமதிகளின் எண்ணிக்கைக்கு வரையறை எதும் இருக்கக் கூடாது. குறுகிய கால உரிம ஒப்பந்தத்தில் கண்டுள்ள நிபந்தனைகளுக்கிணங்க, ஒரு மாநிலத்தின் போக்குவரத்துத்துறை அதிகார மன்றம் பரஸ்பர ஒப்பந்தம் செய்து கொண்ட மற்றொரு மாநிலத்தின் இசைவைப் பெறுமல், ஒரு சமயத்தில் 30 நாட்களுக்கு மேற்படாத கால அளவுக்கு இந்த அனுமதிகளை வழங்கலாம். தமிழ்நாடு 1952 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (பயணிகள், சரக்குகள் மீது வரி விதிப்பு) சட்டத்தின் கீழ் அல்லது 1961 ஆம் ஆண்டு கருநாடக மோட்டார் வண்டிகள்/பயணிகள் சரக்கு மீதான வரி விதிப்புச் சட்டத்தின்கீழ் வசூலிக்கப்படும் வரி ஏழு நாட்களுக்கு அல்லது முப்பது நாட்களுக்கு (இந்தக் கால அளவு ஆங்கில ஆண்டின் இரண்டு மாதங்களில் இருந்தபோதிலும்) அந்தந்த அரசுகள் குறிப்பிட்டுள்ள வீதங்களில் இருந்த வேண்டும்.

**IV வரி விதிப்பு.—(a)** எந்தப் போக்குவரத்து வண்டிகள் தொடர்பாக பரஸ்பர ஒப்பந்தம் செய்து கொண்ட மாநிலத்தின் மேலொப்பம் இடப்படுகிறதோ அந்த போக்குவரத்து வண்டிகள்



பரஸ்பர ஒப்பந்தம் செய்து கொண்ட மாநிலத்திற்கு மோட்டார் வண்டிகள் வரி செலுத்துவதினின்றும் விலக்களிக்கப்பட வேண்டும். ஒரு முனை வரி விதிப்பு தொடர்பான இச்சலுகை, முறையான அனுமதி, தற்காலிக அனுமதி ஆகிய இருவகை அனுமதிகளையும் பெற்றுள்ள பயணிப் பேருந்துகளுக்குப் பொருந்தும். மேலொப்பத்தின்கீழ் வரும் ஏனைய வகை போக்குவரத்து வண்டிகள் முறையான அனுமதிகளைப் பெற்றிருந்தால் மட்டுமே அவற்றிற்கு இச்சலுகை பொருந்தும்.

(b) பரஸ்பர ஒப்பந்தம் செய்து கொண்ட மாநிலத்திற்குச் செலுத்த வேண்டிய வரிகளை, பரஸ்பர ஒப்பந்தம் செய்து கொண்ட மாநிலத்தின் அரசுப் போக்குவரத்துத்துறை அதிகார மன்றச் செயலாளர் பெயரில் கேட்பு வரைவோலைகள் **(Demand Drafts)** மூலம் செலுத்துவதற்குட்பட்டு சம்பந்தப்பட்ட மாநில அரசுப் போக்குவரத்து அதிகார மன்றங்கள், V-வது பகுதியில் குறிப்பிட்டுள்ள தற்காலிக அனுமதிகளை வழங்க வேண்டும்.

(c) பரஸ்பர ஒப்பந்தம் செய்துகொண்ட மாநிலத்தின் சார்பாக, ஒரு முனை வரி விதிப்புக்குட்பட்ட வண்டிகளுக்கு வரியிலா அடையாள வில்லைகள் அந்தந்த மாநிலத்திலேயே வழங்க **வேண்டும்.**

(d) 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தை (மத்தியச் சட்டம் 4/1939) சேர்ந்த 63 (1) பிரிவின் இரண்டாவது வரம்பு நிபந்தனையின்கீழ் வரும் வண்டிகளும் வரி செலுத்துவதினின்றும் விலக்களிக்கப்படும்.

**(VII)** பொது.—(a) பரஸ்பர ஒப்பந்தம் செய்துகொண்ட மாநிலத்தில் வண்டிகள் எத்தனை மைல் வேகத்தில் ஓட்டப்பட வேண்டும், வண்டிகளில் ஏற்றப்படும் சுமையளவு, கன பரிமாணங்கள், வண்டிகள் செல்லக் கூடாதென்று தடை விதிக்கப்பட்ட சாலைகள் ஆகியவை குறித்து அந்தந்த மாநிலத்தில் உள்ள நிலைமைகளை அனுமதி பெற்றுள்ளோரும் வலவர்களும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

(b) ஒரு வண்டிக்குப் பதிலாக மற்றொரு வண்டியை அமர்த்திக் கொள்வது பற்றி சம்பந்தப்பட்ட மாநில அதிகார மன்றம் மேலொப்பம் இட்டால் குறிப்பிட்டு அது பற்றிய தகவலை, அந்த வண்டியின் பதிவு எண் மாற்றம், இருக்கைகளின் எண்ணிக்கை, சுமை ஏற்றப்படாத வண்டியின் எடை, சுமை ஏற்றப்பட்ட வண்டியின் எடை ஆகிய விவரங்களுடன் பரஸ்பர ஒப்பந்தம் செய்துகொண்ட மாநிலத்தின் போக்குவரத்து அதிகார மன்றத்திற்கு உடனடியாக அனுப்பி வைக்கலாம்.

(VIII) பரஸ்பர ஒப்பந்தம் செய்துகொண்ட பின்னர், எந்த ஒரு சமயத்திலும் இந்த ஒப்பந்தத்தின் அல்லது ஒப்பந்தத்தின் இணைப்பில் கண்டுள்ள பகுதி எதுவும் திருத்தப்படலாம் அல்லது அதில் புதியதொரு பகுதி சேர்த்துக் கொள்ளப்படலாம்.

(IX) இவ்விரு மாநில அரசுகளில் எந்த ஓர் அரசும் கேட்டுக் கொள்வதன்பேரில் இந்த ஒப்பந்தம் ஒவ்வோராண்டும் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும்.



## இணைப்பு 1.

கருநாடக மாநிலத்தில் ஓடும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பேருந்துகள்.

| தொடர் எண்ணும், வழித்தடமும். | வழித்தடத்தின் தொலைவும், பயணத் தடவை களின் எண்ணிக்கை யும் (கருநாடகத்தில்). | | பேருந்து களின் எண் ணிக்கை. | கருநாடக மாநிலத்தில் ஓடிய மொத்தப் பயணத் தொலைவு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) |
| 1. தளி—மாலூர் (வழி) ஒசூர், பகலூர், பேரிகை. | 20·8 | 4 | 1 | 83·2 |
| 2. கிருஷ்ணகிரி—பெங்களூர் (வழி) ஒசூர், மாடிவாலா. | 35·0 | 4 | 1 | 140·0 |
| 3. கோலார்—தளி (வழி) பேரிகை, ஒசூர். | 20·8 | 2 | 1 | 41·6 |
| 4. பேரிகை—பெங்களூர் (வழி) பகலூர், ஒசூர். | 35·0 | 4 | 1 | 140·0 |
| 5. அய்யூர்—மாலூர் (வழி) தேன்கனிக்கோட்டை, ஒசூர். | 20·8 | 2 | 1 | 41·6 |
| 6. பெங்களூர்—பாலதோட்டானபள்ளி (வழி) ஒசூர், தேன்கனிக்கோட்டை. | 35·0 | 2 | 1 | 70·0 |
| 7. மாலூர்—கிருஷ்ணகிரி (வழி) பகலூர், ஒசூர். | 20·8 | 4 | 1 | 83·2 |
| 8. ஒசூர் கால்நடைப்பண்ணை—மாடிவாலா (வழி) ஒசூர், அட்டிபீலி சந்தாப்பூர். | 27·2 | 8 | 1 | 217·6 |
| 9. அனேகல்—ராயக்கோட்டை (வழி) கும்லாபுரம், தேன்கனிக்கோட்டை, கேலமங்கலம். | 8·0 | 4 | 1 | 32·0 |

| தொடர் எண்ணும், வழித்தடமும். (1) | வழித்தடத்தின் தொலைவும், பயணத் தடவைகளின் எண்ணிக்கையும் (கருநாடகத்தில்). (2) | பேருந்துகளின் எண்ணிக்கை. (3) | கருநாடக மாநிலத்தில் ஓடிய மொத்தப் பயணத் தொலைவு. (4) |
|---|---|---|---|
| 10. சாலிவரம்—பெங்களூர் (வழி) தேன்கனி கோட்டை, ஒசூர், சந்தாபூர். | 35·0 2 | 1 | 70·0 |
| 11. பெங்களூர்—தேன்கனிகோட்டை (வழி) ஒசூர், மட்டிகிரி. | 35·0 4 | 1 | 140·0 |
| 12. அய்யூர்—அகாரா (வழி) தேன்கனிகோட்டை, ஒசூர், அட்டிபீலி, சர்ஜாபூர். | 24·0 4 | 1 | 96·0 |
| 13. பெங்களூர்—புதுச்சேரி (வழி) ஒசூர், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, கடலூர். | 35·0 6 | 3 | 210·0 |
| 14. திருச்சிராப்பள்ளி—பெங்களூர் (வழி)—ஒசூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல். | 35·0 2 | 2 | 70·0 |
| 15. சேலம்—பெங்களூர் (வழி) தருமபுரி, கிருஷ்ணகிரி, ஒசூர், அட்டிபீலி. | 35·0 26 | 13 | 910·0 (தற்காலிக அனுமதிகளின் பேரில் இரண்டு வண்டிகள் விடப்படுகின்றன.) |
| 16. சாத்தி—கொள்ளேகால் (வழி) பண்ணரி, திம்பம், கடர்சல், லோக்கனஹள்ளி. | 52·8 2 | 1 | 105·6 |
| 17. உதகமண்டலம்—குண்டல்பெட் (வழி) பைக்காரா, நடுவட்டம், கடலூர், தெப்பக்காடு, கன்னனூலா. | 27·2 8 | 4 | 217·6 |
| 18. தருமபுரி—பெங்களூர் (வழி) கிருஷ்ணகிரி, ஒசூர், அட்டிபீலி. | 35·0 4 | 2 | 140·0 |
| 19. தருமபுரி—பெங்களூர் (வழி) பாலக்கோடு, ராயகோட்டை, ஒசூர், அட்டிபீலி எல்லை. | 35·0 2 | 1 | 70·0 |
| 20. திருப்பத்தூர்—பெங்களூர் (வழி) கண்டலி, பகலூர், கிருஷ்ணகிரி, ஒசூர், அட்டிபீலி. | 35·0 2 | 1 | 70·0 |
| 21. சென்னை—பெங்களூர் (வழி) காஞ்சிபுரம், ஆர்க்காடு, வேலூர், வாணியம்பாடி, கிருஷ்ணகிரி, ஒசூர், அட்டிபீலி. | 35·0 10 | 5 | 350·0 (4 வண்டிகள் தற்காலிக அனுமதிகளின் பேரில் விடப்படுகின்றன.) |
| 22. கோயம்புத்தூர்—கொள்ளேகால் (வழி) அன்னூர், சாத்தி, திம்பம், உடையார்பாளையம், லோக்கனஹள்ளி. | 52·8 4 | 2 | 211·2 |
| 23. கோயமுத்தூர்—கொள்ளேகால் (வழி) அன்னூர், சாத்தி, திம்பம், லோக்கனஹள்ளி, ஹன்னூர், மங்கலம். | 62·4 4 | 2 | 249·6 |
| 24. உதகமண்டலம்—மைசூர் (வழி) நடுவட்டம், கூடலூர், குண்டல்பெட். மஞ்சன்குட். | 88·0 4 | 2 | 352·0 |
| 25. சென்னை—பெங்களூர் (வழி) சித்தூர், கோலார். | 118·0 4 | 2 | 472·0 (தற்காலிக அனுமதியின் பேரில் விடப்படுகின்றன.) |

## இணைப்பு 2.

தமிழ்நாட்டில் ஓடும் கருநாடக மாநிலத்தைச் சேர்ந்த பேருந்துகள்.

| தொடர் எண்ணும், வழித்தடமும். | வழித்தடத்தின் தொலைவும் பயணத் தடவைகளின் எண்ணிக்கையும் (தமிழ் நாட்டில்). | பேருந்துகளின் எண்ணிக்கை. | தமிழ்நாட்டில் மொத்தப் பயணத் தொலைவு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. பெங்களூர்—தேன்கனிக்கோட்டை (வழி) சந்தாபூர், அனேகல், தளி. | 26·0 2 | 1 | 52·0 |
| 2. தேன்கனிக்கோட்டை—பெங்களூர் (வழி) தளி, கும்லாபுரம், அனேகல், பன்னேர்கட்டா. | 28·0 4 | 1 | 112·0 |
| 3. பெங்களூர்—ஒசூர் (வழி) மாடிவாலா, அட்டிபீலி, ஒசூர். | 7·2 28 | 4 | 201·6 |
| 4. பெங்களூர்—ஒசூர் (வழி) மாடிவாலா, சந்தாபூர், அனேகல், சோளூர் எல்லை, தளி, தேன்கனிக்கோட்டை, கேல்மங்கலம். | 57·6 2 | 1 | 115·2 |
| 5 மடகொண்டபள்ளி—பெங்களூர் (வழி) தளி, அனேகல், பன்னேர்கட்டா. | 23·0 2 | 1 | 46·0 |
| 6. ராயகோட்டா—பெங்களூர் (வழி) ஷேமங்கலம், ஒசூர் கால்நடைப் பண்ணை, பூனஹள்ளி, சாமண்டூர் எல்லை, அனேகல், பன்னேர்கட்டா. | 42·0 2 | 1 | 84·0 |
| 7. மாலூர்—ஒசூர் (வழி) மஸ்தி, பேரிகை, பகலூர். | 29·0 4 | 1 | 116·0 |
| 8. பேரிகை—பெங்களூர் (வழி) பகலூர், சர்ஜாபூர், வரலூர். | 19·0 4 | 1 | 76·0 |
| 9. பெங்களூா—ஜவல்கெரே (வழி) சந்தாப்பூர், தளி. | 24·0 2 | 1 | 48·0 |
| 10. பெங்களூர்—ஷேமங்கலம் (வழி) சந்தாபூர், அனேகல், பூனஹள்ளி, மட்டிகெரே. | 19·0 4 | 1 | 76·0 |
| 11. பெங்களூர்—தேன்கனிக்கோட்டை (வழி) சந்தாபூர், அட்டிபீலி, ஒசூர். | 34·2 4 | 1 | 136·8 |
| 12. பெங்களூர்—குண்டுகோட்டா (வழி) சந்தாபூர், அட்டிபீலி. | 45·6 4 | 1 | 182·4 |
| 13. அத்திமோகம்—பெங்களூர் (வழி) பேரிகை, சர்ஜாபூர், அகரம். | 29·6 4 | 1 | 118.4 |
| 14. மட்டிகெரே—பெங்களூர் (வழி) பூனஹள்ளி எல்லை, அனேகல், சந்தாபூர், ஹிப்பகோடி, மாடிவாலா. | 8·4 4 | 1 | 33·6 |
| 15. பெங்களூர்—தர்மபுரி (வழி) சந்தாபூர், ஒசூர், கிருஷ்ணகிரி. | 105·6 2 | 1 | 211·2 |
| 16. பெங்களூர்—சிக்குப்பனூர் (வழி) அகரம், சர்ஜாபூர், அட்டிபீலி, பூனஹள்ளி, மடகொண்டபள்ளி (ஒப்பந்த ஊர்திகள் எம். பள்ளி வரை செல்ல அனுமதிக்கப்படுகின்றன). | 17·6 4 | 1 | 70·4 |
| 17. பெங்களூர்—பேரிகை (வழி) சர்ஜாபூர் | 17·6 2 | 1 | 35·2 |

இணைப்பு 2—தொடர்ச்சி.

தமிழ்நாட்டில் ஓடும் கருநாடக மாநிலத்தைச் சேர்ந்த பேருந்துகள்—தொடர்ச்சி.

| தொடர் எண்ணும், வழித்தடமும். | வழித்தடத்தின் தொலைவும், பயணத் தடவைகளின் எண்ணிக்கையும் (தமிழ்நாட்டில்). | பேருந்துகளின் எண்ணிக்கை. | தமிழ்நாட்டில் மொத்தப் பயணத் தொலைவு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 18. பெங்களூர்—திருப்பத்தூர் (வழி) சந்தாபூர், அட்டிபிலி, ஓசூர், கிருஷ்ணகிரி. | 105·6 2 | 1 | 211·2 |
| 19. மைசூர்—பன்னேரி (வழி) T. நரசிபூர், மூகூர், சனசயனகாடி, ஹசனூர், திம்பம். | 25·8 4 | 2 | 103·0 |
| 20. மைசூர்—ஈரோடு (வழி) T. நரசிபூர், மூகூர், சனசயனகேரி, காரப்பள்ளம், சாத்தி, கோபி செட்டிபாளையம், கவண்டபாடி, டவானி. | 108·0 2 | 2 | 216·0 |
| 21. கொள்ளேகள்ளி—கோயம்பத்தூர் (வழி) மதுவனஹள்ளி, கமகவை ஹனூர், லோக்களஹள்ளி, பைலூர், சாத்தி, அன்னூர். | 125·0 4 | 2 | 500.0 |
| 22. சாத்தி—கொள்ளேகள்ளி (வழி) பவானி, திம்பம், கடசல், பைலூர், P. G. பாளையம், லோக்கனஹள்ளி, ஹன்னூர், மதுவனஹள்ளி. | 59·5 2 | 1 | 119·0 |
| 23. மைசூர்—உதகமண்டலம் (வழி) நஞ்சன்கூடு, குண்டல்பெட், நடுவட்டம். | 72·0 4 | 2 | 288·0 |
| 24. பெங்களூர்—கோயம்பத்தூர் (வழி) கனகபுரா, கொள்ளேகால், லோக்கனஹள்ளி, பைலூர், திம்பம், லோக்கனஹள்ளி. | 130·0 2 | 2 | 260.0 |
| 25. மைசூர்—கோயம்புத்தூர் (வழி) நஞ்சன்கூடு, சி. எச். நகர், திம்பம், ஹசனூர். | 113·0 4 | 2 | 452·0 |
| 26. பெங்களூர்—சென்னை (வழி) ஓசூர், கிருஷ்ணகிரி. | 325·0 1 | 1 | 325·0 |
| 27. பெங்களூர்—பென்னே வழி சித்தூர். | 232·0 4 | 2 | 928·0 [தற்காலிக அனுமதி.] |
| 28. பெங்களூர்—புதுச்சேரி (வழி) ஓசூர், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை. | 297·0 4 | 2 | 1188·0 [தற்காலிக அனுமதி.] |
| 29. பெங்களூர்—தளி (வழி) சந்தாபூர், அனேகல், கும்லாபூர். | 12·8 4 | 1 | 51·2 |
| 30. பெங்களூர்—மடகொண்டபள்ளி (வழி) மாடிவாலா, பேகூர், கொப்பா, ஜிகானி, அனேகல், பூனஹள்ளி, எல்லை, பெத்தா, பெலகொண்டபள்ளி. | 11·2 4 | 1 | 44·8 |
| 31 பெங்களூர்—ஓசூர் (வழி) கோட்டகிரி, பன்னேர்கோட்டா, ஜிகானி, அனேகல், பூனஹள்ளி, தாசரஹள்ளி, ஆண்டவாடி. | 9 4 | 1 | 36·0 |

## இணைப்பு 3.

### தமிழ்நாடு அரசு இயக்குவதற்கென ஒதுக்கப்பட்ட புதிய வழித்தடங்கள்.

| தொடர் எண்ணும், வழித்தடமும். | வழித்தடத்தின் தொலைவும் பயணத் தடவை களின் எண்ணிக்கையும் (கருநாடக மாநிலத்தில்). | பேருந்து களின் எண்ணிக்கை. | கருநாடகத்தில் மொத்தப் பயணத் தொலைவு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. கோயம்புத்தூர்—மைசூர் (வழி) கொல்லேகால் சாமராஜ் நகர், T. நரசிபுரம் (கொல்லேகாலத்திலிருந்து மைசூர் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது). | 64·1 4 | 4 | 256·4 |
| 2. கோயம்புத்தூர்—மைசூர் (வழி) சத்தியமங்கலம், சாமராஜ் நகர், T. நரசிபூர். | 99·2 2 | 2 | 198·4 |
| 3. திருவண்ணாமலை—பெங்களூர் (வழி) கிருஷ்ணகிரி, ஓசூர். | 35·0 2 | 1 | 70·0 |
| 4. மதுரை—பெங்களூர் (வழி) சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஓசூர். | 35·0 2 | 2 | 70·0 |
| 5. சேலம்—மைசூர் (வழி) ஈரோடு, சத்தியமங்கலம், தாளவாடி, சாமராஜ் நகர். | 96·0 2 | 2 | 192·0 |
| 6. சேலம்—பெங்களூர் (6 வண்டிகளுக்கு கூடுதலாக இரண்டு ஒற்றைப்பயணத் தடவைகள்). | 35·0 12 | 6 | 420·0 |
| | | | 1,206·8 |



## இணைப்பு 4.

### கருநாடக அரசு இயக்குவதற்கென ஒதுக்கப்பட்ட புதிய வழித்தடங்கள்.

| தொடர் எண்ணும், வழித்தடமும். | வழித்தடத்தின் தொலைவும் பயணத் தடவை களின் எண்ணிக்கையும் (தமிழ் நாட்டில்). | பேருந்து களின் எண்ணிக்கை. | தமிழ்நாட்டில் மொத்தப் பயணத் தொலைவு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. சாமராஜ நகர்—சத்தியமங்கலம் (வழி) அத்திருலிபுரம், ஹாசிபாலம், திம்பம், பண்ணாரி. | 41·6 2 | 1 | 83·2 |
| 2. பெங்களூர்—ஓசூர் கால்நடைப் பண்ணை (வழி) அட்டிப்பலி, ஓசூர். | 13·6 4 | 1 | 54·4 |
| 3. பேரிகை—பெங்களூர் (வழி) பாகலூர், சர்ஜாபூர், அகரம். | 17·6 2 | 1 | 35·2 |
| 4. பெங்களூர்—ஓசூர் (வழி) அகரம், சர்ஜாபூர். | 17·6 4 | 1 | 70·4 |
| 5. பெங்களூர்—ஓசூர் (வழி) அகரம், சர்ஜாபூர். | 17·6 4 | 1 | 70·4 |
| 6. தாளவாடி—பெங்களூர் (வழி) கோளிபாளையம். என். எம். ஹள்ளி, எலந்தூர், T. நரசிபுர், டிரிகபெல், ஹித்தனஹள்ளி, கொப்பல், மாலவள்ளி, மட்டூர், மகடி, தவர்கோர். | 4·7 2 | 1 | 9·4 |
| 7. பெங்களூர்—தருமபுரி, தருமபுரி—பெங்களூர், அட்டிபீலி, சந்தாபூர், ஓசூர், ராயகோட்டை, பேபர்பட்டி. | 103·2 2 | 1 | 206·4 |

128-7—31

இணைப்பு 4—தொடர்ச்சி.

கருநாடக அரசு இயக்குவதற்கென ஒதுக்கப்பட்ட புதிய வழித்தடங்கள்—தொடர்ச்சி.

| தொடர் எண்ணும், வழித்தடமும். | வழித்தடத்தின் தொலைவும் பயணத் தடவைகளின் எண்ணிக்கையும் (தமிழ் நாட்டில்). | பேருந்துகளின் எண்ணிக்கை. | தமிழ்நாட்டில் மொத்தப் பயணத் தொலைவு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 8. பெங்களூர்—குண்டுகோட்டா, அஞ்செட்டி வரையில் நீட்டிக்கப்பட்டுள்ளது. | 10·8 2 | 1 | 21·6 |
| 9. பெங்களூர்—ஓசூர், சூளகிரி வரை நீட்டிக்கப் பட்டுள்ளது. | 24·0 2 | 1 | 48·0 |
| 10 மைசூர்—பன்னூரி—சத்தியமங்கலம் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. | 20·8 2 | 1 | 41·6 |
| 11. மைசூர்—டன்னூரி, சத்தியமங்கலம் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. | 20·8 2 | 1 | 41·6 |
| 12. பெங்களூர்—மொட்டூர் (வழி) மடிவாலா நத்தாபுர, அபிலகல், பூமஹள்ளி, மட்டிகேரே, கெலமங்கலம், ராயகோட்டா, பாலக்கோடு, தருமபுரி. | 124·8 2 | 1 | 249·6 |
| 13. வெங்கூர்கோட்—தருமபுரி (வழி) அட்டிபீலி, ஓசூர், கெலமங்கலம், ராயகோட்டா, தருமபுரி. | 105·6 2 | 1 | 211·2 |
| | | | 1,143·0 |

குறிப்பு.—இணைப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள பயணத் தடவை, வழித்தடங்களில் ஒரு தடவை செல்வதாகவோ அல்லது திரும்பி வருவதாகவோ இருக்கும்.



## இணைப்பு IV.

(599 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

1973-74 ஆம் ஆண்டில், இந்நாட்டில், உணவுப் பொருள்களின் விலையும் ஏனைய நுகர் பொருள்கள் மற்றும் தொழிற்சாலை உற்பத்திப் பொருள்கள் ஆகியவற்றின் விலையும் எல்லா வகையிலும் உயர்ந்தன. வரலாறு காணாத வகையில் விலைவாசி ஏறியது. அனைத்திந்திய பொது வாழ்க்கைச் செலவுப் புள்ளியானது, 1973, மார்ச்சில் 216 ஆக இருந்து 1973, டிசம்பரில் 260 ஆயிற்று. வாழ்க்கை உணவுச் செலவுப் புள்ளியானது, 1973, மார்ச்சில் 236 ஆக இருந்து 1973, டிசம்பரில் 289 ஆக உயர்ந்தது. நுகர் பொருள்கள், குறிப்பாக உணவுப் பொருள்கள் கிடைப்பது மிகவும் அரிதாய் இருந்தது. டில்லி, பம்பாய், கல்கத்தா ஆகியவிடங்களிலுள்ள சந்தைகளிலிருந்து அரிசி, கோதுமை, பயறு வகைகள், சமையலுக்கான எண்ணெய்கள் போன்ற இன்றி மையாப் பொருள்கள்கூட இருந்த இடந்தெரியாமல் மறைந்தன. இத்தகைய சூழ்நிலையின் காரணமாக போராட்டங்களும் கட்டுக்கடங்கா வன்முறையும் உருவாகி அரசுகள் கவிழவும் காரணமாய் அமைந்தது.

இத்தகைய இருளார்ந்த சூழ்நிலையில் நாடு நலிந்து தவித்துக் கொண்டிருக் கையில், பொதுமக்களும் உற்பத்தியாளர்களும் மன நிறைவு பெறும் வகையில் தமிழ்நாடு தனித்து நின்று தன்னை எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகளைச் சமாளித்தது. ஒரு சிலரால் செயற்கையாக ஏற்பட்ட நெருக்கடிகள் தவிர, மற்றபடி, மாநிலம் முழுதும், போதுமான அளவுகளில், நியாயமான விலை களில் பொருள்கள் வழங்கப்பட்டன. தமிழ்நாட்டில், வாழ்க்கை உணவுச் செலவுப் புள்ளி 1973, மார்ச்சில் 216 ஆக இருந்து 1973, டிசம்பரில் 241 ஆக உயர்ந்தது என்பதையும், அனைத்திந்திய அளவில் இவ்வுயர்வு 22.4 சத வீதமாக இருக்க, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இவ்வுயர்வு 11.6 சத வீதம்தான் என்பதைக் கேட்டு நமது மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சி யடைவர். முக்கியமாக, தானிய வகைகள், எண்ணெய் வகைகள் ஆகியவற்றின் விலைகள் உயர்ந்த காரணத்தால் இந்த விலை உயர்வு ஏற்பட்டது, பயறு வகைகள், 4 சத வீதம் விலை குறைந்தன. எண்ணெய்கள் 14 சதவீதம் விலை உயர்ந்தன. துரதிருஷ்டவசமாக, எண்ணெய் வித்துக்கள் நமது மாநிலத்தில் குறைந்த அளவில்தான் உற்பத்தியாகின்றன. இவ்வகையில் நாம் பெரும் பாலும் பிற மாநிலங்களையே நம்பியிருக்க வேண்டிய நிலையுள்ளது. தானியங் களின் விலை 15.5 சதவீதம் உயர்ந்தது.

உரம், பூச்சிக்கொல்லி மருந்து, பயிர்நோய் பூச்சிக் கொல்லி மருந்து ஆகிய வகைகளில் பற்றுக்குறை ஏற்பட்டிருந்தும் இயற்கை நம்மிடம் காட்டிய பரிவு, ஊறத்தாழ நல்ல விளைச்சல் ஏற்பட்டது ஆகியவையே இதற்கு ஓரளவு காரண

மாகும். இருப்பினும், நமது மாநிலத்திலுள்ள மனநிறைவளிக்கும் நிலைமைக்கு இதுவே முழு காரணமாகச் சொல்லமுடியாது. சில மாநிலங்களில் மிகு விளைச்சல் காணப்பட்டபோதிலும், நெருக்கடி மிகுந்து காணப்பட்டது.

நியாயமான விலைகளில் போதுமான அளவுக்கு வெளிச்சந்தை கொள்முதல் செய்தல், உரிய நேரத்தில் ஆதரவு விலையில் கொள்முதல் செய்தல், லெவி முறை மூலம் உற்பத்தியாளர்களுக்குத் தேவையற்ற தொல்லை தருவதைத் தவிர்த்தல் ஆகியவற்றின் மூலம் உற்பத்தியாளர்களுக்கு எல்லாவகையிலும் அரசு ஊக்க மளித்தது. அரிசி வணிகத்தைப் பொறுத்தவரையில், அவசியமான இடங்களி லெல்லாம் எளிய மக்களுக்குப் பொதுப்பங்கீட்டு முறை மூலம் பொருள்களை வழங்கியும் மாநில முழுவதிலும் கோதுமை, கோதுமைப் பொருள்கள், சர்க்கரை ஆகியவற்றின் மொத்த வணிகத்தை மேற்கொண்டும் பாதகமான சூழ்நிலை உருவாகும் என்று தோன்றிய சமயங்களில் இன்றியமையாப் பொருள்களின் விலை உயராமல் இருக்க, வணிகம் மற்றும் தொழில் வகைகளில் தொடர்ந்தாற் போல் தொடர்பு கொண்டும் பொது மக்களின் நலனில் அக்கறை காட்டி னோம். பயறு வகைகளுக்கு விற்பனை வரிவிலக்கு அளிப்பது மக்களுக்கு நன்மை பயக்கும் என்று தெரியவந்ததால், பயறு வகைகளுக்கு விற்பனை வரியிலிருந்து நாம் விலக்களித்தோம். இம்மாநிலத்தில் மனநிறைவளிக்கும் சூழ்நிலை நிலவிவருவதற்கு இதுவே முக்கிய காரணமாகும்.

### அரிசி பற்றிய கொள்கை.

அரிசி, நெல் வணிகத்தை முறைப்படுத்தவும், விலைவாசி ஒரு நிலையிலிருக்கு மாறு பார்த்துக் கொள்ளவும், ஒரு சீரான பங்கீட்டு முறையைச் செயற்படுத்த வும் இயலும் வகையில் இம் மாநிலம் 19 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. ஏற்றுமதி செய்யும் மாவட்டத்தின் ஆட்சித் தலைவரால் வழங்கப்படும் அனுமதி கள் மேலன்றி மற்றப்படி ஒரு மண்டலத்திலிருந்து மற்றொரு மண்டலத்திற்கும் இடையே அரிசி நெல் கொண்டு செல்லப்படுவதற்குத் தடை விதிக்கப்பட்டது.

1973-74-ஆம் ஆண்டில், பொதுப்பங்கீட்டு முறைக்கும் அண்டை மாநிலங் களுக்கு உரிய தருணத்தில் வழங்கவும், மத்தியத் தொகுப்பு ஏற்பாட்டுக்கு அனுப்பவும் தேவைப்படும் தானியங்களைப் பெரும்பொருட்டு வணிகர்கள், ஆலையதிபர்கள் ஆகியோர் மீது லெவி விதிக்கும் கொள்கையைத் தொடர்ந்து அரசு பின்பற்றியது. அறுவடை, விற்பனை நிலைமைகளையொட்டி வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு பகுதிகளில் லெவி விதிக்கப்பட்டது. 20 சதவீதம்



முதல் 33—1/3 சதவீதம் வரை வெவ்வேறு விகிதங்களில் லெவி விதிக்கப் பட்டது. இந்த லெவி விதிப்பு மூலம் நாம் 1,14,027 டன் அரிசியைச் சேகரிக்க முடிந்தது. மேலும், குறுவை பருவத்தின்போது அறுவடையான நெல்லை ஆதரவு விலையில் விற்பனை செய்யும் வகையில் சிக்கல்கள் தோன்றியபோது தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு கழகமும் இந்திய உணவுக் கழகமும் சேர்ந்து 91,367 டன் அரிசி வாங்கப்பட்டது. பல்வேறு வகைகளில் கொள் முதல் செய்யப்பட்ட அரிசியின் அளவு மொத்தம் 2,09,398 டன்னாகும். இதில், சென்னை, கோயம்புத்தூர், கன்னியாகுமரி மாவட்டங்களில் பொதுப்பங்கீட்டு முறைக்காக 98,590 டன் அரிசி எடுத்துக் கொள்ளப்பட்டது, மத்தியத் தொகுப்பு ஏற்பாட்டிற்கு மாநிலத்தின் பங்காக 1,11,435 டன் அரிசி கொடுக்கப்பட்டது, இருதரப்பு உதவித் திட்டத்தின் கீழ் பின்வரும் மாநிலங் களுக்கு 34,000 டன் அரிசி கொடுக்கப்பட்டது.—

| | (டன்கள்.) |
|---|---|
| மகாராஷ்டிரம் | 10,000 |
| குஜராத் | 11,000 |
| கேரளா | 9,000 |
| மைசூர் | 3,000 |
| மேற்கு வங்காளம் | 1,000 |
| | 34,000 |

சென்னை, கோயம்புத்தூர் மாநகர்களிலுள்ள, திங்களொன்றுக்கு ரூ. 300 அல்லது அதற்குக் குறைவான வருமானமுள்ள குடும்பங்களுக்கு முறையின் மையில் Informal distribution system அரிசி வழங்கும் முறையை நாம் தொடர்ந்து மேற்கொண்டோம். இதன் மூலம் 28.25 லட்சம் பேர் பயன் பெற்றனர். எல்லையோரப் பகுதியைத் தாண்டி அரிசி கடத்திச் செல்லப் படுவதைத் தடுக்கவேண்டி கடுமையான கட்டுப்பாடு விதிக்கப்பட வேண்டி வந்த கன்னியாகுமரி மாவட்ட எல்லையோரப் பகுதிகளில் அரிசி கிடைக்கச் செய்யவும், நெல் உற்பத்தியாகாத இப்பகுதியில் நியாய விலையில் அரிசி கிடைக்கச் செய்யவும், விளவங்கோடு வட்டத்திற்கும் கல்குளம் வட்டத்தைச் சேர்ந்த பத்து கிராமங்களுக்கும் பொதுப்பங்கீட்டுத் திட்டம் நீட்டிக்கப் பட்டது. இத் திட்டத்தின்மூலம் அப்பகுதியிலுள்ள 10.91 லட்சம் மக்கள் பயன் பெற்றனர்.

[1974 மார்ச் 22

### கோதுமை.

நமது மாநிலத்திற்கு, 1972-73-ல் மொத்தம் 3,59,000 டன் கோதுமை ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்க 1973-74-ல் மொத்தம் 1,47,000 டன் அளவுக்கே கோதுமை ஒதுக்கீடு செய்யப்பட்டது. கடந்த இரு மாதங்களில் கோதுமை ஒதுக்கீடு படிப்படியாக குறைக்கப்பட்டது. மாதந்தோறும் சாதாரணமாக 34,000 டன் கோதுமை ஒதுக்கப்படுவது வழக்கம், ஆனால், தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது 9,000 டன்தான். கோதுமை ஒதுக்கீட்டில் இத்தகையதொரு கடுமையான வெட்டு இருந்தபோதிலும், கோதுமை உணவு உண்போர், நீரிழிவு நோயாளிகள், கோதுமையைப் பெருமளவில் பயன்படுத்தும் ஓட்டல்காரர்கள், ரொட்டிக் கடைக்காரர்கள், சேமியா தயாரிப்பாளர்கள், பிஸ்கட் தயாரிப்பாளர்கள் ஆகியோரின் நியாயமான தேவைகளையும் நாம் நிறைவு செய்து, சமாளித்து வருகிறோம். கோதுமை, கோதுமைப் பொருள்கள் மொத்த வணிகத்தை முழு மனதோடும், வெற்றிகரமாகவும் மேற்கொண்ட ஒரே அரசு தமிழ்நாடு அரசாகத்தான் இருக்க முடியும்.

தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு நிறுவனத்தின் கடைகளிலிருந்தும், கூட்டுறவு பண்டகசாலைகளிலிருந்தும் கீழ்க்கண்ட கட்டுப்பாடு விலைகளில் பொதுமக்களுக்கு கோதுமையும், கோதுமைப் பொருள்களும் விற்கப்படுகின்றன.

| | (கிலோ கிராம் ஒன்றுக்கு ரூபாய்.) |
|---|---|
| கோதுமை | 1.00 |
| மைதா | 1.30 |
| ரவை | 1.30 |
| கப்பி ஆட்டா | 1.00 |

தற்போது, கோதுமை உணவு உண்போருக்கும், நீரிழிவு நோயாளிகளுக்கும், திங்களொன்றுக்கு, முறையே, ஆறு கிலோ, ஐந்து கிலோ வீதங்களில் நாம் கோதுமை வழங்கி வருகிறோம். கோதுமையை பெருமளவில் பயன்படுத்துவோரின் 1971—72 ஆண்டு மொத்தக் கணக்கு 1972, ஏப்ரலிலிருந்து 1972, செப்டம்பர் வரை கோதுமை விற்பனை மீது கட்டுப்பாடு இராத, பற்றாக்குறை இராத நிலை இருந்தபோது அவர்கள் வாங்கிய கோதுமையின் அளவு ஆகியவற்றில் எது குறைவோ அதைக் கணக்கிற் கொண்டு, அவர்களுக்காக



1974 மார்ச் 22]

கோதுமை ஒதுக்கீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பெரும் வேறுபாடுகள் காணப்படும் நேர்வுகளில், 1969—70, 1970—71, 1971—72 ஆண்டுகளுக்கான மொத்தக் கணக்குகள் கணக்கிற் கொள்ளப்படுகின்றன. கிடைக்கக்கூடிய கோதுமையின் அளவுக்கேற்ப, ரொட்டி தயாரிப்பாளர்களுக்கு அதிக முக்கியத்துவமும், சேமியா தயாரிப்பாளர்களுக்கு குறைந்த முக்கியத்துவமும் அளிக்கப்பட்டு பங்கீடு முறைப்படுத்தப்படுகிறது.

பங்கீடு அட்டை பெற்றுள்ளோருக்கு எஞ்சிய கோதுமையிலிருந்து சிறு அளவில் கோதுமை வழங்கப்படுகிறது. நம்முடைய குறைந்த அளவு நியாயமான தேவைகளை நிறைவு செய்ய நமக்கு 20,000 டன் கோதுமை தேவைப்படுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

### சர்க்கரை.

சர்க்கரைத் தொழிற்சாலைகளிலிருந்து பல்வேறு பகுதிகளுக்குச் சர்க்கரை வழங்குவதை மத்திய அரசு முறைப்படுத்துகிறது. இந்நாட்டில் உற்பத்தியாகும் சர்க்கரையில் 70 சதவிகிதத்தை இந்திய அரசு லெவி சர்க்கரையாக எடுத்துக் கொண்டு, அந்தச் சர்க்கரையை ஏற்றுமதி செய்வதுடன் பல்வேறு மாநிலங்களின் சொந்தப் பயனுக்காகவும் ஒதுக்கீடு செய்கிறது. சர்க்கரைத் தொழிற்சாலைகள், எஞ்சிய 30 சதவீத அளவு சர்க்கரையை இந்தியாவின் எப்பகுதியிலும் உள்ள சந்தைகளில் தாராளமாக விற்பனை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது. லெவி சர்க்கரையானது நாடு முழுவதும் கிலோ ஒன்றுக்கு ரூபாய் 2.15 என்ற குறிப்பிட்ட விலையில் விற்கப்படவேண்டும். 1973–74-ம் ஆண்டில், தமிழ் நாட்டிற்கு பிற்சேர்க்கையில் குறிப்பிட்டுள்ளவாறு மொத்தம் 1,24,660.12 டன் சர்க்கரை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உணவுப் பொருள் வழங்கு ஆணையாளர், மாநிலத்திற்கென்று ஒதுக்கப்பட்டுள்ள சர்க்கரையை, நபர்வாரி அடிப்படையில் மாவட்டங்களுக்குப் பங்கீடு செய்கிறார். தேவைப்படும் அளவை நிர்ணயிக்க கீழ்க்கண்ட விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றன :—

| வருமானம். | நகர்ப் பகுதிகள். | கிராமப் பகுதிகள். |
|---|---|---|
| ஒரு திங்களுக்கு ரூபாய் 300-ம் அதற்குக் குறைந்தும். | 2 கிலோ. | 1 கிலோ. |
| ஒரு திங்களுக்கு ரூபாய் 301 முதல் ரூபாய் 499 வரை. | 4 கிலோ. | 2 கிலோ. |
| ஒரு திங்களுக்கு ரூபாய் 500–ம் அதற்கு மேற்பட்டும். | 6 கிலோ. | 4 கிலோ. |

மேற்சொன்ன வகையில் பார்த்தால், இம்மாநிலத்திற்குத் திங்களொன்றுக்கு மொத்தம் 14,000 டன் சர்க்கரை தேவைப்படும்.

இவ்வாறு மாவட்ட அளவில் சர்க்கரை ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்னர், பல்வேறு மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்கள், மேற்சொன்ன அடிப்படையில் (சிறு மாறுதல்களுடன்) தத்தம் மாவட்டங்களில் இந்த ஒதுக்கீட்டுச் சர்க்கரையைப் பங்கீடு செய்கிறார்கள்.

இம்மாநிலத்தில், அவ்வப்போது துணை மொத்த வணிகர்களாகச் ( Sub-wholesalesr ) செயல்படும் கூட்டுறவுகளின் உதவியுடன், தமிழ்நாடு உணவுப்பொருள் பங்கீட்டுக் கழகமே சர்க்கரை மொத்த வணிகத்தை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கல் கழகத்தின் சில்லறை விற்பனைக் கடைகள், கூட்டுறவுகள், தனிப்பட்ட விற்பனையாளர்கள் ஆகியோர் மூலம் சில்லறைப் பங்கீடு செய்யப்படுகிறது. தனிப்பட்ட விற்பனையாளர்கள் செய்யும் சர்க்கரைப் பங்கீட்டை கூட்டுறவுகளே படிப்படியாக மேற்கொள்ள வேண்டுமென்று அரசு அண்மையில் கொள்கை முடிவெடுத்தது. பங்கீட்டு முறை அலுவலவேனும் ஊறு ஏற்படாவண்ணம் இக்கொள்கை பின்பற்றப்படுகிறது.

சர்க்கரைப் பங்கீடு செய்யும் செயல்நோக்கத்திற்காக, இம்மாநிலத்திலுள்ள (நகர்ப்புற, கிராமப்புற) மக்களனைவருக்கும் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்தில் 94,82,604 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

**பயறு வகைகள்.**—நமது மாநிலத்தில் பயறு வகைகளின் உற்பத்தி மிகவும் குறைவாகவே உள்ளது. கீழ்க்கண்ட அட்டவணை பயறு வகைகளில் நமது தேவை உள்ளூரில் உற்பத்தியாகும் அளவு, ஏனைய மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அளவு ஆகிய விவரங்களைக் காட்டும் :—

| (1) | உள்ளூர் உற்பத்தி. (2) | இறக்குமதி அளவு. (3) | உபயோக அளவு. (4) |
|---|---|---|---|
| துவரையும், துவரம் பருப்பும் .. .. | 46,000 | 65,000 | 1,11,000 |
| உளுந்தும், உளுந்தம் பருப்பும் .. .. | 36,000 | 50,000 | 86,000 |
| பச்சைப்பயறும், பச்சைப் பருப்பும் .. .. | 28,000 | 3,000 | 31,000 |
| கொண்டைக்கடலையும் கடலைப் பருப்பும் .. .. | 2,000 | 2,40,000 | 2,42,000 |
| மொத்தம் .. | 1,12,000 | 3,58,000 | 4,70,000 |



விலை குறைப்பிற்கு வழியே இல்லை என்பதை இதன்மூலம் அறியலாம். அரசு விலைகளை நிர்ணயம் செய்து கட்டுப்பாடு விதிக்க வேண்டும் என்று இந்த அவையில் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. இவ்வகையில் சரிப்பட்டு இணங்கும் தாக்குறைவான கொள்கையைப் பின்பற்றினால் மோசமான பற்றாக்குறை நிலை ஏற்படும் என்ற காரணத்தால் நாம் அக்கொள்கையைப் பின்பற்றவில்லை.

ஏனெனில் இவ்வகையில் வெளியிடங்களிலிருந்து இறக்குமதி செய்ய வணிகர்கள் மறுப்பர். மக்கள்பட்ட தொல்லைகளே நம்மை இந்த சரியான முடிவெடுக்கச் செய்தது. நாமாக முடிவெடுக்கவில்லை. அத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இந்தியப் பாதுகாப்பு விதிகளின்கீழ் இன்றியமையாப் பொருள்கள் சிலவற்றின் விலைகள் நிர்ணயம் செய்யப்பட்ட மாநிலங்கள் சிலவற்றில் பொருள்கள் பதுக்கப்பட்டு, அவை கிடைப்பதே அரிதாகிவிட்டது. மக்கள் சொல்லொணாத் துயருற்ற காரணத்தால் அக்கொள்கையைக் கைவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. நாம் அதிக விலைகள் கொடுத்து வாங்கியிருக்கிறோம்; ஆனால் பொருள்கள் கிடைக்காத சூழ்நிலை நமக்கு ஏற்படவில்லை.

**சமையல் எண்ணெய்கள்.**—எண்ணெய் வகைகளைப் பொறுத்த வரையில் நிலைமை இன்னமும் மோசமாக இருந்தது. சமையல் எண்ணெய்களின் விலை ஒரேயடியாய் உயர்ந்து, அவை கிடைப்பதே அரிதாகி விட்டது. நமது மாநிலத்தில் வேர்க்கடலை நீங்கலாக ஏனைய வகைகளின் உற்பத்தி மிகவும் குறைவே என்ற உண்மையும் இந்த அவைக்குத் தெரியும். வேர்க்கடலை விற்பனைக்கு லெவி விதிப்பதன் மூலம் கடலெண்ணெயின் விலையைக் குறைப்பதற்குத் தீர்வு காண முயன்றோம். வேர்க்கடலை விற்பனைக்கு 25 சதவித லெவி விதித்து அவற்றைக் கொண்டு எண்ணெய் தயாரித்து நமது மக்களுக்குக் கிலோ ஒன்றுக்கு ரூபாய் 6 வீதம் விற்பனை செய்ய விரும்பினோம். துரதிருஷ்டவசமாக இதற்கு இந்திய அரசு அனுமதி வழங்கவில்லை. இவ்வகையில் நாம் மீண்டும் மீண்டும் முறையிட்டுக் கொண்டபோதிலும் பயனுள்ள பதிலேதும் இந்திய அரசிடமிருந்து வரவில்லை.

ஓரளவேனும் உறுதியாக எண்ணெய் கிடைக்கச் செய்யும் முயற்சியில் தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கு கழகமானது தாவர எண்ணெய்களை இருப்பு வைத்திருந்தோரிடமிருந்து சிறிய அளவில் எண்ணெய்களைப் பெற்று கழகத்தின் சில்லறை விற்பனை நிலையங்கள் மூலமாக அவற்றை விற்பனை செய்தது. விநியோகத்திற்கென்றுள்ள வனஸ்பதியை நியாய விலைக் கடைகள்

[1974 மார்ச் 22

மூலம் விற்பனை செய்ய தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கு கழகமானது வனஸ்பதி தயாரிப்பாளர்களின் முகவர்களாக இருக்க வேண்டுமென்று அத்தயாரிப்பாளர்களுக்கு நிபந்தனை விதிக்கப்பட வேண்டுமென்றும் நாம் இந்திய அரசிடம் முறையீடு செய்துகொண்டோம். அவ்வாறு செய்ய தம்மால் இயலாது என்று தெரிவித்த இந்திய அரசு வனஸ்பதி தயாரிப்பாளர்களுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தமானது தற்போதைய ஏற்பாட்டின் மூலமே மொத்த பங்கீட்டை மட்டும் அனுமதிக்கும் என்று குறிப்பிட்டுள்ளது.

**மண்ணெண்ணெய்.**—இந்திய அரசு நமக்கு மாதந்தோறும் சராசரியாக 30,000 மெட்ரிக் டன் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்து வருகிறது. தூய்மைப்படுத்தப்படாத எண்ணெய்க்குத் ( Crude oil ) தட்டுப்பாடு வந்தபோது இந்த ஒதுக்கீடு படிப்படியாகக் குறைக்கப்பட்டது. 1974, பிப்ரவரியில் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு 20,000 மெட்ரிக் டன் அளவுக்குக் குறைந்து விட்டது. மண்ணெண்ணெய், உயர் வேக டீசல் எண்ணெய் ஆகியவற்றின் விலைகள் சீரமைக்கப்பட்டதன் காரணமாக டீசல் மண்ணெண்ணெய் கலப்படம் குறைந்தது. எனவே மண்ணெண்ணெய் தேவை சுமார் 15 முதல் 20 சதவீதம் வரை குறைந்துள்ளது. எனினும் நம்முடைய தேவை இன்னமும் 24,000 மெட்ரிக் டன் முதல் 25,000 மெட்ரிக் டன் வரை என்ற அளவில்தான் உள்ளது. இடர்பாடான காலத்தை நாம் எதிர்நோக்க வேண்டியுள்ளது என்று டில்லியிலிருந்து அடிக்கடி அறிக்கைகள் வந்தவண்ணம் இருக்கின்றன. மண்ணெண்ணெய் விலை ஏறலாம். வழங்கப்படும் அளவு குறைக்கப்படலாம் என்றெல்லாம் அறிக்கைகள் வருவதன் காரணமாக மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்ற உணர்வு அவ்வப்போது உருவாகி வருகிறது. ஆனால் மொத்த விற்பனையாளர்களும் சில்லறை விற்பனையாளர்களும் செய்யும் விற்பனையைக் கடுமையாகக் கண்காணிப்பதன் மூலமும் விலைக் கட்டுப்பாட்டை கடுமையாகச் செயல்படுத்துவதன் மூலமும் நிலைமையை நம்மால் சமாளிக்க முடிந்தது.

பல்வேறு உரிமம் வழங்குதல் மற்றும் கட்டுப்பாடு விதித் துறைகளை அரசு செவ்விய முறையில் செயல்படுத்தி வந்துள்ளது. உணவு தானியங்களை எல்லைக்கப்பால் கடத்திச் செல்வதைத் தடுக்கும் பொருட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள், சோதனைச் சாவடி ஏற்பாடுகள் ஆகியவை கடுமையாக்கப்பட்டுள்ளன. எல்லை நெடுக சுற்றுக்காவல் பணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. கடத்தல் நடக்கும் முக்கியமான இடங்களில் தமிழ்நாடு சிறப்பு காவல் துறையினரின் பணிகள் பயன்படுத்தப்பட்டன. சட்டப்படியான எல்லைப் பகுதிகளில் உணவு தானியங்களைக் கொண்டு செல்வது முறைவு அனுமதிச் சீட்டு முறை முறைப்படுத்தப்பட்டது. நெல், அரிசி ஆகியவற்றின் போக்குவரத்தை கட்டுப்படுத்துவதற்காக எல்லையோரப் பகுதியைச் சுற்றி இரண்டாவது பாதுகாப்பு மண்டலம் ஒன்று தனியாக அமைக்கப்பட்டது. புலனாய்வுத் துறை உணவுப் பொருள் குற்றங்கள் குறித்த பிரிவு, பதுக்கி வைக்கப்பட்டுள்ள உணவுத் தானியங்கள் மற்றும் இன்றியமையாத பொருள்கள் ஆகியவற்றை வெளிக் கொண்டுவர பல திடீர் சோதனைகளை நடத்தியது.



இந்திய முன்னேற்பாடுகள் தவிர, பிரபலமான கள்ளக் கடத்தல்காரர்கள் மற்றும் பதுக்கல்காரர்கள் ஆகியோர் உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

மொத்தத்தில் உணவுத் தானிய நிலைமையை அரசு கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. தேசிய அரங்கில் தமிழ்நாடு ஒரு பாலைவனப் பசுஞ்சோலையாக இருக்கிறது என்பது அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

**1974-75 ஆம் ஆண்டு கண்ணோட்டம்.**

தேசிய பொருளாதாரம் இன்னும் இடர்பாடுகளிலிருந்து விடுபடவில்லை. அப்படியே விடுபட்டிருந்தாலும்கூட அந்த இடர்பாடுகள் இன்னும் நம்மை அச்சுறுத்தி வருகின்றன. உரங்கள், பயிர்ப் பூச்சிக் கொல்லிகள், பூச்சி மருந்து ஆகியவற்றின் பற்றாக்குறை நிலைமைகள் பசுமைப் புரட்சியின் அடிப்படைக் கொள்கையையே அச்சுறுத்துகின்றன. அதன் விளைவாக நமது உணவுக் கொள்கை, இன்றியமையாப் பண்டங்கள் வழங்குதல் ஆகியவற்றையும் பாதித்தன. நம்பிக்கையுடனும், நல்லெண்ணத்துடனும் நம் பணியை நாம் தொடங்கினாலும் நம்மை அச்சுறுத்தி வரும் இச்சிக்கல்களை நாம் மறந்துவிடக் கூடாது.

உற்பத்திப் பொருள்களுக்கு நியாய விலை அளிப்பதன் மூலம் உற்பத்தி செய்வோருக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் பெற உறுதி அளிக்கலாம். வேளாண்மைப் பொருள் விலை ஆணைக் குழுவின் பரிவுரையின் மேல் இந்திய அரசு முடிவு செய்த பல்வேறு தானிய வகைகளின் கட்டுப்படியாகும் விலைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | | ரூ. | |
|---|---|---|---|
| நடுத்தர ரக நெல் | .. | 70 | ஒரு குவிண்டால். |
| சோளம் .. | .. | 63 | ஷை |
| கம்பு .. | .. | 65 | ஷை |
| மக்காச் சோளம் | .. | 63 | ஷை |
| கேழ்வரகு .. | .. | 62 | ஷை |

[1974 மார்ச் 22

இந்த தானிய வகைகளில் அங்காடி விலையில் குறைவு ஏற்படும்போது விற்பனைக்கான பொருள்கள் முழுவதையும் அரசு ஆதரவு விலையில் எடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கும்.

1974 ஆம் ஆண்டின் சம்பா அறுவடைக் காலத்தில் வெளிச்சந்தை மூலமும் லெவி முறை மூலமும் 1.25 இலட்சம் டன்கள் அரிசி கொள்முதல் செய்வது என்று அரசு முடிவு செய்துள்ளது. இதை உறுதி செய்வதற்கு தமிழ்நாடு நெல் அரிசி போக்குவரத்துக் கட்டுப்பாட்டு ஆணையின்கீழ் இம் மாநிலம் 19 தனி மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வணிகர்கள் கொள்முதல் செய்யும், கொண்டு செல்லும் தானியங்கள் மீது 25 முதல் 40 சதவீதம் லெவி விதிக்கப்பட்டுள்ளது. 1974 ஆம் ஆண்டு பிப்ரவரி இறுதி வரையில் லெவி மூலமும் வெளிச் சந்தை மூலமும் 79,688 டன்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. இந்த இருப்பானது பொதுமக்களுக்குப் பங்கீடு செய்ய போதுமானது. நெருக்கடியான நேரங்களில் முன் இருப்புக்களை வைத்திருக்கவும் நாம் கருதியுள்ளோம்.

தனியார் வர்த்தகமும் அரசின் நிர்வாகத்தில் உள்ள பொதுப் பங்கீட்டு முறையும் ஒருங்கே செயல்பட்டு வருகின்ற கூட்டுப் பொருளாதாரத்தில் பொது மக்களுக்கு ஈடு செய் விலையில் தானியம் வழங்குகையில் செயற்கை பற்றாக் குறையையும் கள்ளச் சந்தையையும் ஏற்படுத்தும் என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். இம்முறையினால் உண்மையாக பொருள்களைப் பயன் படுத்துபவர்கள் இடர்பாடுகளுக்கு உள்ளாகின்றனர். வஞ்சக வியாபாரிகள் ஆதாயம் அடைகின்றனர். இந்தத் நிலைமையைத் தடுக்கும் பொருட்டு உணவுத் தானியங்களை நாம் ஈடுசெய் தொகை ஏதுமின்றி கட்டுப்படியாகக் கூடிய விலைகளில் பங்கீடு செய்து வருகிறோம். இதனால் சீரான முறையில் உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. கள்ளச் சந்தை ஏற்படுவதற்கான வாய்ப்பும் குறைக்கப்படுகிறது.

அரிசி தவிர, மோட்டா ரக தானியங்களின் அங்காடி விலைகள் நிர்ணய விலையைவிட குறைவாயிருந்தால், அவற்றையும் அரசு எடுத்துக் கொள்ளும்.

கோதுமை, சர்க்கரை குறித்த நமது கொள்கை மாறாமலிருக்கும். தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கல் கழகத்தின் மொத்த வாணிகம் மூலம் கோதுமை லெவி சர்க்கரை ஆகியவற்றின் வாணிகத்தை நாம் தொடர்ந்து நடத்துவோம். கூட்டுறவுகளின் சில்லறை விற்பனை பண்டக சாலைகளை அதிக அளவில் பயன்படுத்துவோம். இந்த பண்டங்கள் குறித்த குறைந்த அளவு தேவைகளை மத்திய அரசு ஈடு செய்யும் என எதிர்பார்க்கிறோம்.



1974 மார்ச் 22]

தானிய வகைகள், மண்ணெண்ணெய் ஆகியவை குறித்த மட்டில் தனியார் வணிகத்துடன் இப்பொருள் விற்பனையில் தமிழ்நாடு உணவு வழங்கு கழகம் அதிக அளவில் பங்கெடுத்துக் கொள்வதே நமக்கு வெற்றி அளிக்கக் கூடிய ஒரே கொள்கையாகும். இப்பண்டங்களில் 25 சதவிதத்தை நாம் எட்டினோமாயின் பொருளாதாரத்தில் தாழ்ந்த மக்கள் உள்ள பகுதிக்கு நியாய விலையில் வழங்க முடியும். பங்கீட்டு முறையில் மட்டுமின்றி விலையை நிர்ணயிப்பதிலும் நமது கை ஓங்கியிருக்கும். வரும் ஆண்டில் இது குறித்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வோம். குழந்தை உணவு போன்ற பற்றாக்குறை ஏற்படக் கூடிய இன்றியமையாப் பொருள்களுக்கும் இதே கொள்கை கையாளப்படும்.

மண்ணெண்ணெய் பொறுத்த வரையில் தனிப்பட்ட வணிகர்கள் மூலமான விற்பனையை கட்டுப்படுத்துவதில் மிகக் கவனமாக இருந்து வருகிறோம். மண்ணெண்ணெய் கம்பெனிக் கிடங்குகளிலிருந்து மொத்த வியாபாரிகளுக்கும், மொத்த வியாபாரிகளிடமிருந்து சில்லறை வியாபாரிகளுக்கும், சில்லறை வியாபாரிகளிடமிருந்து பொது மக்களுக்கும் செல்வதில் கூர்ந்த கவனம் செலுத்துவோம். மத்திய அரசு தேவையான அளவு மண்ணெண்ணெய் வழங்கி அது பகிர்ந்தளிக்கப்படுவதைக் கூர்ந்து கண்காணிப்பதன் மூலம் நமது தேவைகளை நிறைவு செய்யமுடியும். பற்றாக்குறை நிலை ஏற்படின் கூட்டுறவு சங்கங்கள் அல்லது சில்லறை விற்பனை நிலையங்கள் மூலம் குடும்ப அட்டைகளின் அடிப்படையில் சீரான முறையில் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய நாம் தயங்கமாட்டோம்.

தலைச்சுமையாக ஓரளவு உணவு தானியம் கடத்தப்பட்டாலும், திட்டமிட்டு லாரிகள் மற்றும் போக்குவரத்து வாகனங்களில் உணவு தானியங்களைக் கடத்திச் செல்வதை நம்மால் தடுக்க முடிந்துள்ளது. கடந்த ஆண்டில் உள்நாட்டுப் பாதுகாப்பு விதிகளின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள், கைப்பற்றப்பட்ட உணவு தானியங்களின் அளவு, வழக்குத் தொடரப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆகியவை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | 1973 |
|---|---|
| பதிவு செய்யப்பட்ட மொத்த வழக்குகள் | 10,505 |
| கைப்பற்றப்பட்ட இன்றியமையாப் பொருட்களின் அளவு— | |
| அரிசி .. .. .. | 31,026·93 குவிண்டால் |
| நெல் .. .. .. | 20,458·75 குவிண்டால் |
| மோட்டா ரக தானியங்கள் .. .. | 8,295·83 குவிண்டால் |

கைப்பற்றப்பட்ட இன்றியமையாப் பொருட்களின் அளவு—

| | |
|---|---|
| வனஸ்பதி .. .. .. | 37·18 குவிண்டால் |
| மண்ணெண்ணெய் .. .. | 139,713·00 லிட்டர் |
| உரம் .. .. .. | 1,321·98 குவிண்டால் |
| கோதுமையும், கோதுமைப் பொருள்களும். | 845·54 குவிண்டால், |
| சிமிட்டி .. .. .. | 770·12 குவிண்டால். |
| குழந்தை உணவு .. .. | 78 டின்கள். |
| டீசல் .. .. .. | 4,559 லிட்டர். |
| பெட்ரோல் .. .. .. | 5,414 லிட்டர். |
| இயந்திர எண்ணெய் .. .. | 810 லிட்டர். |
| சமையல் எண்ணெய் .. .. | 2,014 லிட்டர். |
| சர்க்கரை .. .. .. | 42·01 குவிண்டால். |
| கைப்பற்றப்பட்ட பண்டங்களின் மதிப்பு. | ரூ. 62,25,542 |
| உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 31 |

இந்திய பாதுகாப்பு விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டவர்கள்—

| | |
|---|---|
| இந்திய பாதுகாப்பு விதிகளின் கீழ் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 126 |
| தண்டனை அளிக்கப்பட்டவர்கள் | 20 |
| விசாரணையில் உள்ள வழக்குகள் | 28 |
| புலன் விசாரணையில் உள்ள வழக்குகள். | 73 |
| தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகள். | 5 |

கள்ளக்கடத்தல், பதுக்கல், கள்ளச் சந்தை ஆகியவற்றைத் தடுக்கும் பொருட்டு பல்வேறு கட்டுப்பாட்டு ஆணைகள், சட்டங்கள் ஆகியவற்றின் விதி துறைகளை அரசு கண்டிப்பாகச் செயல்படுத்தும் ... [illegible] ... கண்காணிப்பு முனைப்பாக்கப்பட்டு கள்ளச் சந்தைக்காரர்கள், பதுக்கல்காரர்கள் ஆகியவர்களின் நடவடிக்கைகள் கவனிக்கப்பட்டு கடுமையான நடவடிக்கைகள் மூலம் ஒடுக்கப்படும். இவ்வாறான குற்றங்கள் புரிந்தவர்களுக்கு குறைந்தபட்ச தண்டனை விதிக்க, 1955 ஆம் ஆண்டின் இன்றியமையாப் பொரு



களின் சட்டத்தின் விதித் துறைகளை திருத்தும் வகையில், கடந்த சட்டமன்றத்தின் கடைசிக் கூட்டத்தில் சட்ட வரைவு ஒன்று கொண்டு வரப்பட்டதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நினைவு கூறலாம். இத்திருத்தங்களை செய்வதற்கு மத்திய அரசின் ஒப்புதல் தேவைப்படுகிறது. இதனால் மத்திய அரசுக்கு இது குறித்து எழுதப்பட்டுள்ளது. அவர்கள் இசைவு விரைவில் கிடைக்குமென்று நாம் நம்புகிறோம். கடுமையான தண்டனை கிடைக்கும், தமது சொத்து கண்டிப்பாகப் பறிமுதல் செய்யப்படும் என்ற அச்சம் இத்தகைய சமூகவிரோத குற்றங்களைக் கண்டிப்பாக ஒடுக்கும் என்று நான் திண்ணமாக நம்புகிறேன்.

இவையன்றி, கள்ளக்கடத்தலையோ, அல்லது பதுக்கலையோ கண்டுபிடிக்க உதவினாலும் அல்லது கண்டுபிடித்தாலும், கண்டுபிடிக்கும் அளவில் கணிசமான வெகுமதி அளிக்கும் முறையைப் புகுத்துகிறோம். அவ்வாறு கண்டுபிடிக்கும் அளவில் ஒரு சதவிகிதம் உடனடியாகவும், பறிமுதல் செய்யப்பட்டவுடன் ஒன்பது சதவிகிதமும் வெகுமதி அளிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**அரசு வாணிகம்.**—வாலாயமான நடைமுறை நடவடிக்கைகளில் அரசு உணவு தானியங்கள் வணிகம் சிக்கிக் கொள்ளாமல் தடுப்பதற்காக அரசு தமிழ் நாடு உணவுப் பொருள் வழங்கு கழகத்தை நிறுவியது. இக்கழகம் 24—4—1972-ல் பதிவு செய்யப்பட்டது. 1—7—1972-ஆம் நாள் செயல்படத் தொடங்கியது.

1973-74-ஆம் ஆண்டில் கோதுமை, கோதுமைப் பொருள்கள், சர்க்கரை ஆகியவை பொறுத்த மட்டில் இக்கழகம் ஒரு மொத்த வியாபார அமைப்பாக விளங்கியது. இக்கழகம் முழுக் கோதுமையாக வழங்க 9,160 டன் கோதுமையை இந்திய உணவுக் கழகத்திடமிருந்து பெற்றுக் கொண்டது. கோதுமைப் பொருள் அரைவை ஆலைகளுக்கு வழங்கப்பட்ட 130,240 டன் கோதுமையிலிருந்து தயாரிக்கப்பட்ட கோதுமைப் பொருள்களை பெருமளவில் பயன்படுத்துவோருக்கு நேரடியாகவும், பொது மக்களுக்கு தனது சில்லறை விற்பனைக் கடைகள் சர்க்கரை விற்கும் சில்லறைக் கடைகள் மூலமும் வழங்குவதற்காக மாவு ஆலைகளிலிருந்து இக்கழகம் எடுத்துக்கொண்டது.

சர்க்கரையிலும் இதைப் போலவே மாநிலத்திற்குரிய பங்கு அளவை பல்வேறு ஆலைகளிலிருந்து பெற்று அதனை தனது சில்லறை விற்பனைக் கடைகள், கூட்டுறவுச் சங்கங்கள், தனி வணிகர்கள் மூலம் வழங்கியது.

தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு கழகம் இந்திய உணவுக் கழகத்துடன் இணைந்து லெவிமுறையிலும் நேரடி கொள்முதல் முறையிலும் அரிசி

கொள்முதல் பணியில் இறங்கியது. 1973 ஆம் ஆண்டின் சம்பா அறுவடைக் காலத்தில் இக்கழகம் 81,232 டன்கள் அரிசியைக் கொள்முதல் செய்தது நேரடியாக 18,213 டன்களை வாங்கியது. மாநிலம் முழுவதற்குமான பங்கீட்டு முறை, வெளி மாநிலங்களுக்கு போக்குவரத்து ஆகிய இரண்டையும் இ காப்பு ஏற்பாடுகளின் வாயிலாகக் கவனித்து வந்தது. நடப்பு சம்பா அ வடைக் காலத்தில் லெவி முறையிலும் நேரடிக் கொள்முதல் வகையிலு அதிகக் கொள்முதல் செய்வதற்கான பெரும் நோக்கத்தைக் கொண்டுள்ளது.

தற்சமயம் நிலவுகின்ற பற்றுக் குறையைப் போக்குவதற்காக வெ மாநிலங்களில் இருந்து 5,579 டன்கள் பயறுகளை வாங்கி சொந்த விற்பனை கடைகள் மூலம் இக்கழகம் வழங்கியது. குழந்தைகள் உணவு, சமைய எண்ணெய்கள் ஆகியவற்றை உள்நாட்டில் இருப்பு வைத்திருப்பவர்களிடமிருந் இக்கழகம் வாங்கி தனது சில்லறை கடைகள் மூலம் வழங்கியது.

பொதுப் பங்கீட்டு முறையில் ஒரு சில நாங்களை நிர்ணயிப்பதற்கா தமிழ்நாடு உணவு வழங்கு கழகம்; பொதுப் பங்கீட்டு முறையை மேலு சிறந்த முறையில் நடத்த குறைந்தது 100 கடைகளைத் திறக்க வேண்டுமெ முடிவு செய்யப்பட்டது. அப்பொழுதுதான் பொதுப் பங்கீட்டு முறை செய படும் முறைப்பற்றி பொதுவாக நாம் ஒரு தீர்ப்பு சொல்ல முடியும். இதுவ யில் 102 கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

பொதுப் பங்கீட்டு முறையை மேலும் உகந்த முறையில் மக்களுக்கு பய செய்யும் வகையில் அமைப்பதற்காக கட்டுப்பாடு விதிக்கப்பட்ட பண்ட களின் விற்பனையை கூட்டுறவுகளிடம் ஒப்படைக்க அரசு கொள்கை அளவி முடிவு செய்துள்ளது. இக்கொள்கைக்கிணங்க, தனித்து இயங்கக்கூடி கூட்டுறவு சங்கங்கள் எங்கெல்லாம் இயங்கி வருகின்றனவோ அங்கெல்லா அவர்களிடம் இந்த வாணிபம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தனியார் வணிக களிடமிருந்து இந்த வாணிபம் எடுக்கப்பட்டுவிட்டது. இன்று மொத்த 9,842 சில்லறை விற்பனைக் கடைகள் உள்ளன. இவற்றில் அரிசி, சர்க்க கோதுமை பொருள்கள் ஆகியவை விற்கப்படுகிறது. இவற்றில் தமிழ்நா உணவு வழங்கு கழகத்தின்கீழ் இயங்குபவை 102 கடைகள். கூட்டுற களால் நடத்தப்படுபவை 4,753. தனியார் அமைப்பில் இயங்குபவை 4,987.

1974-75-ம் ஆண்டில் இன்றியமையாத பொருள்களின் மொத்த விற்ப பொது வாணிபத்தில் தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கு கழகம் அதி பங்கேற்க வேண்டுமென முடிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு உண



வழங்கு கழகம் இந்திய உணவுக்கழகத்திடமிருந்து உணவு தானிய வாணிபத்தை படிப்படியாக அதிக அளவில் எடுத்துக்கொள்ள வேண்டும். இறக்குமதியையே நம்பி இருக்கின்ற பற்றுக் குறைப் பொருள்களை வெளிச் சந்தையிலிருந்து அதிகம் பெறவேண்டியது தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு கழகத்தின் பொறுப்பாகும்.

தமிழ்நாடு உணவு வழங்கு கழகத்தின் மாதிரி சில்லறை விற்பனை கடைகள் செயல்படுமுறையை படிப்படியாக மேலும் மேம்படுத்த வேண்டியது அவசியமாகும். இக்கடைகளின் பணிகள் விரிவு படுத்தப்பட்டு பற்றுக்குறை ஏற்படும் வாய்ப்புள்ள அதிகமான பண்டங்கள் இக்கடைகள்மூலம் வழங்கப் படுவதற்கு ஏற்பாடு செய்யப்படும். உணவு தானியங்கள் மொத்த வணிகத்தை தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு கழகத்திடம் வைத்துக் கொள்வதும், சில்லறை விற்பனை முழுவதையும் கூட்டுறவுகளிடம் படிப்படியாக ஒப்படைப் பதும் அரசின் கொள்கையாக இருக்கும்.

அரசு ஊழியர்கள் அதிகமான அளவில் உள்ள இடங்களில் தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு கழகம் நியாய விலைக் கடைகளைத் திறக்கவேண்டும் என அரசு முடிவு செய்துள்ளது. ஆரம்ப கட்டமாக சென்னை மாநகரில் அவ்வித மான ஐந்து கடைகள் திறக்கப்படும். இத் திட்டங்கள் பின்பு படிப்படியாக மற்ற மாவட்டங்களுக்கு விரிவு படுத்தப்படும். இக் கடைகளில் அரசு முகமை மூலமாக விநியோகிக்கப்படும் பொருட்களுடன் மொத்த விலையில் கொள்முதல் செய்யப்படும். மற்ற இன்றியமையாப் பொருள்களும் இலாப நட்டமற்ற முறையில் விற்பனை செய்யப்படும்.

உணவுப் பங்கீட்டுப் பணி என்பது இன்றியமையாததோர் பணியாகும். இதில் பொது மக்கள் ஒத்துழைத்தால் அல்லாமல் உணவு வழங்கல் துறை திறம்பட செயல்பட இயலாது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவார்கள். பண்டங்கள் விலை ஏற்றம், பற்றுக்குறை, கட்டுப்பாடுகள் ஆகியவை பற்றிய வதந்திகள் பண்டங்கள் பதுக்கப்படுவதற்குக் காரண மாகின்றன. இதனால் செயற்கை முறையான கிராக்கியும் பற்றுக்குறைகளும் ஏற்படுகின்றன. இதில் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளுமாறு மதிப்பிற் குரிய உறுப்பினர்களை நான் இறைஞ்சி கேட்டுக்கொள்கிறேன். வணிகர்கள் அரசுக்குத் தமது முழு ஒத்துழைப்பை நல்கி, அரசுக்கு எதிரான நடவடிக்கை களில் ஈடுபடாதிருப்பர் என்று நான் நம்புகிறேன்.

பிற்சேர்க்கை.

1973-74-ம் மாதந்தோறும் ஒதுக்கீடு [illegible] ர்க்கரை.

| | | | |
|---|---|---|---|
| ஏப்ரல் 1973 | .. | .. | 9,749·3 |
| மே 1973 | .. | .. | 10,791.3 |
| ஜுன் 1973 | .. | .. | 10,791·3 |
| ஜுலை 1973 | .. | .. | 10,517·3 |
| ஆகஸ்டு 1973 | .. | .. | 10,021·0 |
| செப்டம்பர் 1973 | .. | .. | 10,021·0 |
| அக்டோபர் 1973 | .. | .. | 11,063.0 |
| நவம்பர் 1973 | .. | .. | 10,021·0 |
| டிசம்பர் 1973 | .. | .. | 10,021·0 |
| ஜனவரி 1974 | .. | .. | 10,555·0 |
| பிப்ரவரி 1974 | .. | .. | 10,555·0 |
| மார்ச்சு 1974 | .. | .. | 10,555·0 |
| | | | 124,660·12 |

## தமிழ் நாடு சட்டப் பேரவை

### சனிக்கிழமை, 1974 மார்ச் 23.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

#### திருப்பூர் அரசினர் மகளிர் கல்லூரி விடுதி

* 571 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் L.R.G. நாயுடு அரசினர் மகளிர் கலைக் கல்லூரி மாணவியர் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

#### *M. Com., B. Com., courses*

* 572 Q.—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state the number of colleges in the State where M.Com., and B.Com., courses are conducted?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முதுநிலை வணிகவியல் பயிற்சி அளிக்கும் கல்லூரிகள்—12

இளநிலை வணிகவியல் பயிற்சி அளிக்கும் கல்லூரிகள்—66

[1974 மார்ச் 23

திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, இன்றிருக்கக் கூடிய தேவையை அனுசரித்து, இத்திட்டத்தை விரிவுபடுத்த சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா? குறைந்தபட்சம் ஒவ்வொரு ஜில்லா மட்டத்திலுமாவது இதைக் கொண்டுவர சர்க்கார் முயற்சி செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பரவலாக பல கல்லூரிகளில் இருக்கவேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு உண்டு. பல்கலைக்கழகத்திற்கு அதுபற்றித் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. இந்த ஆண்டு பல்கலைக்கழகம் பரிசீலித்து, எந்த எந்தக் கல்லூரிகளில் இடவசதி இருக்கிறதோ, அதற்கேற்ப அங்கு இந்த வகுப்புகளைத் துவக்க அனுமதிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. பல்கலைக்கழகத்தை இதுகுறித்து அரசு வற்புறுத்தி வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : பி.காம். பிரிவு தொடங்க லாபரடரி போன்ற வசதிகளெல்லாம் தேவை இல்லை. இன்றைக்கு 150-க்கும் அதிகமான கலைக் கல்லூரிகள் இருக்கின்றன. அவற்றில் 100 கல்லூரி களிலாவது பி.காம். பயிற்சி இருக்கும்படியான ஏற்பாடு செய்யப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இளநிலை வணிகவியல் பயிற்சி (பி. காம்.) அளிக்கும் கல்லூரிகள்—66, முதுநிலை வணிகவியல் பயிற்சி (எம்.காம்.) அளிக்கும் கல்லூரிகள்—12 இருக்கின்றன. பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர் களைக் கலந்து பேசியபோது, எம்.காம். படித்து முதல் வகுப்பு இரண்டாவது வகுப்பில் தேறியவர்கள் மிகக் குறைவாக இருக்கிறார் கள் என்றும், அதைக் கருத்திற்கொண்டு, கல்லூரிகளில் இப்படிப்பை விரிவு படுத்த வேண்டியிருக்கிறது என்றும் குறிப்பிட்டார்கள். சென்ற இரண்டு, மூன்று ஆண்டுக் காலமாக பி.காம். பட்டப் படிப்பு பல கல்லூரிகளில் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. பி.காம். படித்துப் பட்டம் பெற்றவர்களிடையே வேலையில்லாத நிலை எந்த அளவுக்கு இருக்கிறது என்ற விவரங்களும் கேட்கப்பட்டிருக்கின்றன. என்றாலும் கூட, இதற்கு ஆய்வுக்கூடவசதிகள், மற்றவை தேவை இல்லை. ஆகவே எந்த எந்தக் கல்லூரிகள் ஏற்படுத்த இயலுமோ அதை ஏற்படுத்த அனுமதி அளிக்க வேண்டும் என்று பல்கலைக் கழகம் கேட்டுக்கொள் ளப்பட்டிருக்கிறது.



1974 மார்ச் 23]

திரு. ஆர் பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, பி.காம்., எம்.காம். போன்ற பட்டப் படிப்பிற்காக, கல்லூரிகள் பணம் கொடுக்க வேண்டும், குறிப்பாக, ஒரு இலட்ச ரூபாயாவது கட்ட வேண்டும் என்ற ஒரு விதியை வைத்திருக்கிறார்களே அதைத் தளர்த்த அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர் களே, அதுபற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. நிபந்தனை விதிப்பதானால் பல்கலைக்கழகம் தான் விதிக்க வேண்டும். தனிக் கேள்வி போட்டால், விவரங்கள் திரட்டித் தரலாம்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, வடார்க்காடு மாவட்டம் முழுவதும் இருக்கின்ற கல்லூரிகளில் எந்தக் கலைக் கல்லூரியிலும் எம்.காம். படிப்பு கிடையாது. செய்யார் கலைக் கல்லூரியில் எம்.காம். தேவை என்று விண்ணப்பம் போட்டிருக் கிறார்கள். நம்முடைய கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள் அங்கே சென்று அதையெல்லாம் பார்த்துவிட்டுப் போயிருக்கிறார்கள். 1974–75 கல்வியாண்டிலாவது—இந்த ஆண்டு மார்ச்சு மாதத் திலிருந்து செய்யார் கலைக் கல்லூரியில் எம்.காம். படிப்பு சொல்லிக் கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர் களே, அதைத் திட்டவட்டமாக இப்பொழுது கூறுவதற்கு என்னிடம் தகவல் இல்லை. பல்கலைக்கழகம் அதுபற்றி முடிவு செய்யவேண்டும். அதற்கான கூறுபாடுகளை எல்லாம் ஆராய்ந்து, கல்லூரிக் கல்வி இயக்குநர் பல்கலைக்கழகத்தை அணுகுவார்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், செய்யாறிலே அதற்கு வாய்ப்பில்லை என்று சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வாய்ப்பில்லை என்று சொல்ல வில்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே : பொதுவாகவே பி.காம்., எம்.காம். ஆகிய இந்த இரண்டு பட்டப் படிப்பில் சேருவதற்கு ஏராளமான மனுக்கள் இருக்கின்றன. இந்தப் படிப்பு படித்தவர்களுக்கு வேலை கிடைக்க நல்ல வாய்ப்பு இருக்கிறது. வட இந்தியாவிலும், சென்ட்ரல் சர்வீஸிலும், மற்ற இடங்களிலும் இந்தப் படிப்பு படித்தவர் களுக்கு அதிகமாக வேலை வாய்ப்பு இருக்கிறது. இது "ஜாப்–ஓரியன்டட்" என்ற முறையில் அமைந்திருக்கிறது. இதைக் கற்பிக்

கொடுப்பதற்கு செலவு கூட ஜாஸ்தி ஆகாது. "ப்ரொபோர்ஷனேட்" ஆகப் பார்த்தால், பி.ஏ., எம்.ஏ., படிப்புக்கும், பி.காம்., எம்.காம் படிப்புக்கும், மற்ற படிப்பைவிட ஜாஸ்தி பணம் செலவாகாது. ஆகவே, அதை விரிவுபடுத்த பொதுவாக நடவடிக்கை எடுப்பதோடு, செய்யாறு கலைக் கல்லூரியில், இந்த ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து எம்.காம். பட்டப்படிப்புக்கு வகை செய்யப்படுமா? ஜூன் மாதத்திற்குள் மீண்டும் சட்டசபை கூட வாய்ப்பு இல்லாத காரணத்தால், இப்போதே அதுகுறித்து அறிவிப்பு கொடுத்தால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் முதலில் குறிப்பிட்டபடி, சென்ற இரண்டு மூன்று ஆண்டுகளில் கணிசமான அளவுக்குப் பல கல்லூரிகளில் இப்படிப்பு புகுத்தப்பட்டிருக்கிறது. இதற்குரிய அனுமதியைப் பல்கலைக்கழகந்தான் வழங்க வேண்டியிருக்கிறது. வரலாறு, பொருளாதாரம் ஆகிய துறைகளைத் துவக்குவதற்கு எவ்வளவு செலவாகுமோ அந்த அளவுக்குத்தான் வணிகவியல் துறைக்கும் செலவாகும். இதற்கு அதிக மாணவர்கள் சேர வருகிறார்கள் என்ற எண்ணம் தெரிவிக்கப்பட்டு, பல கல்லூரிகளில் இதற்கு இடம் அளிக்க வேண்டும் என்ற வேண்டுகோள் கல்லூரிக் கல்வி இயக்குநரால் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. பல்கலைக்கழகந்தான் இதற்குரிய அடிப்படை நிபந்தனைகள் அந்தந்தக் கல்லூரியில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவா என்று பார்த்து முடிவு செய்கிறது. இந்த எண்ணம் அரசுக்கு உண்டு. பல்கலைக்கழகத்திடம் இந்த எண்ணத்தை அரசு வற்புறுத்திவரும்.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, பி.காம்., எம்.காம். வகுப்புகள் குறிப்பாக மாநகராட்சி, நகராட்சி போன்ற பகுதிகளில் தான் இருக்கின்றன. தமிழ்நாட்டின் பெரும்பான்மையான மாணவர்கள் கிராமப் பகுதிகளிலிருந்து வருகிறார்கள். அவர்களுடைய குறைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வட்ட மையங்களிலும் கிராமப் புறங்களிலும் இருக்கும் கல்லூரிகளில் இப்படிப்பட்ட வகுப்புகள் துவக்கவேண்டுமென்ற பரிந்துரையைப் பல்கலைக்கழகத்திற்கு அரசு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் முதலில் கூறியபடி, அந்த எண்ணம் அரசுக்கு உண்டு. ஆனால், இப்பொழுது எந்த எந்தக் கல்லூரியில் இருக்கின்றன என்ற விவரக் குறிப்பு இல்லை. அந்த எண்ணத்தின் அடிப்படையில்தான் பல்கலைக்கழகத்தைக் கல்லூரிக் கல்வி இயக்குநர் அணுகியிருக்கிறார்.





திரு. கே. டி. கே. தங்கமணி: மதுரைப் பல்கலைக்கழகத்தில் எம்.காம். பாஸ் பண்ணுகிறவர்களுக்கு ஸி-ப்ளஸ் தான் கொடுக்கிறார்கள். முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு கொடுப்பதில்லை. ஆகவே, ஸி-ப்ளஸ் வாங்கியிருந்தாலும் அவர்களுக்கு இடம் கொடுக்கவேண்டுமென்ற முறையில் அரசுக் கல்லூரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, எம்.காம். முதல், இரண்டாவது வகுப்புகளில் தேறியவர்கள் குறைவாக இருக்கிறார்கள் என்ற தன்மையில் சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்கள் சென்ற ஆண்டு குறிப்பிட்டார்கள். முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பில் தேறியவர்கள் இல்லாவிட்டால் கடைசியில் வேறு வழியில்லை என்பதால், மூன்றாம் வகுப்பில் தேறியவர்களை எடுத்துக்கொள்ளலாம் என்ற அளவுக்கு விதியைத் தளர்த்த வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆங்கிலப் பட்டப் படிப்பிலும் முதல் வகுப்பில் தேறியவர்கள் போதுமான எண்ணிக்கையில் கிடைக்காவிட்டால், இரண்டாம் வகுப்பில் தேறியவர்களையும், அதுவும் இல்லாவிட்டால், மூன்றாவது வகுப்பில் தேறியவர்களை எடுத்துக்கொள்ளலாம் என்ற அளவுக்கு விதியைத் தளர்த்தி எடுத்துக்கொள்வதுண்டு. அப்படிப்பட்ட சூழ்நிலை வரும்போது, விதியைத் தளர்த்துவதற்கு இடம் இருக்கிறது.

திரு. சி. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, செங்கற்பட்டு அரசினர் கலைக் கல்லூரியில் எம். காம். வகுப்பு துவக்கவேண்டுமென்று அரசுக்கு மனு வந்துள்ளதா? ஆம் எனில், இவ்வாண்டே அதைத் துவக்க அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றி விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி வேண்டும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, எம்.காம். வகுப்புகள் தற்போது எங்கெங்கே இருக்கின்றன என்பதையும், மொத்தம் எத்தனை இடங்கள் என்பதையும் அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, எம்.காம். வகுப்புகள் 12 கல்லூரிகளில் இருக்கின்றன. சென்னைப் பல்கலைக்கழகத்தில்—9, மதுரைப் பல்கலைக்கழகத்தில்—2, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில்—1. எந்த எந்தக் கல்லூரி என்ற விவரம் இல்லை. அதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

[1974 மார்ச் 23

## சுப்பிரமணிய பாரதியாருக்கு நினைவுச்சின்னம்.

* 573 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியார்-நினைவாக எட்டயபுரத்தில் நினைவுச்சின்னம் ஒன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: எட்டயபுரத்தில் கவி சுப்பிரமணிய பாரதியார் பிறந்த இல்லத்தை அரசு மாநில சின்னமாகக் கருதி தொல் பொருள் ஆய்வுத்துறையின் பராமரிப்பில் கொண்டு வந்துள்ளது.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, பாரதியார் பிறந்த வீட்டை நினைவுச் சின்னமாக இப்பொழுது அரசாங்கம் எடுத்திருக்கிறது. பாரதியாருடைய கையெழுத்துப் பிரதிகள் அச்சேறாமல் இருந்தால் அவற்றையும், அவர்கள் எழுதிய நூல்கள் எல்லாவற்றையும் அரசாங்கம் சேகரித்து அந்த வீட்டிலே வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பாரதியார் பிறந்த இல்லம் இப்பொழுது தொல்பொருள் ஆராய்ச்சிப் பிரிவின் பராமரிப்பின்கீழ் வந்திருக்கிறது. நினைவுச் சின்னமாகக் கருதுகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் கூறிய அத்தகைய பணிகளையெல்லாம் மேற்கொள்ள வேண்டிதான் வரும். அதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. நினைவுச் சின்னமாக வரும்போது, பாரதியார் பயன்படுத்திய பொருள்களை எல்லாம் அவர்களுடைய குடும்பத்தினர் தருவார்களானால், அவற்றையெல்லாம் அங்கே காட்சிப் பொருளாக வைக்க ஏற்பாடு செய்யலாம்.

அவருடைய கையெழுத்து பிரதிகள் இருந்து அவற்றை தந்தால் அவற்றையும் அங்கே வைக்க ஏற்பாடு செய்யலாம்.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவர் அவர்களே, தேசிய கவி பாரதியார் உலக மகா கவி வரிசையிலே வைத்துப் போற்றப்படும் உயர்ந்த கவியாகத் திகழ்ந்ததால், அவருக்கு ஒரு சிறப்புச் சின்னம் அமைக்கும் அளவுக்கு அவர் பிறந்த இடத்திலோ அல்லது அவர் பிறந்த மாவட்டத்திலோ ஒரு கல்லூரியினை அவர் பெயரால் அமைக்க அரசு முன்வருமா?



1974 மார்ச் 23]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அப்படிப்பட்ட செயற்குறிப்பு இல்லை.

## மாமல்லபுரம், சித்தன்னவாசல் கோயில்கள்

* 574 வினா—திரு. வை. பாலசுந்தரம்: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாமல்லபுரம், சித்தன்னவாசல் பகுதிகளிலுள்ள கற்கோயில்களை பராமரிக்கும் பொறுப்பை மேற்கொள்ளும் வகையில் மத்திய சர்க்காரிடம் கோரிக்கை ஏதேனும் மாநில சர்க்கார் விடுத்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. வை. பாலசுந்தரம்: மாமல்லபுரத்தில் ஆதிவராகன் என்ற ஒரு கோயில் இருக்கிறது. அந்தக் கோவிலை மத்திய அரசும் கைப்பற்றவில்லை. மாநில அரசும் கைப்பற்றவில்லை. எந்த அரசாலும் பராமரிக்கப்படாமல் அந்தக் கோயில் சீரழிந்த நிலையில் இருக்கிறது. அந்தக் கோவிலில் மகேந்திரவர்மனின் முழு உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டினுடைய ஒரு மன்னனுடைய முழு உருவம் செதுக்கப்பட்டிருப்பதால், அந்தக் கோவிலை பொதுமக்கள் பார்வைக்காக வசதி செய்யும்பொருட்டு, மாநில அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறை எடுத்து பராமரிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாமல்லபுரம், சித்தன்னவாசல் இன்னும் இவைபோன்ற 118 வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்கள் மத்திய அரசின் பராமரிப்பில் இருக்கின்றன. நாட்டிலுள்ள எல்லா கோவில்களையும் தொல்பொருள் ஆராய்ச்சித் துறை மேற்கொள்ள வேண்டுமென்ற அவசியம் இல்லை. வரலாற்று சிறப்பு கொண்ட சில பல கோவில்கள் மாநில அரசு தொல்பொருள் ஆராய்ச்சித் துறையாலும், மத்திய அரசு தொல்பொருள் ஆராய்ச்சித் துறையாலும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படும் மற்ற பல கோவில்களையும் பழமையான சின்னங்களையும் இந்தத் துறையினர் படி எடுத்திருக்கிறார்கள். எல்லாவற்றையும் பராமரிக்க வேண்டுமென்ற நிலை இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற கோவிலும், அவ்வாறு ஆராய்ந்து பார்த்துவிட்டு, அவசியம் இல்லை என்ற காரணத்தினால் விடுபட்டிருக்கலாம். தனிக் குறிப்பு அனுப்பினால் விவரம் தரப்படும்.

கட்டிக்குளம் கால்வாய்

* 575 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், கட்டிக்குளம் கால்வாய் முகப்பு, மேடு பாய்ந்து விட்டதால் கட்டிக்குளம் கண்மாய்க்கு வேறு வழியில் தண்ணீர் கொண்டு செல்வது உண்மையா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம்.

மடப்புரம் கண்மாய் பாலம்

* 576 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், திருப்புவனம்-பூவந்தி சாலையில் மடப்புரம் கண்மாய் கலுங்குப் பாலத்தை விரிவாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

கரிகாலி உத்தண்டம்பட்டியில் புதிய ஏரி

* 577 வினா—திரு. சி. க. வடிவேலு: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) திருச்சி மாவட்டம், முசிரி வட்டத்தைச் சேர்ந்த கரிகாலி உத்தண்டம்பட்டியில் புதிதாக ஏரி அமைப்பதற்கான வேலைகள் துவங்கப்பட்டிருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ): இத்திட்டத் திற்கான ரூ. 9.45 லட்சத்திற்கான மதிப்பீடு திருச்சிராப்பள்ளி வட்ட மேற்பார்வை பொறியாளரின் ஆய்வில் உள்ளது.



திரு. சி. க. வடிவேலு: தலைவரவர்களே, இந்தத் திட்டம் 1966-ம் ஆண்டிலிருந்து இருக்கிறது. இதன்மீது துரித நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இது ஒரு சிக்கனமற்ற திட்டம். இருந்தாலும் இதுபற்றி ஆராய வேண்டு மென்று மேற்பார்வை பொறியாளர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக் கிறார். அவரிடமிருந்து தகவல் வரவேண்டியிருக்கிறது. வந்த பின்னால் முடிவு செய்யப்படும்.

திரு. சி. க. வடிவேலு: தலைவரவர்களே, இந்தத் திட்டம் நிறை வேற்றப்பட்டால் உணவுப்பொருள் உற்பத்திக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்று அங்குள்ள விவசாயிகளும் மற்றவர்களும் சொல் கிறார்கள். அதைக் கருத்தில் கொண்டு அரசு துரித நடவடிக்கை எடுத்து, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, டன் ஒன்றுக்கு ரூ. 4,506 செலவாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. மூவாயிரம் ரூபாய்க்கு மேற்பட்டால் அது சிக்கனமற்ற திட்டம் என்று கணக்கிடப்படும். இருந்தபோதிலும் அவசியத்தைக் கருதி, சில சிக்கனமற்ற திட்டங்களை நிறைவேற்ற நிதி ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கப்படுகிறது. அந்தவகையில் சென்ற ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதி தீர்ந்துவிட்டது. தகவல் வந்தபின்னால் அடுத்தாண்டில் இது குறித்து பரிசீலனை செய்யலாம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்த ஏரித் திட்டம் சிக்கனமற்றது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தப் பகுதி மக்கள் குடிக்க தண்ணீர் இல்லாமல் மிகவும் சிரமப்படு கிறார்கள். இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் கிணறுகளில் தண்ணீராவது தாராளமாகக் கிடைக்கும். ஆகவே, இதில் தனிச் சலுகை காட்டி, அந்த பின்தங்கியப் பகுதிகளில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கேள்வி விவசாயத்தைப் பற்றியது; குடிதண்ணீர் பற்றியதல்ல. மூவாயிரம் ரூபாய்க்கு மேற் பட்டாலே சிக்கனமற்றத் திட்டமாகும். இருந்தாலும் புள்ளிவிபரம் கேட்டிருக்கிறோம். சிக்கனமற்றத் திட்டங்கள் சிலவற்றை நிறை வேற்றுவதற்காக சென்ற ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதி தீர்ந்துவிட்ட தால், அடுத்தாண்டில் இத்திட்டம் பரிசீலனை செய்யப்படும்.

[1974 மார்ச் 23

## இராணிப்பேட்டை தொழிற்பேட்டை

* 578 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராணிப்பேட்டை தொழிற்பேட்டையில் தொழில்கள் தொடங்குவதற்கு இடம் கோரி எத்தனை மனுக்கள் இதுவரை வந்துள்ளன?

(இ) என்னென்ன தொழில்கள் தொடம்கப்படவிருக்கின்றன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) நாற்பத்து நான்கு மனுக்கள்.

(இ) துப்புரவு செய்யும் பொருட்கள், இரசாயனப் பொருட்கள், இயந்திர கருவிகள், உருக்குக் குழாய்கள், அச்சு இயந்திரங்கள், அலுமினிய தகடுகள், பாத்திரங்கள், மருந்துப் பொருட்கள், மின்சாரக் கருவிகள், விவசாயக் கருவிகள், அட்டைகள் முதலியன உற்பத்தி செய்யும் தொழில்கள்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, அதில் எத்தனைத் தொழில்கள் கூட்டுத் துறையில் தொடங்கியிருக்கிறார்கள்? வெளிநாட்டு உதவியுடன் கூட்டுத்துறையில் தொழில் தொடங்க மனு செய்திருக்கிறார்களா? இராணிப்பேட்டை தொழிற்பேட்டையில் கூட்டுத் துறையில் அவர்கள் தொழில் தொடங்க அரசாங்கம் உதவி செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படி யாரும் முன்வந்தால் உதவி செய்யப்படும்.

திரு. நா. வீராசாமி : அங்கே அமைச்சரவர்கள் விழா நடத்திய பின்னால் ஒரு பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. தர்மபுரியில் ஒரு விழா நடத்தி, சிப்காட், சிட்கோ, டிட்கோ நிறுவனங்களைக் கொண்டுவந்து, டெக்னிக்கல் நோ ஹௌ கொடுத்து, பண உதவியை 24 மணி நேரத்திற்குள் கிடைக்கும்படி ஏற்பாடு செய்ததால் தர்மபுரி மாவட்டத்தில் தொழில் பெருமளவில் பெருகி இருக்கிறது. அதே போன்று இராணிப்பேட்டையிலும் நம்முடைய அரசு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த இரண்டில் இராணிப்பேட்டைக்கு முதலிடம் ; தர்மபுரிக்கு இரண்டாவது இடம்தான்.



1974 மார்ச் 23]

திரு. எஸ். முருகையன் : வந்திருக்கக்கூடிய மனுக்களில் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவை எத்தனை? தொழில் தொடங்க உரிமம் வழங்கும்போது, நம்முடைய மாநிலத்திலுள்ளவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நிச்சயம் வழங்கப்படும்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, மூலக் கேள்விக்கு வேறுபட்டிருந்தாலும் சுய நலத்தோடு ஒரு கேள்வி கேட்க அனுமதிக்க வேண்டுகிறேன். இந்தத் தொழில்களை எல்லாம் அரசாங்கமே ஆரம்பிக்க வேண்டுமென்று சில மாதங்களுக்கு முன்பு ஒரு துணைக் கேள்வியில் கேட்டிருந்தேன். ஆனால் தனியார் முன்வர வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். செங்கற்பட்டு மாவட்டத்தில் என்ன காரணத்தாலோ முன்னால் இருந்த அரசும், நம்முடைய அரசும் மதுராந்தகம் வட்டத்தை புறக்கணித்து வருகின்றன. ஆகவே, அரசாங்கமே முன்வந்து, பொதுத்துறையில் தொழில்கள் நடத்த அனுதாபத்தோடு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எப்போதுமே கனம் அங்கத்தினர் மீது அனுதாபம் உண்டு. இந்த அமைச்சரவையில் உள்ள எல்லோருக்கும் அவர்கள்மீது அனுதாபம் உண்டு. தமிழ்நாட்டிலேயே செங்கற்பட்டு மாவட்டம் தான் தொழில் வளர்ச்சியில் முன்னணியில் இருக்கிறது. அதற்குக் காரணம் சென்னையைச் சுற்றியுள்ள பகுதி எல்லாம் செங்கற்பட்டில்தான் இருக்கிறது. செங்கற்பட்டு மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் செங்கற்பட்டை சென்னையோடு சேர்த்துக்கொள்ள வேண்டும், அப்போதுதான் இன்னும் தொழில் வளர்ச்சியடையும் என்று சொல்கிறார்கள். இப்போதே தொழில் துறையில் வளர்ச்சியடைந்திருக்கிறது. அப்படி முன்னேறி இருந்தாலும் அந்த மாவட்டத்தில் சில பகுதிகள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்றன. ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்திலும் இப்படிப்பட்ட பின்தங்கிய பகுதிகளை எடுத்து முன்னேற்ற அனுமதி தரவேண்டுமென்று மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் கடந்த சில ஆண்டுகளாகவே அதிகமான அளவுக்கு தொழில்கள் தொடங்க விண்ணப்பங்கள் வந்து கொண்டிருக்கின்றன. அந்த விண்ணப்பங்களை "ப்ராசெஸ்" செய்வதில் கால தாமதம் ஏற்படுகிறது. இந்த சிக்கலைத் தவிர்க்க வேண்டுமென்றும், உடனடியாக "ப்ராசெஸ்"

செய்யும் சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்றும், அதற்கு மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து ஒரு "கம்பைன்ட் செக்ரெட்டேரியேட்டை" உருவாக்க வேண்டுமென்று ஒரு செய்தி 6 மாதங்களுக்கு முன்னால் மெயில் பத்திரிகையில் வந்திருக்கிறது. அதுகுறித்து மத்திய அரசு மாநில அரசுக்கு தகவல் கேட்டு ஏதாவது குறிப்பு அனுப்பியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஆறு மாதம் அல்ல. சென்ற மாதம் தான் தொழில் துறை அமைச்சர்கள் மாநாட்டில் நம்முடைய அரசின் சார்பில் இந்தக் கொள்கை வலியுறுத்தப்பட்டது. எல்லா அமைச்சர்களும் இந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டார்கள். நாம் சொன்ன யோசனை, ஒவ்வொரு மாநிலத்திலும் தனியார் துறை, அரசுத் துறை, கூட்டுத் துறைகளிலிருந்து வரும் விண்ணப்பங்களை பரிசீலித்து உடனுக்குடன் பரிகாரம் கண்டு மத்திய அரசு உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்பது. மத்திய அரசு பல துறைகளிலிருந்தும் வருகின்ற மனுக்களை ஒன்றாகச் சேர்த்து பரிசீலனை செய்ய ஒரு "காமன் செக்ரெட்டேரியேட்" போடவேண்டுமென்று வற்புறுத்துகிறோம். தொழில் துறை அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் இந்த யோசனைக்கு மிகுந்த ஆர்வம் தருகின்ற அமைச்சராக பணியாற்றி வருகிறார்கள்.

*Manufacture of milk food*

*579 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to set up a baby food factory in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) குழந்தைகளுக்கான உணவு தயாரிக்க மத்திய அரசிடமிருந்து திருவாளர்கள் ஆரோபுட் பிரைவேட் லிமிடெட், ஆரோவில், தென்னாற்காடு மாவட்டம் என்ற நிறுவனம் இசைவுக் கடிதமும், திருவாளர்கள் ஆல்விடோன் லாபரட்டரீஸ், சென்னை என்ற நிறுவனம் உரிமமும் பெற்றுள்ளன.

டாக்டர் எச். வி. ஹாண்டே: சபாநாயகர் அவர்களே, இந்த விண்ணப்பம் இல்லாவிட்டால், அரசாங்கமே இந்தத் துறையிலே முன்வந்து பேபி புட் பாக்டரி துவக்குவதற்கு உடனடியாக தீவிர நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறார்களா?



ஏனென்றால், இப்பொழுது கிளாக்ஸோ, ஆஸ்டர்மில்க் போன்ற குழந்தை உணவுகள் கிடைப்பதே இல்லை. கிடைத்தாலும்கூட, பிளாக் மார்க்கெட்டிலேதான் கிடைக்கிறது என்று ஏழை எளிய மக்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

முன்பெல்லாம் தாய்ப்பால் கொடுத்துக் கொண்டு வந்தார்கள். இப்பொழுது அதுவும் குறைந்துகொண்டு வருகிறது. தாய்ப் பாலும் கிடையாது, பசும் பாலும் கிடையாது, இவைகளும் கிடைக்கவில்லை; கிடைத்தாலும் பிளாக் மார்க்கெட்டிலே வாங்க வேண்டிய காரணத்தாலே, உடனடியாக அரசே முன் வந்து, ஓராண்டு, ஈராண்டுகளுக்குள்ளே இப்படி ஒரு பாக்டரி துவக்கத் தயாராக இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மில்க் டிபார்ட்மெண்டில், தமிழ் நாடு டெய்ரி கார்ப்பரேஷன் இப்படிப்பட்ட முயற்சிகளிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது.

திரு. எம். தேவராசன்: தலைவர் அவர்களே, அத்தகைய தொழிற்சாலை ஆரம்பிக்க உதகை மிகவும் சிறந்த இடம். எந்தக் காரணத்தாலோ, ஈரோட்டிலே இந்தத் தொழிற்சாலையை வைப்பதாக சில நாட்களுக்கு முன்பாக சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் கூறினார்கள். உதகையை ஏன் தேர்ந்தெடுக்க கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்த அமைச்சரவர்கள் அன்றைக்கு விளக்கம் தந்தார்கள்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, இந்த உணவுப் பொருளைத் தயாரிப்பதற்கு தனியார் நிறுவனங்கள் விண்ணப்பம் போட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எப்படி தொடங்க இருக்கிறது? அதே நேரத்திலே, பொதுத் துறையிலே, அரசாங்கத் துறையிலே, அப்படிப்பட்ட உணவுகளைத் தயாரித்து மக்களுக்கு விநியோகிப்பது தான் சிறந்தது என்பதே மருத்துவ நிபுணர்களாலும், பொதுமக்களாலும் வேண்டப்படுகிறது என்று அரசாங்கத்திற்கு அறிவிப்பு வந்ததா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதைத்தான் இப்பொழுது சொன்னேன், நம்முடைய அரசின் சார்பிலே மில்க் டிபார்ட்மெண்ட் அந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது, என்று.

[1974 மார்ச் 23

*Advisory Board for salt*

* 580 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that an Advisory Board for salt has been formed; and

(b) if so, the details thereof?

THE HON. THIRU S. MADHAVAN : (a) Yes.

(b) The constitution and functions of the Tamil Nadu State Board for satl and allied chemicals @ are laid on the table of the House separately.

திரு. என். கே. பழனிசாமி: சார், சர்க்கார் வைத்திருக்கக்கூடிய பதிலிலே, அந்த போர்ட் ஹைகிரேட் உப்பை அபிவிருத்தி பண்ணுவதற்கும், சர்வே பண்ணுவதற்கும்—வெளிநாடுகளிலே இந்த ஹைகிரேட் உப்புக்கு அதிக கிராக்கி இருப்பதால்—அந்த போர்ட் அதைச் செய்துகொண்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எந்த அளவுக்கு சர்வே செய்யப்பட்டிருக்கிறது. இதை அபிவிருத்தி பண்ணுவதிலே புதிய முறை ஏதாவது இருக்கிறதா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நாம், ஒரு நிபுணர் குழுவை இதற்காக நியமித்து, சால்ட் பேஸ்ட் இண்டஸ்ட்ரீஸ் என்ன என்ன தொடங்கலாம் என்று அறிக்கை தயாரித்திருக்கிறோம். அந்த அறிக்கை அடிப்படையிலே தொழில்கள் சம்பந்தமாக பீஸிபிலிட்டி பார்த்து, போர்ட் இப்படிப்பட்ட தொழில்களைத் தொடங்க ஏற்பாடு செய்கிறோம்.

திரு. எம். சுரேந்திரன்: சார், இந்தத் தொழிலிலே இதற்கு உதவித் தலைவராக இருக்கிற கெமிக்கல் மானேஜிங் டைரக்டர் ரமணியால் ஏற்கனவே, ஒரு உப்புத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும், அது நல்ல அபிவிருத்தி அடைந்து வருவதாகவும் சொல்லப்படுகின்றதே, அதேபோல், அவரே, இந்தத் துறையிலே நிபுணத்துவம் பெற்றுள்ள காரணத்தால், இந்த மாதிரி தொழிற்சாலையை ஆரம்பிக்க முன் முயற்சி எடுத்துக்கொண்டால் அதற்கான ஆதரவு இந்த அரசால் அளிக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

@ 937—940 பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1974 மார்ச் 23]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நிச்சயம் ஆதரிக்கப்படும். உறுப்பினரே இதை ஆதரித்துப் பேசுகிற காரணத்தால், தீவிரமாக ஆதரிக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: உப்பை அடிப்படையாகக் கொண்டு சில தொழில்கள் ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் தொழில்கள் எந்த எந்தப் பகுதியிலே ஆரம்பிக்கப்படும்? கன்னியாகுமரியிலே உப்பு அதிகமாகக் கிடைக்கிற பகுதிகள் பல இருக்கின்றன. அந்தப் பகுதிகளிலே ஏதாவது தொழிலை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நிச்சயம், கடற்கரை பகுதி பூராவும் இந்த ஆராய்ச்சி நடத்தப்பட்டு வருகிறது. செங்கற்பட்டு மாவட்டத்திலே கோவளம் பகுதியிலே முதல் முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. தூத்துக்குடியிலேயும் இராமநாதபுரம் பகுதியிலேயும் இதுபற்றிய ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரியிலே எந்த எந்தப் பகுதியிலே இதுபோன்ற தொழில்களை அமைக்கலாம் என்று ஆராய்ச்சி செய்யப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்தக் குழு அமைத்தது நல்ல முயற்சி என்றுதான் கருதப்படுகிறது. அனேகமாக உத்தியோகஸ்தர்கள், சால்ட் மானுபார்க்ச்சரர்ஸ் அசோசியேஷன் பிரதிநிதிகள் தான் இதிலே இருக்கிறார்கள். சால்ட் சம்பந்தமான நிபுணர்கள், பேராசிரியர்கள், இது மாதிரி தொழிலிலே ரிசர்ச் பண்ணுகிற தொழில் பிரதிநிதிகள் இதிலே சேர்க்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னதைப்போல், ஒரு தொழிலை நடத்துகிற நிபுணரைப் போட்டிருக்கிறோம். குருநாத் என்ற சால்ட் எக்ஸ்பர்ட்டைப் போட்டிருக்கிறோம். அவர்தான் அந்த அறிக்கையைத் தயாரித்திருக்கிறார். வேறு யாரும் நிபுணர்கள் இப்படிப்பட்ட உதவிகளைச் செய்வோம் என்று சொன்னால், அவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு ஆட்சேபனை இல்லை.

திரு. சி. ஆறுமுகம்: கோவளத்திலே ஆரம்பிப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கோவளம், செய்யூர், கூனிம்பேடு, தென்னாற்காடு மாவட்டத்திலே மரக்காணம் போன்ற பகுதிகளில்

தமிழ்நாட்டிலேயே, ஏராளமாக உப்பு கிடைக்கிறது. நான் சென்ற தொடர் கூட்டத்திலேயே கேட்டிருக்கிறேன். இந்த உப்பு தொழிற் சாலையைக் கொண்டு உரத் தொழிற்சாலை அமைக்க, ஜப்பான் நாட்டுத் துணை கொண்டு அமைக்க, நம்முடைய அரசு முயலுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: செங்கற்பட்டு மாவட்டம் எப்படி கவனிக்கப்பட்டு வருகிறது என்பதை இதிலிருந்து அவர்கள் தெரிந்து கொள்வார்கள். கோவளத்திலே, பிரம்மாண்டமான கூட்டுத் தொழிற்சாலை ஏற்பட இருக்கிறது.

திரு. சி. ஆறுமுகம்: செங்கற்பட்டு மாவட்டத்தில் மதுராந்தகம் வட்டம் முழுக்க முழுக்கப் புறக்கணிக்கப்படுகிறது என்று பொது மக்களிடத்திலே ஒரு கருத்து நிலவுகிறது. அரசால் ஆரம்பிக்கப் பட இருக்கிற தொழிற்சாலையைப் பற்றி, குறிப்பாக செங்கற்பட்டு மாவட்டத்தைக் குறிப்பிட்டுக் காட்ட வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்தக் குழுவினர் நம்முடைய மாநிலத்தில் இருக்கிற கடற்கரைப் பகுதியில் சுற்றுப் பயணம் மேற் கொண்டு முடித்துவிட்டார்களா? ஏதாவது அறிக்கையை அரசுக்கு அனுப்பிவிட்டார்களா என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஏற்கனவே சொன்னேன். அப்படி ஆராயப்பட்டு ஒரு அறிக்கை தரப்பட்டிருக்கிறது.

*Suicide by prisoner in Mental Hospital.*

* 581 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state whether it is a fact that a prisoner undergoing treatment at the Mental Hospital in Madras committed suicide about the 6th September 1973?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சிவப்பிரகாசம் என்ற மனநோய் குற்றவாளி 5—9—1973 அன்று சென்னை மனநோய் மருத்துவ மனையில் தற்கொலை செய்துகொண்டார்.

திரு. அ. தேவேந்திரன்: தலைவர் அவர்களே, எந்த முறையிலே தற்கொலை செய்து கொண்டார் என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. செ. மாதவன்: தற்கொலை என்றுதான் இருக் கிறது.

## சென்னை மாநகர குடியிருப்பவர்கள் பாதுகாப்பு சட்டம்

* 582 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

சென்னை மாநகர குடியிருப்பவர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் (Madras City Tenants Protection Act) விதிகளைக் கிராமங் களுக்கும் விஸ்தரிக்கும் செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளனவா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை.

*Sivakasi Panchayat Union Council*

* 583 Q.—THIRU N. DENNIS:
THIRU K. SUPPU: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Sivakasi Panchayat Union Council has been dissolved by the Government in March 1973; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) & (இ) உறுப்பினர் களால் ஏற்படுத்தப்பட்ட முட்டுக்கட்டையின் காரணமாகவும், ஒன்றியக்குழு அதன்மேல் சட்டப் பூர்வமாக அளிக்கப்பட்ட கடமைகளைத் தொடர்ந்து செய்யத் தவறியதன் காரணத்திற்காகவும் அரசு இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள சிவகாசி ஊராட்சி ஒன்றியக் குழுவை 17—3—1973-ல் இருந்து மூன்று மாதத்திற்கு கலைக்க உத்திரவிட்டது. மேலே குறிப்பிட்டுள்ள அரசின் உத்திரவினை சுப்ரீம் கோர்ட் தள்ளுபடி செய்துள்ளது. ஊராட்சி ஒன்றியக் குழு மூன்று மாதங்கள் மேற்கொண்டு செயல்பட அனுமதிக்கப்பட வேண்டுமென்றும், அதன்பின்னர் அரசு இதுபற்றி மீண்டும் பரிசீலிக் கலாம் என்ற கருத்தினையும் சுப்ரீம் கோர்ட் வெளியிட்டிருக்கிறது. கோர்ட்டாரின் உத்திரவுக்கிணங்க ஒன்றியக் குழுவை செயல்பட அனுமதிக்கும்படி கிராம வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறார்.

[1974 மார்ச் 23

திரு. பெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே, இந்த சிவகாசி பஞ்சாயத்து யூனியன் விவகாரத்தில் சுப்ரீம் கோர்ட் தெளிவாகச் சொல்லி இருக்கிறது. அரசாங்கம் வேண்டுமென்றே, ஒரு வாய்ப்பு தராமல், அந்தப் பஞ்சாயத்து யூனியனைக் கலைத்திருக்கிறது என்ற கருத்து அங்கே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படி பஞ்சாயத்து யூனியன் வேண்டுமென்றே திட்டமிட்டு, ஒரு அமைச்சருடைய முயற்சியால் கலைக்கப்பட்டது என்பது உண்மையா? ......

திரு. நா. வீராசாமி : சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்திலே, மேற்கொண்டு தகவல் கேட்பதற்குத்தான் கேள்வி கேட்கலாமேயொழிய குற்றச்சாட்டு இருக்கக் கூடாது.

திரு. பெ. சீனிவாசன் : அந்த ஊராட்சி ஒன்றியப் பெரும் தலைவர் திரு. கோபாலசாமி என்பவர்மீதும், அவருடைய சகாக்கள்மீதும் நியாய உணர்வுள்ளவர்கள் மீதும் கிரிமினல் வழக்கு போடப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது உண்மையா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படிப்பட்ட வழக்குகள் சம்பந்தமான செயற்குறிப்புகள் எதுவும் என்னிடத்திலே இல்லை. 1972-ம் ஆண்டு ஜனவரி முதலிலிருந்தே அது சரிவர இயங்கவில்லை யென்றும், அபிவிருத்தித் திட்டங்களைச் சரிவரப் பரிசீலனை செய்ய வில்லை என்றும், 4—5—1972லும், 3—7—1972லும் நடைபெற்ற கூட்டங்களில் எந்த அபிவிருத்தித் திட்டங்களையும் நிறைவேற்றத் தீர்மானிக்கவில்லையென்ற விஷயமும் அரசின் பரிசீலனைக்குக் கொண்டு வரப்பட்டு அதற்குப் பிறகு, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது. சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மென்ட் என்னிடத்திலே இல்லை. அதிலே என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது என்ற குறிப்பும் என்னிடத் திலே இல்லை. இப்பொழுது 3 மாத அவகாசம் தரப்பட்டிருக்கிறது. அந்த 3 மாதத்திற்குப் பிறகு மேலும் பரிசீலனை செய்யலாம்.

முற்பகல் 9-30

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சர்க்கார் உத்தரவுப்படி டி.ஆர்.டி. பஞ்சாயத்து யூனியன் இயங்க ஏற்பாடு செய்திருக்கிறதா? அப்படி பஞ்சாயத்து யூனியன் இயங்கிக்கொண்டிருக்கிறதா? இல்லை யென்றால் அதன்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசித்திருக்கிறது?



1974 மார்ச் 23]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சுப்ரீம் கோர்ட் நாம் போட்ட உத்தரவுபற்றி ஒன்றும் சொல்லவில்லை. காரணம் நாம் ஓராண்டுக் காலம் அந்த ஒன்றியம் செயல்படவேண்டும் என்றே காலம் கொடுத் தோம். எப்படியாவது நடக்க வேண்டுமென்று பூரண ஒத்துழைப்புத் தந்தோம். அது செயல்பட முடியவில்லை. அதற்குப் பின்னால்தான் அதைக் கலைக்க உத்தரவிடப்பட்டது. கலெக்டர் உத்தரவு, டி.ஆர்.டி. உத்தரவு, அரசாங்க உத்தரவு ஆகியவை ஒன்றுக்கொன்று டைம் கொடுத்ததா என்றுதான் ஆய்வு செய்தார்கள். மேலும் ஒரு 3 மாத காலம் டைம் கொடுக்கலாம் என்று ஆலோசனை கூறியிருக் கிறார்கள். அதை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

திரு. பெ. சீனிவாசன் : சிவகாசி ஊராட்சி ஒன்றியம் நல்லமுறை யில் செயல்படவேண்டுமென்றால் அங்குள்ள ஆணையரை மாற்ற வேண்டுமென்று பெருந்தலைவர் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இது வரை அந்த ஆணையர் மாற்றப்படவில்லை. அந்த ஊராட்சி ஒன்றியம் கூடி நல்லமுறையில் செயல்பட, இனிமேலாவது அந்த பஞ்சாயத்து யூனியன் கமிஷனரை மாற்ற அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஒரு ஒன்றிய ஆணையர் ஒரு ஒன்றியம் நல்லமுறையில் செயல்படுவதை எந்தவகையிலும் தடுக்க முடியாது. அவர் நிர்வாகத்தைத்தான் கவனித்துக்கொள்கிறார். நானே ஒரு ஊராட்சி ஒன்றியத் தலைவராக இருந்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினரும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்தான். சிவகாசி ஒன்றிய ஆணையர் சரியான முறையில் செயல்பட்டு வருகிறார் என்பதை நானே பார்த்திருக்கிறேன். இப்போது மாற்றவேண்டிய தில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சுப்ரீம் கோர்ட் முரண்பட்ட உத்தரவுகள் போடப்பட்டிருப்பது பற்றி கூறினார்கள் என்றார். அது சம்பந்தமானவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முரண்பட்ட உத்தரவு போட் டிருப்பதாகச் சொல்லவில்லை. நாமே ஓராண்டு காலத்திற்கு மேல் கொடுத்திருக்கிறோம். மேலும் 3 மாத காலம் கொடுக்க வேண்டு மென்று சொன்னார்கள். மூன்று மாத காலம் கொடுக்கப்பட்டிருக் கிறது. மேலும் 3 மாத காலம் வேண்டுமானாலும் கொடுக்கத் தயார். அந்த யூனியன் செயல்பட முடியவில்லை என்றால் அரசாங்கத்தையோ அமைச்சரையோ சொல்லிப் பயன் இல்லை. அது நடக்க முடியவில்லை. அதற்கு நாம் என்ன செய்ய முடியும்?

[1974 மார்ச் 23

## ஊசி ஆற்றின் குறுக்கே பாலம்

* 584 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம்–சீர்காழி ஊராட்சி ஒன்றியங்களை இணைக்கின்ற ஊசி ஆற்றுப் பாலம் அமைக்கும் பணி எந்த நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: சீர்காழி பனங்காட்டான் குடி சாலையில் மைல் 5/1-ல் குறுக்கிடும் ஊசி வாய்க்கால் மீது பாலம் அமைப்பது 1974 ஆண்டு ஜூன் மாதத்திற்குள் முடிக்கப்படும் என மாயூரம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் தெரிவித்துள்ளார்.

## ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள்

* 585 வினா—திரு. சீ. க. வடிவேலு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும பணியாளர்களுக்கு ஒன்றியத்திலேயே வீடு அமைத்துத்தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எந்தெந்த மாவட்டங்களில் மேற்படித் திட்டம் முதலில் செயல்படுத்தப்பட இருக்கிறது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் அரசு ஊழியர்களுக்கு அலுவலர் குடியிருப்பு கட்டும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(இ) குறிப்பிட்ட சில மாவட்டங்கள் அல்லாது, பரவலாக ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. சீ. க. வடிவேலு: திருச்சி மாவட்டத்தில் எந்த எந்த ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம். எங்கெங்கே கட்டப்படவில்லை என்கிற விவரம் தான் என்னிடம் இருக்கிறது.



1974 மார்ச் 23]

திரு. எஸ். வடிவேல்: ஊராட்சி ஒன்றியங்களில் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள், அரசாங்கப் பணியாளர்கள் என்கிற இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. இரண்டையும் ஒன்றாக்கி, அரசுப் பிரிவினருக்குக் கொடுக்கக்கூடிய சலுகைகள் எல்லாம் இவர்களுக்கும் கொடுக்க முடியுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அதுபற்றி அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களுக்காக எத்தனை வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன? அதற்கான செலவு எவ்வளவு? வீடுகள் கட்டும்போது ஊராட்சி ஒன்றியத்தை ஒட்டியே கட்டப்படுகின்றனவா? அல்லது வெளிப்பகுதிகளிலும் கட்டித் தரப்படுகின்றனவா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: 1970–71-ல் இந்தத் திட்டம் சிறிது மாற்றம் செய்யப்பட்டு அலுவலர் குடியிருப்பு, மற்றும் கிராம நல ஊழியர்கள் குடியிருப்பு கட்டுவதற்காக ரூ. 5 லட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டது. 1972–73-ல் மேற்சொன்ன குடியிருப்பு கட்டுவதில் பூர்த்தியடையாத சில வேலைகளை முடிப்பதற்கு ரூ. 8.10 லட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேலும் சென்னை தவிர, 13 மாவட்டங்களில் மாவட்டத்திற்கு ஒரு ஊராட்சி ஒன்றியம் வீதம் 13 ஊராட்சி ஒன்றியங்களை எடுத்து இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த ரூ. 20.82 லட்சம் செலவு அனுமதிக்கப்பட்டது. 1972–73-ல் ரூ. 1.09 லட்சம் ஒப்புதல் அளித்துள்ளது.

திரு. கே. என். குமாரசாமி: இந்த ஊராட்சி ஒன்றியங்களில் எழுத்தர்களாக, ப்யூன்களாக பணி செய்கிறவர்களுக்கு வீடு கட்டப்படவில்லை, அவர்கள் பிரித்து வைக்கப்பட்டிருக்கிறார்களே, அவர்கள் வீடு இல்லாமல் கஷ்டப்படுவது பற்றி அரசாங்கத்திற்குப் புகார் வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அப்படித் திட்டம் இப்போது ஒன்றும் இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரியும் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் இருக்கிறதா? அப்படி இருந்தால், அந்த விவரங்களை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

[1974 மார்ச் 23

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அதுபற்றிய விவரங்கள் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் சேகரித்துத் தருகிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : இந்த ஊராட்சி ஒன்றியப் பணியாளர் புரியும் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் கின்றன? எவ்வளவு வீடுகள் கட்டலாம் என்று அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது? அது எவ்வளவு காலத்திற்குள் பூர்த்தியாக முடிவு செய்யப்பட இருக்கிறது? இம்மாதிரி ஊராட்சி மன்றங்களில் வீடுகள் கட்டுவதற்கு எந்த அடிப்படையில் முன்னுரிமை அளிக்க விதிமுறைகள் இருக்கின்றன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மொத்தம் தமிழ் நாட்டில் 374 ஒன்றியங்கள் இருக்கின்றன. இன்னும் 180 ஒன்றியங் களுக்கு அலுவலர் குடியிருப்பு கட்ட வேண்டி இருக்கிறது. இது படிப்படியாக ஒரு ஃபேஸ்டு ப்ரோக்கிராம் கீழ் கட்டப்படுகிறது. இந்த வருடம்கூட ஸ்ரீவைகுண்டம், புதூர், விளாத்திகுளம் போன்ற இடங்களில் குடியிருப்புகள் கட்டுவது அரசின் பரிசீலனையில் இருக் கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ஊராட்சி ஒன்றிய அலுவலர் களுக்காகக் கட்டப்படும் வீடுகளுக்கு மாதம் எவ்வளவு ரூபாய் வாடகையாக வசூல் செய்யப்படுகிறது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அது கொடுக்கப்படுகிற இடங்களைப் பொறுத்தது. மாவட்டத் தலைநகரிலேயே இருக்கிற வீடு களாக இருந்தால் ஒரு விகிதம்—கிராமங்களில் இருந்தால் ஒரு விகிதம் என்ற அடிப்படையில்தான் வசூலிக்கப்படுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தர மத்திய அரசாங்கம் மானியம் கொடுக்கிறதா? அந்த மானியத்தை எந்த அளவுக்கு இந்த அரசாங்கம் பயன்படுத்திக்கொண்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அதைப்பற்றிய விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை.



1974 மார்ச் 23]

* 586 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

பஞ்சாயத்து யூனியன்களில் பால சேவிகாக்கள், சாலை வேலை செய்யும் காங்கி ஆட்கள் ஆகியோரின் நியமனத்தை பஞ்சாயத்து யூனியன் உத்தியோக நியமனக் குழு மூலமாகச் செய்ய வேண்டுமென யூனியன்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனவா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : சில ஊராட்சி ஒன்றியங்களில் காங் கூலி களைப் பொறுத்த மட்டில்—கார்ப்பரேஷன் மஸ்டர் ரோல் ஊழல் போல ஏற்படாதிருக்க, என்ன முறையில் அதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள இருக்கிறது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்போது அதுபற்றி பரிசீலிக்கப்பட்டு, அது சமூக நலத்துறை ஆணையரின்பேரில்—இனி மேல் ஊராட்சி ஒன்றிய நியமனக் குழு மூலம் செயல்படுவது நல்லது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

திரு. ப. முத்துசாமி : ஹைவேசில் வேலை செய்கிற தொழிலாளர் களுக்குக் கொடுக்கப்படுகிற கூலி, ஊராட்சிகளில் வேலை செய்கிற காங் கூலிகளுக்கும் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அதற்கும் இதற்கும் ஒப்பிட முடியாது. ஊராட்சி ஒன்றியங்களில் ஒதுக்கப்படுகிற சாலைகளைப் போடவே பணமில்லாத நிலையில் இருக்கிறார்கள். இதையும் அதோடு இணைக்க சாத்தியம் இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பெருவழித்துறையில் இருக்கிற என்ஜினியர்கள் மஸ்டர்ரோல் பராமரித்துக்கொண்டிருக்கிறார்கள். அதை யூனியன் என்ஜினியருக்குக் கொடுத்து மேற்பார்வை செய்ய வேண்டிய ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : சாலைகளுக்கு பணம் ஒதுக்குகிற நேரத்தில் எத்தனை பேர்கள் வைத்துக்கொள்ளலாம் என்று வைத்திருக்கிறார்கள். அதைக்கூட இப்போது என்ன செய்ய லாம் என்று யோசித்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவர் அவர்களே, இந்தப் பரிந்துரையின் அடிப்படையிலே எதிர்காலத்திலே உத்தியோக நியமனக் குழுவிலே சட்டமன்ற உறுப்பினர்கூட இடம்பெறச் செய்வதற்கு உத்திரவிடப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அப்படியொன்றும் இல்லை.

திரு. க. நாகராஜன்: தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியச் சாலைகளை பெருவழித் துறையிலே எடுத்துக்கொள்ளும்போது அங்கே வேலை செய்கிற காங் கூலிகளையும் எடுத்துக்கொள்ள அரசு ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: காங் கூலி பிரச்னையைப் பொறுத்தவரையில் ஒன்றியங்கள் சம்பந்தப்பட்டவரையில் அவ்வளவு சரியாக இல்லை. ஆகவே எப்படி அதைச் செய்யலாம் என்பதைப்பற்றி யோசிக்கலாம்.

திரு. சீ. க. வடிவேலு: பாலசேவிகா என்ற அடிப்படையிலே அவர்களுக்கு குறைந்த சம்பளம்தான் ஒன்றியத்தின் மூலமாகக் கொடுக்கப்படுகிறது, அவர்களுக்கு ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவதைப்போல் ஊதியம் வழங்க அரசு உத்திரவிடுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அப்படியொன்றும் இல்லை.

திரு. சி. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கின்ற சாலைகளையெல்லாம் நிதிநிலைமைகள் அங்கே பற்றாக்குறையாக இருக்கின்ற காரணத்தினாலே பராமரிக்க . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கேட்பது சாலையைப் பற்றிய கேள்வி, இது வேறு கேள்வி.

திரு. பெ. சீனிவாசன்: தலைவர் அவர்களே, பாலசேவிகாக்கள், முக்கிய சேவிகாக்கள், கிராம சேவிகாக்கள் என்ற பெயர்கள் நீண்ட காலமாகவே வடமொழிப் பெயர்களாகவே இருக்கின்றன. அதைத் தமிழ்ப் பெயர்களாக மாற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அங்கத்தினருடைய யோசனைப்பற்றி பரிசீலனை செய்கிறேன்.



திரு. நா. வீராசாமி: இந்த சேவிகாக்கள் எல்லாம் எங்கே இருக்கிறார்கள்? என்ன வேலை செய்கிறார்கள் என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: சேவிகா என்றாலே சேவை செய்வது என்பதுதான் பொருள் என்று நினைக்கிறேன். முக்கிய சேவிகாக்கள் முக்கியமாக எப்படி எப்படி செய்யவேண்டுமென் பதனைப்பற்றியெல்லாம் கவனிக்கிறார்கள். பால சேவிகாக்கள் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறார்கள். முக்கிய சேவிகாக்கள் போன்றதல்ல சேவிகாக்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப்: ஊராட்சி ஒன்றிய உத்தியோக நியமனக் குழுவில் யார் யார் அங்கம் வகிக்கிறார்கள்? ஒரு அதிகாரியும், ஒரு சேர்மனும், மற்றவர்களும் இருக்கிறார்கள். வைஸ்-சேர்மன் சும்மா தானே இருக்கிறார், அவரையும் இந்தக் குழுவிலே சேர்த்துக்கொண்டு அவர்களுக்குப் பொறுப்புக்களைக் கொடுப்பதற்கு அரசு ஆணையிடுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: உதவித் தலைவர் என்பவர் தலைவருக்குத் துணைபுரிவதற்காகத்தான் இருக்கிறார். தலைவர் இல்லாதபோது துணைத் தலைவர் உதவி செய்யக்கூடிய முறையிலே பணியாற்றலாம். சில உப-தலைவர்களைப் பொறுத்தவரையில் உபத்திரவம் தருகிற தலைவர்களாகவும் இருக்கிறார்கள். தலைவர்கள் இல்லாத நேரத்திலேதான் துணைத் தலைவர்கள் பணியாற்றலாமே தவிர வேறு இல்லை.

*Resident Welfare Officers*

* 587 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether it is a fact that Resident Welfare Officers have been posted at Slum Clearance Board tenements in Madras City: and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத் திட்டப் பகுதிகளில் புதுக்குடியிருப்பு நல் வாழ்வுப் பேரவையால், குடியிருப்பு நல் வாழ்வு அதிகாரிகள் 14 பேர் தற்போது நியமிக்கப்பட்டுள்ளனர். புதுக்குடியிருப்பு நல்வாழ்வுப் பேரவைக்கும், குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கும் அதிகாரபூர்வமான தொடர்பேதும் இல்லை.

[1974 மார்ச் 23

திருமதி த. ந. அனந்தநாயகி: இந்த ரெஸிடெண்ட் வெல்பேர் ஆபீஸர்கள் ஒவ்வொரு பகுதியிலும் இருக்கிறார்களா? அவர்கள் என்ன என்ன பணிகளைச் செய்கிறார்கள்? அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற மக்களுக்கு கேட்கின்ற வசதிகளை செய்துதருவதற்கும் சிலம் கிளியரன்ஸ் போர்டிலிருந்து அவர்களுக்கு வேண்டியவற்றைப் பெற்றுத்தருவதற்குமான பொறுப்புகளை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இந்த அதிகாரிகள் பல வேலைகளைச் செய்கிறார்கள். அந்த சமுதாயத்து மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதற்கும் எதிர்கால வாழ்வினை வளமுறச்செய்வதற்குமான பல்வேறு காரியங்களைச் செய்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன்.

அவர்கள் பொதுச் சுகாதாரத்தைக் கவனிக்கின்ற வகையிலே அம்மைப் பால் குத்துகிறார்கள்.

பெண்களுக்கு குடும்பக்கட்டுபாடுபற்றி விளக்குகிறார்கள்.

குஷ்டநோயாளிகளுக்கு மருத்துவ வசதிகளைச் செய்கிறார்கள்.

குழந்தைகளுக்குச் சத்துணவை வழங்குகிறார்கள்.

அந்தப் பகுதிகளைச் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு அறிவுரைகளைச் சொல்கிறார்கள், ஒத்துழைக்கிறார்கள்.

மருத்துவ வசதிகளை மருத்துவர்களிடமிருந்து இலவசமாகப் பெற்றுத் தருகிறார்கள்.

இரவுப் பாடசாலைகளிலே படிப்பு சொல்லிக்கொடுக்கிறார்கள்.

பெண்களுக்கு தையற்கலையைக் கற்றுத்தருகிறார்கள்.

குடிசை மாற்று வாரியத்தின்மூலமாக வாழ்த்து அட்டைகள் தயாரிக்கப்பட்டு அவை டென்மார்க் நாட்டிற்கு அனுப்பப்பட்டு அதன்மூலமாக வெளிநாட்டுப் பணமும் சம்பாதிக்கப்படுகிறது.

தோல் பொருட்களை உற்பத்திசெய்து, இலண்டன், டென்மார்க், ஸ்வீடன் போன்ற நாடுகளுக்கு அனுப்புகிறார்கள்.

கந்தல் துணிகளை சேகரித்து பல அழகான பொருட்களைச் செய்து ராதா சில்க் எம்போரியத்திற்கும் டெல்லியிலே உள்ள சமுதாய சேவை இல்லத்திற்கும் அனுப்புகிறார்கள்.



1974 மார்ச் 23]

அட்டைக் கவர்களை உற்பத்தி செய்கிறார்கள்.

சமுதாய நடவடிக்கைகளாக விளையாட்டுகள், நடனங்கள், நாடகங்கள் சொல்லித்தருகிறார்கள்.

இப்படிப்பட்ட காரியங்களுக்காக அவர்கள் எந்தவிதமான ஊதியமும் தமிழக அரசிடமிருந்தோ குடிசைமாற்று வாரியத்திடமிருந்தோ பெறுவதில்லை.

திரு. பெ. சீனிவாசன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து இத்தனை வேலைகளையும் செய்யக்கூடிய ஒரே பட்டதாரியைத் தேடமுடியாது, 25 பட்டங்களைக் கொண்டவரால்கூட இத்தனை வேலைகளையும் செய்யமுடியாது. முக்கியமாக சுகாதாரப் பணிகள் இருப்பதால் சானிடேரி இன்ஸ்பெக்டர் பணிக்கு படித்தவர்களை இந்த வேலையிலே நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தற்போது எம்.ஏ. பட்டதாரிகளை வைத்துதான் வேலைவாங்குகிறார்கள். அவர்கள் நல்லமுறையிலே செய்துவருகிறார்கள். தனியாகப் போடவேண்டியதில்லை என்று கருதுகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, ரெஸிடெண்ட் வெல்பேர் ஆபீஸர்கள் நியமனம் செய்யப்படுவது குடிசை மாற்று வாரியத்திலிருந்தா அல்லது அரசாங்கத்திலிருந்தா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அரசாங்கமும் இல்லை, குடிசைமாற்று வாரியமும் இல்லை. தனிப்பட்ட முறையிலே அவர்கள் இந்தக் காரியங்களை தவத்திரு அடிகளார் நியூபிகின் அவர்களுடைய தலைமைமூலம் செய்துவருகிறார்கள்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்திலே இந்த அதிகாரிகளைப் போட்டிருப்பது எதற்காக? ஏற்கனவே அந்த அந்த இலாகாக்களிலே இருக்கின்றவர்கள் எல்லாம் இந்தப் பணிகளைத்தானே கவனிக்கிறார்கள், அப்படியிருக்கும்பொழுது தனியாக அதிகாரிகள் போடுவதன் காரணம் என்ன? அதன்மூலமாக என்ன பலன்? கைத்தொழில், நடனங்களைக் கற்றுக்கொடுப்பதற்காக இந்த அடிப்படையிலே செலவுசெய்யவேண்டுமா? அந்தச் செலவை யார் ஏற்றுக்கொள்கிறார்கள், குடிசைமாற்று வாரியமா அல்லது அரசாங்கமா? என்ன பொருளோடு இது நியமிக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, இந்தப் பணிகளை எல்லாம் அந்தச் சங்கம் செய்வதாலே புதிய மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அதிகாரிகள் போவதற்குப் பதிலாக சமுதாய சேவையிலே நல்ல எண்ணம் கொண்டவர்கள் ஆர்வம் கொண்டவர்கள் போவதாலே புதிய மறுமலர்ச்சி ஏற்பட்டு புதிய சமுதாயம் உருவாகிக்கொண்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: குடிசைமாற்று வாரியத்திலுலே கட்டப்பட்ட குடியிருப்புகளிலே தேனும்பேட்டையிலே டெனன்ட்களுக்கு குடிநீர் கிடைக்கவில்லை, இந்த சிறப்பு அதிகாரிகள் மூலமாக குடிநீர் கிடைக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: குடிநீர் போன்ற மற்றக் காரியங்களை எல்லாம் குடிசைமாற்று வாரியமே கவனித்துக்கொள்கிறது. அப்படிப்பட்ட குறைகள் எங்கே இருந்தாலும் நிவர்த்திக்க குடிசை மாற்று வாரியம் முயற்சிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Out of 15 Residen Welfare Officers, how many are men and how many are women Since they have to do a lot of work for women, it would be bette and helpful if women are appointed as Resident Welfar Officers. May I know whether the Government would conside this and also may I know from the Minister whether th Government is paying any honorarium to them?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, அரசை பொறுத்த வரையில் எந்தவிதமான ஹானரேரியமும் தரப்பட வில்லை. எவ்வளவு ஆண்கள், எவ்வளவு பெண்கள் என்ற விவர தற்போது என்னிடத்தில் இல்லை.

*Advertisement boards on Slum Clearance tenements*

*588 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minist for Labour be pleased to state—

(a) whether the Slum Clearance Board has permitted t Radha Silk Emporium to put up advertisements on top of t Slum Clearance Quarters at Santhome opposite the All Ind Radio; and

(b) if so, the details thereof?



மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) சாந்தோமில் நொச்சிக்குப்பத்தில் குடிசைமாற்று வாரியம் கட்டியுள்ள குடியிருப்புகளின்மேல் ராதா சில்க் எம்போரியத்தின் விளம்பர பலகையைப் பதிக்க தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் அனுமதியளித்துள்ளது. இதற்காக வாடகை ஆண்டிற்கு ரூ. 3,000 ஆகும். ராதா சில்க் எம்போரியம் இதுகுறித்த ஓர் ஒப்பந்தம் செய்துள்ளது. இதன் பராமரிப்புப் பொறுப்பு ராதா சில்க் எம்போரியத்தைச் சார்ந்ததாகும்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இப்படி குடிசைமாற்று வாரியத்தால் கட்டப்படும் கட்டடங்களில் விளம்பரப் பலகைகளை வைத்துக்கொள்ள அனுமதி கொடுத்தால் அந்த வாரியத்திற்கு ஏராளமான பணம் கிடைப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. மத்திய சர்க்காரிலே இப்படிப்பட்ட விளம்பரங்களுக்கு இன்கம் டாக்ஸ் எக்செம்ப்ஷன் கொடுக்கிறுர்கள். எனவே நிறைய கம்பெனிகள் இப்படிப்பட்ட விளம்பரங்களை வைக்க பெரும் முயற்சிகளைச் செய்கிறுர்கள். எனவே, எங்கெங்கு குடிசைமாற்று வாரியத்தால் கட்டப்படும் கட்டடங்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் இப்படி விளம்பரம் செய்வதற்கு அனுமதி கோரினுல் நமது அரசு அனுமதி அளிப்பதற்கு முறைப்படி முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, குடிசை மாற்று வாரியப் பகுதிகளில் பல பகுதிகளை நாம் விளம்பரம் பெறுவதற்காக ஒதுக்கியிருக்கிறோம். அதற்குப் பெரிய பட்டியலேகூட இருக்கிறது. அந்த இடங்களில் யார் வேண்டுமானுலும் விளம்பரப் பலகைகளை வைத்துக் கொள்வதற்கு குடிசை மாற்று வாரியத்திடம் அனுமதி கோரி விளம்பரப் பலகைகளை வைத்துக்கொள்ளலாம்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, குடிசைமாற்று வாரியத்தால் கட்டப்படும் கட்டடங்களில் அழகைக் கெடுக்கும் வகையில் சிலயிடங்களில் அமைந்திருக்கின்றன. ஆகவே, அதற்குத் தனி இடங்களை ஒதுக்கியிருப்பதாகச் சொன்னுர்கள். அப்படித் தனியாக ஒதுக்கப்பட்டிருக்கும் இடங்களுக்குத் தரலாமே தவிர உண்மையிலேயே குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்டிருக்கும் மாடிக் கட்டடங்களின் அழகைக்கெடுக்கும் விளம்பரங்களைத் தடுக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இதுவரையில் வைக்கப்பட்டுள்ள விளம்பரத்தால் எந்தக் கட்டடத்தின் அழகும் கெட்டுவிட்டதாக எனக்குத் தெரியவில்லை. "ரெமுனரேட்டிவ்

'ஸ்கீம்'' என்ற வகையில் குடிசை மாற்று வாரியத்திற்குக் கொஞ்சம் லாபம் வரும் வகையில் சில திட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறோம். ஆனால், அதிக விளம்பரங்கள் வந்து சேரவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் குடிசை மாற்று வாரியத்தை ஊக்குவிக்கும் வகையில் விளம்பரங்களை ஏற்பாடு செய்வதுகூட நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## சென்னை–கன்னியாகுமரி பேருந்துகள்

* 589 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு போக்கு வரத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

சென்னைக்கும் கன்னியாகுமரிக்கும் இடையே மதுரை, திருநெல்வேலி வழியாக தற்போது ஓடிக்கொண்டிருக்கும் பேருந்து களை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சென்னைக்கும் கன்னியா குமரிக்கும் இடையே மதுரை, திருநெல்வேலி வழியாக தற்போது ஓடிக்கொண்டிருக்கும் பேருந்துகளை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, நாகர்கோயிலுக்கும் சென்னைக்கும் இடையே ஓடும் ''லைட்னிங் எக்ஸ்பிரஸ்'' பஸ்ஸுக்கு 28 ரூபாய் கட்டணம், ஆனால் சூப்பர் எக்ஸ்பிரஸ் பஸ்ஸுக்கு 38 ரூபாய் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆனால் இரண்டு பஸ்களுக்கும் இடையே வசதியைப் பொறுத்தவரையில் அல்லது ''ரன்னிங் டைம்ஸ்''-ஐப் பொறுத்தவரையில் எந்தவிதமான வித்தி யாசமுமில்லை. எனவே சூப்பர் எக்ஸ்பிரஸுக்கு உள்ள கட்டணத்தைக் குறைத்து லைட்னிங் எக்ஸ்பிரஸுக்குள்ள சார்ஜை விதிக்க அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஒன்று லைட்னிங் எக்ஸ்பிரஸ், இன்னொன்று சூப்பர் எக்ஸ்பிரஸ்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இப்பொழுது சென்னைக்கு கன்னியாகுமரியிலிருந்து, நாகர்கோயிலிலிருந்து பல துரித பஸ்கள் விடப்பட்டிருக்கின்றன. ஆனால் நெல்லை மாவட்டத் தின் தலைநகரமான திருநெல்வேலியிலிருந்து ஒரு வண்டிகூட சென்னைக்குப் புறப்படவில்லை. அதிகாரிகளும், மற்றவர்களும் டிரெயினில் வருவதைவிட வேகமாக சென்னைக்கு பஸ்ஸில் வர முடிகிறது. ஆகவே, திருநெல்வேலியிலிருந்து சென்னைக்குப் புறப் படும் வண்டிகளை விடுவதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்தக் குறையை திருநெல்வேலிக்கு நான் சென்றபொழுதும் தெரிவித்தார்கள். ஆகவே, அந்தக் குறை நிறைவு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சென்னைக்கும் கன்னியா குமரிக்கும் இடையே ஓடும் பஸ்களைப் பற்றிய கேள்வி இது. எனவே, ஒவ்வொரு ஊரிலும் இருந்து புறப்படும் வண்டி பற்றிக் கேட்க வேண்டாம்.

திரு. அ. ஆறுமுகம் : தலைவரவர்களே, நாடாளுமன்ற உறுப்பி னர்கள் டெல்லிக்குச் செல்லும்பொழுது ஒருவரைக் கூட அழைத்துச் செல்லலாம் என்று ஒருமுறையை வைத்திருக்கிறார்கள். அதைப் போல சட்டமன்ற உறுப்பினர்கள் செல்லும்பொழுது ஒருவரைக் கூட அழைத்துச் செல்லும் வகையில் இலவச பாஸ் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அந்த ஒருவர் யார் என்பதுதான் புதிராக இருக்கிறது.

திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, கன்னியாகுமரிக்கும் சென்னைக்கும் இடையே ஓடும் லைட்னிங் எக்ஸ்பிரஸ், சூப்பர் எக்ஸ்பிரஸ் ஆகிய இரண்டு பஸ்களும் மிகவும் நீண்ட தூரம் ஓடுகின்றன. நான் அடிக்கடி அதில் பயணம் செய்த அனுபவத்தின் மூலம் சொல்கிறேன், தனியார் நடத்துகின்ற கே. பி. டிராவல்ஸ் நடத்துகின்ற மதுரை டு மெட்ராஸ் ஓடும் பஸ்ஸில் இருக்கின்ற அளவிற்கு இருக்கை வசதிகள் இந்த பஸ்களில் இல்லை. கட்டணம் அதிகம்தானே தவிர இந்த பஸ்களில் பயணம் செய்தால் இரண்டு, மூன்று நாட்களுக்கு உடம்பு வலி இருக்கின்ற அளவிற்கு மோசமான சீட்டிங் அரேஞ்ஜ்மெண்ட்ஸாக இருக்கிறது. எனவே, பிரைவேட் பஸ்களில் இருப்பதைப்போல் வசதிகளை அரசாங்கம் ஏன் செய்யக் கூடாது? அப்படிச் செய்வதன் மூலம் வருமானமும் பெருகும், பொதுமக்களிடமும் நல்ல அபிப்பிராயம் உண்டாகும். எனவே, அதைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1974 மார்ச் 23

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவிக்கின்ற ஆலோசனையின்படி தான் ஏற்கனவே இத்தகைய நீண்டதூர பஸ்களில் நல்ல சீட்டுகளைப் பொருத்த வேண்டுமென்ற அடிப்படையில் சென்னை—திருவனந்தபுரம் வண்டியில் அத்தகைய இருக்கை வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பழைய விரைவுப் பேருந்துகள் இன்னும் ஓடிக்கொண்டிருப்பதால் உடனடியாக மாற்றியமைக்க முடியாது. ஆனால் இந்த சொகுசு இருக்கை வசதி படிப்படியாக மாற்றியமைக்கப்படும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, இரண்டு மூன்று தடவைகள் நான் பயணம் செய்ததில் பார்க்கும்பொழுது இத்தகைய லைட்னிங் சர்வீஸ்கள் குறித்த நேரத்தில் வந்து சேர்வதில்லை, காலதாமதமாக இருக்கிறது. இதற்கு என்ன காரணம், இதை நிவர்த்திக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்: தலைவரவர்களே, இந்த டீலக்ஸ் பஸ்களில் சீட்டிங் ரொம்ப நல்ல முறையில் இருக்கிறது. "புஷ் பேக் அரேஞ்மெண்ட்" முறையில் கே. பி. டிராவெல்ஸ் இருப்பதால் அதில் சாய்ந்துகொண்டால் நித்திரை வரும் அளவில் சாய்மானம் இருக்கிறது. எனவே, இனிமேல் நமக்குத் தயாரிக்கும் வண்டிகளில் அதிக சாய்மான வசதிகளை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, கட்டணம் அளவிற்கும் அதிகமாக இருக்கிறது, அதைக்குறைக்க உத்தேசம் உண்டா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இந்த இருக்கைகளைப் பொறுத்தவரையில் "ரிக்லைனிங் சீட்ஸ்" என்ற வகையில் மாற்றியமைக்க வேண்டுமென்று கொள்கையளவில் முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. 250 விரைவுப் பேருந்துகள் தமிழகத்தில் ஓடுகின்றன. எனவே, எல்லா விரைவுப் பேருந்துகளிலும் இருக்கைகளை மாற்றியமைப்பது என்பது உடனடியாக இயலக்கூடிய காரியம் அல்ல. ஆனால் முதன்முதலில் இப்பொழுது சென்னைக்கும் திருவனந்தபுரத்திற்கும் ஓடும் அந்த விரைவுப் பேருந்திலே மட்டும் அந்த "ரிக்லைனிங் சீட்" பொருத்தப்பட்டிருக்கிறது. அது நல்லமுறையில் இயங்கி வருகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். ஆகவே, படிப்படியாக மற்ற விரைவுப் பேருந்துகளில் அத்தகைய வசதிகளை அதிகப்படுத்தலாம் என்ற யோசனை அரசின் பரிசீலனையில் இருக்கிறது.



1974 மார்ச் 23]

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இந்த சூப்பர் எக்ஸ்பிரசிலே புதிதாக ஒரு வண்டி கட்டியிருக்கிறார்கள். அதை டூரிஸம் டிபார்ட்மெண்டுக்குக் கொடுக்கப்போவதாக அறிகிறோம். அப்படிப்பட்ட உத்தேசம் உண்டா? இப்பொழுதுள்ள மற்ற பஸ்களைச் சீரமைக்க எவ்வளவு நாள் ஆகும் என்பதைத் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் அந்தக் கருத்தை நன்றாகப் புரிந்து கொண்டு கேள்வி எழுப்பியிருக்கிறார்கள். எந்த டூரிஸ்ட் டிபார்ட்மெண்டுக்கும் தரப்படப் போவதில்லை. அதைப்போல எல்லா எக்ஸ்பிரஸ் பஸ்களையும் ஆக்க வேண்டுமென்பதுதான் லட்சியம். எந்த அளவில் நிதி வசதி கிடைக்கிறது என்பதைப் பொறுத்து எவ்வளவு நாளில் செய்யமுடியும் என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், மதுரைக்கும் கன்னியாகுமரிக்கும் நம்பர் 589 பஸ்கள், இரண்டு பஸ்கள் விடப்படுகின்றன. சூப்பர் எக்ஸ்பிரஸ், லைட்னிங் எக்ஸ்பிரஸ் பஸ்கள் சென்னையிலே புறப்படுகின்ற நேரம் சரியாகத்தான் இருக்கிறது. ஆனால் கன்னியாகுமரியிலிருந்து திரும்பக்கூடிய பஸ்களின் நேரத்தை, சுமார் 2 மணி நேரம் பின்னால் புறப்பட்டு வந்தால் அங்கிருந்து வருபவர்களுக்கும் சௌகரியமாக இருக்கும், அந்த பஸ்களில் அதிக பாசஞ்சர்கள் வரக்கூடிய நிலைமையும் இருக்கும் என்பதால் அவ்வாறு மாற்றியமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் போக்குவரத்துத்துறை ஆலோசனை குழுவில் அங்கம் வகிக்கிறார்கள். இந்த ஆலோசனை நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து வினா எண்......

THIRU A. SUBRAMANIAM: Sir, on a point of order. I have not put a supplementary question today. I caught your eye but you did not allow me to put a supplementary.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லா உறுப்பினர்களுக்கும் கொடுக்க முடியாது. கை தூக்கிய அனைவருக்கும் கொடுக்க முடியாது. நான் முன்பே சொல்லியிருக்கிறேன், கேள்விகளுடைய

[1974 மார்ச் 23

எண்ணிக்கையை குறைக்க வேண்டும், இல்லையென்றால் கேள்வி நேரத்தை அதிகப்படுத்த வேண்டும். இரண்டில் ஏதாவது ஒன்றைச் சொல்லுங்கள். அப்பொழுது எல்லோருடைய கைகளும் அடங்கும் வரையில் துணைக் கேள்விகளுக்கு அனுமதி கொடுக்கிறேன். ஆனால் இப்பொழுது எல்லோருக்கும் கொடுக்க முடியாது.

நான் முன்பே சொன்னேன். ஐம்பது கேள்விகளுக்குக் கூட ஒரு நேரத்தில் விடையளிக்கப்பட்டிருக்கிறது. அது இப்பொழுது 20 கேள்விகளாகிவிட்டது. இதைக்கூட பத்தாக ஆக்கிவிடுங்கள். அப்பொழுது எல்லாக் கேள்விகளுக்கும் துணைக் கேள்விகள் கொடுப்பதற்குக் காத்திருக்கிறேன். என்னிடத்தில் அதிகக் கேள்வி களும் இல்லை. எனவே, 20-ஐ 10-ஆக்கத் தயாராயிருக்கிறேன். அதையாவது சொல்லுங்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: சில அங்கத்தினர்களுக்கு 8 தடவைகள் சப்ளிமெண்ட்ரி கேள்விகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் ஒரு கேள்விக்காக மட்டும் கேட்கிறேன்.

I caught your eye but you did not allow me to put a supplementary.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் நான் கொடுப்பதை நீங்கள் பார்த்தால் தெரியும். ஒவ்வொரு கட்சிக்கும் கேள்வி வர வேண்டும், ஒவ்வொரு கட்சிக்கும் கொடுக்கவேண்டும், ஒரே கட்சியில் இரண்டு மூன்று உறுப்பினர்கள் கைதூக்கினால் ஒரு முறை ஒருவருக்குக் கொடுத்துவிட்டு அடுத்த முறைதான் இன்னொரு உறுப்பினருக்குக் கொடுப்பது என்ற முறையைப் பின்பற்றுகிறேன். எனவே, இதில் முறைகேடு எதுவும் இல்லை. எல்லா உறுப்பினர் களுக்கும் துணைக் கேள்வி கொடுக்க முடியாது.

திரு. எம். சுரேந்திரன்: சார், பஸ் போக்குவரத்து எல்லா ஜனங்களுக்கும் சம்பந்தப்பட்டது. எல்லாக் கேள்விகளுக்கும் சப்ளி மெண்ட்டரி ஒரேமாதிரி கொடுப்பது சாத்தியமா? ஜனங்களோடு சம்பந்தமுள்ள கேள்விகளுக்கு அதிகத் துணைக் கேள்விகள் என்று வைத்தால்தான் இது ஒழுங்காக இருக்கும்.

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கன்னியாகுமரி—சென்னை பஸ் போக்குவரத்தைப் பற்றிய கேள்வி இது. திரு. சுப்பிரமணியம், திரு. சுரேந்திரன் ஆகியவர்கள் கன்னியாகுமரி ஜில்லாவைச் சேர்ந்த



1974 மார்ச் 23]

வர்கள் அல்ல. கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். கேள்வி கேட்கிற நேரத்தில் எந்த ஏரியாவைப் பற்றிய கேள்வியோ அந்த ஏரியாவைச் சேர்ந்த உறுப்பினர்களாகப் பார்த்து வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன். எந்தப் பகுதியைப் பற்றிய கேள்வி, எந்தப் பொருள் பற்றிய கேள்வி என்று பார்த்து வாய்ப்புக் கொடுத்து வருகிறேன். எல்லோருக்கும் வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்றால் ஒன்று, கேள்வியின் எண்ணிக்கையைக் குறையுங்கள் அல்லது, ஒரு மணி நேரம் என்பதை ஒன்றரை மணி நேரமாக அதிகரித்துக் கொடுங்கள்.

திரு. அ. தேவேந்திரன்: ஆளும் கட்சியைச் சார்ந்த எங்களையும் கொஞ்சம் கவனியுங்கள்.

ஆவாசிப்பேட்டை, மாளந்தூருக்குப் பேருந்துப்பணி

* 590 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வழித்தடம் எண் 101, 101-ஏ பேருந்துகளை பென்னலூர் பேட்டைத் துணைவட்டம், ஆவாசிப்பேட்டை, மாளந்தூர் ஆகிய கிராமங்களின் வழியே திருப்பிவிடும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

(இ) இத்திட்டம் எப்போது அமுல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) & (இ) ஆவாசிப் பேட்டையிலிருந்து மாளந்தூர் வரைசெல்லும் பாதை பேருந்து செல் லுவதற்கு ஏற்றதாக இல்லை; ஆகவே பேருந்துகளை ஆவாசிப்பேட்டை வழியாக திருப்பிவிடுவது இயலாது.

திரு. கா. வேழவேந்தன்: இந்த ஆண்டில் அந்தப் பாதையை சீர் படுத்த வேலை ஆரம்பிக்கப்பட்டு, முடிக்கும் சூழ்நிலை இருக்கிறது. பல கிராமங்களை இணைக்கும் அந்த வழித் தடத்தில் பேருந்துகளை விட நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பாதை செப்பனிடப்பட்ட வுடன் கேள்வியை மீண்டும் கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடி வுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்

### மின்சாரத் தடையும், மக்கள் பாதிப்பும் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ் நாட்டில் பல்வேறு பகுதிகளில் மின்சாரத் தடை காரணமாக விவசாயம் பாதிக்கப்படக்கூடிய நிலை பற்றி விவாதிக்க கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள் :—

திரு. ஏ. சுப்பிரமணியம்.

திரு. பெ. சீனிவாசன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே.

திரு. கே. ஏ. வகாப்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து.

திரு. என். கே. பழனிசாமி.

இது எப்படி அவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்கப்படக்கூடியது என்று சுருக்கமாக விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, அந்த நிலையைப் பொறுத்து—

I have given the following adjournment motion; to discuss a matter of urgent public importance, viz., the serious situation that has arisen as a result of the shut-down of the 110 MW set in the Ennore Thermal Station and the consequent probability of substantial increase in the power-cut throughout the State.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : When the leader of a party and member of that party have given an adjournment motion, the Chair used to say always that the leader of the party should speak first and not the member. I have been denied the opportunity to speak like that once. But today the member had been allowed to speak and not the leader. I would like to know the correct position so that in future also, we may not be affected.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னிடம் வந்த வரிசையில் எழுதி வைத்திருந்து கூப்பிட்டேன். திரு. மாரிமுத்து அவர்கள் முதலில் பேசுவதாக இருந்தால் பேசட்டும்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : நேற்றையதினம் இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்த பிறகு மீண்டும் இதை விட நிலைமை கடுமையாக இருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. எண்ணூர் தெர்மல் ஸ்டேஷனில் 60 மெகா வாட் செட் ஓவர்ஹாலிங்குக்காக நிறுத்தப்பட்டிருக்கிறது. 110 மெகா வாட் செட் இப்பொழுது பழுதுபட்டு பல நாட்களாக செயல்படாமல் இருக்கிறது. அங்கிருக்கும் டிரான்ஸ்பார்மர் முன்னர் எரிந்து விட்டது. இதனால் உற்பத்தி பாதிக்கப்படவில்லை என்று அப்போது அமைச்சர் கூறினார். ஆனால் உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. இதுபற்றி ஆராய ஒரு கமிட்டி போட்டார்கள். ஆனால் அந்த அறிக்கை வந்ததா ; என்ன விவரங்கள் என்று அமைச்சர் அவர்கள் இதுவரை சொல்லவில்லை. இன்றைக்கு இருக்கும் நிலைமை என்ன? அங்கிருக்கும் பல்வேறு கோளாறுகளினால் கடந்த சில நாட்களாக மாநிலம் முழுவதும் வேளாண்மை பாதிக்கப்பட்டிருக்கிறது ; குடிதண்ணீர் வசதி பாதிக்கப்பட்டிருக்கிறது. தொழில்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பல இடங்களில் சிதம்பரம், பண்ருட்டி போன்ற இடங்களில் டெலிபோன் கனெக்ஷன் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஈரோடு, திருப்பூர் போன்ற இடங்களில் மின்சாரத் தடை காரணமாக டெலிபிரிண்டர்கள் நிறுத்தப்பட்டு தந்தி பட்டுவாடா தாமதப்படுகிறது. கிராமங்களில் விவசாயிகளுக்கு மின்சார சப்ளை பாதிக்கப்பட்டிருக்கிறது. திருப்பூர், கோவை போன்ற இடங்களில் மணிக்கணக்கில் மின்சாரம் இல்லாத காரணத்தால் பஞ்சாலைகள், எஞ்சினியரிங் தொழில்கள், பனியன் தொழிற்சாலைகள் ஆகியவற்றில் வேலை முடங்கியிருக்கிறது. கோவை மாவட்டத்தில் உள்ள பஞ்சாலைகளிடம் ஒரு ஷிப்ட் ஓட்ட வேண்டாம் என்று சொல்லியிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது.

இம்மாதிரி மின்சார சப்ளை பாதிக்கப்பட்டதன் காரணமாக விவசாயிகளுக்கு மின்சாரம் கிடைக்காமல் நேற்றையதினம் கிளர்ச்சியின் காரணமாக அரக்கோணம், செங்கற்பட்டு மீட்டர்கேஜ் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தி வந்திருக்கிறது.

மாநிலம் பூராவிலும் 15 சதவிகிதம் மின்சார வெட்டு என்று கூறிய போதிலும் கூடுதலான வெட்டு நடைமுறையில் இருந்து வருவதைப் பார்க்கிறோம். இது எந்த அளவுக்குப் போகுமென்று தெரியாத நிலை இருக்கிறது.

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1974 மார்ச் 23

அரசாங்கத்தைப் பொறுத்தவரை எல்லாம் சரியாக இருக்கிறது. அபாயம் இல்லை என்பது போல் அமைச்சர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள்—சட்ட மன்றத்திலும் வெளியிலும். திடீரென்று பேரபாயமான நிலைமை வந்திருக்கிறது.

சட்ட மன்றத்தில் முழுமையான தகவல் தரப்படுவதில்லை. இதை எல்லாம் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவும், மின்சார சப்ளை கிடைக்க என்ன செய்வது என்பது பற்றி முடிவு எடுக்கவும் இந்த அவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. பெ. சீனிவாசன்: தலைவர் அவர்களே, 42வது விதியின் கீழ் சம்பிரதாயமாக ஒரு தீர்மானத்தைக் கொடுத்து கருத்தைச் சொன்ன பிறகு சபையை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று முடிவு எடுக்கின்ற நிலை இருக்கிறது.

இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற மின்சாரத் தொல்லையின் காரணமாக எங்கள் சாத்தூர், கோயில்பட்டி, விருதுநகர் வட்டாரங்களிலிருந்து பொதுமக்கள் நேரடியாக வந்திருக்கிறார்கள். மிகவும் மோசமான சூழ்நிலையில், கடைசி ஒருசில நாட்கள் தண்ணீர் பாய்ச்சும் நிலைமையில் மின்சாரம் தட்டுப்பட்டிருக்கிறது. எங்கள் கட்சிக்குத் தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் தந்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன. அந்த அளவுக்கு விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னது போல் பேரவைக்கு இந்தத் தகவலே தரப்படாமல் போய்விட்டதோ என்று அஞ்சுகிறோம். இந்த நிலைமை நீடிக்குமானால் ஏராளமான பொருள் நஷ்டம் ஏற்படும்.

கமர்ஷியல் கிராப்ஸை நம்பியிருக்கும் விவசாயிகளுக்குப் பெருத்த நஷ்டம் ஏற்படும். பொதுமக்கள் சார்பில் இவற்றை எல்லாம் எடுத்துச் சொல்லுகிறோம். அவர்களுடைய சங்கடத்தைத் தீர்க்க எந்தப் பரிகாரமும் செய்யப்படவில்லை.

தந்திகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மின்சார இலாகா சேர்மன் அவர்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன. இதுவரை பரிகாரம் கிடைக்கவில்லை.

இப்போது திடீர் திடீரென்று பத்து அல்லது பதினைந்து நிமிடம் மட்டுந்தான் மின்சாரம் வரக்கூடிய நிலைமை இருக்கிறது. இன்னும் ஓரிரண்டு நாட்களுக்குள் மின்சார வெட்டு நிலை சீர்படாவிட்டால்,



1974 மார்ச் 23] [திரு. பெ. சீனிவாசன்]

இந்த நிலைமை நீடிக்குமானால் விவசாயிகள் தாங்க முடியாத கஷ்டத்திற்கு உள்ளாவார்கள். இந்த நஷ்டம் எதிர்காலத்திலே மிகப் பெரிய கிளர்ச்சிக்கு ஆரம்பமாக அமைந்து விடும்.

இராமநாதபுரத்தைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். ஏற்கனவே வறட்சியாக இருக்கின்ற பகுதி. இருக்கின்ற கொஞ்சம் தண்ணீரையும் இறைக்க மின்சாரம் இல்லை. இந்த நிலையை உடனடியாக மாற்ற, தமிழகத்தில் இந்த நெருக்கடியைத் தீர்க்க அரசாங்கம் என்ன செய்ய வேண்டுமென்ற முறைகளைப் பற்றி ஆராய பேரவையில் மற்ற நடவடிக்கைகளை உண்மையிலேயே ஒத்தி வைத்து விவாதிப்பது நல்லது என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, வந்தவாசியில் சென்ற ஒருவார காலமாக மின்சாரத் தட்டுப்பாடு காரணமாக பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் கிடைக்காத காரணத்தால் பல்லாயிரக் கணக்கான ஏக்கரில் நெற்பயிர்கள் காய்ந்து கருகிக் கொண்டிருக்கும் நிலைமையை அவையின் கவனத்திற்குக் கொண்டு வர இந்தத் தீர்மானத்தை கொடுத்திருக்கிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், தமிழகம் எங்கும் இப்படிப்பட்ட சிக்கலும் பரபரப்பும், பயங்கர சூழ்நிலையும் மின்சாரத்தைப் பொறுத்து ஏற்பட்டிருக்கிறது. சிறப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் வட ஆற்காடு மாவட்டத்தில்தான் தமிழகத்திலேயே அதிகமான பம்ப் செட்டுகள் வைத்து தீவிர சாகுபடியில் முனைந்திருப்பவர்கள் இருக்கிறார்கள்.

இப்போது வந்தவாசி, செய்யாறு தாலுகாக்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஒருவார காலமாக மின்சாரமே வரவில்லை. உண்மையிலேயே பரபரப்பான பயங்கரமான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக அங்கிருந்து வந்தவர்கள் சொன்னார்கள். தந்திகள் வந்து கொண்டிருக்கின்றன. தொலைபேசி மூலம் செய்திகளை அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நாலைந்து நாட்களுக்குத் தொடர்ந்து மின்சாரம் கொடுக்கப்படவில்லையானால் நாங்கள் செய்திருக்கும் பயிர்கள் அழிந்து விடக்கூடிய பயங்கரமான சூழ்நிலை இருக்கிறது. குடிதண்ணீருக்கும் கூட மின்சாரம் இல்லாமல் இருக்கிறது. வந்தவாசி, செய்யாறு மக்கள் குடிதண்ணீர் கூடக் கிடைக்காமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து கொடுத்த [illegible] குளங்கள் எல்லாம் சரியாகப் பராமரிக்கப்படாமல்

கிடக்கின்றன. இப்போது அதிலிருந்து தண்ணீரை எடுத்துக் குடிக்கப் பயன்படுத்துவதால் வியாதிகள் பரவக் கூடிய அபாயம் இருக்கிறது. சிறு தொழில்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. முக்கியமாக விவசாயிகள் பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அரசு உடனடியாக இதிலே கவனம் செலுத்த வேண்டும்.

விவசாயிகள் பலவிதக் கடன்களைப் பெற்று விவசாயம் செய்து இருக்கிறார்கள். அந்தக் கடன்களைத் திருப்பிக் கொடுப்பது என்பது மட்டுமல்ல இந்த நிலை நீடித்தால் விவசாய சமுதாயம் பாப்பர் ஆகக் கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் இதற்கு நன்கு பதில் சொன்னாலும் இதில் தீவிர நடவடிக்கைகள் எடுத்து எதிர்காலத்தில் இப்படி நிகழாமல் சீராக செய்யப் போகிறோம் என்ற உத்தரவாதத்தை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அளிக்கவேண்டும்.

ஒருவேளை இன்று நிலைமை சரியாகிவிட்டதாகக் கூட தகவல் வந்திருக்கலாம். ஆனால் நாளை மறுநாள் இந்த அபாயம் வராது என்பதற்கான உத்தரவாதத்தை அளிக்கவேண்டும் என்பதற்காக அவையை ஒத்திவைத்து இது பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி: தலைவர் அவர்களே, கோவை ஜில்லாவில் சர்க்கார் நிர்ணயித்துள்ள நேரப் பிரகாரம் மின்சாரம் கொடுக்காததன் காரணமாக ஆயிரக்கணக்கான பாக்டரிகள், மில்களில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் மட்டுமல்லாமல் விவசாய மக்களும் பெருவாரியான வகையில் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வளவு மணி நேரம் என்றாலும் அடிக்கடி ட்ரிப் ஆவதால் ஒரு மணி நேரம் கூட கிடைப்பதில்லை. ஒரு நாள் திருப்பூர் பூராவும் இரவு மின்சாரம் இல்லாமல் ஆலைகள் எல்லாம் பாதிக்கப்பட்டன. சென்ற ஆண்டு மின்சார வெட்டு காரணமாக நான்கு மாதங்கள் தொழிலாளர்கள் வேலை இல்லாமல் பாதிக்கப்பட்டார்கள். விவசாயமும் பாதிக்கப்பட்டது. விவசாயம் பாதிக்கப்பட்டதால் உற்பத்தியும் குறைந்தது. விவசாயிகளுக்கு கடன்களும் ஏற்பட்டது.

ஆகவே, மேலும் இப்படிப்பட்டதொரு நிலை ஏற்படக்கூடாது. இன்று நிலக்கரி பற்றாக்குறை வேறு இருக்கிறது. இரண்டாவது மின் கட் இல்லை. மின்சார உற்பத்தி வேண்டிய அளவிற்கு இல்லை.



ஹைடல் ப்ராஜக்டில் உள்ள நீரை இரவில் மேலே டாங்குக்கு கொண்டு போய் ரொட்டேட் செய்தால் இந்தச் சங்கடம் தீரும். ஆகவே இவைபற்றி விவாதிக்க சபையை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி: பாயின்ட் ஆப் ஆர்டர். நாங்கள் ஆளும் கட்சியில் இருக்கிற காரணத்தால் இப்படிப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொடுக்க முடியாது. ஆனால் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு இப்படி கொண்டுவர முடிகிறது. ரூல் 41-ன் கீழ் நான் ஏற்கனவே நான்கு நாட்களுக்கு முன்னால் இந்த மன்றத்தில் கொடுத்திருப்பது இதுவரையில் வரவில்லை. ஆளும்கட்சிக்காரர்களுக்கும் இவ்விஷயங்களில் அக்கறை இருக்கிறது என்பது இவற்றை மன்றத்தில் கொண்டுவந்தால்தான் பொதுமக்களுக்குத் தெரியும். அப்போது தான் ஆளும் கட்சியினரும் இவ்விஷயங்களில் கவனத்தோடு செயல்படுகிறார்கள் என்பது தெரிய வரும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ரூல் 42-ன் கீழ் மோஷன் கொடுக்க வேண்டுமென்று அவர்களுக்கு அக்கறை இருக்குமென்று சொன்னால் அவர்கள் எதிர் கட்சியில் வந்திருந்து செயல்பட எங்களுக்கொன்றும் தடஸ்தம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் கொடுத்ததுபோல் மாண்புமிகு உறுப்பினர் திரு. எட்டியப்பன் அவர்களும் இப்படிப்பட்ட ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள் என்ற செய்தியை நான் அவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியதுபோல் நாலைந்து நாட்களாக மின்சார விநியோகத்தில் இடர்ப்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பது எல்லோரும் அறிந்த ஒன்றாகும்.

நாலைந்து நாட்களாகவே மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் ஆலோசனைப்படி இதற்கென ஏற்படுத்தப்பட்டிருக்கிற குழுவைக் கலந்து ஆலோசித்து நானும் மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களும் ஏனைய அதிகாரிகளோடு நாலைந்து நாட்களாகவே ஒவ்வொரு நாளும் கலந்து பேசி எவ்வளவுதூரம் சுமுகமான, சீரான சூழ்நிலையை உருவாக்க காரியங்கள் ஆற்ற முடியுமோ

[திரு. ஓ. பி. இராமன்] [1974 மார்ச் 23

அதையெல்லாம் பற்றி பேசி ஒரு முடிவு எடுத்திருக்கிறோம். இந்த நாலைந்து நாட்களாக திடீரென்று எதிர்பாராமல் ஏற்பட்ட இடர்ப்பாட்டிற்கான காரணத்தை முதலில் சொல்ல விரும்புகிறேன்.

ஏற்கனவே 15 சதவிகிதம் மின்வெட்டு வைக்கிறபோது வரக்கூடிய ஜூன் மாதம் வரை, கெடுகாலம் முடிந்து தென் மேற்கு பருவ மழை ஆரம்பிப்பதற்குள்ளாக என்ன பற்றாக்குறை இருக்கிறது என்று கணக்குப் பார்த்து, நெய்வேலியில் இருந்து எவ்வளவு மில்லியன் யூனிட்ஸ் கிடைக்கிறது, ஹைட்ரோவிலிருந்து எவ்வளவு பெறமுடியும், தர்மலிலிருந்து எவ்வளவு பெறமுடியும் என்பதற்கான சாத்தியக் கூறுகளை பரிசீலனை செய்து, அதற்கு போட்டிருக்கிற குழுவைக் கலந்தாலோசித்து அவர்களுடைய ஆலோசனைப்படியும் 15 சதவிகிதம் மின்வெட்டு வைக்கவேண்டுமென்று ஏற்கனவே அறிவித்தோம்.

அத்தியாவசியத் தேவைகளுக்கு 10 சத விகிதம், விவசாயிகள் மின்சாரம் உபயோகித்தால் யூனிட் கணக்கு இல்லாவிட்டாலும் மணிக்கணக்கில் மட்டும் சில கட்டுப்பாடுகள் வைத்து இரவு நேரங்களிலும் பகலிலும் ஒரு ஆறு மணி நேரம் மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று ஏற்கனவே அறிவித்திருக்கிறோம்.

இப்போது ஏற்பட்டுள்ள இடர்ப்பாட்டுக்குக் காரணம் திடீரென்று நாலைந்து நாட்களுக்கு முன்னால் நெய்வேலியில் உற்பத்தி எதிர்பாராமல் 100 மெகாவாட் குறைந்து விட்டதாக தகவல் வந்தது. எண்ணூரில் இருக்கிற மூன்றாவது 110 மெகாவாட் திறன் கொண்ட இயந்திரத்தில் பஞ்சர் ஏற்பட்டதால் அது உடனடியாக நிறுத்தப்பட்டு, பஞ்சர் இன்றைக்கு வெல்ட் செய்யப்பட்டு இன்று மாலை அது இயங்கும் என்று வாரியத் தலைவர் தகவல் கொடுத்திருக்கிறார்கள்.

200 மெகாவாட் க்ரிட்டில் குறைந்ததால் ப்ரீக்குவன்ஸி குறைகிறது. அப்போது பல்வேறு மாவட்டங்களிலும் ட்ரிப் செய்யாவிட்டால் ஓடிக்கொண்டிருக்கிற மின்சாரத்திற்கு பேராபத்து ஏற்படுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆக, இவ்வளவு மெகாவாட் பற்றாக்குறை காரணமாக பல்வேறு மாவட்டங்களிலும் விநியோகத்தில் தடங்கல் ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மைதான். சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஆர்க்காடு வீராசாமி அவர்கள், போரூர் சீனிவாசன் அவர்கள்கூட காலையில் சொன்னார்கள், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள், பலரும் என்னிடம் நேரடியாகச் சொன்னார்கள். திரு. சீனிவாசன் அவர்கள் கூட நேற்று அவர்கள் தொகுதியில் இருந்து உறுப்பினர்களை எல்லாம் அழைத்து வந்து மகஜர் எல்லாம் கொடுத்தார்கள். இருக்கிற நிலைமையை எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.



1974 மார்ச் 23] [திரு. ஓ. பி. இராமன்]

இரண்டு நாட்களுக்குள்ளாக எதிர்பாராமல் ஏற்பட்ட நிலை சீராகிவிடும், மின்சாரவெட்டை பொறுத்து எந்த அளவில் நிலைமைகளை, ஆராய்ந்துகொண்டிருக்கிறோம் என்றும், கூடிய சீக்கிரம் முடிவை அறிவிக்கிறேன் என்றும் சொன்னேன்.

இப்போது நிலைமையை ஆராய்ந்து பார்க்கும்போது ஏற்கனவே 15 சதவீதம் வெட்டு வைக்கும்போது திட்டமிட்ட நிலையில் இப்போது சற்று தடுமாற்றம் ஏற்பட்டிருக்கிறது. தென் மேற்கு பருவ மழை சென்ற ஆண்டு சரியாக இருந்தது, வடகிழக்குப் பருவ மழை சரியாக இல்லை. நெய்வேலி மின்சார நிலையத்தில் இருக்கிற அதிகாரிகள் எவ்வளவு மில்லியன் யூனிட்ஸ் கொடுக்க உத்தரவாதம் கொடுத்தார்களோ அதிலிருந்து 200 மில்லியன் யூனிட் அளவிற்கு குறையும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். தினந்தோறும் பேசிக்கொண்டுதான் இருக்கிறோம்.

நான்காவது 110 மெகா வாட்ஸ்—எண்ணூரில் சென்ற ஆண்டு விபத்து ஏற்பட்டு, அந்த டிரான்ஸ்பார்மர் ஜனவரியில் வரும் என்று திட்டம் தீட்டியிருந்தோம். போபாலில் ரிப்பேர் செய்யப்பட்டு குறித்த நேரத்தில் வரமுடியவில்லை. இப்போதுதான் முதல் டிரான்ஸ்பார்மர் வந்து எரெக்ட் செய்து கொண்டிருக்கிறார்கள். இரண்டாவது டிரான்ஸ்பார்மர் ரெயிலில் வந்து கொண்டிருக்கிறது. அடுத்த மாதம்தான் அது உபயோகத்திற்கு வரும் என்று சொல்கிறார்கள். ஜனவரி மாதம் எதிர்பார்த்தது சற்று தாமதமாகிவிட்டது. அதன் காரணமாக திட்டமிட்டதிலிருந்து 294 மில்லியன் யூனிட்ஸ் குறைவாக இருப்பதால், இதை பரிசீலனை செய்து எல்லோரையும் கலந்து இதற்காகப் போடப்பட்ட குழுவையும் கலந்து ஆலோசித்து நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுடைய ஆலோசனையையும் பெற்று அரசு சார்பாக ஒரு முடிவு எடுத்திருக்கிறோம். அந்த முடிவை இந்த மன்றத்திற்குச் சொல்வது என் கடமை என்று கருதுகிறேன். முடிவை வாசிக்க ஆரம்பிக்கிறேன்.

திரு. க. மு. இராசகோபால்: பாயிண்ட் ஆப் ஆர்டர். அதிகாரிகள் சினிமாக் கொட்டகைகளுக்கு மின்சாரம் கொடுத்து காஞ்சிபுரத்தில் காலையிலும் மாலையிலும் ஓடிக்கொண்டிருக்கின்றன. குடிக்கத் தண்ணீர் இல்லாமல்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை.

[1974 மார்ச் 23

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: பல்வேறு நீர்மின்-சக்தி தேக்கங்களில் இருப்பு நிலை, நெய்வேலியிலிருந்து கிடைக்கக்கூடிய மின்சாரம் உட்பட, அனல் மின்நிலையங்களின் திறனளவு, கேரளாத்திலிருந்து வாங்கப்பெறும் மின்சக்தி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு 1—10—1973 முதல் எல்லா உயர் அழுத்த சர்வீசுகள், குறைவு அழுத்த சர்வீசுகளின் பேரில் 15 சதவிகித மின்வெட்டினை அரசு விதித்தது. தற்பொழுது கிடைக்கின்ற மின்சாரத்தின் அளவை ஒட்டி, நிலைமை பரிசீலிக்கப்பட்டது.

பதினைந்து சதவிகித மின் வெட்டு விதிக்கப்பட்ட பொழுது வடகிழக்குப் பருவ மழை சாதகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. நாம் நினைத்தபடி நிலைமை உருவாகவில்லை. நீர்த்தேக்கங்களின் இருப்பு நிலை நாம் எதிர்பார்த்ததைவிட குறைவாகவே இருந்து வருகிறது. மாற்று மின் மாற்றி கிடைப்பதில் ஏற்பட்டுள்ள சிரமங்களின் விளைவாக, எதிர்பார்த்தபடி எண்ணூரில் 110 மெகாவாட் திறன் கொண்ட நான்காவது யூனிட்டினை 1974 சனவரித் திங்களில் இயக்க முடியவில்லை. அக்டோபர் 1973-லிருந்து 1974 மே வரையிலான காலத்திற்கு நெய்வேலியிலிருந்து 1130 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரம் கிடைக்கலாம் என ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும் இந்த அளவை அதிகப்படுத்துவதாக அவர்கள் கூறியிருந்தார்கள். இந்தக் கூடுதல் அளவு மின்சாரம் இப்பொழுது கிடைக்கவில்லை. அது மட்டுமல்லாமல், நாம் ஆரம்பத்தில் எதிர்பார்த்ததற்கும் சிறிது குறைவாகவே நெய்வேலியிலிருந்து மின்சாரம் கிடைக்கும் என்ற நிலை உள்ளது.

இந்தப் பற்றுக்குறைகள் அனைத்தின் விளைவாக 1974 ஏப்ரல்—மே திங்களில் நமக்கு மொத்தம் 289 மில்லியன் யூனிட்டுகள் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளது. 1974 சூன் இடையிலான காலம் வரையில் தென் மேற்கு பருவ மழை தொடங்கும் வரையில் இந்தப் பற்றுக்குறைவு நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுவதால், இப்பொழுது அமுலில் உள்ள மின்வெட்டினை அதிகப்படுத்துவதும், உச்சக்கட்ட நேரங்களின் மின் உபயோக அளவைக் கட்டுப்படுத்தவும், மேலும் சில கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டிய தவிர்க்க முடியாத நிலைமை உருவாகியுள்ளது. அதையொட்டி கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதென அரசு முடிவு எடுத்துள்ளது :—

(1) உச்சத் தேவையின் மீது 15 சதவிகித மின் வெட்டு விதிக்கப்படும் (மேக்சிமம் டிமாண்ட்).



1974 மார்ச் 23] [திரு. ஓ. பி. இராமன்]

(2) ஒன்று அல்லது இரண்டு ஷிப்டுகள் நடைபெறும் தொடர்ந்து செயல்படாத உயர் அழுத்த மின்சக்தி பயன்படுத்தி ஒரு ஷிப்டோ அல்லது இரண்டு ஷிப்டோ வேலை செய்யும் தொழிற்சாலைகளுக்கு பகல் நேரத்தில் காலை 9 மணியிலிருந்து மாலை 6 மணி வரையிலும் அல்லது இரவு நேரத்தில் இரவு 9 மணியிலிருந்து மறு நாள் காலை 6 மணி வரையில் மின்சாரம் வழங்கப்படும்.

மேற்சொல்லியுள்ள இந்தக் கட்டுப்பாடுகள் 1974 மார்ச் 25-ம் தேதியிலிருந்து அமுலுக்கு வரும்.

1974 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து கீழ்க்கண்ட கூடுதல் கட்டுப்பாடுகளும் அமுலுக்கு வரும்.

(1) எல்லா உயர்வு அழுத்த (எச். டி), குறைந்த அழுத்த (எல். டி.) சர்வீசுகளின் மேல் இப்பொழுது அமுலில் உள்ள 15 சத விகித மின்வெட்டு 30 சதவிகிதமாக உயர்த்தப்படும்.

(2) ரயில்வேக்கள், மருத்துவ மனைகள், நீர் வழங்கல்; விமான தளங்கள், அனைத்திந்திய வானொலி நிலையங்கள், மாநில அரசு அல்லது ஏதாவது கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த பால் பண்ணைகள் மற்றும் பாலை குளிர வைப்பதற்கான நிலையங்கள், தொழிற்சாலைகள் உட்பட பாதுகாப்புப் பணி நிறுவனங்கள், அரசு அச்சகம் மற்றும் கிளை அச்சகங்களும், துறைமுகம் மற்றும் துறைமுக நிறுவனங்கள் மாநிலத்தில் உள்ள பாசனம், மின்சக்தி ஆகியவை சம்பந்தப்பட்ட திட்டங்களும், மற்ற திட்டங்களும், வானிலை ஆராய்ச்சி நிலையங்கள், தபால் தந்தி துறை, கிராமச் செய்தி ஒலி பரப்புதல், துப்புரவு ஏற்பாடுகள், தொலைபேசி தொடர்பகங்கள், பத்திரிகைகள், மற்ற எசென்சியல் சர்வீசுகள், ஆகியவற்றிற்கு இப்பொழுதுள்ள 10 சத விகித மின் வெட்டு 15 சதவிகிதமாக உயர்த்தப்படும்.

(3) புதிய உயர்வு அழுத்த தொழிற்சாலைகளுக்கு தற்பொழுது உள்ள தொடர்ந்து செயல்படாத உயர்வு அழுத்தத் தொழில்களுக்கான கூடுதல் மின் சுமைகளுக்கும் மாதம் ஒன்றுக்கு ஒரு கே.வி.-க்கு நிர்ணயிக்கப்படுகின்ற மின்சார அளவானது 100 யூனிட்டுகளிலிருந்து 10 யூனிட்டுகள் குறைக்கப்பட்டு 90 யூனிட்டுகளாக குறைக்கப்படும்.

(4) தொடர்ந்து செயல்படுகின்ற நிலையில் தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் கூடுதல் தேவைகள் அனுமதிக்கப்பட்ட உயர்வு அழுத்தப் பயனீட்டாளர்களுக்கு ஒரு மாதத்திற்கு ஒரு

கே.வி.-க்கு கூடுதல் தேவைக்காக அனுமதிக்கப்படுகின்ற மின் அளவு 200 யூனிட்டுகளிலிருந்து 20 யூனிட்டுகள் குறைத்து 180 யூனிட்டு களாகக் குறைக்கப்படும்.

குறைவு அழுத்த மின் சுமைகளுக்கு, எல்.டி. இன்டஸ்டிரீஸ் தற்போது மாதம் 200 யூனிட்டுகளுக்கு மேல் போகாது பயன்படுத்தும் தொழில்களுக்கு எந்தவிதமான மின்சார வெட்டும் கிடையாது.

வீடுகளுக்கு விதிக்கப்பட்டிருக்கிற கட்டுப்பாட்டில் எந்தவிதமான மாறுதலும் கிடையாது. வேளாண்மைக்கு ஏற்கனவே அளிக்கப்பட்டு இருந்த அந்த கால நேரத்தில் இருக்கின்ற அடிப்படையில் காலையில் 6 மணி நேரம் அல்லது மாலையில் 6 மணி நேரம் விவசாயிகளுக்கு கண்டிப்பாக மின்சாரம் கொடுக்கப்படும். அதிலே எந்த விதமான மாறுதலும் இல்லை. அது அல்லாமல் இரவு நேரங்களிலும் மின்சாரம் 10 மணியிலிருந்து காலை 6 மணி வரை விசையேற்றங்களுக்கு மின்சாரத்தைப் பயன்படுத்தலாம்.

இப்போது இருக்கிற நிலைமைகளை ஆராய்ந்து பார்த்து அதில் எசன்சியல் சர்வீசுகளுக்கு ஓரளவிற்குச் சலுகையும், சிறிய தொழில் செய்பவர்களுக்கு, வீட்டிற்கு கொடுத்த உச்சவரம்பை மாற்றாமல், பெரும் தொழில் செய்பவர்களுக்குத்தான் 30 சதவிகித கட்டுப்பாடு கொண்டு வந்திருக்கிறோம். அந்த முடிவுகளை எல்லா நிலைகளையும் ஆராய்ந்த பிறகு தான் அரசு எடுத்து இருக்கிறது என்று சொல்லி, இந்தக் கட்டுப்பாடு 2 மாதம் அல்லது 2½ மாதம் இருக்கும் என்று கருதுகிறேன். ஜூன் மாதத்தில் தென் மேற்கு பருவ மழை வந்து விட்டால் அதை ரத்து செய்யும் சூழ்நிலை உருவாகலாம் என்று கருதி தான் இந்த முடிவை இப்போது அறிவித்து இருக்கிறேன்.

இப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னது எல்லாம் 4–5 நாட்களுக்கு முன்பு ஏற்பட்ட இடையூறு பற்றியதாகும். அதற்கு வேறு காரணம் சொன்னேன். மாலையில் அந்த 110 மெகாவாட் பஞ்சர் அடைக்கப்பட்டு கிரிட்டுக்கு வந்து விடும் என்று சொன்னார்கள். இப்போது சேர்மன் அவர்கள் தகவல் கொடுத்து இருக்கிறார்கள். Kerala has been contacted to give immediate relief and they have agreed to give an additional 50 MW from today என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போதிருக்கிற சிரமங்களைத் தவிர்க்கலாம் என்ற அளவுக்கு கேரளத்திலிருந்து ஒத்துழைப்புத் தருவதாக இருக்கிறார்கள். அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது இருக்கிற சூழ்நிலையில் வாரிய அதிகாரிகள் எல்லாவற்றையும் பரிசிலனை செய்து தான் இந்த முடிவை எடுத்து இருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இதுகுறித்து விவாதிக்க, இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை. ஆகவே, இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

(பல உறுப்பினர்கள் குரலெழுப்பினர்)

திரு. ஏ. சுப்பிரமணியம்: ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். அமைச்சர் கொடுத்த தகவலில் சில சரியாக இல்லை. வடகிழக்குப் பருவ மழை சரியாகப் பெய்யாததால் இந்த 15 சதவிகித மின்சார வெட்டு கொண்டுவந்ததாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த மின் வெட்டு 15 சதவிகிதம் அதற்கு முன்பே கொண்டுவரப்பட்டது. நெய்வேலியில் கிடைக்கக்கூடிய மின்சாரம் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் கொடுக்கவேண்டிய மின்சாரத்தைக் கொடுத்து இருக்கிறார்கள். நான் கேட்க விரும்புவது.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். நான் சொல்வதைக் கேளுங்கள். இது விவாதம் அல்ல. முக்கியமான விவாதமாக இருந்தால் அது குறித்து விவாதிக்க விதிமுறைகளில் வேறு வழிகள் இருக்கின்றன. ஒரு மணி நேரம் விவாதம் வேண்டுமென்று கேளுங்கள்.

(பல உறுப்பினர்கள் குரலெழுப்பினர்)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இது உள்ளபடியே பல மாவட்டங்களில் திடீரென்று ஏற்பட்ட ஒரு அதிர்ச்சியான செய்தி தான். ஆகவே, பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் விவாதித்து, ஒரு மணி நேர விவாதத்திற்குத் தாங்களே ஒரு வழி வகுத்து, இரண்டொரு நாளில் அதற்கொரு வழியைத் தாங்களே செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: விவாதிக்க வேண்டுமென்பதற்காகத்தான் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறோம். அப்படி விவாதம் செய்தால் பயன் உள்ளதாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் சொன்னதற்குப் பிறகு அதிலே விவாதம் தொடங்குவது முறையல்ல. விவாதம் வேண்டுமானால் அதற்கு வேறு வழி இருக்கிறது. பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் வைத்து என்றைக்கு வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம்.

DR. H. V. HANDE : Sir, I am on a point of order. Sir, the Hon. Chief Minister has been very kind ~~and just now said~~ that the Business Advisory Committee do meet and discuss, and decide. I am raising a valid point of order. All sections of the House have expressed dissatisfaction and the Hon. Chief Minister himself feels it is necessary to have a discussion.

My point is, when we have brought an adjournment motion, the rule specifically lays down that the Speaker should allow discussion. Now because the Chief Minister has said against what the Hon. Electricity Minister said that no further discussion is necessary—the Chief Minister has said that a further discussion is necessary, we demand that.................

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது விவாதம் தேவையில்லை என்று சொல்லவில்லை. அவர்கள் நிலைமையைத்தான் விளக்கியிருக்கிறார்கள். ஆனால் ஒரு மணி நேர விவாதத்திற்கு நம்முடைய அலுவல் ஆய்வுக்குழுவில் உட்கார்ந்து பேசி இரண்டொரு நாளில் 1 மணி நேர விவாதத்தை வைத்துக்கொள்வதற்கு—இன்றும் நாளையும் போலீஸ் மானியம் இருக்கிறது—முடிவு எடுக்கலாம் என்று சொன்னேன்.

(முற்பகல் 10-30)

டாக்டர் எச். வி. ஹாண்டே : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் அட்ஜர்ன்மெண்டு மோஷன் தேவையில்லை என்று சொல்கிறீர்கள். அட்ஜெர்ன்மெண்டு மோஷன் வாயிலாக இரண்டு மணி நேரம் ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதுவரையில் அட்ஜர்ன்மெண்டு மோஷனுக்கு நேரம் ஒதுக்கவில்லை. நாங்கள் இதை ஆட்சேபிக்கிறோம். நீங்கள் அட்ஜர்ன்மெண்டு மோஷன் மூலமாக நேரத்தை ஒதுக்குகிறீர்களா இல்லையா என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவிக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது எந்த முறையில் அட்ஜர்ன்மெண்ட் மோஷன் கீழ் வரும் என்பதை நீங்கள் சொன்னீர்கள். மாண்புமிகு அமைச்சர் விடை அளித்தார். அதற்குப் பிறகு பேரவைத் தலைவர் தீர்ப்புக் கொடுத்து விட்டார். அதையும் மீறி நேரம் கொடுக்கப்போகிறீர்களா, இல்லையா என்று கேட்பது முறையாக இல்லை. இதிலே எந்தவிதமான பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை.

(திரு. பெ. சீனிவாசன் எழுந்தார்.)



மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். திரு. கே. டி. கே. தங்கமணி.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த அட்ஜர்ன்மெண்ட் மோஷன் என்னுடைய பெயரால் இல்லை என்பதன் காரணமாக நான் ஒன்றும் பேசவில்லை. ஆகவே, தாங்கள் முடிவு கொடுத்த பிறகு நான் இதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தப் பிரச்னை ஒரு முக்கியமான பிரச்னை. ஒரு மாவட்டத்திலிருந்து மட்டுமல்ல, அநேகமாக எல்லா மாவட்டங்களிலிருந்தும் எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் இதைப்பற்றிக் கவலை தெரிவித்திருக்கிறார்கள். தண்ணீர் இல்லாத காரணத்தினால் குடி தண்ணீரை எடுத்துக்கொண்டு போய் பாய்ச்சவேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. உடனடியாக நிவாரணம் வேண்டும். அவ்வாறு உடனடியாக ஏதாவது நிவாரணம் இருக்கும் என்று சொல்லக்கூடிய அளவுக்கு ஸ்டேட்மெண்ட் இல்லை என்ற நிலை தான் இருக்கிறது.

ஆகவே, இன்றைக்கே இதை எடுத்து விவாதித்து ஒரு முடிவெடுக்க வேண்டிய விஷயம் இது. இது ரொம்ப முக்கியமான விஷயமாக இருக்கிற காரணத்தினால் இது இப்பொழுதே விவாதிக்கப்பட வேண்டும். இப்பொழுது விவாதிக்கப்படவில்லை என்று சொன்னால் எங்களுடைய ஆட்சேபனையைத் தெரிவிக்கக்கூடிய முறையில் எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் நாங்கள் வெளியேறவேண்டிய அவசியம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இந்திய கம்யூனிஸ்டு கட்சியினர் வெளிநடப்பு செய்தனர்)

திரு. பெ. சீனிவாசன் : ஒரு கிளாரிபிகேஷன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கிளாரிபிகேஷன் கிடையாது. பேரவைத் தலைவர் தீர்ப்புக் கொடுத்ததற்குப் பிற்பாடு கிளாரிபிகேஷனுக்கு இடமில்லை.

திரு. பெ. சீனிவாசன் : சட்டப்பேரவைக்கும் நாட்டுக்கும் சம்பந்தம் இல்லை. வெளியே இவ்வளவு நெருக்கடியான நிலைமை இருக்கிறது. எங்களுக்கு அதுபற்றிப் பேசுவதற்கு அனுமதியில்லை. வாய்ப்புத் தரவில்லை என்றால் நாங்கள் என்ன செய்ய முடியும்? இந்த சட்டசபைக்கும் பொது மக்களுக்கும் சம்பந்தம் இல்லை என்ற காரணத்தினால் நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

[1974 மார்ச் 23

(அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் வெளிநடப்பு செய்தனர்.)

(கூச்சல் குழப்பம்)

திரு. எம். ஏ. லத்தீப்: அடிக்கடி இந்தச் சபையில் ரௌடித்தனம் செய்கிறீர்களா அல்லது சண்டை போடுகிறீர்களா என்று கேட்பது மிகவும் கீழ்த்தரமாக இருக்கிறது. இந்த அளவுக்குப் போய்க் கொண்டிருந்தால் நாங்கள் எல்லாம் இந்தச் சபையில் இருப்பதற்கே கஷ்டமாக இருக்கிறது. இந்தச் சபையில் எங்கள் கவுரவத்திற்குப் பாதுகாப்புத் தரவேண்டும். தாங்கள் இது குறித்து என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்? இந்த அவையில் இருப்பவர்களை யெல்லாம் பார்த்து ரௌடித்தனம், ரௌடித்தனம் என்றால் நாங்கள் இந்த அவையில் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. எங்கள் கவுரவத்தைப் பாதுகாக்கவேண்டும். தலைவர் அவர்கள் ஒரு முடிவு சொல்லவேண்டும். என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்று சொல்லவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த மன்றத்தில் இருக்கும் உறுப்பினர்கள் அப்படிப்பட்ட சொற்களை உபயோகிப்பது இந்த மன்றத்திற்கு ஒரு மாசு கற்பிப்பது ஆகும். அது எந்தவிதமான நிகழ்ச்சிக் குறிப்பிலும் ஏறாது. எந்த உறுப்பினரும் பேரவைத் தலைவருடைய அனுமதி இல்லாமல் இருக்கையில் உட்கார்ந்து கொண்டு பேசுகிற முறையை பின்பற்றவேண்டாம் என்று நான் பல முறை தெரிவித்திருக்கிறேன். இந்த மன்றத்திலுள்ள அத்தனை உறுப்பினர்களும் அதைப்பின்பற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: நான் ஒரு பிரச்னையை கிளப்ப முற்படுகிறேன். அதாவது, சட்டசபைக்கும் பொது மக்களுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்று சொல்வது பொறுத்த மற்றது. அது உண்மைக்குப் புறம்பானது, சட்டத்திற்குப் புறம்பானது. அதைத் திரும்பப் பெறவேண்டுமென்று தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். ஆதலால் அதை நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து எக்ஸ் பஞ்ச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக்கூறியதிலிருந்து அப்படிப்பட்ட வார்த்தைகளை இங்கே பேசக்கூடாது என்பதை இனியாவது எதிர் தரப்பிலுள்ள ஒரு சிலர் உணர்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்ற காரணத்தினால் அது



1974 மார்ச் 23] [டாக்டர் மு. கருணாநிதி]

நடவடிக்கை குறிப்பில் இருப்பது நல்லது தான். அது மற்ற உறுப்பினர்களுக்கு ஒரு அறிவுரையாக இருக்கும். ஆதலால் அதை எடுக்கத் தேவையில்லை. அதைக் காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் ஏற்பார் என்றே கருதுகிறேன்.

## 3. 1974–75-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—(தொடர்ச்சி).

### (அ) நிதிக் கோரிக்கை எண் 15—காவல் துறை

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 24,43,69,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற தொகை ரூ. 24,43,69,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU M. A. LATHEEF: Sir, to discuss policy, I move—

'That the allotment of Rs. 24,43,69,200 under Demand No. 15—Police be reduced by Rs. 100'

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, சட்டம், அமைதிப் பிரச்சினைகளைக் கையாளும்போது கட்சிப்பாகுபாடில்லாமல் காவல் துறையினர் நடந்துகொள்ளவேண்டுமென்பது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 24,43,69,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

DR. H. V. HANDE : Sir, to discuss the need to give adequate protection to the members of the opposition parties especially to the members of Anna D.M.K., I move—

'That the allotment of Rs. 24,43,69,200 under Demand No. 15--Police be reduced by Rs. 100'

THIRU K. T. K. TANGAMANI : Sir, to discuss about the Police excesses, found by the Commission on Clives Hostel incident, I move—

'That the allotment of Rs. 24,43,69,200 under Demand No. 15--Police be reduced by Rs. 100'

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : தலைவர் அவர்களே, காவல் துறையில் பணிபுரிவோர் மீது கொடுக்கப்படும் புகார்களைச் சரிவர விசாரித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது குறித்து விவாதிக்க—

I move—

'That the allotment of Rs. 24,43,69,200 under Demand No. 15—Police be reduced by Rs 100'

THIRU J. JAMES : Sir, to discuss the necessity to constitute a Selection Board with full authority for the selection of Sub-Inspectors of Police, I move—

'That the allotment of Rs. 24,43,69,200 under Demand No. 15—Police be reduced by Rs. 100'.

திரு. சி. ஆறுமுகம் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். நம்முடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் சற்று முன்பு சட்டசபைக்கும் மக்களுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லிவிட்டு வெளிநடப்பு செய்தவர்கள் இப்பொழுது மீண்டும் உள்ளே வந்திருக்கிறார்கள். இது எப்படி.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, to discuss about the welfare and housing schemes for police, I move—

'That the allotment of Rs. 24,43,69,200 under Demand No. 15—Police be reduced by Rs. 100'



(ஆ) நிதிக் கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,65,04,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,65,04,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவர் அவர்களே, தீயணைப்புத் துறையில் நடைபெறும் ஒழுங்கீனங்களை மாற்றி இலாக்கா நன்கு நடைபெற வேண்டியதன் அவசியத்தைப் பற்றி எடுத்துக்கூற, I move—

'That the allotment of Rs. 1,65,04,700 under Demand No. 16—Fire Services be reduced by Rs. 100'

THIRU K. T. K. TANGAMANI : Sir, to discuss the need to increase the number of Fire Service Stations in the State, I move—

'That the allotment of Rs. 1,65,04,700 under Demand No. 16—Fire Services be reduced by Rs. 100'

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு தாலூகா தலைமையகத்திலும் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்துதல் பற்றி விவாதிக்க, I move—

'That the allotment of Rs. 1,65,04,700 under Demand No. 16—Fire Services be reduced by Rs. 100'

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, ஏராளமான பஞ்சாலைகளையும், என்ஜினியரிங் தொழிற்சாலைகளையும் கொண்டுள்ள சிங்காநல்லூர் நகராட்சியில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைத்திடுவதன் அவசியம் பற்றி விவாதிக்க, I move—

'That allotment of Rs. 1,65,04,700 under Demand No. 16—Fire Services be reduced by Rs. 100'.

[1974 மார்ச் 23

THIRU R. PONNAPPA NADAR : Sir, to discuss about the necessity to open a fire service station at Marthandam in Kuzhithura Municipality, I move—

'That the allotment of Rs. 1,65,04,700 under Demand No. 16—Fire Services ba reduced by Rs. 100.'

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத்தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தமிழ் நாடு காவல் துறைபற்றிய ஆய்வுரை * புத்தகத்தையும், தமிழ் நாடு தீயணைப்புத் துறை பற்றிய ஆய்வுரை † புத்தகத்தையும் அவையின் முன்னால் வைத்திருக்கிறேன். அவைகளை பேரவையின் குறிப்பேட்டில் பதிவு செய்து கொள்ளவேண்டும் என்று தங்கள் வாயிலாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

கொஞ்சம் கடுமையான விவாதத்திற்குரிய மான்யம் இந்த போலீஸ் மான்யம் என்பதை நாம் அறிவோம். அதன் காரணமாகத் தான் காவல் துறையோடு சேர்த்து தீயணைப்புத் துறையையும் இணைத்திருக்கிறார்கள். ஆகவே, இதில் சூடு அதிகம் இல்லாமல் அணைக்கின்ற பொறுப்பினை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக் கொண்டு இந்த விவாதத்தை சுமுகமான முறையில் உஷ்ணத்தைக் குறைத்து ஒளியை அதிகப்படுத்தி நடத்திக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் நல்லுரைகளுக்குப் பிறகு நாளை மறுநாள் என்னுடைய பதிலை வழங்குகிறேன் என்று சொல்லி அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூன்றும், மூன்றும் ஆறு மணி நேரம் விவாதத்திற்கு இருக்கிறது. இதிலே முதல் அமைச்சர் அவர்களுடைய விடை, துவக்கி வைப்பவர், கட்சித் தலைவர்கள் ஆகியோர்களுக்கு 1½ அல்லது 2 மணி நேரம் போய்விடும். மீதம் 4 மணி நேரம்தான் விவாதத்திற்குக் கிடைக்கும். இரண்டு நாட்களும் சேர்ந்து உறுப்பினர்களுக்கு நான்கு மணி நேரம்தான் கிடைக்கும். 24 உறுப்பினர்கள்தான் பேசலாம். . . .

* 941–964-ம் பக்கங்களில் இணைப்பு II- ஆக அச்சிடப்பட்டுள்ளது.

† 964–968-ம் பக்கங்களில் இணைப்பு III-ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1974 மார்ச் 23]

திரு. எம். ஏ. லத்தீப் : மாலையில் வைத்துக்கொள்ளலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : மாலையில் வைத்துக்கொள்வதை நான் ஆட்சேபிக்கிறேன். தினம், தினம் கோரம் இல்லாமல் மணி அடித்து நபர்களை அழைக்கவேண்டிய நிலை இருக்கிறது. மாலையில் வைத்துக்கொண்டால் நபர்கள் இல்லாத அவல நிலை இருக்கிறது. ஆகவே, நாங்கள் அதை ஆட்சேபிக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துவக்குகின்றவருக்கு 15 நிமிடங்கள், மற்றவர்களுக்கு 10 நிமிடங்கள். கண்டிப்பாக அதற்கு மேல் உறுப்பினர்கள் நேரம் எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஏன். குமாரசாமி : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். பேசுவதற்கு நேரத்தைக் குறைத்தால் அங்கத்தினர்களால் எல்லாக் கருத்துக்களையும் சொல்ல முடியாது. பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் இந்த மானியக் கோரிக்கையைப்பற்றி விவாதிக்கின்ற நாட்களை நீட்டியிருக்கலாம். எல்லா உறுப்பினர்களுக்கும் அவர்களுடைய கருத்துக்களை எல்லாம் சொல்கின்ற அளவுக்கு நேரம் கொடுக்க வழி செய்திருக்கலாம். இப்படி நேரத்தைக் குறைத்திருப்பதால் அந்த வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது.

கேரளாவை எடுத்துக்கொண்டால் மானியக் கோரிக்கைகள்மீது விவாதம் 2 மாதம் அல்லது 3 மாதம் நடைபெறுகிறது. இங்கே மிகக் குறைந்த காலத்தில் முடித்துவிடுகிறோம். 5 நிமிடங்கள்தான் ஒருவருக்குப் பேச முடியும் என்றால் எல்லாக் கருத்துக்களையும் எப்படி சொல்ல முடியும், குறைகளை எப்படிச் சுட்டிக்காட்ட முடியும்? ஆகவே, இனிமேலாவது எல்லா உறுப்பினர்களுக்கும் அவர்களுடைய கருத்துக்களைத் தாராளமாக எடுத்துச் சொல்வதற்கு ஏற்ற வகையில் போதிய அளவுக்கு நேரம் கிடைக்க வகை செய்ய வேண்டுமென்று எல்லாக் கட்சித் தலைவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் அந்த வகையில் முடிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் அதிக நேரம் ஒதுக்க வேண்டுமென்று முடிவு செய்தால் எனக்கு ஆட்சேபம் இல்லை. ஆனால் முடிவு செய்த பின்னால் அதை நிறை

[மாண்புமிகு பேரவைத் தலைவர்] [1974 மார்ச் 23

வேற்றுவதுதான் என்னுடைய பொறுப்பு. ஆகவே, எத்தனை நாள் விவாதம் வைத்துக்கொள்ளலாம் என்பதை பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் முடிவு செய்துகொள்ளுங்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த முக்கிய விஷயத்தில் என்னுடைய கருத்தையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் இரண்டு நாள் இந்த இலாகாவுக்கு வேண்டுமென்று சொல்லி, முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மன்றம் நடக்கின்ற கால அளவை நீட்டிப்பதில் எங்களுக்கு ஆட்சேபம் இல்லை. ஆனால் சட்டமன்றம் நடக்கும்போது எல்லா உறுப்பினர்களும் அவைக்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த போலீஸ் துறை, பயர் சர்வீஸ் துறை மானியங்கள் மீது எங்கள் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களின் பேரில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு நான் சொன்ன விஷயத்தை ஆரம்பத்திலேயே திருப்பிச் சொல்ல விரும்புகிறேன். சென்ற ஆண்டில் 22 கோடி ரூபாய் செலவு செய்வதற்கு அங்கீகாரம் கொடுத்தோம். அதற்கு முந்திய ஆண்டில் 20 கோடிக்கு அங்கீகாரம் கொடுத்தோம், இந்த ஆண்டில் 24½ கோடி ரூபாய் வரையில் செலவிடுவதற்கு அங்கீகாரம் கொடுக்கிறோம். இப்படி நாம் அங்கீகாரம் கொடுக்கும்போது, எந்தெந்த வகைகளில் செலவு செய்யப்படுகிறது; எந்தெந்த இனத்தின் கீழ் அதிகமான செலவு ஏற்படுகிறது என்பதைத் தெரிந்து கொள்வதற்குக் கல்வித்துறை, தொழில்துறை போன்றவைகளுக்கு "பெர்பார்மன்ஸ் பட்ஜெட்" கொடுக்கப்படுவது போல இந்தத் துறைக்கும் கொடுத்திருந்தால் உதவியாக இருக்குமென்று ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். மீண்டும் அதையே வற்புறுத்த ஆசைப்படுகிறேன்.

காரணம், பயர் சர்வீஸ் வருகின்ற காரணத்தால், எல்லா இடங்களிலும் பயர் சர்வீஸ் தேவைப்படுவதால், எந்த வகையிலே இந்த ஒதுக்கீடு செலவிடப்படுகிறது என்பதைத் அறிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. பெர்பார்மன்ஸ் பட்ஜெட்டில் அதைத் தெரிந்து கொள்கின்ற வாய்ப்பு இருக்கும். ஆகவேதான் இந்த விஷயத்தை மீண்டும் மீண்டும் வற்புறுத்துகிறேன். சென்ற ஆண்டே



1974 மார்ச் 23] [திரு. கே. டி. கே. தங்கமணி]

தெரிவித்தும், இந்த ஆண்டில் கூட அதைக் கொடுக்காதது வருந்தத்தக்கது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நேரம் குறைவாக இருப்பதால், வேறு சில முக்கிய விஷயங்களுக்கு வருகிறேன்.

11—12—73, 12—3—74 ஆகிய இரண்டு தினங்களில்

There was a seminar organised by the Government of India about Police training.

அந்த செமினாரில் ஹோம் செக்ரட்டரி எஸ்: பி. அம்புரோஸ் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

'Drastic changes in the organisational structure, method of work, attitude of the police and approach of the police are needed to improve its image'.

I repeat the words 'to improve its image'.

'*Ad hoc* changes are being made. *Ad hoc* changes are no good but changes should be form the total angle'.

என்று தெரிவித்திருக்கிறார்கள். நான் இன்றைக்கு இந்த போலீஸ் சம்பந்தமாக சொல்லும்போது அதைவிட அதிகமாகச் சொல்ல முடியும் என்று நினைக்கவில்லை. இங்கே போலீசாருடைய இமேஜ் இன்றைக்கு கறைப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

முன்னாள் விவசாயப் போராட்டம் நடந்தது. அதில் 17 பேர் சுட்டுக்கொல்லப்பட்டார்கள், என்பதைப் பலரும் சுட்டிக்காட்டினார்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் ஓரளவு எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அது சம்பந்தமாகப் பலரும் பல முயற்சிகளை எடுத்தார்கள். ஆனால் இந்த மானியம் வரும்போது, நடந்த முக்கிய சம்பவங்கள் போலீசாருடைய அத்துமீறல் நடவடிக்கைகளின் மூலம் நடைபெற்றவையே என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு கமிஷன் போட்டு, நீதிபதியை வைத்து விசாரணை நடத்தினார்கள். டி.ஐ.ஜி. முதல் அவருக்குக் கீழே இருக்கின்ற அதிகாரிகள் எல்லாம் செய்தது தவறு என்று சொல்லி, இந்த மன்றத்தில் பல தடவை எழுப்பப்பட்டிருக்கிறது. பொதுவான முறையில் நீதி விசாரணை செய்தவர், போலீஸ் அத்துமீறல் நடந்திருக்கிறது என்று முடிவு தெரிவித்திருக்கிறார். இப்படி விசாரணை செய்யும்போது, விசாரணை நடத்துகிறவர்கள் எல்லாம் அத்துமீறல் நடந்திருக்கிறது என்றுதான் சொல்வார்களோ என்ற அச்சம் எங்களுக்கு ஏற்படுகிறது. விபரம் கொடுக்கவில்லை; பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறோம்.

ஆனால், அத்துமீறல் நடந்திருக்கிறது என்று மட்டும் சொல்லியிருக்கிறார்கள். "போலீசுக்கு அஞ்சான், துப்பாக்கிக்கு அஞ்சான்" என்று பாரதியார் சொன்னார். அதுபோல இன்றைக்கு போலீசையும் துப்பாக்கிப் பிரயோகத்தையும் தடியடியையும் கண்டு யாரும் அஞ்சவில்லை. ஆனால் சாதாரண மக்கள் வெறுக்கக்கூடிய அளவுக்கு இன்றைக்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. "பீப்பிள் ஹு ரியல்லி மாட்டர்". இப்போது வருங்கால சமுதாயமான மாணவர்கள் எங்களை இம்மாதிரி போலீசை வைத்து உதைத்திருக்கிறீர்களே என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

நான் இந்த இடத்தில் போலீஸ்தான் காரணம் என்று சொல்ல ஈடுபடவில்லை; விரும்பவில்லை. முன்னால் எங்கள் கட்சியின் சார்பில் மணலி கந்தசாமி அவர்கள் பேசும்போது "போலீஸார் தன் இச்சையாகச் செய்வது இல்லை; அரசாங்கத்தின் கொள்கையை அவர்கள் நிறைவேற்றுகிறார்கள்; அரசாங்கம் செய்யவேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்துவதை அவர்கள் செய்கிறார்கள்" என்று சொல்லியிருக்கிறார்கள். போலீஸார் இப்படி நடந்துகொள்கிறார்கள் என்றால் அதற்கு அரசாங்கம் பொறுப்பு. மன்னிக்க வேண்டும். அரசாங்கத்தின் பொறுப்பு என்று சொல்லும்போது அந்தத் துறையை பொறுப்பேற்றிருக்கிற அமைச்சர்தான் அந்த பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவருக்குத் தெரியாமல் தடியடியும், துப்பாக்கிச் சூடும் நடத்த முடியாது. (குறுக்கீடு) அதற்காக அரசாங்கத்தை ராஜிநாமா செய்யவேண்டுமென்று நான் சொல்லவில்லை. அது அரசியல் பிரச்சனை.

போலீஸ் இலாகா ஒரு குறிப்பிட்ட அமைச்சரிடம் இருக்கிறது. இங்கே முதலமைச்சர்தான் அந்தப் பொறுப்பை வைத்திருக்கிறார்கள். பிரதம அமைச்சர் மற்றத் துறைகளோடு போலீஸ் துறையையும், முன்னால் வைத்திருந்தார்கள். அது மிகவும் கஷ்டமாக இருக்கவே இப்போது போலீஸ் துறையைப் பிரித்து இன்றைக்கு அமைச்சர் தீட்சித் அவர்களிடம் கொடுத்திருக்கிறார்கள். "இட் இஸ் ஹெவி லோடு" என்று கொடுத்துவிட்டார்கள்.

இங்கே போலீஸ் துறையையும், நிதித்துறையையும்—இரண்டுமே பெரிய பொறுப்புள்ள இலாகாக்கள்—முதலமைச்சரே ஏற்றிருக்கிறார். இது ஹெவி லோடு என்று கருதுகிறேன். ஆகவே, போலீஸ் துறையை வேறொரு அமைச்சருக்கு மாற்றிக்கொடுத்தால், முதலமைச்





சருக்குப் பொறுப்பு குறையும்; இந்தத் துறையும் நன்றாகச் செயல்படக்கூடும். மாணவர் இயக்கத்திற்கும் அமைதி ஏற்படும் என்று கருதுகிறேன்.

போலீசார் இன்றைக்கும் பொறுப்போடு, நேர்மையோடு, நியாயத்தோடு நடந்துகொள்ளமாட்டேன் என்கிறார்கள். நிலப்பிரபுக்களுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் தகராறு ஏற்பட்டால் நிலப்பிரபுக்கள் பக்கம் தான் இருக்கிறார்கள். அதற்குப் பல சான்றுகளைச் சொல்ல முடியும். நேரம் இல்லாததால் ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் சொல்கிறேன்.

சமீபத்தில் எம். சூரக்குளம் என்ற கிராமத்தில் விவசாயிகளுக்கும் நிலப் பிரபுக்களுக்கும் ஏற்பட்ட தகராறில் அங்கே இருக்கக்கூடிய போலீஸ் அதிகாரிகள் தவறான முறையில் ஆர்.டி.ஓ.-வையும் மிஸ்லீட் பண்ணி ஒரு பெரிய "லா அண்டு ஆர்டர்" சிக்கலை ஏற்படுத்திவிட்டார்கள். அதற்குப் பின்னால் அரசாங்கம் தலையிட்டு, ஓரளவு நிலைமை சீரடைந்திருக்கிறது.

இன்னும், எங்கள் கட்சியைச் சேர்ந்த வடிவேல் அவர்கள் இரண்டு, மூன்று சம்பவங்களைப்பற்றி வெட்டுத் தீர்மானத்தில் கொடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். விவசாயிகளுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் போராட்டம் நடக்கும் போது, அமைதியை ஏற்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமை. விவசாயிகள்தான் போராட்டத்திற்குக் காரணம் என்று நிலப்பிரபுக்கள் சொல்வார்கள். நிலப்பிரபுக்கள்தான் காரணம் என்று விவசாயத் தொழிலாளர்கள் சொல்வார்கள். இப்படித் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருப்பார்கள்.

ஜெயப்பிரகாசும் அடிக்கடி இதைப்பற்றிச் சொல்வார்கள். விவசாயத் தொழிலாளிகள் அரிசனங்களாக இருக்கலாம்; அல்லது மற்றவர்களாக இருக்கலாம். போலீசார் வழக்குகள் போடும்போது நிலப்பிரபுக்கள் மீது போடமாட்டார்கள்; விவசாயத் தொழிலாளர்கள் மீது தான் போடுவார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. இதில் போலீசாருக்கு மிகுந்த பொறுப்பு இருக்கிறது.

After all, investigation is still in the hands of the police.

அப்போது இன்வெஸ்டிகேஷன் அதாரிட்டி எந்த அளவுக்கு கேஸ் எடுத்து செயல்படுகிறார்கள் என்பது முக்கியமாக வருகிறது.

அதே மாதிரி தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் தகராறு வருகிறது. கடைசியில் தீர்த்து வைக்கிறார்கள். நான் ஒரு தொழிற் சங்கத் தலைவர் என்ற முறையில் சொல்கிறேன். போராட்டம் நடக்கும்போது தொழிலாளர்கள் சில கருத்துக்களைச் சொல்வார்கள். கோபம் மிகுதியால் பல வார்த்தைகளைச் சொல்வார்கள். கல் எடுத்து எறியவும் செய்வார்கள். கன்னாபின்னா என்று கோஷமிடு வார்கள். இவையெல்லாம் கோபத்தில் செய்யப்படுபவை. அதற்குப் பின்னால் வேலை நிறுத்தத்தைத் தீர்த்து வைக்க ஏற்பாடுகள் நடை பெறும். தொழிலாளர்கள்மீது கேஸ் போடுகிறார்கள். நாங்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட ஒப்பந்தம் செய்யும்போது பல காரியங்களைச் சொல்வோம். இந்த இடத்தில் எங்களை எல்லாம் வளர்த்து ஆளாக்கிவிட்ட சர்க்கரை செட்டியார் அடிக்கடிக் கூறுவதை சொல்ல வேண்டும்.

'No action of any sort should be taken against any worker for taking part in any strike in any manner possible'

என்ற கருத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

இங்கே சிம்சன் போன்ற தொழில் நிறுவனங்களில் தகராறு ஏற்பட்டது. 240 பேர் மீது கேஸ் போட்டு, வழக்கு நடக்கிறது; இன்னும் நடக்கிறது. ஒரு விசேஷ மாஜிஸ்ட்ரேட் கூட போட்டார் கள். அவர் விசேஷமாகக் கூடுவது கிடையாது. 34 பேர் மீதுள்ள கேஸை டிஸ்சார்ஜ் செய்திருக்கிறார்கள். மற்ற கேஸ்கள் என்ன ஆயின?

Why should this be hanging on the head of the workers when the dispute has been settled?

அதை முதலமைச்சருக்கு மட்டுமல்ல—இந்தச் சபையின் தீர்ப்புக்கு வைக்கிறேன். ஆனால் போலீஸ் இலாக்காவின் போக்கு—தொடர்ந்து இதற்கு மாறாகவே போய்க்கொண்டிருக்கிறது. அதே மாதிரி மாணவர்கள்.

இப்போது சமீபத்தில் ஏற்பட்ட ஒரு தகராறு—ஜெனரல் ஆஸ்பத்திரியில் ஒரு தொழிலாளியை டிஸ்மிஸ் செய்துவிட்டார்கள். போலீஸ் அவரைக் கைது செய்தபோது ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டது. தனிப்பட்ட ஒரு தொழிலாளியை அரஸ்ட் பண்ணினார் கள் என்று அல்ல—இந்தக் காரியங்கள் அங்கே நூற்றுக்கணக்காக நடைபெறுகின்றன. அங்கிருக்கிற பேஷண்டுகளுக்கு பால் கொடுக்கப் படுவதில்லை. மருந்துகளை யார் யாரோ கொண்டுபோய்க்கொண்டிருக்



கிறார்கள். ஆனால் இன்றையதினம் சாதாரண ஒரு தொழிலாளி பழி வாங்கப்படுகிறார் என்றால்—தொழிலாளி பேரில் தனிப்பட்ட அனுதாபம் கிடையாது—ஆனால் தொழிலாள சமூகத்தினர் பழி வாங்கப்படுகிறார்கள் என்கிற ஆவேசம் எழுந்தது—டாக்டர்களோ, பெரிய அதிகாரிகளோ என்ன என்னவோ காரியங்களைச் செய்கிறார்கள் —ஒன்றும் காணோம் என்கிற அடிப்படையில் எழுந்த ஆவேசம். உடனே 368 பேர்கள் அரெஸ்ட்—இப்படி அரெஸ்ட் செய்வதன் மூலமே அந்தக் காரியத்தை மேலும் தூண்டிவிடுகிறார்கள்.

நான் பொது விவாதத்திலே சொன்னேன். கிளைவ் ஹாஸ்டலில் நடந்த சம்பவத்தை வைத்து மாணவர்கள் கிளர்ச்சியை ஆரம்பித் தார்கள். எதிர்க்கட்சியினர்கள் எல்லாம் கேட்டுக்கொண்டதன் பேரில் அவர்கள் கடைசியாகப் போராட்டத்தையே வாபஸ் பெற்று விட்டார்கள். ஆனால் இன்றைக்கும்—எக்மோர் 5-வது மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டிலோ, 9-வது மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டிலோ அந்த மாண வர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் வாபஸ் பெறப்படாமல் இருக்கின்றன. இன்றைக்கு பரீட்சை நடக்க வேண்டிய சமயத்தில் வழக்குக்கு வாய்தா போடுகிற நிலைமை.

Whenever there is a dispute between the landlord and the peasant, whenever there is a dispute between the employer and the employee and whenever there is a fight where the students are involved, the police force must always go by the side of the weaker side.

என்று செய்தால்—இது அவர்களது இமேஜை ஓரளவுக்கு மாற்றும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேமாதிரி ஒரு டி.எஸ்.பி. அவரை பலபேர்களுக்குப் பிடிக்காது. ஆனால் எனக்குப் பிடிக்கும். காரணம்

He had put down the unsocial elements ruthlessly

அவர் செய்கையில் தவறான முறைகள் இருக்கலாம். ஆனால் ரௌடித் தனம் பண்ணிக் கொண்டிருந்த ஒரு கூட்டத்தையே அடக்கினார். அப்பேர்ப்பட்டவரை மாற்றிவிட்டார்கள். மாற்றினதற்கு வேறு காரணம் இருக்கலாம். அன்சோஷல் எலிமெண்டுக்கு ஆளுங்கட்சி பாதுகாப்புக் கொடுக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

போலீஸ் இலாக்காவில் உள்ளவர்களுக்குள்ள சிக்கல் என்ன என்று எனக்கு நன்றாகப் புரிகிறது. கேரளத்தில் அச்சுதமேனனை முதலமைச்சராக வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 மார்ச் 23

அவருக்கு மெஜாரிட்டி இல்லை. அப்போது நடந்த விவாதத்தில் நானும் பங்குகொண்டிருந்தேன். ஜனங்கள் மத்தியில் நேரிடையாகத் தொடர்பு வைத்துக்கொண்டிருப்பவர்கள் போலீஸ்காரர்கள். அவர்கள் மத்தியில் ஐ.ஜி.-இல் இருந்து கான்ஸ்டபிள் வரை—யாரும் நேரிடையாகத் தலையிடக் கூடாது, ஏதாவது புகார் என்றால் என்னிடம் சொல்லுங்கள்—நான் ஐ.ஜி. மூலமாக அவர்களுக்குத் தெரிவிக்கிறேன். அந்த அளவுக்கு ஆளும் கட்சியினர் தலையிடாமல் இருந்தால்தான் நான் பொறுப்பை ஏற்பேன் என்றார். கோயாவும்—

'The police officer will be dealt with by my report to the I.G., I will not deal with the police officer direct.

என்று சொல்லி—இன்னொரு ஸ்டூலை எடுங்கள் என்றார் கோயா சொன்னது நல்ல ஏற்பாடு. அந்த ஏற்பாட்டை இங்கு செய்தால் ஓரளவு இங்கும் நிலைமையை ஒரு கட்டுக்குள் கொண்டுவர முடியும் என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம். அமைச்சர் அவர்கள் பிரசங்கத்தில் எங்கும் கம்யூனல் க்ளாஷ் வரவில்லை, ஓரிடத்தைத் தவிர என்று சொன்னார்கள். இப்போது ஒரு சம்பவம்—பத்திரிகையில் வராதிருக்க வேண்டுமே என்று நினைத்தேன். ஒரு பத்திரிகை—அதை முதல் பக்கத்தில்—ரொம்ப விவரமாகப் போட்டுவிட்டது. திருநெல்வேலி ஜில்லாவில் அங்குள்ள நிலைமை என்ன என்பது நமக்குத் தெரியும்—அது ஒரு வல்னரபிள் ஸ்பாட்—டென்ஸ் சிச்சுவேஷன். அது போலீஸ்காரர்கள் மிகவும் ஜாக்கிரதையாகத் தீர்க்க வேண்டிய பிரச்சினை. I am informed that the Police Circle Inspector misled the A.S.P. ஆகவே உடனடியாக அங்கே பாது காப்புப் போடவேண்டிய நிலைமை இருக்கிறது.

இன்னும் முனிசிபல் தேர்தல் வர இருக்கிறது—தகராறு என்றால் சில ஊர்களில் தான் தகராறு. எந்த எந்த ஊர்கள் என்பது போலீஸ்காரர்களுக்குத் தெரியும். நான் முன்பே சொல்லியிருக்கிறேன். ஸ்பெஷல் கான்ஸ்டபிள் ஒருவர், ஹெட் கான்ஸ்டபிள் ஒருவரைக் கொடுத்தால் போதும்—எல்லா விவரங்களையும் 24 மணி நேரத்தில் சொல்லக்கூடிய அளவுக்கு நம்மவர்கள் திறமைபெற்றவர்கள். இந்தியா பூராவிலும் இருந்த 1,200 கம்யூனிஸ்டுகளை ஒரே நாள் இரவில் கைது செய்தார்கள்—யார், யார் எந்த நேரம் எங்கே இருக்கிறார் என்கிற விவரங்களை எல்லாம் எப்போதும் தெரிந்து வைத்திருப்பவர்கள். அவ்வளவு திறமை வாய்ந்தவர்கள், இன்றைக்கு



1974 மார்ச் 23] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இந்த மாவட்டத்தில் எங்கெங்கே தகராறு வரும் என்று தெரிந்து அதைத் தடுக்க தலையிட்டிருக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சில இடங்களில் அத்து மீறிய செயல்களிலும் ஈடுபடுகிறார்கள். தங்கச்சிமடம் என்ற ஊரில் அந்தோணி அம்மாள் கைதுசெய்யப்பட்டு, காவலில் இறந்தார்கள். அந்தோணி அம்மாளுடைய பெண்ணே பத்திரிகையில் அறிக்கை கொடுத்திருக்கிறாள். "எங்கள் அம்மா கள்ளச் சாராயம் காய்ச்சுவது உண்டு. இப்போது காய்ச்சுவது இல்லை. போலீஸ்காரர் காய்ச்சு என்று சொன்னபோது மாட்டேன் என்று மறுத்துவிட்ட காரணத்தினால், கைது செய்யப்பட்டு, அதனால் இறந்திருக்கிறார்" என்று அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். இதைப் பரிசீலனை செய்ய வேண்டும்.

இன்னும் காரைக்குடி—ராமைய்யா—காவலில் அடித்துக்கொல்லப் பட்டார். போலீசுக்குத் தொந்தரவு வேண்டாம் என்று எல்லாக் கட்சிக்காரர்களும் அந்தப் பிரச்சினையை வேறு ஒரு வழியில் விட்டார்கள்.

இன்னும் கள்ளிக்குடி சப் இன்ஸ்பெக்டர்—நான் யாரைப்பற்றியும் குறிப்பிட்டுச் சொல்லி, அவரது வாழ்க்கைக்குப் பாதகம் ஏற்படுத்த நினைக்கமாட்டேன். ஓரிடத்தில் ஒரு கொலை நடந்தது. டென்ஸ் சிச்சுவேஷன்—அதை கேர்புலாக டீல் பண்ண வேண்டியவர்—ஒரே சிக்கலாக்கிவிட்டார். அவர் ஏற்கனவேயே சஸ்பென்ஷனில் இருந்தவராம். அது சாதிப் பிரச்சினையாகி வருகிறது.

இன்னும் ஒரு சொந்தக்காரர், ஒரு சொந்தக்காரரைக் கொன்று விட்டார். ரொம்ப டெலிகேட்டான விஷயம்—அதை எந்த மாதிரி அங்கிருந்த அதிகாரி டீல் பண்ணினார் என்பதைப் பார்க்கிறோம்.

இப்படி திறமைக் குறைவான அதிகாரிகளாலும் பல பிரச்சினைகள் எழுந்துவிடுகின்றன. இவர்களை எங்கெங்கு போடவேண்டும் என்பதையும் யோசிக்கவேண்டும்.

இன்னும் தீ விபத்தினால் ஏற்பட்ட சேதம் 1½ கோடிக்கு இருக்கும் என்றார்கள். குடியாத்தம் தீ விபத்தில் மட்டும் 1 கோடிக்குமேல் நட்டமாகியிருக்கும். நேற்று தேனாம்பேட்டை—இரண்டுநாள் முந்தி விழுப்புரம்—மதுரை—உசிலம்பட்டி. இன்னும் தஞ்சாவூர்—பேராவூரணி—இப்படி சென்னை, வடாற்காடு, தென்னாற்காடு,

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 மார்ச் 23

மதுரை, தஞ்சாவூர் என்று எல்லா இடத்திலும் தீ பரவ ஆரம்பிக்கிறது. ஏதோ கோளாறு—ஏதாவது ஓரிடத்தில் ஒரு நீதி விசாரணை வையுங்கள். நிலைமை என்ன என்பது தெரியட்டும்.

(முற்பகல் 11-00)

ஒரு நீதி விசாரணை நடத்துவோம் என்று சொன்னால், என்ன நிலைமையிலே அது வந்தது என்று தெரியும்?

Whether it is accidental fire or it was pre-meditated.

பலவிதத்திலே டெலிபரேட்டாக இருக்கும். உள்ளே நுழைந்து பார்த்தால், யார் யாரோ வைத்தார்கள், பிறகு அவர்களே வைத்துக் கொண்டார்கள் என்றுகூட வரும். இப்படி பல நிலைமைகள் வரும். ஆகவே, உள்ளே நுழைந்து விசாரணை செய்துபார்க்கவேண்டும். ஃபையர் சர்வீஸ் சம்பந்தமாக, I want to speak highly. The fire service is remarkable. இந்த ஆண்டு ரூ. 2 கோடிதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டு ரூ. 10 கோடி ஒதுக்குகிறோம் என்று சொல்லுங்கள். நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஏனென்றால், அவர்களுடைய சர்வீஸ் ரொம்ப நன்றாக இருக்கிறது. கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பாக வைகையிலே வெள்ளம் வந்தபொழுது their service was remarkable. இதற்கென்று தனி செட்-அப் போட்டிருக்கிறார்கள். அவர்களுடைய சம்பள நிலைமையெல்லாம், சுருக்கமாகச் சொல்லப்போனால், போலீஸ் அளவுக்காவது உயரவேண்டும்.

ஜில்லாவுக்கு ஒரு அதிகாரி போடவேண்டும். ஒரு நல்ல வெட்டுப் பிரேரணை வந்திருக்கிறது, ஒவ்வொரு தாலுகா ஸ்டேஷனுக்கும் ஃபையர் ஸ்டேஷன் இருக்க வேண்டுமென்று. கிட்டத்தட்ட போலீஸுக்கு இருக்கக்கூடிய டிஸிப்ளின் எல்லாம் இதிலே இருக்கிறது. அவர்கள் என்ன என்ன வேலைகளையெல்லாம் செய்கிறார்கள் என்று நம்முடைய முதல்வர் அவர்களுடைய அறிக்கையிலே மிகத் தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்கு இருக்கிற சம்பள நிலையை மாற்றி அமைக்கவேண்டும். வாரத்திற்கு ஒரு நாள் கூட அவர்களுக்கு லீவே கிடையாது. பகல் 9 மணி நேரம், இரவு 15 மணி நேரம் வேலை செய்ய வேண்டும் என்று இருக்கிறது. அதை எல்லாம் கவனிக்கவேண்டும்.

கடைசியாக, இரண்டே இரண்டு விஷயங்களை மட்டும் சொல்லி முடித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். அதாவது, சில விஷயங்களுக்கு இங்கு வாக்குறுதி கொடுக்கப்படுகிறது. அந்த வாக்குறுதி என்ன ஆனது என்று தெரியவில்லை. இரண்டு ஆண்டு



1974 மார்ச் 23] [திரு. கே. டி. கே. தங்கமணி]

களுக்கு முன்பு சேலத்திலே மஞ்சுளா என்ற பெண் இறந்து விட்டாள் சிலபேர் சொன்னார்கள், லாக்கப்பிலே இறந்து விட்டதாக. போலீஸ் ரிப்போர்ட் அடிப்படையிலே வந்த செய்தி, கிணற்றிலே விழுந்து இறந்ததாக. அதுபற்றி மீண்டும் விசாரிக்கப் போவதாகச் சொல்லப் பட்டது. என்ன நடந்தது, மீண்டும் பரிசீலனை செய்ததில் கிடைத்த உண்மை என்ன என்பது நமக்குத் தெரியவேண்டும்.

இன்றைக்கு இன்வெஸ்டிகேஷனில் இருப்பதால், பாத்திமா கேஸ் பற்றிச் சொல்லவில்லை. பாத்திமா கேஸ் ஒரு நிலையில் போய்க் கொண்டிருக்கிறது. அப்பொழுதே நாங்கள் எழுப்பினோம்.

போன தடவை இராயபுரத்திலே ஒரு பெண் அடித்துக் கொல்லப் பட்டார். அந்தப் பெண்ணின் மாமியாருக்குக் கூட மண்டை உடைந்தது. கடைசியில் மாமியாரை அரெஸ்ட் பண்ண மாதிரி தெரிகிறது. ஜனங்களுக்குத் தெரிந்த உண்மை ஒரு மாதிரியாக இருக்க, போலீஸ் இன்வெஸ்டிகேஷன் ஒரு மாதிரி இருக்கிறது. போலீஸ் இன்வெஸ்டிகேஷனிலே புது உண்மை வரலாம். ஆனால், அது பொது ஜனங்கள் மத்தியிலிருக்கிறதற்கு மாறாக, விபரீத உண்மையாக இருக்கக் கூடாது. சுற்றியிருக்கிற ஜனங்கள் விபரீதம் என்று நினைக்கக் கூடாது.

I am not casting aspersion on the investigation. Investigation must be thorough and when investigation takes place, you must take the people of that area into confidence.

பொதுவாக, இன்றைக்குவரை, பிரெஞ்சு முறையிலே எந்தக் குற்றம் செய்தவனும் தப்பிக்க முடியாது. குற்றம் செய்யப்பட்டிருந்தால், அன்றைக்கே ஒருவர் மாஜிஸ்டிரேட் மாதிரி வந்து விசாரித்து விடுகிறார். அவ்வளவு பேரையும் விசாரிக்கிறார். குற்றம் செய்தவன் தப்பிக்கவே முடியாது. ஆனால், நம்முடைய பிரிட்டிஷ் ஜுரிஸ்புருடன்ஸில்தான் குற்றம் செய்தவன் தப்பிக்கிறான், குற்றம் செய்யாதவனுக்குப் பாதகங்கள் வருகின்றன.

அடுத்து, சிந்தன் கேஸ். போன தடவையே சொன்னேன். போலீசார் கொஞ்சம் நியூட்ரலாக இருக்கவேண்டும். அக்யூஸ்டுக்கு அலிபியாக நிற்கிறார் போலீஸ்காரர். This is scandalous. இந்த நிலைமை வரக் கூடாது. அப்படி வந்தாலும், ஆளும் கட்சியிலே உள்ள செல்வாக்குள்ளவர்களுக்காகச் சில காரியங்களைச் செய்கிறார்களோ என்ற நிலைமை வருகிறது, இருக்கிறது.

ஹாண்டே அவர்கள்கூடச் சொன்னார்கள், எதிர்க்கட்சிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்கவேண்டும். அதனால் எதிர்க்கட்சிகள் செய்கிற தவறுகளை எல்லாம் நீங்கள் கண்டிக்க வேண்டாம் என்று நான்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 மார்ச் 23

சொல்லவில்லை. எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள்மீது இருக்கிற கேஸ்களை விரைவாகவும், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள்மீது இருக்கிற கேஸ்களை எல்லாம் தாமதமாகவும் நடத்துவது என்ற போக்கு கைவிடப்படவேண்டும். முன்னேயே சொன்னேன், எங்கள் கட்சிபேரிலே கேஸ் வந்தால், அதற்காக ஸ்பெஷலாக ஜட்ஜைப் போடுகிறார்கள். அவர்கள் வேறு இடத்திற்குப் போகிறார்கள். ஜனங்கள் என்ன சொல்கிறார்கள்? I do not know what directions were given The judge was specially posted because a particular case was there என்று சந்தேகம் ஏற்படக் கூடிய நிலைமை இருக்கிறது. அதற்குப் போலீஸ் அல்ல பொறுப்பு. இன்றைக்கு அவர்களுக்கு இருக்கக்கூடிய பொறுப்பு இந்த அளவுக்கு அதிகமாக வருகிறது என்ற காரணத்தாலே, இதையெல்லாம் குறிப்பிடுகிறேன்.

கடைசியாக, அன்டச்சபிலிட்டி ஸ்குவாட் என்ற ஒன்று இருக்கிறது. அன்சோஷியல் எலிமென்ட்ஸ், அன்டச்சபிலிட்டி இன்றைக்கும் இருக்கிறது. நான், அவனைத் தீண்டமாட்டேன் என்று சொல்லிக் கொண்டிருக்கக்கூடிய ஆள்மேலே கடுமையான நடவடிக்கையை எடுங்கள்.

இந்த போலீஸ் செட் அப்பிலே சப் இன்ஸ்பெக்டர் ஒரு அரிசனனாக இருந்தால்கூட, அங்கு வந்தவுடன், மேல்சாதி என்ற மாதிரி உணர்வு வந்து, அரிசனங்களுக்கே பாதுகாப்பு கொடுக்க மறுக்கிறார்கள். அந்த மாதிரி செட் அப் வந்துவிட்டது.

இன்றைக்கும் அரசியல் சட்டத்திற்கு விரோதமாக, அன்டச்சபிலிட்டியைக் கடைப்பிடிப்பவர்கள்மீது நாங்கள் இன்ன நடவடிக்கை எடுத்தோம், இத்தனை பேரைக் கைது செய்தோம், இத்தனைபேர் தண்டனை பெற்றார்கள் என்ற விவரமெல்லாம் அறிக்கையிலே வர வேண்டும். அன்சோஷியல் எலிமென்ட்ஸ் எப்படி டீல் செய்யப் பட்டார்கள் என்று வரவேண்டும். Those who are not conforming to the Constitution; people who are throwing out the Constitution என்ற முறையிலே அன்டச்சபிலிட்டியைக் கடைபிடிக்கிறவர்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற முறையிலே, அதைச் சொல்லி, ஆரம்பத்திலே சொன்ன பிரச்னையை வற்புறுத்த ஆசைப்படுகிறேன்.



1974 மார்ச் 23] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இந்த போலீஸ் மானியத்திற்கு இந்த வருஷம் ரூ. 2½ கோடி அதிகமாக ஒப்புதல் கேட்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இது அப்படி இருந்தாலும்கூட, சென்ற ஆண்டு அதிலே எடுத்த நடவடிக்கை, அதிலே பணம் செலவழித்த நிலைமை தெரிய வேண்டும். போலீஸ் கான்ஸ்டபிள்கள், சென்னையிலே இருக்கிறவர்கள், என்னிடம் சொன்னார்கள், சென்ற 3 ஆண்டுகளாக எந்தவிதமான இன்கிரிமென்ட்டும் அவர்களுக்குக் கிடையாது. என்.ஜி.ஓ.க்களுக்குக் கொடுத்த, ரூ. 10 அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்று.

அதேபோல், கீழ்மட்டத்திலே உள்ளவர்களுக்கு பிரமோஷன் கொடுக்கவேண்டிய ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று சொல்லிக் கொண்டு, இந்த போலீஸ் மானியத்திலே நான் கொடுத்த வெட்டுப் பிரேரணையை வற்புறுத்துவது மாத்திரமல்லாமல், இன்னும் எங்கள் கட்சியின் சார்பிலும், மற்றவர்கள் சார்பிலும் கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணைகளை வற்புறுத்தி, முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ஏ. க. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த மன்றத்தில் கொண்டு வந்திருக்கிற போலீஸ், தீயணைப்புத் துறை பற்றிய மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை எடுத்துச்சொல்ல விழைகின்றேன்.

கடந்த 1973-ம் ஆண்டில் 5,716 அழைப்புகள் வந்தன என்றும், தீயணைப்புப் படையினரால், அழிவினின்று மீட்கப்பட்ட உடைமையின் மதிப்பு ரூ. 663.7 இலட்சம் என்றும், தீயினால் அழிக்கப்பட்ட உடைமைகளின் மதிப்பு ரூ. 148.5 இலட்சம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டதுபோல், கடந்த 10—3—1974 அன்று குடியாத்தத்தில் நடைபெற்ற அந்தப் பயங்கர தீ விபத்தில் மாத்திரம், கடந்த 1973-ம் ஆண்டு தமிழகம் முழுவதிலும் ஏற்பட்ட சேதத்தைவிட, மிகப் பயங்கரமான அளவு, அதிக அளவு, சேதம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த மன்றத்திலே மிக வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். தமிழகம் முழுவதிலும் 73 தீயணைப்பு நிலையங்கள் பணியாற்றுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவற்றிலே சென்னையிலே இருக்கிற 14 நிலையங்கள் தவிர, மற்ற இடங்களிலே 59 நிலையங்கள் பணியாற்றி வருகின்றன. குடியாத்தத்தில் நண்பகல் 2-30 மணிக்குச் சம்பவம் நடைபெற்ற நேரத்தில், நான் அங்கு இருந்

தேன். என்னுடைய கண் எதிரிலேயே அத்தனை சம்பவமும் நடைபெற்றது. நான், 101 எண்ணுக்குப் போன் செய்த நேரத்தில் குறிப்பிட்ட இடத்திற்குத் தீயணைப்பு வண்டி சென்று விட்டதாகச் சொன்னார்கள். ஆகவே, நான் மன நிறைவடைந்தேன், உடனடியாக தீயை அணைத்து விடுவார்கள் என்று. ஆனால், பிறகு விசாரித்து பார்த்த நேரத்தில், அந்த வண்டி ஸ்டார்ட் ஆகவில்லையென்றும், குறிப்பிட்ட நிலையில் ஏற்பட்ட அந்தப் பயங்கரமான சூழ்நிலையில் வண்டி முன்னுக்கும் பின்னுக்கும் செல்லவில்லையென்றும், தண்ணீர் சப்ளை செய்யச் சென்ற வண்டியும் சரியான முறையிலே வேலை செய்ய வில்லை என்றும் குறிப்பிட்டார்கள். அதன் காரணமாக, அன்றைக்கு 5 பேர் அந்தத் தீயிலே கருகி மாண்டனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அரசினர் மருத்துவ மனைக்குச் சென்று அவர்களைப் பார்த்துத் திரும்பிய பிறகு ஒருவரும், அடுத்த நாள் ஒருவரும், ஆக இரண்டு பேர் இறந்து, இன்னும் சிலபேர் கவலைக்கிடமான நிலையிலே—20 பேருக்கு மேலே—மருத்துவ மனையிலே இருக்கிறார்கள், என்பதை முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

தீயணைப்பு வண்டியிலே இருக்கிற தண்ணீர் தெளிக்கப்பட்டதற்குப் பின்னாலும்கூட, வண்டி சரியாக இயங்கியிருந்தாலும்கூட, அந்தத் தீயைத் தடுத்து நிறுத்தி இருக்க முடியாது. ஏனென்றால், அந்தத் தண்ணீர் சப்ளை செய்யும் வண்டி , 10 அடி ஆழம் உடைய இடத்திலிருக்கிற தண்ணீரைத்தான் உறிஞ்சக்கூடிய சக்தி படைத்தது என்று சொல்கிறார்கள். ஆனால், அங்கே பல கிணறுகள் இருந்தன. என்னுடைய தொகுதியிலே வீடுகள் எல்லாம் எரிகின்ற நேரத்தில், என்னுடைய வீட்டைச் சுற்றியிருக்கிற 100-க்கு மேற்பட்ட வீடுகள் எரிகின்ற நேரத்தில், வெளியிலேயிருந்து வந்த வண்டிதான் தீயை அணைத்தது. மேலும், தண்ணீரைத் தேடிச்சென்ற வண்டிகள் மீண்டும் வருவதற்கு ஒரு மணி நேரத்திற்கு மேலாக ஆகிவிட்டது. என்னுடைய தெருவிலே ஏராளமான கிணறுகள் இருக்கின்றன, பெரும் அளவிற்குப் பெரிய கிணறுகள் பல இருக்கின்றன. அந்தக் கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுக்க முடியாத நிலைமையிலே எஞ்சின்கள் இருக்கின்றன. ரயில் இஞ்சினுக்குத் தண்ணீர் சப்ளை செய்வதைப்போன்ற வசதிகள் எந்த இடத்திலும் இருக்க முடியாது. எனவே 100 அடி ஆழத்திலிருந்து, குறைந்த பட்சம் 50 அடி ஆழத்திலிருந்தாவது தண்ணீரை உறிஞ்சி இழுக்கக்கூடிய சக்திகொண்ட இஞ்சின்களைத் தமிழகம் பூராவிலும் உள்ள தீயணைப்பு நிலையங்களில் வைக்கவேண்டும்.



நகரங்களிலே மின்சார பம்புசெட்டுகள் இல்லை, கிராமங்களிலே இருக்கின்றன, அவற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக்கொள்ளலாம். ஆனால் மின்சாரம் கிடைப்பதிலே வேறு சங்கடங்கள் இருக்கின்றன. மின்சாரம் அந்த நேரத்திலே கிடைக்கவில்லை.

தீ பற்றி எரிகிற நேரத்திலே பல்லாயிரக்கணக்கான மக்கள் தீயை அணைப்பதற்காக ஓடிய காட்சியை நான் பார்த்தேன். ஆனால் குறிப்பிட்ட பதினைந்து நிமிடத்திற்குள்ளாக மின்சாரம் தீ பற்றிக் கொண்டதைப் பார்த்தவுடனே தீயணைக்க ஓடிய மக்கள் எல்லாம் மின்சாரம் பற்றிக்கொண்டது, பற்றிக்கொண்டது ஓடிவந்துவிடுங்கள் ஓடிவந்துவிடுங்கள் என்று ஓடிவந்த நிலையைப் பார்த்தேன்.

மின்சாரத் துறை உடனடியாக நல்ல முறையிலே செயல்படவில்லை. சம்பந்தப்பட்டவர்களுக்கு நான் தொலை பேசி மூலமாகத் தெரிவிக்கலாம் என்று, 33 எண்ணுக்கு போன் செய்த நேரத்திலே அங்கு சரியான பதில் கிடைக்கவில்லை. தீயின் கோரக் காட்சியை, கருணையுள்ளம் கொண்ட டாக்டர் கலைஞர் வந்து பார்த்தார்கள் நேரடியாகப் பார்த்தார்கள், மற்ற அமைச்சர்களும் வந்து பார்த்தார்கள். பேரவைத் தலைவர் அவர்களே, தாங்களும் வந்து பார்த்தீர்கள். மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர்களும், சட்ட மன்ற உறுப்பினர்களும் வந்து பார்த்தார்கள். பல்வேறு கட்சியைச் சேர்ந்த தலைவர்களும் வந்து பார்த்தார்கள்.

நேற்றைக்கு முன்தினம் இரவில் எல்லா மின்சார விளக்குகளும் அணைந்துவிட்டன. என்னுடைய வீட்டுக்கு அருகாமையில் உள்ள ஆறு வீடுகள் எரிந்துவிட்டன. என்னுடைய மகன் எனக்குத் தொலைபேசி மூலம் இதைத் தெரிவித்துக் கண்ணீர் விட்டான். பத்தாம் தேதியன்று பற்றிக்கொண்ட தீ நேற்றுவரை 22-ம் தேதிவரையில் தொடர்ந்து நடந்துவருகிறது. இதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்தையும் விட இந்த மாநிலத்திலே நல்லமுறையிலே போலீஸ் துறை செயல்பட்டுவருகிறது. கொள்ளையடிப்பவர்கள், கொலைகாரர்கள், பதுக்கல்காரர்கள், கன்னக் களவு செய்பவர்கள், கள்ள நோட்டடிப்பவர்கள், கடவுள் சிலைகளைத் திருடுகிறவர்கள், ஊசிபோட்டுக் கொலை செய்து கொள்ளையடிப்பவர்கள் இவர்களையெல்லாம் நம்முடைய காவல் துறை நல்ல முறையிலே பிடித்திருக்கிறது.

[திரு. ஏ. க. துரைசாமி] [1974 மார்ச் 23

பன்னிரண்டு நாட்களுக்கு முன்னதாக குடியாத்தம் நகரிலே மக்களிடையிலே அச்சம் ஏற்பட்டது, ஆயிரக்கணக்கான குடிசைகள் எரிந்து விட்டன. ஆறாயிரம் மக்கள் வாழமுடியாமல் வெட்ட வெளியிலே, வயல்களிலே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இரண்டாயிரம் தறிகள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. ஒன்பதாயிரம் தறிகள் பாதிக்கப்பட வில்லையென்றாலும் இன்றைக்கு 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் வாழ வழியில்லாமல் வெட்டவெளியிலே தங்கிக் கொண்டிருக்கின்ற அவல நிலைமைதான் இருக்கிறது. நான் இதைப் பற்றி ஐ.ஜி. அவர்களிடம் சொன்னேன், முதலமைச்சர் அவர்களிடம் சொன்னேன், பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களிடத்திலேயும் சொன்னேன், தங்களிடத்திலேயும் சொன்னேன். அங்கேயுள்ள நிலைமைகளைச் சீராக்குவதற்காக போலீஸ் அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய நகரத்திலே மட்டுமல்ல, என்னுடைய தொகுதி முழுவதும் 12 மைல் சுற்றளவிலே பல கிராமங்கள் பாதிக்கப் பட்டிருக்கின்றன. திட்டமிட்ட ஒரு சதிகாரக் கும்பல், சமூக விரோதிகள் இந்தக் காரியங்களைச் செய்துகொண்டு வருகிறார்கள். இந்த நாட்டு மக்களைத் தீயிலிட்டு அவர்கள் பயங்கரமான விளையாட்டை விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். பாதிக்கப்பட்டிருக்கின்ற அந்த மக்களுக்கு நிம்மதியைத் தரவேண்டுமென்றும் அவர்களுக்கு நல்ல வாழ்வை சீக்கிரமாகத் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அளவோடு இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்வதற்கு முன்னதாக நான் தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன். தீயணைப்புத் துறையின் இயக்குநர், மருத்துவத் துறை இயக்குநர், மாவட்ட ஆட்சித் தலைவர், துணை ஆட்சித் தலைவர் சுருங்கச் சொன்னால் அமைச்சர்களிலிருந்து அதிகாரிகள் வரையில் எல்லோரும் வந்து பார்த்து இருக்கிறார்கள். தமிழகத்திலே உள்ள நாலரைக்கோடி மக்களும், பாதிக்கப்பட்ட மக்கள்பால் பரிவுணர்வோடு இருக்கிறார்கள். அந்த மக்களுக்கு எல்லா உதவிகளையும் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ஓ. என். சுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, காவல் துறை மானியக் கோரிக்கையின்மீது நடைபெறுகின்ற இந்த விவாதத்திலே கலந்துகொண்டு என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.



1974 மார்ச் 23] [திரு. ஓ. என். சுந்தரம்]

நம் நாடு சுதந்திரம் அடைந்து 26 ஆண்டுகள் ஆனபிறகும்கூட ஜனநாயக வளர்ச்சி எந்த முறையிலே இருக்கிறது என்று சொன்னால் பல மாநிலங்களிலே இருக்கிற சட்டம், ஒழுங்கு இவையெல்லாம் சரியான முறையிலே பராமரிக்கப்படுகிறதா என்பதைப் பார்க்கிறோம்.

ஜனநாயக வளர்ச்சி நம் நாட்டிற்குத் தேவையென்று சொன்னால் குறிப்பாக கல்வித் துறையும் காவல் துறையும் இரண்டு துறைகளும் இரண்டு கண்கள்போல் செயல்படவேண்டும். கல்வித் துறையிலே சரியான வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் அது இந்த மானியத்திலே சம்பந்தப்பட்டது இல்லையென்று சொன்னாலும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், மக்களுடைய கல்வி வளர வளரத் தான் ஜனநாயகத்தின் வளர்ச்சியும் இருக்கும்; சரியான முறையிலே இருக்கும். நாட்டிலே காவல் துறை நடுநிலையான கண்ணோட்டத் தோடு செயல்பட்டால்தான் ஜனநாயக வளர்ச்சி இருக்கும். காவல் துறையானது எந்த அளவிலே செயல்படுகிறது என்று சொன்னால் நடுநிலையோடு இருக்கவேண்டுமென்று சொன்னாலும் ஆளுங்கட்சித் தலையீடுகள் குறுக்கீடுகள் காரணமாக அந்த நிலைமை பாதிக்கப் படுகின்றன. கட்சித் தலைவர் வேறு, ஆட்சித் தலைவர் வேறு, கட்சித் தலைவரும் ஆட்சித் தலைவரும் ஒருவராக இருக்கிற காரணத்தினால் இப்படிப்பட்ட தவறுகள் நடக்கின்ற அளவிற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று நினைக்கிறேன், அவர்கள் தடுத்து நிறுத்துவதற்கு முயற்சிகளை எடுத்துக்கொள்ளவேண்டும்.

காவல் துறையிலே உள்ள நிலைமைபற்றித் தமிழகத்திலே பல சான்றுகள் சொல்லமுடியும். ஒரு சாதாரணக் குடிமகன் தாழ்த்தப் பட்ட மக்களுக்கு, அரிசன மக்களுக்குப் போதுமான பாதுகாப்பு கிடைக்கிறதா என்றால் பல இடங்களிலே பாதுகாப்பு சட்டப்படி அவர்களுக்குக் கிடைப்பதில்லை. நான் ஏற்கனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஒரு மகஜர் கொடுத்திருக்கிறேன், இரண்டு வாரங்களுக்கு முன்னதாக: சேலத்திலே மத்திய அரசு ஊழியர், தொலைபேசி இலாகாவில் உள்ள ஊழியர் இராமநாதன் மனைவி—நகரசுத்தித் தொழிலாளர்—ஆளுங்கட்சி சார்பிலே செய்யப் பட்ட கொடுமைகளையெல்லாம் முதலமைச்சர் அவர்களுக்குக் கொடுத் திருக்கிறேன். என்ன நடவடிக்கை எடுத்தார்கள், தகுந்த பாதுகாப்பு கொடுத்தார்களா என்பதையெல்லாம் சொல்லவேண்டும்.

[திரு. ஓ. என். சுந்தரம்] [1974 மார்ச் 23

காவல் துறையிலே பல இடங்களிலே தவறுகள் ஏற்படுவதால் அதற்குப் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிற முதலமைச்சர் அவர்களுக்குத்தான் அந்த பழிபாவங்கள் ஏற்படுகின்றன.

என்னுடைய மதுரை மாவட்டத்திலே சாணரப்பட்டி வட்டாரத்திலே ஒத்தநாவல்பட்டி என்ற ஊரிலே வெட்டாத மரத்தை வெட்டியதாக வழக்கு கோர்ட்டிலே இருப்பதால் நான் உள்விவகாரங்களுக்குள்ளே போகவில்லை. காவல் துறை பொறுப்பையேற்று இருக்கிற சப் இன்ஸ்பெக்டர் சையது இப்ரஹிம் என்பவர். தூங்கான் என்ற இளைஞன், திருமணமாகாதவன், வயது 23, கொலை செய்யப்பட்டிருக்கிறார். அதுமட்டுமல்ல, அவரோடுகூட மூக்கையா நாயக்கர், என்ற இருவரையும் படுகாயப்படுத்தி, அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

அது எப்படி ஏற்படுகிறது என்று சொன்னால், அந்தக் கட்சியினுடைய ஆட்கள், அந்தக் கட்சியினுடைய உறுப்பினர்கள், மற்றும் அதிலே சம்பந்தப்பட்டவர்கள் ஆட்சியினுடைய அதிகாரத்தை வைத்துக்கொண்டு காவல்துறையிலே உள்ள ஒருசிலரை வைத்துக்கொண்டு இம்மாதிரி செய்கிறார்கள். குறிப்பாக சாணரப்பட்டி சப்-இன்ஸ்பெக்டரை உடந்தையாக வைத்துக்கொண்டு பொய் வழக்குகளை ஜோடித்துக் கொடுத்திருக்கிறார்கள்.

ஆகவே, புலனாய்வுத் துறையினர் எந்த அளவில் புலனாய்வு அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். உண்மைச் சம்பவத்தைப் பார்க்க வேண்டும். அந்த இடத்திற்கு நான் சென்றிருந்தேன். அப்பொழுது அங்குள்ள மக்களின் உணர்ச்சிகளைப் புரிந்துகொண்டேன்.

இப்படிப்பட்ட சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன என்றால், என்ன காரணம் என்று பார்க்க வேண்டும். ஏற்கனவே அவரை மாற்றினார்கள். அப்படி மாற்றினாலும்கூட இங்கே அதிகாரத்தில் உள்ள அமைச்சர்களையும், மற்றவர்களையும் வைத்துக்கொண்டு அதேயிடத்தில் மீண்டும் வேலைவாய்ப்பைக் கொடுத்திருக்கிறார்கள். இதனால் அந்த வட்டார மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை உங்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படிப்பட்ட நேரங்களில் எந்த அளவிலே பின்னால் விளைவுகள் ஏற்படும் என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டும். இதற்கு நீங்கள் தகுந்த நடவடிக்கையெடுத்து அந்த வட்டாரத்திலுள்ள சப்-இன்ஸ்பெக்டரை மாற்ற வேண்டும்.



1974 மார்ச் 23] [திரு. ஓ. என். சுந்தரம்]

அதுமட்டுமல்லாமல், அந்த வழக்குகளை முதலமைச்சரவர்கள் தீவிரமாக பரிசீலித்து நியாயமான முடிவுகளைச் செய்ய முயற்சியெடுக்கவேண்டும். அப்படிச் செய்யக்கூடிய சூழ்நிலை ஏற்படத் தவறினால் அந்தப் பகுதி மக்களின் நிலைமைகள் மோசமாக இருக்கிறது, கொந்தளிப்பாக இருக்கிறது, அதனால் என்ன ஏற்படும், என்னென்ன விளைவுகள் ஏற்படும் என்று சொல்ல விரும்பவில்லை. அரசியல் ரீதியாக இல்லை, ஆனால் நாளடைவில் அரசியல் ரீதியாக வந்துவிடும் என்று சொன்னால் அது ஜனநாயகத்திற்குத் பேராபத்தாக முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கே சென்னை 113-வது வட்டத்திலே சிவாஜி மன்றத்தைச் சேர்ந்த காங்கிரஸ் தோழர் கிருஷ்ணமூர்த்தி என்பவர் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லப்பட்டு உதைக்கப்பட்டிருக்கிறார். அங்கே நம்முடைய காங்கிரஸ் கட்சித் தோழர்கள் காவல் நிலையத்திற்குச் சென்று விவரம் கேட்டபொழுது, நீங்கள் யார் கேட்பதற்கு, சட்டமிருந்தால் கோர்ட்டுக்குப் போங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட விவரங்களை நான் ஏன் சொல்கிறேன் என்றால் ஜனநாயகத்தில் காவல் துறை முக்கியமான அம்சம் என்பதால், எந்தக் குடிமகனாகயிருந்தாலும், அது யாராகயிருந்தாலும் சட்டரீதியாக சரியான பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டும் என்பதால் இதைச் சொல்கிறேன்.

இப்பொழுதெல்லாம் காவல் துறையிலே வழக்குகளைப் பதிவு செய்யும்பொழுது முறையாக இருப்பதில்லை. ஒரு சம்பவத்தைச் சொல்ல விரும்புகிறேன். 7—9—1973-ஆம் தேதியன்று கிண்டியிலே நடந்த ஒரு கொலைவழக்கு. சிங்கம் என்பவர் கொல்லப்பட்டார். அவர் கொல்லப்பட்ட சமயத்திலே அவரிடம் முறையாக வாக்குமூலம் வாங்கப்படவில்லை. அந்த வழக்கு ஹைகோர்ட்டுக்குப் போயிற்று. குற்றவாளி என்று மரண தண்டனை விதிக்கப்பட்ட இரண்டுபேரையும் விடுதலை செய்துவிட்டார்கள். காரணம் என்னவென்றால், சரியான மரண வாக்கு மூலம் வாங்கப்படவில்லை, ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சுயநினைவில் இருந்தபொழுதுகூட வாக்கு மூலம் வாங்கப்படவில்லை. ஆகவே, ஹைகோர்ட்டில் விடுதலை செய்யப்பட்டுவிட்டார்கள். ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகளைப் பரிசீலித்து சரியான முறைகளைக் கைக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த அறிக்கையிலே சொல்லும்பொழுது இந்த ஆண்டிலே 7 முறைகள் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்ததாகச் சொல்கிறார்கள். குறிப்பாக, தேர்தலின்பொழுது ஒன்றைச் சொன்

ணுர்கள். கண்ணீர்ப்புகைப் பிரயோகம், ஏற்பட்ட கலவரங்கள், அதற்குமுன் விவசாயப் போராட்டத்தில் நடந்த சம்பவங்கள், இவற்றிலெல்லாம் ஆட்சியாளர்கள் அங்கே ஆட்சியிலுள்ள அந்த அதிகாரத்தை வைத்துச் செய்தார்கள். அதில் சம்பந்தப்பட்ட, முன்னின்று நடத்திய மதுரைப் பெரியவர் என்று சொல்லப்படுகின்றவர் இன்றைக்குப் பாவ மன்னிப்பு கோரும் நிலைமையைப் பார்க்கிறோம். இதற்குக் காரணம் என்ன?

அப்பொழுது, முதலமைச்சர், ஆட்சியின் தலைவராகவும், கட்சியின் தலைவராகவும் இருக்கக்கூடியவர், அவ்வப்பொழுது அப்படிப்பட்ட காரியங்களைச் செய்யக்கூடாது என்று தடுத்து நிறுத்திருப்பாரே யாஞல் இப்படிப்பட்ட தோல்விகள் திண்டுக்கல்லிலும், கோவையிலும் உங்களுக்கு ஏற்பட்டிருக்காது. இதெல்லாம் அதற்கு ஒரு காரணம். எனவே, இதையெல்லாம் பரிசீலிக்க வேண்டும்.

இன்றைக்கும்கூட ஒத்தநாவல்பட்டி சம்பவத்தை நாங்கள் சொல்வதற்குக் காரணமே, இந்த ஆட்சியாளர்கள் யாருக்கும் கொடுமை செய்ய நினைக்கக்கூடாது, எல்லோருக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டிய நிலையில் அரசாங்கம் இருக்க வேண்டுமென்ற நிலையை நினைத்து, நிச்சயமாக சரியான முறையை வகுத்து, இவைகள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறோம்.

அடுத்தபடியாக, பெண் போலீஸ் படையைப்பற்றி ஒன்றைச் சொன்ஞர்கள். அவர்கள் இரண்டாண்டுக் காலத்திற்குத் திருமணம் செய்யக்கூடாது என்று சொன்ஞர்கள். எத்தனையோ குடும்பக் கட்டுப்பாட்டு சாதனங்கள் இருக்கின்றன. ஆகவே, அப்படிப்பட்ட வசதிகளை அளித்து, அவர்களுக்கு உள்ள உரிமைகளைக் கட்டாயம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல்துறையைப் பொறுத்தவரையில் ஆயிரக்கணக்கானவர்கள் இருக்கிறுர்கள். சப்-இன்ஸ்பெக்டர்களுக்குமேல் ஐ.ஜி. வரையில் இருக்கிறுர்கள். அவர்களுக்கு ஏற்கனவே உள்ள பொருளாதார நெருக்கடியில் அவர்களுக்கு விலைவாசி உயர்வு இருந்தாலும், சமூகத்தில் நிரந்தரமான அந்தஸ்தைப் பெற்றுவிட்டார்கள். ஆனுல் காவலர்களின் நிலைமைகளைப் பார்த்தால் 63 சதவிகிதம் குடியிருப்பு வசதி செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னுலும் கூட, அவர்கள் அரசியல் விழாக்களாஞலும் சரி, தேர்த் திருவிழாக்களாஞலும் சரி, தலைமைக் காவலர்கள் வரையில் தங்கள் உயிரைத் திரணமாக வைத்து



கூட்டத்தைச் சமாளித்து வசதி வாய்ப்புகளைச் செய்து தருகிறுர்கள். அப்படிப்பட்ட அவர்களுக்கு இன்னும் வசதி வாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன்.

திரு. மு. சுருளிவேல் : தலைவரவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது ஒன்றும் சொல்ல வேண்டாம்.

* திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற காவல் துறை, தீயணைப்புப் பணிகள் மானியக்கோரிக்கைகளை நான் வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தியாவிலே இருக்கும் மாநிலங்களிலேயே இன்னும் நல்ல முறையில் அமைதி தவழ்கின்ற மாநிலமாகத் தமிழ்நாடு இருக்கிறது. முதலமைச்சரவர்கள் இன்றையதினம் பெருமிதத்தோடும், பூரிப்போடும் இந்த மானியக் கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கின்ற நேரத்தில் நான் உள்ளபடியே இந்த நாட்டு மக்களின் சார்பில் பாராட்டுதலை மூன்று காரணங்களுக்காகச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன்.

இங்கே இந்த மானியக்கோரிக்கையில் எதிர்க்கட்சித் தலைவர்கள் சொல்லும்பொழுதுகூட சென்ற ஆண்டில் நடைபெற்ற சம்பவங்களைச் சொல்லாமல், எப்பொழுதோ நடைபெற்ற விவசாயப் போராட்டத்தையும், ஏற்கனவே பேசிப்பேசி முடிந்த மாணவர்கள் போராட்டங்களையும்பற்றிச் சொன்ஞர்களே தவிர, இந்த ஆண்டு நாம் இந்த மானியக்கோரிக்கையின்மேல் பேசிக்கொண்டிருக்கிறோமே இந்த 1973–74-ஆம் ஆண்டிலே நடைபெற்ற சம்பவங்களைச் சொல்ல முடிந்ததா என்றுல் முடியவில்லை.

இத்தனை ஆண்டுகள் இல்லாத அளவில் கடந்து முடிந்த ஆண்டிலே தமிழ்நாடு காவல்துறையின் ஒத்துழைப்பால் மிகச்சிறப்போடு, அமைதியோடு இருந்திருக்கிறது என்பதை இந்த மானியக்கோரிக்கைக்கான குறிப்புகளெல்லாம் நல்லமுறையில் எடுத்துக் காட்டுகின்றன.

ஆனுல், அதற்குமாறுக இந்தியாவிலேயுள்ள மற்ற மாநிலங்களைப் பார்க்கும்பொழுது சாதாரண மக்களுக்கு மட்டும் பாதுகாப்பு இல்லை என்பது மட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கப்படவில்லை, அமைச்சர்கள்கூடத் தாக்கப்படுகிறுர்கள்,

[திரு. கா. வேழவேந்தன்] [1974 மார்ச் 23

கவர்னரேகூடத் தாக்கப்படுகிறார் என்ற அப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்கும்பொழுது இங்கே தமிழ்நாடு இவ்வளவு சிறப்பான வகையிலே அமைதி தவழும் மாநிலமாக இருக்கிறதே என்ற எண்ணத்தில் எதிர்க்கட்சிக்காரர்கள் செயற்கையான சில காரணங்களை வலிய இழுத்துச் சொல்கிறார்களே தவிர நடந்தது என்ன என்று தெளிவாக எடுத்துச் சொல்லமாட்டேன் என்கிறார்கள்.

அவர்களே ஒத்துக்கொண்ட வகையில் இன்னும் டிஸ்டிங்ஷன்-உடன் சிறப்பான முறையில் தமிழ்நாடு காவல்துறை பணியாற்றுவதை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

இவ்வாறு சிறப்பாகப் பணியாற்றுவதற்கு முக்கியமான காரணம் என்னவென்றால், இந்தப் பொறுப்பை ஏற்றிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சரவர்கள், "வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரி முன்னர் வைத்தூறு போலக் கெடும்" என்ற வள்ளுவரின் குறளை மனதில் வைத்து, தமிழகத்தின் எந்த மூலை முடுக்கிலாவது ஏதாவது சம்பவம் நடந்தது என்று காதுக்குச் செய்தி வந்தாலும், அல்லது அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் ஒரு தகவலைச் சொன்னாலும், அல்லது பத்திரிகைகளிலே ஒரு சிறு சம்பவம் பற்றித் தகவல் வந்தாலும் மிகவும் கவலையோடு அந்தப் பத்திரிகையைக் கையில் வைத்துக்கொண்டு, அந்தத் தகவலை வைத்துக்கொண்டு, சம்பந்தப்பட்ட காவல்துறையைச் சேர்ந்தவர்களையெல்லாம் அழைத்துப்பேசி, உடனடியாக அந்த மாவட்டத்தோடு, வட்டத்தோடு தொடர்பு கொண்டு உரிய காரியங்களை அவ்வப்பொழுது செய்துவருவதால்தான் காவல்துறையிலே சிறப்பான பணி நடைபெறுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏழு முறை கண்ணீர்ப்புகை சம்பவம் நடந்தது என்று எனக்கு முன்னால் பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். 1973-ம் ஆண்டு முழுவதும் இம்மாதிரி ஓரிரு இடங்களில் சிறுசிறு சம்பவங்கள் நடைபெற்றபொழுது சிறிய கண்ணீர்ப்புகை அல்லது மேலேபார்த்துச் சுடுவதுபோல் துப்பாக்கிச் சூடு நடைபெற்றது. ஆனால் உயிர்ச் சேதம் உண்டா?

(முற்பகல் 11-30)

ஏதோ திருஷ்டிபரிகாரத்தைப் போல் கொடுக்கப்பட்ட குறிப்பில் மதுரை மாவட்டத்தில் ஜெயவிலாஸ் சம்பந்தப்பட்ட ஓரிடத்தில் நேரடியாகப் போலீசாரைத் தாக்கிய காரணத்தால் போலீஸ் படை-



1974 மார்ச் 23] [திரு. கா. வேழவேந்தன்]

யிலே இருப்பவர்களுக்கே காயத்தை ஏற்படுத்திய காரணத்தால் அப்படிப்பட்ட சம்பவம் ஏற்பட்ட நேரத்தில் ஒரு மரணம் ஏற்பட்டதே தவிர, இந்த ஆண்டிலே வேறு எந்த ஆண்டிலும் இல்லாத அளவுக்கு உயிர்ச்சேதமோ, வேறு விதமான சேதமோ இல்லாது காவல் துறை சிறப்பாகச் செயலாற்றி வந்திருக்கிறது.

திரு. கே. டி. கே. அவர்கள் இன்னும் கூட குழப்பம் வராதா என்ற முறையிலே சொன்னார்கள். அவர்கள் கூட்டணி அமைத்திருக்கும் ஒரிஸ்ஸாவில் கவர்னரே பேச முடியவில்லை. முதலமைச்சர் அறையிலே ஒரு சட்டமன்ற உறுப்பினர் போய் இருந்து கொண்டு தகராறு செய்கிறார். இப்படிப்பட்ட குழப்பங்களை எல்லாம் பார்க்கும் போது சிறந்த முறையில் இந்த நிர்வாகத்தை நடத்தி வருவதற்காக முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு பாராட்டு வார்த்தை சொல்லக் கூடாதா? நெஞ்சாரப் பாராட்டி சில வார்த்தைகள் கூறக் கூடாதா?

திரு. ஏ. சுப்பிரமணியம்: ஒரே ஒரு விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது நேரம் இல்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம்: ஒரிஸ்ஸாவில் குழப்பத்தை எதிர்க்கட்சிக்காரர்கள் செய்திருக்கிறார்கள். அந்த மாதிரி முறைகளைக் கையாளாமல் இருப்பதற்காக இங்குள்ள எதிர்க்கட்சிகளைத் தான் பாராட்ட வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் எதிர்க்கட்சிகளைப் பாராட்ட மறுக்கவில்லை. இருவருக்கும் சேர்ந்து பாராட்டு. பொதுவாக, தமிழ் நாட்டுப் பண்புக்கு அந்தப் பாராட்டு.

திரு. கா. வேழவேந்தன்: அந்த வகையிலே மிகச் சிறப்பான முறையில் எதிர்க்கட்சிக்காரர்களே கடைசியில் பாராட்டுகின்ற அளவுக்கு போலீஸ் துறை நடைபெற்று வருகிறது என்ற கருத்தைச் சொன்னேன்.

இங்கு இருக்கும் குறிப்பில் ஒரு உண்மையை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். 1972-ம் ஆண்டைக் காட்டிலும் 1973-ம் ஆண்டிலே சிறு சிறு குற்றங்கள் 9 சதவிகிதம் அளவுக்கு அதிகமாகியிருக்கின்றன என்று கூறியிருக்கிறார்கள்.

[திரு. கா. வேழவேந்தன்] [1974 மார்ச் 23

இந்த நேரத்தில் பணிவோடு சில கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன். இந்த நாட்டிலே திருக்குறள், நாலடியார் போன்ற அற நூல்கள் பிறந்திருக்கின்றன என்றாலும் நல்ல கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறோம் என்றாலும் இந்தக் குற்றங்கள் பெருகுவதைத் தொடக்கத்திலேயே தடுக்க முயற்சி எடுக்க வேண்டும். மக்கள் மனதில் எளிதாகப் பதியத்தக்க வகையில் நல்ல கருத்தைத் திரைப் படங்கள் வாயிலாக மக்கள் உணரச் செய்யவேண்டும். "உங்கள் நண்பன்" என்று முன்பு வந்த படம் போலீசாரைப் பற்றி நல்ல அபிப் பிராயம் கொள்ளச் செய்தது. நம்முடைய முதல்வர் அவர்கள் சிறந்த முறையில் திரைப்படக் கதையை உருவாக்குபவர்கள். திருடு போன்ற குற்றங்களைச் செய்கிறவர்கள் எதிர்காலம் இருட்டாகிவிடும் என்பதைப் புகட்டும் வகையில் துண்டுத் திரைப்படங்களாக எடுத்து சோப்பு விளம்பரங்கள் காண்பிப்பதற்குப் பதிலாக இவற்றைக் காட்ட அரசாங்கம் முயலவேண்டும்.

நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்தவரை எக்ஸ்ட்ரிமிஸ்ட்ஸ் என்று சொல்லக்கூடிய நக்சல்பாரிகளின் நடவடிக்கைகள் முழுக்க முழுக்க ஒடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக மாநில போலீசாருக்கு தமிழ்நாட்டு மக்கள் காலம் முழுவதும் நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

கள்ள நோட்டு படையெடுத்து வருவதைத் தடுத்திருக்கிறார்கள். கேரளத்திலிருந்து படையெடுத்து வந்திருக்கிற சிலபேர் இதிலே ஈடு பட்டிருக்கிறார்கள். பரங்கிமலையில்கூட ஒரு ரூபாய் நோட்டு அடிப் பதில் ஈடுபட்டவர்களைப் பிடித்த காரணத்தால் கேரளத்திலிருந்து படை எடுக்கும் பண்பு முழுக்க முழுக்க ஒடுக்கப்பட்டிருக்கிறது என் பதற்காகப் பாராட்டுகிறேன்.

விஷ ஊசி போட்டு கொலை செய்யப்பட்ட நிகழ்ச்சியை மக்கள் மர்மக் கதை படிப்பது மாதிரி படித்தார்கள். அதைக் கண்டு பிடித்த போலீசாரைப் பாராட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

போலீசாருக்கு அதிகமான நன்மைகளைச் செய்யவேண்டுமென்று கருத்தைச் சொன்னார்கள். முதல்வர் அவர்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது போலீசாரின் குறைபாடுகளைப் பாடலாகவே எழுதி நாடகங்களாக நாடு முழுவதும் போட்டுக் காண்பித்தார்கள். 1966-க்கு முன்னால் போலீசாருக்கு இருந்த மாத ஊதியத்தைவிட



1974 மார்ச் 23] [திரு. கா. வேழவேந்தன்]

படியை விட இப்போது எந்த அளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது என்பது போலீசாருக்கு நன்றாகத் தெரியும். நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும்.

வீர மரணம் அடைபவர்களுக்கெல்லாம் அதிகமாக வாங்குகிற சம்பளப் பணத்தில் பாதியை ஓய்வூதியமாகக் கொடுக்கிறார்கள்.

அண்ணா பெயரால் வீரப் பதக்கங்கள் அளிக்கப்படுகின்றன.

இந்த மாதிரி சிறப்பான காரியங்களைச் செய்து வருகிற நம்முடைய அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தீயணைப்பு நிலையங்களை வட்டத்திற்கு ஒன்று வீதம் சிறப்பான முறையில் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய பணிவான பாராட்டுதல்களை மீண்டும் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

திரு. சி. வே. வேலப்பன்: தலைவர் அவர்களே, காவல் துறை மானியத்தின்மீது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

தமிழகத்தினுடைய காவல் துறையைப் பொறுத்தமட்டில் பொது வாகப் பார்க்கின்றபோது நல்ல பல காரியங்களைச் செய்கிறது என்பதில் இந்தியாவிலேயே சிறப்புக்குரிய ஒன்றுதான் என்று அனைவ ராலும் பாராட்டப்படக்கூடிய அளவில் திறமையாகச் செயல்பட்டுக் கொண்டு வருகிறார்கள் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

ஆனால், அப்படிப்பட்ட திறமை பெற்றவர்கள் ஆளும் கட்சிக்கு அடிமைப்படுத்தப்படுகிற இலாகாவினராகப் பயன்படுத்தப்படுகிறார் கள் என்பதை நினைக்கும்போது ஆளும் கட்சிக்காரர்கள் அதிலே தலை யிடாமல் இருப்பார்களேயானால் போலீஸ் துறை எந்த அளவுக்கு மக்களுக்குப் பயன் தரத்தக்கதாக இருக்கும் என்பதில், தமிழகம் பெருமைப்படத்தக்கதாக இருக்கும் என்பதில் வேறு கருத்து இல்லை.

அப்படிப்பட்ட இலாகாவைத்தான் ஆளுகின்ற கட்சிக்காரர்கள், அமைச்சர்களில் இருந்து கீழே இருக்கும் தொண்டர்கள் வரையில் ஆட்டிப் படைக்கும் நிலைமையில் அராஜகத்திற்கும், அநீதிக்கும் ஆளாக்கப்படும் நிலைமையில் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

[திரு. சி. வே. வேலப்பன்] [1974 மார்ச் 23

அதனால் எதிர்க்கட்சியிலிருப்பவர்களும், பொதுமக்களும் பாதிக்கப்படுகிறார்கள் என்பது கண்கூடாகத் தெரிந்த தினசரி நிகழ்ச்சியாக நிகழ்ந்து வருகிறது.

போலீஸ் துறை நீதியாக நடந்து வருகிறது என்று சொல்லுகிறார்கள். கிளைவ் ஹாஸ்டல் சம்பவம் பற்றி ரிப்போர்ட் வந்திருக்கிறது. எந்த அளவுக்குப் போலீசார் அதிலே பயன்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்று பார்க்கும்போது ஏன் அதைச் செய்தார்கள் என்று பார்க்கும்போது பின்னணியில் தொக்கி நிற்பது ஆளும் கட்சியாகத் தெரிகிறது.

பேராவூரணி தொகுதியில் 13—3—1974-ம் தேதி கோவிந்தன் என்பவர் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்தவர், அண்ணா தி.மு.க. அனுதாபி என்று சொன்ன ஒரே காரணத்திற்காக அவருடைய நெல் கடையில் வைத்திருந்த 97 மூட்டை நெல்லை எரித்திருக்கிறார்கள். அதே நேரத்தில் 1½ மைல் தூரத்திலிருந்த அவருடைய வைக்கோல் போரையும் திட்டமிட்டு நெருப்பு வைத்திருக்கிறார்கள். தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் சென்று விசாரித்து போலீசாருக்குத் தகவல் கொடுத்து விசாரிக்க வேண்டுமென்று சொன்னால் இதுவரை போலீசார் விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் போலீஸ் துறை தனியாக இயங்க, தன்னிச்சையாக இயங்க, நியாயமாக இயங்க வழி இல்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டாகும்.

நான் சார்ந்திருக்கும் தொகுதியில் வேலூரில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கிய நேரத்தில் 29—11—1972-ம் தேதி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அங்கே வருவதாக இருந்தது போலீசார் எவ்வித காரணமுமின்றி பொதுமக்களை அடித்த காரணத் தால் முதலமைச்சர் வரமுடியவில்லை என்ற நிலை இருந்தது எப்போதோ அது நடந்து முடிந்து விட்டது. மாலை 6 மணிக்கு அமைதி நிலவுகிறது. 7 மணிக்கு மக்கள் அமைதியாக சினிமா பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அதன் பின் அமைதியாக மக்கள் தூங்கிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நேரத்தில் இரவு 2 மணிக்கு மேல் போலீசார் அக்கிரமம் செய்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையில் கைது செய்யப்பட்டவர்கள், வழக்கு போடப்படுபவர்கள் யார் என்று பார்த்தால் அதிலே சம்பந்தப்பட்டவர்கள் அல் என்பதை நான் சொல்லவில்லை, திராவிட முன்னேற்றக் கழகத்தை சார்ந்த நகரச் செயலாளரே நோட்டீஸ் மூலம் வெளியிட்டிரு கிறார்கள்.



1974 மார்ச் 23] [திரு. சி. வே வேலப்பன்]

போலீசார் செய்த அக்கிரமத்தின் காரணமாக சம்பந்தப்படாதவர்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஓராண்டுக் காலத்திற்கு மேலாகியும் அவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்படவில்லை. சம்பந்தப்படாதவர்கள், பொதுமக்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருப்பவர்களே சொல்லுகிறார்கள்.

இப்படிப்பட்ட காரியங்களை எல்லாம் பார்க்கும்போது போலீஸ் துறை தன்னிச்சையாகச் செயல்பட முடியவில்லை என்பது தெளிவாகிறது. ஆனால் தி.மு.க. நகரச் செயலாளரையும், ஒன்றியத் தலைவராக இருக்கிற திரு. கந்தசாமி என்பவரையும் அணுகி என்ன செய்தார்களோ தெரியவில்லை, வழக்கில் இருந்து சிலரை விடுவித்து சிலரை மட்டும் விடுவிக்காது இருக்கிறார்கள்.

பாண்டமங்கலத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கொடியை இறக்கிவிட்டு திராவிட முன்னேற்றக் கழகக் கொடியை ஏற்றவேண்டுமென்று, அதை எஸ்.ஐ. செய்திருக்கிறார். அவருக்கு ப்ரோமோஷன் கொடுத்திருக்கிறார்கள்.

முத்திரப்பாளயத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கொடியை ஏற்றியதற்காக அறுபதுக்குமேற்பட்ட சேரிவாழ் மக்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மீது வழக்குகளும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

60 வயதுக்கு மேற்பட்ட ஒரு குஷ்டரோகி—நடந்துவரமுடியாது புண்ணாகியிருக்கிறார்—தடிக் கம்பை எடுத்துக்கொண்டு அடிக்க வந்தார் என்று வழக்கு தொடரப்பட்டிருக்கிறது.

தாரமங்கலத்தில் கே.டி. லிஸ்டில் இருப்பவர் ஒருவரை, குற்றம் புரிந்து கண்டிஷனல் பெயிலில் வந்திருப்பவர், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அடித்தார்கள் என்று வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. அவர், கண்டிஷனல் பெயிலில் வந்திருப்பவர், லோக்கல் எஸ்.ஐ.யை அடித்திருக்கிறார்.

ஆக இப்படிப்பட்ட தீயவர்களைக் கண்டிப்பதைவிட்டுவிட்டு நல்லவர்கள் மீது வழக்கு போடுகிறார்கள்.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் தலையீட்டுக்கு இன்னொரு உதாரணம். வேலூரில் உர மூட்டைகள் கள்ளத்தனமாக கொண்டு செல்லப்பட்டன. அவை பிடிக்கப்பட்டு போலீஸ் ஸ்டேஷனில் கொடுக்கப்பட்டன. ஆனால் நடவடிக்கை எடுக்காமல் தி.மு.க.வில் இருப்பவர்கள் தடுத்து நிறுத்தினார்கள்.

இன்னும் சொல்கிறேன். திண்டுக்கல்லில் தேர்தல் சமயத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக வேலை செய்தார்கள் என்பதற்காக சேலம் மாவட்டத்தில் இருந்து சென்றவர்கள்மீது வழக்கு போடப்பட்டு இன்னும் விசாரணைக்கு வராத நிலையில் வாரத்திற்கு ஒரு நாள் வரவேண்டும் என்று சொல்கிற இப்படிப்பட்ட நிலைகள் எல்லாம் இருக்கின்றன.

குறிப்பாக, எனது தொகுதியில் சிறுநல்லிக்கோவிலில் பைப் லைன் பற்றிய ஒரு விவகாரத்தில், சட்டமன்ற உறுப்பினர் வேலப்பன்தான் என்று நினைத்து சப்-இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர் ரிசர்வ் படையுடன் வந்து இருக்கிறார்கள் வேகமாக. ஆனால் சட்டமன்ற உறுப்பினர் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் என்று தெரிந்தவுடன் தவறு நடந்துவிட்டது, இதோ செல்கிறோம் என்று சென்றிருக்கிறார்கள்.

குமாரபாளையத்தில் தஸ்தகிரை போலீஸ் பிடித்திருக்கிறார்கள். தன் மனைவியை மருத்துவ மனைக்குக் கூட்டிச் சென்றிருக்கிறான் கூட்டிச் சென்று மருத்துவம் செய்யப்பட்ட பிறகு வீட்டுக்குக் கொண்டு வந்திருக்கிறான். அதற்குப் பிறகு அந்தப் பெண்ணின் பெற்றோர்கள் வந்திருக்கிறார்கள் வீட்டுக்கு. பிறகு இறந்திருக்கிறார்கள். அவர் மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது. சேலத்தில் கைது செய்யப்பட்டதாகக் கூறி—திருச்செங்கோட்டில் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் இருக்கிறது, அங்கு வைக்காமல் ஒரு ஞாயிற்றுக்கிழமை சேலம் கோர்ட்டில் ஸ்டேட்மென்ட் வாங்குகிறார்கள். ஞாயிற்றுக் கிழமை ஸ்டேட்மென்ட் வாங்கியதாக நான் இதுவரையில் கேள்விப்பட்டதில்லை.

இப்படி ஆளும் கட்சியினரின் சுய நலத்திற்காக பல காரியங்கள் நடைபெறுகின்றன.

இதில் சொல்லியிருக்கிறார்கள். அரிசி கடத்திச் சென்ற லாரியை நான்கு முறை சுட்டார்கள் என்றும் தப்பிச் செல்லப் பார்க்கிறபோது மேலும் இருமுறை சுட்டதாகவும் சொல்லி ஆனால் அரசு நடவடிக்கைகள் எடுக்கவேண்டாம் என்று கூறியிருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். நடவடிக்கைகள் எடுக்கவேண்டாம் என்று விடப்பட்டது என்ன காரணங்களினால் என்பது சொல்லப்படவில்லை. அதற்கான சரியான காரணங்கள் சொல்லப்படவில்லை.





பின்னர், செங்கல்பட்டு மாவட்டம் பரப்பாக்கம் கிராமத்தில் லீலா என்ற பெண், கணவர் ஜான் துரைசாமி, அவர்கள் குழந்தைகள் விஸ்வாசிஸ், மோகன் மீது வழக்கு தொடரப்பட்டு தண்டனைக்குரியவர்களானார்கள். ஆனால் உயர்நீதி மன்ற நீதிபதி விசாரித்துப் பார்த்தபோது போலீஸ் சரியாக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவில்லை என்று குற்றச்சாட்டு சொல்லி இலாகா பூர்வமாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அரசுக்கும் தாக்கீது அனுப்பியிருக்கிறார்கள்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் எஸ்.பி.ஆக இருப்பவர் மூன்றாண்டுகளுக்கு மேலாகவே அங்கிருக்கிறார். அவர்கள் ஒரு சட்டமன்ற உறுப்பினரின் சொந்தக்காரர் என்பதால் மாற்றவில்லை. அதிகாரிகளை மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்றவேண்டுமென்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட காரியங்கள் நடந்துவருகின்றன. (மணி யடிக்கப்பட்டது)

ஆகவே போலீஸை தன்னிச்சையாக இயங்கச் செய்யவேண்டும்.

நாட்டைக் காப்பதற்கு அனைத்தையும் ஒருங்கிணைத்து இழுத்துக் கொண்டு செல்ல வேண்டிய முதல் அமைச்சர் அவர்கள் கடந்த சட்டமன்றக் கூட்டத்தில் அப்படிப்பட்ட கலவரங்களைத் தூண்டுகிற அளவில் இரண்டு கேரளாக்கள் ஏற்பட முடியாது, விட மாட்டேன் என்று எச்சரிக்கை விட்டார்கள். நாட்டிலே இருக்கிற எந்தத் தலைவனாக இருந்தாலும் தொண்டனாக இருந்தாலும் தனிப்பட்ட முறையில் சோரம் போகலாம். அது அவர்கள் குலத் தொழில் என்று எடுத்துக்கொள்ளலாம். ஆனால் அரசியலில் சோரம் போவது என்றிருந்தால் அதை எந்தக் காலத்திலும் .........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: திரு. வேலப்பன் அவர்கள் அவையில் நல்ல வார்த்தைகளைச் சொல்லவேண்டும்.

"இனியது உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று"

என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். அந்த வள்ளுவர் படத்தை மட்டும் வைத்துவிட்டால் போதாது. இனிய சொற்களாக இருக்கவேண்டும்.

திரு. சி. வே. வேலப்பன்: நான் சொன்னது, நாட்டிலே எந்தத் தலைவனாக இருந்தாலும் தொண்டனாக இருந்தாலும் தனிப்பட்ட முறையில் சோரம் போவது என்றால் போகலாமே தவிர, அது அவர்கள் குலத் தொழில் என்று சொல்லிக்கொள்ளலாமே தவிர அரசியலில்

இருப்பவர்கள் சோரம் போகாவண்ணம் நீதிக்குப் புறம்பாக போகா வண்ணம், நல்ல காரியங்களைச் செய்யவேண்டும் என்று அழுத்தந் திருத்தமாக சொல்லிக் கொண்டு அப்படிப்பட்ட சோரம் போகிற வர்கள் அரசியலில் இருந்தால் அவர்களைத் தட்டிக் கேட்பதற்கும் திருத்துவதற்கும் அண்ணு திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது என்று தெரிவிப்பதோடு எச்சரிக்கை செய்யவும் விரும்புகிறேன். வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி: சோரம் போவது குலத் தொழில் என்று சொன்னுர்கள். தலைவனே தொண்டனே சோரம் போகலாம், அது குலத்தொழிலாக இருக்கலாம் என்று சொன்னுர்கள். அவர் எதைக் குறிப்பிட்டுச் சொன்னுலும் அதைப்பற்றி நான் கவலைப் படவில்லை. ஆனுல் அண்ணுவும் நானும் ஒரே குலத்தைச் சேர்ந்த வர்கள் என்பதை அண்ணு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

* திரு. எஸ். முகமது கோதர் முகைதீன்: தலைவர் அவர்களே, காவல்துறை மானியத்தின்மீது சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப் படுகிறேன்.

இன்றையதினம் மற்ற மாநிலங்களை விட தமிழ் நாட்டில் இருக்கிற காவல் துறை நல்ல முறையில் பணிகளைச் செய்கிருர்கள். மற்ற மாநிலங்கள் எல்லாம் போற்றுகிற அளவிற்கு நம் தமிழ் நாட்டின் காவல் துறை பெயர் வாங்கியிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்தக் காவல் துறை பொறுப்பை ஏற்றிருக்கிற முதல் அமைச்சர் அவர்கள் இந்தக் காவல் துறை நல்லமுறையில் செயலாற்றுவதற்கு உரிய முறையில் பணியாற்றி வருகிருர்கள். அந்தமுறையில் தமிழ கத்தில் உள்ள அனைவரும் போலீஸ் துறையையும் நம் முதல் அமைச்சர் அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டவர்களாக இருக்கிருர்கள்.

ஆனுல், ஒருசில இடங்களில் காவல் துறையைச் சேர்ந்த அதிகாரி கள் சில தவறுகளைச் செய்வதன் மூலம் இந்த அரசின் மீதுள்ள நல்லெண்ணத்திற்கும், எந்தவிதமான பாகுபாடும் இல்லாது அனைவருக்கும் நீதி செலுத்தவேண்டும் என்று நினைக்கிற இந்த அரசுக்கும் களங்கம் கற்பிக்கிற அளவிற்கு காவல் துறையினர் சிலர் நடந்துகொள்கிருர்கள்.



நான் ஒருசில உதாரணங்களைச் சுட்டிக்காட்டுவதன் மூலம் இனி மேலாவது இதுபோன்று நம் காவல் துறை அதிகாரிகள் நடக்காமல் இருப்பதற்கு அரசு கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெல்லை மாவட்டத்தில் தென்காசியில் வகுப்புக் கலவரம் நடந்தது என்பதை இந்த மன்றம் மட்டுமல்ல நாடே நன்கு அறியும். அந்த வகுப்புக் கலவரம் எப்படி ஏற்பட்டதென்றுல் சில சுயநலக்காரர்கள் இஸ்லாமிய சமுதாய மக்களுக்கு இடைஞ்சல் செய்யவேண்டும் என்ற அடிப்படையில் அந்த வகுப்புக் கலவரத்தை ஏற்படுத்தினுர்கள்.

வகுப்புக் கலவரமானது ஆரம்பிக்கப்பட்டவுடன், நெல்லையில் இருக்கின்ற போலீஸ் அதிகாரிகள், தென்காசிக்கு அமைதி ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக, தென்காசியில் முகாம் போட்டார்கள். ஆனுல் தென்காசியில் முகாம் இட்டவர்கள் நேர்மையான முறையில் யார் தவறு செய்தார்களோ அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கவேண்டும் என்பதுதான் நாட்டி லுள்ள மக்கள் அனைவரின் எண்ணமாகும். ஆனுல் அங்கே வந்த போலீஸ் அதிகாரிகள், நெல்லை மாவட்டத்தில் பொறுப்பில் இருக் கின்ற ஆட்சித்தலைவரின் கருத்தின்படி முஸ்லீம்களுக்கு இழைக்கும் தீங்கிற்கு உடந்தையாக இருந்தார்கள் என்பதை பலமுறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் சொல்லியிருக்கிறேம்.

(திரு. வை. பாலசுந்தரம் தலைமை.)

அந்தக் கலவரத்தில் நடந்தது என்ன என்றுல், முஸ்லீம் கடைகள் சூரையாடப்பட்டன. ஒவ்வொரு பகுதியிலும் இருக்கும் முஸ்லீம் கடைகள் சூரையாடப்படுகிறபோதும் அந்த சூரையாடல் நடப்பதற்கு உடந்தையாக இருந்தவர்கள் போலீஸ் அதிகாரிகள்தான் என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே உள்ள போலீஸ் அதிகாரிகள் கலவரம் செய்பவர்களுக்கு ஊக்கம் அளிக் காமல் இருந்து இருந்தால் தென்காசிப் பகுதியில் முஸ்லீம் சமுதாயத் தினருக்கு இவ்வளவு சேதம் ஏற்பட்டு இருக்காது. அந்த போலீஸ் அதிகாரிகள் அங்கே வந்து கலவரம் செய்தவர்களுக்கு ஊக்கம் அளித்ததன் காரணமாகத்தான் இஸ்லாமியர்களின் சொத்து கிட்டத் தட்ட 8–9 லட்சத்திற்கு மேலாக சேதம் ஏற்பட்டிருக்கிறது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இதுபோல அதிராமபட்டணத்தில் ஒரு வகுப்புக் கலவரம் ஏற்பட்டது. அந்த வகுப்புக் கலவர சம்பவத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலையிட்டு இருசாராரையும் அழைத்து அந்த வகுப்புக் கலவரம் நடந்ததற்கான காரணம் என்ன என்பதை அறிந்து, அந்த வகுப்புக் கலவரத்திற்கு முஸ்லீம்கள் தான் காரணம் என்று அறிந்து, அதனால் பாதிக்கப்பட்ட இந்து சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு முஸ்லீம் சமுதாயத்தினர் நஷ்ட ஈடு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அப்படிக் கேட்டுக்கொண்டபோது, முஸ்லீம் ஜமேதார்கள் ஒன்று கூடி, அந்த சம்பவத்திற்கு சில முஸ்லீம் சகோதரர்கள் காரணம் ஆகவே, நம்மோடு சகோதரர்கள்போல் இருக்கும் இந்து சமூக மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டத்தைத் தவிர்க்க வேண்டியது அவசியம் தான் என்று நினைத்து, அந்தக் கலவரத்திலே ஏற்பட்ட நஷ்டத்திற்கு ரூபாய் சுமார் 25,000 வரை வரி பிரித்து அதிராமபட்டணத்தில் இருக்கும் இந்து சமூக மக்களுக்கு கொடுத்தார்கள்.

தென்காசியில் ஏற்பட்ட கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்கள் இஸ்லாமிய சமுதாய மக்கள். ஆனால் இது வரையில் அவர்களுக்கு நஷ்ட ஈடு எதுவும் வழங்கப்படவில்லை. அவர்களுடைய உடைமைகள் எல்லாம் பாதிக்கப்பட்டு, அவர்களெல்லாம் மிகவும் வருந்தத்தக்க நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, தென்காசியில் இருக்கும் முஸ்லீம்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கவேண்டுமென்று பல முறை நாங்கள் எடுத்துச்சொல்லியிருக்கிறோம். அதிராமபட்டணத்தில் ஏற்படுத்தியதுபோல், தென்காசியிலும் நஷ்ட ஈடு தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.. என்னுடைய தொகுதி ஸ்ரீவைகுண்டம் வட்டம் ஆராம்பண்ணையிலிருந்து கொங்கராயர்குரிச்சிக்கு ஒரு 15 வயது முஸ்லீம் பெண் செல்கிற நேரத்தில் பட்டப்பகல் 12 மணிக்கு அந்தக் குழந்தை கழுத்தில் இருந்து 5,000 ரூபாய் பெறுமானமுள்ள நகை திருடப்பட்டது. அந்தக் குழந்தையின் பெற்றோர்கள் ஸ்ரீவைகுண்டப் போலீஸ் நிலையத்தில் இது போன்ற களவு நடைபெற்று இருக்கிறது என்று புகார் கொடுத்து இருக்கிறார்கள். இந்தப் பகுதியில் வாழ்பவன் இந்த களவைச் செய்திருக்கிறான். அவன் 7 முறை சிறைக்கு போனவன் என்று புகார் கொடுத்திருக்கிறார்கள். போலீஸ்காரர்களும் அந்த களவு செய்தவனை பிடித்து வைத்து இருக்கிறார்கள். அப்படி பிடித்து வைத்திருந்தாலும் கூட, அவன் மீது எந்தவிதமான நடவடிக்கையும்



எடுக்கவில்லை. அப்படி எடுக்காததற்குக் காரணம் சிலரின் தலையீடு தான் என்று சொல்லப்படுகிறது. இப்படி நடந்தால், எந்த நேரத்தில், எந்தக் களவு வேண்டுமானாலும் செய்யலாம் என்ற நிலைமைக்குப் போய்விடும். ஆகவே, இது போன்ற சம்பவங்கள் எங்கே நடைபெற்றாலும் அங்கேயெல்லாம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படிப்பட்ட நிலையை மாற்றும் வகையில் ஒரு நல்ல முடிவை அரசு எடுக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

வந்தவாசியில் ஒரு போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் முஸ்லீம் சகோதரர் ஒருவரை பூட்ஸ் காலால் உதைத்து இருக்கிறார். அவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அங்கே புகார் கொடுத்து இருக்கிறார்கள். அந்தப் புகார் உடனடியாகக் கவனிக்கப்படவில்லை. ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் தகவல் கொடுக்கப்பட்டவுடன் அந்த அதிகாரியின் மீது நடவடிக்கை எடுப்பதற்காக ஏற்பாடு செய்து இருக்கிறார்கள். அப்படி உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடு செய்ததற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னையில் ஒரு சம்பவம். 5—3—1974-ல் மண்ணடி போலீஸ் லைனில் ஒருவர் இறந்து விட்டார். இறந்தவரின் பிரேதம் அந்த வீட்டிலே இருக்கிறபோது, மற்றொரு தெருவில் கலவரம் செய்தவர்கள் அந்த வீட்டினுள் புகுந்து அந்த பிரேதத்தை காலால் உதைத்து இருக்கிறார்கள். அப்படிச் செய்தவர்களை இது வரையில் கைது செய்யப்படாமல் இருந்தார்கள். இப்போது கைது செய்யப்பட்டும், அவர்கள் ஜாமீனில் அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் மீதும் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதுபோன்று சிக்கலில் நடந்த வகுப்புக் கலவரத்திற்கு அங்கேயிருக்கிற சப்-இன்ஸ்பெக்டர் அவர்களே தலைமை தாங்கியிருக்கிறார்கள். அந்த கலவரத்தினர் பள்ளிவாசலைக் கடக்கும்போது மேளம் தட்ட ஏற்பாடு செய்து, அங்கே உள்ளே சென்று சேதம் விளைவித்து இருக்கிறார்கள். அப்படி கலவரம் செய்தவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து இருந்தாலும், அந்த வழக்கில் முஸ்லீம்களை மட்டும் ஈடுபடுத்தி வழக்குப் பதிவு செய்து இருக்கிறார்கள். அதில் 85 வயதான கிழவர் ஒருவர் மீதும் வழக்கு பதிவு செய்து இருக்கிறார்கள். இந்த மாதிரி சம்பவங்கள் நடக்காமல் இருப்பதற்கு தகுந்த ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

[1974 மார்ச் 23

திரு. அ. தேவேந்திரன் : தலைவரவர்களே, 1974–75 ஆண்டுக்கான காவல்துறை நிதி ஒதுக்கீடு மசோதாவில் பேசுகிற வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள் கிறேன். கிட்டத்தட்ட 24.5 கோடி ரூபாய்க்கு காவல் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்து இருப்பதற்கு நான் உள்ளபடியே பாராட்டுகிறேன். நாலாயிரத்து நானூற்று ஏழு பேர்களுக்கு மேல் சிறப்பூதியம் பெற தகுதியுடையவர்கள் அல்ல என்ற உச்சவரம்பைத் தளர்த்தி, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருப்பதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

காரியங்களில் ஈடுபடுகிறபோது வீர மரணம் அடைந்து விட்டால் அதிக பட்ச சம்பளத்தில் ஒய்வூதியம் சரிபாதியாக்கிஉள்ளதை உள்ள படியே காவல் துறையினர் மனதார வரவேற்பார்கள் என்று தெரிவித் துக்கொள்கிறேன்.

அறுபத்திமூன்று சத விகித ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற இனிப்பான செய்தியை தந்து இருப் பதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இருநூற்று இருபத் திரண்டு இளநிலை உதவியாளர்களை உதவியாளர்களாக பதவி உயர்வு செய்து இருப்பதை நான் வரவேற்கிறேன்.

குற்றங்கள் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டு வரும் விஞ்ஞான யுகத்தில் எல்லா மாவட்டங்களிலும் அறிவியல் ஆய்வு சாதனங்கள் கூடம் அமைக்கப்படும் என்று அறிவித்து இருக்கிறார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

(நண்பகல் 12.00.)

அன்சோஷல் எலிமெண்ட்களை ஒழித்துவிடவேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிகு கே. டி. கே. தங்கமணி இங்கே சொன்னார்கள்.

சென்ற ஆண்டு சேலம் வேலூரில் இந்த நாட்டிலே நமது தளநாயகரை 20 மைலுக்கு அப்பாலே அங்கே போகவேண்டாம் என்று காவல் துறையினர் தடுத்து நிறுத்தி, டிரான்ஸ்பார்மர் எறிந்து கொண்டிருக்கிறது, ஒரே புகைமண்டலமாக இருக்கிறது, ஊரே இருள் சூழ்ந்திருக்கிறது என்று கூறினார்கள். அன்சோஷல் எலிமெண்ட் அப்படிச் செய்துவிட்டார்கள். அந்த நிலையை யார் உருவாக்கினார்கள் என்பதை இந்த நேரத்தில் அவர்கள் சற்று எண்ணிப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1974 மார்ச் 23] [திரு. அ. தேவேந்திரன்]

காவல் துறையைப் பொறுத்தவரையில் ஒரு சில கருத்துக்களையும் யோசனைகளையும் சொல்ல விரும்புகிறேன். அவைகளை முதல் அமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து பரிசிலனைசெய்து ஆவன செய்து உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு காவலர் 15 ஆண்டுகள் வேலை செய்துவிட்டார் என்றால், அவருடைய எந்த தகுதியையும் பார்க்காமல், ஜாதி மதத்தையும் கூட பார்க்காமல், கல்வி யோக்யதாம்சங்களையும் கூட பார்க்காமல், அவருடைய சர்வீஸை மட்டும் அடிப்படையாகக் கொண்டு முதல் நிலைக் காவலராக ஆக்கிவிடவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே சப்-இன்ஸ்பெக்டராக இருப்பவர் 8 ஆண்டு காலம் வேலை செய்துவிட்டால், அவருடைய வேறு எந்தத் தகுதியையும் பார்க்காமல் அவரை இன்ஸ்பெக்டர் ஆப் போலீஸாக ஆக்கிவிட வேண்டும் என்று இந்த நேரத்தில் என்னுடைய யோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே போலீஸ் பயிற்சி நிலையம் இருக்கிறது. அங்கே டிரில் கற்றுக்கொடுக்கிறார்கள். லா சம்பந்தமான விஷயங்களைச் சொல்லிக் கொடுக்கிறார்கள்.

நான் இந்த நேரத்தில் சொல்ல விரும்புவது என்னவென்றால் அவர்களுக்கு கார் ஓட்டுகின்ற அந்த வேலையைக் கற்றுத்தரவேண்டும்.

மோட்டார் சைகிள் ஓட்டுகின்ற அந்த வேலையைக் கற்றுத் தர வேண்டும்.

அதோடு நம்முடைய வீர விளையாட்டுகளான குத்து விளையாட்டு சுற்றுக்கொடுக்கவேண்டும்.

சிலம்பு விளையாட்டை அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கவேண்டும்.

பின்னால் அவர்கள் காவல் வேலையில் ஈடுபடும்பொழுது இதெல் லாம் அவர்களுக்கு பயன் அளிக்கும் என்று இந்த நேரத்தில் என் னுடைய யோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பொழுது டெப்யூடி இன்ஸ்பெக்டர் என்ற கிரேடு போட்டிருக் கிறார்கள். போலீஸ் துறையில் போலீஸ் ஸ்டேஷனில் கிரைம் வொர்க்கை டெப்யூடி இன்ஸ்பெக்டர் கவனித்துக்கொண்டிருக் கிறார்கள்.

[திரு. அ. தேவேந்திரன்] [1974 மார்ச் 23

அதைப்போலவே ஒரு ஸ்டேஷன் என்று சொன்னால் மூன்று எஸ்.ஐ. அங்கே இருக்கவேண்டும். ஒருவர் ஹாக்கி காரியேஜைப் பார்த்துக்கொள்ளவேண்டும். ஒருவர் லா அண்டு ஆர்டரைப் பார்க்க வேண்டும். பந்தோபஸ்து மற்ற விவகாரங்களை ஒரு எஸ்.ஐ. பார்க்க வேண்டும்.

மாயூரத்தில் 50,000 மக்கள் வசிக்கிறார்கள். போலீஸ் ஸ்டேஷனைப் பொறுத்தவரையில் எஸ்.ஐ. அந்தஸ்தில்—ஏ.எஸ்.ஐ.-யை நான் சொல்லவில்லை—மூன்று எஸ்.ஐ.-கள் இருப்பார்களேயானால் அங்கே திறமையாக வேலை செய்ய முடியும் என்ற யோசனையையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் யூனியன் பிரதேசத்தில் பஞ்சாயத்து யூனியன் பிரதேசத்தில் ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஆப் போலீஸ் அவசியம் இருக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது கூட ஹெட்டாக இருந்தவர்களை எஸ்.ஐ. ஆக செலக்ஷன் செய்து அவர்களை பயிற்சிக்கு அனுப்புகிறார்கள். அது தேவையில்லை. வேலையில் வந்து சேர்ந்த காலத்திலிருந்து எல்லா விஷயங்களையும் அவர் தெரிந்துவந்திருக்கிறார்கள். அவர்கள் 45 வயதைத் தாண்டி விட்டவர்கள். அவர்களுக்கு காலையிலே 3 ரவுண்டு கிரௌண்டைச் சுற்றி ஓடி வர முடியாது. அவர் திறமையைப் பார்த்துத்தான் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அவர் ஸ்மார்ட் ஆக இருக்கவேண்டியது, அவ்வளவுதான். அவர் போலீஸ் ஸ்டேஷனிலேயே இருந்தவராதலால் அவருக்கு இந்தப் பயிற்சி தேவையில்லை.

அவரைத் திரும்பவும் ஓடவிட வேண்டாம் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

இப்பொழுது அவர்களுக்கு ஒரு புல்லட் மோட்டார் சைகிள் தந்திருக்கிறார்கள். அது அவசியம் இல்லை. ஒரு இடத்தில் ஒரு கொலை, கலவரம் அல்லது ஏதாவது தகராறு ஏற்பட்டால், பின்னால் ஒரு ஹெட்டை உட்காரவைத்துக்கொண்டு போகிறார். குற்றவாளியை எவ்வாறு கொண்டு வர முடியும் அவர்கள்? எப்படி குற்றவாளியை கண்காணிப்பது. ஆகவே அவர்களிடமிருந்து மோட்டார் சைகிளை வாபஸ் வாங்கிக்கொண்டு அவர் ... ஒரு ஜீப் கொடுக்கவேண்டும்.



1974 மார்ச் 23] [திரு. அ. தேவேந்திரன்]

எம்.எல்.ஏ.-க்கு மத்திய அரசு ராணுவத் துறையில் பழுதடைந்த ஜீப்புகள் ரூ. 6,000-க்கு தருகிறார்கள் என்று நினைக்கிறேன். அத்தகைய ஜீப்களை ஏலத்தில் எடுத்தாவது அவைகளை ரிப்பேர் செய்து ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்கும் ஒரு ஜீப் கார் தந்துவிடவேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான கோரிக்கையாகும்.

அதைப்போலவே போலீஸ் லைனைப் பொறுத்தவரையில் அங்கே உள்ள வீடுகள் சீர்படுத்தப்படவேண்டும். காற்றோட்டம் இல்லாத பழைய காலத்து வீடுகளாக இருக்கின்றன. அவைகளையெல்லாம் இடித்துத் தள்ளிவிட்டு நல்ல காற்றோட்டமுள்ள வீடுகளாக அவர்களுக்கு கட்டித்தரவேண்டும். நான் இதையெல்லாம் பார்த்திருக்கிறேன், அதனால் சொல்கிறேன்.

நோய் ஆரம்பிக்கிறது என்றால் அது போலீஸ் லைனில் தான். காலரா, சிறிய அம்மை வார்க்கிறதா இது போன்ற நோய்கள் போலீஸ் லைனில் தான் முதலில் ஏற்படுகின்றன. ஆகவே, போலீஸ் லைனில் உள்ள வீடுகளை காற்றோட்டமுள்ள வீடுகளாக அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போலீஸ் ஸ்டேஷனில் உள்ள லாக்கப்பில் சின்னச்சின்ன வலைக் கம்பிகள் போட்டிருக்கிறார்கள். அது ஏதோ புலி அல்லது சிங்கத்தை அடைத்துவைக்கின்ற கூண்டு போல் இருக்கிறது. அந்த வலைக் கம்பிகளை நிச்சயம் நீக்கவேண்டும். குற்றவாளி சந்தேகத்திற்குறியவனாகத் தான் உள்ளே இருக்கிறான். கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்ட பிறகு அவன் நிரபராதி என்று கூட நிரூபிக்கப்படலாம், அல்லது அவன் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டு தண்டனை பெறலாம். அது வேறு விஷயம். லாக்கப்பில் இருக்கிற சின்ன சின்ன வலைக் கம்பிகளைப் போட்டு அதை அடைத்துவைக்காமல், எடுத்துவிடவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே அவர்களுக்கு குறைந்த நேரத்தை வைக்க வேண்டும். 8 மணி நேரத்திற்கு மேல் அவர்களிடமிருந்து வேலை வாங்கக்கூடாது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். அந்த நிலையை காவலர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிறைய காவலர்களை நியமிக்க வேண்டும். பி.ஆர்.எஸ்.-லிருந்து காவலர்களாக போலீஸ் ஸ்டேஷனுக்கு வருகிறார்கள் அல்லவா? அவர்கள் அப்படி வருகிறபொழுது, அவர்களுடைய சம்பளத்தி

[திரு. அ. தேவேந்திரன்] [1974 மார்ச் 23

லிருந்து மாதாமாதம் கழித்துக்கொள்ளும் நிலையில் அவர்களுக்கு ஒரு ஹெர்குலிஸ் சைகிளை தந்துவிடவேண்டும். அப்படித் தந்துவிட்டால் அவர்கள் காரியங்கள் ஆற்றுவதற்கு மேலும் சிறப்பாக இருக்கும்.

விஷ ஊசி கொலை வழக்கு எனக்குத் தெரியும். வேறு ஏதாவது நினைத்துவிடவேண்டாம். நான் ஒரு ஆங்கிலப் படம் பார்த்திருக்கிறேன். விஷ ஊசி கொலை போன்றவை வெளிநாடுகளில் எப்படி நடைபெறுகிறது என்பதை அந்தப் படத்தில் பார்த்தேன். நான் எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், வெளி நாடுகளுக்கு நிறைய காவலர்களை அனுப்பவேண்டும். டி.எஸ்.பி., எஸ்.பி. போன்றவர்களை அனுப்பவேண்டும். புலனாய்வுத் துறையில் பயிற்சி பெற ஸ்காட்லண்ட் யார்ட் போன்ற இடங்களுக்கு நிறைய காவல் துறையினரை அனுப்பவேண்டும். நிறைய விஷயங்கள், புதிய புதிய திட்டங்கள் இன்றைய விஞ்ஞான உலகத்தில் நடைபெறுகின்றன. அவைகளைத் தடுக்கின்ற வகைகளில் பயிற்சி பெறுவதற்கு வெளி நாடுகளுக்கு நிறைய காவல்துறையினரை அனுப்பவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டம் நிறையக் கோவில்கள் உள்ள இடம். அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் சொல்லிக்கொள்கிறேன். சிலை திருட்டு, அடே அப்பா, கட்டுக்கு அடங்காத நிலையில் இருக்கிறது. எனது தொகுதியிலிருந்து திருடிக்கொண்டு போன சில சிலைகள் ஒஹாசூரில் விற்கப்பட்டிருக்கின்றன. நக்ஸலைட் விங், ஃபுட் செல் என்று தனியாக ஒரு செல் போட்டிருப்பதுபோல, இந்த சிலை திருட்டைக் கண்டுபிடிப்பதற்கு ஒரு தனி செல்லை ஏற்படுத்த வேண்டும். சிலைத் திருடர்களை சாதாரணமாக விடாமல் அதிக பட்சம் லாடம் கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் திருமருகலில் ஒரு காவல் நிலையம் ஏற்படுத்த வேண்டும். திட்டச்சேரியில் ஒரு காவல் நிலையம் இருக்கிறது. நன்னிலத்தில் ஒரு காவல் நிலையம் இருக்கிறது. இடையிலே 10 மைலுக்கு காவல் நிலையம் இல்லை. ஆகவே திருமருகலில் ஒரு அவுட் போஸ்ட் போலீஸ் ஸ்டேஷனையாவது ஏற்படுத்தவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கருணையோடு ஒரு தீயணைப்பு நிலையத்தை நன்னிலத்துக்குத் தந்தார்கள். அதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துறையைச் சார்ந்தவர்கள் அத்தனை பேர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.



1974 மார்ச் 23] [திரு. அ. தேவேந்திரன்]

என்னுடைய கோரிக்கை என்னவென்றால் ஒரு ஆம்புலன்ஸ் வண்டியும் நடப்பு நிதி ஆண்டிலேயே அங்கு தந்து உதவவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே காவல் துறை முதல் அமைச்சர் அவர்களுடைய அடகுத் துறையாக இருக்கிறது என்றெல்லாம் பேசப்பட்டது. இங்கே குலத் தொழிலைப்பற்றிப் பேசுகிற நேரத்தில், அதையெல்லாம் அனுமதித்து கொண்டிருக்கிறார்கள், அது அவருடைய பாவம் என்பதைச் சொல்லி, இந்த மானியத்தை வரவேற்று, இந்த மான்யத்திற்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

* THIRU K. M. SUBRAMANIAM: Mr. Chairman, Sir, I am speaking on a very dangerous subject, namely, Police.

It is very unfortunate that to-day, the policeman is the most hated man in the country. I am very sorry for it. There was a time when police had to look after only law and order. Today, they have not only to look after law and order, but they have to serve as social reformers. They must have good knowledge on public relationship. During British days, it was quite different. Today their work is very tedious. To compare, I would like to say they are like 'Mridhangams' which will be beaten on both the sides. On one side the Government says that they should do this and on the other side the opposition says 'why did you do it?' What will they do? ' I am not able to understand this. But unfortunately, I have given a cut motion to reduce the amount to discuss about the welfare and Housing schemes for police. I feel it should be to increase the amount. But under the rules, I can give only cut motions.

I find the police force to-day is not at all sufficient enough to cope with the work. Fortunately for us we have got good officers and a good cultural State. Therefore, we do not have trouble as in Gujarat, Patna or Madaya Pradesh. But we cannot be satisfied with that position. I know that many policemen are perfect. Some of them are perfect but they are attacked in public meetings.

" நாங்கள் வந்தால் என்ன பண்ணுவோம் தெரியுமா? "

If that is the position, how can we expect deceny from ordinary citizens? This sort of thing is not conducive to good relationship. When police personnel are attacked at public meetings, they would

feel hurt but cannot defend. We have to hear such speeches. I do not know where we are drifting. I think the persons uttering such words have lost their sense of value. Where are we going to-day? I am very much worried. To-day we are spending 24 crores and odd on police, which works out to 5 per cent of the total revenue.

You take any case, students case, lorry case, smuggling case, bus-conductor case and police have to rush in to take action.

So far as the police station in T. Nagar is concerned, there is one Inspector, one Sub-Inspector, two Assistant Sub-Inspector, five head constables and 36 constables for law and order. How can they attend to their work with this limited staff? There is shortage of personnel in the police station. To-day crimes are increasing and there were more than 300 crimes during the last one year in that area. Whenever a person goes to a police station to lodge a complaint, the constables would not be there as they would have been sent for other duty. So, I think the Department should seriously consider the question of increasing the number of the police force in this State. We cannot rest satisfied that our State is a very peace-loving State. There are enough forces in this State also which can create trouble and that is why my sympathies are with the police. They have also to act in a way which would create confidence among the people. Now the police officers have got huge foreign cars and they should excuse me for saying so. They should set an example to others. Even Ministers have ambassador cars and so it is enough if they also use the same type of cars. During the British regime, they were using huge cars and now they are not necessary.

It is always stated that the police is partial. I have been in politics from 1926 and when I was in the Congress, just two days prior to the election, they asked me who were the people who should be arrested to help me in the elections. The same thing may happen when other parties rule the State. So, there is nothing new about it. Not only in Tamil Nadu but even in the whole of India and perhaps even in America, the police are used for helping the ruling party.

But to go on repeating time and again that the police are canvassing votes or doing things like that, is fairly wrong because the Tamil Nadu Police had the best reputation in this country for their honest work.



I do not say that policemen are saints. A few of the human-beings may be saints, a few of them corrupt and so also we have in the police force there may be a few such people. But to condemn them outright and say that they are helping one party as against another party is not fair and I say this from my experience of having rolled from one party to another. We cannot blame them for that......

(Mr Chairman sounded the gong).

Coming to the ordinary ranks of the police like Sub-Inspector he is given a dress allowance of Rs. 200 for two years. A pair of shoes cost Rs. 45 and a belt Rs. 25. Then he has to dress neatly, otherwise the I.G. will fine him. How can he carry on with Rs. 200 for two years at the present juncture. Their conveyance allowance of Rs. 40 was fixed 12 years ago and they have been paid the same allowance even today when the price of petrol has increased. Even the jeep is not given to him and it is used by the Inspector and other superior officers. So, their allowance should be increased, and also other amenities should be provided.

Now I come to housing. About Rs. 10 lakhs has been sanctioned for housing. I think the most important thing is that policemen should have good houses. I am happy that this Government have decided to spend on housing. You know even in the police quarters, there is one tap for 30 houses and how can they live in such conditions? They are on duty for 24 hours whenever the President or the Prime Minister visits the City and they have to stand in Mount Road for hours together and how long can they stand? So, more amenities should be provided to them. But to-day they are the most despised people in the country. But their services in Tamil Nadu are most commenable. I warn that naxalite activities are increasing in Tamil Nadu and I can prove it with authority. So, the police should be vigilant. They should be nourished and given incentive and all parties should co-operate to make the policemen a successful, loyal and hard-working force.

Thank you for giving me an opportunity to speak.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: தலைவரவர்களே, நம்நாட்டு காவல்துறையினர் தொடர்ந்து நமக்கு தேடித்தரும் இந்த நல்ல பெயருக்காக இந்த காவல் துறை மானியத்தை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி] [1974 மார்ச் 23

நம்முடைய காவல் துறையினர் புலனாய்வுத் துறையில் முக்கியமாக பணியாற்றி, தங்களுடைய நற்பெயரை தொடர்ந்து காப்பாற்றி வருவதோடு, அதற்கு ஊக்கம் காட்டி வருகிறார்கள் என்பதை நாம் மறுக்க முடியாது. அதே நேரத்தில் சட்டம், ஒழுங்கு இவைகளை பராமரிப்பதில் அவர்கள் நல்ல திறமை காட்டியிருக்கிறார்கள். இன்னும் அந்தப் பிரிவில் அதிகக் கவனம் செலுத்தப்படுவதற்காக ஓரிரு விஷயங்களை இந்த நேரத்தில் சொல்லவேண்டுமென்று விரும்புகிறேன்.

இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையிலே புலனாய்வுத் துறையில் போடப்பட்ட பல புலனாய்வு வழக்குகளைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இதிலே கடந்த 72–73லே திருட்டுக் குற்றங்கள் மட்டும் அதிகமாக இருக்கின்றன. ஏறத்தாழ இரண்டாயிரம் வழக்குகள் இருக்கின்றன. இந்த வழக்குகளுக்குக் காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டம், அதிகமான விலை உயர்வு, அதைப்போல மக்கள் தொகைப் பெருக்கம்—இந்த மூன்றையும் காட்டி, இந்த மூன்று காரணங்களினால் திருட்டு வழக்குகள் அதிகமாக இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

73-க்கு முன்பும் வேலையில்லாத் திண்டாட்டம் இருந்தது. மக்கள் தொகை பெருக்கமும் 73-க்கு முன்பே இருந்தது. 73இல் விலையேற்றம் ஓரளவு அதிகம் தான். என்றாலும் இந்த மூன்று காரணங்களைத் தவிர வேறு ஏதாவது காரணங்களும் இருக்கின்றனவா என்பதை புலனாய்வுத்துறையினர் பரிசீலிக்கவேண்டும்.

இதிலே குறிப்பாக, முதலமைச்சர் தொகுதி சைதையில் கடந்த 15 தினங்களுக்குள் 3 திருட்டுக் குற்றங்கள் நடந்திருப்பதாக அறிகிறேன். அலங்கார் என்கிற ஒரு ஜவுளிக்கடை, ஒரு கைத்தறி ஜவுளிக்கடை—கைத்தறியினால்தான் என் கவனத்திற்கு வந்தது—ஒரு வீடு ஆகிய மூன்று இடங்களில் திருட்டுக் குற்றம் நடைபெற்றிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? கைத்தறித் துறையில் உள்ள ஸ்பெஷலிஸ்டுகளே ஈடுபடுகிறார்களா, இதைப் புலனாய்வு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் திறமையாகக் கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகள் பற்றியும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். என் தொகுதியில் எம். ரெட்டிபட்டியில் போலி டாக்டர் ஒருவர் இருந்தார். மருத்துவ இலாக்காவில் [illegible] வரென சொல்லிக்கொண்டு பல ஏமாற்று



1974 மார்ச் 23] [திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி]

களைச் செய்திருக்கிறார். போலீசுக்குத் தகவல் கொடுக்கப்பட்டது, மெடிகல் இலாக்காவுக்கும் தகவல் கொடுக்கப்பட்டது. அதைப் பற்றி எந்த நடவடிக்கையும் எடுத்திருப்பதாகத் தெரியவில்லை. அது ஒரு புதிய சவால். ஒரு பெரிய ஆஸ்பத்திரி போலவே—நர்சுகள் பயிற்சி அளிப்பதாக ஆயிரம் ரூபாய் வாங்கிக்கொண்டு 30 பேர்களைச் சேர்த்து இருக்கிறார்கள். நர்ஸ்கள் 30 பேரைச் சேர்த்திருக்கிறார்கள். ஆஸ்பத்திரி போலவே நடத்தி வந்தார்கள். இதையும் போலீஸ் இலாக்கா கவனமாகப் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, முக்கியமாக இந்த நேரத்தில் காவல் துறையின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புவது—பெரிய பதவியில் ஆங்காங்குள்ள அதிகாரிகளில் சிலர் தவறு செய்கிறார்கள் என்பதை நாம் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். நூற்றுக்கு நூறு பேர்களும் ஒழுங்காக நடந்துகொள்வதில்லை. திறமையாக நடந்து கொள்வதில்லை. சட்டம், ஒழுங்கு, அமைதி பாதுகாப்பிலே இதுதான் கொள்கை, இப்படித்தான் நடக்க வேண்டும் என்ற அடிப்படையில் வரையறுத்து செயல்பட வைக்க யாராலும் முடியாது.

சில பொதுக்கொள்கைகள் இருக்கின்றன, அவரவர்கள் ஆங்காங்கு எழுகிற நிலைமைக்கேற்ப எது சரி என்று படுகிறதோ அதனை பொறுப் புணர்ந்து, கடமையுணர்ச்சியோடு செயல்படுத்தத்தான் கடமைப் பட்டிருக்கிறார்கள். அப்படி எல்லோரும் செயல்படுகிறார்களா, என்பதை மேலே உள்ளவர்கள் ஆராயவேண்டும்.

உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். திருநெல்வேலியில் ஒரு சம்பவம் நடந்தது—அங்கே தாக்கப்பட்டவர் ஒரு பேராசிரியர். அங்கே இருந்த காவல்துறை அதிகாரி நடந்துகொண்ட முறையினால் ஒரு போராட்டமே நடந்தது—விசாரணை கமிஷன் போடப்பட்டது—கமிஷன் ரிப்போர்ட்டின் மீதுதான் அந்த அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. அப்படியின்றி—இத்தகைய சூழ்நிலைக்குக் காத்திராமல்—மேலே இருக்கக் கூடிய அதிகாரிகளே—பாளையங்கோட்டை காவல் துறை அதிகாரி நடந்துகொண்ட முறையைக் கண்டித்து நடவடிக்கை எடுத்திருந்தால் அது இந்தக் காவல்துறையின் மதிப்பையே வெகுவாக உயர்த்தியிருக்கும்.

எந்த இடத்தில் இலாக்காவில் உள்ளவர்கள் தவறாக நடந்தார்கள் என்று தெரிந்தாலும் உடனே மேலே இருக்கிற அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தால்தான் காவல்துறைக்கும் பெயர்—அரசாங்கத்திற்கும் நல்ல பெயர் ஏற்படும். அப்படி நடவடிக்கை எடுத்திருந்தால் பாளையங்கோட்டையில் பின்னால் நடந்த சம்பவங்களை நடக்காமலேயே தவிர்த்திருக்கலாம். அது போன்ற தவறு செய்கிற அதிகாரிகள் யார் யார், எங்கெங்கு இருக்கிறார்கள் என்பதையும் மேலே உள்ளவர்கள் தெரிந்து வைத்துக் கொண்டு கண்காணிப்பாக இருக்கவேண்டும். தேவைப்படுகிறபோது அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் தயங்கக்கூடாது.

என்னுடைய தொகுதியைப்பற்றி—அங்குள்ள ஒரு நபரைப்பற்றி நான் எடுத்துக்காட்ட வேண்டிய அவசியத்தில் இருக்கிறேன். உதவி போலீஸ் சூப்பிரண்டெண்டெண்ட் * * சதா 24 மணி நேரமும் குடி வெறியில் இருப்பார்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. பாலசுந்தரம்): தாங்கள் இப்போது ஒரு அதிகாரியின் பெயரைச் சுட்டிச் சொன்னீர்கள். அதுபோல பெயரைச் சொல்லக் கூடாது.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI: I do not think I am not proper in mentioning the name of the person. It is my duty to bring it to the notice of the House so that some kind of action may be taken against the concerned official, if he is not acting properly.

திரு. கா. காளிமுத்து: அது இந்த அவைக்கு ஏன் ஒத்துவராது? 24 மணி நேரமும் குடிவெறியில் இருக்கக்கூடிய ஒரு அதிகாரியை உண்மையில் முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்றுதான் சொன்னார்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. பாலசுந்தரம்): இன்ன இடத்தில் இருக்கிற, இன்ன பதவியில் உள்ள அதிகாரி என்று சொல்லலாமே தவிர, பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடாது. அந்தப் பெயரை அவைக் குறிப்பில் இருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: பெயரை எடுத்துவிடவேண்டும் என்று சொன்னீர்கள். உங்கள் தீர்ப்பை நான் ஆட்சேபணை செய்யவில்லை. ஆனால் இங்கே பேசுகிறபோது சட்டமன்ற உறுப்பினர்களைக் குறிப்பிட்டுச் சொன்னால் ஆதாரங்களைக் காட்டவேண்டும். ஆனால் அரசாங்க நிர்வாகத்தில் இன்ன இடத்தில் உள்ள இன்ன பெயருடைய அதிகாரி இந்தமாதிரியாக நடந்துகொள்கிறார் என்று சுட்டிக்காட்ட வேண்டிய பொறுப்பு உறுப்பினர்களுக்கு இருக்கிறது.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. பாலசுந்தரம்): பொதுவாக இந்த மன்றத்தின் மரபு, அவையில் இல்லாதவர்களைப்பற்றி பெயர் குறிப்பிட்டுப் பேசக்கூடாது என்பதாகும்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: அதிகாரிகள் செய்கிற குற்றங்களை, குறைகளைச் சொல்லும்போது, பெயரைச் சொல்லும்போது, பொறுப்புணர்ச்சியுடனும், அதற்கான ஆதாரங்களுடனும்தான் பேசுகிறோம். பெயரையே சொல்லக் கூடாது என்றால் புகார்களையே சொல்ல முடியாது போய்விடும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: அவைத் தலைவர் அவர்களே, சட்டசபையில் பேசுகின்ற நேரத்தில், வெளியில் இருக்கிற அதிகாரி பெயரைச் சொன்னால், அவர் இந்த அவையில் இல்லாத காரணத்தினால் தன்னை இந்த மன்றத்தில் பாதுகாத்துக்கொள்ள முடியாது என்பதனால் பெயரைச் சொல்லக் கூடாது என்பது தாங்கள் கொடுத்த ரூலிங். அது ஒருவகையில் சரி என்றாலும் அந்த இலாக்காவுக்குப் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிற அமைச்சர் இங்கே இருக்கிறார். அவரது இலாக்காவில் உள்ளவர் எப்படி நடக்கிறார் என்பதை உறுப்பினர்கள் சுட்டிக்காட்டிப் பேசினால்தான், அவர் அப்படி நடக்கவில்லை, இல்லை நடக்கிறார், நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாகவாவது முதல் அமைச்சர் பதில் அளிக்க முடியும். அந்த அதிகாரிமேல் தவறு இல்லையென்றால் முதலமைச்சர் டிபெண்டு பண்ணலாம். பெயரையே சொல்லக்கூடாது என்பது சரியல்ல.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. பாலசுந்தரம்): இன்ன இடத்தில், இன்ன பதவியில் இருக்கிறார் என்று சொன்னால் போதும், பெயரைச் சொல்ல வேண்டாம்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: பலமுறை இந்த மன்றத்தில் சொல்லியிருக்கிறோம். எனது தொகுதியில் அவர் உதவி போலீஸ் சூப்பிரண்டாக இருந்தார். தற்போது அந்த இடத்தைவிட்டு மாற்றப்பட்டிருக்கிறார். I will abide by the decision of the Chair. There need not be so much discussion over this. I also request because

[திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி]

of the interruptions, I may be given some more time. அவர் என்ன என்ன செய்தார் என்பதை முழுக்கவும் சொல்ல விரும்பவில்லை.

முக்கியமான சில விஷயங்களை நான் அவையின் கவனத்திற்குக் கொண்டுவரத்தான் வேண்டும். இவரைப்போல வேறுசில அதிகாரிகளும் வேறு எங்காவது இருப்பார்கள். இவரைப் போன்றவர்களால்தான் இலாக்காவுக்கே கெட்ட பெயர், அமைச்சருக்கே கெட்ட பெயர் என்கிற காரணத்தினுல் இவரைப் போன்றவர்கள் மீது இலாக்கா நடவடிக்கை எடுத்து தங்கள் நல்லபெயரை நிலைநாட்டிக்கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேனே தவிர வேறு இல்லை. அவரைப்பற்றி இரண்டு மூன்று விஷயங்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-30)

அதாவது இரண்டாவது ஆட்டம், அல்லது முதலாவது ஆட்டம் முடிந்து ஜனங்கள் கூட்டமாக வருகிருர்கள். அந்த அதிகாரி குடிவெறியிலே வருகிருன். தான் யார் என்று அவர்களுக்குத் தெரிய வேண்டுமென்று கான்ஸ்டபிளைப் பார்த்து, அவர்களையெல்லாம் அடியுங்கள் என்று உத்தியோக நிலையைக் காட்டுகிருன். அது குடிவெறியிலே கொடுத்த உத்தரவு. நிதானமாக இருந்திருந்தால் அந்த முடிவை எடுத்திருக்கமாட்டான். சாதாரணமாக, பார்பர்ஸ், டோபிஸ், கணவன் மனைவியாக வருகிருர்கள். அவர்கள் அடிபட்டார்கள். அவர்களை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துப் போகிருர்கள். * * *

அந்த அதிகாரி இன்னும் போலீஸ் இலாகாவில் இருக்கிருர். வேறு இடங்களிலே அவர் இருக்கிருர். அங்கிருந்தெல்லாம் அந்தக் குற்றச்சாட்டுகள் வருகின்றன. இதுவரையில் நான் பலரைப் பார்த்திருக்கிறேன், வக்கீல் தொழிலிலேயும் பார்த்திருக்கிறேன். வெள்ளைக்காரன் காலத்திலேகூட, இப்படி கொடூரமாக, ஒரு அதிகாரி இருந்திருப்பானு என்பது சந்தேகமாயுள்ளது. எல்லோருமே அப்படியில்லை. நூற்றில் ஒருவர், இருவர் இப்படி இருந்தால், அவர்களை அதிகமாகக் கண்காணிக்கவேண்டும்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





இந்தப் போலீஸ் துறையிலே அதிகாரியாக இருக்கிருர் என்பதற்காக ப்ரொட்டக்ஷன் கொடுக்க வேண்டுமென்று எண்ணுமல் இருந்தால், திருநெல்வேலி போல் ஒரு சம்பவம் நிகழாது. திருநெல்வேலியில் அல்ல, வேறு இடங்களிலேயும் அம்மாதிரி அதிகாரிகள் இருந்திருந்தால், வேறு நிகழ்ச்சிகள் நடந்து இருக்கும். வேறு சூழ்நிலையிலே இது ஏற்பட்ட காரணத்தினுலேதான் இவ்வளவையும் சொல்கிறேன்.

எனவே, சட்டம், ஒழுங்கு, இவைகளைப் பராமரிப்பதிலே இன்னும் அதிகமாக நம்முடைய துறை கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. மு. சுருளிவேல் : மாண்புமிகு தலைவரவர்களே, தமிழகத்தை மாற்ருரின் ஆதிக்க இருள் முகாம் கவ்வி, வேட்டைக் காடாக மாற்றி விடுமோ என்று ஒவ்வொரு தமிழ்க் குடிமகனும் நியாயமாக அஞ்சிக் கொண்டிருக்கக்கூடிய நிலையில், அத்தகைய சூழ்நிலையை ஏற்படுத்த விடமாட்டேன் என்று முழக்கம் செய்து, தமிழ் நெஞ்சங்களிலே ஆறுதல் பாலை வார்த்துக் கொண்டிருக்கக்கூடிய தமிழக முதல்வர் எங்களுடைய தானைத் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்கள், கோரி இருக்கக் கூடிய, காவல் துறை மானியத்திலே பேசுவதற்காகப் பெருமை அடைகின்றேன்.

தமிழகக் காவல் துறையைப் பற்றி இன்று நாம் பாராட்ட வேண்டுமென்பதைவிட, அண்டை மாநிலங்களிலே நடைபெற்று வருகின்ற நிகழ்ச்சிகள், அந்த மாநிலங்களிலே நடைபெறுகின்ற வன்முறை, வெறியாட்டங்களுடைய தீ நாக்குகள், தமிழகத்தை அண்டவிடாமல் செய்கிற, தமிழகத்திலே அத்தகைய பரப்பரப்போ, எண்ணமோ, இல்லாமல் சட்டம், ஒழுங்கைக் காக்கின்ற தமிழகக் காவல் துறையினருடைய திறமையை, பெருமையை, இந்தத் தரணிக்குப் பறைசாற்றும் வகையிலே அவர்களுடைய பணி அமைந்திருக்கிறது என்பதிலே யாருக்கும் இரண்டுவித கருத்து இருக்க முடியாது.

காவல் துறை சிறப்பாக, மக்களுடைய உடைமைகளை, மக்களுடைய உயிர்களைப் பாதுகாக்கின்ற முயற்சியிலே அவ்வப்போது ஈடுபட்டிருந்தாலும், அவ்வப்போது ஏற்பட்டு வருகின்ற அரசியல் மாற்றங்கள், தமிழகத்தைப்பற்றி மத்தியிலே ஆள்கின்ற காங்கிரஸ் கொண்டிருக்கிற மனப்பான்மையிலே ஏற்படக்கூடிய குறிப்பிடத்தக்க மாறுதல்கள், இவைகளை எல்லாம் கவனத்திலே கொண்டு, 1959-ம்

[திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி]

ஆண்டு கேரளத்திலே நடைபெற்றதைப் போல, இங்கேயும் வளர இருக்கிற பின்னணியிலே அரசியல் சூழ்நிலையை ஏற்படவிடாமல், முன் கூட்டியே நாம் எச்சரிக்கையோடு இருக்கவேண்டுமென்பதற்காக, அந்தத் துறையிலே பல முன்னேற்றங்களைச் செய்யவிருக்கிற முதல் அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசியல் மாற்றங்களுக்கு ஏற்ப, காவல் துறையினருடைய எண்ணிக்கை போதுமானதாக இல்லையென்பதை நாம் நன்ருக அறிவோம். அதை மாண்புமிகு கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினுர்கள். ஆகவே அவர்களுக்குத் துணையாக இருக்கிற முறையில், தமிழ் நாடு முழுவதும் திட்டமிட்ட வன்முறை அல்லது சட்டம், ஒழுங்குப் பிரச்னை தலைவிரித்தாடுகின்ற நிலையில் அதைத் தடுக்க ஒரு போர்ஸ் இல்லாத நிலையில், அவர்களுக்குத் துணையாக, ஒரு " பீப்பிள்ஸ் மிலிஷியா ", ஒரு மக்கள் சேனை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அந்த மக்கள் சேனை காவல் துறைக்கு உதவியாக இருக்கக்கூடிய முறையில், ஒரு ரிசர்வ் போர்ஸ்ஸாக வைத்துக்கொள்ள மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக அந்தப் பிரச்னையிலே தீவிர கவனம் செலுத்துவது எதிர்காலத்திலே பல வன்முறைகளைத் தடுக்கின்ற அரணுக அமையும் என்பதை நான் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

1968–69-லே நம்முடைய தமிழ்நாட்டிலே 8 அடிஷனல் சூப்பரிண்டென்டெண்ட் ஆப் போலீஸ்கள் இருந்தார்கள். ஆனுல், மாவட்டப் பிரிவினைகளுக்குப் பிறகு, இன்றையதினம் இந்த அடிஷனல் சூப்பரிண்டென்டெண்ட் ஆப் போலீஸ்களுடைய எண்ணிக்கை 3 ஆகக் குறைந்திருக்கிறது. ஏனென்ருல், புதிய மாவட்டங்கள் ஏற்படுகின்ற பொழுது அந்த அடிஷனல் சூப்பரிண்டென்டெண்ட் ஆப் போலீஸ் போஸ்டுகள் சரண்டர் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்த நிலையிலே, மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது, மாவட்டத்திற்கு ஒரு அடிஷனல் சூப்பரிண்டென் டெண்ட் ஆப் போலீஸ் நியமித்தால் ஏறத்தாழ 14 ஏ.எஸ்.பி.-கள் வருகிருர்கள். அவர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். இந்தக் கோரிக்கை போலீஸ் கமிஷனுடைய ரிப்போர்ட்டிலே ஆராயப்பட்டு, இவ்வாறு நியமிக்கவேண்டுமென்ற சாதகமான குறிப்பு அதிலே கொடுக்கப்பட்டிருக்கிறது [illegible]கிறேன்.



1974 மார்ச் 23] [திரு. மு. சுருளிவேல்]

காவல் துறையைப் பொறுத்த அளவில், முன்பு 2 மாதங்கள் விடுமுறை இருந்தால், ஒரு மாதம் விடுமுறையில் சென்று, ஒரு மாத விடுமுறையைச் சரண்டர் செய்தால்தான் அவர்களுக்கு அதிகமாக ஒரு மாத ஊதியம் கிடைக்கும். ஆனுல், மார்ச் திங்கள் 14-லே நம்முடைய முதல்வர் அவர்கள் ஒரு ஆணை பிறப்பித்திருக்கிருர்கள். அந்த ஆணைப்படி மிகவும் அதிகமாகப் பயன் அடையக்கூடியவர்கள், கான்ஸ்டபிள்கள், எஸ்.ஐ.க்கள் ஆகியோர். அதன்படி ஆண்டிற்கு 15 நாள் விடுப்பை சரண்டர் செய்தாலே போதும், 15 நாட்களுக் கான ஊதியம் அதிகப்படியாகக் கிடைக்கும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பொருளாதாரத் துறையிலே உதவி அளிக்கக்கூடிய அந்தத் திட்டத்தை, அந்த உத்தரவை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மார்ச் 14-ந் தேதி வெளியிட்டதற்கு நான் நன்றி கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரை, எல்லா இலாக்காக்களிலும், அரிசன மாணவர்களுக்கு 30 வயது வரம்பாக இருக்கக்கூடிய நேரத்தில், காவல் துறையிலே மட்டும் இன்னும் 26 வயதை உச்ச வயதாக நாம் வைத்துக்கொண்டிருப்பது, அந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள் காவல் துறையிலே பெருவாரியாகச் சேர்ந்து பணியாற்று வதற்குத் தடையாக இருக்கிறது என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசீலனை செய்து, எல்லா துறைகளிலும் இருப்பதைப் போல், தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் காவல்துறையிலே வயது வரம்பை 26-லிருந்து 30-ஆக உயர்த்தவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறையினுடைய சாதனைகளைப் பேசுகின்ற நேரத்தில், எந்த வகையிலும் சம்பந்தமில்லாமல், மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர் ஓ.என். சுந்தரம் அவர்கள் வணக்கத்திற்குரிய மதுரை மேயர் அவர் களைப்பற்றி, பாவ மன்னிப்பு கோரி வருகின்ற மேயர் என்று குறிப்பிட்டு அவருடைய பேச்சினுல்தான் விவசாயிகள் போராட்டம் ஏற்பட்டது, அந்தப் போராட்டத்தினுல் திண்டுக்கல்லும், கோயம்பத்தூரும் பாண்டிச்சேரியும் தொடர்கிறது என்று குறிப்பிட்டார். வணக்கத் திற்குரிய மதுரை மேயர் பாவ மன்னிப்பு கோரி வருகிருரா, இல்லையா, என்பதை நான் அறியேன். ஆனுல், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. என். சுந்தரம் அவர்கள் மதுரை மேயரிடத்திலே பாவ மன்னிப்பு பெற்றதை நான் நன்ருக அறிந்தவன். திண்டுக்கல்லிலே நடந்த பருத்திக்கொட்டை வியாபாரத்திலே . . .

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்த
மாதிரியான பேச்சுக்களைத் தவிர்க்கவேண்டுமென்று தாங்கள் பல
முறையும் எடுத்துக் கூறியிருக்கிறீர்கள். வரம்பு மீறிய அளவில்
நமது உறுப்பினர் சென்று கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த
மாதிரி மேலும் பேசக் கூடாது என்று தங்கள் மூலமாகத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. சுருளிவேல் : தலைவரவர்களே, நான் கேரளத்திலே
இருக்கக்கூடிய மலைத் தோட்டங்களிலே வாழக்கூடிய தமிழர்கள்
படக்கூடிய அவதியைப் பற்றி, மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய
தீவிர கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். என்னுடைய
நகரத்திலிருந்து, தொகுதியிலேயிருந்து, ஆயிரக்கணக்கான
தொழிலாளர்கள், கேரளத்திலே தேவிகுளம், பீர்மேடு
வண்டிப்பெரியாறு, மூணாறு போன்ற ஹை ரேஞ்சிலிலே
பணியாற்றுகிறார்கள். அதைப்பற்றி நான் 2 ஆண்டுகளுக்கு முன்
கூடக் குறிப்பிட்டேன்.

பரப்பாறு என்ற இடத்திற்கு அருகேயுள்ள எஸ்டேட்டில் தமிழ்
பெண்மணி கற்பழிக்கப்பட்டதைக் கேட்டு, அந்தக் காவல்துறை
அதிகாரிகளிடத்திலே சென்று அணுகிய நேரத்தில், எங்களை உள்ளே
விடுவதற்குக்கூட, அந்தக் கேரள மாநில காவல்துறை அனுமதிக்க
வில்லை என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, வண்டமேடு அருகிலே மாலி எஸ்டேட்டிலே
திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளராக இருந்த
திரு. மூக்கப்பன் அவருடைய இல்லத்திலே அவர் இல்லத்திலே
இல்லாத நேரத்திலே அவருடைய துணைவியார் மட்டும் இல்லத்திலே
இருந்த நேரத்திலே கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் தவறான
எண்ணத்தோடு அங்கே செல்ல முயற்சித்த நேரத்திலே அதைத்
தடுத்த ஒரு தொழிலாளர் கொலைசெய்யப்பட்டிருக்கிறார். அதைப்
பற்றி எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன். . .

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இன்னொரு மாநிலத்தைப்
பொறுத்த வரையிலும் நாம் இருக்கின்ற சட்ட மன்றத்திலே பேசக்
கூடாது. அந்த மாநிலத்தின் போலீஸ் இலாகாவை இந்த மன்றத்
தினுடைய வாதத்திற்கு இழுக்காமல் இருப்பது பொருத்தமாக
இருக்கும். அந்த மாநிலத்தைப் பொறுத்தவரையிலே அவர்கள்



நடவடிக்கை எடுப்பதுதான் பொருத்தமாக இருக்கும். அடுத்த ஒரு
சமஸ்தானத்திலே இருக்கின்ற போலீஸ் இலாகாபற்றி நாம் இங்கே
பழிபோட்டால் நம்முடைய போலீஸ் இலாகாவினுடைய நிலைமையை
எல்லாம் அவர்கள் கூறக்கூடிய நிலைமை எல்லாம் ஏற்படும். அந்த
மாதிரி நிலைமை இருக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன் . . .

திரு. செ. கந்தப்பன் : தலைவர் அவர்களே, தமிழகத்தின் எல்லை
யோரத்தில் இருக்கிற தமிழர்கள் குறிப்பாக தொழிலாளத் தோழர்
களுக்கு ஏற்படுகின்ற இன்னல்களையெல்லாம் மாண்புமிகு முதல்
அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். மீண்டும் அதை நினைவுபடுத்து
கின்ற வகையிலேதான் இந்தக் கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள்.
கேரள மாநிலத்திற்கெதிராக பேசினார்கள் என்று பொருள்கொள்ளக்
கூடாது. அவரே சொன்னதைப்போன்று அவருடைய தொகுதிப்
பிரச்னையாக வேறு அது இருக்கிறது. அவருடைய தொகுதிக்கு நான்
சென்றிருந்தபோதுகூட இதை நான் அறிந்துகொண்டேன். தொழி
லாளர்கள் எல்லாம் வந்து சொன்னார்கள். அப்படிப்பட்ட நிலைமை
யைதான் முதலமைச்சர் அவர்களிடம் சொன்னதை நினைவுபடுத்து
கின்ற முறையிலேதான் அவர்கள் எடுத்துத் தெரிவித்தார்கள். இதை
இந்த அளவிற்கு விட்டுவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : யாரோ ஒருவரை கற்பழித்த சம்பவமாக
இருக்கலாம். ஆனால் இனப் போராட்டமாக, இனப் போராட்டம்
நடப்பது மாதிரிக் கூறுவது . . (குறுக்கீடு) What is it you
want? Why do you raise your hand? I am addressing the
Hon. Speaker. You have no business to interfere.

திரு. என். எஸ். பலராமன் : வெளியே போய்ப் பேசுங்கள். . .

திரு. பெ. சீனிவாசன் : நீ உட்கார், நீ யார் . . .

திரு. என். எஸ். பலராமன் வெளியே போய்ச் சொல்லுங்கள்.

திரு. பெ. சீனிவாசன் : நீ உட்கார், நான் பேசிக்கொண்டு இருக்
கிறேன் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தலைவரைப் பார்த்துப் பேசுங்கள்,
சீனிவாசன், என்னைப் பார்த்துப் பேசுங்கள், பலராமன் உட்காருங்கள்.

[1974 மார்ச் 23

திரு. பெ. சீனிவாசன் : நான் உங்களைப் பார்த்துப் பேசிக்
கொண்டிருக்கும்பொழுது அவர் ஏன் கையை ஆட்டவேண்டும்?
இவர் ஏன் பேசவேண்டும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என்னைப் பார்த்துப்
பேசும்பொழுது யாராவது ஏதாவது சொன்னால் நான் பார்த்துக்
கொள்கிறேன், நீங்கள் 'நீ உட்கார்', 'நீ உட்கார்' என்று
சொல்லக்கூடாது.

திரு. பெ. சீனிவாசன் : நான் பேசிக்கொண்டிருக்கிறேன், நீங்கள்
பாதுகாப்பு தரவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாதுகாப்புத் தருவதை நான்
பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள்.

திரு. பெ. சீனிவாசன் : ஒரு உறுப்பினர் பேசிக்கொண்டு இருக்கும்
பொழுது இப்படி பேசினால் எப்படி? எப்படி ஒரு உறுப்பினர்
இன்னொரு உறுப்பினரை அடக்கலாம், இப்படி அடக்கலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் சொன்னார்கள் என்றால்
அதற்காக, நீ உட்கார், நீ யார் என்று எல்லாம் கேட்பது முறையல்ல.
திரு. சீனிவாசன் அவர்கள் உணர்ச்சிவயப்பட்டு பேசக்கூடாது. நீ
யார், உட்கார் என்றெல்லாம் பலமுறை கூறியிருக்கிறீர்கள்.
முறையல்ல. திரு. சீனிவாசன் அவர்கள் இந்த மன்றத்திலே பொறுப்
பான நிலையிலே இருந்து பணியாற்றியவர்கள். அப்படிப்பட்ட
ஒருவரே இந்த மன்றத்திலே இப்படி நடந்துகொள்வது முறையல்ல.
எந்த உறுப்பினர் என்று கூட நான் பார்க்கவில்லை. நான் திரு.
சீனிவாசனைத்தான் பார்த்துக்கொண்டிருக்கிறேன். நீங்கள் உறுப்பி
னர்கள் என்ன என்ன பேச வேண்டுமோ அதைவிட அதிகமாகப்
பேசுவது முறையல்ல, அதைத் திரும்பப் பெறுவதுதான் முறை,
மன்றத்தின் மரபைக் காப்பாற்றுவது நம்முடைய கடமையாகும்.

திரு. பெ. சீனிவாசன் : மன்றத்தினுடைய மரபுகளைக் காப்பாற்று
வது எல்லா உறுப்பினர்களுடைய கடமையும் ஆகும். பேரவைத்
தலைவருடைய உத்திரவுக்கு நான் கட்டுப்படுகிறவன். எப்பொழுது
நாங்கள் பேச எழுந்தாலும் நான்கு பக்கமும் கூக்குரல் இடுகிறார்கள்;
நீங்கள் ஒரு முறையாவது அவர்களைக் கண்டித்திருக்கிறீர்களா?
நீங்கள் கண்டிக்காத நிலையில் எங்களுக்கு யார் பாதுகாப்புக் கொடுப்



1974 மார்ச் 23] [திரு. பெ. சீனிவாசன்]

பது? எங்களுக்குச் சுலபமாகச் சொல்லிவிடுகிறீர்கள். அவர்களைக்
கண்டிப்பதில்லை. ஏதோ இந்தப் பேரவையிலே எப்படி நடந்து
கொள்ளவேண்டுமென்பது எனக்குத் தெரியாததைப்போல தாங்கள்
டீச்சிங் தருகிறீர்கள். ஒரு உறுப்பினருடைய கௌரவத்திற்கு குறைவு
ஏற்படுகிற முறையில் சொன்னீர்கள். நாங்கள் வாக் அவுட் செய்
தாலும் எழுந்து பேசினாலும் அப்பொழுதெல்லாம் எழுந்து கூக்குர
லிடுகிறார்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தவறு ஏதாவது அப்படி நடந்
தால் பேரவைத் தலைவருடைய கவனத்திற்கு அதைக் கொண்டுவர
வேண்டும். அதற்குப் பதிலாக நாமே பதிலுக்கு எழுந்து நேருக்கு
நேர் சவால் விடுவதுமாதிரியாகப் பேசினால் பேரவைத் தலைவர் என்ன
செய்யமுடியும்?

திரு. பெ. சீனிவாசன் : நீங்கள் லாஜிக்கலாகக் கேட்கிறீர்கள்,
நான் சைக்கலாஜிக்கலாகக் கேட்கிறேன். எழுந்து பேசுவதற்கு எங்
களுக்குப் பாதுகாப்பு இல்லையென்றால் என்ன செய்யமுடியும்? நாங்
கள் பேச எழுந்தால் போதும், வலது பக்கம் ஒருவர், இடது பக்கம்
ஒருவர் பேசினால், எழுந்து கூக்குரலிட்டால் எப்படிப் பேசமுடியும்.
நான் எழுப்பிய பாயின்ட் ஆப் ஆர்டரைப் பற்றிச் சொல்லிவிட
விரும்புகிறேன். அங்கே இருக்கிற போலீஸ் துறையிலே தலையிடுவ
தாக, அவர்கள் கூறுவது, ஆகாதா? இனக்கலவரம் உண்டாக்கக்
கூடிய முயற்சியில் ஈடுபடுவது நல்லதுதானா என்பதைக் கேட்க விரும்பு
கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,
கூடலூரிலே கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் கொடுமைப்படுத்
தப்படுவதாக கேரள சட்டசபையிலே எழுப்பப்பெற்று கேரள
மாநிலத்துப் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்னை வந்து சந்தித்த
போது, கேரள மாநில அமைச்சர் அவர்களும் என்னை வந்து சந்தித்த
போது, நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்
கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்களை அழைத்துக்கொண்டு சென்று
அங்கு எதுவும் நடைபெறவில்லை என்று எடுத்துக்காட்டுகிற அளவிற்கு
இந்த அரசு பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது.

திரு. சுருளிவேல் மட்டுமல்ல, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த
உறுப்பினர் திரு. கோபால் அவர்களும் கம்பம் பகுதியிலே இருந்து
தோட்டத் தொழிலாளர்களும், நண்பர் ஜேம்ஸ் அவர்கள்கூட
வந்ததாக எனக்கு நினைவு, அத்தனை பேர்களும் என்னிடத்திலே வந்து

[திரு. டாக்டர் மு. கருணாநிதி] [1974 மார்ச் 23

நம்முடைய மாநிலத்து தொழிலாளர்கள் கேரளத்திலே கொடுமைப் படுத்தப்படுகிறார்கள் என்று சொன்னபோது நானும் அதைச் சுட்டிக் காட்டி அச்சுதமேனன் அவர்களுக்குக் கடிதம் எழுதினேன், அவர்களும், விசாரிப்பதாகச் சொன்னார்கள்.

இவ்வாறு ஏதாவது நடந்துவிட்டால் கேரள மாநிலத்தைச் சேர்ந் தவர்கள் என்னிடத்திலே வந்து சொல்லும்பொழுது நான் நடவடிக்கை எடுக்கிறேன், அப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் இங்கே உறுப் பினர் அவர்கள் சுட்டிக்காட்டுவதில் தவறில்லை. இப்படி ஏற்படுகின்ற சங்கடங்களைத் துடைத்துக்கொள்வதற்கு ஒரு மாநிலம் இன்னொரு மாநிலத்திற்குத் துணைபுரியக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, நம்முடைய நாடு விடுதலை பெற்றதற்குப் பிறகு அமைக்கப்பட்ட நல்ல அடிப்படையின் பயனாக காவல் துறை நல்லமுறையிலே இயங்கிக்கொண்டுவந்தது. அவர்கள் புலனாய்வுத் துறையிலும் மற்றத் துறைகளிலும் சிறப்பான சாதனைகளையெல்லாம் புரிந்து வந்திருக்கிறார்கள். சமீபத்திலேதான் துரதிருஷ்டவசமாக போலீஸ் துறை ஆளுங்கட்சியினைச் சார்ந்தவர் களுடைய விருப்பு வெறுப்புகளுக்கு உள்ளாகி அந்த விருப்பு வெறுப்பு களின் பயனாக அவர்கள் ஆட்டிப்படைக்கின்ற துறையாக மாறியிருக் கிறது. இதைத்தான் எனக்கு முன்பு பேசிய உறுப்பினர்கள் எடுத் துரைத்தார்கள்.

அது மட்டுமல்ல; வெட்டுப் பிரரேரணைகளிலே பலரும் இதனைக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைக்கு ஆளாகிவிட்டால் காவல் துறைக்குத் தேவையில்லாத பழிகள் எல்லாம் வந்துசேரும், அந்தத் துறைக்கு எந்த அளவுக்கு நல்ல பெயர் இருந் ததோ அதைக் கெடுக்கிற காரியங்களை யெல்லாம் அந்தத் துறை யினரைச் செய்ய வைக்கிறார்கள். குற்றம் புரிந்தவர்கள் மேல் வழக் குத் தொடர முடியாமல் தடுக்கப்படுவது, மற்றொன்று, குற்றம் புரியாதவர்கள்மீது குற்றம் புரிந்ததாகப் பொய் வழக்குப் போட வைப்பது ஆக இப்படி இந்த இரண்டு காரியங்களை அவர்கள் செய்து வருகிறார்கள். இதுதான் பாளையங்கோட்டையிலும் நடந்தது, கிளைவ் ஹாஸ்டலிலும் இப்படித்தான் நடந்தது என்பதை விசாரணை அறிக்கை நமக்கு எடுத்துக் காட்டுகிறது.



1974 மார்ச் 23] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

இம்மாதிரியான பல்வேறு தவறான காரியங்களுக்கு அவர்கள் ஆளாக்கப்படுகிறார்கள். இப்படித் தமிழகத்தில் ஏராளமாக நடக் கிறது. ஆகவே, இங்கே காவல் துறையின் பணிகளைப் பாராட்டி னாலும்—அதிலும் தவறுகள் உண்டு—ஆனால் அந்தப் பணிகளைப் பொதுவாகப் பாராட்டினாலும் அந்தப் பணிகளின் பெருமைக்கு இழுக்குத்தேடும் வகையிலே ஆளுங் கட்சிக்காரர்கள் காரியம் ஆற்று கிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிடுவதும், அதைக் கண்டிப் பதும் என்னுடைய கடமையாகிறது.

அதுமட்டுமல்ல. ஒன்றிரண்டு சான்றுகளைக் கூறுகிறேன். என் னுடைய தொகுதியில், ஒரு ஆலையிலே உள்ள, என்னுடைய தொழிற் சங்கத்தைச் சேர்ந்த முக்கியமான ஊழியர் ஒருவரையும், அதோடு இன்னொரு சங்கத்தைச் சேர்ந்த முக்கியமான ஊழியர் ஒருவரையும் ஆக இந்த இரண்டு பேர்களையும் ஆளுங்கட்சிக்காரர்களின் தூண்டுத லால் சிலர் தாக்க வந்தார்கள். அது நடந்தது. நடந்து முடிந்த இடைத் தேர்தலுக்கு முன்பு. நல்லவேளையாக அப்பொழுது தொழி லாளர்கள் ஒரு ஹர்த்தால் செய்து ஆலையை விட்டு வெளியே வந்தார் கள். அப்படி அவர்கள் வெளியே வந்ததனால்தான் இந்த இரண்டு பேரும் பாதுகாக்கப்பட்டார்கள். இல்லையென்றால் அவர்களது உயிருக்கே ஆபத்து வந்திருக்கும். அந்தச் சம்பவம்பற்றிப் போலீசில் புகார் செய்யப்பட்டது. யார் யார் அதைச் செய்தார்கள் என்று புகார் கொடுக்கப்பட்டது. ஆனால் இன்னும் அதில் சம்பந்தப்பட்ட முக் கியமானவர்களைப் பிடிக்க முடியவில்லை. நான் கூடக் கேட்டேன், ஏன் இன்னும் பிடிக்கவில்லை என்று. அதற்கு அவர்கள், இன்னும் ஆள் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் இன்னும் நடமாடுகிறார்கள், ஏன், பலநேரங்களில் ஆளுங்கட்சியின் அலுவலகத் திலேகூட இருக்கிறார்கள், ஆனால் அவர்களைப் போலீசாரால் பிடிக்க முடியவில்லை.

இன்னொரு விஷயத்தைக் கூற விரும்புகிறேன். வடார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பத்தூரில் சென்ற டிசம்பர் மாதம் இறுதியில் காங்கிரஸ் கட்சியின், என்னுடைய கட்சியின் கூட்டம் நடந் தது. அந்தக் கூட்டத்தில் ஆளுங் கட்சியைச் சேர்ந்த நகராட்சி மன்ற உறுப்பினர் ஒருவர் மேடையிலே ஏறி கலாட்டா செய்தார். அப் பொழுது சப்-இன்ஸ்பெக்டர் அதுசம்பந்தமாக வழக்குப் பதிவு செய் தார். பிறகு அவர் அங்கிருந்து மாற்றப்பட்டிருக்கிறார். அவரைக்

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1974 மார்ச் 23

குடியாத்தத்திற்கு மாற்றி ஆணை பிறப்பிக்கப்பட்டது. பிறகு பொதுக்
கூட்டத்தில் இதைப்பற்றிப் பேசிய பிறகு மாற்றல் உத்தரவை நிறுத்தி
வைத்து இப்பொழுது வாலாஜாபேட்டைக்கு மாற்றியிருக்கிறார்கள்.

எனக்கு நேரம் இல்லாததால், இப்படி ஒன்றிரண்டுச் சம்பவங்களை
மட்டும் கோடிட்டுக் காட்டினேன். இம்மாதிரி நடைபெற்றால்
தமிழகத்தில் சட்டம் அமைதியை எப்படிப் பாதுகாக்க முடியும்?

சட்டத்தின் பாதுகாப்பு எல்லோருக்கும் கிடைக்க வேண்டும்.
கட்சிப் பாகுபாடின்றி, இனப் பாகுபாடின்றி, மொழிப் பாகுபாடின்றி
எல்லோருக்கும் பாதுகாப்புக் கிடைத்திட வேண்டும். அதுதான்
சட்டம், அமைதி பாதுகாப்பு என்பது. ஆனால் அதற்கு வழியில்லாமல்
செய்யப்படுகிறது பலநேரங்களில்.

இன்னொரு உதாரணம் கூற விரும்புகிறேன். இடைத் தேர்தல்
சமயத்தில் எங்கள் கட்சியின் சார்பில் நாங்கள் சிங்காநல்லூரில் ஒரு
கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தோம். அதில் மத்திய அமைச்சர் திரு.
சுப்பிரமணியம் அவர்கள் பேசுவதாக இருந்தது. அனுமதியோடுதான்
அந்தக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அந்தக் கூட்டம்
நடத்துவதற்கான அனுமதியை எப்படியாவது ரத்து செய்ய வேண்டு
மென்று, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சில முக்கிய
மானவர்கள் போலீஸ் ஸ்டேஷனிலேயே போய் உட்கார்ந்து
கொண்டு வற்புறுத்தியிருக்கிறார்கள். பிறகு போலீசார் தொலைபேசி
யிலே எங்களிடம் கேட்கிறார்கள். கொஞ்சம் மாற்றிக்கொள்ள
முடியுமா என்று கேட்கிறார்கள். இப்படி யெல்லாம் போலீஸ்
இலாக்காவைச் சேர்ந்தவர்களை நிர்ப்பந்தப்படுத்துகிறார்கள். பல
வற்றைச் சொல்ல முடியாத அளவில் அப்படிப்பட்ட காரியங்களைச்
செய்கிறார்கள்.

போலீசார் சுயேச்சையாகச் செயல்பட முடியாமல்—அடிமை
யாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லியதற்கு ஆட்சேபனை தெரி
வித்தார்கள்—மெய்யாகவே அவர்களைச் சுயேச்சையாகச் செயல்பட
முடியாமல், ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் எப்படி ஆட்டினாலும்
ஆடுகின்ற பொம்மைகளாக இருக்கிறார்கள். அசாத்தியமான துணிச்
சல் போலீசாரிடம் இருந்தால்தான் இதை யெல்லாம் மீறிக் காரியங்
கள் ஆற்ற முடியும். அசாத்தியமான துணிச்சலோடு சாமர்த்தியமும்
இருக்க வேண்டும். எங்கேயுமே மாட்டிக் கொள்ளாமல் இருக்கவும்,
எல்லோருக்கும் நல்லபிள்ளையாக இருக்கவும் சாமர்த்தியம் இருந்தால்
தான் அவர்கள் தப்பிக்க முடியும் என்ற நிலைமை தமிழகத்தில் உருவாக்
கப்பட்டிருக்கிறது.



1974 மார்ச் 23] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

இந்த நிலைமைகளை மாற்றியாக வேண்டும். இந்த நிலைமைகள்
நீடிப்பது மோசமானது. இன்றைக்கு நீங்கள் ஆளுங் கட்சியாக இருக்
கிறீர்கள், நீங்கள் இந்த முறையிலே போலீசாரைப் பழக்கிவிட்டால்,
நீங்கள் நாளைக்கு எதிர்க் கட்சியாக வரும்பொழுது உங்களுக்கும்
அந்த நிலைமை வராது என்பதற்கு என்ன உத்தரவாதம்? ஆகவே,
இம் மாதிரி முறைகளுக்கு ஏதோ பதில் சொல்லித் தப்பிக்காமல், இம்
மாதிரி முறைகளை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

போலீஸ் துறையைப் பொறுத்தவரையில் இன்றையதினம் தீவிர
மாகக் குற்றங்களைக் கண்டுபிடிக்கிறார்கள். குற்றம் புரிபவர்கள்
சாமர்த்தியமாகவும், திறமையாகவும், புதுப்புது முறைகளைக்
கையாண்டும் காரியங்களைச் செய்கிறார்கள். நேற்றுகூட முதலமைச்
சரவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். புதிய முறைகளைக் குற்றவாளி
கள் செய்யும்பொழுது அதற்கேற்ற வகையில் சமாளிக்கின்ற அளவிற்கு
புலனாய்வு முறையில் புதிதுபுதிதாகப் போலீஸ் துறை பயிற்சி பெற்றாக
வேண்டும். அதற்கான காரியங்களைச் செய்ய வேண்டும்.

ஒரு உறுப்பினரவர்கள்கூடச் சொன்னார்கள். ஸ்காட்லாண்ட்
யார்ட் பயிற்சி பெற வேண்டுமென்று சொன்னார்கள். அப்படியிருக்கும்
பகுதிகளில் அவர்களுக்குப் பயிற்சியளித்து புலனாய்வுத் துறையில்
புதிதுபுதிதாக உத்திகளைக் கையாள வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

அதேநேரத்தில் இன்னொன்றையும் கூற விரும்புகிறேன். போலீஸ்
துறையின்மீது பல்வேறு ஸ்ட்ரிக்சர்கள் உயர்நீதி மன்றங்களில்
கொடுக்கப்படுகிறது. அதற்கு என்ன காரணம்? போலீஸ் துறையில்
முன்பிருந்தே ஒரு பழக்கம் இருக்கிறது. குற்றம் என்று ஒரு வழக்
கைத் தொடர்ந்துவிட்டால் அந்த வழக்கில் எப்படியும் தண்டிக்கச்
செய்ய வேண்டுமென்பதற்காக சில முறைகளை அவர்கள் கையாள்
கிறார்கள். தவறாக வழக்குப்போட்டால் ஸ்டிரிக்சர்ஸ் வருகிறது.

பல சம்பவங்களில் அப்படி வந்திருக்கிறது. அதை நான் எடுத்துக்
காட்ட வேண்டிய அவசியமில்லை. அம்மாதிரி முறைகளைப் போலீசார்
கைவிட்டுவிட்டு, புதிய "ஓரியண்டேஷன்" வந்தாக வேண்டும்.
போலீசார் குற்றவாளிகளைப் பிடிக்கத்தான் இருக்கிறார்களே தவிர
குற்றமற்றவர்கள்மீது குற்றஞ்சாட்டி வழக்குத் தொடர்ந்து
விட்டோம் என்ற முறையிலேயோ அல்லது இத்தனை வழக்குகள்
போட்டு வெற்றி கண்டு விட்டோம் என்ற முறையிலேயோ இருப்
பதைக் கைவிட்டுவிட வேண்டும்.

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1974 மார்ச் 23

இன்னொன்றும் கூற விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. பாரதி அவர்கள் ஒரு போலீஸ் அதிகாரியைப்பற்றிச் சொன்னார்கள். துரதிருஷ்டவசமாக மதுவிலக்கை நீக்கியதற்குப் பிறகு பல காவல் நிலையங்களைச் சேர்ந்தவர்கள் குடிபோதையில் இருக்கிறார்கள். இதனால் அவர்களாலேயே பல வழக்குகள் உண்டாகின்றன. சிங்காநல்லூரில் என்னுடைய அலுவலகத்திற்குப் பின்னாலேயே ஒரு சம்பவம் நடந்தது. என்னுடைய கட்சியைச் சேர்ந்த முக்கியமான ஊழியர் ஒருவர் போலீஸ் நிலையத்திற்குச் சென்று ஒரு விஷயத்தைப் பற்றிப் புகார் செய்து கவனிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். என்ன ஆயிற்று? அந்த கான்ஸ்டேபிள் குடிபோதையில் இருந்திருக்கிறார். புகார் கொடுத்த இவரையே பிடித்து அடித்து நடுரோட்டிலே அவமானப் படுத்தியிருக்கிறார். கடுமையாகப் பேசி கண்டபடி அடித்திருக்கிறார். நான்கூட அதுபற்றிப் புகார் செய்திருக்கிறேன். என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று தெரியவில்லை.

ஆகவே, காவல் துறையிலே இருப்பவர்கள் மதுவிலக்குக் குற்றங்களைக் கண்காணிக்க வேண்டியவர்கள், அப்படிப்பட்ட அவர்களே இந்தக் குற்றங்களைச் செய்யாமல் பார்த்துக் கொள்வது மிகவும் அவசியம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்னொன்றையும் நான் சொல்லிக்கொள்வேன். போலீஸ் துறை இப்பொழுது புதிய ஜனநாயக யுகத்தில் இருக்கிறது. புதிய பொறுப்புகள் போலீஸ் துறைக்கு வருகிறது. வெறும் சட்டம் அமைதி மட்டுமல்லாமல், சில நேரங்களில் உதாரணமாக கோவையில் லேபர் ஆபீசராகவும் அவர்கள் பலநேரங்களில் பணியாற்ற வேண்டியிருக்கிறது. தொழில் தகராறுகள் எழும்பொழுது கடுமையான பிரச்னைகள் தோன்றுகின்றன. ஆகவே, புதிய பயிற்சியை அவர்களுக்கு அளிக்க வேண்டும். வெறும் சட்டப் பயிற்சியோ அல்லது காவல் துறைப் பயிற்சியோ மட்டுமல்ல, சமூக உறவு பற்றிய புதிய டிரெயினிங்கையும் கொடுப்பது அவசியமாகிறது. அப்பொழுதுதான் பிரச்னைகளைச் சமாளிக்க முடியும்.

அடுத்தபடியாக, வழக்குகள் வரும்பொழுது சாதாரண மக்கள் குற்றம் புரிந்தால் பத்திரிகையிலே அவர்கள் பெயர்களெல்லாம் வருகின்றன. ஆனால் பெரிய மனிதர்கள் குற்றம் புரிந்தால் அவர்கள் பெயர்கள் மட்டும் வரமாட்டேன் என்கிறது. சிலர் பிடிக்கப்பட்டார்கள் என்று மட்டும் வருகிறது. ஜனநாயகம், சோஷலிசம் என்றெல்லாம் பேசுகின்ற இந்த நேரத்தில் [illegible] ஏன்?



1974 மார்ச் 23] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

பெரிய மனிதர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டாலும் அவர்கள் பெயர்களும் பத்திரிகைகளில் வந்தாக வேண்டும். இல்லையென்றால் இன்றைய சமுதாயத்தில் போலீஸ் அதிகாரிகளின் கருத்திலே மாற்றம் வரவில்லை என்ற எண்ணம்தான் உண்டாகும். இதனால் அவர்கள் தப்பித்துக் கொள்வதற்கும் வழி பிறக்கிறது. ஆகவே, அந்த முறைகள் மாற வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

இன்னொன்றும் கூறிக் கொள்வேன். காவல் துறையினருக்கு பயணப்படியை இரண்டாண்டுகளுக்கு முன்னால் உயர்த்தினார்கள். கான்ஸ்டபிளுக்கு 3 ரூபாய் என்றும், இப்படி படிப்படியாக இருந்தது. ஆனால் இன்றைக்குள்ள விலைவாசியில் இந்த மூன்று ரூபாயில் ஒன்றும் செய்ய முடியாது. இந்த மூன்று ரூபாய் பயணப்படியோடு வேறு ஏதாவது பண்ண வேண்டும், அப்பொழுதுதான் சாப்பிட முடியும், வேறு வழியில்லை. ஆகவே, அவர்களது பயணப்படியை 6 ரூபாய் என்று உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன். (மணியடிக்கப்பட்டது) இன்னும் இரண்டு நிமிஷங்கள் கொடுங்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இரண்டு நிமிடம் கிடையாது. ஒரு நிமிடத்தில் முடித்துக் கொள்ளுங்கள்.

<u>திரு. ஏ. சுப்பிரமணியம் :</u> சரி ஒன்றரை நிமிடமாவது கொடுங்கள். ஹோம் கார்ட்ஸ் இருக்கிறார்கள். அவர்களுக்கும் இரண்டரை ரூபாய் தினப்படி கிடைக்கிறது. அது மிகவும் குறைவு. அதையும் அதிகப்படுத்த வேண்டும்.

காவல் நிலையங்களில் இரவு பகல் எந்த நேரத்தில் புகார்களைக் கொடுத்தாலும் வாங்கிக் கொள்ளக்கூடிய வசதிகளைச் செய்ய வேண்டும். பலநேரங்களில் சப்-இன்ஸ்பெக்டர்கள் இல்லையென்று சொல்கிறார்கள். அப்படியில்லாமல் எந்த நேரத்திலும் புகார்களை வாங்கிக்கொள்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து ஃபயர் சர்வீசைப்பற்றி ஒரு வார்த்தை.

[பிற்பகல் 1-00]

நேற்று நான் குடியாத்தம் போயிருந்தேன். மாண்புமிகு குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் சொன்னது ரொம்ப சரி. மூன்று ஃபயர் எஞ்சின் இருந்தும் பயன்படவில்லை. அவை பயன்பட்டிருந்தால் நெருப்பை முன்னாலேயே அணைத்திருக்கலாம்.

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1974 மார்ச் 23

ஃபயர் சர்வீஸ் ஸ்டேஷன்கள் 73 இருக்கின்றன. அதை அதிகப் படுத்தியாக வேண்டும்.

வண்டிகள் பழுது இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

எழுபத்துமூன்று ஃபயர் ஸ்டேஷன்களுக்கு 60 ஆம்புலன்ஸ்கள் தான் இருக்கின்றன.

ஒரு ஃபயர் ஸ்டேஷனுக்கு ஒரு ஆம்புலன்ஸ் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வேன்.

சிங்காநல்லூரில் ......... (மணி அடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி .........

திரு. ஏ. சுப்பிரமணியம் : நாங்கள் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து அமர்கிறேன்.

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தாக்கல் செய்யப் பட்டுள்ள காவல் துறை, நீயணைப்பு மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என் கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

நமது தமிழ்நாட்டு காவல் துறை உலகத்திலேயே சிறப்புப் பெற்ற ஸ்காட்லாண்டு காவல் துறைக்கு அடுத்தபடியாக நல்ல பெயரைப் பெற்றிருக்கிறது என்பதை நாம் அறிவோம். அத்தகைய சிறப்பான காவல் துறை மானியத்தில் நல்ல பல திட்டங்களைத் தம்முடைய ஆய்வுரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்திருக் கிறார்கள்.

தமிழ் நாட்டுக் காவல் துறை மிகச் சிரமமான வழக்குகளை எல்லாம் புலன் விசாரணை செய்து சிரமப்பட்டு பல வழக்குகளை நடத்தியிருப்பதைப் பார்த்து காவல் துறையைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்தச் சிறப்பான காவல் துறைக்குச் சம்பள ஆணைக் குழுவின் பரிந்துரையின் பேரில் பல சலுகைகளை அரசு அளித்திருப்பதற்காக உள்ளபடியே நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1974 மார்ச் 23] [திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி]

என்னுடைய தொகுதியான முதுகுளத்தூர் தொகுதி மக்கள்தான் நீண்ட நெடுங்காலமாக நல்ல முறையில் காவல் துறையைப் பற்றி அறிந்திருக்கும் வாய்ப்பைப் பெற்றவர்கள். 1967-ம் ஆண்டுக்கு முன்பு இருந்த காவல் துறையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இன்றிருக் கும் காவல் துறை சீரோடும், சிறப்போடும் செயலாற்றி வருகிறது என்பதை அந்த மக்கள் உணர்ந்து அரசைப் பாராட்டிக் கொண்டிருக் கிறார்கள்.

முன்பெல்லாம் மண்டல காங்கிரஸ் உறுப்பினர் கூறி பொய் வழக்குகள் போடும் நிலைமை இருந்தது. முன்பெல்லாம் வாக்காளர் பட்டியலில் உள்ள பெயர்களைப் பார்த்து, யார், எந்த ஊர் என்று கூடத் தெரியாமல் பொய் வழக்குகள் போட்ட நிலை இருந்தது. இன்று எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பேசும்போது ஆளும் கட்சி உறுப்பினர்களின் தலையீடு இருக்கிறது என்று பேசினார்கள். ஆனால் உண்மையிலேயே தலையீடு இருப்பதாக இருந்தால் இயக்கத்தைச் சார்ந்தவர்கள், மாண்புமிகு முதலமைச்சருடைய மற்ற நண்பர்களாக இருந்த சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் பேரில் வழக்குகள் போடப்பட்டு நடைபெறுகிற நிலை ஏற்பட்டிருக்குமா என்று சிந்தித் துப் பார்க்க வேண்டும். அந்த அளவுக்குப் போலீஸ் துறையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நேர்மையுடன் செயல்பட்டு வருகிறார்கள் என்பதற்காகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் எந்தக் கோரிக்கையைச் சொன்னாலும் காவல் துறைத் தலைவராக இருக்கக்கூடிய ஐ.ஜி. அவர் களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் உடனுக்குடன் கவனித்து நேர்மையான முறையில் விசாரணை செய்யப்பட்டு நீதி வழங்கப்படக்கூடிய நிலையைப் பார்க்கிறோம். அந்த அளவுக்குக் காவல் துறை பொதுமக்கள் மத்தியில் நல்ல உறுதியோடு செயலாற்றி வருகிறது.

புலனாய்வுத் துறை கள்ள நோட்டு வழக்காக இருந்தாலும், சிலை திருட்டு வழக்காக இருந்தாலும், விஷ ஊசி வழக்காக இருந்தாலும் திறமையான க்ரைம் பிராஞ்ச் அவற்றை யெல்லாம் கண்டுபிடித்து வழக்கு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சிறப்பான காவல் துறையைப் பாராட்டுவதற்குப் பதிலாக எதிர்க்கட்சியினர் ஆளும் கட்சியினர் தலையிடுவதாகச் சொல்லுகிறார்கள்.

அந்தக் காலத்திலே சாதாரண அரசியல்வாதி என்ற செல்வாக்கி லேயே பல காரியங்கள் நடந்தன. ஆனல் இன்று அமைச்சர்களே சொன்னலும் காவல் துறை எடுக்கக்கூடிய நிலை இல்லை. ஆளும் கட்சி தலையீடு இன்று இல்லை என்பதற்குப் பல சான்றுகளை எடுத்துக் கூற முடியும். அந்த அளவுக்கு நேர்மையான முறையில் காவல் துறை பணியாற்றிக் கொண்டிருக்கிறது.

1967-க்கு முன்னலே இருந்த பல போலீஸ் ஸ்டேஷன்களை எல்லாம் பக்கா போலீஸ் ஸ்டேஷன்களாக ஆக்கிவிட்டார்கள். பஸ் போக்கு வரத்து இல்லாத நிலைமை இருக்கிறது. ஒவ்வொரு காவல் துறை நிலையத்திற்கும் டெலிபோன் வசதி செய்து தர வேண்டும். போக்கு வரத்து வசதி இல்லாத காரணத்தால் சர்க்கிள் இன்ஸ்பெக்டருக்கு எங்கள் பகுதியில் ஒரு ஜீப் வழங்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு காவல் நிலையத்திலும் உள்ள சப்-இன்ஸ்பெக்டர் களுக்கும் மோட்டார் சைக்கிள் வழங்க வேண்டும். ஏற்கனவே வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் 6 மாத காலமாக, 8 மாத காலமாக பழுதடைந்து பழுது பார்க்கப்படாமலே இருக்கின்றன. பழுதடைந்த மோட்டார் சைக்கிள்களைப் பழுது பார்த்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நீண்ட நெடுங்காலமாக வெள்ளைக்காரன் காலத்திலிருந்து சந்தேகக் கேஸ் என்று போட்டுக் கொண்டிருக்கிருர்கள். நாட்டு முறையில் சொன்னல் அதை முக்காட்டுக் கேஸ் என்று சொல்லுவார் கள். இத்தனை வழக்குகளைக் கட்டாயம் போட வேண்டுமென்று இருப்பதாக சப்-இன்ஸ்பெக்டர்கள் கூறுகிருர்கள். சந்தேகக் கேஸ் என்று போடும்போது குற்றம் செய்யாத நபர்களை எல்லாம் பிடித்துக் கொண்டு போகக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. இதை நீக்கச் சட்டத்தைத் திருத்தியாவது, மத்திய அரசு செய்யாவிட்டால் மாநில அரசாவது தனிப்பட்ட முறையில் உத்தரவு போட்டு சந்தேகக் கேஸ் போடுவதைத் தடுத்து நிறுத்த வேண்டு மென்று கேட்டுக்கொள் கிறேன்.

கிராமப் பகுதிகளில் இரண்டு பேர் ஒரு சைக்கிளில் போனல் சார்ஜ் செய்கிருர்கள். காங்கு கூலியாக வேலை செய்கிறவர்கள் மனைவியையோ, மகனையோ சைக்கிளில் வைத்துக் கொண்டு போனல் 10 ரூபாய் 15 ரூபாய் என்று அபராதம் போடுகிருர்கள். கிராமப் புறங்களில் இரண்டு பேர் சைக்கிளில் போனல் சார்ஜ் செய்வதை நிறுத்த வேண்டும்.





என்னுடைய தொகுதியில் அபிராமம், பேரையூர், கோவிலாங் குளம், கீழத்தூவல், ரெட்டியாபட்டி ஆகிய காவல் நிலையங்களுக்குக் கட்டட வசதி இல்லை. அங்கு கட்டடங்கள் கட்டித் தர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல காவலர்களுக்குக் குடியிருப்புக் கட்டடம் இல்லாத நிலை இருக் கிறது. குடியிருப்புக்கான கட்டடங்களைக் கட்டிக் கொடுத்து காவலர் களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். முதுகுளத்தூர், கமுதி ஆகிய இரண்டு ஊர்களிலும் டிபுடி சூப்பிரன்டென்டென்ட் அலுவ லகம் இருக்கிறது, குடியிருப்பு வசதி இல்லை. அலுவலகம்கூட வாடகைக் கட்டடத்தில் சிறிய கட்டடத்தில்தான் இருக்கிறது. அவர்களுக்குக் குடியிருப்பு வசதி இல்லாத காரணத்தால் அவர்கள் அங்கு வருவதற்குச் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிருர்கள். அவர் களுக்குக் குடியிருப்பு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீயணைப்புத் துறையில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் பணியாற்றுகிருர்கள். 1969-க்குப் பிறகு அது இரண்டாகப் பிரிக்கப் பட்டு செயல்பட்டு வருவது பாராட்டுக்குரியது. தீயணைப்புத் துறை யிலுள்ள தீயணைப் போர் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும். பல பகுதிகளில் தீயணைப்பு நிலையங்களை ஏற்படுத்த வேண்டும். முதுகுளத்தூரில் ஒரு தீயணைப்பு நிலையத்தை ஏற்படுத்தித் தரவேண்டு மென்று அரசையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன். தீயணைப்புத் துறையினர் மதுரையில் ஏற்பட்ட வெள்ளத்தின்போது ஆற்றிய பணிகளுக்காகப் பாராட்டும் பரிசும் கொடுத்திருக்கிருர்கள். அவர்களது பணி சிறக்கும் முறையில் அதிக மான தீயணைக்கும் நிலையங்களை ஆங்காங்கு பரவலாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு மானியங்களை ஆதரித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

* திரு. கே. பி. கோபால்: பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை, தீயணைப்பு மானியக் கோரிக்கைகள் மீது எங்கள் கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

காவல் துறையில் பணியாற்றுகின்ற அதிகாரிகளை அடிக்கடி மாற்றக் கூடாது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

போலீஸ் கமிஷன் என்று அமைத்து அவர்கள் பல பரிவுரைகளை வழங்கியிருக்கிறார்கள். குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகளுக்கு குறிப்பிட்ட இடத்தில் பணி செய்ய அனுமதிக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். ஆனால் அனுபவத்தை வைத்துப் பார்த்தால் அவர்கள் அடிக்கடி மாற்றப்படுகிறார்கள். அவர்கள் தவறு செய்வதால் மாற்றப்படுகிறார்களா அல்லது ஆளும் கட்சிக்குத் திருப்தி தராத காரணத்தால் மாற்றப்படுகிறார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். தவறு செய்தால் டிரான்ஸ்பர் செய்வது பனிஷ்மென்ட் என்று ஆகாது. ஒருசில அதிகாரிகள் எப்படி மாற்றப்பட்டிருக்கிறார்கள் என்று எடுத்துக் கூற விரும்புகிறேன்.

சகாப்தின் என்ற சப் இன்ஸ்பெக்டர் ஆண்டிப்பட்டியிலிருந்து கூடலூருக்கு மாற்றம் செய்யப்பட்டு ஒரே ஒருநாள்தான் பணியாற்றினார். மீண்டும் அந்த உத்தரவு மாற்றப்பட்டிருக்கிறது. அங்கு ஏற்கனவே பணியாற்றிக் கொண்டிருந்த ஆதிமூலம் என்பவர் எங்கு சென்றாரோ, யாரைச் சந்தித்தாரோ உத்தரவை மாற்றம் செய்து அந்த ஊருக்கே வந்து விட்டார்.

அதே போல் நடராஜன் கூடலூர் ஏ.எஸ்.ஐ. பதவி உயர்வு பெற்று ஜனவரி மாதம் தேவாரத்திற்குப் போகிறார், பிப்ரவரி மாதம் எரியோட்டுக்குப் போகிறார். கதிர்வேல் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் சென்ற ஆண்டு ஏப்ரல் மாதம் உத்தமபாளையம் வருகிறார். இரண்டு மாதங்கள் பணியாற்றுகிறார்; உடனே மாற்றப்பட்டு விடுகிறார்கள். அதற்கு அடுத்து பூபதி என்ற அதிகாரி வருகிறார். அதிகாரிகள் தவறு செய்கிறார்கள் என்று இப்படி மாற்றப்படுகிறார்களா? அப்படித் தவறு செய்தால் தயவு செய்து அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் மாறுதல்களைத் தவிர்க்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம் மதிப்பிற்குரிய முதல்வர் அவர்கள் பலமுறை கூறியிருக்கிறார்கள். அதிகாரிகள் அனைவரும் தவறு செய்யாதவர்கள் அல்ல, தவறை எடுத்துக் கூறினால் அதைத் திருத்துவதற்கு என்னாலான முயற்சிகளையெல்லாம் நான் செய்வேன் என்று கூறியிருக்கிறார்கள். அந்த முறையில் காவல் துறையில் சில தவறுகள் நடைபெறுகின்றன என்பதை மதிப்பிற்குரிய சௌடி சுந்தர பாரதி அவர்கள் கூட அவர்களுடைய 676-வது வெட்டுப் பிரேரணையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.



போலீஸ் கமிஷன் ரிப்போர்ட்டில் கூட முதல் பாகம் 211வது பக்கத்தில் இதுபற்றிக் கூறப்பட்டிருக்கிறது. காவல் துறையினர் தவறு செய்து அது மேல் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டால் காவல்துறையில் பணியாற்றுகிறவர்கள் நலன் கருதி அவர்கள் செய்யும் தவறுகளை மறைக்க முயற்சிக்கிறார்களே தவிர தவறை அரசுக்கு எடுத்துச் சொல்லி அந்தத் தவறைத் தடுக்க எந்த விதமான முயற்சியும் எடுக்கவில்லை என்றிருக்கிறது.

மிகுந்த வேதனையோடு சொல்கிறேன். 6—3—73 உத்தமபாளையம் தாலுகா கூடலூரில் 14 அரிசன கிருஸ்தவர்கள் ஒரு மனுக் கொடுத்தார்கள். அந்தப் பகுதியில் இருதரப்பாருக்கும் இடையே ஏற்பட்ட சண்டையில் ஒரு வசதி மிக்கவர், அந்தப் பக்கம் நல்ல செல்வாக்கு மிக்கவர் ஒரு மனுக் கொடுக்கிறார். இவர்களால் ஒரு கவுண்டர் பெட்டிஷன் என் முன்னிலையில் கொடுக்கப்பட்டது. இப்போது நான் கேள்விப்படுவது எதிர் மனுவே கொடுக்கவில்லை என்று கூறுவதாகக் கேள்விப்படுகிறேன். இதை நான் மிகுந்த பொறுப்புணர்ச்சியோடும் வருத்தத்துடனும் தலைவர் அவர்களே, தங்கள் மூலம் மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நான் இதுபற்றி முதல்வர் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் 27—9—73-ம் தேதியில் அவர்கள் பெயரில் தபால் எழுதினேன். ஆனால் இதுவரையில் அந்தக் கடிதத்தின் மீது ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா என்று தெரியவில்லை. நான் மிகைப்படுத்திக் கூறுகிறேனா அல்லது உண்மைக்குப் புறம்பாகக் கூறுகிறேனா என்று விசாரியுங்கள். அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டவர்கள் தவறு செய்திருக்கிறார்களா என்று விசாரியுங்கள். நான் அதை மிகைப்படுத்தியிருக்கிறேன் என்றால் அப்படி உங்களுக்கு அறிக்கை வந்தால் அந்த அறிக்கை எந்த நிமிடம் வருகிறதோ அந்த நிமிடமே நான் என் பதவியை ராஜினாமாச் செய்வேன் என்று பொறுப்புணர்ச்சியுடன் கூறிக்கொள்கிறேன்.

வழக்குகள் நடத்துவதில் உள்ள காலதாமதங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதும் கமிஷனின் ஒரு அறிவுரையாகும்.

தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி செயலாளர் திரு. ராமமூர்த்தி மீது 18—2—73 ஒரு பொதுக்கூட்டத்தில் நடந்த சம்பவத்தையொட்டி எட்டு மாதங்கள் கழிந்து 30—10—73-ல் வழக்கு போடப்பட்டிருக்கிறது. எட்டு மாதங்கள் கழிந்து வழக்குப் போடப்பட்டும் 16 வாய்தாக்கள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

[திரு. கே. பி. கோபால்] [1974 மார்ச் 23

கம்பத்தில் 23—6—73-ல் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. சென்ற மாதம் தான் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. ஏலத் தோட்ட உரிமையாளர்கள் சங்கத்திலிருந்து அரிசி மூட்டைகளை பொது மக்களுக்கு விநியோகம் செய்ய வேண்டுமென்று விரும்பினார்கள் என்று அறிக்கையில் உள்ளது. அவை ஏலத் தோட்ட உரிமையாளர்கள் சங்கத்திற்கு எப்படிச் சென்றது என்று விளக்கம் இருந்தால் நல்லது. முதல் நாள் எட்டு மணியிலிருந்து காலை ஐந்து மணி வரை பொறுப்புணர்ச்சியோடு இருந்தார்கள். ஆகவே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் அந்த வழக்குகளை வாபஸ் பெற வேண்டும்.

ஏலத் தோட்ட உரிமையாளர்கள் என்று சொல்லும்போது தேவிகுளம் பீர்மேடு பிரச்னை வருகிறது. உத்தமபாளயம், பெரியகுளம் தாலூக்காக்களில் ஏலத் தோட்ட உரிமையாளர்கள் மட்டுமல்ல, தமிழ் தொழிலாளிகளும் தேவிகுளம், பீர்மேடு பகுதிகளில் பணியாற்றுகிறார்கள். ஏலத் தோட்ட உரிமையாளர்கள் குழு ஒன்று முதல் அமைச்சர் அவர்களைச் சந்தித்தது. நானும், மேலவை உறுப்பினர் மதிப்பிற்குரிய குன்றக்குடி அடிகளாரும், திரு. லத்திப் அவர்களும் சந்தித்தோம். ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கூடக் கொண்டுவரப்பட்டது. அது ஒரு தொழில் பிரச்சனை என்று கூறினாலும் என் குற்றச்சாட்டு ஸி.ஐ.டி. பிரிவினரை வைத்து உண்மை நிலையை அறியத் தவறிவிட்டார்கள்.

மதிப்பிற்குரிய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள். ஸி.ஐ.டி. பணியில் தமிழ்நாட்டிலுள்ள ஸி.ஐ.டி. பிரிவினர் மிகச் சிறந்தவர்கள் என்று. ஆகவே அவர்களைக் கொண்டு விசாரித்தால் உண்மை நிலை தெரியவரும். அடுத்த ஆண்டில் இது போன்ற நிலைமைகள் ஏற்படக் கூடாது.

அரசியல் தலையீடு பற்றி போலீஸ் கமிஷன் குறிப்பிட்டுள்ளது. எனக்கு வரும் செய்தியை வைத்துச் சொல்கிறேன். அது எந்த அளவிற்கு உண்மை என்பதை முதல் அமைச்சர் அவர்கள் நன்கு விசாரிக்க வேண்டும். 3—8—73 இரவு 10 மணிக்கு எஸ். எஸ். ஆண்டி என்ற சுருளியாண்டி என்பவர் உத்தமபாளையம் வட்டச் செயலாளர் அவர்களையும், அவரது மகனையும் அடித்ததாகப் போலீஸில் புகார் மனு கொடுக்கப்பட்டது. எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கம்பத்தில் 12—3—74 அன்று சந்தேகப்படும் சூழ்நிலையில் குப்புசாமி என்பவர் இறந்ததாகக் கூறப்



1974 மார்ச் 23] [திரு. கே. பி. கோபால்]

படுகிறது. இதில் அரசியல் பின்னணி இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த குப்புசாமி என்பவர் திண்டுக்கல் தேர்தலில் தீவிரமாகப் பணியாற்றியவர், நல்ல உடல் வலிவு உள்ளவர்கள் என்றும் கூறப்படுகிறது. எனவே அதுபற்றி விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தீ விபத்துக்கள் பற்றி ஒரு வார்த்தை கூறி முடித்துக்கொள்கிறேன். குடியாத்தம், தேனம்பட்டு விபத்துகளோடு 7—2—74ல் கம்பம் தொகுதியில் கூடலூரில் எண்பது வீடுகள் தீக்கு இரையாகி ஒருவர் இறந்தார். 80 ரூபாய் கொடுத்தாலும் இறந்தவர்க்கு முதல் அமைச்சர் நிதியில் இருந்து ஏற்பாடு செய்வதாக மாவட்ட ஆட்சித் தலைவர் உறுதியளித்தார்கள். அந்தப் பணம் போய்ச் சேர்ந்ததாகத் தெரியவில்லை. தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படும் தொகை போதாது.

குடியாத்தத்தில் தீயணைப்பு வண்டிகள் சரியாக இல்லை என்று சொன்னார்கள். ட்ரெயிலர் பம்ப் என்று சொல்கிறார்கள், எனக்கு அது புரியவில்லை. அவை பழையனவாக இருக்கின்றன. பின்னர் கிராமப்புறங்களில் தீ விபத்து ஏற்பட்டால் அணைப்பதற்குத் தண்ணீர் வசதி இல்லாது போய்விடுகிறது. எனவே, கிராமங்களில் குளங்கள் ஆக்கிரமிப்புச் செய்வதைத் தடுத்தால் அவற்றில் இருக்கும் தண்ணீர் தீ அணைப்பதற்குப் பயன்படும் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவர் அவர்களே, இன்றையதினம் நாலரைக் கோடி தமிழ் மக்களுக்கு அவர்களுடைய உரிமைகளையும் உயிர்களையும் பாதுகாத்துத் தருகிற தளநாயகராகத் திகழும் தமிழ்க் குடியினுடைய தலைவர் இந்த நாட்டினுடைய முதல்வராக இருக்கிற கலைஞர் அவர்கள் இன்றையதினம் இந்த மானியக் கோரிக்கையைக் கொண்டுவந்ததை மனப்பூர்வமாக வரவேற்று சில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.

திறமைக்குப் பெயர் போன போலீஸ் பிரிவின் தனிச் சிறப்பை வழிவழியாக வகுத்துக் காட்டுகிற சரித்திரப் புகழை தமிழ்நாடு நிலைநாட்டிக் காட்டியிருக்கிறது என்று சொன்னால் அது மிகவும் போற்றுதற்குரியது. அதை ஆளும்கட்சியைச் சார்ந்த என்னைப் போன்றவர்கள் சொல்வதைக் காட்டிலும் எந்த மானியமாக இருந்தாலும் இந்தச் சபையில் அவற்றை எதிர்த்துப் பேசி பழக்கப்பட்ட என் மரியாதைக்குரிய திரு. தங்கமணி அவர்கள் இந்தப் போலீஸ்

மானியத்தை வரவேற்பதுபோல் பேசியது உள்ளபடியே இந்த போலீஸ் நிர்வாகத்தின் தனிச்சிறப்பை, தனித் தன்மையை, தனிப் புகழை விளக்க அது ஒன்றே போதும். இன்றையதினம் உலக நாடுகளுள் போலீஸ் பிரிவில் ஜெர்மனி சிறந்த நாடு என்றும் இங்கிலாந்து சிறந்த நாடு என்றும் சொல்லப்படுகிற வரிசையில் அதற்கு ஈடு கொடுக்கிற முறையில் இந்தியத் துணைக்கண்டத்தில் தமிழ்நாடு போலீஸ் துறையினர்தான் திறமையானவர்கள், திறமையோடு பணியாற்றக் கூடியவர்களாக இருக்கிறார்கள் என்ற புகழை தமிழ்நாடு எடுத்திருக்கிறது என்று சொல்லும்போது திறமையோடும் சுறுசுறுப்போடும் பணியாற்றுகிற நம் முதல்வர் அவர்கள், அவர்களது சுறுசுறுப்பிற்கு ஏற்றவாறு, அவர்களது சுறுசுறுப்பான பணிகளுக்கு ஏற்றவாறு தமிழ்நாடு போலீசும் ஈடுகொடுக்கிற அளவில் அதற்காகக் கோருகிற தொகையை வழங்க தமிழ்நாடு மக்கள் மறுக்கமாட்டார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டத்தையும் ஒழுங்கையும் உயிராக மதித்துச் செயலாற்றும் தன்மைதான் இன்றையதினம் தமிழ் நாட்டில் இருக்கிறது என்று நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சட்டமும், ஒழுங்கும் எவ்வளவு நேர்த்தியாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது, பராமரிக்கப்பட்டு வருகிறது என்று எண்ணிப் பார்க்கிறபோது, அண்மை மாநிலங்களில் பார்க்கிறோம், ஓயாமல் ஒலித்துக் கொண்டிருக்கும் துப்பாக்கிச் சத்தங்களைக் கேட்கிறோம், ஓயாமல் தடியடிப் பிரயோகங்களைக் கேட்கிறோம். ஓயாமல் கண்ணீர்ப் புகைகளைக் காண்கிறோம், அவையெல்லாம் இல்லாதவாறு, ஓரளவு தவிர்த்து இன்றையதினம் செம்மையாக, சிறப்பாக போலீஸ் நிர்வாகம் நடைபெறுகிறது என்றால் இந்த நாட்டு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நாட்டு மக்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்ற வேண்டுகோளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திறமைக்குப் பெயர் போனது, புகழுக்கு உரிய சான்றை சரித்திரப் புகழோடு இணைத்துக் கொண்டிருக்கிறது போலீஸ் இலாக்கா. யாரும் குறை சொல்ல முடியாது. மாற்றுக் கருத்துக் கொண்டவர்களும் அதை ஏற்றுக்கொள்ளச் செய்வார்கள், ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

அந்த வகையில் குறிப்பாக சென்னை மாநகரத்தைப் பொறுத்த வரையில், இந்தச் சென்னையில் ஆளாகிவிட்டவன் என்ற காரணத்திற்காகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்னையைப் பொறுத்த



வரையில் அன்றாடம் ஒரு பிரச்னையை இந்த சென்னை நகர ஆணையர் அவர்கள் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எப்படிச் சிந்தித்துத் திறமையாக செயலாற்றுகிறார்கள் பணியாற்றுகிறார்கள் என்று சொல்கிற நேரத்தில் சென்னையைப் பொறுத்தவரையில் சென்னை ஆணையரை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட நிர்வாகம் நடத்துகிற முதலமைச்சர் அவர்களின் நிர்வாகத் திறமையைப் பாராட்டிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னையைப் பொறுத்த வரையில் சென்ற ஆண்டு துப்பாக்கிப் பிரயோகம் இல்லாத அளவுக்குச் சிறப்பை உருவாக்கித் தந்து இருக்கிறார்கள். இதைப் பார்க்கிற நேரத்தில் பாராட்டாத மனம் படைத்தவர்களே இருக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன். துப்பாக்கிப் பிரயோகம் மட்டுமல்ல, தடியடிப் பிரயோகம் உண்டா என்றால் அது கூட இல்லை என்று சொல்கிற அளவுக்குச் சிறப்பான பணியை சென்னையில் ஆற்றிக் காட்டியிருக்கிறார்கள்.

உண்மையிலே எண்ணிப் பார்க்க வேண்டும். சிம்சன் பிரசனை, இதனால் இந்த ஆட்சியே அழிந்து விடும் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். அவற்றையெல்லாம் பொய்யாக்குகிற விதத்தில் சிம்சன் விவகாரத்தை நல்லமுறையில் தீர்த்து வைத்துப் பண்பை, பெருமையை நிலைநாட்டிக் காட்டியிருக்கிறார்கள். அதற்காகப் போலீஸ் துறையைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

சிறந்த பொறுப்பை ஆற்றுகின்ற அவர்களுக்குப் பாதுகாப்புத் தருவது அரசின் கடமையாகும். நாட்டிலே வாழும் மக்களுக்கு அவர்கள் பாதுகாப்புக் கொடுக்கிறார்கள் என்றால், நாட்டை ஆளும் அரசுதான் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். அந்தச் சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அதை எண்ணிப் பார்க்கிறபோது தான் சில போலீஸ்காரர்கள் சமூக விரோதிகளால் தாக்கப்படுகிறார்கள். அப்படித் தாக்கப்படுகிறபோது, அவர்கள் குடும்பத்திற்கு சொற்ப பணம் தான் கொடுக்கிறார்கள். சமூக விரோதிகளால் பாதிக்கப்படும் போலீஸ்காரர்களின் குடும்பத்திற்கு, நம்முடைய அரசு அவர்களுடைய குடும்ப நல நிதியிலிருந்து ரூ. 50,000 தந்தாக வேண்டும் என்பதை முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[திரு. வை. பாலசுந்தரம்]  [1974 மார்ச் 23

போலீஸ் இலாக்காவிற்கு ஒதுக்கப்படும் தொகை மிகவும் குறைவு எதிர்க்கட்சித் தலைவர்கள் போலீஸ்காரர்களின் சம்பளம், படி எவ்வாறு இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதை நெஞ்சில் வைத்துக் கொண்டு தான் இன்று அனைத்து இந்தியாவிலும் உள்ள போலீஸ்காரர்களுக்குத் தரப்படுகிற சம்பளங்களைக் காட்டிலும் நமது மாநிலத்தில் அதிகம் இருக்கிறது என்பதை நன்றியுடையவர்கள் மறுக்க மாட்டார்கள், மறைக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

இன்று இந்த மானியத்தின் மீது பேசும்போது ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். போலீஸ்காரர்களுக்கு நல்ல சலுகை தர வேண்டும். அவர்கள் செய்யும் வேலைக்கு அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் போதாது. நாட்டின் தொண்டு, பணி என்ற முறையில் அவர்கள் பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். அவர்கள் செய்கிற பணியை எண்ணிப்பார்க்கிறபோது, நம்முடைய தமிழக அரசு போலீஸ் இலாகாவிற்குக் குறைந்த செலவைச் செய்கிறது. மற்ற மாநிலங்களில் இருப்பதை விடக் குறைந்த செலவைச் செய்கிறது. ஆனால் போலீஸ் இலாக்காவின் பணியைப் பாக்கிறபோது நாம் செலவு செய்கிற தொகைக்கு இரட்டிப்பாக அவர்கள் பணி இருக்கிறதென்று சொன்னால் மிகையாகாது. குறைந்த செலவில் சிறப்புப் பெற்று இருக்கும் இந்த நிர்வாகம் உண்மையிலேயே பாதுகாக்கப்பட வேண்டியது, பாராட்டப்பட வேண்டியது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நாம் வெளி மாநிலங்களைப் பார்க்கிற நேரத்தில் மத்திய போலீஸ் வந்தது என்று பத்திரிக்கையில் பார்க்கிறோம். கலவரங்களை அடக்க ராணுவம் வந்தது என்று பார்க்கிறோம். அப்படிப்பட்ட அவல நிலை வெளி மாநிலங்களில் இருக்கிறபோது, அப்படிப்பட்ட சூழ்நிலைக்கு இங்கே இடம் கொடுக்காத அளவுக்கு இன்றையதினம் திறமையான முறையில் இந்த இலாக்கா பணியாற்றிக் கொண்டிருப்பதற்கு உள்ளபடியே நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்தவரையில் குறிப்பாக சென்னையில் ஒரு 5 ஆண்டுக் காலத்திற்கு முன்பு தீ விபத்துகள் அதிகமாக இருந்தன. எங்கே பார்த்தாலும் தீயின் கொடுமை. அந்தச் சமூக விரோதச் செயல்களுக்கு உட்பட்ட எங்கே பார்த்தாலும் இப்படிப்பட்ட நிலைமை இருந்ததைப் பார்த்தோம். கடந்த வாரம் குடியாத்தத்தில் தீ விபத்து ஏற்பட்டிருக்கிறது.



1974 மார்ச் 23]  [திரு. வை. பாலசுந்தரம்]

நான் உறுப்பினராக இருந்த கலைக்கப்பட்ட மாநகராட்சி மன்றத் தின்—103-வது வட்டத்தில் நேற்று பயங்கரமான தீ விபத்து ஏற்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட அந்த இடத்திற்கு வந்து பார்வையிட்டு, கண் கலங்கி அந்த மக்களுக்கு ஆறுதல் சொன்னார்கள். நான் கேட்டுக் கொள்வதெல்லாம் நேற்றையதினம் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக அங்கே 3 வயதுக் குழந்தை ஒன்று இறந்து விட்டது. அதற்கு முதலமைச்சர் நிதியில் இருந்து ஏதாவது தரவேண்டுமென்று வேண்டுகோளாக நான் இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் தீ விபத்துகள் எந்தக் காரணங்களினால் ஏற்படுகின்றன என்பதைக் கண்டறிய வேண்டும். ஏதோ ஒரு இடத்தில் ஏதோ ஒரு முறை தீ ஏற்பட்டால் அது விபத்து என்று எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அடிக்கடி இப்படி ஏற்படுகிறது.

போலீஸ் இலாக்கா அது சாமி சிலை திருட்டா, உடனடியாகக் கண்டுபிடித்து விடுகிறார்கள். கள்ளநோட்டு அச்சடிப்பா, அதை உடனடியாகப் புலன் ஆய்ந்து விடுகிறார்கள், அப்படிப்பட்ட திறமை வாய்ந்த போலீஸ் இலாக்கா இந்த தீ விபத்து எப்படி ஏற்படுகிறது, அதனுடைய மர்மங்கள் என்ன என்பதையும் தயவு செய்து கண்டிப்பாக கண்டுபிடிக்க வேண்டுமென்று வேண்டுகோளாக இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

எந்த மாநிலத்தில் நக்சலைட் தொல்லை இருந்தாலும், தீவிரவாதிகள் இருந்தாலும், தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் இல்லை என்ற தன்மை இருக்கிறது. இப்படிப்பட்ட தீ விபத்துகளுக்கு நாக்சலைட்காரர்கள் வேலை இருக்குமோ என்று ஐயுற வேண்டியிருக்கிறது. அதைக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போலீஸ் இலாக்கா சிறப்பான முறையில் பணியாற்றி வருகிறது என்று சொல்கிறநேரத்தில், சென்னை—கோவை நகரத்தில் திருட்டுப் போன 60,000 பெறுமான சொத்துக்களைக் கைப்பற்றியது மட்டுமல்லாமல், குற்றவாளிகளும் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள், அதே மாதிரி 2-ம் தேதி மாம்பலம்—கோடம்பாக்கத்திலே ஏறத்தாழ 50,000 ரூபாய் களவாடப்பட்டதை உடனடியாகக் கண்டுபிடித்து, குற்றவாளிகளையும் கைது செய்து இருக்கிறார்கள். சென்னை தேனாம்பேட்டையில் சிலை திருட்டுப் போனது பெரிய பரபரப்புச் செய்தியாக இருந்தது. அதை உடனடியாகக் கண்டுபிடித்து இருக்கிறார்கள்.

இப்படிப் போலீஸ் இலாக்கா பல வகைகளில் பெருமையோடும், பூரிப்போடும் பணியாற்றி வருகிறது என்று கூறிக்கொண்டு, தயவு செய்து ஒன்றே ஒன்றை மட்டும் கூறி முடித்து விட விரும்புகிறேன்.

குலத்தைப் பற்றிச் சொல்லுகிற நேரத்தில், உண்மையிலேயே என்னைப்போல் தாழ்த்தப்பட்ட குலத்தில் இருப்பவர்கள் தலை குனிந்து நிற்க வேண்டும். ஏற்றத்தாழ்வு ஒழிய வேண்டும், சமத்துவம் வளரவேண்டுமென்று நாம் சொல்லிக் கொண்டிருக்கிற நேரத்தில், இன்னும் இழி குலம் என்று பேசக்கூடியவர்கள் இந்த மன்றத்தில் இருக்கிறார்கள், அப்படிப் பேசியிருக்கிறார்கள் என்று பார்க்கிற நேரத்தில் உள்ளபடியே இந்த நாட்டு மக்கள் அதைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறார்கள், எந்தவகையில் செயலாற்ற வேண்டுமோ அப்படிச் செயலாற்றுவார்கள் என்று கூறி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த இந்த மானியத்தை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைய நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவுற்று, திங்கட்கிழமை காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## 4. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. Statutory Rules and Orders

199. Noifiation issued with G.O. Ms. No. 4514, Revenue, dated the 27th July 1973, in regard to certain amendments to the Tamil Nadu Urban Land Tax Rules, 1966. [Laid on the table of the House under section 45 (2) of the Tamil Nadu Urban Land Tax Act, 1966 (Tamil Nadu Act 12 of 1966).]

200. Notification issued with G.O. Ms. No. 2653, Rural Development and Local Administration, dated the 27th November 1973 in regard to variations of the list of play-fields in the area within the jurisdiction of the Thanjavur Municipality. [Laid on the table of the House under section 14 (3) of the Tamil Nadu Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Tamil Nadu Act XXVI of 1959).]



## இணைப்பு -I

(824-ம் பக்கத்தில் 580 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.)

### *Constitution and functions of the Tamil Nadu State Board for salt and allied chemicals*

The Government of Tamil Nadu have been considering for some time past the ways and means of angmenting salt production in the coastal taluks of the State and the export of salt to foreign countries. Salt produced in the State meets the domestic requirements of this State, part of Kerala, Mysore and the industrial requirements of Caustic Sode factories, Soda Ash factories, etc. High grade quality salt is not only in high demand in foreign countries but forms the basis for setting up marine and chemical industries. To have systematic survey of areas for salt cultivation, to suggest specific points for action, to estimate the scope for expansion of production capacity of the existing factories and setting up of new ones, and to consider other allied matters, the Government decided to Constitute the Tamil Nadu State Board for Salt and Allied-Chemicals on a non-statutory and advisory basis composed as follows :—

| | |
|---|---|
| Minister for Industries ... ... | Chairman. |
| Thiru R. V. Ramani, Managing Director, Messrs, Mettur Chemical and Industrial Corporation Limited. ... ... | Vice-Chairman. |
| Director of Industries and Commerce, Madras ... ... ... | Secretary |

*Members :*

1. Secretary to Government, Industries Department.
2. Secretary to Government, Public Works Department.
3. Secretary to Government, Finance Department.

201. Notification issued with G.O. Ms. No. 1011, Revenue, dated the 7th March 1974 in regard to appointment of Thiru S. Swamikannu, District and Sessions Judge, Salem to be the Chairman of the Sales Tax Appellate Tribunal, Madras. [Laid on the table of the House under section 53(5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

202. Notification issued with G.O. Ms. No. 2329, Rural Development and Local Administration, dated the 26th October 1973 in regard to revised list of all the play-fields and open spaces set out in the area within the jurisdiction of the Mettupalayam Municipa Council. [Laid on the table of the House under section 14(3) of the Tamil Nadu Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Tamil Nadu Act 26 of 1959).]

203. Notification issued with G.O. Ms. No. 2282, Agriculture dated the 15th November 1973 in regard to establishment of market at Sankarapuram in South Arcot district to provide facili ties for the purchase and sale of groundnut, gingelly, paddy, etc [Laid on the table of the House under section 29 (4) of the Tam Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Ac 23 of 1959).]

*B. Reports, Notifications and Other Papers.*

@ 101. Review on Tamil Nadu Fire Service Department 1973 74. (English and Tamil).

@ 102. The Tamil Nadu Motor Vehicles Taxation Bill, 197 (L.A. Bill No. 10 of 1974).

---

@ Despatched to Members on 21st March 1974.



(2) providing technical assistance for the improvement of quality of salt;

(3) Export of salt to foreign countries and allied matters;

(4) Road development works in salt areas;

(5) Bringing patches of land under full utilisation for the storage and condensation of brine;

(6) Starting salt-based marine chemical industries;

(7) Starting small-scale industries for manufacture of varieties of salt like salt, etc.

(8) Examination of Thiru M. M. Gurunath's report on salt and salt-based marine chemicals and recommendations.

(9) Intensification of research work both on salt production and modernisation of salt works.

4. The Board will have its headquarters at Madras and meet at least once a quarter. The members may tour within the State for the purposes of assessing the scope for increase in the salt production capacity in this State and the potentialities of different places in connecion with setting up of new salt works and salt-based industries.

5. To assist the State Board on the technical side, the Government have decided to appoint Thiru M. M. Gurunath, Consultant on Salt and Marine Chemical Industries, Madras, as Part-time Technical Consultant to the Board for a period of two years, to start with, subject to the condition that fees payable, terms and conditions, etc., for feasibility and project studies and for specific assignments will be decided by the Government, from time to time.

6. To pursue follow-up action after the Board's meetings ecectively the Government have also appointed a full time Deputy Secretary to the Board in the grade of Rs. 800—40—1,000—50—1,250 per mensem.

7. The Board will be treated as a First Class Committee for the purpose of Travelling Allowance. The Director of Industries and Commerce will be the counter signing officer for the Travelling Allowance bills of non-official members.

Members

4. Secretary to Government, Transport Department.

5. Deputy Salt Commissioner, Shastri Bhavan, Madras.

6. Chief Marketing Manager, Chemicals Division, State Trading Corporation, Express Buildings, Bahadur Shah Zaffar Marg. New Delhi-1. ... or his nominee.

7. The Chairman, Port Trust, Madras-1.

8. The General Manager, Southern Railways. ... or his nominee.

9. State Port Officer, Madras-1.

10. Technical Consultant (Salt), Messrs. Gurunath & Sons, No. 3, Lakshmana Chettiar Street, T. Nagar, Madras-17.

11. Thiru C. I. R. Machado Member, Tuticorin Salt Merchants and Licensees Association, Tuticorin. (Representative of the Salt Manufactures Association.

12. Chief Engineer and Administrator, Tuticorin Harbour Project, Tuticorin.

2. The Director of Industries and Commerce, Madras, the Secretary of the Board, will be the convenor of the Board.

3. The functions of the State Board for Salt and Allied Chemicals will be to consider and advise the Government on all matters of policy regarding the following :—

(1) Planning and setting up major salt works in contiguous areas to provide facilities for small units and absorb them ultimately;



## இணைப்பு II.

[864 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைச் காண்க.]

# தமிழ்நாடு காவல் துறை

## 1973-74-ஆம் ஆண்டின் ஆய்வுரை.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட, ஆற்றல் படைத்த காவற்படை இன்றியமையாததாகும். நாட்டின் மிகச் சிறந்த திறமைசால் காவற்படை தமிழ்நாட்டின் காவற்படையே என்கிற நற்பெயரையும், புகழையும் தமிழ்நாட்டுக் காவல்படை இடைவிடாது பாதுகாத்து வந்துள்ளது. தற்போதுள்ள காவற்படையின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டிருக் கின்றன.

### படைக்கலம் தாங்கிய காவற்படை அணிகள்.

தமிழ்நாட்டில் படைக்கலம் தாங்கிய காவற்படை அணி கள் ஐந்து உள்ளன. இவற்றில் ஓர் அணி இந்திய அரசுக்கு முகமையில் அனுப்பப்பட்டு, அது, 1973, ஆகஸ்டில் தமிழ் நாட்டிற்குத் திரும்பியது. தமிழ்நாடு சிறப்புக் காவற் படையின் ஓர் அணி திருப்பி அனுப்பப்பட்ட பின்னர், 1973, செப்டம்பர் முதல் நாளிலிருந்து மாநில எல்லையிலுள்ள உணவுப்பொருள் வழங்கல் துறையின் சோதனைச் சாவடிகளில் பணிபுரியுமாறு அனுப்பப்பட்டது. ஐந்து அணிகள் அவற்றிற்கு நிகராகக் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன :—

### தமிழ்நாடு சிறப்புக் காவற்படை.

முதல் அணி—திருச்சிராப்பள்ளி.

இரண்டாம் அணி—ஆவடி.

மூன்றும் அணி—மணிமுத்தாறு.

நான்காம் அணி—கோவைபுதூர் (கோயம்புத்தூர்).

ஐந்தாம் அணி—ஆவடி.

### பயிற்சியும் பணிக்கேற்ற ஆள் திரட்டலும்.

ஐ.பி.எஸ். இளநிலை அதிகாரி ஒருவர், அவருக்கான நடைமுறைப் பயிற்சியை முடித்த பின்னர், ஒரு மாவட்டத் தில் காவல் துறை உதவி சூப்பிரண்டெண்டாக நியமிக்கப்

பட்டார். பிறிதொரு ஐ.பி.எஸ். இளநிலை அதிகாரி தற்
போது பயிற்சி பெற்று வருகிறார். நேரடி நியமனம் பெற்,
(முதல் நிலை) காவல் துறை டெபுடி சூப்பிரண்டு ஒருவரும்
துறையளவில் தகுதிகாண் பருவத்திலுள்ள மற்றொரு காவ
துறை டெபுடி சூப்பிரண்டும் பயிற்சி பெற்று வருகின்றனர்
நடைமுறைப் பயிற்சி முடித்த பின்னர் அவர்கள் துணை
கோட்டங்களில் நியமிக்கப்படுவர். நேரடி நியமனம் மூல
தமிழ்நாடு காவல் துறை பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்
காவல் துறை டெபுடி சூப்பிரண்டுகள் (முதல்நிலை) நால்வரு
நேரடி நியமனம் மூலம் சேர்த்துக்கொள்ளப்பட்ட இளநி
ஐ.பி.எஸ். அதிகாரிகள் மூவரும் வேலூரிள்ள காவல
பயிற்சிக் கல்லூரியில் தற்போது பயிற்சி பெற்று வருகின்றன

1973 ஆம் ஆண்டில், நேரடி நியமனம் மூலம் பணிக்
எடுத்துக் கொள்ளப்பட்ட 184 சப் இன்ஸ்பெக்டர்கள்
வேலூர், காவலர் பயிற்சிக் கல்லூரியில் ஓராண்டுப் பயிற்
பெற்று வருகின்றனர். இவர்கள் 1974, அக்டோபர் திங்க
அளவில் பயிற்சியை முடிப்பர். 1973ஆம் ஆண்டில் ஏம
காவல் படை சப்-இன்ஸ்பெக்டர்கள் 63 பேர் நேரடியா
நியமிக்கப்பெற்று, ஆவடியிலுள்ள தமிழ் நாடு சிறப்புக் காவ
படை, இரண்டாவது அணியின் ரெஜிமென்டல் நிலையத்தி
ஓராண்டுப் பயிற்சி பெறுவதற்காக அனுப்பப்பட்டனர்
அவர்கள், 1974, டிசம்பரில் அவர்களது பயிற்சியை முடிப்பர்

சென்னை மாநகரக் காவல் துறையில் பெண்கள் பி
வொன்றை (Woman Police Wing) அரசு ஏற்படுத்தியுள்ளது
இதற்கென்று நியமனம் பெற்ற காவல் துறை பெண்
சப்-இன்ஸ்பெக்டர் ஒருவரும், பெண் காவலர்க
இருபத்தி ஒன்று பேர்களும்; சென்னை, கீழ்ப்பாக்கத்திலுள்
காவலர் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

**கல்கத்தா, ஐதராபாத் ஆகிய இடங்களில் உள்ள மத்தி
புலனாய்வுப் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெறுதல்.**

ஆய்வாண்டில், கல்கத்தாவில் உள்ள மத்தியப் புலனாய்வு
பயிற்சிப் பள்ளியில் புலனாய்வுக்குத் தொடர்பான அறிவிய
நுட்பக் கருவிகளிலும், மேம்பாடான புலனாய்வு முறை
களிலும் பதினான்கு வாரங்கள் பயிற்சி பெறுவதற்கா
தமிழ்நாட்டைச் சேர்ந்த நான்கு சப்-இன்ஸ்பெக்டர்கள்
முகமையில் அனுப்பப்பட்டனர். ஐதராபாத், மத்திய
துப்புத் துலக்கும் பயிற்சிப் பள்ளியில் இது போன்ற பயிற்
பெறுவதற்காக ஆறு சப்-இன்ஸ்பெக்டர்கள் கொண்ட ம
றொரு தொகுதி அனுப்பப்பட்டது



**தமிழ்நாடு சட்டஞ்சார்ந்த அறிவியல்-இரசாயன ஆய்வுக்
கூடம்.**

முன்னாள் தமிழ்நாடு சட்டஞ்சார்ந்த அறிவியல் ஆய்வுக்
கூடத்தையும், தமிழ்நாடு இரசாயனப் பரிசோதகர் ஆய்வுக்
கூடத்தையும் இணைத்து 1–3–1973 முதற்கொண்டு தமிழ்
நாடு சட்டஞ்சார்ந்த அறிவியல்-இரசாயன ஆய்வுக் கூடம்
தோற்றுவிக்கப்பட்டது. இணைக்கப்பட்ட இந்த ஆய்வுக்
கூடத்தின் இயக்குநராக காவல் துறை இன்ஸ்பெக்டர்
ஜெனரல் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த ஆய்வுக் கூடம்
கீழ்க்கண்ட பிரிவுகளைக் கொண்டு சீரமைக்கப்பட்டுள்ளது:—

1. எறிபடைப் பிரிவு (Ballistics).
2. உயிரியல் பிரிவு (Biology).
3. இரசாயனப் பிரிவு (Chemistry).
4. ஆவணப் பிரிவு (Documents).
5. பௌதீகப் பிரிவு (Physics).
6. ஆராய்ச்சிப் பிரிவு (Research).
7. குருதி வடிநீர் இயல்பிரிவு (Serology).
8. நச்சூட்டாய்வியல் பிரிவு (Toxicology).

தற்போது இந்த ஆய்வுக் கூடத்தில், இயக்குநரைத் தவிர
கூட்டு இயக்குநர்கள் இருவர், உதவி இயக்குநர்கள் 11 பேர்,
ஏனைய வகைகளைச் சேர்ந்த பணியாளர்கள் 128 பேர்
ஆகியோர் பணியாற்றி வருகின்றனர். இவற்றில்
93 பதவிகள் தொழில் நுட்பப் பதவிகள் ஆகும். குற்றப்
புலனாய்வு வகையில் எல்லா வகையான காட்சிப் பொருள்
களையும் (Material Objects) பரிசோதனை செய்யும்
பணியை இந்த ஆய்வுக் கூடம் மேற்கொண்டு, குற்றப் புல
னாய்வின் தொடக்க நிலைகளிலேயே புலனாய்வு அதிகாரிகளுக்கு
இயன்ற உதவிகளனைத்தையும் செய்து வருகிறது. இந்த ஆய்
வாண்டில் ஐந்து அறிவியல் உதவியாளர் பதவிகளை ஏற்படுத்த
அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. மாவட்ட இயலூர்தி
ஆய்வுக் கூடங்களில் தற்காலிகமாகப் பணியாற்றி வந்த
காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர்களுக்குப் பதிலாக இந்த அறி
வியல் உதவியாளர்கள் முகமையில் அனுப்பப்பட்டுள்ளனர்.

கடந்த மூன்றாண்டுகளில் இந்த ஆய்வுக் கூடத்தில் ஆய்வு செய்யப்படுவதற்காக அனுப்பப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை, இந்த ஆய்வுக் கூடத்தினால் பகுப்பாய்வு செய்யப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை ஆகியவற்றைக் காட்டும் புள்ளி விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | ஆய்வுக்கூடத்தால் ஆய்வு செய்வதற்கு அனுப்பப் பட்ட நேர்வுகள். | பகுப்பாய்வு செய்யப் பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1971–72 (தமிழ் நாடு சட்டஞ் சார்ந்த அறிவியல் ஆய்வுக் கூடம்). | 551 | 20,556 |
| 1972–73 (தமிழ் நாடு சட்டஞ் சார்ந்த அறிவியல் ஆய்வுக் கூடம்). | 5,305 | 36,335 |
| 1973–74 (31-12-1973 வரை) தமிழ் நாடு சட்டஞ்சார்ந்த அறிவியல் — இரசாயன ஆய்வுக்கூடம். | 4,847 | 34,774 |

## குற்றமும், துப்பு துலக்கலும்.

1972–73 ஆம் ஆண்டுகளில் நடந்த சொத்து குறித்த குற்றங்கள் பற்றிய ஒப்பிட்டு அறிக்கை பின் வருமாறு :—

| குற்றங்களைக் குறிக்கும் தலைப்பு. | பதிவான புகார்களின் மொத்த எண்ணிக்கை. 1972 | 1973 |
|---|---|---|
| கொலை .. .. .. | 20 | 37 |
| வழிப்பறி .. .. .. | 28 | 13 |
| கொள்ளை .. .. .. | 93 | 87 |
| கன்னக் களவு .. .. | 6,956 | 6,891 |
| பெரிய திருட்டுகள் .. .. | 17,371 | 19,463 |
| சிறிய திருட்டுகள் .. .. | 413 | 634 |
| கால்நடைத் திருட்டுகள் .. | 1,199 | 1,319 |
| மொத்தம் .. | 26,080 | 28,444 |



கொலை உட்பட சொத்து குறித்து 1972-ம் ஆண்டில் பதிவான குற்ற வழக்குகளின் எண்ணிக்கை 26,080. அவ்வகையில் 1973-ல் புகார் பதிவு செய்யப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 28,444. முந்திய ஆண்டைவிட இவ்வாண்டில் குற்றங்களின் எண்ணிக்கை 2,364 அதிகரித்துள்ளது. அதாவது ஒன்பது சதவீதம் உயர்ந்துள்ளது.

மக்கள் தொகைப் பெருக்கம், வேலையில்லாத் திண்டாட்டம், இன்றியமையாப் பொருள்களின் விலை உயர்வு ஆகியவற்றின் காரணமாக, குற்ற நிகழ்வுகள் குறிப்பாக திருட்டுக் குற்றங்கள் பெருகியுள்ளன.

குற்றப் பிரச்சினையைத் திறமையாகவும், செவ்விய முறையிலும் சமாளிப்பதற்குத் தேவையான முயற்சிகளனைத்தையும் தமிழ்நாடு காவல் துறை மேற்கொண்டது. 1973-ம் ஆண்டில் 60 சத வீதம் வழக்குகளில் துப்பு துலக்கப்பட்டது. புலனாய்விற்கு அறிவியல் சாதனங்களைப் பயன்படுத்துதல், சென்னையிலுள்ள கைவிரல் ரேகைப் பதிவுக் கழகம், மாவட்டங்களிலுள்ள ஒற்றை விரல் ரேகைப் பதிவு நிலையங்கள், தமிழ்நாடு குற்றஞ்சார்ந்த அறிவியல்-இரசாயன ஆய்வுக் கூடம், மாவட்டங்களிலுள்ள குற்றஞ்சார்ந்த அறிவியல் ஆய்வுக் கூட ஊர்திகள், காவல் துறை கம்பியில்லாத் தந்தி அமைப்புகள், துப்பறியும் நாய்ப் படைகள் ஆகியவற்றைப் புலனாய்வுப் பணியாளர்கள் பெருமளவில் பயன்படுத்தி வருகின்றனர். இது தவிர, பயங்கரமான குற்ற வழக்குகளில் துப்பு துலக்கும் முறையைச் சிறந்ததாக்கும் பொருட்டு, கொலை வழக்கில் துப்பு துலக்குவதில் நவீன உத்திகளைக் கையாளுவதற்கான மும்முரப் பயிற்சியைக் குற்றப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த குற்றப் பிரிவு (Crime Branch) 1972-ல் தொடங்கியது. கடந்த ஈராண்டுகளில், எட்டு அணிகளில் இதுவரை 153 இன்ஸ்பெக்டர்களும், 68 சப் இன்ஸ்பெக்டர்களும் கொலை வழக்குப் புலனாய்வில் தீவிரப் பயிற்சி பெற்றுள்ளனர்.

## கள்ள நோட்டு வழக்குகள்.

1971–72-ல் மாநிலங்களுக்கு இடையே செயல்பட்டு வந்த கள்ள நோட்டுப் பேர்வழிகளின் நடவடிக்கைகளைத் துப்பு துலக்கிய கள்ள நோட்டு புலனாய்வுச் சிறப்புப் பிரிவு (The Special Counterfeit Cell) 1973-ல் மறுபடியும் கள்ள நோட்டு நடவடிக்கைகளில் துப்பு துலக்கி தன்னுடைய திறமையை வெளிக் காட்டியது. 1973, ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் சேலத்தில் 11 பேரும், மதுரையில் இருவரும்

கதாகி அவர்களிடமிருந்து கள்ள பத்து ரூபாய் நோட்டுகள்
றிமுதல் செய்யப்பட்டன. அதையடுத்து, குற்றப்புலனாய்வுத்
றை, புலனாய்வுப்பிரிவைச் சேர்ந்த கள்ள நோட்டு புலனாய்வு
ப்புப் பிரிவு, கள்ள நோட்டுச் சம்பவம் தொடர்பான
கொரர்களைச் சேர்ந்த முக்கிய கும்பலைக் காரைக்குடியில்
கது செய்து, 1,717 கள்ள பத்து ரூபாய் நோட்டுகள்,
துரையில் கள்ள நோட்டு அச்சிடுவதற்கென்று அவர்கள்
வத்திருந்த 8 அச்சுகள், 8 புகைப்பட நெகடிவ்கள், கையால்
பங்கும் அச்சு இயந்திரம், ரப்பர் முத்திரைகள், ஏனைய
தனங்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டன. இவ் வழக்கு
லனாய்வில் உள்ளது.

உரிய தருணத்தில், தகவல் கிடைக்கப் பெற்றதன்பேரில்
ள்ள நோட்டுப் புலனாய்வுச் சிறப்புப் பிரிவு, பரங்கிமலையில்
னதயாளன் என்பவரை மடக்கி அவரிடமிருந்து ஒரு ரூபாய்
ாட்டு அச்சுகள் ஆறு கொண்ட தாள் ஒன்றைக் கைப்
ற்றியது. இத் தடயத்தைக் கொண்டு இக் கும்பலைச் சேர்ந்த
லும் எழுவரைக் கைது செய்து, ரூ 1·62 லட்சம் பெறு
ன ஒரு ரூபாய் கள்ள நோட்டுகள், அச்சு இயந்திரம்
ன்று, அச்சுகள் 9, இலக்கமிடும் இயந்திரங்கள், அச்சு
ம, இக் குற்றம் தொடர்பான ஏனைய பொருட்கள் ஆகிய
ற்றைக் கைப்பற்றுவதில் இப் புலனாய்வுச் சிறப்புப் பிரிவு
வற்றி கண்டது. இக் கும்பலைச் சரியான நேரத்தில் கைது
சய்ததன் காரணமாக, இம் மாநிலத்தில் ஒரு ரூபாய்
ள்ள நோட்டுகள் பெருமளவில் புழக்கத்திற்கு வராமல்
டுக்கப்பட்டது.

3—10—1973-ல் லட்சுமண் நாடார் என்பவரும், ஏனைய
வரும் பொள்ளாச்சியில் கைது செய்யப்பட்டு, அவர்களிட
ருந்து 69 இரண்டு ரூபாய் கள்ள நோட்டுகள் கைப்பற்றப்
பட்டன. இவ் வழக்கில் மேலும் புலன் விசாரணை செய்ததில்
ள்ள நோட்டு அச்சிடும் வேலை சிவகாசியில் நடந்தது என்று
தரிய வந்தது. அங்கிருந்து அச்சுகளும், அச்சு இயந்திர
ம், ஏனைய கருவிகளும் பறிமுதல் செய்யப்பட்டன. இவ்
ழக்குத் தொடர்பான குற்றவாளிகள் 13 பேரில் 12 பேர்
கது செய்யப்பட்டுள்ளனர். வழக்கு புலன் விசாரணையில்
ள்ளது.

6—12—1973-ல் கம்பத்தைச் சேர்ந்த திருமலை சாமர்த்தி
னப்படும் நித்தியானந்த சுவாமி என்பவர் கைது
சய்யப்பட்டு, அவரிடமிருந்து ரூ. 23,700 பெறுமானமுள்ள
37 நூறு ரூபாய் கள்ள நோட்டுகள் கைப்பற்றப்பட்டன.
ள்ள நோட்டுப் புலனாய்வுச் சிறப்புப் பிரிவு இது தொடர்பான



மேற்சொன்ன நித்தியாநந்த
புலனாய்வை மேற்கொண்டதில், தண்டிக்கப் பெற்று ஜாமீனில்
சாமி என்பவர் ஏற்கெனவே கேரள உயர் நீதிமன்றத்தில்
வெளி வந்துள்ளவர்களும், உள்ளவர்களுமான கேரளா
மேல் முறையீட்டு விசாரணையில் நோட்டுப் பேர் வழிகளான
வைச் சேர்ந்த பிரபல கள்ள ஏனையோருடனும் கூட்டுச்
தாமஸ் சாக்கோ என்பவருடனும், லட்சத்திற்கும் மேற்பட்ட
சேர்ந்து, கம்பத்தில் இரண்டு அச்சிட பண உதவி
கள்ள நூறு ரூபாய் நோட்டுக்களை
செய்தார் என்பதும் தெரிய வந்தது.

8—12—1973-ல் மதுரை வடக்குக் காவல் துறையினர்
இராமசாமி என்பவரைச் சோழவந்தானில் கைது செய்து,
அவரிடமிருந்து 53 போலி இருபது ரூபாய் நோட்டுகளைக்
கைப்பற்றினர். இது தொடர்பான குற்றவாளிகளும் கண்டு
பிடிக்கப்பட்டுவிட்டனர்.

## கடவுளர் சிலை திருட்டுகள்.

கலைப் பொருள்களாக மிகப் பெரிய
வெளிநாடுகளில் கடவுளர் சிலைகள் கோவில்
தொகைகளுக்கு விற்கப்படும் மட்டுமின்றி, இவ் வகையில்
களிலிருந்து களவாடப்படுவது என்பது தஞ்சா
புதியதொரு முறையும் பின்பற்றப்படுகிறது சம்பந்தப்
ஊர் மாவட்டத்தில் அண்மையில் தெரியவந்தது. தீவிரப் பங்கு
பட்ட கோவில் பூசாரி உடந்தையாக இருந்து அசல் கடவுளர்
கொண்டு உதவியதன் மூலம் குற்றவாளிகள் பதிலாக விலை
சிலைகளை அகற்றி விட்டு, அவற்றிற்குப் வைத்து விட்டுச்
குறைந்த போலி கடவுளர் சிலைகளை பதிலாகப் போலி
சென்றனர். இவ்வாறு அசல் சிலைகளுக்குப் குற்றப் புல
சிலைகளை மாற்றி வைத்த ஐந்து சம்பவங்களை சிறப்புப்
னாய்வுத் துறையைச் சேர்ந்த குற்றப் புலனாய்வுச் இடைப்பட்ட
பிரிவு 1973, ஆகஸ்ட்டுக்கும் 1974 ஜனவரிக்கும் திருவைகாரூரிலுள்ள
காலத்தில் கண்டு பிடித்தது. பிரதோஷ
விளவனேஸ்வரர் கோயிலிலுள்ள சந்திர சேகரர், அகஸ்தீஸ்
நைனார் சிலைகள், சிறுகுடி கிராமத்தைச் சேர்ந்த சேர்ந்த
வரர் கோயிலிலுள்ள நடராஜர் சிலை, மாத்தூரைச் சிலைகள்,
சோமாஸ்கந்தர் சுவாமி சிலை மற்றும் இரு அம்மன் கோயிலிலுள்ள
லால்குடியைச் சேர்ந்த விஸ்வநாத சுவாமி திருவிடைவாசலைச்
விநாயகர், பிரதோஷ நைனார் சிலைகள், அந்த ஏமாற்றுச்
சேர்ந்த நடராஜர், சிவகாமி சிலைகள் வழக்குகள்
சம்பவங்களுக்கு இலக்கான சிலைகளாகும்.
புலனாய்விலுள்ளன.

[1974 மார்ச் 23

**காவல் துறையினர் துப்புத் துலக்கிய முக்கிய வழக்குகளில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன.**

இவ்வாண்டில், தமிழ் நாடு குற்றப் புலனாய்வுத் துறையைச்
சேர்ந்த குற்றப் புலனாய்வுப் பிரிவு, சென்னையைச் சேர்ந்த
பிரபல மருந்தாக்குநரான வைத்தீஸ்வரன் என்பவர் தலைமை
யில் செயல்பட்டுவந்த ஒன்பது பேரடங்கிய பயங்கர குற்ற
வாளிக் கும்பலொன்றைக் கண்டுபிடித்தது. இக் கும்பலைச்
சேர்ந்தவர்கள் தொடர்ந்தாற்போல், நடந்த பல கோரமான
கொலைகளுக்குக் காரணமாயிருந்தவர்கள். இக் குற்றவாளிகள்
சுங்க அதிகாரிகள் அல்லது ஆயத் தீர்வை சட்டங்களைச் செயல்
படுத்தும் அதிகாரிகள் (Customs or Enforcement Officers) என்ற
போர்வையில் ஆட்களைத் தெரிந்தெடுத்து அவர்களுக்கு
" உண்மை சொல்ல வைக்கும் ஊசி " போடுவதாகக் கூறி
பெருமளவில் பெதடின் ஊசி மருந்தைக் கொடுத்து அவர்
களைக் கொன்றுவிட்டு அவர்கள் எடுத்து வந்த பெரு
தொகையை எடுத்துக் கொண்டு உடல்களைத் தொலைவிடங்
களில் கிடத்திவிட்டு வந்தனர். இக் கும்பலைச் சேர்ந்த
ஒன்பது பேர்களையும் கண்டுபிடித்த குற்றப் புலனாய்வுத்
துறையின் புலனாய்வுப் பிரிவு, அவர்களிடமிருந்து ரூ 23,50
பெறுமான தங்கக் கட்டிகள், ரூ. 45,000 பெறுமான தங்
நகைகள், சேலைகள் முதலியவற்றையும், ரொக்கமா
ரூ. 18,000, மொத்தம் ரூ 1,28,000 மதிப்புக் கொண்ட ஏ
கார்களையும், ஸ்கூட்டர்களையும் கைப்பற்றினர். இவ்வழக்
விசாரணையிலுள்ளது.

நடராசனின் தலைமையில் இயங்கி வந்த கம்பித் திருட்டு
கூட்டம் ஐந்து கூட்டாளிகளுடன் குற்றப்புலனாய்வுத்துறையி
தமிழ் நாடு குற்றப் பிரிவால் கைது செய்யப்பட்டது. இந்த
கொள்ளைக் கூட்டம் செங்கற்பட்டு கிழக்கு, செங்கற்பட்
மேற்கு, தென் ஆர்க்காடு, திருநெல்வேலி மாவட்டங்களி
பரவியுள்ளது. கம்பித் திருட்டுக் குற்றங்கள் பல கண்
பிடிக்கப்பட்டன.

புதிதாகத் தயாரிக்கப்படவிருக்கின்ற திரைப்பட
ஒன்றுக்கு புதுமுகங்கள் தேர்ந்தெடுக்கப்படுவதாகக் கூ
நூற்றுக் கணக்கான இளைஞர்களை ஏமாற்றுகின்ற நூத
ஏமாற்று வேலை தமிழ் நாடு குற்றப்புலனாய்வுத் துறையி
குற்றப் பிரிவின் கவனத்திற்கு வந்தது. அந்த குற்றவாளிக
நாளிதழ்களில் சென்னை சபையர் பிலிம்ஸ் ஆஃப் இந்திய
(Safire Films of India, Madras) நிறுவனத்தால் தயாரிக்கப்ப
விருக்கின்ற புதிய படத்தில் நடிக்க "புதுமுகம் தேவை" என்
தலைபில் விளம்பரப் படுத்தி...



1974 மார்ச் 23]

கர்நாடகம், கேரளா, ஆந்திரப் பிரதேசம், ஒரிஸ்ஸா, மத்தியப்
பிரதேசம் ஆகிய மாநிலங்களின் பல்வேறு பகுதிகளிலிருந்து
நூற்றுக்கணக்கான விண்ணப்பங்கள் வந்ததன் பேரில்,
1973 செப்டம்பர் 16-ம் நாளன்று சென்னை " விஜயா
தோட்டத்தில் " நடைபெறும் துவக்க விழாவுக்கு அந்த
விண்ணப்பதாரர்களுக்கு அழைப்பிதழ்கள் அனுப்பி ஒவ்வொரு
வரும் ரூ. 50 பண அஞ்சல் மூலம் அனுப்புமாறு செய்தனர்.
இந்த வகையில் விண்ணப்பதாரர்களிடமிருந்து ரூ. 19,150
வசூலிக்கப்பட்டது. குறிப்பிட்ட நாளில் அதுபோன்ற நிகழ்ச்
சிக்கு ஏற்பாடுகள் ஏதும் செய்யப்படவில்லை என்பது
தெரிந்ததும் விண்ணப்பதாரர்கள் மிகவும் அதிர்ச்சிக்குள்ளா
னார்கள். ஆறு குற்றவாளிகள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.
புலனாய்வு நடந்து வருகிறது.

நகரில் உயர் மருத்துவப் பட்டங்களுடன் மருத்துவராகப்
பணியாற்றிவந்த ஓர் இளைஞரை குற்றப்புலனாய்வுத் துறையின்
குற்றப்பிரிவு கைது செய்தது. இடைநிலைப் பள்ளி வரையில்
பயின்று வேலையற்று இருந்த அந்த இளைஞர் தன்னை ஒரு
மருத்துவர் என்று கூறிக்கொண்டு, சென்னை கொண்டித்
தோப்பில் " டாக்டர் ஆர். எம். நாராயணன், பி. எஸ்ஸி.,
எம்.பி.; பி. எஸ்., எம். டி. அதிகாரம் பெற்ற மருத்துவர்,
சென்னை பொது மருத்துவ மனை " என்ற போலிப் பேரில்
மருத்துவப் பணியைத் தொடங்கினார். இந்தக் குற்றவாளி
மருத்துவக் கல்லூரியில் இடம் வாங்கித் தருவதாகக் கூறி
இரு நபர்களிடமிருந்து ரூ. 27,300 ஏமாற்றி வாங்கினார்.

திருவனந்தபுரத்தைச் சேர்ந்த பாஸ்கரன் எனப்படுகிற
பாசி என்பவரின் தலைமையிலான ஏழு பேர்களைக் கொண்ட
கார்களைத் திருடும் கன்றிய குற்றவாளிக் கூட்டத்தை மாநகர
காவல் துறையினர் கைது செய்தனர். புலன் விசாரணையின்
போது அவர்களிடமிருந்து இரண்டு அம்பாசிடர் கார்கள்,
ஒரு ஃபியட் கார் கைப்பற்றப்பட்டன. மேலும் சென்னை,
திருப்பத்தூர் நகரங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த
கார்களிலிருந்து திருடப்பட்ட கார் ரேடியோக்கள்,
ஸ்டெபினி டயர்கள் ஆகியவையும் கைப்பற்றப்பட்டன.
மேலும் இவை அனைத்தின் மதிப்பு ரூ. 64,000. மேலும்
அதே திருட்டுக் கூட்டத்தினரால் செய்யப்பட்ட
17 திருட்டுகள், வழிப்பறி ஒன்று, பயங்கர கொள்ளை ஒன்று
ஆகியவையும் புலன் விசாரணையில் கண்டு பிடிக்கப்பட்டன.
வழக்கு விசாரணையில் இருந்து வருகிறது.

தமிழ்நாடு, கேரள மாநிலங்களைச் சேர்ந்த குற்றவாளிகளைக் கொண்ட கலப்புக் கொள்ளைக் கூட்டம் ஒன்று கோயம்புத்தூர் நகர் காவல் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டது. இக் குற்றவாளிகள் 6 பயங்கர குற்றங்கள் உட்பட கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் தொடர்ச்சியாக நடைபெற்ற கொள்ளைகள் பலவற்றிற்குப் பொறுப்பானவர்கள் என்று தெரியவந்தது. நகைகள், டேப் ரிக்கார்டுகள், டிரான்சிஸ்ட்டர்கள், கடிகாரங்கள் மற்றும் துணிகள் ஆகியவை அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன. அவற்றின் மதிப்பு ரூ. 60,000 ஆகும். வழக்கு விசாரணையில் இருந்து வருகிறது.

பல்லாவரம் கொள்ளைக் கூட்ட வழக்கில் ஈடுபட்ட குருபாதம் என்பவரின் முன்னாள் கூட்டாளியின் தலைமையில் இராமநாதபுரத்திலிருந்து வந்த குறக் குற்றவாளிகள் அடங்கிய கொள்ளைக் கூட்டம் 1969–70-ல் இராமநாதபுரம், மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்ட தொடர்ச்சியான வழிப்பறிகள், கொள்ளைகள் ஆகியவற்றிற்குக் காரணமாயிருந்தது. புலனாய்வுத் துறையின் தமிழ்நாடு குற்றப் பிரிவு தீவிர நடவடிக்கை எடுத்து, அந்தக் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்த 20 உறுப்பினர்களை விசாரணைக்குக் கொண்டு வந்தது. அந்த 20 குற்றவாளிகளும் தண்டிக்கப்பட்டு மூன்று முதல் நான்கு ஆண்டுகளுக்குட்பட்ட வெவ்வேறு கால அளவுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார்கள்.

## துப்பறியும் நாய்ப்படை.

இம் மாநிலத்தில் இப்பொழுது சென்னை மாநகரில் ஒன்றும், மதுரையில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றுமாக நாய்ப் படைப் பிரிவுகள் மூன்று உள்ளன. இவை சிறந்த முறையில் செயலாற்றி வருகின்றன. திருச்சிராப்பள்ளியிலும் துப்பறியும் நாய்ப்படைப் பிரிவு ஒன்றை அமைப்பதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. நாய்ப் பட்டி ஒன்று கட்டப்பட்டு வருகிறது. நாய்ப் பட்டி கட்டி முடிக்கப்பட்ட பின்னரும் நாய்கள் தருவிக்கப்பட்ட பின்னரும் இப்பிரிவு செயல்படும். துப்பறியும் நாய்ப்படைப் பணி 1972-ல் 359 வழக்குகளில் பயன்படுத்தப்பட்டிருக்க 1973-ல் 484 வழக்குகளில் அதன் பணி பயன்படுத்தப்பட்டது.





## வகுப்புக் கலவர நிலை.

இவ்வாண்டில் இங்கும் அங்கும் சில வகுப்புக் கலவரங்கள்
ஏற்பட்டன. இக்கலவரத்தின்போது சட்டம்-ஒழுங்குப் பிரச்
சினை ஏதும் பெரிய அளவில் எழவில்லை. பல்வேறு வகுப்பின
ரிடையே எவ்வித ஆழ்ந்த பகைமை உணர்ச்சியோ அல்லது
வெறுப்புணர்ச்சியோ இல்லையென்று பெரும்பாலான நிகழ்ச்சி
களின் மூலம் தெரிய வந்ததாக வகுப்புக் கலவரங்கள் குறித்து
நடத்தப்பட்ட ஆய்வின்போது தெரிந்தன. பொதுவாக
இதுபோன்ற கலவரங்கள் உள்ளூர் மக்களிடையே ஏற்பட்ட
வேற்றுமையின் காரணமாகத்தான் நடந்தன. உதாரணமாக
தென்காசியில் (திருநெல்வேலி) இந்துக்களுக்கும் முகம்மதியர்
களுக்கும் ஏற்பட்ட கலவரத்தைக் குறிப்பிடலாம்.

## விவசாயிகள் குறித்த நிலவரம்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்த தஞ்சாவூர்
கிழக்கு, தஞ்சாவூர் மேற்கு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த
உழவர்கள் 1973-ம் ஆண்டு சனவரித் திங்கள் 8-ம் நாளன்று
ஊர்வலங்களை நடத்திச் சென்று பல்வேறு இடங்களில் உள்ள
வருவாய்த் துறை அலுவலகங்களின் முன் ஆர்ப்பாட்டங்களை
நடத்திவிட்டு விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்
படும் நெல்லுக்கு நியாயவிலை கொடுக்க வேண்டும் எனவும்
உணவு தானியங்களின் மொத்த விற்பனையை மேற்கொள்ள
வேண்டும் எனவும் கோரும் கோரிக்கைகள் அடங்கிய மனுக்
களை அளித்தனர்.

தமிழ் நாடு விவசாயிகள் சங்கத் தலைவர், தமிழ்நாடு
விவசாயிகள் சங்கத்தின் கூட்டு செயற்குழுவின் உறுப்பினர்கள்
ஆகியோர், 1973-ம் ஆண்டு சூலைத் திங்கள் 22-ம் நாளன்று
திருச்சிராப்பள்ளியில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி கடன்
களை திருப்பிச் செலுத்தத் தவறிய விவசாயிகளின் சொத்துக்
களை பறிமுதல் செய்வதைத் தீவிரப்படுத்தும் நடவடிக்கை
களை எதிர்த்து மறியல் செய்வதற்காக 1973-ம் ஆண்டு
ஆகஸ்ட் திங்கள் 2-ம் தேதியன்று சென்னை பாரிமுனையிலிருந்து
தமிழக அரசு தலைமைச் செயலகத்திற்கு ஊர்வல
மாகச் சென்றனர். அவர்கள் தடை உத்தரவை மீறியதால்
கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். பின்னர்
நிபந்தனை ஏதுமின்றி விடுதலை செய்யப்பட்டனர். தஞ்சா
வூர் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டங்களைச் சேர்ந்த மார்க்
சிஸ்டு உழவுத் தொழிலாளர்கள் அதிகக் கூலி கேட்டு

## தொழிலாளர் நிலவரம்.

அதிகக் கூலி, குறைந்த அளவு ஊதியக் கொடை, நல்ல பணி வசதி முதலிய கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி தொழிலாளர்கள் தொடர் உண்ணுவிரதம், உள்ளிருப்பு வேலைநிறுத்தம் உண்ணுநோன்பு போன்ற பல போராட்டங்களில் ஈடுபட்டனர். எனினும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினைக்குரிய பெரும் போராட்டம் ஏதும் நடைபெறவில்லை. 1973-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் வட ஆற்காடு மாவட்டத்தில் பீடித் தொழிலாளர்கள் நடத்திய போராட்டம், கோயம்புத்தூர் நகர மற்றும் கிராமப் பகுதி, சேலம் ஆகிய மாவட்டங்களில் கைத்தறி நெசவாளர்கள் நடத்திய போராட்டங்கள் ஆகியவை காவல் துறையினர் கவனிக்க வேண்டியிருந்த சில முக்கிய பிரச்சினைகள் ஆகும்.

## தீவிரவாதிகள் நடவடிக்கைகள்.

தீவிரவாதிகள் பெருமளவிலான நடவடிக்கை எதுவும் இந்த ஆண்டில் தமிழ்நாட்டில் நடக்கவில்லை.

## காவலர் துப்பாக்கிச் சுடல்.

1973-ல் 4 நேர்வுகளில் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டி இருந்தது. விவரங்கள் வருமாறு:—

1973-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26-ம் நாளன்று அரிசி கடத்திக் கொண்டு வந்த லாரியை நிறுத்துவதற்காக தேவாரம் (மதுரை மாவட்டம்) சப் இன்ஸ்பெக்டர் லாரியின் சக்கரங்களில் தமது சுழற் துப்பாக்கியால் 4 முறை சுட்டார். லாரி நிற்கவில்லை. சப்-இன்ஸ்பெக்டர் தலைமைக் காவலருடன் லாரியை பின்தொடர்ந்து சென்று லாரி தேவாரம் பஞ்சாயத்து யூனியன் நீர்த் தொட்டிக்கு முன்னால் நிற்பதைக் கண்டார். வண்டியையும் அரிசி மூட்டைகளையும் கைப்பற்ற முயன்ற சப்-இன்ஸ்பெக்டரை ஏழு பேர் தடுத்தார்கள். இதற்கிடையில் லாரி வலவர் லாரியை போடிநாயக்கனூரை நோக்கி ஓட்டிச் சென்றார். சப்-இன்ஸ்பெக்டரும், தலைமைக் காவலரும் லாரியைப் பின்தொடர்ந்து சென்று நிறுத்த முயற்சித்தனர். சப்-இன்ஸ்பெக்டர் லாரியின் சக்கரங்களை நோக்கி இருமுறை சுட்டார். பயன் ஏதுமில்லை. சப்-இன்ஸ்பெக்டர் மேலும் பின்தொடர்ந்து சென்று மேலும் இருமுறை சுட்டார். அவை டயர்களில் படவில்லை. இந்த நேர்வில் யாரும் காயமடையவில்லை; இறக்கவுமில்லை. இதுபற்றி விசாரணை தேவையற்றது என அரசு முடிவு செய்ததால் இதுபற்றி வழக்கு ஏதும் நடைபெறவில்லை.



கம்பத்தில் உள்ள ஏலக்காய் தோட்ட உரிமையாளர்கள்
சங்கக் கட்டிடத்தில் வைக்கப்பட்டிருக்கும் அரிசி மூட்டை
களை பொதுமக்களுக்கு பகிர்ந்தளிக்கக் கோரி 1973-ம் ஆண்டு
ஜூன் திங்கள் 22-ம் நாளன்று நள்ளிரவில் 300
பேர் கூடி நின்றனர். விரைவிலேயே வருவாய்த்துறை
அதிகாரிகள் வந்து தேவையான நடவடிக்கைகளை எடுப்பார்கள்
என அந்தக் கூட்டத்தினருக்கு உறுதி அளிக்கப்பட்டது.
ஆனால் கூட்டம் படிப்படியாக அதிகமாகி, 1973-ம் ஆண்டு
ஜூன் திங்கள் 23-ம் தேதி காலை 5 மணியளவில் 5,000 பேர்
கூடினர். கூட்டத்தினர் பிடிவாதமாக இருந்தனர். இரண்
டாவது வகுப்பு நிர்வாக மாஜிஸ்ட்ரேட்டுடன் காவல் துறை
யினர் கூட்டத்தினை சமாதானப்படுத்திக் கொண்டிருந்தனர்.
கேரள மாநிலம், இடிக்கி மாவட்டத்தைச் சேர்ந்த இடும்பன்
சோளிக்கு சர்க்கரை மூட்டைகள் 85 ஏற்றிக் கொண்டு ஒரு
லாரி அந்த வழியாகச் சென்றது. அந்தக் கூட்டத்தினர்
லாரியை சட்ட விரோதமாக நிறுத்தி லாரி வலவரை வேல்
கம்புகள், அறுவாள் போன்ற பயங்கர ஆயுதங்களைக் காட்டி
பயமுறுத்தினர். லாரியைச் சூழ்ந்து, ஏறி அதிலிருந்த
சர்க்கரை மூட்டைகளை அகற்ற முயன்றனர். காவல்துறையினர்
குறுக்கிட்டபோது அவர்கள் கற்களால் தாக்கப்பட்டனர்.
இதில் உதவி சப்-இன்ஸ்பெக்டர் ஒருவரும், தலைமைக் காவலர்
ஒருவரும், காவலர் நால்வரும் காயமடைந்தனர். அக்கூட்டம்
சட்ட விரோதமானது என மாஜிஸ்ட்ரேட் அறிவித்து கலைந்து
செல்லுமாறு கூட்டத்தினருக்கு எச்சரிக்கை விடுத்தார்.
கூட்டத்தினர் இந்த எச்சரிக்கைக்கு செவிமடுக்கவில்லை.
எச்சரிக்கை பயனற்றுப் போகவே தடியடி செய்யப்பட்டது.
கூட்டம் மேலும் முன்னேறியபோது காவல்துறையினர்
தற்காப்புக்காகச் சுட்டனர். மொத்தமாக நான்கு ரவை
தோட்டாக்கள் சுடப்பட்டன. இந்தத் துப்பாக்கிச்
சூட்டில் யாரும் உயிரிழக்கவோ காயமடையவோ இல்லை.

ஜெயவிலாஸ் பேருந்து நிறுவனம், சவுந்தரம் போக்கு
வரத்து நிறுவனம் ஆகியவற்றிற்கு இடையே, பேருந்துகள்
புறப்படும் நேரம் குறித்து போட்டியுணர்ச்சி ஏற்பட்டதினல்
1973-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16-ம் நாளன்று
பகல் 12-30 மணிக்கு மதுரை மாவட்டம் பழவநத்தத்தில்
பாண்டியன் மோட்டார் நிறுவனத்தைச் (ஜெயவிலாஸ்
பேருந்து கம்பெனி) சேர்ந்த பேருந்து ஒன்றைச்
சுமார் 50 பேர்கள் மடக்கி, சோதனை இன்ஸ்பெக்டர்,
பயணித்துணை வலவர் ஆகியோரைத் தாக்கினார்கள்.
1973-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20-ம் நாளன்று
இதுகுறித்து வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது.

அன்றே நால்வர் கைது செய்யப்பட்டனர். இதனால் ஆத்திர மடைந்த கிராமத்தினர் 500 பேர் ஜெயவிலாஸ் நிறுவனத் தைச் சேர்ந்த ஒரு பேருந்தினை வழிமறித்து பயங்கர ஆயுதங் களைக் கொண்டு தாக்கி சேதம் விளைவித்தனர். 1973-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20-ம் நாளன்று, இரவு சுமார் 9 மணிக்கு கமுதி காவல் துறை அதிகாரிகள் பயணிகளையும், பயணத் துணைவரையும், வலவரையும், கூட்டத்திலிருந்து மீட்க முயன்றனர். அப்போது கூட்டத்தினர் காவலர் மீது கற்களை வீசியதின் விளைவாக, ஒரு காவலர் வலது தொடை யில் காயமுற்றார். உரிய எச்சரிக்கைக்குப் பின்னர் தடியடி நடத்தப்பட்டது. கூட்டத்தினர், சப்-இன்ஸ்பெக்டரை கடுமையாகத் தாக்கினார்கள். எனவே, டெபுடி சூப்பி ரெண்டு ஆணையிட்டதின் பேரில், தற்காப்புக்காக துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. ஒருவர் மரணமடைந்தார். பத்து பேர்கள் காயமுற்றனர். கூட்டத்தினர் காயமுற்றவர்களை எடுத்துச் சென்றனர். காவல் துறை டெபுடி சூப்பிரெண்டு, சப்-இன்ஸ்பெக்டர், 7 காவலர் ஆகியோர் காயமுற்றனர். இந்நிகழ்ச்சி குறித்து நீதி விசாரணை செய்யுமாறு மாவட்ட ஆட்சியாளர் உத்திரவிட்டார்.

1973-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 2-ம் தேதி கோயம் புத்தூர் மாவட்டம் பைக்காரா மின் நிலையத்தில் குடிபோதை யிலிருந்த நாயக் ஒரு முறை வானோக்கிச் சுட்டார். உடனே அவர் கைது செய்யப்பட்டார். குற்ற விசாரணை எதுவும் நடத்தப்படவில்லை.

**கண்ணீர்ப்புகை.**

(1) 1973ஆம் ஆண்டு திண்டுக்கல் இடைத் தேர்தல் தொடர்பாக இரயில் நிலையத்தின் முன்பு கூடிய கட்டுக் கடங்காத கும்பல் ஒன்றைக் கலைப்பதற்காக திண்டுக்கல்லில் (மதுரை வடமாவட்டம்) 1973 ஆம் ஆண்டு மே திங்கள் 13ஆம் நாளில் காவலர் கண்ணீர்ப்புகை பயன்படுத்தினர்.

(2) இரயில்வே அதிகாரிகள், காவற்படையினர் ஆகியோர் மீது கற்களை வீசுவதில் ஈடுபட்ட இரயில்வே தொழிலாளர்களைக் கலைக்க சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தின் அருகே, 1973ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 28ஆம் நாள் காவலர் கண்ணீர்ப்புகையைப் பயன்படுத்தினர்.



(3) இரயில்வே தொழிலாளர்கள், மாணவர்கள் இடையே ஏற்பட்ட மோதலின் தொடர்பாக கோயம் புத்தூர் நகரத்தில் (கோயம்புத்தூர் நகர்ப்புறம்) 1973ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 30ஆம் நாள் மூன்று முறை கண்ணீப்புகை பயன்படுத்தப்பட்டது.

(4) சொத்துக்களுக்கும், ஆட்களுக்கும் சேதம் விளை விப்பதினின்றும் கலகக்காரர்களைக் கலைப்பதற்காக, கோயம் புத்தூர் கிராமப்புறம் மாவட்டம், பொள்ளாச்சி நகரத்தில் 1973ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 8ஆம் நாள் காவலர் கண்ணீர்ப்புகையைப் பயன்படுத்தினர். தரகுத் தொகை குறித்து தனியார் லாரி உரிமையாளர்களுக்கும், லாரி தரகுக் காரர்கள், வணிகர்கள் ஆகியோருக்குமிடையே ஏற்பட்ட தகராறே இச் சம்பவத்திற்குக் காரணமாகும்.

(5) சென்னை, அமைந்தகரை, பெருமாள் கோயில் தெருவில் கூட்டப்பட்ட பொதுக் கூட்டத்தினருகே கூடிய கட்டுக்கடங்காத கூட்டத்தைக் கலைப்பதற்காக 1973ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18ஆம் நாள் கண்ணீர்ப்புகை பயன்படுத்தப்பட்டது.

(6) (1) சென்னை பச்சையப்பன் கல்லூரி, தலைவாயிலில் காவல்படையின் மீது கல் வீசிய கூட்டத்தைக் கலைக்கவும், (2) பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை, ஹாரிங்டன் சாலை சந்திப்பில் கூட்டத்தைக் கலைக்கவும் 1973ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28ஆம் நாள் இருமுறை கண்ணீர்ப்புகை பயன் படுத்தப்பட்டது.

(7) பெரியார் ஈ.வே.ரா. அவர்களின் இறுதி ஊர்வலத்தின்போது கூடிய கூட்டத்தைக் கலைப்பதற்காக (1) பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை, சைடன்ஹாம்ஸ் சாலை சந்திப்பிலும், (2) பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை, ரண்டல்ஸ் சாலை சந்திப்பிலும் 1973ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 25ஆம் நாள் இருமுறை கண்ணீர்ப்புகை பயன்படுத்தப் பட்டது.

**காவல் துறை வானொலிப் பிரிவு.**

தமிழ் நாடு காவல் துறை வானொலித் தொகுதியில் மாவட்டத் தலைமையிடங்கள் அனைத்தும் சென்னையுடன் இணைக்கப்பட்டுள்ளன. சென்னை மாநகரில் மத்திய சரகம், தெற்குச் சரகம், மேற்கு சரகம், வடக்கு சரகம் எனப்படும் நான்கு செய்தி தொடர்பு நிலையங்கள் உள்ளன. மேலே சொல்லியவை தவிர சென்னை மாநகர காவற்படை

வானொலித் தொடர் அமைப்பு, தமிழ் நாடு சிறப்பு காவற்படை வானொலித் தொடர் அமைப்பு ஆகியவை உள்ளன. சென்னை மாநகரம், கீழ் அணை, கல்லணை, தஞ்சாவூர், பவானிசாகர், தேக்கடி, மேட்டூர் மேல் அணை, ராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் வெள்ளக்கால நெருக்கடி அறிவிப்பு நிலையங்கள் உள்ளன. இவை பருவ மழையின்போதும் அணை முதலியவற்றிலிருந்து நீர் வருவதைக் குறித்த தகவல்களை அளிக்கவும் பயன் படுத்தப்படுகின்றன.

தமிழ் நாடு காவல் துறை வானொலி அமைப்புடன் இணைக் கப்பட்டுள்ள 20 இடம் பெயர் வானொலி நிலையங்கள், 4 மீ—உயர் மின் அலை செய்தித் தொடர்பு அறைகள் 10, வெள்ள கால நெருக்கடி நிலை அறிவிப்பு நிலையங்கள் 10 ஆகியவற்றுடன் 13 நிலையான செய்தித் தொடர்பு நிலையங் களும் 31 உட்கோட்ட செய்தித் தொடர்பு நிலையங்களும் (43–12) உள்ளன. (காவல் நிலையங்களில் வானொலி தொலைபேசி வசதிகள் செய்து கொடுக்கப்பட்டதன் விளை வாக 12 உட்கோட்டங்களில் இருந்த வானொலி நிலையங்கள் மூடிவிடப்பட்டன.) முக்கியமான எல்லா பண்டிகைகள், இடைத் தேர்தல்கள், புயல்கள், வேலைநிறுத்தங்கள், பெருமக்களின் வருகை, மற்ற நெருக்கடிக் காலங்கள் எல்லாவற்றிலும் 31 உட்கோட்ட நிலையங்கள் பயன்படுத்தப் பட்டன.

தற்போது காவலர் செய்தித் தொடர்பு அறைகள் மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், செங்கல்பட்டு கிழக்கு, சென்னை மாநகரம், திருநெல்வேலி, சேலம், வேலூர், கடலூர் (தென் ஆற்காடு), தஞ்சாவூர் (மேற்கு) ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

1974–75 ஆம் ஆண்டில், மாநிலத்திலுள்ள எஞ்சிய காவல் துறை மாவட்டங்களிலும் செய்தித் தொடர்பு நிலையங்களைத் திறப்பதற்கு அரசு முடிவு செய்துள்ளது.

சென்னை, காஞ்சிபுரம், கடலூர், தஞ்சாவூர் ஆகிய இடங்களிலுள்ள காவல் நிலைய காலநிலை எச்சரிக்கை அறிவிப்பு நிலையங்கள் நான்கும் மனநிறைவு அளிக்கும் வகையில் செயல்பட்டு வருகின்றன.



## தமிழ் நாடு காவல் படையைக் காலச்சார்புடன் மாற்றி அமைத்தல்.

காவலர் படையின் செயல்படும் திறனை அதிகரிப்பதும் மாறிவரும் சமுதாயத்தின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண பதுமே 'காவலர் படையை காலத்திற்கேற்ப மாற்றி யமைக்கும்' திட்டத்தின் நோக்கமாகும். அரசால் நிய மிக்கப்பட்ட காவல் துறை ஆணைக்குழு காவலர் படையை காலத்திற்கேற்ப மாற்றியமைத்தல் தொடர்பாக பல பரிவுரைகளைச் செய்துள்ளது. அவைகளில் பெரும்பா லானவை செயல்படுத்துவதற்காக அரசால் ஏற்றுக்கொள்ளப் பட்டன. காவலர் படையை காலத்திற்கேற்ப மாற்றியமைப்பதற்கான திட்டம் ஒன்றை இந்திய அரசும் தெரிவித்துள்ளது. 1969-ஆம் ஆண்டிலிருந்தே நிதி உதவியும் அளித்து வருகிறது. கருவிகளை இயக்குகின்ற பணியாளர்களுக்கு ஊதிய வகையில் ரூ. 21 இலட்சம் தொடர் செலவு தவிர வண்டிகள், கம்பியில்லாத் தந்தி சாதனங்கள், ஆய்வியல் சாதனங்கள் வாங்குவதற்காக இதுவரை இத் திட்டத்தின்கீழ் ரூ. 189·25 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது.

### போக்குவரத்து.

இத் திட்டத்தின்கீழ் உட்கோட்டங்கள், வட்டங்கள், காவல் நிலையங்கள் ஆகியவற்றின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக வண்டிகளின் எண்ணிக்கைகள் அதிகரிக்கப் பட்டன.

### செய்தித் தொடர்பு.

உயர் மின் அலைச் செய்தித் தொடர்பு, மீ-உயர் மின் அலை செய்தித் தொடர்பு இவைகளின் மூலம் காவல் நிலையங்களை மாவட்ட தலைமையிடங்களுடனும், மாவட்ட தலைமை இடங்களை மாநில தலைமை இடங்களுடனும் இணைப்பதே அரசின் நோக்கமாகும். 1—10—1973 அன்றுள்ளவாறு 300 காவல் நிலையங்கள் அவைகளின் முறையான மாவட்டத் தலைமையிடங்களுடன் இணைக்கப் பட்டுள்ளன. 1975-ஆம் ஆண்டு இறுதிக்குள் எஞ்சிய காவல் நிலையங்கள் இணைக்கப்பட்டு விடுமென எதிர்பார்க்கப் படுகிறது. குரல், தொலைபேசிச் செய்தி அச்சடிப்பு ஆகியவற்றிற்கு வகை செய்யும்பொருட்டு மாநில தலைமை யிடங்கள், மீ-உயர் மின் அலை செய்தித் தொடர்பு கூட் டமைப்பு மூலமாக 17 காவல் மாவட்டங்களுடன் இணைக்கப் பட்டுள்ளன. மாநிலத்திற்கும், மாவட்டத்திற்கும் இடையி

லான போக்குவரத்து பெருகியுள்ளதன் விளைவாக தற்போதைய மீ-உயர் மின் அலை செய்தித் தொடர்பு அமைப்புக்குப் பதிலாக 120 நுண்ணலை செய்தித் தொடர்பை அமைக்க அரசு கருதியுள்ளது.

1973-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1ஆம் நாள் அன்றுள்ளவாறு 816 காவல் நிலையங்களில் 620 காவல் நிலையங்களுக்கு அஞ்சல்-தந்தி துறையின் தொலைபேசி வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. மதுரை—சென்னை, கோயம்புத்தூர்—சென்னை, ஆகியவற்றிற்கு இடையே, உருவ நேர்படித் தொடர்பு வசதிகள் விரைவில் செயல்பட இருக்கின்றன.

## காவல் துறையினருக்கு அறிவியல்—தொழில் நுட்ப கருவிகள்.

சட்டத்தையும் ஒழுங்கையும் தகுந்த முறையில் பாதுகாக்கவும், குற்றங்களையும் குற்றவாளிகளையும் கண்டு பிடிக்கவும் எல்லா மாவட்டங்களிலும் அறிவியல் சாதனங்களை வகை செய்வதற்கு அரசு முடிவு செய்துள்ளது. அந்த நோக்கில், மாநில சட்டம் சார்ந்த வேதியல் ஆய்வகத்திற்கு நவீன கருவி அளிக்கப்பட்டுள்ளது. 17 காவல் மாவட்டங்களுக்கு 17 முழுதும் நிறைவு பெற்ற இயங்கும் சட்டம் சார்ந்த ஆய்வுக் கூடப் பிரிவுகள் அளிக்கப்பட்டுள்ளன. புலனாய்வில் இந்தப் பிரிவுகள் குறிப்பிட தகுந்தமுறையில் பணியாற்றுகின்றன.

17 காவல் மாவட்டங்களுக்கு நிழற்படப் பிரிவுகளும் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஒரு விரல் ரேகைப் பதிவுப் பிரிவுகளும் 17 மாவட்டங்களில் திறக்கப்பட்டுள்ளன.

## காவல் துறை கணக்கிடும் பிரிவு.

காவல் துறை கணக்கிடும் பிரிவுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. அங்கு ஐந்து லட்சம் குற்றங்கள், மூன்று லட்சம் குற்றவாளிகள் குறித்த தகவல்கள் சேகரிக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டு, குறியீடு இடப்பட்டுள்ளன. மூன்று லட்சம் விரல் ரேகை பதிவுகளும் கணக்கிடப்பட்டு வருகின்றன. குற்றங்களையும், குற்றவாளிகளையும் விரைவில் கண்டு பிடிக்க குற்றங்கள், குற்றவாளியின் விரல் ரேகைப்



பதிவுகள் ஆகியவற்றைக் கணக்கிடும் பணி இம்மாநிலத்திலுள்ள காவலர் அனைவருக்கும் இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

## நிர்வாகப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

தமிழ் நாடு நிர்வாகப் பணியாளர்கள் சங்கம் கேட்டுக்கொண்டதன் பேரில், அரசு, மாநிலத்திலுள்ள காவல் துறைப் பிரிவு அலுவலகம் ஒவ்வொன்றிலும் உதவியாளர் ஒருவர், இளநிலை உதவியாளர் ஒருவர், தட்டச்சர் ஒருவர் ஆகியோரை நியமிக்க ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் மாவட்ட காவல் துறை அலுவலகங்களிலுள்ள 222 இளநிலை உதவியாளர்கள் பதவிகளை உதவியாளர் பதவியாக உயர்த்த அரசு ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. கன்னியாகுமரி, மதுரை நகர்ப்புறம், நீலகிரி மாவட்டங்களில் உள்ள மாவட்ட காவல் துறை அலுவலகங்கள் ஒவ்வொன்றிற்கும், ஒருவர் என்ற வீதத்தில் நிர்வாக நேர்முக உதவியாளர் மூவரை நியமிக்க அரசு அனுமதி அளித்தது.

## தமிழ் நாடு காவலர் நல நிதி.

காவல் துறையில் பணிபுரியும் அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்களின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்ட தமிழ் நாடு காவலர் நல நிதி, நிதியுதவி, படிப்புதவி, நல உதவி, பொழுதுபோக்கு வசதி ஆகியவற்றை அளிப்பதன் மூலம் தொடர்ந்து செவ்விய முறையில் செயல்பட்டு வருகின்றது. காவல் துறையில் பணிபுரியும் அரசிதழ் பதிவு பெறாத அதிகாரிகள் மனமுவந்து கொடுக்கும் தொகைகள் மூலமும், அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளிடமிருந்து பெறும் நன்கொடை மூலமும் இந் நிதிக்குத் தொகை சேர்க்கப்படுகிறது. 1971–72 முதல் ஒவ்வொரு நிதியாண்டும் அரசு ரூ $1\frac{1}{2}$ லட்சம் மொத்த மானியத்தை இந் நிதிக்கு வழங்குகிறது.

மேற்கூறிய நிதியைத் தவிர் தமிழ்நாட்டுக் காவல் துறை நூற்றாண்டு விழா படிப்பு உதவித் தொகை நிதி ஒன்றும் உள்ளது. அந் நிதியிலிருந்து காவல் துறைஅரசிதழ், பதிவு பெறாத நிர்வாக அதிகாரிகளின் தகுதியுள்ள மகன்கள் மகள்களுக்குக் கல்லூரிகளில் உயர் படிப்புக்கும், தொழில் நுட்பப் படிப்புக்கும் படிப்புதவித் தொகை ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. தனி நபர்களிடமிருந்து பெறப்படும் நன்கொடைகள் மூலம் இந் நிதி நிர்வகிக்கப்படுகிறது. 1972–73-ம் ஆண்டில் படிப்புதவித் தொகை வழங்கப்படுவதற்காக இந் நிதியிலிருந்து ரூ 20,000 செலவிடப்பட்டுள்ளது.

## தமிழ் நாடு காவலர் குடும்ப நல அமைப்பு.

தமிழ் நாடு காவலர் குடும்ப நல அமைப்பு நன்முறையில் பணியாற்றி வந்துள்ளது. இந்த அமைப்பின்கீழ் பின்னுதல் வேலை, தையல் வேலை, பாய் முடைதல், ஜமக்காள நெசவு, தீக்குச்சி, பட்டாசு மேலுறைகள் செய்தல், பீடி சுற்றுதல், காகித உறை செய்தல், புத்தகம் கட்டுதல், பாற்பண்ணை அமைத்தல், கோழிப்பண்ணை அமைத்தல், கைவினைகள், பனியன்கள் தயாரித்தல் போன்ற பல்வேறு தொழில்கள், காவலர் குடும்பங்களின் வருமானத்தை தொடர்ந்து உயர்த்தி வருகிறது.

**ஊர்க்காவல் படை.**

இந்தத் தொண்டு நிறுவனம் காவலருக்கு தொடர்ந்து திறம்பட உதவி புரிந்து வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள 113 அணிகளில் 38 அணிகள் சென்னை நகரத்தில் உள்ளன. ஏனைய 75 அணிகள் மாவட்டங்களின் 40 இடங்களில் அமைந்துள்ளன. 6 ஊர்க்காவல் படை (மகளிர்) அணிகள் உள்ளன. 4 அணிகள் சென்னை மாநகரத்திலும், 2 அணிகள் நான்கு மாவட்டத் தலைமையிடங்களிலும் அமைந்து உள்ளன.

இந்த ஆண்டில் கீழ்க்கண்ட பணிகளில் ஊர்க்காவல் படையினர் பணியாற்றினர் :

(அ) போக்குவரத்தை முறைப்படுத்துதல்.

(ஆ) இரவு நேரத்தில் ரோந்து சுற்றும் பணி.

(இ) பல்வேறு காலங்களில் திருவிழா பாதுகாப்புப் பணி.

(ஈ) கண்ணொளி வழங்கும் முகாம்களில் பாதுகாப்புப் பணி.

(உ) 13—9—1973-ல் சில அரசியல் கட்சிகள் நடத்திய கடையடைப்பின்போது பாதுகாப்புப் பணிகள்.

இந்த ஆண்டில் மாவட்டங்களிலுள்ள ஊர்க்காவல் படையைச் சேர்ந்த 405 பேருக்கு இலேசான மோட்டார் வண்டிகளை ஓட்டுவதற்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கு, குறிப்பாக முதலுதவி, தீயணைப்புப் பணி, உள்நாட்டுப் பாதுகாப்பு ஆகிய பணிகளில் தொடர்ந்து பயிற்சி அளிக்கப்பட்டது.



## காவற் படையினருக்கு குடியிருப்பு வசதி.

காவல்துறை சார்நிலைப் பணியாளர்களில் 80 சத வீதத்தினருக்கு குடியிருப்பு வசதிகள் செய்து தருவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இதுவரை 63 சத வீதத்தினருக்கு குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

இதுவரை ரூ 6·56 கோடி, மதிப்பீட்டுச் செலவில் உள்ளூர் காவல் படை, படைக் கலந்தாங்கிய சேமக் காவற் படையைச் சேர்ந்த 133 இன்ஸ்பெக்டர்கள், 6 ரிசர்வ் இன்ஸ்பெக்டர்கள், 52 ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்கள், 2 உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள், 43 ரிசர்வ் உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள், 1,049 தலைமைக் காவலர்கள், 6,793 காவலர்கள் ஆகியோருக்கு குடியிருப்புகள் கட்டவும், ரூ 73·75 லட்சம் செலவில் 2 டெபுடி சூப்பிரண்டுகள், 2 இன்ஸ்பெக்டர்கள், அட்ஜுடண்ட் (Adjutant) 9 இன்ஸ்பெக்டர்கள், 20 சப்-இன்ஸ்பெக்டர்கள், பணிப்பட்டயம் பெறாத 689 அதிகாரிகள், தமிழ் நாடு சிறப்புக் காவல்படைப் பிரிவில் உள்ள ஏனைய பதவித் தரத்தில் உள்ளவர்கள் ஆகியோருக்கு குடியிருப்புகள் கட்டவும், நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

இதுவரை மாவட்டங்களில், 128 இன்ஸ்பெக்டர்கள், 6 ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்கள், 450 சப்-இன்ஸ்பெக்டர்கள், 52 ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்கள், ஒரு உதவி சப்-இன்ஸ்பெக்டர், 43 ரிசர்வ் உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள், 978 தலைமைக் காவலர்கள், 6,071 காவலர்கள் ஆகியோருக்கும், 2 டெபுடி சூப்பிரண்டுகள், 2 இன்ஸ்பெக்டர்கள் (அட்ஜுடெண்ட்), 9 இன்ஸ்பெக்டர்கள், 20 சப்-இன்ஸ்பெக்டர்கள், 689 பணிப் பட்டயம் பெறாத அதிகாரிகள், தமிழ்நாடு சிறப்புக் காவல்படைப் பிரிவில் உள்ள ஏனைய பதவித் தரங்களில் உள்ள 6 பேர் ஆகியோருக்கும் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு அவர்கள் குடியேறி உள்ளனர். 600 குடியிருப்புகள் கட்டப்படும் பணி பல்வேறு நிலைகளில் நடந்தேறி வருகிறது. எஞ்சியுள்ள 229 குடியிருப்புகள் கட்டப்படும் பணி மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கிறது.

**காவலர் பதக்கங்கள்.**

1973-ம் ஆண்டில் காவல் துறை தீயணைப்புத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள், காவலர்கள் 27 பேருக்கு குடியரசுத் தலைவரால் காவல், தீயணைப்புப் பதக்கங்கள் வழங்கப்பட்டன. 1973-ம் ஆண்டில் 28 பேருக்கு தமிழ் நாடு முதலமைச்சரால் காவல் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

## விளையாட்டுப் போட்டிகள்.

தமிழ்நாடு காவலர் அணி 27—11—1973 முதல் 2—12—1973 வரையில் ஒரிஸ்ஸா மாநிலம், கட்டாக்கில் நடைபெற்ற அகில இந்திய காவலர் பணிப் போட்டிகளில் கலந்துக் கொண்டது. புலனாய்வில் அறிவியல் சாதனங்களைப் பயன்படுத்தும் போட்டிகளிலும் தமிழ் நாடு காவலர் அணி கலந்து கொண்டது. தமிழ்நாடு காவல் துறையின் இரண்டு அணிகள், நாட்டிலுள்ள ஏனைய காவல் துறை அணிகளைத் தோற்கடித்தது. இந்தப் போட்டியில் தமிழ் நாடு காவலர் அணி தொடர்ந்து ஐந்தாவது முறையாக வெற்றி பெற்றது.

தமிழ்நாடு காவலர் அணி பெற்ற பதக்கங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

1. புலனாய்வில் அறிவியல் சாதனங்களைப் பயன்படுத்துதல்—

6 தங்கப் பதக்கங்கள்.

4 வெள்ளிப் பதக்கங்கள்.

4 வெண்கலப் பதக்கங்கள்.

2. முதலுதவிப் போட்டி—

4 தங்கப் பதக்கங்களும் வீர முதன்மைக் கேடயமும் குழு இணைந்து செவ்விய முறையில் செயல்பட்டதற்காக வழங்கப்பட்டது.

3. கம்பியில்லாத் தந்திப் போட்டி—

தனிப்பட்டவர் திறமை—

தங்கப் பதக்கம் ஒன்று.

4. மோட்டார் பந்தயம்—

வெள்ளிப் பதக்கம் ஒன்று (இரண்டாவது பரிசு).

## காவலர்களுக்கு அரசு அளித்த சலுகைகள்.

கடமை ஆற்றும் சமயம், சமூக விரோத சக்திகளுடன் ஏற்படக்கூடிய கைகலப்பினாலோ, ஏனைய பிற காரணங்களாலோ வீர மரணம் அடையும் காவல் பணியாளரின் குடும்பத்திற்கு, எவ்வித நிபந்தனையுமின்றி, அவர் தம் அதிக அளவு மாதச் சம்பளத்தில் சரிபாதிக்கு சமமான தொகையை ஒய்வூதியமாக அளிக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.





2. தலைமைக் காவலர்கள், காவலர்கள் ஆகியோரில் 10, 15, 20 வருட பணிக் காலத்தில், பதிவு செய்யப்படக் கூடிய தண்டனைகள் ஏதுமின்றியும், சிறு தண்டனைகள் இரண்டிற்கு மேல் இல்லாமலும், திறப்பணி சிறப்புப் பதிவுகள் (Good Service Red entry) பெற்றவர்களுக்கு அவர் தம் ஊதிய காலத்தையும், மேற்சொன்ன பதிவுகளின் எண்ணிக்கையையும் அனுசரித்து மாதம் ஒன்றுக்கு ரூ. 1, ரூ 1-50, ரூ 2 முறையே சிறப்பு ஊதியம் அளிக்கப்பட்டு வருகிறது. ஆனால் இச்சிறப்பு ஊதியம் 4,407 பேர்களுக்கு மேற்கொண்டு அளிக்கப்படக்கூடாதென்ற நிபந்தனை சமீப காலம் வரை இருந்து வந்தது. இப்போது இந்த நிபந்தனை அகற்றப்பட்டு தகுதி பெற்றவர்கள் அனைவருக்கும் மேற்கூறப்பட்ட சிறப்பு ஊதியம் அளிக்குமாறு அரசு உத்தரவிட்டுள்ளது.

## காவற் படையின் ஒழுங்குணர்வு.

காவல் துறையினரின் உயரிய கட்டுப்பாடும், ஒழுங்குணர்வும் தொடர்ந்து போற்றத்தக்க வகையில் உள்ளன. சட்டம், அமைதியை நிலைநாட்டும் பல்வேறு பிரச்சினைகளின் காரணமாக ஆண்டு முழுவதும் காவலர்களுக்குப் பணிச்சுமை அதிகமிருப்பினும் தமிழ்நாடு காவல் துறையினர் பாராட்டத்தக்க வகையில் தங்கள் கடமையை ஆற்றினர். காவல் துறையில் எல்லாப் பதவித் தரங்களில் உள்ளவர்களும், ஆர்வத்துடனும், பற்றுடனும் தொடர்ந்து பணிபுரிந்து வந்தனர்.

1973-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாளன்றுள்ளவாறு காவல்படையில் உள்ளவர்களின் எண்ணிக்கை.

## நிர்வாகம்.

| | |
|---|---|
| காவல் துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் .. | 1 |
| காவல் துறை டெபுடி இன்ஸ்பெக்டர்-ஜெனரல். | 11 |
| காவல் துறை சூப்பிரண்டெண்ட், காவல் துறை இணை சூப்பிரண்டெண்ட் (முகமையில் அனுப்புவது உட்பட) (43+2+தற்காலிகம் 16). | 61 |
| தளவாய்கள் (இந்திய காவல் துறை பணி சாராத). | |

[1974 மார்ச் 23

| | |
|---|---|
| காவல் துறை கூடுதல் சூப்பிரண்டுகள் .. | 4 |
| காவல் துறை உதவி சூப்பிரண்டுகள் .. | 32 |
| காவல் துறை டெபுடி சூப்பிரண்டு தரம் I .. | 111 |
| காவல் துறை டெபுடி சூப்பிரண்டு தரம் II .. | 21 |
| காவல் துறை டெபுடி சூப்பிரண்டு தரம் III .. | 24 |
| துணை தளவாய் .. .. .. .. | 1 |
| இன்ஸ்பெக்டர்/ரிசர்வ் இன்ஸ்பெக்டர் .. | 629 |
| சப்-இன்ஸ்பெக்டர்/ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர். | 2,116 |
| உதவி சப்-இன்ஸ்பெக்டர்/ரிசர்வ் துணை சப்-இன்ஸ்பெக்டர். | 433 |
| தலைமைக் காவலர்/ஹவில்தார்கள்/நாயக்குகள். | 5,139 |
| காவல் துறை காவலர்கள் நிலை I .. .. | 3,155 |
| காவல் துறை காவலர்கள் நிலை II (படையினர் உட்பட). | 32,797 |
| டெபுடி இன்ஸ்பெக்டர்கள் .. .. | 74 |
| மொத்தம் .. | 44,665 |

## இணைப்பு III

(864-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## தமிழ்நாடு தீயணைப்புத் துறை

### 1973–74

### ஆய்வுரை.

மக்களின் உயிரையும், உடைமையையும் தீ விபத்துக்களிலிருந்தும், மற்றும் வெள்ளம், புயல், பூகம்பம் போன்ற இயற்கை இடர்களிலிருந்தும் காப்பாற்ற, ஒரு திறமையான படை தேவை. தமிழ்நாடு தீயணைப்புத் துறை இவ்வரிய பணியை நிறைவேற்ற அரசினரால் 1942-ம் ஆண்டு நிறுவப்பட்டது. இத்துறை அக்டோபர் திங்கள் 1967-ம் ஆண்டிலிருந்து ஒரு தனித் துறையாக இயங்கி வருகிறது. நாட்டிலேயே பெரியதும், மிகத் திறமை வாய்ந்தது என்ற புகழையும் இது பெற்றுள்ளது.



1974 மார்ச் 23]

2. தீ விபத்தைத் தவிர்ப்பதும், தீயை அணைப்பதும் இத்துறையின் தலையாய பணியாயினும், மக்களின் நலனுக்காக அது வேறு பல வகைகளிலும் செயலாற்றுகிறது. உதாரணமாக காட்சிக் கடைகள், திருவிழாக்கள் நடைபெறும் பொழுது தீத் தடுப்பு பணிகளை மேற்கொள்வது, நோயுற்றவர்கள் அல்லது காயமடைந்தவர்களை உடனடியாக மருத்துவமனைக்கு அகற்றுவது, சுகாதாரத் துறை, காவல் துறை இவைகளுக்கு தொத்துநோய் தடுப்பு, தேர்தல் மற்றும் பந்தோபஸ்து வேலைகளுக்கு உதவியளிப்பது போன்ற இதர பணிகளையும் ஆற்றி வருகிறது. மேற்கண்ட பணிகளைத் தவிர, தமிழ்நாடு பொதுமக்கள் உபயோகிக்கும் இடங்கள் சட்டத்தின் கீழும், பஞ்சாயத்து, நகராட்சி, மாநகராட்சி, படைக்கலச் சட்டங்களின் கீழும் உரிமங்கள் வழங்கப்பட்ட, வழங்கப்பட உள்ள இடங்களை ஆய்வு செய்வதிலும் ஈடுபடுகிறது.

3. தற்போதுள்ள தீயணைப்புப் படையின் எண்ணிக்கை பற்றி விவரங்கள் பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

4. **தீயணைப்பு நிலையங்கள்.**—நமது மாநிலத்தில் 1—3—1974 நாளது வரை 73 தீயணைப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. அவற்றுள் 14 சென்னை மாநகரிலும், மற்றவை வெளி நகரங்களிலும் உள்ளன. சமீபத்தில் ஆம்பூர், திருநெல்வேலி, கள்ளக்குறிச்சி, இராமநாதபுரம், செம்பியம், ஜெயங்கொண்ட சோழபுரம், உத்தமபாளையம், கோயம்புத்தூர் (இரண்டாவது நிலையம்), விருத்தாசலம், கோயில்பட்டி, நன்னிலம், எண்ணூர் ஆகிய இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும், கோபிச்செட்டிபாளையம், குழித்துறை, மணலி, மேட்டூர், தென்காசி, மற்றும் சென்னையில் தண்டையார் பேட்டை, வ.உ.சி. நகர் ஆகிய ஏழு இடங்களில் தீயணைப்பு நிலையங்களை அமைப்பதற்கும் அரசு ஒப்பளித்துள்ளது. தேவையான கட்டிடங்களும், தீயணைப்பு பொறிகளும் தயாரானவுடன் மேற்கண்ட நிலையங்கள் அமைக்கப்படும்.

இம்மாநிலத்தில் தீயணைப்பு நிலையங்கள் நிறுவ அரசு ஒப்பளித்துள்ள முதன்மைப்பட்டியலில் இன்னும் 55 நகரங்கள் இடம் பெற்றன. இதில் கிருட்டினகிரி, பண்ருட்டி, ஆரணி, மேட்டுப்பாளையம் ஆகிய இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் 1974—75-ம் ஆண்டில் நிறுவ நிலை நிதிக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. அதற்கான உத்தரவு, 1974—75-ம் வரவு—செலவுக் கணக்கை சட்டப் பேரவை ஏற்றுக் கொண்ட பின்னர், பிறப்பிக்கப்படும்.

5. **தீயணைப்பு அழைப்புகள்.**—1973-ம் ஆண்டில் தீயணைப்பு நிலையங்கள் 5,716 அழைப்புகளைப் பெற்று செயல்பட்டன. இவற்றில் 5,069 தீ விபத்து அழைப்புகளும், 577 அவசர மீட்பு அழைப்புகளும், 70 போலி அழைப்புகளுமாகும். தீ விபத்துகளில் 2,429 நகர்ப் புறங்களிலும், 2,640 நாட்டுப் புறங்களிலும் ஏற்பட்டன. இவற்றில் 62 தீ விபத்துக்கள் உயிர் இழப்பு அல்லது

ரூ. 50,000-க்கு மேற்பட்ட சொத்துக்களுக்கு சேதம் சம்பந்தப் பட்ட பெருந் தீ விபத்துக்களாகும். தீயினால் அழிக்கப்பட்ட உடைமைகளின் மதிப்பு ரூ. 148·5 லட்சமாகும். அழிவினின்று தீயணைப்புப் படையினரால் மீட்கப்பட்ட உடைமையின் மதிப்பு ரூ. 663·7 லட்சமாகும். தீயணைப்புப் படை வருமுன், தீ விபத் துக்களில் 56 பேர் உயிரிழந்தனர். தீ விபத்துக்களில் 31 பேர் காயமுற்றனர். தீ மற்றும் விபத்துக்களிலிருந்து 101 பிராணிகள் மீட்கப்பட்டன. உயிரிழந்தவைகளின் எண்ணிக்கை 30.

6. அவசர மீட்பு அழைப்புகள்.—577 அவசர மீட்பு அழைப்பு களில் வெள்ளத்தினாலானவை 220, மின் பாய்ச்சல் விபத் துக்கள் 2, சாக்கடை விபத்துக்கள் 12, இயந்தேணி விபத்துக்கள் 12, வீடு இடிபாடுகள் 28, உயரமான இடங்களிலிருந்து மீட்பு 33, அபாயகரமான வாயுவினால் உண்டான அவசர மீட்பு 1, 269 மற்ற மீட்பு அழைப்புகளுமாகும். 24—9—1973 அன்று கோய முத்தூரருகே பீளமேட்டில் 100 அடி ஆழமும், பாம்புகள், பல நச்சுப் பூச்சிகளும் நிறைந்த கிணற்றிலிருந்து 23 வயதுள்ள ஒரு கல்லூரி மாணவனை, இந்தத் துறை பணியாளர்கள் காப்பாற்றி யுள்ளது ஒரு மிகச் சிறந்த பணியாகும்.

7. நோயாளி வண்டி அழைப்புகள்.—ஒவ்வொரு நிலையத்தி லும், தீயணைப்பு ஊர்திகளுடன் நோயாளி வண்டிகளும் உள்ளன. நோயாளி வண்டிகள் விபத்துக்களில் காயமுற்றோரை இலவச மாக மருத்துவ மனைகளுக்கு எடுத்துச் செல்கின்றன. மேலும் நோயுற்ற ஏழை மக்களையும் இலவசமாக மருத்துவமனைக்கு எடுத் துச் செல்ல உதவுகின்றன. தீயணைப்புப்படை 1973 டிசம்பர் திங் கள் இறுதிவரை 14,217 ஆம்புலன்ஸ் வண்டிக்கான அழைப்புகளை பெற்றது. அவற்றில் இலவச அழைப்புகள் 887 ஆகும். கட்ட ணம் வசூலிக்கப்பட்ட 13,330 அழைப்புகளுக்காக கிடைத்த தொகை ரூ. 2,18,551·50.

8. 1973 டிசம்பர் திங்கள் இறுதிவரை தீத்தடுப்பு மற்றும் தண்ணீர் இறைப்பு சம்பந்தமான வேலைகளுக்கு 171 தடவை அழைக்கப்பட்டன. அவ்வேலைகளுக்கான வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 28,897·50.

9. சென்னை நகரில் உள்ள ஒரு நெருக்கடி வண்டி தனிப்பட்ட தளவாடங்கள் கொண்டுள்ளது. இவ்வண்டி கவிழ்ந்த வண்டிகளை தூக்கி அகற்றவும், மீட்பு வேலைகளின்போது இடிபாடுகளை அகற்ற வும், பள்ளங்களிலிருந்து விலங்குகளைக் காப்பாற்றவும் பயன்படுத் தப்படுகிறது. 1973 டிசம்பர் திங்கள் முடிய 107 அழைப்பு களுக்கு ரூ. 14,374 கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

10. மாநிலப்பட்டறையும், நடமாடும் பழுதுபார்க்கும் குழுக் களும்.—இத்துறையிலுள்ள, ஊர்திகளுக்கான பழுதுகளை, உட னுக்குடன் செப்பனிட, கோட்ட அளவில் ஏழு நடமாடும் பழுது பார்க்கும் குழுக்கள் செயல்படுகின்றன. சென்னையில் ஒரு மாநி





லப்பட்டறையும் இயங்கி வருகிறது. ரூ. 88,947 மதிப்புள்ள 388 பழுது பார்க்கும் வேலைகளை மாநிலப்பட்டறையும், ரூ. 58,453 மதிப்புள்ள 679 பழுது பார்க்கும் வேலைகளை ஏழு நடமாடும் பழுது பார்க்கும் குழுக்களும் செய்திருக்கின்றன.

11. பயிற்சி.—தீ அணைப்புத் துறைக்கென ஒரு மாநில பயிற் சிப் பள்ளி சென்னையில் செயல்படுகின்றது. இப்பள்ளியில் இவ் வாண்டு 5 பலவேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டன. அவற்றுள் 130 தீ அணைப்போர்களும், 9 நிலைய தீயணைப்பு அலுவலர்களும், 29 முதன்மை தீயணைப்போர்களும் பயிற்சி பெற்றனர். மேலும், நாகபுரியிலுள்ள தேசீய தீயணைப்புக் கல்லூரியில் முன்னேற்றப் பயிற்சி பெற 5 நிலைய அலுவலர்கள் அனுப்பப்பட்டனர்.

12. வெகுமதிகள்.—இவ்வாண்டில் சிறப்பாக பணியாற்றிய கோட்ட தீயணைப்பு அலுவலர் திரு வா. ஜெயபெருமாளுக்கு, வீரச் செயலுக்கான, குடியரசுத் தலைவர் காவல் தீ அணைப்புப் பதக்கமும், தீயணைப்போர்கள் திரு. பா. சந்திரனுக்கும் திரு. தி. குமரேசனுக்கும் வீரச் செயலுக்காக காவலர் பதக்கமும், தற்பொழுது ஓய்வு பெற்ற கோட்டத் தீயணைப்பு அலுவலர் திரு. ஏ. கே. ராமனுதனுக்கும், நிலைய தீயணைப்பு அலுவலர் திரு. ஏ. ஆர். ரஷீத்துக்கும், தன்னிகரற்ற பணிக்காக காவலர் பதக் கமும், போக்குவரத்து நிலைய அலுவலர் திரு. ராமசாமிக்கு தமிழ் நாடு முதலமைச்சர் வீரப் பதக்கமும், முதன்மை தீயணைப்போர் திரு. கே. ராஜுவுக்கு தன்னிகரற்ற பணிக்காக தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கமும் வழங்கப்பட்டன.

13. தீயணைப்புத் துறை பணியாளர் நலநிதி.—தமிழ் நாடு தீயணைப்புத்துறையில் பணிபுரியும் அரசிதழ் பதிவு பெறாத பணி யாளர்களின் நன்மைக்காக, ஏற்படுத்தப்பட்ட தமிழ் நாடு தீய யணைப்புத் துறை சேம நலநிதி, நிதியுதவி, படிப்புதவி, நல உதவி, பொழுதுபோக்கு வசதி ஆகியவற்றை அளிக்கிறது. தீ யணைப்புத் துறையில் பணிபுரியும் 2,668 பேர் இதில் சேர்ந்துள் ளனர். 1973-ம் ஆண்டின் சந்தாவாக ரூ. 6,275·64 வசூலிக்கப் பட்டது. அரசினரால் ரூ. 5,000 ஆண்டு மானியமாக வழங்கப் பட்டது. 1973 டிசம்பர் மாத இறுதிவரை ரூ. 25,061 உதவித் தொகையாக பணியாளருக்கு வழங்கப்பட்டது.

14. இவ்வாண்டு தீயணைப்புத்துறை அலுவலர்களின் வீட்டு வாடகைப் படியை, காவல் துறையினருக்கு வழங்கப்படும் அள வுக்கு அளித்துள்ளனர். மேலும் வாரத்துக்கு ஒரு நாள் ஓய்வு அளிப்பதற்கான ஒரு திட்டத்தை ஒப்பளித்துள்ளனர். எல்லா நிலையங்களிலும் அமல்படுத்து முன்னர், சென்னை எழும்பூர் தீயணைப்பு நிலையத்தில் முதலாவதாக, சோதனைக்காக செயல் படுத்துமாறு ஆணையிடப்பட்டுள்ளது.

## இணைப்பு.

1973-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாளன்றுள்ளவாறு தீயணைப்புப் படையிலுள்ளவரின் எண்ணிக்கை.—

1. அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள்—

| | | |
|---|---|---|
| (1) தீயணைப்புத்துறை இயக்குநர் | .. | 1 |
| (2) துணை இயக்குநர்கள். | .. | 2 |
| (3) கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள். | | 7 |

2. அரசிதழ் பதிவு பெறாதவர்கள்—

| | | |
|---|---|---|
| (1) உதவி கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள். | | 9 |
| (2) போக்குவரத்து உதவி கோட்டத் தீயணைப்பு அலுவலர். | | 1 |
| (3) நிலைய தீயணைப்பு அலுவலர்கள் | .. | 70 |
| (4) போக்குவரத்து நிலைய அலுவலர்கள். | | 7 |
| (5) முன்னணி தீயணைப்போர்கள் | .. | 284 |
| (6) இயந்திர கம்மியர் ஓட்டிகள் | .. | 75 |
| (7) பற்றவைப்பவர் (Welder) | .. | 1 |
| (8) தீயணைப்போர் இயந்திர கம்மியர் | .. | 8 |
| (9) தச்சர் .. .. .. | .. | 1 |
| (10) தீயணைப்போர் ஓட்டிகள் | .. | 493 |
| (11) தீயணைப்போர் .. | .. | 1,813 |
| மொத்தம் | . | 2,772 |

## HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The main headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every main heading including various names, entries pertaining to proceedings other than questions are indicated by printing immediately after the subject-matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee(s)'. 'Council(s)', 'Corporation(s)', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very main headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the main heading "Chair".

A list of abbreviations used in the index is given below :—

| | | |
|---|---|---|
| A.M.\|Ad.Motion | .. | Adjournment Motion. |
| Ann. | .. | Announcement. |
| B.O.H. | .. | Business of the House. |
| C.A. | .. | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C.A. St. | .. | Calling Attention Statement. |
| Consid. | .. | Consideration stage of a Bill. This stage includes— (i) Motion to refer to Select\|Joint Select Committee. (ii) Amendment to refer to Select\|Joint Select Committee. (iii) Amendment to circulate |

(iv) Motion to consider as reported by Select|Joint Select Committee.

(v) Amendment to recommit to Select|Joint Select Committee, etc.

| | | |
|---|---|---|
| Consid. Cl. | .. | Consideration of clauses of a Bill. |
| D.E.E. | .. | Demands for Excess Expenditure. |
| Dis. S.D. or D.S.D. | .. | Discussion for Short Duration on an urgent matter of Administration. |
| D.S.G. | .. | Demands for Supplementary Grants. |
| G.A. | .. | Governor's Address. |
| G.D. | .. | General Discussion. |
| H.A.H. Dis.\|H.H.D. | .. | Half-hour Discussion. |
| Int. | .. | Introduction stage of a Bill. |
| L.A. | .. | Legislative Assembly. |
| L.C. | .. | Legislative Council. |
| M. | .. | Motion. |
| | | Privilege Motion. |
| R\|Res. | .. | Resolution. |
| St. | .. | Statement. |

# Index to Tamil Nadu Legislative Assembly Debates.

Tenth Session of the Fifth Legislative Assembly under the Constitution of India.

(*20th, 21st, 22nd and 23rd March 1974.*)

Volume LI (Nos. 1 to 4)

PAGES


A

ABDUL JABBAR, THIRU V. M.—

Budget, 1974-75, Voting—

Civil Supplies, Miscellaneous Capital Outlay ... 634-635

Education ... ... ... ... ... 104-111, 207, 224

ACT(S)—

Madras City Tenants Protection Act, extension ... 827

AGRICULTURE—

Office of Assistant Agriculture Engineer, Thiruvallur, continuance ... ... ... 288-291

Radhapuram Panchayat Union, supply of tractors 295

Small farmers in Nilgiris, loan facilities ... 286-288

PAGES

A—cont.

ALAGARSAMY, THIRU, S.—
Budget, 1974–75, Voting—
Civil Supplies, Miscellaneous Capital Outlay ... 599, 657–661, 708
Welfare of Scheduled Tribes, Castes, etc. Fisheries ... ... ... ... ... 322
Irregular supply of electricity to agricultural pumpsets in Koilpatti taluk and consequent damage to crops (A.M.) ... ... ... 37-38, 40

ALDA M. FOWLER, THIRUMATHI—
Budget, 1974–75, Voting—
Education ... ... ... ... ... 149–152

ANANDANAYAKI THIRUMATHI T. N.—
Budget, 1974–75, Voting—
Civil Supplies, Miscellaneous Capital Outlay 615, 616, 629, 641, 662, 704–705, 710, 717
Education ... ... ... ... ... 159–168, 174, 175, 176
Welfare of Scheduled Tribes, Castes, etc., Fisheries ... ... ... ... 322
Fisheries Research Centre, Mandapam, development ... ... ... ... 13-14
Motor Vehicles Taxation Bill ... ... 731-735, 730, 754
Short supply of electricity and consequent hardship caused to the people (A.M.) ... ... 846



PAGES

A—cont.

ANBAZHAGAN, THIRU K.—
Budget, 1974–75, Voting—
Civil Supplies ... ... ... ... 638-639,
Miscellaneous Capital Outlay ... ... ... 639–640, 648, 649, 662, 696

ANIMAL HUSBANDRY—
Jersey Farm, establishment at Kodaikanal ... 35–36

ARANGANAYAGAM, THIRU C.—
Budget, 1974–75, Voting—
Education ... ... ... ... ... 142–149

ARUMUGAM, THIRU C.—
Assembly Proceedings, non-participation by A.D.M.K. leader Thiru M. G. Ramachandran (Point of order) ... ... ... ... 595

AUTO-RICKSHAWS—
Coimbatore, number of unlicensed ... ... 311-313

B.

BALASUNDARAM, THIRU V.—
Budget, 1974–75, Voting—
Police .. ... ... ... ... ... 931-936
Fire Services ... ... ... ... 418–421,
Welfare of the Scheduled Tribes, Castes, etc., Fisheries ... ... ... ... ... 418-421, 422, 423
570–571
Cholera, Gudiyatham area ... ... ... 817
Mahabalipuram, and Chithannavasal, maintenance of temples ... ... ... 557–562
Panchalankurichi Fort—reconstruction ... 295–299
Rice, wholesale trade ... ... ... ... 301-304
Smuggled rice in Kanyakumari district, seizure

PAGES

B—*cont.*

BILL(S)—

Indian Stamp (Tamil Nadu Amendment) Bill, 1974—

Int. ... ... ... ... ... ... 316

Message from Governor ... ... ... 316

Motor Vehicles Taxation Bill, 1974—

Consid. ... ... ... ... ... 726–756

Consid. Cl. ... ... ... ... ... 756–758

Motion to pass ... ... ... ... 758

Passed ... ... ... ... ... ... ... 758

BOARD(S)—

Slum Clearance Board, Resident Welfare Officers 835-838

BOMMAN, THIRU K. H.—

Budget, 1974-75, Voting—

Welfare of the Scheduled Tribes, Castes, etc., Fisheries ... ... ... ... ... 321, 380-385

Repatriates from Sri Lanka in tea plantations, welfare ... ... ... ... ... ... 577–578

BRIDGE—

Across Usi river, construction ... ... ... 830

Madapuram Kanmoi, widening ... ... 818

BUSES—

Avajipettai and Melandur, diversion ... 846

Madras to Kanyakumari, increase ... ... 840–846

BUSINESS OF THE HOUSE ... ... 86, 690-691



PAGES

C.

CALLING ATTENTION—

Catering Establishments, restrictions imposed on serving items in meals. ... ... ... 41-42

Cooking gas, shortage in Madras City and hardship to people ... ... ... ... ... 313–315

CHAIR—

Announcements—

B.O.H. ... ... ... ... ... ... 86, 690-691

*Rulings and observations*— ...

*Adjournment Motion (s)*—

*Irregular distribution of electricity to agricultural pumpsets in Kovilpatti area and its consequences*—

Consent was withheld on the ground that there was no need to adjourn the other business of the House to discuss the matter, after the explanation of the Minister ... ... ... 36–40

*Power-cut and its consequences*—

Consent was withheld on the ground that after the statement made by the Minister there was no need to adjourn the other business of the House to discuss the matter ... ... ... 846–857

Debate—

*Personal references*— ... ...

On a member mentioning the name of particular Assistant Superintendent of Police who he alleged would always be found intoxicated, the Chair holding that it was not in order to mention the names of individual officers, expunged the name of the Officer from the proceedings. ... 908-909

CHAIR—*cont.*

Ruling and Observations Control Debate—*cont.*

*Remarks not to be made sitting*—

It was not in order for members belonging to the ruling party or the opposition parties and also Ministers to speak in the House sitting in their seats and that to in a loud voice. Whether they are Ministers or members, they should speak in the House only after being called upon by the Chair. However, if those who preached this procedure for others, followed it themselves, it would greatly help the conduct of the business of the House in a proper manner ... ... ... ... 637–638

Members should refrain from the practice of uttering remarks sitting in their seats, without the permission of the Chair ... ... 860

Decorum—

*Members should address the Chair*—

When a Member interrupted another who held the floor, the latter retorted, 'You sit down. Who are you?' Thereupon the Chair observed the Members should address the Chair. It was not in order for them to address each other direct. If a Member felt that another Member had committed a mistake, he should draw the attention of the Chair. But it was not in order for him to address the other Member direct and retort, 'You sit down. Who are you, etc.?' ... ... ... ... 915–917

When the Chair was on its legs, others should resume their seats ... ... ... 635

With a view to avoid emotion in the discussion, Members should not address the Ministers direct but should address the Chair ... 687



CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

*Expressions used in the House*—

'Intelligent' ! 'Most Intelligent' ("புத்திசாலி" "மகாபுத்திசாலி") Expression used by a Member and Minister against each other—Deprecated ... 631, 632

'You' ( நீ, நீங்கள் )— Use of the pronoun 'you' ( நீ, நீங்கள் ) to refer to other Members or Ministers should be avoided as that expression would only refer to the Chair ... 631–632

With reference to certain expressions used by a member belonging to the Anna D.M.K. party, the Speaker quoting a verse from 'Thirukkural' observed that it was desirable that sweet expressions sould be used in the House ... 693

Use of expressions 'Rowdyism', 'Are you quarreling?'—Held to be not in order and that such expressions would not find a place in the procedings ... ... ... ... 860

Expunction—

Expunction of words or expressions would be ordered with reference to their nature and the circumstances under which such words or expressions were used ... ... ... 637

On the Chair directing the expunction of certain expressions used by a Member, another Member objected to the expunction. Thereupon the Chair observed that it was not in order for the Member to question his order of expunction ... ... ... ... 635

Point of Clarification—

After the Chair had given its ruling, it was not permissible to raise a point of clarification ... 859

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Point of Order—

Cannot be raised to give expression to a Member's views on the ground that he would have no opportunity to speak on the subject before the House ... ... ... ... ... 332

*Delay in the election of the Deputy Speaker*—

Rising on a point of order a Member, supported by some other Members, emphasized that the Speaker should fix a date for the election of the Deputy Speaker as soon as possible within a reasonable time in consonance with the letter and spirit of the Constitution and the rules, especially when the Deputy Speaker happens to be the Chairman of some Legislature Committees.

The Speaker observed that there was no point of order with reference to the election of the Deputy Speaker. In the past the House had functioned for several months even without a Speaker. According to the rules, the Deputy Speaker is the ex-officio Chairman of only the House Committee and the Speaker could nominate any Member of the Privileges Committee as its Chairman. However, he appreciated the interest evinced by Members in having a Deputy Speaker for the House and would try to hold the election of the Deputy Speaker soon ... ... ... ... 816-820

*Furnishing reasons for withholding consent to move an adjournment motion in the House*—

On a point of order raised that the reasons for the Speaker's refusal of consent to an adjournment motion in his Chamber, should be fur- ... Members the Speaker reit...



CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Point of Order—*cont.*

*Furnishing reason for withholding consent to move an adjournment motion in the House*—*cont.*

his earlier rulings observed that while the Members might like to know the reasons, it was not in order to raise in the House a matter on which a decision had been taken in his Chamber. Such information should be sought in his Chamber. Hence, he ruled that there was no point of order ... ... ... 45-48

*Non-participation of the Leader of the Anna Dravida Munnetra Kazhagam in the proceedings of the House*—

On 22nd March 1974, a Member of the ruling party rose on a point of order and enquired whether it was in order for the Leader of the Anna Dravida Munnetra Kazhagam to have cast his vote in the Rajya Sabha election but not attended the House and participated in the discussion on the very important Harijan Welfare Demand. The Chair ruled that it was not a point of order. Thereupon some members belonging to the A.D.M.K. taking exception to the Member's point of order pointed out that non-participation in the proceedings could not be raised as a point of order and as the Member's reference to their leader was only intended to tarnish his image in public eyes, his remarks should be expunged.

The Leader of the House stated that only after hearing the point of order the Chair could give its ruling on it.

CHAIR—*cont.*

Ruling and Observations—*cont.*

Pint of Order—*cont.*

*Non-participation of the Leader of the Anna Dravida Munnetra Kazhagam in the proceedings of the House*—cont.

He added that a Member could not be completed to attend the House and participate in its proceedings. Likewise all the Ministers, except the Minister concerned, could not be expected to be present in the House always. It was enough if Members came and signed once in 60 days.

The Chair reiterating that there was no point of order observed that a Member's presence or absence could not be raised as a point of order. No Member could be compelled to attend the House and take part in its proceedings. Only after hearing a Member, he could give his ruling whether it was a point of order or not. As similar points of order raised previously had been allowed to form part of the proceedings, the point of order raised in the instant case need not be expunged ... ... ... 593–598

*Omission of the name of the Member who put the question in the statement laid on the Table*—

A member rose on a point of order and stated that his name had not been mentioned in the statement laid on the table in reply to a question put by him, whereas in another case the name of the Member who put the question had been mentioned in the statement similarly laid on the table.

The Chair observed that sometimes the names of Members would find a place and sometimes the number of the question would have been mentioned. Moreover, the statements furnished by the concerned Departments were laid as they were. However, it would be ensured that such instances did not recur ... ... ... 562



CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Questions and Answers—

*Supplementary questions*—

*Opportunities*—

With reference to a point of order raised by a member that though he caught the Speaker's eye, he was not given a chance to put a supplementary question the Speaker observed:

"It is not possible to give a chance to all those who raised their hands to put a supplementary question on all the questions. If two or three members of the same party raised their hands he allowed one of them to put a supplementary on one question and allowed the other members to put a supplementary question on other questions taking into consideration the area from which they came and the area to which the question related and the subject matter raised in the main question. Either they should reduce the number of questions to be dealt with on each day, or extend the question hour by half an hour. If either of these two courses were adopted, he would allow supplementaries to all members till they were tired of raising their hands. ... ... ... 843–845

Policy matters should not be raised in supplementaries ... ... ... ... ... 566

*Relevancy*—

When the main question was about the bus service between Madras and Kanyakumari, supplementaries about the buses that start from every other town should not be put ... 841

PAGES.

C—*cont.*

CHAIR—*cont.*
Ruling and Observations—*cont.*
*Questions and Answers*—cont.
*Supplementary questions*—cont.
Supplementaries should be put only to elicit further information and should not contain allegations ... ... ... ... ... ... 828

CHELLADURAI, THIRU V.—
Budget, 1974-75, Voting—
Welfare of Scheduled Tribes, Castes, etc., Fisheries ... ... ... ... ... 367-369
Dam across Peria Aru, construction ... ... 580
Tank, formation in Uthira Rasakuttai ... 579

CHELLIAH, THIRU KUZHA,—
Budget, 1974-75, Voting—
Welfare of Scheduled Tribes, Castes, etc., Fisheries ... ... ... ... ... 332-341, 342

CHINNARAJU, DR. S. A.—
Budget, 1974-75, Voting—
Welfare of Scheduled Tribes, Castes, etc., Fisheries ... ... ... ... ... ... 376-380

CHINNASAMY, THIRU A.—
Budget, 1974-75, Voting—
Welfare of Scheduled Tribes, Castes etc., Fisheries ... ... ... ... 385-387

COLLEGE(S)—
L.R.G. Naidu Government Arts College for Women at Tiruppur, construction of hostel ... 811
M.Com., and B.Com., courses ... ... ... 811-812



PAGES

C—*cont.*

COMMITTEES—
Estimates Committee, election ... ... ... 42-43
Public Accounts Committee, election ... ... 43-44
Public Undertakings Committee, election ... 44-45

COOKING GAS—
Shortage in Madras City and consequent hardships to people (C.A.) ... ... ... ... 313-330

D

DAM(S)—
Across Peria Aru, construction ... ... ... 580

DANCES—
Obscene dances, ban, ... ... ... ... 7-9

DENNIS, THIRU N.—
Auto-rickshaws in Coimbatore, number of unlicensed ... ... ... ... ... 311-313
Baby food factory, establishment, ... ... 822-823
Budget, 1974-75, Voting—
Education ... ... ... ... ... 135-138
Welfare of Scheduled Tribes, Castes, etc., Fisheries ... ... ... ... ... 320
Central Schools, details ... ... ... ... 563-567
Fisheries, assistance for development by Agro-Industries Corporation ... ... ... 291
Jersey Farm, establishment at Kodaikanal ... 35-36
Mental Hospital in Madras, suicide by prisoner ... 826-827

PAGES

D—*cont.*


DENNIS, THIRU N.—

Panchayat Finance Commission, constitution ... 17–21

Panchayat Union Council, Sivakasi, dissolution ... 827–829

Pedestrian crossing in Madras City, prevention ... 30–33

Ribbon factories, number of men and women employees ... ... ... ... ... 583–584

Slum Clearance Board, Resident Welfare Officers 835–838

Slum Clearance Quarters at Santhome, advertisement boards ... ... ... ... ... 883–840

Small farmers in Nilgiris, Loan facilities ... 286–288

Tanks near Nidamangalam, poisoning ... ... 22–23

Youth Service Corps, priority in employment opportunities ... ... ... ... ... 9

DEVENDIRAN, THIRU A.—

Budget, 1974–75, Voting—

Police ... ... ... ... ... ...

Fire Services ... ... ... ... ... 898–903

DURAI MURUGAN, THIRU—

Budget 1974–75, Voting—

Education ... ... ... ... ... 94–99

DURAIRAJ, THIRU S. M.—

Budget, 1974–75, Voting—

Welfare of Scheduled Tribes, Castes, etc., 321,

Fisheries ... ... ... ... ... 411–417




PAGES.

D—*cont.*


DURAISAMI, THIRU E. K.—

Budget, 1974–75, Voting—

Police

Fire Services 877–880

DURAISAMY, THIRU S.—

Auto-rickshaws in Coimbatore, number of unlicensed. ... ... ... ... ... 311-313

L.R.G. Naidu Government Arts College for women, Tiruppur, construction of hostel ... 811


E


EDMUND, THIRU G. R.—

Assembly Proceedings, non-participation by A.D.M.K. leader Thiru M. G. Ramachandran (point of order) ... ... ... ... ... 596–597

Budget, 1974–75, Voting—

Civil Supplies ... ... 634, 638

Miscellaneous Capital Outlay 49,

Education ... ... ... ... ... 73–80, 85,

Welfare of Scheduled Tribes, Castes, etc., ... 322

Fisheries ... ... ... ... ... ...

Catering establishments, restrictions imposed on serving items in meals, (C.A.) ... ... 41

Cooking Gas, shortage in Madras City and hardship to the people (C.A.) ... ... ... ... 313–315

Deputy Speaker, election of (Point of order) ... 316, 317, 319

PAGES.

E—*cont.*

EDUCATION—

Central Schools, details ... ... ... ... 563–567

Visual education, inclusion in syllabus ... ... 567–568

ELECTRICITY—

Schemes in North Arcot District, finance ... 27

F

FACTORIES—

Baby food factory, establishment ... ... 822–823

Ribbon factories, number of men and women employed ... ... ... ... ... 583–584

FINANCIAL BUSINESS—

Budget, 1974-75, Voting :

Civil Supplies

Miscellaneous Capital Outlay

Education 598–72?

Police ... ... ... ... 48–220

Fire Services

Welfare of Scheduled Tribes Cates, etc. ... ... ... ... 861–936

Fisheries ... ... ... ... ... 320–485

FIRE—

Service Station, opening at Koilpatti ... 563

FISHERIES—

Assistance from Agro-Industires Corporation for development ... ... ... ... ... 291



PAGES.

F—*cont.*

FISHERIES—*cont.*

Ferro-Cement Boat Yard Establishment ... 15–16

Fishing Harbour at Chinnamutham, construction 14–15

Fish processing centre for Uvari, establishment 578

Research Centre, Mandapam development ... 13–14

FOODGRAINS—

Smuggling ... ... ... ... ... 299–304

FORESTS—

Lions, number ... ... ... ... 30

G

GANESAN, THIRU L.—

Budget, 1974-75, Voting :

Civil Supplies 661–665

Miscellaneous Capital Outlay

GURUSAMI, THIRU N. V.—

Budget, 1974-75, Voting :

Education ... ... ... ... 128-130

GOPAL, THIRU K. P.—

Budget, 1974–75, voting :

Education ... ... ... ... 86

87-90

Police ... ... ... ... 927–931

Fire Services

PAGES.

G—*cont.*

GOVERNMENT OFFICES—

Assistant Agricultural Engineer's Office at Thiruvellore continuance ... ... 288-291

## H

HANDE, DR. H. V.—

Assembly Proceedings, non-participation by A.D.M.K. leader Thiru M. G. Ramachandran (Point of Order) ... ... ... ... 593, 594

Board High School, Ambikapuram functioning 278

Budget, 1974-75, Voting :

Civil Supplies

Miscellaneous Capital Outlay ... ... 600, 601, 620-629, 630-631, 638, 639, 717-718, 720-721

Motor Vehicles Taxation Bill, 1974 ... ... 727-731

Election of Deputy Speaker (Point of Order) 319

Police

Fire Services ... ... ... ... 862, 863, 909

Short supply of electricity and consequent hardship caused to the people, (A.M.) ... 858

HOSPITALS AND DISPENSARIES—

E.S.I. Hospital, Coimbatore, increase in bed strength ... ... ... ... ... 24-25

Mental Hospital in Madras, suicide by prisoner ... ... ... ... 826-827

PAGES.

H—*cont.*

HOSTELS—

L.R.G. Naidu Government Arts College for Women, Tiruppur ... ... ... ... 811

HOUSING—

Board, bonus to employees ... ... ... 583

Houses for labourers in Mettupalayam Assembly Constituency ... ... ... ... 23-24

Slum Clearance Board, houses constructed during April—October, 1973 ... ... ... 25-27

## I

ILANGOVAN, THIRU G.—

Budget, 1974-75, Voting :

Education ... ... ... ... ... 80-86

INDUSTRIES—

Industrial Estate at Ranipet, Industrial units 820-822

## J

JAMES, THIRU J.—

Budget, 1974-75, Voting :

Police

Fire Services ... ... ... ... 862

Welfare of Scheduled Tribes, Castes, etc., Fisheries ... ... ... ... ... 449-456, 471, 483

Election of Deputy Speaker (Point of Order) 317

JAYARAMAN, THIRU K.—

Budget, 1974-75, Voting :

Civil Supplies

Miscellaneous Capital Outlay ... ... 614-620

PAGES

J—*cont.*

JOTHI VENCATACHELLUM, THIRUMATHI—
Budget, 1974-75, Voting :
Welfare of Scheduled Tribes, Castes, etc., Fisheries ... ... ... ... ... 347-352, 353-356

K

KADHER BATCHA *alias* VELLAICHAMY, THIRU—
Budget, 1974-75, Voting :
Police ... ... ... ... ...
Fire Services ... ... ... ... 924-927

KANDAPPAN, THIRU S.—
Budget, 1974-75, Voting :
Police
Fire Services ... ... ... ... ... 915
Motor Vehicles Taxation Bill, 1974 ... 758

KANDASAMY, THIRU K. P.—
Budget, 1974-75, Voting :
Civil Supplies
Miscellaneous Capital Outlay ... ... 678-681
Education ... ... ... ... ... 99-104, 228, 111-115

KANDASAMY, THIRU MANALI C.
Budget, 1974-75, Voting :
Civil Supplies ... ... ... ...
Miscellaneous Capital Outlay ... ... 656, 669-674



PAGES.

K—*cont.*

KANNAN, THIRU M. R.—
Budget, 1974-75, Voting :
Civil Supplies ... ... ... ...
Miscellaneous Capital Outlay ... ... 674-678

KARTHEESAN THIRU V.—
Fish processing centre for Uvari, establishment 578
Radhapuram Panchayat Union, supply of tractors 295

KARUNANIDHI, DR. M.—
Budget, 1974-75, Voting :
Civil Supplies
Miscellaneous Capital Outlay ... ... 611-612, 612-613, 615, 616, 655, 672, 716, 719-720
Education ... ... ... ... ... 209-210
Police
Fire Services ... ... ... ... 861, 863, 864, 894, 917-918
Welfare of Schduled Tribes, Castes, etc., Fisheries ... ... ... ... ... 467, 487
Short supply of electricity and consequent hardship caused to the people (A.M.) ... ... 857, 858

KARUPPIAH, THIRU A.—
Budget, 1974-75, Voting :
Welfare of Scheduled Tribes, Castes, etc., Fisheries ... ... ... ... 429-433

K—*cont.*

KITTAPPA, THIRU M.—

Bala Sevikas and Gang coolies for Panchayat road works, recruitment ... ... ... 833–835
Bridge across Usi river, construction ... ... 830
Fishing Harbour at Chinnamuttam, construction 14–15
Foodgrains, smuggling ... ... ... 299–300
Housing Board, bonus to employees ... ... 583
Inter-State bus service, negotiations with Karnataka State ... ... ... ... ... 590-592
Lions in forests, number ... ... ... 30
Season Tickets in Buses, issue ... ... 33-34
Travellers' Bungalow, construction at Mayuram 285
Women Police in Madras City, setting up ... 1-6
Youth Service Corps, extension of term ... 10-12

KOTHANDARAMIAH, THIRU K. S.—

Budget, 1974–75. Voting:
Civil Supplies ... ... ... ...
Miscellaneous Capital Outlay ... ... 600
Education ... ... ... ... ... ... ... 50, 156-159
Welfare of Scheduled Tribes, Castes, etc., Fisheries ... ... ... ... ... 320

KOVAI CHEZHIYAN, THIRU.—

Obscene dances, ban ... ... ... ... 7-9
Women Police in Madras City, setting up ... 1-6





K—*cont.*

KUMARASAMI, THIRU K. N.—

Budget, 1974-75, Voting:
Civil Supplies ... ... ... ...
Miscellaneous Capital Outlay ... ... 599
Welfare of Scheduled Tribes, Castes, etc., Fisheries ... ... ... ... ... 362-366
Drinking water supply scheme, Nellithurai 571-573

L.

LATHEEF, THIRU M. A.—

Budget, 1974-75, Voting:
Civil Supplies ... ... ... ... 599, 636,
Miscellaneous Capital Outlay ... ... 650–657
Education ... ... ... ... ... 49, 207-210 223
Police ... ... ... ... ...
Fire Services ... ... ... ... 861
Motor Vehicles Taxation Bill, 1974 ... 735-742 753-755, 758

LOAN(S)—

Facilities to small farmers, Nilgiris ... ... 286–288

M

MARIMUTHU THIRU A. R.—

Budget, 1974-75, Voting:
Civil Supplies ... ... ... ...
Miscellaneous Capital Outlay ... ... 602-614

PAGES.

M—*cont.*

MARIMUTHU, THIRU A. R.—*cont.*
Budget 1974-75, Voting—*cont.*
Welfare of Scheduled Tribes, Castes, etc., Fisheries ... ... ... ... ... 433-440
Motor Vehicles Taxation Bill, 1974 ... 750
Short supply of electricity and consequent hardship caused to the people, (A.M.) ... 846

MARUDACHALAM, THIRU N.—
Budget, 1974-75, Voting:
Welfare of the Scheduled Tribes, Castes, etc., Fisheries ... ... ... ... ... 423-425

MEMORIAL—
Subramania Bharathy, Ettayapuram ... 816-817

MOHAMED KOTHER MOHIDEEN, THIRU S.—
Budget, 1974-75, Voting:
Police ... ... ... ... ...
Fire Services ... ... ... ... 894-897

MONUMENTS—
Panchalankurichi Fort, reconstruction ... 557-562

MOTION(S)—
*Ad.* Motions—
Short supply of electricity and consequent hardship caused to the people ... ... ... 846-861
Short supply of electricity to pumpsets in Koilpatti taluk and consequent damage to crops ... ... ... ... ... 36-40
Estimates Committee, election ... ... 42-43
Public Accounts Committee, election ... 43-44
Public Undertakings Committee election ... 44-46



PAGES.

M—*cont.*

MUNUSAMI, THIRU R. R.—
Electricity schemes in North Arcot District, finance ... ... ... ... ... 27
Panchalankurichi Fort, reconstruction ... 557-562
Women Police in Madras City, setting up ... 1-6

MUTHIAH, THIRU M.—
Budget, 1974-75, Voting:
Welfare of Scheduled Tribes, Castes, etc., Fisheries ... ... ... ... ... 358-362
Buses from Madras to Kanyakumari, increase 840-845
Fire Service station, opening at Koilpatti ... 563
Panchalankurichi Fort, reconstruction ... ... 557-562
Subramania Bharathy, memorial at Ettayapuram 816-817
Women Police in Madras City, setting up ... 1-6

MUTHU, THIRU V.—
Budget, 1974-75, Voting:
Welfare of the Scheduled Tribes, Castes, etc., Fisheries ... ... ... ... ... ... 356-358

N.

NACHIAPPAN, THIRU A. M. T.—
Budget, 1974-75, Voting:
Education ... ... ... ... ... 138-142

NAGARAJAN, THIRU K.—
Budget 1974-75, Voting:
Education ... ... ... ... ... 69-72

N—*cont.*

NARAYANASAMY, THIRU MANNAI P.—
- Budget, 1974–75, Voting:
  - Civil Supplies, ... ... ... 598–599
  - Miscellaneous Capital Outlay ... ... 600, 601–602, 609–610, 629–630, 631, 673, 702–725
- Catering establishments, restriction imposed on serving items in meals (C.A. St.) ... ... 41–42
- Cooking gas, shortage in Madras City and hardship to people (C.A. Sst.) ... ... ... ... 313–315

NEDUNCHEZHIYAN, DR. V. R.—
- Assembly Proceedings, non-participation by A.D.M.K. leader Thiru M. G. Ramachandran (Point of order) ... ... ... ... 595–596
- Budget, 1974–75, Voting:
  - Education ... ... ... ... ... 48, 50–56, 60, 61, 195–228

P.

PALANIAPPAN, THIRU S. M.—
- Budget, 1974–75, Voting:
  - Education ... ... ... ... ... 122–128

PALANISWAMY, PULAVAR C.—
- Budget, 1974–75, Voting:
  - Education ... ... ... ... ... 130–134

PALANISAMY, THIRU N. K.—
- Artificial Insemination Programme, implementation 291–293
- Colleges, M.Com. and B.Com., courses ... 811–815



P—*cont.*

PALANISAMY, THIRU N. K.—*cont.*
- E.S.I. Hospital, Coimbatore, increase in bed strength ... ... ... ... ... ... 24–25
- Government School buildings, use for public purposes ... ... ... ... ... ... 279–281
- Pedestrian crossing in Madras City, prevention ... 30–33
- Rice, wholesale trade ... ... ... ... 295–299
- Salt, formation of Advisory Board ... ... 824–826
- Short supply of electricity and consequent hardship caused to the people (A.M.) ... ... ... 850–851
- Tourists, rented houses in Ootacamund ... 568–569
- Visual education, inclusion on syllabus ... 567–568

PANCHAYAT (S)—
- Bala Sevikas and Gang coolies for road works, appointment ... ... ... ... ... 833–835
- Finance Commission, constitution ... ... 17–21
- Tripura officials' visit ... ... ... ... 582–583
- Union Council, Sivakasi, dissolution ... ... 827–829
- Union employees, houses ... ... ... ... 830–832
- Vandavasi Panchayat, street lights ... ... 580–582

PANNEERSELVAM, THIRU M.—
- Budget, 1974–75, Voting:
  - Welfare of Scheduled Tribes, Castes, etc., ... ... ... ... 441–447
  - Fisheries ... ...

PAPERS LAID ON THE TABLE—
- Agriculture Demand 1974–75, Note ... ... 230

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—cont.

Agricultural Produce Markets Act, 1959, notifications ... ... ... ... ... ... 759

Animal Husbandry Demand, 1974–75, Policy Note 230

District Municipalities Act, 1920, notifications ... 485

Education in Tamil Nadu 1974–75, progress ... 230

Fisheries Demand, Policy Note ... ... ... 760

Food Minister, speech ... ... ... ... 760

Fisheries, Performance Budget ... ... ... 760

Harijan Welfare, Performance Budget ... ... 760

Indian Stamp Act, 1899, notifications ... ... 486

Panchayats Act, 1958, notification ... ... 230

Parks, Play-fields and open spaces (Preservation and Regulation) Act, 1959, notifications ... ... 230, 936

Payment of Salaries Act, 1951, notification ... 485

Performance Budget on Agriculture, 1974–75 ... 230

Performance Budget on Collegiate Education, 1974–75 ... ... ... ... ... ... 486

Performance Budget on School Education, 1974–75 486

Performance Budget on Technical Education, 1974–75 ... ... ... ... ... ... 486

Public Service Commission Regulations, notification ... ... ... ... ... ... 759

Slum Areas (Improvement and clearance) Act, 1971, Statement of guarantees ... ... ... ... 759

Stamp duty and registration fees, notification re exemption ... ... ... ... ... 759–760

Urban Land Tax Rules, 1966, notification ... 936

Welfare of Scheduled Tribes, Castes, etc., 1974–75 486









PARANDHAMAN, THIRU A.—

Tyres and tubes, regulated supply ... ... 304–310

POINTS OF ORDER—

Adjournment Motion, furnishing of reasons for refusal of consent ... ... ... ... 45–48

Election to office of Deputy Speaker ... ... 316–320

Non-participation of the Leader of the Anna Dravida Munnetra Kazhagam Thiru M. G. Ramachandran, in the proceedings of the House ... ... 593–598

POLICE—

Women Police in Madras City, setting up ... 1–6

PONNAPPA NADAR, THIRU R.

Budget, 1974–75, Voting:

Civil Supplies

Miscellaneous Capital Outlay ... ... 631–632, 691–702, 711, 714

Education ... ... ... ... ... 182–195, 219

Police

Fire Services ... ... ... ... ... 864, 914–915

Welfare of Scheduled Tribes, Castes, etc., ...

Fisheries ... ... ... ... ... 322

Motor Vehicles Taxation Bill, 1974 ... ... 742–746, 750, 758

PUBLIC HEALTH—

Cholera, Gudiyatham area ... ... .. 570–571

PAGES.

## R

RAJA, THIRU A. M.—
Transport Development Council, meeting ... 584–590

RAMACHANDRAN, THIRU S.—
Motor Vehicles Taxation Bill, 1974 ... ... 726–727, 730, 733–734, 739, 746–756, 757, 758

RAMALINGAM, THIRU C.—
Budget, 1974–75, Voting:
Education ... ... ... ... ... 90–94
Welfare of Scheduled Tribes, Castes, etc, Fisheries ... ... ... ... 407–411

RAMAN, THIRU M.—
Budget, 1974–75, Voting:
Welfare of Scheduled Tribes, Castes, etc., Fisheries ... ... ... ... ... 397–402

RAMAN, THIRU O. P.—
Short supply of electricity and consequent hardship caused to the people, (A.M.) ... ... ... 851–856
Short supply of electricity to pumpsets in Koilpatti taluk and consequent damage to crops (A.M.) 28–40

RAMASAMY, THIRU G.—
Travellers' Bungalow, construction at Nattrampalli 286
Youth Service Corps, priority in employment opportunities ... ... ... ... .... ... 9

RAMASWAMY, THIRU E.—
Government High School at Valparai, Winter allowance for teachers ... ... ... ... 281–283



PAGES.

R—*cont.*

REGISTRATION DEPARTMENT—
Sub-Registry office at Nattrampalli, opening ... 285

REPATRIATES—
Sri Lanka, working in tea plantations ... ... 577–578

RICE—
Wholesale trade ... ... ... ... 295–299

ROAD(S)—
New Road in Tiruchirappalli, naming ... ... 293–294
Pondavakkam-Madharpakkam Road, take-over by Highways Department ... ... ... ... 578–579

## S

ADIQ PASHA, HON. THIRU S. J.—
Budget, 1974–75, Voting:
Welfare of Scheduled Tribes, Castes, etc., Fisheries ... ... ... ... ... 436–437
Indian Stamp (Tamil Nadu Amendment) Bill, 1974. ... ... ... ... ... 316

ALT—
Advisory Board, formation ... ... ... 824–826

ANCTUARY—
Bird Sanctuary at Vedanthangal, development 27–30

ANGUMUTHU THEVAR, THIRU S.—
Madras City Tenants Protection Act, extension 827
Transport Development Council, meeting ... 584–590

THIYENDRAN, THIRU M. S. K.—
Budget, 1974–75, Voting:
Welfare of Scheduled Tribes, Castes, etc., Fisheries ... ... ... ... ... 393–396

PAGES

S—*cont.*


SATHYAVANIMUTHU, THIRUMATHI—
- Budget, 1974-75, Voting:
  - Welfare of Scheduled Tribes, Castes, etc., Fisheries ... ... ... ... ... 320, 322, 323 331, 332, 341, 352, 361, 371, 372, 400, 401, 405, 413, 423, 456-484

SCHOOL(S)—
- Ambikapuram Board High School ... ... 278
- Central Schools, details ... ... ... ... 563-567
- Government Buildings, use for public purposes 279-281
- Kil-Rangiam village, construction of school building ... ... ... ... ... ... 22
- Opening at Malliankuppam ... ... ... 277-278

SEENIVASAN, THIRU P.—
- Assembly Proceedings, non-participation by A.D.M.K. leader Thiru M. G. Ramachandran (Point of order) ... ... ... ... ... 534, 595
- Budget, 1974-75, Voting:
  - Civil Supplies
  - Miscellaneous Capital Outlay ... ... ... 635, 636, 637
  - Police
  - Fire Services ... ... ... ... ...
- Election of Deputy Speaker (Point of Order) ... 915-917
- Short supply of electricity and consequent hardship caused to the people (A.M.) ... ... 317, 318, 848-849




PAGES

S—*cont.*


SIVAPRAKASAM, THIRU D. S. A.—
- Selection grade graduate teachers, revised scales of pay ... ... ... ... ... ... 283-285

SLUMS.—
- Slum Clearance Quarters at Santhome, advertisement boards ... ... ... ... ... 838-840

SOMASUNDARAM, THIRU N.
- Budget, 1974-75, Voting:
  - Welfare of Scheduled Tribes, Castes, etc., Fisheries ... ... ... ... ... 342-347

SONIAH, THIRU T.—
- Kattikulam kanmoi, supplementary canal ... 818
- Kil-Rangiam village, construction of school building 22
- Mandapuram Kanmoi bridge, widening ... ... 818
- Meenakshi Temple, Madurai, shifting of shops 34-35

SOUNDARAPANDIAN, THIRU P.—
- Artificial Insemination programme, implementation 291-293
- Drinking water-supply, Kulithalai ... ... 676-577
- Ferro-Cement Boat Yard, establishment ... 15-16
- New Road in Tiruchirappalli, naming ... ... 293-294
- Panchalankurichi Fort, reconstruction ... ... 567-562
- Tripura officials, visit ... ... ... ... 582-583

RINIVASAN, THIRU T. P.—
- Budget, 1974-75, Voting:
  - Welfare of Scheduled Tribes, Castes, etc., Fisheries ... ... ... ... ... 447-449

S—*cont.*

SUBBIAH, THIRU A. K.—
Budget, 1974–75, Voting :
Police ... ... ... ... ... ...
Fire Services ... ... ... ... ... 861, 863
Welfare of the Scheduled Tribes, Castes, etc. 321,
Fisheries ... ... ... .. 402–407

SUBRAMANIAM, THIRU A.—
Budget, 1974–75, Voting :
Civil Supplies
Miscellaneous Capital Outlay ... ... 601
Education ... ... ... ... ... 115–122, 220
Police ... ... ... ... ... ... 861, 863,
Fire Services ... ... ... ... 903–909, 918–924
Welfare of Scheduled Tribes, Castes, etc.,
Fisheries ... ... ... ... ... 320
Election of Deputy Speaker (Point of order) ... 818
Short supply of electricity and consequent hardship caused to the people. (A.M.) ... ... ... 846, 847, 848, 857

SUBRAMANIAM, THIRU K. M.—
Budget, 1974–75, Voting :
Civil Supplies ... ... ... ... ...
Miscellaneous Capital Outlay ... ... ... 590
Police ... ... ... ... ... ...
Fire Services ... ... ... ... ... 862, 903–904



S—*cont.*

SUNDARA BHARATHI, THIRU SOWDI, S.—
Budget, 1974–75, Voting—*cont.*
Civil Supplies ... ... ... 599, 601
Miscellaneous Capital Outlay ... ... ... 50
Education ... ... 862
Police ... ... ... ... 905–911
Fire Services

SUNDARAM, THIRU O. N.—
Budget, 1974–75, Voting :
Police ... ... ... ... ... 880–885
Fire Services

SUPPU, THIRU K.—
Panchayat Union Council, Sivakasi, dissolution 827–829

SURENDRAN, THIRU M.—
Budget 1974–75, Voting :
Education ... ... ... ... ... 49, 225,

SURULIVEL, THIRU M.—
Budget, 1974–75, Voting :
Civil Supplies ... ... ... 633–642
Miscellaneous Capital Outlay
Police ... ... ... ... 911–914
Fire Services

SWAMIDHAS, THIRU A.—
Budget, 1974–75, Voting :
Civil Supplies ... ... 600, 642–650
Miscellaneous Capital Outlay ... ... ... 50
Education

PAGES

T

TANGAMANI, THIRU K. T. K.—
Budget 1974–75, Voting:
Education ... ... ... ... ... 49, 56–69, 174, 182, 206, 220
Police
Fire Services ... ... ... ... 862, 863, 866–877
Election of Deputy Speaker (Point of order) ... 318–319
Short supply of electricity and consequent hardship caused to the people, (A.M.) ... ... ... 859

TANK(S).—
Formation in Uthira Rasakuttai ... ... ... 579
Karikali Uthandampatti, construction of new tank 818–819
Kattikulam kanmoi, supplementary canal ... 818
Nidamangalam, poisoning ... ... ... ... 22–23

TEACHER(S).—
Government High School at Valparai, winter allowance ... ... ... ... 281–283
Selection grade graduates, revised scales of pay 283–285

TEMPLES.—
Mahabalipuram and Chithannavasal, maintenance 817
Meenakshi Amman Temple, Madurai, shifting of shops ... ... ... ... ... 34–35

THIMMARAYA GOUNDER, THIRU T. C.—
Sub-Registry Office at Karampalli, opening ... 285
Travellers' Bungalow, construction at Natrampalli 286



PAGES

T—*cont.*

THOOYAMANI, THIRU M.C.—
Labourers in Mettupalayam Assembly constituency, houses ... ... ... ... ... ... 23–24

TOURISM.—
Tourists, rented houses in Ootacamund ... ... 568–569

TRAFFIC.—
Pedestrian crossing in Madras, prevention ... 30–33

TRANSPORT AND COMMUNICATIONS.—
Auto rickshaws, number unlicenced in Coimbatore ... ... ... ... ... ... 311–313
Buses between Madras and Kanyakumari, increase. 845
Buses Nos. 101 and 101-A, diversion through Arasipettai and Malandur ... ... ... ... 845
Inter-State bus services, negotiations with Karnataka State ... ... ... ... ... ... 590–592

TRANSPORT—
Season tickets in buses, issue ... ... ... 33–34
Transport Development Council, meeting ... 584–590
Tyres and tubes, regulated supply ... ... 304–310

TRAVELLERS' BUNGALOWS—
Construction at Mayuram ... ... ... 285
Construction at Natrcampalli ... ... 286

V

VADIVEL, THIRU S.—
Budget, 1974–75, Voting:
Welfare of Scheduled Tribes, Castes, etc., Fisheries ... ... ... ... ... 321, 369–376, 462, 463

PAGES

*V—cont.*

VADIVELU, THIRU S. K.—
Karikali Uthandampatti, construction of new tank 818–819
Panchaayt Union employees, houses ... ... 830–832

VEDACHALAM, THIRU M.—
Budget, 1974–75, Voting:
Welfare of Scheduled Tribes, Castes, etc., Fisheries ... ... ... ... ... 426–429

VEERASAMI, THIRU N.—
Assembly proceedings, non-participation by A.D.M.K. leader Thiru M. G. Ramachandran (Point of order) ... ... ... ... 595
Budget, 1974–75, Voting:
Civil Supplies
Miscellaneous Capital Outlay ... ... ... 681–690, 715
Education ... ... ... ... .. 172–182, 223
Short supply of electricity and consequent hardship caused to the people (A.M.) ... ... ... 851
Water Supply Scheme, North Arcot district ... 574–576

VELAPPAN, THIRU C. V.—
Budget, 1974–75, Voting:
Police
Fire Services ... ... ... ... ... 889–894

VENKATASWAMY, THIRU B.—
Budget, 1974–75, Voting:
Civil Supplies
Miscellaneous Capital Outlay ... .. 610, 666-669
Education ... ... ... ... ... 49, 168–172, 225



PAGES

V—*cont.*

VETERINARY—
Artificial Insemination Programme, implementation ... ... ... ... 291–293

VEZHAVENDAN, THIRU K. A.—
Bird Sanctuary at Vedanthangal, development ... 27–30
Budget, 1974–75, Voting:
Police
Fire Services ... ... ... ... 885–889
Buses through Avajipettai and Melandur, diversion 845
Office of Assistant Agricultural Engineer, Thiruvallur, continuance ... ... ... 288–291
Pondavakkam-Madharpakkam Road, take-over by Highways Department ... ... ... 578–579
School, opening at Malliankuppam ... ... 277–278
Women Police in Madras City, setting up ... 1–6

W

WAHAB, THIRU K. A.—
Budget, 1974–75, Voting:
Police
Fire Services ... ... ... ... 863
Welfare of Scheduled Tribes, Castes, etc., Fisheries ... ... ... ... 323–387, 392
Industrial Estate at Ranipet, Industrial Units ... 820–822
Short supply of electricity and consequent hardship caused to the people (A.M.) ... ... 849–850
Slum Clearance Board, houses constructed during April–October 1973 ... ... ... ... 25–27

PAGES

W—*cont.*

WAHAB, THIRU K. A.—cont.
Budget, 1974-75, Voting :—cont.
Vandavasi Panchayat, State lights ... ... 580-582
Water Supply Schemes, North Arcot district ... 574-576

WATER SUPPLY—
Drinking Water Supply Scheme, Nellithurai ... 571-573
Schme, Kulithalai ... ... ... 576-577
Schemes, North Arcot District ... ... ... 574-576

Y

YOUTH SERVICE CORPS.—
Extension of term ... ... ... ... 10-12
Priority in employment opportunities ... ... 9

61650
V.211, 51 'N74
3'N74.51

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

---

Messrs. Account Test Institute, Egmore, Madras-8.
The City Book Co., Mylapore, Madras-4.
Messrs. Higginbothams (Private) Limited, Madras-2.
Messrs. New Century Book House (Private) Limited, Madras-2.
Messrs. P. Varadachari & Co., Madras-1.
Messrs. C. Subbiah Chetty & Sons, Madras-5.
Sri S. S. Srinivasaraghavan, Royapettah, Madras-14.
The Educational Agencies, Book-sellers, Madras-1.
The Universal Book House, Moore Market, Madras-3.
Messrs. C. Sitaraman & Co., Madras-14.
Messrs. Mohan Pathippagam and Book Depot, Madras-3.

### IN MUFASSAL OF TAMIL NADU.

Sri E. M. Gopalakrishna Kone, Madurai, Madurai district.
Sri A. Venkatasubban, Vellore, North Arcot district.
Messrs. Bharatha Matha Book Depot, Thanjavur, Thanjavur district.
Messrs. P. V. Nathan & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. Appar Book Stall, Thanjavur.
Messrs. P. N. Swaminathasivam & Co., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. S. Krishnaswami & Co., Tiruchirappalli district.
Messrs. Palaniappa Brothers, Tiruchirappalli district.
Sri S. R. Subramania Pillai, Tirunelveli, Tirunelveli district.
Messrs. Nellai Puthaga Nilayam, Book-sellers, 10, Thana Muna Building, Tirunelveli Junction.
Sri B. Aruldoss, Villupuram Town, South Arcot district.
Sri V. B. Ganesan, Villupuram, South Arcot district.
Messrs. Vasantham Stores, Book-sellers, Cross Cut Road, Coimbatore.
Messrs. Mercury Book Company, 223, Raja Street, Coimbatore.
Sri S. M. Jagannathan, Book-sellers and Publishers, Nagercoil, Kanyakumari.
Messrs. A. K. Chandriah Chettiar and Sons, Salem-1.
Messrs. Meenakshi Pathippagam, Pudukkottai.
Messrs. K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai district.
Messrs. Balaji Book House, Vellore, North Arcot district.
Messrs. Jayakumari Stores, Nagercoil, Kanyakumari district.
Messrs. Baby Stores, Book-sellers, Villupuram, South Arcot district.
Messrs. Dinamani Stores, Coimbatore-18.
Messrs. Bharathi Puthaga Nilayam, Publishers and Book-sellers, 1-Town Hall Road, Madurai-1.

### IN OTHER STATES.

Messrs. Jain Book Agencies, New Delhi-1.
Messrs. International Book House, Trivandrum.
Messrs. Firma K. L. Mukhopadhyay, Calcutta-12.
Messrs. Book Links Corporation, Narayanaguda, Hyderabad-29.
Messrs. The Book Syndicate, Hyderabad-1.
Messrs. Labour Law Publications, Hyderabad.

---

PUBLISHED UNDER RULES 234 AND 237 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.